ௐ

ஸ்ரீ கணேசாயநம:

ஸ்ரீசாதுநிச்சலதாஸரவர்கள்

இயற்றியருளிய

# ஸ்ரீ விசாரசாகரம்.

இஃது

தஞ்சாவூர் ஜில்லா குற்றாலம் சப்ரிஜிஸ்தரார்

## அ. சிவராயரால்

ஹிந்திபாஷையிலிருந்து

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

தஞ்சைமாநகரம்

மகா-ள-ள-ஸ்ரீ

வெ. குப்புஸ்வாமிராஜு அவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

30 பாரங்கள்

சென்னை ரிப்பன் அச்சுக்கூடத்திலும்

மற்றையபாரங்கள்

தஞ்சை

ஸ்ரீ வித்தியாவிநோதினி முத்திராசாலையிலுமாகப்

பதிப்பிக்கப்பட்டது.

1904

*Copy-right & Right of Translation reserved.*

விலை ரூ 3.

# ஸ்ரீ விசாரசாகரம் பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| | | **மங்கலம்.** | |
| 5 | 28 | விதிஅாயதிப் ... | அதிவியாப்தி |
| 6 | 13 | அலைகளாக ... | ஈசுவரனது அலைகளாக |
| | | **முதலாவது** | **தரங்கம்.** |
| 3 | 8 | . ... | :— |
| 4 | 14 | நிவர்த்தியாக ... | நிவர்த்தியாகி |
| 4 | 27 | சமஸ்கார ... | சம்ஸ்கார |
| 6 | 8 | விஷயங்களின்றும் ... | விஷயங்களினின்றும் |
| 6 | 36 | சுவாதீனப்படுத்வது ... | சுவாதீனப்படுத்துவது |
| 7 | 1 | செலல ... | செல்ல |
| 7 | 24 | விருக்ஷத்திற்கு ... | விருக்ஷத்திற்குச் |
| 8 | 18 | யிருத்தலும் ... | யிருத்தலாலும் |
| 9 | 24 | தமாதிகள் ஐந்தும் சமத்திற்குச் | தமாதிகள் ஐந்திற்கும் சமம் |
| 11 | 10 | வெண்ணையையும் .. | வெண்ணெயையும் |
| 23 | 37 | அவயமுடையவது .. | அபாவமுடையது |
| | | **இரண்டாவது** | **தரங்கம்.** |
| 2[illegible] | 27 | பிற்பாதி ... | முற்பாதி |
| 35 | 3[illegible] | பிரதிபாதித்தற் ... | பிரதிபாதித்தலிற் |
| 35 | 35 | யிருந்தாலும் ... | யிருத்தலாலும் |
| 48 | 29 | அநேகர்மதங்களின் ... | அநேககர்மங்களின் |
| 63 | 7 | சாக்ஷி ... | உபாதி |
| 63 | 17 | உபாதி ... | சாக்ஷி |
| 75 | 9 | அஷ்டானத்தின் .. | அதிஷ்டானத்தின் |
| 75 | 11 | அங்ஙனமே .. | ஆனால் அங்ஙனமே |
| | | **மூன்றவது** | **தரங்கம்.** |
| 98 | 27 | இச்சையு ... | சுகவிளக்கமு |
| | | **நான்காவது-** | **தரங்கம்.** |
| 103 | 34 | இவ்வந்நியாக்கியாதி, ... | இவ்வந்நியதாக்கியாதி |
| 128 | 34 | † ... | * |
| 128 | 35 | *1 ... | 1 |
| 129 | 32 | * மாயையிலு ... | மாயையிலு |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 130 | 27 | முத்தியில் ... | சுழுத்தியில் |
| 137 | 27 | ஆநந்தரூப ... | அநந்தரூப |
| 145 | 14 | 193 ... | 196 |
| 147 | 11 | * உவமான ... | உவமான |
| 147 | 29 | | * இந்த அடையாளமுள்ள டிப்பணியை 146-வது பக்கத்தில் * இக்குறிப்பிட்ட சப்தமென்னுஞ்சொல்லிற்கு டிப்பணியாகக்கொள்க |
| 154 | 34 | அஞ்ஞானத்திலாகிய ... | அஞ்ஞானத்திலுலாகிய |
| 156 | 13 | சிரேஷ்டமாம் ... | * சிரேஷ்டமாம் |
| 157 | 36 | பிரமத்தின் ... | பிரஹ்மத்தின் |
| 165 | 22 | அசங்கத்தன்மை ... | ஆகாயத்தின் அசங்கத்தன்மை |
| ,, | ,, | மகாகாசத்தன்மை .. | மகாகாயத்தின் அசங்கத்தன்மை |
| | | ஐந்தாவது தரங்கம். | |
| 173 | 9 | மானுடகந்தர்வ ... | * மானுடகந்தர்வ |
| 176 | 15 | கடிமானது ... | கடினமானது |
| 182 | 15 | அரனுடைய ... | அரசனுடைய |
| ,, | 30 | திருஷடாந்தவிஷம ... | திருஷ்டாந்தம் விஷம |
| 183 | 19 | சத்தைடையுதாம் ... | சத்தையுடையதாம் |
| ,, | 30 | அவித்தை ... | இங்கு அவித்தை |
| 184 | 20 | விஷம .. | இங்குவிஷம |
| ,, | 31 | மித்தையான ... | ஆனால் மித்தையான |
| 206 | 20 | | † இக்குறிப்புள்ளடிப்பணியை 207-வது பக்கத்து * இக்குறிப்புள்ள டிப்பணியின் பின் கொள்க |
| 207 | 3 | ஈசுவரசரீர ... | † ஈசுவரசரீர |
| 208 | 16 | விஷயமாத ... | விஷயமாதலால் |
| 215 | 1 | ஆமத்ா ... | ஆத்மா |
| ,, | 34 | சமவாயசம்பந்த ... | சையோகசமவாய சம்பந்த |
| 219 | 31 | விஷேணங்களாம் ... | விசேஷணங்களாம் |
| 221 | 13 | கிருத ... | கர்த்தவ்வியத்தின் அபாவரூபகிருத |
| 221 | 15 | பஞ்ச ... | சிஷ்யனேபஞ்ச |
| 222 | 31 | நிக்சய ... | நிச்சய |
| 227 | 1 | விஷயதை ... | விஷயத்தை |
| 231 | 1 | அநர்த்ம ... | அநாத்ம |
| ,, | 31 | பிரமஞானம் ... | பிரமாஞானம் |
| டை | 33 | பிரமவடிவவிஷயத்தின் ... | (பிரமவடிவவிஷயத்தின்) |
| 232 | 5 | மத்திலும் ... | மதத்திலும் |
| 233 | 29 | | * இக்குறிப்பிட்ட டிப்பணி 232 பக்கத்திலிருக்கவேண்டியது |
| 243 | 5 | ச்செய்க ... | செய்க |
| 244 | 29 | பாவவடிவ ... | பாதவடிவ |
| 247 | 21 | சசெய்வதி ... | செய்வதி |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| | | **ஆறாவது தரங்கம்.** | |
| 272 | 16 | புத்தினிறந்து ... | புத்திரனிறந்து |
| 278 | 24 | விஷயமும் ... | விஷயமான |
| 296 | 17 | நகஸ்கரிக் .. | நமஸ்கரிக் |
| 317 | 33 | வியாபமான ... | வியாபகமான |
| 322 | 11 | எவ்விடத்தில் ... | எவ்வளவிடத்தில் |
| 323 | 5 | பந்தமோக்ஷங்கள் என்னும் .. | என்னும் |
| 331 | 16 | முடிண்டு ... | முடிவுண்டு |
| 336 | 24 | யுள்வவன் ... | யுள்ளவன் |
| 354 | 1 | மோசனை ... | மோபாசனை |
| ,, | 3 | கமோபாசனை ... | கர்மோபாசனை |
| 359 | 22 | திரத்தால்ச் ... | திரத்தால் |
| 360 | 18 | போகத்துக்கு ... | போதத்துக் |
| ,, | ,, | ஆபஸரூப ... | ஆபாஸரூப |
| 363 | 24 | ஜீவேசுரவர் ... | ஜீவேசுவரர்க |
| 372 | 15 | எரிதற்கு ... | எரித்தற்கு |
| 379 | 15 | பிரங்கத்துக்கு ... | பிரசங்கத்துக்கு |
| 380 | 2 | சரீரங்களியே ... | சரீரங்களிலேயே |
| 394 | 6 | துவம்பத்தின் ... | துவம்பதத்தின் |
| 396 | 6 | ஸ்வாதீனத்திவ் ... | ஸ்வாதீனத்தில் |
| ,, | 27 | ஜகதிலக்ஷணை .. | அஜகதிலக்ஷணை |
| 404 | 2 | தர்மங்கள் ... | தர்மங்களாகிய |
| 409 | 17 | வாக்கியபத்துக் ... | வாக்கியத்துக் |
| ,, | 21 | கமனுமங்கள் ... | கமனுகமனங்கள் |
| | | **ஏழாவது தரங்கம்.** | |
| 416 | 28 | சந்நியாசினையே ... | சந்நியாசியினையே |
| 417 | 17 | பிராப்தம் ... | பிராரப்தம் |
| 421 | 26 | சப்தாநுவித்தம் ... | சப்தாநுவித்தம் |
| 424 | 10 | ஆலயஸ்யத் ... | ஆலஸ்யத் |
| 425 | 5 | கொஞ்காலம் ... | கொஞ்சகாலம் |
| 427 | 24 | ஆந்தராதிகள் ... | ஆந்தரராகாதிகள் |
| 437 | 9 | கருணைதரொன் ... | கணைதரென் |
| 444 | 29 | அர்த்தோடு ... | அர்த்தத்தோடு |
| 447 | 14 | தக்ஷிணையத்தி ... | தக்ஷிணையணத்தி |
| 449 | 8 | வாசி ... | வாசிக |
| 464 | 26 | ஆச்சரியம்; சூரிய ... | ஆச்சரியம் |
| ,, | 28 | னிலிருந்தே ... | சூரியனிலிருந்தே |
| 466 | 22 | மீரம்சை ... | மீமாம்சை |
| 471 | 5 | போதிக்கிறவன் ... | போதிக்கின்றன |
| 475 | 17 | அப்பிரமா ... | அப்பிர |
| 476 | 2 | அத்வைத் ... | அத்வைத |
| 479 | 31 | ஆநாயாச ... | அநாயாச |

# விளம்பரம்

இப்புத்தகம் வேண்டியவர்கள் அடியிற் கையொப்பமிட்டவர்களிடத்திலும் குற்றாலம் மகா-௱-௱-ஸ்ரீ அ. சிவராவ் அவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

## விற்பனைக்குத் தயாராயுள்ள புத்தகங்கள்.

| | |
|---|---|
| தத்துவமஸிமகாவாக்கிய உபதேசம் ... ... | 0—2—0 |
| விசாரசந்திரோதயம் (வேதாந்தவிஷயம்) அச்சில் | |
| ஹடயோகப்பிரதீபிகை (சம்ஸ்கிருத மூலமும், தமிழுரையும்) ... ... ... ... ... | 1—8—0 |
| சூதசங்கிதை (மூலம் தமிழ்) ... ... ... | 1—8—0 |
| பிரமகீதை (மூலமும் உரையும்) ... ... ... | 2—8—0 |
| ரிபுகீதை (மூலம்) ... ... ... ... | 2—8—0 |
| தேவாரத்திரட்டு ... ... ... ... | 0—3—0 |
| அவதூதசம்வாதம் (உச ருரு) ... ... ... | 0—2—0 |
| கிருஷ்ணன் திருப்புகழ் ... ... ... ... | 0—1—0 |
| ஸ்ரீ விருத்திப்பிரபாகரம் வேதாந்தம் ... ... | 4—[illegible]—0 |
| ஸ்ரீ விருத்தி ரத்நாவலி ஷை ... ... ... | 0—12—0 |
| பாலபோதம் ஷை . ... ... | 1—[illegible]—[illegible] |
| உத்தரகீதை ... ... ... ... .. | [illegible] |
| விவேகசிந்தாமணி, வேதாந்த[illegible] | [illegible]—1—[illegible] |
| தர்க்ககௌமுதி ... | [illegible] |
| தத்துவபோதம் ... | [illegible] |
| சுவாத்மநிரூபணம் .. | [illegible] |
| அபரோக்ஷாநுபூதி | 0—2—0 |
| விசாரசாகரம் ... | 3—0—0 |
| ஈசாவாஸ்யோபநிஷத்து ... ... .. | 1—8—0 |
| கேனோபநிஷத்து .. ... ... | 1—12—0 |
| கடோபநிஷத்து ... ... ... | 4—0—0 |
| பிரச்னம் ... ... ... ... ... | 2—0—0 |
| முண்டகம் ... ... ... ... ... | 2—8—0 |
| மாண்டூக்கியம் ... ... ... ... ... | 3—0—0 |
| Rules for Daily Life (In the press) ... ... | |

☞ வி. கோவிந்தன் அண்டு பிரதர்ஸ்,

ஸ்ரீவித்தியாவிநோதினி பிரஸ், சொந்தக்காரர்

வடக்குராஜவீதி தஞ்சாவூர்.

# INTRODUCTION.

(To the 1st Edition.)

The importance of the work now presented to the public for the first time in a Tamil garb will appear from the following extract—a review of the original that appeared in the Theosophist of Madras some years ago.

"The Vicharsagar, or Ocean of Thought, is an admirable and indeed, exhaustive treatise, in Hindustani, on the main problems of Vedanta Philosophy, by the well known Sâdhu Nischaldas, a pupil of the celebrated Mahatma Dadu. All knowledge begins with thought; but right knowledge follows from right thought which Sree Sankaracharya defines to be none other than the inquiry into life, its beginning, and end. The Vicharsagar is an ocean of thought in this sense of the word. The book opens with the usual description of the four requisites of a composition, *i e,* the subject, the relation, the reader, and the object. The qualities which make one a fit reader or student of the Vedanta include the whole of the preliminary stages of the Raja Yoga, beginning with Viveka, Vairagya, and ending with Mumukshuta. The book then conceives three different kinds of students, varying in the degree of their preparation, natural as well as acquired, for appreciating the truths of an abstruse yet rational and sublime philosophy like the Vedanta, and ends with having made each of them Jivanmukta (absolved even while living) by various arguments, pro, and con, suited to the requirements of each. This is carried out by a beautiful allegory, in which Tatvadrishti (Intuition), Adrishti (scepticism), and Tarkadrishti (free-thinking)—the three sons of king Subha Santati (Holy Samskara), attain Moksha, under proper instruction, the last having advised his father also, of the truths of the highest aim. There are many Sanskrit works on the philosophy of the Vedanta, all based on the Upanishads and the Sutras of Vyasa, as explained by Shankara which it is difficult for many reasons to go through in any short period of time. The present volume, inasmuch as it embodies in itself all the principal things contained in these works, is really a blessing to those who do not know Sanskrit. Nay, it does more. On certain knotty points the work displays such lucidity and accuracy of thought that it is almost difficult to deny that even in classical writers the like of it is not easy to find".

"The Vedanta deals with the phenomena of matter and life, and declares, quite in accordance with modern science, that the ultimate nature of the former cannot be comprehended. It cannot be said to *exist* in the sense in which God—the great knower of

all—*exists*; nor can it be said *not to exist* in the sense in which the horns of a hare" do not exist. Hence its nature is *sat* as well as, *asat i. e., anirvachaniya,* or indescribable. But the Vedanta further maintains that nothing exists but in and of Brahma (the supreme *sat*) devoid of all properties or conditions, and that the *indescribable* creation is but a mere shadow in reality. This, the main forte, of the Vedanta, is attacked by all descriptions of opponents, as a position extremely untenable and therefore easily vulnerable. If everything is Brahma and Brahma is without conditions, where stands the hypothetical shadow of the world? How, again, can *Avidya,* or ignorance, the material cause of this shadow, co-exist with its opposite, Vidya, or gnana the hypothetical attribute of Brahma? And how lastly, from the analogy of a rope conceived in darkness to be a snake, could the world be falsely attributed to Brahma, unless it be granted against the hypothesis that, like the snake, it also had been directly seen in reality, at some previous moment? These are the logical difficulties—exoteric, of course—besetting a clear comprehension of the Vedantic theory. We may assure our readers without indulging in any quotations, which would necessarily lengthen this short notice, that the Vichar Sagar will furnish a clear and concise solution of all these doubts. It is always necessary that a thing should be clear in theory before its practice can fairly begin."

"We may draw attention to one more point which is defined with equal clearness in the volume. What are the marks of a true gnani (enlightened one)? Is he able to free himself from the law of Prarabdha? These are doubts which darken the mental vision of many an enquirer into the secrets of the highest science. Let him who wishes to realise the characteristics of a true *Guru* turn to Vicharsagar, and he will find therein a clear and logical statement of the way in which an enlightened sage can be distinguished from the rest of the world."

"Besides these and many similar points of note there is not a single creed, not any single school of philosophy, which has not its proper place assigned to it in the attempt at general reconciliation put forth in this volume."

The translator thinks that very little more is required to show the importance of the work which is now presented to the Tamil speaking public in the vernacular.

KUTTALAM, S. I. Ry. **A. SIVA ROW.**

# 1-வது பதிப்புக்கு முகவுரை.

இப்பிரபஞ்சத்திற் சகலரும் இச்சிப்பது சுகப்பிராப்தியும் துக்கநிவிர்த்தியுமே. சுகப்பிராப்தியின் பொருட்டு ஸ்திரீ தன புத்திராதிகளை அநேகர் தேடுகிருர்கள். துக்கநிவிர்த்தியினபொருட்டுத் தானம் தர்மம் முதலியவைகளைச் சிலர் செய்கிருர்கள். சிலர் நியாயம் முதலிய கிரந்தங்களை அப்பியசிக்கிருர்கள். ஆனுல் இப்படிப்பட்ட எவ்வித முயற்சியாலும் துக்கமற்ற சுகம் கிடைக்கிறதில்லை. சகல துக்கங்களுக்கும் காரணமெதுவோ அது நீங்காமல் சுகம்உண்டாகமாட்டாது. சாந்தோக்கிய உபநிஷத்தில் அடியில்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது:—ஒருகாலத்தில் நாரதர் சனத்குமாரரைப்பார்த்து ஸ்வாமின் ! என்னைச் சோகமில்லாதவனுகச் செய்தருளுவீரென்ருர். அப்போது சனத்குமாரர் சொன்னதாவது:— பிர்ம்மம் சோகமற்றச் சுகரூபம். அதற்கு வேருனதெல்லாம் துக்கம். அஞ்ஞானமும் அதின் காரியமான ஜகத்தும் பிர்ம்மத்துக்கு வேருக இருப்பதால், அவை துக்கரூபம். ஆகையால் அஞ்ஞானம் நிவிர்த்தியாகாதவரையில் துக்கம் அடியோடு நிவிர்த்தியாகமாட்டாது. இந்த அஞ்ஞானம் ஞானத்தால் நிவிர்த்தியாகும். ஞானம் விசாரத்தால் உண்டாகிறது. நான் யார் ? ஜகத்து எப்படி உண்டாயிற்று? சுக துக்கங்களுக்குக் காரணமென்ன ? இவ்விதமான விசாரணைக்கு விசாரமென்று பெயர். இவ்விதவிசாரமின்றியில் சுகம் கிடைக்கமாட்டாது.

2. இந்த வேதாந்த விசாரம் ஆதிகாலத்தில் எங்கும் விசேஷமாய் நடந்துவந்து, பிறகு மனுஷியர்களுக்குப் போகங்களில் பிரவிர்த்தியதிகப்பட அதுமலினப்பட்டு,இப்போது ஸ்வல்பகாலமாய்ப் புத்திமான்களுடைய புத்தி மறுபடியும் அதில் பிரவிர்த்தித்திருக்கிறது. ஆங்கிலேய தேசத்திலுள்ள, சிலவித்வான்களும் இவ்விசாரத்தில் பிரவிர்த்தித்து நம்முடையஇருஷிகளாற் செய்யப்பட்ட வேதாந்த சாஸ்திரங்களைப்பரிசயம் பண்ணுகிருர்கள். இப்படி இருக்க நாம் நம்முடையகிரந்தங்களைப்பார்த்து நம்முடைய சுகத்துக்குசசாதனமாயிருப்பதைத் தேடாமலிருப்பது வெகு அநுசிதம். ஆகையால் பிர்ம்மஞானத்தை அதாவது ஆத்மஞானத்தை நாம் சம்பாதிக்கவேண்டியது அவசியம். பிர்ம்மஞான விஷயத்தில் விசேஷமுயற்சி இப்போது காணப்படுவதற்குக் காரணமும், அம்முயற்சியின் பலன்களும், பிர்ம்மஞானதத்துவங்

களும் பிரம்மஞானச் சங்கத்தின் புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்விடம் பார்க்க.

3. இந்தப் பிர்ம்ம ஞானமானது உபநிஷத்துக்கள் பிர்ம்மசூத்திரங்கள் இவைகளின் வியாக்கியானங்கள் இவைகளில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. இக்கிரந்தங்களின் கருத்து வெவ்வேறு மதஸ்தர்களால் வெவ்வேறு விதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது எங்கும் அத்துவைதவிசாரமே விசேஷமாயிருப்பதால், அதின்படி வேதாந்தத்தின் சுருக்கம் யாதெனின், சச்சிதானந்தஸ்வரூபமாயும், அகண்டைகரசமாயும், ஸ்வயம்பிரகாசமாயும் அசங்கமாயுமிருப்பது பிர்ம்மம். இது சுத்தமாயிருப்பதால் ஜகத்து முதலியவைகளுக்குக் காரணமன்று. இந்தச் சுத்த சேதனத்தை மாயை என்னும் சக்தி ஆசிரயித்துக்கொண்டிருக்கிறது. இது அனாதியாயும், ஏகமாயும், ஞானத்தால் நாசமடைவதாயும், சதசத்துகளுக்கு விலக்ஷணமாயும் இருக்கிறது. இந்தச்சக்திக்குச் சத்வம் ரஜஸ், தமஸ் என முக்குணங்களுண்டு. சுத்த சத்வகுணத்தில் பிரதிபிம்பிதன் ஈசுவரன். ஈசுவரனே ஜகத்காரணம். இந்த ஈசுவரன் சர்வஞ்ஞன், சர்வசக்திமான், ஸ்வதந்திரன், வியாபகன், நித்தியன். மலின சத்வகுணத்தில் பிரதிபிம்பிக்கிறவன் ஜீவன். அநேக பாத்திரங்களிலுள்ள ஜலத்தில் பிரதிபிம்பிக்கும் சூரியன் ஒன்றானாலும் பிரதிபிம்பங்கள் அநேகமாய்த் தோன்றுவதுபோல, அநேக அந்தக்கரணங்களில் பிரதிபிம்பிக்கும் சேதனம் ஒன்றானாலும் அந்தக்கரணங்களாகிற உபாதிகளில் உண்டாகும் பிரதிபிம்பங்களாகிற ஜீவர்கள் அநேகம். எந்த அந்தக்கரணத்தில் அஞ்ஞானம் இருக்கிறதோ, அந்த அந்தக்கரணத்துடன் கூடிய ஜீவனுக்குப் பந்தம் உண்டாகிறது. ஜீவன் புண்ணியபாபங்களைச்செய்து சுகதுக்கங்களை அனுபவித்து ஜன்ம மரணாதி சம்சார சாகரத்தில் உருளுகிறான். எந்த அந்தக்கரணத்திலுள்ள அஞ்ஞானம் ஞானத்தால் நிவிர்த்தியாகிறதோ அந்த ஜீவன் முக்தனாகிறான். இவ்விதமாகப் பந்தமோக்ஷங்கள் அஞ்ஞானத்துக்கும் ஞானத்துக்கும் ஆதீனமாயிருக்கின்றன. மாயையின் தமோகுணாம்சத்தினின்றும் ஆகாசாதிகளின் சிருஷ்டி உண்டாகிறது. ஞானமுண்டானவுடன் எல்லாம் பிர்ம்மஸ்வரூபம் என்று விளங்குகிறது.

[illegible] இந்தப் பிர்ம்மஞானத்தின் பொருட்டுச் சம்ஸ்கிருதத்தில் உபநிஷ[illegible] பிர்ம்மசூத்திரங்கள், இவைகளின் வியாக்கியானங்கள் முதலிய அ[illegible]கிரந்தங்களும் இதர பாஷைகளிலும் அநேகக்கிரந்தங்களும் ஏற்பட்[illegible]கின்றன. இவைகளில் அடங்கிய முக்கியமான விஷயங்களை எல்லாம் [illegible]ரிந்துகொள்ள இவைகளை எல்லாம் ஒருவன் பார்க்கவேண்டும். வித்வான்[illegible]ளுக்குக் கூட இது சீக்கிரத்தில் முடியாத விஷயமாயிருக்கச்சாதாரண ஜன[illegible]ங்களுக்கு கேட்பானேன். மேலும் உபநிஷதாதிகளில் சில விஷயங்கள் [illegible]கு கடினமாயிருக்கின்றன. தெரிந்துகொள்ளவேண்டும் என்று தீவ்ர ஆ

சையுள்ளவர்களுக்குச் சாதகமில்லாவிடின் அதைவிட அதிக வருத்தம் அவர்களுக்கிராது. ஆகையால் உபநிஷத்துகள், புராணங்கள் முதலியவைகளினின்றும் முக்கியமாய்த்தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களையெல்லாம் அடக்கிக்கொண்டிருக்கும் ஒரு சுலபமானகிரந்தம் வெகு உபயோகமாயிருக்கும்.

5. விசாரசாகரமென்னும் கிரந்தம் இத்தன்மையது. சாதுநிச்சலதாஸ் ஜீ அவர்களால் இது ஹிந்திபாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. டில்லி பட்டணத்துக்குச் சமீபத்திலுள்ள கிஹடௌளி என்னும் கிராமத்தில் இவர் சமீபகாலத்தில் தான் இருந்ததாகத் தெரியவருகிறது. இவருடைய ஞானத்தை இவருடையகிரந்தமே விளக்குவிக்கும். சிந்துமுதலிய வடதேசங்களில் இக்கிரந்தத்தினின்றும் சாதுக்கள் உபதேசம் பெற்றுக்கொள்வதாக தெரியவருகிறது. உதிரியான பூக்களை நாரானது ஒரு மாலையாகக்கட்டுவதுபோல், நிச்சலதாஸ்ஜி அவர்கள் ஜனங்களிடத்தில் வெகு கிருபையால் அவர்களின் உபயோகத்தின்பொருட்டு வெகு புஸ்தகங்களில் அடங்கிய சாரங்களை இந்த ஒரு கிரந்தத்தில் சேர்த்திருக்கிறார்கள். கிரந்தகாரருடைய சரித்திரம் விவரமாய் தெரியவில்லை.

6. கிரந்தம் சாகரம் என்று பெயரிடப்பட்டிருப்பதால், அத்தியாயங்கள் தரங்கங்கள் அதாவது அலைகளாகச்சொல்லப்பட்டிருக்கின்றன. முதலாவது தரங்கத்தில், கிரந்தத்தின் முக்கியமான கருத்தாகிய ஜீவப் பிர்ம்மஐக்கியத்தைக்காட்டும் மங்களாசரணம், கிரந்தமகிமை; அதிகாரிலக்ஷணம், ஜீவப்பிர்ம்மஐக்கியமாகிற விஷயம், துக்கநிவிர்த்தி சுகப்பிராப்தியாகிற பிரயோசனம், சிரவணமனன நிதித்தியாசனங்கள், ஞானத்தின் அந்தரங்க பகிரங்கசாதனங்கள், மோக்ஷத்தின் சாக்ஷாத்சாதனம் இவைகளெல்லாம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

7. முதல் தரங்கத்திற்சொல்லிய அநுபந்தசதுஷ்டயம் இரண்டாவது தரங்கத்தில் விசேஷமாய்ச்சொல்லப்படுகின்றது. ஒவ்வொரு துக்கத்துக்கும் ஒவ்வொரு உபாயம் ஏற்பட்டிருப்பதால் பிர்ம்மஞானமின்றியிலேயே துக்கநிவிர்த்தியாகுமென்றும், அறியப்படாத விஷயத்தில் இச்சையுண்டாகாதபடியால் பிர்ம்மஞானத்தில் இச்சை ஒருவனுக்குமில்லை என்றும், ஜீவப்பிர்ம்மஸ்வரூபங்களில் பேதங்களிருப்பதால் இவைகள்ஒன்றெனக்கூடாதென்றும், அத்தியாசசாமக்கிரிகளில்லாதபடியால் பந்தம் சத்தியமென்றும், இந்தச்சத்தியபந்தம் கர்மத்தால்தான் நிவிர்த்தியாகுமென்றும் பூர்வபக்ஷி ஆக்ஷேபிக்கிறான். பிர்ம்மஞானமின்றியில் துக்கம் அடியோடு நிவிர்த்தியாக

மாட்டாதென்றும், சாட்சிக்கும் பிர்ம்மத்துக்கும் ஏகத்வம்சொல்லக்கூடுமென்றும், பந்தம் மித்தையென்றும், இந்த மித்தியாபந்தம் ஞானமன்றியில் யாதொரு கர்மத்தாலும் நிவிர்த்தியாகமாட்டாதென்றும், அஞ்ஞானியின் கர்ம்மஜன்மாதிபலனைக் கொடுக்காமலிராதென்றும் சமாதானம்சொல்லி,கிரந்தத்தை ஆரம்பிப்பதாற்பிரயோஜனமுண்டென்று கிரந்தகாரர் ஸ்தாபிக்கிறார். அநுபந்தசதுஷ்டயத்தை இந்த இரண்டுதரங்கங்களில் நிரூபித்திருப்பதுபோல சம்ஸ்கிருதகிரந்தங்களில் பார்ப்பது அரிது. சிஷ்யன் சம்பாதிக்க வேண்டிய விவேகாதி சாதனங்கள் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன.

8. மூன்றாவது தரங்கத்தில், குருலக்ஷணம், குருவை அவசியம் தேடவேண்டுமென்பது, குருவைச் சேவிக்கும் விதம், பாஷாகிரந்தத்தினாலும் ஞானமுண்டாகும் என்பவை எல்லாம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

9. நான்காவது தரங்கம்முதல் குரு சிஷ்ய வினாவிடையாக ஒருகதை மூலமாய் ஞானம் உபதேசிக்கப்படுகிறது. இக்கதையில் சுபசந்ததியென்னும் ஒரு அரசன் ஆத்மஞானத்தைச் சம்பாதிக்கவிச்சித்து, தன் பிள்ளைகளாகிற தத்துவதிருஷ்டி, தர்க்கதிருஷ்டி, அதிருஷ்டி, இம்மூவர்களிடத்தில் இராச்சியத்தை ஒப்புவித்துக் காட்டுக்குப்போக எத்தினம் செய்கையில், அந்தக்குமாரர்களே முதலில் புறப்பட்டுப்போய்விட்டார்கள். பிறகு குருவைக்கண்டு அவர்கள் உபதேசம் பெற்றனர். இந்த நான்காவது தரங்கத்தில் உத்தமாதிகாரியாகிய தத்துவதிருஷ்டிக்குத்துக்க நிவிர்த்தி சுகப்பிராப்திகளின் பொருட்டு ஜீவப்பிர்ம்மங்களின் அபேதஞானம் உபதேசிக்கப்படுகிறது. ரஜ்ஜுவில்தோன்றும் சர்ப்பம்போல இந்தப்பிரஞ்சம் மித்தை என்று நிரூபிக்கிப்படுகிறது. ரஜ்ஜு சர்ப்ப திருஷ்டாந்தம் எந்த வேதாந்த கிரந்தத்திலும் சொல்லப்பட்டிருந்தாலும், ரஜ்ஜுவில் சர்ப்பம் எவ்விதமாகஉண்டாகிறதென்பது இந்தக் கிரந்தத்தில்விவரித்திருப்பதுபோலக் காண்பது அரிது. ஜீவப்பிர்ம்ம அபேத விஷயத்தில் வெகு ஆக்ஷேபசமாதானங்களும், வேதகுருவாக்கியங்களால் பிர்ம்மத்தின் பிரத்தியக்ஷஞானமுண்டாகும் என்பதும் இத்தரங்கத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

10. ஐந்தாவது தரங்கத்தில வேதம் குரு இவை பொய்யென்பதும், இவைகளாற்றான் பொய்யான ஜகத்து நிவிர்த்தியாகும் என்பதும், பிர்ம்மத்தை அறியாதபடியால் ஜகத்துத் தோன்றுகிறதென்பதும், மாயை, ஈசுவரன், ஜீவன், சூட்சுமசிருஷ்டி, ஸ்தூலசிருஷ்டி, பஞ்சகோசவிவேகம், லயசிந்தனை, பிரணவ உபாசனை முதலியவைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

11. ஆறாவது தரங்கத்தில்ஜாக்கிரத்தும் ஸ்வப்நமும் அநேககாரணங்களால் சமமென்பதும், "நான்யார்" என்னும் கேள்விக்கு "சச்சி தானந்தஸ்வரூபமாயும், ஜனனமரணங்களன்றியிலும், அசங்கமாயுமிருக்கிற பிர்ம்மமே ஜீவன்" என்கிற உத்தரமும், சிருஷ்டிக்குக் காரணம்யார் என்னும் கேள்விக்கு, ஈசுவரனே தவிர ஜீவன் அல்லவென்பதும், முக்திக்குச் சாதனம் யாது என்னும் கேள்விக்கு அச்சாதனம் கர்மமல்ல, ஞானம் தான் என்பதும், சப்தத்தின் வாச்யார்த்தலக்ஷியார்த்தங்களும் மகாவாக்கிய உபதேசமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

12. ஏழாவது தரங்கத்தில் சமாதியின் அஷ்டாங்கங்கள், ஞானிக்கு பிரவிர்த்தி நிவிர்த்தி இரண்டிலும் நியமமில்லை என்பது, பிராரப்த பலத்தால் ஞானிக்கு வியவகாரம் சம்பவிக்கிறதென்பது, ஜீவன் முக்தி விதேகமுக்தி லக்ஷணங்கள், வேதங்கள் புராணங்கள் முதலியவை அத்வைதஞானத்துக்கே சாதனமாயிருப்பதைக்காண்பிப்பதற்காக வித்தையின் 18 பிரஸ்தானங்களாகிய (4) வேதங்கள், (4) உபவேதங்கள், (6) அங்கங்கள், (18) புராணங்கள், (18) உபபுராணங்கள், நியாயவைசேஷிகமதங்கள், தர்ம சாஸ்திரங்கள், சாங்கிய சாஸ்திரம், பாஞ்சராத்திரம், சைவக்கிரந்தங்கள், வைஷ்ணவக்கிரந்தங்கள், நாஸ்திகமதம், சக்தி பூஜையாகிற வாமமார்க்கம், புராணங்களிற்சொல்லிய சிவன் விஷ்ணு முதலிய தேவதைகளின் பூஜையில் ஸ்ரீவியாசருடைய கருத்து, ஆறு சாஸ்திரங்களில் பிரமாணமானது, இவைகளெல்லாம் விஸ்தாரமாய் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

13. மேற்சொல்லிய விஷயங்கள் தவிர வேறு அநேகவிஷயங்களும் இவ்வேழுதரங்கங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளில் நியாயம் சாங்கியம் முதலிய இதரமதங்களின் கருத்துகளும், அவைகளின் பிசகுகளும் ஆங்காங்கு குறிக்கப்பட்டிருக்கின்றன. இதரமதக்கிரந்தங்கள் விசேஷமாய்த்தத்தம் மதத்தையே ஸ்தாபிக்கும். இதில் இதரமதங்கள் கண்டிக்கப்பட்டு அத்வைதசித்தாந்தம் ஸ்தாபிக்கப்படுகிறது. ஆத்மஞானத்துக்கு உபயோகமான விஷயங்களெல்லாம் தெளிவாயும் யுக்தியுடனும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இக்கிரந்தம் விசேஷமாய் யுக்திப்பிரதானமாயிருக்கிறது. சுருதிவாக்கியங்களை எடுத்துச்சொல்வதினால் மட்டும் அப்பியாசிக்கு விஷயம் சுலபமாய்ப்போதமாகமாட்டாது. ஆகையால் எந்தயுக்திகளால் அச்சுருதிகளின் கருத்து மனதில் சுலபமாய்ப்படுமோ அவைகள் கிரந்தகாரரால் விசேஷமாய் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. கிரந்தம் இவ்வளவு சுலபமாய்கிரந்தக்காரரால் செய்யப்பட்டிருந்தாலும், கடைத்தெருப்புரா

ணங்களைக் கேட்பதுபோல் இதைக்கேட்பதினாலும், கதைகளை வாசிப்பது போல் இதை வாசிப்பதினாலும் மேற்சொல்லிய விஷயங்களெல்லாம் அறியப்படும் என்பது வீணாசை. சிரத்தையுடன் கவனமாய்ப்படிக்காதவரையில் விஷயம் முன்போலவே இருக்கும், சிரமத்துக்குத்தக்க பலன் உண்டு.

14. இந்த அபூர்வமான கிரந்தம் வடதேசத்தில் சிலபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதற்குச்சமானமான கிரந்தம் இத்தமிழ்நாட்டில் காணோம். இக்கிரந்தத்தை முதலில் வாசிக்கும்போது மனனத்தின் பொருட்டு இதை தமிழில் மொழிபெயர்த்தேன். பிறகு இத்தமிழ்நாட்டில் இந்த அற்புத கிரந்தம் விளங்கவேண்டும் என்று சில இஷ்டர்கள் அபேக்ஷித்ததின்பேரில் இதைப்பிரசுரஞ்செய்யப் பிரயத்தினம் செய்யப்பட்டது. இதில் அடங்கிய இரத்தினங்கள் வெளியாகவேண்டுமென்ற கருத்தைத்தவிரவேறில்லை.

15. இக்கிரந்தத்தை 714 பிரிவுகளாகப்பிரித்திருக்கிறேன். இப்பிரிவுகளின் சுருக்கத்தை விஷயசூசக அனுக்கிரமணிகையில் எழுதியிருக்கிறேன். கடினமான விடங்களில் சுருக்கத்தைக்கொஞ்சம் விரிவாயும் எழுதியிருக்கிறேன். இது வெகு சாதகமாயிருக்குமென்று நினைக்கிறேன். (உ—ம்) ஜாக்கிரஸ்வப்நசமநிரூபணம், மகாவாக்கியஉபதேசம். மேலும் இந்த அட்டவணையால் பிரிவுகளின் முன்பின் சம்பந்தங்களும், ஒவ்வொரு விஷயத்திலும் தெரியவேண்டிய உள்விஷயங்களும் தெளிவாய்த் தெரியக்கூடும். விஷயங்களைக் கண்டுபிடிக்கும்பொருட்டு கடைசியில் அகராதி சொல்லட்டவணையையும் கொடுத்திருக்கிறேன்.

16. இத்தமிழ் மொழிபெயர்ப்புக்கு வெகு குறிப்புகள் சின்ன எழுத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் மூலகிரந்தத்தில் கடினமாயுள்ளவைகளைத் தெளிவாக்குவதுடன், மூலத்தை அனுசரித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய சில விஷயங்களையும் எடுத்துச் சொல்லுகின்றன. இக்குறிப்புகள் விசாரசாகரத்தின் வியாக்கியானத்தினின்றும் பஞ்சதசப்பிரகரணம், அதின் ஹிந்தி வியாக்கியானம் இவைகளினின்றும், ஹிந்தி பாலபோதத்தினின்றும், ஸ்ரீசங்கராசாரியருடையபாலபோதம் ஆத்மபோதம் இவைகளினின்றும் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஏகதேசத்தில் சொந்தக் குறிப்புகளையும் கொடுத்திருக்கிறேன், மொத்தத்தில் 408 குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

17. இக்கிரந்தத்தில் சமஸ்கிருத பதங்கள் வருவதால் சிலவிடங்களில் அவைகளைச் சமஸ்கிருதம்போலவே தமிழ் எழுத்தில் எழுதியிருக்கிறேன். (உ—ம்) காரணதை, ஸ்திரதை, சஞ்சலதை முதலியன.

18. இப்படிப்பட்ட கிரந்தத்தை இதுவரையில் ஒருவரும் இத்தமிழ் நாட்டின் உபயோகத்துக்காக வெளியிடாததைப் பார்த்து இப்போது இந்த பிரயத்தினம் என்றால் செய்யப்பட்டது. கூடியபிரயாசையுடன் மொழிபெயர்த்திருக்கிறேன். வித்வான்களால் கண்டுபிடிக்கப்படும் பொருள் குற்றங்களும் சொற்குற்றங்களும் வந்தனத்துடன் அங்கீகரிக்கப்படும். குற்றங்களை மன்னித்துச் சாரத்தை கிரகித்துப் பிரயத்தினப்படுவோர்களைத் தைரியப்படுத்துவது பெரியோர்களுக்குச்சகஜம். இதற்குக்கொடுபடும் ஆதரவின் பேரில் மறுபிரதிபோடும்படி நேரிடுமேயானால் அவைகள் மொழிபெயர்ப்பில் திருத்தப்படும். இப்போது பலவிடங்களில் காணப்படுகிற விசாரத்துக்கு இக்கிரந்தம் உபயோகமானால் எத்தனித்தகாரியம் சபலமாகும்.

19. புஸ்தகத்தின் கடைசியில் காட்டியபடி பிழைகளைத்திருத்திக்கொண்டு புஸ்தகத்தைப்படிப்பது நலம்.

---

## 2-வது பதிப்புக்கு முகவுரை.

1893-ஆம் ஆரம்பத்தில் விசாரசாகரம் தமிழில் முதலில் பிரசித்தப்படுத்தினேன். அக்காலத்தில் இந்த கிரந்தத்தின் மஹிமை இப்பிரதேசத்தில் விசேஷமாய் தெரிந்திராதபடியால் புஸ்தகத்தை இந்நாட்டார் எப்படி ஆதரிப்பார்களோ என்று மனோதைரியமற்றவனாகவேயிருந்தேன். கொஞ்சகாலம் வரையில் புஸ்தகங்கள் விசேஷமாய்ச்செலவாகவில்லை. இதின் மஹிமைதெரியவரத் தெரியவர புஸ்தகங்கள் யாவையும் செலவானதுமன்றி தமிழ் தெரியாத கர்னாடக இராஜ்ஜியத்திலுள்ள ஜனங்களின் உபயோகத்திற்காக கர்னாடக மொழிபெயர்ப்பும் ஏற்பட்டது. தெலுங்குபாஷையிலும் இதைப்போடவேண்டியது என்று சிலர் யோஜித்திருக்கிறார்கள். மலையாளத்தில் போடவேண்டுமென்று ஒரு சுவாமிகள் அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள். இத

ஞல் இந்தக்கிரந்தத்தில் சகல ஜனங்களுக்கும் விசேஷ ஆதரவு இருக்கிறதாய்த்தெரியவருகிறது. இந்தப்புஸ்தகம் வேண்டுமென்று வெகு பெயர்கள் கேட்டபடியால் இரண்டாவது பதிப்பு போட எத்தனித்தேன். இச்சமயத்தில் மூலமான ஹிந்திபதிப்பின் பிரிவுகளை அனுசரித்தே இதிலும் விஷயங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் விருத்திப்பிரபாகரம் என்னும் அற்புத கிரந்தத்தையும் பாலபோதமுதலியமற்றும் அநேக நூல்களையும் ஹிந்தியிலிருந்து மொழிபெயர்த்த தஞ்சாவூர் மகா-ள-ள-ஸ்ரீ வே. குப்புஸ்வாமிராஜு அவர்களைக்கொண்டு இக்கிரந்தத்தை பரிஷ்காரப்படுத்தியிருக்கிறேன். அவர்கள் இந்த விஷயத்தில் எடுத்துக்கொண்ட சிரமம் அதிகம். அவர்கள் செய்த உபகாரத்துக்காக நான் வெகுநன்றியறிவுள்ளவனாகயிருக்கிறேன்.

முதல் பதிப்பின் கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கும் பிரம்மஞானச்சுருக்கம் இந்தப்பதிப்பில் சேர்க்கப்படவில்லை. இந்த பாகத்தை ஸ்வல்ப விஸ்தாரப்படுத்தவேண்டுமென்று யோசனை இருப்பதால் அதை நிறுத்திக்கொண்டிருக்கிறேன்.

குறாலம், }
தஞ்சாவூர் ஜில்லா. }

அ. சிவராவ்.

ால்ல

ஓம்

# ஸ்ரீ விசாரசாகரம்.

## விஷயத்தைக்காட்டும் அனுக்கிரமணிகை.

### முதலாவது தரங்கம்.

### அனுபந்தசாமானியநிரூபணம்.


**1. வஸ்துநிர்த்தேசரூபமங்களம்** 1

1. மங்களாசரணம்

| நம்பர் | | பிரிவு |
|---|---|---|
| 1. | ஜீவப்பிரஹ்ம ஐக்கியரூபமங்கலாசரணம் | |
| 2. | ஒவ்வொரு விசேஷணத்தின் பிரயோஜனம் | |
| 3. | அனேக விசேஷணங்களின் பிரயோஜனம் | |

2. ஆக்ஷேபசமாதானங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஆக்ஷேபம், விஷ்ணுமுதலியவர்களை ஸ்மரிக்கவேண்டியது | |
| 2. | சமாதானம், அவர்கள் தன் ஸ்வரூப சமுத்திரத்தின் அலைகள் | |
| 3. | ஆ. ஈசவரனாகிற சமுத்திரத்தின் அலைகளாகச் சொல்லலாம் | |
| 4. | ச. ஈசுவரனே தன் ஸ்வரூபத்தில் கல்பிதன் | |
| 5. | ஆ. பிரஹ்மத்தில் ஈசுவரன் கல்பிதனாதலால் பிரஹ்மஸ்மரணை செய்யவேண்டும் | |
| 6. | ச. பிரஹ்மத்துக்கும் தனக்கும் யாதொரு பேதமுமில்லை | |
| 7. | ஆ. இஷ்டதேவதைகளை ஸ்மரிக்கவேண்டும் | |
| 8. | ச. இவர்கள் தன்னைக்காட்டிலும் வேறில்லை | |

**2. கிரந்தமகிமை (2—3)**

| | | |
|---|---|---|
| 1. | ஸம்ஸ்கிருத கிரந்தங்களிருக்க இதரபாஷாகிரந்தங்களின் பிரயோஜனம் | 2 |
| 2. | அநேக பாஷாகிரந்தங்களிருக்க விசாரசாகரத்தின் விசேஷம் | 3 |

## 3· அநுபந்தசதுஷ்டயநிரூபணம் (4—32)

1. அநுபந்த சதுஷ்டயம் . (4)
2. அதிகாரி ... (5–23)

1. அதிகாரி வர்ணனம் (5)
2. நான்கு சாதனங்கள் (6-14)
 1. விவேகம்
 2. வைராக்கியம் 7
 3. சமாதிஷட்கசம்பத்தி 8
  (1) இவைகளின் பெயர் 9
  (2) சமதம லக்ஷணம் 10
  (3) சிரத்தை சமாதான லக்ஷணம் 11
  (4) உபரம லக்ஷணம் 12
  (5) திதிக்ஷையின் லக்ஷணம் 13
 4. முமுக்ஷுத்துவ லக்ஷணம் 14
3. ஞானசாதனங்கள் 4
4. அந்தரங்கபகிரங்க சாதனங்கள் 15-16
5. விவேகாதிகளுக்குள் அந்தரங்கசாதனங்கள் 17
6. சிரவணாதிகளின் லக்ஷணமும் பிரயோஜனமும் (18—19)
 1. சிரவணம் 18
 2. மனனம் 18
 3. நிதித்தியாசனம் 18
 4. சிரவணாதிகளின் பிரயோஜனம் 18-19
7. ஞானத்தின் சாக்ஷாத்சாதனம் கேவலம் மகாவாக்கியந்தான் 20
8. இதில் ஆக்ஷேபசமாதானங்கள் (21—24)
 1. ஆ. (1) கேவலவாக்கியத்தால் அபரோக்ஷஞானம் உண்டாக மாட்டாது 21
  (2) அப்படி உண்டானுல் சிரவணாதிகள் வியர்த்தமாகும் 21
 2. ச. (1) கேவலவாக்கியத்தால் அபரோக்ஷஞானமும் உண்டாகும் 22
  (2) சிரவணாதிகளும் வேண்டியவை 23
 3. சம்பந்தம் 24
 4. விஷயம் 25
 5. பிரயோஜனம் 26-32
1. பிரயோஜனலக்ஷணம் 26
2. ஆக்ஷேபசமாதானங்கள் (27—32)

1. ஆ. சுகம் எப்போதுமிருக்க அதை அடையப் பிரயத்தனம் கூடாது 27
2. ச. (1) அடைந்திருக்கப்பட்ட சுகத்தையும் அடையக்கூடும் 28-29
(2) அப்படியே இல்லாத துக்கத்தையும் நிவிர்த்திக்கக் கூடும் 30
3. ஆ. ஒரேபதார்த்த (மோக்ஷ)த்தில் பாவம் அபாவம் இரண்டும் சேரமாட்டா 31
4. ச. அபாவமே பாவரூபமாதலால் சேரக்கூடும் 32

# இரண்டாவது தரங்கம்.

## அனுபந்த விசேஷ நிரூபணம்.

## 1. அனுபந்தகண்டனம் (33—60)

### அதிகாரிவிஷயமாய் ஆக்ஷேபங்கள் (33—38)

1. துக்கநிவர்த்தி விஷயமாய்:—

1. மோக்ஷத்தின் ஒரு அம்சமான காரணமான மூலஅஞ்ஞானம், காரியமான பிரபஞ்சம், இவைகளின் நிவிர்த்தியில் ஒருவருக்கும் இச்சை உண்டாகிறதில்லை. ஆனால் மூன்றுவித துக்க நாசத்தில் விவேகிக்கு இச்சையுண்டாகிறது 33-34

2. இந்த மூன்றுவித துக்கநாசத்தின் பொருட்டு மூலஅஞ்ஞானம் நாசமாகவேண்டியதில்லை 35-36

2. சுகப்பிராப்தி விஷயமாய்——

மோக்ஷத்தின் மற்றொரு அம்சமான பிரஹ்மசுகப்பிராப்தி விஷயத்தில், பிரஹ்மத்தின் அனுபவம் இல்லாததால் அதையடைய இச்சையுண்டாக மாட்டாது 37

3. மோக்ஷ இச்சையும் வைராக்கியாதிகளும் இல்லை:—

எல்லாருக்கும் இகபரலோகங்களின் சுகத்தில் தான் இச்சை உண்டாகிறது. இந்த சுகம் மோக்ஷத்தில் இல்லாதபடியால் மோக்ஷ இச்சை ஒருவருக்குமில்லை. ஆகையால் வைராக்கியாதிகளுமில்லை. ஆதலால் கிரந்தம் நிஷ்பிரயோஜனம். 38

### 2. விஷயத்தில் ஆக்ஷேபங்கள் (39—44)

1. பிரஹ்மம் கிலேசாதிகளற்றதாயும் ஜீவன் அவையுற்றதாயுமிருப்பதால் இரண்டிக்கும் ஏகத்வம் சொல்லக்கூடாது 39

2. சாட்சிக்கும் பிரஹ்மத்துக்கும் ஏகத்வம் சொல்லக்கூடாது 40-44

1. ஜீவனைக்காட்டிலும் சாட்சிவேறில்லை 40
2. அப்படி இருந்தாலும் சாட்சி அனேகமென்றே சொல்லவேண்டும் 41
3. அந்தக்கரணம் இந்திரியங்களுக்கு விஷயமல்ல 41
4. அந்தக்கரணம் அதன் விர்த்திக்கும் விஷயமல்ல 42
5. அந்தக்கரணமும் அதன் தர்மங்களான சுகதுக்கங்களும் சாட்சிக்குத்தான் விஷயங்கள் 43
6. ஒருவர் சுகதுக்கங்கள் மற்றொருவருக்கு இல்லாதபடியால் சாட்சி அனேகம். சாட்சிக்கும் பிரஹ்மத்துக்கும் ஏகத்துவம்சொல்லக்கூடாது 44

## 3. பிரயோஜனத்தில் ஆக்ஷேபங்கள். (45—59)

1. ஞானத்தால் பந்தம் நிவிர்த்தியாகமாட்டாது (45—50)

1. பந்தம் சத்தியம் 45
2. அத்தியாச சாமக்கிரிகளின் விவரம் 46
3. இவைகளில்லாததால் பந்தம் சத்தியம் (47—50)

(1) சித்தாந்தத்தில் பந்தம் பொய்யாயிருப்பதால் சத்தியவஸ்து ஸம்ஸ்காரம் சித்திக்கவில்லை. ஆகையால் பந்தம் சத்தியம் 47

(2) ஆத்மாவுக்கும் பந்தத்துக்கும் சாதிருசிய தோஷமில்லாதபடியால் தோஷம் சித்திக்கவில்லை; ஆகையால் பந்தம் சத்தியம் 48

(3) சித்தாந்தத்தில் பிரமாத்ரூப் பிரமாணங்கள் கல்பிதங்களாதலால் தோஷங்கள் சித்திக்கவில்லை. ஆகையால் பந்தம் சத்தியம் 49

(4) அதிஷ்டான பிரஹ்மத்தினிடத்தில் அஞ்ஞானம் சேர்ந்திருக்கமாட்டாது 50

(5) பிரஹ்மத்துக்கு சாமானிய விசேஷபாவங்களில்லை. நிர்விசேஷம். ஆகையால் பிரஹ்மம் சாமானியமாய் அறியப்படுகிறதென்றும் விசேஷமாய் அறியப்படவில்லையென்றும் சொல்லக்கூடாது. ஆகையால் பந்தம் சத்தியம் 50

2. கர்மத்தால் மோக்ஷம் சித்திக்கும். ஏகபவிகவாதம் (51—58)

1. மோக்ஷமடைய கர்மத்தை அவசியம் செய்யவேண்டியது 51
2. கர்மத்தின் விவரம் (52—53)
   (1) விகிதம். (2) நிஷித்தம் 52
   (3) விகிதத்தில் நான்கு விதம் 53
3. மோக்ஷஇச்சையுள்ளவன் செய்யவேண்டிய கர்மம் (54—58)
   (1) நிஷித்த காமியகர்மங்களை விட்டு நித்தியநைமித்திக கர்மங்களைச் செய்யவேண்டும். இவைகளுக்குப் பலனில்லை 54
   (2) நிஷித்தத்தை நிவிர்த்திக்கப்பிராயச்சித்த கர்மத்தைச் செய்யவேண்டியது (55—56)
      (1) சாதாரண பிராயச்சித்தம் அறியப்பட்டிருக்கிற பாபத்தையும் அசாதாரண பிராயச்சித்தம் அறியப்படாத ஜன்மாந்திர பாபத்தையும் நிவிர்த்திக்கும் 55
      (2) சாதாரண பிராயச்சித்தத்தின் இருவகைப்பலன்கள் 56
      (3) ஜன்மாந்திர காமியகர்மங்கள் இப்போது பலனிலிச்சை இல்லாதவனுக்கு பலிக்கிறதில்லை 57
      (4) ஜன்மாந்திர பிராரப்தகர்மம் போகத்தினால் நாசமடைகிறது 58
      (5) பிராயச்சித்தமும் அனவசியம் 58
3. பந்தநிவிர்த்தி ஞானமன்றியில் வேறு உபாய (கர்ம) த்தால் சித்திக்கிறபடியால் கிரந்தம் நிஷ்பிரயோஜனம் 59


4. சம்பந்தத்தில் ஆக்ஷேபம்.


அதிகாரி முதலியவை சித்திக்காதபடியால் சம்பந்தமும் சித்திக்கவில்லை ஆகையால் கிரந்தம் நிஷ்பிரயோஜனம் 60


## 2. அனுபந்தமண்டனம் (61—93)

### அதிகாரிவிஷயமான ஸமாதானங்கள் (62—71)


1. ஆக்ஷேப சுருக்கம் 61
2. (33—36) க்குச் சமாதானம் (62—63)
   1. துக்ககாரணங்கள் முழுமையும் நிவிர்த்தியாகாமல் துக்க நிவிர்த்தியாகமாட்டாது 62
   2. அந்தக் காரணங்கள் பிரஹ்மத்துக்குப் பின்னமான அஞ்ஞானமும் அதின் காரியமான பிரபஞ்சமுமே 63

3. 37-க்குச் சமாதானம். சுகானுபவம் எல்லாருக்கும் இருப்பதால் நித்தியசுகரூபமான பிரஹ்மப்பிராப்தியில் இச்சை உண்டாகக் கூடும். 64

4. 38-க்குச் சமாதானம் (65—71)

1. முமுட்சுக்கள் இருக்கிறார்கள் 65
2. ஆத்மசுகத்தில்தான் இச்சை எல்லாருக்கும் உண்டாகிறது 65
3. முமுட்சு சித்திப்பதால் கிரந்தம் ஸபலம் (66—68)
(1) இந்தக் கிரந்தம் மோக்ஷசாதனமாக இருக்கிறது 66
(2) வேறுசாதனங்களிருந்தாலும் இது விஷ்பிரயோஜனமல்ல 67
(3) விவேகாதிகள் கூடினவன் இருக்கக்கூடுமானதால் அவனுக்கு இந்தக்கிரந்தம் பிரயோஜனப்படும் 68
4. நித்திய சுகத்தில் இச்சை உண்டாகிறதில்லை என்பது கிடையாது
(1) பாமரவிஷயிலக்ஷணம் 69
(2) ஜிஞ்ஞாசு முக்தலக்ஷணம் 70
5. ஜிஞ்ஞாசுவுக்குப் பிரவிர்த்தியுண்டாகும். ஆகையால் கிரந்தம் பிரயோஜனமுள்ளது 71

2. விஷயத்தில் சமாதானங்கள் (72—76)

1. ஜீவனுக்கும் பிரஹ்மத்துக்கும் ஏகத்வம் கூடாது சாட்சிக்கும் பிரஹ்மத்துக்கும் ஏகத்வம் கூடும் (72—74)
1. சாட்சி ஸ்வரூபம் 72
2. ஜீவஸ்வரூபம் 77
3. ஏகத்வநிரூபணம் 77
2. நாநாசாட்சிக்கும் பிரஹ்மத்துக்கும் ஏகத்வம் சம்பவிக்கும் 75
3. சுகதுக்கங்கள் கேவலசாட்சிக்குத்தான் விஷயமல்ல; ஆனால் விருத்தியில் ஆரூடமான சாட்சிக்கு விஷயங்களாம் 76

3. பிரயோஜனவிஷயமாய் சமாதானங்கள் (77—92)

1. பந்தம் மித்தை. அது ஞானத்தால் நிவிர்த்தியாகும் (77—86)
1. காரிய அத்தியாசநிரூபணம் (77—84)
(1) பந்தம் மித்தை 77
(2) 46-வது பிரிவில்கண்ட சாமக்கிரிகள் அத்தியாசத்துக்கு வேண்டியதில்லை. (78—84)
1. சம்ஸ்காரம்:— (78—82)

(1) சத்தியவஸ்து ஞானஜன்ய சம்ஸ்காரம் அவசியமில்லை. வஸ்து பொய்யாகவும் இருக்கக்கூடும் 78

(2) காரியத்துக்குக்காரணம் அவ்வியவஹித பூர்வகாலத்தில் இருக்கவேண்டும் 79

(3) ஆ. காரணம் வியவஹிதகாலத்திலும் இருக்கக்கூடும் 79

(4) ச. காரணம் அவ்வியவஹித பூர்வகாலத்திலேயே இருக்கவேண்டும் 79

(5) இந்த நியமம் சுவர்க்கநரகப்பிராப்தியில் காணப்படுகிறது 79

(6) மேற்படி நியமம் ரஜ்ஜுசர்ப்பப் பிராந்தியிலும் இருக்கிறது 80

(7) ஷை. நியமம் சகல அத்தியாச விஷயத்திலும் இருக்கிறது 80

(8) பந்த அத்தியாசத்திலும் உத்தர அகங்காராதிகளுக்கு பூர்வ அகங்காராதிகளின் ஞான சம்ஸ்காரம் காரணமாம் 81

(9) அகங்காராதிகள் பிரவாகரூபமாய் அநாதியாயிருப்பதால் எல்லாவற்றிற்கும் முதலாவது அத்தியாசம் ஒன்றுண்டென்பதில்லை 82

2. பிரமாதருதோஷம்:—வைராக்கிய புருஷனுக்கும் லோப பயாதி தோஷங்களன்றியிலேயே கிளிஞ்சலில் வெள்ளி அத்தியாசம் உண்டாவதால் பிரமாதாவின் தோஷம் அவசியமில்லை 83-84

3. பிரமாண தோஷம்:—நேத்திரரோகமில்லாதவனுக்கும் ஆகாசத்தில் நீலவர்ணம் தோன்றுவதால் பிரமாண தோஷம் அவசியமில்லை. 84

4. பிரமேயதோஷம்:-ஆத்மாவுக்கும் பிரஹ்மத்துக்கும் சாதிருசிய தோஷமில்லாவிட்டாலும் அத்தியாசம் உண்டாகிறது 84

2. காரண அத்தியாச நிரூபணம் (85—86)

(1) பிரஹ்மத்தினிடத்தில் அஞ்ஞானம் சேர்ந்திருக்கக்கூடும் 85

(2) ஆத்மா சாமனியமாய் அறியப்பட்டும் விசேஷமாய் அறியப்படாமலும் இருக்கிறது. மேலும் ஆத்மா நிர்விசேஷமென்பதற்கு ஹானிவரமாட்டாது 86

2. கர்மத்தால் மோக்ஷம் சித்திக்கமாட்டாது (86—91)

1. (55—58) ஆக்ஷேபச்சுருக்கம் 87

2. நித்திய நைமித்தியங்கள் சுவர்க்கபலனைக் கொடுக்கின்றன 87

3. ஜன்மாந்திர காமிய கர்மம் அஞ்ஞானிக்குப்பலனை அவசியம்கொடுக்கும் 57-க்குச் சமாதானம் 88

4. ஞானத்தாலன்றியில் கர்மபலபோகம் தீராது 89

5. பிராயச்சித்தம் சகல பாவங்களேயும் நிவிர்த்திசெய்யாது க்குச் சமாதானம் 90
6. நித்திய நைமித்திகங்களால் பூர்வ சஞ்சித நிஷித்த கர்மபலன் போகமாட்டாது 91
7. சஞ்சிதகாமிய கர்மமெல்லாம் ஒரு சரீரத்தில் அனுபவிக்க முடியாது 92
8. முடிவு; ஞானமில்லாவிடின் மோக்ஷம் சித்திக்கமாட்டாது 92
4. சம்பந்தவிஷயத்தில் ஸமாதானம்
இவைகள் சித்திப்பதால் சம்பந்தமும் சித்திக்கிறது. ஆகையால் கிரந்தத்தை ஆரம்பிக்கக்கூடும். 93

# மூன்றாவது தரங்கம்.

## குருசிஷ்யலக்ஷணம்.

1. கிரந்தத்தை ஆரம்பிக்கிறதாக ப்ரதிஜ்ஞை. 94
2. குரு சிஷ்யலக்ஷணம் (95—96)

1. குருலக்ஷணம் 95
2. சிஷ்யலக்ஷணம் 96

3. குரு அவசியம் வேண்டியது

1. குருபக்திபலன் 97
2. ஞானியாகிற குருவினிடத்தில் தான் வேதார்த்தத்தைக்கேட்க வேண்டியது 98

4. பாஷாக்கிரந்தத்தாலும் ஞானம் உண்டாக்கூடும் 99
5. குருசேவை (100—106)

1. குருவை அவசியம் சேவிக்கவேண்டியது 100
2. அந்த சேவையின் ப்ரகாரம் (101—105)

1. நமஸ்காரம்செய்து சமீபம் இருத்தல், சரீரம் முதலியவைகளே அர்ப்பணம்செய்தல் 101
2. சரீரத்தை அர்ப்பணம் செய்தல் 102
3. மனதை அர்ப்பணம் செய்தல் 103
4. தனத்தை அர்ப்பணம் செய்தல் 104
5. வாக்கை அர்ப்பணம் செய்தல் 105

3. சிஷ்யன் நடந்துகொள்ளவேண்டியவிதம்

(1) பிக்ஷைவாங்கல். 106
(2) உத்திரவின்பேரில் புசித்தல் 107
(3) உத்திரவின்பேரில் கேள்வி கேட்கல் 108

# நான்காவது தரங்கம்.

## உத்தமாதிகாரி உபதேச நிரூபணம்.

———:-:-0-:-:———


1. பூர்வபீடிகை 109

II. சுபசந்ததி ராஜாவினுடையவும் அவர் பிள்ளைகளான தத்வதிருஷ்டி, அதிர்ஷ்டி, தர்க்கதிர்ஷ்டி இவர்களுடையவும் கதை 109-112

III. தத்துவதிர்ஷ்டியின் கேள்வி:—சுகப்பிராப்திக்கும் துக்கநிவிர்த்திக்கும் கர்மஉபாசனைகளைத்தவிர வேறுபாயத்தைச் சொல்லவேண்டும் 113-114

IV. ஞானோபதேசம் 115—155

1. **குருஉத்தரம்:**—சுகம் எப்போதும் இருப்பதாலும் துக்கம் ஒருகாலத்திலும் இல்லாததாலும், கேள்வியில்கண்ட இச்சைபிராந்தியால்தான் உண்டாகிறது. நீ ஜனனமரணமில்லாத சேதனஸ்வரூபமான பிர்ம்மமாயிருக்கிறாய் 115

2. **இதில் ஆக்ஷேபசமாதானங்கள்**(116—155)

1. சுகவிஷயமாய்:—(116—119)

1. சிஷ்யன் :-நானே ஆனந்தரூபமாக இருந்தால் விஷயசம்பந்தத்தால் எனக்கு ஆனந்தம் தோன்றக்கூடாது. அப்படித்தோன்றுவதால் நான் ஆனந்தரூபன் அல்லன். 116

2. குரு :-அஞ்ஞானிகள் விஷயத்தில் பிரவிர்த்திக்கும்போது அவர்கள் மனது சஞ்சலிப்பதால் ஆத்மானந்தம் அவர்கள் புத்தியில் பிரதிபிம்பிக்கிறதில்லை, விஷயத்தில் ஆனந்தமில்லை என்பது சுருதியுக்தி அனுபவங்களால் பிரதிபாதிக்கப்படுகிறது. 117

3. சி. ஞானிக்கும் விஷயத்தில் இச்சை உண்டா? இல்லையா? 118

4. கு. விஷயத்தில் பிரவிர்த்தித்திருக்கும்போது ஞானியும் அஞ்ஞானிபோல் இருக்கிறான். ஆனால் விஷயாநந்தத்தை ஸ்வரூபானந்தத்துக்கு வேறாக அவன் நினைக்கிறதில்லை. 119

2. துக்கவிஷயமாய் (120—155)

1. சி. ஜனனாதி துக்கங்கள் யாருக்குண்டு? 120

2. கு. அவைகள் ஒருவருக்குமில்லை. 121

3. சி. துக்கம் ஒருவருக்கும் இல்லாவிட்டால் பிரத்தியக்ஷமாய் ஏன் காணப்படுகிறது? 122

4. கு. தான் பிர்ம்மஸ்வரூபமென்று அறியாதபடியால், ரஜ்ஜு
சர்ப்பம்போலும், சொப்பனபதார்த்தம்போலும். துக்கம்
பொய்த்தோற்றமாயிருக்கிறது. 123

5. ஃ. ரஜ்ஜுவில் சர்ப்பம் எப்படி தோன்றுகிறது. 124

4. கியாதிகள் (125—130)

(1) அசத்கியாதி 126

(2) ஆத்மக்கியாதி 127

(3) அந்நியதாக்கியாதி (128—129)

1. நையாயிக வைசேஷிக மதம் 128

2. சிந்தாமணிக்காரர் மதம் 129

(4) ஷை மூன்று கியாதிகளின் கண்டனம் 130

(5) அக்கியாதி 130

6. கு. 1. அக்கியாதி கண்டனம் (131—132)

2. அனிர்வசனீயகியாதி (133—146)

(1) அதின் லக்ஷணம் சர்ப்பம் அவித்தியாபரிணாமம் 133

(2) சர்ப்பஞானமும் அவித்தியாபரிணாமம். சர்ப்பமும்
அதின்ஞானமும் ஒரேகாலத்தில் உண்டாகி ஒரே
காலத்தில் லயமாகின்றன 134

(3) சர்ப்பம் சாக்ஷியாவஷியம் 134

(4) ரஜ்ஜுவில் சர்ப்பமும் அதின்ஞானமும் அவித்தி
யாபரிணாமமாயும் சேதனவிவர்த்தமாயும் இருக்கின்
றன 135

(5) பிராந்திக்கு அதிஷ்டானம் ரஜ்ஜு அந்தக்கரண
உபகிதசைதன்னியம்தான்; ரஜ்ஜுவன்று. சர்ப்
பமும் அதின்ஞானமும் ரஜ்ஜுஞானத்தால் நிவி
ர்த்தியாகின்றன 136

(6) ஆக்ஷேபசமாதானங்கள் (137—147)
ஆ. ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பம் நிவிர்க்தியாகமா
ட்டாது 137

ச. ரஜ்ஜுஞானமே சர்ப்பத்தின் அதிஷ்டான
ஞானமாயிருப்பதால் சர்ப்பம் நிவிர்த்தியாகக்கூடும் 138

ஆ. ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பஞானம் நிவிர்த்தி
யாகமாட்டாது 139

ச. சர்ப்பமே இல்லாதபடியால் சர்ப்பஞானமும்
இருக்கமாட்டாது 140

ஆ. அதிஷ்டானஞானமன்றியில் கல்பிதம் நிவிர்த்
தியாகமாட்டாது. ஆகையால் சாக்ஷிஞானமன்றி
யில் சர்ப்பஞானம் நிவிர்த்தியாகமாட்டாது 141

ச. (1) நிவிர்த்தி இருவகையாதலால். சாக்ஷிஞான
மன்றியில் சர்ப்பஞானம் நிவிர்த்தியாகக்கூடும் 142

(2) ரஜ்ஜுஞானம் உண்டாகுஞ்சமயத்தில் சாக்ஷி விளங்குகிறது 143

(3) திரிபுடிஞானத்தால் சாக்ஷிஞானம் அவசியம் இருந்துகொண்டிருக்கிறது. 144

(7) ஆகையால் ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பமும் அதின் ஞானமும் நிவிர்த்தியாகின்றன 145

(8) ஒரே ரஜ்ஜு பலபேர்களுக்கும் பலவிதமாகத் தோன்றுவதால் பிராந்திக்கு அதிஷ்டானம் சாக்ஷியேதவிர வேறில்லை 146

7. சி. அபாரமான மித்தியா ஜகத்துக்கு ஆதாரமும் அதிஷ்டானமும் யார்? 147

8. கு. (1) பொய்யான ஜகத்துக்கு ஆதாரமும் அதிஷ்டானமும் நீதான் 148

(2) ஆத்மாவின் சாமானியரூபம் ஆதாரமென்றும் விசேஷ ரூபம் அதிஷ்டானமென்றும் சொல்லப்படும் 149

9, சி. ரஜ்ஜுசர்ப்பங்களைக்காட்டிலும் வேறான திருஷ்டா இருப்பதுபோல ஆத்மாவைக்காட்டிலும் வேறு யார் ஜகத்தைப் பார்க்கிறான். 150

10. கு. (1) அதிஷ்டானம்ஜடமானால்ஆத்மா திருஷ்டா, சேதனமானால்சேதனமே திருஷ்டா. எல்லாக்கல்பிதங்களுக்கும் அதிஷ்டானமே திருஷ்டா 151

(2) ஆகையால் பொய்யான சம்சாரத்தை நிவிர்த்திக்க இச்சிக்கலாகாது 152

11. சி. ஜன்மாதிசம்சாரம் பொய்யாக இருந்தாலும் துக்கத்துக்கு ஏதுவாயிருப்பதால் அதை நிவர்த்திக்க உபாயஞ்சொல்லவேண்டும் 153

12. கு. (1) ஆத்மா அறியப்படாததினால் ஜகத்து பிரதீதியாகிறது. அதை நிவிர்த்திக்க உபாயம் ஆத்மஞானந்தான் 154

(2) அஞ்ஞானம் கேவலஞானத்தால்தான் நசித்துப் போகும்; கர்மஉபாசனைகளால் நசிக்கமாட்டாது. 155

## V. உபதேசித்த விஷயத்தில் ஆக்ஷேபசமாதானங்கள் (156—212)

### 1. ஜீவப்பிர்ம்ம அபேதம்(156—175)

1. உபதேசத்தின் சுருக்கமும் சங்கையின் சூசனையும் 156

2. தத்வதிருஷ்டியின்கேள்வி:— (167—169)

1. சங்கைக்குக்காரணம் ஜீவப்பிர்ம்மஸ்வரூபபேதங்கள் 157

2. புத்திரூபவிருக்ஷத்தில் இரண்டு பக்ஷிகள் இருப்பதாயும், ஒன்று போகங்களை அனுபவிக்கிறதாயும் மற்றொன்று போகமன்றியில் இருப்பதாயும் சொல்லப்பட்டிருக்கிறதினால் ஜீவனுக்கும் பிர்ம்மத்துக்கும் பேதமுண்டு 158

3. அப்படி பேதம் இல்லாவிட்டால் கர்மஉபாசனைகள் வியர்த்தமாய்விடும் 158

3. குருஉத்தரம் (159—175)

1. 167-க்கு உத்தரம் (159—173)

1. ஆகாசத்தில் நான்குவிதம் இருப்பதுபோல் சேதனத்திலும் நான்குவிதமுண்டு 159

2. நான்கு ஆகாசவர்ணனை (160—163)

(1) கடாகாசம் 160

(2) ஜலாகசம் 161

(1) வர்ணனை 161

(2) சங்கை 161

(3) சமாதானம் 161

3. மேகாகாசம் 162

(1) வர்ணனை 162

(2) சங்கை 162

(3) சமாதானம் 162

4. மகாகாசம் 163

(3) நான்குவித சேதனங்கள் (164—172)

(1) அவைகளை வர்ணிப்பதால் உண்டாகும் பலன் 164

(2) கூடஸ்தவர்ணனை 165

(3) ஜீவவர்ணனை (166—170)

1. புத்திப்பிரதிபிம்பருகை (166—169)

(1) ஜீவஸ்வரூபம் 166

(2) ஆபாசலக்ஷணம் 167

(8) ஜீவன் த்வம்பதத்தின் வாச்சியார்த்தம், கூடஸ்தன் த்வம்பதத்தின் லக்ஷியார்த்தம் 167

(4) ஜீவனுடைய புண்ணியபாவங்கள்

1. ஆபாசனிடத்தில்தான் விளங்குகின்றன 168

2. விசாரித்துப்பார்த்தால் ஆபாசனிடத்திலும் இல்லை. புத்தியில்தான் விளங்குகின்றன 169

2. அஞ்ஞானப் பிரதிபிம்பருகை 169

(1) முதல் (166) ஸ்வரூபத்துக்குதோஷம்.

(2) ஸ்வரூபம் வேறுவிதம் 170

(4) ஈசுவரவர்ணனை. தத்பதத்தின் வாச்சியார்த்த லக்ஷியார்த்தங்கள் 171

(5) பிரம்ம வர்ணனை. பிரம்மபதத்தின் வாச்சியார்த்த லக்ஷியார்த்தங்கள் 172

4. ஜீவனுடைய ஆபாசாம்சம் புண்ணியபாபங்களைச் செய்து சுகதுக்க பலன்களை அனுபவிக்கிறது 173

2. (168—169) க்கு உத்தரம் (173—175)

1. புத்திரூபவிருக்ஷத்திலுள்ள பக்ஷிகளுக்கு அர்த்தம். கூடஸ்தர் பிரகாசம் பண்ணுகிறார். ஆபாசன் போகிக்கிறான். 173

2. ஜீவஸ்வரூபத்திலிருக்கிற ஆபாசன் கர்மம் செய்கிறான். ஈசுவரஸ்ரூபத்திலிருக்கிற ஆபாசன் பலனைக் கொடுக்கிறான். சுத்தசைதன்னியம் கர்மத்தையும் செய்கிறதில்லை, பலனையும் கொடுக்கிறதில்லை. 174

3. ஜீவபிரமங்களுடைய லக்ஷியார்த்தத்தில் பேதமில்லை. ஆகையால் "நான் பிரம்மம்" என்று அறி 175

2. நான் பிரம்மம் என்கிற ஞானம் யாருக்குண்டாகிறது (176—185).

1. சி. ஜீவஸ்வரூபத்தில் கூடஸ்தனும் ஆபாசனும் இருப்பதால் "நான் பிரம்மம்" என்கிற ஞானம் யாருக்குண்டாகிறது 176

2. கு. 1. "நான் பிரம்மம்" என்கிறஞானம் சேதனமாகிற கூடஸ்தனுக்கு உண்டாகிறதில்லை. ஆபாசனுடைய ஏழு அவஸ்தைகளில் ஒரு அவஸ்தையில் ஆபாசனுக்கு உண்டாகிறது 177

2. ஏழு அவஸ்தைகள் (178—183)

1. அவைகளின் பெயர் 178

2. அஞ்ஞான ஆவரண ஸ்வரூபங்கள் 179

3. பிராந்தி 180

4. பரோக்ஷ அபரோக்ஷ ஞானங்கள் 181

5. பிராந்திநாசம் 182

6. ஹர்ஷம் 183

3. ஞானம் ஆபாசனுக்குத்தான் உண்டாகிறது 183

3. சி. பிர்ம்மத்தைக்காட்டிலும் வேறாகயிருக்கிற ஆபாசனுக்கு "நான் பிர்ம்மம்" என்கிற ஞானம் உண்டானால் அந்த ஞானம் பொய்யாய்விடும் 184

4. கு. "நான்" என்கிற பதத்துக்கு இரண்டு அர்த்தங்கள். அவைகளில் (1) கூடஸ்தனுக்கும் பிர்ம்மத்துக்கும் முக்கிய சாமானாதிகரணியத்தாலும், (2) ஆபாசனுக்கும் பிர்ம்மத்துக்கும் பாதசாமானாதிகரணியத்தாலும் அபேதம் பிரதிபாதிக்கப்படுகிறது. 185

3. கூடஸ்தன் ஆபாஸன் தோன்றும் காலம் 186—205

1. சி. நான் என்பதில் கூடஸ்தனும் ஆபாஸனும் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அவைகளிரண்டும் ஒரேகாலத்தில் தோன்றுகின்றனவா? அல்லது வெவ்வேறு காலங்களில் தோன்றுகின்றனவா? 186

2. குரு உத்தரம் (187—205)

1. ஒரே காலத்தில் சாக்ஷியாகிற கூடஸ்தனும் ஆபாசனும் தோன்றுகிறார்கள். ஆபாசன் சாக்ஷிக்கு விஷயமாயிருக்கிறான். சாக்ஷி ஆபாசனுக்கு விஷயமாயில்லை 187

2. கடாதி வெளிப்பதார்த்த விஷயங்களில்.

(1) அந்தக்கரணவிர்த்தி ஆபாசசகிதமாயிருக்கிறது 187

(2) அஞ்ஞானத்துக்கு ஆசிரயமும் விஷயமும் சேதனமாம் 188

(3) கடம் ஸ்வயம் ஜடமாயினும் அது எப்போதும் ஆவிருதமாயிருக்கிறது. அந்தக்கரணத்தின் விருத்திபாகம் ஆவரணத்தைப் போக்கடிக்கிறது. ஆபாசபாகம் கடத்தைப் பிரகாசிப்பிக்கிறது. 189

(4) திருஷ்டாந்தம் 190

3. பிரமாண நிருபணம் (190—196)

(1) பிரத்தியக்ஷப் பிரமாணம் 190—191

(2) அனுமானப் பிரமாணம் 192

(3) சப்தப்பிரமாணம் 193

(4) உபமானப்பிரமாணம் 194

(5) அர்த்தாபத்திப்பிரமாணம் 195

(6) அனுபலப்திப் பிரமாணம் 196

4. பிரமாலக்ஷணம் (197—199)

(1) ஸ்மிருதி பிரமாவல்லவென்பதாம் 197

(2) ஸ்மிருதியும் பிரமாவென்பதாம் 198

(3) சித்தாந்தம் 198

(4) ஆறுவிதப் பிரமாக்கள் 199

5. கரணலக்ஷணம். 199

இந்திரியங்களின் கரணசித்தி 200

6. பிரமாதி சேதனங்கள்

(1) பிரமாதிருசேதனம் 200

(2) பிரமாண சேதனம் 200

(3) பிரமாசேதனம் 200

(4) பிரமேயசேதனம் 200

7. பிரமாதா லக்ஷணம் (201—204)

(1) அவச்சேதவாதத்தில் அந்தக்கரணவிசிஷ்டசேதனம் பிரமாதா, அந்தக்கரணஉபகிதசேதனம் சாக்ஷி 201

(2) ஆபாசவாதத்தில் அந்தக்கரணமும் ஆபாசமும் சேதனமும் சேர்ந்தது பிரமாதா. ஆபாசகித அந்தக்கரண உபகித் சேதனம் சாக்ஷி 202

(3) இரண்டு பக்ஷங்களின் வித்தியாசங்கள் 202

(4) ஆபாசவாதத்தின் சிரேஷ்டதை 203

(5) அந்தக்கரணத்தில் இருக்கிற இரண்டுவிதப் பிரகாசமே பிரமாதா என்னப்படும். வேறு இல்லை 204

8. பிரமாதா முதலிய நான்கு சேதனங்களின் ஸ்வரூபம் 205

9. கடாதி விஷயங்களுடையவும் ஆந்தர பிரமத்தினுடையவும் பிரத்தியக்ஷஞானம் உண்டாகும் விதம் 205

4. பிரம்மத்தின் பிரத்தியக்ஷ ஞானம் (206—212)

1. தத்துவதிருஷ்டியின் கேள்வி (206—210)

1. இந்திரிய சம்பந்தமன்றியில் பிரம்மத்தின் பிரத்தியக்ஷஞானமுண்டாக மாட்டாது. 206

2. பிர்ம்மம் ஞானேந்திரியத்துக்கு விஷயமல்ல (207—209)

1. ராமகிருஷ்ணாதிகளுடைய சரீரங்கள் பிர்ம்மமல்ல. ஆனால் அதிஷ்டானமே பிர்ம்மம் 207

2. ஆக்ஷேபம் சரீரமே பிர்ம்மம் 207

3. சமாதானம் அதிஷ்டான சேதனமே பிர்ம்மம் 207

4. ராமகிருஷ்ணாதி சரீரங்களுக்கும் இதர சரீரங்களுக்கும் வித்தியாசம் 207

(1) புண்ணியபாபங்களுக்கு ஆதீனமாகாமலிருத்தல் 207

(2) பூதகாரியமாகாமலிருத்தல் 207

(3) அஞ்ஞானநிவிர்த்திக்கு உபதேசத்தை அபேக்ஷிக்காமலிருத்தல் 207

5. ஆகையால் பிர்ம்மம் நேத்திரேந்திரியத்துக்கு விஷயமாயில்லை 207

6. பிர்ம்மம் த்வக்கிந்திரியத்துக்கு விஷயமல்ல 208

7. பிர்ம்மம் ரஸனை, கிராணம், சுரோத்திரம் இவைகளுக்கு விஷயமல்ல. 209

3. பிர்ம்மம் கர்மேந்திரியங்களுக்கு விஷயமல்ல 210

2. குரு உத்தரம் (211—212.)

1. இந்திரியசம்பந்தமன்றியில் பிரத்தியக்ஷ ஞானம் உண்டாகாதென்கிற நியமமில்லை. 211

2. சுகதுக்கங்கள் சாக்ஷியால் விளங்குகின்றன 211

3. பிர்ம்மஞானம் பிரத்தியக்ஷமாக இந்திரியங்களின்றியில் உண்டாகிறது. பிர்ம்மம் சாக்ஷிபாவியமன்று 212
4. அனுமானஞானம் 212
5. சங்கிரகம் 212
6. தத்வதிர்ஷ்டியின் பேதப்பிரமையின் முடிவு 212

## ஐந்தாவது தரங்கம்.

## மந்தியமாதிகாரிஉபதேசநிருபணம்.

### 1.—குரு வேதம்வியவகாரிகசத்தை (213—238).

1. கேள்வி:—வேதம் குரு இவைகள் சத்தியமா பொய்யா? சத்தியமானால் அத்வைதம் கெட்டுப்போய்விடும். பொய்யானால் புருஷார்த்தமாகிற மோக்ஷம் கிடைக்கமாட்டாது 213
2. குரு உத்தரம் (214—230)
1. பிரமாண (சங்கர) அப்பிரமாண (பேதவாத) மதங்கள் 214—216
(1) வியாசவசனம். 214
(2) வால்மீகி வசனம் 214—215
(3) வேதவசனம் 216
2. பேதமதங்களின் திரஸ்காரம் 216
3. பார்சுவின் கதை 217—227)
(1) பார்சுவின் மேன்மையான தசை 217
(2) பார்சு சன்னியாசியாதல் 217
(3) ஸ்திரீஸ்துதி 217
(4) ஸ்திரீ நிந்தை 218
(5) பார்சுவின் வைராக்கியம் 219
(6) சுகம் ஏகாந்தத்தில்தான் கிடைக்கத்தக்கது. தைத்திரீய உபநிஷத்தின் கருத்து 220
(7) ஸ்திரீயால் வருந்துக்கம் (221—224)
1. குரூபிஸ்திரீ சங்கதுக்கம் 221
2. ரூபவதிஸ்திரீ சங்கதுக்கம் 221
3. தனநாசம் 222
4. தர்மநாசம் 223
5. பிந்துநாசம் 224
(8) புத்திரசங்கதுக்கம் 225

(9) தனசங்கதுக்கம் 226

(10) பர்ச்சு காட்டுக்குப்போகுதல் 226

(11) ராஜா பர்ச்சுவை சந்தித்துப்பயப்படுதல் 227

4. திர்ஷ்டாந்தத்தை தார்ஷ்டாந்தத்தில் பூரித்து அபேதவாதத்தை தள்ளுதல் 228

5. பொய்யானதுக்கம் பொய்யான உபாயத்தால் நிவிர்த்தியாகும் என்பதைக் காண்பிக்கும் கதை 229

6. அதுபோல பொய்யான வேதம் குரு இவைகள் சம்சாரதுக்கத்தை நிவிர்த்திசெய்யக்கூடும் 230

3. கேள்வி. பொய்யான வேதகுருக்களால் சம்சாரதுக்கம் நிவிர்த்தியானால் கானல்ஜலத்தால் தாகம் தீரக்கூடுமே 231

4. குரு உத்தரம்

1. திர்ஷ்டாந்தம் சரியல்ல 231

2. சத்தாநிரூபணம்

(1) சத்தாபேதங்கள் 232

(2) வியாவஹாரிகசத்தை 233

(3) பிராதிபாஸிகசத்தை 234

(4) பாரமார்த்திகசத்தை 235

3. வேதகுருக்களும் சம்சாரதுக்கமும் வியாவஹாரிகசத்தையாக இருப்பதால் அவைகளால் சம்சாரதுக்கம் நிவிர்த்தியாகக் கூடும். 236

## பிராந்திநிவிர்த்தியில்பேதம்.

1. கேள்வி. கிளிஞ்சிலில் வெள்ளிமுதலியவைகள் பிர்ம்மஞானமன்றியில் நிவிர்த்தியாகின்றன. சம்சாரதுக்கம் பிர்ம்மஞானத்தினால் நிவிர்த்தியாகிறது. இந்தபேதத்துக்குக் காரணமென்ன 237

2. உத்தரம். எதை அறியாததினால் எது உண்டாகிறதோ, அதை அறிகிறதினால் அது நிவிர்த்தியாகின்றது. ஆகையால் பிர்ம்மத்தை அறியாததினால் உண்டாகிற சம்சாரம் பிர்ம்மஞானத்தினால் நிவிர்த்தியாகிறது. 238

## II. ஸம்ஸாரவிஷயமாய் (239—270)

1. கேள்வி. பிர்ம்மத்தை அறியாததினால் சம்சாரம் எந்தக்கிரமமாக உண்டாகிறது 239

2. குரு உத்தரம் (284—321)

1. யாதொரு கிரமமுமன்றியில் ஸ்வப்நம்போல் ஜகத்துத்தோன்றுகிறது. வேதத்தின் கருத்து 240

2. சுருதியில் சொல்லியிருக்கிற ஜகத்தின் உற்பத்திக்கிரமவிஷயத்தில் சூத்திரக்காரருடையவும் பாஷியக்காரருடையவும்

அபிப்பிராயம் 241

3. சுருதியில் சொல்லிய உற்பத்திக்கிரமம் (241—259)

1. மாயை (241—247)

1. மாயையின் ஸ்வரூபம். அதுவே அஞ்ஞானம் (241—242)
2. அஞ்ஞானம் பிர்ம்மத்தை ஆசிரயித்து அதை யேவிஷய மாக்குகிறது 243
   (1) வாசஸ்பதி மதம்:—அஞ்ஞானம் ஜீவனை ஆசிர யித்து பிர்ம்மத்தை விஷயமாக்குகிறது. அஞ் ஞானம் அநேகம் 244
   (2) இது சரியல்ல எனென்றால்
      1. அஞ்ஞானம் ஒன்றாக இருக்கிறது 245
      2. அது சுத்தப் பிர்ம்மத்தைத்தான் ஆசிர யித்துக்கொண்டிருக்கிறது 246
3. அஞ்ஞானத்தால் பந்தமும் அதன் நிவிர்த்தியால் மோக்ஷ மும் சித்திக்கின்றன 247

மாயையின் நாமபேதங்கள் 247

2. ஈசுவரன் (248—249)

1. ஈசுவரஸ்வரூபம் 248
2. இரண்டுவித காரணங்களின் லக்ஷணம் 249
3. ஈசுவரன் ஜகத்தின் உபாதான நிமித்தகாரணம் 249

3. ஜீவன் 250

4. ஜகத்துசிருஷ்டி (251—259)

1. உத்தம அதம லோகங்களும் போகங்களும் 251
2. ஜீவபோகத்தின் பொருட்டு ஜகத்தை சிருஷ்டிக்கவேண் டும் என்கிற ஈசுவர இச்சை 252
3. சூட்சுமசிருஷ்டி (253—257)
   (1) சூட்சும பஞ்சபூதங்கள்; அவைகளின் குணங்கள் 253
   (2) அந்தக்கரணம்; அதின் உட்பிரிவுகள் 254
   (3) பஞ்சப்பிராணன்கள் 255
   (4) பஞ்சஞானேந்திரியங்கள் 256
   (5) பஞ்சகர்மேந்திரியங்கள் 256
   (6) சூட்சமசிருஷ்டி உபசம்காரம் 257
4. ஸ்தூலசிருஷ்டி (257—259)
   (1) ஸ்தூலசிருஷ்டியின் உற்பத்திக்குக் காரணம் 257
   (2) பஞ்சீகரணம். முதலாவது விதம் 258
   இரண்டாவது விதம் 258

2-வது விதத்தின் சிரேஷ்டதை 258
(3) ஸ்தூலபிரம்மாண்டாதிகளின் உற்பத்தி 259
4. பஞ்சகோசவிவேகம் (260—270)
1. பஞ்சகோசங்களின் விவரம் 260
2. விரோசனமதம். அன்னமயகோசமே ஆத்மா 261
3. இந்திரிய ஆத்மவாதிமதம். இந்திரியமே ஆத்மா 262
4. ஹிரண்ணியகர்ப்ப உபாசகமதம். பிராணனே ஆத்மா 263
5. மன ஆத்மவாதிமதம். மனமே ஆத்மா 264
6. விஞ்ஞானவாதிபௌத்தமதம். புத்தியே ஆத்மா 265
7. ஆனந்தமயகோசமே ஆத்மா (266—268)
(1) பட்டர்மதம். ஆத்மாசித்ஜடஸ்வரூபம் 266
(2) சூன்னியவாதி மாத்தியமிகபௌத்தமதம் ஆத்மா சூன்னியம் 267
(3) பிரபாகரனையாயிகமதம் ஆத்மாஜடம், ஞானம் குணம் 268
(4) ஷை மதகண்டனம் 269
8. ஜீவேசுவரரை பஞ்சகோசங்களினின்றும் விவேசனம் செய்யவேண்டியது அவசியம் 269
9. விவேசனம் செய்யும் விதம் 270

## III. மகாவாக்கியார்த்த உபதேசம் (271—303)

1. மஹாவாக்கியார்த்த உபதேசம் 271
2. கேள்வி. ஆத்மா புண்ணியபாவங்களைச்செய்து சுகதுக்கங்களை அனுபவிப்பதால் ஆத்மாவுக்கும் பிர்மமத்துக்கும் ஏகத்துவஞ் சொல்லக்கூடாது 272
3. குருஉத்தரம் (273—303)
*பிரஹ்மலோக பரியந்தமான போகங்களில் இச்சையுண்டாகாமல் அவற்றை விடுதலே* * வைராக்கியமா *மென்று வேதார்த்தத்தை யறிந்த முனிகள் சொல்லுகின்றார்கள்.* (8.)

## 9. (3) சமாதி ஆறன்பெயர். 9-13.

சமம், தமம், சிரத்தை, சமாதானம். உபரதி, திதிக்ஷை யெனஆறும். (9 .)

## 10. [1-2] சமதமலக்ஷணம்.

(1) *மனதை விஷயங்களின்றும் தடுத்தலே நல்லதீரர்* † சம *மென்பர்.*

---

*பரம்பரைக்கு ஏதுவாகிறதில்லை. ஆனல் அந்த விவேகம் சித்திர அங்கநனைப் போலும், சித்திர அமுதத்தைப் போலும், சித்திர அக்கினியைப் போலும் சொன்மாத்திரத்தாலாகியதா யிருத்தலின் அவிவேகமேயாம்.*

2. *சுத்தியுள்ள அந்தக்கரண தேசத்தில் உதயமாகிய விவேகம் ஜலமும் ரசமுமுள்ள (சதுப்பு) நிலத்தில் நடப்பட்ட கதலி விருக்ஷத்தினைப்போல வைராக்யாதி பிற்சாதன வடிவ பிறவிருக்ஷங்களின் பரம்பரைக்கு ஏதுவாகின்றது. ஆதலால் சுத்தசித்தமாகிய பூமியில் உதயமாகிய விவேகம்* வைராக்கியத்திற்கு அசாதாரண காரணமாம். வைராக்கியம் ஷட்சம்பத்திக்கு அசாதாரணகாரணமாம். *இவ்வாற்றால் பின்பின் சாதனங்களுக்கு முன் முன் சாதனங்கள் நிமித்த காரணமாம். சுத்த அந்தக்கரணமாகிய பூமி எல்லாவற்றிற்கும் உபாதானகாரணமாம்.*

*ஆதலால் சித்தசுத்தி பூர்வகமான விவேகம் முமுக்ஷுக்களால் அவசியம் சம்பாதிக்கத்தக்கதாம்.*

* வைராக்கியமாவது *தியாகஞ்செய்யும் இச்சை, அல்லது இச்சையில்லாமை.* *இது* 1 யதமானம். 2 வியதிரேகம். 3 ஏகேந்திரியம். 4 வசீகாரம்*என நாலுவகையாம்.*

1. யதமானம் *என்பது மந்தவிவேகம்.*

2. வியதிரேகம்:— *கீரியானது நகுலக்கொடியை யாசிரயித்துப் பாம்புடன் சண்டையிடுவதுபோல் சற்சங்கத்தின் ஆசிரயத்தால் துர்க்குணத்தை விடுதலிலும், நற்குணத்தைக் கொள்ளுதலிலும் உண்டாகும் உற்சாகம்* வியதிரேக*மாம்.*

3. *இந்திரியநிக்கிரகமே* ஏகேந்திரியம்,

4. *மனோநிக்கிரகமே* வசீகாரம். *இது* (1) *மந்தம்,* (2) *தீவிரம்,* (3) *தீவிரதரமென மூவகையாம்.*

(1) *புத்திரதனாதி நாசத்தால் சம்சாரத்தை வெறுக்கும் புத்திவிருத்தி* மந்தமாம்.

(2) *இந்த லோகத்தில் புத்திராதி சம்பந்தத்தா லுண்டாகும் சுகத்தை இச்சியாமல் விருப்பது* தீவிரம்.

(3)*புனராவிருத்தி யுண்டென்பதை யறிந்து சர்வலோகங்களின் இச்சையு மில்லாம விருப்பது* தீவிரதரம்.

*இவற்றில் ஞானத்துக்குக் காரணம் தீவிரதர வசீகார வைராக்கியமாம். இதனையே ஜிஞ்ஞாஸு சம்பாதிக்கவேண்டும்.*

† *தோஷதிருஷ்டியாகிய அங்குசத்தால் மனதாகிய யானையைச் சுவாதீனப்படுத்துவது* சமம்.

(2) இந்திரியங்களை விஷயத்திற் செல்லவிடாமற் றடுப்பதனைத் * தம மென்பர். (11.)

## 11. [3-4] சிரத்தை சமாதானலக்ஷணம்.

(3) † சிரத்தை வேதகுரு வாக்கியங்களில் விசுவாசம்வைப்பது. (12.)

(4) ‡ சமாதானம் மனது சலியாமல் ஸ்திரமாய் நிற்பது. (13.)

## 12. [5] உபராமலக்ஷணம்.

---

* தோஷதிருஷ்டி பூர்வகமாய்ச் சாஸ்திரசிந்தனையாகிய சாட்டையால் சப்தாதி விஷயவடிவ மார்க்கத்தில் போகும் இந்திரியங்களாகிய குதிரைகளைச் சுவாதீனஞ் செய்தல் தமம். இரசப்பூச்சின்றிய கண்ணுடியில் முகத்தைப் பார்க்கும்போது நேத்திர விருத்தி வெளியிற் சென்றுவிடுகின்றது. அதுபோல இந்திரியவாயிலே விஷயங்களி னின்றும் தடுத்தலாகிய தமமின்றி மனதின் நிரோதமாகிய சமம் சித்தியாது. கடிவாள த்தைப் பிடித்தாலன்றிக் குதிரை யடங்காததுபோல மனதின் நிரோதமாகிய சமமின்றி இந்திரியங்களின் நிரோதமாகிய தமம் சித்தியாது. ஆதலால் இச்சமதமங்களுக்கு ஒன் றற்கொன்று அபேக்ஷை யுண்டு.

அங்ஙனமே எல்லா ஷட்சம்பத்திகளுக்கும் ஒன்றற் கொன்று அபேக்ஷையுண்டு. அதுமேல் 8 வது பக்கம் § விளக்கவுரையில் நிரூபிக்கப்படும்.

† எவனுக்கு ஈசுவரன் குரு முதலியவர்களிடத்தில் பூஜ்யபுத்தியால் பிரீதிரூப பக்தியுண்டாகிறதோ; அவனுக்கு வேதம் சாஸ்திரம் குரு என்பவர்களின் வசனங்களில் சிரத்தையுண்டாகிறது. ஆகையால் சிரத்தை பக்தியை அபேக்ஷிக்கிறது. இந்தக் கிரந்தத் தில் மூன்றுவதாகச் சொல்லப்பட்ட சிரத்தை சில கிரந்தங்களில் ஆறுவதாகச் சொல்ல ப்பட்டிருக்கிறது.

(1) சர்வசாதனங்களின் சம்பத்தியாகிய தயிர் கடைதலின் சாமக்கிரியில் சிரத்தை கடைதற் பாத்திரமாம். அது பங்கமானுல் சகல சாதனங்களும் வியர்த்தமாகும்.

(2) அல்லது சகல சாதனங்களின் சம்பத்தியாகிய விருக்ஷத்திற்கு சிரத்தை பழு மாம். அது நாசமானுல் சகல சாதனங்களும் வியர்த்தமாகும்.

சிரத்தையிருந்தால் மற்றச் சகல சாதனங்களும் ஸபலமாம். ஆதலால் ஞானத்தின் சகல சாதனங்களிலும் சிரத்தை முக்கிய சாதனமாம். அது குஸங்கம் (தீநட்பு) முதலிய நாச நிமித்தங்களினின்றும் இரக்ஷிக்கத்தக்கதாம்.

சாதன சம்பத்தியாகிய தயிர் கடைதற் சாமக்கிரியின் உருவகம் ஸ்ரீ போதரத்நா கரமென்னும் நூலின் முதல் ரத்தினத்திலும், இச்சாதன சாமக்கிரியாகிய விருக்ஷத்தின் உருவகம் ஸ்ரீ பாலபோதினியென்னும் உரையோடு கூடிய பாலபோதத்தின் முதல் உபதேசத்திலும் விஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கின்றன.

‡ பிரஹ்மரூப லக்ஷியத்தில் சித்தம் ஏகாக்கிரமாயிருப்பது சமாதானம். முன் அதிகாரிலக்ஷணத்தில் உபாசனையால் விக்ஷேபதோஷம் நீங்கிச் சித்த ஏகாக்கிரத்தன்மை யுண்டாயிருக்க வேண்டியதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனுல் இவ்விரண்டு சித்த ஏகாக்கிரத்தன்மைகளுக்கும்வித்தியாசம் யாதெனின், முதலாவது சகுணப்பிரஹ்மத்தின் அல்லது மூர்த்தியின் உபாஸனையால் உண்டாவது; இரண்டாவது நிர்க்குணப் பிரஹ்ம த்தினிடத்தில் இருப்பது.

(5) * உபராமமாவது † சாதனசகித சகல கர்மங்களையும் விட்டு விஷமாக எண்ணி விஷயங்களைவிட்டோடுதலும், ‡ ஸ்திரீயை வெறுத்தலுமாம். (14.)

## 13. [6] திதிக்ஷையின் லக்ஷணம்.

(6) ¶ திதிக்ஷயாவது சீதோஷ்ணம் பசிதாகமுதலிய துவந்துவங்களைச் சகிப்பது திதிக்ஷயாமெனப் பண்டிதர்களாகிய $ முனிவரவிறைவர் கூறுவர். இச்சமமுதலிய § ஆறும் ஒரே சாதனமாக வெண்ணப்படுகின்றன. ஆதலால் விவேகிகள் சாதனங்கள் ஒன்பதாகா, நான்கேயாமென்று சொல்லுவர்.(15.)

---

* தியாகஞ்செய்தபின் அடையப்பட்ட விஷயத்தில் மறுபடியும் இச்சை யுண்டாகாமலிருப்பது வைராக்கியத்தின் பயனாகிய **உபராமமாம்**. இதனையே உபரதியென்றும், விடலென்றும் கூறுவர். இதுவே மீண்டும் போகங்களில் அதீனமாகாதிருத்தல் வடிவினதாகிய வைராக்கியத்தின் பயனும். அடையாத விஷயங்களில் தோஷதிருஷ்டி பூர்வகமாய் இச்சையில்லாமலிருப்பது **வைராக்கியம்**.

† ஸ்திரீ, தனம், ஜாதி, அபிமானம் முதலிய கர்மத்தின் சாதனங்களோடு.

‡ இங்கு "விஷயங்களை விட்டோடுதல்" என்பதனாலேயே ஸ்திரீ முதலிய சகல விஷயங்களிலும் அருவருப்புக் காட்டப்பட்டது. மீண்டும் நாரியாகிய விஷயத்தில் அருவருப்பைக் கூறுதலால் புநருக்தி (கூறியது கூறல்) என்னும் தோஷ முண்டாகின்றது. என்றாலும் பல ஜன்மங்களில் செய்த ஸ்திரீசங்கத்தின் சம்ஸ்காரம் தீவிரமாயிருத்தலும், ஸ்திரீயினிடத்தில் சப்தம் ஸ்பரிசம் ரூபம் ரசம் கந்தம் மைதுன மென்னும் ஆறு விஷயங்களும் மிகுதியாய்ப் பெறப்படுதலாலும், மற்ற விஷயங்களினும் ஸ்திரீ விஷயம் பிரபலமாம். ஆதலால் அதனிடத்தில் அதிக அருவருப்பைச் செய்தல்வேண்டு மென்னும் அபிப்பிராயத்தால் அதனை மீண்டும் கூறியதாமாகலின்,அது ஈண்டுக் கூறியதுகூறலென்னும் தூஷணமாகாது பூஷணமேயாம்.

¶ சிரவணாதிப் பிரசங்கங்களில் அவைகளுக்கு விரோதமான சீதோஷ்ணம் பசிதாகம் முதலியவைகளைச் சகித்தல் திதிக்ஷை. இஃது இல்லாவிடின் சிரவணாதி காலங்களில் பசிதாகம் முதலியவைகள் சம்பவிக்கும். அப்போது அவற்றை நிவிர்த்திக்க மனது பிரவர்த்திக்கும். அதனால் சிரவணாதிகளுக்கு விக்கினமுண்டாகும். ஆதலால் திதிக்ஷை (சகித்தல்) அவசியம் வேண்டும்.

$ முனி=சந்நியாசி; அவர்களில் வரர்=சிரேஷ்டர்களாவார் வித்துவத்ஸந்நியாசிகள்; அவர்களுக்கு இறைவர்=ஆசாரியர்.அவர்கள் ஈண்டுமுனிவரவிறைவர் எனப்படுவர்.

§ சரீரரூபரதத்திற்கு இந்திரியங்கள் குதிரைகள், மனம் கடிவாளம், புத்தி சாரதி, ஆத்மா எஜமானன். எவனுடைய சாரதி சரியாயிருக்கிறானோ, அவனுடைய இந்திரியங்களென்னும் குதிரைகள் நன்மார்க்கத்திற் சென்று, எஜமானனை ஸ்வர்க்கம் அல்லது மோக்ஷம் என்னும் இடத்திற் சேர்ப்பிக்கும். சாரதி தவறுடையவனாயின், இந்திரியங்கள் என்னும் குதிரைகள் தவறான வழியிற்சென்று எஜமானனை நரகத்திற் கொண்டு சேர்ப்பிக்கும். ஆதலால் முமுக்ஷுவானவன் தனது புத்தியாகிய சாரதி தனக்குத் தோற்றியவண்ணம் நடவாமலும், இந்திரியங்களாகிய குதிரைகள் நன்மார்க்கத்திற் செல்லும்படியாகவும் செய்யவேண்டியது. இவ்விடத்தில் புத்தியாகிய சாரதியை வசப்படுத்துதல் சமம் எனப்படும். இந்திரியங்களாகிய குதிரைகளை வசப்படுத்துதல் தம

## 14. (4.) முமுக்ஷுத்துவ லக்ஷணம்.

பிரஹ்மப்பிராப்தியும் அநர்த்த நிவிருத்தியும் மோக்ஷத்தின் சொரூபமாம்.

---

மெனப்படும். புத்தியும் இந்திரியங்களும், சாரதியின் அதீனத்திற் குதிரைகளும், குதிரைகளின் அதீனத்தில் சாரதியுமிருப்பது போல் இருக்கின்றன.

சுவர்ணத்தாற் செய்யப்பட்ட அநேக மணிகளையுடைய மாலை ஒரு பூஷணமாக எண்ணப்படுவதுபோல, சமதமாதிகள் வெவ்வேறா யிருந்தாலும் பரஸ்பரம் சகாயத்தை அபேக்ஷித்தலால் அவை ஆறும் ஒரு சாதனமாக எண்ணப்படுகின்றன. சமாதியாறும் பரஸ்பரம் சாதனமாதல் வருமாறு:—

1. (1) மனதை யடக்குதலாகிய சமமின்றி இந்திரியங்க ளடங்கா. ஆகலின் தமம் சமத்தை யபேக்ஷிக்கிறது.

(2) மனவடக்கமின்றிப் பகிர்முகமாகிய (ஸ்திரீ புத்திராதி விஷயங்களில் பற்றுடைய) மனதிற்கு வேதாந்த சாஸ்திரத்திலும் சற்குருவினிடத்திலும் பூர்ண சிரத்தை யிராது. ஆதலால் சிரத்தையும் சமத்தை யபேக்ஷிக்கிறது.

(3) மன நிரோதமின்றிப் பிரஹ்மத்தில் சித்தம் ஏகாக்கிரதன்மையை யடையாது. ஆதலால் சமாதானமும் சமத்தை யபேக்ஷிக்கிறது.

(4) பால்முதலிய உத்தமஆகாரத்தால் வளர்க்கப்பட்ட கட்டின்றிய பூனை எலியைக் கண்டவுடன் நிற்காமல் அதன்பேரில் பாய்வதுபோல், விஷயங்களினின்றும் உபரதியடைந்த மனதும் நிரோதமென்னும் கயிற்றால் கட்டப்படாததாயின், நிற்காமல் கிடைத்த விஷயங்களில் பாயும். ஆதலால் உபரதியும் சமத்தை யபேக்ஷிக்கிறது.

(5) அந்தர்முகமான மனதினாற்றான் சீதோஷ்ணாதி துவந்துவங் (இருமை) களைச் சகிக்கமுடியும்; பகிர்முகமான மனதால் சகிக்கமுடியாது. ஆதலால் திதிக்ஷையும் சமத்தை யபேக்ஷிக்கிறது.

இவ்வாற்றால் தமாதிகள் ஐந்தும் சமத்திற்குச் சககாரியாம் (சகாயமாம்.)

2. (1) அங்ஙனமே இரசப்பூச்சின்றிய கண்ணாடியில் நேத்திரவிருத்தி தடுக்கப்படாததுபோல, இந்திரியவாயிலைத் தடுத்தலின்றி மனம் தடுக்கப்படுகிறதில்லை. ஆதலால் சமம் தமத்தை யபேக்ஷிக்கிறது.

(2) உருவமுதலிய விஷயங்களில் பற்றுள்ளவனுக்குச் சற்குரு சற்சாஸ்திரங்களில் சிரத்தையிரா தாகலின் சிரத்தையும் தமத்தை யபேக்ஷிக்கிறது.

(3) இந்திரிய நிக்கிரகமின்றிச் சஞ்சலமடைந்த மனதில் ஏகாக்கிரதன்மை நிலைக்கிறதில்லை. ஆகலின் சமாதானமும் தமத்தை யபேக்ஷிக்கிறது.

(4) இந்திரியங்களை யடக்காவிடின், பிரத்தியக்ஷமாய் அநுபவிக்கப்பட்ட அநுகூல விஷயங்களில் இராகத்தின் புலப்பட்ட சம்ஸ்காரவாயிலாக இச்சை யுண்டாம். ஆதலால் உபரதியும் தமத்தை யபேக்ஷிக்கிறது.

(5) இந்திரிய நிரோதமின்றி விஷயங்களைக் காண்பதினால் சஞ்சலப்படும் மனது சீதோஷ்ணாதிகளைச் சகியாது. ஆதலால் திதிக்ஷையும் தமத்தை யபேக்ஷிக்கிறது.

அதன் * தீவிரமான இச்சை முமுக்ஷுத்துவ மெனப்படும். (16.)

விவேகாதிகள் நான்கும், சிரவண, மனன நிதித்தியாஸந மென்னும் மூன்றும், தத்துவம் பதார்த்தங்களின் † சோதன மொன்றுமாகிய எட்டும் ஞானத்துக்குச் சாதனங்க ளெனப்படும். (17.)

---

இவ்வாற்றால் சமமுதலியவற்றிற்குத் தமம் சககாரியாம்.

3. அங்ஙனமே சற்குரு சற்சாஸ்திர வசனங்களில் விசுவாசமாகிய சிரத்தை யின்றிச் சிரவணத்திற் பிரவிருத்திக்கும் இச்சையின்மையால் பதியினிடத் துச் செல்லுவதில் உபயோகியான சிங்காரத்தை விதவையணியாததுபோலச் சிரவணத்தில் உபயோகியான சமமுதலிய எச்சாதனத்தையும் புருஷன் தரி யான். சிரத்தையின்றித் தரிக்கப்பட்ட சகல சாதனங்களும் விதவையினுற் செய்யப்பட்ட சிங்காரத்தைப்போல வியர்த்தமாம். ஆதலால் சமமுதலிய சகல சாதனங்களும் சிரத்தையை அபேக்ஷிக்கின்றன. இவ்வாற்றால் சிரத்தை சம முதலிய சகல சாதனங்களுக்குஞ் சககாரி யென்பது வெளிப்படையாம்.

4. அங்ஙனமே சித்த ஏகாக்கிரத்தன்மையின்றிச் சமாதிசாதனங்கள் சித்திக்க மாட்டா. ஆதலால் சமமுதலியன சமாதானத்தை யபேக்ஷிக்கின்றன. இவ் வாற்றால் சமமுதலியவற்றிற்குச் சமாதானம் சகாயமாம்.

5. அங்ஙனமே விஷயங்களினின்றும் சித்தம் உபரதி யடையாதாயின் சமமுதலி யனசித்திக்கமாட்டா. ஆதலால் சமமுதலியன உபரதியை யபேக்ஷிக்கின்றன. இவ்வாற்றால் சமமுதலியவற்றிற்கு உபராமம் சகாயமாம்.

6. அங்ஙனமே சீதம் உஷ்ணம், பசி தாகம், லாபம் நஷ்ட முதலிய அநேக வியவ காரத்தாலுண்டாம் உபத்திரவங்களைச் சகித்தலின்றி மனநிரோதம், இந்திரிய நிரோதம், குருசாஸ்திர வசனங்களில் விசுவாசம், சித்தத்தின் ஏகாக்கிரத் தன்மை, அடையப்பட்ட தனுதி விஷயங்களில் உபரதி என்னும் இவை உண்டாகா. ஆதலால் சமாதிகள் திதிக்ஷையாகிய தவத்தையும் அபேக்ஷிக் கின்றன. இவ்வாற்றால் சமமுதலியவற்றிற்குத் திதிக்ஷை சகாயமாம்.

இவ்விதமாகச் சமமுதலியன பரஸ்பரம் சகாயமாகின்றன. ஆதலால் இவை ஆறும் ஒரே சாதனவடிவமாம்.

* தீவிரமென்பது பசியுள்ளவன் அன்னத்தைத் தேடுவதுபோலும்,நெருப்பில்அகப் பட்டவன் ஜலத்தைத் தேடுவதுபோலுமாம். இந்த முமுக்ஷுத்துவம் எல்லாச்சாதனங் களுக்கும் முன்னரே யுண்டாகின்றது. ஏனெனின்"பிரயோஜனத்தைக் கருதாமல் மந்த னும் ஒன்றிற் பிரவர்த்தியான்" என்பதனுல் மந்தமான மோக்ஷரூபபலத்தின் இச்சை யில்லாவிட்டால் நிஷ்காம கர்மத்தில் ஒருவனுக்கும் பிரவிருத்தி யுண்டாகாது. ஆதலால் மந்தமான மோக்ஷ இச்சை எல்லாச் சாதனங்களுக்கும் முன்னரே இருக்கவேண்டி யது. ஆனுல் அப்போது அது தீவிரமாயிராது. மற்றச் சாதனங்கள் சித்தித்தபின் அவ்வி ச்சை தீவிரமாகின்றது. அத்தீவிர இச்சைதான் சிரவணுதிகளிற் பிரவிருத்தியுண்டா கும்படி செய்கின்றது.

† சேதனத்துக்கும் ஜடத்துக்கும் முறையேயுள்ள காரணகாரியத்தன்மை அதிஷ்டானஅத்தியஸ்தத்தன்மை திருஷ்டாதிருசியத்தன்மை சாக்ஷிசாக்ஷியத்தன்மை என்பவற்றைச் சாஸ்திரத்திற் கூறியபடி விசாரித்தல் அதாவது அன்னம் பாலையும்

## 15. அந்தரங்க பகிரங்க சாதனங்கள் 15–16.

1. முற்கூறிய விவேகாதிகளெட்டும் * அந்தரங்க சாதனங்களாம்.
2. யஞ்ஞாதிகர்மங்கள் † பகிரங்கஸாதனங்களாம்.

அவற்றில் ஜிஞ்ஞாசுவானவன் பகிரங்கத்தைவிட்டு ‡ அந்தரங்கத்தைக் கொள்ளவேண்டியது.

1. எவற்றிற்குச் சிரவணத்திலாவது ஞானத்திலாவது பிரத்தியக்ஷபய னிருக்கிறதோ அவை **அந்தரங்கசாதனமாம்.**

விவேகாதிகள் நான்கும் சிரவணத்துக்குச் சாதனமா யிருக்கின்றன. ஏனெனின்,

---

நீரையும் பிரிப்பதுபோலும், அல்லது வெண்ணையையும் மோரையும் பிரிப்பதுபோலும், மண்ணையும் கிணற்றாகாயத்தையும் பிரிப்பதுபோலும் பிரிப்பதே **பதார்த்தசோதனை** யாம். வேதாந்த சாஸ்திரத்திற் சொல்லப்பட்ட சகலப் பிரக்கிரியைகளுக்கும் இப்பொருளை யறிவித்தலிலேயே தாற்பரியமாம். இவ்வர்த்தமே மகாவாக்கியார்த்த ஞானத்தில் உபயோகியாம். ஆதலால் முற்கூறிய பதார்த்த சோதனம் முமுக்ஷுவினால் செவ்வையாய்ச் செய்யத்தக்கதாம்.

* தனுசினின்று விடுபட்ட பாணமானது லக்ஷியத்தை (குறியை)த் துளைப்பதிற் சமீபித்த சாதனமாகுதலால் அது அதன் அந்தரங்கசாதனமாம். அதுபோல விவேகாதிகள் எட்டும் ஞானத்தின் சமீபித்த சாதனமாயிருத்தலின் ஞானத்தின் **அந்தரங்கசாதனங்க** ளெனப்படுகின்றன.

† தனுசு தூரத்திலிருப்பதாய் லக்ஷியத்தைத் துளைத்தற்குப் பாணத்தை விடுதல் வாயிலாகத் சாதனமாயிருத்தலால், அது அதற்குப்பகிரங்கசாதனமாம். அதுபோல யஞ்ஞமும், ஸகுணோபாஸனை முதலிய கர்மங்களும் ஞானத்துக்குத் தூரத்திருப்பனவாய், பாவமும் விக்ஷேபமுமான மலங்கள் இயன்றவாறு ஒழிதலாகிய சித்த சுத்தியைக் கொடுத்தலோடு ஞான விருப்பத்தை யுண்டாக்குதல்வாயிலாகச் சாதனங்களா யிருக்கின்றன. ஆதலால் அவை **ஞானத்தின் பகிரங்கசாதனங்களாம்.**

‡ இவற்றில் அந்தரங்கசாதனத்தைச் சம்பாதித்தபின் பகிரங்கத்தை விடவேண்டியது. கிணற்றில் விழுந்தபுருஷன் முதலில் மரவேர் முதலிய ஏதேனும் ஓராதாரத்தைப் பிடித்துக்கொள்ளுகிறான். பின் அவனை வெளிப்படுத்துவதற்கு இரக்கமுள்ள ஓர் புருஷன் கயிற்றை விடின், அப்போது அவன் தான் முன்பற்றியிருந்ததை விட்டுக் கயிற்றைப் பிடிக்கின்றான். அவ்வாறு கயிற்றைப் பிடிக்காமல் தான் முன் பிடித்திருந்த ஆதாரத்தையும் விட்டுவிடுவானாயின் அக்கிணற்றிலேயே மூழ்குவன்.

அங்ஙனமே ஜனனமரணமென்னும் ஜலத்தோடுகூடிய சம்ஸாரமாகிய கிணற்றில் விழுந்த ஜீவன் சாதுசங்கமுதலிய நிமித்தத்தா லடையப்பட்ட சுபவாசனையினால் கர்ம உபாசனைகளிற் பிரவர்த்திக்கின்றான். எப்போது ஈசுவரனாகிய தயையுடைய புருஷனது கிருபையினால் சித்தசுத்தி பூர்வகமான ஞான விருப்பமுதலிய சாதனங்களின் அடைவுண்டாகின்றதோ, அப்போது அந்தப் புருஷன் ஞான விருப்புடையோனாய்க் கர்மமாகிய பகிரங்க சாதனத்தைவிட்டு விவேகமுதலிய அந்தரங்க சாதனத்தைச் சித்தத்தில் தரிக்கின்றான். ஆனால் அந்தரங்க சாதனத்தை யடைதலின்றிப் பகிரங்க சாதனத்தை விடுவானாயின், இந்தச் சீவன் உபயப்பிரஷ்ட (இரண்டினின்றும் நழுவியவ)னாய்ச் சம்சாரமாகிய கிணற்றில் மூழ்குவன்.

(1) விவேகாதிகளின்றிய பகிர்முக புருஷனுக்குச் சிரவணம் சித்திக்கிற தில்லை.

(2) அங்ஙனமே சிரவணமனன நிதித்தியாசனங்களுக்கு ஞானத்தில் உபயோகமிருக்கின்றது. சிரவணாதிகளின்றி ஞானமுண்டாகிறதில்லை.

(3) அங்ஙனமே தத்பதார்த்த துவம்பதார்த்தங்களின் ஞானமின்றியும் அபேதஞான முண்டாகிறதில்லை.

இவ்வாறு விவேகாதி நான்கு சாதனங்களும் சிரவணத்திலும், சிரவணாதி நான்கு சாதனங்களும் ஞானத்திலு முபயோகப்படுதலால் அவ்வெட்டும் அந்தரங்கசாதனங்களாம். (18.)

**16.** 2. எந்தச் சாதனத்துக்குச் சிரவணமாவது ஞானமாவது பிரத்தியக்ஷ பயனாகிறதில்லையோ, அந்தக்கரணசுத்தி எதற்குப் பயனாகிறதோ, அது ஞானத்துக்குப் பகிரங்கசாதன மெனப்படுகின்றது. இத்தன்மையன யஞ்ஞாதி கர்மங்களாம்.

யஞ்ஞாதி கர்மங்கள் சம்சாரத்துக்குச் சாதனமா யிருத்தலின், அவற்றால் அந்தக்கரணசுத்தி யுண்டாமென்று கூறுதல் பொருந்தா தாயினும், அவை * ஸகாமபுருஷனுக்குச் சம்சாரத்துக்கு ஹேதுவாயும், நிஷ்காமபுருஷனுக்கு அந்தக்கரண சுத்திக்கு ஹேதுவாயு மிருக்கின்றன. இவ்வாறு நிஷ்காமபுருஷனுக்கு அந்தக்கரணசுத்தி வாயிலாக ஞானத்துக்கு ஹேதுவா யிருத்தலால் யஞ்ஞாதிகள் பகிரங்கஸாதனங்க ளெனப்படுகின்றன.

விவேகாதிகள் அந்தரங்கஸாதனங்க ளெனப்படுகின்றன. பகிரங்கமென்பது தூரத்தது. அந்தரங்க மென்பது சமீபத்தது. யஞ்ஞாதி கர்மங்களையும்

---

* ஒருவர் இரஸாயன முணர்ந்தவராய் ஸ்தானதானங்களுடைய ஸாதுவாயிருந்தார். அவர் தமது சிஷ்யனைச் சமீபத்தில் உட்காரவைத்து, உருக்கியதாமிரத்தில் ஓர் பச்சிலையின் இரசத்தைப் பிழிந்து இரஸாயனம் செய்து காட்டினார். பின்னர்த் தாம் அநேக வருஷங்கள் வரையில் தீர்த்தயாத்திரை செய்துகொண்டிருந்தார். அப்போது அச்சிஷ்யனது கையினால் இரஸாயனம் செய்யப்படவில்லை; உண்மையானவழி நடைபட்டது. அந்தக் குருவானவர் மீண்டும் திரும்பிவந்தபோது சிஷ்யனைநோக்கி "தாமிரத்தில் இப்பச்சிலையின் இரசத்தினையே நேரான கையினால் விடுவதனால் இரஸாயன முண்டாகாது; தரித்திரத்தன்மையே யுண்டாகும். தலைகீழாகப் பச்சிலையின் இரஸத்தைப் பிழிவதனால் அல்லது வேறு சேர்க்கையினால் இரஸாயனமுண்டாம்; தரித்திரத்தன்மை நீங்கிவிடும்" என்றனர். அப்போது அவன் அவ்வாறே செய்து சித்திபெற்றான்.

அங்ஙனமே சாஸ்திரமாகிய குரு ஜீவனுக்குச் சித்தசுத்தியாகிய இரஸாயனம் சித்திக்கும்பொருட்டு அறிவிக்கப்பட்ட கர்மம் எதுவோ, அது காமத்தால் (இச்சையோடு) செய்யப்பட்டதாய்ச் சித்தசுத்தியாகிய இரஸாயனத்திற்கு ஏதுவாகாது, சம்ஸாரமாகிய தரித்திரத்தன்மைக்கு ஏதுவாகின்றது. இக்கர்மமே நிஷ்காமத்தன்மையாற் செய்யப்பட்டதாய்ச் சித்தசுத்தியாகிய இரஸாயனத்திற் கேதுவாய்ச் சம்ஸாரமாகிய தரித்திரத்தன்மையை நீக்குகின்றது. இங்கு அநுபான பேதத்தால் ஔஷதத்தின் குணம் வேறுபடுதலும் திருஷ்டாந்தமாம்.

அவற்றிற்குச் சாதனமான ஸ்திரீ தன புத்திராதிகளையும் தியாகம்செய்பவன் ஞானாதிகாரியாவன். ஞானாதிகாரியிடத்தில் யஞ்ஞாதிகள் சம்பவியாமையால் தூரத்திருப்பனவாம். (19.)

## 17. விவேகாதிகள் அந்தரங்க சாதனமாமாறு.

விவேகாதிகள் ஞானாதிகாரியிடத்திற் சம்பவித்தலால் சமீபத்தவாம். அவற்றிலும் இவ்வளவு பேதமுண்டு:—*விவேகாதிகள் சிரவணத்தி லுபயோகப்படுகின்றன. † சிரவணாதிகள் ஞானத்தி லுபயோகப்படுகின்றன. ஆதலால் விவேகாதிகளை யபேக்ஷித்துச் சிரவணாதிகள் அந்தரங்கமாயும், சிரவணாதிகளை யபேக்ஷித்து விவேகாதிகள் பகிரங்கமாயு மிருக்கின்றன. எல்லாக் கிரந்தங்களிலும் விவேகாதிகளையும் அந்தரங்கஸாதனமாய்ச் சொல்லிப் பகிரங்கமாய்ச் சொல்லாவிடினும், விவேகாதிகளுக்கு ஞானத்திற்குச் சாதனமான சிரவணத்தில் பிரத்தியக்ஷ பயனுண்டு. சிரவணாதிகளைப்போல விவேகாதிகளும் ஜிஞ்ஞாசுவாற் கொள்ளத்தக்கனவாம்; யஞ்ஞாதிகளைப்போலத் தள்ளத்தக்கனவன்று; ஆதலால் விவேகாதிகள் அந்தரங்கமெனப்படுகின்றன; யஞ்ஞாதிகளை யபேக்ஷித்தும் அந்தரங்கமாம்; இதனாலும் அந்தரங்க சாதனங்களிற் சொல்லப்படுகின்றன. (20.)

## 18. ஞானத்தின் முக்கிய அந்தரங்க சாதனங்களான (மகாவாக்கிய) சிரவண மனன நிதித்தியாசனங்களின் இலக்ஷணம்.

விசாரித்துப் பார்க்குமிடத்து ஞானத்துக்கு முக்கியமான அந்தரங்க சாதனங்கள் "தத்துவமஸி" முதலிய மகாவாக்கியங்களாம்; சிரவணாதிகளுமன்று. ஏனெனின்,

‡ 1. யுக்தியினால் வேதாந்த வாக்கியத்தின் தாற்பரியத்தை நிச்சயஞ் செய்வதுசிரவணமென்று சொல்லப்படுகின்றது. (21.)

---

* வேதாந்தசாஸ்திர சிரவணம் நீண்டகாலம் நிரந்தர ஆதரவோடு கூடியதாயிருத்தலால், விவேகாதி நான்குசாதனங்களின்றிப் பகிர்முகமாகிய புருஷனுக்கு இடையின்றிய சிரவண முண்டாகாது. சிரவணமின்றி மனனநிதித்தியாசனங்களு முண்டாகிறதில்லை. ஆதலால் மனனநிதித்தியாசனங்களுக்கு ஏதுவாகிய சிரவணத்தில் விவேகாதி நான்கு சாதனங்களின் உபயோக (பல) மிருக்கின்றது.

† சிரவணாதிகளின்றித் திடஞான முண்டாகாதாகலின் ஞானத்தில் சிரவணாதி நான்கின் உபயோகமுண்டு.

‡ அக்கினியின் ஞானம் புகையாலுண்டாகுதலால் புகை அக்கினியை நிச்சயிக்கும் குறியா (இலிங்கமா)ம். அதுபோல வேதாந்தவாக்கியங்களின் தாற்பரியமாகிய அத்வைத ஸ்வரூபஞானம் உபக்கிரம உபஸம்ஹாராதிகளால் உண்டாகிறது. ஆதலால் அவைகள் தாற்பரிய நிச்சயத்துக்கு இலிங்கங்களா யிருக்கின்றன. அவ்விலிங்கங்கள் ஈண்டு யுக்தி சப்தத்தால் கிரகிக்கப்படுகின்றன.

## 2. ஜீவப்பிரஹ்மங்களின் * அபேதத்துக்குச் சாதகமான யுக்திகளா

அவ்விலிங்கங்களாவன:—

(1) உபக்கிரம உபஸம்ஹாரம், (2) அப்பியாஸம், (3) அபூர்வதை, (4) பலம், (5) அர்த்தவாதம், (6) உபபத்தி என்பனவாம்.

1. **உபக்கிரமமாவது** பிரகரணத்தின் ஆரம்பம். **உபஸம்ஹாரமாவது** பிரகரணத்தின் முடிவு. ஆரம்பத்திற் சொல்லிய அர்த்தத்தையே முடிவிலும் சொல்வது உபக்கிரம உபஸம்ஹாரங்களின் ஏகரூபமாகிய முதலாவது **இலிங்கம்.**

2. அத்வைதார்த்தத்தை யடிக்கடி சொல்வது **அப்பியாஸமாம்.** யாசகன் தன் பிரயோஜனமான ஒரே கருத்தை வெவ்வேறு வசனங்களால் வெளியிடுவது போல் வெவ்வேறு யுக்திகளால் அத்வைதப் பிரஹ்மத்தைப் பிரதிபாதிப்பதே **அப்பியாஸம்.**

3. பிரஹ்மம், உபநிஷத்துக்களொழிந்த மற்றப் பிரமாணங்களால் அறியப்படாதென்றும், ஸ்வயம்பிரகாசமா யிருத்தலால் அந்நியப் பிரமாணங்களை யபேக்ஷிக்கிறதில்லையென்றும் பிரதிபாதிப்பதே **அபூர்வதை.**

4. அத்வைதப் பிரஹ்ம ஞானத்துக்கு அநர்த்தங்களின் நிவிருத்தியும் பிரஹ்மத்தின் பிராப்தியுமே பயனெனச் சொல்வது **பலமென்னும்** நான்காவது இலிங்கமாம்.

5. பேதஞானத்தின் நிந்தை வடிவினவும் அபேத ஞானத்தின் ஸ்துதி வடிவினவுமான வாக்கியங்கள் **அர்த்தவாத** மெனப்படும்.

6. பிரதிபாதிக்கப்படும் அத்வைதார்த்தத்துக்கு அநுகூலமான திருஷ்டாந்தங்கள் **உபபத்தி** யென்னும் ஆறுவது இலிங்கமாம். மண்ணிற்கும் அதிலுண்டாகிய கடாதிகளுக்கும் பேதமில்லாததுபோலவும், தங்கத்துக்கும் அதனாற் செய்யப்பட்ட நகைகளுக்கும் பேதமில்லாததுபோலவும், காரணமான பிரஹ்மத்துக்கும் அதன் காரியமான ஜகத்துக்கும் பேதமில்லையெனப் பிரதிபாதிப்பதே **உபபத்தியாம்.**

இந்த ஆறு இலிங்கங்களாலும் வேதாந்தவாக்கியங்களின் அத்வைதார்த்தத்தை நிச்சயிப்பதே **சிரவண**மெனப்படும். வேதாந்தசாஸ்திரத்தின் அப்பியாசம் அதற்குச் சாதனமாயிருத்தலின் அதுவும் **சிரவண** மெனப்படும். இவ்விலிங்கங்கள் "சுருதிஷட்லிங்க சங்கிரக" மென்னும் நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன.

* ஜீவப்பிரஹ்ம அபேதத்தின் சாதகயுக்திகள் இவையாம்:—

**1.** ஜீவன் பிரஹ்மத்தினும் அபின்னம்; சச்சிதாநந்த வடிவமாயிருத்தலின்; ஈசுவர சேதனம்போல; எது சச்சிதாநந்த வடிவமன்றோ அது பிரஹ்மத்தினும் அபின்னமன்று; கடம்போல; எதனால் இது (ஜீவன்) இங்ஙனமன்றோ, அதனால் பிரஹ்மத்தின் பின்னமுமன்று; ஆனால் அபின்னமாம். ஈண்டு (இவ்வநுமானத்தில்),

1. ஜீவன் பக்ஷம்;
2. அதற்குப் பிரஹ்மத்தோடு அபேதம் **சாத்தியம்;**
3. சச்சிதாநந்தவடிவத்தன்மை ஏது;
4. ஈசுவரசேதனமும், கடமும் உதாரணம் (திருஷ்டாந்தம்).

இது முதலியன அநுமானப்பிரமாணவடிவ யுக்திகளாம்.

லும், * பேதத்துக்குப் பாதகமான யுக்திகளாலும் அத்விதீயப்பிரஹ்மத்தைச் சிந்தனைசெய்தல் மனனமென்று சொல்லப்படுகிறது. (22)

---

2. (1) கடமட உபாதிகளை நீக்கின் கடாகாச மடாகாசங்களுக்கு அபேத மிருத்தல்போல, புத்தியும் மாயையுமாகிய உபாதிகளை யொழிக்கின் ஜீவப் பிரஹ்மங்களுக்கு அபேத மிருக்கின்றது.

(2) கடாகாசம் ஜலாகாசம் மகாகாசம் மேகாகாசம் என நான்கு ஆகாசங்களிருக்கின்றன. அவற்றுள் ஜலாகாசத்திற்கும் மேகாகாசத்திற்கும் அபேத மில்லையாயினும், கடாகாச மகாகாசங்களுக்குப் பெயர்மாத்திரத்தாற் பேதமுண்டு; பரமார்த்தமாயில்லை. அங்ஙனமே கூடஸ்தன் ஜீவன் பிரஹ்மம் ஈசுவரன் என நான்கு சேதனங்களுண்டு. அவற்றில் ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் அபேத மில்லையாயினும், அவற்றின் அதிஷ்டான லக்ஷியார்த்தமாகிய கூடஸ்தனுக்கும் பிரஹ்மத்திற்கும் பெயர்மாத்திரத்தால் பேதமுண்டு; பரமார்த்தமாயில்லை. இவை முதலியன திருஷ்டாந்த (உவமானப்பிரமாண) வடிவ யுக்திகளாம்.

3. "இங்கு நாநாவென்பது சிறிதுமில்லை" என்றல் முதலிய சுருதிகளில் பேதம் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிஷேதம் (விலக்கு) வாஸ்தவ அபேத முளதாயின் சம்பவிக்கும்; அஃதின்றிச் சம்பவியாது. ஆதலால் பேத நிஷேதத்தினது அநுபபத்தி (பொருத்தமின்மை) யின் ஞானமாகிய அர்த்தாபத்திப் பிரமாணத்தால் ஜீவப் பிரஹ்மங்களின் அபேதத்தினது ஞானமாகிய அர்த்தாபத்திப் பிரமை யுண்டாகின்றது. இது முதலியன அர்த்தாபத்திப் பிரமாணவடிவ யுக்திகளாம்.

இவ்வாறு பிரத்தியக்ஷப்பிரமாண சப்தப்பிரமாணங்களுக்கு வேறாய் யுக்தியென்னும் பதத்திற்கு வாச்சியமான அநுமானம் உவமானம் அர்த்தாபத்தியென்னும் மூன்று பிரமாணங்கள் அபேதத்தின் சாதக யுக்திகளாம்.

* ஜீவப்பிரஹ்ம பேதத்தின் பாதகயுக்திகள் இவையாம்:—

1. ஜீவப்பிரஹ்மங்களின் பேதம் மித்தையாம்; ஔபாதிகமா (உபாதியினாலாகியதா) யிருத்தலால்; கடாகாச மகாகாசங்களின் பேதத்தைப்போல; யாது மித்தையன்றோ அது ஔபாதிகமு மன்று. எங்ஙனம்: கடபடங்களுக்கு வியவகார தசையில் பேதமுண்டு; அது ஔபாதிக மன்று; ஆதலால் மித்தையுமன்று. எதனால் அது (ஜீவன்) இங்ஙனமன்றோ, அதனால் மித்தையன்றெனலு மின்று; ஆனால் மித்தையேயாம். ஈண்டு,

(1) பேதம் பக்ஷம்;
(2) மித்தியாத்தன்மை சாத்தியம்;
(3) ஔபாதிகத்தன்மை ஏது;
(4) இரண்டு ஆகாயங்களின் பேதமும் கடபடங்களின் பேதமும் உதாரணம்.

இது முதலியன அநுமானப்பிரமாணவடிவ யுக்திகளாம்.

ஈண்டு முதலியவென்னும் சொல்லால் "முமுக்ஷுசர்வஸ்வஸாரஸங்கிரஹ"த்திற் கூறப்பட்டனவும், "வேதாந்த பதார்த்தமஞ்ருஷ"விற் கூறப்பட்டனவும், இந்நூலின் மூன்றாவது தரங்கத்தின் டிப்பணி (விளக்கவுரை)யில் சொல்லப்பட்ட பஞ்சபேதங்களை நிவர்த்திக்கும் ஐந்தநுமானங்களுள் நான்கநுமானங்களும் கொள்ளப்படும்.

2. (1) பிம்பப் பிரதிபிம்பங்களின் பேதம் மித்தையாவதுபோல ஜீவப்பிரஹ்மங்களின் பேதம் மித்தையாம்.

3. அநாத்மாகார விருத்தியின் மறைப்பின்றிய பிரஹ்மாகார விருத்தியின் ஸ்திதி * நிதித்தியாஸநமென்று சொல்லப்படுகின்றது. நிதித்தியாஸனத்

---

(2) அநேக கடாகாசங்களுக்கு ஒன்றற்கொன்றுள்ள பேதம் மித்தையாவதுபோல ஜீவர்கள் ஒருவரோடு ஒருவர்க்குள்ள பேதம் மித்தையாம்.

(3) சொப்பன ஜீவர்களுக்கும் சொப்பன கடமுதலியவற்றிற்கும் உள்ள பேதம் மித்தையாதல்போல ஜீவ ஜடங்களுக்குள்ள பேதம் மித்தையாம்.

(4) இரஜ்ஜுவிற்கும் கற்பித சர்ப்பத்திற்கும், அல்லது சாக்ஷிசேதனத்திற்கும் சொப்பனப்பிரபஞ்சத்திற்கு முள்ள பேதம் மித்தையாதல்போல, ஜடஜகத்திற்கும் ஈசுவரனுக்குமுள்ள பேதம் மித்தையாம்.

(5) இரஜ்ஜுவிற் கற்பிக்கப்பட்ட சர்ப்பம் தண்ட முதலியவற்றிற்காவது, சொப்பன பதார்த்தங்களுக்காவது ஒன்றற்கொன்றுள்ள பேதம் மித்தையாதல்போல, ஜட பதார்த்தங்களுக் கொன்றற்கொன்றுள்ள பேதம் மித்தையாம்.

இவை முதலியன **உவமானப் பிரமாணவடிவ யுக்திகளாம்.**

**3.** மகாவாக்கியங்களில் சொல்லப்பட்ட ஜீவப்பிரஹ்மங்களின் அபேதம் யாதோ, அது தோற்றப்படுகின்ற பேதத்தின் மித்தியாத்தன்மையின்றிப் பொருந்தாததாய்ச் சீவப் பிரஹ்மங்களினது பேதத்தின் மித்தியாத்தன்மையைக் கற்பிக்கின்றது. இது முதலியன **அர்த்தாபத்திப் பிரமாணவடிவ யுக்திகளாம்.**

**4.** சாக்கிர சொப்பனங்களில் உபாதியிருத்தலால் ஜீவப் பிரஹ்மங்களின் பேதந் தோற்றுகிறது. அங்ஙனமே சுழுத்தியில் உபாதிகளில்லாமையால் பேதம் தோற்றுகிறதில்லை. ஆதலால் ஜீவப் பிரஹ்மங்களுக்குப் பாரமார்த்திக பேதத்தின்அபாவமிருக்கின்றதென்னும் நிச்சய முண்டாகின்றது. இது முதலியன **அநுபவப்திப் பிரமாணவடிவ யுக்திகளாம்.**

இவையாவும் பேதத்தின் பாதக யுக்திகளாம்.

* நிதித்தியாஸனத்துக்கும் சாக்ஷாத்காரத்துக்கும் பேதம் யாதெனின், சாக்ஷாத்காரத்தில் அநாத்மாகார விருத்தியின் அந்தராயமின்றிய பிரஹ்மாகார விருத்தியின் ஸ்திதி, ஸ்வபாவமாய் வளைந்த மரத்தின் கிளையினைப்போல் பிரயத்தனமின்றி யுண்டாகிறது. நிதித்தியாஸனத்தில் பிரஹ்மாகார விருத்தியின் ஸ்திதி பிரயத்தனத்தால் வளைக்கப்பட்ட கிளைபோல் உண்டாகிறது. கையினுற் பிடித்திருத்தலாகிய பிரயத்தனம் நீங்கினவுடன் கிளை நிமிர்ந்துவிடுவதுபோல், நிதித்தியாசனத்தில் பிரயத்தினம் நீங்கினவுடன் பிரஹ்மாகார விருத்தியின் ஸ்திதியும் தங்குகிறதில்லை.

அல்லது:—சாக்ஷாத்கார முடையவனுக்கு வியவகாரகாலத்தில் ஓர் காலத்து முற்கூறிய விருத்தியின் ஸ்திதி இல்லாததாகக் கர்த்தவ்வியபுத்தியினுல் பச்சாத்தாபமு (பின்வருந்துதலு) ண்டாகிறதில்லை. நிதித்தியாசன முடையவனுக்கு வியவகாரகாலத்தில் ஓர் காலத்து முற்கூறிய விருத்தியினது ஸ்திதியின் அபாவ முண்டாகக் கர்த்தவ்விய புத்தியினுல் பச்சாத்தாப முண்டாகிறது.

**சாக்ஷாத்காரத்தோடு நிதித்தியாஸனத்துக்கு இத்துணைப் பேதமுண்டு.**

தின் பரிபாக அவஸ்தையினையே சமாதி யென்பர். ஆதலால் சமாதியும் வேறு சாதனமாகாமல் * நிதித்தியாஸனத்தில் அடங்குகிறது. (23.)

இந்தச் சிரவண மனன நிதித்தியாஸனங்கள் ஞானத்திற்குச் சாக்ஷாத் சாதனங்களன்று. ஆனால் புத்திதோஷங்களாகிய அசம்பாவனையையும் விபரீதபாவனையையும் நாசஞ்செய்வனவாம்.

---

* திரிபுடியின் விளக்கத்தோடு கூடிய சவிகற்பசமாதி எதுவோ, அதுவே நிதித்தியாசனமாம். அதன் பரிபாக அவஸ்தை நிர்விகற்பசமாதி யெனப்படுகின்றது. ஆதலால் இங்கு "சமாதி" யென்னும் சொல்லால் திரிபுடியின் பான (விளக்க) மின்றிய நிர்விகற்பசமாதி கொள்ளப்படுகின்றது. அந்த நிர்விகற்பசமாதி 1. பாகியம், 2. ஆந்தர மென்னும் பேதத்தால் இருவகைத்தாம்:—

1. மூர்த்தி முதலிய பாகிய ஆலம்பனத்தை (பற்றுக்கோட்டை)ச் சிந்தித்தலால் உண்டாவது எதுவோ, அது பாகியநிர்விகற்பசமாதியாம்.

2. சர்வாந்தர (எல்லாவற்றினும் உள்ளாகிய) அத்வைதப் பிரஹ்மத்தைச் சிந்தித்தல் எதுவோ, அது ஆந்தரநிர்விகற்பசமாதியாம்.

அவற்றுள், ஆந்தர நிர்விகற்பசமாதியும் (1) சாக்ஷாத்காரவடிவம் (2) அசாக்ஷாத்காரவடிவமென்னும் பேதத்தால் இருவகையினதாம்:—

(1) குருமுகவாயிலாக அர்த்தத்தோடுகூடிய மகாவாக்கியத்தின் சிரவண மனனுதி வடிவ விசாரபூர்வகமாய் அத்வைதப் பிரஹ்மத்தைச் சிந்தித்தலால் பிரஹ்மாத்மாவின் ஏகத்துவம் அபரோக்ஷபானத்தோடு உண்டாவது எதுவோ, அது சாக்ஷாத்காரவடிவ ஆந்தரநிர்விகற்பசமாதியாம்.

(2) விசாரபூர்வக அத்வைதப் பிரஹ்மத்தின் சிந்தனத்தினுலும் ஏகத்துவத்தின் பரோக்ஷபானத்தோடு உண்டாவது யாதோ, அது அசாக்ஷாத்காரவடிவ ஆந்தரநிர்விகற்பசமாதியாம்.

(1) அவற்றுள், அசாக்ஷாத்காரவடிவம் யாதோ அது சாக்ஷாத்காரவடிவ சமாதியின் சாதனமாம். ஆதலால் அது நிதித்தியாசனத்தில் அடங்கும்; வேறு சாதனமன்று.

(2) சாக்ஷாத்காரவடிவ சமாதி எதுவோ, அது ஒரு க்ஷணத்தில் உதயமாகின்றது. இரண்டாவது க்ஷணத்தில் நிலைத்து ஆவரணத்தைக் கெடுக்க ஆரம்பிக்கின்றது. மூன்றுவது க்ஷணத்தில் ஆவரணம் நாசமாகின்றது. அதனுல் ஜீவன்முக்தி யுண்டாகின்றது. முதலில், இது க்ஷணமிருப்பதாயினும் ஆவரணத்தைக் கெடுக்கின்றது. ஆதலால் வித்துவானிடத்தில் ருதம்பரை (மறைந்துள்ளவைகளைக் காணும் உண்மை) யுணர்ச்சி முதலிய சித்தி யுண்டாகுதலின் சங்கையில்லை. கடத்தின் சாக்ஷாத்காரமுண்டாகத் தற்காலம் (அப்பொழுதே) கடத்தின் ஆவரணம் பங்கமாகின்றது. அதன்பொருட்டுப் பின் புத்தியைத் தடுத்தலின் பிரயோஜனமில்லை. அங்ஙனமே பிரஹ்மத்தின் ஆவரணம் பங்கமானபின் அடத்தினுல் விருத்தியை நிரோதித்தலின் பிரயோஜன மில்லை. இங்ஙனமுண்டாகிய பின்னரும், ஏழாவது பூமிபரியந்தம் எந்த விருத்திநிரோதம் செய்யப்படுகின்றதோ, அந்த நிரோதம் வாசனக்ஷய மனோநாச வாயிலாக, அதாவது மனதின் ஸ்தூலத்தன்மையின் நிவிருத்தி வாயிலாக ஜீவன்முக்தியின் விலக்ஷண ஆநந்தத்திற்கு ஏதுவாம்; ஆவரண பங்கத்திற்கு ஏதுவன்று.

இவ்வாற்ருல் சமாதி நிதித்தியாசனத்தில் அடங்குகின்றது.

1. * சமுசயத்தினை அசம்பாவனை யென்பர்.

2. † விபரியயத்தினை விபரீதபாவனை யென்பர். (24.)

## 19. சிரவணுதிகள் பரம்பரையாக ஞானத்திற்கு ஏதுவாதல்.

சிரவணத்தினால் பிரமாண சந்தேகமும், மனனத்தினால் பிரமேய சந்தேகமும் நீங்குகின்றன.

1. ‡ வேதாந்தவாக்கியம் அத்விதீயப் பிரஹ்மத்தைப் பிரதிபாதிக்கிறதா? அல்லது அந்நிய அர்த்தத்தைப் பிரதிபாதிக்கிறதா ? என்று || பிரமாணத்தில் சந்தேக முண்டாகிறது. அது சிரவணத்தினால் நிவிருத்தியாகிறது.

2. ஜீவப்பிரஹ்மங்களின் அபேதம் சத்தியமா? அல்லது பேதம் சத்தியமா? என்று $ இவ்வாறு ¶ பிரமேயத்தில் சந்தேக முண்டாகின்றது. அது மனனத்தினால் நிவிருத்தியாகின்றது.

3. தேகாதிகள் சத்தியம், ஜீவப்பிரஹ்ம பேதமும் சத்தியமென்னும் ஞானத்தினை **விபரீதபாவனை**யென்பர். அதனையே விபரியயமென்றும் கூறுவர். அது நிதித்தியாசனத்தினால் நிவிருத்தியாகிறது.

---

* "இது ரஜ்ஜுவா? அல்லது சர்ப்பமா?" என்றிவ்வாறு இரண்டு கோடி (பக்ஷங்)களை விஷயிக்கும் ஞானம் **சமுசயம்** எனப்படும்.

† "இது சர்ப்பம்"என்னும் அவித்தியாவிருத்தி **விபரியயமாம்.** இதுவே **பிராந்தி ஞானமென்றும், விபரீதபாவனை** யென்றும் சொல்லப்படும். இதனையே விபரீதஞான மென்றும், **ஞானத்தியாஸமென்றும்** கூறுவர். இவ்வாறு இங்கு மித்தையான அநாத்ம வடிவ தேகாதிகளைச் சத்தியரூபமாகவும் ஆத்மரூபமாகவும் அறிவது **விபரியயம்.**

‡ வேதத்தின் அந்த (கடைப்) பாகமாகிய உபநிஷத்து; அல்லது வேதத்தின்அந்தம் அதாவது நிர்ணயம் எதன்கண் இருக்கின்றதோ, அத்தன்மைய சூத்திரபாஷியவடிவ உத்தரமீமாம்ஸாசாஸ்திரம் **வேதாந்த** மெனப்படும். அவற்றின் வாக்கியமாவது பதசமுதாயம் (சொற்களின் கூட்டம்) **வேதாந்தவாக்கிய** மெனப்படும்.

|| பிரமாஞானத்துக்குக் கரண மெதுவோ, அது **பிரமாண** மெனப்படும். இங்கு வேதத்திற் சொல்லப்படும் மோக்ஷமுதலிய பதார்த்தங்களின் யதார்த்த அநுபவ வடிவ சாப்திப் பிரமையின் கரணமாகிய உபநிஷத்துவடிவ சப்தம் எதுவோ, அது **பிரமாண சப்தத்தின் அர்த்தமாம்.** அதன் சொரூபத்தில் முற்கூறியவிதமான எந்தச் சம்சய முண்டாகின்றதோ, அது பிரமாணகத சம்சயமாம். விசாரித்துப் பார்க்குமிடத்து எவ்வளவு பிரமேயகத சம்சயங்களின் பேதம் சாஸ்திரத்தில் சொல்லப்பட் டிருக்கின்றனவோ, அவ்வளவே பிரமாணகத சம்சயங்களின் பேதமும் சித்திக்கின்றன.

$ "இவ்வாறு"என்பது இதுமுதல் அநேக வடிவினையுடைய பிரமேயகத சம்சயங்களுள வென்பதாம். பிரமேயகத சம்சயத்தின் அநேக பேதம் பஞ்சதசியின் உரையிலும், அங்ஙனமே பாலபோதத்தின் பாலபோதினி யென்னும் உரையிலும் எழுதப்பட் டிருக்கின்றன.

¶ பிரமாஞானத்தினாலேனும் அல்லது அதன் சாதனமாகிய பிரமாணத்தினாலேனும் அறியத்தக்க மோக்ஷமுதலிய பதார்த்தங்கள் எவையோ, அவை இங்குப் **பிரமேய** மெனப்படுகின்றன.

இவ்விதத்தால் சிரவணுதிகள் மூன்றும் அசம்பாவனை விபரீதபாவனை களை நாசம்பண்ணுவனவாம். அசம்பாவனை விபரீதபாவனைகளும் ஞானத் திற்குப் பிரதிபந்தகமாம். ஆதலால் ஞானத்தின் பிரதிபந்தகத்தைக் கெடுக் கும் வாயிலாகச் சிரவணுதிகள் ஞானத்திற்கு ஹேது வெனப்படுகின்றன; சாக்ஷாத் ஹேது வன்று. (25.)

## 20. அவாந்தரவாக்கியம் பரோக்ஷஞானத்திற்கும், மகாவாக்கியம் அபரோக்ஷஞானத்திற்கும் ஏதுவாமாறு.

ஞானத்திற்குச் * சாக்ஷாத் சாதனம் சுரோத்திர சம்பந்தி வேதாந்த வாக்கியமாம். அவ்வேதாந்த வாக்கியம் இருவகையாம்:— 1. ஒன்று அவாந்தரவாக்கியம்; 2. ஒன்று மகாவாக்கியம்.

1. பரமாத்மாவினது அல்லது ஜீவனது சொரூபத்தை யறிவிக்கும் வாக் கியம் அவாந்தரவாக்கிய மெனப்படும்.

2. ஜீவபரமாத்மாக்களின் ஏகத்துவத்தை யறிவிக்கும் வாக்கியம் மகா வாக்கிய மெனப்படும்.

1. அவாந்தரவாக்கியத்திஞல் பரோக்ஷஞான முண்டாகும்.

2. மகாவாக்கியத்திஞல் அபரோக்ஷஞான முண்டாகும்.

1. "பிரஹ்மம் இருக்கிறது" என்னும் ஞானத்தைப் பரோக்ஷஞான மென்பர்.

2. "பிரஹ்மம் நான்" என்னும் ஞானத்தினை அபரோக்ஷஞான மென்பர்.

"நீ பிரஹ்மம்" என்று குருவினு லுச்சரிக்கப்பட்ட வாக்கியம் சுரோதா வின் காதில் சம்பந்தப்பட்டவுடனே "நான் பிரஹ்மம்" என்னும் அப ரோக்ஷஞானம் சுரோதாவுக் குண்டாகிறது. சுரோதாவின் காதில் வாக்கியம் சம்பந்தமாதலின்றி ஞானமுண்டாகிறதில்லை. ஆதலால் சுரோத்திர சம்பந்தி வாக்கியமே ஞானத்திற்கு ஏதுவாம்.

1. சுரோத்திர சம்பந்தி அவாந்தர வாக்கியம் பரோக்ஷஞானத்திற்கு ஹேதுவாம்.

2. சுரோத்திர சம்பந்தி மகாவாக்கியம் அபரோக்ஷஞானத்திற்கு ஏதுவாம். மகாவாக்கியத்திஞல் எல்லோருக்கும் அபரோக்ஷஞானமே யுண்டாகிறது; பரோக்ஷஞான முண்டாகிறதில்லை. (26.)

---

* கண்ணிற் போடப்பட்ட மை நேத்திர ரோகத்தை நிவர்த்தித்தல் வாயிலாகச் சூரியனைப் பார்க்கச் சாதனமாயிருக்கிறது. சாக்ஷாத்சாதன மன்று. சூரியனைக் காண்பத ற்குச் சாக்ஷாத்சாதனம் நேத்திரமாம். அங்ஙனமே சிரவணுதிகளும் ஞானத்தின் பிரதி பந்தங்களாகிய சமுசய விபரியயரூப ரோகங்களை நிவர்த்தித்தல்வாயிலாக ஞானத்திற் குச் சாதனங்களாம்; சாக்ஷாத்சாதனம் சுரோத்திரசம்பந்தி மகாவாக்கியங்களாம்.

## 21. வேதாந்தத்தின் ஏகதேசியின் மதம்.
## (கேவல வாக்கியத்தால் பரோக்ஷஞான முண்டாகுமெனல்.)

* ஏகதேசியின் மதம் இதுவாம் :—

1. சிரவணமனன நிதித்தியாசனங்களோடு கூடிய வாக்கியத்தினல் அபரோக்ஷஞான முண்டாகிறது.

2. கேவல வாக்கியத்தினல் பரோக்ஷஞான முண்டாகிறது; அபரோக்ஷ ஞான முண்டாகிறதில்லை.

கேவல வாக்கியத்தினலேயே அபரோக்ஷஞான முண்டாகுமாயின், சிரவண மனன நிதித்தியாசனங்கள் வியர்த்தமாகும். சித்தாந்தத்தில் கேவல வாக்கியத்தால் அபரோக்ஷஞான முண்டாகிறது; சிரவணுதிகளால் அசம்பாவனை விபரீதபாவனைகள் நாசமாகின்றன; ஆதலால் சிரவணுதிகள் வியர்த்தமாகா. என்றலும், எந்த வஸ்துவின் அபரோக்ஷஞான முண்டாகிறதோ, அந்த வஸ்துவில் ஒருவருக்கும் அசம்பாவனை விபரீத பாவனைகள் உண்டாகா. ஆதலால் கேவல வாக்கியத்தினல் † அபரோக்ஷஞான முண்டாகுமென்று சொல்லுவோர் சித்தாந்தத்தில் "தத்துமஸி" முதலிய வாக்கியங்களால் பிரஹ்மத்தின் அபரோக்ஷஞான முண்டானபின், அசம்பாவனை விபரீதபாவனைகள் சம்பவியாவாகலின், சிவரணுதி சாதனங்கள் வியர்த்தமாம். "கேவல வாக்கியத்தால் பரோக்ஷஞான முண்டாகின்றது; சிரவண மனன நிதித்தியாசனங்களைச் செய்தால் அபரோக்ஷஞான முண்டாகின்றது" என்னும் மதத்தில் சிரவணுதிகள் வியர்த்தமாகா. இது அநேக கிரந்தகாரருடைய ‡ மதம். அங்ஙனமாயினும் இம்மதம் § நலமுடையதன்று. ஏனெனின், (27.)

## 22. முற்கூறிய ஏகதேசியின் மதம் நலமுடையதாகாமை. 22-23.

சப்தத்திற் கிது சுபாவமாம்:—

1. எந்த வஸ்து || வியவஹிதமாயிருக்கிறதோ, அதன் ஞானம் சப்தத்தினல் பரோக்ஷமாகவே யுண்டாம். எவ்விதத்தினும் வியவஹிதவஸ்துவின்

* சித்தாந்தத்தின் ஏகதேசத்தை ஆசிரயித்துச் சுவதந்திரமாக அதிக அர்த்தம் எவற்றில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றதோ, அத்தன்மைய பஞ்சதசி முதலிய வேதாந்தத்தின் பிரகரணகிரந்தங்களின் கர்த்தாக்களாகிய ஆசிரியர்கள் இங்கு ஏகதேசி யெனப்படுவர்.

† கேவல வாக்கியத்தினல் அபரோக்ஷஞான முண்டாமென்று கூறுவோர் சித்தாந்திகள்; அவர்கள் மதத்தில்.

‡ மந்தபோதமுடையவனுக்குச் சிரவண முதலிய சாதனங்களில் ஆலசியம் (சோம்பல்) உண்டாகலாகாது என்னும் அபிப்பிராயத்தால் கூறிய இது சம்க்ஷேபசாரீரகத்திற்கு வேருன அநேக பிரகரணக் கிரந்தங்களின் கர்த்தாக்களது மதமாம்.

§ திடஞான முடையோருக்கும் சிரவண முதலியவற்றில் கர்த்தவ்வியபுத்தி உண்டாகலாகாதென்னும் அபிப்பிராயத்தால் கேவல வாக்கியத்தினல் அபரோக்ஷ ஞானத்தைக் கூறும் சித்தாந்தியை அநுசரித்து இச்சமாதானம் சொல்லப்படுகின்றது.

|| தேசத்தினலாகிய அல்லது காலத்தினலாகிய அந்தராயத்தினை (மறைப்பினை) வியவதான மென்பர். வியவதானமுடைய வஸ்துவினை வியவஹிதமென்பர்.

ஞானம் சப்தத்தால் அபரோக்ஷமாகிறதில்லை. வியவஹித சுவர்க்கத்தின் ஞானமும், இந்திராதி தேவதைகளின் ஞானமும் சாஸ்திரரூப சப்தத்தினால் பரோக்ஷமாகவே யுண்டாகின்றன.

எந்தவஸ்து அவ்வியவஹிதமாக இருக்கிறதோ, அதன் (1) அபரோக்ஷ ஞானம் (2) பரோக்ஷஞான மிரண்டும் சப்தத்தா லுண்டாகின்றன.

(1) எங்கு அவ்வியவகித வஸ்துவினைச் சப்தம் "இருக்கிறது" என்னும் வடிவத்தால் அறிவிக்கிறதோ, அங்கு அவ்வியவஹிதத்திற்கும் பரோக்ஷஞானமுண்டாகின்றது. அது * "பத்தாவது புருஷன் இருக்கிறான்" என்பதாம். இவ்வாறு 'இருக்கிறா' னென்னும் வடிவத்தால் அறிவிக்கப்பட்ட அவ்வியவஹித தசமனுடைய ஞானம் சப்தத்தினால் பரோக்ஷமாகவே யுண்டாயிருக்கின்றது.

(2) எங்கு அவ்வியவஹித வஸ்துவினை "இது இருக்கிறது" என்னும் வடிவத்தால் சப்தம் அறிவிக்கிறதோ, அங்கு சப்தத்தினால் அவ்வியவகிதத்தின் அபரோக்ஷஞானமே யுண்டாகிறது; பரோக்ஷஞான முண்டாகிறதில்லை.

---

1. எந்த வஸ்து தூரதேசத்திலுளதாகின்றதோ, அது தேசத்தினால் வியவஹிதமாம். எந்த வஸ்து சென்ற அல்லது வருங்காலங்களில் உளதாகின்றதோ, அது காலத்தினால் வியவஹிதமாம்.

2. வியவஹிதத்திற்கு வேறான அந்தராயமின்றிய வஸ்து எதுவோ அது அவ்வியவஹித மெனப்படுகின்றது.

* இங்கு இது பிரசங்கமாம்:—ஓர் பத்துச் சிறுவர்கள் ஒன்றுசேர்ந்து விநோதமாகத் தேசாந்தரத்திற்குப் போனார்கள். போகுங்கால் வழியில் கானற்சல ஆறு ஒன்று எதிர்ப்பட, அதனைக்கடந்து கரையேறினவுடன் அவர்களுள் முதன்மையான ஒரு சிறுவன் மற்ற ஒன்பது சிறுவர்களையும் எண்ணித் தன்னை யெண்ணாது சொல்லத்தொடங்கினான்:—எனதன்பன்!

1. "பத்தாவது புருஷனை யான் காணேன்". இவ்வஞ்ஞானவஸ்தை யுண்டாயிற்று.

2-3. அதனால் "பத்தாமவன் இல்லை", "காணப்படவில்லை" என்னும் இருவகை ஆவரண முண்டாயிற்று.

4. அதனால் அழுகை முதலிய விக்ஷேப முண்டாயிற்று.

5. பின்னர் ஓர் உண்மையுரைப்போனென்னும் ஆப்தபுருஷன் வந்தான். அவன் "பத்தாமவன் இருக்கின்றான்" என்னும் அவாந்தரவாக்கியத்தைச் சொன்னான். அதனைக் கேட்டு அப்பத்தாவது புருஷனுக்குத் தனது சொரூபமான பத்தாமவனது "பத்தாமவனிருக்கிறான்" என்னும் பரோக்ஷஞானமே யுண்டாயிற்று.

6. பின்னர்ப் "பத்தாமவன் எங்கு இருக்கின்றான்?" என்று கேட்க, அவ்வாப்தபுருஷன் "பத்தாமவன் நீ" என்னும் வாக்கியத்தைக் கூறினான். அப்போது அவனுக்குப் "பத்தாமவன் யான்" என்னும் அபரோக்ஷஞான முண்டாயிற்று.

7. அதனால் அஞ்ஞானத்தாலாகிய ஆவரணத்தோடு அழுதல் முதலிய விக்ஷேபம் நாசமாயிற்று. அதனால் ஹர்ஷ (சந்தோஷ) வடிவ திருப்தி யுண்டாயிற்று.

அது, "பத்தாவது புருஷன் நீ" என்றிவ்வாறு சப்தத்தா லறிவிக்கப்படும் தசமனுக்கு அவனது அபரோக்ஷஞானமே யுண்டாவதுபோலவாம்.

(1) அங்ஙனமே பிரஹ்மம் எல்லாவற்றிற்கும் ஆத்மாவா யிருத்தலால் அத்தியந்தம் அவ்வியவஹிதமாயிருக்கிறது. அதனை "இருக்கிறது" என்னும் வடிவத்தால் அவாந்தரவாக்கியம் போதிக்கிறது. ஆதலால் அவ்வியவஹிதப் பிரஹ்மத்தின் ஞானமும் அவாந்தர வாக்கியத்தினால் பரோக்ஷமாகவே யுண்டாகின்றது.

(2) "பத்தாமவன் நீ" என்னும் வாக்கியத்தினைப்போல சுரோதாவின் ஆத்மவடிவ (சொரூப) மாகப் பிரஹ்மத்தை மகாவாக்கியம் போதிக்கிறது. ஆதலால் * மகாவாக்கியத்தினால் அவ்வியவஹிதப் பிரஹ்மத்தின் பரோக்ஷஞான முண்டாகாமல் அபரோக்ஷஞானமே யுண்டாகின்றது. (28.)

---

அங்ஙனமே, இப்புருஷனாகிய ஜீவன் ஸ்தூலசரீரத்தோடுகூடிய புரியஷ்டக வடிவ ஒன்பது புருஷர்களோடு சேர்ந்து சம்சாரமென்னும் கானற்சல ஆற்றிற் பிரவேசித்து, அதன் மனுஷ்ய தேகமாகிய கரையில் வந்து ஒருகால் ஞானவிருப்பகாலத்தில் விசாரிக்கின்றான். அப்போது,

1. தன்னின்வேறாகிய முற்கூறிய ஒன்பது புருஷர்களையும் அறிகின்றான். ஆனால் அவர்களை யறிபவனாகிய தனது நிஜரூபப்பிரஹ்மத்தை அறியேன் என்னும் அஞ்ஞான அவஸ்தை யுண்டாயிற்று.

2-3. அதனால் "பிரஹ்மமில்லை", "காணப்படவில்லை" யென்று இருவகை ஆவரணம் உண்டாயிற்று.

4. அதனால் அர்த்தாத்தியாசமும் ஞானாத்தியாசமுமாகிய விக்ஷேப மென்னும் சோக முண்டாயிற்று.

5. பின்னர்ப் "பிரஹ்மம் இருக்கிறது" என்று குருவானவர் அவாந்தரவாக்கியத்தைச் சொல்ல, அதனைக்கேட்டுப் "பிரஹ்மம் இருக்கிறது" என்னும் பரோக்ஷஞான முண்டாகின்றது.

6. பின்னர்ப் "பிரஹ்மம் யார்" என்று கேட்கக் குருவானவர் "நீயே பிரஹ்மம் என்னும் மகாவாக்கியத்தைச் சொன்னார். அதனைக் கேட்டுச் சிஷ்யனுக்கு "யான் பிரஹ்மம்" என்னும் அபரோக்ஷஞான முண்டாகின்றது.

7. அதனால் அஞ்ஞானத்தினாலாகிய ஆவரணத்தோடுகூடிய இருவகை அத்தியாச வடிவ விக்ஷேபத்தின் நாச முண்டாகின்றது. அதனால் அத்தியந்த ஹர்ஷரூப நிரங்குச(தடையற்ற) திருப்தி (ஆநந்தம்) உண்டாகின்றது.

இச்சிதாபாஸனது ஏழு அவஸ்தைகளின் வர்ணநம் ஆசாரியராற் செய்யப்பட்ட உபதேசஸஹஸ்ரியிலும், அங்ஙனமே இந்நூலின் நான்காவது தரங்கத்திலும் விஸ்தாரமாக எழுதப்பட்டிருக்கின்றது. இங்குச் சுருக்கமான அதன் தன்மைமாத்திரம் அறிவிக்கப்பட்டது.

* இங்கு இது இரகசியமாம்:—பத்தாவது புருஷனுக்கு மனதினாலும் நேத்திரத்தினாலும் பிரத்தியக்ஷமாகத்தக்க தேகாதி சங்காதங்களின் சாமக்கிரியாகிய மனமும் நேத்திரமுமிருந்தும், அபரோக்ஷஞான முண்டாகவில்லை. ஆனால் "பத்தாமவன் நீ" யென்னும்

23. அன்றியும், "எந்த வஸ்துவின் அபரோக்ஷஞான முண்டாகின்ற தோ, அதனிடத்து அசம்பாவனை விபரீத பாவனைகள் உண்டாகாவாகலின், சிரவணாதிகள் * வியர்த்தமா" மென்று சொல்லப்பட்டது.

அச்சங்கை பொருந்தாது. ஏனெனின், இராஜன் † பர்ச்சுவென்னும் மந் திரியை நேத்திரத்தால் அபரோக்ஷமா யறிந்தும் விபரீதபாவனை நீங்கவில்லை. அதுபோல மகாவாக்கியத்தினால் பிரஹ்மத்தின் அபரோக்ஷஞான முண்டா னாலும்,எவனுடைய புத்தியில் அசம்பாவனாதி தோஷங்க ளிருக்கின்றனவோ, அவனுடைய தோஷவடிவ களங்கத்தோடுகூடிய ஞானம் பலத்திற்கு ஏது வாகாது; அந்தத்தோஷ நிவிருத்தியின்பொருட்டுச் சிரவணாதிகளைச் செய்ய வேண்டும். எவனுடைய புத்தியில் தோஷங்களில்லையோ அவன் சிரவணாதி களைச் செய்யவேண்டியதில்லை.

இவ்வாற்றால் ஞானத்துக்குச் சாதனம் மகாவாக்கியமாம்; சிரவணாதிக ளன்று. ஆனால் ஞானப்பிரதிபந்தங்களான தோஷங்களைச் சிரவணாதிகள் நாசஞ்செய்கின்றன. ஆதலால் சிரவணாதிகள் ஞானத்திற்குச் சாதனங்களெனப் படுகின்றன. விவேகாதிகள் சிரவணாதிகளுக்கு ஹேதுவாகலின் ஞானத்திற்குச் சாதனங்க ளெனப்படுகின்றன. (29.)

விவேகாதி ‡ நான்கு சாதனங்களோடு கூடிய புருஷன் எவனோ அவன் அதிகாரியாவன்.

---

வாக்கியத்தினாலேயே அபரோக்ஷஞான முண்டாயிருக்கிறது. ஆதலால் பத்தாமவனது அபரோக்ஷஞானமாகிய பிரமைக்குச் சப்தம் கரணமாம். அதனால் அது பிரமாணமாம். அதற்கு மனமும் நேத்திரமும் சககாரிகளாம். அங்ஙனமே பிரஹ்மத்தின் அபரோக்ஷ ஞானமாகிய பிரமைக்குக் கரணம் மகாவாக்கியமாகிய சப்தமாம். ஆதலால் அது பிர மாணமாம். அதற்குச் சாதனங்களாற் சம்ஸ்கரிக்கப்பட்ட மனம் சககாரியாம்.

* "மைத்திரேயி! ஆத்மா பார்க்கத்தக்கது; சிரவணஞ் செய்யத்தக்கது; மனனஞ் செய்யத்தக்கது; நிதித்தியாசனஞ் செய்யத்தக்கது." என்றல் முதலிய சுருதியாற் சொல் லப்பட்ட ஆத்மதரிசனத்திற்குச் சாதனமான சிரவணாதிகள் நிஷ்பலமாகத்தக்கனவாகா; ஸபல மாகத்தக்கனவாம். கேவல மகாவாக்கியத்தினால் அபரோக்ஷஞானத்தை அங்கீக ரிக்கச் சுருதியிற்கூறிய சிரவணாதி சாதனங்கள் நிவர்த்திக்கத்தக்க தோஷமின்மையி னால், ரோக மில்லாதிருக்க ஔஷதத்தை உபயோகப்படுத்துவதுபோல நிஷ்பலமாகு மென்பது அபிப்பிராயம்.

† பர்ச்சுவென்னும் மந்திரியின் விஸ்தாரமான விருத்தாந்தம் மேல் ஐந்தாவது தர ங்கத்திற் சொல்லப்படும். ஆதலால் இங்கு அவர் பெயர்மாத்திரம் சொல்லப்பட்டது.

‡ ஞானத்திற்குமுன் சகுணப்பிரஹ்மத்தின் சாக்ஷாத்கார பரியந்தம் எவனுக்கு உபா சனை யுண்டாயிருக்கிறதோ, அவனைக் கிருதோபாஸனன் என்பர். அவனின் வேறாகிய வனை அகிருதோபாஸனன் என்பர். அவர்களுள் கிருதோபாஸனனது வைராக்கியாதி சாதனங்கள் தீவிரமாயிருத்தலின் பிரசித்தமாய்க் காணப்படுகின்றன. அகிருதோபாஸ னனது சாதனங்கள் மந்தமாயிருத்தலின் பிரசித்தமாய்க் காணப்படாது மறைந்திருக் கின்றன. ஆனால் எங்ஙனம் வஸ்திரத்தின் ஒரு முன்தானையைப் பிடிக்க வஸ்திரமுழுவ தும் பிடிக்கப்பட்டதாகின்றதோ, அங்ஙனமே நான்கு சாதனங்களினின்றும் ஒரு சாத

## 24. சம்பந்தவர்ணநம்.

1. கிரந்தத்திற்கும் விஷயத்திற்கும் பிரதிபாத்தியப் பிரதிபாதகபாவ சம்பந்தமுளது. கிரந்தம் பிரதிபாதகமும், விஷயம் பிரதிபாத்தியமுமாம். (விஷயத்தைச்) சொல்லுவது எதுவோ அது பிரதிபாதகமாம். சொல்லப்படுவது யாதோ அது பிரதிபாத்தியமாம்.

2. அதிகாரிக்கும் பலத்துக்கும் பிராப்பிய பிராபகபாவ சம்பந்தமுளது. பலம் பிராப்பியம்; அதிகாரி பிராபகன். எந்த வஸ்து அடையப்படுகிறதோ அது பிராப்பியம். எவன் அடைகிறானோ, அவன் பிராபகன்.

3. அதிகாரிக்கும் விசாரத்திற்கும் கர்த்துரு கர்த்தவ்வியபாவ சம்பந்தமுளது. அதிகாரி கர்த்தா; விசாரம் கர்த்தவ்வியம். செய்பவன் கர்த்தா; செய்யத்தக்கது கர்த்தவ்வியம்.

4. கிரந்தத்திற்கும் ஞானத்திற்கும் ஜநக ஜந்நியபாவ சம்பந்தமுளது. விசாரவாயிலாகக் கிரந்தம் ஞானத்திற்கு ஜநகமாம்; ஞானம் ஜந்நியமாம். உற்பத்திசெய்வது யாதோ அது ஜநகமாம். உற்பத்தியாவது யாதோ அது ஜந்நியமாம்.

இவை † முதலிய வேறு ‡ சம்பந்தங்களையும் அறிந்துகொள்க. (30.)

## 25. விஷயவர்ணநம்.

ஜீவப்பிரஹ்மங்களின் ஏகத்துவம் (ஐக்கியம்=ஒருமை) இந்நூலிற்கு விஷயமாம். எது பிரதிபாதனஞ்செய்ய (சொல்ல)ப்படுகிறதோ, அது விஷயமெனப்படுகின்றது. இந்நூலில் ஜீவப்பிரஹ்மங்களின் ஏகத்துவம் பிரதிபாதனஞ் செய்யப்படுகின்றதாகலின், அவ்வேகத்துவம் நூலிற்கு விஷயமாம். அதனையே சகல வேதவாக்கியங்களும் பிரதிபாதிக்கின்றன. ஆதலால் ஜீவப்

---

னம் நிச்சயிக்கப்படின், எல்லாச்சாதனங்களும் மறைந்திருக்கின்றன என்னும் நிச்சயமுண்டாகின்றது. என்னை, விவேகாதி நான்கு சாதனங்களும் ஒன்றற்கொன்று சககாரியாயிருத்தலின். ஆனால் எவ்வெவ்வகையானும் சிரத்தையுள்ளவனும் வியசனமுள்ளவனுமாகிய தீவிரபுத்தியுடைய புருஷனுக்குப் போதமுண்டாமென்பது விவேகமாம்.

† இங்கு "முதலிய" என்னும் சொல்லால் சிரவணாதி சாதனங்களுக்கும் ஞானத்திற்கும், அங்ஙனமே விஞ்ஞானத்திற்கும் மோக்ஷத்திற்கும் உள்ள சாத்தியசாதனபாவ முதலிய சம்பந்தங்களைத் தெரிந்துகொள்க.

‡ ஜலத்தையும் தெளித்தலையும் போன்றிருத்தலால், யோக்கியதை (தகுதி) யுடையனவாய் ஒன்றற்கொன்று உபயோகியான இரண்டு பதார்த்தங்களுக்குச் சம்பந்தம் சித்திக்கின்றது; உபயோகமின்றிய பதார்த்தங்களுக்குச் சித்திக்கிறதில்லை. ஆதலால் யோக்கியதையின்றிச் சம்பந்தம் சம்பவியாமையின் ஞானமாகிய அர்த்தாபத்திப் பிரமாணத்தால் அவ்வப்பதார்த்தங்களின் யோக்கியதையைக் கற்பித்தலாகிய அர்த்தாபத்திப்பிரமையுண்டாகின்றது. இக்காரணத்தால் சாஸ்திரங்களில் சம்பந்தத்தின் வியவகாரம் எழுதப்பட்டிருக்கின்றது; வேறு பிரயோஜனத்தின்பொருட்டன்று.

பிரஹ்மங்களின் பேதத்தைக் கூறுவோர் * சடர்களும் (புறங்கூறுவோரும்) வேதத்திற்கு விரோதிகளுமாவர். (31.)

## 26. பிரயோஜன வர்ணநம். 26 - 32.

பிரபஞ்சத்திற்குக் காரணமான அஞ்ஞானமும் பிரபஞ்சமும் ஜனன மரணவடிவ துக்கத்திற்கு ஹேதுவா யிருத்தலால் அநர்த்தமெனப்படுகின்றன. அவ்வநர்த்தத்தின் நிவிருத்தியும் பரமாநந்தத்தின் பிராப்தியும் மோக்ஷமெனப்படுகின்றது. அது (மோக்ஷம்) 1. கிரந்தத்தின் பரமப்பிரயோஜனமாம்; 2. ஞானம் அவாந்தரப்பிரயோஜனமாம். (32.)

1. எதனிடத்திற் புருஷனுக்கு இச்சையுண்டாகின்றதோ அது பரமப் பிரயோஜனமெனப்படுகின்றது. அதுவே புருஷார்த்தமென்றும் சொல்லப்படுகின்றது. அந்த இச்சை துக்கநிவிருத்தியிலும் சுகப்பிராப்தியிலும் சகல புருஷர்களுக்கு முண்டாகின்றது. அதுவே மோக்ஷத்தின் சொரூபமாம்.

ஆதலால் பரமப் பிரயோஜனம் மோக்ஷமாம்; ஞானமன்று. ஏனெனின் சுகப்பிராப்தி துக்கநிவிருத்திகளுக்குச் சாதனமாகவே ஞான மிருக்கிறது; சுகப்பிராப்தி அல்லது துக்கநிவிருத்திரூபமாக ஞானமில்லை. ஆதலால் அவாந்தரப் பிரயோஜனம் ஞானமாம். (33.)

2. எந்த வஸ்துவின் வாயிலாகப் பரமப்பிரயோஜனம் அடையப்படுகிறதோ, அது அவாந்தரப்பிரயோஜன மெனப்படும். கிரந்தத்தின் ஞான வாயிலாக முக்திரூபப் பரமப்பிரயோஜன மடையப்படுகின்ற தாகலின், ஞானம் அவாந்தரப் பிரயோஜனமாம். (34.)

## 27. கிரந்தத்தின் பிரயோஜனத்தில் சங்கையும் சமாதானமும் 27 - 32.

"அநர்த்தநிவிருத்தியும் பரமாநந்தப் பிராப்தியும் கிரந்தத்தின் பரமப் பிரயோஜனமா"மென்று சொல்லப்பட்டது. அது பொருந்தாது. ஏனெனின் † சகல வேதங்களும் ஜீவனைப் பரமாநந்தசொரூபமாக வர்ணிக்கின்றன. நீங்களும் அதனை யங்கீகாரஞ் செய்கிறீர்கள். அடையாதவஸ்துவின் அடைவு கூடும். எப்போதும் பிராப்தமாயி(அடையப்பட்டி)ருக்கிற வஸ்துவின் அடைவு முற்றும் பொருந்தாது. ஆதலால் "எப்போதும் பரமாநந்த சொரூபமாயுள்ள ஆத்மாவிற்குப் பரமாநந்தப் பிராப்தி கூறுதல் எவ்விதத்தாலும் பொருந்தா"தென்று ஒருவன் சங்கைசெய்கிறான். (35.)

---

* புருஷர்களது முகத்திற்கெதிரில் பிரியவசனங்களைக் கூறி, புறத்தே அவர்களை அப்பிரியப்படுத்துகிறவர்கள் எவர்களோ, அவர்கள் சடரெனப்படுவர்.

† "விஜ்ஞாநோ நந்தோ ப்ரஹ்ம-பிரஞ்ஞானமாகிய ஜீவனெவனோ அவன் ஆநந்த வடிவப் பிரஹ்மமாவன்." என்றல் முதலிய நான்குவேதங்களின் வாக்கியங்களும் ஜீவனைச் சுபாவமாக சித்தித்த (இயல்பாற் பெறப்பட்ட) ஆநந்த வடிவெனக் கூறுகின்றன.

28. அச்சங்கையைக் கேட்டுக் கிரந்தத்தின் பிரயோஜனத்திற் சிரத்தையை விடலாகாது. ஆத்ம வித்தையை யுபதேசிக்கும் குருவின் கிருபையினால் சந்தேகவடிவ குதர்க்கங்களைத் திருஷ்டாந்தத்தினால் நிவிருத்தி செய்துவிட வேண்டும். (36.)

29. அந்தத் * திருஷ்டாந்தம் சொல்லப்படுகின்றது:—ஒருபுருஷன்கையில் கங்கணம் இருக்க, அவனுக்கு "என்கைக் கங்கணம் காணாமற்போயிற்று" என்று பிரமமுண்டாய் விடுமாயின், அப்போது அவனுக்கு மற்றொருவன் வார்த்தையினால் "என் கங்கணம் கையிலிருக்கின்றது" என்று கங்கணத்தின் ஞான முண்டாய்விடுகின்றது. அப்போது அவன் "என்கங்கணம் கிடைத்துவிட்டது" என்று சொல்லுகிறான். இவ்வாற்றால் அடையப்பட்டிருந்த கங்கணத்தின் அடைவும் சொல்லப்படுகின்றது. (37.)

அங்ஙனமே பரமாநந்த சொரூபமான ஆத்மாவினிடத்தில் அவித்தையின் பலத்தினால் "ஆத்மா பரமாநந்தசொரூப மன்று; பிரஹ்மமே பரமாநந்த சொரூபம்; அந்தப் பிரஹ்மத்துக்கும் எனக்கும் வியோகம் உண்டாய்விட்டது; உபாசனையினால் அந்தப் பிரஹ்மத்தை யடைவேன்." என்று அநேக மூடஜனங்களுக்குப் பிராந்தி யுண்டாயிருக்கிறது. வெகு பண்டிதர்களும் இவ்வாறு சொல்லுகிறார்களெனின், அவர்களும் மூடர்களேயாவர். ஏனெனின், ஜீவப்பிரஹ்ம வியோகத்தை யங்கீகரிப்பவர் மூர்க்கரெனப்படுகின்றனர். அப்புருடர்களுக்கு உத்தம சம்ஸ்காரத்தினால் பிரஹ்ம ஞானியாகிய ஆசாரியரிடத்தினின்றும் ஒருகால் வேதாந்த சிரவணம் கிடைத்துவிடுமாயின், அப்போது கேட்ட அர்த்தத்தை நிச்சயித்துப் "பரமாநந்தம் நமக்குக் கிரந்தத்தினாலும் ஆசாரியருடைய கிருபையினாலும் கிடைத்தது." என்று சொல்லுகிறார்கள். அங்ஙனம் அவர்கள் கூறுவதற்கு அபிப்பிராயம் இதுவாம்:—ஆத்மாவோ முன்பும் பரமாநந்த சொரூபமாகவே யிருந்தது. ஆனால் "எனது ஆத்மா பரமாநந்த சொரூபமா யிருக்கிற"தென்று விளங்காதிருந்தது. ஆதலால், பரமாநந்தம் பிராப்தமில்லாதது போலிருந்தது. ஆசாரியர் மூலமாகக் கிரந்தத்தைக் கேட்டலால் பரமாநந்தம் புத்தியில் விளங்குகிறது. அதனால் பரமாநந்தத்தை அடைந்ததாகச் சொல்லுகிறார்கள்.

இவ்வாற்றால் பிராப்தத்தின் பிராப்தியும் (அடைந்ததின் அடைவும்) பொருந்துதலால் பரமாநந்தப் பிராப்தி வடிவ கிரந்தத்தின் பிரயோஜனம் சம்பவிக்கின்றது. (38.)

30. பிராப்தத்தின் பிராப்தி கிரந்தத்தின் பிரயோஜனமாவதுபோல, நித்திய நிவிருத்தத்தின் நிவிருத்தியும் பிரயோஜனமாதல் சம்பவிக்கின்றது.

---

* வாதிப்பிரதிவாதிகள் இருவருக்கும் சம்மதமானபொருள்யாதோ, அது திருஷ்டாந்தமாம். அதுவே உதாரணமாம். திருஷ்டாந்தத்தினால் சித்தித்தபொருளைத் தார்ஷ்டாந்தமென்பர். அதனையே சித்தாந்த மென்றும் கூறுவர்.

திருஷ்டாந்தம்:—ரஜ்ஜுவினிடத்திற் சர்ப்பம் நித்திய நிவிருத்தமாம். அதுரஜ்ஜுவின் ஞானத்தால் நிவிருத்தியாகிறது. அங்ஙனமே ஆத்மாவினிடத்திற் சமுசாரம் நித்திய நிவிருத்தமாம். அதன் நிவிருத்தி ஆத்மாவின் ஞானத்தினால் உண்டாகிறது. ஆகையால் * நித்திய நிவிருத்தத்தின் நிவிருத்தியும் † நித்தியப்பிராப்தத்தின் பிராப்தியும்கிரந்தத்தின் பரமப்பிரயோஜனமாம்.(39.)

## 31. ஒருபதார்த்த (மோக்ஷ) த்தில் பாவம் அபாவமென்று இரண்டு பொருந்தாமை.

"காரணசகித ஜகத்தின் நிவிருத்தியும் பரமாநந்தப்பிராப்தியும் கிரந்தத்தின் பிரயோஜனமாம்" என்று முன்சொல்லப்பட்டது. அது பொருந்தாது. ஏனெனின் நிவிருத்தியென்பது துவம்ஸத்திற்காம். துவம்ஸம் நாசம் என்பன பரியாயச்சொற்கள். "அந்த நாசம் அபாவரூபமாம். ஆதலால் மோக்ஷத்தில் பாவரூபத்தன்மையும், அபாவரூபத்தன்மையுமாகிய இரண்டும் தோற்றுகின்றன.

1. அநர்த்தத்தின் நிவிருத்தியைக் கூறுதலால் அபாவவடிவத்தன்மை தோற்றுகின்றது.

2. பரமாநந்தத்தின் பிராப்தியைச் சொல்லுதலால் பாவவடிவத்தன்மை தோற்றுகின்றது.

அவ்விரண்டும் ஒருபதார்த்தத்தில் பொருந்தா. ஏனெனின் பாவரூபத்தன்மையும் அபாவரூபத்தன்மையுமாகிய இரண்டும் தம்மில் விரோதிகளாம். விரோதி தர்மங்கள் எவையோ அவை ஒருகாலத்தில் ஒருவஸ்துவிலிரா. ஆதலால் கிரந்தத்தின் பிரயோஜனம் சம்பவியாது." என்று ஒருவன் சங்கை செய்கின்றான். (40.)

---

* வர்த்தமான காலத்தில் வியாவகாரிக அல்லது பிராதிபாஸிகப் பிரபஞ்சத்தின் பாவமிருக்கவும், பாரமார்த்திக சத்தையினால் பிரபஞ்சத்திற்கு மூன்று காலத்திலும் நிஷேதமுக சுருதியினாலும் வித்துவான்களது அநுபவத்தினாலும் சித்தித்த அத்தியந்தாபாவ மிருக்கின்றது: அதுவே அதன் நித்தியநிவிருத்தியாம். இதனையே விஷயவடிவ நிவிருத்தி யென்றும் கூறுவர். முற்கூறிய நித்தியநிவிருத்தியினையுடைய பிரபஞ்சம் எதுவோ, அது நித்தியநிவிருத்தம் அதாவது துச்சம் (வெறுமை-பாழ்) எனப்படுகின்றது. அந்த நித்தியநிவிருத்தப் பிரபஞ்சத்தின் நிவிருத்தி, அதாவது இருக்கின்ற பரமார்த்த சத்தையினால் சுருதி யுக்தி தத்துவஞானம் என்பவற்றால் முக்காலத்தின்மையை நிச்சயித்தலாகிய விஷயிவடிவ நிவிருத்தி யாதோ, அது நித்தியநிவிருத்தத்தின் நிவிருத்தியாம்.

† தன் வீட்டில் புதைக்கப்பட்டிருக்கும் நிதி அறியாமையினால் அடையப்படாதது போலிருக்கின்றது. அதனை அஞ்சனமுதலிய சாதனங்களால் நிச்சயித்தலாகிய ஞானம் எதுவோ அது நித்தியப் பிராப்தத்தின் பிராப்தியாம். அங்ஙனமே பரமாநந்த வடிவப் பிரஹ்மம் யாதோ, அது எல்லாவற்றிற்கும் தானேதானா (சொரூபமா) யிருத்தலால் நித்தியப் பிராப்தமாம். ஆயினும் அது அஞ்ஞானத்தினால் அடையப்படாததுபோன் றிருக்கின்றது. அதனைத் தத்துவஞானத்தினால் "நானே பரமாநந்த வடிவப் பிரஹ்மம்" என்று நிச்சயித்தலாகிய ஞானம் எதுவோ அது நித்தியப் பிராப்தத்தின் பிராப்தியாம்.

## 32. அச்சங்கையின் உத்தரம்.

காரணசகித ஜகத்தின் நிவிருத்தி அதிஷ்டானப் பிரஹ்மரூபமாம்; அதனின் வேறன்று. அது சர்ப்ப நிவிருத்தி அதிஷ்டான ரஜ்ஜு வடிவமாதல் போலவாம். "சகல கற்பித வஸ்துக்களின் நிவிருத்தியும் அதிஷ்டான ரூபமாம்; அதனின் வேறாகா" தென்பது பாஷ்யகாரரது சித்தாந்தம். ஆதலால் இவ்விடத்தில் அநர்த்த நிவிருத்தி * பிரஹ்மரூபமாம். ஏனெனின் சகல அநர்த்தத்திற்கும் அதிஷ்டானம் பிரஹ்மமாம். அந்தப் பிரஹ்மம் பாவரூப (உண்மை வடிவ) மாம். ஆதலால், அநர்த்தத்தின் நிவிருத்தியே பாவரூபமாயிருத்தலின் கிரந்தத்தின பிரயோசனம் பொருந்துகின்றது என்னும் வார்த்தை சித்தித்தது. (41.)

வாழ்த்து.

இந்த முதலாவது தரங்கத்தை எந்த ஜிஞ்ஞாசுவானவன் நிரந்தரமாகப் படிக்கிறானோ, அவனைத் தீனதயாளுவான தாது குருவானவர் முக்தனாகச் செய்வாராக.

அநுபந்த சாமாநியநிரூபணம் என்னும் முதலாவது தரங்கம்

முற்றிற்று.

---

* கற்பித அநர்த்தத்தின் நிவிருத்தியில் இரண்டு பக்ஷங்களுண்டு:—

1. "அறியப்படுதற்றன்மைத் தர்மத்தினால் உபலக்ஷித (உபலக்ஷணத்தா லறியப்பட்ட) அதிஷ்டான வடிவம் கற்பிதத்தின் நிவிருத்தியாம்" என்பது முதற்பக்ஷம்.

2. "கற்பிதத்தின் நிவிருத்தி அதாவது அபாவம் எதுவோ அது அதிஷ்டானத்தினும் அதாவது அதிகரணத்தினும் வேறாகிய அநிர்வசனீயமாம்" என்பது இரண்டாவது பக்ஷம்.

அவற்றுள் முதற் பக்ஷம் பாஷ்யகாரரதாம்; இரண்டாவது பக்ஷம் நியாயவாசஸ்பதிகாரராகிய வாசஸ்பதிமிசிரரதாம்.

1. எங்ஙனம் முதற்பக்ஷத்தில் "புருஷன் ஸ்தாணு" என்னும் வாக்கியத்திற்குப் "புருஷனது அபாவ வடிவம் ஸ்தாணு" என்னும் பாதசாமாநாதிகரணியத்தினால் அர்த்தமாகின்றதோ, அங்ஙனமே "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம - நிச்சயமாக இவையெல்லாம் (ஜகத்து) பிரஹ்மம்" என்று விதிமுகத்தன்மையினால் சகல ஜகத்திற்கும் பிரஹ்ம வடிவத்தன்மையைப் பிரதிபாதிக்கும் சுருதி வாக்கியத்திற்கும் "இந்தத் தோற்றப்படுகின்ற சர்வசகத்தின் அபாவவடிவம பிரஹ்மம்" என்று "சர்வம்" "பிரஹ்மம்" என்னும் சமான விபக்தி (முதல் வேற்றுமையினை) யுடைய இரண்டு பதங்களுக்கும் பாதசாமாநாதிகரணிய வடிவ சம்பந்தத்தினால் அர்த்தமாகின்றது. ஆதலால் கற்பித அநர்த்தத்தின் நிவிருத்தி அதாவது பரமார்த்த சத்தையினால் அத்திபந்தாபாவம் யாதோ, அது பிரஹ்ம வடிவமாயிருத்தலின் மோக்ஷத்தில் பாவவடிவத்தன்மையும் அபாவவடிவத்தன்மையுமிருத்தலால் துவைதம் வரும் என்னும் சங்கையில்லை.

2. இரண்டாவது பக்ஷத்தில் "புருஷன் தாணு" என்னும் வாக்கியத்திற்குப் "புருஷனுடைய அவயவமுடையவது தாணு" என்னும் அர்த்தம் உண்டாகின்றது. "நிச்சயமாக இவையெல்லாம் பிரஹ்மம்" என்னும் சுருதி வாக்கியத்திற்கும் "தோற்றுகின்ற இச்சகல சகத்தின் அபாவமுடையது பிரஹ்மம்" என்பது பொருளாகின்றது.

முற்கூறிய அபாவ வடிவ நிவிருத்தியும் அநிர்வசநீய மென்னும் மித்தையாம். எந்த வஸ்து அநிர்வசநீயமாமோ, அது வாஸ்தவ அதிஷ்டானத்தினும் பின்னமாகாது; அதிஷ்டான வடிவமாம். ஆதலால் மோக்ஷத்தில் துவைதம் வரும் என்னும் சங்கையில்லை.

கூறிய இவ்விரண்டு மோக்ஷங்களில் முதற் பக்ஷத்தில் இலாகவமுண்டு. இரண்டாவது பக்ஷத்தில் கௌரவமுண்டு. ஆதலால் முதற்பக்ஷம் சிரேஷ்டமாம். இருவகையாலும் மோக்ஷத்தில் துவைதம் வரும் என்னும் சங்கையில்லை.

ஓம்.

ஸ்ரீகணேசாயநம꞉.

# ஸ்ரீ விசாரசாகரம்.

## இரண்டாவது தரங்கம்.

## * அநுபந்தவிசேஷநிரூபணம்.

இதன் முதல் தரங்கத்தில் அநுபந்தம் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. அது இப்போது இரண்டாவது தரங்கத்தில் விஸ்தாரமாய்ப் பிரதிபாதிக்கப்படுகிறது.

### 33. காரணத்தோடு ஜகத்து நீங்குதலாகிய மோக்ஷத்தினது முதல் அம்சத்தின் இச்சை பொருந்தாமை. 33 - 36.

நாலு சாதனங்களோடு கூடினவன் அதிகாரி என்று சொல்லப்பட்டது. அந்நான்கு சாதனங்களில் முமுக்ஷுத்துவமொன்று. முமுக்ஷுத்துவமென்பது மோக்ஷ இச்சை. காரணசகித (மூலாவித்தையோடுகூடிய) ஜகத்தின் நிவிருத்தியும் பிரஹ்மப்பிராப்தியும் மோக்ஷமெனப்படுகின்றது. இதில் காரண சகித ஜகத்தின் நிவிருத்தியாகிய மோக்ஷ அம்சத்தினை ஒருவரும் விரும்புகிறதில்லை யென்னும் வார்த்தையை, (42.)

### 34. பூர்வபக்ஷி பிரதிபாதனம் செய்கிருன்.

### அதிகாரிகண்டநம். (1) 34-38.

மூலாவித்தையோடு ஜகத்தின் † நாசத்தை யொருவரும் இச்சிக்கிறதில்லை. ஆனுல் விவேகியானவன் மூன்றுவித துக்கங்களையும் நாசஞ்செய்ய

---

*ஒருவன் வீடுகட்ட ஆரம்பிக்கும்பொழுது வேறொருவன் தடுக்கிருன். அப்போது அவன் நியாயஸ்தலத்தில் தன் பாத்தியதையை ஸ்தாபித்துக்கொண்டு தடையில்லாதவனுய் மறுபடியும் வீடு கட்டுகிருன். அதுபோல கிரந்த கர்த்தா இதன் முதல் தரங்கத்தில் அநுபந்த சதுஷ்டய'த்தைச் சாதாரணமாய் நிரூபித்தார். அது இந்நூலாசிரியர் வீட்டினைச் செய்யத் தொடங்கியது போலும். அதனை இரண்டாவது தரங்கத்தின் பிற்பாதியால் பூர்வபக்ஷி தடுத்துவிட்டான். அப்போது சித்தாந்தியாகிய நூலாசிரியர் சுருதியாகிய இராஜாவை அநுசரித்த யுக்தியாகிய மந்திரியினிடத்து முறையிட்டுக்கொண்டு அவர் பலத்தால் மறுபடியும் தடையில்லாதவராய் நான்கு அநுபந்தங்களின் நிரூபணத்தோடு இந்நூலைச் செய்ய ஆரம்பித்திருக்கின்ருர்.

இவ்வாற்ருல் இவ்விரண்டாவது தரங்கத்தில் நான்கு அநுபந்தங்களையும் விசேஷமாக நிரூபித்திருக்கின்ருர்.

† பிச்சைக்காரன் பயத்திஞல் சமையல்பண்ணுமலிருக்க ஒருவனும் இச்சியாதது போலும், சீலைப் பேனுக்கஞ்சி துணியை எறிந்துவிட ஒருவனும் இச்சியாததுபோலும், பசு பக்ஷிகளின் பயத்திஞல் நிலத்தைவிட்டுவிட ஒருவனும் இச்சியாததுபோலும்,

இச்சிக்கிறான். இதன் அபிப்பிராயம் இதுவாம்:—துக்கம் மூன்றுவகையினதாம்:— 1 ஒன்று அத்தியாத்மதுக்கம். 2 மற்றையது அதிபூததுக்கம். 3 மூன்றாவது அதிதைவதுக்கம்.

1. ரோகம், தாகம், பசி முதலியவற்றாலுண்டாகும் துக்கம் * அத்தியாத்மதுக்கமெனப்படும். (43.)

2. திருடர், புலி, சர்ப்ப முதலியவற்றாலுண்டாகும் துக்கம் † அதிபூத துக்கமெனப்படும். (44.)

3. யக்ஷராக்ஷஸப் பிரேதக்கிரகாதிகளாலும் சீதவாத ஆதபங் (குளிர் காற்று வெயில்)களாலும் உண்டாகும் துக்கம் ‡ அதிதைவதுக்கமெனப்படும்.

இத்தன்மைய மூன்றுவித துக்கங்களை நிவிருத்திக்க எல்லோரு மிச்சிக்கிறார்கள். துக்கத்திற்கு அன்னியமான எதனையும் நிவர்த்திக்க விவேகி இச்சிக்கிறதில்லை. ஆதலால் அஞ்ஞானசகித சகல ஜகத்தின் நிவிருத்தியில் இச்சை யொருவருக்கு முண்டாகிறதில்லை. (46.)

**35.** மேலும், "எல்லோரும் துக்க நிவிருத்தியை இச்சித்தாலும், அஞ்ஞானசகித சகல ஜகத்தின் நிவிருத்தியின்றித் துக்கநிவிருத்தி யுண்டாகாது. ஆதலால் துக்கநிவிருத்தியின் பொருட்டு அஞ்ஞான சகித சர்வஜகத்தின் நிவிருத்தியையும் அபேக்ஷிக்கிறார்கள்" என்று சித்தாந்தி கூறுகின்றார். (47.)

**36.** அது பொருந்தாது. ஏனெனின் ஆயுள்வேதத்திற் சொல்லிய ஔஷதங்களால் ரோகஜந்நிய துக்கங்கள் நிவிருத்தியாகின்றன. போஜனத்தினால் பசியாலுண்டாகும் துக்கம் நிவிருத்தியாகின்றது. இவ்விதமாக அததற் கேற்பட்ட பரிகாரத்தால் அந்தந்தத் துக்கம் நிவிருத்தியாகின்றது. ஆதலால் அஞ்ஞான சகித ஜகத்தின் நிவிருத்தியின்றியும் துக்கநிவிருத்தியுண்டாம். துக்க நிவிருத்தியின் பொருட்டு அஞ்ஞானசகித ஜகத்தின் நிவிருத்தியை விரும்புதல் $ பொருந்தாது. "காரணசகித ஜகத்தின் நிவிருத்தியும் பிரஹ்மத்தின்

---

விவேகியானவன் மூவித துக்கங்களின் பயத்தினால் காரணத்தோடு ஜகத்து நசித்துப் போக வேண்டுமென்று இச்சியான்; மூவித துக்கத்தின் நாசத்தை யிச்சிக்கிறான். இது சாங்கியமதாநுசாரிகளது சங்கை.

* ஆத்மாவை யாசிரயித்திருக்கும் ஸ்தூல,சூக்ஷ்ம சரீரம் அத்யாத்ம மெனப்படும். அதனா லுண்டாகும் துக்கம் அத்யாத்மதுக்க மெனப்படும். அதனையே அத்தியாத்ம தாப மென்றும் கூறுவர்.

† தனது சரீராதி சங்காதங்களுக்கு வேறாய் சக்ஷுா இந்திரியத்திற்கு விஷயமாவது யாதோ அது அதிபூதமாம். அதினின்று முண்டாகும் துக்கம் அதிபூத துக்க மெனப்படும்.

‡ சரீராதி தனது சங்காதத்திற்கு வேறாய் சக்ஷுா இந்திரியத்திற்கு விஷயமாகா திருப்பது அதிதைய்வமாம். அதன் பிரேரணையினா லுண்டாகும் துக்கம் அதிதைவ துக்கமாம்.

$ முன் அநுடவிக்கப்பட்ட வஸ்துவின் இச்சையுண்டாம். பிரஹ்மவடிவ அதிஷ்டானத்தின் ஞானத்தினால் காரண சகித ஜகத்தினது நிவிருத்தியின் அநுபவம் முன் எப்போதும் செய்யப்படவில்லை. ஆதலால் காரணசகித ஜகத்தின் இச்சை ஒருவருக்கும்

பிராப்தியும் மோக்ஷ மெனப்படுகின்றது." இதில் காரணசகித ஜகத்தின் நிவிருத்தி வடிவ மோக்ஷத்தின் முதலாவது அம்சத்தில் இச்சை யொருவருக்கு முண்டாகாது. (48.)

## 37. பிரஹ்மப் பிராப்தி வடிவ மோக்ஷத்தினது இரண்டாவது அம்சத்தின் இச்சையும் ஒருவருக்கும் பொருந்தாதென்னும் வார்த்தையைப் பூர்வபக்ஷி கூறுகின்றான்.

எந்தவஸ்து முன் அநுபவிக்க (அறிய) ப்பட்டிருக்கிறதோ, அதனை யடைய இச்சையுண்டாகும். அறியப்படாத பதார்த்தத்தை யடையவேண்டுமென்று இச்சையுண்டாகாது. அன்னியதேசங்களில் அனேகபதார்த்தங்கள் அறியப்படாமலிருக்கின்றன. அவைகளை யடைய இச்சை யொருவருக்கு முண்டாகாததுபோல் அதிகாரிக்குப் பிரஹ்மசொரூபத்தின் ஞான மில்லை. எவனுக்குப் பிரஹ்மத்தின் ஞானமிருக்கிறதோ அவன் அதிகாரியல்லன்; முக்தனுவன். அவனுக்குப் பிரஹ்மப் பிராப்தியில் இச்சையுண்டாகாது. ஆதலால் வேதாந்த சிரவணத்துக்கு முன் அறியப்படாத பிரஹ்மத்தை யடைதலில் இச்சையுண்டாகாது. இவ்வாற்றால் அஞ்ஞானசகித ஜகத்தின் நிவிருத்தியும் பிரஹ்மப்பிராப்தியுமான மோக்ஷத்தில் இச்சை யொருவருக்குமுண்டாகமாட்டாது. ஆதலால் முமுக்ஷு ஒருவனும் இல்லை. (49.)

## 38. முமுக்ஷுத்துவம் பொருந்தாமையால் வைராக்கிய முதலியனவும் பொருந்தாதெனல்.

வேறு விதத்தால் அதிகாரியின் அபாவத்தைப்

### பூர்வபக்ஷி பிரதிபாதிக்கின்றார்.

எல்லோரும் விஷயசுகத்தை இச்சிக்கிறார்கள். சகல விஷயங்களையும் விட்டுத் தவஞ்செய்கிறவர்களும் பரலோகத்தினுத்தமபோகங்களை இச்சித்து அநேக கிலேச (துன்ப) ங்களைப் பொருத்துக்கொள்ளுகிறார்கள். ஆதலால் இகலோக அல்லது பரலோக விஷயசுகத்தை எல்லோரும் இச்சிக்கிறார்கள். அந்த விஷயசுகம் மோக்ஷத்திலில்லை. ஆதலால் மோக்ஷசாதனத்தை ஒருவரும் இச்சிக்கிறதில்லை. இவ்விதத்தால் மோக்ஷத்தின் இச்சையாகிய முமுக்ஷுத்துவம் சித்திக்கிறதில்லை. அன்றியும் எல்லோருக்கும் விஷயசுகத்தில் இச்சை யிருத்தலால் வைராக்கிய சம தம உபரதிகளும் ஒருவரிடத்திலும் சித்திக்கிறதில்லை. ஆதலால் சாதனசதுஷ்டய சகித அதிகாரியில்லாமையால் கிரந்தாரம்பம் நிஷ்பிரயோசனமாம். (50)

---

கூடாது என்பது பூர்வபக்ஷியினது சங்கையின் விளக்கமாம். இதற்குச் சமாதானம் மேல் 63-வது பிரசங்கத்தின் டிப்டணி (விளக்கவுரை)யில் சொல்லப்படும்.

## விஷயகண்டநம். (2) 39 44.

### பூர்வபக்ஷம்.

### 39. ஜீவப்பிரஹ்ம ஐக்கியம் பொருந்தாதெனல்.

முன் (25) "ஜீவப்பிரஹ்ம ஐக்கியம் இக்கிரந்தத்தின் விஷயம்" என்று கூறியது பொருந்தாது. ஏனெனின்,

1. பிரஹ்மமோ,

(1) [1] * அவித்தை [2] † அஸ்மிதை [3] ‡ ராகம் [4] || துவேஷம் [5] § அபிநிவேசம் என்னும் ஐந்து கிலேசங்களுமின்றியதாம்.

(2) வியாபகமாம்;

(3) ஏகமாம்; $ ஸஜாதீய பேதரகிதமாம். ஏனெனின் பிரஹ்மத்திற்கு ஸஜாதீயமான வேறு பிரஹ்மமில்லை.

---

* விசாரித்துப்பார்க்க எது இல்லாமற்போகிறதோ, அது அவித்தை யெனப்படும். அவ்வவித்தை 1. மூலாவித்தை 2. தூலாவித்தை யென இருவகைத்து.

1. சுத்தசைதன்னியத்தை மூடிக்கொண்டிருப்பது மூலாவித்தை.

2. கடமுதலிய உபாதியுடைய சைதன்னியத்தை மறைப்பது எதுவோ அது தூலாவித்தையாம். மூலாவித்தையும் (1) காரிய (2) காரணபேதத்தால் இருவகைத்து.

(1) ஆவரண விக்ஷேப சத்திகளுடன் கூடி அநாதிபாவரூபமாயிருப்பது காரண வடிவ அவித்தையாம்.

(2) ஒன்றில் மற்றொன்றின் புத்தி வடிவத்தோற்றம் எதுவோ, அது காரியவடிவ அவித்தையாம்.

அவற்றில் காரியவடிவ அவித்தையும்,

[1] அநாத்மாவாகிய தேகாதிகளிடத்தில் ஆத்மபுத்தி,

[2] அநித்தியமான ஆகாயாதிகளில் நித்தியபுத்தி,

[3] துக்கரூப தனுதிகளில் சுகபுத்தி,

[4] அசுசியான சரீரம் ஸ்திரீ புத்திராகளை முதலியவற்றில் சுசிபுத்தி என்று இவ்வாறு நான்கு வகைப்படும்.

இங்குப் பஞ்சக்கிலேசப் பிரசங்கத்தில் முற்கூறிய நால்வகைக் காரியாவித்தையே கொள்ளப்படும்.

† புத்தி ஆத்மாக்களின் ஒருமை யுணர்ச்சி அஸ்மிதை. இதனையே சாமாநிய அகங்கார மென்றும் கூறுவர்.

‡ அநுகூல பதார்த்தத்தின் ஞானத்தால் உண்டாகும் புத்திவிருத்தி ராகம்.

|| பிரதிகூல பதார்த்தத்தின் ஞானத்தாலுண்டாகும் புத்தி விருத்தி துவேஷம்.

§ மரணபயத்தால் சரீரத்தை ரக்ஷித்தலிலுண்டாகும் ஆக்கிரகம் அபிநிவேசம்.

$ பிரஹ்மம் ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேதரகிதமாயிருக்கிறது.

1. தனக்குச் சமானஜாதியோடுள்ள பேதம் ஸஜாதீயம்; ஒரு பிராமணனுக்கு மற்றொரு பிராமணனோடுள்ள பேதம் போலும்.

2. தனக்கு அன்னியஜாதியோடுள்ள பேதம் விஜாதீயம்; பிராமணனுக்குச் சூத்திரனோடுள்ள பேதம் போலும்.

2. ஜீவனோ,

(1) சர்வக்கிலேசமுடையதும்,

(2) பரிச்சின்னமும்,

(3) நாநாவுமாம். ஏனெனின் எத்தனை சரீரங்களுளவோ அத்தனை ஜீவர்களுள. எல்லாச்சரீரங்களிலும் * ஒரே ஜீவன்இருப்பதாய்ச் சொல்லும் பக்ஷத்தில் ஒரு சரீரத்தி லுண்டாகும் சுகதுக்கங்கள் எல்லாச் சரீரத்திலும் உண்டாகவேண்டும்.

---

3. தனக்குத் தன் அவயவங்களோடுள்ள பேதம் ஸ்வகதபேதம். அது பிராஹ்மணனுக்குத் தனது கை கால் முதலிய அவயவங்களோடுள்ள பேதம் போலும்.

1. எல்லாம் ஒரே பிரஹ்ம ஸ்வரூபமாயிருத்தலால் ஸஜாதீயமான வேறு பிரஹ்மமில்லாமையால் பிரஹ்மம் ஸஜாதீய பேதரகிதமானது.

2. பிரஹ்மசேதனத்துக்கு வேறாகத்தோன்றும் ஜடப்பிரபஞ்சம் விஜாதீயம். பிரபஞ்சம் சத்தியமானால் பிரஹ்மம் விஜாதீய பேத சகிதமாயிருக்கும். ஆனால் பிரபஞ்சம் சத்தியமன்று; ரஜ்ஜுவிற் கற்பிக்கப்பட்ட சர்ப்பம்போல் மித்தையாயிருக்கிறது. எது மித்தையோ அது அதிஷ்டானத்தினும் வேறுபடுகிறதில்லை. ஆதலால் பிரஹ்மம் விஜாதீய பேதரகிதமாயிருக்கிறது.

3. பிரஹ்மம் நிரவயவமா யிருக்கின்றது. சச்சிதானந்தங்கள் பிரஹ்மத்தின் தர்மங்களாம்; அவயவங்க ளன்று. புஷ்பத்தின் ஸ்பரிச ரூப ரஸ கந்தங்களாகிய குணங்கள் போல் சச்சிதானந்த தர்மங்கள் பிரஹ்மத்தின் ஸ்வரூபமேயாம்; அதனின் வேறன்று. ஆதலால் பிரஹ்மம் ஸ்வகதபேத ரகிதமாயிருக்கின்றது.

* **ஜீவப்பிரஹ்ம ஐக்கியவிஷயமாய் ஆக்ஷேப சமாதானங்கள்:—**

1. **ஆக்ஷேபம்:**—எல்லாச் சரீரங்களிலும் ஒரே ஆத்மா இருந்தால் பிரஹ்மத்திற்கும் ஆத்மாவிற்கும் ஏகத்துவஞ் சொல்லக்கூடும். ஆத்மா அநேகமா யிருப்பதால் ஏகத்துவஞ் சொல்லலாகாது.

1. **சமாதானம்**:—1. ஆத்மா அநேகமென்பதற்கு யாதொரு பிரமாணமு மில்லை.

2. இந்திரியமாகிய பிரத்தியக்ஷப் பிரமாணங்களால் அஞ்ஞானிக்குப் பேதம் தோற்றுகின்றது. அது சரீரத்தை விஷயஞ்செய்வதாம்; ஆத்மாவை விஷயஞ்செய்வதன்று. ஏனெனின், ஆத்மா சுருதியைத் தவிர வேறு பிரமாணங்களால் அறியத்தக்கதன்று. ஆதலால் சரீரங்களிலுள்ள ஆத்மா வெவ்வேறன்று. அநேககடங்களிலுள்ள ஆகாசம் ஒன்றாயிருப்பதுபோல அநேகசரீரங்களிலுள்ள ஆத்மாவு மொன்றே. இதற்கும் பிரஹ்மத்திற்கும் ஏகத்துவஞ் சொல்லக்கூடும்.

2. **ஆக்ஷேபம்**:—ஆத்மா அநேகமென்பதில் ஒருபிரமாணமு மில்லை யென்பது பொருந்தாது. ஏனெனின் ஆத்மா நாநாவென்னும் அர்த்தத்தில் பிரத்தியக்ஷாதி சகல பிரமாணங்களும் இவ்வாறு சித்திக்கின்றன:—

1. எங்கெங்கு அகம்பிரத்தியயத்தின் (யானெனுமுணர்ச்சியின்) பேதமிருக்கின்றதோ, அங்கங்கு ஆத்மாவின் பேதமுண்டு.

(1) தேகங்கள்தோறும் "யான் பிராஹ்மணன், யான் க்ஷத்திரியன்" என்பதாக அகம்பிரத்தியயத்தின் பேதம் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகின்றது.

**40.** "சுகமுதலியன அந்தக்கரணதர்மங்கள். அவ்வந்தக்கரணம் அநேகமாம. ஆதலால் ஒருவனுக்குச்சுகதுக்கங்கள் உண்டானால் எல்லோருக்கும் அவை உண்டாகிறதில்லை. சாக்ஷி சுகதுக்கரகிதமாயும ஏகமாயும் சர்வக்கிலேசரகிதமாயும் இருக்கிறது. அதற்குப் பிரஹ்மத்தோடு ஏகத்துவஞ் சொல்லக் கூடும." என்று வேதாந்தி கூறுகின்றனர்.

---

(2) சகலதேகங்களிலும் ஆத்மாவின் ஏகதத்துவமுளதாயின், "நீ, யான், இது" என்றல் முதலிய வியவகாரத்திற்குக் கேடுண்டாகும். அதனால் ஆத்மாவின் பேதத்தில் பிரத்தியக்ஷப்பிரமாணமிருக்கின்றது.

2. ஆத்மாவின் பேதமில்லையாயின் "நீ, யான், இது" என்றல் முதலிய வியவகாரம் சித்தியாது. ஆதலால் வியவகாரசித்தி பேதமின்றிச் சம்பவியாமையால் ஆத்மாவின் பேதத்தில் அர்த்தாபத்திப் பிரமாணமும் சித்தமாகின்றது.

3. (1) ஆத்மா சரீரங்கள் தோறும் வேறு வேறாம்; சரீரவடிவ வியக்திகள் பின்னமாயிருத்தலின்; ஆ முதலிய பசுக் (விலங்கு) களைப்போல.

(2) ஆத்மா சரீரங்கள் தோறும் பின்னபின்னமாம்; சரீரங்கள் தோறும் அகம்பிரத்தியயத்திற்குப் பேதமிருத்தலால்; கடமுதலியவற்றைப்போல.

இவைமுதலிய அநுமானப்பிரமாணங்களும் ஆத்மாவின் பேதத்தில் சித்தித்திருக்கின்றன.

4 (1) "அதிதி, தேவர், கந்தர்வர், மனிதர், பிதிரர், அசுரா" என்று தேவர் முதலியோரது பேதத்தைப் பிரதிபாதிக்கும் சுருதியும்,

(2) 'தேவர், தானவர், கந்தர்வர், இயக்கர், இராக்கதர், கின்னரர்" என்றல்முதலிய புராணவசனமும் ஆத்மாவின் பேதத்தில் பிரமாணமாம்.

5. ஆத்மாவிற்கு ஏகத்துவம் அங்கீகரிக்கின், வேதாந்த சித்தாந்தத்தில் சுகதுக்காதிகளின் வியவஸ்தை சித்தியாது. ஏனெனின்,

(1) ஒருவன் துக்கி அல்லது சுகியானால் எல்லோரும் துக்கிகள் அல்லது சுகிகளாதல்வேண்டும்.

(2) ஆத்மாவின் ஏகத்துவமுளதாயின் சகலரும் சர்வஞ்ஞராவர். ஆகவே விதிநிஷேதவடிவ சாஸ்திரங்கள் வியர்த்தமாகும்; சர்வஞ்ஞர்களைக் குறித்து விதி நிஷேதமின்மையால்.

(3) ஒருவன் பெத்தனானால் எல்லோருக்கும் பந்த முண்டாகும். அல்லது ஒருவன் முத்தனானால் எல்லோரும் முத்தராதல்வரும்.

ஆதலால் ஆத்மா அநேகமெனல் பிரமாணசித்தமாம்.

**2. சமாதானம்:**—ஆத்மா அநேகமென்பதில் சொல்லப்பட்டபிரமாணங்கள் பொருந்தா. ஏனெனின்,

1. வியாப்தியின் வியபிசாரத்தி(பிறழ்ச்சியி)னால் பிரத்தியக்ஷப் பிரமாணம் பெறப்படாமையின்,

(1) "எங்கு எங்கு அகம் பிரத்தியயத்தின் பேதமுளதோ, அங்கு அங்கு ஆத்மாவின் பேதமுளது" என்னும்நியமவடிவவியாப்தியாதோ அது வியபிசாரத்தை யடைகின்றது. ஏனெனின், யான் சிசு, யான் குமரன், யான் எவ்வனன், யான் விருத்தன் என்று சிசுத்துவமுதலிய அவஸ்தைகளின் பேதத்தால் அகம் பிரத்தியயத்திற்குப் பேதமிருக்கின்றது.

## 41. சாக்ஷி நாநாவாதல் 41–44.

அவ்வார்த்தை பொருந்தாது. ஏனெனின் கர்த்தா போக்தாவாயுள்ள ஜீவனுக்கு வேறாகச் சாக்ஷி இருக்கிறதென்பது மலடிமகனிருக்கிறானென்பதை ஒக்கும். சாக்ஷியை அங்கீகாரஞ்செய்யினும் அதை ஒன்றெனல்பொருந்தாது; அநேகமென்றே கொள்ளவேண்டும். ஏனெனின் வேதாந்த சித்தாந்தம் இதுவாம்:—"அந்தக்கரணமும் சுகதுக்கமுதலிய அந்தக்கரணதர்மங்களும் இந்திரியங்களுக்கும் அந்தக்கரணத்துக்கும் விஷயமாகா; ஆனால் சாக்ஷிக்கு விஷயமாம். ஏனெனின் இந்திரியங்கள் பஞ்சீகிருத பூதங்களை விஷயஞ் செய்கின்றன. இதன்கண் இத்துணைப்பேதம் இருக்கிறது:— ·

---

என்றாலும் சிசு முதலிய அவஸ்தையினையுடைய அகம் பிரத்தியயத்தின் அர்த்தமாகிய ஆத்மாவின் பேதத்தைக்காணாமையினாலும், ஆத்மாவின் பேதமுளதாகப் பாலியாவஸ்தை முதல் விருத்தாவஸ்தை பரியந்தம் செய்யப்பட்டகாரியங்களின் ஸ்மரணை சம்பவியாமையினாலும் ஆத்மாவின்பேதத்திற் பிரத்தியக்ஷப்பிரமாணம் பெறப்படாததாம்.

(2) எங்ஙனம் ஒரே தேகத்தில் அவயவங்களின் பேதத்தை ஆசிரயித்துத் தலை, கை, கால்முதலிய வியவகாரங்கள் உண்டாகின்றனவோ, அங்ஙனமே சகல சரீரங்களிலும் ஆத்மாவின் ஒருமையுண்டாகியும் சரீரத்தின் பேதத்தை ஆசிரயித்து "நீ, நான், இது" என்றல் முதலிய வியவகாரங்கள் சித்தமாகின்றன.

2 அந்தவியவகாரம் ஆத்மாவின் பேதத்தை அபேக்ஷிக்கிறதில்லை. இவ்வாறு வியவகாரம் சித்திக்கவே ஆத்மாவின் பேதமின்றி வியவகாரம் சம்பவியாமையின்மையால் ஆத்மாவின் பேதத்தில் அர்த்தாபத்திப்பிரமாணமும் அசித்தமாம் (பெறப்படாததாம்).

3. சரீரமாகிய வியக்தியின் பேதத்தாலும் நானென்னும் பிரத்தியயத்தின் பேதத்தினாலும் ஆத்மாவிற்கும் பேதமுண்டு என்னும் அநுமானப்பிரமாணமும் அசித்தமாம். ஏனெனின், ஸ்தூலசூக்ஷ்மகாரணவடிவ மூன்றுதேகங்களுக்கும் ஜாக்கிரதேக சொப்பன தேகத்திற்கும் பேதமிருக்கினும் யானென்னும் உணர்ச்சியின் அர்த்த வடிவ ஆத்மாவிற்குப் பேதமின்மையால்.

4. (1) முன்சொல்லப்பட்ட சுருதி யாதோ அது ஆத்மாவின் உபாதிவடிவ தேவர் முதலியோர் தேகத்தின் பேதத்தைக்கூறுகின்றது; ஆத்மாவின் பேதத்தைக்கூறுவதில்லை. ஏனெனின் சகலதேகத்திலும் சைதன்னியம் ஏகரூபமாயிருத்தலின் ஆத்மாவின் பேதத்தின் அசம்பவமிருக்கின்றது. அதனால் முற்கூறிய சுருதி சரீரபேதத்தைப் பிரதிபாதித்தலிற் கருத்துடையதாம்; ஆத்மாவின் பேதத்தைப் பிரதிபாதித்தற் கருத்துடைய தன்றெனல் பெறப்பட்டது.

(2) அவ்வாறே புராணவசனத்தையும் அறிந்துகொள்க.

5. (1) ஆத்மாவிற் கபேதமுளதாயின் சுகதுக்க முதலியவற்றிற்கு வியவஸ்தை சித்தியாது என்று நீ கூறியதும் பொருந்தாது. ஏனெனின் அச்சுக துக்கங்களின் வியவஸ்தை பிராரப்தகர்மத்தின் அதீனமாயிருந்தாலும், ஒரேதேகத்தில் கர்மபேதத்தால் சுகதுக்கமுதலியவற்றின் விசித்திரத்தன்மையைக் காணுதலாலும், சுகதுக்கங்கள் புண்ணியபாவங்களின் காரியமாயிருத்தலின் அவற்றின் பேதத்தாலும், சிதாபாசனோடு கூடிய அந்தக்கரணவடிவ போக்தாவின் பேதத்தாலும் சுகதுக்க முதலியவற்றின் வியவஸ்தை சம்பவிக்கின்றது.

1. * நேத்திரேந்திரியம் உருவமுடைய வஸ்துவின் உருவம், உருவத்திற் காசிரயமான வஸ்துவென்னும் இரண்டையும் விஷயமாக்குகிறது. அது நீலபீதாதிவர்ணங்களுடன் கூடிய கடத்தின் உருவத்தையும் உருவத்திற்காசிரயமான கடத்தையும் நேத்திரேந்திரியம் விஷயஞ் செய்வதுபோலும்.

2. † துவக்கிந்திரியமும் ஸ்பரிசமும் அதன் ஆசிரயமுமாகிய இரண்டையும் விஷயஞ்செய்கிறது.

---

(2) ஆத்மாவிற்கு ஏகத்துவமுளதாயின் சர்வ ஜனங்களும் சர்வஞ்ஞராவர். அதனால் விதிநிஷேதவடிவ சாஸ்திரங்கள் வியர்த்தமாகுமென்றதும் அசங்கதமாம். ஏனெனின்,

ஆத்மாவே எப்போதும் எங்கும் அறிகின்றது. அங்ஙனமாயினும் அவ்வத்தேகத்தில் அவ்வப்புத்தியினைக்கொண்டு தான் அறிகின்றது. எதனால் தேக பேதத்தால் புத்தியின் பேதம் நியமிதமாயிருக்கின்றதோ, அதனால் தேகங்கள்தோறும் ஞானத்தின் பேதம் உண்டாகின்றது.

அல்லது:—எதனால் வஸ்து அறியப்படுகின்றதோ அந்தன்மைய புத்திவிருத்தி வடிவ ஞானம் எதுவோ அது பரிச்சின்னமாம். ஆதலால் சக்ஷுவினைப்போல தனது சம்பந்தியாகிய வஸ்துமாத்திரத்தைப் பிரகாசிக்கும் புத்திவிருத்திக்குச் சகலபதார்த்தங்களோடும் சம்பந்தம் பொருந்தாது. அதற்கு எல்லாப்பதார்த்தங்களோடும் சம்பந்தமுளதாயின் எல்லோரும் சர்வஞ்ஞராவர். எதனால் புத்திவிருத்திக்கு எல்லாப்பதார்த்தங்களோடும் சம்பந்தமில்லையோ, அதனால் எல்லோருக்கும் சர்வஞ்ஞத்துவம் சித்தியாது.

அல்லது:—எங்ஙனம் சத்தத்தின் உற்பத்திக்கு ஏதுவாகிய வியாபக ஆகாசத்திற்கும் எங்கும் பேரி மத்தளமுதலியவற்றோடு சையோகமுளதாகியும் தண்ட முதலியவற்றால் பேரிமுதலியவற்றை யடிக்கும் இடத்தில் மாத்திரமே சப்தத்தின் உற்பத்தியுண்டாகிறதோ, எங்கும் உண்டாகிறதில்லையோ, அங்ஙனமே ஒரு பரிபூரண ஆத்மாவிற்கும் எங்குப் புத்தி விருத்திக்குப் பதார்த்தத்தோடு சம்பந்தமுண்டாகின்றதோ, அங்குமாத்திரமே ஞானம் உதயமாகின்றது; வேறிடத்தில் இல்லை. இதனால் புத்திவிருத்திகள் அநேகமாயும் அவ்வியாபகமாயுமிருத்தலால் சகல ஜனங்களுக்கும் சர்வஞ்ஞத்துவம் சம்பவியாதென்பது பெறப்பட்டது.

ஆதலால் அற்பஞ்ஞர்களின்பொருட்டுப் பிரவிருத்தி நிவிருத்திக்கு ஏதுவாயிருத்தலின், விதி நிஷேதவடிவ சாஸ்திரங்கள் பிரயோஜனமுடையனவேயாகின்றன.

(3) ஜீவர்களுக்குச் சர்வஞ்ஞத்தன்மையின்மையால் வேதாந்த சிரவண ஜந்யஞானத்தினால் பிரத்தியகபின்ன பரப்பிரஹ்மத்தைத் தனதுசொரூபமாக அறிபவனுக்கே முக்தியுண்டாகின்றது; பிறனுக்குண்டாகிறதில்லை. இதனால் பந்த மோக்ஷங்களின் வியவஸ்தையும் பொருந்துகின்றது. இவ்வாற்றால் ஆத்மாவின் ஐக்கியத்தில் முற்கூறிய தோஷங்களுக்கிடமில்லை.

ஆதலால் பிரஹ்மாத்ம ஐக்கியவடிவ இந்நூலின் விஷயம் எதுவோ, அது அநேக யுக்திப்பிரமாணங்களால் பெறப்பட்டுளது.

* இங்கு "உருவ" மென்னும் சொல்லால் உருவத்தன்மை ஜாதியும் உருவத்தன்மையின் வியாப்பிய (உள்ளடங்கிய) சுக்கிலத்தன்மை நீலத்தன்மைமுதலிய ஏழு ஜாதிகளும் கொள்ளத்தக்கனவாம்.

† இங்கு "ஸ்பரிசம்" என்னும் சொல்லால் ஸ்பரிசத்தின் ஆசிரயமான ஸ்பரிசத்தன்மை ஜாதியும்,ஸ்பரிசத்தன்மையின் வியாப்பியமான கடினத்தன்மை மிருதுத்தன்மை முதலிய நான்கு ஜாதிகளும் கொள்ளப்படும்.

3-4-5. * இரசனை ஆக்கிராணம் சிரவணம் என்னும் மூன்று இந்திரியங்களும் ரஸகந்தசப்தங்களைமாத்திரம் விஷயஞ்செய்கின்றன; தம் ஆசிரயங்களை விஷயஞ்செய்வதில்லை. ஆதலால் இம்மூன்று இந்திரியங்களாலும் அந்தக்கரணஞான முண்டாகிறதில்லை.

அங்ஙனமே நேத்திரத்தினாலும் துவக்கினாலும் அந்தக்கரணத்தின் ஞான முண்டாகிறதில்லை. ஏனெனின் பஞ்சீகிருதபூதம் அல்லது பஞ்சீகிருத பூதத்தின் காரியமான உருவமுடையது அல்லது பரிசமுடையது எதுவோ அது நேத்திரத்திற்கும் துவக்கிற்கும் விஷயமாம். அந்தக்கரணம் அபஞ்சீகிருதபூதங்களின் காரியமாயிருத்தலால் (254) நேத்திரத்திற்கும் துவக்கிற்கும் விஷயமாகிறதில்லை. இதேகாரணத்தினால் அபஞ்சீகிருதபூதகாரியமான நேத்திரேந்திரியமும் நேத்திரத்திற்கு விஷயமாகிறதில்லை; பாஹ்யவஸ்துக்கள் இந்திரியங்களுக்கு விஷயமாகின்றன. அந்தக்கரணம் இந்திரியங்களையபேக்ஷித்து ஆந்தரமாக இருக்கிறது. அதனாலும் அந்தக்கரணம் இந்திரியத்திற்கு விஷயமாகிறதில்லை.

**42.** அந்தக்கரணம் தன்விருத்திக்கும் விஷயமாகிறதில்லை. ஏனெனின் அந்தக்கரணம் விருத்திக்கு ஆசிரயமாயிருக்கிறது. ஆதலால் அந்தக்கரணம் தன் † விருத்திக்கு விஷயமாகமாட்டாது. அக்கினியானது தாஹத்திற்கு ஆசிரயமாக இருக்கிறதேதவிர அதற்கு விஷயமாகிறதில்லை. ஆனால் அக்கினிக்கு வேறான காஷ்டாதி வஸ்துக்களை இந்தத்தாஹம் விஷயமாக்குகிறது. அவ்வாறு அந்தக்கரணத்திற்கு அன்னியமான வஸ்துக்கள் அந்தக்கரண ஜந்நியவிருத்திக்கு விஷயமாகின்றன ; அந்தக்கரணம் விஷயமாகிறதில்லை.

**43.** அங்ஙனமே அந்தக்கரண தர்மங்களும் அந்தக்கரண விருத்திக்கு விஷயமாகிறதில்லை. ஏனெனின் அந்தக்கரண விருத்தி அந்தக்கரணத்தை விஷய

* இரசம் கந்தம் சப்தகுணம் என்னும் மூன்றினாலும் கிரமமாக இரசத்துவம் கந்தத்துவம் சப்தத்துவம் என்னும் மூன்று ஜாதிகளும், இரசத்துவவியாப்பிய மதுரத்துவ முதலிய ஆறுஜாதிகளும், கந்தத்துவ வியாப்பிய நற்கந்தத்தன்மை துர்க்கந்தத்தன்மை வடிவ இரண்டு ஜாதிகளும், சப்தத்தன்மைவடிவ வியாபக (அதிகவிடத்திலிருக்கும்) ஜாதியின் வியாப்பியமான (குறைந்தவிடத்திருக்கும்) தார தம்மியவடிவ (அதிகத்தன்மையும் மந்தத்தன்மையுமான) இரண்டு ஜாதிகளும் கொள்ளப்படும். அதனை இயன்றவாறு கண்டு கொள்க.

† வீட்டின் நடு இருட்டிற்கு ஆசிரய (இருப்பிட) மும் விஷயமுமாம். சேதனம் அஞ்ஞானத்திற்கு ஆசிரயமும் விஷயமுமாம் (243). அதுபோல அந்தக்கரணம் விருத்திக்கு ஆசிரயமாயினும் விஷயமாகுமா? அங்ஙனமாயினும் இதில் இது இரகசியமாம்:— வீட்டின் நடு இருள் முதலியவற்றைப்போல எங்கு ஆசிரயமும் ஆசிரிதமும் பேதப்படுகின்றனவோ, அங்கு ஒரேவஸ்து ஆசிரயமும் விஷயமுமாம். எங்கு நெருப்பினையும் அதன் தாஹக சக்தியினையும் போல ஆசிரயமும் ஆசிரிதமும் பேதப்படவில்லையோ, அங்கு ஆசிரயமும் விஷயமும் ஒன்றும். அந்தக்கரணமும் விருத்தியும் பேதப்படாமையால் அந்தக்கரணம் விருத்திக்கு உபாதானவடிவ ஆசிரயமாமன்றி விஷயமாவதில்லை.

மாக்குமாயின் அதன் தர்மங்களான சுகாதிகளையும் விஷயமாக்கும். அந்தக்கரணத்தை விஷயமாக்கும் விருத்தியோ அந்தக்கரணத்திற்கு எதிர்முகமாகிறதில்லை. ஆதலால் அந்தக்கரண தர்மங்களும் அந்தக்கரண விருத்திக்கு விஷயமாகிறதில்லை.

அன்றியும் இது நியமமாம்:—விருத்தியின் ஆசிரயத்திற்குக் கொஞ்சம் தூரத்திலிருக்கும் வஸ்து விருத்திக்கு விஷயமாம்; விருத்திக்கு ஆசிரயமாய் அத்தியந்த சமீபத்திலிருக்கும் வஸ்து விருத்திக்கு விஷயமாகிறதில்லை. நேத்திரவிருத்திக்கு ஆசிரயமான நேத்திரத்திற்கு அத்தியந்த சமீபத்திலிருக்கும் அஞ்சனம் நேத்திரவிருத்திக்கு விஷயமாகாததுபோல அந்தக்கரண விருத்திக்கு ஆசிரயமான அந்தக்கரணம் எதுவோ அதன் அத்தியந்தசமீபத்திலுள்ள சுகமுதலிய தர்மங்கள் அந்தக்கரண விருத்திக்கு விஷயமாகிறதில்லை. இவ்விதத்தால் அந்தக்கரணமும் அதன் தர்மங்களும் இந்திரியங்களுக்கும் அந்தக்கரணத்திற்கும் * விஷயமாகிறதில்லை; ஆனால் சாக்ஷிக்கு விஷயமாகின்றன.

**44.** அந்தச்சாக்ஷி ஒன்றெனக் கொள்ளின், ஒரு அந்தக்கரணத்தின் சுக துக்கங்கள் சாக்ஷியால் விளங்குவதுபோல எல்லோரது சுகதுக்கங்களும் விளங்கவேண்டும். அங்ஙனம் விளங்காமையால் சாக்ஷி யநேகமெனல்வேண்டும். அநேக சாக்ஷிகளை யங்கீகரித்தலால் தோஷமில்லை. ஏனெனின் எந்தச் சாக்ஷிக்கு எந்த அந்தக்கரணம் உபாதியாயிருக்கிறதோ, அந்தச்சாக்ஷியால் அதன் உபாதியின் தர்மங்கள் விளங்குகின்றன. அதனால் எல்லோரது சுக துக்கங்களும் விளங்குகிறதில்லை.

இவ்விதமாகச் சாக்ஷியநேகமாக இருக்கிறது. அவற்றிற்கு ஏகமான பிரஹ்மத்தோடு ஏகத்துவம் பொருந்தாது.

---

* நேத்திரேந்திரியம் தன்னின் தூரத்துள்ள ஏனைய எல்லாவுருவமுடைய வஸ்துக்களையும் பிரகாசிக் (காண்) கின்றது. ஆனால் தனது அந்தத்துவம் (குருட்டுத்தன்மை), மந்தத்துவம், படுத்துவம் (தெளிவு) என்னும் தர்மங்களோடு தன்னைப்பிரகாசிக்கிறதில்லை. நேத்திரதேசத்துள்ள அந்தக்கரணம் முற்கூறிய தர்மங்களோடு நேத்திரத்தைப் பிரகாசிக்கின்றது.

அங்ஙனமே அந்தக்கரணமும் தனக்கு வேறான சகல ஜடவஸ்துக்களையும் பிரகாசிக்கின்றது. ஆனால் சுக முதலிய தர்மத்தோடு தன்னைத்தான் பிரகாசிக்கிறதில்லை. ஆனால் ஆபாஸனோடுகூடிய அந்தக்கரணத்தில் ஆரூடசாக்ஷி தர்மத்தோடு அந்தக்கரணத்தைப் பிரகாசிக்கின்றது. ஆதலால் ஆபாஸனோடுகூடிய அந்தக்கரணம் ஆபேக்ஷிக சுவயம்பிரகாசமாம்; நிரபேக்ஷ சுவயம்பிரகாசமன்று.

சாக்ஷி தனது பிரகாச(விளக்க)த்தில் மற்றொன்றன் பிரகாசத்தை அபேக்ஷிக்கிறதில்லை; எல்லாவற்றையும் பிரகாசிப்பதாயிருக்கின்றது. ஆதலால் நிரபேக்ஷ சுவயம் பிரகாசமாம்.

இந்த மூலகிரந்தத்திற் கூறிய சங்கையின் சமாதானம் இவ்வபிப்பிராயமாகவே மேல் விஷயமண்டநத்தின் பிரசங்கத்தில் சொல்லப்படும். ஆதலால் கிரந்தத்தின் விஷயத்தில் பிரமித்தல் தகுதியன்று.

## பிரயோஜன கண்ட நம் (3) 45 - 59.

### பூர்வபக்ஷம்.

### 45. மித்தையாகிய பந்தத்திற்குச் சாமக்கிரி யின்மையால் அதன் நிவிருத்தி கூடாமை.

அகங்கார முதலிய அநாத்ம வஸ்துக்கள் பந்த மெனப்படுகின்றன. அப் பந்தம் அத்தியாஸரூபமாயின் ஞானத்தால் நிவிருத்தியாகும். அத்தியாஸரூப மாகாதாயின் ஞானத்தினால் நிவிருத்தியாகாது. ஏனெனின் ஞானத்தின் சுபாவம் இதுவாம்:—எந்த வஸ்து அறியப்படுகிறதோ அதனிடத்துள்ள அத்தியாச த்தையும் அஞ்ஞானத்தையும் அவ்வஸ்துவின் ஞானம் நிவர்த்தியாக்குகிறது. அது ரஜ்ஜுவின் ஞானம் ரஜ்ஜுவினுள்ள சர்ப்பாத்தியாசத்தையும் ரஜ்ஜு வின் அஞ்ஞானத்தையும் நிவிருத்திசெய்வதுபோலாம்.

பிராந்திஞானத்திற்கு விஷயமாகும் மித்தியாவஸ்துவும் பிராந்திஞான மும் * அத்தியாச மெனப்படும்.

எதினிடத்தில் எந்தவஸ்து மித்தையாகவில்லையோ சத்தியமாகவிருக் கிறதோ அதற்கு ஞானத்தினால் நிவிருத்தியில்லை.

அங்ஙனமே ஆத்மாவினிடத்தில் அகங்காராதிபந்தங்கள் அத்தியாசமா (மித்தையா) குமாயின் ஞானத்தால் அவை நிவர்த்தியாகும். ஆத்மாவினிட த்தில் மித்தையான பந்தத்தின் சாமக்கிரியில்லை; பந்தம் பிரதீதியாகிறது. ஆதலால் பந்தம் சத்தியமாம். அந்தச் சத்தியபந்தத்தின் நிவிருத்தியை ஞான த்தால் விரும்புவது பயனில்லாததாம்.

---

* தனது அபாவத்தின் அதிகரணத்திலுள்ள அவபாஸம் (விஷயமும் ஞானமும்) எதுவோ, அது அத்தியாச மெனப்படுகின்றது. எங்ஙனம்: கற்பித சர்ப்பத்தின் வியாவ காரிகமும் பாரமார்த்திகமுமாகிய அபாவத்தின் அதிகரண (ஆசிரய) இரஜ்ஜுவினிட த்தில் பிராதிபாஸிக சர்ப்பத்தின் அவபாஸம் (சர்ப்பமும் அதன் ஞானமும்) இருக்கின் றது. அது அத்தியாஸமாம்.

அல்லது அதிஷ்டானத்தினும் விஷமசத்தையுடைய அவபாஸம் எதுவோ அது அத்தியாஸ மெனப்படுகின்றது. எங்ஙனம்: வியாவகாரிகசத்தையுடைய இரஜ்ஜு வடிவ அதிஷ்டானத்தினும் விஷம அதாவது பிராதிபாஸிகவடிவ விபரீதசத்தையுடைய அவபாஸம் (சர்ப்பமும் அதன் ஞானமும்) எதுவோ அது அத்தியாசமாம்.

அவ்வத்தியாசம் க. அர்த்தாத்தியாசம் உ. ஞானத்தியாசம் என்னும் பேதத்தால் இருவகையினதாம்.

1. பிராந்தி ஞானத்தின் விஷயமான சர்ப்பாதி மித்தியாவஸ்து யாதோ, அது அர்த்தாத்தியாசமாம்.

2. பிராந்தி ஞானமாகிய மித்தியாவஸ்துவின் மித்தியாஞானம் எதுவோ அது ஞானத்தியாசமாம்.

அவற்றுள் ஞானத்தியாசம் பரோக்ஷம் அபரோக்ஷமென்னும் பேதத்தால் இரு வகைத்தாம்.

அர்த்தாத்தியாசம் 1. கேவல சம்பந்தாத்தியாசம், 2. சம்பந்தசகித சம்பந்தியின் அத் தியாசம், 3. கேவல தர்மாத்தியாசம், 4. தர்மசகித தர்மியின் அத்தியாசம், 5. அந்நியோந் நியாத்தியாசம், 6. அந்நியதராத்தியாசம் என்னும் பேதத்தால் அறுவகைத்தாம்.

## 46. அத்தியாச * சாமக்கிரி நிரூபணம்.

(1) சத்தியவஸ்துவின் ஞானத்தாலுண்டாம் சம்ஸ்காரம், (2) பிரமேயத்தின் தோஷம், (3) பிரமாதர்வின் தோஷம், (4) பிரமாணத்தின் தோஷம், (5) அதிஷ்டானத்தின் விசேஷவடிவ அஞ்ஞானம் சாமானியவடிவ ஞானமென்னும இவை அத்தியாச ஸாமக்கிரிகள். இவையின்றி அத்தியாசம் உண்டாகாது.

1. கிளிஞ்சிலில் வெள்ளியின் அத்தியாசமும் ரஜ்ஜுவில் சர்ப்பத்தின் அத்தியாசமும் உண்டாகின்றன. அது எவன் உண்மையான வெள்ளியையும் சர்ப்பத்தையும் பார்த்திருக்கின்றானோ அவனுக்குண்டாகிறது. எவன் உண்மையான வெள்ளியையும் சர்ப்பத்தையும் பார்த்ததில்லையோ அவனுக் குண்டாகிறதில்லை; ஆதலால் சத்தியவஸ்துவின் ஞானஜந்நியஸம்ஸ்காரம் அத்தியாஸத்திற்கு ஹேதுவாம்.

2. கிளிஞ்சிலில் சர்ப்பத்தின் அத்தியாசமும் ரஜ்ஜுவில் வெள்ளியின் அத்தியாசமு முண்டாகிறதில்லையாகலின் † பிரமேயத்தில் சாதிருசியதோஷம் அத்தியாசத்துக்கு ஹேதுவாம்.

---

அல்லது சம்ஸர்க்காத்தியாசம் சொரூபாத்தியாசமென்னும் வேறுபாட்டால் அர்த்தாத்தியாசம் இருவகைத்தாம்.

இங்கு இது நிச்சயமாம் :—கேவல சம்பந்தாத்தியாசமே சம்சர்க்காத்தியாசமாம். சம்பந்தசகித சம்பந்தியின் அத்தியாசமே சம்ஸர்க்கசகித சொரூபாத்தியாசமாம். அதுவே அந்நியோந்நியாத்தியாசமாம். எங்கும் சம்ஸர்க்கமும் சொரூபமுமாகிய இரண்டற்கும் மிசிரத்தன்மை (கலப்பு) உண்டாகின்றது. இரண்டனுள் ஒன்றன் அத்தியாசம் எதுவோ அது அந்நியதராத்தியர்சமெனப்படும். அது மித்தியா வஸ்துவின் சொரூபாத்தியாசவடிவமாகவும் சத்தியவஸ்துவின் சம்பந்தாத்தியாசவடிவமாகவும் சொல்லப்படுகின்றது.

இந்த அந்நியதராத்தியாசத்தினை அல்லது கேவல சம்பந்தாத்தியாசத்தினை வேற்றுமையாகக்கூறுதல் யாதோ அது ஆத்மா அநாத்மாக்களின் அத்தியாசத்தினது பேதத்தை அறிதற்பொருட்டாம். ஆனல் சகல அர்த்தாத்தியாசமும் அந்நியோந்நியாத்தியாச வடிவமேயாம்; அதனின் வேறன்று. அவ்வந்நியோந்நியாத்தியாசம் சிலவிடத்துக் கேவலம் தர்மத்தினதாம்; சிலவிடத்துத் தர்மசகித தர்மியினதாம். ஆதலால் முற்கூறிய பேதத்தால் அந்நியோந்நியாத்தியாசம் இருவகைத்தேயாம். இவற்றின் சுருக்கமான உதாரணம் விசாரசந்திரோதயத்தின் ஆறுவது கலையிலும் விஸ்தாரமான உதாரணம் ஸ்ரீவிருத்திப்பிரபாகரத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன.

* சாமக்கிரி என்பது காரண சமுதாயம். அது சமையலுக்கு அடுப்பு விறகு ஜல முதலியன சாமக்கிரிகளாகுதல் போலும்.

† பிரமாஞானத்தின் விஷயம் எதுவோ அது பிரமேயமெனப்படும். கற்பித சர்ப்பம் ரஜத முதலியவற்றின் அதிஷ்டானமாகிய ரஜ்ஜு சுத்தி முதலியன பிரமாஞானத்தின் விஷயமா மாகலின் பிரமேயமாம். அதன்கண்ணுள்ள சர்ப்ப முதலியவற்றின் சமானத்தன்மை யாதோ அதனைச் சாதிருசியதோஷ மென்பர். இதனையே பிரமேய தோஷமென்றும் கூறுவர். இரஜ்ஜுவினிடத்துப் பூமியிற்பொருந்தியிருத்தற்றன்மை, நீட்சி, மூவலயவடிவத்தன்மை என்பவை சர்ப்பத்தின் சாதிருசியமாம். சுத்தியில் வெண்பளபளப்புத்தன்மைவடிவ இரஜதத்தின் சாதிருசியமிருக்கின்றது. இவ்வாறு வேறிடங்களிலும் அதிஷ்டானத்தில் அத்தியஸ்தத்தின் சாதிருசியத்தை அறிந்துகொள்க.

3. இவ்விதமாகப் பிரமாதாவில் லோபபயாதி தோஷங்களும்,

4. நேத்திர முதலிய பிரமாணங்களில் மஞ்சட்காமாலை முதலிய தோஷங்களும் அத்தியாசத்துக்கு ஹேதுவாம்.

5. கிளிஞ்சிலின் "இது" என்னும் (149) சாமானிய ஞானமுண்டாய், "இதுகிளிஞ்சில்" என்னும் விசேஷஞானமுண்டாகாவிடின், அப்போது அத்தியாச முண்டாகின்றது. "கிளிஞ்சில்" என்று விசேஷ வடிவமாக ஞானமுண்டாயினும் சாமானிய வடிவமாக ஞானமுண்டாகாவிடினும், அப்போது அத்தியாசமுண்டாகிறதில்லை. அதிஷ்டானத்தின் விசேஷ வடிவமாக அஞ்ஞானமும் சாமானிய வடிவமாக ஞானமும் அத்தியாசத்திற்கு ஹேதுவாம்.

இவ்வளவு அத்தியாச சாமக்கிரிகளிருக்கின்றன. இவற்றில் ஏதாவதொன்று குறைந்தாலும் அத்தியாச முண்டாகாது. கடத்திற்குக் குலாலன் சக்கரம், தண்டம், மண் என்பவை சாமக்கிரிகள். இவற்றில் ஏதேனும் ஒன்று குறைந்தாலும் கடமுண்டாகாததுபோல அத்தியாசமும், அதன் சாமக்கிரிகளில் ஏதாவதொன்று குறைந்தாலும் உண்டாகாது; எல்லாச்சாமக்கிரிகளாலும் உண்டாகின்றது.

## 47. பந்தத்தின் அத்தியாசத்தில் சத்தியவஸ்துவின் ஞானத்தினுலுண்டாகும் சம்ஸ்காரத்தின் அசித்தி.

அங்ஙனமே:—பந்த அத்தியாசத்தில் ஒருகாரணமுமில்லை. பந்தம் எங்கேனும் சத்தியமா யிருக்குமாயின், அதன் ஞானத்தாலுண்டாகும் ஸம்ஸ்காரத்தினுல் ஆத்மாவினிடத்தில் மித்தையான பந்தம் பிரதீதியாகும். ஆனுல் சித்தாந்தத்தில் ஆத்மாவிற்கு வேருன சத்தியவஸ்து யாதொன்று மில்லை. ஆதலால் சத்தியபந்தத்தின் ஞானஜந்ய ஸம்ஸ்கார மில்லாமையால் ஆத்மாவினிடத்தில் பந்தத்தின் அத்தியாஸம் பொருந்தாது.

## 48. பந்தத்தின் அத்தியாசத்தில் பிரமேய தோஷம் சித்தியாமை.

அங்ஙனமே ஆத்மாவிற்கும் பந்தத்திற்கும் சாதிருசியமுமில்லை. மாருன தமப்பிரகாசத்தை (இருளொளியை)ப்போல விபரீதசுபாவ மிருக்கின்றது.

1. ஆத்மா பிரத்தியக்காம்; பந்தம் பராக்காம். பிரத்தியக் கென்பது உள்ளிற்கும், பராக் கென்பது வெளிக்கும் பெயராம்.

2. ஆத்மா விஷயியும் பந்தம் விஷயமுமாம்; பிரகாசஞ் செய்வது யாதோ அது விஷயி யெனப்படும். எது பிரகாசிக்கப்படுகின்றதோ அது விஷய மெனப்படும்.

1. பிரத்தியக்கில் பராக்கின் அத்தியாசமும் பராக்கில் பிரத்தியக்கின் அத்தியாசமும் உண்டாகிறதில்லை. எங்ஙனம்: புத்திராதிகளின் அபேக்ஷை

யால் தேகம் பிரத்தியக்காம். அதனிடத்தில் புத்திராதிகளின் அத்தியாசமும் புத்திராதிகளிடத்தில் தேகத்தின் அத்தியாசமும் உண்டாகிறதில்லை.

2. விஷயத்தில் விஷயியின் அத்தியாசமும் விஷயியில் விஷயத்தின் அத்தியாசமும் உண்டாகிறதில்லை. எங்ஙனம்: விஷயமாகிய கடமுதலியவற்றில் விஷயியாகிய தீபத்தின் அத்தியாசமும் தீபத்தில் கட முதலியவற்றின் அத்தியாசமும் உண்டாகிறதில்லை.

அங்ஙனமே சாதிருசிய மின்மையால் பிரத்தியக்விஷயியாகிய ஆத்மாவினிடத்துப் பராக்விஷயவடிவ பந்தத்தின் அத்தியாசம் பொருந்தாது. பிரத்தியக்கிற்கும் பராக்கிற்கும் விரோத முண்டு. விஷயத்திற்கும் விஷயிக்கும் விரோதமுண்டு; சாதிருசியமில்லை. ஆதலால் பந்தத்தின் அத்தியாசம் ஆத்மாவினிடத்திற் பொருந்தாது.

## 49. 3-4. பந்தத்தின் அத்தியாசத்தில் பிரமாதா முதலிய தோஷங்கள் சித்தியாமை.

அங்ஙனமே பிரமாதாவின் தோஷமும் பிரமாணத்தின் தோஷமுமில்லை. ஏனெனின் "பிரமாதா முதலிய சர்வப்பிரபஞ்சமும் அத்தியாசரூபமாயிருக்கின்றது. அதுவே பந்தம்" என்பது வேதாந்த * சித்தாந்தம். இவற்றால் பந்த அத்தியாசத்துக்குமுன் பிரமாத்திரு பிரமாணங்களின் சொரூபம் பெறப்படுகிறதில்லை; அவைகளின் தோஷங்களும் பெறப்படுகிறதில்லை. ஆதலால் பந்தாத்தியாசம் பொருந்தாது.

## 50. 5. பந்தத்தின் அதிஷ்டானப் பிரஹ்மத்தின், விசேஷவடிவ அஞ்ஞானம் பொருந்தாமை.

அதிஷ்டானத்தின் விசேஷவடிவ அஞ்ஞானமும் பொருந்தாது. ஏனெனின் பந்தத்திற்கு அதிஷ்டானமான பிரஹ்மம் சுயம்பிரகாச ஞானவடிவமாம். அந்தச் சுயம்பிரகாச ஞானவடிவப் பிரஹ்மத்தில் சூரியனிடத்தில் இருள் போல அஞ்ஞானம் இருக்கமாட்டாது. பிரகாசமான சூரியனுக்கும் இருளுக்கும் விரோதமிருப்பதுபோலச் சேதனப்பிரகாசமான பிரஹ்மத்திற்கும் தமோரூபமான அஞ்ஞானத்திற்கும் பரஸ்பரம் விரோதமுண்டு.

அதிஷ்டானத்தின் அஞ்ஞானத்தை யங்கீகரித்தாலும் பந்தத்தின் அத்தியாசம் பொருந்தாது. ஏனெனின் அத்தியந்தம் அறியப்பட்டதிலும் அத்தியந்தம் அறியப்படாததிலும் அத்தியாசம் உண்டாகாது. ஆனால் விசேஷவடிவமாக அறியப்படாததாய்ச் சாமானியவடிவமாக அறியப்பட்டதின்கண்

---

* பிரஹ்ம சைதன்னியத்துக்கு வேறான அஞ்ஞானமும் அதன்காரியமான ஸ்தூல சூக்ஷ்மப் பிரபஞ்சமுமாகிய இவ்வெல்லாம் சேதனத்தில் அத்தியஸ்தமாம். அந்தக்கரணரூபப் பிரமாதாவும் இந்திரியரூபப் பிரமாணமும் இவற்றில் அடங்கியிருத்தலால் இவைகளும் அத்தியஸ்தமாம். ஆதலால் பிரபஞ்சத்தின் அத்தியாஸத்துக்குமுன் இவைகள் சித்திக்கிறதில்லை. இது உபநிஷதங்களின் நிர்ணயிக்கப்பட்ட அர்த்தவடிவ சித்தாந்தமாம்.

அத்தியாசமுண்டாகும். பிரஹ்மம் சாமானிய விசேஷ பாவங்களின்றி நிர்விசேஷமாய் இருக்கிறதென்பது சித்தாந்தம். ஆதலால் பிரஹ்மம் விசேஷரூபமாய் அறியப்படாததும் சாமானியரூபமா யறியப்பட்டது மாகாது.

அத்தியாசத்தை அவசியம் அங்கீகரிக்கவேண்டு மென்னும் ஆசையால் பிரஹ்மத்தில் சாமானிய விசேஷ பாவங்களை யங்கீகரிக்கின் சித்தாந்தத்தை விட நேரிடும்.

இவ்வாற்றால் நிர்விசேஷப் பிரகாசரூபப் பிரஹ்மத்தில் விசேஷவடிவ அஞ்ஞானமும் சாமானியவடிவ ஞானமு மில்லாமையால் அதனாத்தில் அத்தியாசம் உண்டாகாது. ஆதலால் பிரஹ்மத்தில் பந்தம் அத்தியாசரூபமென்று கூறுதல் பொருந்தாது; ஆனால் பந்தம் சத்தியமாம். அந்த ஸத்திய பந்தம் ஞானத்தால் நிவிருத்தியாகாது. ஆதலால் ஞானவாயிலாக மோக்ஷரூப கிரந்தத்தின் பிரயோஜனம் பொருந்தாது. ஞானத்தினால் மோக்ஷம் கிடைக்குமென்று சொன்ன சித்தாந்தம் நலமுடையதன்று. ஆனால் கர்மத்தினால் மோக்ஷமுண்டாம் என்னும் வார்த்தையை ஏகபவிகவாதத்தின்படி சொல்லுகின்றார் :—

## 51. கேவல கர்மத்தால் மோக்ஷத்தின் சித்தி (ஏகபவிகவாதம்). 51 - 58.

ஞானத்தினால் சத்தியபந்தத்தின் நிவிருத்தியை யங்கீகரித்தல் யுக்தியோடுகூடிய தன்று; அயுக்தமாம் (பொருத்தமின்றியதாம்). ஆதலால் எந்தப்புருஷன் முக்தனாக விரும்புகின்றானோ அவன் சந்ததம் (இடையின்றி) நித்தியகர்மத்தைச் செய்தல்வேண்டும். இதன் அபிப்பிராயம் இதுவாம் :—

**52.** கர்மம் 1. விகிதம் 2. நிஷித்தமென இருவகைத்தாம்.

1. புருஷனுடைய பிரவிருத்தி நிமித்தமாய் எதன்சொரூபத்தை வேதம் போதித்திருக்கிறதோ அது விகிதகர்மமெனப்படும். புருஷனது நிவிருத்தி எதனால் போதிக்கப்படுகிறதோ அது நிஷித்தகர்ம மெனப்படும்.

சுபாவசித்தமாய்ச் செய்யப்பட்ட கிரியை எதுவோ அது கர்மமன்று. ஏனெனின் வேதத்தால் பிரவிருத்தி நிவிருத்திகளின் பொருட்டு அறிவிக்கப்பட்டது எதுவோ அது கர்மமெனப்படும். * உதாசீனக் கிரியைகள் கர்மங்களன்று. ஆதலால் கர்மம் இருவகையினதாம்; மூன்று வகையினதன்று.

**53.** விகிதகர்மம் (1) பிராயச்சித்தம் (2) காமியம் (3) நைமித்திகம் (4) நித்தியம் என நான்குவகைப்படும்.*

---

* வேதத்தில் விதிக்கப்படாதனவும், நிஷேதிக்கப்படாதனவுமாகிய ராகத்துவேஷங்க ளின்றிய ஸ்வாபாவிகமான (இயல்பான) நடத்தல் சௌச முதலிய கிரியைகள் உதாசீனக்கிரியைகளாம்.

1. பாவநாசத்தின் பொருட்டு விதிக்கப்பட்ட கர்மம் பிராயச்சித்தமாம். எங்ஙனம் : * பிரமாதத்தினால் ஒரு சந்நியாசி திரவியத்தைக் கிரகித்துப் பாவத்தைச் சம்பாதிக்கிறான்; அந்தப் பாவம் திரவியத்தைத் தியாகம் செய்தலாலும் மூன்றுநாள் உபவாச மிருத்தலாலும் கெடும்.

2. பலத்தின்பொருட்டு விதிக்கப்பட்டகர்மம் காமியம். அவை மழையை இச்சிக்கிறவன் செய்யும் † காரீரியாகமும் சுவர்க்கத்தை இச்சிக்கிறவன் செய்யும் அக்கினிஹோத்திரம் சோமயாக முதலியனவுமாம்.

3. எந்தக்கர்மத்தைச் செய்யாததினால் பாவமுண்டாகுமோ, எதைச் செய்வதனால் புண்ணியபாவரூப பலன் உண்டாகிறதில்லையோ, எது எப்போதும் விதிக்கப்படாது, ஓர் நிமித்தத்தைக்கொண்டுவிதிக்கப்பட் டிருக்கிறதோ, அக்கர்மம் நைமித்திகம். கிரகணகாலத்தில் செய்யும் சிராத்தங்கள் நைமித்திக கர்மங்களாம். வயோவிருத்தன், சாதிவிருத்தன், ஆசிரமவிருத்தன், வித்தியாவிருத்தன், தர்மவிருத்தன், ஞானவிருத்தன் என்னும் இவர்கள் வருங்காலத்தில் எழுந்து நிற்றலாகிய கர்மமும் நைமித்திகமாம். வித்தியாசப்தத்தினால் சாஸ்திரஞானமும் ஞானசப்தத்தால் அபரோக்ஷஞானமும் கொள்ளத்தக்கன. மேற்சொன்ன விருத்தர்களில் கிரமமாகப் பின்சொல்லப்பட்டவர்முன் சொல்லப்பட்டவரினும் ‡ உத்தமர்.

---

* அவசியம் செய்யத்தக்க காரியத்தை மறந்துவிடுதல் பிரமாதமெனப்படும். அல்லது எது சாஸ்திரத்தினால் செய்யத்தக்கதா யிருக்கின்றதோ, எதனைச் செய்தற்கு இச்சையும் இருக்கின்றதோ, அந்தக் காரியத்தைச் செய்யாதிருத்தல் பிரமாதமெனப்படும். எங்ஙனம் : எதியாகிய சந்நியாசிக்குத் திரவியத்தைக் கிரகிக்கலாகாதென்று சாஸ்திரம் விதித்திருக்கின்றது; தனக்குக் கிரகிக்கலாகாதென்னும் இச்சையு மிருக்கின்றது. மீண்டும் அதைச் செய்யாதிருத்தல் (திரவியத்தைக் கொள்ளுதல்) பிரமாதமெனப்படும்.

† தன்தேசத்தில் மழை பெய்யவேண்டுமென்னும் விருப்பமுடைய அரசன் தன் பிரஜைகளினின்றும் திரவியத்தின் வியாபகவடிவத்தைச் செய்துகொண்டு எந்த யாகத்தைச் செய்கின்றானோ அது காரீரியாக மெனப்படும். அல்லது வம்ச (மூங்கில்) விருக்ஷத்தின் அங்குரம் (முளை) கரீரமாம். அவற்றின் ஹோமத்தால் உண்டாகும் யாகம் காரீரீயாகமெனப்படும்.

‡ இதன் பொருள் இதுவாம் :—

1. அவஸ்தாவிருத்தரினும் ஜாதி (வருண) விருத்தர் உத்தமர்.

2. கேவல வருணவிருத்தரினும் அவஸ்தாவிருத்தரும் வருணவிருத்தருமானவர் உத்தமர்.

3. அவஸ்தாவிருத்தர் வருணவிருத்தர் இருவரினும் ஆசிரமவிருத்தர் உத்தமர்.

4. கேவல ஆசிரமவிருத்தரினும் அவஸ்தாவிருத்த ஆசிரமவிருத்தர் உத்தமர்.

5. அவஸ்தாவிருத்தர் ஆசிரமவிருத்தர் வருணவிருத்தரென்னும் மூவரினும் வித்தியாவிருத்தர் உத்தமர்.

6. கேவல வித்தியாவிருத்தரினும் அவஸ்தாவிருத்த வித்தியாவிருத்தர் உத்தமர்.

4. எதனைச் செய்யாததினால் பாவமுண்டாகிறதோ, செய்வதனால் புண்ணியமில்லையோ, எது எப்போதும் விதிக்கப்பட்டிருக்கிறதோ அது நித்தியகர்மம். அவை ஸ்நாந சந்தியாவந்தனாதிகளாம்..

இவ்விதமாக நான்குவித விகிதகர்மங்களும் நிஷித்தகர்மமும் சேர்ந்து கர்மம் ஐந்துவகையாம்,

**54.** மோக்ஷத்தை யிச்சிக்கிறவன் காமிய நிஷித்தகர்மங்களைச் செய்யலாகாது. ஏனெனின் காமியகர்மத்தால் உத்தமலோகமும் நிஷித்தகர்மத்தால் நீசலோகமும் அடையப்படும். ஆதலால் இவற்றைத் தியாகஞ்செய்து, நித்தியகர்மங்களை எப்போதும், நைமித்திககர்மங்களை நிமித்தங்கள் நேரிடும் போதும் செய்யவேண்டும். ஏனெனின் நித்திய நைமித்திககர்மங்களைச் செய்யாவிட்டால் பாவங்கள் உண்டாம். அப்பாவங்களால் நீசயோனி அடையப்படும். ஆதலால் பாவத்தைத் தடுப்பதற்காக நித்திய நைமித்திக கர்மங்களைச் செய்யவேண்டும். நித்திய நைமித்திககர்மங்களுக்கு அவற்றைச் செய்யாததினாலுண்டாகும் பாவங்கள் செய்வதனாலுண்டாகாமலிருப்பதே பயன்; வேறுபயனில்லை. ஆதலால் முமுக்ஷுவானவன் நித்திய நைமித்திக கர்மங்களை அவசியம் செய்யவேண்டும்.

**55.** ஒருகால் எவனாவது பிரமாதத்தினால் நிஷித்தகர்மத்தைச் செய்தால் அந்தத் தோஷத்தை நிவிருத்திசெய்வதற்காகப் பிராயச்சித்தத்தைச்

---

7. அவஸ்தாவிருத்த வித்தியாவிருத்தரினும் வருணவிருத்த வித்தியாவிருத்தர் உத்தமர்.

8. வருணவிருத்த வித்தியாவிருத்தரினும் ஆசிரமவிருத்த வித்தியாவிருத்தர் உத்தமர்.

9. அவஸ்தாவிருத்த வருணவிருத்த ஆசிரமவிருத்த வித்தியாவிருத்தரினும் தர்மவிருத்தர் உத்தமர்.

10. அவஸ்தாவிருத்த தர்மவிருத்தரினும் வருணவிருத்ததருமவிருத்தர் உத்தமர்.

11. வருணவிருத்த தருமவிருத்தரினும் ஆசிரமவிருத்த தருமவிருத்தர் உத்தமர்.

12. ஆசிரமவிருத்த தருமவிருத்தரினும் வித்தியாவிருத்ததருமவிருத்தர் உத்தமர்.

13. அவஸ்தாவிருத்தர் முதல் தருமவிருத்தர் பரியந்தமான இவவெல்லோரினும் ஞானவிருத்தர் உத்தமர். அவர்களுள்ளும்,

14. கேவல ஞானவிருத்தரினும் அவஸ்தாவிருத்த ஞானவிருத்தர் உத்தமர்.

15. அவஸ்தாவிருத்த ஞானவிருத்தரினும் வருணவிருத்த ஞானவிருத்தர் உத்தமர்.

16. வருணவிருத்த ஞானவிருத்தரினும் ஆசிரமவிருத்த ஞானவிருத்தர் உத்தமர்.

17. ஆசிரமவிருத்த ஞானவிருத்தரினும் வித்தியாவிருத்த ஞானவிருத்தர் உத்தமர்.

18. வித்தியாவிருத்த ஞானவிருத்தரினும் தர்மவிருத்த ஞானவிருத்தர் உத்தமர்.

இங்குத் தர்மமென்னும் சொல்லால் சாஸ்திரத்திற் கூறிய அர்த்தத்தின் அநுஷ்டானமும், வித்தியாவிருத்தரென்னும் சொல்லால் அதிக சாஸ்திராப்பியாச முடையவரும், ஞானவிருத்தரென்னும் சொல்லால் அதிக ஆரூடரும் கொள்ளப்படுவர்,

செய்யவேண்டும். ஒருவன் இந்த ஜன்மத்தில் நிஷித்தகர்மத்தைச் செய்யாமலிருந்தாலும் ஜன்மாந்தரத்தில் செய்தபாவத்தைப் போக்குவதற்காகப் பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டும். ஆனால் இவ்வளவு பேதமுண்டு:—பிராயச்சித்தம் இருவகைத்தாம். (1) ஒன்று அசாதாரணம் (2) ஒன்று சாதாரணம்.

ஓர் பாவவிசேஷத்தை நிவர்த்திக்கச் சாஸ்திரத்தினால் விதிக்கப்பட்ட பிராயச்சித்தம் **அசாதாரண**மாம். அது முன் (53)ல் சொல்லப்பட்ட உபவாசாதிகளாம்.

2. சர்வபாவங்களையும் நிவர்த்திக்கச் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தம் **சாதாரண**மாம். அது கங்காஸ்நாநம், ஈசுவரநாமோச்சாரண முதலியனவாம்.

இவ்விதத்தால் இரண்டுவிதப் பிராயச்சித்தங்களுள.

1. பாவம் அறியப்பட்டதாயின் அதைப் போக்குவதற்காகச் சாஸ்திரத்திற் சொல்லிய **அசாதாரணப் பிராயச்சித்த**த்தைச் செய்யவேண்டும்.

2. ஜன்மாந்தரத்திற் செய்யப்பட்டதும் இப்போது அறியப்படாததுமான பாவத்தைப்போக்கச் சாதாரணப் பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டும். ஏனெனின்,

1. அசாதாரணப் பிராயச்சித்தத்தின் சுபாவமிதுவாம்:—எப்பாவத்தைப்போக்க எப்பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறதோ அப்பாவம் அப்பிராயச்சித்தத்தால் நீங்கும்; மற்றையது நீங்காது.

2. ஜன்மாந்தரத்தின் பாவமின்னதென்று தெரியாமையால் அதனை நிவர்த்திக்க, **சாதாரணப் பிராயச்சித்த**த்தைச் செய்யவேண்டும்.

**56.** சாதாரணப் பிராயசித்தத்தினால் சர்வபாவங்களும் நிவிருத்தியாகின்றன. **கங்காஸ்நாந** முதலியனவாகச் சொல்லப்படும் சாதாரணப்பிராயச்சித்தங்கள் கேவலப்பிராயச்சித்த வடிவமன்று; ஆனால் 1. காமியவடிவமும் 2. பிராயச்சித்த வடிவமுமாம். ஏனெனின்,

1. கங்காஸ்நாநத்தினாலும் ஈசுவரநாமோச்சாரணத்தினாலும் உத்தமலோகம் அடையப்படுவதாய்ச் சாஸ்திரம் கூறுதலால் அவை **காமியரூப**மாம்.

2. பாவத்தைப் போக்குவதாகலின் **பிராயச்சித்தரூப**மாம்.

அசுவமேதயாகம் பிரமஹத்தியாதி பாவங்களை நிவர்த்திக்கிறது; சுவர்க்கப்பிராப்திரூபபலத்தையும் கொடுக்கிறது. அங்ஙனமே கங்காஸ்நாநாதிகளுமாம்; கேவலப் பிராயச்சித்தமன்றாகலின் உத்தமலோகத்தைக் கொடுக்கின்றன. அதனை (உத்தமலோகப் பிராப்தியை) முமுக்ஷுவானவன் இச்சிக்கிறதில்லை. அங்ஙனமாயினும் உத்தமலோகத்தில் இச்சையுள்ளவனுக்குக் கங்காஸ்நாநாதிகள் பாவத்தைப் போக்கி அவ்வுத்தமலோகத்தைத் தருகின்றன.

இச்சையில்லாதவனுக்குப் பாவமாத்திரத்தையே போக்குகின்றன. ஆதலால் இச்சையோடு அநுஷ்டிக்கப்பட்ட காமியரூபப் பிராயச்சித்தமும், இச்சையின்றி யநுஷ்டிக்கப்பட கேவலப் பிராயச்சித்தரூபமாம்.

வேதாந்தமதத்தில் சகல கர்மங்களும் ஸகாமபுருஷனுக்கு ஸம்ஸாரத்துக்கு ஹேதுவும், நிஷ்காமபுருஷனுக்கு அந்தக்கரணசுத்தியால் மோக்ஷத்துக்கு ஹேதுவுமாவதுபோல, ஒரே கங்காஸ்நாநமும் அங்ஙனமே ஈசுவரநாம உச்சாரணமும் ஸகாமனுக்குக் காமியவடிவப் பிராயச்சித்தமாயும் நிஷ்காமனுக்குக் கேவலப் பிராயச்சித்தரூபமாயு மிருக்கின்றன. ஆதலால் முமுக்ஷு சாதாரணப் பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டும்.

இவ்விதத்தால் ஜன்மாந்தரத்தின் பாவங்களெல்லாம் ஞானமின்றியே நிவிருத்தியாகின்றன.

**57.** அங்ஙனமே முமுக்ஷுவுக்கு ஜன்மாந்தரத்தின் காமியகர்மமும் மலடிக்குச் சமானமாம்; பலத்திற்கு ஏதுவன்று. ஏனெனின் வேதாந்தசித்தாந்தத்தில் கர்மாநுஷ்டான காலத்தில் புருஷனது இச்சை பலத்திற்கு ஏதுவெனக் கொள்ளப்பட்டிருக்கின்றது. இச்சையோடு அநுஷ்டிக்கப்பட்ட கர்மம் சுவர்க்காதி பலத்திற்கு ஹேதுவாம்; நிஷ்காமமாக அநுஷ்டிக்கப்பட்டது சுவர்க்காதி பலத்திற்கு ஹேதுவன்றென்பது **வேதாந்த சித்தாந்தம்.**

அங்ஙனமே நம்முடைய ஏகபவிகவாதியின் சித்தாந்தத்தில் கர்மசித்தியின் பிறகும் புருஷனுடைய இச்சை பலத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. அப்புருஷனது இச்சை புருஷன் முமுக்ஷுவானகாலத்தில் நீங்கிவிட்டது. ஆதலால் ஜன்மாந்தரத்தின் காமியகர்மமும் பலனுக்கு ஹேதுவாகிறதில்லை. ஒருவன் தனத்தை யடையவேண்டுமென்னும் இச்சையால் ஒரு தனிகனை ஆராதிக்கிறான். அப்படி யாராதித்தபின் அவனுக்குச் சில ஹேதுக்களால் தனத்திலிச்சை விட்டுப்போமாயினும் தனப்பிராப்திரூப பலன் உண்டாகிறதில்லை. அங்ஙனமே ஜன்மாந்தரத்தின் காமியகர்மத்திற்கும் முமுக்ஷுவுக்கு இச்சையில்லாமையால் பலன் உண்டாகிறதில்லை.

இவ்வாற்றால் கேவல கர்மத்தினால் மோக்ஷமுண்டாகும்.

**58.** வர்த்தமான ஜன்மத்தில் காமியகர்மமும் நிஷித்தகர்மமும் செய்யப்படாததினால் ஊர்த்துவ (மேல்) அதோ (கீழ்) லோகங்களடையப்படுகிறதில்லை. ஜன்மாந்தரத்தின் பிராரப்தமான நிஷித்த காமியகர்மங்கள் போகத்தால் நாசமாகின்றன. நித்திய நைமித்திக கர்மங்களைச் செய்யாததினா லுண்டாகும் பாவம் அவற்றைச் செய்வதினால் முமுக்ஷுவுக்குச் சம்பவிக்கிறதில்லை. ஜன்மாந்தரத்தின் சஞ்சிதநிஷித்தகர்மங்கள் சாதாரணப் பிராயச்சித்தத்தால் நிவிருத்தியாகின்றன. ஜன்மாந்தரத்தின் சஞ்சித காமியகர்மங்கள் முமுக்ஷுவுக்கு இச்சை யில்லாமையால் பலனைக் கொடுக்கிறதில்லை. ஆகையால் முமுக்ஷு நித்தியநைமித்திக சாதாரணப் பிராயச்சித்தரூப கர்மங்களைச்

செய்யவேண்டும். வர்த்தமான ஜன்மத்தின் அறியப்பட்ட நிஷித்தகர்மமுளதாயின் அசாதாரணப் பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டும்.

2. * அல்லது, முமுக்ஷுவானவன் நித்தியநைமித்திகங்களையேசெய்து பிராயச்சித்தத்தை விட்டுவிடுக. ஏனெனின் சஞ்சிதநிஷித்த காமியகர்மங்கள் முமுக்ஷுவுக்கு நாசமாய்விடுகின்றன. வேதாந்தமதத்தில் ஞானிக்குச் சஞ்சிதகர்மங்கள் நாசமாவதாய் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுபோல, நிஷித்த காமியங்களை விட்டு நித்தியநைமித்திகங்களைச் செய்கிற முமுக்ஷுவுக்கு நம்முடைய மதப்படி சஞ்சிதகர்மங்கள் நாசமாகின்றன.

3 † அல்லது, சஞ்சிதமான காமியநிஷித்தகர்மங்கள் யாவுஞ் சேர்ந்து ஒரு ஜன்மத்தைக் கொடுக்கும். ஆதலால் முமுக்ஷுவுக்கு வேறு ஒருஜன்மமுண்டாகும்.

4 ‡ அல்லது, யோகியின் காயவியூகத்தைப்போல ஒரேகாலத்தில் எல்லாச் சஞ்சிதமும் அநந்த சரீரங்களை ஆரம்பிக்கின்றன. அவற்றால் முமுக்ஷு பின் ஜன்மத்தில் எல்லாவற்றின் பயனையும்அநுபவித்துக் கொள்ளுகின்றான்.

5 ¶ அல்லது, நித்தியநைமித்திகங்களைச் செய்தலாலுண்டாகும் கிலேசம் ஜன்மாந்தரத்தின் சஞ்சித நிஷித்தகர்மங்களின் பயனும். ஆதலால் ஜன்மாந்தரத்தின் சஞ்சித நிஷித்தகர்மங்கள் வேறு ஜன்மத்தைத் தரா. காமியமாகிய சஞ்சிதம் எதுவோ அது ஒருஜன்மத்திலேனும் ஒருகாலத்திலேனும் அநந்த சரீரங்களை ஆரம்பிக்கின்றது. ஆதலால் மேல் ஜன்மத்தில் முமுக்ஷுவுக்குத்

---

* சாதாரண அசாதாரணப் பிராயச்சித்தங்களைச் செய்வதில் வெகு சிரமத்தைக் கண்டு முமுக்ஷுவுக்குத் தன் மதத்தில் பிரியமுண்டாகாதென்னும் அபிப்பிராயத்தால் பூர்வபக்ஷி வேறு எளிய உபாயத்தைச் சொல்லுகிறான்.

† "நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி। அவச்யமேவ போக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம்॥" நூறுகோடி கற்பங்களாலும் அஞ்ஞானியின் கர்மம் போகமின்றி நாசமாகாது. ஆனால் செய்யப்பட்ட சுபாசுபகர்மங்கள் அவசியம் அநுபவிக்கத்தக்கனவாம். போகமின்றி (அநுபவித்தலின்றி) கர்மத்திற்கு நாசத்தை அங்கீகரிக்கின், முற்கூறிய சாஸ்திரவசனங்களுக்கு விரோதமுண்டாகும். அதனை நீக்குதற்பொருட்டு வேறுபக்ஷத்தைக் கூறுகின்றார்.

‡ அநேக விலக்ஷண ஜன்மங்களுக்குக் காரணமான அநேகர் மதங்களின் பயன் ஒரு ஜன்மத்திற் சம்பவியாதென்னும் சங்கையைக்கொண்டு வேறு பக்ஷத்தைக் கூறுகிறார்.

¶ யோகியின்காயமாவது சரீரங்கள்; அவற்றின் வியூகமாவது சமூகம் (கூட்டம்); அதனைப்போல ஒருகாலத்திலும் அநேகவித ஜன்மங்களால் அநேகவித சுகமநுபவிக்கப்படுவதுபோல அநேகவித துக்கமும் பின் ஜன்மத்தில் அநுபவிக்க நேருமென்னும் அச்சத்தால் முமுக்ஷுவுக்கு இம்மதத்தில் பிரவிருத்தி யுண்டாகாதென்னும் அபிப்பிராயத்தால் ஏகபவிகவாதி பின் ஜன்மத்தில் முமுக்ஷுவுக்குக் கேவல சுகத்தின் போகத்தைக் காட்டித் தன் மதத்தில் உருசியை யுண்டுபண்ணுகின்றார்.

துக்கத்தின் லேசமு முண்டாகிறதில்லை; கேவலம் சுகத்தின்போக முண்டாகிறது. ஏனெனின், ஜன்மாந்தரத்தின் சஞ்சிதமான, விகிதகர்மங்களால் சரீர முண்டாயிருக்கிறது. சஞ்சித நிஷித்தம் நித்தியநைமித்திக கர்மாநுஷ்டானக் கிலேசத்தினால் முன் ஜன்மத்திலேயே அநுபவித்துக் கொள்ளப்பட்டது.

இவ்விதமாகப் பிராயச்சித்தமின்றிக் கேவல நித்தியநைமித்திக கர்மங்களின் அநுஷ்டானத்தினால் மோக்ஷமுண்டாகின்றது. ஆதலால் நித்தியகர்மங்களை எப்போதும், நைமித்திககர்மங்களை நிமித்தம் நேரிடும்போதும் அநுஷ்டிக்க வேண்டியது. இந்தமதத்தைச் சாஸ்திரத்தில் ¶ ஏகபவிகவாத மென்பர்.

## 59. பந்தநிவிருத்தி ஞானவாயிலாகநூலின் பிரயோஜன மாகாமை.

இதனாலும் ஞானவாயிலாகப் பந்தநிவிருத்திநூலின் பிரயோஜனமன்று. ஏனெனின், எந்த வஸ்து வேறொன்றினா லுண்டாகிறதில்லையோ, அது முக்கியப் பிரயோஜனமாகிறது. ரூபஞானம் நேத்திரமின்றி வேறெதனாலு முண்டாகாமையால் ரூபஞானமே நேத்திரத்தின் முக்கியப் பிரயோஜனமாவது போல, பந்தநிவிருத்தியானது கிரந்த மின்றிக் கர்மத்தினா லுண்டாகின்றது; ஆதலால் பந்தத்தின் நிவிருத்தி கிரந்தத்தின் பிரயோஜனமன்று.

இவ்வாற்றால் கிரந்தத்தின் அதிகாரிவிஷயப்பிரயோஜனங்கள் பொருந்தா.

## 60. சம்பந்தகண்டநம். (4)

### பூர்வபக்ஷம்.

அதிகாரிமுதலியவையின்மையால் சம்பந்தமும் பொருந்தாது. ஏனெனின்,

1. விஷயமின்மையால் கிரந்தத்திற்கும் விஷயத்திற்கும் பிரதிபாத்தியப் பிரதிபாதகத்தன்மைச் சம்பந்தம் பொருந்தாது.

2. அதிகாரியும் பயனுமின்மையால் அவற்றிற்குப் பிராப்பியப் பிராபகபாவ சம்பந்தம் பொருந்தாது.

3. அதிகாரியின்மையால் அவனுக்கும் விசாரத்திற்கும் கர்த்திருகர்த்தவ்யபாவ சம்பந்தம் பொருந்தாது.

4. ஞானம் பயனில்லாததாயிருத்தலின் கிரந்தத்திற்கும் ஞானத்திற்கும் ஜந்நியஜநகபாவசம்பந்தம் பொருந்தாது. ஸபலவஸ்து ஜந்நியமாம்; முற்கூறியபடி ஞானம் ஸபலமன்று.

5. ஞானத்தின் சொரூபமுமில்லை. இதனாலும் ஞானத்திற்கும் கிரந்தத்திற்கும் சம்பந்தம் பொருந்தாது. ஏனெனின் ஜீவப்பிரஹ்மங்களின் அபேத

¶ ஏகபவிகத்தை - ஏகஜன்மத்தை அல்லது மோக்ஷத்துக்குச் சாதனமாக ஒரு கர்மத்தை; வாதம்-சொல்லுதல்; ஏகபவிகவாத மென்னும் சொல்லிற்குப் பொருளாம்.

நிச்சயத்திற்குச் சித்தாந்தத்தில் ஞானமென்று பெயர். அவ்வபேதநிச்சயம் பொருந்தாது. ஏனெனின் ஜீவப்பிரஹ்மங்களுக்கு அபேதமில்லையென்னும் வார்த்தை விஷயநிராகரணத்தில் முன் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் அபேதநிச்சயவடிவ ஞானம் பொருந்தாது.

இவ்வாற்றால் அதிகாரி முதலிய அநுபந்தங்களின் அபாவத்தால் கிரந்தத்தின் ஆரம்பம் பொருந்தாது.

## பூர்வபக்ஷியின் கிரமமாக உத்தரம். 61—93.

## 61. அதிகாரி மண்டநம். (1) 61—71.

### 34 - 36. இலக்கத்திலுள்ள பூர்வபக்ஷத்திற்கு உத்தரம். 61-63.

### [மோக்ஷத்தினது முதலம்சத்தின் இச்சை பொருந்துமாறு.]

"மோக்ஷத்தின் இச்சை ஒருவருக்கும் பொருந்தாது. ஏனெனின் மோக்ஷத்தில் இரண்டு அம்சங்களுள.

1. ஒன்றோ காரணத்தோடுகூடிய ஜகத்தின் நிவிருத்தியாகிய மோக்ஷத்தின் அம்சம்.

2. மற்றைய அம்சம் பிரஹ்மத்தின் பிராப்திவடிவமாம்.

அவற்றுள் காரணத்தோடுகூடிய ஜகத்தின் நிவிருத்திவடிவ மோக்ஷத்தினது முதலம்சத்தின் இச்சை ஒருவருக்குமில்லை. ஆனால் மூன்றுவித துக்கநிவிருத்தியினிச்சை எல்லாப் புருஷர்களுக்குமுண்டு. அந்தத் துக்கநிவிருத்தி தத்தம் உபாயங்களினால் உண்டாய்விடுகின்றது. ஆதலால் காரணத்தோடு கூடிய ஜகத்தின் நிவிருத்தியை விரும்புகிறவனாகிய முமுக்ஷு அதிகாரியெனல் பொருந்தாது." என்று முதலில் பூர்வபக்ஷி கூறினார்.

## 62. அதன் சமாதானத்தை முதலில் கூறுகின்றார்.

ஜகத்திற்குக் காரணமான அஞ்ஞானம், ஜகத்து என்பவற்றின் நாசமின்றிய வேறு உபாயங்களால் மூன்றுவித துக்கங்களின் நாசமுண்டாகாது. மூல அவித்தையின் நிவிருத்தியால் சகல துக்கங்களும், துக்கங்களுக்குக் காரணமான ரோகாதிகளும், ரோகாதிகளுக்கு ஆசிரய(இட)மான சரீராதிகளும் நாசமாகின்றன. ஆதலால் மூன்றுவித துக்கநாசத்தின்பொருட்டுக் காரண சகித ஜகத்தின் நிவிருத்திரூப மோக்ஷத்தின் முதலம்சத்தை எல்லோரும் இச்சிக்கிறார்கள்.

தாற்பரியம் இதுவாம்:—எவர்கள் சகல ஔஷதாதி உபாயங்களைச் செய்தவிற் சமர்த்தர்களோ அவர்களுக்கும் துக்கம் நியமமாக நிவிருத்தியாகிறதில்லை. ரோகாதிகளாலுண்டாகுந் துக்கங்கள் சிலருக்கு ஔஷதாதி உபாயங்களால் நிவிருத்தியாகின்றன; சிலருக்கு ஔஷதாதிகளால் நிவிருத்தி யாகிறதில்லை. ஆதலால் ஔஷதாதி உபாயங்களால் ரோகாதிகளால்உண்டாகும் துக்

கங்கள் நியமமாக நிவிருத்தியாவதில்லே. மேலும் எவனுக்கு ஔஷதாதி உபாயங்களால் துக்கம் நிவிருத்தியாகிறதோ, அவனுக்கும் துக்கம் மறுபடியும் உண்டாகிறது. ஆதலால் ஔஷதாதி உபாயங்களால் துக்கம் அத்தியந்தம நிவிருத்தியாகிறதில்லை. எது நிவிருத்தியாகி மறுபடியும்உண்டாகிறதில்லேயோ, அது அத்தியந்தநிவிருத்தி எனப்படும். ஔஷதாதி உபாயங்களால் துக்கநிவிருத்தி நியமமாக உண்டாகிறதில்லை; நிவிருத்தியான துக்கம் மறுபடியும் உண்டாகிறது. ஆதலால் அவ்வுபாயங்களால் அத்தியந்த நிவிருத்தியு முண்டாகிறதில்லை.

மேலும் துக்கத்தின் சகல சாதனங்களும் நாசமானல் சகல துக்கங்களும் நியமமாக நிவிருத்தியாகும். அச்சாதனங்கள் நாசமாக மறுபடியும் துக்கமுண்டாகாது. ஆதலால் துக்க நிவிருத்தியின் பொருட்டுத் துக்க * சாதனங்களினது நிவிருத்தியின் இச்சை யெல்லோருக்கும் உண்டாகிறது.

**63.** அந்தத் துக்கத்தின் சாதனம் அஞ்ஞானமும், அதன் காரியமான பிரபஞ்சமுமாம். இவ்வார்த்தை சாந்தோக்கிய உபநிஷத்தில் பூமவித்தையிற் பிரசித்தம். அங்கு இது பிரசங்கமாம்:—"ஒரு சமயத்தில் சனற்குமாரரிடத்தில் நாரதர் சென்று, "சுவாமின், ஆத்மஞானியா யிருக்கிற புருஷனுக்குச் சோகமுண்டாகாது. நானே சோகத்தோடு கூடியவனு யிருக்கிறேன். ஆதலால் நான் அஞ்ஞானியா யிருக்கிறேன். எனக்கு அஞ்ஞானம் நீங்கும் படி உபதேசம் செய்யவேண்டும்" என்று சொன்னர்.

அப்போது சனற்குமாரர் நாரதரைப் பார்த்துச் சொல்லுகிறர்:—நாரதரே, பூமா சோகரகிதமாயும் சுகரூபமாயும் இருக்கிறது. பூமாவுக்கு அந்நியமான சகலமும் துச்சமாயும் துக்கத்துக்குச் சாதனமாயும் இருக்கின்றன.

பூமா என்பது பிரஹ்மத்திற்காம்.

இவ்விதமாகப் பிரஹ்மத்துக்குப் பின்னமான வஸ்து எதுவோ அதனைச் சகல துக்கங்களுக்கும் சாதனமென்பர். அஞ்ஞானமும் அதன் காரியமான பிரபஞ்சமும் பிரஹ்மத்துக்குப் பின்னமா யிருத்தலின் துக்கத்துக்குச் சாதனமாம். அவைகள் நிவிருத்தியாவதால் சகல துக்கங்களும் நியமமாக அத்தியந்தமாய் நிவிருத்தியாகின்றன. ஆதலால் சகல துக்கங்களின் நிவிருத்தியின்

---

* கபத்தை யுண்டுபண்ணும் பதார்த்தங்களை விட்டாலன்றிக் கபரோகம் நிவிருத்தியாகாதாகலின், கபநிவிருத்தியை விரும்புகின்றவன் "யான் வைத்தியனல் தெரிந்துகொண்டு கபத்தையுண்டுபண்ணும் பதார்த்தங்களை விடுவேன்." என்று கபத்தினது சாதனங்களின் நிவிருத்தியை இச்சிக்கிறன். அங்ஙனமே துக்கத்தினது சாதனங்களின் நிவிருத்தியின்றித் துக்கத்தின் நிவிருத்தி யுண்டாகாது. ஆதலால் துக்கத்தின் நிவிருத்தியை விரும்பும் புருஷன், "யான் சாஸ்திரத்தினலும் குருவினலும் தெரிந்துகொண்டு துக்கத்தின் சாதனங்களை விடுவேன்" என்று துக்கத்தின் சாதனங்களினது நிவிருத்தியையும் இச்சிக்கிறன்.

பொருட்டு அஞ்ஞானசகிதப் பிரபஞ்சத்தின் * நிவிருத்திரூப மோக்ஷத்தின் முதல் அம்சத்தின் விருப்பம் பொருந்துகிறது.

## 64. இலக்கம். 37-38-ல் உள்ள பூர்வபக்ஷத்தின் உத்தரம். 64-65.

(மோக்ஷத்தின் இரண்டாவது அம்சத்தின் இச்சை கூடும்.)

அன்றியும் "எந்தவஸ்து அநுபவிக்கப்பட்டிருக்கிறதோ அதனை யடைய இச்சை உண்டாகும். பிரஹ்மம் ஒருவராலும் அநுபவிக்கப்படவில்லை யாக லின், பிரஹ்மப் பிராப்திரூப மோக்ஷத்தின் இரண்டாவது அம்சத்தின் இச்சை ஒருவருக்கும் உண்டாகிறதில்லை." என்று பூர்வபக்ஷியினால் முன் (37-வது பிரசங்கத்தில்) சொல்லப்பட்டது.

**அதன் † சமாதானத்தைக் கூறுகின்றார்:**—எல்லோரும் சுகத்தை அநுபவித் திருக்கிறார்கள். ஆதலால் சுகத்தில் இச்சை எல்லோருக்கும் உண்டாகிறது.

---

* இங்கு இது **சங்கையாம்:**—முன் அநுபவிக்கப்பட்ட பதார்த்தம் எதுவோ அதன் கண் இச்சை யுண்டாமென்பது நியமம். பிரஹ்மவடிவ அதிஷ்டானத்தின் ஞானத்தால் அஞ்ஞானஸகித பிரபஞ்சத்தினது நிவிருத்தியின் அநுபவம் முமுக்ஷுவுக்கு முன் ஒரு காலத்திலு முண்டானதில்லை. ஆதலால் அவனுக்கு அஞ்ஞானஸகிதப் பிரபஞ்சத்தினது நிவிருத்தியின் இச்சை பொருந்தாது.

இந்த 36-வது பிரசங்கத்தின் டிப்பணியிற் கூறிய சங்கைக்கு **இது சமாதானமாம்:**- அநுபவிக்கப்பட்ட வஸ்துவின் இச்சை யுண்டாகுமென்னும் நியமமில்லை. ஆனால் அநு பவிக்கப்பட்ட வஸ்துவின் ஸஜாதீயமான வஸ்துவின் இச்சை யுண்டாமென்பது நியம மாம். அநுபவிக்கப்பட்ட வஸ்துவின் இச்சை யுண்டாயின் புசித்த போஜனத்தில் மீண் டும் பிரவிருத்தி யுண்டாதல் வேண்டும்; உண்டாகிறதில்லை. ஆனால் அதற்கு ஸஜாதீய மாய் அதன் சமான அல்லது அதனின் வேறான போஜனத்தில் இச்சை யுண்டாகிறது. அஞ்ஞானத்துக்கும் பிரபஞ்சத்துக்கும் அதிஷ்டானம் பிரஹ்மமாவதுபோல கற்பித ஸர்ப்பத்துக்கு அதிஷ்டானம் இரஜ்ஜு முதலியனவாம். ஆதலால் பிரஹ்மமும் ரஜ் ஜுவும் அதிஷ்டானத்தன்மையால் பரஸ்பரம் ஸஜாதீயங்களா யிருக்கின்றன. ஸர்ப் பாதிகளின் நிவிருத்தியும் அஞ்ஞானஸகித பிரபஞ்ச நிவிருத்தியும் பரஸ்பரம் ஸஜாதீயங் களா யிருக்கின்றன. ரஜ்ஜுவாதிகளின் ஞானத்தால் சர்ப்பாதிகளின் நிவிருத்தி யுண் டாகிறதென்பது முமுக்ஷுவுக்கு அநுபவிக்கப்பட்டதாம். ஆதலால் அவற்றின் ஸஜாதீய மான பிரஹ்மஞானத்தால் அஞ்ஞான சகிதப் பிரபஞ்சத்தின் நிவிருத்தியில் இச்சை யுண்டாகக்கூடும்.

† இங்கு **இது இரகசியமாம்:**—அநுபவிக்கப்பட்ட வஸ்து மாத்திரத்தின் இச்சை யுண்டாகுமாயின், அநுபவிக்கப்பட்ட ரோகமுதலிய நிமித்தத்தா லுண்டாகிய துக்கத் திலும், அதன் சாதனமாகிய ரோகாதி வடிவப் பிரதிகூல வஸ்துவிலும் இச்சை எல் லோருக்கும் உண்டாதல்வேண்டும்; உண்டாகிறதில்லை. ஆதலால் அநுபவிக்கப்பட்ட சுகத்திலும், சுகத்தின் சாதன வடிவ அநுகூல வஸ்துவிலும் இச்சையுண்டாம். அவற் றிலும் அநுபவிக்கப்பட்ட அநுகூல வஸ்துவின் சஜாதீயத்தின் இச்சை யுண்டாமென் பது நியமம். எதனால் புத்தியில் பிரஹ்மாநந்தத்தின் பிரதிபிம்பவடிவ விஷய சுகம் எல்லோராலும் அநுபவிக்கப்பட்டிருக்கின்றதோ, அதன் சஜாதீய பிம்பபூத சுகவடிவப் பிரஹ்மம் சாஸ்திரங்களிற் கேட்கப்பட்டிருக்கின்றதோ, அதனால் பிரஹ்மப் பிராப்தி யின் இச்சை கூடும்.

"பிரஹ்மம் நித்தியசுகரூபமாம்" என்று சாஸ்திரத்தில் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆதலால் உத்தம விவேகியானவன் சுகசொரூபப் பிரஹ்மத்தின் அடைவை இச்சிக்கிறான்.

**65.** சகல ஜனங்களும் விஷயஜந்நிய சுகத்தை இச்சிக்கிறார்கள். அந்த விஷய ஜந்நிய சுகம் மோக்ஷத்தில் கிடைக்கிறதில்லை; ஆனால் பிரபஞ்சத்திற் கிடைக்கிறது. ஆதலால் மோக்ஷ இச்சையுள்ள அதிகாரியே சித்தியாமையால் கிரந்தாரம்பம் நிஷ்பிரயோஜனமாம்." என்று முன் (38 - வது பிரசங்கத்தில்) சொல்லப்பட்டது.

இப்படி ஆக்ஷேபிக்கும் பூர்வபக்ஷியை இது கேட்கவேண்டும்:—(1) முமுக்ஷு ஒருவனும் இல்லையா? (2) அல்லது முமுக்ஷு இருந்தும் அவனுக்குக் கிரந்தத்திற் பிரவிருத்தி உண்டாகிறதில்லையா?

1. "முமுக்ஷுவே இல்லை" எனின், அது பொருந்தாது. ஏனெனின் எல்லோரும் சர்வ துக்கநாசத்தையும் நித்திய சுகப்பிராப்தியையும் இச்சிக்கிறார்கள். அந்தச் சர்வ துக்கநாசமும் சுகப்பிராப்தியுமே மோக்ஷமாம். ஆதலால் எல்லோரும் முமுக்ஷுக்களாகவே இருக்கிறார்கள்.

அன்றியும், "விஷய ஜந்நிய சுகத்தை எல்லோரும் இச்சிக்கிறார்க" ளென்று கூறப்பட்டது.

அஃதில்லை; ஆனால் சுகமாத்திரத்தை எல்லோரும் இச்சிக்கிறார்கள். அந்தச் சுகம் விஷயத்தினாலுண்டாகுக; அல்லது விஷயமின்றி உண்டாகுக. விஷய ஜந்நிய சுகத்தினையே விரும்புவார்களாயின், சுழுத்தி சுகத்தின் இச்சையுண்டாகலாகாது. சுழுத்தி சுகம் விஷயஜந்நியமன்று. ஆதலால் சுகமாத்திரத்தை எல்லோரும் இச்சிக்கிறார்கள்; கேவலம் விஷயஜந்நிய சுகத்தையே இச்சிக்கிறதில்லை. அதற்கு மாறான ஆத்மசுகத்தில் இச்சையுண்டாகிறது; விஷய சுகத்தில் இச்சையுண்டாகிறதில்லை. ஏனெனின் எல்லோருக்கும் குறைந்த அல்லது அதிக விஷயசுகம் கிடைத்தும் இருக்கிறது. ஆனால் "எக்காலத்திலும் நாசமாகாத ஒரேவிதமான சுகம் நமக்குக் கிடைக்கவேண்டு"மென்னும் இச்சை எப்போதுமிருக்கிறது. இத்தன்மைய சுகம் ஆத்ம சொரூபமான மோக்ஷமாம். ஆதலால் எல்லோரும் முமுக்ஷுக்களாவர். "முமுக்ஷு ஒருவரும் ஆகார்" என்று கூறுதல் பொருந்தாது.

## 66. முமுக்ஷு சித்தித்தலால் கிரந்தத்தின் ஆரம்பம் ஸபலமாமெனல். 66—68.

2. "முமுக்ஷு இருந்தும் அவனுக்குக் கிரந்தத்தில் பிரவிருத்தி உண்டாகிறதில்லை; ஆதலால் கிரந்தாரம்பம் நிஷ்பலமாம்" என்று கூறுகிறவனை இது கேட்கவேண்டும்:—

(1) கிரந்தம் மோக்ஷசாதன மாகாமையினால் அதில் பிரவிருத்தி உண்டாகவில்லையா?

(2) அல்லது இந்தக் கிரந்தத்தைவிட வேறு சாதனங்களிருத்தலால் அவற்றிற் பிரவிருத்தியுண்டாய் இதில் பிரவிருத்தி உண்டாக வில்லையா?

(3) அல்லது எந்தச் சமமுதலிய சாதனங்களால் கிரந்தத்தில் அதிகாரம் சொல்லப்பட்டதோ, அந்தச்சமமுதலியவற்றையுடைய ஞானத்துக்கு யோக்கியமான அதிகாரி ஒருவனுமில்லாமையால் கிரந்தத்திற் பிரவிருத்தி உண்டாகவில்லையா?

(1) "கிரந்தம் மோக்ஷத்திற்குச் சாதனமன்" றென்று கூறியது யாதோ அது பொருந்தாது. ஏனெனின் மோக்ஷம் ஞானத்தால் நியமமாக உண்டாகிறதென்பது வேதத்தின் சித்தாந்தம்.

அந்த ஞானம் சிரவணத்தால் உண்டாகிறது.

அச்சிரவணம் இரண்டு * விதமாம்:—

(1) ஒன்றோ வேதாந்த வாக்கியத்திற்கும் சுரோத்திற்குமுள்ள சையோகரூபசிரவணமாம்.

(2) மற்றையது வேதாந்தவாக்கியத்தின் விசாரரூபசிரவணமாம்.

இவற்றில் ஞானத்திற்கு ஹேது முதல் சிரவணமாம்; இரண்டாவதன்று. ஏனெனின், சப்த ஜந்யஞானத்தில் இந்திரியத்தோடு சப்தத்திற்குள்ள சையோகமே எங்கும் ஹேதுவாம். ஆதலால் வேதாந்தவாக்கியத்திற்கும் சுரோத்திரத்திற்குமுள்ள சையோகரூப சிரவணம் பிரஹ்ம ஞானத்திற்கு ஹேதுவாம். அவாந்தரவாக்கியத்தின் சிரவணம் பரோக்ஷஞானத்துக்கும், மகாவாக்கியத்தின் சிரவணம் அபரோக்ஷஞானத்துக்கும் ஹேதுவென்பது முன் (20-ல்) பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

எவனுக்கு ஞானமுண்டானாலும் அசம்பாவனை விபரீதபாவனைகள் இருக்கின்றனவோ, அவன் இரண்டாவது [1] சிரவணத்தையும் [2] மனனத்தையும் [3] நிதித்தியாசனத்தையுஞ் செய்யவேண்டும்.

[1] வேதாந்த வாக்கியத்தின் விசாரரூப சிரவணத்தினால் வேதாந்த வாக்கியத்திலுள்ள அசம்பாவனை நீங்குகிறது. "வேதாந்தவாக்கியம் பிரஹ்மத்தைப் பிரதிபாதிக்கிறதா? அல்லது வேறு அர்த்தத்தைப் பிரதிபாதிக்கிறதா?" என்னும் சமுசயம் வேதாந்த வாக்கியத்தின் அசம்பாவனையாம். அது அவற்றின் விசாரத்தால் நிவிருத்தியாகிறது.

[2] மனனத்தால் பிரமேயத்தின் அசம்பாவனை நீங்குகிறது. ஜீவப்பிரஹ்மங்களின் ஏகத்துவம் வேதாந்தத்தின் பிரமேயமென்று சொல்லப்படுகின்.

* அங்க அங்கி பேதத்தால் சிரவணம் இருவகைத்தாம். அவற்றுள் இரண்டாவது சிரவணம் முதல் சிரவணத்திற்கு உபகாரகமாம். ஆதலால் அது அங்க (சாதன) சிரவணமெனப்படுகின்றது. முதல் சிரவணம் உபகாரியமாமாகலின் அங்கி (பல) சிரவணமெனப்படும்.

றது. "அவ்வேகத்துவம் சத்தியமா? அல்லது ஜீவப் பிரஹ்மபேதம் சத்திய மா?" என்னும் சம்சயம் யாதோ, அது பிரமேயத்தின் அசம்பாவனை யெனப் படுகின்றது. அது மனனத்தினால் நீங்குகின்றது.

[3] நிதித்தியாசனத்தால் விபரீதபாவனை நிவிருத்தியாகிறது.

இவ்விதத்தால் முதல் சிரவணமோ ஞானவாயிலாக மோக்ஷத்துக்கு ஹேதுவாம். விசாரரூப சிரவண மனன நிதித்தியாசனங்கள் அசம் பாவனை விபரீதபாவனைகளின் நிவிருத்திவாயிலாக மோக்ஷத்துக்கு ஹேது வாம். வேதாந்தமென்பது உபநிஷத்து. அது இந்த நூலைவிட வேறு யிருக் கினும், அதன் சமான அர்த்தமுடைய பாஷைவாக்கியங்கள் இந்நூலினு மிருக்கின்றன. அவற்றின் சிரவணத்தினாலும் ஞான முண்டாகுமென்பது * இனி (99 - ல்) பிரதிபாதிக்கப்படும்.

இவ்வாறு ஞானவாயிலாகக் கிரந்தம் மோக்ஷத்துக்கு ஹேதுவாம். இந்தக் கிரந்தம் விசாரரூபமாயும் மனனரூபமாயு மிருத்தலால் அசம்பாவ னாதி தோஷங்களின் நிவிருத்திவாயிலாக மோக்ஷத்திற்கு ஹேதுவாம். ஆத லால் கிரந்தத்தினால் மோக்ஷம் உண்டாகாதென்பது கேவலம் ஹடமாத்திர மாம்.

**67.** (2) "கிரந்தத்தினால் மோக்ஷம் உண்டாம். ஆனால் வேறு சாதனங் களாலும் மோக்ஷமுண்டாம். ஆதலால் கிரந்தத்தின் ஆரம்பம் நிஷ்பலமாம்." என்று கூறுவானாயின்,

அவனை இதுகேட்பாம்:—மோக்ஷத்தைத் தரும் வேறு சாதனங்கள் எவை? "ஜீவப்பிரஹ்ம ஐக்கியத்தைப் பிரதிபாதிக்கும் † உபநிஷத்து சூத் திரபாஷிய முதலிய ஸம்ஸ்கிருத கிரந்தங்கள் அநேகமிருக்கின்றன. அவற் றினாலும் ஞானவாயிலாக மோக்ஷம் உண்டாகிறது. இதற்கு வேறு அதிகாரி யில்லை. ஆதலால் இந்தக் கிரந்தம்நிஷ்பிரயோஜனமாம்." என்று சொல்லு வானாயின்,

**அவ்வார்த்தை சத்தியமாமாயினும்,** அந்தக் கிரந்தங்களின் அர்த்தத்தைக் கிரகிக்கச் சக்தி யில்லாத முமுக்ஷுவுக்கு அவற்றால் ஞானமுண்டாகாது.

---

* பாஷைநூலின் சிரவணத்தினாலும் ஞான முண்டாகிறது என்னும் வார்த்தை மேல் 99-வது பிரசங்கத்தில் சொல்லப்படும்.

† வேதத்தின் அந்த (கடைப்) பாகமாகிய வேதாந்தம் எதுவோ அது உபநிஷத் தெனப்படும். அவ்வுபநிஷத்துகள் அநேகமாம் (க0அ). அவற்றில் ஈசம், கேனம், கடம், பிரசினம், முண்டகம், மாண்டூக்கியம், தைத்திரீயம், ஐதரேயம், சாந்தோக்கியம், பிருக தாரணியகம் என்னும் பத்து உபநிஷத்துகளும் முக்கியமாம். அவற்றிற்கு ஸ்ரீ சங் கராசாரியஸ்வாமிகளால் செய்யப்பட்ட பாஷிய முளது. சூத்திர பாஷியங்களின் இலக்ஷணம் முன் 2-வது பக்கத்தில் †, ‡ குறியுள்ள டிப்பணிகளில் எழுதப்பட்டுளது.

ஆதலால் மந்த புத்தியுடைய முமுக்ஷுவுக்கு அவற்றிற் பிரவிருத்தியுண்டாகாது; இந்தக் கிரந்தத்திற்றான் பிரவிருத்தி யுண்டாகும்.

**68.** (3) அன்றியும், "கிரந்தத்தினால் மோக்ஷமுமுண்டாம். சம்ஸ்கிருத கிரந்தங்களால் மந்தபுத்தி யுள்ளவர்களுக்குப் போதமும் உண்டாகாது. முமுக்ஷுவும் உண்டு; என்றாலும் கிரந்தத்தில் பிரவிருத்தி உண்டாகிறதில்லை. ஏனெனின் விவேக வைராக்கிய சமமுதலியவற்றை யுடையவன் அதிகாரி யெனப்பட்டது. அது துர்லபமா (கிடைத்தலரிதா) கலின் தன்னிடத்தில் சாதனமின்மையைக் கண்டு கிரந்தத்திற் பிரவிருத்தி யுண்டாகிறதில்லை." என்று கூறுவானாயின்,

**அவனை இது கேட்பாம்:**—[1] அதிகாரிகள் அநேகரில்லையா? [2] அல்லது ஒருவரும் இல்லையா?

[1.] "அதிகாரிகள் அநேகரில்லை" எனின்,

**அதனை யாமும்** அங்கீகரிக்கின்றோம்.

[2.] "ஞானத்திற்கு யோக்கியமான அதிகாரி ஒருவரும் இல்லை" என்று கூறின்,

அவ்வார்த்தை பொருந்தாது. ஏனெனின் அந்தக்கரணத்தில் (க) மலம் (உ) விக்ஷேபம் (ந) சொரூபாவரணமென மூன்று தோஷங்களிருக்கின்றன.

(க) **மலம்** என்பது பாவத்திற்காம்.

(உ) **விக்ஷேபம்** என்பது சஞ்சலத்தன்மைக்காம்.

(ந) **ஆவரணம்** என்பது அஞ்ஞானத்திற்காம்.

(க) சுபகர்மத்தால் **மலதோஷம்** நீங்குகின்றது.

(உ) உபாசனையினால் விக்ஷேபதோஷம் நீங்குகிறது.

(ந) ஞானத்தால் **ஆவரணதோஷம்** நிவிருத்தியாகின்றது.

எவனுடைய அந்தக்கரணத்தில் மல விக்ஷேப தோஷங்கள் இருக்கின்றனவோ அவன் அதிகாரி யல்லன். ஆனால் இந்த ஜன்மத்திலாவது பூர்வ ஜன்மத்திலாவது செய்த சுப கர்மத்தினாலும் உபாசனையினாலும் எவனுடைய மல விக்ஷேப தோஷங்கள் நிவிருத்தியா யிருக்கின்றனவோ, அங்ஙனமே ஞான யோக்கிய * அதிகாரியா யிருக்கின்றானோ, அவனுக்கு இந்தக் கிரந்தத்தில் பிரவிருத்தி உண்டாகும்.

---

* 1. கிருதோபாஸனர் 2. அகிருதோபாஸனர் என்னும் பேதத்தால் அதிகாரிகள் இருவகையாவர். அவர்களுள்,

1. சகுணப் பிரஹ்மத்தின் சம்பூர்ண (சித்தத்தின் ஏகாக்கிரத்தன்மை பரியந்தமான) உபாசனை எந்தப் புருஷனாற் செய்யப்பட்டிருக்கின்றதோ, அவன் **கிருதோபாஸனானவன்**. அவனிடத்திலோ சாஸ்திரத்திற் கூறப்பட்ட சாதனங்கள் யாவும் பிரசித்தமாய்க் காணப்படுகின்றன.

## 69. பாமர விஷயிபுருஷர்களின் லக்ஷணம்.

"எல்லோரும் விஷய சுகத்தை யிச்சிக்கிறார்கள். நித்திய சுகத்தை ஒருவரும் இச்சிக்கிறதில்லை" என்று முன் (38-ல்) சொல்லப்பட்டது.

அது பொருந்தாது. ஏனெனின் 1. பாமரன், 2. விஷயி, 3. ஜிஞ்ஞாசு, 4. முக்தனெனப் புருஷர் நான்கு வகையினராவர்.

1. இகலோகத்தில் நிஷித்தமாயும் விகிதமாயும் இருக்கிற போகங்களில் ஆசக்தியுள்ள சாஸ்திர ஸம்ஸ்கார மின்றிய புருஷன் * **பாமரன்** எனப்படுவன்.

2. சாஸ்திராநுசாரமாக விஷய போகங்களை அநுபவித்துக்கொண்டு இக பரலோகங்களின் போகங்களை யடையக் கர்மஞ் செய்பவன் † **விஷயி** யெனப்படுவன்.

## 70. ஜிஞ்ஞாசுவின் லக்ஷணம்.

3. இத்தன்மைய புருஷனை ஜிஞ்ஞாஸு வெனப்படுவன்:—எந்தப் புருஷன் உத்தம ஸம்ஸ்காரத்தினால் சத்சாஸ்திரங்களைச் சிரவணஞ் செய்கிறானோ, அவ்வுத்தமனுக்கு இவ்வாறு விவேக முண்டாகிறது:—

---

2. எவனுக்கு ஞானத்திற்கு முன் சகுணப் பிரஹ்மத்தின் உபாஸனை அபூர்ணமாயிருக்கிறதோ, அவன் **அகிருதோபாஸனனாவன்**. அவனிடத்தில் சகல சாதனங்களும் பிரசித்தமாய்க் காணப்படுவதில்லை. ஆனால் சிற்சில சாதனங்கள் பிரசித்தமாய்க் காணப்படுகின்றன; கௌணமாயு மிருக்கின்றன. ஆதலால் அவனுக்குச் சித்தத்தின் ஏகாக்கிரத் தன்மை யின்மையால் ஞானமுண்டாகிய பின்னர் விபரீதபாவனை யிருக்கின்றது. அதனை நிவிருத்திக்கும்பொருட்டு நிதித்தியாஸனம் கர்த்தவ்வியமாம்.

* 1. உத்தமன், 2. மத்திமன், 3. கனிஷ்டன் என்னும் பேதத்தால் **பாமரர்** மூவகையினராவர்.

1. சாஸ்திரவுணர்ச்சி யுடையவனாயினும் இவ்வுலகத்துப் போகங்களிலேயே பற்றுடையவன் **உத்தம பாமரனாவன்**.

2. சாஸ்திர முணராதவனும் பிறர்வாயாற் கேட்கப்பட்ட சாஸ்திரார்த்தங்களில் விசுவாசம் வைத்தலின்றி இவ்வுலக போகங்களிலேயே பற்றுடையவன் **மத்திமபாமர**னாவன்.

3. முற்றும் சாஸ்திர சம்ஸ்கார மின்றி யிருத்தலால் இவ்வுலக போகங்களிலேயே ஆசக்தனா யிருப்பவன் **கனிஷ்ட (அதம) பாமரனாவன்**.

† 1. உத்தமன், 2. மத்திமன், 3. கனிஷ்டன் என்னும் பேதத்தால் **விஷயி** மூவகையினராவர்.

1. வைகுண்டம் அல்லது பிரஹ்மலோக முதலியவற்றின் இச்சையினால் சகாம உபாசனையிற் பிரவிருத்தித்தவன் **உத்தமவிஷயியாவன்**.

2. சுவர்க்கலோகத்தின் இச்சையினால் ஸகாம கர்மத்தில் பிரவிருத்தித்தவன் **மத்திமவிஷயியாவன்**.

3. இவ்வுலகத்து ராஜ்ஜியாதி போகங்களின் இச்சையினால் புண்ணிய கர்மத்திற் பிரவிருத்தித்தவன் **கனிஷ்டவிஷயியாவன்**.

(1) விஷயசுகம் அநித்தியமாம். அஃதுள்ளகாலத்திலுங்கூட ஏதேனும் ஓர் துக்கம் அவசியம் இருந்துகொண்டிருக்கும். முடிவில் நாசமுடையதாகிய சுகம் துக்கத்திற்கு ஏதுவாம். இனிச் சுகம் போய்விடுமென்னும் பயத்தினால் வர்த்தமான காலத்திலும் சுகம் துக்கத்திற்கு ஹேதுவா யிருக்கிறது. இவ்வாறு விஷய சுகம் துக்கத்தினால் விழுங்கப்பட்டிருக்கின்றது; ஆதலால் துக்கரூபமாம்.

(2) இந்தத் துக்கம் இலௌகிக வுபாயத்தினால் நிவிருத்தியாகிறதில்லை. ஏனெனின் உபாயம் செய்பவனுக்கும் சகல துக்கங்களும் நிவிருத்தியாகிறதில்லை. நிவிருத்தியாயினும் மறுபடியும் உண்டாகின்றன.

(3) சரீரம் உள்ளவரையில் துக்க நிவிருத்தி சம்பவிப்பதுமில்லை. ஏனெனின் சரீரங்கள் எவையோ அவை யாவும் புண்ணிய பாவங்களால் உண்டாகின்றன.

[1] மனுஷிய சரீரமோ மிசிரகர்மத்தின் பயன் என்பது பிரசித்தம்.

[2] தேவசரீரமும் மிசிரகர்மபயனே. தேவசரீரம் கேவலம் புண்ணியத்தின் பயனுமாயின், தேவர்களுக்குத் தம்மினும் அதிகமான மற்றைத் தேவர்களது விபூதியைக் கண்டு தாபம் உண்டாகின்றது; அஃது உண்டாகலாகாது. எல்லாத் தேவர்களினும் பிரதானமான இந்திரனுக்கும் அநேக தைத்தியதானவர்களது பயத்தினால் துக்க முண்டாவதாகச் சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. தேவசரீரம் கேவலம் புண்ணியபயனே யாமாயின் தேவர்களுக்குத் துக்க முண்டாகலாகாது. ஆதலால் தேவசரீரமும் புண்ணியபாவ மிரண்டின் பயனும். அன்றியும் தேவர்கள் பாபரகிதர்க ளென்று சுருதியில் சொல்லியிருத்தற்குத் தாற்பரிய மிதுவாம் :—கர்மத்திற்கு * அதிகாரம் கேவல மனுஷிய சரீரத்தில் இருக்கிறதே யல்லாமல் பிறவற்றில் இல்லை. ஆதலால் தேவசரீரத்திற் செய்யப்பட்ட சுபாசுபகர்மங்களின் பயன் தேவர்களுக் குண்டாகிறதில்லை. தேவசரீரத்திற்கு முந்திய சரீரத்திற் செய்யப்பட்ட சுபாசுப கர்மங்களின் பயன் தேவசரீரத்திலும் உண்டாகிறது. இவ்வாறு தேவசரீரம் மிசிரகர்மத்தின் பயனாயிருக்கின்றது.

[3] திரியக்கு பசு பக்ஷிகளின் சரீரங்களும் மிசிரகர்ம பயனும். ஏனெனின் அவற்றின் பிரசித்தமான துக்கம் பாவத்தின் பயனும், மைதுனாதிசுகம் புண்ணியபயனுமாம்.

---

* இதில் இத்துணைப் பேதமுண்டு :—பரமேசுவரனது பக்தி, தயை, சத்தியம், ஞானமுதலிய சுபகுணங்களுக்கோ மனிதர் மாத்திரத்திற்கு அதிகாரமுண்டு. வர்ணாசிரமங்களின் கர்மங்களுக்கோ வர்ணாசிரமமுடைய மனிதர்களுக்கே ஏற்றபடி அதிகாரமுண்டு. ஆதலால் தேவர் திரியக்கு பசு பக்ஷிகளுக்குக் கிரமமாகச் சர்வஞ்ஞத்தன்மை அற்பஞ்ஞத்தன்மை வடிவ ஏதுவினால் ஞானியையும் சிறுவனையும்போல வர்த்தமான சரீரத்தில் செய்யப்பட்ட சுபாசுப கர்மங்களின் பயன் வேறு ஜன்மத்தில் உண்டாகிறதில்லை. இது சாஸ்திர மரியாதை.

(க) வயிற்றினால் நடக்கும் (ஊரும்) ஜந்துக்கள் திரியக்கெனப்படும்.

(ங) பக்ஷங்களால் பறக்கும் பிராணிகள் பக்ஷியெனப்படும்.

(ச) நான்குபாதங்களால் நடப்பவை பசுவெனப்படுகின்றன.

(ஞ) சிலவிடத்துப் பசு பக்ஷிகளும் திரியக்கென்றே சொல்லப்படுகின்றன.

இவ்வாறு சகல சரீரங்களும் புண்ணியபாவங்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன.

[1] சில சரீரம் அதிக புண்ணியத்தினாலும் சொற்ப பாவத்தினாலும் உண்டாகின்றன. அவை தேவசரீரங்களாம். தத்தம் புண்ணியங்கள் எவையோ அவற்றானே சகல தேவர்களிடத்தும் பாவம் குறைவாயிருக்கின்றது. ஆதலால் குறைந்த பாவத்தினாலும் அதிக புண்ணியத்தினாலும் ஆக்கப்பட்டது தேவசரீரமெனப்படுகின்றது. இந்த அபிப்பிராயத்தினாற்றான் தேவசரீரம் கேவலம புண்ணியகர்ம பலனென்று சாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது; ஆதலால் விரோதமில்லை. பிராமணர்கள் மிகுதியாக வசிக்கும் கிராமம் பிராமணக் கிராமமெனப்படுவதுபோல அதிக புண்ணியத்தின் பயனாயிருத்தலால் தேவசரீரம் கேவல புண்ணியத்தின் பயனெனப்படுகிறது. ஆனால் கேவல புண்ணியத்தின் பயன் அன்று.

[2] திரியக்கு பசு பக்ஷிகளின் சரீரம் அதிக பாவத்தினாலும் குறைந்த புண்ணியத்தினாலும் ஆக்கப்பட்டிருக்கிறது.

[3] உத்தம மனுஷியர்களது சரீரம் தேவ சரீரத்திற்குச் சமானமாயிருக்கிறது. நீசர்களது சரீரம் சாப்பாதிகளின் சரீரத்திற்குச் சமமாம்.

இவ்வாற்றாற் சகலசரீரங்களும் புண்ணிய பாவங்களா லாக்கப்பட்டனவாம். பாவத்தின் பயன் துக்கமாகலின் சரீரம் உள்ளவரையில் துக்கம் நிவிருத்தியாகாது.

[1] அந்தச் சரீரம் தர்மா தர்மங்களின் பயனாயிருக்கிறது. அவற்றின் நிவிருத்தியின்றிச் சரீரம் நிவிருத்தியாகிறதில்லை. ஏனெனின், இப்போதுள்ள சரீரம் போனாலும் புண்ணிய பாவங்களால் வேறு சரீரம் உண்டாகும். ஆதலால் புண்ணிய பாவங்களின் நிவிருத்தியின்றிச் சரீரம் நிவிருத்தியாகாது.

[2] அந்தப் புண்ணிய பாவங்கள் ராகத்துவேஷங்களின் நாசமின்றி நிவிருத்தியாகா. ஏனெனின், இப்போதுள்ள புண்ணியபாவங்கள் அநுபவத்தால் நிவிருத்தியானாலும் ராகத்துவேஷங்களால் வேறு புண்ணியபாவங்கள் உண்டாகும். ஆதலால் ராகத்துவேஷங்களின் நிவிருத்தியின்றிப் புண்ணிய பாவங்கள் நிவிருத்தியாகா.

[3] அந்த ராகத்துவேஷங்கள் அநுகூலப் பிரதிகூல ஞானங்களாலுண்டாகின்றன.

(க) எதன்கண் அநுகூல ஞானமுண்டாகிறதோ அதன்கண் ராகமுண்டாகின்றது.

(ங) எதன்கண் பிரதிகூலஞான முண்டாகிறதோ அதன்கண் துவேஷமுண்டாகின்றது. ஆதலால் அநுகூலப்பிரதிகூல ஞானங்களின் நிவிருத்தியின்றி ராகத்துவேஷங்கள் நிவிருத்தியாகா.

[4] அந்த அநுகூலப் பிரதிகூல ஞானங்கள் பேதஞானத்தால் உண்டாகின்றன. ஏனெனின், எந்தவஸ்துவைத் தன் சொரூபத்திற்கு அன்னியமாக அறிகிறானோ, அதன்கண் அநுகூலஞானம் அல்லது பிரதிகூல ஞானமுண்டாகிறது. தன் சொரூபத்தில் அநுகூலப்பிரதிகூலஞானங்களுண்டாகிறதில்லை.

(க) சுகத்தினது சாதனத்தின் பெயர் அநுகூலமாம்.

(ங) துக்கத்தினது சாதனத்தின் பெயர் பிரதிகூலமாம்.

தன் சொரூபம் சுகத்திற்காவது துக்கத்திற்காவது சாதனமன்று. சுகரூபமாயிருக்கினும் அது சுகத்திற்குச் சாதனமன்று. ஆதலால் சொரூபத்திற்குப் பின்னமாக எந்தவஸ்து அறியப்பட்டதோ, அதனிடத்தில் அநுகூலப் பிரதிகூல ஞானங்களுண்டாகின்றன. இவ்விதமாகப் பதார்த்தங்களிலுண்டாம் தன்னினும் வேறென்னும் ஞானமெதுவோ, அது அநுகூலப்பிரதிகூல ஞானங்களுக்கு ஹேதுவாம். * அந்தப் பேதஞானத்தின் நிவிருத்தியின்றி அநுகூலப்பிரதிகூல ஞானங்கள் நிவிருத்தியாகா.

[5] அந்தப்பேதஞானம் அவித்தையினாலுண்டாகிறது. ஏனெனின் "சகலப்பிரபஞ்சமும், அதன் ஞானமும் சொரூபத்தை அறியாதகாலத்தில் இருக்கின்றன" வென்பது சகல வேதசாஸ்திரங்களின் முரசாம். இவ்வாற்றால் எல்லாத்துக்கங்களுக்கும் காரணம் சொரூபத்தின் அஞ்ஞானமாம்.

அந்தச்சொரூப அஞ்ஞானம் சொரூப ஞானமின்றி நிவிருத்தியாகாது. ஏனெனின், எந்தவஸ்துவின் அஞ்ஞானம் இருக்கிறதோ, அந்த அஞ்ஞானம் அந்தவஸ்துவை அறிவதனால் நிவிருத்தியாகிறது. எங்ஙனம்: ரஜ்ஜுவின் அஞ்ஞானம் ரஜ்ஜுஞானத்தால் நிவிருத்தியாகிறது. வேறெதனாலும் நிவிருத்தியாகிறதில்லை. சொரூபஞானமே அஞ்ஞானத்தின் நிவிருத்தி வாயிலாகத் துக்கநிவிருத்திக்கு ஹேதுவாம்.

---

* அஞ்ஞானவடிவ மூலம் நீங்கவே, ஞானிக்கு ஜீவ ஈசுவரர்களது பேதமும் அதன் உள்ளடங்கிய ஜீவ ஜீவர்களது பேதம், ஜீவ ஜடங்களின் பேதம், ஜட ஈசுவரர்களது பேதம் என்னும் இவ்வைந்து பேதமும் வாஸ்தவமாகக் காணப்படுவதில்லை. ஆனால் கற்பித உபாதியினாலாகியனவா யிருத்தலின் கற்பிதமாகக் காணப்படுகின்றன. ஆதலால் பாதிதாநுவிருத்தியினால் வறுத்தவித்தையினைப்போல அநுகூலப் பிரதிகூல ஞானமும் இராகத்துவேஷ (பஞ்சக்கிலேச) மும் சுபாசுபக் கிரியைகளும் தோற்றுகின்றன. ஆனால் அதன் பயனாகிய வரும்பிறப்பும் சுகதுக்கங்களும் உண்டாகா.

சொரூப ஞானத்தால் பிரஹ்மம் அடையப்படுகிறது. அந்தப் பிரஹ்மம் நித்தியமாயும், ஆநந்த சொரூபமாயும், துக்க சம்பந்தமின்றியதாயும் இருக்கிறது. ஆதலால் சொரூபஞானத்தால் நித்தியமும் துக்கசம்பந்த மில்லாததுமான பிரஹ்ம சொரூப ஆநந்தம் அடையப்படுகிறது.

இவ்விதமாகத் துக்கநிவிருத்திக்கும் பரமாநந்தப் பிராப்திக்குங் காரணம் சொரூபஞானமாம். ஆதலால் சொரூபம் அறியத்தக்கது.

இப்படி எவனுக்கு விவேகம் உண்டாகிறதோ அவன் * ஜிஞ்ஞாஸுவெனப்படுகிறான்.

4. ஸ்தூலசூக்ஷ்மகாரணசரீரங்களுக்குப் பின்னமாயுள்ள தன்சொரூபத்தைப் பிரஹ்மரூபமாக அபரோக்ஷமாய் அறிபவன் முக்தனெனப்படுகிறான்.

## 71. கிரந்தத்தில் ஜிஞ்ஞாஸுவுக்குப் பிரவிருத்தியுண்டாம்; முக்தர்முதலிய மூவருக்கு முண்டாகாதெனல்.

1-2. இவ்வாறு நால்வகைப் புருஷர் உளர். அவர்களுள் பாமரனுக்கும் விஷயிக்கும் விஷயசுகத்தில் திருப்தியுண்டாகிறது; சிலவிஷயிகளுக்குப் பரமசுகத்திலும் இச்சையுண்டாகின்றது. என்றாலும் அதனையடைதற்குரிய உபாயமல்லாததனை உபாயமாக நினைத்து அதில் பிரவர்த்திக்கிறார்கள். ஏனெனின் உபாயத்தின் ஞானம் சத்சங்கத்தினாலும் சத்சாஸ்திரத்தினாலுமுண்டாம்; அது அவர்களுக்கில்லை. ஆதலால் பாமரனுக்கும் விஷயிக்கும் சுகப்பிராப்தியின் பொருட்டுக் கிரந்தத்திற் பிரவிருத்தி உண்டாகாது. துக்க நிவிருத்தியின் பொருட்டும் அவர்கள் வேறு உபாயங்களில் பிரவர்த்தித்தலால் கிரந்தத்திற் பிரவிருத்தி உண்டாகிறதில்லை. ஆதலால் துக்கநிவிருத்தி சுகப்பிராப்திகளின் பொருட்டுப் பாமரவிஷயிகளுக்குக் கிரந்தத்திற் பிரவிருத்தி உண்டாகாது.

3. அங்ஙனமாயினும், ஜிஞ்ஞாசுவுக்கு விஷயசுகத்தில் திருப்தி உண்டாகிறதில்லை. ஆனால் பரமசுகத்திலும் துக்கத்தின் அத்தியந்த நிவிருத்தியிலும் இச்சை உண்டாகிறது. "இந்தப்பரமசுகப்பிராப்தியும் துக்கத்தின் அத்தியந்த நிவிருத்தியும் ஞானமின்றி உண்டாகாவெனச் சத்சங்கத்தால் விவேகமுண்டானவனுக்குக் கிரந்தத்திற் பிரவிருத்தி உண்டாகும்.

---

* 1. உத்தமன், 2. மத்திமன், 3. கனிஷ்டன் என்னும் பேதத்தால். ஜிஞ்ஞாஸுக்கள் மூவகையாவர்.

1. தீவிர ஜிஞ்ஞாஸை யுடையவனும் நான்கு சாதனங்களோடு அல்லது மந்த போதத்தோடு கூடியவன் உத்தம ஜிஞ்ஞாஸுவாவன்.

2. மந்த ஜிஞ்ஞாஸையினால் வேதாந்த சிரவணத்திற் பிரவர்த்திப்பவன் மத்திம ஜிஞ்ஞாஸுவாவன்.

3. மந்த ஜிஞ்ஞாஸையினால் நிஷ்காம கர்ம உபாசனையில் பிரவர்த்திப்பவன் கனிஷ்டஜிஞ்ஞாஸுவாவன்.

தைக் கர்த்தா போக்தா வடிவமாக அந்தக்கரணம் அறிவிக்கிறது. ஆதலால் சமுசாரிக்கு அந்தக்கரணம் விசேஷணமாம்.

இதனால் இது பெறப்பட்டது :—அந்தக்கரணத்துள்ள சேதனமும் அந்தக்கரணமும் சமுசாரி எனப்படுகிறது. ‡ இவ்வர்த்தத்தைமேல் விஸ்தாரமாகக் கூறுவாம்.

**74.** ராகத்துவேஷாதிக்கிலேசங்கள் சமுசாரியிடத்திருக்கின்றன; சாக்ஷியினிடத்தில்லை. சமுசாரி இடத்திலும் விசேஷணபாகமான அந்தக்கரணத்தில் இருக்கின்றன ; ¶ விசேஷ்யபாகமான சேதனத்திலில்லை. சமுசாரியின் விசேஷ்யமான சேதனபாகத்திற்கும் சாக்ஷிக்கும் பேதமில்லை.

1. ஒரே சைதன்னியம் அந்தக்கரணத்தோடு சமுசாரி எனப்படுகின்றது.
2. அந்தக்கரணத் தன்மையைவிட்டுச் சாக்ஷி எனப்படுகின்றது.

ஆதலால் சாக்ஷிக்கும் சமுசாரியின் விசேஷ்யபாகத்திற்கும் பேதமில்லை. விசேஷ்யபாகத்தில் கிலேசத்தை யங்கீகரிக்கும் பக்ஷத்தில் சாக்ஷியினும் கிலேசத்தை யங்கீகரிக்கவேண்டும். அன்றியும் "சாக்ஷி சர்வக் கிலேசமுமில்லாதது" என்பது வேதாந்தத்தின் சித்தாந்தம். ஆதலால்சமுசாரியின்விசேஷ்யபாகத்தில் கிலேசமில்லை ; ஆனால் விசேஷணமாத்திரமான அந்தக்கரணத்தில் கிலேசமிருக்கிறது. இந்த அபிப்பிராயத்தாற்றான் ராகத்துவேஷங்கள் புத்தியின் தர்மங்களாம், ஜீவனது தர்மங்க ளென்றென்று சொல்லப்படுகின்றன. இவ்விதத்தால் அந்தக்கரண விசிஷ்ட ஜீவனுக்குப் பிரஹ்மத்தோடு ஏகத்துவம் பொருந்தாதாயினும், அந்தக்கரண உபஹித சாக்ஷிக்குப் பிரஹ்மத்தோடு ஏகத்துவம் பொருந்தும்.

**75.** முன் (41) "சாக்ஷி அநேகம் ; பிரஹ்மம் ஏகம். ஆதலால் நாநா சாக்ஷிக்கும் ஏகப்பிரஹ்மத்திற்கும் ஏகத்துவம் பொருந்தாது. வியாபகமான ஏகப்பிரஹ்மத்தோடு சாக்ஷிக்கு அபேதம் அங்கீகரிக்கின், சாக்ஷியும் எல்லாச் சரீரங்களினும் வியாபகமாய் ஏகமேயாகும். இதனால் சர்வ சரீரங்களின் சுக துக்கங்களும் விளங்கவேண்டும்" என்று முன் கூறப்பட்டது.

அச்சங்கை பொருந்தாது. ஏனெனின் ஈசுவரசாக்ஷி ஏகமாம். ஜீவ சாக்ஷி அநேகமாயும் பரிச்சின்னமாயு மிருக்கிறது ; என்றாலும் வியாபகப் பிரஹ்மத்திற்கு வேறாக இல்லை. கடாகாசம் நாநாவாயும் பரிச்சின்னமாயுமிருக்கினும் மகாகாசத்திற்கு வேறாகாது; மகாகாச ரூபமாகவேயிருக்கிறது. அதுபோல நாநாவாயும் பரிச்சின்னமாயுமுள்ள சாக்ஷியும் பிரஹ்மத்திற்கு வேறாகாமல் பிரஹ்மரூபமாகவே யிருக்கிறது.

---

‡ இவ்வர்த்தம் 4-வது தரங்கத்துள்ள 201-202-இலக்கங்களிலும், அங்ஙனமே ஆறாவது தரங்கத்திலும் சொல்லப்படும்.

¶ எதன் ஆசிரிதமாய் விசேஷண மிருக்கின்றதோ அது விசேஷ்யபாக மெனப்படும்.

**76.** "சுகதுக்கங்கள் அந்தக்கரணவிருத்திக்கு விஷயமாகா" என்று முன் (43) சொல்லப்பட்டது.

அது பொருந்தாது. ஏனெனின், சுகதுக்கங்கள் சாக்ஷியால் விளங்குவனவாம்; அந்தச் சாக்ஷி நாநாவாம். அங்ஙனமாயினும், எப்போது அந்தக்கரணத்தின் பரிணமம் சுகரூபம் அல்லது துக்கரூபமாகிறதோ, அதேசமயத்தில் அந்தக்கரணத்தின் ஞானரூபவிருத்தி சுகதுக்கங்களை விஷயஞ்செய்வதாகிறது. அந்த விருத்தியி லாரூடமான சாக்ஷி அவற்றைப் பிரகாசிக்(அறி)கிறது. இவ்வாறு நூலாசிரியர்கள் சுகதுக்கங்கள் சாக்ஷிக்கு விஷயமாம்; விருத்தியின்றிக் கேவல சாக்ஷிக்கு விஷயமாகா என்று கூறியிருக்கின்றனர்.

இந்த ஸ்தானத்தில் இது இரகசியமாம்:—ஆகாசத்தில் கடாகாசமென்னும் பெயரும் ஜலத்தைக் கொண்டுவருதலாகிய காரியமும் கடரூப உபாதி திருஷ்டியால் தோற்றுகின்றன. அந்தத் திருஷ்டியின்றி அவை தோற்ற; ஆகாசமாத்திரமே தோற்றும். ஆதலால் கடாகாசம் மகாகாசரூபமாம்.

அங்ஙனமே சேதனத்தில் சாக்ஷியென்னும் பெயரும் தர்மசகித அந்தக்கரணத்தின் பிரகாசரூப காரியமும் அந்தக்கரணரூப உபாதி திருஷ்டியால் தோற்றுகின்றன. அந்தத் திருஷ்டியின்றி * அவை தோற்றுகிறதில்லை. ஆனால் சைதன்னிய மாத்திரமான பிரஹ்மமே தோற்றுகிறது. ஆதலால் சாக்ஷி பிரஹ்மரூபமாம்.

இந்த அபிப்பிராயத்தால் சாக்ஷி ஏகமென்று சொல்லப்பட்டது.

ஏனெனின், உபாதி திருஷ்டியின்றிச் சாக்ஷியில் அநேகத்துவமும் பரிச்சின்னத்துவமும் பிரதீதியாகிறதில்லை.

அந்தச் சாக்ஷி ஜீவபதத்தின் லக்ஷியமாம். இதனை † மேற்கூறுவாம்.

இவ்வாற்றால் ஜீவப்பிரஹ்ம ஐக்கியம் கிரந்தத்திற்கு விஷயமாதல் பொருந்துகின்றது.

## 77. பிரயோஜன மண்டநம்-(3) 77-92.

### 45-வது இலக்கத்துப் பூர்வபக்ஷத்தின் உத்தரம்.

### ‡ காரிய அத்தியாசத்தின் நிரூபணம். 77-84.

"பந்தம் சத்தியம். அது ஞானத்தால் நிவிருத்தியாகிறதில்லை. மித்தியா வஸ்துவின் நிவிருத்தி ஞானத்தினாலுண்டாகிறது. ஆத்மாவினிடத்தில் மித்

---

* வெள்ளைக் காகிதத்தின்பேரில் மை தடவுதலால் அதன் மத்தியில் வெண்மை எழுத்துக்கள் அமைக்கப்படின், அவ்வெழுத்திற்கும் வெள்ளைக் காகிதத்திற்கும் எங்ஙனம் சொல்மாத்திரம் பேதமோ, அங்ஙனமே சாக்ஷிக்கும் சுத்த சைதன்னியத்திற்கும் பேதமுளது. எங்ஙனம்மைவடிவ உபாதியின் திருஷ்டியின்றி எழுத்து என்னும் பெயர் இல்லையோ, ஆனால் அவ்வெள்ளைக் காகிதமாத்திரமிருக்கின்றதோ, அங்ஙனமே அந்தக்கரணவடிவ உபாதியின் திருஷ்டியின்றிச் சாக்ஷி யென்னும் பெயரில்லை; ஆனால் அந்தச் சுத்த சைதன்னியமே யிருக்கின்றது.

† இது மேல் 4-வது தரங்கத்தின் 201-202 இலக்கங்களிலும் அங்ஙனமே 6-வது தரங்கத்தின் 341 இலக்கத்திலும் சொல்லப்படும்.

‡ அஞ்ஞானத்தினாலாகிய ஸ்தூலசூக்ஷ்ம பிரபஞ்சவடிவப்பிரமம் காரியாத்தியாசமாம்.

தியா பந்தத்தின் சாமக்கிரியில்லை. ஆதலால் பந்தம் சத்தியமாம். அதன் நிவிருத்தி ஞானத்திலுண்டாகிறதில்லை." என்று முன் கூறப்பட்டது.

**அது பொருந்தாது.** ஏனெனின், பந்தம் மித்தையாம்; அதற்கு ஞானத்தினால் நிவிருத்தி பொருந்துகின்றது.

## 78. இலக்கம் 47-48-ல் உள்ள பூர்வபக்ஷத்தின் உத்தரம். 78-82.

"சத்திய வஸ்துவின் ஞானம் சம்ஸ்காரவாயிலாக அத்தியாசத்திற்கு ஹேதுவாம். **எங்ஙனம்** சத்தியமான சர்ப்பத்தின் ஞானம் சம்ஸ்காரவாயிலாகச் சர்ப்பாத்தியாசத்துக்கு ஹேதுவோ, **அங்ஙனமே** பந்தம் சத்தியமானால் சத்தியபந்தத்தின் ஞான முண்டாகும். சித்தாந்தத்திலோ அவ்வநாத்ம வஸ்துக்கள் எவையும் சத்தியமன்று. ஆதலால் சம்ஸ்காரவாயிலாக அத்தியாசத்திற்குச் சாமக்கிரியாகும் சத்திய வஸ்துவின் ஞானம் இல்லாமையால் பந்தம் அத்தியாசமன்று; ஆனால் சத்தியமாம்." என்று முன் சொல்லப்பட்டது.

### (1. சத்தியவஸ்து ஞான ஜந்நிய சம்ஸ்காரத்தின் கண்டநம்.)

**அச்சங்கை பொருந்தாது.** ஏனெனின், அத்தியாசத்தில் ஸம்ஸ்காரவாயிலாகச் சத்திய வஸ்துவின் ஞானம் ஹேதுவன்று. **ஆனால்** வஸ்துவின் ஞானம் ஹேதுவாம். அந்த வஸ்து சத்தியமாகுக அல்லது மித்தையாகுக. சத்திய வஸ்துவின் ஞானமே அத்தியாசத்தில் ஹேதுவாகுமாயின், ஒரு புருஷன் உண்மையான மாமரத்தைப் பார்த்ததில்லை. ஆனால் வித்தையாடியாற் காண்பிக்கப்பட்ட பொய் மாமரத்தைப் பலதடவை பார்த்தும், "இது மாமர" மென்று அவன் சொல்லக் கேட்டுமிருக்கிறான். அந்தப் புருஷன் இலுப்பை மரத்தை ஒருகாலத்திலும் பார்த்ததுமில்லை, "இது இலுப்பை மர" மென்று கேட்டதுமில்லை. அவனுக்கு அந்த இலுப்பை மரத்தைக் கண்டவுடன் அதனிடத்தில் மாமர அத்தியாச முண்டாகிறது. பூர்வபக்ஷியின் மதப்படி இந்த அத்தியாச முண்டாகலாகாது. ஏனெனின் உண்மையான மாமரத்தின் ஞானம் அவனுக்கில்லை. நம் மதப்படியே வித்தையாடியால் காண்பிக்கப்பட்ட பொய் மாமரத்தின் ஞானமிருத்தலால் இலுப்பை மரத்தில் மாமர அத்தியாச முண்டாகக்கூடும். ஆதலால் ஸஜாதீயவஸ்துவின் ஞானஜந்நிய ஸம்ஸ்காரமே அத்தியாஸத்துக்கு ஹேதுவாம்.

இந்த ஸம்ஸ்காரத்தை யுண்டுபண்ணும் ஞானமும் அதன் விஷயமும் மித்தையாகவாவது சத்தியமாகவாவது இருக்குக. ஸம்ஸ்காரவாயிலாக ஞானம் ஹேதுவாம்.

"ஞானஜந்நிய ஸம்ஸ்காரம் ஹேதுவா" மென்று கூறுதலிற் பொருட்பேதமில்லை; ஒருபொருளேயாம். ஏனெனின், "ஞானம் ஸம்ஸ்காரவாயிலாக ஹேது" என்பதன் பொருள் இதுவாம்:—ஞானம் ஸம்ஸ்காரத்திற்கு ஏது; ஸம்ஸ்காரம் அத்தியாசத்திற்கு ஹேது என்பதாம். ஆதலால் ஸம்ஸ்கார

வாயிலாக ஞானம் ஹேதுவென்று கூறுதலாலும் ஞானஜந்நிய ஸம்ஸ்காரமே அத்தியாஸத்திற்கு ஹேதுவென்பது சித்திக்கிறது.

**79.** (சித்தாந்தி:—) கேவல வஸ்துவின் ஞானமே அத்தியாசத்திற்கு ஹேதுவெனக் கூறின் பொருந்தாது. ஏனெனின், எது காரணமோ அது காரியத்திற்கு அவ்வியவஹித பூர்வகாலத்தில் இருக்கவேண்டுமென்பது நியமம். கடத்திற்கு ஹேதுவான தண்டசக்கராதிகள் கடத்திற்கு அவ்வியவஹித பூர்வகாலத்திலிருக்கின்றன. அதுபோல அத்தியாசத்திற்கு ஞானம் ஹேதுவாமெனக் கொள்ளின் அதுவும், அத்தியாசத்திற்கு அவ்வியவஹித பூர்வகாலத்தில் இருக்கவேண்டும்.

1. (பூர்வபக்ஷி:—) அது பொருந்தாது. ஏனெனின், எவனுக்குச் சர்ப்ப ஞான முண்டாயிருக்கிறதோ, அவனுக்கு ஞானமுண்டாகி ஒரு மாசத்திற்குப் பின்னும் ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாச முண்டாகின்றது. அது உண்டாகலாகாது. ஏனெனின், ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசத்திற்குக் காரணம் சர்ப்ப ஞானம். அது முன்னரே நாசமாய்விட்டது. ஆதலால் அது அத்தியாசத்திற்கு அவ்வியவஹித பூர்வகாலத்திலில்லை; பூர்வகாலத்திருக்கினும் அவ்வியவஹித பூர்வகாலத்தில் இல்லை.

(1) அவ்வியவஹித மென்பது மறைப்பின்றியதற்காம்.

(2) வியவஹித மென்பது மறைப்பு (இடையு) ள்ளதற்காம்.

2. காரியத்திற்கு முந்தியகாலத்தில் காரணமிருத்தல்வேண்டும். அது வியவஹித பூர்வகாலத்தி லிருக்குக; அல்லது அவ்வியவஹித பூர்வகாலத்தில் இருக்குக. "காரியத்துக்கு அவ்வியவஹித பூர்வகாலத்திற்முன் காரணமிருக்கவேண்டு" மென்னும் நியமத்தைக் கொள்ளின், "விஹித கர்மம் சுவர்க்கப்பிராப்திக்கும் நிஷித்தகர்மம் நரகப் பிராப்திக்கும் ஹேதுக்களா" மென்னும் சாஸ்திர வசனம் அப்பிரமாணமாய்விடும். ஏனெனின் காயிக, வாசிக, மானஸக் கிரியைகளுக்குப் பெயர் கர்மமாம். அந்தக் கிரியைகள் அநுஷ்டானகாலத்திற்குப் பின்னரே நாசமாய் விடுகின்றன. சுவர்க்க நரகங்கள் காலாந்தரத்தில் உண்டாகின்றன. ஆதலால் சுவர்க்க நரகப் பிராப்திக்கு அவ்வியவஹித பூர்வகாலத்தில் விஹிதநிஷித்த கர்மங்களில்லை. எங்ஙனம் வியவஹித பூர்வகாலத்தின் சுபாசுப கர்மங்கள் சுவர்க்க நரகப்பிராப்திக்கு முறையே ஹேதுக்களோ, அங்ஙனமே "வியவஹித பூர்வகாலத்தின் சர்ப்பஞானமும் ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசத்துக்கு ஹேதுவாம்." என்று இவ்வாறு கூறின்,

1-2. (சித்தாந்தி:—) அவ்வார்த்தை பொருந்தாது. ஏனெனின், எங்ஙனம் நஷ்ட ஞானமும் நஷ்ட கர்மமும் முறையே அத்தியாசத்திற்கும் சுவர்க்க நரகப் பிராப்திக்கும் ஹேதுவாகின்றனவோ, அங்ஙனமே இறந்துபோன குயவனுலும் நஷ்டமான தண்ட சக்கராதிகளாலும் கடம் உண்டாக

வேண்டும். ஏனெனின், எங்ஙனம் ரஜ்ஜுவில் சர்ப்ப அத்தியாசத்திற்கு வியவஹித பூர்வகாலத்தில் சர்ப்பஞானம் இருக்கின்றதோ, சுவர்க்க நரகப் பிராப்திக்கு வியவஹித பூர்வகாலத்தில் சுபாசுப கர்மங்கள் இருக்கின்றனவோ, அங்ஙனமே கடத்திற்கு வியவஹித பூர்வகாலத்தில் மரித்துப்போன குயவனும் நஷ்ட தண்டமும் இருக்கின்றன. அவற்றாலும் கடம் உண்டாதல் வேண்டும்; அங்ஙன முண்டாகிறதில்லை. ஆதலால் வியவஹித பூர்வகாலத்தில் உள்ளவஸ்து ஹேதுவாகிறதில்லை. ஆனால் அவ்வியவஹித பூர்வகாலத்திலுள்ள வஸ்து எதுவோ அதுவே ஹேதுவாகிறது.

சுபாசுப கர்மமும் காலாந்தரத்தில் வரப்போகிற சுவர்க்க நரகப் பிராப்திக்கு ஹேதுவாகிறதில்லை. ஆனால் சுப கர்மம் தனக்கடுத்த உத்தரக்ஷணத்தில் தர்மத்தை உற்பத்தி செய்கிறது. அசுபகர்மம் அதர்மத்தை உற்பத்தி செய்கின்றது. அந்தத் தர்மா தர்மங்கள் அந்தக்கரணத்தில் தங்குகின்றன. அவற்றால் காலாந்தரத்தில் சுவர்க்க நரகங்கள் அடையப்படுகின்றன. அதன் பின்னர் தர்மா தர்மங்கள் நாசமடைகின்றன. இந்த அபிப்பிராயத்தினாலேயே சாஸ்திரத்தில் சுபாசுப கர்மங்கள் அபூர்வவாயிலாகப் பலத்துக்கு ஹேதுவாம்; சாக்ஷாத் ஹேதுவன்றெனக் கூறியிருக்கின்றனர். தர்மா தர்மங்களுக்கே அபூர்வமென்றும், அதிருஷ்டமென்றும், புண்ணிய பாபமென்றும் பெயர். தர்மாதர்மங்களை யுண்டுபண்ணும் சுபாசுபக் கிரியையினையும் சிலர் தர்மாதர்மமென்று கூறுகின்றனர். பிரபஞ்சத்தில் சுபக்கிரியை செய்கிறவனை இவன் தர்மம் செய்கிறானென்றும், அசுபக்கிரியை செய்கிறவனை இவன் அதர்மஞ் செய்கிறானென்றும் ஜனங்கள் சொல்லுகிறார்கள். இந்தச் சுபாசுபக்கிரியைகளுக்குத் தர்மா தர்மங்களென்று பெயர் இல்லை. ஆனால் அந்தக் கிரியைகள் தர்மாதர்மங்களை யுண்டுபண்ணுவனவாம்; ஆதலால் கிரியைகளுக்குத் தர்மா தர்மங்களென்று பெயரிட்டிருக்கிறார்கள். ஆயுளை விருத்திசெய்யும் நெய்யைச் சாஸ்திரத்தில் ஆயுசென்று சொல்வதுபோலக் கிரியையினைத் தர்மாதர்மமென்பர்.

இவ்வாற்றால் அவ்வியவகித பூர்வகாலத்தில் ஹேது உளதாகின்றது.

**80.** ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசத்திற்கு அவ்வியவஹித பூர்வகாலத்தில் சர்ப்பஞானமில்லை. ஆதலால் சர்ப்பஞானம் ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசத்திற்கு ஹேதுவன்று. ஆனால் சர்ப்பஞானத்தினாலுண்டாகும் ஸம்ஸ்காரமே ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசத்திற்கு ஹேதுவாம். அங்ஙனமே கிளிஞ்சிலில் வெள்ளி அத்தியாசத்திற்கு ஹேது வெள்ளி ஞானத்தால் உண்டாகும் ஸம்ஸ்காரமாம். இவ்வாற்றால் சகல ஸம்ஸ்காரங்களுமே அத்தியாசத்திற்கு ஹேதுவாம்.

வஸ்துஞானம் ஸம்ஸ்காரத்திற்கு ஹேதுவாம். சுபாசுபகர்மங்களால் உண்டாகும் தர்மாதர்மங்கள் அந்தக்கரணத்தில் தங்குவதுபோல வஸ்துஞானத்தாலுண்டாகும் ஸம்ஸ்காரமும் அந்தக்கரணத்தில் தங்குகிறது.

எவனுக்கு முன் சர்ப்பஞான முண்டாகவில்லையோ, அவனுக்கு வேறு வஸ்துக்களின் ஞானத்தாலுண்டாகிய ஸம்ஸ்கார மிருந்தபோதிலும் ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசம் உண்டாகாது. எந்த வஸ்துவில் அத்தியாசமுண்டாகிறதோ, அதற்கு ஸஜாதீயமான வஸ்துவின் ஞானத்தாலுண்டாகும் ஸம்ஸ்காரம் அத்தியாசத்திற்கு ஹேதுவாகிறது; விஜாதீய வஸ்துவின் ஞானஜந்நிய ஸம்ஸ்காரம் ஹேதுவாகிறதில்லை. சர்ப்பத்திற்கு ஸஜாதீயம் சர்ப்பமேயொழிய வேறில்லை. சர்ப்பத்தின் பூர்வஞானம் எவனுக்கில்லையோ, வேறு வஸ்துக்களின் ஞானமிருக்கின்றதோ, அவனுக்கு ஸஜாதீயவஸ்து ஞானஜந்நிய ஸம்ஸ்காரம் இல்லாமையால் ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாசம் உண்டாகிறதில்லை.

ஸம்ஸ்கார மென்பது ஸூக்ஷ்மாவஸ்தை. இவ்வாற்றால் அத்தியாசத்திற்கு முன் உண்டாகிய ஸஜாதீய வஸ்துவின் ஞானஜந்நிய ஸம்ஸ்காரமே அத்தியாசத்திற்கு ஹேதுவாம்.

"சத்தியவஸ்துவின் ஞானஜந்நிய ஸம்ஸ்காரமே அத்தியாசத்திற்கு ஹேதுவாம்; மித்தியாவஸ்துவின் ஞானஜந்நிய ஸம்ஸ்காரம் ஹேதுவன்று" என்னும் நியமமில்லையென்பது மா மரத் திருஷ்டாந்தத்தால் முன் (78) பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் மித்தியாவஸ்துவின் ஞான ஜந்நிய ஸம்ஸ்காரமும் அத்தியாசத்திற்கு ஹேதுவாம்.

**81.** அது பந்தத்தின் அத்தியாசத்திலும் பொருந்துகின்றது. ஏனெனின், அகங்காராதி அநாத்ம வஸ்துக்களும் அவற்றின் ஞானமும் பந்தமெனப்படும்.

அந்த அநாத்ம வஸ்துக்கள் ரஜ்ஜுவில் சர்ப்பம்போல் எப்போது தோற்றுகின்றனவோ, அப்போதுதான் இருக்கின்றன; பிரதீதியாகாதகாலத்தில் இல்லை யென்பது எமது வேத சம்மத சித்தாந்தம். இந்தக் காரணத்தினலேயே சுழுத்தியில் சகலப் பிரபஞ்சமு மில்லையென்று பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. சுழுத்தியில் எப்பதார்த்தமும் பிரதீதியாகிறதில்லை. ஆதலால் சகலப் பிரபஞ்சமும் சுழுத்தியில் லயமாகின்றன. இதனைச் சாஸ்திரத்தில் * திருஷ்டி சிருஷ்டிவாத மென்பர். இப்பொருள் பின் (317-329) பிரதிபாதிக்கப்படும்.

இவ்வாறு அநந்த அகங்காராதிகளும் அவற்றின் ஞானமும் உற்பத்தியாய் லயமாகின்றன. அகங்காராதிகளின் பிரதீதி யுண்டாகுங் காலத்தில் இவைகளுண்டாகியும், பிரதீதி லயமாகுங்காலத்தில் இவை லயமாகியும் வருகின்றன. அகங்காராதிகளும் அவற்றின் ஞானமும் அத்தியாசமாமென்பது

---

* திருஷ்டியென்பது அவித்தையின் விருத்திவடிவ ஞானம்; அதன் சமகாலத்தில் சிருஷ்டி அதாவது பதார்த்த(விஷய)ங்களின் உற்பத்தி; அதன் வாதம் அதாவது சொல்லுதல் எப்பக்ஷத்திற் செய்யப்படுகின்றதோ, அப்பக்ஷத்தினைச் சாஸ்திரத்தில் திருஷ்டிசிருஷ்டிவாதமென்பர்.

அநிர்வசனீயக்கியாதியின் பிரஸ்தாபத்திற் சொல்லப்படும் அகங்காரம் சாக்ஷி பாஸியமென்பது விஷயப்பிரஸ்தாபத்தில் சொல்லப்பட்டிருத்தலால் அகங்காரத்தின் பிரதீதி சாக்ஷிரூபமாகவே யிருக்கிறது. அதற்கு உற்பத்தி லயங்கள் பொருந்தா. அங்ஙனமாயினும் அகங்காரத்தையும் சாக்ஷி விருத்தியினாலேயே பிரகாசிக்கிறது; சாக்ஷாத்தாகப் பிரகாசிக்கிறதில்லை. அந்த விருத்திக்கு உற்பத்திலயங்களிருத்தலால் அகங்காரப்பிரதீதிக்கும் உற்பத்தி லயங்கள் சொல்லப்படுகின்றன.

இவ்வாறு உத்தரோத்தர அகங்காராதிகளின் உற்பத்திக்கும் அவற்றினது ஞானத்தின் உற்பத்திக்கும் ஏது பூர்வபூர்வ மித்தியா அகங்காராதிகளின் ஞானஜந்நிய ஸம்ஸ்காரம் என்பது பொருந்துகிறது.

**82.** உத்தரோத்தர அகங்காராதிகளின் அத்தியாசத்துக்குப் பூர்வபூர்வ அத்தியாசத்தின் ஸம்ஸ்காரம் ஹேதுவாகுமெனல் பொருந்துமாயினும், முதலில் உண்டான அகங்காரத்திற்கும் அதன் ஞானத்திற்கும் ஸம்ஸ்காரம் ஹேதுவெனல் பொருந்தாது. ஏனெனின், அந்த முதல் அகங்காரத்திற்குமுன் வேறு அகங்கார முண்டாயிருக்குமாயின், அதன் ஞானத்தின் ஸம்ஸ்கார முளதாம். அந்த முதல் அகங்காரத்திற்குமுன் வேறு அகங்காரம் உண்டானதில்லை. அங்ஙனமே "சகல வஸ்துக்களின் முதல் அத்தியாசத்திற்கு ஹேது ஸம்ஸ்காரமெனல் பொருந்தாது" என்று கூறின்,

**சமாதானம்:**—இச்சங்கையும் சித்தாந்த வுணர்ச்சியின்மையா லுண்டாகின்றது. ஏனெனின், வேதாந்த சித்தாந்தம் இதுவாம்:—பிரஹ்மம், ஈசுவரன், ஜீவன், அவித்தை, அவித்தைக்கும் சைதன்னியத்திற்குமுள்ள சம்பந்தம், அநாதிவஸ்துக்களின் பேதம் என்னும் **ஆறும் சொரூபமாக** அநாதியாம். * உற்பத்தியில்லாதவஸ்து சொரூபமாக அநாதியெனப்படுகிறது. இந்த ஆறு வஸ்துக்களும் உற்பத்தியாகிறதில்லை. ஆதலால் அவை சொரூபமாக அநாதியாம்.

---

* 1. பிரஹ்மம் அவித்தைக்கு அதிஷ்டானமாயிருத்தலின், அது அவித்தை (மூலப் பிரகிருதி)யினின்றும் உண்டாகிறதில்லை. ஈசுவரஜீவராதிகள் பிரஹ்மமின்றிச் சித்தியாமையால் பிரஹ்மம் அந்நான்கினின்றும் உண்டாகிறதில்லை. ஆதலால் **பிரஹ்மம் அநாதி**யாம்.

2. பிரஹ்மம் நிர்விகாரமாயிருத்தலின் அதனினின்றும் அவித்தை யுண்டாகிறதில்லை. ஈசுவராதி நான்கன் சித்தியோ அவித்தையினது சித்தியின் அதீனமாயிருத்தலின் அவற்றினின்றும் அவித்தையுண்டாகிறதில்லை. ஆதலால் **அவித்தை அநாதி**யாம்.

3-4. ஜீவேசுவரர்கள் கேவலம் பிரஹ்மத்திலிருந்தாவது கேவலம் மாயையிலிருந்தாவது பரஸ்பரத்தினின்றாவது சுவசித்தியினது அதீனத்தின் பேதத்தினின்றாவது உண்டாகிறதில்லை. அவித்தியா சேதனங்களது சம்பந்தத்தின் சித்தியால் ஜீவேசுவரர்களின் சித்தி யுளதாகின்றது. அச்சம்பந்தம் தானும் அநாதியாயிருக்கின்றது. அதனினின்றும் அவர்களுண்டாகிறதில்லை. ஆதலால் ஜீவேசுவரர்களும் அநாதியாவர்.

அகங்காராதிகளுக்குச் சுருதியில் உற்பத்தி சொல்லப்பட்டிருத்தலால் அவை சொரூபமாக அநாதியாகாவிடினும் பிரவாகரூபமாகச் சகலவஸ்துக்களும் அநாதியாம். சகலவஸ்துக்களின் பிரவாகம் நீங்குகிறதில்லை. அநாதிகாலத்தில் ஒருகடமு மில்லையென்று சொல்லும்படியான அத்தன்மைய ஓர்காலமிருந்ததில்லை. ஆதலால் கடத்தின் பிரவாகம் அநாதியாம். இவ்வாற்றால் சகலவஸ்துக்களின் பிரவாகமும் அநாதியாம். பிரளயகாலத்திலும் சுழுத்தியிற்போல சகலவஸ்துக்களும் ஸம்ஸ்காரரூபமாயிருக்கின்றன.

ஆதலால் பிரபஞ்சத்தின் பிரவாஹம் அநாதியாயிருத்தலின் பிரபஞ்சம் * அநாதியெனப்படுகிறது. இத்தன்மைய ஞானமில்லாதவனுக்கு "முதல்அத்தியாசத்திற்கு ஹேதுவான ஸம்ஸ்காரம் பொருந்தாது" என்னும் சங்கையுண்டாகிறது. சித்தாந்தத்தில் எந்த அகங்காராதி வஸ்துக்களின் அத்தியாசமும் எல்லாவற்றிற்கும் முதலில் இல்லை. ஆனால் யாவும் தத்தம் பூர்வபூர்வ வத்தியாசங்களுக்கு உத்தரோத்தர அத்தியாஸங்களா யிருக்கின்றன. ஆதலால் சங்கை பொருந்தாது.

---

5. பிரஹ்மமும் அவித்தையும் அநாதியாகலின் அவற்றின் தாதாத்மிய சம்பந்தமும் அநாதியாம். அவற்றினின்றும் அது உண்டாகிறதில்லை. ஈசுவரன்முதலிய மூன்றன் சித்தியோ சம்பந்தத்தினது சித்தியின் அதீனமாயிருக்கின்றது. ஆதலால் அவற்றினின்றும் அது உண்டாகிறதில்லை. ஆதலால் அவித்தியாசேதனங்களின் சம்பந்தம் அநாதியாம்.

6. இவ்வைந்து வஸ்துக்களும் தாமே தம்மிலிருந் துண்டாகின்றனவெனக் கொள்ளின் ஆத்மாசிரயதோஷமுண்டாகும். ஆதலால் இவ்வைந்து வஸ்துக்களும் தாம்தம்மினின்று முண்டாகிறதில்லை. எதனால் இவற்றிற்கு உற்பத்தியில்லையோ, அதனால் அவ்வைந்து வஸ்துக்களுக்கும் பரஸ்பரம் பேதமுண்டு. அதற்கும் உற்பத்தி பொருந்தாது.

இவ்வாற்றால் இவ்வாறு வஸ்துக்களுக்கும் உற்பத்தியில்லையாகலின் இவை சொரூபமாக அநாதியாம். அவற்றுள்,

(1) பிரஹ்மம் மூன்றுகாலத்திலும் பாதிக்கப்படாததாம். ஆகலின் அநாதி அநந்தமாம்.

(2) அவித்தைமுதலிய ஐந்தும் ஞானத்தால் பாதத்தை யடைகின்றன. ஆகலின் அநாதி ஸாந்தமாம்.

* பிரபஞ்சம் அநாதி யாதலால் வெகுகாலம் நிலைத்திருப்பதாயிருத்தலின் சத்தியமாகுமே? என்னும் சங்கைக்கு,

இது சமாதானமாம்:—எங்ஙனம்: இரஜ்ஜுவில் சர்ப்பத்தின் பிரமமுண்டாகின்றது; சொப்பனமு முண்டாகின்றது. அது ஒருகடிகை, ஒரு சாமம், இரண்டுசாமம், நான்குசாமம் வரையிலும் பூர்வசித்தமும் அநாதிசித்தமுமாகக் காணப்படுகின்றது. அல்லது சர்ப்பமுதலிய பிரமம் வருஷபரியந்தமு மிருக்கின்றது. என்றாலும் இரஜ்ஜுவின் ஞானமும் ஜாக்கிரத்தின்ஞானமு முண்டாக,' அதன் முக்காலத்தின்மையின் நிச்சயவடிவ பாதமுண்டாகின்றது. ஆதலால் பிரபஞ்சம் மித்தையாம். இதனுனே பிரவாகவடிவமாக அநாதிஸாந்தமெனப்படுகின்றது.

இவ்வாற்றல் ஸஜாதீயவஸ்துவின் பூர்வஞானஜந்திய ஸம்ஸ்காரத்தால் அகங்காராதி பந்தத்தின் அத்தியாசம் சம்பவிக்கிறது.

## 83. இலக்கம் 49-ல் உள்ள பூர்வபக்ஷத்தின் உத்தரம் 83-84.

(2. பிரமேயதோஷத்தின் கண்டநம்.)

"மூன்றுவிதமான தோஷங்கள் அத்தியாசத்துக்கு ஹேதுவாம்; பந்தத்தின் அத்தியாஸத்தில் எத்தோஷமும் பொருந்தாதாகலின் பந்தம் சத்தியமா" மென்று முன் கூறப்பட்டது.

அச்சங்கை பொருந்தாது. ஏனெனின், தோஷமின்றி அத்தியாசம் உண்டாகாவிடின் அத்தியாசத்துக்குத் தோஷம் ஹேதுவாகும். வஸ்திரமுண்டாவதற்கு நூல், நாடா(நூலுழி), துரி (நூற்பாத்திருத்தும் படைமயிர்) இவைகள் ஹேதுக்களா யிருக்கின்றன. அவை இருந்தால் வஸ்திரமுண்டாகும்; அவை இல்லாவிடின் வஸ்திரமுண்டாகாது. அதுபோலத் தோஷம் அத்தியாசத்திற்கு ஹேதுவன்று; ஏனெனின், சாதிருசிய தோஷமின்றி ஆத்மாவினிடத்தில் ஜாதியின் அத்தியாச முண்டாகின்றது.

பிராமணத்துவாதி ஜாதி ஸ்தூலசரீர தர்மமாம்; ஆத்மாவின் தர்மமும் சூக்ஷ்மசரீரத்தின் தர்மமுமன்று. ஏனெனின் முன் சரீரத்திலிருந்த ஆத்மாவும் சூக்ஷ்மசரீரமும் வேறு சரீரம் அடையும்போதும் இருக்கின்றன. ஆனல் ஜாதிமாத்திரம் வித்தியாசப்படுகிறது. "முன் சரீரத்திருந்த ஜாதியே பின் சரீரத்தும் இருக்கவேண்டு"மென்னும் நியமமில்லை. ஆத்மாவின் அல்லது சூக்ஷ்ம சரீரத்தின் தர்மம் ஜாதியாகுமாயின், பின்சரீரத்தில் வேறு ஜாதி உண்டாகலாகாது. ஆதலால் ஜாதியானது ஆத்மாவின் தர்மமும் சூக்ஷ்மசரீரத்தின் தர்மமு மன்று. ஆனல் ஸ்தூலசரீரத்தின் தர்மமாம். அன்றியும் "நான் துவிஜன்" என்பதாகப் பிராமணத்துவ க்ஷத்திரியத்துவ வைசியத்துவ ஜாதிகளின் தோற்றம் ஆத்மாவினிடத்தி லுண்டாகின்றது. ஆதலால் ஆத்மாவினிடத்தில் ஜாதியின் அத்தியாசமிருக்கிறது. கயிற்றில் சர்ப்பம் பாரமார்த்திகமாயில்லாதிருந்தும் தோற்றுகின்றமையால் அதில் சர்ப்பாத்தியாச முண்டாகின்றது. அதுபோல ஆத்மாவினிடத்தில் ஜாதி பாரமார்த்திகமாயில்லாதிருந்தும் தோற்றுவதினல் ஆத்மாவினிடத்தில் ஜாதியின் அத்தியாசமிருக்கிறது.

மேலும் ஆத்மாவோடு ஜாதிக்கு சாதிருசியமில்லை. ஏனெனின்,

1. ஆத்மா வியாபகமாயும் ஜாதி பரிச்சின்னமாயு மிருக்கின்றன.
2. ஆத்மா பிரத்தியக்காயும் ஜாதி பராக்காயு மிருக்கின்றன.
3. ஆத்மா விஷயியாயும் ஜாதி விஷயமாயு மிருக்கின்றன.

இவ்வாற்றல் ஆத்மாவினிடத்தில் அதற்கு விரோதியான ஜாதியின் அத்தியாசமு முண்டாகிறது.

துவிஜாதியென்பது மூன்றுவர்ணத்திற்காம்.

எங்ஙனம் ஆத்மாவினிடத்தில் சாதிருசியமின்றி ஜாதியின் அத்தியாச முண்டாகிறதோ, அங்ஙனமே சாதிருசியமின்றி அகங்காராதி பந்தங்களின் அத்தியாசமும் ஆத்மாவினிடத்தி லுண்டாகிறது.

சாதிருசியதோஷம் அத்தியாசத்துக்கு ஹேதுவன்று. சாதிருசியதோஷம் அத்தியாசத்திற்கு ஏதுவாமாயின்,

1. ஆத்மாவினிடத்தில் ஜாதியத்தியாச முண்டாகலாகாது.

2. மேலும் * சங்கில் மஞ்சள்நிற அத்தியாசமுண்டாகலாகாது.

3. † கற்கண்டில் கைப்பு அத்தியாச முண்டாகலாகாது. ஏனெனின்,

வெண்மைக்கும் மஞ்சள்நிறத்துக்கும் விரோதமுண்டு; சாதிருசியமில்லை. அங்ஙனமே மதுரத்திற்கும் கைப்பிற்கும் விரோதமுண்டு; சாதிருசியமில்லை. ஆதலால் அதிஷ்டானத்தில் மித்தியாவஸ்துவின் சாதிருசியதோஷம் அத்தியாசத்துக்கு ஹேதுவன்று.

---

* நியாயமதத்தில் நித்தியமாயும் ஏகமாயும் அநேக தர்மி (வியக்தி) களிற் கலந்திருக்கும் தர்மம் ஜாதியென்று சொல்லப்படும். அதற்கும் ஆத்மாவுக்கும் சாதிருசியவடிவப் பிரமேயதோஷம் பொருந்துகிறது. ஆதலால் ஆத்மாவினிடத்தில் ஜாதியின் அத்தியாசமுண்டாகிறது. அதனால் பிரமேயதோஷம் அத்தியாஸத்துக்கு ஹேதுவாமென்று ஒருவன் சொல்லக்கூடு மென்பதை மனதிற்கொண்டு வேறு சங்கில் மஞ்சள்நிற அத்தியாஸ திருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறார்.

† அங்ஙனமாயின் சங்கில் மஞ்சள் அத்தியாசமில்லை. ஆனல் மஞ்சட்காமாலை தோஷமுள்ள நேத்திரத்திலிருக்கிற மஞ்சள் வர்ணம் சங்கில் ஒட்டுகிறது. ஆகையால் சங்கு மஞ்சளாய்த் தோன்றுகின்றது என்னும் சங்கை யுண்டாயிற்று.

ஆண்டுக் கூறுகின்றார்:—கடத்தில் பூசப்பட்ட சுவர்ணம் தட்டானுக்கும் அந்நியனுக்கும் தெரிவதுபோல சங்கிலுள்ள பீதவர்ணம் காமாலையுள்ளவனுக்கு மாத்திரம் தெரிகிறது; பிறனுக்குத் தெரிகிறதில்லை. ஆதலால் அந்தவர்ணம் நேத்திரத்தினின்றும் வெளியேபோய்ச் சங்கி லொட்டவில்லை; அது பிரமரூபமாயிருக்கிறது.

அங்ஙனமாயின், ஆகாசத்தில் பறந்தபக்ஷி எவனுடைய நேத்திரத்துக்குச் சமீபத்திலிருந்துபோகிறதோ, அவனுக்குமாத்திரம் வெகுதூரம் போகிறவரையில் தெரிகிறது; மற்றவனுக்குத் தெரிகிறதில்லை. அதுபோல எவன் கண்ணிலிருந்து மஞ்சள்வர்ணம் சங்கில் சென்றிருக்கிறதோ, அவனுக்குமாத்திரம் அது தெரிகிறது; மற்றவனுக்குத் தெரிகிறதில்லை யென்று சங்கை யுண்டாயிற்று.

ஆண்டுக் கூறுகின்றார்:—ஆகாயத்தில் பறந்தபக்ஷி எவன் கண்ணிற்குச் சமீபத்திலிருந்துபோனதோ, அவன் வேறொருவனுக்கு அதனை விரலினல் சுட்டிக் காட்டினல் தெரியும். அதுபோல சங்கிலுள்ள பீதவர்ணம் விரலினற் சுட்டப்பட்டும் பிறனுக்குத் தெரிகிறதில்லை.* ஆதலால் மஞ்சள்வர்ணம் சத்தியமன்று; பிரமவடிவாம்.

இவ்வாறு சங்கில் மஞ்சள் அத்தியாஸம் சாதிருசியமின்றி யுண்டாகின்றது. என்றலும் இத்திருஷ்டாந்தம் முற்கூறிய சங்கைசமாதானவடிவ விவாதத்தால் சித்திக்கிறது. பிரத்தியக்ஷசித்த வஸ்துவில் விவாதமுண்டாகிறதில்லை யென்னும் ஆசங்கையை மனதிற்கொண்டு, இம்மூன்றாவது கற்கண்டில் கைப்பத்தியாசத்தின் திருஷ்டாந்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

**84.** (3. பிரமாதா தோஷத்தின் கண்டநம்.)

அங்ஙனமே பிரமாதாவின் லோபபயாதி தோஷங்களும் அத்தியாசத்து க்கு ஹேதுவன்று. ஏனெனின், லோபமில்லாத வைராக்கிய புருஷனுக்கும் கிளிஞ்சிலில் வெள்ளி அத்தியாசமுண்டாகிறது; பூர்வபக்ஷியின் மதப்படித் தோஷமில்லாமையினால் அத்தியாச முண்டாகலாகாது. ஆதலால் பிரமாதா வின் தோஷமும் அத்தியாசத்துக்கு ஹேதுவன்று.

(4. பிரமாணதோஷத்தின் கண்டநம்.)

பிரமாணதோஷமும் அத்தியாசத்துக்கு ஹேதுவன்று. ஏனெனின், எல் லோருக்கும் ரூபமில்லாத ஆகாசத்தில் நீலவர்ணமும், கொப்பரை கூடாரம் என்பவற்றின் வடிவமும் தோற்றுகின்றன. ஆதலால் எல்லோருக்கும் ஆகா யத்தில் நீலவர்ணம், கொப்பரை, கூடாரம் என்பவற்றின் அத்தியாசமுண்டா கிறது. எல்லோருக்கும் நேத்திரவடிவப் பிரமாணத்தில் பித்தமுதலிய தோஷ மிருப்பதாகக் கூறுவது பொருந்தாது. ஆதலால் பிரமாணதோஷமும் அத்தி யாசத்துக்கு ஹேதுவன்று.

ஆகாயத்தில் உள்ள நீலமுதலியவற்றின் அத்தியாசத்தில் பிரமாணதோ ஷம் ஒன்றுமாத்திரம் இல்லையென்பதில்லை; சகலதோஷங்களுமில்லை; சாதி ருசியமுமில்லை; பிரமாதாவின் தோஷமுமில்லை. எங்ஙனம் சகலதோஷங்க ளின் அபாவத்தினாலும் ஆகாசத்தில் நீலமுதலியவற்றின் அத்தியாசமுண்டா கிறதோ, அங்ஙனமே ஆத்மாவினிடத்திலும் பந்தாத்தியாசம் தோஷங்களின் றியே உண்டாகிறது. ஆதலால் "தோஷங்களின்மையால் பந்தம் அத்தியாச ரூபமன்" றென்ற சங்கை பொருந்தாது. ஏனெனின், சகல தோஷங்களுமில் லாமலிருந்தும் ஆகாசத்தில் நீலவர்ணாதிகளின் அத்தியாசம் சகலபுருஷர்க ளுக்குமுண்டாகிறது. ஆதலால் தோஷம் அத்தியாசத்திற்கு ஏதுவன்று.

பித்தமுதலிய எத்தோஷங்களு மில்லாதவனுக்கும் ஆகாயம் நீலமுடைய தாயும் கொப்பரைவடிவினதாயும் கூடாரவடிவினதாயும் தோற்றுகின்றது. ஆதலால் பிரமாணதோஷம் அத்தியாசத்திற்கு ஏதுவன்று.

இவ்வாற்றால் * தோஷம் அத்தியாசத்துக்கு ஹேதுவன்று. ஆதலால் பந்தாத்தியாசத்தில் தோஷத்தின் அபேக்ஷையில்லை.

---

* தோஷம் அத்தியாஸத்துக்கு ஹேதுவன்றென்று கூறியதற்கு அபிப்பிராயம் இதுவாம்:—சகலதோஷங்களுமிருந்தால் அத்தியாஸ முண்டாகுமென்னும் நியமமில்லை. ஆனால் யாதேனும் ஒரு தோஷமிருந்தாலும் அத்தியாஸமுண்டாகும். இங்கு ஆகாசத்தில் நீலமுதலியவற்றின் அத்தியாசத்தில் எல்லாத் தோஷங்களுமில்லை யென்று சொல்லப் பட்டிருக்கின்றது. ஆதலால் ஒரு தோஷமும் அத்தியாசத்திற்கு ஏதுவன்று. அங்ஙனமா யினும் யாண்டு ஒரு தோஷமுமில்லையோ, ஆண்டு அவித்தையே தோஷமாம். முற்றும் தோஷமில்லையாயின், அத்தியாஸம் உண்டாகாது. ஒரு தோஷமுமின்றி அத்தியாசமுண் டாகாது. இதனாற்றான் ஸ்ரீமதுசூதனஸ்வாமிகள் அத்வைதசித்தியில் தோஷ ஜந்நியத் துவம் பிரமத்திற்கு இலக்ஷணமெனக்கூறியிருக்கிறார். இவ்விடத்தில் யாதொருதோஷமு

ஸம்க்ஷேபசாரீரகத்தில் பர்தாத்தியாசத்தைப்பற்றிச் சொல்லுமிடத்தில் * தோஷங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. கிரந்தம் விரியுமென்னும் பயத்தினால் நாமெழுதவில்லை. தோஷம் அத்தியாசத்துக்கு ஹேதுவாகுமாயின்

மின்றி அத்தியாஸமுண்டாவதாகச் சொல்வது பிரௌடிவாதமாம். பிரௌடி-தன்னுடைய உத்கிருஷ்டத்தன்மையின் பொருட்டு; வாதம் - சொல்லுதல்; பிரௌடிவாதமெனப்படும். இதில்

ஓர் துவைதவர்தி சங்கை செய்கின்றார்:—விவாதத்திற்கு விஷயமான ஜகத்து மித்தையன்று; அதிஷ்டானத்தின்சமானசத்தையுடையதாய்த்தோஷத்தினால்உண்டாகாததாயிருத்தலின்; யாதுயாது அஷ்டானத்தின் சமானசத்தை யுடையதாய்த் தோஷத்தினால் உண்டாகாததோ அதுஅதுமித்தையன்று; யாது அதிஷ்டானத்தின்சமானசத்தை யுடையதாய்த் தோஷத்தினால் உண்டாகாததாகாது, அங்ஙனமே தோஷத்தினால் உண்டாவதாயிருக்கின்றதோ, அது மித்தையன்றென்பதில்லை; ஆனால் மித்தையாம்; இரஜ்ஜு சர்ப்ப முதலியவற்றைப்போல வென்னும் வியதிரேக அநுமானத்தால் ஜகத்தினது அத்தியாசமில்லை.

அச்சங்கை பொருந்தாது. ஏனெனின், வியாவகாரிக இரஜ்ஜு முதலியன கற்பித சர்ப்பமுதலியவற்றிற்கு அதிஷ்டானமாயின், அந்தத்திருஷ்டாந்தத்தினால் முற்கூறிய அநுமானத்தின் சித்தி உண்டாகின்றது. விசாரித்துப் பார்க்குமிடத்துச் சர்ப்பமுதலியவற்றின் அதிஷ்டானம் இரஜ்ஜுமுதலிய உபாதிகளையுடைய சேதனமாம்; அல்லது விருத்தியை உபாதியாகவுடையசேதனமாம். இது நான்காவது தரங்கத்தில் அநிர்வசநீயக்கியாதியின் நிரூபணத்திற் சொல்லப்படும். ஆதலால் அந்தச் சேதனத்திற்குப் பரமார்த்த சத்தை யிருத்தலால், அதன் சமானசத்தையுடைய தோஷத்தின் அபாவம் திருஷ்டாந்தத்திலு மிருக்கிறது.

அல்லது, முக்கிய சித்தாந்த (திருஷ்டி சிருஷ்டிவாத) த்திலோ சகல காரியங்களுக்கும் பிராதிபாஸிகசத்தை யிருத்தலால், திருஷ்டாந்த ரஜ்ஜு சர்ப்பமுதலியவற்றிற்கும் தார்ஷ்டாந்த ஜகத்திற்கும் விலக்ஷணத்தன்மை யின்மையால், ஒரேசேதனம் இரஜ்ஜு சர்ப்ப முதலியவற்றிற்கும் கட முதலியவற்றிற்கும் அதிஷ்டானமாம். இதனாலும் அதிஷ்டானத்தின் சமானசத்தையுடைய தோஷத்தின் அபாவமிருக்கின்றது. ஆதலால் சகல அத்தியாசங்களுக்கும் அதிஷ்டானத்தினும் விஷமசத்தையுடைய தோஷத்தினால் ஆக்கப்படுந்தன்மை யிருக்கின்றது.

இவ்வாற்றால் ஏது திருஷ்டாந்தங்களின் இன்மையால் முற்கூறிய வியதிரேகி அநுமானத்தின் அசித்தியுளது. அதனால் பிரபஞ்சம் சத்தியமன்று; ஆனால் மித்தையேயாம்.

* இங்கு அத்தியாசத்திற்கு ஏதுவாகிய தோஷத்தைக் கூறுதல் இதுவாம்:—

1. அந்தக்கரணதேசத்திலுள்ள அஞ்ஞானத்தின் விக்ஷேபத்துக்கு ஹேதுவான சத்தியிலுள்ள சுபாசுப கர்மங்களின் ஸம்ஸ்காரரூப அதிருஷ்டம் பிரமாதாதோஷமாம்.

2. சேதனத்தில் வேறு பிரமாணமில்லாமையினால் தன் சொரூபமே பிரமாணமாம். அதிலிருக்கிற அவித்தை பிரமாணதோஷமாம்.

3. சேதனத்தில் நிரபேக்ஷ ஆந்தரத்தன்மையிருக்கிறது. பிரபஞ்சத்தில் சாபேக்ஷ ஆந்தரத்தன்மை யிருக்கிறது. சேதனத்தில் பாரமார்த்திக வஸ்துத்தன்மை யிருக்கிறது. பிரபஞ்சத்தில் அநிர்வசநீய வஸ்துத்தன்மையிருக்கிறது. ஆதலால் ஆந்தரத்தன்மை வஸ்துத்தன்மைகளால் சேதனத்தில் பிரபஞ்சத்தின் சாதிருசியம் சித்திக்கிறது. அது பிரமேயதோஷமாம்.

இவ்வாற்றால் ஸம்க்ஷேபசாரீரகமுதலிய கிரந்தங்களில் அத்தியாசத்திற்குக் காரணமான தோஷங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

அதை யெடுத்துச்சொல்லுவோம். அந்தத்தோஷம் அத்தியாசத்திற்கு ஹேது வன்று; அதனாலும் அது இங்கு நிரூபிக்கப்படவில்லை.

## * காரண அத்தியாச நிரூபணம் 85-92.

## 85. இலக்கம் 50-ல் உள்ள பூர்வபக்ஷத்திற்குச்சமாதானம் 85-86

**(5 அதிஷ்டானத்தின் விசேஷரூப அஞ்ஞானத்தின் கண்டநம்)**

"விசேஷவடிவத்தான் அறியப்படாதவஸ்துவில் அத்தியாசமுண்டாகும். ஆத்மா சுயம்பிரகாசம். அதனிடத்தில் அஞ்ஞானம் பொருந்தாது. ஏனெனின் இருளிற்கும் ஒளிக்கும் பரஸ்பரம் விரோதமுண்டு. மிகுந்த வெளிச்சத்திலுள்ள ரஜ்ஜுவில் சர்ப்பாத்தியாச முண்டாகாததுபோலச் சுயம்பிரகாசமான ஆத்மாவில் பந்தாத்தியாசம் உண்டாகாது." என்று முன்சொல்லப்பட்டது.

அச்சங்கையும் பொருந்தாது. ஏனெனின், ஆத்மா பிரகாசரூபமாயிருந்தாலும் அதன் சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று. ஆத்மசொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியாகுமாயின், சுழுத்தியில் பிரகாசரூப ஆத்மாவினிடத்தில் அஞ்ஞானம் தோற்றுகின்றது. அது தோற்றலாகாது.

கோர நித்திரைவிட்டெழுந்தவன் "நான் சுகமாய்த் தூங்கினேன், ஒன்றும் தெரியவில்லை" என்று அறிகிறான். இந்தஞானத்திற்குச் சுகமும் அஞ்ஞானமும் விஷயங்களாம். இந்த ஞானம் ஜாக்கிரகாலத்தில் பிரத்தியக்ஷமன்று. ஏனெனின், எந்தஞானத்தின் விஷயம் எதிரிலிருக்கிறதோ, அந்தஞானம் பிரத்தியக்ஷரூபமாம். ஜாக்கிரகாலத்தில் சுகமும் அஞ்ஞானமுமில்லை. ஆதலால் ஜாக்கிரத்தில் சுகத்தின் ஞானமும் அஞ்ஞானத்தின் ஞானமும் பிரத்தியக்ஷரூபமன்று; ஆனால் ஸ்மிருதி ரூபமாம். அந்த ஸ்மிருதி அறியப்படாத வஸ்துவினதுண்டாகாது; ஆனால் அறியப்பட்ட வஸ்துவினதே யுண்டாகும். ஆதலால் சுழுத்தியில் சுகம் அஞ்ஞான மென்பவற்றின் ஞானமிருக்கிறது. அந்தச் சுழுத்திஞானம் அந்தக்கரணம் இந்திரிய மென்பவற்றா லுண்டாகிறதில்லை. ஏனெனின் சுழுத்தியில் அந்தக்கரணமு மிந்திரியங்களும் இல்லை. ஆதலால் சுழுத்தியில் ஆத்மசொரூபமே ஞானமாம். ஞானம் பிரகாசம் என்பவற்றிற்குப் பொருள் ஒன்றே.

---

* பிரபஞ்சத்துக்குக் காரணம் அதிஷ்டானத்தின் விசேஷரூப அஞ்ஞானம். அதன் அத்தியாஸம் காரண அத்தியாஸம் எனப்படும். பிரபஞ்ச அத்தியாஸத்துக்குக் காரணம் அஞ்ஞானம். அஞ்ஞான அத்தியாஸத்துக்குக்காரணம் அந்நியமொன்றுமில்லை. ஆதலால் அஞ்ஞானத்திற்கு அத்தியாஸம் பொருந்தாது. என்றாலும் தீபத்தைப்போலும், சாங்கியர் கொண்டுள்ள சொப்பிரகாச ஆத்மாவைப்போலும், நையாயிகர் கொண்டுள்ள பேதத்தைப்போலும், அஞ்ஞானம் தன்னையும் பிறவற்றையும் நிர்வகிப்பதாம். ஆதலால் அதன் அத்தியாசம் பொருந்துகின்றது.

இவ்வாறு சுழுத்தியில் ஆத்மா பிரகாசரூபமாயிருக்கிறது. அந்தப் பிரகாசரூப ஆத்மாவில் சொரூபசுகமும் அஞ்ஞானமும் விளங்குகின்றன. ஆத்மசொரூபப் பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியாயின், சுழுத்தியில் அஞ்ஞானந் தோற்றலாகாது. ஆதலால் ஆத்மா பிரகாசரூபமாகவோ இருக்கிறது. ஆனால் அதன் சொரூபப் * பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று; மாறான ஆத்மாவின் சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்திற்குச் சாதகமாம்.

இவ்வபிப்பிராயத்தினாற்றான் வேதாந்த சாஸ்திரத்தில், "சாமானிய சைதன்னியம் அஞ்ஞானத்திற்கு விரோதி யன்று; விசேஷ சைதன்னியமே அஞ்ஞானத்திற்கு விரோதியா" மென்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கும் வியாபித்திருக்கிற சைதன்னியம் சாமானிய சைதன்னிய மென்றும், விருத்தியிலிருக்கிற சைதன்னியம் விசேஷ சைதன்னிய மென்றும் சொல்லப்படும். கட்டையிலிருப்பது சாமானிய அக்கினி. அது இருளிற்கு விரோதியன்று. கட்டையைக் கடைதலாலுண்டாகும் விசேஷ அக்கினி திரியிலேற்றப்பட்டு இருளிற்கு விரோதியாகிறது. அதுபோல வியாபக சைதன்னியம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்றாயினும், வேதாந்த விசாரத்தால் எந்த அந்தக்கரண விருத்தி பிரஹ்மாகாரமாகிறதோ, அதிலிருக்கிற சைதன்னியம் அஞ்ஞானத்திற்கு விரோதியாம்.

இவ்வாற்றால் கேவல சைதன்னியம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று. ஆனால்

1. † விருத்திசகித சைதன்னியம் அஞ்ஞானத்திற்கு விரோதியாம்.

2. அல்லது சைதன்னியசகிதவிருத்தி அஞ்ஞானத்திற்கு விரோதியாம்.

1. முதற்பக்ஷத்தில் அஞ்ஞானநாசத்திற்குச் சைதன்னியம் ஹேதுவாயும் விருத்தி சாதகமாயும் இருக்கின்றன.

2. இரண்டாவது பக்ஷத்தில் அஞ்ஞான நாசத்திற்கு விருத்தி ஹேதுவாயும் சைதன்னியம் சாதகமாயு மிருக்கின்றன.

இது அவச்சேதவாதத்தின் கிரமம்.

---

* அந்தகாரம் ஆகாயமுதலிய நான்குபூதங்களின் குணங்களாகிய சப்தஸ்பரிச ரச கந்தங்களை ஆவரணம் செய்கிறதில்லை. ஆனால் தேயுவின் குணமான ரூபத்தையே ஆவரணஞ் செய்கிறது. ஆதலால் அந்தகாரம் தேயுவின் சாமானிய சொரூபத்தை ஆசிரயித்து, அதனையே விஷயஞ்செய் (மறைக்) கின்றதாகலின், சாமானியதேயு அந்தகாரத்திற்கு விரோதியன்று. அங்ஙனமே அஞ்ஞானமும் சேதனத்தின் சாமானியப் பிரகாசத்தை ஆசிரயித்திருக்கின்றது; அதனையே விஷயஞ் செய்கின்றது. ஆதலால் சாமானிய சேதனம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று.

† அவச்சேதவாதத்தில் விருத்திஸகித சைதன்னியம் அல்லது சைதன்னியத்தோடு கூடிய விருத்தி விசேஷ சைதன்னிய (கற்பித விசேஷ சைதன்னிய) மெனப்படுகின்றது. அது அஞ்ஞானத்திற்கு விரோதியாம். இரண்டிலும் பிற்பக்ஷம் சிரேஷ்டமாம்; விருத்தியே ஆவரண பங்கத்திற்கு ஏதுவாயிருத்தலின்.

ஆபாச (202) வாதத்திலோ சாமானிய சைதன்னியத்தைப்போல விசேஷ சைதன்னியமும் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று. ஆனால் விருத்திசகித ஆபாசன் அல்லது ஆபாச சகித விருத்தி அஞ்ஞானத்திற்கு விரோதியாம்.

இவ்வாற்றால் பிரகாசரூப சைதன்னியம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று. ஆதலால் * அஞ்ஞானம் சைதன்னியத்தை யாசிரயித்துக்கொண்டிருக்கிறது. அந்த அஞ்ஞானத்தால் சூழப்பட்ட ஆத்மாவினிடத்தில் பந்தாத்தியாசம் பொருந்துகின்றது.

**86.** "சாமானியரூபத்தால் அறியப்பட்டும், விசேஷரூபத்தால் அறியப்படாமலு மிருக்கிற வஸ்துவில் அத்தியாச முண்டாகும். ஆத்மாவில் சாமானிய விசேஷபாவங்க ளில்லாமையினால் நிர்விசேஷமான ஆத்மா அறியப்பட்டும் அறியப்படாமலும் இருத்தல் பொருந்தாது. அதனிடத்தில் அத்தியாசம் சம்பவியாது." என்று முன் சொல்லப்பட்டது.

அவ்வார்த்தையும் பொருந்தாது. ஏனெனின், "ஆத்மா இருக்கிறது" என்று எல்லோருக்கும் விளங்குகிறது. ஆத்மா என்பது தன் சொரூபத்திற்காம். "யான் இல்லை" என்று ஒருவனுக்கும் தோற்றுகிறதில்லை. ஆனால் "யான் இருக்கிறேன்" என்று எல்லோருக்கும் தோற்றுகிறது. ஆதலால் "ஆத்மா இருக்கிறது" என்று எல்லோருக்கும் விளங்குகிறது. ஆனால் சைதன்னியமாயும் ஆநந்தமாயும் வியாபகமாயும் நித்யசுத்தமாயும் நித்தியமுக்தமாயும் ஆத்மா இருப்பதாக எல்லோருக்கும் விளங்குகிறதில்லை. ஆதலால் சைதன்னியாதி லக்ஷணங்களோடு கூடியதாக ஆத்மா அறியப்படவில்லை; ஆனால் சத்துவடிவமாக அறியப்பட்டதாம். இது அநுபவசித்தம். இந்த அநுபவசித்த வார்த்தை யுக்தியால் தள்ளப்படமாட்டாது.

1. எல்லோருக்கும் விளங்குகிற ஆத்மாவின் சத்ரூபம் சாமானியரூபமாம்.

2. கேவலம் ஞானிகளுக்கு விளங்குகிற ஆத்மாவின் சைதன்னிய ஆநந்தாதிரூபம் விசேஷரூபமாம்.

1. எது அதிககாலத்திலும் அதிக தேசத்திலுமுள்ளதோ அது சாமானியரூப மெனப்படும்.

2. எது சொற்பகாலத்திலும் சொற்பதேசத்திலு முளதோ, அது விசேஷரூபமெனப்படும்.

---

* சூரியனிடத்தில் அந்தகாரம் சம்பவியாததுபோல ஸ்வயம்பிரகாசமான ஆத்மாவில் அஞ்ஞானம் சம்பவியாது என்று முன் கூறப்பட்டது.

அச்சங்கை பொருந்தாது. ஏனெனின், சூரியாதிஜோதிகள் மகாதேஜஸின் விசேஷரூபங்களாம்; சாமானியரூபங்களன்று. ஆத்மாவின் ஸ்வரூபமோ சாமானியப் பிரகாசமாம். ஆதலால் அது அஞ்ஞானத்திற்கு விரோதியன்று. ஆதலால் திருஷ்டாந்த (சூரிய) தார்ஷ்டாந்த (சேதன)ங்களின் விஷமத்தன்மையால் முற்கூறிய சங்கைக்கு இடமில்லை.

ஆத்மாவின் சொரூபமே சேதன ஆநந்தாதிகளா யிருத்தலால் சத்ரூபம் போலச் சேதன ஆநந்தாதிகளும் எங்கும் வியாபகமாம். சத்தை யபேக்ஷித்துச் சேதன ஆனந்தாதிகள் சொற்ப தேசத்திலும், ஆநந்தாதிகளை யபேக்ஷித்துச் சத்ரூபம் அதிக தேசத்திலும் இருப்பதாகச் சொல்லுதல் கூடாது. ஆதலால் சத்ருபம் ஆத்மாவின் சாமானிய அம்ச மென்றும், சேதனுதிகள் விசேஷாம்ச மென்றும் சொல்லுதலும் பொருந்தாது. அங்ஙனமாயினும் சத்தின் பிரதீதி எல்லோருக்கும் அவித்தியாகாலத்திலும் உண்டாகிறது. "ஆத்மா சேதனுனந்தாதி ரூப" மென்னும் பிரதீதி எல்லோருக்கும் அவித்தியாகாலத்தி லுண்டாகிறதில்லை. கேவலம் ஞானிக்குமாத்திரம் உண்டாகிறது. அவித்தியாகாலத்தில் சேதனுனந்தாதிகளு மிருக்கின்றன; ஆனுல் தோற்றுகிறதில்லை. ஆதலால் இவை இல்லாதவை போன்றிருக்கின்றன. இவ்வபிப்பிராயத்தால்

1. சைதன்னியாதிகள் சொற்பகாலத் திருப்பனவாகச் சொல்லப்படுகின்றன.

2. சத்ரூபம் அதிககாலத்திலிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இவ்வாற்ருல் சத்ரூபத்திற்கும் சேதனுதிகளுக்கும் சாமானிய விசேஷ பாவங்களில்லையாயினும், சொற்பகாலத்திலும் அதிககாலத்திலும் தோன்றுவதால் சாமானிய விசேஷ பாவங்களைப்போல இவைகளிருக்கின்றன. இக்காரணத்தினுல்

1. ஆத்மாவின் சத்ரூபம் சாமானிய அம்சமெனப்படுகின்றது.

2. சேதனுதிகள் விசேஷ அம்ச மெனப்படுகின்றன.

ஆத்மா நிர்விசேஷமென்னும் சித்தாந்தத்திற்கும் ஹானியில்லை. ஆத்மாவில் சாமானிய விசேஷபாவங்களை அங்கீகரிக்கும் பக்ஷத்தில் "ஆத்மா நிர்விசேஷம்" என்னும் சித்தாந்தத்திற்கு ஹானியுண்டாகும். அந்தச் சாமானிய விசேஷபாவங்கள் அங்கீகரிக்கப்படவில்லை; ஆனுல் அவித்தையினுல் சாமானிய விசேஷ பாவங்களைப்போலப் பிரதீதி யுண்டாகின்றமையினுல் சாமானிய விசேஷபாவம் கூறுவர்.

இவ்விதமாகச் சத்ரூபத்தால் அறியப்பட்டதும், சேதன ஆனந்த நித்திய சுத்த நித்திய முக்த பிரஹ்மரூபத்தால் அறியப்படாததுமான ஆத்மாவில் பந்தத்தின் அத்தியாசம் பொருந்துகின்றது. அத்தியாசரூப பந்தத்திற்கு ஞானத்தால் நிவிருத்தியும் பொருந்துகின்றது. அதனுல் கிரந்தத்தின் பிரயோஜனம் சம்பவிக்கிறது.

## 87. இலக்கம் 51-58-ல் உள்ள பூர்வபக்ஷத்தின் உத்தரம் 87 - 92.

(பூர்வபக்ஷி:—) "நிஷித்தகாமிய கர்மங்களைத் தியாகஞ் செய்து நித்திய நைமித்திகப் பிராயச்சித்த கர்மங்களைச் செய்யவேண்டியது. நிஷித்த கர்மம் இல்லாததினுல் நீசலோகமும் காமிய கர்மம் இல்லாததினுல் உத்தமலோக

மும் அடையப்படமாட்டா. நித்திய நைமித்திக கர்மங்களைச் செய்யாததினு லுண்டாகும் பாவம் அவற்றைச் செய்வதினு லுண்டாகிறதில்லை. இந்த ஜன் மத்திலாவது முன் ஜன்மங்களிலாவது செய்த பாவங்கள் சாதாரண அசா தாரணப் பிராயச்சித்தங்களால் நிவிருத்தியாகின்றன. முன் செய்த காமிய கர்மங்களின் பலத்தில் இச்சை யிப்போ தில்லாததினுல் முமுக்ஷுவுக்கு அவற்றின் பயன் உண்டாகிறதில்லை. ஆதலால் முமுக்ஷுவுக்கு ஞானமின் றியே ஜன்மாபாவரூப மோக்ஷமுண்டாம்.'' என்று முன் சொல்லப்பட்டது.

(சித்தாந்தி:—) அது பொருந்தாது. ஏனெனின், நித்தியநைமித்திக கர்மங் களுக்கும் சுவர்க்கரூப பயனுண்டு என்பதனைப் பாஷியகாரர் யுக்தியினுலும் பிரமாணத்தினுலும் நிரூபித்திருக்கின்றனர். ஆதலால் நித்தியநைமித்திக கர் மங்களால் உத்தமலோகம் அடையப்படும்; ஜன்மாபாவம் சித்திக்கமாட் டாது. நித்திய நைமித்திக கர்மங்களின் பலத்தை யங்கீகரியாவிடின், அவற் றைப் போதிக்கும் வேதம் நிஷ்பலமாகும். ஏனெனின், நித்தியநைமித்திக கர்மங்களைச் செய்யாததினுல் பாப முண்டாகுமாயின், அவற்றைச் செய் வதினுல் பாப முண்டாகாதிருத்தலே அவற்றின் பலனுதல்பொருந்தும். அந்த நித்திய நைமித்திகங்களைச் செய்யாததினுல் பாபமுண்டாகிறதில்லை. ஏனெனின் அவற்றைச் செய்யாமலிருப்பது அபாவரூபம்; பாபம் பாவரூபம். அபாவத்திலிருந்து பாவ முண்டாகமாட்டாது. ஆதலால் "நித்திய நைமித் திக கர்மங்களைச் செய்யாததினுல் பாபமுண்டாகு'' மென்று கூறுதல் பொருந்தாது. நித்திய நைமித்திகங்களைச் செய்யாததினுல் பாப முண்டாகு மென்று கொள்ளின், "அபாவத்திலிருந்து பாவ முண்டாகமாட்டாது'' என்று கீதையின் 2-வது அத்தியாயத்தில் பகவான் சொல்லியிருக்கின்றுர். அதற்கு விரோதமுண்டாகும். ஆதலால் நித்தியநைமித்திக கர்மங்களின் அபாவத்தால் பாவரூப பாபத்தின் உற்பத்தி பொருந்தாது. இவ்வாறு நித் தியநைமித்திக கர்மங்களுக்குப் பாபமுண்டாகாமலிருப்பதே பயன் அன்று. ஆனுல் நித்தியநைமித்திக கர்மங்களின்றியும் பாபமுண்டாகாமை சித்திக் கின்றது. ஆகையால் நித்திய நைமித்திக கர்மங்களுக்குச் சுவர்க்கரூப பலனை அங்கீகரியாவிடின் கர்மம் நிஷ்பலமாகும்; நிஷ்பல கர்மத்தைப் போதிக்கும் வேதமும் நிஷ்பலமாகும். ஆதலால் நித்தியநைமித்திக கர்மங்களாலுஞ் சுவர் க்கபல னுண்டாகிறது.

**88.** "ஜன்மாந்தரத்தின் காமிய கர்மங்கள் இச்சை யில்லாமையினுல் பலனைக் கொடுக்கமாட்டா'' வென்று முன் கூறப்பட்டது.

அவ்வார்த்தையும் பொருந்தாது. ஏனெனின், கர்மரூபமான விதையினின்று இரண்டு முளைகளுண்டாகின்றன. ஒன்று வாசனை, மற்றொன்று அதிருஷ்டம். தர்ம அதர்மங்களுக்கு அதிருஷ்டமென்று பெயர். சுபகர்மத்திலிருந்து சுப வாசனையும் தர்மரூபமுளையு முண்டாகின்றன. அசுப கர்மத்திலிருந்து அசுப வாசனையும் அதர்மரூப முளையு முண்டாகின்றன. சுப வாசனையால் மேல் சுப

கர்மத்தில் பிரவிருத்தி யுண்டாகிறது; தர்மத்தால் சுகபோக முண்டாகிறது. இப்படியே அசுப வாசனையால் அசுப கர்மத்திற் பிரவிருத்தியும் அதர்மத்தால் துக்காநுபவமு முண்டாகின்றன. இவ்வாற்றால் வாசனாரூபமும் அதிருஷ்டரூபமுமான முளைகள் கர்மரூப வித்தினின்று முண்டாகின்றன. அவற்றில்,

1. "வாசனாரூப முளையோ உபாயத்தால் நாசமடைகிறது."

2. "அதிருஷ்டரூப முளை பலத்தைக் கொடுக்காமல் எவ்விதத்தாலும் நாசமடைகிறதில்லை."

இது சாஸ்திரசித்தாந்தம்.

1. அசுப கர்மத்தினின்றும் உண்டாகிய அசுபவாசனாரூப முளை சற்சங்காதி யுபாயங்களால் நாசமடைகிறது.

2. சுப கர்மத்தினின்று முண்டாகிய சுபவாசனாரூபமுளை துற்சங்க முதலியவற்றால் நாசமடைகிறது.

சாஸ்திரத்தில் எவ்வளவு புருஷார்த்தம் சொல்லப்பட்டிருக்கிறதோ, அதனால் பிரவிருத்திக்கு ஏதுவான வாசனை நசிக்கின்றது. ஆதலால் புருஷார்த்தமும் ஸபலமாம். போகத்துக்கு ஹேதுவான அதிருஷ்டம் நாசமடைகிறதில்லை. ஆதலால் "பலத்தைக் கொடுக்காமல் கர்மம் நிவிருத்தியாகிறதில்லை" என்று சாஸ்திரத்திற் சொல்லியதற்கும் விரோதமில்லை. இவ்வாற்றால் அஞ்ஞானிக்குப் பலபோகமின்றிக் கர்மம் நிவிருத்தியாகாது.

ஞானிக்கோ போகமின்றியும் கர்மம் நிவிருத்தியாகிறது. ஏனெனின் கர்மம், கர்த்தா, பலன் என்பன பரமார்த்தமாகவோ யில்லை; ஆனால் அவித்தையினாற் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அவித்தைக்கு ஞானம் விரோதியாம். ஆதலால் அவித்தியா கற்பித கர்மாதிகளும் ஞானத்தால் நாசமாகின்றன. சொப்பனத்தில் நித்திரையினால் தோன்றும் பதார்த்தம் ஜாக்கிரகாலத்தில் நித்திரையின் நிவிருத்தியினால் தோன்றாததுபோல, அவித்தியாரூப நித்திரையினால் தோன்றும் கர்மம் கர்த்தா பலன் என்பனவும் ஞானதசை வடிவ ஜாக்கிரத்தில் அவித்தையின் நிவிருத்தியால் அபாவமாகின்றன; ஞானமின்றி அபாவமாகிறதில்லை.

1. இச்சையில்லாமையினால் கர்மத்தின்பலபோக முண்டாகாதெனின், ஈசுவரனது சங்கற்பம் மித்தையாகும். ஏனெனின் "பலபோகமின்றி அஞ்ஞானிக்குக் கர்மம் நிவிருத்தியாகா" தென்பது ஈசுவர சங்கற்பம். இச்சையின்மையால் செய்த கர்மத்தின் பயனுண்டாகாதெனின், ஈசுவர சங்கற்பம் பொய்யேயாகும். "ஈசுவரன் சத்தியசங்கற்பன்" என்னும் வார்த்தை சாஸ்திரத்தில் பிரசித்தம். ஆதலால் "இச்சையின்மையால் முன்செய்த காமிய கர்மத்திற்கு பலனுண்டாகா" தென்பது விருத்தம்.

2. இச்சை யில்லாமையினாலேயே காமிய கர்மபல முண்டாகாதெனின், அசுப கர்மத்தின் பலன் ஒருவருக்குமுண்டாகலாகாது. ஏனெனின், அசுப கர்மத்தின் பயனாகிய துக்கத்தில் ஒருவனுக்கு மிச்சை யுண்டாகிறதில்லை.

*ஆதலால் ஞானமின்றிக் கர்மபலத்தின் அபாவம் உண்டாகாது.*

**89.** "எங்ஙனம் *கர்மத்தின் அநுஷ்டானகாலத்தில் இச்சையில்லாதவனுக்குக் கர்மத்தின் பயன் வேதாந்த மதத்தில் அங்கீகரிக்கப்படவில்லையோ,* அங்ஙனமே *கர்மாநுஷ்டானத்திற்குப் பிறகும் புருஷனது இச்சை நீங்கிவிடுமாயின் கர்மபலன் உண்டாகா"* தென்று முன் (57) சொல்லப்பட்டது.

அவ்வார்த்தையும் *வேதாந்த சித்தாந்தத்தைத் தெரியாது கூறியதாம். ஏனெனின், பலத்தில் இச்சையுடன் கர்மம் செய்கிறவனுக்கும் இச்சை யில்லாமற் கர்மம் செய்கிறவனுக்கும் கர்மபலபோகம் நிச்சயமாகவே யுண்டாகும். ஆனால் இச்சையின்றிய கர்மத்தினால் அந்தக்கரணம் சுத்தமாகிறது. இச்சையோடு கர்மஞ் செய்கிறவனுக்குக் கேவலம் போகமோ உண்டாகிறது; ஆனால் அந்தக்கரணம் சுத்தமாகிறதில்லை.*

1. "*இச்சை யில்லாமற் கர்மத்தைச் செய்வதனால் அந்தக்கரணஞ் சுத்தமாகிச் சிரவணத்தினால் ஞானமுண்டாய்விடுகின்றது. அவனுக்குக் கர்மத்தின் பலனுண்டாகிறதில்லை.*"

2. "*பலாபேக்ஷையின்றிக் கர்மஞ் செய்தும் சிரவண மில்லாததினாலாவது அல்லது வேறு எக்காரணத்தினாலாவது ஞான முண்டாகாதவனுக்கு இச்சையின்றிய கர்மத்தின் பல போகம் நிவிருத்தியாகாது.*"

இது வேதாந்த சித்தாந்தம்.

*ஆதலால் ஞானமின்றிக் கர்மத்தின் பலபோகம் * நிவிருத்தியாகாது.*

**90.** "*பிராயச்சித்தத்தினால் சகல அசுப கர்மங்களும் நாசமாகின்றன*" என்று முன் கூறப்பட்டது.

அவ்வார்த்தையும் பொருந்தாது. *ஏனெனின், அநந்தகற்பத்தின் அசுபகர்மங்கள் எவையோ, அவற்றிற்கு ஒரு ஜன்மத்தில் பிராயச்சித்தம் பொருந்தாது. கங்காஸ்நானம் ஈசுவரநாமோச்சாரண முதலியனவாகிய சர்வபாவங்களையும் நாசஞ்செய்யும் சாதாரணப் பிராயச்சித்தங்கள் எவையோ, அவைகளும் ஞானத்திற்கே சாதனங்களாம். ஆதலால் சகல பாவங்களையும் நாசஞ் செய்வனவாகச் சொல்லப்படுகின்றன. இதனால் ஞானத்தினாலேயே சகல பாவங்களும் நாசமாகின்றன.*

---

* *போகம் பிராயச்சித்தம் ஞானம் என்னும் மூன்றினாலும் கர்மத்தின் நிவிருத்தியுண்டாகின்றது. இதற்கு நான்காவது காரணமில்லை.*

1. *அவற்றுள், பிராரப்த கர்மம் போகத்தினால் நிவிருத்தியாகின்றது.*

2. *செய்யப்படும் கர்மம் பிராயச்சித்தத்தினாலும் ஞானத்தினாலும் நிவிருத்தியாகின்றது.*

3. *சஞ்சிதகர்மத்தின் சிறிது நீக்கம் சாதாரணப் பிராயச்சித்தத்தினாலுண்டாகிறது, முழு நிவிருத்தியும் ஞானத்தினாலுண்டாகின்றது.*

**91.** "நித்தியநைமித்திக கர்மங்களைச் செய்வதனால் உண்டாகும் கிலேசம் பூர்வசஞ்சித நிஷித்த கர்மங்களின் பயனாகவிருத்தலால் அவற்றிற்கு வேறு பயனில்லை" யென்று முன் சொல்லப்பட்டது.

அவ்வார்த்தையும் பொருந்தாது. ஏனெனின், சஞ்சித நிஷித்தகர்மங்கள் பலவிதமாயிருத்தலால் அவற்றின் பயனாகிய துக்கமும் பலவிதமாயிருக்கின்றது. கர்மானுஷ்டானத்தின் கிலேசமே அவற்றின் பயனெனல்பொருந்தாது.

**92.** "சகலசஞ்சித காமிய கர்மங்களாலும் ஒரேசரீர முண்டாகு" மென்று முன் (57) சொல்லப்பட்டது.

அவ்வார்த்தையும் பொருந்தாது. ஏனெனின் சஞ்சிதகாமிய கர்மங்கள் அநேகமாம். அவற்றிற்கு ஒரு ஜன்மத்தில் அநுபவம் பொருந்தாது.

ஒருவனுக்கு ஒரேகாலத்தில் நாநாசரீரங்களால் போகம் சொல்லப்பட்டது. அதுவும் சித்தயோகிக்குப்பொருந்துமேயன்றி மற்றவர்கட்குப் பொருந்தாது. சித்தயோகிக்கும் மற்ற எல்லாச்சாமார்த்தியங்களுமுண்டாகும்; ஆனால் ஞானமின்றி மோக்ஷம் உண்டாகா" தென்பது வேதத்தின் சித்தாந்தம்.

இவ்வாற்றால் காமியகர்மங்களையும் நிஷித்தகர்மங்களையும் விட்டுக்கேவலம் நித்தியநைமித்திக கர்மங்களை அஞ்ஞானிசெய்யின், அவனுக்கு நித்தியநைமித்திக கர்மங்களின் பயனை அநுபவித்தற் பொருட்டும் முன் செய்த சுபாசுப கர்மங்களின் பயனை அநுபவித்தற்பொருட்டும் அநேகசரீரங்கள் உண்டாகும்; மோக்ஷமுண்டாகாது. ஆதலால் ஞானவாயிலாகப் பந்தம் நிவர்த்தியாவதே கிரந்தத்தின் பிரயோஜனமாதல் பொருந்துகின்றது. சொப்பனத்தில் தோற்றும் பொய்ப்பொருள் ஜாக்கிரம் வந்தாலன்றி நிவர்த்தியாகாததுபோல, அஞ்ஞானத்தில் தோற்றும் பொய்யான பந்தமும் ஞானரூபஜாக்கிரம் வந்தாலன்றி நிவர்த்தியாகாது.

## 93. சம்பந்தமண்டநம். (4)
## கிரந்தத்தின் ஆரம்பம் பொருந்துகின்றது.

இவ்வாற்றால் கிரந்தத்திற்கு அதிகாரி, விஷயம், பிரயோஜனம் என்பவை சம்பவிக்கின்றன. அதிகாரிமுதலியன சம்பவித்தலால் சம்பந்தமும் சம்பவிக்கிறது. ஆதலால் கிரந்தத்தின் ஆரம்பம் பொருந்துகின்றது.

அநுபந்தவிசேஷநிரூபணமென்னும்
இரண்டாவது தரங்கம்
முற்றிற்று.

ஓம்.

ஸ்ரீகணேசாயநம:.

# ஸ்ரீவிசாரசாகரம்.

## மூன்றாவது தரங்கம்.

ஸ்ரீ குரு சிஷ்ய லக்ஷணம். 94-96.
குரு பக்தி பயன்களின் றன்மையை நிரூபித்தல். 97-108.

### 94. கிரந்தாரம்பத்தின் பிரதிஞ்ஞை.

நான்கு அநுபந்தத்தோடு கிரந்தத்தை யறிந்து ஞானத்துடன் கூடிய குருவினிடத்தில் எவன் கிரந்தத்தைப் படிக்கிறனே, அல்லது ஏகாக்கிரசித்தத்தோடு கேட்கிறனே, அவன் மோக்ஷத்திற்கு மார்க்கமான ஞானத்தையடைவான்.

குருசிஷ்யஸம்வாதத்தால் அர்த்தநிரூபணம் பண்ணுவதால் கேட்பவனுக்குப் போதம் சுலபமாயுண்டாகுமென்னும் காரணத்தால் குருசிஷ்யசம்வாதமாகக் கிரந்தம் ஆரம்பிக்கப்படுகிறது.

### 95. ஸ்ரீ குருலக்ஷணம்.

வேதாத்தியயனஞ் செய்து அதன் பொருளை யறிந்து ஜீவப்பிரஹ்மஐக்கியநிச்சயத்தால் ஆத்மஞானத்தில் நிலைத்தவரே குருவாவர். வேதாத்தியயனஞ்செய்தும் ஆத்மஞானத்தில் நிஷ்டையில்லாதவர் தாம் முக்தராயினும் பிறருக்கு உபதேசஞ்செய்யத்தக்க குருவாகார். ஏனெனின், ஜிஞ்ஞாசுவின் சந்தேகங்களைப் போக்க அவருக்கு யுக்திகள் தோன்ற. சந்தேகங்க ளெழும்பாத உத்தம ஸம்ஸ்காரத்துடன்கூடிய ஜிஞ்ஞாசுவை யுபதேசிக்க இவர் சமர்த்தரானாலும் எல்லோருக்கு முபதேசிக்கத்தக்கவ ராகாமையின் ஆசாரிய ராகார். ஆனல்,

1. வேதாத்தியயனம் பண்ணினவரா யிருத்தல்வேண்டும்.

2. ஆத்மஞானநிஷ்டை யுடையவரா யிருத்தல்வேண்டும். அவரே ஆசாரியரெனப்படுவார்.

3. அவர் சிஷ்யனுடைய புத்தியில் தோற்றும் ஐவகைப் பேதங்களையும் * நாநாவித யுக்திகளால் கெடுப்பதிற் சமர்த்தராதல்வேண்டும். அப்பேதங்களாவன:-ஜீவஈசுவரபேதம், ஜீவர்களின் பரஸ்பரபேதம், ஜீவஜடபேதம், ஈசுவர ஜடபேதம், ஜடஜடபேதம் என்பனவாம். இப்பேதங்களை அவர் கண்டிக்கவேண்டும். ஏனெனின் பேதம் பயத்திற்குக் காரணம். ஆதலால் பேதத்தையவசியம் நிராகரிக்கவேண்டும்.

4. பேதத்தின் நிராகரணத்தினால் அத்துவயமாயும் அவித்தியாதி மலரகிதமாயுமுள்ள பிரஹ்மம் எதுவோ அதனைத் தரிசிப்பிக்க (தனது சொரூபமாகச் சாக்ஷாத்கரிக்கச்செய்ய) வேண்டும்.

5. சகல சமுசாரத்தையும் மித்தியாவடிவமாக உபதேசிக்கவேண்டும்.

இத்தன்மைய அற்புத உபதேசத்தைச் செய்பவர் ஆசாரியரெனப்படுகின்றார். ஞானமின்றித் தன் தலையை மொட்டை யடித்துக்கொண்டும் சிஷ்யனையு மிப்படிச் செய்விப்பவராவது, வேறோர் சம்பிரதாயப்படி சின்னங்களை மாத்திரம் தரிக்கும்படிச் செய்பவராவது ஆசாரியராகார். சமுசாரமாகிய முதலைவாயினின்றும் விடுவிக்கிறவரும் தத்துவபோதனையைச்செய்கிறவருமாயுள்ளவரே குரவராவர்; வேஷதாரிகள் குரவராகாரென்று அறிஞர் கூறுவர்.

## 96. சிஷ்யனது லக்ஷணம்.

சாஸ்திரானுசாரமாகத் தேசிகர்லக்ஷணம் சொல்லப்பட்டது. எந்தச் சாதனத்தால் கிரந்தத்தில் அதிகாரமுண்டாகின்றதோ அந்தச்சாதனம் சிஷ்யனது லக்ஷணமாம். இதனால் முன் கூறப்பட்ட அதிகாரியின்லக்ஷணமே சிஷ்யனது லக்ஷணமெனத் தெரிந்துகொள்க.

## 97. குருபக்தியின் பலவர்ணனம்.

குருவினிடத்தில் ஈசுவரனிடத்தினும் அதிகபக்தி செய்யவேண்டும். ஏனெனின், சகல சாஸ்திரங்களினும் சமர்த்தனாயுள்ளவனாயின் அவனும் குருவுபதேசமின்றி ஞானத்தை யடையான்.

---

* ஐந்து பேதங்களின் கண்டன யுக்திகள்:—

1. ஜீவேசுவரர்களின் பேதம் கற்பிதம்; அவித்தியா மாயாரூப உபாதிகளா லாயினவையாயிருத்தலின்; கடாகாசமடாகாசங்களின் பேதம்போல.

2. ஜீவர்களின் பரஸ்பரபேதம் கற்பிதம்; ஆபாஸ சகித அந்தக்கரணரூப உபாதியினாலாகியனவா யிருத்தலின்; நாநா கடாகாசங்களின் பேதம்போல.

3. ஜீவஜடங்களின் பேதம் கற்பிதம்; ஸாபாஸ அந்தக்கரணநிராபாஸ நாமரூபமய உபாதிகளாலாகியனவா யிருத்தலின்; சொப்பனத்திலுள்ள சராசரங்களைப்போல.

4. ஈசுவரஜடபேதம் கற்பிதம்; ஸாபாஸமாயை நாமரூபமய உபாதிகளாலாகியனவாயிருத்தலின்; சாக்ஷி சொப்பனப் பிரபஞ்சங்களின் பேதத்தைப்போல.

5. ஜடஜடங்களின் பேதம் கற்பிதம்; நாமரூபமய உபாதியினாலாகியனவா யிருத்தலின்; இரஜ்ஜுவிற் கற்பிதசர்ப்ப தண்டமுதலியவற்றின் பேதம்போல.

இவ்வைவகை அநுமானங்களும் பஞ்சபேதத்தின் கண்டனத்தில் யுக்திகளாம்.

முற்கூறியதனையே திருஷ்டாந்தத்தால் கூறுவாம்:—

வேதரூபமான சமுத்திரம் குருவின்றி உப்பைப்போல் க்ஷாரமாயிருக்கிறது. க்ஷார (உப்பு) சமுத்திரத்தில் விழுந்தவன் அந்த ஜலத்தைப் பானஞ்செய்து கேவலம் உவர்ப்பை யநுபவிக்கிறான். அதனால் கிலேசத்தை யடைகிறான். அங்ஙனமே குருவின்றி வேதார்த்தத்தை விசாரிக்கிறவன் பேதரூபமான க்ஷாரத்தை யநுபவித்து ஜனனமரணவடிவ துக்கத்தை யடைகிறான். இக்காரணத்தினால் ராமாநுஜர் மத்துவாசாரியர் முதலிய அநேகர் வேதார்த்தத்தை விசாரித்தும் குருமுகமாக விசாரியாமையினால் பேதத்தில் நிச்சயத்தை யடைந்து ஜநநமரணரூப துக்கத்தையே யடைந்தார்கள்; முக்திரூப ஆநந்தத்தை யடையவில்லை. ராமாநுஜர் முதலியோரும் வேதத்தைத் தங்கள் குருமுகமாய் விசாரித்து வியாக்கியானங்களைச் செய்திருக்கின்றார்கள். என்றாலும் எவர்கள் மூலமாய் அவர்கள் விசாரித்தார்களோ அவர்கள் குருமாரல்லர். ஏனெனின் "ஜீவப்பிரஹ்ம ஐக்கியத்தை யுபதேசிக்கிறவரே குருவாவரென்று முன் குருலக்ஷண (95) பிரசங்கத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு உபதேசித்தவர்கள் ஜீவப் பிரஹ்ம பேதத்தை யுபதேசித்திருப்பதால் அவர்களிடத்தி லுபயோகிக்கும் குருசப்தம் ஜயினர்கள் தங்கள் ஆசாரியரிடத் துபயோகிக்கும் குருசப்தம்போலாம். ஜயினர்கள்போல் பேதவாதிகளின் சிஷ்யர்களும் தங்களுக்கு வேதோபதேசஞ் செய்கிறவர்களைக் குருவென்று சொல்லுகிறார்கள்; ஆனால் அவர்கள் குரவராகார். ஆதலால் ராமாநுஜர் முதலிய பேதவாதிகள் குருமுகமாக விசாரித்தவர்களாகார். இக்காரணத்தால் பேதத்தில் அபிமானம் வைத்து ஜநநமரணரூப துக்கத்தை யடைகிறார்கள்.

அங்ஙனமே மற்றும் முன் லக்ஷணங்களுடன் கூடிய குருவின்றித் தாமாகவே வேதார்த்தத்தை விசாரிப்பவர்களும், பேதவாதிகளிடத்தில் படித்து விசாரிப்பவர்களும் பேதமென்னும் க்ஷாரத்தை யநுபவித்து ஜநநமரணரூப துக்கத்தையே யநுபவிக்கிறார்கள்.

மேகவடிவ பிரஹ்மவித்தென்னும் குருமுகமாகக் கேட்டு விசாரிப்பவர்களுக்கு வேதம் அமிர்தத்தினும் அதிக ஆநந்தத்திற்கு ஹேதுவாகிறது. எங்ஙனம் சமுத்திர ஜலம் இயல்பாகவே யுப்பா யிருந்து, மேகவாயிலாக மதுரமாகின்றதோ, அங்ஙனமே வேதார்த்தமும் பிரஹ்மஞானியாகிய குருவாயிலாக ஆநந்தத்திற்கு ஹேதுவாகிறது.

## 98. ஞானியாகிய குருவினின்றும் வேதார்த்தத்தைப் படித்தலும் கேட்டலும் தகுதியாமெனல்.

"குருவினிடத்துப் படித்த வேதத்தின் அர்த்தத்தை விசாரித்தலால் முக்தியாகிய பயனுண்டாகின்றது." என்று முன் சொல்லப்பட்டது. அதனால் குரு ஞானியா யிருக்கவேண்டு மென்றாவது அஞ்ஞானியா யிருக்கவேண்டுமென்றாவது சொல்லப்படவில்லை. அதனை இனிக்கூறுவாம்:—"ஞான

மில்லாதவர் குருவாகார்" என்பதனை முன் கூறிவந்தோமாயினும், முற் கூறிய வார்த்தையினைத் திருஷ்டாந்தத்தினாற் கூறுவாம்:—

1. துருத்தி முதலிய தோற்பாத்திரங்களின் வாயிலாகவேனும் குட வாயிலாகவேனும் கிரகிக்கப்பட்ட சமுத்திரத்தின் ஜலம் உவர்ப்பினும் வில க்ஷணமான சுவைக்கு ஏதுவன்று. அங்ஙனமே அஞ்ஞானி புருஷன் வாயி லாகக் கிரகிக்கப்பட்ட வேதமாகிய சமுத்திரத்தின் அர்த்தமாகிய ஜலம் வில க்ஷணமான ஆநந்தத்திற்கு ஏதுவன்று. ஆதலால் அஞ்ஞானியாகிய பாட கன் தோற்பாத்திரத்திற்கும் கடத்திற்கும் சமானமாவன்.

2. ஞானி மேகத்திற்குச் சமானமாவனென்னும் வார்த்தை முன் சொல்லப்பட்டது.

ஆதலால் தோற்பாத்திரத்திற்கும் கடத்திற்கும் சமானமான அஞ் ஞானியாகிய பாடகர்களை விட்டு மேகத்திற்குச் சமானமாகிய ஞானியினின் றும் வேதத்தின் அர்த்தத்தைப் படிக்க அல்லது கேட்க.

## 99. பாஷா கிரந்தத்தினாலும் ஞான முண்டாமெனல்.

ஞானியினிடத்தில் வேதத்தைப் படிக்கவேண்டுமென்று கூறுதலால் வேதத்தின் கேள்விவாயிலாகவே ஜீவப் பிரஹ்மங்களின் சொரூபத்தை விசா ரித்தலால் ஞானமுண்டாகின்றது. வேறு ஸம்ஸ்கிருத கிரந்தங்களினாலா வது பாஷா கிரந்தங்களினாலாவது ஞான முண்டாகாது. ஆதலால் பாஷா கிரந்தத்தின் ஆரம்பம் நிஷ்பலமாகும் என்னும் சங்கை யுண்டாகின்றது.

அதற்குச் சமாதானம்:— "பிரஹ்மத்தை யறிந்தவன் பிரஹ்மரூபமா வன்" என்பது வேதத்திற் பிரசித்தமாம். ஆதலால் அவனுடைய வாக்கு வேதரூபமாம். அந்த வாக்கு ஸம்ஸ்கிருத வடிவமாருக அல்லது பாஷை வடிவமாருக. அது எவ்வாற்றானும் பேதப் பிரமத்தைக் கெடுக்கும்.

"வேத வாக்கியத்தாலன்றி ஞானம் உண்டாகா" தென்று கூறின்,

அந்நியமமில்லை. ஆயுள்வேதத்திற் சொல்லிய ரோகங்கள் அவற்றின் ஸ்தானங்கள் ஔஷதங்கள் என்னும் இவை முழுவதின் ஞானமும் வேறு ஸம்ஸ்கிருத நூல்களாலும் மற்றைப் பாஷை நூல்களாலும் உண்டாய்விடு கின்றது. அங்ஙனமே எல்லாவற்றின் ஆத்மாவாகிய பிரஹ்மத்தின் ஞானமும் பாஷை முதலிய நூல்களாலு முண்டாகும்.

இதனாற்றான் சர்வஞ்ஞர்களான முனிகளும் மகரிஷிகளும் ஸ்மிருதி புராண இதிகாசங்களில் பிரஹ்மவித்தையின் பிரகரணத்தைக் கூறினர். வே தத்தினாலன்றி ஞான முண்டாகாவிடின் ஸ்மிருதியாதிகளில் அவ்வெல்லாப் பிரகரணங்களும் வியர்த்தமாய்ப்போம். ஆதலால் ஆத்மாவின்சொரூபத்தைப் பிரதிபாதிக்கும் வாக்கியத்தினால் ஞானமுண்டாகும். அந்த வாக்கியம் வேத

மாருக; அல்லது வேறு பாஷையாருக. இதனுல் * பாஷா கிரந்தத்தினுலும் ஞான முண்டாகுமென்பது சித்தித்தது.

---

* பாஷா கிரந்தத்தால் ஞானமுண்டாகாது என்று ஆக்கிரகஞ் செய்பவனை இது கேட்பாம்:—1. பாஷா கிரந்தம் வேதாநுசாரியல்லாமையின், அதனுல் ஞானமுண்டாகாதா? 2. அல்லது அது பாஷாரூபமா யிருத்தலால் ஞானமுண்டாகாதா? 3. அல்லது அவதார புருஷர்களால் செய்யப்படாமையால் ஞான முண்டாகாதா? 4. அல்லது அசுத்தமா யிருத்தலின் ஞான முண்டாகாதா?

1. வேதாநுசாரி யன்றெனும் முதற்பக்ஷத்தைக் கூறின், (1) வேதத்தின் பாடத்தை யநுசரித்ததன்று? (2) அல்லது வேதத்தின் அர்த்தத்தை யநுசரித்ததன்று?

(1.) வேதத்தின் பாடத்தை யநுசரித்ததன்றெனின், மற்ற ஸம்ஸ்கிருத கிரந்தங்களும் வேதத்தை யநுசரித்தவையன்றாகலின் அவற்றாலும் ஞான முண்டாகலாகாது.

(2.) "வேதார்த்தத்தை யநுசரித்ததன்" றெனின், அது பொருந்தாது. ஏனெனின் எப்படிச் சில ஸம்ஸ்கிருத கிரந்தங்கள் வேதார்த்தத்தை யநுசரித்திருக்கின்றனவோ, அப்படியே சில பிராகிருத கிரந்தங்களும் வேதார்த்தத்தை யநுசரித்திருக்கின்றன. ஆதலால் எங்ஙனம் ஆயுள்வேதத்தை யநுசரித்த மற்ற ஸம்ஸ்கிருத பிராகிருத கிரந்தங்களால் ஔஷதாதிகளின் ஞான முண்டாகின்றதோ, அங்ஙனமே வேதார்த்தத்தை யநுசரித்த ஸம்ஸ்கிருத பிராகிருத கிரந்தங்களாலும் ஞான முண்டாகும்.

2. பாஷாகிரந்தம் பாஷாரூபமா யிருத்தலால் அவற்றால் ஞான முண்டாகாதென்று சொல்லும்பக்ஷத்தில், எப்படி ஸம்ஸ்கிருத கிரந்தம் தேவபாஷை வடிவினதோ, அப்படியே பிராகிருத கிரந்தமும் மனுஷ்ய பாஷை வடிவினதாம். பாஷைத்தன்மை இரண்டிலும் சமானமாம்.

3. "பாஷாகிரந்தம் அவதார புருஷனுற் செய்யப்படாமையின் அதனுல் ஞான முண்டாகா" தென்று சொல்லும்பக்ஷத்தில் சில ஸம்ஸ்கிருத கிரந்தங்களும் அவதார புருஷர்களாற் செய்யப்படவில்லை. ஆதலால் அவற்றாலும் ஞான முண்டாகலாகாது.

4 "பாஷாகிரந்தம் அசுத்த" மென்று சொல்லும்பக்ஷத்தில், எப்படி இதன் 401 இலக்கத்திற் கூறியபடி பிராகிருத நியமத்தால் ஸம்ஸ்கிருத கிரந்தம் அசுத்தமாயிருக்கிறதோ, அப்படியே ஸம்ஸ்கிருதத்தின் நியமத்தாலும் பிராகிருத கிரந்தம் அசுத்தமாயிருக்கிறது. அசுத்தத்தன்மை இரண்டிலும் சமமாம்.

இவ்வாற்றால் பாஷா கிரந்தத்தால் ஞான முண்டாகமாட்டாதென்று கொள்ளுதல் ஹடமாத்திரமாம். இந்த அபிப்பிராயத்தால் நாநக், தாதுஜீ, ராமதாஸஸ்வாமி, ஞானுபா, ஏகநாதஸ்வாமி முதலிய அநேக மகான்கள் பிராகிருத கிரந்தங்களைப் பரோபகாரார்த்தம் செய்திருக்கிறார்கள். அவை எங்ஙனம் கல்யாணத்தைச் செய்வனவோ, அங்ஙனமே இக்காலத்தைய பிரஹ்ம ஞானிகளும் பிராகிருத கிரந்தங்களைச் செய்திருக்கிறார்கள்; செய்கின்றார்கள்; இனிச் செய்வார்கள்; அவை யாவும் ஸம்ஸ்கிருதாப்பியாசமின்றிய அதிகாரி புருஷர்களுக்கு ஞானவாயிலாகக் கல்யாணத்திற்கு ஏதுவாம்.

அப்பயதீக்ஷிதர் என்னும் பண்டிதர் சித்தாந்த லேசமென்னும் கிரந்தத்தில் பிழைபட்ட சொற்களின் உச்சரிப்பை நிஷேதிக்கும் சுருதியைப் பிரமாணமாகக் கொடுத்துப் பாஷா கிரந்தங்களை நிஷேதித்திருக்கின்றனர். அது தனது பாண்டித்தியத்தின் பிரபலத்தன்மையைக்கொண்டு செய்திருக்கின்றனர். ஏனெனின், ஸ்ரீ வேதவியாசரால் செய்யப்பட்ட சூதசம்ஹிதையில் "ஸம்ஸ்கிருத பிராகிருதங்களாலும் கத்திய பத்திய

## 100. ஜிஞ்ஞாசு பிரஹ்மஞானியாகிய ஆசாரியரது சேவைசெய்ய வேண்டுமெனல்.

எந்தப் பிரஹ்மவித்தின் வாக்கு வேதவசனத்துக்குச் சமானமாயிருக்கிறதோ, அந்தப் பிரஹ்மவித்தாகிய ஆசாரியரை ஜிஞ்ஞாசுவானவன் சேவிக்க வேண்டியது. ஏனெனின், சேவையினால் குருவானவர் பிரஸன்னராயின், அப்போது ஜிஞ்ஞாசுவானவன் தன் சொரூபத்தை யறிந்துகொள்ளுகிறான். இதனால் இது அறியத்தக்கதாம்:—குருசேவை ஈசுவரசேவையினும் அதிகமாம். ஏனெனின்,

1. ஈசுவரசேவை அதிருஷ்டபலத்திற்கு ஏதுவாம்.

2. குருசேவையோ அதிருஷ்டம் திருஷ்டமென்னும் இரண்டு பலங்களுக்கும் ஹேதுவாம்.

(1) எந்த வஸ்து தர்மாதர்மங்களின் உற்பத்தி வாயிலாகப் பலத்திற்கு ஹேதுவாயிருக்கின்றதோ, அது அதிருஷ்டபலத்திற்கு ஹேதுவெனப்படும்.

(2) எந்த வஸ்து தர்மாதர்மங்களின் உற்பத்தியின்றி நேரேபலத்திற்கு ஹேதுவாயிருக்கின்றதோ, அது திருஷ்ட பலத்திற்கு ஹேதுவெனப்படும்.

1. ஈசுவரசேவை தர்மத்தின் உற்பத்திவாயிலாக அந்தக்கரணத்தின் சுத்திவடிவ பலத்துக்கு ஹேதுவாகிறது. ஆதலால் ஈசுவரசேவை அதிருஷ்ட பலத்துக்கு ஹேதுவாம்.

2. குருசேவை தர்மாபேக்ஷையின்றி ஆசாரியரது பிரசன்னத்தன்மையால் உபதேசரூப பலத்துக்கு ஹேதுவா யிருத்தலால் திருஷ்டபலத்துக்கு ஹேதுவாம். அன்றியும், குருசேவை தர்மத்தின் உற்பத்திவாயிலாக அந்தக்கரணசுத்திவடிவ பலத்துக்கு ஹேதுவா யிருத்தலால் அதிருஷ்ட பலத்துக்கும் ஹேதுவாகிறது.

இவ்வாற்றால் ஆசாரியசேவை ஈசுவரசேவையினும் உத்தமமாம். ஆதலால் ஜிஞ்ஞாசு எல்லாவிதத்தினாலும் பிரஹ்மவித்தான குருவைச் சேவிக்க வேண்டும்.

---

அக்ஷரங்களாலும், தேச பாஷையின் அக்ஷரங்களாலும் போதிப்பவர் எவரோ அவர் குருவெனப்படுகின்றார்." என்னும் பொருளுடைய வாக்கியங்களால் பிராகிருத பாஷையினாலும் போதமுண்டாகும் என்பது குறிப்பிக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும், முற்றும் பிராகிருத பாஷை உச்சரிக்கத்தகாததாமாயின், சகல லௌகிக விவகாரங்களும் சாஸ்திர வியாக்கியான முதலிய வைதிக விவகாரங்களும் லோபமாகும். அநாதிகாலத்தைய பாஷா வியவகாரத்தை முற்றும் நிஷேதித்தல் பொருந்தாது. ஆதலால் பரிசேஷத்தால் (ஒழிபால்) முற்கூறிய சுருதிக்கு எஞ்ஞசம்பந்தமுள்ள வியவகாரத்தில் பிழைபட்ட சொற்களின் உச்சரிப்பின் நிஷேதம் தாற்பரியார்த்தமா மென்பது சிஷ்ட புருஷர்களின் அபிப்பிராயம்.

## 101. ஆசாரியசேவைக் கிரமம்.

குரவன்கிடைத்த வளவில் தண்டம்போலச் * சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, அவரது பரிசுத்தமான பாதாரவிந்தங்களின் தூளியை உத்தமாங்கமாகிய சிரசில் தரிக்கவேண்டும்.

மிகத் தீவிர ஞானவிருப்பம் உண்டாகும்வண்ணம் குருவின் சமீபத்திலேயே யிருக்கவேண்டும். பந்தத்தைத நீக்க விரும்புகிறவன் தன் சரீரம் மனது தனம் வாக்கு என்பவற்றைக் குருவுக் கர்ப்பணஞ் செய்யவேண்டும்.

## 102. சரீரார்ப்பணக் கிரமம். (1)

சரீரத்தினால் குருவுக்கு வேண்டிய பலவித சேவைகளைச் செய்வதும், அவருடைய கட்டளைகளைக் கொஞ்சங்கூட மீறாமல் நடப்பதும் சரீர அர்ப்பணமாம்.

## 103. மன அர்ப்பணக் கிரமம். (2)

மனதில் ஸ்ரீ ராமனெனக் குருவை யெண்ணி அவரிடத்திற் † பிரேமை வைக்கவேண்டும். தன்னிடத்தில் அவருக்குச் சந்தோஷமுண்டாகும்படி நடக்கவேண்டும். சொப்பனத்திலும் அவரிடத்தில் தோஷதிருஷ்டி வரலாகாது. ‡ ஹரி, ஹரன், பிரஹ்மா, கங்கை, சூரியன் என்று அவரை அறியவேண்டும்.

---

* இரண்டுபாதங்கள் இரண்டு முழந்தாள்கள் இரண்டுகைகள் மார்பு தலையென்னும் இவ் வெட்டு அங்கங்களும் தரையிற் படும்படி தண்டம்போல் தீர்க்க நமஸ்காரஞ் செய்வது சாஷ்டாங்க நமஸ்காரமாம்.

† பிரேமை யென்பது பக்தி; அதனை இராமனாகிய பரமேசுவரனுக்குச் சமானமாக வைத்தல் வேண்டும். அதாவது குருவைப் பரமேசுவரனென்றறிந்து பக்திசெய்யவேண்டும். இதில் இது சுருதிப்பிரமாணமாம்:—"𑌯𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑍇 𑌪𑌰𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑍇 𑌤𑌥𑌾 𑌗𑍁𑌰𑍌 𑌤𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌕𑌥𑌿𑌤𑌾 𑌹𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑍍𑌤𑍇 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃॥" "எவனுக்குத் தெய்வத்தினிடத்து மேலானபக்தியிருக்கின்றதோ, தெய்வத்தினிடத்திற்போல குருவினிடத்து மிருக்கின்றதோ, அந்த மகாத்மாவிற்குச் சொல்லிய இந்தப் பிரஹ்மாத்ம ஐக்கியவடிவ வேதார்த்தங்கள் தாமே பிரகாசிக்கும். கனிஷ்டபக்தி ஒன்பது விதம்:— (1) சிரவணம் (2) கீர்த்தனம் (3) ஸ்மரணம் (4) பாதசேவனம் (5) அர்ச்சனம், (6) வந்தனம் (7) தாஸபாவம் (8) ஸகாபாவம் (9) ஆத்மநிவேதனம் அதாவது தேகாதிகளெல்லாவற்றையும் சமர்ப்பித்தல் என்பனவாம்.

‡ ஈண்டு இது இரகசியமாம்:—

1. குரு சிஷ்யனிடத்தில் அன்புடனிருக்கும்போது அவரை ஹரி (விஷ்ணு) ரூபமென்றறிக.
2. கோபிக்கும்போது அவரை ஹர (சிவ) ரூப மென்றறிக.
3. ராஜஸீயவகாரத்தில் தற்பரராகும்போது பிரஹ்மா வென்றறிக.
4. சாந்தமா யிருக்கும்போது கங்கைவடிவ மென்றறிக.
5. வசனமாகிய கிரணங்களால் பிரம சந்தேகங்களுடன் கூடிய அஞ்ஞானத்தை நிவர்த்திக்கும்போது சூரியரூபமென் றறியவேண்டும்.

இவ்வாறு பிரஹ்மவேத்தாவான குருவினிடத்தில் சிஷ்யன் எப்போதும் ஈசுவரபாவத்தை வைக்கவேண்டியது. சொப்பனத்திலும் தோஷ திருஷ்டியைக் கொண்டுவரலாகாது. ஞானத்திற்குமுன் ஞானத்தை அடைவதற்காகக் குருவைச் சேவிக்கவேண்டியது. ஞானமடைந்தபின் செய்ந்நன்றிமறத்தலென்னும் தோஷத்தை நிவர்த்திக்கக் குருவைச் சேவிக்கவேண்டியது,

க்ஷேமத்தை விரும்பியவன் குருவின் வடிவத்தை இருதயத்திற்கொண்டு தியானிக்கவேண்டும். இது மனதின் அர்ப்பணமாம்.

## 104. தன அர்ப்பணக் கிரமம் (3)

1. பத்தினி, புத்திரன், பூமி, பசு, தாசி, தாசன், திரவியம், கிரகம், தானியம் என்பவற்றைத் தன மென்பர். இவ் வெல்லாவற்றையும் விட்டுச் சந்நியாசியாகிய குருவைச் சரணாகதி அடைவது தன அர்ப்பணமாம். ஏனெனின், குரு சந்நியாசியாயிருத்தலால் அவர் ஒன்றையும் அங்கீகரியார். ஆனால் அவரை யடைவதற்காகத் தனத்தை விட்டிருக்கின்றான். ஆதலால் இவ்வாறு விடுதலும் குருவிற்கே அர்ப்பண மெனப்படுகிறது.

குருவானவர் கிரகஸ்தாச்சிரமத்திலிருந்தால்அவருக்கே யெல்லாவற்றை யும் அர்ப்பணஞ் செய்யவேண்டியது. இது வேறுவகைத் தனார்ப்பணமாம்.

இதில் பிரஹ்ம வித்தையின் ஆசாரியர் கிரகஸ்த ராகாரெனின், அச் சங்கை பொருந்தாது. ஏனெனின் யாஞ்ஞவல்கியர், உத்தாலகர் முதலிய பிர ஹ்மவித்தியா ஆசாரியர்கள் கிரகஸ்தர்க ளென்றே வேதத்திற் கேட்கப்படு கின்றது. ஆதலால் கிரகஸ்தரும் குருவாதல் கூடும்.

## 105. வாக்கின் அர்ப்பணக்கிரமம். (4)

குருவின் குணங்களைப் புகழ்ந்து சொல்லுதலோடு தோஷத்தை ஒரு போதும் சொல்லாதிருத்தலே வாக்கின் அர்ப்பணமாம்.

## 106. குருவை யடைந்தபின் சிஷ்யன் நடந்து கொள்ள வேண்டிய விதம். 106-108.

புருஷன் தன்க்ஷேமத்தை விரும்பின், முன் சொன்னபடி சரீராதிகளை யர்ப்பணஞ்செய்து, குரு விருக்குமிடத்திலாவது அல்லது சமீபத்திலாவது வெகுகாலம் வாசஞ்செய்யவேண்டும். தான் * பிக்ஷையினால் ஜீவிக்கவேண் டும்.

**107.** பிக்ஷ யன்னம் வாங்கிவந்தால் அதனைத் தானாகப் புசியாமல் தேசிகர் முன் வைத்துவிடவேண்டும். பின்னர்த் தன்பொருட்டுக் குருவி னிடம் போஜனம் கேட்கலாகாது. ஒருதினத்தில் மறுமுறை ஊருக்குள் பிக்ஷைக்குப் போகலாகாது. குருவானவர் தயைசெய்து கொடுத்தால் சாப் பிடவேண்டியது. சிஷ்யனுடைய பக்தியைப் பரீக்ஷித்தறியும்பொருட்டுக் குரு கொடுக்கா விட்டால் உபவாசமாயிருந்து வழக்கம்போல் மறுநாள் பிக்ஷை க்குப் போகவேண்டியது. மறுபடியும் குருவின் முன் வைக்கவேண்டியது. இதில் யாதொரு மனோவருத்தத்தையு மடையலாகாது.

---

* இந்தக்கிரமம் பிரஹ்மசாரி அல்லது சந்நியாசியாகிய சிஷ்யனுக்காம்; கிரகஸ்த னுக் கன்று.

**108.** இப்படியிருந்துகொண்டு வருங்காலத்தில் குருவின் சமயம் பார்த்து, மலர்ந்த முகத்தோடு அவர் தன்னை நோக்குங்காலத்தில் இரு கரங்களையும் கூப்பி அவரைத் துதிசெய்து வணக்கத்துடன் "சுவாமி அடியேன் ஒன்று கேட்க விரும்புகிறேன்" என்று தெரிவித்துக் கொள்ளவேண்டியது. அப்போது குரு உத்தரவு கொடுத்தால் கேட்கவேண்டியது.

ஒருகால் ஜன்மாந்தரத்தின் உத்தம கர்மத்தினால் குருவானவர் கிருபை செய்து சிஷ்யனுக்குத் தனுதியர்ப்பண மின்றியே உபதேசஞ் செய்து விடுவாராயின், அந்த உத்தம அதிகாரிக்குக் கல்யாண முண்டாய் விடும். ஏனெனின் குரு சேவைக்கு இரண்டு பலனுண்டு. ஒன்று குருவின் பிரசன்னத் தன்மை; மற்றொன்று அந்தக்கரண சுத்தி. அவ்விரண்டும் அவனுக்குச் சித்தித்திருக்கின்றன.

எவன் மனோ வாக்குக் காய தனங்களை யர்ப்பணஞ் செய்து மனதைச் செலுத்தி குருவைச் சேவை செய்கிறானோ, அவன் தான் சகலவடிவமுமான பிரஹ்மரூபமாய்விடுகிறான். தாதுவானவர் எப்போதும் அவனுக்குச் சகாயம் செய்கிறார்.

குரு பக்தி பயன்களின் றன்மை நிரூபண மென்னும்

மூன்றாவது தரங்கம்

முற்றிற்று.

ஓம்.

ஸ்ரீ கணேசாயநமஃ

# ஸ்ரீ விசாரசாகரம்.

## நான்காவது தரங்கம்.

### உத்தமாதிகாரி உபதேச நிரூபணம்.

இப்போது குரு சிஷ்ய வினாவிடையாக ஒரு * புதிய கதையைச் சொல்லுகிறேன். அதைக் கேட்பதினால் ஜிஜ்ஞாசுவானவன் ஆத்மவிசாரணையிற் சமர்த்தனாகின்றான்:—

### 109. சுபசந்ததிராஜா, அவருடைய தத்துவதிருஷ்டி அதிருஷ்டி தர்க்கதிருஷ்டி யென்னும் மூன்று புத்திரர் என்பவர்களது கதை. 109-111.

சுபசந்ததி யென்னு மோரரசன் பூமி சுவர்க்க பாதாள மென்னும் மூன்று லோகங்களையும் ஆண்டுகொண்டிருந்தான். அவனுக்கு மூன்று குமாரர்க ளிருந்தார்கள். அவர்கள் தத்துவதிருஷ்டி, அதிருஷ்டி, தர்க்கதிருஷ்டி யெனப் பெயரிடப்பட்டிருந்தார்கள். அவர்கள் முறையே உத்தம மத்திம கனிஷ்டராவர். அவர்கள் நான்கு சாஸ்திரங்களுங் கற்று மூவுலகங்களிலும் பிரசித்தி பெற்றிருந்தார்கள். சுபசந்ததி யரசன் தன் பாலியத்தை விளையாட்டிலும் யௌவனத்தை ஸ்திரீலோலத்திலும் செலுத்தி அனேக போகங்களை யனுபவித்துக்கொண்டு தன்னுடைய புஜபல பராக்கிரமத்தால் மூவுலகங்களையும் நீதியுடன் ஆண்டுவந்தான்.

**110.** அவனுக்கு ஒருகாலத்தில் தன் மனதில் பூர்வபுண்ணிய வலியால் அகஸ்மாத்தாய் ஆத்மா உற்பத்திரகிதமும் சுகசொரூபமுமாம்; அதற்கு வேறானவெல்லாம் துக்கரூபமாமென்னும் விவேகமுண்டாயிற்று. உண்டாகவே, யான் ஆத்மவிசாரணை செய்யும்பொருட்டு ராஜ்யத்தை விட்டுவிடுவேனாக, சுவர்க்கமத்திய பாதாளமென்னும் மூன்று உலகத்தையும் மூன்று புத்திரர்களும் அரசாட்சி செய்க என்று விசாரித்து, மந்திரியைக்கொண்டு அவர்களைத் தன் சமீபத்தில் வரவழைத்து, இரகசியமாய்த் தனக்குண்டான வைராக்கியத்தை

* அநாதி வேதத்திற் சொல்லிய ஜநகர் யாஜ்ஞவல்கியர் முதலியோர் கதையைப் போல இந்தக் குருசிஷ்ய ஸம்வாதரூப கதை சொல்லப்படுகிறது. இது புராணாதிகளிற் சொல்லப்படவில்லை. இது ஸ்வபுத்தியால் கற்பிக்கப்பட்டதாகலின் "புதிய" என்றார்.

† இம்மூன்று குமாரர்களும் முறையே 4-வது தரங்கத்தின் உத்தமாதிகாரியாயும், 5-வது தரங்கத்தின் மத்தியமாதிகாரியாயும், 6-வது தரங்கத்தின் கனிஷ்டாதிகாரியாயு மிருக்கிறார்கள்.

அவர்களுடன் சொல்லி ராஜ்யத்தை ஒப்புக்கொள்ளும்படி கட்டளையிட்டார். ஒருவனுக்குப் பாதாளலோகத்தையும் ஒருவனுக்குச் சுவர்க்கலோகத்தையும் மற்றொருவனுக்குப் பூலோகத்தையுங்கொடுத்தார். பூலோகத்தில்,எங்கு * மரித்தால் சிவனதுபதேசத்தைக்கேட்டு அநாயாசமாக மோக்ஷமடையப்படுகிறதோ, அப்படிப்பட்ட சர்வாந்தரியாமியாகிய பரமசிவனால் வசிக்கப்படுவதும், உத்தரவாகினி யென்னும் கீர்த்தி பெற்று விளங்கும் கங்கைநதிக் கரையிலிருப்பதுமான காசிப்பட்டணத்தில் இருந்துகொண்டு ராச்சியபாரம் பண்ணும்படி ஆஞ்ஞாபித்தார். ராஜ்யத்தைப் பாகித்துக்கொடுக்காவிட்டால் சகோதரர்களுக்கு இராஜகாரியத்தில் துன்பம் நேரிடுமெனக் கருதி இவ்விதமாய்ப் பிரித்துக்கொடுத்தார். மறுபடியும் குமாரரைப்பார்த்து இந்த அபார சமுசாரம் துக்கரூபமாயிருக்கிறது. பாமரர்கள் இதைச் சுகமெனக் கருதி தனத்தையே மேலாகப் பாவித்து ஆத்மவிசாரஞ் செய்யாம லிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஜனங்களின் சகவாசத்தை விட்டு நிஜமான சுகத்தை யடைய விரும்புகிறேன் என்று சொன்னார்.

111. பிதாவின் இவ்விதமான வார்த்தைகளைக்கேட்டு நல்ல யுக்தி புத்திகளுடன் கூடிய மூன்று சகோதரர்களுங் கூடி யேகாந்தத்திருந்து யோசித்தார்கள்; அதாவது நம்முடைய பிதாவானவர் துக்கமான சமுசார சாகரத்தில் நம்மைத் தள்ளிவிட்டுத் தான்மாத்திரம் பிரஹ்மானந்தமடைய இச்சிக்கிறார். இதனால் ஆத்மவிசாரத்தில் ஆசக்தியுள்ளவர்கள் அபாரமான துக்கரூப ராஜ்யத்தை விட விரும்புகிறார்கள்.

## 112. மூன்று புத்திரர்களும் வீட்டைவிட்டுப் புறப்பட்டுக் குருவைச் சந்தித்தல்.

ஆதலால் நாமும் இந்தத் துக்கரூபமான ராஜ்யத்தை விட்டுவிடவேண்டுமென்று தீர்மானித்து மோக்ஷ இச்சை யுள்ளவர்களாய், சுபசந்ததி (நல்ல சந்ததியை யுடையவன்) என்னும் பிதாவின்பெயரைக் காரணப்பெயராக்கிச் சற்குருவைத் தேட அரண்மனையை விட்டுப் புறப்பட்டார்கள். புறப்பட்டு அநேக தேசங்கள் போய்த் தேடித் தேடிக் கடைசியாய்க் கங்காதீரத்துக்கு வந்து, அவ்விடத்தில் ஓர் ஏகாந்தமான ஸ்தலத்தில் மரம், கிளை, தழைகளால் நெருங்கிய † வனத்தில் ஓராலமரத்தடியில் ‡ சின்முத்திரை தரித்து, ஜீவப்

* காசியில் மரணமடைந்தால் மோக்ஷம் கிடைக்கும் என்னும் சுருதியின் அபிப்பிராயம் இவ்விடத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

† 1. மரத்தின் நெருக்கம் வனத்தின் சிறப்பு.
2. கிளையின் நெருக்கம் மரத்தின் சிறப்பு.
3. தழைகளின் நெருக்கம் கிளையின் சிறப்பு.

இந்த வனம் மூவகை நெருக்கத்தோடுங் கூடியிருத்தலால் மிக்க அழகுடையதாம்.

‡ அங்குஷ்டத்தை (பெருவிரலை)யும் தர்ஜனியை (அதற்கடுத்த விரலை)யும் சேர்த்தலால் பத்திராமுத்திரை யுண்டாகின்றது. இதனை லோபாமுத்திரை தர்க்கமுத்திரை ஞானமுத்திரை (சின்முத்திரை) என்பர்.

பிரஹ்ம ஐக்கியத்தை ‡ நிர்த்தோஷர்களாயும் ஏகாக்கிர சித்தர்களாயும் உள்ள அநேக சிஷ்யர்களுக்கு உபதேசஞ்செய்யும் திரிகுணரகிதரான குருவைக் கண்டார்கள். அப்போது கைலாசத்தில் ஸனகாதிகளுக் குபதேசித்த பரம சிவனைப்போல அவரைப் பாவித்துச் சாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ்செய்து, மோக்ஷ இச்சையுடன் ** விதிப்படி சரணடைந்து ஆறுமாதம் அவரைச் சேவை செய்தார்கள். பிறகு குருவானவர் பிரசன்னராகி அமிர்த வசனத்துடன் †† எக்காரணமாய் வந்திருக்கிறீர்கள்? நீங்கள் யார்? எங்கிருந்து வந்தீர்கள்? என்று கேட்டார். அப்போது தத்துவதிருஷ்டியானவன் தம்பிமார்களது குறிப்பை உள்ளத்தில் தெரிந்துகொண்டு கைகூப்பி நின்றுசொல்லுகிறான்.

## 113. தத்துவ திருஷ்டியினால் பிரசினை செய்வதற்குக் குருவின் ஆஞ்ஞையைக் கேட்டலும் குரு ஆஞ்ஞை கொடுத்தலும்.

பகவானே! நாங்கள் மூன்றுபேரும் பிராதாக்கள்; சுபசந்ததி யென்பவரின் புத்திரர்கள். தீனரும் நவீனரும் அறியாதவர்களுமாகிய நாங்கள் இருதயத்தில் அநேக அபிப்பிராயங்களை அறியவிரும்புகிறோம். (சொரூபஞானத்தை யடையவிரும்புகிறோம்.) தாங்கள் கிருபைக்கடலாயும் கற்பகதருவிற்குச் சமான மாயும் விளங்குகிறீர்கள். நாங்கள் துக்காதீனர்களா யிருக்கிறோம். உத்தரவுகொடுத்தால் எங்கள் கோரிக்கைகளைத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம்.

### ஸ்ரீ குரு சொல்லுகின்றார்.

சிஷ்யனே, என்வார்த்தையைக்கேள். நீ எதனைக் கேட்கின்றாயோ அதனைச் சொல்லுகிறேன். அதனால் உன்னிருதயத்திலுள்ள சந்தேகங்கள் நிவிருத்தியாகிப் பரமானந்தமடைவாய்.

---

‡ 1. திருட்டு, வியபிசாரம், ஜீவஹிம்சை யென்னும் மூன்றும் சரீரதோஷங்களாம்.

2. பொய்ம்மொழிதல், பிறர் நிந்தை, கடுஞ்சொல், வீண்பேச்சு என்னும் நான்கும் வாக்கின் தோஷங்களாம்.

3. இச்சை, சிந்தை, புத்தியின் மந்தத்தன்மை யென்னும் மூன்றும் மனதின் தோஷங்களாம்.

இவை நிருசிஹ்மதாபநீய உபநிஷத்திற் சொல்லப்பட்ட பத்துத் தோஷங்களாம்.

** மூன்றாவது தரங்கத்தில் சொல்லியபடி.

†† 1. நீங்கள் மூவரும் எக்காரணமாக வசிக்கிறீர்கள் என்பது முதல்வினா.

2. நீங்கள் உங்களுள் என்ன ஆகின்றீர்க ளென்பது நீங்கள் யாரென்னும் இரண்டாவது வினா.

3. எங்கிருந்து வந்தீர்களென்பது நீங்கள் யாருடைய புத்திரர்க ளென்னும் மூன்றாவது வினா.

தத்துவதிருஷ்டியின் மூன்று பிரசினைகளில் இரண்டாவது மூன்றாவது வினாக்களுக்கு முதலினும் முதல் வினாவிற்குப் பின்னும் விடை கொடுக்கப்பட்டது.

## 114. தத்துவதிருஷ்டியின் மோக்ஷ இச்சையைக் குறிப்பிக்கும் விண்ணப்பம்.

குருவின் கருணையைக்கண்டு சிஷ்யன் இருதயத்தி லானந்தங் கொண்டு, தன் காரியம் சித்தியாய்விட்டதாக வெண்ணி வணக்கத்துடன் கேட்கத் தொடங்கினன்.

### தத்துவதிருஷ்டி சொல்லுகின்றன்.

பகவானே, தாங்கள் கிருபாநிதியாகவும் சதாசிவனுக்குச் சமானமான சர்வஞ்ஞராயுமிருக்கிறீர்கள். அஞ்ஞானமதியுடைய நாங்கள் ஜனனமரணாதி துக்கரூப சமுசாரத்திற்குப் பயப்படுகிறேம். அதன் நிவிருத்திக்கும் பரமாநந்தப் பிராப்திக்கும் உபாயத்தைச்சொல்லி யருளல்வேண்டும். அநேக சகாம வுபாசனைகளையும் கர்மங்களையுஞ்செய்தும் நாங்கள் இச்சிக்கும் பலனை யடையவில்லை. ஆனால் மாறுன சமுசாரம் அவறுல் விருத்தியாகிறது. ஆதலால் எந்த வேறு உபாயத்தால் நாங்கள் கிருதார்த்தர்களாவோமோ அவ்வுபாயத்தைச் சொல்லியருள்க.

## 115. குருவின் உத்தரம். (மோக்ஷவிச்சை பிராந்திஜந்நிய மென்பதனேடு மகாவாக்கியத்தின் உபதேசம்.)

துக்கநிவிருத்தி பரமாநந்தப்பிராப்தியினை மோக்ஷமென்பர். சிஷ்யனுடைய இருதயத்தில் மோக்ஷ இச்சை யிருப்பதைக்கண்டு அதற்குச் சாதனமான வேதத்திற் கூறியுள்ள ஞானத்தை யுபதேசிக்கிருர்.

ஞானத்தின் சொரூபம் அநேக சாஸ்திரங்களில் அநேகவிதமாய் வர்ணிக்கப்பட்டிருந்தபோதிலும், ஜீவப்பிரஹ்மபேதத்தை நிவர்த்திக்கும் ஞானமே மோக்ஷசாதனமென வேதத்திற் சொல்லியிருப்பதால் அந்த ஞானத்தையே உபதேசிக்கிருர்.

சிஷ்யனே, பரமாநந்தப் பிராப்தியிலும் ஜனன மரணாதி துக்கரூப சமுசார நிவிருத்தியிலும் உனக்குண்டாயிருக்கும் இச்சை பிராந்தியினுலுண்டானதென்று அறி. ஏனெனின்,

1. இயற்கையிலேயே பரமானந்தசொரூபமா யிருக்கிறுய். ஆதலால் அதனையடைய நீ இச்சிப்பது சரியன்று. எது கிடைக்கவில்லையோ அதனை யடைய இச்சிக்கக்கூடும். உன்னுடைய சொரூபமோ எப்போதும் பிராப்தமாகவே யிருக்கிறது. அதை யடையவேண்டுமென்று உண்டாகும் இச்சை பிராந்தியின்றி யுண்டாகிறதில்லை.

2. ஜனனமரணாதி சமுசாரம் எப்போதாவது உனக்கு இருக்கும்பக்ஷத்தில் அதை நிவர்த்திக்க இச்சையுண்டாகலாம். ஆனால் அந்தச் சமுசாரம் சிறிதும் உன்னிடத்தில் இல்லை. ஆனதால் உண்டாகாத துக்கத்தை நிவர்த்திக்க உண்டாகுமிச்சை பிராந்தியின்றி யுண்டாகாது.

சிஷ்யனே ஜனனமரணமற்ற சேதனரூபப் பிரஹ்மமேநீ. ஆதலால் உன் இருதயத்தில் ஜன்மாதிதுக்கத்தை மதிக்கவேண்டாம்.

## 116. பிரசினம்:—எனது ஆத்மா ஆநந்தரூபமாகுமாயின் விஷயசம்பந்தத்தினுல் ஆநந்தத்தின் பானம் ஆத்மாவில் உண்டாகலாகாதெனல்.

### தத்துவதிருஷ்டி கூறுகின்றார்.

பகவானே, என் ஆத்மா ஆநந்தரூபமாயின் விஷயசம்பந்தத்தால் ஆநந்தம் ஆத்மாவினிடத்தில் தோற்றலாகாது. ஆதலால் ஆத்மாவே ஆநந்தரூபமன்று. ஆனுல் விஷயசம்பந்தத்தால் ஆத்மாவினிடத்தில் ஆநந்தமுண்டாகிறது.

## 117. உத்தரம்:—ஆத்மவிமுகனுக்கு அந்தர்முகவிருத்தியில் ஆநந்தம் விளங்குதலும், விஷயத்தில் ஆநந்தம் இல்லையெனலும்.

### ஸ்ரீ குரு சொல்லுகின்றார்.

சிஷ்யனே, எவன் புத்தி ஆத்ம சொரூபத்தை யறியவில்லையோ அவனுக்கு விஷயத்தி லிச்சை யுண்டாகிறது. இவ்விடத்தில் போக சாதனமே விஷயமெனப்படுகின்றது. ஆதலால் தனபுத்திராதிகளையும் கொள்ளவேண்டும்.

1. அவ்விஷய விச்சையினுல் புத்தி சஞ்சலமா யிருக்கும். அச்சஞ்சல புத்தியில் ஆத்மசொரூபாநந்தத்தின் பிரதிபிம்பம் விளங்குகிறதில்லை.

2. இச்சித்தவிஷயம் கிடைத்தவுடன் க்ஷணமாத்திரம் புருஷனது புத்தி ஸ்திரப்பட்டு அதன் விருத்தி அந்தர்முகமாகின்றது. அந்த அந்தர்முக விருத்தியில் ஆத்மாவின் சொரூபாநந்தம் பிரதிபிம்பிக்கிறது.

அந்த ஆத்ம சொரூப ஆநந்தத்தின் பிரதிபிம்பத்தை யநுபவிக்கிற புருஷனுக்கு "எனக்கு விஷயத்தா லாநந்த முண்டாயிற்"றென்று * பிராந்தி யுண்டாகிறது. ஆனுல் விஷயத்தி லாநந்தமில்லை.

1. ஒருகால் விஷயத்தி லாநந்த முண்டாகுமாயின், ஒருவிஷயத்தி லாநந்த மடைந்தவனுக்கு மற்றொரு விஷயத்தில் இச்சை யுண்டாகும்போதும், முந்திய ஆநந்தம் இருந்துகொண்டே யிருக்கவேண்டும். ஆனுல் அநுபவத்தில் அப்படி யில்லை. நம்முடைய கிரமப்படி இரண்டாவது விஷயத்தி னிச்சையால் புத்தி சஞ்சலப்படுவதால் அச்சஞ்சல புத்தியில் சொரூபாநந்தத்தின் பிரதிபிம்பம் விளங்குகிறதில்லை.

---

* ஆத்மசொரூப ஆநந்தத்தின் பிரதிபிம்பத்தை அநுபவித்துப் புருஷனுக்கு விஷயத்தில் ஆநந்தத்தின் பிராந்தி யுண்டாகின்றது. அது, நாய்க்குப் பசையற்ற எலும்பைக் கடித்துத் தனது தாடையிலிருந்து வரும் இரக்தத்தைச் சுவைக்க அவ்வெலும்பிலிருந்து வருவதாகப் பிராந்தியுண்டாவதுபோலவாம்.

2. விஷயத்திலேயே ஆநந்தம் உண்டாகுமாயின், ஒருவனுடைய பிரியமான புத்திரன் வெகுகாலம் தேசாந்தரம் போயிருந்து வந்தவுடன் அவனைப் பார்ப்பதா லுண்டாகும் ஆநந்தம் மாறாமல் நீடித்திருக்க வேண்டும். ஏனெனின் அந்த ஆநந்தத்துக்குக் காரணமான புத்திரன் சமீபத்திலேயே இருக்கிறான். ஆனால் அநுபவத்தில் அப்படி நீடித்திருப்பதில்லை. நம்முடைய கிரமமாகவோ முதலிலேயே ஆநந்தம் பொருந்துகின்றது; எப்போதும் சம்பவிக்கிறதில்லை. ஏனெனின் ஒருமுறை புத்திரனைக்கண்டவுடன் விருத்தி ஸ்திரப்படுகிறது. மறுபடியும் விருத்தி வேறுவிஷயத்திற் செல்லும்போது சஞ்சலப்படுவதால் முந்திய ஆநந்தம் விளங்குகிறதில்லை. ஆதலால் பதார்த்தத்திலாநந்தம் இல்லை.

3. அல்லது விஷயத்தினால் ஆநந்தமுளதாயின் சமாதியிலுண்டாகிற * யோகாநந்தமும் விளங்கலாகாது. ஏனெனின் சமாதியில் ஓர் விஷயசம்பந்தமு மில்லை.

4. † அல்லது விஷயத்திலேயே ஆநந்த முளதாயின் சுழுத்தியி லாநந்தத்தின் பானமுண்டாகலாகாது. ஏனெனின் சுழுத்தியிலும் ஒருவிஷயத்தின் சம்பந்தமுமில்லை. ஆதலால் விஷயத்தி லாநந்தமேயில்லை. ஆனால் ஆத்ம சொரூபாநந்தம் முழுவதும் விளங்குகிறது. இதனாற்றான் "ஆத்மசொரூபாநந்தத்தைக்கொண்டு யாவரும் ஆநந்தரூப முடையவராகின்றனர்" என்று வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

சிஷ்யனே, ஆநந்த சொரூபமே ஆத்மாவென்றறி. விஷய சம்பந்தத்தினால் அது பிரகடமாகிறது. இது இணையில்லாத சித்தாந்தம் அதனை யான் உனக்கு இப்போது சொன்னேன். இதில் உனக்குச் சந்தேகம் உளதாயின் அதை மனதில் வைக்காமல் எனக்குத்தெரிவி. நான் அதற்குத்தரம் சொல்லுகிறேன்.

## 118. பிரசினம்:—ஞானிக்கு விஷயத்தின் இச்சையும் அதன் சம்பந்தத்தால் முன்கிரமப்படி விஷயத்தின் இச்சையுண்டாகிறதா? இல்லையா? எனலும். தத்துவதிருஷ்டி கேட்கின்றார்.

பகவானே, தாங்கள் முன் விஷயசம்பந்தத்தால் ஆத்மாநந்தத்தினது ஞானத்தின் கிரமத்தை முன் சொன்னீர்கள். அது அஞ்ஞானிக்குச் சொன்னீர்கள்; ஞானிக்குச் சொல்லவில்லை. ஏனெனின் எவன் புத்தி ஆத்ம சொரூபத்தினும் விமுகமாயிருக்கின்றதோ, அவனைப்பற்றி நீங்கள் பிரஸ்தாபித்திருக்

* சித்தத்தின் ஏகாக்கிரத் தன்மையாகிய யோகத்தினால் வெளிப்படக் கூடிய ஆநந்தம்.

† சமாதி திருஷ்டாந்தம் சர்வலோகத்தின் அநுபவத்திற்கு விஷயமன்றென்னும் அருசி யுண்டாதலால் வேறு திருஷ்டாந்தம் கூறுகின்றார்.

கிறீர்கள். இப்படிப்பட்டவன் அஞ்ஞானியே யல்லாமல் ஞானியல்லன். ஆதலால் தாம் இப்போது ஞானிக்கு விஷயத்தில் இச்சையும், விஷயசம்பந்தத்தால் முற்கூறியபடி சுகத்தின் விளக்கமும் உண்டாகின்றனவா? இல்லையா? வென்பதைச் சொல்லியருள்க.

## 119. உத்தரம்:—இருவகை ஆத்மவிமுகர் உளரெனல். விஷயாநந்தம் சொரூபாநந்தத்தினு வேறன்றெனல். ஸ்ரீகுரு சொல்லுகின்றார்.

சிஷ்யனே, நீ மனதையும் காதையும் சாவதானமாக்கிக்கேள்.

முன்னே நாம் எந்த ஆத்மவிமுகனைச் சொன்னோமோ, அவன் அஞ்ஞானியே ஆகான். ஆனால் ஞானியினுடைய புத்தியும் எப்போது வியவகாரத்தில் வந்து விடுகிறதோ, அப்போது அவன் தத்துவத்தை * மறந்து விடுகிறான். அந்தக்காலத்தில் ஞானியும் ஆத்மவிமுகனே யாகின்றான். ஞானியின் புத்தி எப்போதும் ஆத்மாகாரமாயிருக்குமாயின், அவனுக்குப் போஜனாதி வியவகாரஞ் சம்பவியாது. ஆதலால், ஆத்மவிமுக புத்தி இருவருக்கும் பொருந்துகின்றது.

அஞ்ஞானியின் புத்தியோ எப்போதும் ஆத்மவிமுகமா யிருக்கிறது. ஞானியின் புத்தி ஆத்மவிமுக மாகும்போது, விஷயத்தி லிச்சை, விஷயசம்பந்தத்தால் ஆத்மசொரூபாநந்தத்தின் விளக்கம் என்பவை அஞ்ஞானிக்குண்டாவதுபோல் ஞானிக்கு முண்டாகின்றன. ஆனால் இவ்வளவு பேதமாம்:—

* ஜாக்கிருதாகார விருத்தி யுண்டாகும்போது ஸ்வப்பனாகார விருத்தி யுண்டாகிறதில்லை; ஸ்வப்பனாகாரவிருத்தி யுண்டாகும்போது ஜாக்கிராகார விருத்தி யுண்டாகிறதில்லை. அதுபோல ஞானியின் புத்தியும் ஆத்மாகார மாகும்போது அநாத்மாகார மாகிறதில்லை; அநாத்மாகார மாகும்போது ஆத்மாகார மாகிறதில்லை.

ஒரே அந்தக்கரணத்தில் ஒரேகாலத்தில் பின்னவிஷயவடிவ ஸாமானிய விசேஷரூப இரண்டு விருத்திக ளுண்டானாலும், விசேஷரூப இரண்டு விருத்திக ளுண்டாகா. ஆதலால் வேறுவியவகாரத்தில் பொருந்தியுள்ள புருஷன் பெட்டியில் கையை வைத்துக் கொண்டே பணத்தை மறந்துவிடுகிறான்; மீண்டும் வியவகாரம் முடியவே அப்பணத்தின் நினைவு வருகிறது. அதுபோல ஞானியின் புத்தியும் வியவகாரத்தில் விசேஷமாய்ப் பொருந்தி யுள்ளபோது, தத்துவத்தை மறந்து வியவகாரம் முடிந்தவுடன் தத்துவத்தின் நினைவைக் கொள்ளுகிறது.

இதனாற்றான் பகவான் பாஷியகாரர் பிரஹ்மசூத்திர பாஷியத்தில் முதல் அத்தியாயத்தின் முதல் பாதத்தில் "வியவகாரத்தில் ஞானியும் அவிவேகிகளைப்போல வியவகரிக்கிறான்" என்று சொல்லி யிருக்கிறார். இதனால் மேல் எழுதியுள்ள பொருள் பொருத்தமுடையதாம்.

1. விஷய சம்பந்தத்தால் விளங்கு மாநந்தம் தன் சொரூபாநந்தத்திற்கு வேறன்று; ஆனால் அதன் ஆபாசமே என்று ஞானி அறிகிறான். இதனால் விஷயபோகத்திலும் ஞானிக்குச் * சமாதி சித்திக்கிறது.

2. அஞ்ஞானியோ தன் சொரூப ஆநந்தமே யென்றறிகிறதில்லை.

3. உண்மையில் இருவருடைய சொரூபமும் ஆநந்தமாம். விஷயத்தில் கேவலம் அஞ்ஞானிக்குப் பிராந்தி யுண்டாகிறது.

## 120. ஜன்மாதி துக்கங்கள் எவற்றின்கண் உள? எனல்.

### சிஷ்யன் கேட்கின்றார்.

சுவாமின், "நீ (360-363) பரமாநந்த சொரூப" மென்று தாங்கள் முன் சொன்னதை நான் நன்றாக அறிந்தேன்.

"ஜனன மரணாதி சமுசாரரூப துக்கம் என்னிடத்தி லில்லாமையால் அதன் நிவிருத்தி பொருந்தா" தென்று தாங்கள் சொன்ன விஷயத்தில் ஒரு சந்தேகமுளது:—ஜன்மாதி துக்கம் என்னிடத்திலையாயின், எனக்கு வேறாகிய எதனை இச்சம்சாரம் ஆசிரயித்துக்கொண்டிருக்கிறதோ, அதனைத் தாங்கள் தயைசெய்து காட்டவேண்டும். அதைத் தெரிந்துகொள்வதினால்

---

* சொல்லப்பட்ட இந்தச் சமாதி எதுவோ அது, தெரிந்து கூடிய திருடனைப்போல விஷயத்தில் தோஷதிருஷ்டிவடிவ விவேகத்தின் விழிப்பினாலும், மித்தியாபுத்திவடிவ இடைவைராக்கிய மிருத்தலினாலும், பத்தமுக்த மகிபாலனைப்போல சொற்ப போகத்தினால் சந்தோஷத்தினாலும், கொலை செய்தற்குரிய புருஷனது போகத்தைப்போல பரிணாமத்தில் போகம் துக்கத்திற்கு ஏதுவாமென்பதின் ஞானமுண்டாதலால் திடராகமின்மையினாலும், விஷயாநந்தம் சொரூபாநந்தத்தினும் வேறாகாமையினது விளக்கத்தினாலும் (ஆத்மாநந்தத்திற்கு வேறாக விஷயத்தில் முற்றும் ஆநந்தமின்மையினது ஞானத்தினாலும்) சொரூபத்தின் அநுசந்தான வடிவ சமாதியினது குணத்தின் சமத்தன்மையினால் "இந்தப் புருஷன் சிங்கம்" என்பதைப்போல கௌணமாம் (உபசாரமாத்திரமாம்).

அல்லது:—எங்ஙனம்:—பாலர்கள் தமது பாதத்தைச் சுவைக்கின்றார்கள். பல்லின்றிய விருத்தபுருஷன் தனது உதடுமாத்திரத்தைச் சுவைக்கின்றான். அவர்கள் அந்நிய விஷயபோகத்திற்குப் பாகமுடையவர்களல்லர். அங்ஙனமே, ஞானியும் சாஸ்திரத்திற்கு விரோத மின்றிய விஷயபோகத்தைச் செய்கின்றவனுப் சொரூபத்தின் அநுசந்தானத்தினால் இராக மின்மையின் அவனுக்குப் போகத்தில் சமாதி சொல்லப்படுகின்றது. அது விக்ஷேபத்தோடு கூடியதாயிருத்தலின் மிக்க அதமமான விஷயசமாதியாம். ஆதலால் நாயின் பாத்திரத்தில் வார்க்கப்பட்ட பாலைப்போல இதன் விஷயம் ஆதரஞ் செய்யத்தக்கதன்று; ஆனால் ஞானிக்கு உபேக்ஷிக்கத்தக்கதாம். க்ஷணிக விஷயாநந்தமாயிருத்தலாலும், தேகாபிமான வடிவ ஆவரணத்தின் அபாவத்தினாலும் சுத்த சின்மாத்திர வாசனையின் இருப்பினாலும் ஞானியின் மனம் யாண்டுச் செல்லுகின்றதோ, ஆண்டுப் பாதரக்ஷையோடு கூடிய புருஷனுக்குத் தோலால் மூடப்பட்ட பிருதிவியினைப்போல சமாதியிருக்கிறது. இவ்வர்த்தம் பாலபோதத்தின் ஒன்பதாவது உபதேசத்தில் பிரமாணத்தோடு எழுதப்பட்டிருக்கின்றது, விருப்புள்ளார் ஆண்டுக் காண்க.

அதனிடத்தில் சம்சார துக்கத்தைக் கண்டு என்னிடத்திலில்லையென்று கொள்வேன்.

## 121. உத்தரம்:—ஜன்மமுதலிய துக்கம் ஓரிடத்து மில்லையெனல்.

### ஸ்ரீ குரு சொல்லுகின்றார்.

சிஷ்யனே, என் வார்த்தையைக் கேள். அதனால் உன் சந்தேகங்களெல்லாம் நிவிருத்தியாகும். ஜகத்தின் * அத்தியந்தநாசம் என்னிடத்திலாவது வேறு எவரிடத்திலாவது இல்லவேயில்லை.

## 122. பிரசினம்:—துக்கம் ஓரிடத்துமில்லை யெனின் பிரத்தியக்ஷமாக ஏன் தோற்றவில்லை? எனல்.

### தத்துவதிருஷ்டி சொல்லுகின்றார்.

ஐயனே, ஜன்ம மரண முதலிய சமுசார துக்கம் என்னிடத்திலும் பிறரிடத்திலும் ஓரிடத்திலும் இல்லையெனின், ஏன் பிரத்தியக்ஷமாகிறது? இல்லாத வஸ்து தோற்றாது. மலடிமகனும் ஆகாச புஷ்பமும் தோற்றாததுபோலச் சமுசாரமு மில்லையாயின் தோற்றலாகாது. ஜன்ம முதலிய சமுசாரம் தோற்றுகின்றது. ஆதலால் "ஜன்மாதி சமுசாரரூப துக்கம் இல்லை" யென்று சொல்லுதல் பொருந்தாது.

## 123. உத்தரம்:—ஆத்மாவை யறியாததினால் தோற்றுதலும், இரஜ்ஜு சர்ப்பதிருஷ்டாந்தமும்.

### ஸ்ரீ குரு சொல்லுகின்றார்.

ஜன்மாதி ஜகத்துப் பரமார்த்தமாக இல்லையாயினும், ஆத்மாவைப் பிரஹ்மசொரூப மென்று அறியாததினால் மித்தையாகத் தோற்றுகிறது. எங்ஙனம் சொப்பன பதார்த்தம், ஆகாசத்தில் கருமை, ரஜ்ஜுவிற் சர்ப்பம் என்பன பரமார்த்தமாக இல்லாமலிருந்தும் பொய்யாகத் தோற்றுகின்றனவோ, அங்ஙனமே ஜன்மாதி ஜகத்துப் பரமார்த்தமாக இல்லை; மித்தையாகத் தோற்றுகின்றது.

## 124. பிரசினம்:—இரஜ்ஜுவில் சர்ப்பம் எப்படித் தோற்றுகின்றது? எனல்.

### தத்துவதிருஷ்டி கேட்கின்றார்.

ரஜ்ஜுவில் சர்ப்பம் மித்தையாம். அதுபோல ஆத்மாவில் சமுசார துக்கம் மித்தையாமென்று சொல்லப்பட்டது. ஆண்டுத் திருஷ்டாந்த ஞானமின்றித் தார்ஷ்டாந்த (சித்தாந்த) ஞானமுண்டாகாது. ஆதலால் "ரஜ்ஜுவில் சர்ப்பம் எப்படித் தோற்றுகிறது?" என்பது திருஷ்டாந்தத்தில் பிரசினம் (கேள்வி).

---

* ரஜ்ஜுவில் கற்பித சர்ப்பத்திற்கு வியாவகாரிக சத்தையினால் அத்தியந்தாபாவமிருக்கிறது. அங்ஙனமே பிரஹ்மத்திற் கற்பிதமான ஜகத்திற்குப் பரமார்த்த சத்தையினால் அத்தியந்தாபாவ மிருக்கிறது. அதுவே ஜகத்தின் நித்தியநிவிருத்தியாம்.

## 125. கேள்வியின் அபிப்பிராயம். 125-130.

யாண்டு ரஜ்ஜுவில் சர்ப்பம், கிளிஞ்சிலில் வெள்ளி முதலியன பிரமமா யிருக்கின்றனவோ; ஆண்டு நான்கு மதங்களைக் கேட்டிருக்கின்றேன்.

1. சூனியவாதிகள் அசத்கியாதி கூறுவர்.
2. க்ஷணிக விஞ்ஞானவாதிகள் ஆத்மக்கியாதி கூறுவர்.
3. நியாயவைசேஷிக மதஸ்தர்கள் அந்நியதாக்கியாதி கூறுவர்.
4. சாங்கியப் பிரபாகரர்கள் அக்கியாதி கூறுவர்.

## 126. 1. அசத்கியாதி.

ஆண்டுச் சூனியவாதியின் அபிப்பிராயம் இதுவாம்:—ரஜ்ஜுவில் சர்ப்பம் அத்தியந்தம் அசத்தாக இருக்கிறது. அப்படியே வேறிடத்திலும் அத்தியந்தம் அசத்தாக இருக்கிறது. இப்படி அத்தியந்தம் அசத்தாயிருக்கிற சர்ப்பத்தின் பிரதீதி ரஜ்ஜுவில் உண்டாகிறது. இதனை அசத்கியாதி யென்பர். அத்தியந்தம் அசத்தாயிருக்கிற சர்ப்பத்தின் கியாதி அதாவது விளக்கமும் * சொல்லுதலும் அசத்கியாதி எனப்படும்.

## 127. 2. ஆத்மக்கியாதி.

விஞ்ஞானவாதியின் அபிப்பிராயம் இதுவாம்:—ரஜ்ஜுவிடத்திலும் அப்படியே வேறிடத்திலும் புத்திக்கு வெளியில் ஓரிடத்தும் சர்ப்ப மில்லை. சகல பதார்த்தமும் புத்திக்கு வெளியிலில்லை. சகல பதார்த்தங்களின் ஆகாரத்தையும் புத்தியே தரிக்கிறது. அந்தப்புத்தி க்ஷணிக விஞ்ஞானரூபமாக இருக்கிறது. க்ஷணிகந்தோறும் உற்பத்தி நாசங்களை யடையும் விஞ்ஞானம் எதுவோ அதுவே (புத்தி) சர்ப்பரூபமாகப் பிரதீதியாகிறது. இதற்கு ஆத்மக்கியாதியென்று பெயர். ஆத்மா என்றால் க்ஷணிக விஞ்ஞானரூப புத்தி; அதன் கியாதி யென்பது தோற்றமும் † சொல்லுதலுமாம்.

## 128. 3. அந்நியதாக்கியாதி. 128-129.

நையாயிக வைசேஷிகர்களது அபிப்பிராயம் இதுவாம்:—புற்றுமுதலிய இடங்களில் மெய்யான சர்ப்பம் இருக்கிறது. அது நேத்திரத்தினாற் பார்க்கப்படுகிறது. நேத்திரதோஷ பலத்தினால் சர்ப்பம் சமீபத்தில் எதிரில் தோற்றுகிறது. மெய்யான சர்ப்பத்திற்கும் நேத்திரத்திற்கும் மத்தியில் சுவர் முதலிய மறைவுகளிருந்தபோதிலும் தோஷசகித நேத்திரத்தினால் மறைபட்ட சர்ப்பமும் பார்க்கப்படுகிறது.

---

* அசத்கியாதியின் விசேஷக்கூற்றும் கண்டனமும் விருத்திரத்நாவலியின் பத்தாவது ரத்நத்திற் செய்யப்பட்டிருக்கின்றன; விருத்திப்பிரபாகரத்தின் ஏழாவது பிரகாசத்திலும் செய்யப்பட்டிருக்கிறன.

† ஆத்மக்கியாதியை விசேஷமாய்க் கூறுதலோடு கண்டித்தல் விருத்திரத்நாவலியின் பதினோராவது ரத்நத்திலும், அங்ஙனமே விருத்திப்பிரபாகரத்தின் ஏழாவது பிரகாசத்திலும் செய்யப்பட்டிருக்கிறது.

இதிலோர் சங்கை:—

தோஷத்தினால் சாமர்த்தியம் குறைகிறதே யன்றி விருத்தியாகிறதில்லை. ஜாடராக்கினியின் ஜீர்ணஞ்செய்யுஞ் சாமர்த்தியம் வாத பித்த கபதோஷங்களால் குறைவதுபோல, நேத்திரத்தின் சாமர்த்தியமும் திமிர (இருள்) முதலிய தோஷங்களால் குறையவேண்டியது. புற்று முதலிய இடங்களிலுள்ள சர்ப்பம் தோஷசகித நேத்திரத்தால் அறியப்பட்டால் சுத்த நேத்திரத்திற்கு மறைவிலிருக்கிற பொருளின் பிரத்தியக்ஷஞான முண்டாகாது; ஆனால் தோஷசகித நேத்திரத்திற்கு உண்டாகும். ஆதலால் “தோஷமுள்ள நேத்திரத்துக்குச் சாமர்த்தியம் அதிகமாகிறது” என்று கொள்ளுதலில் ஓர் திருஷ்டாந்தமுமில்லை.

அச்சங்கை பொருந்தாது. ஏனெனின், சிலருக்குப் பித்ததோஷத்தினால் ஓர்விதரோக முண்டாகும்போது நான்கு மடங்குண்டானும் திருப்தியாகிறதில்லை. பித்ததோஷத்தினால் ஜடராக்கினியின் ஜீர்ணிக்கும் சக்தி அதிகப்படுகிறதுபோல, நேத்திரத்திலும் இருள் முதலிய தோஷங்களால் வேறிடத்தி (மறைவி) லிருக்கும் சர்ப்பத்தின் பிரத்தியக்ஷஞ் செய்யத்தக்க சாமர்த்தியம் விருத்தியாகிறது.

இவ்விதத்தால் புற்று முதலிய ஸ்தலங்களில் இருக்கப்பட்ட சர்ப்பம் அந்நியதா அதாவது வேறுபிரகாரமாய் எதிரிலிருக்கிற ரஜ்ஜுவில் கியாதி (தோற்றுதலும், சொல்லுதலும்) எதுவோ அது * **அந்நியதாக்கியாதி** எனப்படும்.

**129.** † **சிந்தாமணிகாரர் மதம் இதுவாம்:**—தோஷமுள்ள நேத்திரத்தினால் புற்றிலுள்ள பாம்பு பார்க்கப்படுமாயின், மத்தியிலுள்ள வேறு பதார்த்தங்களும் ‡ பார்க்கப்படவேண்டும். ஆதலால் மறைவிலிருக்கிற பொருள் நேத்திரத்தினால் அறியப்படமாட்டாது. ஆனால் தோஷமுள்ள நேத்திரத்திற்கு ரஜ்ஜுவானது தன் சொரூபத்தோடு விளங்குகிறதில்லை; சர்ப்பரூபமாக விளங்குகிறது. ஆதலால் ரஜ்ஜுவின் அந்நியதா அதாவது வேறுவிதமாய் சர்ப்பரூபமான கியாதி (தோற்றமும் சொல்லுதலும்) **அந்நியதாக்கியாதி** யெனப்படும்.

---

* இது பிராசீனமதம். இந்த மதத்தில் ஓரிடத்திலிருக்கிற வஸ்து வேறொரு இடத்தில் தோற்றுவதே **பிராந்தி** என்று சொல்லப்படுகிறது. சித்தாந்தத்திற் சொல்லிய அர்த்தாத்தியாஸ ஞானத்தியாஸரூபப் பிராந்தி இம்மதத்தில் அங்கீகரிக்கப்படவில்லை.

† இது சிந்தாமணியென்னும் நூலிற்குக் கர்த்தாவாகிய நவீன நையாயிகர்மதமாம். இம்மதத்தில் ஒரு வஸ்து வேறு ரூபமாய்த் தோற்றுவதாகிய ஞானத்தியாசமே பிராந்தி எனப்படுகிறது. இவ்வந்நியாக்கியாதியின் விசேஷக்கூற்றும் கண்டனமும் விருத்திரத்நாவலியின் பன்னிரண்டாவது ரத்நத்திலும், விருத்திப்பிரபாகரத்தின் ஏழாவது பிரகாசத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

‡ காசுக்கடையில் உள்ள வெள்ளி சுத்திதேசத்தில் விளங்குமாயின், ஆண்டுக் கடையும் அதில் உள்ள சகலசாமக்கிரியோடு கூடிய பொன்னும் தோஷவலியால் தோற்றுதல்வேண்டும்; அங்ஙனம் தோற்றுகிறதில்லை.

## 130. 4. அக்கியாதியும், முற்கூறிய மூன்று மதங்களின் கண்டநமும்.

அக்கியாதிவாதியின் அபிப்பிராயம் இதுவாம்:—

1. அசத்கியாதி மதப்படி அசத்தின் தோற்ற முண்டாகும் பக்ஷத்தில், மலடிமகன் முயற்கொம்பு முதலியனவும் தோற்றவேண்டும். அப்படித் தோற்றாமையால் அசத்கியாதி மதம் பொருந்தமுடையதன்று.

2. க்ஷணிகவிஞ்ஞானவாதியின் மதப்படி க்ஷணிகந்தோறும் மாறும் புத்தி சர்ப்பாகாரத்தைத் தரிக்கும் பக்ஷத்தில் க்ஷணத்துக்குமேல் அச்சர்ப்பந் தோற்றலாகாது. ஆனால் அநுபவத்தில் பிரமமுள்ளவரையில் அச்சர்ப்பந் தோற்றுகிறது. ஆதலால் ஆத்மக்கியாதிமதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று.

3. அந்நியதாக்கியாதியின் முதற்கிரமம் சிந்தாமணிகாரருடைய அந்நியதாக்கியாதி மதத்தினுற் கண்டிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் சிந்தாமணிகாரர் மதப்படியும் அந்நியதாக்கியாதி மதம் அசங்கதமாம். ஏனெனின் ஞேயாநுசாரமாக ஞானமுண்டாகிறது. "ஞேயம் ரஜ்ஜு, ஞானம் சர்ப்பத்தினது" என்று கூறுதல் முற்று விரோதமாம். ஆதலால் இந்தக்கிரமம் மதிக்கத்தக்கதாம்:—யாண்டு ரஜ்ஜுவிற் சர்ப்பப்பிரம முளதோ ஆண்டு நேத்திரத்திற்குத் தன் விருத்திவாயிலாக ரஜ்ஜுவுடன் சம்பந்தமுண்டாய், 'இது' என ரஜ்ஜுவின் சாமாநிய ஞானமுண்டாகிறது. சர்ப்பத்தின் ஸ்மரணையுமுண்டாகிறது. "இது சர்ப்பம்" என்பதில் இரண்டு ஞானங்களுள :—

1. "இது" என்னும் அம்சமோ ரஜ்ஜுவின் சாமானியப் பிரத்தியக்ஷ ஞானமாம்.

2. "சர்ப்பம் இருக்கிறது" என்பது சர்ப்பத்தின் ஸ்மிருதி ரூப ஞானமாம்.

இவ்விதத்தால் "இது சர்ப்பம்" என்பதில் இரண்டு ஞானங்களுள. ஆனால் பிரமாதாவின் பயதோஷமும் பிரமாணத்தின் இருள்தோஷமுமாகிய இவைகளின் பலத்தினால் "எனக்கு இரண்டு ஞானங்களு முண்டாயிருக்கின்றன" என்று புருஷனுக்கு விவேகமுண்டாகிறதில்லை. "இது" எனும் அம்சமான ரஜ்ஜுவின் சாமானியஞானம் யதார்த்தமாம். முன்பார்த்த சர்ப்பத்தின் ஸ்மரணரூபஞானமு முண்மையேயாம். என்றாலும், "எனக்கிரண்டு ஞானங்களுண்டாயின, அவைகளில் ரஜ்ஜுவின் சாமானியப் பிரத்தியக்ஷ ஞான மொன்று; சர்ப்பத்தின் ஸ்மரணரூபஞான மொன்று" என்னும் விவேக முண்டாகிறதில்லை. இவ்விரண்டு ஞானங்களின் அவிவேகத்துக்குச் சாங்கியப்பிரபாகர மதத்தில் பிரமமென்பர். பிரமமுண்டாகிற இடங்களிலெல்லாம் இப்படியே அறியவேண்டும்.

"இந்தக் கிரமமாக ரஜ்ஜு முதலியவற்றில் சர்ப்பாதிப் பிரமமுண்டாகுமிடத்தில் நான்குமதங்களைக் கேட்டிருக்கிறேன். அவற்றில் உத்தமமான

தைச் சொன்னால் நான் அதைக் கொள்ளுகிறேன்" என்பது சிஷ்யனது பிரசினம்.

## 124–130 பிரசங்கங்களிலுள்ள பிரசினத்தின் உத்தரம் 131-146.

## 131. அக்கியாதிமதகண்டனம் 131-132.

### குரு சொல்லுகின்றார்.

சிஷ்யனே, அந்த நான்கு மதங்களுக்கும் வேறாகப் பிரமஸ்தலத்தில் அநிர்வசனீயக்கியாதி யென்னும ஐந்தாவது மதம் ஒன்றுண்டு. அசத்கியாதி, ஆத்மக்கியாதி, அந்நியதாக்கியாதி, அக்கியாதியென்னும் * நான்கு மதங்களும் யுக்தியில்லாதனவாம்.

எங்ஙனம் பின்பின் மதநிரூபணத்தில் முன் மூன்றுமதங்களும் அசங்கதமெனப்பட்டனவோ, அங்ஙனமே அக்கியாதிமதமும் அசங்கதமாம். ஏனெனின், "இது சர்ப்பம்" என்னும் ஞானத்தில்,

1. முதலில் "இது" என்னும் அம்சமோ இரஜ்ஜுவின் சாமாநியமாகிய பிரத்தியக்ஷமாம்.

2. "சர்ப்பம்" என்பது முன்பார்த்த சர்ப்பத்தின் ஸ்மரணரூபஞானம்.

இது அக்கியாதிவாதியின் மதமாம். ஆண்டு முன்பார்த்த சர்ப்பத்தின் ஸ்மரணையினையே அங்கீகரித்து, எதிரிலிருக்கும்ரஜ்ஜுவில்சர்ப்பஞானத்தை அங்கீகரியாவிடின், எதிரிலிருக்கும் ரஜ்ஜுவைக்கண்டு புருஷன் பயப்பட்டு ஓடுகிறான். அந்தப் பயமும் ஓடுதலு முண்டாகலாகாது. ஆதலால் எதிரிலிருக்கும் ரஜ்ஜுவிற்றான் சர்ப்பம் தோற்றுகிறது; முன்பார்த்த சர்ப்பத்தின் ஸ்மரணமுண்டாகிறதில்லை.

**132.** அல்லது,

ரஜ்ஜுவின் விசேஷவடிவமான யதார்த்தஞானமுண்டானபிறகு, "எனக்கு ரஜ்ஜுவினிடத்தில் மித்தியாசர்ப்பம் தோற்றியது" என்று புருஷனுக்

* மேற்சொல்லிய நான்கு மதங்களன்றிச் சத்கியாதி என்று பூர்வ பக்ஷிகளின் ஐந்தாவது மதமொன்றுண்டு. அம்மதப்படிச் சுக்தியின் அவயவங்களோடு இரஜதத்தினவயவமும் எப்போது மிருக்கின்றது. சுக்தியின் அவயவம் சத்தியமா யிருப்பதுபோல இரஜதத்தின் அவயவமும் சத்தியமாம்; மித்தையன்று. தோஷத்தோடுகூடிய நேத்திர சம்பந்தத்தால் சித்தாந்தத்தில் அவித்தையில் பரிணாமமாக அநிர்வசனீய ரஜதம் உண்டாவது போல, தோஷத்தோடுகூடிய நேத்திர சம்பந்தத்தால் இரஜதாவயவத்தினின்று சத்திய ரஜதமும் உண்டாகின்றது. சித்தாந்தத்தில் அதிஷ்டான ஞானத்தால் அநிர்வசனீய ரஜதம் நிவிருத்தியாவதுபோல, சுக்திஞானத்தால் சத்திய ரஜதமும் தனது அவயவத்திற் றெம்சமாகிறது. இம்மதமும் தள்ளத்தக்கது. ஏனெனின், சுக்தி ரஜத திருஷ்டாந்தத்தினால் பிரபஞ்சம் மித்தை என்னும் அநுமிதி உண்டாகின்றது. சத்கியாதி வாதத்தில் சுக்தியில் இரஜதம் சத்தியமாம். இதைத் திருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு பிரபஞ்சத்தில் மித்தியாத்துவசித்தி பெறுவது முடியாது. இன்னும் இந்த மதத்தில் அநேக தோஷங்களுள. கண்டிக்கும் யுக்திகள் கடினமாகையால் இங்கு எழுதப்படவில்லை.

குண்டாகும் பாதத்தினுலும் ரஜ்ஜுவினிடத்திலேயே சர்ப்பம பிரதீதியாகிறது; முன்பார்த்த சர்ப்பத்தின் ஸ்மிருதியுண்டாகிறதில்லை.

2. "இது சர்ப்பம்" என்னுமிடத்தில் ஒரேஞான முண்டாகிறது; இரண்டுஞானங்க ளுண்டாகிறதில்லை.

3. ஒரேகாலத்தில் அந்தக்கரணத்தில் ஸ்மரணரூப ஞானமும் பிரத்தியக்ஷரூப ஞானமும் உண்டாகமாட்டா.

ஆதலால் * அக்கியாதிமதமும் முற்றும் அசங்கதமாம். இந்நான்கு மதங்களின் லக்ஷணங்களும் கண்டனமும் விவரணம், ஸ்வாராஜ்யசித்தி முதலிய கிரந்தங்களில் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. யுக்திகள் கடினமாயிருத்தலால் ஜிஞ்ஞாஸுவுக்குச் சுருக்கமாக அவற்றின் தன்மைமாத்திரம் சொல்லப்பட்டது; விரிவாயெழுதப்படவில்லை.

## 133. 5. சித்தாந்தத்திலுள்ள அநிர்வசனீயக்கியாதியின் தன்மை.

சித்தாந்தத்தில் அநிர்வசனீயக்கியாதியுளது. அதன்றன்மை இதுவாம்:— அந்தக்கரணத்தின் விருத்தி நேத்திராதிவாயிலாக வெளிப்பட்டு விஷயசமாகாரமாகிறது. அதனுல் விஷயத்தின் ஆவரணம் நீங்கி விஷயந் தோற்றுகிறது. அதற்கு(ச் சூரியாதி)ப் பிரகாசமும் சாதகமாயிருக்கிறது; பிரகாசமின்றிப் பதார்த்தம் விளங்குகிறதில்லை.

யாண்டு ரஜ்ஜுவில் சர்ப்பப்பிரம முண்டாகின்றதோ, ஆண்டு அந்தக்கரணத்தின் விருத்தி நேத்திரவாயிலாக வெளிப்படுகின்றது; ரஜ்ஜுவுடன் அதன் சம்பந்தமு முண்டாகின்றது. ஆனல் † இருள்முதலிய தோஷங்கள் பிரதி

---

* இதனை விசேஷமாகக் கூறுதலும் கண்டித்தலும் விருத்திரத்நாவலியின் பதின்மூன்றுவது ரத்நத்திலும் விருததிப்பிரபாகரத்தின் ஏழாவது பிரகாசத்திலும் செய்யப்பட்டுள.

† இருள் சப்தத்தால் மந்தாந்தகாரமும் கொள்ளத்தக்கது. ஏனெனின் தோஷமின்றிய கண்ணுடையவனுக்கு நல்ல வெளிச்சத்தில் ரஜ்ஜுமுதலிய அதிஷ்டானத்தினது விசேஷரூபத்தின் அஞ்ஞானம் உண்டாகிறதில்லை.

அதிஷ்டானத்தின் சாமாந்யரூபமான "இதந்தை" யின் ஞானமுண்டாகிறதில்லை. அதிஷ்டானத்தின் சாமாந்யரூப ஞானமின்றியும் விசேஷரூப அஞ்ஞானமின்றியும் அத்தியாஸ முண்டாகிறதில்லையென்னும் வார்த்தை முன் இரண்டாவது தரங்கத்தில் அத்தியாசத்தின் பிரசங்கத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. மந்தாந்தகாரத்தில் விசேஷரூபத்தின் அஞ்ஞானமும் சாமானியரூபத்தின் ஞானமுமாகிய இரண்டும் பொருந்துகின்றன. ஆதலால் நேத்திரத்தினது விஷயத்தின்கணுள்ள அத்தியாஸத்தில் மந்தாந்தகாரத்தின் அபேக்ஷையிருத்தலின் அதுவும் கொள்ளப்படும். நேத்திரத்தின் மந்தத்தன்மை வடிவ திமிரதோஷமும் கொள்ளப்படும். இரண்டில் ஒன்றுளதாயின் அப்போது பிரமமுண்டாம். முதலிய என்னும் சொல்லால் காமாலை முதலிய நேத்திரத்தின் ரோகங்களும் கொள்ளப்படும்.

பந்தகமாயிருக்கின்றன. ஆதலால் விருத்தியின்சொரூபம் ரஜ்ஜுவின் சமானாகாரமாகிறதில்லை. அதனால் ரஜ்ஜுவின் ஆவரணம் நாசமாகிறதில்லை.

இவ்விதத்தால் ஆவரண பங்கத்தின்பொருட்டு விருத்தியின் சம்பந்தமுண்டாகியும், எப்போது ரஜ்ஜுவின் ஆவரணம் பங்கமாகிறதில்லையோ, அப்போது ரஜ்ஜு சேதனத்திலுள்ள அவித்தையில் க்ஷோப (கலக்க)முண்டாய் அவ்வவித்தை சர்ப்பாகார பரிணாமத்தை யடைகிறது.

1. அந்த அவித்தையின் காரியமான சர்ப்பம் சத்தாயிருக்குமாயின், அது ரஜ்ஜுஞானத்தினால் பாதமாகாது; ஆனால் பாதமாகிறது. ஆதலால் சர்ப்பம் சத்தன்று.

2. அச்சர்ப்பம் அசத்தாமாயின் மலடிமகன்போலத் தோற்றாது; ஆனால் அநுபவத்தில் தோற்றுகிறது. ஆதலால் அது அசத்துமன்று.

ஆனால் சதசத்துக்கு விலக்ஷணமான * அநிர்வசனீயமாம். கிளிஞ்சில் முதலியவைகளில் வெள்ளி முதலியவைகளும் இவ்வாறு அநிர்வசனீயமாய் உற்பத்தியாகின்றன. இந்த அநிர்வசனீயத்தின் கியாதி அதாவது பிரதீதியும் சொல்லுதலும் அநிர்வசனீயக்கியாதி எனப்படும்.

## 134. பிரமஸ்தலத்தில் அந்தக்கரணத்திற்குப் பின்னமான அவித்தையின் பரிணாமமாகிய சர்ப்பாதி விஷயங்களும் அவற்றின் ஞானமும் ஒரே சமயத்தில் உற்பத்தியாய் ஒடுங்குகின்றன; அவை சாக்ஷிபாஸ்யமாமெனல்.

எங்ஙனம் சர்ப்பம் அவித்தையின் பரிணாமமோ, அங்ஙனமே அதன்ஞானரூப விருத்தியும் அவித்தையின் பரிணாமமேயாம்; அந்தக்கரணத்தின் பரிணாமமன்று. ஏனெனின், ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பம் பாதிக்கப்படுவதுபோல அதன் ஞானமும் பாதிக்கப்படுகிறது. அந்தக்கரணத்தின் ஞானமாயின் பாதமாகலாகாது. ஆதலால் சர்ப்பம்போலச் சர்ப்பஞானமும் அவித்தியாகாரியமாய்ச் சத்து அசத்துகளுக்கு விலக்ஷணமான அநிர்வசனீயமா யிருக்கிறது. ஆனால்,

---

* சத்தின் விலக்ஷணம் அசத்து; அதனை அசத்துக்கு விலக்ஷணம் என்று சொல்லுதல் விருத்தம். அசத்துக்கு விலக்ஷணம் சத்து; அதனைச் சத்தின்விலக்ஷணமென்று சொல்லுதல் விருத்தம். சதசத்துக்கு வேறான மூன்றாவது பதார்த்தமில்லாமையினால் அநிர்வசனீய சப்தத்தினது அர்த்தத்தின் உணர்ச்சியே யில்லையென்னும் சங்கைக்கு.

இது சமாதானம்:—1. மூன்றுகாலத்திலும் பாதிக்கப்படாதது சத்தெனப்படும். அதற்கு விலக்ஷணமென்பதனால் பாதிக்கத்தக்கதென்று ஏற்படுகிறது.

2. ஸ்வரூபமில்லாத மலடிமகன் முதலியவை அசத்தெனப்படும். அதற்கு விலக்ஷணமென்பதனால் ஸ்வரூ முடையதென்று ஏற்படுகிறது.

1. சர்ப்பம் ரஜ்ஜு உபஹித சேதனத்திலிருக்கும் தமோகுணப் பிரதான அவித்தை யம்சத்தின் பரிணமமாம்.

2. விருத்திஞானம் சாக்ஷி சேதனத்திலிருக்கும் அவித்தையினது சத்துவ குணத்தின் பரிணமமாம்.

எந்தச்சமயத்தில் ரஜ்ஜு சேதனத்தின் அவித்தை சர்ப்பாகாரமாய்ப் பரிணமிக்கிறதோ, அதே சமயத்தில் சாக்ஷியை ஆசிரயித்த அவித்தை ஞானாகாரமாய்ப் பரிணமிக்கிறது. ஏனெனின், எந்தநிமித்தத்தினால் ரஜ்ஜு உபஹித சேதனத்தை யாசிரயித்த அவித்தையில் * க்ஷோப (கலக்க) முண்டாயிற்றோ, அதே நிமித்தத்தினால் சாக்ஷியை யாசிரயித்த அவித்தையினும் கலக்கமுண்டாகிறது. ஆதலால் பிரமஸ்தலத்தில் சர்ப்பாதி விஷயங்களும் அவற்றின் ஞானமும் ஒரேசமயத்தி லுண்டாகின்றன; ரஜ்ஜு முதலிய அதிஷ்டானங்களின் ஞானத்தினால் ஒரேசமயத்தில் லயமாகின்றன. இவ்வாற்றால்,

1. சர்ப்பாதிப் பிரமத்தில்,

(1) வெளியிலிருக்கும் அவித்தியாம்சம் சர்ப்பாதி விஷயங்களுக்கு உபாதானகாரணமாம்.

(2) சாக்ஷி சேதனத்தை யாசிரயித்து உள்ளேயிருக்கும் அவித்தியாம்சம் சர்ப்பாதி விஷயங்களின் ஞானவடிவ விருத்திக்கு உபாதானகாரணமாம்.

2. சொப்பனத்திலோ,

(1) சாக்ஷியை யாசிரயித்த அவித்தையின் தமோகுணம்சமே விஷயரூப பரிணமத்தை யடைகின்றது.

(2) அந்த அவித்தையிலுள்ள சத்துவகுணம்சம் ஞானரூபபரிணமத்தை அடைகின்றது.

ஆதலால் சொப்பனத்தில் உள்ளேயிருக்கும் அவித்தையே விஷயத்திற்கும் ஞானத்திற்கும் உபாதானகாரணமாம்.

இக்காரணத்தினால் வெளியேயிருக்கும் ரஜ்ஜு சர்ப்பாதிகளும், உள்ளேயிருக்கும் சொப்பனபதார்த்தங்களும் சாக்ஷிபாஸ்யமெனப்படுகின்றன. அவித்தையின் விருத்திவாயிலாக எதனைச் சாக்ஷி பிரகாசிக்கிறதோ அதுசாக்ஷிபாஸ்யமெனப்படும்.

## 135. ரஜ்ஜுவில் சர்ப்பமும் அதன் ஞானமும் அவித்தையின் பரிணமமும் சேதனத்தின் விவர்த்தமுமாம்.

ரஜ்ஜு முதலியவற்றில் அநிர்வசனீய சர்ப்பாதிகளும் அவற்றின் ஞானமும் பிரமமென்றும் அந்நியாஸமென்றும் சொல்லப்படும். அந்தப் பிரமம் அவித்தையின் பரிணமமும் சேதனத்தின் விவர்த்தமுமாம்.

ஆதலால் பாதிக்கத்தக்க ஸ்வரூபமுடையது அநிர்வசனீய பதார்த்தமாம்; அங்ஙனமே பிரபஞ்சமும் இரஜ்ஜு சர்ப்பாதிகளுமாம். அவற்றின் உபலப்தியென்னும் பிரதீதி வேதாந்த நிபுண பண்டிதர்களுக் குண்டாகின்றது.

1. உபாதானகாரணத்துக்குச் சமான சுபாவமுடைய வேற்றுச்சொரூபம் பரிணாமமெனப்படும்.

2. அதிஷ்டானத்திற்கு விபரீதமான சுபாவமுடைய வேற்றுச்சொரூபம் விவர்த்தமெனப்படும்.

1. உபாதானகாரணம் அவித்தை. அது அநிர்வசனீயம். அப்படியே ரஜ்ஜுவில் சர்ப்பமும் அதன் ஞானமும் அநிர்வசனீயமா யிருக்கின்றன. ஆகையால் ரஜ்ஜுவில் சர்ப்பமும் அதன் ஞானமும் அவித்தையின் சமான சுபாவமுடைய வேற்றுச்சொரூபம் அதாவது அவித்தையின் வேறுவிதமான வடிவம். அவை அவித்தையின் பரிணாமமாம்.

2. அங்ஙனமே ரஜ்ஜு அவச்சின்ன அதிஷ்டான சேதனம் சத்ரூபமாக இருக்கிறது. சர்ப்பமும் அதன் ஞானமும் சத்துக்கு விலக்ஷணமாயிருக்கின்றன. ஆதலால் ரஜ்ஜுவில் சர்ப்பமும் அதன் ஞானமும் அதிஷ்டான சேதனத்திற்கு விபரீத சுபாவமுடைய சேதனத்தின் வேறுவிதமான வடிவமாம்.

## 136. ரஜ்ஜு அந்தக்கரணங்களின் அதிஷ்டானம் உபகித சேதனமாம்; ரஜ்ஜுவன்றெனல். சர்ப்பமும் அதன் ஞானமும் ரஜ்ஜு ஞானத்தால் நிவிருத்தியாதல்.

1. மித்தியா சர்ப்பத்துக்கு அதிஷ்டானம் ரஜ்ஜு உபஹித சேதனமாம்; ரஜ்ஜுவன்று. ஏனெனின், சர்ப்பம்போல ரஜ்ஜுவும் கற்பிதமாயிருக்கிறது. ஒரு கற்பிதவஸ்து வேறோர் கற்பிதவஸ்துவிற்கு அதிஷ்டானமாகாது. ஆதலால் ரஜ்ஜு உபஹித சேதனமே அதிஷ்டானமாம்; ரஜ்ஜுவன்று.

ரஜ்ஜு விசிஷ்டசேதனத்தை அதிஷ்டானமெனினும் ரஜ்ஜு, சேதனம் என்னும் இரண்டும் அதிஷ்டானமாகும். ஆண்டு ரஜ்ஜு பாகத்தில் அதிஷ்டானத்தன்மை பாதிதமாம், ஆதலால் ரஜ்ஜு உபஹித சேதனமே அதிஷ்டானமாம்; ரஜ்ஜு விசிஷ்டசேதனமன்று.

2. அங்ஙனமே சர்ப்பஞானத்துக்குச் சாக்ஷிசேதனம் அதிஷ்டானமாம்.

இவ்வாறு பிரமஸ்தானத்தில் விஷயத்திற்கும் அதன் ஞானத்திற்கும் உபாதிபேதத்தால் அதிஷ்டானம் வேறுபடுகிறது; ஒன்றாக இருக்கிறதில்லை.

1. விசேஷவடிவமாக ரஜ்ஜுவின் அறியாமையே, அவித்தையிற் கலக்கவாயிலாக இரண்டன் உற்பத்தியிலும் நிமித்தமாம்.

2. அங்ஙனமே இரஜ்ஜுவின் ஞானம் இரண்டன் நிவிருத்தியிலும் நிமித்தமெனப்பட்டிருக்கின்றது.

---

* உபாதானம் காரியாபி (காரியத்திற்கெதிர்)முகமாகுதல் க்ஷோபம் எனப்படும்.

## 137. இதிற் சங்கை:—ரஜ்ஜுவின் ஞானத்தால் சர்ப்பத்தின் நிவிருத்தி பொருந்ாதெனல்.

இவ்வாறு சங்கை யுண்டாகின்றது:—ரஜ்ஜு ஞானத்தால் சர்ப்பத்தின் நிவிருத்தி பொருந்தாது. ஏனெனின், "மித்தியாவஸ்துவிற்கு எது அதிஷ்டானமோ, அந்த அதிஷ்டானத்தின் ஞானத்தினால் மித்தை நிவிருத்தியாகுமென்பது அத்துவைதவாதத்தின் சித்தாந்தம்." மித்தியாசர்ப்பத்திற்கு அதிஷ்டானம் ரஜ்ஜு உபஹித சேதனமாம்; ரஜ்ஜுவன்று. ஆதலால் ரஜ்ஜு ஞானத்தால் சர்ப்பம் நிவிருத்தியாகாது.

## 138. இதற்குச் சமாதானம்:—ரஜ்ஜுவின் ஞானமே சர்ப்பத்தின்து அதிஷ்டானத்தின் ஞானமாம்.

இது சமாதானமாம்:—"ரஜ்ஜு முதலிய ஜடபதார்த்தங்களின் ஞானம் அந்தக்கரணத்தின் விருத்திரூபமாயின், ஆண்டு ஆவரணபங்கம் விருத்தியின் பிரயோஜனமாம். அந்த ஆவரணம் அஞ்ஞானத்தின் சக்தியாம். ஆதலால் ஆவரணம் ஜடத்தின் ஆசிரிதமன்று; ஆனால் ஜடத்துக்கு அதிஷ்டானமான சேதனத்தின் ஆசிரிதமாம். ஆதலால்,

1. ரஜ்ஜு சமான ஆகாரத்தையடைந்த அந்தக்கரணத்தின் விருத்தியினால் ரஜ்ஜு அவச்சின்னசேதனத்தின் ஆவரணமே பங்கமாகிறது.

2. விருத்தியிலுள்ள சிதாபாசனால் ரஜ்ஜுவின் பிரகாசமுண்டாகிறது.

3. சேதனம் சுயம்பிரகாசமாயிருக்கிறது. அதில் ஆபாசனது உபயோகமில்லை.

இந்த விஷயம் முழுவதும் மேல் இத்தரங்கத்தில் (187-வது பிரசங்கத்தில்) சொல்லப்படும்.

இவ்வாற்றால்,

1. சிதாபாசனுடன் கூடிய அந்தக்கரணத்தின் விருத்திரூப ஞானத்திலுள்ள விருத்திபாகத்திற்கு ஆவரணபங்கரூபபலம் சேதனத்திலுண்டாகிறது.

2. சிதாபாஸபாகத்திற்குப் பிரகாசவடிவ பலம் ரஜ்ஜுவிலுண்டாகிறது.

ஆதலால் விருத்திஞானத்திற்குக் கேவலம் ஜடமான ரஜ்ஜு விஷயமாகிறதில்லை. ஆனால் அதிஷ்டான சேதனத்துடன் கூடிய ரஜ்ஜு ஆபாசனுடன் கூடிய விருத்திக்கு விஷயமாகிறது. இக்காரணத்தால் சித்தாந்தக் கிரந்தத்தில் "அந்தக்கரணஜந்நிய விருத்திஞானம் பிரஹ்ம முழுவதினையும் விஷயஞ் செய்கிறது" என்றெழுதப்பட்டிருக்கிறது.

இந்தப்பிரகாரமாக ரஜ்ஜு ஞானத்தால் ஆவரணமின்றியதாய்ச் சர்ப்பத்தின் அதிஷ்டானமான ரஜ்ஜு அவச்சின்னசேதனமும் தன் பிரகாசத்தி

ஞல் விளங்குகிறது. ஆதலால் ரஜ்ஜுவின் ஞானமே சர்ப்பத்தின் அதிஷ்டான ஞானமாம். அதனுல் ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பம் நிவிருத்தியாகும்.

## 139. சங்கை:—ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பஞானத்தின் நிவிருத்தி பொருந்தாமை.

வேறு சங்கை:—இவ்வாற்றுல் மேற்சொல்லியபடி ரஜ்ஜுஞானத்திஞல் சர்ப்பம் நிவிருத்தியாஞலும் சர்ப்பஞானம் நிவிருத்தியாகாது. ஏனெனின் சர்ப்பத்துக்கு அதிஷ்டானம் ரஜ்ஜு அவச்சின்ன சேதனமாம்; சர்ப்பஞானத்துக்கு அதிஷ்டானம் சாக்ஷிசேதனமாம். முன்சொன்னபடி ரஜ்ஜுஞானத்தால் ரஜ்ஜு அவச்சின்னசேதனமே விளங்குகிறது; சாக்ஷிசேதனம் விளங்குகிறதில்லை. ஆதலால் ரஜ்ஜு ஞானமுண்டாஞலும் சர்ப்பஞானத்துக்கு அதிஷ்டானமான சாக்ஷிசேதனம் அறியப்படாததாயிருக்கிறது. அறியப்படாத அதிஷ்டானத்தில் கற்பிதத்தின் நிவிருத்தியாகிறதில்லை. அறியப்பட்ட அதிஷ்டானத்திற்றுன் கற்பிதத்தின் நிவிருத்தியுண்டாகின்றது. ஆகையால் ரஜ்ஜு ஞானத்தால் சர்ப்பஞானத்தின் நிவிருத்தி பொருந்தாது.

## 140. அதன் சமாதானம்:—சர்ப்பத்தின் இன்மையால் சர்ப்பஞானம் நிவிருத்தியாதல் 140-142.

சமாதானம் இதுவாம்:—ஞானம் விஷயத்தின் அதீனமாயிருக்கிறது. விஷயமாகிய சர்ப்பம் நிவிருத்தியாகவே சர்ப்பஞானம் விஷயமின்மையால் தானே நிவிருத்தியாகிறது.

**141.** சங்கை:—அதிஷ்டானஞானமின்றிக் கற்பிதம் நிவிருத்தியாகிறதில்லை; சர்ப்பத்தின் ஞானமும் கற்பிதம்; அதன் அதிஷ்டானம் சாக்ஷிசேதனம்; அதன் ஞானமின்றிக் கற்பித சர்ப்பத்தின் ஞானம் நிவிருத்தியாதல் பொருந்தாது என்று கூறின்,

**142.** அதன் சமாதானம் இதுவாம்:—நிவிருத்தி இருவகையாம்.

1. ஒன்று * அத்தியந்த நிவிருத்தி;

2. மற்றொன்று காரணத்தில் லயமாகுதல்.

காரணத்துடன் காரியமும் நிவிருத்தியாகுதல் அத்தியந்தநிவிருத்தியெனப்படும்.

எல்லாக் கற்பிதவஸ்துக்களுக்கும் காரணம் அதிஷ்டானத்தை ஆசிரயித்துக்கொண்டிருக்கும் அஞ்ஞானமாம்.

1. அதிஷ்டான ஞானத்திஞலேயே அஞ்ஞானத்தோடு கற்பிதகாரியங்களின் நிவிருத்தியுண்டாகின்றது.

---

* வஸ்திரம் தனக்குக் காரணமான நூலுடன் எரிந்துபோகுதல் அத்தியந்த நிவிருத்தி. கடம் உடைந்து மண்ணுகப்போகுதல் மற்றொருவித லயரூபநிவிருத்தி.

2. ஆனால் காரண த்திலலயமாகும் நிவிருத்தி அதிஷ்டானஞானமின்றியும் உண்டாகும்.

சுழுத்தியிலும் பிரளயத்திலும் சகல பதார்த்தங்களும் அதிஷ்டான ஞானமின்றி அஞ்ஞானத்தில் லயமடைகின்றன. அங்குச் சர்வபதார்த்தங்களின் லயத்துக்குக் காரணம் போகத்திற்கு எதிர்முகமாகும் கர்மத்தின் அபாவமாம். அங்ஙனமே அதிஷ்டான சாக்ஷியின் ஞானமின்றியே சர்ப்பஞானம் நிவிருத்தியாகிறது. அங்குச் சர்ப்பஞானத்துக்கு விஷயமான சர்ப்பத்தின் அபாவமே சர்ப்பஞானத்தின் நிவிருத்திக்குக் காரணமாகிறது.

இவ்வாறு ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பத்தின் நிவிருத்தியுண்டாகின்றது. சர்ப்பஞானத்துக்கு விஷயமான சர்ப்பத்தின் அபாவம் சர்ப்பஞானத்தின் லயத்தில் நிமித்தமாம்.

## 143 "இரஜ்ஜு ஞானசமயத்தில் சாக்ஷியின் விளக்கமுண்டாகின்றது.

அல்லது, சர்ப்பமும் அதன்ஞானமுமாகிய இரண்டும் ரஜ்ஜுஞானத்தினாலேயே நிவிருத்தியாகின்றன. ஏனெனின், ரஜ்ஜுவின் பிரத்தியக்ஷஞானமுண்டாகும்போது அந்தக்கரணத்தின் விருத்தி நேத்திரவாயிலாக வெளிப்பட்டு ரஜ்ஜுதேசத்தை யடைந்து அதன் சமாகாரமாகின்றது. ஆதலால் ரஜ்ஜுவின் பிரத்தியக்ஷசமயத்தில் விருத்தியுபகிதசேதனமும் ரஜ்ஜுஉபஹிதசேதனமுமாகிய இரண்டும் ஒன்றாகின்றன, அவற்றிற்குப் பேதமிருப்பதில்லை. இதில் இது ஏதுவாம்:—சேதனத்துக்குச் சொரூபமாகவோ பேதம் ஓரிடத்துமில்லை. ஆனால் உபாதிபேதத்தால் சேதனத்திற்குப் பேதமுண்டாகிறது. விருத்தியுபஹித சேதனத்தையும் ரஜ்ஜு உபஹிதசேதனத்தையும் பேதிக்கும் உபாதிகள் விருத்தியும் ரஜ்ஜுவுமாம்.

1. அந்த விருத்தியும் ரஜ்ஜுவும் வேறுவேறிடங்களி லிருக்கும்போது உபாதியுடைய சேதனங்கட்குப் பேதமுண்டாகிறது.

2. இரண்டு உபாதிகளும் ஓரிடத்தி லிருக்கும்போது உபஹிதசேதனங்கட்குப் பேதம் சம்பவிக்கிறதில்லை.

இது வேதாந்தபரிபாஷைமுதலிய கிரந்தங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

1. வெவ்வேறிடங்களிலிருக்கும் உபாதிகளினாலேயே உபஹிதசேதனத்துக்குப் பேதமுண்டாகிறது.

2. ஒரே இடத்தில் இரண்டு உபாதிகளுமிருக்கும்போதும் இரண்டு உபாதிகளா லுபஹிதமான சேதனமும் ஒன்றேயாம்.

இவ்வாறு ரஜ்ஜுவின் பிரத்தியக்ஷசமயத்தில் ரஜ்ஜு உபஹிதசேதனமும் விருத்தி யுபஹிதசேதனமும் ஒன்றாயிருக்கின்றன. அங்குச் சாக்ஷிசேதனமே விருத்தியுபஹித சேதனமாம். ஏனெனின், அந்தக்கரணத்திலும் அதன்

விருத்தியினுமுள்ள அவற்றைப் பிரகாசிப்பிக்கும் சேதனமாத்திரம் சாக்ஷி யெனப்படும். இவ்விதமாக ரஜ்ஜுவின் பிரத்தியக்ஷஞானசமயத்தில் சாக்ஷி சேதனத்திற்கும் ரஜ்ஜுஉபஹித சேதனத்திற்கும் அபேதமுண்டாகின்றது.

1. ரஜ்ஜு உபஹித சேதனம் ரஜ்ஜு ஞானத்தால் விளங்குகிறது.

2. ரஜ்ஜு உபஹித சேதனத்திற்கு வேறுகாத சாக்ஷிசேதனமும் ரஜ்ஜு ஞானததால் விளங்குகிறது. இவ்வாறு ரஜ்ஜு ஞானசமயத்தில் அதிஷ்டான சாக்ஷியின் விளக்கமிருத்தலால் கற்பித சர்ப்பஞானத்தின் நிவிருத்தி சம்ப விக்கின்றது.

## 144. சகலத் திரிபுடிகளின் ஞானத்தில் சாக்ஷியின் ஞான முண்டாமெனல்.

அல்லது, கூடஸ்ததீபிகையில் வித்தியாரண்ய ஸ்வாமிகள் இது கூறி யிருக்கின்றனர்:—

1. "ஆபாஸ ஸஹித அந்தக்கரணத்தின் விருத்தி இந்திரியங்களின்லாக வெளியிற் சென்று கடாதி விஷயங்களைப் பிரகாசிக்கின்றது.

2. கடாதிவிஷயம், அங்ஙனமே ஆபாஸசகித விருத்திரூப அவற்றின் ஞானம, அங்ஙனமே ஆபாஸஸஹித அந்தக்கரணரூப ஞாதா என்னும் இம் மூன்றையும் சாக்ஷி பிரகாசிக்கிறது."

1. "இது கடம்" என்பதாகஆபாஸஸஹித விருத்தியினால் கடமாத்திரத் தின் பிரகாசமுண்டாகிறது.

2. "நான் கடத்தை அறிகிறேன்" என்பதாக

(1) நான் என்னும் சப்தத்துக்கு அர்த்தமாகிய ஞாதா,

(2) ஞேயமாகிய கடம்,

(3) அதன் ஞானம் என்னும் மூன்று திரிபுடிகளையும் சாக்ஷி பிரகாசிக் கிறது.

(ஞாதா, ஞானம், ஞேயமென்னும் மூன்றும் திரிபுடி எனப்படும்.)

இவ்வாற்றாற் சகலத் திரிபுடிகளையும் பிரகாசிப்பது சாக்ஷியாம்.

சாக்ஷி தான் அஞ்ஞாதமாயிருந்தால் திரிபுடியின் ஞானம் சாக்ஷியினு லுண்டாகாது. ஆதலால் சகலத்திரிபுடிகளின் ஞானத்தில் சாக்ஷியின் ஞானம் அவசியம் உண்டாகிறது.

அந்தச் சாக்ஷிஞானத்தால் சர்ப்பஞானத்தின் நிவிருத்தி சம்பவிக்கிறது. இது முற்கிரமப்படி சர்ப்பத்துக்கும் அதன் ஞானத்துக்கும் அதிஷ்டானங் கள் வெவ்வேறெனச்சொல்லப்பட்டது. இதில் இவ்வளவு சங்கை சமாதான ங்கள் உள. இப்பக்ஷத்தில் மற்றும் அநேகசங்கை சமாதானவடிவ விவா தங்களுள.

## 145. சர்ப்பத்திற்கும் அதன் ஞானத்திற்கும் அதிஷ்டானம் சாக்ஷியாதல். 145. 146.

ஆதலால் சர்ப்பத்துக்கும் அதன் ஞானத்துக்கும் அதிஷ்டானம் ஒன்றேயென்னும் பக்ஷத்தைக் கூறுகின்றார்:—

ஆண்டு வெளியிலிருக்கும் ரஜ்ஜுசேதனம் சர்ப்பத்துக்கும் அதன் ஞானத்துக்கும் அதிஷ்டானம் என்று கூறின்—

அது கூடாது. ஏனெனின்—

1. எவ்வளவு ஞானம் உண்டாகின்றனவோ, அவை பிரமாதா அல்லது சாக்ஷியை ஆசிரயித்துண்டாகின்றன. ஞானம் வெளியிலுள்ள ரஜ்ஜுசேதனத்தின் ஆசிரிதமெனல் கூடாது.

2. அதுபோல சர்ப்பத்திற்கும் சர்ப்பஞானத்திற்கும் அதிஷ்டானம் அந்தக்கரணஉபஹித சாக்ஷிசேதனமென்று கொள்ளின், சரீரத்தினுள் அந்தக்கரண தேசத்தில் சர்ப்பம் தோற்றுதல் வேண்டும்; ரஜ்ஜுவினிடத்தில் சர்ப்பம் தோற்றவேண்டியதில்லை. உள்ளே உற்பத்தியாகிய சர்ப்பம் மாயையின் பலத்தால் வெளியில் தோற்றுவதாகக் கொள்ளின் ஆத்மக்கியாதியின் மதம் சித்திக்கும்.

இவ்விதத்தால்

1. ரஜ்ஜு உபஹிதசேதனம் ஞானத்துக்கு அதிஷ்டானமாகாது.

2. அந்தக்கரண உபஹிதசேதனம் சர்ப்பத்துக்கு அதிஷ்டானமாகாது.

ஆதலால் சர்ப்பத்திற்கும் அதன் ஞானத்திற்கும் அதிஷ்டானம் ஒன்றெனல் பொருந்தாது. அங்ஙனமாயினும், ரஜ்ஜுவின் அருகிற்சென்று அந்தக்கரணத்தின் "இது" எனும்வடிவ விருத்தியிலுள்ள சேதனத்தின் ஆசிரிதமான அவித்தை சர்ப்பாகார ஞானகார பரிணாமங்களையடைகிறது.

1. உபஹித சேதனத்திலுள்ள அவித்தையின் தமோகுணாம்சம் சர்ப்பத்திற்கு உபாதானகாரணமாம்.

2. அதிற்றானேயுள்ள சத்துவ குணாம்சம் சர்ப்பத்தின் ஞானத்திற்கு உபாதானகாரணமாம். சர்ப்பத்திற்கும் அதன் ஞானத்திற்கும் விருத்தியுபஹித சேதனம் அதிஷ்டானமாம்.

1. விருத்தி வெளியில் ரஜ்ஜுதேசத்திற் சென்றது. அதனால் விருத்தியுபஹித சேதனமும் வெளியில் இருக்கிறது. ஆதலால் அது சர்ப்பத்தின் ஆசிரயமாகிறது.

2. அந்தக்கரணத்தின் சொரூபம் எவ்வளவோ, அவ்வளவே சாக்ஷியின் சொரூபமுமாய்ச் சரீரத்தினுள்ளிருக்கும் அந்தக்கரணமே விருத்திஸ்வரூப

பரிணாமத்தை யடைகிறது. ஆதலால் விருத்தியுபஹித சேதனம் சாக்ஷியாம். அதனால் அது ஞானத்துக்கு ஆசிரயமாகிறது.

ரஜ்ஜு பிரத்தியக்ஷமாகும்போது ரஜ்ஜு சேதனமும் விருத்தி சேதனமும் இரண்டும் ஒன்றாகுதலால் ரஜ்ஜு ஞானத்தினால் சர்ப்பமும் அதன் ஞானமும் நிவிருத்தியாதல்கூடும்.

**146.** யாண்டு ஒரே ரஜ்ஜுவில் பத்துப் புருஷர்களுக்குச் சிலருக்குச் சர்ப்பமும், சிலருக்குத் தடியும், சிலருக்குப் பூமாலையும், சிலருக்குப் பூமியின் வெடிப்பும், சிலருக்கு நீர்த்தாரையுமாய் வெவ்வேறாகத் தோற்றுகின்றதோ, அல்லது எல்லோருக்கும் சர்ப்பமே தோற்றுகின்றதோ, ஆண்டு எந்தப் புருஷனுக்கு ரஜ்ஜுவின் சாக்ஷாத்கார முண்டாகின்றதோ, அவனது விருத்தி சேதனத்தில் கற்பித அத்தியாசத்தின் நிவிருத்தி யுண்டாகிறது. எவனுக்கு ரஜ்ஜுஞான முண்டாகவில்லையோ, அவனுக்கு அத்தியாசத்தின் நிவிருத்தி யுண்டாகிறதில்லை. ஆதலால் விருத்தி சேதனமே கற்பிதத்தின் அதிஷ்டானமாம்; ரஜ்ஜு முதலிய விஷயஉபஹித சேதனமன்று.

ரஜ்ஜு உபஹித சேதனத்தைச் சர்ப்ப தண்டாதிகளுக்கு அதிஷ்டானமெனக்கொள்ளின், பத்துப் புருஷர்களுக்குத் தோற்றும் பத்துப்பொருள்களும் ஒவ்வொருவனுக்கும் தோற்றுதல் வேண்டும். ஆனால் எமது கிரமப்படி எவனுடைய விருத்தி சேதனத்தில் எந்தப்பொருள் கற்பிதமாகிறதோ, அந்தப்பொருள் அவனுக்கு மாத்திரம் தோற்றுகிறது; பிறனுக்குத் தோற்றுகிறதில்லை.

இவ்வாறு வெளியிலுள்ள சர்ப்பாதிகளுக்கும் அவற்றின் ஞானத்திற்கும் விருத்தியுபஹிதசாக்ஷி அதிஷ்டானமாம். சொப்பன பதார்த்தங்களுக்கும் அவற்றின் ஞானத்திற்கும் அந்தக்கரண உபஹித சாக்ஷியே அதிஷ்டானமாம்.

இவ்வாற்றால் சதசத்துகளுக்கு விலக்ஷணமான அநிர்வசனீய அவித்தையின் பரிணாமமான அநிர்வசனீயசர்ப்பாதிகளின் கியாதி (பிரதீதியும் சொல்லுதலும்) * அநிர்வசனீயக்கியாதி யெனப்படும்.

## 147. பிரசினம்:— அபாரமித்தையாகிய ஜகத்தின் ஆதாரமும் அதிஷ்டானமு மெவையெனல். சிஷ்யன் கேட்கின்றான்.

சுவாமி! எதன்கண் இந்த அபாரமான ஜகத்துத் தோற்றுகின்றதோ, அத்தன்மைய இதன் ஆதாரம் யாது? அதனை எனக்குச் சொல்லவேண்டும்.

* அநிர்வசனீயக்கியாதி ஸ்ரீ விருத்திரத்நாவலியின் எட்டாவது ரத்நத்தில் சிறிது சொல்லப்பட்டிருக்கின்றது. அதுவே விரிவாய் ஸ்ரீ விருத்திப்பிரபாகரத்தின் ஏழாவது பிரகாசத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

## முற்கூறிய பிரசினத்தின் உத்தரம் 148. 149.

### 148. மித்தையாகிய ஜகத்திற்கு ஆதாரமும் அதிஷ்டானமும் நீயெனல்.

### ஸ்ரீ குரு சொல்லுகின்றார்.

சிஷ்யனே! உன்னுடைய நிஜரூப அஞ்ஞானத் (பிரஹ்மஸ்வரூபமாக வறியாத) தினால் உனக்கு மித்தையான ஜகத்துத்தோற்றுகிறது. ஆதலால் ஜகத்துக்காதாரமும் அதிஷ்டானமும் நீ. எங்ஙனம்: ரஜ்ஜுவை யறியாமையால் மித்தையான சர்ப்பம் தோற்றுகிறது; அங்கு மித்தையான சர்ப்பத்துக்கு ஆதாரமும் அதிஷ்டானமும் ரஜ்ஜுவாம்.

மித்தியாசர்ப்பத்திற்கு அதிஷ்டானம் முக்கிய (சித்தாந்த) மான இரண்டாவது பக்ஷத்தில் விருத்தியுபஹித சேதனமும், முதற்பக்ஷத்தில் ரஜ்ஜு உபஹித சேதனமுமாம். எந்தப்பக்ஷத்திலும் ரஜ்ஜு அதிஷ்டானமன்று.

அங்ஙனமாயினும், முதற் பக்ஷத்தில் சேதனத்தில் அதிஷ்டானத்தன்மையின் உபாதி ரஜ்ஜுவாம். ஆதலால் ஸ்தூல திருஷ்டியினால் ரஜ்ஜுவே யதிஷ்டான மெனப்படுகிறது. மித்தியாசர்ப்பத்துக்கு ரஜ்ஜு அதிஷ்டானமும் ஆதாரமுமா யிருப்பதுபோல மித்தியா ஜகத்துக்கு நீயே அதிஷ்டானமும் ஆதாரமுமாயிருக்கிறாய்.

### 149. ஆத்மாவின் சாமானியரூபம் ஆதாரமும் 'விசேஷவடிவம் அதிஷ்டானமுமாமெனல்.

இவ்விடத்தில் இது ரகசியமாம்:—ரஜ்ஜுவில் இரண்டு ஸ்வரூபங்களுள.

1. ஒன்று சாமானியரூபம்.

2. மற்றொன்று விசேஷரூபம்.

1. சாமானியவடிவம் "இது" என்பதாம்.

2. விசேஷ வடிவம் "ரஜ்ஜு" வாம்.

1. "இது சர்ப்பம்" என்று மித்தியாசர்ப்பத்தோடு அபின்னமாய்ப் பிராந்திகாலத்திலும் தோற்றுகிற "இது" என்னும் ரூபம் சாமானியரூபமாம்.

2. பிராந்திகாலத்தில் எதன் ஸ்வரூபம் தோற்றாது, எது தோற்றுவதனால் பிராந்தி நீங்குகிறதோ, அது ரஜ்ஜுவின் விசேஷரூபமாம்.

அதுபோல ஆத்மாவுக்கும் இரண்டு ஸ்வரூபங்களுண்டு. 1. ஒன்று சாமானியரூபம். 2. ஒன்று விசேஷரூபம்.

1. சத்ரூபம் சாமானியரூபம்.

2. அசங்கத்தன்மை, கூடஸ்தத்தன்மை, நித்தியமுக்தத்தன்மைமுதலியன விசேஷரூபம்.

ஏனெனின்,

1. "ஸ்தூலசூக்ஷ்மசங்காதம் 'இருக்கிறது' "என்பதில் ஸ்தூலசூக்ஷ்ம சங்காதத்தின் பிராந்திசமயத்திலும் மித்தையான சங்காதத்திற்கு வேறாகாமல் சத்ரூபம் விளங்குகிறது. ஆதலால் ஆத்மாவின் சத்ரூபம் சாமானியரூபமாம்.

2. ஸ்தூலசூக்ஷ்ம சங்காதத்தின் பிராந்திசமயத்தில் ஆத்மாவின் அசங்க கூடஸ்த நித்தியமுக்தஸ்வரூபம் தோற்றுகிறதில்லை. ஆனால் அசங்காதிஸ்வரூப ஆத்மா தோற்றுவதனால் சங்காத (சரீர) ப்பிராந்தி நிவிருத்தியாகிறது. ஆதலால் அசங்கத்தன்மை, கூடஸ்தத்தன்மை, நித்தியமுக்தத்தன்மை, வியாபகத்தன்மை முதலியன விசேஷரூபங்களாம்.

1. எல்லாப்பிராந்திகளிலும் சாமானியரூபம் ஆதாரமெனப்படுகின்றது;

2. விசேஷரூபம் அதிஷ்டானமெனப்படுகின்றது.

1. சர்ப்பத்துக்கு ஆசிரயமான ரஜ்ஜுவின் சாமாநிய "இது" எனும் வடிவம் சர்ப்பத்துக்கு ஆதாரமாயிருக்கிறது;

2. விசேஷ ரஜ்ஜு சொரூபம் அதிஷ்டானமாயிருக்கிறது.

1. அங்ஙனமே மித்தியாப்பிரபஞ்சத்தின் ஆசிரயமான ஆத்மாவின் சாமானிய சத்ரூபம் பிரபஞ்சத்தின் ஆதாரமாம்.

2. அசங்கத்தன்மை முதலிய விசேஷரூபங்கள் அதிஷ்டானமாம்.

இவ்வாறு ஆதார அதிஷ்டானங்களுக்குச் சிறிது பேதம் * சர்வாத்ம முனிவரால் சொல்லப்பட்டிருக்கிறது.

## 150. பிரசினம்:—ஜகத்திருஷ்டாவை ஆத்மாவிற்கு வேறெனச் சொல்லவேண்டுமெனல்.

### சிஷ்யன் கூறுகின்றான்.

சுவாமி! பொய்யான ஜகத்துக்குத் திருஷ்டா யார்? எவன் அதிஷ்டானமாயும் ஆதாரமாயுமிருக்கின்றானோ அவன் திருஷ்டாவாகான். தாற்பரியமிதுவாம்:—ஜகத்துக்கு ஆதாரமும் அதிஷ்டானமும் ஆத்மாவாதலால், ஆத்மாவினும் வேறாக ஜகத்திருஷ்டாவைச் சொல்லுதல்வேண்டும். அது சர்ப்பத்துக்கு அதிஷ்டானமும் ஆதாரமுமான ரஜ்ஜு எதுவோ அதனினும் வேறாகிய புருஷன் சர்ப்பத்துக்குத் திருஷ்டாவாதல்போலவாம்.

## முற்கூறிய பிரசினத்தின் உத்தரம் 151-152.

## 151. சகலகற்பிதங்கட்கும் அதிஷ்டானமே திருஷ்டாவாதல்.

### ஸ்ரீகுருவானவர் சொல்லுகின்றார்.

ஜகத்தில் எந்தவஸ்து மித்தையோ அது அதிஷ்டானத்தில் கற்பிதமாம். அதிஷ்டானம் இருவகைத்தாம்:—ஒன்று சேதனம்; மற்றொன்று ஜடம்.

1. அதிஷ்டானம் ஜடமாயிருக்குமிடத்தில் அதிஷ்டானத்தினும் திருஷ்டா வேறாம்.

---

* இவர் சம்க்ஷேபசாரீரகமென்னும் நூலின் ஆசிரியரும் ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகளின் பௌத்திர சிஷ்யருமாவர்.

2. சேதனம் அதிஷ்டானமா யிருக்குமிடத்தில் அதிஷ்டானமே திருஷ்டாவாம்; வேறு திருஷ்டாவில்லை.

சொப்பனத்திற்கு அதிஷ்டானம் சாக்ஷிசேதனம். அதுவே அந்தச் சொப்பனத்திற்குத் திருஷ்டாவாம். அங்ஙனமே ஜகத்துக்கு ஆத்மாவே அதிஷ்டானம். அதுவே திருஷ்டாவாம். ஸ்தூலதிருஷ்டியாகப் பழுதையைச் சர்ப்பத்திற்கு அதிஷ்டானமெனக்கொண்டு இச் சங்கை சமாதானங்கள் சொல்லப்பட்டன. சித்தாந்தத்திலோ சர்ப்பத்துக்கு அதிஷ்டானம் சாக்ஷிசேதனமாம். அதுவே திருஷ்டாவாம். ஆதலால் சகல கற்பிதங்களுக்கும் அதிஷ்டானமே திருஷ்டாவாம். சங்கை சமாதானங்கள் பொருந்தா.

## 152. மித்தையாகிய சம்சாரத்தின் நிவிருத்தியை விரும்புதல் கூடாது.

சிஷ்யனே, இவ்விதமாகச் சமுசாரரூபதுக்கம் பிராந்தியால் உன்னிடத்தில் தோற்றுகிறது. அந்த மித்தையின் நிவிருத்தியை இச்சித்தல் கூடாது.

திருஷ்டாந்தம்:—ஒரு மந்திரவாதி ஒருவனுக்குப் பொய்யான சத்துருவை மந்திரபலத்தினால் காண்பிப்பானாயின் அச்சத்துருவைக் கொல்ல அவன் பிரயத்தனப்படுகிறதில்லை. அதுபோல மித்தியாசமுசாரத்தினது நிவிருத்தியின் இச்சை பொருந்தாது.

## 153. பிரசினம்:—ஜன்மாதி சம்ஸாரம் துக்கஹேதுவாயிருத்தலின் அதன் நிவிருத்திக்கு உபாயம் எனக்குக் காட்டுவீராக எனல்.

சுவாமி! "ஜகத்து உன்னிடத்தில் மித்தையாக விருக்கிறது; சத்தியமாகவில்லை" யென்று நீங்கள் சொன்னது சத்தியமாகவிருந்தாலும், அந்த மித்தியாரூபத்தினாலாவது அல்லது வேறு எந்த வுபாயத்தினாலாவது ஜனனமரணாதி சமுசாரம் என்னிடத்தில் தோற்றாதிருக்கும்படியான வுபாயத்தைத் தேவரீர் சொல்லி யருளல்வேண்டும்.

"பொய்மை நிவிருத்தி செய்யச் சாதனம் வேண்டியதில்லை" யென்று தேவரீர் சொன்னது சத்தியமாக விருந்தாலும், எவனுக்கு மித்தியாபதார்த்தம் துக்கத்துக்கு ஏதுவாயிருக்கிறதோ, அவனுக்கு அந்த மித்தியாபதார்த்தம் சாதனத்தினால் தள்ளத்தக்கது. ஒருவனுக்குத் தினந்தோறும் பயங்கரமான சொப்பனமுண்டாகிறது. அது பொய்யாகவிருந்தாலும் அதனை நீக்குதற்காக ஜபம் பாதப்பிரக்ஷாளன முதலிய அநேக வுபாயங்களை அநுஷ்டிக்கின்றான். அதுபோல இந்தச் சமுசாரம் பொய்யாகவிருந்தாலும் ஜன்மாதி துக்கத்திற்கு ஹேதுவாக எனக்குத் தோற்றுகிறது. ஆதலால் சமுசாரத்தை நிவிருத்திசெய்ய இச்சிக்கிறேன். தாம் தயவுசெய்து உபாயத்தைக் காட்டுவீராக.

## முற்கூறிய பிரசினத்தின் உத்தரம் 154-155.

## 154. ஆத்மாவின் அஞ்ஞானத்தினால் ஜகத்தின் பிரதீதி யுண்டாகின்றது. அதன் நிவிருத்தியின் உபாயம் ஞானத்தின் சொரூபமாமெனல்.

### ஸ்ரீகுருசொல்லுகின்றார்.

சிஷ்யனே! ஜகத்ரூபமான துக்கத்தை நிவிருத்திசெய்யும் சாதனத்தைக் கேட்டாய். அதை யானுனக்கு * முன்னமே சொல்லிவிட்டேன். அதனை நீ திடமாக நிச்சயஞ்செய். அதனால் ஜகத்ரூபதுக்கம் உன்னிடத்தில் தங்காது.

சிஷ்யனே! உன்னுடைய ஆத்மசொரூபத்தை நீ யறியாததினால் ஜகத்துரூபதுக்கம் உனக்குத் தோற்றுகிறது. அது ஆத்மஞானத்தால் நிவிருத்தியாகிறது. எந்த வஸ்து எதன் அஞ்ஞானத்தினால் விளங்குகிறதோ, அந்த வஸ்து அதன் ஞானத்தினால் நீங்குகிறது என்பது நியமம். ரஜ்ஜுவை யறியாததினால் சர்ப்பம் தோற்றுகிறது. அது ரஜ்ஜுவென்று தெரிந்தமாத்திரத்தில் நிவிருத்தியாகிறது. அதுபோல ஆத்மாவை யறியாததினால் ஜகத்துத் தோற்றுகிறது. ஆத்மாவை யறிந்தமாத்திரத்தில் ஜகத்து நிவிருத்தியாகிறது. அந்த ஆத்மஞானத்தை யானுனக்குச் சொல்லிவிட்டேன்.

ஜகத்து என்னிடத்தில் மூன்றுகாலத்திலுமில்லை. ஏனெனின் அது மித்தையாயிருக்கிறது. எது மித்தையோ அது அதிஷ்டானத்தின் ஹானியைச் செய்கிறதில்லை. கானல்ஜலம் பூமியை நனைக்கிறதில்லை. அதுபோல ஜகத்து விளங்குகிறது; ஆனால் மித்தையாயிருக்கிறது; எனக்கு ஹானி யுண்டாக்குவதில் சிறிதும் சாமர்த்திய முடையதன்று. "நான் சச்சிதானந்தரூபப் பிரஹ்ம ஸ்வரூபமா யிருக்கிறேன்" என்னும் நிச்சயத்திற்கு ஞானமென்று பெயர். அதுவே மோக்ஷத்திற்குச் சாதனம்; வேறெதுவும் சாதனமன்று. அந்த ஞானத்தை நான் உனக்கு முன்னமே உபதேசம் செய்துவிட்டேன்.

## 155. அஞ்ஞானத்தின் நாசம் கேவல ஞானத்தாலாம்; கர்ம உபாசனைகளா லாகாதெனல்.

சிஷ்யனே! ஜகத்தின் உபாதானகாரணம் அஞ்ஞானமாம். அந்த அஞ்ஞான நாசத்தால் ஜகத்துத் தானே நாசமாகிறது. ஏனெனின் உபாதானம் நசித்த பின் காரியமிருப்பதில்லை. அந்த அஞ்ஞானத்தின் நாசம் கேவலம் ஞானத்தினால் உண்டாகிறது; கர்மத்தினாலும், உபாசனையினாலும் உண்டாகிறதில்லை. ஏனெனின் அஞ்ஞானத்திற்கு விரோதி ஞானமாம்; கர்ம உபாசனைகள் விரோதிகளன்று.

திருஷ்டாந்தம்:—வீட்டினுள்ளிருக்கும் இருள் எச்செய்கையாலும் நீங்குகிறதில்லை; கேவலம் பிரகாசத்தால் நீங்குகிறது. அதுபோல அஞ்ஞான

---

* முன் இதே தரங்கத்தின்கண் உள்ள (115-123) பிரசங்கங்களிற் சொல்லப்பட்டது. மீண்டும் அவ்வுபாயத்தையே கூறுகின்றார்.

வடிவ இருள் ஞானரூபப்பிரகாசத்தால் நிவிருத்தியாகிறது; வேறெந்தச் சாதனங்களாலும் நிவிருத்தியாகிறதில்லை. சிஷ்யனே! ஜகத்து நிவிருத்தியாகும்படியான உபதேசத்தை யான் உனக்குச் சொன்னேன். இதனை நீ மனதிற்கொண்டு செவ்வையாய் விசாரித்துச் சமுசயங்களேதேனுமிருந்தால் கேட்பாயாக.

## பிரசினம் 156-158.

### 156. முற்கூறிய அர்த்தத்தை அநுவதித்தலோடு சொல்லப்படும் சங்கையைச் சூசிப்பித்தல்.

### சிஷ்யன் கேட்கின்றான்.

சுவாமி! தாம் சொன்னபடி "ஜகத்திற்குக் காரணம் அஞ்ஞானம். அந்த அஞ்ஞானநாசத்தாலுண்டாகும் ஜகத்தின் நிவிருத்தி ஞானத்தாலுண்டாகிறது" என்பதையும், "ஜகத்து மித்தை; ஜீவன் ஆநந்தஸ்வரூபன்; அவன் பிரஹ்மத்தினும் வேறல்லன்; பிரஹ்மரூபமேயாவன். என்னும் நிச்சயத்திற்கு ஞானமென்று பெயர். அதில் ஜகத்து மித்தை; ஜீவன் ஆநந்தஸ்வரூபன்." என்பதையும் நான் சத்தியமாக அறிந்தேன்.

ஆனால் ஜீவனும் பிரஹ்மமும் ஒன்றென்றதை யான் அறியவில்லை; ஜீவப்பிரஹ்மங்களின் பேதத்தையறிவிக்கும் சங்கை என் மனதில்தோற்றுதலால்.

### 157. பிரஹ்மமும் எனது சொரூபமும் ஒன்றற்கொன்று விருத்தமாம். ஆதலால் அதனோடு எனக்கு ஐக்கியம் பொருந்தாதெனல்.

சுவாமி!

1. நான் புண்ணிய பாபங்களைச் செய்கிறேன்.

2. அவற்றின் பயனாகிய ஜனனமரணம், சுகதுக்கம் என்பவற்றை யநுபவிக்கிறேன்.

3. அநேகவிதமான ஜகத்து என்னிடத்தில் தோற்றுகிறது.

4. ஜகத்திற்குக் காரணமான அஞ்ஞானத்தை நிவிருத்திக்க நான் ஞானத்தை விரும்புகிறேன்.

1. பிரஹ்மத்தில் புண்ணியமில்லை, பாபமில்லை;

2. ஜன்மம் இல்லை, மரணமில்லை, சுகமில்லை, துக்கமில்லை.

3. வேறெவ்விதக் கிலேசமும் பிரஹ்மத்திலில்லை.

4. ஞானத்தின் இச்சையுமில்லை.

ஆதலால் பிரஹ்மத்தின் சொரூபமும் எனது சொரூபமும் ஒன்றற்கொன்று விருத்தமாம். ஆதலால் இரண்டற்கும் ஏகத்துவம் பொருந்தாது.

என்னிடத்திலும் ஜன்மாதி சமுசாரம் பாரமார்த்திகமாயில்லை. பொய்யான ஜன்மாதிகள் எனக்குப் பிராந்தியினுல் தோற்றுகின்றன; பிரஹ்மத்தில் இல்லை. ஜீவனுக்கும் பிரஹ்மத்துக்கும் இவ்வளவு பேத மிருத்தலால் * ஏகத்துவம் பொருந்தாது.

## 158. பக்ஷிவடிவத்தன்மையால் விலக்ஷணமாயுள்ள ஜீவப்பிரஹ்மங்களின் ஐக்கியத்தினுல் கர்ம உபாசனைகளைப் பிரதிபாதிக்கும் வேதம் நிஷ்பலமாமெனல்.

### வேறு சங்கை.

சுவாமி! எனக்கு வேறொரு சமுசயம் உண்டு. அதனைத் தாம் கேட்க வேண்டும். அச்சம்சயம் எத்தன்மையதெனின், அதனுல் ஜீவப்பிரஹ்மங்களின் ஏகத்துவநிச்சயம் கெட்டுப்போகும். அதனைச் சொல்லுகின்றேன். தாம் கேட்டு அச்சம்சயத்தைக் கெடுக்கவேண்டும். வேதத்தில் இவ்வாறு பார்த்திருக்கிறேன்:—புத்திரூபமான ஒரு விருக்ஷத்தில் இரண்டு பக்ஷிகளுண்டு. அவைகளிரண்டும் சமானமாம். அவற்றில்,

1. ஒன்று கர்மபல போக்தாவாயிருக்கின்றது.

2. மற்றொன்று சுத்தமாய்ப் போகமின்றியதாய் அசங்கமாய்க் கர்மபல போக்தாவைப் பிரகாசிக்கிறது.

இவற்றில்,

1. ஒன்று கர்மபலத்தைப் புசிக்கும் ஜீவனாகத் தோற்றுகின்றது.

2. மற்றொன்று பரமாத்மாவாகத் தோற்றுகிறது. ஆதலால் அவற்றிற்கு ஏகத்துவம் பொருந்தாது.

வேதத்திற் கர்மமும் உபாசனையும் வெகுவிதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை ஜீவனும் பிரஹ்மமும் ஒன்றென்பதில் நிஷ்பலமாய்விடும், ஏனெனின், தாம் ஜீவப்பிரஹ்ம ஐக்கியம் கூறுகின்றீர்கள். அது 1. பிரஹ்மத்தில் ஜீவஸ்வரூபத்திற்கு அந்தர்பாவம் சொல்லுகின்றீர்களா? 2. அல்லது ஜீவனிடத்தில் பிரஹ்மத்தின் ஸ்வரூபத்திற்கு அந்தர்பாவம் சொல்லுகிறீர்களா?

1. ஒருகால் பிரஹ்மத்தில் ஜீவஸ்வரூபத்திற்கு அந்தர்பாவம் சொல்லும்பக்ஷத்தில் ஜீவனே பிரஹ்மரூபமாதலால் அதிகாரி இல்லாமற்போவான். அதனுல் கர்ம உபாசனைகள் நிஷ்பலமாகும்.

2. ஜீவனிடத்தில் பிரஹ்மஸ்வரூபத்திற்கு அந்தர்பாவம் சொல்லும் பக்ஷத்தில்,

1. பிரஹ்மம் ஜீவரூபமாயிருத்தலால் எதன் உபாசனை செய்யப்படுகின்றதோ, அந்த வுபாசியத்தின் அபாவமுண்டாகும். ஆதலால் உபாசனை நிஷ்பலமாகும்.

2. அன்றியும், கர்மபலத்தைக் கொடுக்கிற பரமாத்மாவின் அபாவமுண்டாகுமாகலின், கர்மம் நிஷ்பலமாகும்.

---

* இது பிரமேயகத சம்சயத்தின் சொரூபமாம்.

மீமாம்ஸகர் சொல்லும் "கர்மமே ஈசுவரன்; அதனாலேயே பயனுண்டாகிறது." என்னும் வார்த்தை நலமுடையதன்று. ஏனெனின் கர்மம் ஜடம்; அவற்றிற்குப் பலத்தைக் கொடுக்கும் சாமர்த்தியம் பொருந்தாது. ஆதலால் கர்மத்தின் பலத்தை ஈசுவரனே கொடுக்கிறார்.

இவ்வாற்றால் பரமாத்மாவுக்கும் ஜீவனுக்கும் * ஏகத்துவம் பொருந்தாது.

## இலக்கம் 157-ல் உள்ள பிரசினத்தின் உத்தரம். 159-172.

## 159. நான்கு ஆகாயமும் நான்கு சேதனமும்.

### ஸ்ரீ குரு சொல்லுகின்றார்.

சிஷ்யனே! உனக்குண்டாகிற சந்தேகத்தை நிவர்த்திக்கும் விசாரத்தைச் சொல்லுகிறேன் கேள்.

**ஒரு ஆகாசத்திற்கு நான்கு பேதங்கள் உள:—**அவை 1. கடாகாசம், 2. ஜலாகாசம், 3. மேகாகாசம், 4. மகாகாசம் என்பனவாம். அதுபோல **ஒரே சேதனத்திற்கு நான்கு பேதங்களுள:—**அவை 1. கூடஸ்தன், 2. ஜீவன், 3. ஈசுவரன், 4. பிரஹ்மம் என்பனவாம்.

இந்நான்கு பேதங்களும் ஆகாயத்திற்போல சேதனத்திலுமுண்டு.

சிஷ்யனே! எப்போது இவற்றின் ஸ்வரூபங்களை நன்றாகக் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறாயோ, அப்போது உனது சங்கைக்குச் சமாதானம் நீயே தெரிந்துகொள்ளுவாய். ஆதலால் நான் உனக்கு இவற்றின் சொரூபங்களைச் சொல்லுகிறேன் கேள். இவற்றைக் கேட்பதினால் சந்தேகமின்றிய ஞானம் உனக்குண்டாகி ஜன்மாதி துக்கங்களும் நாசமாய்விடும்.

## 160. 1. கடாகாசவர்ணனம்.

சிஷ்யனே! ஜலத்தினால் நிறைந்திருக்கிற கடத்துக்கு எவ்வளவு ஆகாசம் அவகாசங் கொடுக்கிறதோ, அவ்வளவு ஆகாசத்தினைக் கற்றோர் † கடாகாசமென்று சொல்லுவர்.

---

* **இது பிரமாணகத சம்சயத்தின் சொரூபமாம்.**

† **இங்கு இது சங்கையாம்:—**கடத்திற்கு வெளியே இருக்கிற ஆகாசம் மகாகாசமாம்; அதனின் வேறாய் உள்ளே யிருக்கிற ஆகாசம் கடாகாசமா மென்னும் இக்கடாகாசத்தின் லக்ஷணம் எளிதாம். அதனைவிட்டு "ஜலத்தினால் நிறைந்திருக்கிற கடத்திற்கு எவ்வளவு ஆகாசம் அவகாசங் கொடுக்கிறதோ, அவ்வளவு ஆகாசம் கடாகாசமாம்" என்று இவ்வாறு லக்ஷணஞ் செய்வதனால் என்ன பிரயோஜனம்?

**இதற்கு இது சமாதானமாம்:—**கடாகாசத்திற்கு முற்கூறிய லக்ஷணஞ் செய்யின், கடம் எதில் நிலைத்திருக்கின்றதோ, அந்த ஆகாசம் ஐந்தாவது கபாலாகாச (ஓட்டாகாய) மென்று சொல்லப்படுகிறது. அது சாஸ்திரத்திற்கு விருத்தமாம். ஆதலால் இவ்விரண்டாவது லக்ஷணம் செய்தல் உசிதமாம்.

## 161. 2. ஜலாகாசவர்ணனம்.

சிஷ்யனே! ஜலம் நிறைந்த கடத்தில் நக்ஷத்திராதிகளோடு ஆகாசத்தின் பிரதிபிம்பமுண்டாகிறது. அவ்வாகாயத்தின் * பிரதிபிம்பமும் கடாகாயத்தின் பிரதிபிம்பமுமாகிய இரண்டும் சேர்ந்து ஜலாகாசமென்று சொல்லப்படும்.

### ஒருவன் சங்கிக்கின்றான்.

ஆகாசத்தின் பிரதிபிம்ப முண்டாகாது; ஆனால் கேவலம் நக்ஷத்திராதிகளின் பிரதிபிம்பமுண்டாகும். ஏனெனின், ஆகாசம் ரூபமில்லாதது; ரூபமுள்ள பதார்த்தங்களின் பிரதிபிம்பமுண்டாமாகலின் ஆகாசத்துக்குப் பிரதிபிம்பம் பொருந்தாது.

### அச்சங்கைக்குச் சமாதானம்.

ஜலத்தில் ஆகாசத்தின் பிரதிபிம்ப முண்டாகாவிடின், குதிரைக்குளப்படி ஜலத்தில் மனிதனளவான பெருமையின் (ஆழத்தின்) பிரதிபிம்பமுண்டாகிறது. அது உண்டாகலாகாது. ஆதலால் ஆகாசத்தின் பிரதிபிம்பத்தை ஒப்புக்கொள்ளுதல் தகுதியாம்.

ரூபமில்லாத பதார்த்தத்துக்குப் பிரதிபிம்பமுண்டாகிறதில்லை யென்று கூறின், அதுவும் நியமமில்லை. ஏனெனின் † ரூபமில்லாத சத்தத்துக்குப் பிரதித்தொனி யுண்டாகிறது. அந்தப் பிரதித்தொனி சத்தத்தின் பிரதிபிம்பமாம். ஆதலால் ரூபரகித ஆகாசத்துக்கும் பிரதிபிம்பம் கூடும்.

## 162. 3. மேகாகாசவர்ணனம்.

மேகத்துக்கு எந்த ஆகாசம் அவகாசங் கொடுக்கிறதோ, மேக ஜலத்தில் எந்த ஆகாசத்தின் பிரதிபிம்ப முண்டாகிறதோ, அவ்விரண்டினையும் மேகாகாசமென்பர்.

### இதில் ஒருவன் சங்கிக்கிறான்.

மேகம் ஆகாசத்தில் இருக்கிறது. ஆனால் அதில் ஜலமும் ஆகாசப்பிரதிபிம்பமும் காணுதலின்றி எங்ஙனம் அறியப்படும்?

---

* ஜலமின்றிப் பிரதிபிம்ப முண்டாகாது. ஆதலால் ஈண்டு ஆகாயத்தின் பிரதிபிம்பம் என்பதனால் கடத்திலுள்ள ஜலம் எதுவோ அதனோடுகூடிய ஆகாயத்தின் பிரதிபிம்பம் கொள்ளப்படுகின்றது.

† குணம் குணத்தை ஆசிரயித்திராது; ஆனால் ஆகாசாதி திரவியத்தை யாசிரயித்திருக்கும் என்னும் நியமமாதலின் நீலபீதாதி வர்ணமயமானரூபம் ரூபகுணத்தை ஆசிரயியாதிருத்தலால் ரூபரகிதமாம். இந்த ரூபரகித நீலமுதலிய வர்ணங்களின் பிரதிபிம்பம் கண்ணாடிமுதலிய சொச்ச உபாதியில் உண்டாகின்றது. அங்ஙனமே ரூபரகித ஆகாசத்திற்கும் ரூபரகித சேதனத்திற்கும் பிரதிபிம்பம் பொருந்துகிறது.

### அதற்குச் சமாதானம்.

மேகத்தில் ஜலமும் ஆகாசப்பிரதிபிம்பமும் பிரத்தியக்ஷமாகாவிடினும் அனுமானத்தினால் அறியப்படுகின்றன.

1. மேகத்திலிருந்து ஜலவிருஷ்டி யுண்டாவதால் மேகத்தில் ஜலமிருக்கிறதென்று அனுமானமுண்டாகின்றது. மேகத்தில் ஜலமிராதாயின் ஜலவிருஷ்டி மேகத்தினின்று முண்டாகாது.

2. மேகத்திலுள்ள ஜலம் ஆகாயத்தின் பிரதிபிம்பத்தோடுகூடியதாயிருக்கிறது. ஏனெனின், ஜலமிருந்தால் அது ஆகாயத்தின் பிரதிபிம்ப மின்றியிராது. ஆதலால் மேகத்திலுள்ள ஜலமும் ஆகாயத்தின் பிரதிபிம்பத்தோடுகூடியதாம்.

இவ்வாற்றால் மேகத்தில் ஜலம் ஆகாசத்தின்பிரதிபிம்ப மென்பவற்றின் அனுமான முண்டாகிறது.

## 163. 4. மகாகாச வர்ணனம்.

பிரஹ்மாண்டத்துக்கு உள்ளும் புறமும் ஒரேவிதமாயும் வியாபகமாயும் இருக்கிற ஆகாசத்தின் ஸ்வரூபத்தை வித்துவான்கள் மகாகாசமென்று சொல்லுவர்.

## 164. நான்கு சேதனங்களினது வர்ணனத்தின் உபோற்காதம்.

சிஷ்யனே! நான்குவித ஆகாசத்தின் லக்ஷணத்தைச் சொன்னேன். இனி * நான்குவித சேதனத்தின் லக்ஷணத்தைச் சொல்லுகிறேன் கேள். அதனைக் கேட்பதினால் விசாரத்தின் பயனாகிய ஞானம் அடையப்படும்.

## 165. 1. கூடஸ்தவர்ணனம்.

புத்தி † அல்லது வியஷ்டி அஞ்ஞானத்தின் அதிஷ்டான சேதனத்துக்குக் கூடஸ்தரென்று பெயர்.

---

* சில அத்வைதக் கிரந்தங்களில் ஜீவன் ஈசுவரன் பிரஹ்மம் என மூன்று சேதனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அநாதியான ஆறு பதார்த்தங்களிலும் இம்மூன்றே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. கூடஸ்த சேதனத்தை விட்டதனால் ஒரு தோஷமுமில்லை. ஏனெனின், கூடஸ்தனுக்கும் பிரஹ்மத்துக்கும் பெயர்மாத்திரத்தில் பேதமாம்; வேறெவ்வித பேதமுமில்லை. இதுவுமன்றி வித்தியாரண்யஸ்வாமிகள் திருக்குத்திருசிய மென்னும் கிரந்தத்தில் கூடஸ்தன் பாரமார்த்திகஜீவனென்றும் ஜாக்கிர காலத்திலுள்ள அந்தக்கரணப் பிரதிபிம்பன் வியாவகாரிகஜீவனென்றும், சொப்பனத்திலுள்ளவன் பிராதிபாஸிகஜீவனென்றும் சொல்லியிருக்கிறார். இவ்விதத்தால் கூடஸ்தன் ஜீவனிடத்து அந்தர்பாவமாயிருக்கிறான்.

† ஜீவஸ்வரூபம் புத்திப்பிரதிபிம்பமாகவும் அவித்தியாப் பிரதிபிம்பமாகவும் இனி வர்ணிக்கப்படுதலால் இவ்விடத்தில் இரண்டு பக்ஷங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

1. எந்தப்பக்ஷத்தில் புத்தியோடுகூடிய சேதனம் ஜீவனுகிறதோ, அந்தப் பக்ஷத்தில் புத்திக் கதிஷ்டானசேதனம் கூடஸ்த னெனப்படுகிறது.

2. எந்தப்பக்ஷத்தில் வியஷ்டி அஞ்ஞானத்தோடுகூடிய சேதனம் ஜீவனென்று சொல்லப்படுகிறதோ, அந்தப்பக்ஷத்தில் வியஷ்டி அஞ்ஞானத்துக்கு அதிஷ்டான சேதனம் கூடஸ்தனெனப்படுகிறது.

இந்தஸ்தானத்தில் இது சித்தாந்தமாம்:—ஜீவத்தன்மைக்கு எது விசேஷணமோ, அதன் அதிஷ்டானத்துக்குக் கூடஸ்தனென்று பெயராம். இந்தக் கூடஸ்தன் உற்பத்தியில்லாததாம். இதன் அபிப்பிராயம் இதுவாம்:—பிரஹ்மத்துக்கு வேருக எப்படிச் சிதாபாஸன் உண்டாகிருனே, அப்படிக் கூடஸ்தனுண்டாகிறதில்லை; ஆனல் பிரஹ்மரூபமாகவே யிருக்கிருன். அது கடாகாசம் மகாகாசத்துக்கு வேருகாமல் மகாகாசரூபமாகவே யிருப்பதுபோலாம். இந்தக் கூடஸ்தன் ஆத்மபதத்தின் லக்ஷியார்த்தமாம். கூடஸ்தனுக்கே பிரத்தியக்கென்றும் நிஜரூபமென்றும் ஜீவசாக்ஷியென்றும் பெயர்.

## 166. 2. ஜீவ வர்ணனம் 166-170.

அநேக காமகர்மங்களுடன் கூடிய புத்தியில் உண்டாகிற சேதனப் பிரதிபிம்பத்தை வித்துவான்கள் ஜீவனென்பர். அந்தக் கேவலப் பிரதிபிம்பத்தை மாத்திரம் ஜீவனென்று சொல்லுவதில்லை. ஆனல் கடாகாசத்தோடு கூடிய ஆகாசப் பிரதிபிம்பத்தை ஜலாகாசமென்று சொல்லுவதுபோலக், கூடஸ்தனேடு கூடிய சிதாபாசனை ஜீவனென்று சொல்லுகிருர்கள்.

ஆதலால் புத்தியிலுள்ள * சிதாபாஸனும் புத்தியின் அதிஷ்டான சேதனமும் இரண்டுஞ் சேர்ந்து † ஜீவனெனச் சித்தித்தது.

---

* இங்கே "சிதாபாஸ" னென்னும் சப்தத்தால் புத்தியோடுகூடிய சிதாபாஸன் கொள்ளப்படும். இவ்வார்த்தை மேல் 187-வது பிரசங்கத்தின் ஆரம்பத்தில் நூலாசிரியரால் எழுதப்பட்டிருக்கின்றது. பஞ்சதசியில் ஸ்ரீவித்தியாரணிய ஸ்வாமிகளும் "புத்தி அதன்கண் உள்ள சிதாபாஸன் அவ்விரண்டற்கும் அதிஷ்டானமாகிய கூடஸ்த சைதன்னியம் என்னும் மூன்றன் சமூகம் ஜீவனெனப்படுகின்றது" என் றெழுதி யிருக்கின்றனர். ஆதலால் புத்தி அல்லது அவித்தை அதன்கண் உள்ள சிதாபாஸன் அவற்றிற் கதிஷ்டானமாகிய கூடஸ்தன் என்னும் மூன்றும் சேர்ந்து ஜீவனெனப்படுகின்றது.

† காமமும் கர்மமுமாகிய ஜலத்தோடுகூடிய புத்திவடிவ கடத்தில் சேதனத்தின் பிரதிபிம்பமிருக்கின்றது என்னும் கிரமம் அறிதற்கரியதாம். ஆதலால் ஸ்தூலதேகவடிவ கடத்தில் நகசிகை பரியந்தம் நிரம்பியுள்ளது புத்தியாகிய ஜலமாம். அதில் சேதனத்தின் பிரதிபிம்பமும் கூடஸ்தனுமாகிய இரண்டற்கும் பெயர் ஜீவனுமென்னும் கிரமம் அறிதற்கெளியதாம்.

1. இங்குக் கேவல புத்தியோடுகூடிய சிதாபாஸனைத் துவம்பதத்தின் அர்த்தமாகிய ஜீவனெனக் கூறின், அதில் பாகத்தியாகலக்ஷணை சம்பவியாது; ஆனல் வாச்சிய பாகம் முழுவதினையும் விடுதலாகிய விட்டலக்ஷணை சம்பவிக்கின்றது. அங்ஙனம் கொள்ளுதல் ஆசாரியர்களது யுக்திக்கு விருத்தமாம்.

**167.** முன் பிம்பமாகிய கூடஸ்தனோடு கூடிய ஆபாஸன் ஜீவன் எனப் பட்டது. அதனால்,

1. இது தோற்றுகின்றது:— புத்தியிலுள்ள பிரதிபிம்பம் எதுவோ, அது கூடஸ்தனதாம்; வெளிப் பிரஹ்மசேதனத்தினதன்று. ஏனெனின், எதனது பிரதிபிம்ப முண்டாகின்றதோ, அது பிம்ப மெனப்படுகின்றது. அது கூடஸ்தனைப் பிம்பமென்று சொன்னமையால் அதன் பிரதிபிம்பமாமென்னும் பிரதீதியுண்டாகின்றது. அதனை இப்போது கூறுகின்றார்.

சிவப்புப் புஷ்பத்தின் பேரில் வைக்கப்பட்ட வெண்மையான ஸ்படிகத்தில் புஷ்பத்தினது சிவப்பு வர்ணத்தின் தோற்றம் உண்டாகிறது. அது அந்தச் சிவப்புப் புஷ்பத்தின் பிரதிபிம்பமாம். அதுபோலக் கூடஸ்தனை யாசிரயித்த புத்தியில் கூடஸ்தனுடைய பிரகாசத்தின் தோற்ற முண்டாகிறது. ஸ்படிகம் மிகவும் சுத்தமாயிருப்பதுபோலப் புத்தியும் சத்துவகுணத்தின் காரியமாயிருத்தலின் மிகச் சுத்தமாயிருக்கிறது. கூடஸ்தனது பிரகாசத்திற்குப் பிரதிபிம்பமென்று பெயர்.

2. அல்லது, பிரஹ்ம சைதன்னியத்தின் பிரதிபிம்பமுண்டாம். கடத்திலுள்ள ஜலத்தில் மகாகாசத்தின் பிரதிபிம்ப முண்டாகிறது; கடத்தினுள்ளிருக்கும் ஆகாசத்தின் பிரதிபிம்ப முண்டாகிறதில்லை. ஏனெனின், எவ்வளவு விஸ்தாரம் ஜலத்தில் காணப்படுகிறதோ அவ்வளவு விஸ்தாரம் கடத்திலுள்ள ஆகாசத்தில் இல்லை. அந்த விஸ்தீர்ணத்தன்மை ஆகாசத்தின் பிரதிபிம்பமாம். ஆகையால் அது வெளியாகாசத்தின் பிரதிபிம்பமாம்.

1. "வியாபகசேதனத்திற்குப் பிரதிபிம்பம் பொருந்தா"தென்று ஒருவன் சொல்லுவானாயின்,

அச்சங்கை ஆகாச திருஷ்டாந்தத்தால் நிவிருத்தியாகிறது. ஏனெனின், ஆகாசம் வியாபகமாயிருந்தும் அதன் பிரதிபிம்பமுண்டாகிறது. அங்ஙனமே வியாபக சைதன்னியத்திற்கும் பிரதிபிம்பம் பொருந்தும்.

2. "ரூபமுடைய பதார்த்தத்திற்கு ரூபமுடைய பதார்த்தத்தில் பிரதிபிம்பமுண்டாகிறது" என்று ஒருவன் கூறுவானாயின்,

அதுவும் நியமம் இல்லை. ஏனெனின், "ரூபமில்லாத சப்தத்திற்கு ரூபமில்லாத ஆகாசத்தில் பிரதிபிம்பமுண்டாகிற"தென்று முன்னமே (161) சொல்லப்பட்டது. ஆகையால் சைதன்னியத்திற்கும் பிரதிபிம்பம் கூடும்.

---

2. அதிஷ்டானத்திற் கபின்னமாய் அதிஷ்டானத்தை மறைப்பது ஆரோப்பிய மெனப்படும். அதிஷ்டானத்தின் வேறாய் ஓரிடத்தும் ஆரோப்பியத்தின் தோற்றமுண்டாகிறதில்லை. இது அநுபவத்திற்கும் விருத்தமாம்.

ஆதலால் சிதாபாஸனோடுகூடிய புத்திவிசிஷ்ட கூடஸ்தசேதனன் ஜீவனென்று கொள்ளுதல் தகுதியாம்.

இவ்விதத்தால் புத்தியிலுள்ள ஆபாஸனும் புத்தியின் அதிஷ்டான சேதனமுமாகிய இரண்டற்கும் பெயர் ஜீவனென்று சொல்லப்பட்டது.

1. அந்த ஜீவன் துவம்பதத்தின் வாச்சியமெனப்படுகின்றது.

2. ஜீவனிடத்திலுள்ள சிதாபாஸனைவிட்டுக் கூடஸ்தன்மாத்திரம் துவம் பதத்தின் லக்ஷியமெனப்படுகின்றது.

1. அஹம் (நான் என்னும்) சப்தத்திற்கும் ஜீவன் வாச்சியமாம்.

2. கேவல கூடஸ்தன் அஹம் சப்தத்தின் லக்ஷியமாம்.

**168.** சிதாபாஸன் கூடஸ்தன் என்னும் இரண்டற்கும் பெயர் ஜீவனுமாயினும், ஜீவத்தன்மையின் சகல தர்மங்களும் ஆபாஸனிடத்தி லிருக்கின்றன. புண்ணியம் பாபம் அவற்றின் பயனாகிய சுக துக்கம், லோகாந்தரம் போகுதல் இந்த லோகத்திற்கு வருதல் முதலிய எல்லாவற்றையும் ஆபாஸ சகித புத்தி செய்கின்றது; கூடஸ்தன் செய்கிறதில்லை; கூடஸ்தனிடத்தில் கேவலம் பிராந்தியால் தோற்றுகின்றன.

அந்தப் பிராந்தித் தோற்றமும் புத்திசகித ஆபாசனுக்குண்டாகிறது; கூடஸ்தனுக்குண்டாகிறதில்லை. ஏனெனின்,

1. கூடம் என்பது கொல்லன் பட்டடை. அதுபோல நிர்விகாரமாயிருப்பது கூடஸ்தனென்று சொல்லப்படுகிறது.

2. அல்லது கூடமென்பது மித்தையாகிற புத்தியும் சிதாபாஸனுமாம். அவற்றின்கண் அசங்கமாயி (பற்றில்லாமலி) ருப்பது கூடஸ்தன் எனப்படுகிறது.

ஆகையால் கூடஸ்தனிடத்தில் பிராந்தியாதிகள் சம்பவியா; ஆனால் சிதாபாஸனிடத்தில் சம்பவிக்கும்.

**169.** முற்றும் விசாரித்துப் பார்க்குமிடத்துப் புண்ணியபாபங்கள் சுக துக்கங்கள் லோகாந்தரம்போகுதல் வருதல் என்பவை கேவலம் புத்தியிலிருக்கின்றன; * ஆபாஸனிடத்துமில்லை. புத்தியின் சையோகத்தால் ஆபாஸனிடத்தில் இருக்கின்றன.

எங்ஙனம் "ஜலசகித கடம் கோணலானாலும் நேரானாலும் ஒருவனால் கொண்டுபோகப்பட்டாலும் கொண்டுவரப்பட்டாலும், அதன் சம்பந்தத்தி

* ஜலத்தின் சீதளம் அச்சலத்திற் பிரதிபிம்பித்த சூரியனை எப்படி ஸ்பரிசிப்பதில்லையோ, அப்படி அந்தக்கரண விகாரங்கள் அந்த அந்தகரணத்திற் பிரதிபிம்பித்த சிதாபாசனை ஸ்பரிசிப்பதில்லையெனின், அவ் வந்தக்கரணத்திற்கு அதிஷ்டானமான பிரத்தியகாத்மாவை ஸ்பரிசிக்கமாட்டாதென்பதில் சந்தேகமென்ன? பிருதிவியின் விகாரங்களும் பிருதிவியின் காரிய விகாரங்களும் பிருதிவிக் காதாரபூதமான ஆகாசத்தை எப்படி ஸ்பரிசிப்பதில்லையோ, அப்படி அநாத்மாவான அஞ்ஞானமும் அஞ்ஞான காரியமான தேகேந்திரியாதிப் பிரபஞ்சதர்மங்களும் அஞ்ஞானத்திற்கும் அஞ்ஞான காரியங்களுக்கும் ஆதாரபூதமான பிரத்தியகாத்மாவை ஸ்பரிசிப்பதில்லை. அஞ்ஞானத்தால் கூடஸ்தனை ஸ்பரிசிப்பதாகப் பிராந்தி உண்டாகிறது.

ளுல் ஆகாசத்திளுபாசம் சகலக் கிரியைகளையும் செய்கிறதோ, தான் சுதந்தர மாக ஒன்றனையும் செய்கிறதில்லையோ, அங்ஙனமே காமகர்மரூபமான ஜலத் தால் நிறைந்த புத்திரூபமான கடம் புண்ணியமுதலிய சகல விகாரங்களையும் தரிக்கிறது; அதன் சம்பந்தத்தால் சிதாபாஸனும் தரிக்கிறுன். கூடஸ்தன் சகல * விகாரமு மில்லாதவனு யிருக்கிறுன். ஜலம் நிறைந்த கடத்தின் விகா ரங்களில்லாததாய்க் கடாகாசமிருக்கின்றது. அதுபோலக் கூடஸ்தனையுமறிக ஆகையால் ஜீவத்தன்மையின் தர்மங்கள் சிதாபாஸனிடத்தில் இருக்கின்றன• ஆயினுங் கூடஸ்தனிடத்தில் அஞ்ஞானத்தால் தோற்றுகின்றன. ஆகையால் புத்தியினிடத்துள்ள கூடஸ்தசகித சிதாபாஸன் ஜீவனெனப்படுகின்றுன்.

**170.** வர்ணிக்கப்பட்ட ஜீவஸ்வரூபத்தில் பிராஞ்ஞனுக்கு ஹானியுண் டாகிறது. ஏனெனின், சுழுத்தியின் அபிமானியாகிற ஜீவனுக்குப் பிராஞ்ஞ னென்று (342) பெயர். சுழுத்தியில் புத்தி அபாவமாயிருத்தலால் புத்தியில் ஆபாஸனும் பொருந்தாது. இதனுல் பிராஞ்ஞனுடைய சொரூபத்தைப் பிர திபாதிக்கும் சாஸ்திரத்துக்கு விரோதம் சம்பவிக்கிறது. இக்காரணத்தால் ஜீவஸ்வரூபம் வேறுவிதமாகச் சொல்லப்படுகிறது:—

1. அஞ்ஞானத்தின் அம்சத்துக்கு வியஷ்டியஞ்ஞான மென்று பெயர்.
2. சம்பூர்ண அஞ்ஞானத்துக்கும் ஸமஷ்டியஞ்ஞான மென்று பெயர்.

அந்த அஞ்ஞான அம்சத்திலுள்ள சேதனத்தின் ஆபாஸமும் அஞ்ஞான அம்சத்துக்கு அதிஷ்டானமான கூடஸ்தனுமாகிய இரண்டையும் சேர்த்து ஜீவனென்னும் பதத்தால் சொல்லுவர். ஆதலால் இந்த ஜீவஸ்வரூபத்தில் பிராஞ்ஞனுக்கு அபாவமில்லை. ஏனெனின், சுழுத்தியில் அஞ்ஞான மிருக்கி றது. சுழுத்தியிலுள்ள சைதன்னியத்தின் பிரதிபிம்பசகித அஞ்ஞானும்சம் எதுவோ, அது புத்திரூபத்தை யடைகிறது. சேதனத்தின் பிரதிபிம்பமும் கூடவே யுண்டாகிறது. இந்தச் சிதாபாசஸகித புத்தியில் புண்ணியாதி சமு சாரம் தோற்றுகிறது. இந்த அபிப்பிராயத்தால் சில சாஸ்திரங்களில் புத் தியே ஜீவத்தன்மைக்கு உபாதியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. விசாரதிரு ஷ்டியால் பார்க்குமளவில் ஜீவத்தன்மையின் உபாதி அஞ்ஞானமாம்.

* சந்திரன் எப்போதுமிருந்தாலும் பக்ஷத்திலும் திதியிலும் சந்திரனது கலை விருத்தியை அல்லது க்ஷயத்தை அடைகிறது. விருக்ஷம் எப்போதுமிருந்தாலும் அதன் பலன் ஜன்மாதி ஷட்விகார பரிணமத்தை அடைகிறது. அதுபோலக் கூடஸ்தன் நிர்வி காரனு யிருந்தாலும் தேகாதிகளுக்கு ஜன்மாதி ஷட்விகாரரூப பரிணமங்க ளுண்டா கின்றன. கூடஸ்தனே பரிணமத்தை அடைந்தால் கூடஸ்தன் ஜடமாவன். (பரிணமம்= விகாரம்.) ஆகையால் கூடஸ்தனுக்கு விகாரமிருப்பதாகச் சொல்லலாகாது.

† ஈசுவரஸ்வரூபம் பலமதங்களில் பலவிதமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது:—

* 1. யோகமதத்தை அனுசரித்தவர்கள் சைதன்னியத்தின் சமீபத்திலிருக்கிற பிர கிருதியைப் பிரேரணைசெய்யும் ஜீவனல்லாத புருஷனை ஈசுவரன் என்கிறுர்கள். இந்த ஈசுவரன் கிலேசம் கர்மம், அதன்பலம் என்பவைகளின்றி ஜீவனைப்போல அசங்க

## 171. *ஈசுவரவர்ணனம்.

சேதனமாயுமிருக்கிறார். ஜீவனுக்கும் லிங்கசரீராதிக ளில்லாவிட்டாலும் அவிவேகத்தினால் அவை இருப்பனவாகத் தோற்றுகின்றன. இதுவே ஜீவேசுவரர்களின் பேதம்.

2. நியாயமதத்தை அநுசரித்தவர்கள் அசங்கனாயிருக்கிற ஈசுவரனுக்கு நியாமகத்துவம் (நடத்துந்தன்மை) கூடாதென்று ஆக்ஷேபித்து ஈசுவரனுடைய ஞானம் பிரயத்தினம் இச்சையென்னும் குணங்கள் நித்தியமென்றும், இதனாற்றான் ஜீவனைவிட ஈசுவரன் வேறு என்றும் சொல்லுகிறார்கள்.

3. ஈசுவரனுடைய ஞானாதிகள் நித்தியமானால், சிருஷ்டியின் ஆரம்பகாலத்தில் ஈசுவரனுடைய ஞானாதிகளுண்டாயின என்று சொல்லிய சுருதிக்கு விரோதமுண்டாகும். சிருஷ்டியும் எப்போது மிருத்தல்வேண்டும். ஆகையால் நையாயிகமதம் பிசகு என்றும் ஹிரணியகர்ப்பனே ஈசுவரன் என்றும் ஹிரணியகர்ப்ப உபாசகர்கள் சொல்லுகிறார்கள். ஹிரணியகர்ப்பனுக்கு லிங்கசரீரமிருந்தாலும் அவித்தை காமகர்மாதிக ளில்லாமையால், ஹிரணியகர்ப்பன் ஜீவனாகான்.

4. ஸ்தூலதேகமின்றி லிங்கதேகம் எங்கும் காணப்படாமையால் விராட்டு உபாசகர்கள் விராட்புருஷனே ஈசுவரன் என்கிறார்கள்.

5. ஹஸ்தபாதாதிகளுடன் கூடினவன் ஈசுவரனானால் புழுமுதல் எல்லாவற்றிற்கும் ஈசுவரத்துவம் சித்திக்கும். ஆகையால் ஹிரணியகர்ப்ப உபாசகருடைய மதம் பிசகு என்றும், சதுர்முகப்பிரஹ்மாவே ஈசுவரன் என்றும் பிரஜையை இச்சிக்கிறவர்கள் சொல்லுகிறார்கள்.

6. வைஷ்ணவர்கள் விஷ்ணுவின் நாபி கமலத்தினின்றும் பிரஹ்மா உண்டானமையால், விஷ்ணுவே ஈசுவர னென்கிறார்கள்.

7. சைவர்கள் சிவனுடைய பாதத்தைக் கண்டுபிடிக்க விஷ்ணுவால் முடியாமற் போய்விட்டபடியால், சிவனே ஈசுவரன் என்கிறார்கள்.

8. கணபதி உபாசகர்கள் திரிபுராசுரனை ஜெயிக்கக் கணபதியைச் சிவன் பூஜித்தபடியால் கணபதியே ஈசுவரன் என்கிறார்கள்.

9. பைரவ மைராலாதி உபாசகர்கள், மாரண, உச்சாடன, வசீகரணாதி சித்திகளுக்கு ஹேதுவான பைரவாதிகளின் மந்திரங்களையும், அவர்களது ஸ்தோத்திரங்களையும், இம்மந்திர தந்திரங்களைப்பற்றிச் சொல்லிய கிரந்தங்களையும் பிரமாணமாகக் கொண்டு பைரவாதி தேவதைகளை ஈசுவரனாக வர்ணிக்கிறார்கள். இவ்விதமாக மேற்சொல்லிய மதங்களெல்லாம் ஒன்றற்கொன்று வித்தியாசப்படுகின்றன. சகல மதங்களுக்கும் அவிருத்தமானது கிரந்தத்திற் சொல்லிய ஈசுவரஸ்வரூபமே.

* மாயையிலுள்ள புத்தி வாசனையில் உண்டாகும் சேதனப்பிரதிபிம்பம் ஈசுவரனென்று வித்தியாரண்யஸ்வாமிகள் பஞ்சதசப்பிரகரணத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஈசுவரன் மேகாகாசத்துக்குச் சமானமென்பதில் மேகத்துக்குச் சமானம் மாயை, மேகஜலத்துக்குச் சமானம் புத்திவாசனை, அச்சலத்திலுள்ள ஆகாசப் பிரதிபிம்பத்துக்குச் சமானம் சிதாபாஸன், புத்திவாசனையில் உண்டாகிற பிரதிபிம்பத்துக்குச் சமானம் ஈசுவரனென்று சொன்னதினால் யாதொரு தோஷமு மில்லை. ஏனெனின், மாயாரூப அஞ்ஞானமே ஈசுவரபாவத்துக்கு உபாதியாயிருந்தாலும் புத்திவாசனை அஞ்ஞானத்தில் அந்தர்க்கதமா யிருக்கின்றது. சர்வஞ்ஞத்துவத்திற்குக் காரணம் அஞ்ஞானத்தின் சத்துவ குணம். இது ஞானரூப ஸகல புத்திக்கும் உபாதானகாரணமா யிருக்கிறது. ஆதலால்

மாயையினிடத்திலுள்ள சேதனத்தின் சாயை † (ஆபாஸம்)மாயையின் அதிஷ்டான சேதனம் என்னும் இரண்டையும் ஈசுவர னென்பர். அந்த ஈசுவரன் மேகாகாசத்துக்குச் சமானமாவர்.

1. அந்த ஈசுவரன் அந்தரியாமி யாவர். ஏனெனின், எல்லோருள்ளிலு மிருந்து பிரேரணை செய்கிறார்.

2. அவர் சதாமுக்தர். ஏனெனின், அவருக்குத் தமது ஸ்வரூபத்தில் ஆவரணமில்லை. ஆதலால் அவருக்கு ஜன்மமரணாதி பந்தம் தோற்றுகிறதில்லை. இக்காரணத்தால் ஈசுவரன் நித்தியமுக்தராவர்.

3. ஈசுவரன் சர்வஞ்ஞர்; சகலபதார்த்தங்களையும் அறிபவராயிருக்கிறார். ஏனெனின், மாயையில் சுத்தசத்துவகுண முண்டு.

தமோகுண ரஜோகுணங்களால் அமிழ்த்தப்பட்டதாகாது, ரஜோதமோ குணங்களைத் தான் அமிழ்த்தும் சத்துவகுணம் எதுவோ, அது ‡ சுத்தசத்துவகுண மெனப்படும்.

சத்துவகுணத்தினின்றும் ஞான முற்பத்தியாகின்றது. ஆகையால் சத்துவகுணம் பிரகாச ஸ்வபாவமுள்ளதாம். இப்படிப்பட்ட சத்துவகுணமுடைய மாயையிலிருக்கும் சேதனாபாஸத்துக்குத் தன் ஸ்வரூபத்திலாவது வேறு பதார்த்தத்திலாவது ஆவரணம் சம்பவிக்கிறதில்லை. ஆகையால் ஈசுவரன் முக்தனும் சர்வஞ்ஞனுமாவன்.

ஜீவேசுவரர்களிடத்திலுள்ள அதிஷ்டான சைதன்னியம் ஜீவேசுவரரிருவரிடத்திலும் பந்தமோக்ஷ பேதமின்றியதா யிருக்கிறது; ஆகாசம் போல் ஏகரசமா (ஒரே தன்மையா) யிருக்கிறது. ஆனால் ஆபாஸ அம்ஸத்தில் பந்தமோக்ஷங்க ளிருக்கின்றன. அதிஷ்டானத்தில் ஆபாஸனுக்குப் பிராந்தியால் அவை தோற்றுகின்றன. ஆதலால் கேவலம் ஆபாசனிடத்தில் பந்தமோக்ஷங்க ளிருக்கின்றன. அதனிடத்தும் இவ்வளவு பேதமுண்டு:—

1. எந்த ஆபாஸனிடத்தில் ஆவரண மிருக்கிறதோ அவனிடத்தில் பந்த மிருக்கிறது.

---

முத்தியில் சகல புத்தியும் தனக்குபாதானமான அம்சத்தில் லயமாகி உபாதானரூபமாகவே இருக்கிறது. உபாதானரூபமாயிருப்பதே சூக்ஷ்மசம்ஸ்கார மெனப்படும். இச்சம்ஸ்காரமே வாசனை யெனப்படும். இவ்விதமாக அஞ்ஞானத்திலுள்ள சத்துவாம்சத்துக்கு வேறாக வாசனை இல்லை. ஆதலால் புத்திவாசனை யென்னும் சப்தத்தால் அஞ்ஞானத்திலுள்ள சத்துவாம்சமே கிரகிக்கத்தக்கதாம்.

† இங்கு "ஆபாஸ" மென்னும் சொல்லால் மாயையோடுகூடிய ஆபாஸம் கொள்ளப்படும்.

‡ ஓர் பிராஹ்மணஜாதியுடைய ராஜாவானவன் க்ஷத்திரிய சூத்திர சாதியுடைய இரண்டு மந்திரிகளால் தான் அமிழ்த்தப்படாது, அவ்விருவரையும் தான் அமிழ்த்தியிருப்பன். அங்ஙனமே ரஜோதமோகுணங்களால் அமிழ்த்தப்படாது, அவ்விரண்டையும் தான் அமிழ்த்தும் சத்துவகுணம் எதுவோ, அது சுத்தசத்துவகுணமாம்.

2. எவனிடத்தில் சொரூபாவரண மில்லையோ அவன் முக்தனுவன்.

1. ஈசுவரனிடத்தில் ஆவரண மில்லாமையால் ஈசுவரன் சதாமுக்தனு யிருக்கிறுன்.

2. ஜீவனிடத்தில் ஆவரணமிருப்பதால் அவன் பத்தனு யிருக்கிறுன். பத்தனென்பது கட்டுப்பட்டவனு யிருக்கிறுன் என்பதாம். ஏனெனின், எந்த அவித்தையம்சத்தில் உண்டாகிற சைதன்னியத்தி னுபாஸத்திற்கு ஜீவனென்று பெயரோ, அந்த அவித்தைக்கு ஆவரணஞ்செய்தல் சுபாவமாம்.

1. மாயை 2. அஞ்ஞானம் 3. அவித்தை என்பன ஒரே வஸ்துவுக்குப் பெயராயினும்,

1. சுத்தசத்துவத்தின் பிரதானத்தால் மாயை யெனப்படுகின்றது.

2-3. மலினசத்துவகுணத்தின் பிரதானத்தால் அஞ்ஞானமென்றும் அவித்தையென்றும் சொல்லப்படும்.

ரஜோகுண தமோகுணங்களால் அமிழ்த்தப்பட்ட சத்துவகுணம் மலினசத்துவகுண மெனப்படும்.

ஆதலால் ரஜோகுணதமோகுணங்கள் அதிகமாயிருத்தலால் அவித்தையிலுள்ள ஜீவனுடைய ஆபாஸாம்சத்தினை அவித்தையானது சொரூபாவரணஞ்செய்கிறது. ஆதலால் ஜீவனிடத்தில் பந்தம் இருக்கிறது; ஈசுவரனிடத்தில்லை.

2. கேவலம் அதிஷ்டானசேதனம் தத்பதத்தின் லக்ஷியமாம்.

"ஈசுவரன் ஜகத்தின் உற்பத்தி பாலனம் சம்ஹாரம் என்பவற்றைச் செய்கிறு"ரென்று சகலசாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் அபிப்பிராயம் இதுவாம்:— சேதனும்சம் ஆகாசம்போல் அசங்கமாயிருக்கிறது. ஆபாசாம்சம் ஜகத்தின் உற்பத்தி முதலியவற்றைச் செய்கிறது. அதனிடத்திற்றுன் சர்வஞ்ஞத்துவ மிருக்கிறது. பக்தர்களின்பேரில் அநுக்கிரகம் செய்வதும் மற்ற ஐசுவரியங்களும் கேவலம் ஆபாசனிடத்தி லிருக்கின்றன. சேதனும்சம் ஏகரச (ஒரேவித)மாம். அதனிடத்தில் ஸத்தாஸ்பூர்த்தியைக் கொடுத்தலன்றி வேறு ஐசுவரியம் பொருந்தாது.

## 172. 4. பிரஹ்மசொரூபவர்ணனம்.

பிரஹ்மாண்டத்துக்கு உள்ளும் புறமும் மகாகாசம்போல நிறைந்திருக்கிற சேதனம் பிரஹ்ம மெனப்படும். அந்தப் பிரஹ்மம் தூரத்திலும் இல்லை; சமீபத்திலும் இல்லை. ஏனெனின், எந்த வஸ்து தனக்குப் பின்னமாயும் தேசரூப உபாதியுடையதாயு மிருக்கிறதோ, அது சமீபத்திலும் தூரத்திலும் இருப்பதாகச் சொல்லப்படும். பிரஹ்மம் பின்னமன்று; ஆனுல் எல்லாவற்றின் ஆத்மாவாயும் தேசமுதலிய சர்வஉபாதிகளு மில்லாததாயு மிருக்கிறது. ஆகையால் அது தூரத்திலும் சமீபத்திலு மிருப்பதாகச் சொல்லப்படுகிறதில்லை.

பிரஹ்மசப்தத்தின் வாச்சியமும் ஸோபாதிகமாம். ஏனெனின் வியாபக வஸ்துவுக்குப் பிரஹ்ம மென்று பெயர்.

அந்த வியாபகத்துவம் இருவகைத்தாம். 1. ஒன்று ஆபேக்ஷிக வியாபகத்தன்மை; 2. ஒன்று நிரபேக்ஷிக வியாபகத்தன்மை.

1. எந்த வஸ்து எந்தப் பதார்த்தத்தை யபேக்ஷித்து வியாபகமாக இருக்கிறதோ, எதை யபேக்ஷித்து வியாபகமாக இல்லையோ, அதன்கண் ஆபேக்ஷிக வியாபகத்துவஞ் சொல்லப்படுகிறது. எங்ஙனம்: பிருதிவியாதிகளை யபேக்ஷித்து மாயை வியாபகமாயிருக்கிறது; சேதனத்தை யபேக்ஷித்து அப்படியில்லை. ஆகையால் மாயையினிடத்தில் ஆபேக்ஷிகவியாபகத்துவ மிருக்கிறது.

2. எந்த வஸ்து எல்லாவற்றையு மபேக்ஷித்து வியாபகமாயிருக்கிறதோ, அதன்கண் உள்ள வியாபகத்துவம் நிரபேக்ஷிகவியாபகத்துவ மெனப்படும். அந்த நிரபேக்ஷிகவியாபகத்துவம் சேதனத்திலிருக்கிறது. ஏனெனின், சேதனத்துக்குச் சமானமாகவாவது அதிகமாகவாவது வேறெதுவும் வியாபகமாயில்லை. ஆனால் சைதன்னியமே எல்லாவற்றினும் வியாபகமாயுள்ளது. ஆகையால் சேதனத்தில் நிரபேக்ஷிக வியாபகத்துவ மிருக்கிறது.

1. அதிஷ்டானசேதனசகித மாயையிலுள்ள ஆபாஸரூப ஈசுவரன் தத்பதத்தின் வாச்சிய மெனப்படும்.

இந்த இரண்டுவித வியாபகத்துவங்களுடன் கூடிய வஸ்து பிரஹ்ம சப்தத்திற்கு வாச்சியமாம்; இவ்விருவகை வியாபகத்துவங்களும் மாயாவிசிஷ்டசேதனத்தில் இருக்கின்றன. ஏனெனின்,

1. விசிஷ்டனிடத்துள்ள மாயா அம்சத்தில் ஆபேக்ஷிக வியாபகத்துவ மிருக்கின்றது.

2. சேதன அம்சத்தில் நிரபேக்ஷிக வியாபகத்துவம் இருக்கின்றது.

சேதனத்தின் * ஏகதேசத்தில் மாயை யிருத்தலாலும் மாயாவிசிஷ்ட சேதனத்தைவிட சுத்தசேதனம் அதிகவியாபகமா யிருத்தலாலும் மாயாவிசிஷ்ட சேதனத்தில் நிரபேக்ஷிக வியாபகத்துவம் பொருந்தாது. ஆதலால் சுத்தசேதனத்தில் நிரபேக்ஷிக வியாபகத்துவம் இருக்கிறது. அங்ஙனமாயினும், மாயாவிசிஷ்ட சேதனம் பரமார்த்ததிருஷ்டியாகச் சுத்தத்திற்கு வேறாகாமல் சுத்தமாகவே இருக்கிறது. ஆகையால் மாயாவிசிஷ்டத்திலும் சேதனாம்சத்தில் நிரபேக்ஷிகமாகவே வியாபகத்துவ மிருக்கிறது. இவ்வாற்றால்,

1. மாயாவிசிஷ்டமே பிரஹ்மசப்தத்தின் வாச்சியமாதல் கூடும்.

2. சுத்தசேதனம் பிரஹ்மசப்தத்தின் லக்ஷியமாம். ஆகையால் ஈசுவரப் பிரஹ்மசப்தங்களுக்கு ஒரே அர்த்தம் தோற்றுகிறது; வெவ்வேறு அர்த்தங்கள் இல்லை.

---

* கடத்தை உண்டாக்கும் சக்தி எந்த மண்ணிலு மில்லை; களிமண்ணில் மாத்திரமிருக்கிறது,

அங்ஙனமாயினும்,

1. பிரஹ்மசப்தத்துக்கு இது சுபாவமாம்:—பல விடங்களில் லக்ஷியார்த்தத்தை அறிவிக்கின்றது; சிலவிடங்களில் வாச்சியார்த்தத்தைக் கூறுகின்றது.

2. ஈசுவரசப்தத்திற்கு இது சுபாவமாம்:— பல விடங்களில் வாச்சியார்த்தத்தைப் போதிக்கின்றது; சில விடங்களில் லக்ஷியார்த்தத்தைக் கூறுகின்றது. இவ்வளவு பேத முண்டு. ஆதலால் இலக்ஷியார்த்தத்தைக்கொண்டு பிரஹ்ம சப்தத்துக்கு அர்த்தம் வேறாக நிரூபிக்கப்பட்டது.

## இலக்கம் 158-உள்ள பிரசினத்தின் உத்தரம் 173-175.

## 173. கூடஸ்தர் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றார்; ஆபாஸன் புசிக்கின்றானெனல்.

சிஷ்யனே! நான்குவித சேதனங்களையும் சொன்னேன். அவற்றில்,

1. ஜீவனுடைய ஸ்வரூபத்திலுள்ள மித்தையாகிய ஆபாஸாம்சம் புண்ணியபாபங்களைச் செய்து அவற்றின் பயனை யநுபவிக்கிறது.

2. கூடஸ்தனாகிய சேதனம் சிவ (கலியாண)ரூபமாக இருக்கிறது.

ஆகையால் "புத்திரூப விருக்ஷத்தில் பரமாத்மா ஜீவன் என்று இரண்டு பக்ஷிகளிருக்கின்றன" என்பதாக முதலில் நீ எந்தச் சங்கை செய்திருந்தாயோ, அதற்குப் பரமாத்மாவையும் ஜீவனையும் கொள்ளலாகாது. ஆனால் கூடஸ்தன் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார், ஆபாசன் புசிக்கின்றான் என்று உத்தரம் சொல்லப்பட்டது.

## 174. ஆபாஸம் கர்மத்தைச் செய்கின்றது; பலத்தையும் தருகின்றது; சேதனம் தருகிறதில்லையெனல்.

ஜீவஸ்வரூபத்திலுள்ள சேதனத்தின் சாயையாகிற ஆபாஸாம்சம் கர்மத்தைச் செய்கிறது. அக்கர்மஞ் செய்யும் ஆபாஸாம்சத்துக்கு சாயையாகிய ஈசுவரனுடைய ஆபாஸாம்சம் பலனைக் கொடுக்கிறது. இதனால் இவ்வார்த்தை சித்தித்தது :—

1. ஜீவஸ்வரூபத்திலுள்ள ஆபாஸாம்சம் புண்ணிய பாபங்களைச் செய்து அவற்றின் பலத்தைப் புசிக்கிறது.

2. ஈசுவரனிடத்திலுள்ள ஆபாஸாம்சம் கர்மபலத்தைக் கொடுக்கிறது.

1. இவ்விரண்டிலுமுள்ள சேதனாம்சத்தில் எவ்விதப் பேச்சிற்கு மிடமில்லை.

2. ஜீவனிடத்துள்ள சேதனாம்சத்தில் கர்மம் பலம் என்பவற்றின் சம்பந்த மில்லை.

3. ஈசுவரனிடத்துள்ள சேதனாம்சத்தில் பலத்தைத் தருதலின் சம்பந்த மில்லை. அச்சேதனத்தில் அவற்றைச் சொல்லுகிறவன் மூடன். ஏனெனின், சேதனம் இரண்டிடங்களிலும் அசங்கமாயும் ஏகரூபமாயும் இருக்கிறது; சே

தனத்தில் பேதமில்லை. ஜீவசேதனத்தை ஈசுவரசேதனத்துக்கு வேருகவே னும் ஈசுவரசேதனத்தை ஜீவசேதனத்துக்கு வேருகவேனும் நினைக்கிறவன் நிந்திக்கத்தக்கவனுவன். இப்படிச் சொல்லுவதனுல் "ஜீவனும் பரமாத்மா வும் ஒன்றென வங்கீகரிப்பதில் கர்மோபாஸனைகளைப் பிரதிபாதிக்கும் வேத ம் நிஷ்பிரயோஜனமாகும்" என்று செய்யப்பட்ட இரண்டாவது சங்கைக்குச் சமாதானஞ் சொல்லப்பட்டது:— ஜீவேசுவரர்களிடத்துள்ள சேதனபாகங் களுக்கு அபேதமும், ஆபாஸபாகத்திற்குப் பேதமு முண்டு. ஆகையால் இருவகை வசனங்களும் பொருந்துகின்றன.

## 175. ஜீவப்பிரஹ்மங்களின் இலக்ஷியார்த்தத்திற்கு அபேத முண்டெனல்,

சிஷ்யனே! நீ செய்த பிரசினங்களுக்கு யான் உத்தரஞ் சொன்னேன்.

1. "ஒரு விருக்ஷத்தில் இரண்டு பக்ஷிகளுண்டு. ஒன்று புசிக்கின்றது; ஒன்று இச்சையின்றி யிருக்கின்றது. ஆதலால் ஜீவப்பிரஹ்மங்களின் ஐக்கியம் பொருந்தா" தென்று நீ கூறியிருந்தாய்.

அதற்கு "இந்த ஸ்தானத்தில் ஜீவப்பிரஹ்மங்களைக் கொள்ளலாகாது; கூடஸ்தனையும் புத்தியிலுள்ள ஆபாஸனையும் கொள்ளவேண்டும். அவை கடா காசத்தையும் ஆகாசத்தின் சாயையினையும் போலத் தம்மில் பின்னமாயிருக் கின்றன." என்று யாம் உத்தரஞ்சொன்னோம்.

2. "ஜீவனே கர்ம உபாசனைகளைச் செய்கின்றவன்; பரமாத்மா பய னைத் தருபவர்; அவர்களுக்கு ஐக்கியம் பொருந்தா" தென்று நீ பிரசினஞ் செய்தாய்.

அதற்கும் யாம் இவ்வாறு உத்தரங் கூறினோம்:—

1. கர்மத்தைச் செய்பவன் ஜீவனல்லன்; பயனைத் தருபவன் ஈசுவரனல் லன்; ஆனுல் ஜீவனிடத்துள்ள ஆபாஸஅம்சம் எதுவோ அது செய்கிறது.

2. ஈசுவரனிடத்துள்ள ஆபாஸஅம்சம் எதுவோ அது பலத்தைத் தரு கின்றது.

3. ஜீவேசுவரரிடத்துள்ள சேதனும்சம் எதுவோ அது கடாகாச மகா காசத்தினைப்போலப் பேதத்தின் கந்தமின்றியதா யிருக்கிறது.

இவ்வாற்றுல்,

ஜீவப்பிரஹ்மங்களுக்கு ஏகத்துவஞ் சித்திக்கிறது. ஆகையால், சிஷ்ய னே! "நான் பிரஹ்மம்" என்று நீ அறிவாயாக.

1. நான் என்னும் சொல்லிற்குக் கூடஸ்தனைப் பொருளென்றறி.

2. பிரஹ்மமென்னும் சொல்லிற்கு மகாகாசத்திற்குச் சமமாகச் சொல் லப்பட்ட லக்ஷியார்த்தம் பொருளென்றறி.

நான் என்னும் சொல்லிற்கும் பிரஹ்மமென்னும் சொல்லிற்கும் வாச்சி யார்த்தத்தில் அபேதமில்லை; ஆனுல் லக்ஷியார்த்தத்தில் அபேதமாம்.

சிஷ்யனே !

1. எதுவரையில் "நான் பிரஹ்மம்" என்று நீ அறியவில்லையோ, அதுவரையில் நீ உன்னைத் தீனன் என்றும் துக்கி யென்றும் மதிப்பாய்.

2. பரமாத்மாவை வேறாக நினைத்திருக்கின்றாய். அது உனக்குப் பயத்திற்கு ஹேதுவாகும். ஆகையால் "நான் பிரஹ்ம" மென்று நீ யறி.

## 176. பிரசினம்:—நான் பிரஹ்மமென்னும் ஞானம் யாருக்குண்டாகிறது? எனல்.

### தத்துவதிருஷ்டி கேட்கின்றார்.

சுவாமி! "நான் பிரஹ்மம்" என்னும் ஞானம் யாருக்குண்டாகிறது? என்பதைத் தாம் கிருபைசெய்து சொல்லியருளல்வேண்டும். தாம் சொன்னாலன்றி நான் இவ்வார்த்தையை அறிந்துகொள்ளமாட்டேன். இக்கேள்வியால் சிஷ்யனுடைய மனதிலுள்ள இரகசியமான அபிப்பிராயம் இதுவாம்:—
1. "நான் பிரஹ்ம மென்னும் ஞானம் கூடஸ்தனிடத் துண்டாகிறதா ?
2. அல்லது ஆபாஸஸகிதபுத்தியி லுண்டாகிறதா ?

1. கூடஸ்தனிடத்துச் சொல்வோமாயின் கூடஸ்தன் விகாரியாவன்.

2. ஆபாஸஸகித புத்தியிற் சொல்லுவோமாயின், அவனுக்கு நான் பிரஹ்ம மென்னும் ஞானம் பிராந்திரூபமாகும். ஏனெனின், "கூடஸ்தனும் பிரஹ்மமு மொன்று; ஆபாஸன் வேறு." என்று தாம் முன்னமே சொல்லியிருக்கிறீர்கள். ஆதலால் பிரஹ்மத்துக்கு வேறான ஆபாஸனைப் பிரஹ்மரூபமாக அறிதல் பிராந்தியேயாகும். சர்ப்பத்துக்கு வேறான ரஜ்ஜுவைச் சர்ப்பரூபமாயறிதல் பிராந்தியாலாம். இவ்வாறு ஆபாஸசகிதபுத்திக் குண்டாகும் "நான் பிரஹ்ம" மென்னும் ஞானம் யதார்த்தமாகாது ; பிராந்திவடிவமாகும்.

ஒருகால் 'நான் பிரஹ்மம்' என்னும் ஞானத்தைப் பிராந்திரூபமாகவே யங்கீகரிப்போமாயின், இந்த ஞானத்தால் மித்தையாகிய ஜகத்தின் நிவிருத்தி யுண்டாகாது. ஆனால் யதார்த்த ஞானத்தால் மித்தையின் நிவிருத்தி யுண்டாகிறது. அது ரஜ்ஜுவின் யதார்த்த ஞானத்தால் மித்தியாசர்ப்பம் நிவிருத்தியாவதுபோலாம். இவ்விதத்தால் ஆபாஸஹித புத்திக்கு 'நான் பிரஹ்மம்' என்னும் ஞானம் பொருந்தாது.

## முற்கூறிய பிரசினத்தின் உத்தரம். 177-183.

## 177. ஆபாஸனது சப்த(ஏழு)அவஸ்தைகளின்பெயர் 177-178.

### ஸ்ரீ குருவானவர் சொல்லுகின்றார்.

சிஷ்யனே! இப்போது ஆபாஸனது ஏழு அவஸ்தைகளைச் சொல்லுகிறேன் கேள். இவ்வேழில் ஏதுவும் சேதனமாகிய கூடஸ்தனுக்கில்லை. "நான் பிரஹ்ம" மென்னும் ஞானமும் இவ்வேழினுள்ளேயே இருக்கிறது.

**178.** சப்தாவஸ்தைகளின் பெயர். (1) அஞ்ஞானம், (2) ஆவரணம், (3) பிராந்தி (விக்ஷேபம்), (4) பரோக்ஷஞானம், (5) அபரோக்ஷஞானம், (6) சோகநாசம் (அநர்த்த நிவிருத்தி), (7) அதிஹர்ஷம் (ஆநந்தப்பிராப்தி).

## 179. 1-2. அஞ்ஞான ஆவரணங்களின் சொரூபவர்ணனம்.

சிஷ்யனே!

1. "நான் பிரஹ்மத்தை யறியேன்" என்னும் வியவஹாரத்துக்குக் காரணம் அஞ்ஞானமாம்.

"பிர்ஹ்ம மில்லை; விளங்க வில்லை" என்னும் வியவஹாரத்துக்குக் காரணம் ஆவரணமாம். ஆவரணத்தால் இருவகை வியவகாரங்க ளுண்டாகின்றன. ஏனெனின், அஞ்ஞானத்தின் சக்திகள் இரண்டு. (க) ஒன்று அஸத்வாபாதகம்; (உ) மற்றொன்று அபாநுபாதகம். இவ்விரண்டற்கும் ஆவரணமென்று பெயர்.

"வஸ்து இல்லை" யென்னும் தோற்றத்தைச் செய்யுஞ் சக்தி அஸத்வாபாதக மெனப்படும்.

(2) வஸ்து விளங்கவில்லை யென்னும் தோற்றத்தைச் செய்யும் அஞ்ஞானத்தின் சக்தி அபாநுபாதக மெனப்படும்.

(1) இவ்வாற்றால் "பிரஹ்மமில்லை" என்னும் வியவஹாரத்துக்குக் காரணம் அஞ்ஞானத்தின் அஸத்வாபாதகசக்தியாம்.

(2) "பிரஹ்மம் விளங்கவில்லை" யென்னும் வியவஹாரத்துக்குக் காரணம் அஞ்ஞானத்தின் அபாநுபாதகசக்தியாம். இவ்விரண்டற்கும் ஆவரணமென்று பெயராம்.

## 180. 3. பிராந்தி வர்ணனம்.

கூடஸ்தனிடத்தில் தோற்றுகிற ஜன்மாதி சமுசாரம் வேதத்தில் * பிராந்தி யெனப்படுகிறது. இதனையே சோகமென்பர்.

## 181. 4-5. இருவகை ஞானவர்ணனம். (பரோக்ஷம் அபரோக்ஷம்.)

1. பிரஹ்மமில்லை" என்னும் ஆவரணாம்சத்தைப் "பிரஹ்மமிருக்கிறது" என்னும் பரோக்ஷஞானம் நாசஞ்செய்கிறது. ஏனெனின், "பிரஹ்ம

* தேகம் பிராணன் இந்திரியம் அந்தக்கரணத்தோடுகூடிய சிதாபாஸன் என்னும் இவற்றின் ஜன்மமுதலிய சம்பந்தவிசிஷ்ட கேவல தர்மவடிவ சம்பந்திகளாவது அல்லது சம்பந்தவிசிஷ்ட தர்மியோடுகூடிய தர்மவடிவ சம்பந்திகளாவது விஷயத்தோடு ஆத்மாவினிடத்துத் தோற்றுதலும், ஆத்மாவின் தாதாத்மிய சம்பந்தம் அல்லது சத்தியத்தன்மை முதலிய தர்மங்களின் சம்பந்தம் தனது விஷயத்தோடு அநாத்மாவில் தோற்றுதலும் அத்தியாச மெனப்படுகின்றன. இதனையே பிராந்தி, விக்ஷேபம், சோகம் என்று கூறுவர்.

ம்சத்திய ஞான் * அநந்தரூபமா யிருக்கிறது” என்னும் ஞானத்துக்குப் பரோக்ஷஞானமென்று பெயர். இந்தப் பரோக்ஷஞானம் “பிரஹ்மமில்லை” என்னும் பிரதீதிக்கு விரோதியாம்; வேறொன்றுக்கு விரோதியன்று.

2. “நான் பிரஹ்ம” மென்னும் அபரோக்ஷஞானம் சகல அவித்தியா சமூகத்துக்கும் விரோதியாம். இக்காரணத்தால்,

(1) “பிரஹ்மத்தை நான் அறியவில்லை” என்பது அஞ்ஞானம்.

(2) “பிரஹ்மமில்லை; விளங்கவில்லை” என்பது ஆவரணம்.

(3) “நான் பிரஹ்மமல்லன்; ஆனால் புண்ணிய பாபங்களைச் செய்பவனும் சுக துக்கங்களை யநுபவிப்பவனுமாகிய ஜீவன்” என்பது பிராந்தி. இவ்வளவு அவித்தியா சமூகத்தை அபரோக்ஷஞானம் நாசம்பண்ணுகிறது.

## 182. 6. பிராந்தி நாசவர்ணனம்.

(1) என்னிடத்தில் ஜன்மமும் மரணமுமில்லை.

(2) சுகதுக்கங்களின் லேசமு மில்லை.

(3) ஒரு சமுசார தர்மமும் என்னிடத்தில் இல்லை.

(4) ஆனால் ஜனனமில்லாத கூடஸ்தன்யான் என்று சிஷ்யனே! இவ்விதமாகச் சர்வ அநர்த்தங்களையும் நிஷேதித்தலே பிராந்திநாசத்தின் சுவரூபமாம்.

இவ்விடத்தில் கூடஸ்தனிடத்தில் ஜனனத்தை நிஷேதிப்பதினால் ஸர்வ அநர்த்தங்களையும் நிஷேதித்ததாகக் கொள்ளவேண்டியது. ஏனெனின், ஜனனத் தோற்றத்திற்குப் பின் வேறு அநர்த்தங்கள் தோற்றுகின்றன. ஆதலால் ஜனனத்தை நிஷேதிப்பதினால் சகல அநர்த்தங்களும் நிஷேதிக்கப்படுகின்றன. இந்தப் பிராந்திநாசத்தினையே சோகநாச மென்றும் கூறுவர்.

---

* தேசகால வஸ்துக்களால் எதற்கு அந்த (பரிச்சேத) முண்டாகிறதில்லையோ, அத்தன்மைய சர்வதேசத்திலும் சர்வகாலத்திலும் சர்வ வஸ்துக்களிலும் வியாபகமான வஸ்து எதுவோ அது அநந்த மெனப்படுகின்றது. இதனையே விபு வென்றும் பூமா வென்றும் கூறுவர். முன் வஸ்துநிர்த்தேசரூபமங்கலவுரையின் டிப்பணியில் காட்டியபடி பிரஹ்மம் தேசகால வஸ்துக்களால் அந்தமில்லாததா யிருத்தலின் அது சுருதியில் ஆநந்தரூபமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இங்கு அநந்தரூபமென்று சொல்லுதலால் “ஆநந்தவடிவம் பிரஹ்மமாம்” என்பது அர்த்தத்தினால் சித்திக்கின்றது. ஏனெனின், சாந்தோக்கிய உபநிஷத்தில் பூமவித்தையின் பிரசங்கத்தில் நாரதரை நோக்கிச் சநகாதிகுருவானவர் கூறியிருக்கின்றனர்:— “பூமா (பரிபூர்ணம்) எதுவோ, அது சுகரூபமாம்; அற்ப (பரிச்சின்ன)த்தில் சுகமில்லை” என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் அநந்தரூபமெதுவோ அது பூமாவாம். பூமாவென்பது எதுவோ அது ஆநந்தரூபமாமென்று அறிந்துகொள்க.

## 183. 7· ஹர்ஷவர்ணனம்.

சிஷ்யனே! "நான் அத்வயப் பிரஹ்மஸ்வரூபன்" என்று உனக்குச் சமுசயமின்றி உனது ஸ்வரூபஞானம் எப்போது உண்டாகிறதோ; அப்போது உனக்கு ஆநந்தமுண்டாகும். அதனை * ஹர்ஷ மென்றறிவாய்.

நான் இப்போது உனக்கு ஏழவஸ்தைகளையும் சொன்னேன். அவை யாவும் ஆபாஸனுடையனவாம்; அவனிடத்திலேயே ஞானமும் இருக்கிறது. "ஞானம் யாருக்குண்டாகிறது" என்றகேள்விக்கு உத்தரஞ்சொன்னேன். இன்னும் ஏதாவது கேட்கவிரும்பினால் கேள்.

## 184. பிரசினம்:—பிரஹ்மத்திற்கு வேறாகிய ஆபாஸனுக்கு "யான் பிரஹ்மம்" என்னும் ஞானம் மித்தையாகும். (இலக்கம் 176-ல் உள்ள) பிரசினத்தின் இரகசிய அபிப்பிராயம்.

கூட (இரகசியமான) அபிப்பிராயமாகப் பிரசினஞ்செய்திருந்ததனை இப்போது சிஷ்யன் பிரகடஞ் செய்கிறான்:—

சுவாமி! "கூடஸ்தனும் பிரஹ்மமும் ஒன்று; ஆபாஸன் பிரஹ்மத்துக்கு வேறு." என்று தாம் முன் சொன்னீர்கள்.

அந்தப் பிரஹ்மத்துக்கு வேறாகிய ஆபாஸனுக்கு "நான் பிரஹ்மம்" என்னும் பிரஹ்மரூபமான ஞானம் பொருந்தாது.

1. "எனது அதிஷ்டானமாகிய கூடஸ்தன் பிரஹ்மரூபமாம்" என்று ஆபாசனுக்கு ஞானமுண்டாயின், யதார்த்தஞான முண்டாகும்.

2. "நான் பிரஹ்மம்" என்னும் ஞானம் யதார்த்தமாகாது. ஏனெனின், நான் என்பது தன் ஸ்வரூபத்திற்காம். எதனை நான் என்கிறார்களோ அந்த ஆபாஸனது சொரூபம் மித்தையாகலின் பின்னமாம். ஆதலால் பிரஹ்மத்தினும் வேறாகிய ஆபாஸனது சொரூபத்தினைப் பிரஹ்மவடிவமாக அறியின் அது மித்தியாஞானமாகும்.

அது சர்ப்பத்துக்கு வேறான ரஜ்ஜுவைச் சர்ப்பரூபமாக அறியும் ஞானம் மித்தையாவதுபோலாம். மித்தையென்பது பிராந்தி. அந்தப் † பிரஹ்மஞானத்தைப் பிராந்திரூபமாகச் சொல்லுதல் கூடாது.

---

* இந்த ஹர்ஷத்திற்கு ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகள் பஞ்சதசியின் திருப்திதீபத்தில் "நிரங்குசத்திருப்தி" என்று பெயரிட்டிருக்கின்றார். மேலும் மேலும் ஆநந்தத்தில் இச்சை யுண்டாதலால் விஷயாநந்தம் சாங்குசமாயிருக்கிறது. பிரஹ்மாநந்தத்திற்கு மேலான ஆநந்தமில்லாமையால் அது நிரங்குசமாயிருக்கிறது. (அங்குசம்—தடை.)

இவ்வேழவஸ்தைகளில் அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம் என்னும் மூன்றும் பந்தத்துக்குக் காரணமாயிருக்கின்றன. மற்ற நான்கும் மோக்ஷத்துக்குச் சாதனங்களாயிருக்கின்றன.

† இங்கு இது பிரசினஞ்செய்யும் சிஷ்யனைக்கேட்கும் பிரசினமாம்:—

## 185. உத்தரம்:—"அகம்" சப்தத்தின் இரண்டர்த்தமும், அவற்றில் கூடஸ்தனுக்குப் பிரஹ்மத்தோடுள்ள முக்கிய சாமானாதிகரணியமும், ஆபாஸனுக்குள்ள பாதசாமானாதிகரணியமும்.

சிஷ்யனே! "நான்" என்னும் சப்தத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறேன் கேள். அதனால் உன்னிருதயத்திலுள்ள சங்கையாகிற களங்கங்கள் அநேகம் நிவிருத்தியாய்விடும்.

சிஷ்யனே! "நான் பிரஹ்ம" மென்னும் ஞானம் புத்திஸஹித ஆபாஸனுக்குண்டாய்க் கூடஸ்தனுக் குண்டாகாவிடினும், அந்த ஆபாஸன் கூடஸ்தனையும் தன் ஸ்வரூபத்தையும் தன்னாத்மாவாக அதாவது தானாகவே அறிகிறான். அந்த ஆத்மா "நான்" என்னும் சொல்லால் கிரகிக்கப்படுகின்றது. அதுவே "அகம்-நான்" என்னும் சொல்லிற்குப் பொருளாம்.

1. அந்த "நான்" என்னும் சப்தத்தில் விளங்குகிற கூடஸ்தனுக்குப், பிரஹ்மத்தோடு எப்போதும் அபேதமிருக்கிறது. அது கடாகாசத்துக்கும் மகாகாசத்துக்கும் எப்போதும் அபேத மிருப்பதுபோலாம். இக்காரணத்தினால்

---

1. பிரஹ்மஞானத்தின் சொரூபம் மித்தையாகிய சம்சாரத்தினுள்ளடங்கிய மித்தியாசிதாபாஸனது ஆசிரிதமா யிருத்தலின் மித்தையாம். ஆதலால் இந்த மித்தியா ஞானத்தால் கானற்சலத்தால் தாகம் நீங்குமென்றாற்போலச் சம்ஸாரத்தின் நிவிருத்தி எங்ஙன முண்டாகுமென்று சொல்லுகிறீரா?

2. அல்லது அந்த ஞானத்தின் விஷயமாகிய சிதாபாஸனுக்கும் பிரஹ்மத்திற்குமுள்ள ஐக்கியமெதுவோ, அது சர்ப்பத்திற்கும் ரஜ்ஜுவிற்குமுண்டாம் ஐக்கியத்தைப் போல மித்தையாமாகலின், அந்த மித்தியாவிஷயத்தின் ஞானமும் மித்தையாம். ஆதலால் அந்த மித்தியாஞானத்தினால் சம்ஸாரத்தின் நிவிருத்தி எங்ஙன முண்டாகுமென்று சொல்லுகிறீரா?

1. அவற்றுள், ஞானத்தின் சொரூபம் மித்தையாமென்பதை யாமும் அங்கீகரித்திருக்கின்றோம். ஆனால் அந்த மித்தையாகிய ஞானத்தினால் சம்ஸாரத்தின் நிவிருத்தி கூடும், ஏனெனின், "யக்ஷனுக்குத் தக்க பலி" என்னும் இலௌகிக நியாயத்தினால் எங்ஙனம் மித்தையாகச் சம்ஸாரமிருக்கிறதோ, அங்ஙனமே அதன் நிவிருத்தியின் பொருட்டான ஞானமும் மித்தையா யிருத்தல்வேண்டும்.

அல்லது:—"சமானசத்தையுடைய பதார்த்தங்கள் தம்மிற் சாதகபாதகமாம்." என்னும் நியமத்தினாலும் மித்தையாகிய ஞானத்தினாலேயே மித்தையாகிய சம்ஸாரத்தின் நிவிருத்தி சம்பவிக்கிறது.

கானற்சலமும் தாகமும் சமானசத்தையுடையன வன்று; விஷமசத்தையுடையனவாம். ஆதலால் பிராதிபாஸிக கானற்சலத்தினால் வியாவகாரிக தாகத்தின் நிவிருத்தி சம்பவியாது என்பது மேல் ஐந்தாவது தரங்கத்திலும் சொல்லப்படும்.

கூடஸ்தனுக்குப் பிரஹ்மத்தோடு † முக்கிய சாமானாதிகரணியம் வேதாந்தசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

எந்த வஸ்துவுக்கு எந்த வஸ்துவோடு எப்போதும் அபேதமிருக்கிறதோ, அந்த வஸ்துவிற்கு அதனோடு முக்கியஸாமானாதிகரணியம் சொல்லப்படுகிறது. எங்ஙனம்:—கடாகாசத்துக்கு மகாகாசத்துடன் எப்போதும் அபேதமிருக்கிறது. ஆதலால் கடாகாசம் மகாகாசமாயிருக்கிறது. இவ்வாற்றால் கடாகாசத்துக்கு மகாகாசத்துடன் முக்கியஸாமானாதிகரணிய முண்டு.

இவ்வாறு கூடஸ்தனுக்குப் பிரஹ்மத்தோடு முக்கியஸாமானாதிகரணிய முண்டு. ஏனெனின், கூடஸ்தனுக்கும் பிரஹ்மத்துக்கும் எப்போதும் அபேதமிருக்கிறது. ஆதலால் "நான்" என்னும் சப்தத்தில் விளங்குகிற கூடஸ்தனுக்குப் பிரஹ்மத்தோடு எப்போதும் அபேதமுண்டு.

2. "நான்" என்னும் சப்தத்தில் விளங்குகிற ஆபாஸனுக்குப் பிரஹ்மத்தோடு தன் ஸ்வரூபத்தைப் பாதித்து அபேதமுண்டாகிறது. எங்ஙனம்: முகத்தின் பிரதிபிம்பத்துக்குப் பிம்பசொரூபமான முகத்தோடு பிரதிபிம்ப சொரூபத்தைப் பாதித்து அபேதமுண்டாகிறது. இக்காரணத்தினால் வேதாந்த சாஸ்திரத்தில் ஆபாஸனுக்குப் பிரஹ்மத்தோடு பாதஸாமானாதிகரணியம் சொல்லப்பட்டிருக்கிறது.

எந்த வஸ்துவிற்குப் பாதமுண்டாய் எதனோடு அபேதமுண்டாகிறதோ, அந்த வஸ்துவுக்கு அதனோடு பாதஸாமானாதிகரணியம் சொல்லப்படுகிறது.

---

2. சிதாபாஸப் பிரஹ்மங்களின் ஒருமைவடிவ ஞானத்தின் விஷயம் மித்தையாம்; ஆதலால் அதன் ஞானமும் மித்தையாம் என்று நீ பிரகடஞ்செய்த இரண்டாவது பக்ஷம் சம்பவியாது என்னும் வார்த்தை இப்போது 185-வது இலக்கத்தில் சொல்லப்படுகின்றது.

† சமான (ஒரு) வேற்றுமையின் பலத்தால் சமான (ஒரு) அதிகரண (அர்த்தவடிவ ஆசிரய)த்தினையுடைய இரண்டு பதங்கள் எவையோ அவை சமானாதிகரண மெனப்படும். இவ்விரண்டு சப்தங் (சொற்)களுக்குமுள்ள பரஸ்பர சம்பந்த மெதுவோ, அது சாமானாதிகரணியம் (ஒருபொருளுடைமை) எனப்படுகின்றது.

முற்கூறிய சாமானாதிகரணிய சம்பந்தத்தினை ஜீவ ஈசுவரர்களின் ஐக்கியத்தைப் போதிக்கும் ஒரு வேற்றுமையுடைய பதங்களோடுகூடிய நான்குவேதங்களின் நான்கு மகாவாக்கியங்களிலும் அங்ஙனமே அத்தன்மைய அந்நிய லௌகிக வைதிகவாக்கியங்களிலும் அறிந்துகொள்க. அவற்றுள்:

1. ஒரு சத்தையும் ஒரு சொரூபமுமுடையனவா யிருத்தலால் வாஸ்தவ பேதமின்றிஇரண்டு பொருள்களையறிவிக்கும் வாக்கியத்துள்ள இரண்டு பதங்களுக்கு "முக்கிய சாமானாதிகரணியம்" சொல்லப்படுகின்றது. அது கடாகாசமகாகாசபதங்கட்கும் கூடஸ்தப்பிரஹ்மபதங்கட்கு மிருப்பதாம்.

2. பின்னசத்தையுடைய இரண்டு பதார்த்தங்களுக்கு ஒரு வேற்றுமையின் பலத்தால் ஐக்கியத்தை (ஒருமையை) யறிவிக்கும் வாக்கியத்துள்ள இரண்டு பதங்களுக்கும் "பாத சாமானாதிகரணியம்" சொல்லப்படுகின்றது. அது ஸ்தாணுபத புருஷபதங்கட்கும் ஜகத்துப் பிரஹ்ம பதங்கட்கும் பிம்பப்பிரதிபிம்ப பதங்கட்கு மிருப்பதாம்.

(1) எங்ஙனம்: முகத்தின் பிரதிபிம்பத்திற்குப் பாதமுண்டாய் முகத்தோடு அபேதமுண்டாகிறது. ஆதலால் பிரதிபிம்பம் முகமாம்; வேறன்று. இவ்வாறு பிரதிபிம்பத்திற்கு முகத்தோடு பாதசாமானாதிகரணிய முண்டு.

(2) அல்லது, எங்ஙனம்: கட்டையில் புருஷப்பிரமமுண்டாகிக் கட்டையெனத் தெரிந்த பின், "புருஷன் கட்டை" என்றிவ்வாறு புருஷனுக்குக் கட்டையோடு பாதஸாமானாதிகரணிய முண்டாகிறது. அங்ஙனமே ஆபாஸனுக்குப் பாதமுண்டாய்ப் பிரஹ்மத்தோடு அபேதமுண்டாகிறது.

ஆதலால் "நான்" என்னும் சப்தத்தில் விளங்குகிற ஆபாசன் பிரஹ்மமாம்; வேறன்று. இத்தன்மைய பாதசாமானாதிகரணியம் ஆபாஸனுக்குப் பிரஹ்மத்தோடுண்டாகிறது. இவ்வாற்றால் சிஷ்யனே!

1. "நான்" என்னும் சப்தத்தில் விளங்குகிற கூடஸ்தனுக்கு முக்கிய அபேத முண்டு.

2. ஆபாசனுக்குப் பாதத்தால் அபேதமுண்டு.

## 186. பிரசினம்:—அகம்விருத்தியில் கூடஸ்த ஆபாஸர்களின் விளக்கம் கிரமமாக உண்டாகிறதா? அல்லது கிரமமின்றி யுண்டாகிறதா? எனல். தத்துவதிருஷ்டி கேட்கின்றார்.

ஸ்வாமி! "அஹம் (நான் என்னும்) விருத்தியில் சாக்ஷியும் ஆபாஸனும் விளங்குகின்றன" வென்று தாம் சொன்னீர்கள்.

இதில் எனக்கு ஒன்று தெரியவில்லை. அதாவது,

1. கூடஸ்த ஆபாசர்களின் விளக்கம் யானென்னும் விருத்தியில் கிரமமாக வுண்டாகிறதா ?

2. அல்லது கிரமமின்றி யுண்டாகிறதா? என்பதாம். இதன்பொருள் இதுவாம்:—

1. கிரமமாக வென்பது பின்ன பின்னகாலத்தில் உண்டாகிறதா?

2. அல்லது கிரமமின்றி அதாவது ஒரேகாலத்தில் உண்டாகின்றதா ? இதனைத் தாம எனக்கு அறிவிக்கவேண்டும்.

## (நிகழ்ந்த பிரசினத்தின் உத்தரம் 187 - 205.)

## 187. ஒரேசமயத்தில் சாக்ஷி ஆபாஸர்களின் விளக்கமுண்டாகிறது.

## ஸ்ரீ குருவானவர் சொல்லுகின்றார்.

சிஷ்யனே! நீ பிரசினஞ் செய்ததற்கு நான் சாரமான உத்தரஞ்சொல்லுகிறேன். நீ சாவதானமாய்க் கேள். இதைக் கேட்பதினால் ஞானரூபமான ஸ்ரீ

யப்பிரகாசமுண்டாகி அஞ்ஞானமாகிய இருளைக் கெடுக்கும். சிஷ்யனே! ஒரேசமயத்தில் சாக்ஷியும் ஆபாஸனும் அஹம் விருத்தியில் விளங்குகின்றனர். எல்லாப்பிரகரணங்களிலும் "ஆபாஸன்" என்னும் சொல்லால் அந்தக்கரண சகித ஆபாஸனைக் கொள்ளவேண்டும்.

1. அந்தக்கரணஸகித ஆபாஸன் சேதனமாகிய சாக்ஷிக்கு விஷயமாய் விளங்குகிறான்.

2. சாக்ஷி ஸ்வயம்பிரகாசரூபமாக விளங்குகிறது. அந்தக்கரணத்தின் ஆபாஸசகித விருத்திக்குச் சாக்ஷி விஷயமாகிறதில்லை.

கடாதி வெளியிலுள்ள பதார்த்தங்களிலோ இவ்வாறு கிரமமுண்டு:—

இந்திரியத்துக்கும் கடத்துக்கும் சையோகமுண்டாகும்போது இந்திரியவாயிலாக அந்தக்கரணத்தின் விருத்தி வெளியிற் சென்று கடத்தின் ஸமானாகாரத்தை அடைகிறது. இரும்பினாலாவது மண்ணாலாவது செய்த கருவில் உருக்கிவிடப்பட்ட தாம்பிரம் அக்கருவின் சமானாகாரத்தை யடைவதுபோல அந்தக்கரணவிருத்தியும் கடத்தின் சமானாகாரமாகிறது.

அந்த விருத்தி ஆபாஸனின்றி யுண்டாகிறதில்லை; ஆபாஸசகிதமாகவே யுண்டாகிறது, ஏனெனின் விருத்தி அந்தக்கரணத்தின் பரிணாமமாம்.

அந்தக்கரணத்தின் பரிணாமத்தினை விருத்தி யென்பர்.

அந்தக்கரணம் சத்துவகுண காரியமாயிருத்தலின் ஸ்வச்சமாம். ஆதலால் அந்தக்கரணத்தில் சேதனத்தின் ஆபாசமுண்டாகிறது. அதுபோல விருத்தியும் ஸ்வச்சமான அந்தக்கரணத்தின் காரியமாயிருத்தலால் விருத்தியில் சேதனத்தின் ஆபாஸமுண்டாகிறது. உண்டாகின்ற விருத்தி ஆபாஸஸகித அந்தக்கரணத்தினின்றும் உண்டாகிறது. இக்காரணத்தாலும் விருத்தி ஆபாஸ சகிதமாகவே வுண்டாயிருக்கிறது.

## 188. அஞ்ஞானத்திற்கு ஆசிரயமும் விஷயமும் சேதனமாமெனல்.

விஷயமாகிற கடம் தமோகுண காரியமாயிருக்கிறது. ஆகையால் அது ஸ்வரூபமாக ஜடமாம். அதில் அஞ்ஞானமும் அதன் ஆவரணமுமிருக்கின்றன.

இதில் இச்சங்கை யுண்டாகிறது:—

அஞ்ஞானமும் அதன் ஆவரணமும் விசாரதிருஷ்டியினால் சேதனத்திலிருக்கின்றன; கடத்திலில்லை. ஏனெனின், 1. அஞ்ஞானம் சேதனத்தை யாசிரயித்திருக்கின்றது, 2. சேதனத்தையே விஷயமாக்குகின்றதென்பது வேதாந்த சித்தாந்தம்.

1. ஸப்தாவஸ்தையின் பிரசங்கத்தில் அஞ்ஞானத்திற் காசிரயம் அந்தக்கரணஸகித ஆபாசனென்று சொல்லப்பட்டது. அது அஞ்ஞானத்தின் அபிமானியாம். "நான் அஞ்ஞானி" என்னும் அபிமானம் அந்தக்கரணசகித

ஆபாஸனுக்குண்டாகிறது. ஆதலால் ஆபாஸன் அஞ்ஞானத்திற்காசிரயமா மெனச் சொல்லப்படுகிறது. * முக்கிய ஆசிரயம் சேதனமாம்; ஆபாஸசகித அந்தக்கரணமன்று. ஏனெனின், ஆபாஸசகித அந்தக்கரணம் அஞ்ஞானத்தின் காரியமாம். எது எதன் காரியமோ அது அதன் ஆசிரய மாகாது. ஆகையால் சேதனமே அஞ்ஞானத்துக்கு அதிஷ்டானரூப ஆசிரயமாம்.

2. சேதனத்தையே அஞ்ஞானம் விஷயஞ்சேய்கிறது. ஸ்வரூபத்தை மறைப்பதே அஞ்ஞானம் விஷயஞ்செய்தலாம். அந்த அஞ்ஞானத்தாலாகிய ஆவரணம் ஜட வஸ்துவில் பொருந்தாது. ஏனெனின், ஜடவஸ்து ஸ்வரூபமாகவே ஆவிருதமா (மறைக்கப்பட்டதா) யிருக்கிறது. அதில் அஞ்ஞானத்தாலாகிய ஆவரணத்துக்கு ஒரு பிரயோஜனமுமில்லை.

இவ்விதத்தால் அஞ்ஞானத்துக்கு ஆசிரயமும் விஷயமும் சைதன்னியமே. அது வீட்டின் நடுவிலிருக்கும் இருள் வீட்டின் இடையை மறைப்பது போலாம். ஆதலால் கடத்தின்கண் அஞ்ஞானமும் அதன் ஆவரணமும் பொருந்தா.

## 189. வெளிப்பதார்த்தங்களில் விருத்தி ஆபாஸன் என்னும் இரண்டன் உபயோகமுமுண்டெனலும் அதன்கண் அஞ்ஞானத்தினால் மறைக்கப்பட்ட கடத்தின் உதாரணமும் 189 - 190.

**அதற்குச் சமாதானம் இதுவாம்:—எங்ஙனம்** சேதனத்தின் ஸ்வரூபத்துக்கு வேறாகவும் சதசத்து விலக்ஷண அஞ்ஞானம் சேதனத்தை யாசிரயித்ததாயிருக்கிறதோ, அந்த அஞ்ஞானத்தால் சேதனம் மறைக்கப்பட்டதா யிருக்கிறதோ, அங்ஙனமே கடத்தின் ஸ்வரூபத்துக்கு வேறான அஞ்ஞானம் கடத்தை யாசிரயித்திராவிடினும், அஞ்ஞானமானது கடாதி ஸ்வரூபமாகப் பிரகாசமில்லாத ஜடஸ்வரூபங்களை ஆக்கியிருக்கின்றது. ஆகையால் கடாதிகள் எப்போதுமே குருடனைப்போல மறைக்கப்பட்டனவா யிருக்கின்றன. அந்த மறைக்கப்பட்ட ஸ்வபாவம் கடாதிகளுக்கு அஞ்ஞானத்தால் உண்டாயிருக்கின்றது. ஏனெனின், தமோகுணப்பிரதான அஞ்ஞானத்தினின்றும் பூதங்களின் உற்பத்திவாயிலாகக் கடாதிகள் உண்டாகின்றன. அத்தமோகுணம் ஆவரணஸ்வபாவமுடையதாம். ஆதலால் கடாதிகள் பிரகாச மில்லாதனவாய்க் குருடாகவே யிருக்கின்றன.

இவ்வாற்றால் இருள் வடிவமான ஆவரணம் கடாதிகளில் அஞ்ஞானத்தாலாகியதாய் ஸ்பாவசித்தமா (இயல்பாற் பெறப்பட்டதா) யிருக்கிறது.

---

* பணத்துக்கு முக்கிய ஆசிரயம் பெட்டிமுதலியனவாம். நான் தனிகன் என்னுமிடத்தில் தனத்தின் அபிமானிவடிவ ஆசிரயம் புருஷனும். அதுபோல அஞ்ஞானத்துக்கு முக்கிய ஆசிரயம் சேதனமாம். அபிமானிரூப ஆசிரயம் ஆபாஸசகித அந்தக்கரணமாம்.

கடாதிகளின் அதிஷ்டானசேதனத்தை யாசிரயித்துள்ள அஞ்ஞானம் சைதன்னியத்தை மறைத்து, ஸ்பாவமாக மறைக்கப்பட்டுள்ள கடாதிகளையும் மறைக்கிறது.

ஸ்வபாவமாக மறைக்கப்பட்டுள்ள பதார்த்தங்களை மறைப்பதில் பிரயோஜனமில்லையாயினும், ஆவரணஞ்செய்யும் பதார்த்தம் பிரயோஜனத்தின் அபேக்ஷையின்றியே ஆவரணமின்றியதிற்போல ஆவரணத்தோடுகூடியதிலும் ஆவரணஞ்செய்கிறது. இது உலகத்தில் பிரசித்தம்.

அந்த அஞ்ஞானத்தால் மறைக்கப்பட்ட கடத்தையடைந்த அந்தக்கரணத்தின் ஆபாஸஸஹித கடாகார விருத்தியிலுள்ள

1. விருத்திபாகமோ கடத்தினுவரணத்தைப் போக்குகிறது;

2. ஆபாஸபாகம் கடத்தைப் பிரகாசிப்பிக்கிறது.

இவ்வாறு வெளியிலுள்ள பதார்த்தங்களில் விருத்தியும் ஆபாஸனுமாகிய இரண்டும் உபயோகமாம்.

## 190. திருஷ்டாந்தம்.

இருளில் ஓர் சட்டியால் மண்ணால் அல்லது இரும்பினுற் செய்த ஒரு வஸ்து மூடப்பட்டிருக்கிறது. அங்குத் தடியால் அந்த மண் பாத்திரத்தையுடைத்தாலும் பின் தீபமில்லாமல் உள்ளே யிருக்கும் பொருள் பிரகாசிக்கிறதில்லை. ஆனால் தீபத்தினுல் அது பிரகாசிக்கிறது. அதுபோல அஞ்ஞானத்தால் மறைக்கப்பட்ட கடத்தின் ஆவரணத்தை விருத்தி நாசஞ்செய்தாலும் கடம் பிரகாசிக்கிறதில்லை. ஏனெனின், கடமும் ஸ்வரூபமாக ஜடம்; விருத்தியும் ஜடம்; அதற்கு ஆவரணத்தைக் கெடுத்தல் மாத்திரம் பிரயோஜனமாம்; அதனுற் பிரகாச முண்டாகிறதில்லை. ஆதலால் கடத்தைப் பிரகாசிப்பிப்பது ஆபாஸனும்.

நேத்திரத்துக்கு விஷயமான வஸ்துவினது பிரத்தியக்ஷ ஞானத்தின் இந்தக்கிரமம் சொல்லப்பட்டது. * சிரவணுதிகளுக்கு விஷயமான பதார்த்தங்களினது பிரத்தியக்ஷத்தின் கிரமத்தையும் இவ்வாறே அறிந்துகொள்க.

---

* 1. சுரோத்திரேந்திரியத்தால் சப்தவிஷயம் பிரத்தியக்ஷமாகுமிடத்துச் சுரோத்திரவாயிலாக வெளிப்பட்ட அந்தக்கரணத்தின் ஆபாஸனேடு கூடிய விருத்தியானது தூரதேசத்திலாவது சமீபதேசத்திலாவது உள்ள சப்தாகாரத்தின் சமான ஆகாரத்தை யடைகின்றது. அப்போது விருத்தியினுல் சப்தத்தின் ஆவரணம் கெடுகிறது. ஆபாஸபாகம் சப்தத்தைப் பிரகாசிப்பிக்கிறது.

2. துவக்கிந்திரியத்தால் ஸ்பரிசகுணமும் அதற்காசிரயமான கடாதிகளும் பிரத்தியக்ஷமாகும்போது விருத்தி, சரீரமாகிய கோளகத்தை விட்டு வெளியே போகிறதில்லை. ஆனால் சரீரத்தின் கிரியையினுலாவது மற்றொன்றின் கிரியையினுலாவது சரீரமாகிய கோளகத்தோடு சையோகத்தை யடைந்த கடாதி விஷயங்களையும் அவற்றை யாசிரயித்த கடினுதிவடிவ ஸ்பரிச குணத்தையும் சரீரரூப கோளகத்திலேயே இருப்பதாய்

1. விருத்தியும் கடமுமாகிய இரண்டும் ஓரிடத்திருத்தலால் கடத்தின் ஞானம் பிரத்தியக்ஷ மெனப்படுகிறது.

2. அந்தக்கரணத்தின் விருத்தியோ கடாகாரமாய்க் கடத்தோடு சம்பந்தப்படாமல் உள்ளேயே இருக்குமாயின் அது கடத்தின் பரோக்ஷஞான மெனப்படுகின்றது.

1. "இது கட" மென்பது அபரோக்ஷ ஞானத்தினாகாரமாம்.

2. "கடமிருக்கிறது" அல்லது "அந்தக் கடமிருக்கிறது" என்பது பரோக்ஷ ஞானத்தினாகாரமாம்.

ஸ்மிருதி ஞானமும் பரோக்ஷ ஞானமேயாம். என்றாலும் ஸ்மிருதி ஞானமோ ஸம்ஸ்கார ஜந்நியமாம். அநுமிதிமுதலிய பரோக்ஷஞானம் பிரமாண ஜந்நியமாம். இவ்வளவு பேதமுண்டு.

## 191. பிரத்தியக்ஷம், அநுமானம், சப்தம், உபமானம், அர்த்தாபத்தி, அநுபலப்தி யென்னும் பிரமாணங்களைக் கூறுதல். 191—193.

பிரமாணத்தின் பிரசங்கத்தால் பிரமாண நிரூபணஞ்செய்வாம்:—

---

ஆபாஸசகித அந்தக்கரண விருத்தி விஷயம் செய்கிறது. அந்த விருத்தியினால் ஆசிரயத்தோடு ஸ்பரிசத்தின் ஆவரணம் பங்கமாகிறது ; சிதாபாஸன் அதனைப் பிரகாசிக்கிறது.

3. ரசனேந்திரியத்தால் ரசவிஷயம் பிரத்தியக்ஷமாகும்போதும் விருத்தி சிங்குவையாகிற கோளகத்தை விட்டு வெளியே போகிறதில்லை. ஆனால் சிங்குவையாகிய கோளகத்தோடு ரசவிஷயத்தின் சையோகமுண்டாகும்போது, நாவின் நுனிப்பாகத்திலிருக்கும் ரஸனேந்திரியத்திலுள்ள ஆபாஸ சகித விருத்தி ரசத்தை விஷயஞ் செய்கிறது. அங்கு விருத்தியினால் ரஸத்தின் ஆவரணம் பங்கமாகிறது ; சிதாபாஸன் மதுர முதலிய ரஸங்களைப் பிரகாசிக்கிறது.

4. கிராணேந்திரியத்தால் கந்தம் பிரத்தியக்ஷமாகும்போதும் மூக்காகிய கோளகத்துடன் புஷ்பாதிவடிவ கந்தத்தின தாசிரயத்திற்கு அல்லது அதன் சூக்ஷ்ம அவயவங்களுக்குச் சையோக முண்டாகுங்காலத்து, மூக்கின் நுனிப்பாகத்திலிருக்கும் கிராணேந்திரியத்திலுள்ள ஸாபாஸ அந்தக்கரண விருத்தி புஷ்பாதிவடிவத் திரவியத்தின் ஆசிரிதமான கந்தமாத்திரத்தைக் கிரகணம் (விஷயம்) செய்கிறது. அங்கு விருத்தி பாகத்தால் கந்தத்தின் ஆவரணம் பங்கமாகின்றது; விருத்தியிலுள்ள சிதாபாஸ பாகம் கந்தத்தின் ஆவரணத்தைக் கெடுக்கிறது.

இது சுரோத்திர முதலியவற்றின் விஷயம் எதுவோ அதனது பிரத்தியக்ஷத்தின் கிரமமாம்.

1. * சார்வாக மதஸ்தர்கள் † பிரத்தியக்ஷப் பிரமாணம் ஒன்றனையே அங்கீகரிக்கிறார்கள்.

**192.** 2. $ கணாத சுகதமதங்களை யநுசரித்தவர்கள் இரண்டாவது அநுமானப்பிரமாணத்தையும் அங்கீகரிக்கிறார்கள். ஏனெனின், பிரத்தியக்ஷமொன்றனையே பிரமாணமெனக் கொள்ளின், திருப்தியை விரும்பியவனுக்குப் பிரவிருத்தி யுண்டாகாது. ஏனெனின், புசிக்கப்படாத போஜனத்தில் திருப்தியின் ஏதுத்தன்மையினது பிரத்தியக்ஷப் பிரமாண ஜன்னியப் பிரத்தியக்ஷ ஞானமில்லை. ஆதலால் புசிக்கப்பட்ட போஜனத்தில் அநுபவஞ் செய்யப்பட்ட திருப்தியின் ஏதுத்தன்மை எதுவோ, அதனைப் புசிக்கப்படாத போஜனத்திலும் அநுமானத்தினால் அறிவதனால் திருப்தியை விரும்பியவனுக்குப் போஜனத்திற் பிரவிருத்தி யுண்டாகுதலால் அநுமானப் பிரமாணத்தையும் அங்கீகாரஞ் செய்யவேண்டும். இவ்வாற்றால் கணாத சுகதமதங்களை யநுசரித்தவர்கள் பிரத்தியக்ஷம் ‡ அநுமான மென்னும் இரண்டு பிரமாணங்களை அங்கீகாரஞ் செய்கின்றனர்.

**193.** 3. சாங்கிய சாஸ்திரத்தின் கர்த்தாவாகிய கபிலர் மதத்தை யனுசரித்தவர்கள் மூன்றாவதான சப்தப்பிரமாணத்தையு மங்கீகரிக்கிறார்கள். ஏனெனின், பிரத்தியக்ஷ அனுமானங்களாகிய இரண்டு பிரமாணங்களையே அங்கீகரிக்கின், அன்னிய தேசத்தில் ஒருவன் தகப்பன் இறந்துபோகிறான். அச்செய்தியை உண்மை யுரைப்போன் ஒருவன் வந்து "உன் பிதா இறந்து போய்விட்டான்" என்று சொல்லுவானாயின், அப்போது கேட்பவனுக்குத் தகப்பன் இறந்துபோய் விட்டானென்னும் நிச்சயமுண்டாகலாகாது. ஏனெனின், தேசாந்தரத்திலுள்ள தகப்பனது மரணத்தின் ஞானம் பிரத்தியக்ஷப் பிரமாணத்தாலும் அனுமானப் பிரமாணத்தாலும் சம்பவியாது. இவ்வாற்றால் கபிலர்மதத்தை யனுசரித்தவர்கள் பிரத்தியக்ஷம், அநுமானம், *சப்தம் என்னும் மூன்று பிரமாணங்களையும் அங்கீகரிக்கிறார்கள்.

---

* ஐந்து பூதங்களையும் அங்கீகரித்துத் தேகத்தை யாத்மா வென்று சொல்லுகிறவன் **லோகாயதன்.** அவனுக்கு விலக்ஷணமாய் ஆகாசமின்றிய மற்ற நான்கு பூதங்களை மாத்திரம் அங்கீகரித்துத் தேகத்தை யாத்மாவென்று சொல்லுகிறவன் **சார்வாகன்.**

† **பிரத்தியக்ஷப்பிரமாணப்** பிரமைகளின் நிரூபணம் **விருத்தி** ரத்நாவலியின் இரண்டாவது ரத்நத்திலும் **விருத்திப்**பிரபாகரத்தின் முதற் பிரகாசத்திலும் **விஸ்தார**மாய்ச் செய்யப்பட்டிருக்கிறது.

$ வைசேஷிக சாஸ்திரத்தின் கர்த்தா; இவருக்குக் **கணபுக்** கென்றும் பெயர். சுகதமதம் - பௌத்த மதம்.

‡ **அநுமானப்பிரமாண** அநுமிதிப் பிரமைகளின் நிரூபணம் **விருத்தி** ரத்நாவலியின் மூன்றாவது ரத்நத்திலும் விருத்திப்பிரபாகரத்தின் இரண்டாவது பிரகாசத்திலும் செய்யப்பட்டிருக்கிறது.

**194.** 4. நியாய சாஸ்திர கர்த்தாவாகிய கௌதமர் மதத்தை யனுசரித்தவர்கள் † உபமானத்தையும் நான்காவது பிரமாணமாகக் கொண்டிருக்கின்றனர். ஏனெனின், பிரத்தியக்ஷாதி மூன்று பிரமாணங்களையே அங்கீகரிக்கின், கவயத்தை(காட்டுப்பசுவை)ப்பாராத ஒருவன் காட்டுமனிதனால் 'கவய மிருகம்.பசுமாடு்போன்றது' என்று கேள்விப்பட்டபின் காட்டுக்குப்போய்க் கவயத்தைப் பார்க்கும்போது அவனுக்கு அக்காட்டுமனிதன் சொன்ன "கோவினை (ஆவை) ஒக்கும் கவயம் (ஆமா)" என்னும் வாக்கியமும் அதன் பொருளும் நினைவில் வருகின்றன. அந்த "ஸ்மரணைக்குப் பின்" இது கவயமென்னும் ஞானம் அவனுக்குண்டாகிறது. உபமானப்பிரமாணத்தை யங்கீகரியாவிடின் இந்த ஞான முண்டாகலாகாது. ஆகையால் இத்தன்மைய விலக்ஷண ஞானத்துக்கு ஹேதுவான * உவமானப் பிரமாணத்தையு மங்கீகரிக்கின்றார்கள்.

**195.** 5. பூர்வ மீமாம்ஸையின் ஏகதேசியான பட்டருடைய சிஷ்யராகிய பிரபாகரர் ஐந்தாவது அர்த்தாபத்திப் பிரமாணத்தையு மங்கீகரிக்கிறார். பகலில் போஜனஞ்செய்யாத புருஷனது ஸ்தூலத்தைக் கண்டு, இவன் இரவில் சாப்பிடுவன் என்னும் ஞானமுண்டாகிறது. ஏனெனின், இராத்திரிபோஜனமின்றிப்பகலிற் போஜனத்தை விட்டவனிடத்தில் ஸ்தூலத்தன்மை பொருந்தாது. ஆதலால் ஸ்தூலத்தன்மை இராத்திரி போஜனத்தின் சம்பாத்திய (காரிய)மாம். இராப்போஜனம் ஸ்தூலத்தன்மையின் சம்பாதக (காரண)மாம். சம்பாதகமான இராப்போஜனத்தின் ஞானத்துக்கு ஹேதுவான ஸ்தூலத்தன்மையின் ஞானம் † அர்த்தாபத்திப் பிரமாண மெனப்படுகிறது.

**196.** 6. பூர்வமீமாம்ஸகரான பட்டர் ஆறுவது அநுபலப்திப் பிரமாணத்தையு மங்கீகரிக்கிறார். வேதாந்த சாஸ்திரத்திலும் ஆறு பிரமாணங்கள் அங்கீகரிக்கப்பட் டிருக்கின்றன. அநுபலப்திப் பிரமாணத்தின் பிரயோஜனம் இதுவாம்:— வீடுமுதலியவற்றில் கடாதிகளினது அபாவத்தின் ஞான முண்டாகிறது. அங்கு எப்பதார்த்தத்தின் பிரதீதி யுண்டாகவில்லையோ அதன் அபாவத்தினது ஞானமுண்டாகிறது. அப்பிரதீதி (தோற்றாமை)யை அநுபலப்தி யென்பர். கடத்தின் அப்பிரதீதியினால் கடத்தின் அபாவ நிச்சயமுண்டா

---

* சப்தப் பிரமாண சாப்திப் பிரமைகளின் நிரூபணம் விருத்திரத்நாவலியின் ஐந்தாவது ரத்நத்திலும் விருத்திப்பிரபாகரத்தின் மூன்றாவது பிரகாசத்திலும் செய்யப்பட்டிருக்கிறது.

† உவமானப்பிரமாண உவமிதிப்பிரமைகளின் நிரூபணம் விருத்திரத்நாவலியின் நான்காவது ரத்நத்திலும் விருத்திப்பிரபாகரத்தின் நான்காவது பிரகாசத்திலும் செய்யப்பட்டிருக்கிறது.

† அர்த்தாபத்திப்பிரமாண அர்த்தாபத்திப் பிரமைகளின் நிரூபணம் விருத்திரத்நாவலியின் ஆறாவது ரத்நத்திலும் விருத்திப்பிரபாகரத்தின் ஐந்தாவது பிரகாசத்திலும் செய்யப்பட் டிருக்கிறது.

கிறது. இவ்வாறு பதார்த்தங்களின் அபாவநிச்சயத்துக்குக் காரணமான பதார்த்தங்களின் அப்பிரதீதியினை * அநுபலப்திப்பிரமாண மென்பர்.

## 197. பிரமாணப் பிரமா ஞானங்களின் லக்ஷணம்.

1. பிரமா ஞானத்துக்கு எது கரணமோ (199) அது பிரமாண மெனப் படும்.

2. ஸ்மிருதிக்கு வேறாய்ப் பாதிக்கப்படாத பொருளை விஷயஞ்செய்யும் ஞானம் பிரமை யெனப்படும்.

ஸ்மிருதி ஞானம் பிரமையன்று. ஏனெனின் பிரமா ஞானம் பிரமாதாவை யாசிரயித்ததாம். ஸ்மிருதி பிரமாதாவை யாசிரயித்ததன்று; ஆனால் சாக்ஷியை யாசிரயித்ததாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. பிராந்தி ஞானமும் சமுசயமும் சாக்ஷியை யாசிரயித்திருப்பனவாக அங்கீகரிக்கப்பட் டிருக்கின்றன. இக்காரணத்தானே ஸ்மிருதி பிராந்தி சமுசயம் என்னும் மூன்றும் ஆபாஸஸஹித அவித்தையின் விருத்திரூபங்களாம்; அந்தக்கரணத்தின் விருத்திரூபங்களன்று. ஆகையால் அவை பிரமாதாவை ஆசிரயித்தனவன்று; சாக்ஷியையாசிரயித்தனவாம். எது அந்தக்கரணத்தின் விருத்திரூபஞானமோ அது பிரமாதாவின் ஆசிரிதமாம். அதுவே பிரமை யெனப்படும். ஸ்மிருதி ஞானம் அந்தக்கரணத்தின் விருத்தியன்றாகலின் பிரமாதாவை யாசிரயித்த தன்று; பிரமையுமன்று. ஆகையால் பிரமையின் லக்ஷணத்தில் ஸ்மிருதியின் **வேறாய்** என்று சொல்லுதல்வேண்டும்.

**பாதிக்கப்படாத** பொருளை விஷயஞ்செய்யும் ஞானமோ ஸ்மிருதி ஞானமுமாம்; ஆனால் ஸ்மிருதிஞானம் ஸ்மிருதியின் வேறன்று. ஆகையால் பாதிக்கப்படாத பொருளை விஷயம்செய்யும் ஸ்மிருதியின் வேறாய ஞானமே † பிரமை யெனப்படும். இவ்விலக்கணத்தில் ஒரு தோஷமுமில்லை.

## 198. ஸ்மிருதிஞானமும் ஆறுபிரமையின் விசாரபூர்வகமான கரணத்தின் லக்ஷணமும் 198-199.

வேறு சிலர் ஸ்மிருதிஞானத்தையும் பிரமைவடிவமாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மதத்தின்படி பிரமையின் லக்ஷணத்தில் "ஸ்மிருதியின் வேறாய" என்று சொல்லுதலில்லை. ஆனால் பாதிக்கப்படாத பொருளை விஷயமாக்குகிற ஞானம் ‡ பிரமை யெனப்படுகிறது.

---

* **அநுபலப்திப்பிரமாண** அநுபலப்தி (அபாவ)ப்பிரமைகளின் நிரூபணம் விருத்திரத்நாவலியின் ஏழாவது ரத்நத்திலும் விருத்திப்பிரபாகரத்தின் ஆறாவது பிரகாசத்திலும் செய்யப்பட்டிருக்கிறது.

† யதார்த்த அநுபவம் பிரமையென்னும் பிரமையின் லக்ஷணம் ஸ்மிருதியின் வேறுபட்டதாம்.

‡ யதார்த்த ஞானம் பிரமையென்னும் பிரமாலக்ஷணமும் ஸ்மிருதி சாதாரணமாம்

பிராந்திஞானம் பாதிக்கப்படாத பொருளை விஷயஞ் செய்கிறதில்லை. ஆனால் பாதிக்கப்படும் பொருளை விஷயஞ்செய்கிறது. ஆதலால் பிரமையின் லக்ஷணம் பிராந்திஞானத்திற் செல்லுகிறதில்லை.

எவர்கள் மதத்தில் ஸ்மிருதி ஞானத்திலும் பிரமை வியவகாரமுளதோ, அவர்கள் மதத்தில் ஸ்மிருதிஞானம் அந்தக்கரணத்தின் விருத்தியாம்; அவித்தியாவிருத்தி யன்று; சாக்ஷியை யாசிரயித்தது மன்று; பிரமாதாவை யாசிரயித்ததாம். ஏனெனின் அந்தக்கரணவிருத்தியின் ஆசிரயம் பிரமாதாவே யாம்; சாக்ஷியாகாது.

இவ்விதத்தால் ஸ்மிருதி ஞானம்

1. சிலர் மதத்திலோ அந்தக்கரண விருத்தியா யிருத்தலால் பிரமா ரூபமாம்.

2. சிலர் மதத்தில் அவித்தியாவிருத்தியா யிருத்தலால் பிரமாரூபமன்று.

பிராந்திஞானமும் சமுசயஞானமும் எல்லோர் மதத்திலும் அவித்தியாவிருத்தியும் சாக்ஷியை யாசிரயித்தனவுமாம். இதில் ஒரு விவாதமுமில்லை.

விசாரித்துப் பார்க்குமளவில் ஸ்மிருதிஞானமும் அவித்தையின் விருத்தியும் சாக்ஷியின் ஆசிரிதமாம்; பிரமாவடிவமன்று. ஏனெனின், வேதாந்த சம்பிரதாயத்தை யறிந்தவர்கள் பிரமாஞானத்தை ஆறு விதமாகக் கூறியிருக்கின்றனர். அவற்றில் ஸ்மிருதிஞான மில்லாமையால் அது * பிரமையன்று. மதுசூதனஸ்வாமிகள் ஸ்மிருதிஞானம் சாக்ஷியை யாசிரயித்ததென்றே சொல்லி யிருக்கிறார்கள்.

**199.** இப்போது அவ்வாறுவிதப்பிரமைகளைச் சொல்லுகிறேன். அவை 1. பிரத்தியக்ஷப்பிரமை, 2. அனுமிதிப்பிரமை, 3. உபமிதிப்பிரமை, 4. சாப்திப்பிரமை, 5. அர்த்தாபத்திப்பிரமை, 6. அபாவப்பிரமை யென்பனவாம்.

---

* இங்கு இது விவேகமாம்:—

1. பிரமரூபமான அநுபவத்தின் சம்ஸ்காரத்தாலுண்டாகும் ஸ்மிருதி பாதிக்கப்படும் அர்த்தத்தை விஷயமாக்குவதா யிருத்தலால் யதார்த்தமாகா திருக்கிறது. இதனாலேயே அது அவித்தையின் விருத்தியாம். அந்தக்கரணத்தின் விருத்தியன்று; சாக்ஷியை ஆசிரயித்திருக்கிறது; பிரமாதாவை யாசிரயித்தில்லை.

2. யதார்த்த அனுபவத்தின் ஸம்ஸ்காரத்தா லுண்டாகும் ஸ்மிருதிஞானம் பாதிக்கப்படாத அர்த்தத்தை விஷயமாக்குவதா யிருத்தலின் யதார்த்தஞானமாயிருக்கிறது. இதனாலேயே அது அந்தக்கரண விருத்தியாம்; அவித்தியா விருத்தியன்று. பிரமாதாவை யாசிரயித்திருக்கிறது; சாக்ஷியை யாசிரயிக்க வில்லை.

ஆனால் முன்னோர்கள் ஸ்மிருதி ஞானத்தைப் பிரமையாக வியவகரிக்கவில்லை. ஆகையால் இரண்டுவித ஸ்மிருதிகளும் அப்பிரமைகளாம. அவற்றில் அயதார்த்தஸ்மிருதி அயதார்த்த அப்பிரமையாம். யதார்த்த ஸ்மிருதி யதார்த்த அப்பிரமையாம். இவ்வளவு பேதமுண்டு.

முன் சொன்ன பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்கள் இவற்றிற்கு முறையே கரணங்களா யிருக்கின்றன.

பிரத்தியக்ஷப்பிரமையின் கரணம் பிரத்தியக்ஷப்பிரமாணமென்று சொல்லப்படும்.

1. அசாதாரணகாரணமே * கரண மெனப்படும்.

2. சகல காரியங்களுக்கும் காரணமாயிருப்பது சாதாரண காரண மெனப்படும்.

1. தர்மாதர்ம முதலியன சகல காரியங்களுக்குங் காரணமாகையால் சாதாரண காரணமாம்.

2. எல்லாக் காரியங்களுக்கும் காரணமாகாமல் யாதேனுமோர் காரியத்திற்குக் காரணமாவது அசாதாரண காரண மெனப்படும். அது தண்டம் ஸகல காரியங்களுக்குங் காரணமாகாமல் கடாதிகாரிய விசேஷங்களுக்குக் காரணமாவதால் கடத்தின் அசாதாரண காரணமென்றும் கரணமென்றுஞ் சொல்லப்படுவது போலாம்.

1. அதுபோலப் பிரத்தியக்ஷப் பிரமைக்கு ஈசுவரனும் ஈசுவரனுடைய இச்சை † முதலியவைகளும் சாதாரண காரணங்களாம். ஏனெனின், ஈசுவரன் முற்கூறிய கரணத்தின் லக்ஷணம் பிரத்தியக்ஷம் அநுமானம் சப்தம் என்னும் மூன்று பிரமாணங்களிலும் பொருந்துமாயினும் உபமானம் அர்த்தாபத்தி அநுபலப்தி என்னும் மூன்று பிரமாணங்களும் உவமிதி முதலிய பிரமைகளின் நிர்வியாபார (வியாபாரமின்றிய) காரணங்களாம். அவற்றில் முற்கூறிய கரணத்தினது லக்ஷணத்திற்கு அவ்வியாப்தியுண்டாம். ஆதலால் "வியாபாரத்தின் வேறாகிய அசாதாரண காரணம் கரண மெனப்படும்" என்னும் கரணலக்ஷணம் தோஷமின்றியதாம். ஏனெனின், சிலவிடத்து வியாபாரமுளது; சிலவிடத்து வியாபாரமில்லை; இரண்டிடங்களிலும் வியாபாரத்தினும் வேறுதற்றன்மை யிருத்தலால்.

* 1. கேவல அசாதாரண காரணத்தைக் கரணமெனின், எங்கு இரண்டு அசாதாரண காரணமுளவாகின்றனவோ அங்கு எந்தக் காரணம் கரணமாமென்னும் நிச்சயமுண்டாகாது. ஆதலால் இரண்டு காரணங்களினின்றும் ஒன்றை வியாபார வடிவமாகக் கொண்டு எஞ்சி நின்ற மற்றக்காரணம் எதுவோ அந்த வியாபாரமுடைய அசாதாரண காரணம் கரண மெனப்படுகின்றது.

2. எது காரியத்தை ஒன்றன் வாயிலாக உண்டுபண்ணுகிறதோ அது வியாபாரமுடைய காரண மெனப்படுகின்றது. அதுவே கரணமாம். எங்ஙனம்: கபாலம் சையோக வாயிலாகக் கடத்தை யுண்டுபண்ணுகிறது. அதனால் கபாலம் கடத்தின் வியாபாரமுடையகாரணமாம். அதுவே கடத்தின் கரணமுமாம்.

3. எது காரியத்தை ஒன்றன் வாயிலாக உண்டுபண்ணாது நேரே யுண்டுபண்ணுகிறதோ அது கேவல காரணமாம்; கரணமன்று. எங்ஙனம்: இரண்டு கபாலங்களின் சையோகம் கடத்தை நேரே உண்டுபண்ணுகின்றது. ஆதலால் அது கடத்தின கேவல காரணமாம்; கரணமன்று.

† முதலியவென்னும் சப்தத்தால் ஈசுவரனுடைய ஞானம், ஈசுவரனுடைய பிரயத்தினம், காலம், திக்கு, அதிருஷ்டம், பிராகபாவம், ப்ரதிபந்தகாபாவம் என்னு மிவ்வேழும் கொள்ளப்படும். இவ்வொன்பதும் சர்வகாரியங்களின் சாதாரண காரணங்களாம்.

முதலியன சகல காரியங்களுக்கும் காரணங்களாம். அவையின்றி ஒரு காரி யமு முண்டாகிறதில்லை. ஆதலால் ஈசுவராதிகள் சாதாரணகாரணங்களாம்.

2. நேத்திரமுதலிய இந்திரியங்கள் பிரத்தியக்ஷப் பிரமையின் அசாதார ண காரணங்களாம். ஆகையால் அவை பிரத்தியக்ஷப் பிரமையின் கரணங்க ளாம். இவ்விதமாக நேத்திராதி இந்திரியங்கள் பிரத்தியக்ஷப்பிரமாணங்க ளெனப்படுகின்றன.

## 200. பிரமாதா பிரமாண பிரமிதி பிரமேய சேதனங்கள்.

வேதாந்த சித்தாந்தத்தில் இந்திரியத்தைப் பிரமாஞானத்துக்குக் கார ணமாகச் சொல்லுவது பொருந்தாது. ஏனெனின் சேதனத்திற்கு நான்கு பேதமுண்டு:—1. பிரமாதா சேதனம். 2. பிரமாணசேதனம். 3. பிரமிதிசே தனம்; அதனையே பிரமாசேதனமென்பர். 4. பிரமேயசேதனம்; அதனையே விஷயசேதனமென்பர். இவ்விதத்தால் பிரமையென்பது சேதனத்திற்காம். அச்சேதனம் நித்தியமாம்; இந்திரிய ஜந்நியமன்று. ஆதலால் இந்திரியம் அதற்குக் காரணமன்று. அங்ஙனமாயினும் சேதனத்தில் பிரமாவியவகார த்தைச் சம்பாதிக்கும் விருத்தியும் பிரமையெனப்படுகின்றது. அவ்விருத் திக்கு இந்திரியம் கரணமாம்.

1. தேகத்தின் மத்தியிலுள்ள அந்தக்கரணத்தால் அவச்சின்னமான (வளைபட்ட) சேதனம் பிரமாதா எனப்படும்.

2. அவ்வந்தக்கரணமே நேத்திராதி இந்திரியவாயிலாக வெளிப்பட்டு எதுவரையில் கடாதி விஷயங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவு வரையில் நீண்ட பரிணாம மாகின்றது. மேல் விஷயங்களாகிய கடாதிகளோடு சேர்ந்து கடாதிகளின் வடிவம் எப்படியோ அப்படியே அந்தக்கரணத்தின் ஆகார முண்டாகின்றது. குளத்தினுள்ள ஜலம் மடைவழியாய்ப் புறப்பட்டு நீண்ட வாய்க்கால் வடிவடைந்து வயலிற் செல்லுகின்றது. வயலிற் பாய்ந்து வயலா காரத்தை யடைகிறது. அதுபோல அந்தக்கரணமும் இந்திரியமாகிய துவா ரத்தின் வழியாய் வெளியே சென்று விஷயரூபமான வயலையடைகிறது. அங் குச் சரீரமுதல் கடாதி விஷயம் வரையிலுள்ள அந்தக்கரணத்தின் வாய்க் கால்போன்ற நீண்டபரிணாம மெதுவோ யதனை விருத்திஞானமென்பர். அத னால் அவச்சின்னமான சேதனத்துக்குப் பிரமாணசேதனமென்று பெயர்.

3. விருத்திஞானரூப அந்தக்கரண பரிணாமத்தைப் பிரமாணமென்பர். வயலிற் பாய்ந்தஜலம் வயலாகார மாவதுபோலக் கடாதி விஷயத்தில் விரு த்திசென்று கடாதிகளின் சமானாகாரத்தை யடைகிறது. இச்சமானாகாரத் தால் அவச்சின்னமான சேதனத்துக்குப் பிரமாசேதனமென்று பெயர்.

4. ஞானத்துக்கு விஷயமான கடாதிகளால் அவச்சின்னமான சேத னத்தை விஷயசேதனம் அல்லது பிரமேயசேதனமென்பர். இவை வேதாந்த் தமறிந்த ஆசாரியர்களுடைய பரிபாஷைகளாம்.

## 201. அவச்சேத வாதத்தின்படி பிரமாதா சாக்ஷிகளோடு விசேஷண உபாதிகளின் லக்ஷணம்.

இதில் இவ்வளவு பேதமாம்:—அவச்சேதவாதம் கொள்ளுவோர் மதத்திலோ,

1. அந்தக்கரண விசிஷ்டசேதனம் பிரமாதாவாம். அதுவே கர்த்தா போக்தாவாம்.

2. அந்தக்கரண உபஹித சேதனம் சாக்ஷியாம். ஒரே அந்தக்கரணம் பிரமாதாவுக்கு விசேஷணமாயும் சாக்ஷிக்கு உபாதியாயுமிருக்கிறது.

சொரூபத்தில் எதற்குப் * பிரவேசமுண்டோ அத்தன்மைய வியாவர்த்தக (வேறுபிரித்தறிவிக்கும்) வஸ்து விசேஷண மெனப்படும்.

மற்றப் பதார்த்தங்களி னின்றும் வேறுபடுத்தி வஸ்துவின் ஸ்வரூபத்தை யறிவிப்பது எதுவோ அது வியாவர்த்தக மெனப்படும்.

எது வேறுபடுத்தி அறியப்படுகிறதோ அது வியாவர்த்திய மெனப்படும்.

"நீலகட" மென்பதில் கடத்தின் நீலவர்ணம் விசேஷணமாம். ஏனெனின், நீலகடத்தில் நீலவர்ணம் பிரவேசித்து மஞ்சள் வெண்மைமுதலிய வர்ணங்களுடன் கூடிய கடங்களினின்றும் வேறுபடுத்தி இந்நீலகடத்தை யறிவிக்கிறது. ஆகையால் நீலவர்ணம் வியாவர்த்தகமாம்; அதனால் விசேஷணமாம்; கடம் பரிச்சேத்தியமாம். ஏனெனின், மஞ்சள் முதலிய வர்ணங்களுடன்கூடின கடங்களினின்றும் வேறுபடுத்தப்பட்டு இந்நீலகடம் அறியப்படுகிறது.

வேறுபடுத் தறியப்படும் பதார்த்தம் பரிச்சேத்திய மென்றும் வியாவர்த்தியமென்றும் விசேஷியமென்றும் சொல்லப்படும். "தண்டிபுருஷன்" என்பதிலும் புருஷனுக்குத் தண்டம் விசேஷணமாம்.

இவ்விதமாகப் பிரமாதாவுக்கு அந்தக்கரணம் விசேஷணமாம். ஏனெனின், பிரமாதாவின் ஸ்வரூபத்தில் அந்தக்கரணத்தின் பிரவேசமிருத்தலால் பிரமேய சேதனத்தினின்றும் பின்னப்படுத்திப் பிரமாதாவின் ஸ்வரூபத்தை யறிவித்தலால் அந்தக்கரணம் வியாவர்த்தகமாம்.

எது வஸ்துவின் ஸ்வரூபத்தில் † பிரவேசியாமல் வியாவர்த்தகமா யிருக்கிறதோ அது உபாதி யெனப்படும்.

1. நையாயிக மதத்தில் கர்ணகோளகத்தால் வளைபட்ட ஆகாசம் சுரோத்திர மெனப்படும். இவ்விடத்தில் கர்ணகோளகம் சுரோத்திரத்துக்கு உபாதியாம். ஏனெனின், சுரோத்திரத்தின் ஸ்வரூபத்திற் கர்ணகோளகம் பிரவேசியாமல் வெளியிலுள்ள ஆகாசத்தினின்றும் சுரோத்திரத்தை வேறுபடுத்தி யறிவிக்கிறது. ஆகையால் கோளகம் வியாவர்த்தகமாம்.

---

* காரியத்துடன் சம்பந்தமுடையது.

† ஆசிரயத்திற்குக் காரியத்திற் சம்பந்தமில்லாமை பிரவேசியாமையாம்.

2. கடாகாசம் மணங்கு அளவு அன்னத்திற்கு அவகாசம (இடம்) கொடுக்கிறது என்னுமிடத்திலும் ஆகாசத்திற்குக் கடம் உபாதியாம். ஏனெனின், மணங்கு அன்னத்திற்கு அவகாசங் கொடுக்கும் ஆகாசத்தின் ஸ்வரூபத்தில் கடத்தின் பிரவேசமில்லை. கடம் பிருதிவியின் காரியம். அதன்கண் அவகாசங் கொடுத்தல பொருந்தாது. ஆதலால் கடத்திற்குச் சொரூபத்தில் பிரவேசம் பொருந்தாது; வியாபக ஆகாசத்தினின்றும் வேறுபடுத்தறிவிக்கின்றது. ஆதலால் மணங்கு அன்னத்திற்கு அவகாசந் தருவதாகிய ஆகாசம் எதுவோ அதற்குக் கடம் உபாதியாம்.

அதுபோல அந்தக்கரண உபஹிதசேதனம் சாக்ஷியா மென்னுமிடத்தில் அந்தக்கரணம் சாக்ஷிக்கு உபாதியாம். ஏனெனின், சாக்ஷியின் ஸ்வரூபத்தில் அந்தக்கரணத்தின் பிரவேசமில்லை. பிரமேய சேதனத்தினின்றும் சாக்ஷியை வேறுபடுத்தி யறிவிக்கிறது. ஆகையால் ஒரே அந்தக்கரணம் சாக்ஷிக்கு உபாதியும் பிரமாதாவுக்கு விசேஷணமுமாம். இவ்விதத்தால,

1. அந்தக்கரண உபஹிதசேதனம் சாக்ஷியாம்.

2. அந்தக்கரண விசிஷ்டசேதனம் பிரமாதாவாம்.

1. உபாதியுடையது உபஹித மெனப்படும்.

2. விசேஷணமுடையது விசிஷ்ட மெனப்படும்.

அந்தக்கரண விசிஷ்டப்பிரமாதாவே கர்த்தா போக்தாவும் சுகியும் துக்கியுமான சமுசாரி ஜீவனும்.

இது அவச்சேதவாதத்தின் கிரமமாம்.

## 202. ஆபாஸவாதத்தின்படி ஜீவன் சாக்ஷிமுதலியவற்றின் லக்ஷணம்.

1. ஆபாஸவாதத்தில் ஆபாஸஸஹித அந்தக்கரணம் ஜீவனது விசேஷணமாம்.

2. ஆபாஸசகித அந்தக்கரணம் சாக்ஷிக்கு உபாதியா யிருக்கிறது. ஆகையால்,

1. ஆபாஸஸஹித அந்தக்கரண விசிஷ்டசேதனம் ஜீவனும்.

2. ஆபாஸஸஹித அந்தக்கரண உபஹித சேதனம் சாக்ஷியாம்.

இரண்டு பக்ஷங்களிலும் விசேஷணசகிதசேதனம் ஜீவனும். அதுவே சமுசாரியாம். அங்ஙனமாயினும், விசேஷிய பாகமான சேதனத்தில் ஜனன மரண முதலிய சமுசாரம் சம்பவிக்கிறதில்லை. ஆகையால் விசேஷண மாத்திரத்தில் சமுசாரம் சம்பவிக்கிறது. அதுவே விசிஷ்ட சேதனத்தில் பிரதீதியாகின்றது.

1. சிலவிடங்களில் விசேஷணத்தினது தர்மங்களின் வியவகாரம் விசிஷ்டத்திலுண்டாகின்றது.

2. சிலவிடங்களில் விசேஷ்ய தர்மங்களின் வியவகாரம் விசிஷ்டத்தி லுண்டாகின்றது.

3. சில விடங்களில் விசேஷண விசேஷ்ய மிரண்டினது தர்மங்களின் வியவகாரம் விசிஷ்டத்திலுண்டாகின்றது.

1. தடியால கடாகாசம் நசிக்கிறது என்னுமிடத்தில் விசேஷணமான கடம் தடியால் நாசமடைகிறது; விசேஷ்யமான ஆகாசம் நசிக்கிறதில்லை. என்றாலும் விசிஷ்டமான கடாகாசத்தின் நாசம் பிரதீதியாகிறது.

2. "குண்டல புருஷன் தூங்குகிறான்" என்னுமிடத்தில் குண்டலம் விசேஷணமாம்; புருஷன் விசேஷ்யமாம். விசேஷணமான குண்டலத்தில் தூங்குதல் பொருந்தாது. ஆனால் விசேஷ்யமான புருஷனிடத்தில் தூங்குத லுளது; குண்டல விசிஷ்டன் தூங்குகிறான் என்று விசிஷ்டத்தில் வியவஹார முண்டாகிறது.

3. "ஆயுதபாணியான புருஷன் யுத்தத்துக்குப்போயிருக்கிறான்" என் னுமிடத்தில் விசேஷணமான ஆயுதமும் விசேஷ்யமான புருஷனும் யுத்தத் துக்குப் போயிருத்தலால் இவ்விரண்டினது தர்மங்களின் வியவஹாரம் விசி ஷ்டத்திற் காணப்படுகின்றது.

இந்த இடத்தில்,

1. அவச்சேத வாதத்தில் அந்தக்கரணம் விசேஷணமாம்.

2. ஆபாஸவாதத்தில் ஆபாஸ சகித அந்தக்கரணம் விசேஷணமாம்.

இரண்டு பக்கங்களிலும் சேதனம் விசேஷ்யமாம்; அதனிடத்தில் ஜன்மா திசமுசாரஞ்சம்பவியாது; ஆனால் விசேஷணமான அந்தக்கரணத்தின் அல்லது ஆபாஸசகித அந்தக்கரணத்தின் தர்மமாகிய ஜன்மாதி சமுசாரம் எதுவோ, அது விசிஷ்டசேதனத்தில் * வியவகரிக்கப்படுகிறது. வியவகாரம் என்பது தோற்றுதற்கும் சொல்லுதற்கும் பெயராம். இதுவே ஆபாஸவாத அவச்சேத வாதங்களின் பேதமாம்.

## 203. ஆபாஸவாதத்தின் மேன்மை.

ஆபாஸவாதத்தில் அந்தக்கரணம் ஆபாஸஸஹிதமாயும் அவச்சேதவாத த்தில் அந்தக்கரணம் ஆபாஸரகிதமாயும் இருக்கிறது. இவ்விரண்டிலும் ஆபாஸவாதம் சிரேஷ்டமாம். ஏனெனின்,

1. பாஷ்யகாரரால் ஆபாஸவாதம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

2. அவச்சேதவாதத்தில் வித்தியாரண்ய ஸ்வாமிகள் தோஷமுஞ் சொல் லியிருக்கிறார்கள். அதாவது, ஆபாஸ ரகிதமான அந்தக்கரண அவச்சின்ன

* அவிவேகிகளால் அந்தக்கரணமாகிய விசேஷணத்தின் தர்மவடிவ சம்சாரத்தின் வியவகாரம் அஞ்ஞானத்திலாகிய பிராந்தியினால் விசேஷணத்தோடுகூடிய சேதனத்திற் செய்யப்படுகின்றது.

சேதனத்தைப் பிரமாதாவாகக் கொள்ளின் கடாவச்சின்ன சேதனமும் பிரமாதாவாதல் வேண்டும். ஏனெனின்,

(1) எப்படி அந்தக்கரணம் பூதங்களின் காரியமோ, அப்படியே கடமும பூதங்களின் காரியமாம்.

(2) எப்படி அந்தக்கரணம் சேதனத்தின் அவச்சேதகமோ அதாவது வியாவர்த்தகமோ, அப்படியே கடமும் சைதன்னியத்தின் அவச்சேதகமாம்.

ஆதலால், அந்தக்கரண விசிஷ்டம்போலக் கடவிசிஷ்டமும் பிரமாதாவாதல் வேண்டும்.

அந்தக்கரணத்தில் ஆபாஸத்தை யங்கீகரிக்கின் இந்தத் தோஷமில்லை. ஏனெனின்,

1. அந்தக்கரணம் பூதங்களின் சத்துவகுண காரியமாம்; ஆதலால் ஸ்வச்சமாம். கடாதிகள் பூதங்களின் தமோகுணகாரியமாம்; ஆதலால் ஸ்வச்சமன்று. எது ஸ்வச்சமாயிருக்கிறதோ அதில் ஆபாஸம் அல்லது பிரதிபிம்பம் உண்டாகும். மலினபதார்த்தத்தில் ஆபாஸ முண்டாகமாட்டாது. கண்ணாடியும் அதன் மூடியும் மண்ணாலானவையாயினும் கண்ணாடி ஸ்வச்சமா யிருத்தலால் அதில் முகத்தின் ஆபாஸமுண்டாகிறது. மூடி ஸ்வச்சமில்லாததால் அதில் ஆபாஸமுண்டாகிறதில்லை.

2. அதுபோல அந்தக்கரணம் சத்துவகுணமா யிருத்தலால் ஸ்வச்சமாம்; அதில் சேதனத்தினுபாசமுண்டாகிறது. சரீர முதலியனவும் கடமுதலியனவும் தமோகுண காரியமாயிருத்தலால் ஸ்வச்சமன்று. அவற்றில் சேதனத்தின் ஆபாஸ முண்டாகிறதில்லை.

## 204. அந்தக்கரணத்தில் இருவகைப் பிரகாசங்களிருத்தலால் அதுவே பிரமாதாவாம்; பிறவன்று எனல்.

இவ்விதத்தால் அந்தக்கரணத்தில் இருவகைப் பிரகாசங்களுள. ஒன்று வியாபக சேதனத்தின் பிரகாசம்; மற்றொன்று ஆபாஸத்தின் பிரகாசம்.

சரீரம் கடமுதலியவற்றில் ஒரு வியாபக சேதனத்தின் பிரகாசம் இருக்கிறது; இரண்டாவது ஆபாஸத்தின் பிரகாசமில்லை. ஆகையால் இருவகைப் பிரகாசங்களோடு கூடிய அந்தக்கரண விசிஷ்டசேதனமே பிரமாதா வெனப் படுகிறது.

ஒரு பிரகாசஸஹித கடாதிகளுடன் கூடிய சேதனம் பிரமாதாவன்று. எவர்கள் மதத்தில் அந்தக்கரணத்தில் ஆபாஸனில்லையோ, அவர்கள் மதத்தில் கடாதிகளிற்போல அந்தக்கரணத்திலும் ஆபாஸத்தின் இரண்டாவது பிரகாசமில்லை. வியாபக சேதனத்தின் ஒரு பிரகாசம் எது அந்தக்கரணத்திலிருக்கின்றதோ, அதே வியாபகமான சேதனத்தின் பிரகாசம் கடமுதலியவற்றிலுமிருக்கிறது. ஆகையால் அந்தக்கரண விசிஷ்டம்போலக் கடவிசிஷ்ட

சரீரவிசிஷ்ட சுவர்விசிஷ்ட சேதனங்களும் பிரமாதாவாதல் வேண்டும். இவ் விதமாகக் கடசரீராதிகளினும் அந்தக்கரணத்தில் இவ்விலக்ஷணத்தன்மையே யுளது.

1. அந்தக்கரணம் சத்துவகுண காரியமா யிருத்தலால் ஸ்வச்ச (சுத்தமா) யிருக்கிறது. ஆகையால் ஸ்வச்சமா (பளபளப்புள்ளதா) யிருத்தலால் அது சேதனத்தின் ஆபாஸத்தைக் கிரகிக்கத்தக்கதா யிருக்கிறது.

2. அந்நிய பதார்த்தங்கள் ஸ்வச்சமாகாமையால் ஆபாசத்தைக் கிரகிக்கத்தக்கவையன்று.

1. ஆபாஸத்தைக் கிரகிக்கத்தக்க அந்தக்கரணத்துடன் கூடிய சேதனமே **பிரமாதா** வெனப்படும்.

2. கடசரீராதிகள் ஆபாஸத்தை கிரகிக்கத்தக்கவையன்று. ஆதலால் அவற்றோடு கூடியசேதனம் பிரமாதாவன்று. இவ்விதத்தால் ஆபாஸவாதமே சிரேஷ்டமாம்; அவச்சேதவாதம் சிரேஷ்டமன்று.

## 205. பிரமாதாமுதலிய நான்கு சேதனங்களின் ஸ்வரூபம்.

அந்தக்கரணம் ஆபாஸஸஹிதமா யிருப்பதுபோல அந்தக்கரண விருத்தியும் ஆபாஸஸஹிதமாகவே யுண்டாகிறது. ஆபாஸஸஹித விருத்தி விசிஷ்ட சேதனம் பிரமாணசேதன மெனப்படும்.

கடாதி விஷயாகாரமாகும் அந்தக்கரணத்தின் விருத்தியில் ஆரூடமான சேதனம் **பிரமா** அல்லது **யதார்த்தஞான** மென்று சொல்லப்படும்.

அதற்குச் சாதனமான இந்திரியம் **பிரமாண**மென்று சொல்லப்படும். ஏனெனின், விஷயாகாரவிருத்தியில் ஆரூடமான சேதனம் பிரமையெனப்படுகிறது. அங்குச் சேதனம் ஸ்வரூபமாக நித்தியமாயிருத்தலால் இந்திரிய ஜந்நியமன்று. ஆதலால் பிரமா சேதனத்துக்கு இந்திரியம் சாதனமன்று. அங்ஙனமாயினும் உபாதியில்லாத சேதனத்தில் பிரமாவியவகார மில்லை: ஆனால் விஷயாகார விருத்தி யுபஹித சேதனத்தில் பிரமா வியவகார முண்டாகிறது. ஆகையால் சேதனத்திற் பிரமா சப்தத்தின் பிரவிருத்தியில் விஷயாகார விருத்தி உபாதியாம். அந்த விஷயாகார விருத்தி இந்திரிய ஜந்நியமாம். இந்திரியம் அதற்குச் சாதனமாம்.

பிரமாத்தன்மையின் உபாதியாகிய விருத்தி இந்திரிய ஜந்நியமா யிருத்தலால் உபஹிதமான பிரமையும் இந்திரியஜந்நிய மெனப்படுகிறது. ஆகை

---

* ஆபாஸவாதத்தில் ஆபாஸனது கற்பனை அதிகமாய்ச் செய்யவேண்டியதாகிறது; அது அவச்சேதவாதத்தி லில்லையாகலின் ஆபாஸவாதத்தில் கௌரவமுண்டு. அவச்சேதவாதத்தில் இலாகவ முண்டு. அங்ஙனமாயினும், மந்த புத்தியுடைய ஜிஞ்ஞாஸுவின் புத்தியில் ஆபாஸவாதத்தின் ஆரோபம் செவ்வையாய்ப் பதியுமென்னும் அபிப்பிராயத்தால் இங்கு ஆபாஸவாதத்தின் ஸ்துதி செய்யப்பட்டிருக்கிறது. பாஷியகாரர் முதலியோருக்கும் இதுவே தாற்பரியமாம்.

யால் இந்திரியம் பிரமைக்குச் சாதன மெனப்படுகிறது. ஆனால் அந்தக்கரணத்தின் பரிணாமங்கள் முழுவதும் பிரமை யெனப்படுவதில்லை. சரீரத்திற்குள்ளிருக்கும் அந்தக்கரணம் விஷயமாகிற கடாதிகள் வரையில் பரிணமிக்கின்றது. அந்தப் பரிணாமத்தை பிரமாண மென்பர்.

விஷயத்துடன் சேர்ந்து விஷயசமானாகாரமாகும் அந்தக்கரணத்தின் பரிணாமம் பிரமை யெனப்படும். சரீரத்தினுள்ளிருக்கும் அந்தக்கரணமுதல் கடாதிவிஷயம்வரையில் நீண்டிருக்கிற அந்தக்கரணத்தின் பரிணாமம் பிரமைவடிவத்தைத் தரிக்கின்றது. ஆதலால் பிரமைக்கும் பிரமாணரூப அந்தக்கரண விருத்திக்கும் அதிக பேதமில்லை.

1. இவ்விதத்தால் வெளியிலுள்ள பதார்த்தங்களின் பிரத்தியக்ஷ ஞான முண்டாகுமிடத்து, அந்தக்கரண விருத்தி வெளியிற் சென்று விஷயமாகிற கடாதிகளுக்குச் சமானமான ஆகாரத்தைத் தரிக்கிறது.

2. சரீரத்தினுள்ளிருக்கிற ஆத்மாவின் பிரத்தியக்ஷ ஞான முண்டாகும்போது அந்தக்கரணவிருத்தி வெளியிற் போகாமல் சரீரத்தினுள்ளேயே ஆத்மாகாரமாகிறது.

1. அந்த விருத்தியால் ஆத்மாவை யாசிரயித்த ஆவரணம் நீங்குகிறது.

2. ஆத்மா தன் பிரகாசத்தால் விருத்தியில் பிரகாசிக்கிறது. இக்காரணத்தால் ஆத்மா விருத்தியின் விஷயமென்று சொல்லப்பட்டிருக்கிறது. விருத்தியிலுள்ள சிதாபாஸரூப பலத்துக்கு ஆத்மா விஷயமாகிறதில்லை.

இந்தப் பிரகாரத்தால் சாக்ஷியாகிய ஆத்மா ஸ்வயம்பிரகாசரூபமாய் விளங்குகிறதென்பது சித்தித்தது.

### 206. பிரசினம்—இந்திரிய சம்பந்தமின்றி "அகம் பிரஹ்மம்" என்னும் ஞானம் எங்ஙனம் பிரத்தியக்ஷமாகும்? எனல் (206—210.) தத்துவ திருஷ்டி கேட்கின்றார்.

"பிரஹ்மத்தின் அபரோக்ஷ ஞானத்தால் சகல அவித்தியா சமூகங்களும் நாசமாகின்றன; பரோக்ஷ ஞானத்தால் ஆகிறதில்லை." யென்பது முன் சொல்லப்பட்டது. அதிற் சங்கை செய்வாம்:— பிரஹ்மத்தின் ஞானம் பிரத்தியக்ஷமாகாது. ஏனெனின், இந்திரிய ஜந்நிய ஞானம் பிரத்தியக்ஷமாகும்; பிரஹ்மத்தின் ஞானம் இந்திரிய ஜன்னியமாகாது.

### 207. 1. பிரஹ்மம் நேத்திரத்திற்கு விஷயமாகாமை. (இராமகிருஷ்ணரியரின் சரீரம் பிரஹ்மமன்று.)

ஏனெனின், 1.நேத்திரேந்திரியத்தால் ரூபமுடையதின் அல்லது நீலமுதலிய வர்ணங்களின் ஞானமுண்டாகிறது. பிரஹ்மம் இத்தன்மையதன்று. ஆதலால் நேத்திரேந்திரிய ஜந்நிய ஞானம் பிரமத்தினதாகாது.

ராமகிருஷ்ணாதிகளின் மனுஷியாகார மூர்த்திகள் ரூபமுடையனவாயினும், அந்த மூர்த்திகள் மாயையா லாக்கப்பட்டனவாய் மித்தையா யிருக்கின்றன; அம்மூர்த்திகள் பிரஹ்மமன்று.

புராணங்களில் ராமகிருஷ்ணாதிகளுக்குப் பிரஹ்மரூபஞ் சொல்லப்பட்டிருக்கிறது, அது அவர்களுடைய சரீரரூப மூர்த்தியே பிரஹ்மமென்னும் அபிப்பிராயத்தாற் கூறியதன்று. ஆனால் அவர்களுடைய சரீரங்களுக்கு அதிஷ்டானமான சேதனம் பிரஹ்மமா மென்பது புராணங்களின் அபிப்பிராயம்.

இதில் இச்சங்கையுண்டாகின்றது:— எல்லாச் சரீரங்களுக்கும் அதிஷ்டான சேதனம் பிரஹ்மம். ஆகையால், அதிஷ்டான சேதன அபிப்பிராயத்தால் ராமகிருஷ்ணாதிகளுக்குப் பிரஹ்மத்துவம் சொல்லி யிருக்குமாயின், எல்லாச் சரீரங்களுக்கும் அதிஷ்டானசேதனம் பிரஹ்ம மாதலால் மனுஷ்ய பசு, பக்ஷி, முதலிய சகலமும் பிரஹ்ம ரூபமாகும். அவற்றிற்குச் சமானமாகவே ராமகிருஷ்ணாதிகளு மாவர். ஆகையால் ராமகிருஷ்ணாதிகளின் அதிஷ்டான சேதனம் "பிரஹ்மம்" என்னும் அபிப்பிராயத்தால் பிரஹ்மரூபத்துவஞ் சொல்லவில்லை. ஆனால் மற்ற ஜீவர்களினும் விசேஷரூபத்தன்மை சித்தித்தற்பொருட்டு அவர்களது சரீரமே பிரஹ்மமென்று நினைத்தல் தகுதியாம்.

அது பொருந்தாது. ஏனெனின், சரீரத்தைப் பாதித்து அவர்களது சரீரத்தைப் பிரஹ்ம ரூபமாகக்கொள்ளின்,

1. சகல சரீரங்களையும் பாதித்துச் சகல சரீரமும் பிரஹ்மரூபமாம்.

2. பாதஞ்செய்தலின்றியோ அந்நிய சரீரத்தைப்போல கைகால்முதலிய அவயவங்களோடுகூடியதும் ரூபமுடையதும் கிரியையுடையதுமான சரீரத்திற்கு நிரவயவமும் ரூபமில்லாததும், கிரியையில்லாததுமான பிரஹ்மத்தோடு அபேதம் பொருந்தாது. ஆதலால் இராமகிருஷ்ணாதிகளின் சரீரம் பிரஹ்மமன்று. ஆனால்,

இவ்வளவு பேதமுண்டு:—ஜீவர்களுடைய சரீரம் (1) புண்ணிய பாபங்களின் அதீனமாம்; (2) பூதங்களின் காரியமாம்; (3) ஜீவர்க்குத் தேகாதி அநாத்மபதார்த்தங்களில் அவித்தியாபலத்தினால் நான் எனது என்னும் அத்தியாஸமுளது, அந்த அத்தியாஸம் ஆசாரியருடைய உபதேசத்தால் நிவிருத்தியாகிறது.

1. ராமகிருஷ்ணாதியரின் சரீரங்கள் அவர்களது புண்ணியபாபங்களாலுண்டானவையன்று; பூதங்களின் காரியமன்று.

ஆனால்,

(1) சிருஷ்டிக்குமுன் பிராணிகளது கர்மபோகங்களைக் கொடுக்க எதிர்முகமாகும்போது ஆப்தகாமரான ஈசுவரனிடத்திலும் பிராணிகளது கர்

மாநுசாரமாக "நான் ஜகத்தை யுண்டுபண்ணுவேனாக" என்னும் சங்கற்பமு ண்டாகிறது. அச்சங்கற்பத்தினால் ஜகத்தினுற்பத்திவடிவ சிருஷ்டி யுண்டாகிறது.

(2) அப்படியே சிருஷ்டிக்குப் பிறகும் "நான் ஜகத்தைப்பாலனம் பண் ணுவேனாக" என்னும் சங்கற்பம் ஈசுவரனுக்குண்டாகிறது. அந்தச் சங்கற் பத்தால் ஜகத்து ரக்ஷிக்கப்படுகிறது.

கர்மாநுசாரமாகச் சுகதுக்கத்தின் சம்பந்தம் பாலன மெனப்படும்.

(3) அப்பாலன சங்கற்பத்தினிடையில் உபாஸக புருஷர்களுடைய உபாஸனை பலத்தினால் "ராமகிருஷ்ணாதி நாமசகித மூர்த்திகள் எல்லோருக் கும் பிரதீதியாகுக" என்னும் சங்கற்பம் ஈசுவரனுக்குண்டாகிறது. அந்த ஈசுவர சங்கற்பத்தினால் விசேஷ நாமரூபங்களில்லாத ஈசுவரனிடத்தில் ராம கிருஷ்ணாதி நாமங்களும், பீதாம்பரதரம் முதலிய கரிய சுந்தரவிக்கிரகமான ரூபங்களும் உற்பத்தியாகின்றன. அவ்விக்கிரகங்கள் கர்மாதீனமன்று.

ராமகிருஷ்ணாதி விக்கிரகங்களால் சாதுக்களுக்கும் துஷ்டர்களுக்கும் முறையே சுகமும் துக்கமும் உண்டாகின்றன. எது எவனுடைய சுகதுக்கங் களுக்கு ஏதுவாயிருக்கிறதோ, அது அவனுடைய புண்ணிய பாபங்களாலாக் கப்பட்டதாம். ஆகையால், அது புண்ணிய பாபங்களின் அதீனமாகச்சொல் லப்படுகிறது. அவ்விதத்தால்,

1. அவதாரங்களின் சரீரங்கள் சாதுக்களுடைய சுகத்துக்கு ஹேது வாதலால் சாதுக்களின் புண்ணிய சமுதாயத்தா லாக்கப்பட்டுள்ளன.

2. அசுராதி துஷ்டர்களுக்குத் துக்கத்திற்கு ஹேதுவா யிருத்தலால் அவர்களது பாபத்தினாலுண்டாகியனவாம். ஆகையால் "அவதாரங்களின் சரீ ரங்கள் புண்ணிய பாபங்களின் அதீனமன்று" என்று சொல்லுதல் பொருந் தாது.

அங்ஙனமாயினும், ஜீவனால் பூர்வசரீரத்திற் செய்யப்பட்ட புண்ணியபாப கர்மத்தின் பலன் உத்தரசரீரத்தில் அந்த ஜீவனுக்குச் சுகதுக்கமாகி விடுகி றது. அங்குச் சரீராபிமானி ஜீவனது முன் சரீரத்தின் தனது புண்ணிய பாபத்தின் ஆதீனமாகப் பிந்தியசரீரஞ் சொல்லப்படுகிறது. அதுபோல ராமகிருஷ்ணாதிகளின் சரீரங்கள் சாது துஷ்டர்களது புண்ணியபாபங்களின் அதீனமாம்; அவர்களது சுகதுக்கங்களுக்கு ஹேதுவாம். ஆனால் ராமகிரு ஷ்ணாதிகளின் அவதார சரீரங்கள் புண்ணிய பாபங்களாலாக்கப் பட்டவை யன்று. தமது சரீரங்களால் அவர்களுக்குச் சுகதுக்கங்களின் போகமுண் டாகிறதில்லை. ஆகையால் ராமகிருஷ்ணாதிகளின் சரீரங்கள் தமது புண்ணிய பாபங்களின் அதீனமன்று என்பது சம்பவிக்கின்றது.

அப்படியே ராமகிருஷ்ணாதியர் சரீரங்களும் பூதங்களின்பரிணாமமன்று; ஆனால் சேதனத்தை யாசிரயித்த மாயையின் பரிணாமமாம்.

(1) பஞ்சீகிருத பூதங்களின் பரிணாமமாயின் ராமகிருஷ்ண சரீரம் கயிற்றினாற் கட்டக் கட்டுக்குட்படவில்லையென்று சாஸ்திரத்திற் சொல்லப் பட்டிருக்கின்றது. அது அசங்கதமாகும்.

பஞ்சபூதங்களாற் செய்யப்பட்ட சித்தயோகியின் சரீரத்திலும் கட்டு கள் பலிக்காவிடினும், யோகிசரீரம் முதலில் கட்டுக்குட்பட்டு பின்யோகாப் பியாசரூப புருஷார்த்தத்தால் அக்கட்டுக்குட்படுகிறதில்லை.

கிருஷ்ணாதியர் சரீரங்கள் யோகிசரீரம்போல் யோகாப்பியாசத்தால் கட்டுக்குட்படாதவை யன்று. ஆனால் அவர்களின் சரீரங்கள் சுபாவமாகவே கட்டுக்குட்படத்தக்கவையன்று; ஆகையால் பூதங்களின் பரிணாமமன்று.

(2) மாண்டூக்கிய வுபநிஷத்தின் சங்கரபாஷியத்தின் டீகை (உரை) யில் ராமாதியர் சரீரங்கள் பூத பரிணாமங்கள் என்று ஆநந்தகிரி சொல்லியிருக் கிறார். அது ஸ்தூல திருஷ்டியினால் மற்றச் சரீரங்களுக்குச் சமானமாக அச் சரீரங்களுங் காணப்படுகின்றன என்னும் அபிப்பிராயத்தால் கூறுகின்றார். ஏனெனின்,

(3) கீதாபாஷியத்தில் பாஷியகாரர் "ஜீவர்களுக்கநுக்கிரகம் பண் ணுவதற்காகச் சரீரத்தைத் தரித்தவர்போல் மாயையின் பலத்தினால் பரமாத் மாவானவர் கிருஷ்ணரூபமாக விளங்குகிறார். அவர் ஜன்மாதிகளில்லாதவர். அவருக்கு வசுதேவர் மூலமாகத் தேவகியிடத்தில் ஜன்மமும் மாயையாற் பிரதீதியாகிறது." என்று கிருஷ்ணசரீரத்தை மாயாகாரியமாகச் சொல்லி யிருக்கிறார்.

ஆகையால் பூதங்களினின்றும் அவதாரசரீரம் உண்டாகிறதில்லை. ஆ னால் அவர்களது சரீரத்தின் உபாதானகாரணம் சாக்ஷாத் (நேரே) மாயை யாம்.

3. மற்றச் சீவர்களுக்குத் தேகாதிகளில் ஆத்ம (நான் என்னும்) பிராந்தி யிருக்கிறது; ராமகிருஷ்ணாதியருக்கில்லை. ஏனெனின்,

(1) ஜீவனுடைய வுபாதியாகிய அவித்தை மலினசத்துவகுணமுடைய தாம். ராமகிருஷ்ணாதியர் உபாதியாகிய மாயை சுத்த சத்துவகுணமுடைய தாம். ஆகையால் ஜீவனுக்கு அவித்தையாலுண்டான பிராந்தியும் ராமகிருஷ் ணாதியருக்கு மாயையாலுண்டான சர்வஞ்ஞத்தன்மையு மிருக்கின்றன.

(2) ஜீவனுக்கு அஞ்ஞானத்தாற் செய்யப்பட்ட ஆவரணமும் பிராந்தி யும் நாசமாதற் பொருட்டு ஆசாரியர் மூலமாக மகாவாக்கிய உபதேசத்தால் உண்டாகும் ஞானம் வேண்டியதாம். அப்படியே ராமகிருஷ்ணாதியருக்கு ஆவ ரணமும் பிராந்தியுமில்லாமையால் உபதேசத்தா லுண்டாகத்தக்க ஞானத் தின் அபேக்ஷையில்லை. ஆனால் ஜீவனுக்கு அந்தக்கரணவிருத்திரூப ஞானம் போல் ஈசுவரனுக்கு மாயாவிருத்திரூப ஆத்மஞானம் உபதேசாதிகளின்றி

யுண்டாகிறது. ஆனால் அந்த ஞானத்தால் எவ்வித பிரயோஜனமும் ஈசுவர னுக்குச் சித்திக்கிறதில்லை. ஏனெனின்,

[1] ஜீவனுக்குக் கடாதிகளின் ஞானத்தால் ஆவரணபங்கமும் விஷயமாகிற கடாதிகளின் பிரகாசமு முண்டாகிறது. அன்றியும் ஜீவர்களுக்குப் பிரஹ்மவடிவமாக ஆத்மஞான முண்டாகுமிடத்தில்,

(க) ஞானத்துக்கு விஷயமான ஆத்மாவின் ஆவரணபங்கமோ ஞானத் தாலுண்டாகிறது. ஆத்மாவாகிய விஷயம் ஸ்வயம்பிரகாசமாம்.

(ங) ஆகையால் ஆத்மஞானத்தால் விஷயம் பிரகாசிக்கிறதில்லை. அப் படியே ஈசுவரனுடைய மாயாவிருத்திரூபமான "நான் பிரஹ்மம்" என்னும் ஞானத்துக்கு விஷயமான ஈசுவரனுடைய ஆத்மா ஆவரணமின்றிய ஸ்வயம் பிரகாசமா யிருக்கிறது. ஆகையால் ஆவரணபங்கமும் விஷயப்பிரகாசமும் ஈசுவரஞானத்துக்குப் பிரயோஜனமன்று.

[2] ஜீவன்முக்தவித்துவானுக்கு, ஆவரணமில்லாத ஆத்மாவை விஷயமாக்கும் அந்தக்கரணத்தின் "நான் பிரஹ்மம்" என்னும் விருத்தி ஆவரண பங்காதிப் பிரயோஜன மில்லாததாகிறது. அதுபோல ஈசுவரனுக்கும் ஆவ ரணபங்காதிப் பிரயோஜனமின்றி மாயாவிருத்திரூபமான "நான் பிரஹ்மம்" என்னும் ஞானம் உபதேசாதிகளின்றி யுண்டாகிறது.

இவ்விதத்தால் ராமகிருஷ்ணாதியருக்கு ஜீவர்களினும் விலக்ஷணத் தன் மையால் ஈசுவரத்தன்மை யிருக்கிறது. என்றாலும் அவர்கள் சரீரம் மாயையா லுண்டானதாம். ஆதலால் பிரஹ்மமன்று; மித்தையாம். மாயை யுண்டுபண் ணிய அவதாரங்களின் சரீரம் கைகால்முதலிய அவயவசகிதமாயும் ரூபசகி தமாயும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் அவர்கள் சரீரம் நேத்திரேந்தி ரியத்துக்கு விஷயமாகிறது. நேத்திரேந்திரியம் பிரஹ்மத்தை விஷயம் செய் கிறதில்லை.

## 208. 2. பிரஹ்மம் துவக்கிந்திரியத்திற்கு விஷயமாகாமை.

அப்படியே துவக்கிந்திரியமும் ஸ்பரிசத்தையும் ஸ்பரிசத்தின் ஆசிரயத் தையும் விஷயஞ்செய்கிறது. பிரஹ்மம் ஸ்பரிசத்தின் ஆசிரயமன்று; ஸ்பரிச முமன்று. ஆகையால் பிரஹ்மம் துவக்கிந்திரியத்தின் விஷயமன்று.

## 209. 3- பிரஹ்மம் இரசனை கிராணம் சுரோத்திரேந்திரியம் என்பவற்றிற்கு விஷயமாகாமை.

ரஸனேந்திரியத்தால் ரஸஞானமும், கிராணேந்திரியத்தால் கந்தஞான மும், சுரோத்திரத்தால் சப்தஞானமும் உண்டாகின்றன. ரஸ கந்த சப்தங்களி னும் பிரஹ்மம் விலக்ஷணமா யிருத்தலால் ரஸனாதி இந்திரியங்களால் பிரஹ் மத்தின் ஞானமுண்டாகிறதில்லை.

## 210. பிரஹ்மம் கர்மேந்திரியங்களுக்கு விஷயமாகாமை.

கர்மேந்திரியம் ஞானத்துக்குச் சாதனமன்று. ஆனால் வசனாதிக்கிரியைகளுக்குச் சாதனமாம். ஆகையால் கர்மேந்திரியங்களால் எதன் ஞானமுமுண்டாகாது.

இவ்விதத்தால் எவ்விந்திரியத்தாலும் பிரஹ்மத்தின் ஞானம் பொருந்தாது. இந்திரியத்தினாலுண்டாகும் ஞானம் பிரத்தியக்ஷ மெனப்படுகின்றது. அதனையே அபரோக்ஷ மென்பர்.

ஆதலால் பிரஹ்மத்தின் அபரோக்ஷ ஞானம் பொருந்தாது. ஆனால் சப்தத்தால் பிரஹ்மஞான முண்டாகிறது. சப்தத்தாலுண்டாகும் ஞானம் பரோக்ஷமே. அதனால் பிரஹ்மத்தின் ஞானமும் பரோக்ஷமேயாம்.

## 206-210-ல் உள்ள பிரசினத்தின் உத்தரம் 211-212.

## 211. இந்திரிய சம்பந்தமின்றிப் பிரத்தியக்ஷஞான முண்டாகாதென்பது நியமமன்று; சுகதுக்கங்கள் சாக்ஷி பாஸ்யமாமெனல்.

### குருவானவர் சொல்லுகின்றார்.

இந்திரிய சம்பந்தமின்றிப் பிரத்தியக்ஷஞான முண்டாகா தென்னும் நியமமில்லை. ஏனெனின், சுகதுக்கங்களின் ஞானம் எந்த இந்திரியத்தினாலு முண்டாகிறதில்லை. அந்தச் சுகதுக்கங்களின் ஞானமும் பிரத்தியக்ஷமாகிறது. ஆகையால் இந்திரிய சம்பந்தத்தா லுண்டாகும் ஞானமே பிரத்தியக்ஷ ஞானமாமென்பது நியமமன்று. ஆனால் விஷயத்தோடு விருத்தியின் சம்பந்த முண்டாய் விருத்தி விஷயாகாரமாகு மிடத்துப் * பிரத்தியக்ஷஞான முண்டாகிறதாகச் சொல்லப்படுகிறது.

---

* விஷயசேதனத்திற்கு விருத்திசேதனத்தோடுண்டாம் அபேதமே பிரத்தியக்ஷ ஞானத்தின் லக்ஷணமாம். அந்த அபேதம்,

1. சிலவிடங்களில் இந்திரியவாயிலாக வுண்டாகிறது.

2. சிலவிடங்களில் சப்தத்தினா லுண்டாகிறது.

3. சில விடங்களில் இந்திரியாதிவடிவ பாகிய நிமித்தமின்றியே சரீரத்தினுள் ளுண்டாகிய விருத்திவாயிலாகவும் உண்டாகிறது. அங்குப் பிரத்தியக்ஷஞானம் சொல்லப்படுகிறது.

சேதனத்துக்கு ஸ்வரூபமாக யாதொரு பேதமும் இல்லை. ஆனால் விஷயம் விருத்தியென்னும் உபாதிகளாலாகிய பேதம் இருக்கிறது. அந்த உபாதிகள் வெவ்வேறிடங்களில் இருக்கும்போது அவ்வுபாதியுடைய சேதனங்களுக்குப் பேதம் சொல்லப்படுகிறது.

விருத்தி விஷயாகாரமாகும்போது இரண்டு உபாதிகளும் ஓரிடத்திருத்தலால் அந்த உபாதியுடைய விஷயசேதனத்திற்கும் விருத்திசேதனத்திற்கும் அபேதம் சொல்லப்படுகிறது. அந்த விஷய சேதனத்தோடு விருத்திசேதனத்திற்குண்டாம் அபேதமே

1. விஷயத்தோடு விருத்திக்குண்டாகும் சம்பந்தம் சிலவிடங்களில் இந்திரியவாயிலாக உண்டாகிறது.

2. சிலவிடங்களில் சப்தத்தினுலுண்டாகிறது. "நீ தசமன்" என்னும் சப்தத்தால் தசமனுகிய தன்னுடன் அந்தக்கரணவிருத்தி சம்பந்தப்பட்டுத் தசமனுகாரமாகிறது. ஆகையால் சப்தஜந்ய தசமனது ஞானமும் * பிரத்தியக்ஷமாம்.

அதுபோலப் பிரமாதாவினிடத்தில் சுகதுக்கமுண்டாகும்போது அந்தக்கரணத்தின் விருத்தி சுகாகாரமும் துக்காகாரமுமாகிறது. அந்த விருத்தியுடன் சுகதுக்கங்களின் சம்பந்தமுண்டாகிறது. ஆதலால் சுகதுக்கங்களின் ஞானம் பிரத்தியக்ஷ மெனப்படுகிறது.

முன்னுண்டான சுகதுக்கங்கள் நஷ்டமான பின் எங்குப் புருஷனுக்கு ஞாபகம் வருகிறதோ, அங்குச் சுகாகாரதுக்காகார அந்தக்கரணவிருத்தியோ

---

பிரத்தியக்ஷஞான மெனப்படுகின்றது. இதனையே அபரோக்ஷஞானமென்றும் சாக்ஷாத்காரமென்றும் கூறுவர்.

இந்தப் பிரத்தியக்ஷஞானலக்ஷணம்,

1. இந்திரியங்களா லுண்டாகும் பாஹ்ய கடாதிகளின் பிரத்தியக்ஷஞானத்தில் அநுகதமாம் (பொருந்தியதாம்).

2. மகாவாக்கியங்களா லுண்டாகும் பிரஹ்மத்தின் பிரத்தியக்ஷஞானத்தில் அநுகதமாம்.

3. பாஹ்ய நிமித்தங்களின்றி உள்ளேயே யுண்டாகும் சுகதுக்கங்களின் பிரத்தியக்ஷஞானத்தில் அநுகதமாம்.

4. மாயையின் விருத்தியாகிய ஈசுவரஞானத்தில் அநுகதமாம்.

5. அவித்தியாவிருத்தியாகிய ரஜ்ஜுசர்ப்பாதிகளின் ஞானத்தில் அநுகதமாம்.

பிரத்தியக்ஷஞானத்தினது லக்ஷணத்தின் விசேஷநிர்ணயம் விருத்திரத்நாவலியின் இரண்டாவது ரத்நத்திற் செய்யப்பட்டிருக்கிறது.

* "நான் தசம" னென்னும் தசமனுடைய ஸ்வரூபத்தின் அபரோக்ஷ ஞானம் "நீ தசமன்" என்னும் சப்தப்பிரமணத்தாலுண்டாகிறது; இந்திரியத்தினுலாவது மனதினுலாவது உண்டாகிறதில்லை. ஏனெனின், சரீரரூப தசமன் இந்திரியத்தால் அறியப்படின் நேத்திரேந்திரியத்துக்குத்தான் விஷயமாகவேண்டும். நேத்திரேந்திரியத்தால் சரீரத்தில் தசமனுடைய ஞான முண்டாகும்பக்ஷத்தில் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறவனுக்குத் தசமனுடைய ஞானமுண்டாகலாகாது; அவனுக்கும் உண்டாகிறது. ஆகையால் தசமனுடைய ஞானம் நேத்திரேந்திரியத்தா லுண்டாகவில்லை. மனது நேரில் பாஹ்ய பதார்த்தங்களை யறியாது; ஆனால் ஆந்தர பதார்த்தங்களை யறியும். தேவதத்தன் யஞ்ஞதத்தன் என்னும் பெயர்கள் சூக்ஷ்மத்தோடுகூடிய ஸ்தூலசரீரத்துக்குள்ளன. நீ நான் என்னும் வியவகாரமும் ஸ்தூலதேகத்தில் காணப்படுகின்றது. இந்த ஸ்தூல தேகத்தின் ஞானம் மனதுக்கு நேரிலுண்டாகவில்லை. இவ்விதத்தால் தசமனுடைய ஞானம் சப்தப்பிரமாணத்தாலுண்டாகிறது. அதற்கு நேத்திரமும் மனதும் சகாயமாயிருக்கின்றன.

உண்டாகிறது. ஆனால் விருத்திக்கு நஷ்டமாகிய சுகதுக்கங்களுடன் சம்பந்தமில்லை. ஆகையால் அந்த ஞானம் ஸ்மிருதிரூபமாம்; பிரத்தியக்ஷரூபமன்று.

1. அந்தக்கரணத்தின் தர்மங்களாகிய * சுகதுக்கங்கள் சாக்ஷிபாஸ்யங்களாம். அங்ஙனமாயினும் சுகாகார துக்காகார அந்தக்கரணத்தின் விருத்திவாயிலாகச் சாக்ஷி சுகதுக்கங்களைப் பிரகாசிக்கிறது.

2. சாக்ஷிபாஸ்யபதார்த்தத்தையும் சாக்ஷிவிருத்தியை யபேக்ஷித்தே பிரகாசிக்கிறது. எங்ஙனம் :— கிளிஞ்சில்வெள்ளி சாக்ஷிபாஸ்யமாம். அங்கு அவித்தையின் விருத்தியை யபேக்ஷித்துச் சாக்ஷி வெள்ளியைப் பிரகாசிக்கிறது.

1. ஆனால் சுகதுக்கங்களின் பிரகாசத்தில் அந்தக்கரணவிருத்தி சாக்ஷிக்குச் சகாயமாயிருக்கிறது.

2. மித்தையான வெள்ளிமுதலியவற்றைப் பிரகாசித்தலில் அவித்தியாவிருத்தி சகாயமாயிருக்கிறது.

இவ்விதத்தால் சாக்ஷிபாஸ்ய பதார்த்தத்தின் ஞானத்திலும் விருத்தி வேண்டியதாயிருக்கிறது.

1. அந்த விருத்தி எங்கு இந்திரியாதி வெளிச்சாதனங்களா லுண்டாகின்றதோ, அங்கு அதன் விஷயம் சாக்ஷிபாஸ்யமன் றெனப்படுகிறது.

2. சுக துக்கங்களை விஷயமாக்கும் விருத்தியில் வெளியிந்திரியாதிகள் ஏதுவன்று. ஆனால் சுகாதிகளுண்டாகும்போது வேறு சாதனங்களின் அபேக்ஷையின்றிச் சுகாகார துக்காகார அந்தக்கரணவிருத்தி யுண்டாகின்றது. அவ்விருத்தியி லாரூடமான சாக்ஷி சுகதுக்கங்களைப் பிரகாசிக்கிறது. ஆதலால் சுகதுக்கங்கள் சாக்ஷிபாஸ்ய மெனப்படுகின்றன.

## 212. பிரஹ்மத்தின் ஞானம் பிரத்தியக்ஷமாதல் கூடுதலும், தத்துவதிருஷ்டிக்குப் பேதப் பிரமத்தின் முடிவும்.

பாகிய கடாதிகளுடன் அந்தக்கரண விருத்தியின் சம்பந்தம் நேத்திராதி இந்திரியவாயிலா யுண்டாகிறது. ஆகையால் கடாதிகள் சாக்ஷிபாஸ்யமல்ல.

அப்படியே அந்தக்கரணவிருத்தி † பிரஹ்மாகாரமாகும்போது அந்த விருத்தி வெளியிற்போகாமல் சரீரத்தினுள்ளேயே யிருக்கிறது. அந்த விருத்

---

* சுகதுக்கங்கள் புத்தியைச் சேர்ந்தனவாம், ஆத்மாவைச் சேர்ந்தவையன்று; ஏனெனின் புத்தியிருக்கும்போது இவைகளிருக்கின்றன. சுழுத்தியில் புத்தி இல்லையாகலின் இவைகளும் தோற்றுகிறதில்லை.

† 1. நேத்திரத்தில் சூரியனது அபேதத்தன்மையிருக்கிறது. அதற்கு விரல்முதலியசொற்ப மறைப்பினால் சூரியன் மறைபடப் பிரமாண்டத்திலுள்ள சூரியனுடைய பிரகாசம் காணப்படுகிறதில்லை.

தியுடன் பிரஹ்மத்திற்குச் சம்பந்த மிருக்கிறது. அதனால் பிரஹ்மஞான மும் சுக துக்கங்களின் ஞானம்போலப் பிரத்தியக்ஷரூபமாயிருக்கிறது. ஆனால்,

1. சுகாகார துக்காகார விருத்திகளில் வெளிச்சாதனங்களின் அபேக்ஷையில்லை. ஆதலால் சுக துக்கங்கள் சாக்ஷிபாஸ்யமாம்.

2. பிரஹ்மாகார அந்தக்கரணவிருத்தியில் குருவாயிலாகக் கேட்கப்பட்ட வேதவசனத்திற்குச் சுரோத்திரத்தோடுண்டாம் சம்பந்தமாகிய பாஹ்யசாதனம் வேண்டும். ஆகையால் * பிரஹ்மம், சாக்ஷிபாஸ்ய மன்று.

இவ்விதத்தால் எங்கு விஷயத்தோடு விருத்தி சம்பந்தப்படுகிறதோ அங்குப் பிரத்தியக்ஷஞானம் சொல்லப்படுகிறது. "நான் பிரஹ்ம" மென்னும் விருத்திக்கு விஷயமாகிய பிரஹ்மத்துடன் அவ்விருத்திக்குச் சம்பந்தமிருத்தலால் பிரஹ்மத்தின் ஞானம் பிரத்தியக்ஷமாதல் கூடும்.

1. புகையைப் பார்த்து நெருப்பின் ஞான முண்டாகுமிடத்தும் புகையின் ஞானம பிரத்தியக்ஷமாம்; நெருப்பின் ஞானம் பிரத்தியக்ஷமன்று.

---

2. மறைப்பு நீங்கினால் கண்ணிலுள்ள அந்தக்கரணத்தின் விருத்தியால், பிரஹ்மாண்டத்துள்ள சூரியனுடைய பிரகாசம் காணப்படுகிறது. அதுபோல,

1. சாக்ஷியாகிய ஆத்மாவில் பிரஹ்மத்தின் அபேத முண்டு. அதற்கு அந்தக்கரணத்திலுள்ள அஞ்ஞானாம்சவடிவ சொற்ப ஆவரணத்தினால் மறைப்புண்டாக எங்கும் பரிபூர்ணமாயிருக்கும் பிரஹ்மம் பிரத்தியக்ஷமாய் விளங்குகிறதில்லை.

2. எப்போது சரீரத்தினுள்ளுண்டாகிய பிரஹ்மாத்மாவின் அபேதத்தன்மை வடிவ விருத்தியினால் முற்கூறிய ஆவரணத்தின் பங்கமுண்டாகிறதோ, அப்போது வீட்டிலுள்ள அசங்கத்தன்மை முதலியவற்றின் ஞானத்தால் மகாகாசத்தன்மை முதலியவற்றின் ஞானமுண்டாதல்போல எங்கும் பரிபூர்ண பிரஹ்மத்தின் சொப்பிரகாசத்தன்மையினால் விளக்கமுண்டாகிறது.

* எங்ஙனம் பிரஹ்மம் சாக்ஷிபாஸ்யமன்றோ, அங்ஙனமே பிரஹ்மம் சிதாபாஸனோடுகூடிய அந்தக்கரணத்தின் விருத்திவடிவப் பிரமாதாவிற்கும் விஷயமன்று. வேறு தீபத்தின் அபேக்ஷையின்றிக் கேவலநேத்திரத்திற்கு விஷயமாகும் தீபத்தைப்போல அந்தக்கரணத்தின் "அகம்பிரஹ்மாஸ்மி" என்னும் வடிவுடைய கேவல விருத்திக்கு விஷயம் பிரஹ்மமாம். ஆதலால் பிரஹ்மம் பிரமாதாபாஸ்யமு மன்று. ஆனால் தனது பிரகாசத்தில் வேறொன்றினது பிரகாசத்தின் அபேக்ஷையின்றி எல்லாவற்றையும் பிரகாசிக்குந் தன்மையது ஸ்வயம்பிரகாசவடிவப் பிரஹ்மமாம்.

விருத்தியும் வஸ்திரத்தின் அழுக்கினைச் சவுக்காரம் போக்குவதுபோலப் பிரஹ்மத்தின் ஆவரணத்தைப் பங்கஞ் செய்கிறது. அதுவே அதனை விஷயஞ்செய்வதாம்; வேறுவகையால் விஷயஞ்செய்தல் விருத்திக்கில்லை.

"நான் பிரஹ்மம்" என்னும் விருத்திவடிவ தத்துவஞானத்திற்கு வெளிச்சாதனங்களின் அபேக்ஷையின்றிச் சாக்ஷி பிரகாசிக்கின்றது. ஆதலால் அந்தத் தத்துவஞானம் சாக்ஷிபாஸ்யமாம்.

ஏனெனின், நேத்திரவாயிலாக அந்தக்கரணவிருத்திக்குப் புகையுடன் சம்பந்தமிருக்கிறது. ஆகையால் புகையின் ஞானம் பிரத்தியக்ஷமெனப்படுகிறது.

2. அநுமானத்தினால் அந்தக்கரணவிருத்தி சரீரத்தினுள் நெருப்பின் ஆகாரத்தைக் கொள்ளுவதாயிற்று. ஆனால் நெருப்போடு விருத்திக்குச் சம்பந்தமில்லை. ஆகையால் நெருப்பின் ஞானம் பிரத்தியக்ஷமன்று.

இவ்விதத்தால் எங்கு விருத்தியோடு விஷயத்திற்குச் சம்பந்தமுண்டாகிறதோ, அங்குப் பிரத்தியக்ஷஞானம் சொல்லப்படுகிறது.

எங்கு விருத்தியுடன் விஷயத்திற்குச் சம்பந்த முண்டாகிறதில்லையோ, விஷயம் வெளியில் தூரத்திலாவது அல்லது சென்றகால வருங்காலங்களிலாவது இருக்க அநுமானத்தினாலாவது சப்தத்தினாலாவது விஷயாகார விருத்தி சரீரத்தினுள் ளிருக்கின்றதோ அந்த ஞானம் பரோக்ஷமெனப்படுகிறது.

இந்திரியஜந்நியஞானமே பிரத்தியக்ஷமா மென்னும் நியமமில்லை. சுகதுக்கங்களின் ஞானம் இந்திரியஜந்நியமன்றாயினும் பிரத்தியக்ஷமா யிருக்கிறது. அதுபோலத் தசமபுருஷனுடைய ஞானம் சப்தஜந்நியமாயினும் பிரத்தியக்ஷமாம்.

இவ்விதத்தால் குருவாயிலாகச் சிரவணஞ் செய்யப்பட்ட மகாவாக்கியரூப வேதசப்தத்தினின் றுண்டாகிய பிரஹ்மஞானமும் பிரத்தியக்ஷமேயாகிறது.

குருவின் இத்தன்மைய உபதேசத்தைக் கேட்டுப் புத்திமானான தத்துவதிருஷ்டி தன்னாத்மாவைப் பிரஹ்மரூபமாக அறிந்து பேதப்பிரமத்தைப் போக்கினான். "நான் பிரஹ்மம்" என்னும் விருத்தியில் நிராவரணமான விளக்கமுண்டாகிறது. இவ்வாறு தாதுவென்னும் முதற்பொருளினின்றே யாம் இதனைத் தெரிந்துகொண்டோம்.

* உத்தமாதிகாரியின் உபதேசநிரூபணமென்னும்
நான்காவது தரங்கம் முற்றிற்று.

* எவனுடைய அந்தக்கரணம் அத்தியந்தம் சுத்தமாயிருக்கிறதோ, எவனுக்கு மகாவாக்கியரூப சப்தத்தால் திடஞானமுண்டாகிறதோ, அப்படி உண்டானபிறகு சமுசயாதிகளை நிவர்த்திக்க எவனுக்குச் சிரவணாதிகள் வேண்டியதில்லையோ, அவன் உத்தமாதிகாரி. எவன் அந்தக்கரணம் அத்தியந்தம் சுத்தமாயில்லையோ, ஆனால் கொஞ்சம் மலவிக்ஷேப தோஷங்களுடன் கூடியிருக்கிறதோ, அவன்மத்தியமதர அல்லது கனிஷ்ட அதிகாரி. மகாவாக்கியரூப சப்தத்தால் அபரோக்ஷஞானமுண்டான பிறகும் சமுசயாதிகளை நிவிருத்திக்க இவன் சிரவணாதிகளைச் செய்யவேண்டும்.

# விசாரசாகரம்.

## ஐந்தாவது தரங்கம்.

### வேதமுதலியன வியாவஹாரிகமெனல். 213-276.

### மத்தியமாதிகாரி சாதனநிரூபணம். 277-303.

### 213. அதிருஷ்டியின் பிரசினம்:—வேதமும் குருவும் சத்தியமாகுக அல்லது மித்தையாகுக இருவகையாலும் வேதத்தினாலும் குருவினாலும் அத்வைத ஞானம் பொருந்தாதெனல்.

"குருமுகமாகக் கேட்ட வேதவாக்கியத்தால் அத்வைதப் பிரஹ்மத்தின் சாக்ஷாத்கார முண்டாகிற"தென்று முன் தரங்கத்தில் சொல்லப்பட்டது. அதனைக் கேட்டு அதிருஷ்டி யென்னும் 2-வது சிஷ்யன் இவ்வாறு சங்கிக்கின்றான்:—

1. வேதமும் குருவும் **சத்தியமாயின்** அத்வைதத்திற்கு ஹானியுண்டாம்; துவைதம் சித்தியாகும்.

2. வேதமும் குருவும் **அசத்தியமாயின்** சமுசாரதுக்கம் நிவிருத்தியாகாது; புருஷார்த்தமுங்கிடைக்காது; அது மித்தையான கானல்ஜலத்தால் தாகசமனமாகாதது போலும்.

இவ்வாறு இரண்டு விதங்களாலும் அத்துவைதஞானம் உண்டாகாது. இவ்வாற்றால் சங்கரமதம் அசுத்தமா மெனக்கொண்டு இதனை மத்துவர்முதலிய புத்திமான்கள் தள்ளினார்கள். ஆதலால் சுவாமி! இந்தச் சங்கை யெனக்குண்டாயிருக்கிறது. இதனைத் தாம் தயைசெய்து நிவர்த்திக்கவேண்டும். கோபஞ் செய்யலாகாது.

### குரு உத்தரம். (214-236)

### 214. சங்கரமதம் பிரமாணமாதல். (252-254)

சிஷ்யனுடைய வார்த்தையைக் கேட்டுக் குரு சொல்லுகிறார்:—சங்கரமதமே பரமப்பிரமாணம்; மற்ற மத்துவர்முதலியோர் மதங்கள் அப்பிரமாணமாம். அவை வேதவிருத்தமாம். சங்கரமதமே பிரமாணமென்பதற்கு வாயுபுராண கூர்மபுரா*ணாதிகளில் ஸ்ரீ வியாஸர் கலிகாலத்தில் வேதார்த்தத்

---

* ஆதி சப்தத்தினால் மஹேதிகாசமாகிய சிவரகஸ்யத்தின் நவமாம்சத்தில் ,,ஶிவே

[illegible] |

[illegible] |

தைப் பலர் பலவிதமாய்க் கிரகிப்பார்கள். அப்போது பரமசிவன் சங்கரரூப மாயவதரித்துப் பக்தர்களுடைய ஹிதத்தின் பொருட்டுச் சகலமதங்களையுங் கண்டித்து ஜயினபவுத்த மதங்களை நிர்மூலமாக்கி விடுவார். கங்கையிலிருந்தும் பத்திரிகாதராகிய பிரபுவின் மூர்த்தியை வெளிப்படுத்தி ஸ்தாபிப்பார். சூரியப்பிரகாசத்தால் ஜகத்திலுள்ள இருள் நீங்கச் சகலவஸ்துக்களும் உள்ளவாறே விளங்குவதுபோலவும்,சர்வசமுசயங்களும் விபரீதபாவங்களும் நீங்குவதுபோலவும்; ஸ்ரீ சங்கரவியாக்கியானம் வேதார்த்த விஷயத்திலுள்ள அஞ்ஞானத்தை போக்கிச் சமுசயப்பிராந்திகளை நிவர்த்தித்துப் பூர்ணமான யதார்த்த வுபதேசஞ்செய்யும். வேதார்த்தத்தை வேறுவிதமாய்ச் செய்த மற்றவர்கள் மூடர்களே. அவர்கள் வீண்சிரமப்பட்டார்கள்." என்று சொல்லியிருக்கிறார்.

1. இவ்வாற்றால் சங்கரமதமே பிரமாணம்.

2. மத்துவாதியர் மதம் அப்பிரமாணம் என்பதை நான் வியாஸவசனத்தால் அறிகிறேன்.

## 215. பேதவாதத்தின் அப்பிரமாணத்தன்மை.

சிஷ்யனே! வேறு பிரமாணஞ் சொல்லுகிறேன் கேள். ஆதிகவி வால்மீகி ரிஷியானவர் உத்தரராமாயணமாகிய வாசிஷ்ட மென்னுங் கிரந்தத்தில் அத்வைதமதமே பிரமாணமென்று சொல்லியிருக்கிறார். அத்வைதமதத்தில் பிரதானமான திருஷ்டிசிருஷ்டிவாதத்தை அநேக இதிஹாசங்களால் பிரதிபாதித்திருக்கிறார். ஆகையால் வால்மீகியின் வசனப்படி மத்வாதிகளுடைய பேதமதம் அப்பிரமாணமாம். உபநிஷத்துகள் கீதை பிரஹ்மசூத்திரம் என்னும் மூன்றுஞ்சேர்ந்து வேதாந்தத்தின் பிரஸ்தானத்திரய மென்று சொல்லப்படும். இந்தப் பிரஸ்தானத்திரயத்துக்கு மத்வர்முதலியோர் ஒருவாறு இழுத்துத்தத்தம்மதானுசாரமாக வியாக்கியானஞ்செய்திருந்தாலும்,வியாஸ வசனத்தினால் ஸ்ரீ சங்கராசாரியருடைய வியாக்கியானமே யதார்த்தம். வால்மீகி ரிஷியின் வசனத்தினாலும் அத்வைதமதமே பிரமாணமாம். பேதவாதம் அப்பிரமாணமாம்.

இவ்வாறு சர்வஞ்ஞர்களாகிய ரிஷிகள்முனிகள் வசனத்திற்கு விரோதித்தலால் பேதவாதம் அப்பிரமாண மெனப்பட்டது. யுக்தியினாலும் பேதவாதம் விருத்தமாம். இது ஸ்ரீ ஹர்ஷமிசிராசாரியர் முதலியோராற் கண்ட

---

ஸமூளே பாஷண்ட ஷண்டாநாம் கண்டநம் ஸங்கரிஷ்யதி—சிவையே! என்னம் சவடிவரான சங்கரரென்னும் சிவபக்தர் நான்கு சிஷ்யர்களோடு கலியில் அவதரிப்பார். மகேசுவரி! அவருக்கே என்னால் உபநிஷத்வித்தை கொடுக்கப்படும். பூமியில் பாஷண்டர்களாகியஷண்டர் (பேடி) களை அவர் கண்டிப்பார்" என்றல் முதலிய பல சுலோகங்களால் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் சரித்திர முழுவதும் சொல்லப்பட்டிருத்தல் கொள்ளப்படும்.

ஞதிக் கிரந்தங்களிலும் பேததிக்கார முதலிய நூல்களிலும் பிரதிபாதிக்கப் பட்டிருக்கிறது. அப்பேதமதத்தைக் கண்டிக்கும் யுக்திகள் கடினமாயிருத்த லால அவற்றை இங்கு எழுதவில்லை.

## 216-பேதவாத நிரஸ்காரம்.

அன்றியும் ஜைனமதம்போல் ரிஷிமுனிவசனங்களுக்கு விருத்தமான பேதமதத்தை அப்பிரமாணமாய்க்கொண்ட ஆஸ்திகஅதிகாரியாகிய உனக்கு அந்தப் பேதமதம் யுக்தியால் கண்டிக்கப்படவேண்டு மென்பது அவசிய மன்று.

சிஷ்யனே! பேதமதம் வேதவசனத்துக்கும் விருத்தமா மென்பதைச் சொல்லுகிறேன் கேள். கடவல்லியுபநிஷத்தில் யமதர்மராஜா பேதவுணர்ச்சி பெருந்துன்பத்தைக் கொடுக்கத்தக்கதென்று சொல்லியிருக்கிறார். ஆகையால் பேதவாதத்தை மனதினின்றொழித்து அத்வைதத்தையே கைக்கொள்ள வேண்டியது. "ம்ருத்யோஸ்ஸ ம்ருத்யுமாப்நோதி ய இஹ நாநேவ பஶ்யதி" என்பது சுருதி. "த்விதீயாத்வை பயம் பவதி" "அந்யோऽஸாவந்யோऽஹமஸ்மீதி ந ஸ வேத யதா பஶுரேவ ஸ தேவாநாம்" என்னும் இரண்டும் சுருதிகள்.

இவற்றின் பொருள்:—எவன் இங்கு (பரமாத்மாவில்) நாநாவைப்போல பார்க்கிறானோ அவன் மிருத்தியுவினின்றும் மிருத்தியுவையடைகிறான். இரண் டாவதினால் பயமுண்டாகிறது. ஞேயத்தியேயங் (அறியத்தக்கவை தியானிக் கத்தக்கவை) களைத் தனக்கு வேறாக நினைப்பவன் பசுவுக்கொப்பாவன் என வேதங் கோஷிக்கிறது.

சிஷ்யனே! ஆகையால் துக்கத்தைக் கொடுக்கும் மத்வாதியர் வசனங் களைக் கேட்டவுடனே துன்பத்தைத் தருவனவாகிய அவற்றை மறக்கவேண் டும். எதுவரையில் துவைதவசனம் உன்னிருதயத்தில் தங்குகிறதோ, அது வரையில் அத்துவைத சாக்ஷாத்கார முனக்குண்டாகாது.

## (இராஜாவின் மந்திரி பர்ச்சுவின் கதை 217-228.)

## 217. பர்ச்சு தபசியாதல்.

துவைத வசனத்தின் ஸ்மரணை யுண்டாகுமாயின் அது சாக்ஷாத்காரத் தைக்கெடுக்கும். பூர்வ ஸ்மிருதி சாக்ஷாத்காரத்தைக் கெடுக்குமென்பதனை விளக்கும் ஓர் கதையைச் சொல்லுகிறேன் கேள்.

ஓரரசனுக்குப் பர்ச்சு வென்னு மோர் முக்கிய மந்திரி இருந்தான். அவன் சகல ராச்சிய காரியங்களையும் தன் விசாரணையில் வைத்திருந்தான். அதனைக் கண்டு மற்ற உத்தியோகஸ்தர்கள் பொறாமை யடைந்தார்கள். ஆனால் பர்ச்சுவினிடத்தில் அரசன் வைத்திருந்த அன்பின் மிகுதியால் அவர்கள் அவனுக்கு யாதொரு தீங்கும் செய்யமுடியவில்லை. அப்போது அவர்களெல்

லொரு மாலோசித்து ஒரு யுக்திசெய்தார்கள்:— அவ்வூரில் கொள்ளைக்கார ரால் உபத்திரவ முண்டாகும்படி செய்வித்தார்கள். எதிரிகள் வந்ததைக் கேட்டு உடனே அரசன் சபைகூட்டி அவர்களைத் துரத்தியடிக்கும்படி முக்கிய உத்தியோகஸ்தர்களுக்குக் கட்டளையிட்டான். அப்போது அவர்கள் எல்லோ ரும்சேர்ந்து அரசனைப்பார்த்து, ஆண்டவனே! பார்சுவையே தேவரீர் எப் போதுங் கொண்டாடுகிறீர்கள்; ஆபத்துக் காலத்தில் எங்களை அனுப்பு கிறீர்கள்; பார்சுவை ஏன் அனுப்பலாகாது என்றார்கள். அதனைக்கேட்டுப் பார்சு கைகுவித்து ராஜாவைப்பார்த்து, சுவாமி! ஆஞ்ஞாபித்தால் இக்கண மே சென்று சத்துருக்களை ஜயித்து வருகிறேனென்றான். அப்போது அர சன் அப்படியே செய்யுமென்று பார்சுவுக்கு உத்திரவளித்தனன். பார்சுவும் அவ்வாறே சென்று அச்சத்துருக்களை அடித்துத் துறத்தி பயிர்த்தொழிலா ளர் முதலிய அனைவருக்கும் க்ஷேமம் விளைவித்தனன். பார்சுவின் ஜயத்தைக் கேட்டு, மற்ற உத்தியோகஸ்தர்கள் அரசனிடஞ் சென்று பார்சு இறந்தான் எனச் சாதித்தார்கள். இவர்கள் பொய்வார்த்தையை நம்பி அரசன் பார்சு ஸ்தானத்தில் இவர்களில் ஒருவனை நியமித்து அவனுக்குப் பல்லக்குசத்திர சாமரங்களைக் கொடுத்தான். இப்புதிய மந்திரி பார்சுவராமலும் அரசனுக் குப் பார்சுவின் ஞாபகம் சொப்பனத்திலும் வராமலு மிருக்கும்படி ஏற்பாடு பண்ணினான்.

இவ்வர்த்தமானங்களை யெல்லாம் பார்சு விசாரித்தறிந்து தவவேடம் பூண்டு தன் மனதில் இவ்வாறு யோஜிக்கிறான்:— அரசனிடம் செல்ல என் றால் இப்போது முடியாது. ஏனெனின், அரண்மனை வாயிலிற்போனால் அவ் வாயில் காப்போர் என்னைக் கொன்றுவிடுவார்கள். இதுவரையில் சகல போகங்களையும் அனுபவித்தேன். ரோகமில்லாத தேகேந்திரியங்கள், ரம ணீயமான வீடு, மோகிக்கத்தக்கவர்களாய் நான்குநாற்கால் நான்கு புஷ்பம் நான்குபழம் நான்குபக்ஷி என்பவற்றால் உவமிக்கப்படும் ஸ்திரீ முதலியோ ரையு முடையவனாயிருந்தேன்.

## 218. * ஸ்திரீ நிந்தை.

### நான்கு நாற்கால்கள்.

பானைத்துதிக்கை போன்றது தொடை; மான்குளப்படி போன்றது அல்குல்; சிங்கத்தைப்போன்றது இடை; சலிக்கும் குதிரையைப் போன்றது கண்கள் என்று வித்வான் (காவியநூல்களிற் சமர்த்தர்) கள் வர்ணித்திருக் கின்றார்கள்.

---

* இங்குக் காவிய நூல்களின்படி ஸ்திரீகளினது அவயவங்களின் வர்ணனமாகிய ஆரோபஞ் செய்யப்பட்டது. அது தோஷதிருஷ்டிவடிவ அபவாதத்தின் பொருட்டாம். ஏனெனின் லக்ஷியமாகிய குறியின்றிப் பாணத்தை விடுவதுபோல ஆரோபமின்றி அப வாத முண்டாகாதாகலின் விஷயப் பற்றுடைய கவிகளின் வார்த்தையை அநுவதித்தல் வடிவ ஆரோபஞ் செய்யப்பட்டிருக்கிறது. பின் இத்தரங்கத்திலேயே ஸ்திரீயின் அவ யவங்களில் தோஷதிருஷ்டிவடிவ அபவாதத்தையும் கூறுவர்.

## நான்கு புஷ்பங்கள்.

கமலம்போன்றது முகம்; அலசி (ஓர்வித) புஷ்பம் போன்றது தாடை; எள்ளின் மலர்போன்றது நாசி; சண்பகம் போன்றது சரீரவடிவம் என்று கவிகள் கூறுவர்.

## நான்கு பழங்கள்.

கொவ்வைக்கனி போன்றது அதரம்; மாதுளைபோன்றது பற்கள்; வில்வப்பழங்களைப் போன்றது ஸ்தனங்கள்; * கோஹரமென்னும் பழத்தைப் போன்றது குதி என்பர்.

## நான்கு பக்ஷிகள்.

அன்னம்போன்றது மந்தநடை; குயிலைப்போன்றது குரல்; கிளிபோன்றது அதிமதுரமான வாக்கு; மயிற்றோகை போன்றது கூந்தல் என்று இவ்வாறு கவிகள் பலவாறு வர்ணிக்கின்றனர்.

இப்படிப்பட்டவர்களும் சமுத்திரத்தை ஒருபோதும் கங்கை விடாதது போல் காமியின் மனம் இடைவிடாது செல்லத்தக்கதன்மையுடையவர்களும், பிரஹ்மா திலோத்தமை சுந்த நிசுந்தர்களைக் கொன்றமையால் வேறு † திலோத்தமையைச் சிருஷ்டித்தார் என்று சொல்லத்தக்கவர்களும், கால்

---

எதனால் பின் அபவாதஞ் செய்யப்பட்டிருக்கிறதோ அதனால் இங்கே ஸ்திரீயினது அங்கங்களின் உவமையில் தாற்பரியமில்லை. ஆனால் அவ்வாறு உவமையைத் தருகின்ற விஷயப்பற்றுள்ளவர்களைப் பரிகசிப்பதில் தாற்பரியமாம். சகல காவ்யகிரந்தங்களுக்கும் இதுவே அபிப்பிராயமாம்.

மேற்கூறிய ஸ்திரீ அங்கங்களின் உவமையின் கண்டநம் உள்ளவாறே ரூபகாதர்சமென்னும் நூலில் ஸ்ரீ பீதாம்பரஜீ அவர்களால் சிங்கார வைராக்கியத்தின் பிரசங்கத்திற் செய்யப்பட்டிருக்கிறது.

* முள்ளங்கி இலையைப்போன்ற இலைகளையுடைய ஓர் செடியின் பெயர் கோஹரமென்று ஹிந்துஸ்தான் தேசத்தில் வழங்கிவருகிறது. இதனையே அங்குப் பாரஸீக வார்த்தையில் சல்கம் என்பர். அதன் அடியில் வெண்காயம் போன்ற நிறத்தையுடைய உருண்டையான பழமுண்டாம். அதனைக் கோஹரபழமென்பர். அதனைப்போன்றதாம் குதியென்பர் கவிகள்.

† பிரஹ்மாவினால் சிருஷ்டிக்கப்பட்ட திலோத்தமை சுந்தன் நிசுந்தன் என்னும் இரண்டு அசுரர்களையும் கொன்றமையால் கொலையுடையவளாகிய அவள் சிறந்தவளாகாள். என்னுடைய ஸ்திரீ கொலையுடையவளல்லள்; ஆதலால் அந்தப்பிரஹ்மதேவனாலாக்கப்பட்ட திலோத்தமையினும் மேலானவளாவள் என்பது அபிப்பிராயம்.

இது மகாபாரதத்திலுள்ள கதையாம்:—

சுந்தன் நிசுந்தனென்று இரண்டு தைத்தியர்களாகிய சகோதரர் இருந்தனர். அவர்கள் தவஞ்செய்து பிரஹ்மதேவனிடத்தினின்றும் "சகோதரர்களாகிய நாங்களிருவரும் ஒருவர் கையினால் ஒருவர் சண்டைசெய்து இறந்தால் இறக்கவேண்டும்; வேறொருவர் கையினாலும் இறக்கலாகாது" என்னும் வரத்தைப் பெற்று மூன்றுலகத்தையும் துன்பப்படுத்திவந்தார்கள். அப்போது பிரஹ்மதேவன் இரண்டு சகோதரர்களுக்குமுள்ள பிரியத்

கைகளில் மருதோன்றிச் சாய மேற்றினவர்களுமான இரமணீய ஸ்திரீகளை நிமிஷமும் விட்டிருந்தேனில்லை.

அவற்றிற்குச் சாதனமான மற்றப் போகங்களையும் அநுபவித்தேன். இப்போது மரணம் சமீபித்தது. ஜகத்தில் என்னைப்போல மூடன் யாவனிருக்கிறான்! இதுவரையில் ஸ்திரீயின் அல்குலி லாசக்தனுயிருந்தேன். அது மலமூத்திரங்களா லெப்போது மீரமாயும், காயமின்றி இரவும் பகலும் இரத்தம் பெருகியொழுகுவதும் தோலால் மூடப்பட்ட மாமிசமயமான மலினமாயும், மேல் அசுத்த மயிர்கள் சூழ்ந்ததாயு முள்ளது. இவற்றில் எப்பதார்த்தம் அழகானது. மிக அசுத்தமாய் அருவருப்பிற் கிடமாயிருக்கிறது. ஸ்திரீயின் தொடைகள் எப்போதும் அதிமலினமா யிருந்தும் வாழைத் தண்டிக்கும் யானையின் துதிக்கைக்கும் சமானமாய் விஷயப் பற்றுள்ள கவிகளாற் சொல்லப்படுகின்றன. அவை மூத்திரச் சாக்கடை போன்றிருக்கின்றன. இரத்தம் மாமிசம் தோல் எலும்புமுதலியவற்றால் நிறைந்துள்ளன. கீழுள்ள பெரிதான நிதம்பங்களின் மத்தியில் மலினமான மலக்குழாயி (குதமி) ருக்கிறது. அதனால் கடிதடம் அதிதுர்க்கந்த மாயிருக்கிறது. இதில் ஆசைவைப்பவன் அந்தகன். ஸ்திரீகளின் உதடுகளினின்றும் உமிழ்நீர்வருகிறது. சுத்தாசுத்தவிவேகமில்லாதவன் அவளைப் பார்த்து மதமுண்டாய்க் கொஞ்சமும் வெறுப்பின்றி அதனைச் சுவைக்கின்றான். அவளை அதிசுந்தர லாவண்ணிய முள்ளவளென்று நினைக்கின்றான். இவ்வாறு ஸ்திரீயின் அங்கங்களைச் சிரேஷ்டமல்லவென்று இப்போது நான் நன்றாய் விசாரித்து இவைகளை யெல்லாமொழிப்பேன்.

## 219. பர்சுவின் வைராக்கியம்.

பருப்பு, நெய், கறி, அன்னம், தயிர், பாயஸம், வடை என்பன முதலிய பலவித உணவுகளைப் புசித்து அவற்றின் சுவையையும் கொண்டு இதுவரையில் திருப்தி யடையாத இந்த நாக்கினை வீணுகப் போஷித்தேன். பசியைக் கெடுத்தற்கோ காட்டில் பழம் கிழங்கு முதலியன விருக்கின்றன. அங்ஙனமிருக்க ஏன் நமக்கு இந்தப் பராதீனமாகிய கட்டு. குகையே வீடும், காடே நெருங்கிய தோட்டமுமா யிருக்க இராஜாவிற்கேன் ஊழியனுயிருக்க

---

தைக் கெடுத்தற்பொருட்டு உலகத்திலுள்ள ஸ்திரீகள் யாவரினும் மிக அழகிய திலோத்தமையென்னும் தெய்வப்பெண்ணைச் சிருஷ்டித்துப் பிரஹ்ம லோகத்தினின்றும் அவர்களிடத்தனுப்பினர். அவளைப் பார்த்து அத்தைத்தியர் "எங்களிருவருரையும் மணந்து கொள்வாய்" என்றார்கள். அதற்கவள் "யான் ஒருவரை மணந்துகொள்வேனேயல்லாமல் இருவரையும் மணவேன்" என்றாள். பின் அவள் அவ்விருவரையும் தனித்தனியாய் ஏகாந்தத்தில் அழைத்து "நீ மற்றவனைக்கொன்றால் உன்னை விவாகம் செய்துகொள்வேன்" என்று ஒவ்வொருவனுக்கும் ஓதினள். அப்போது அவ்விருவரும் ஒருவரோடொருவர் சண்டை செய்திறந்தார்கள். இவ்வாற்றால் அந்தத் திலோத்தமை சுந்த நிசுந்த தைத்தியர்களைக் கொல்லுதலில் நிமித்தமானாள். ஆதலால் அவள் கொலையுடையவளாவள்.

வேண்டும். கல் படுக்கையாம்; தன்கை தலையணையாம்; அருவி ஜலமாம்; பருக்கை பாத்திரமாம்; கமண்டல முதலியவையில்லை. இவ்விதமாக ஏகாந்தத்திலிருந்து சுகமுடையவனாய்ப் பர்ச்சு பரமானந்தத்தை யடைந்தான். சமுத்திரபரியந்தமான பூமியைப் பெற்றாலும் ஏகாந்தமின்றிச் சுகமுண்டாகாது.

## 220. இராஜா முதல் பிரஹ்மாபரியந்த முண்டாம் எல்லாச் சுகங்களும் ஏகாந்தத்தி லுண்டாகின்றனவெனல்.

பூமிக்கிறைவனாய் ரோகமின்மை யௌவனம் திடகாத்திரம் வலி வித்தை யென்பவற்றையுடைய அரசனிடத்திற்றான் மனிதசுகத்திற்கு முடிவுண்டாகிறது. மானுட கந்தர்வனென்று சொல்லப்படுபவன் அந்த அரசனினும் நூறு மடங்கு சுகத்தை யடைகிறான். † தேவகந்தர்வன் என்பவன் அவனினும் நூறு மடங்கு சுகமுள்ளவன். ‡ பிதிரர் என்பவர் அவனினும் நூறுமடங்கு சுகமநுபவிப்பவராவர். பிதிரரைப்பார்க்கிலும் ¶ ஆஜானதேவர்கள் நூறுமடங்கு சுகிகள். $ கர்மதேவர்கள் அவர்களைவிட நூறுமடங்கு சுகிகள். * * முக்கியதேவர்களுடைய சுகம் அவர்களினும் நூறுமடங்கதிகம். இந்திரன் சுகம் அவர்களினும் நூறுமடங்கு அதிகம். சகலதேவர்களுக்கும் குருவான பிரகஸ்பதியின் சுகம் இந்திரனினும் நூறுமடங்கு அதிகம். பிரஜாபதியின் சுகம் குருவினும் நூறு மடங்கு அதிகம். பிரஹ்மாவின் சுகம் அவரினும் நூறுமடங் கதிகமானது. பிரஹ்மாவிற்குத் துக்கம் சிறிது மில்லை. இவ்விதமாக அடையப்படும் சுகத்தின் கிரமத்தைத் தைத்திரீய வுபநிஷதம் அறிவிக்கிறது. அரசன்முதல் பிரஹ்மாவரையிலுள்ள சுகத்தை ஏகாந்தவாசியாயும் இருதயத்திற் காமத்தை யெரித்தவனாயு முள்ளவன் எப்போதும் அடைவான். ஏகாந்ததேசத்தில் இவ்வித சுக மிருக்கின்றது. ஸ்திரீ புத்திர தனசங்கம் எப்போதும் துக்கத்தையே தருவனவாம்.

---

* இந்தக் கற்பத்தில் மனிதனாகிப் புண்ணிய விசேஷத்தால் கந்தர்வ பதவியை அடைந்தவன் மானுடகந்தர்வன்.

† முற்கற்பத்தில் செய்த புண்ணியத்தால் இந்தக் கற்பத்தின் ஆதியிலேயே கந்தர்வத்தன்மையை அடைந்தவன் தேவகந்தர்வன்.

‡ தங்களுடைய லோகங்களில் வெகுகாலம் வரையில் வசிக்கும் அக்கினிஷ்வாத்தர் முதலியோர் பிதிரர்கள்.

¶ கற்பத்தின் ஆதியிலேயேதேவத்தன்மையைஅடைந்தவர்கள் ஆஜானதேவர்கள்.

$ இந்தக் கற்பத்தில் அசுவமேதாதி கர்மங்களைச் செய்து வெகு ஐசுவரியத்தை அடைந்து ஆஜான தேவர்களால் சேவிக்கப்பட்டிருப்பவர்கள் கர்மதேவர்கள்.

* * யமன், அக்கினி, வாயு, சூரியன், சந்திரன் முதலிய பிரதான தேவதைகள் முக்கியதேவர்களாவர். சிலர் யமன்முதல் பிரஹ்மாபரியந்தமுள்ள தேவதைகளையும் சிலர் 8 வசுக்கள், 12 ஆதித்தியர்கள், 11 ருத்திரர்கள் என்னும் 31 தேவர்களையும் முக்கிய தேவர்களாகச் சொல்லுகிறார்கள்.

## 221. ஸ்திரீ சங்கதுக்க வர்ணனம்.

எவனுடைய ஸ்திரீ குரூபியாயும் துர்ப்பாஷிணியாயுமிருக்கிறளோ, அவன் மனதில் எப்போதும் துக்கமே குடிகொண்டிருக்கும். ஸ்வாமி! இந்த ஸ்திரீ மலமூத்திராதிகள் நிறைந்த பாண்டம். இந்த முண்டையை எந்தப் பாவத்திற்குத் தண்டனையாக எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள். எருமைக் கடாவுக்கு எருமைக்கடாரியும் ஆண்பிசாசுக்குப் பெண்பிசாசும் ஆணொட்டகத்துக்குப் பெண்ணொட்டகமும் பிரியம். பெண்கழுதையின் சப்தத்தைக் கேட்டு ஆண்கழுதை மோகிக்கிறது. ராத்திரியில் ஆயிரக்கணக்கான பெண் நரிகளின் சப்தத்தைக்கேட்டு ஆண்நரிகள் ஊளையிடுகின்றன. வியபசாராதி யபராதமின்றிய மனைவியை வைராக்கியத்தாலன்றி விடுதல் பாவம் (இவளுடைய குரூபமும் துர்ப்பாஷணையும் என்னுடைய பூர்வகர்மாநுசாரத்தினால் கிடைத்திருக்கின்றன. இந்த ஜன்மத்தில் அவைகள் அபராதங்களாகா.)என்று கொண்டு இரவும் பகலும் கிலேசப்படுவான்.

ஸ்திரீயானவள் அழகுள்ளவளாயும் மதுரமான வசனத்துடன் கூடினவளாயுமிருந்தால் குரூபமான ஸ்திரீயினும் அதிகதுக்கத்துக்கு ஹேதுவாகிறாள். சுவர்ணம்போல் காந்தியுள்ள ஸ்திரீயே பிரியமுள்ளவளாய்ப் புருஷனது தர்மார்த்தங்களைக் கெடுத்து மோக்ஷத்தையும் கெடுப்பவளாகின்றாள்.

## 222. ஸ்திரீ சங்கத்தால் தன நாசமாகுதல்.

புருஷன் அவளுடைய இனியவார்த்தையாகிய விஷங்கலந்ததேனைப் புசித்து அதனால் புத்தியை மாய்த்துக்கொள்ளுகிறான். காமாந்தகனாய்ச் சொப்பனத்திலும் அவளைத்தவிர வேறொன்றையும் பார்க்கிறதில்லை. வீட்டிலாவது வெளியிலாவது அகப்படும் தனம் வஸ்திரம் பூஷணம் முதலியவைகளெல்லாவற்றையும் அவளுடைய சரீரவுபயோகத்திற்காகவே சமர்ப்பிப்பான். குரு தாய்தந்தையர்களின் ஞாபகமே வருகிறதில்லை. பாயஸாதி பதார்த்தங்களை ஸ்திரீயாகிய தெய்வத்திற்குப் பக்தியோடு சமர்ப்பிப்பான். மோகமென்னும் மூக்கணாங்கயிற்றால் கட்டப்பட்டு விடுபடாத புருஷனாகிய எருதை ஸ்திரீயாகிய குடியானவன் இடிக்கின்றான்.

## 223. ஸ்திரீ ஸங்கத்தால் தர்மம் கெடுதல்.

கூண்டிலடைபட்ட கிளி சுத்தாசுத்த வசனங்களைக் கற்றுக்கொடுத்தபடி சொல்வதுபோல ஸ்திரீ சொல்லிக்கொடுத்தபடி தாய் தந்தையரிடத்தில் பேசுகிறான். ஆண்மயில் பெட்டையின் முன்பாக ஆடியதைச் சந்தோஷப்படுத்துவதுபோலக் காமுகன் பலவித வேஷத்தால் ஸ்திரீ சொன்னபடியாடி அவளைச் சந்தோஷிப்பிக்கிறான். இருவர் மனமும் ஒருமித்துக் காமக்கள்ளின் வெறி மிகுந்தகாலத்தில் மிகவு முன்மத்தர்களாய் வஸ்திரத்தை இழந்து அமங்களமான பிரேதம்போல் நக்கினவடிவாய் ஆடுகள்போல் அடிக்கடி பின்தொடர்ந்து திரிந்து ரமிக்கிறார்கள். மத்திய பானம் பண்ணினவன்

துர்க்கந்தத்தையறியாமல் புத்திகெட்டு மலினமான தெருச் சாக்கடைகளிற் புரளுவதுபோல் ஸ்திரீபுருஷர்கள் காமமதத்தால் விவேகங்கெட்டு மிகமலினமான சரீரங்களைக் கட்டிக்கொண்டு புரளுகிறார்கள். காமமதம் மனதைப் பிரமிக்கும்படி செய்கின்றது. காமத்தை வென்றவர்கள் இதனைக் கேட்டு ஆச்சரியப்படுகிறார்கள். காமமதத்தால் புருஷனுடைய புத்தி நாசமடைகிறது. தன்னுடையது பிறருடையது உயர்ந்தது தாழ்ந்தது என ஸ்திரீவித்தியாசந் தெரிகிறதில்லை. காமியான ஸ்திரீயும் துக்கத்துக் குட்படுகிறாள். காமவிகாரம் பலப்படும்போது பிராஹ்மணஸ்திரீ நீசபுருஷனுடனும் ரமிக்கிறாள். இப்படி ஸ்திரீபுருஷர்கள் காமக்கள்ளைப்பருகி அனேகவித அனர்த்தங்களைச் செய்கிறார்கள். காமதோஷத்தினால் நரன் இவ்வாறு காலங்கழிப்பது சுந்தரமான ஸ்திரீயையடைந்ததனாலாம். இதனாற்றான் அதிக சுரூபமான ஸ்திரீ துக்கத்தைத் தருபவளாவள். ஆதலால் அவளை விடுதல் சுகத்தைத் தருவதாம் என்று வெகுமுனிகள் சொல்லியிருக்கிறார்கள். எவன் அழகிய ஸ்திரீயைக் கூடப் பிரியப்பட்டு விஷத்திற்குச்சமானமாக எண்ணிஓடாமலிருக்கின்றானோ, அவன் இருமைச்சுகத்தையு மிழக்கின்றான் என்பதற்குக் குணநிறைந்த முனிவர்கள் சாக்ஷி கூறுவர்.

## 224. ஸ்திரீசங்கத்தால் பிந்துகெடுதல்.

புசிக்கப்பட்ட நாலுவித பதார்த்தங்களின் ரஸத்தினின்றும் பிந்து உற்பத்தியாகிறது. எல்லோருக்கும் ஜீவனம் பிந்துவின் ஆதீனமாம். பிந்து மனதின் துக்கத்தைப் போக்குகிறது. மனது எப்போது ஜீவர்களுக்கு மலத்தில் வசிக்கிறதோ, அப்போது அவர்களுக்குத் துக்கமுண்டாகிறது. மனம் இரத்தத்தில் வாசஞ்செய்யின் அப்போது சஞ்சலம் அதிகப்பட்டு இரஜோகுணமுண்டாகிறது. எப்போது மனம் பிந்துவில் வசிக்கிறதோ, அப்போது சோகமும்சஞ்சலத்தன்மையும் கெடும். அன்றியும் தானே பலமுடையவனென்றறிந்துபிரஸன்னனாகிச்சுபகாரியத்திற்பிரவேசிக்கிறான். பிந்துஎவர்களிடத்துஅதிகமாயுண்டோ அந்தச் சரீரத்தில் அழகும் காந்தியும் உண்டாம். பிந்துதான் சரீரத்தில் விளக்கமானது. பிந்து நசித்தால் சரீரமும் மனமும் நசிக்கின்றன. எவனுக்குப் பிந்து ஒருகாலும் நாசமடைகிறதில்லையோ அவன் சரீரம் நரைதிரையின்றிப் பிரகாசிக்கும். பிந்துசம்ரக்ஷணையால் * கேசரிமுத்திரையை அப்பியஸிக்கும் யோகி சிரேஷ்டத்துவமடைகிறான். பிந்துவை யிழுத்த

* ஆறுமாத அப்பியாசத்தால் நாவினடியிலுள்ள நரம்பை 21-யவிரளவு கிரமமாக அறுத்து நாவை வளர்க்கின்றார்கள். அந்நாவை யோகிகள் லம்பகை யென்பர்.

மேற்சென்று சிரசில் நிலைத்துள்ள பிராணவாயுவைத் தடுத்தற்பொருட்டு மேல்வாய்த் துவாரத்தில் அந்த லம்பகத்தைப் பொருத்துதலைக் கேசரிமுத்திரை யென்பர். அதனால் சகல சரீரத்திலும் காமாதிவிருத்தியோடுகூடிய மனதின் பரவுதலின்மையால் பிந்துவாகிய வீரியத்தை ரக்ஷித்தலால் யோகிக்குக் கல்யாண முண்டாகிறது.

லால் அஷ்டமாசித்திகளும் அவனுக்குச் சித்திக்கின்றன. ஜகத்தில் இவ்வாறு மிகவும் உத்தமமாயுள்ள பிந்துவை ஸ்திரீயானவள் தன் அல்குலில் கிரகித்துக் கொள்ளுகிறாள். கரும்பை ஆலையில் அடிக்கடி கொடுத்து பிழிந்து சக்கையான பின் எரித்துவிடுவதுபோல ஸ்திரீயானவள் புருஷனைத் தன்புஜங்களால் ஆலிங்கனஞ்செய்து அவன் வீரியத்தை யபகரித்துத் தன் யோனிகடத்தில் நிரப்புகிறாள். இவ்வாறு புருஷன் வீரியமெல்லா மொழியும்வரையில் பிரதிதினஞ்செய்து, அவன் சரீரத்தை யசாரமாக்கிவிடுகிறாள். வாசனையிழந்தபூவின் சக்கையைப்போல புருஷன் பிந்துவற்றுப்போனபோது அவனைக் கடுஞ்சொற்களாகிய கொள்ளிக்கட்டையாற் சுடுகிறாள். அழகு, பலம், தனம் என்பன மிகுதியாயிருக்கிறபுருஷனினும் ஸ்திரீ பலமுடையவளாய் அவன் அழகுபலம் தநமுதலியவற்றைக்கெடுத்துநீஎன்கணவனோஎன்கிறாள். மூடன் மறுபடியும் அவளிடத்தில் ரமிக்கவிரும்புகிறான். அவன் தொட்டவுடன் துர்ப்பாஷையாய்ப் பேசுகிறாள். கோபத்தினால் சிவந்த கண்களைச் சுழற்றுகிறாள். பிறகு புருஷன் சமீபத்திற் போகிறதில்லை. கோடிவச்சிரங்களின் சாரஞ்சேர்ந்தால் எவ்வளவு கடினமாயிருக்குமோ, அதைவிட அதிகக்கடினமானது ஸ்திரீ இருதயமென்று ரிஷிகள் முரசறைகிறார்கள். ஸ்திரீயானவள் இவனை அநாதரவு செய்து எவ்வளவிற் கெவ்வளவு பின்னிடைகிறாளோ, புருஷன் அவ்வளவிற் கவ்வளவு அவளைப் பின்பற்றுகிறான். சுருதி ஸ்மிருதி புராணாதிகளைப்படித்து தர்க்க நிபுணனாய் ஒருவனாலும் ஜயிக்கப்படாத அதிபுத்திசாலியாயுள்ளவனையும் ஸ்திரீ ஸ்வாதீனஞ்செய்து விடுகிறாள். புருஷன் படிப்பித்தகுரங்கு சொன்னபடி யாடுவதுபோல் ஸ்திரீயின் இஷ்டப்படி ஆடுகிறான். ஸ்திரீமோகத்தினால் பண்டிதனும் அப்பொழுதே வார்த்தை யுக்தி முதலியவற்றை மறந்துவிடுகிறான். எப்பொழுதாவது வேதாதிகளின் ஞாபகம் வந்தால் ஸ்திரீயினிடத்தில் வெறுப்பை யடைந்து அவளை விட விரும்புகிறான். அப்போது அவள் தன் கண்ணம்பைச் செலுத்துகிறாள். அவள்கண்ணம்பிற்கு வித்வான்களே தப்பாரகளென்றால் மற்ற மூடர்கள் ஒரு பொருளா? இவ்வாறு ஸ்திரீயினிடத்தில் தீவிர வைராக்கிய மில்லாமையால் மந்த மதியுடையோர் மறுபடியும் இச்சிக்கிறார்கள். அரசன் சேவகரைக் கட்டளையிடுவதுபோல் ஸ்திரீ புருஷனுக்கு நாநாவித உத்தரவுசெய்து எஜமானைப்போல உட்காருகிறாள். எவன் ஸ்திரீயின் கண்ணாகிற பாணத்தால் அடிக்கப்படுகிறானோ அவன் இதயம் நேராகாது. நன்மை தீமை சுகம் துக்கம் முதலியவற்றை மறக்கிறான். அவன் எப்படிப் பவதுக்கத்தினின்றும் விடுபடுவான். வேசிகளும் பரஸ்திரீகளும் மிகவும் நிந்திக்கத்தக்கவர்கள். ஸ்வஸ்திரீயோ நரகசாமக்கிரியே; சந்தேகமில்லை. விவேகியானவன் இம்மூவர்களின் சிநேகத்தையும் விட்டுவிடுகிறான். இவர்களுடன் சிநேகஞ்செய்கிற மூடன் நாசத்தையே யடைகிறான். தர்மார்த்த மோக்ஷங்களை ஸ்திரீ செவ்வையாய் நாசஞ்செய்கிறாள். அவளைச் சகல அநர்த்தங்களுக்குங் காரணமென் றறிந்துவிட்டவனுக்கே சுகமுண்டாகும்.

## 225. புத்திர சங்க துக்கவர்ணநம்.

புத்திரனும் அப்படியே எப்போதும் துக்கத்துக்குக் காரணமாகிறான். புத்திரன் இலலாவிட்டால் இல்லையென்கிற துக்கம் ஒன்றே. புத்திரன் உண்டானால் கர்ப்பசமயத்தில் துக்கம். பிறப்பிலும் துக்கமாம். இறந்தாலோ அநேகதுக்கம். ஸ்திரீ கர்ப்பிணியாகாவிட்டால் அதுவரையில் ஸ்திரீ புருஷர் இருவருக்கும் பெருந்துக்கமுண்டாகிறது. கர்ப்பமுண்டானால் அது நாசமடையாமலிருக்கவேண்டுமே யென்று விசாரப்படுகிறாள். பிறகு பிறப்பது பெண்ணோ ஆணோ வென்று சிந்திக்கிறார்கள். கர்ப்பம் விழுந்துபோவதற்கு ஏது அநேகமுண்டு. அரைகுறையான மாஸங்களில் சிசு ஜனிக்காமலிருக்கவேண்டுமே யென்று கவலைப்படுகிறார்கள். ஒன்பதுமாத மானபின் வெகு வருத்தப்பட்டுப் பிரசவிக்கிறாள். உலகத்தில் நவக்கிரகங்களில் ஒன்றிரண்டு விரோதமில்லாதிராது. சிலவிருத்தமா யிருப்பதைக்கண்டு தம்பதிகள் அகோராத்திரம் மனம் வருந்துகிறார்கள். சிசு ஸ்தன்னியபானஞ் செய்யாவிட்டால் தாய் தந்தையர் கண்ணீர் விட்டழுகிறார்கள். இவ்வித சிந்தையாற் சில மாதங்கழிந்தபின் பல் முளைக்கும்போது வெகு குழந்தைகள் மரணமடைவதை எண்ணி விசனப்படுகிறார்கள். வியாதியாற் குழந்தை இளைத்துப்போனால் சந்திகளில் கழிப்புக் கழித்துப் போடுகிறார்கள். அதன் சவுக்கியத்தின்பொருட்டுப் பள்ளன் பறையன் சக்கிலியன் துலுக்கன் முதலியோர்களைக்கொண்டு பிராமணர்கள் மந்திரித்துக்கொள்ளுகிறார்கள். சைய்யத், க்வாஜா, பீர், பக்கீர் என்னுமிவர்களைத் தீரமில்லாது கை குவிக்கிறார்கள். எவனை இந்துக்கள் ஒருபோதும் மதிக்கமாட்டார்களோ அவனைப் புத்திரனை முன்னிட்டு இஷ்டனாக வறிகிறான். பைரவன் பூத முதலியவற்றைப் பிரார்த்தித்து ஸ்மசான பூமியில் பலி கொடுக்கிறார்கள். பூஜாரியை யழைத்து வீட்டில் உடுக்கடுப்பித்து கை குவித்து நாணமின்றிப் பூஜிப்பார். யந்திரம் தாழ்த்து முதலியவற்றை ஏராளமா யெழுதிக் குழந்தையின் கழுத்தைச் சுற்றிக் கட்டுவார்கள். ஒரே நாராயணனைப் பஜித்து கனவிலும் வேறு தேவதைகளை ஸ்மரிக்காதவர்களும் குழந்தையின் நிமித்தம் வியபசாரிபோல் கண்டவிடமெங்கும் பல தேவதைகளைத் தேடுகிறார்கள். வைசூரிகண்டால் தாய் தந்தையர் மனதை வியசனம் நாசம் பண்ணுகிறது. ஸ்நான முதலிய கிரியைகளைவிட்டு அழுக்கோடிருப்பார்கள். கழுதையை மேலான தெய்வமெனக் கொண்டாடுகிறார்கள். "தாயே உன் வாகனமான கழுதையை ஊரைச்சுற்றிக்கொண்டுவருகிறேன். அதற்குத் தீனிபோடுகிறேன். என் குழந்தையைக் காக்கவேண்டும்." என்று வணக்கத்தோடு கடலையை மடியில் போட்டுக்கொண்டுபோய்க் கழுதைக்குக் கொடுப்பார்கள். இவ்விதமாக வெகு வருத்தப்பட்டுக் குழந்தைகளைக் காப்பாற்றுகிறார்கள். குழந்தை பெரியவனாகும்வரையில் மற்றும் அநேக * மாயிரம் கவலையுண்டு. குழந்தைக்கு

* 1. யௌவன அவஸ்தைக்கு முன் சிறுவர்களுக்கு விளையாட்டில் ருசிவிசேஷமாயுண்டாகிறது. அவர்களை வலிந்து பிரவிருத்திக்கச் செய்தலால் தினந்தோறும் துக்கமுண்டாகிறது.

ஆயுள் அற்பமானால் இறந்துபோவானென்று அதற்கு அநேக உபாயஞ்செய்வர். ஆயுட் குறைவால் இறந்துபோனால், தாய் தந்தையர் தலையி லடித்துக்கொண்டு தங்களை வெகுதீனர்களாகப் பாவித்து இரவும் பகலும் ஐயோவென்றலறி, ஜன்மம் வியர்த்தமாகிவிட்டதே யென்று நினைத்துத் திக்காரஞ்செய்கிறார்கள். புத்திரனுள்ளவன் புத்திர மரணத்தாலடையுந் துக்கம் புத்திரனைப்பெறாதவன் அடையமாட்டான். புத்திரன் இறவாது பிழைத்துப் பெரியவனானால் அவன் தன் ஸ்திரீயைப் போஷித்துக் காக்கிறான். வெகு பாடுபட்டு வளர்த்த தாய்தந்தையருக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுப்பதும் அவனுக்குச் சுமை. இராத்திரி அவள் படுக்கையிற் சொல்லிக்கொடுத்த படி மாதாபிதாக்களை வைவான். சற்புத்திரனாயின், காலையில் எழுந்து பெற்றோரைத் தூரத்திலிருந்து நமஸ்கரித்து அவர்கள் விரும்பினால் நெருங்கி வருவானேயன்றி மற்று அவர்கள் சந்நிதியில் நிமிர்ந்தும் பாரான். அசத்புத்திரனாயின் காலையில் எழுந்தவுடனே தாய் தந்தையரைத் தூர்ப்பாஷையாய்ப் பேசி அவர்களுக்குத் தங்கள் சரீரத்தை மாத்திரம் விட்டு வீட்டிலுள்ள பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு வேறிடத்தில் குடிப்போகிறான். தான் சம்பாதித்து அவர்களுக்கொன்றும் கொடுக்கிறதில்லை. இரவும் பகலும் ஸ்திரீயின் சரீரத்தையும் தன் சரீரத்தையும் போஷித்து நாட்களெல்லாம் கழிப்பான். பிதா மாதாக்கள் அவனைப் பார்த்து பெருமூச்சு விடுவார்கள்.

இவ்விதமாகப் புத்திரன் எப்போதும் துக்கத்தையே விளைவிப்பவனாகின்றான். விசாரித்துப் பார்க்குமிடத்து எப்போது புத்திரன் துக்கரூபமாகின்றானென்றறிந்து எவன் புத்திரனால் சுகம்பெறலாமென்று கருதுகிறானோ அவன் மூடசிரோமணி.

## 226. தனசங்க துக்கவர்ணனம்.

ஸ்திரீயையும் புத்திரனையும் விட்டுத் தனத்தை விரும்புவோன் வாயில் மண் விழும். தனம், சம்பாதிப்பதிலும் செலவிடுதலிலும் காப்பாற்றுவதிலும் இழந்துபோவதிலும் துக்கத்தையே தருகிறது; தனத்தை அதிகமாய்ச் சேர்

---

2. பள்ளிக்கூடத்தில் மற்றச் சிறுவர்களை அடித்துவருவதினாலும் அல்லது இவர்கள் அடிபட்டுவருவதினாலும் துக்கமுண்டாகிறது.

3. பின மந்த சம்ஸ்காரத்தால் படிக்காவிட்டாலும் கிலேசமுண்டாகிறது.

4. படித்தும் வியவகார சாமர்த்திய மில்லாவிடினும் வியாகூல முண்டாகிறது.

5. சூதாடல் முதலிய துர்வியாபாரங்களிற் பொருந்தினும் வியாகூல முண்டாகிறது.

6. பின் அவனுக்கு மணஞ் செய்வித்தற்பொருட்டுப் பெருங்கவலை யுண்டாகிறது.

7. பின் அவனது விவாகத்தின்பொருட்டும் கவலை யுண்டாகிறது.

இவ்வாறு யௌவனவஸ்தைவரையில் மாதா பிதாக்களுக்கு அநேக துக்க முண்டாகின்றன என்பது தாற்பரியம்.

க்க இச்சிக்கிறவன் இலக்ஷம் கோடி எனப்படும் * அநர்த்தங்களைச் செய்கிறான். பணஞ்சேர்க்கத் தொடங்குகிறவன் ஜாதிதர்ம குலதர்மங்களை விட்டுவிடுகிறான். அப்படிச்செய்தும் அதிருஷ்டமின்றி அத்தனங் கிடைக்கிறதில்லை. கிடைத்தால் அதைக் காப்பாற்றிக்காப்பாற்றி இறக்கிறார்கள். செலவிட்டால் குறையுமேயென்னும் விசாரம் வருகிறது. முழுதும்கெட்டால் அளவில்லாத துக்கம். இவ்விதமாகத் தனம் மனதிற்குத் துக்கத்தையே விளைவிக்கிறது. அதனை யிச்சிப்பவன் இகழத்தக்கவனுவன்.

இவ்விதமாக ஸ்திரீ புத்திரன் தனம் என்பன துக்ககரமானவை யெனத் தெரிந்து பர்ச்சு அவற்றில் அபிமானத்தை யொழித்தான்.

## 227. இராஜாவுக்குப் பர்ச்சுவினிடத்துப் பிரேதபுத்தி யுண்டாதலும் இராஜா ஓடுதலும்.

பர்ச்சு வனத்தில் ஏகாந்தத்திற் சென்று சித்தசாந்தியைச் செய்தான். புதிதாய்ப் பர்ச்சு ஸ்தானத்தில் மந்திரியாய் நியமிக்கப்பட்டவன் இந்த விருத்தாந்தங்களை யெல்லாங் கேள்விப்பட்டுப பர்ச்சு ஜீவித்திருக்கிறானென்று ராஜா கேள்விப்பட்டாலாவது நேரில் சந்தித்தாலாவது நாமெல்லோரும் பொய்யராய்விடுவோம், அரசன் எல்லோரையும் தண்டிப்பான், என்று மனதில் நினைத்து உத்தியோகஸ்தர்களுடன் ஆலோசித்து ராஜாவிடம் எல்லோரும் போய், பர்ச்சு பிசாசாய்க் காட்டிற் சஞ்சரிப்பதாயும், உடம்பெல்லாம் சாம்பற்பூசிக்கொண்டிருப்பதாயும், அவனைச் சந்தித்துப் பேசுகிறவர்களை யவன் அடிக்கிறதாயும், அவனைக் கண்டவுடன் ஓடுவோர்மாத்திரம் தப்புவதாயும் தெரியப்படுத்திக்கொண்டார்கள். இதனைக் கேட்டமாத்திரத்தில் உண்மையை விசாரிக்காமலே அரசன் பர்ச்சு இறந்து பிசாசாய் விட்டனனென்று நிச்சயித்துவிட்டான். பிறகு ராஜா ஒரு நாள் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். பர்வதங்களும் நெருக்கமான விருக்ஷங்களும் சிங்கம் புலி முதலிய துஷ்டமிருகங்களு மிருக்குமிடத்திற் பிரவேசித்து ஒருமரத்

---

* ஸ்ரீமத்பாகவதத்தில் பதினோராவது ஸ்கந்தத்தில் 23-வது அத்தியாயத்தில் "அர்த்தத்தைச் சம்பாதிப்பதிலும் சம்பாதித்த அர்த்தத்தைக் காப்பாற்றுவதிலும் அதை விருத்திசெய்வதிலும் அது செலவாகிறதிலும் நாசமாகிறதிலும் அனுபவிக்கப்படுவதிலும் மனிதனுக்குத் துக்கம் பயம் சிந்தை பிரமம் என்பவையுண்டாகின்றன. சம்பாதிக்கிறதிலும் விருத்திசெய்வதிலும் துக்கமும், காப்பாற்றுவதில் பயமும், செலவிலும் அனுபவிப்திலும் சிந்தையும், நாசத்திற் பிரமமுமுண்டாகின்றன. அர்த்தத்தை அடையும்பொருட்டு (1) திருட்டு (2) ஹிம்சை (3) பொய்ம்மொழிதல் (4) டம்பம் (5) இச்சை (6) குரோதம் இவ்வாறு அனர்த்தங்களிருக்கின்றன. அடைந்த அர்த்தவிஷயத்தில் (1) கர்வம் (2) அபிமானம் (3) ஸ்நேகத்தியாகம் (4) வைரம் (5) அவிசுவாசம் (6) அசூயை (7) ஸ்திரீ (8) மத்தியம் (9) சூதாடல் என்பவற்றாலுண்டாகுந்துக்கம் என ஒன்பது அனர்த்தங்கள் இருக்கின்றன. ஆகையால் ஒரநர்த்தம் 15 அநர்த்தங்களுக்கு மூலகாரணமாயிருக்கிறது." என்று சொல்லப்பட்டிருத்தலால் கோடி அநர்த்தமென்றார்.

தடியில் தனது மந்திரியாகிய பார்ச்சு தவஞ்செய்வதைக் கண்டு இவன் பிசாசு என்னும் பயத்தினால் அரசன் ஓடினான்.

## 228. இலக்கம் 227-ல் கூறிய திருஷ்டாந்தத்தைத் தார்ஷ்டாந்தத்திற் பொருத்துதல், பேதவாதத்தைத் திக்கரித் (இகழ்) தலோடு விடவேண்டுமெனல்.

பார்ச்சு இறந்து பிசாசானானென்னும் பொய்வசனத்தை நிசமாக நம்பி ஜீவித்திருக்கும் பார்ச்சுவைத் தன் கண்ணால் பார்த்தும் பிசாசென்னும் நினைவால் அரசன் ஓடினதுபோல் துவைதவாதிகளின் வசனத்தைக் கேட்டு அஞ்ஞானி அதில் விசுவாசம் வைத்து அந்தக்கரணத்தில் பிரஹ்மம் அத்வைதமென்னும் பிரத்தியக்ஷஞான முண்டானாலும் பேதவசன விசுவாசத்தால் எப்போதும் துக்கத்தையே யடைகிறான். ஒருகாலும் அவனுக்குப் பிரஹ்மத்தின் சாக்ஷாத்காரஞானமுண்டாகிறதில்லை. பேதவசனத்தை யசத்தியமாக அறிகிறவனுக்குப் பிரஹ்மஞானம் மகாவாக்கியத்தாலுண்டாகும். சிஷ்யனே! பேதவசனத்தை நீ கேட்பாயானால் அதைப் பொய்யாகவும் நரகசாதனமாகவும் அதைப் பிரதிபாதிப்பவரெல்லோரும் பொய்யரென்றும் அறி. அவர்களிடத்தில் ஒரு காலத்திலுஞ் சேரக்கூடாது. சேர்ந்தாலும் அவர்களுடைய பேதவசனத்தைக் கேட்கலாகாது. கேட்டாலும் கேட்டவுடனே அதைத் தள்ளவேண்டியது. அவ்வசனத்தை மிலேச்ச ஜனங்களது வசனமாக நினைத்து ஓடுக.

## 229. மித்தையாகிய துக்கம் மித்தையினால் நாசமாதலும், ஓர் அரசன் சொப்பனமடைதலும், அவனுக்கு நரியால் துக்க முண்டாதலும், அது மித்தையாகிய வைத்தியனால் கெடுதலும்.

வேதமும் குருவும் மித்தையானால் சமுசாரதுக்கத்தை யெப்படி நிவர்த்திக்கக்கூடு மென்று நீ கேட்டகேள்விக்கு உத்தரஞ் சொல்லுகிறேன் கேள். பொய்யான துக்கம் பொய்யான உபாயத்தால்தான் நிவர்த்தியாகும். வேதமுங் குருவும் சத்தியமாயின் பொய்யான ஜகத்தின் துக்கம் நிவர்த்தியாகாது. இதில் ஓர் திருஷ்டாந்தஞ் சொல்லுகிறேன் கேள். அதனால் உன் சந்தேகங்கள் நிவர்த்தியாய்விடும். தேவர்களுக்கரசனான இந்திரன்போல் வெகுபிரதாபமுள்ள அரசன் ஒருவனிருந்தான். அவனிடத்தில் பீமனுக்குச் சமானமான அனேக வீரர்களிருந்து வாயில் காத்துவந்தார்கள். அவனுடைய அந்தப்புரத்திலும் வெளியிலும் உருவின கத்தியுடன் அனேகர் காத்துவந்தார்கள். மேல் உப்பரிகையில் சயனிக்கு மறையில் புஷ்பங்கள் பரப்பின மெத்தையில் அரசன் தூங்கிக்கொண்டிருந்தான். ஒரு ஈயும் அவ்விடத்திற் பிரவேசிக்க முடியாதெனின் வேறெதுதான் அங்கே போகக்கூடும். அரசன் அப்போது ஒரு

கனவுகண்டான். அது யாதெனின், ஒரு நரி அவன் காலைப் பிடித்துக்கொண்டது. அதனை யுதறித்தள்ள அவனால் முடியவில்லை. சகாயத்துக்காகக் கூக்குரலிட்டும் வாயிலில் இருந்தவீரர்கள் சகாயத்துக்கு வரவில்லை. பிறகு அரசன் ஒரு தடியை யெடுத்து நரியின் தலையி லடிக்க அது ஓடிவிட்டது. கடித்தவிடத்தில் வெகு வலியுண்டாயிற்று. தடியின் சகாயத்தால் நொண்டிக்கொண்டு ஒரு வைத்தியன் வீட்டுக்குப் போய் இரணத்தை யாற்றும்படிக்கு மருந்துகேட்டான். வைத்தியன் தன் கையில் மருந்தில்லை யென்றும் பணங்கொடுத்தால் பண்ணிக்கொடுக்கிறதாயுஞ் சொன்னான். அதனைக்கேட்டு அரசன் தன் கையில் ஒரு காசுமில்லாமையால் பின்வாங்கி வெகு வருத்தத்துடன் திரும்பி மனதில் ஆலோசித்தான் :— நான் தனிகனாயிருந்தால் இந்த வைத்தியன் வீட்டுக்கு ஓடிவருவான். நான் ஏழையென்றும் என்னாற் பிரயோஜனமில்லையென்றும் நினைத்து, என்னைக் கைவிட்டான். ஆனால் அவனிடத்திற் பிசகில்லை. பிரதிப்பிரயோசனமின்றி ஒருவனும் ஒரு காரியமும் செய்யமாட்டான். தாய் தந்தை ஸ்திரீ பிள்ளை பந்துக்களெல்லாம் தங்களுடைய பிரயோசனத்தின் பொருட்டே ஒருவனிடத்தில் அன்பு பாராட்டுகிறார்கள். பிரயோஜனமில்லாவிடின் இவர்கள் திரும்பியும் பார்க்கமாட்டார்கள். எவனது இன்மையை ஒரு நிமிஷமும் சகிக்கமாட்டார்களோ, எவன் கொஞ்சநேரம் பிரிந்துபோனாலும் அதிக துக்கப்படுகிறார்களோ, எவன் வீட்டுவாயிலில் வந்தவுடன் அவனைக் கட்டிக்கொள்ள எல்லோரும் கூடுகிறார்களோ, அவன் துரதிருஷ்டத்தினால் குஷ்டரோகியாய் விரல்கள் அழுகிப்போய் அவற்றிலிருந்து ஜலம் பெருக ஈக்களால் உபத்திரவப்பட்டுக்கொண்டிருப்பானாயின், இவனால் என்னப் பிரயோசனமென்று நினைத்து முன் பிரியமாயிருந்தவர்கள் இப்போது அடா! பாவிப்பயலே! ஏன் இன்னும் ஜீவித்துக்கொண்டிருக்கிறாய், பிராணனை விடு என்று கடிந்து பேசுகிறார்கள். கண்ணாற் காணச் சகிக்கிறதில்லை. வாந்தியைப்போல் அருவருக்கிறார்கள். பதியினிடத்துப் பிரியமுள்ள ஸ்திரீயானவள் சற்று விலகியிருந்துக்கொண்டு முகத்திலுள்ள ஈக்களை யோட்டுகிறாள். இவனை மடியில்வைத்து வளர்த்த தாய் தந்தையர் இவனுக்கு வேண்டியதைக் கொடுத்து விலகிவிடுகிறார்கள். பந்துக்கள் மறைவில் நின்றுக்கொண்டு பேசுகிறார்கள். இவ்விதமாக சர்வஜகத்தும் தம் தம் சொந்தப் பிரயோசனத்தையே நாடுகிறது. சொந்தப் பிரயோசனத்தை நாடாமல் ஒருவனிடத்தில் அன்பு பாராட்டுவோர் யார். நான் தனிகனா யில்லாமையால் அவன் எனக்கு மருந்து கொடுக்கவில்லை யென்று இப்படி நினைத்துக்கொண்டு போகும்போது அரசன் ஒரு சந்நியாசியைச் சந்தித்தான். அவன் ஒரு ஔஷதங் கொடுத்தவுடன் வலி சுத்தமாய் நீங்கிவிட்டது. அரசன் நித்திரையினின்று விழித்துக்கொண்டவுடன் கடி, துக்கம், சந்நியாசியென்னும் ஒன்றையும் காணவில்லை. சிஷ்யனே! இந்தத் திருஷ்டாந்தம் உனக்குச் சொன்னேன். இதனால் பொய்யினாற்றான் பொய் நிவர்த்தியாகும் என்று அறி. ராஜவுக்குப் பொய்யான துக்க முண்டானகாலத்தில் நிஜமானவை யாதொன்று முபயோகப்படவில்லை.

## 230. இலக்கம் 229-ல் கூறிய பிரசங்கத்தின் அபிப்பிராயம்.

அபிப்பிராயம் இதுவாம்:—சமுசாரரூபதுக்கம் பொய்யாக இருக்கிறது ஆகையால் அதனை நிவர்த்திக்கச் சாதனங்களான வேதமும் குருவும் பொய் யாகவே யிருக்கவேண்டும். பொய்மை நாசஞ்செய்ய நிஜமான சாதனங்கள் வேண்டியதில்லை.

சத்தியசாதன முளதாயின் அதனால் மித்தை நாசமாகாது. மேற்காட்டிய உதாரணத்தில் அரசன் சமீபத்திற் பொய்யான நரி நிஜமான வாயில்காப் போரால் தடுக்கப்படாமல் வந்து கடித்து அரசனிடத்தில் அனேக நிஜமான ஆயுதங்களிருந்தபோதிலும் பொய்யானதடியால் அடிக்கப்பட்டு ஓடிவிட்டது. ராஜாவுக்குப் பொய்யான புண் உண்டாயிற்று. நிஜமான வைத்தியன் ஒருவ னும் வரவில்லை. பொய்யான வைத்தியனிடத்திற் போய், அரசனுக்கு வெகு ஆஸ்தி யிருந்தும் ஒரு பைசாவுமில்லாமல் போனதால் மருந்து பெறக்கூடா மல், பொய்யான சந்நியாசியாற் கொடுக்கப்பட்ட பொய்யான மருந்தால் பொய்யான புண் ஆறிப்போய்விட்டது. ஒருவிதமான சத்திய சாதனமும் அரனுடைய துக்க நிவிருத்திக்கு உபயோகப்படவில்லை. இவ்விதமான சொப் பனம் எல்லோருக்கும் அநுபவசித்தமா யிருக்கிறது. ஜாக்கிர பதார்த்தங் கள் எப்போதும் எவனுக்கும் சொப்பனத்திலுபயோகப் படுகிறதில்லை. இது போலப் பொய்யான சமுசார துக்கம் பொய்யான வேதம் குரு என்பவற்றால் நாசமடைகிறது. சத்தியமான வேதத்தையும் குருவையும் அபேக்ஷிக்கிற தில்லை.

## 231. கானற்சலத்திலும் தாகத்திலுமுள்ள சத்தையின் பேதம்.

"மித்தையான கானல் ஜலத்தினால் தாகசாந்தியாகாதது போல் மித் தையான வேதத்தினாலும் குருவினாலும் சமுசாரதுக்கம் நாசமாகிறதில்லை. அப்படி நிவிருத்தியாகுமென்று சொல்லும் பக்ஷத்தில் கானல் ஜலத்தினாலும் தாகசாந்தி யாகவேண்டும்." என்று சிஷ்யன் சங்கித்திருந்தான்.

### அதற்குச் சமாதானம்.

பொய்யான கானல் ஜலம் யாருக்கும் தாகசாந்தி செய்ததில்லை. பொய்யான வேதத்தினாலும் குருவினாலும் சம்சாரதுக்கம் நிவிருத்தியாவது போல் தாகமும் கானல்ஜலத்தால் நிவிருத்தியாகவேண்டும். ஆனால் தாகம் நிவிருத்தியாகிறதில்லை. என்றாலும் உன் திருஷ்டாந்தவிஷமமாம். அங்ஙனமே மித்தையாகிய குருவேதங்களால் சம்ஸார நிவிருத்திபொருந்தாது. ஏனெனின், கானல் ஜலத்திலும் தாகத்திலும் ஸத்தைபேதப்படுகிறது. அதைப் பார்.

## 232. சமசத்தைகள் தம்மிற் சாதகபாதகமாதல்.

சமுசாரதுக்கமும் குருவேதங்களும் ஒரே ஸத்தையாக இருக்கின்றன. ஆகையால் குருவேதங்களால் சமுசாரதுக்கம் நிவிருத்தியாகும்.

எந்தப் பதார்த்தங்களுக்குத் தம்மிற் * சமஸத்தையுண்டோ அவற்றிற்குத் தம்மில் சாதகபாதகமுண்டாம்.

எங்ஙனம்:—மண்ணிற்கும் கடத்துக்கும் ஸமஸத்தையிருக்கிறது. ஆதலால் மண் கடத்துக்குச் சாதகமாம்.

---

* இதில் இது சங்கை:—சமஸத்தையுள்ள பதார்த்தங்களே தம்மிற் சாதக பாதகங்களாமென்னும் நியமம் பொருந்தாது. விஷமஸத்தையுள்ள பதார்த்தங்களும் சில இடங்களில் சாதகபாதகங்களாம். ஏனெனின்,

1. எங்கும் அதிஷ்டானத்தினும் ஆரோபத்தின் சத்தை விஷமமாம். ஆரோபத்துக்கு அதிஷ்டானம் சாதகமாயிருக்கிறது. கற்பித வெள்ளிக்கு அதிஷ்டானம் கிளிஞ்சலாம். அதற்கு வியாவஹாரிக ஸத்தையுளது. வெள்ளிக்குப் பிராதிபாஸிக ஸத்தையுளது. அவ்வெள்ளிக்குச் சாதகத் தன்மை (காரணத்தன்மை) கிளிஞ்சிலி லிருக்கின்றது.

2. அல்லது ஜகத்துக்கு அதிஷ்டானம் பிரஹ்மமாம். பிரஹ்மத்திற்குப் பாரமார்த்திக ஸத்தையுண்டு. ஜகத்திற்கு வியாவகாரிகஸத்தையுண்டு. அந்த வியாவகாரிக சத்தையுடைய ஜகத்தின் சாதகத்தன்மை பிரஹ்மத்திலிருக்கிறது. ஆகையால் விஷமஸத்தையுடையதும் சாதகமாகிறது.

3. அந்தக்கரணத்தின் விருத்திவடிவ கிளிஞ்சிலின் யதார்த்தஞானத்தால் வெள்ளியும் வெள்ளியின் ஞானமும் பாதிக்கப்படுகின்றன. அங்கு வெள்ளியின் ஞானமும் வெள்ளியும் பிராதிபாஸிகத்தை யுடையனவாம். கிளிஞ்சிலின் ஞானம் வியாவகாரிகஸத்தையுடையதாம். ஆதலால் விஷமஸத்தை பாதகமாயிருக்கிறது. 'ஆகையால் விஷமஸத்தையுள்ள பதார்த்தங்கள் தம்மிற் சாதகபாதகங்களாகாவென்னும் நியமம் அசங்கதமாமென்பதற்கு சமாதானம் இதுவாம்:—

கேவலம் (வெறும்] கிளிஞ்சிலாவது பிரஹ்மமாவது நிர்மமாக வெள்ளி அல்லது ஜகத்தின் கற்பனைக்கு அதிஷ்டான (விவர்த்தோபாதானகாரண) மாகா. ஆனால் தூலாவித்தையுடன் கூடிய கிளிஞ்சிலானது வெள்ளிக்கும் மூலாவித்தையுடன் கூடிய பிரஹ்மசேதனம் ஜகத்துக்கும் அதிஷ்டானங்களாம். சில இடங்களில் விசேஷணத்தின் தர்மங்கள் விசிஷ்டத்தில் வியவகரிக்கப்படுகின்றன. இந்த நியமத்தால் பிராதிபாஸிக தூலாவித்தை யுடன்கூடியசுக்தி (கிளிஞ்சில்) அல்லது சுக்தி யவச்சின்னசேதனம் பிராதிபாஸிக மெனப்படுகிறது. வியாவகாரிக மூலாவித்தையவச்சின்ன பிரஹ்மசேதனமும் வியாவகாரிக மெனப்படுகிறது.

அவித்தை உபாதியாம்; விசேஷணமன்று. என்றாலும் அவிவேகிகளுடைய திருஷ்டிக்கு விசேஷணம்போலக் காணப்படுவதால் விசேஷணமெனப்படுகிறது. இதனாற்றான் அவ்வவித்தையின் தர்மங்களாகிய பிராதிபாஸிக வியாவகாரிகசத்தைகளும் தமது விசேஷிய (ஆசிரிய) மான கிளிஞ்சிலிலும் பிரஹ்மத்திலும் வியவகரிக்கப்படுகின்றன. ஆதலால் இவ்விடத்தில் விஷமஸத்தையுடையன சாதகமாகா; ஆனால் சமஸத்தையுடையனவே சாதகமாம்.

பஞ்சபாதிகாகாரர் முறைப்படி மூலாவித்தைக்கு வேறாகத் தூலாவித்தையில்லை. ஆகையால் அதன் நிவிருத்தி கிளிஞ்சில் ஞானத்தால் உண்டாகிறதில்லை; பிரஹ்மஞானத்தினால் உண்டாகிறது. ஆனால் வியாவகாரிக அந்தக்கரணத்தின் விருத்தியாகிய சுத்தியின் யதார்த்தஞானத்தால் சுத்தியிலுள்ள தூலாவித்தை பாதிக்கப்படுகிறது. அதனால்

2. நெருப்புக்கும் கட்டைக்கும் சமஸத்தை யிருப்பதால் நெருப்பு கட்டைக்குப் பாதகமாம்.

1. சாதகமென்பது காணம்.

2. பாதகமென்பது நாசஞ்செய்வது.

கானல்ஜலத்துக்கும் தாகத்துக்கும் சமஸத்தையில்லாதபடியால் கானல் ஜலம் தாகத்தின் பாதகமன்று. அதாவது தாகத்தை நிவிருத்திக்கிறதில்லை. இந்த இடத்தில் இது இரகசியமாம்:—சேதனத்திற் பரமார்த்த ஸத்தை இருக்கிறது. சேதனத்துக்கு வேறாகிய மித்தையான பதார்த்தங்களில் வியாவஹாரிக ஸத்தையென்றும் பிராதிபாஸிக ஸத்தை என்றும் இருவித ஸத்தைகளுள.

## 233. 1. வியாவகாரிக சத்தை, 2. பிராதிபாஸிகத்தை, 3. பாரமார்த்திக சத்தை 233-235.

எந்தப் பதார்த்தத்திற்குப் பிரஹ்ம ஞானமின்றிப் பாதகமுண்டாகிற தில்லையோ, ஆனால் பிரஹ்ம ஞானத்தினாலேயே பாதகமுண்டாகிறதோ அந்தப் பதார்த்தத்தில் வியவஹாரஸத்தை சொல்லப்படுகிறது.

அந்த வியவஹாரஸத்தை ஈசுவர சிருஷ்டியிலிருக்கிறது. ஏனெனின், தேகம், இந்திரியம் முதலிய பிரபஞ்சமாகிய ஈசுவர சிருஷ்டி பிரஹ்மஞான மின்றிப் பாதிக்கப்படுகிறதில்லை. பிரஹ்மஞானத்தினாலேயே பாதமாகிறது.

---

அதன் காரியங்களான வெள்ளியும் அதன் ஞானமும் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் விஷமஸத்தையுடையன பாதகமாகா.

இது பிரசங்காநுசாரியான சமாதானமாம்.

விசாரதிருஷ்டியினால் பார்க்குமிடத்து அதிஷ்டானவடிவ சாதகத்திலும் அதிஷ்டானத்தின் ஞானவடிவ பாதகத்திலும் சமானசத்தையின் நியமமில்லை. ஆனால்

1. அதிஷ்டானவடிவசாதகமோ விஷமசத்தையுடையதேயாம்; சமசத்தையுடையதன்று.

2. ஞானவடிவபாதகமோ சிலவிடத்து விஷமசத்தை யுடையதாகின்றது. அது சுத்திரஜதத்தின் பாதகம் சுத்தி ஞானமும், சொப்பனஜகத்தின் பாதகம் ஜாக்கிரத்தின் ஞானமுமாதல்போலாம்.

3. சிலவிடத்துச் சமசத்தை யுடையதுமாகின்றது. அது வியாவகாரிக ஜகத்திற்குப் பாதகம் பிரஹ்மஞானமாதல்போலாம்.

4. மித்தையானஞானமே மித்தியாவஸ்துவிற்குப் பாதகமாம் என்பது நியமிக்கப்பட்டதாம்.

ஆதலால் இங்குச்சொல்லப்பட்ட நியமம் எதுவோ அது அதிஷ்டானவடிவ சாதகத்தையும் ஞானவடிவபாதகத்தையும் விட்டு எஞ்சியிற்கும் பதார்த்தங்களை விஷயஞ்செய்வதாயிருக்கிறது.

ஈசுவரசிருஷ்டியின் பதார்த்தங்கள் பிரஹ்மஞானமின்றி நாசமடைந்தாலும் பிரஹ்மஞானமின்றிப் பாதமாகிறதில்லை.

அபரோக்ஷ மித்தியாநிச்சயத்துக்குப் பாத மென்று பெயர்.

அவ்வபரோக்ஷ மித்தியாநிச்சயம் ஈசுவரசிருஷ்டி பதார்த்தங்களில் பிரஹ்மஞானத்துக்குமுன் ஒருவனுக்கு முண்டாகிறதில்லை. பிரஹ்மஞானத்துக்குப் பின்னரேயுண்டாகிறது. ஆதலால், மூலாவித்தையின் காரியமாகிய ஜாக்கிரபதார்த்தங்களாகிய ஈசுவரசிருஷ்டியில் வியவகாரஸத்தை இருக்கிறது.

ஜன்மம், மரணம், பந்தம், மோக்ஷம் முதலிய வியவகாரங்களைச் சித்திக்கச் செய்வதாகிய சத்தை வியாவகாரிகஸத்தை யெனப்படும்.

**234.** 2. பிரஹ்மஞானமின்றியே எவற்றின் பாதமுண்டாகிறதோ, அப்பதார்த்தங்களில் பிராதிபாஸஸத்தை சொல்லப்படுகிறது. எங்ஙனம்: பிரஹ்மஞானமின்றியே கிளிஞ்சில், கயிறு, கானல் முதலியவற்றின் ஞானத்தினால் முறையே வெள்ளி, சர்ப்பம், ஜலம் முதலியனவ பாதிக்கப்படுகின்றன. அவற்றில் பிராதிபாஸஸத்தை யிருக்கிறது.

பிரதீதிமாத்திர இருப்பு பிராதிபாஸஸத்தை யெனப்படும்.

* தூலாவித்தையின் காரியமான வெள்ளிமுதலியவற்றிற்குப், பிரதீதிமாத்திர இருப்புளது. ஆதலால் அவற்றிற்குப் பிராதிபாஸஸத்தை யுளது.

---

* கடாதி ஜடபதார்த்தவுபஹித சேதனத்தை யாச்சாதனஞ்செய்வ (மறைப்ப) தாகிய அவித்தை தூலாவித்தை யெனப்படும். இதனையே அவஸ்தாஞ்ஞான மென்றும் ஸாதி (உற்பத்தியுடைய) தோஷமுடைய அவித்தை யென்றும் கூறுவர்.

அந்தத் தூலாவித்தை அம்சபேதத்தால் நாநாவாய்ப் பின்ன பின்ன பதார்த்தங்களை ஆவரணஞ் செய்கிறது. எந்தக் கடாதி பதார்த்தாகார அந்தக்கரணத்தின் விருத்தியுண்டாகின்றதோ, அந்தப் பதார்த்தத்தை மறைக்கும் தூலாவித்தையின் அம்சம் நஷ்டமாகின்றது. மீண்டும் எப்போது விருத்தி வேறிடத்திற் செல்லுகின்றதோ, அப்போது ஆண்டு வேறு அவித்தையாம்சம் உற்பத்தியாகின்றது. இந்தத் தூலாவித்தை நசிக்கும் பொருட்டு பிரஹ்மஞானம் வேண்டியதில்லை; ஆனால் அது பிராதிபாஸிக சத்தையுடையதாயிருத்தலின் கடாதிகளின் ஞானத்தினாலேயே அதன் நாசமுண்டாகின்றது.

பஞ்சபாதிகையின் கர்த்தா பத்மபாதாசாரியர் மூலாவித்தையே தூலாவித்தையாம் அதனினும் வேறன்று என்று கொள்ளுகின்றனர். இவர்கள் மதத்தில் எங்ஙனம் ஜனக்கூட்டதின் மத்தியில் மின்னல் விழுந்தால் அப்போது எல்லோரும் விலகி மறுபடியும் சேர்ந்து கொள்ளுகிறார்களோ, அங்ஙனமே எப்பதார்த்தாகாரமாக அந்தக்கரணத்தின் விருத்தி யுண்டாகிறதோ, அப்பதார்த்தாகார அவித்தை அங்கிருந்தும் மறைபட்டு, மீண்டும் அந்த விருத்தி வேறிடத்துச் செல்லும்போது அங்குப் பரவுகின்றது, ஆனால் பிரஹ்மஞானமின்றி அதற்கு நாசமுண்டாகிறதில்லை. சொப்பனத்திற்கும் அங்ஙனமே கற்பிதசர்ப்ப முதலியவற்றிற்கும் அவித்தையின் நாசமின்றியும் விரோதி பதார்த்தங்களின் ஞானத்தினாலேனும் அவித்தையின் திரோதானத்தினாலேனும் அவித்தையில் இலயவடிவநாசம் அல்லது திரோதான முண்டாகின்றது.

இது பிரசங்கத்தால் தூலாவித்தையின் வர்ணனம் செய்யப்பட்டது.

**235.** 3. எது முக்காலங்களிலும் பாதிக்கப் படுகிறதில்லையோ, அது பரமார்த்தஸத்தை யெனப்படுகிறது. சேதனம் ஒருகாலும் பாதிக்கப்படுகிறதில்லை. ஆகையால் பரமார்த்தஸத்தை சேதனத்தினதாம்.

**236. வேதகுருக்களுக்கும் சம்ஸார துக்கத்திற்கும் வியாவகாரிக சத்தையுண்டு. ஆதலால் அவற்ருல் பவதுக்கத்தின் நாசம் பொருந்துகின்றது.**

இவ்விதமாக வேதம் குரு சமுசாரதுக்கம் என்பவற்றிற்கு ஒரே வியாவகாரிக ஸத்தையிருத்தலால் அவற்றிற்குத் தம்மில் ஸமஸத்தையிருக்கிறது. ஆதலால்*மித்தையான வேதம் குரு என்பவற்ருல் மித்தையான சமுசாரதுக்கம் நிவிருத்தியாகக் கூடும்.

---

* மித்தையாகிய வேதத்தினுலும் குருவினுலும் மித்தையாகிய பவ துக்கத்தின் நாசம் சம்பவிக்கின்றது. இங்ஙனம் மதித்தலால் சித்தாந்தத்திற்கும் கேடில்லை.

அங்ஙனமாயினும்,

1. வேதகுருவடிவ இஷ்டத்தினை மித்தையென்று கூறுதல் அயோக்கியமாம்.

2. ஜகத்து சத்தியவாதிகளின் பரிகாசத்திற்கு விஷயமாம்.

3. ஜிஞ்ஞாசுக்களின் விபரீத சிந்தனைக்கும் காரணமாம். ஆதலால் இவ்வார்த்தையின் கண்டனத்தில் சித்தாந்தம் பங்கமாகாமலிருக்கும்படியான வொருவித வார்த்தையின் நிரூபணத்தைச் செய்கின்ருர்:—

1. சிஷ்யனது திருஷ்டியால் வேதகுரு மித்தையா?

2. அல்லது குருவின் திருஷ்டியால் மித்தையா?

1. சிஷ்யனது திருஷ்டியாலெனின் (1) அச்சிஷ்யன் ஞானியா? (2) அல்லது அஞ்ஞானியா?

(1) அச்சிஷ்யன் ஞானியெனின் அவனுக்கு சிஷ்யத்துவம் சம்பவியாது. உபதேசிப்பவராகிய குருவை முன்னிட்டு எல்லா ஞானிகட்கும் சிஷ்யத்துவம் உள்ளதாயினும் அவர்கட்கு அதிகாரம் உண்டாய் உபதேசித்தற்கு உரிய சிஷ்யத்துவமில்லை.

(2) அச்சிஷ்யன் அஞ்ஞானியெனின் அவனுக்கு மித்தையென்றறியவே வேதத்தினும் குருவினிடத்தும் சிரத்தையோடுகூடிய பிரவிருத்தி நிகழாமையால் போதத்தின் அடைவு அரிதாம். அல்லது அஞ்ஞானியாகிய புருஷனுக்கு வேதாந்தசிரவணத்திற்கு முன் ஜகத்தின் எப்பதார்த்தத்திலும் மித்தியாத்துவ புத்தி சம்பவிப்பதும் இல்லை.

ஆதலால் சிஷ்யனது திருஷ்டியால் வேதமும் குருவும் மித்தையாமென்று கூறுதல் பொருந்தாது.

2. குருவின் திருஷ்டியால் வேதகுருமித்தையாமெனின், (1) குரு அஞ்ஞானியா? (2) அல்லது ஞானியா?

(1) அஞ்ஞானியெனின், அவனைக் குருவென்று கூறுதல் வேதத்தினும் விருத்தமாம். சில அஞ்ஞானி புருஷர்களும் ஜகத்தில் மூர்க்கனது திருஷ்டியால் குருவெனப் படுகின்ருரெனினும், வேதமுணர்ந்த வித்வான்களது திருஷ்டியினுல் அவர்கள் குரு

பசிதாகங்கள் பிராணனது தர்மங்கள். பிராணனும் அதன் தர்மங்களும் பிரஹ்மஞானமின்றி நிவிருத்தியாகா. ஆதலால் தாகம் வியாவஹாரிக ஸத்தை யுடையதாம். கானல்ஜலம் பிரஹ்மஞானமின்றியே அதன் ஞானத்தினால் பாதிக்கப்படுதலால் அது பிராதிபாஸிகத்தையுடையதாம். ஆகையால் தாகத் துக்கும் கானல்ஜலத்துக்கும் ஸமஸத்தையில்லை. ஆதலால் கானல்ஜலத்தால் தாகசாந்தி யுண்டாகிறதில்லை.

1. இவ்விதமாகத் தார்ஷ்டாந்தத்தில் பாதிக்கும் வேத குருக்களுக்கும் பாதிக்கப்படுகிற சமுசாரதுக்கத்திற்கும் ஒரே ஸத்தை யிருக்கிறது.

2. திருஷ்டாந்தத்தில் ஜலத்துக்கும் தாகத்துக்கும் ஸத்தை பேதப்படு கிறது.

ஆகையால் திருஷ்டாந்தம் விஷமமாயிருக்கிறது அதாவது தார்ஷ்டாந் தத்துக்குச் சமமாயில்லை.

## 237. சங்கை:—சுத்தி வெள்ளி முதலியன பிரஹ்மஞான மின்றியே பாதமாதலும் சம்ஸார துக்கம் பிரஹ்ம ஞானத்திற்குப் பின் பாதமாதலுமாகிய இந்தப் பேதத்தை எந்தக் காரணத்தினால் வைத்தீர்கள்?

ஸ்வாமி! பிரஹ்மத்துக்கு வேறானவை யாவும்* பொய்யென்று முன் சொன்னீர்கள். இந்தப் பொய்யான பதார்த்தங்களில்,

1. சுக்தியில்வெள்ளி ரஜ்ஜுவில்சர்ப்பம் கானலில்ஜலம் முதலியவை பிர ஹ்மஞானமின்றிப் பாதமாதலும்,

---

சப்தத்திற்கு விஷய (வாச்சிய) மாகார் என்னும் வார்த்தை மூன்றாவது தரங்கத்தில் ஸ்பஷ்டமாய் நிரூபணஞ் செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால் அவ்வஞ்ஞானியின் திருஷ் டியினாலோ வேதகுரு மித்தையாமென்று கூறுதல் பொருந்தாது. ஆனால் வேதகுருக்க ளோடு சகல சகத்தும் சத்தியமாமென்று கூறுதல் பொருந்தாது.

(1) குரு ஞானியெனின், [1] அந்த ஞானிக்கு வேதகுருக்களோடு சகல ஜகத் தும் பிரஹ்மத்திற்கு வேறாகத் தோற்றுகின்றனவா? [2] அல்லது அபின்னமாய்த் தோற்றுகின்றனவா?

[1] முதற்பக்ஷத்தைக் கூறின் அந்தப் 'பேதவாதியினை ஞானியென்றாவது குரு வென்றாவது கூறுதல் பொருத்தமுடையதன்று.

[2] இரண்டாவது பக்ஷத்தைக் கூறின் சகலத்தையும் தன்னையும் பரமார்த்த சத்தைமயமான பிரஹ்மவடிவமாக அறியும் அத்வைதவாதியாகிய குருவின் திருஷ்டி யினால் வேதமும் குருவும் மித்தையென்று கூறுதல் பொருந்தாது.

ஆதலால் வேதமும்குருவும் மித்தையென்னும் வார்த்தை அறிவில்லாதவனதுமன்று; அறிவுடையவனது மன்று. ஆனால் 'குறைக் கொள்ளிக்கட்டையினைப்போல வேதாந்த சிரவண மனனஞ் செய்பவர்களாகிய பாதியுணர்ச்சியுள்ள புருஷர்களதாம்; அல்லது வெளி வியவகாரத்திற் பொருந்தியுள்ள புறநாட்டமுடைய ஞானிகளதாம்.

இவ்வாற்றால் வேதமும் குருவும் சத்தியமென்று கூறுதல் யுக்தியோடுகூடியதாம்.

2. சமுசாரதுக்கம் பிரஹ்மஞானத்திற் பாதமாதலுமாகிய பேதம் எக் காரணத்தால் வைக்கப்பட்டது.

ஞானத்தினால் பாதிக்கப்படுமென்றும் சொன்னதற்குக் காரணம் யாது? இப்போது என் மனதில் இச் சந்தேகம் உதயமாயிருக்கிறது. இதனைத் தாம் நிவர்த்திக்கவேண்டும்.

## 238. உத்தரம்:-எதன் அஞ்ஞானத்தினால் எது உற்பத்தியாகிறதோ, அதற்கு அதன் ஞானத்தால் பாதமுண்டாகிறது.

சிஷ்யனே! பிரஹ்மத்துக்கு வேறானதெல்லாம் அவித்தியாகாரியம். யாவும் மித்தை; இதில் சிறிதும் சத்தியமில்லை. எதன் அஞ்ஞானத்தினால் எது உண்டாகிறதோ அதன் ஞானத்தினால் அது பாதிக்கப்படுகிறது.

1. கிளிஞ்சில் ரஜ்ஜு கானல் முதலியவற்றை யறியாததினால் வெள்ளி சர்ப்பம் ஜலம் முதலியவைகளுண்டாகின்றன. கிளிஞ்சில் முதலியவற்றை யறிவதனால் வெள்ளிமுதலியன பாதிக்கப்படுகின்றன.

2. பிரஹ்மத்தை யறியாததினா லுண்டாகிற ஜனனமரணாதி சமுசார துக்கம் பிரஹ்மத்தை யறிவதனால் பாதிக்கப்படுகிறது.

## 239. பிரசினம்:-பிரஹ்மத்தின் அஞ்ஞானத்தினால் சம்ஸாரம் எந்தக் கிரமத்தால் உற்பத்தியாகின்றது.

சிஷ்யன்:—ஸ்வாமி, பிரஹ்மத்தை யறியாததினாலுண்டாகிற சமுசாரம் எந்தக் கிரமத்தா லுண்டாகிறது? இதனை யெனக்கு நிச்சயமாய்ச் சொல்ல வேண்டும்.

## முற்கூறிய பிரசினத்தின் உத்தரம் 240-271.

## 240. சொப்பன சமானமாகக் கிரமமின்றி ஜகம் தோற்றுதல்.

ஸ்வப்பனம் கிரமமின்றியு முண்டாகிறது. அதுபோலப் பிரமமாகப் பொய்யான ஜகத்து விளங்குகிறது. இதன் கிரமத்தையறிய இச்சிக்கிறவன் கானல்ஜலத்தில் வஸ்திரத்தை நனைக்க இச்சிக்கக் கூடும். உபநிஷத்துகளில் ஜகத்துற்பத்தியனேகப் பிரகாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

1. சாந்தோக்கிய வுபநிஷத்தில் சத்ரூபப் பிரஹ்மத்தினின்றும் அக்கினி ஜலம் பிருதிவி என்பவைகள் கிரமமாக உண்டானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தைத்திரீய வுபநிஷத்தில் ஆகாசம் வாயு அக்கினி ஜலம் பிருதிவி என்னும் ஐந்து பூதங்களும் கிரமமாக உண்டானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. சில விடங்களில் எல்லாவற்றையும் பரமேசுவரன் உண்டுபண்ணுகிறானென்று கிரமமின்றியுமுற்பத்தி சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விதமாக ஜகத்துற்பத்தி வேதத்தில் பலவிதமாகச் சொல்லப்பட்டிருத்தற்குத் தாற்பரிய மிதுவாம்:—ஜகத்து பொய். அது ஒரு பதார்த்தமா

யிருக்கும்பக்ஷத்தில் அதனுற்பத்தியை யநேகவிதமாக வேதஞ் சொல்லியிருக்கமாட்டாது. அநேகப் பிரகாரமாய்ச் சொல்லியிருக்கிறபடியால் உற்பத்திக்கிரமத்தைச் சொல்வதில் வேதத்துக்கு அபிப்பிராயமில்லை. ஆனால் அத்வைதப் பிரஹ்மத்தை யறிவிப்பதற்காக ஜகத்தை நிஷேதிக்க பொய்யான ஜகத்தை எவ்விதமாக ஆரோபஞ் செய்திருக்கிறது.

திருஷ்டாந்தம்:—மரயானை ஒன்று மேல் எழும்புவதற்காக விநோதார்த்தமாய்ச் செய்யப்படுகிறது. அதன் காதும் வாலும் கோணுமானால் அதைச் சரிப்படுத்த ஒருவரும் பிரயத்தனப்படுகிறதில்லை. அதுபோல அத்வைதஞானத்தின் பொருட்டுப் பிரபஞ்சத்தை நிஷேதிப்பதற்காகப் பிரபஞ்சம் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பிரபஞ்சத்தி னுற்பத்திக் கிரமத்தை ஒரேவிதமாகச் சொல்ல வேதம் யத்தனஞ் செய்யவில்லை. பிரபஞ்சத்தின் உற்பத்தியை ஒரேவிதமாக வேதஞ் சொல்லாமையால், வேதத்தின் அபிப்பிராயம் பிரபஞ்சத்தை நிஷேதிப்பதிலாம், அதன் உற்பத்தியில் இல்லையென்றறியவேண்டியது.

## 241. சூத்திரகார பாஷியகாரர்கள் சுருதிவசனத்தால் ஜகத்துற்பத்தியைக் கூறுதலின் அபிப்பிராயம்.

1. * சூத்திரகாரரும் பாஷியகாரரும் 2-வது அத்தியாயத்தில் உற்பத்தியைச் சொல்லுஞ் சுருதி வசனங்களின் விரோதங்களை யொழித்து ஒரே விதமாகத் தைத்திரீய சுருதியின் அனுசாரமாகச் சொல்லப்பட்ட உற்பத்திக் கிரமமே எல்லா வுபநிஷத்துகளின் கருத்தென்று சொல்லியிருக்கிறார்கள். அது மந்த ஜிஞ்ஞாசுவை உத்தேசித்துக் கூறியதாம். உற்பத்தி வாக்கியங்களுக்கு முன் சொல்லிய அபிப்பிராயத்தை யறியாத மந்த ஜிஞ்ஞாசுவுக்கு உபநிஷத்துகளில் நாநாவிதமான ஜகத்தின் உற்பத்தியைப் பார்த்து உபநிஷதங்களுக்குத் தம்மில் விரோதமிருக்கின்றது என்னும் பிராந்தி யுண்டாய் விடும். அதனை நிவிருத்திசெய்வதற்காக எல்லா வுபநிஷத்துகளிலும் ஒரே விதமாக ஜகத்துற்பத்தி பிரதிபாதிக்கப்பட்டதாக சொல்லி யிருக்கிறார்கள்.

2. பிரஹ்மவிசாரத்தால் யதார்த்த ஞானமுண்டாகாதவனுக்கு லயசிந்தனையின் பொருட்டும் உற்பத்திக்கிரமம் சொல்லப்பட்டிருக்கிறது. எந்தக் கிரமத்தினாலுற்பத்தி சொல்லப்படுகிறதோ அதற்கு விபரீதக் கிரமத்தினால் லயசிந்தனை செய்யவேண்டும். அந்த லயசிந்தனையால் அத்வைதப் பிரஹ்மத்தில் புத்தி ஸ்திரப்படுகிறது. அந்த லயசிந்தனைப் பிரகாரம் பஞ்சீகரணக் கிரந்தத்தில் வார்த்திககாரரான சுரேஸ்வராசாரியரால் சொல்லப்பட்டிருக்கிறது.

---

* சூத்திரம் பிரஹ்மசூத்திரமென்றும், பாஷியகாரர் ஸ்ரீசங்கராசாரியரென்றும் அறியத்தக்கது. இரண்டாவது அத்தியாயம் பிரஹ்மசூத்திரத்தினது.

3. இந்தக்கிரந்தம் * உத்தமஜிஞ்ஞாசுவின் பொருட்டா யிருத்தலால் ஜகத்தின் உற்பத்திலயங்களின் கிரமம் சொல்லப்படவில்லை; ஆயினும் இந்நூல் சாகரவடிவமா யிருத்தலால் அதனைச் சுருக்கமாய்ச் சொல்லுவாம்.

சுத்தப் பிரஹ்மத்தினின்றும் ஜகத்துற்பத்தியாகிறதில்லை. ஏனெனின் சுத்தப் பிரஹ்மம் அசங்கமாயும் கிரியையற்றதாயு மிருக்கிறது. † ஆனால் மாயாவிசிஷ்ட ஈசுவரனிடத்தினின்றும் ஜகத்துற்பத்தியாகிறது. ஆகையால் மாயை ஈசுவரர்களின் சொரூபங்களைப் பிரதிபாதிப்பாம்.

## 242. பிரசங்கத்தால் மாயாசொரூபத்தைப் பிரதிபாதித்தல்.

ஜீவேசுவர பேதங்களில்லாத சுத்த சேதனத்தை யாசிரயித்துக்கொண்டிருப்பது மாயை. அது அநாதி அதாவது உற்பத்தியற்றது.

1. மாயையினுற்பத்தியை யங்கீகரிக்கும்பக்ஷத்தில் புத்திரனிடத்தினின்றும் பிதாவினுற்பத்தி சொல்லத்தகாததுபோல் மாயாகாரியமான பிரபஞ்சத்தினின்றும் மாயையினுற்பத்தி சொல்லத்தகாததாம். ஆகையால் சேதனத்தினின்றே மாயையின் யுற்பத்தி யங்கீகரிக்கவரும். அங்கு,

2. ஜீவேசுவரத் தன்மைகள் மாயையின் காரியங்களாம். மாயை சித்தித்தாலன்றிஜீவேசுவரர்களது சொரூபம் சித்தியாது. ஆதலால் ஜீவசேதனத்திலிருந்தாவது ஈசுவரசேதனத்தி லிருந்தாவது மாயை யுற்பத்தியாவ தாகச் சொல்லுதல் கூடாது.

3. சுத்தசேதனம் அஸங்கமாயும் கிரியாரகிதமாயும் நிர்விகாரமாயு மிருத்தலால் அதனினின்றும் மாயை யுற்பத்தியாகிறதாகக் கொள்ளின் அது விகாரியாய்விடும். அன்றியும் சுத்தசேதனத்தினின்று மாயை யுண்டாகுமாயின், மோக்ஷதசையில் மாயை மறுபடியும் உண்டாகும். அதனால் மோக்ஷ

---

* திருஷ்டி சிருஷ்டிவாதத்தின்படி பிரஹ்மத்தில் பிரபஞ்சத்தை யாரோபித்துப் பின் அதன் அபவாதபூர்வகமாக ஐந்தாவது பூமியில் ஆரூடமாகத்தக்க உத்தம சம்ஸ்காரமுடைய ஜிஞ்ஞாசு இங்கு உத்தமஜிஞ்ஞாசு எனப்படுகின்றான்.

† ஜகத்தின் விவர்த்த உபாதானவடிவ அதிஷ்டானம் மாயாவுபகித சேதனமாம்; மாயாவிசிஷ்ட சேதனமன்று. அங்ஙனமாயினும் மாயாவிசிஷ்டனை விவர்த்தவுபாதானமென்று கூறி அதனின்று ஜகத்தின் உற்பத்தியைக் கூறுகின்றார். அது அவிவேகி புருஷர்களது திருஷ்டியை யநுசரித்திருக்கிறது.

1. விவேகி புருஷர்களது திருஷ்டியினாலோ ஜகத்தின் பரிணாமியுபாதானத்தன்மை விவர்த்தவுபாதானத்தன்மைகள் மாயாவிசிஷ்ட சேதனத்திலில்லை. ஆனால்,

(1) ஜகத்தின் பரிணாமி யுபாதானத்தன்மை கேவல மாயையி லிருக்கின்றது.

(2) விவர்த்தோபாதானத்தன்மை மாயாவுபகித சேதனத்தி லிருக்கின்றது.

2. அவிவேகிகளுக்கு இரண்டு தர்மங்களும் மாயாவிசிஷ்ட சேதனத்தில் பிராந்தியாகத் தோற்றுகின்றன. ஆதலால் சாஸ்திர கர்த்தாக்கள் அவிவேகிகளது திருஷ்டியின் அநுவாதமாத்திரம் செய்திருக்கிறார்கள்.

த்தின் பொருட்டாயுள்ள சாதனங்கள் பயனற்றனவாம். இவ்விதத்தால் மாயை,

1. உற்பத்தியில்லாததா யிருத்தலால் அநாதியாம்.

2. ஏகமாம்.

3. ஞானத்தால் அந்த (நாச) மடைவதா யிருத்தலால் ஸாந்தமாம்.

4. சதசத்துக்கு விலக்ஷணமாயிருக்கிறது.

(1) முக்காலத்திலும் பாதிக்கப்படாதது சத்தெனப்படும். அத்தன்மையது சேதனமாம்.

(2) மாயை ஞானத்தால் பாதிக்கப்படுவதால் சத்தின் விலக்ஷணமாம்.

(3) முக்காலத்திலும் விளங்காதது அசத்து. அது முயற்கொம்பு மலடிமகன் ஆகாசபுஷ்பம் முதலியனவாம்.

(4) ஞானத்திற்குமுன் மாயையும் அதன் காரியமும் பிரதீதியாகின்றன.

[1] ஜாக்கிரகாலத்தில் "நான் அஞ்ஞானி" "பிரஹ்மத்தை யறியவில்லை" என்று மாயை விளங்குகிறது.

[2] சொப்பனத்தில் தோன்றும் பலவித பதார்த்தங்களின் உபாதான காரணம் மாயையாம்.

[3] சுழுத்திக்குப் பிறகு "நான் சுகமாய்த் தூங்கினேன், ஒன்றுமறியவில்லை" என்று நினைவு வருகிறது. அந்நினைவு அறியப்படாத வஸ்துவினதாகாது. ஆகையால் சுழுத்தியில் அஞ்ஞானத்தின் விளக்கமுண்டாகிறது. அந்த அஞ்ஞானமும் மாயையு மொன்றே. அவற்றிற்குப் பேதமில்லை.

இவ்விதத்தால் மூன்று அவஸ்தைகளிலும் மாயை விளங்குவதால் அது அசத்தின் விலக்ஷணமாம். இவ்வாறு சதசத்துக்கு விலக்ஷணமான மாயையின் காரியமும் சதசத்துக்கு விலக்ஷணமாம். சதசத்துக்கு விலக்ஷணமானதையே அத்வைத மதத்தில் மித்தையென்றும் அநிர்வசநீய மென்றும் கூறுவர்.

ஆதலால் மாயையினாலும் அதன் காரியத்தினாலும் துவைதம் சித்திக்கிறதில்லை. ஏனெனின் சேதனம் ஸத்ரூபமா யிருப்பதுபோல் மாயையும் அதன் காரியமும் ஸத்ரூபமாயிருந்தால் துவைதம் சித்திக்கும். மாயையும் அதன் காரியமும் சதசத்துக்கு விலக்ஷணமாயிருத்தலால் மித்தையாம். மித்தியா பதார்த்தத்தினால் துவைதம் உண்டாகாது; சொப்பனத்தின் மித்தியா பதார்த்தத்தினால் துவைதம் உண்டாகாததுபோல.

## 243. அஞ்ஞானத்திற்குத் தான் ஆசிரயமாதலும் தான்விஷயமாதலும்.

1. ஜீவேசுவரப் பிரிவின்றிய சுத்தப் பிரஹ்மத்தை யாசிரயித்துள்ளது மாயை.

2. சுத்தப் பிரஹ்மத்தையே மறைக்கிறது.

அது வீட்டை யாசிரயித்த இருள் வீட்டையே மறைப்பதுபோலும்.

இதனை ஸ்வாசிரய ஸ்வவிஷயபக்ஷ மென்று கூறுவர். 1. ஸ்வ என்பது சுத்தப் பிரஹ்மம்; அதுவே ஆசிரய (இட) மாயிருத்தல் ஸ்வாசிரயம். 2. ஸ்வ என்பது சுத்தப்பிரஹ்மம்; அதுவிஷயமாகுதல் அதாவது மாயையால் மறைக்கப்படுதல் ஸ்வவிஷயமாம். ஸம்க்ஷேபசாரீரகம், விவரணம், வேதாந்தமுக்தாவலி, அத்வைதசித்தி, அத்வைததீபிகை முதலிய கிரந்தங்களில் அஞ்ஞானம் ஸ்வாசிரய ஸ்வவிஷயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

## 244. முற்கூறிய அர்த்தத்தில் வாசஸ்பதியின் மதம்.

வாசஸ்பதியின் மதம் இதுவாம்:— 1. அஞ்ஞானம் ஜீவனையாசிரயித்தது. 2. பிரஹ்மத்தை விஷயஞ்செய்கிறது.

1. "நான் அஞ்ஞானி; பிரஹ்மத்தை யறியேன்" என்னும் ஞானத்தால் "நான்" என்னும் சொல்லின் பொருள் ஜீவன். அஞ்ஞானியென்று சொல்வதினால் அஞ்ஞானத்தின் ஆசிரயம் ஜீவனென்று விளங்குகிறது.

2. "பிரஹ்மத்தை யறியேன்" என்று சொல்வதினால் அஞ்ஞானத்துக்கு விஷயம் பிரஹ்மமென்று விளங்குகிறது.

இவ்விதத்தால் அஞ்ஞானம் ஜீவனை யாசிரயித்துப் பிரஹ்மத்தை விஷயமாக்குகிறது அதாவது மறைக்கிறது.

அந்த அஞ்ஞானம் ஒன்றல்ல; அனேகமாம். ஏனெனின்,

1. அஞ்ஞான மொன்றெனக் கொள்ளின் ஒருவனுடைய அஞ்ஞானம் ஞானத்தினால் நிவிருத்தியாக மற்றவர்களுக்கு அஞ்ஞானமும் அதன் காரியமான சமுசாரமும் விளங்கலாகாது.

2. இதுவரையினும்ஒருவருக்கும்ஞானமுண்டாகவில்லையென்றுகூறின், இனிமேல் ஒருவருக்கும் ஞானமுண்டாகாது. அதனால் சிரவணாதி சாதனங்கள் பிரயோசனமில்லாமற்போம். ஆதலால் அனந்த ஜீவர்களை யாசிரயித்த அஞ்ஞானமும் அநந்தமாம். அநந்த ஜீவர்களுடைய அநந்த அஞ்ஞானத்தினால் கற்பிக்கப்பட்ட ஈசுவரனும் பிரஹ்மாண்டமும் அநந்தமாம். எந்த ஜீவனுக்கு ஞானமுண்டாகிறதோ அவன் அஞ்ஞானம் ஈசுவரன் பிரஹ்மாண்டம் என்பன நிவிருத்தியாகின்றன. எவனுக்கு ஞானமுண்டாகவில்லையோ அவனுக்குப் பந்தமிருக்கிறது. இது வாசஸ்பதிமதம். அது நலமுடையதன்று. ஏனெனின்,

## 245. வாசஸ்பதியின் மதத்தின் நலமின்மையும் அஞ்ஞானத்தின் ஏகத்துவமும்.

1. "ஈசுவரன் ஜீவனுடைய அஞ்ஞானத்தினால் கற்பிக்கப்பட்டவன்" என்று சொல்லுதல் சுருதிஸ்மிருதி புராணங்களுக்கு விருத்தமாம்.

2. "ஈசுவரன் அநந்தம்; ஜீவர்கள்தோறும் சிருஷ்டி பேதமாம்" என்பதும் விருத்தமாம்.

ஆதலால் அஞ்ஞானம் அநேகமென்று கொள்வது அஸங்கதமாம்.

அஞ்ஞானத்தை யநேகமெனக்கொண்டு ஈசுவரனையும் சிருஷ்டியையும் ஒன்றெனக்கொண்டாலும் பொருந்தாது. ஏனெனின் ஜீவேசுவரப்பிரபஞ்சங்கள் அஞ்ஞான கற்பிதமாம். அஞ்ஞானம் அநந்தமெனக் கொள்ளுதலால் ஒவ்வொரு அஞ்ஞானத்திலும் கற்பிதமாகிற ஜீவனைப்போல் ஈசுவரனும் பிரபஞ்சமும் அநந்தமாகும். இதனாற்றான் வாசஸ்பதியானவர் அநந்த ஈசுவரனையும் அநந்த சிருஷ்டியையும் சொல்லியிருக்கிறார். ஆதலால் "அஞ்ஞான மொன்"றெனும் மதமே நலமுடையதாம்.

## 246. சுவாசிரய சுவவிஷய பக்ஷத்தின் அங்கீகாரம்.

அந்த * ஒரே அஞ்ஞானமும் ஜீவனையாசிரயிக்காமல் சுத்தப் பிரஹ்மத்தை யாசிரயித்திருக்கிறது. ஏனெனின்,

1. ஜீவபாவம் அஞ்ஞானத்தின் காரியமாம். அந்த அஞ்ஞானம் எப்போதும் சுதந்தரமா யிருக்கிறதில்லை. ஆகையால் ஆசிரயமில்லாத அஞ்ஞானத்தினலோ ஜீவபாவம் பொருந்தாது. முதலில் அஞ்ஞானம் எதனையாவது ஆசிரயித்ததாகுமாயின் அப்போது அதன் காரியமான ஜீவபாவம் சித்திக்கும்.

2. ஜீவத்தன்மையைப்போல ஈசுவரத்தன்மையும் அஞ்ஞான காரியமாம். அஞ்ஞானம் ஈசுவரனை ஆசிரயித்திருக்கவில்லை.

ஆனல் இந்தஅநாதி அஞ்ஞானம் சுத்தப்பிரஹ்மத்தை யாசிரயித்திருக்கிறது.

அநாதிசேதன அஞ்ஞானங்களின் சம்பந்தமு மநாதியே. சேதன அஞ்ஞானங்களின் அநாதி சம்பந்தத்தா லுண்டாகும் ஜீவேசுவர பாவங்களும் அநாதியே. ஆனல் ஜீவேசுவரபாவங்கள் அஞ்ஞானத்தின் அதீனமாம். அதனல் அஞ்ஞானத்தின் காரிய மெனப்படுகின்றன.

"நான் அஞ்ஞானி" என்றிவ்வாறு ஜீவனை யாசிரயித்ததாக அஞ்ஞானம் விளங்கினலும் சுத்தப்பிரஹ்மத்தை யாசிரயித்திருக்கும் அஞ்ஞானத்தின் அபிமானம் ஜீவனுக்கு நான் அஞ்ஞானியென்று உண்டாகிறது.

1. ஜீவன் அஞ்ஞான காரியமாயிருத்தலால் ஜீவன் அஞ்ஞானத்திற்கு அதிஷ்டானரூப ஆசிரயமாதல் பொருந்தாது. ஆனல் சுத்தப் பிரஹ்மமே அஞ்ஞானத்தின் அதிஷ்டானரூப ஆசிரயமாம்.

---

* இதன் அபிப்பிராயம் இதுவாம்:—அம்சிவடிவ இருள் ஒன்றாயினும் அதன் அம்சவடிவ நாநா இருள் வீடுகள்தோறு மிருக்கின்றது. எந்த வீட்டில் தீபமிருக்கிறதோ, அந்த வீட்டின் அம்சவடிவ இருள் நாசமாகின்றது. ஆதலால் அம்சியஞ்ஞானம் ஒன்றாம்.

2. சுத்தப்பிரஹ்மமாகிய அதிஷ்டானத்தை யாசிரயித்திருக்கும் * அஞ்ஞானம் அந்தப் பிரஹ்மத்தையே மறைக்கிறது. அதன் பிறகு ஜீவன் நான் அஞ்ஞானி யென்றிவ்வாறு அஞ்ஞானத்தின் அபிமானரூப ஆசிரயமாகிறான். இவ்விதத்தால் அஞ்ஞானம் ஸ்வாசிரய ஸ்வவிஷயமாம்.

## 247. அஞ்ஞானமொன்றென்னும் பக்ஷத்தில் பந்தமோக்ஷங்களின் வியவஸ்தையும் சகலப்பிரக்கிரியைகளின் சிரேஷ்டத்தன்மையோடு நாமபேதத்தால் மாயையின் சொரூபமும்.

அந்த அஞ்ஞானம் ஒன்றாக இருக்கிறது; ஞானத்தினால் நிவிருத்தியாகிறது. ஆனால் எந்த அந்தக்கரணத்தில் அஞ்ஞான மிருக்கிறதோ, அந்த அந்தக்கரண அவச்சின்ன சேதனத்திலுள்ள அஞ்ஞானும்சம் ஞானத்தால் நிவிருத்தியாகிறது. அவனே முத்தனாகிறான். எந்த அந்தக்கரணத்தில் ஞானமுண்டாகவில்லையோ அங்கு அஞ்ஞானும்சமும் பந்தமும் தங்குகின்றன. இவ்விதத்தால் அஞ்ஞானமொன்று எனனும் பக்ஷத்தில் பநதமோக்ஷ வியவகாரங்கள் சித்திக்கின்றன.

வாசஸ்பதி மதப்படி அஞ்ஞானம் அநேகமென்று சிலர் புத்தியிற்படின், அதுவும் அத்வைதஞானத்துக்கு உபாயந்தான். அதனைக் கண்டிப்பதில் எவ்விதஆக்கிரக(பிடிவாத)மு மில்லை. †எவ்விதத்தால் ஜிஞ்ஞாசுவுக்கு அத்வைதபோதமுண்டாகுமோ அவ்விதத்தால் புத்தியை ஸ்திரப்படுத்த வேண்டியது.

சுத்தப் பிரஹ்மத்தை யாசிரயித்துக் கொண்டிருக்கும் மாயையினை அவித்தையென்றும் அஞ்ஞானமென்றும் கூறுவர்.

---

அதன் அம்சவடிவ நாநா அஞ்ஞானம் நாநா அந்தக்கரண தேசத்திலுள்ள சாக்ஷி சேதனத்தில் நிலைத்திருக்கின்றது. எந்த அந்தக்கரண தேசத்தில் ஞானமுண்டாகிறதோ அந்த அந்தக்கரண தேசத்திலுள்ள அஞ்ஞானும்சத்தின் நாசமுண்டாகிறது. ஆதலால் ஒருவனுக்கு ஞானமுண்டாயின் அதனால் அஞ்ஞானமும் அதன் காரியமும் நீங்குதல் வாயிலாக முத்தி தோற்றுது. இவ்வாறு ஒரு அஞ்ஞானத்தை யங்கீகரித்தாலும் பந்தமோக்ஷத்தின் வியவஸ்தை பொருந்துகிறது. ஜீவனது அஞ்ஞானத்தினால் கற்பிக்கப்பட்ட ஈசுவரன் அநேகர்; ஜீவர்கள்தோறும் சிருட்டியின் பேதமுண்டு என்னும் சுருதி ஸ்மிருதி புராணங்களுக்கு விரோதமான பக்ஷத்தை யங்கீகரித்தலு மாகாது. ஆதலால் இந்தப் பக்ஷம் நலமுடையதாம்.

* "நான் அஞ்ஞானி" என்னும் அநுபவத்தால் அஞ்ஞானத்திற்கு ஆசிரயம் ஜீவனென்று வாசஸ்பதமிசிரர் சொல்லியிருக்கிறார். அது முமுக்ஷுவின் புத்தியில் இலகுவாய்ப் படும்பொருட்டாம். ஆனால் வாசஸ்பதிமிசிரருடையஅந்தரங்கக்கருத்து இதுவாம்:— நான் என்னும் சப்தத்திற்கு வாச்சியார்த்தம் அந்தக்கரண விசிஷ்டசேதனரூப ஜீவன். அதன் விசேஷியபாகமாகிய சாக்ஷிசேதனம் பிரஹ்மம். அது அஞ்ஞானத்திற்கு ஆசிரயமாயிருக்கிறது. அது (விசேஷியத்தின் தர்மம்) விசிஷ்டத்தில் வியவகரிக்கப்படுகிறது.

† 'यया यया भवेत्पुंसां व्युत्पत्तिः प्रत्यगात्मनि । सा सैव प्रक्रियेह स्यात्साध्वी सा चानवस्थितिः ॥ புருஷர்களுக்கு எந்த எந்தப்பிரக்கிரியைகளால் பிரத்தியகாத்மவிஷயத்தில் ஒருவனுக்குப் போதமுண்டாகுமோ, அந்தந்தப் பிரக்கிரியைகளே இங்கு (வேதாந்த சித்தாந்தத்தில்) சிரேஷ்டமாம். அதுவே வியவஸ்தையாம்." என்பது நைஷ்கர்மியசித்திகாரர் வசனமாம்.

1. சிந்திக்கக்கூடாத சக்தியுள்ளதாயும் யுக்திக்கு நிற்காததாயு மிருத்தலால் மாயை யெனப்படும்.

2. வித்தையால் நாசமடைவதால் அவித்தை யெனப்படும.

3. ஸ்வரூபத்தை மறைப்பதால் அஞ்ஞான மெனப்படும்.

1. மாயை யாசிரயிக்கும் சேதனம் சாமானியசேதனமாம். அது மாயைக்கு விரோதமில்லை; ஆனால் சாதகமாயிருக்கிறது. சத்தாஸ்புரண (விளக்க)த்தைத் தருகிறது.

2. விருத்தியில் இருக்கும் சேதனம் அல்லது சேதனசகிதவிருத்தி மாயைக்கு விரோதியென் றறியவேண்டியது.

இவ்விதத்தால் மாயை வர்ணிக்கப்பட்டது.

## 248. பிரசங்கத்தால் ஈசுவரசொரூபமும், இருவகைக் காரணத்தின் லக்ஷணமும், ஜகத்தின் உபாதானகாரணநிமித்தகாரணங்கள் ஈசுவரன் எனலும் 248-249.

ஈசுவரனது சொரூபத்தைக் கூறுகின்றார்:—

1. சுத்த சத்துவகுண ஸஹித மாயை,

2. மாயையின் அதிஷ்டான சேதனம்,

3. மாயையில் ஆபாஸம்,

இம்மூன்றும் சேர்ந்தது ஈசுவர னெனப்படும்.

அந்த ஈசுவரன் சர்வஞ்ஞன். அவனே ஜகத்துக்குக் காரணன்.

காரணம் இருவகைத்து:—1. உபாதானகாரணம் 2 நிமித்தகாரணம்.

1. (1) எது காரியத்தின் ஸ்வரூபத்தில் பிரவேசிக்கிறதோ,

(2) எதனைவிட்டுக் காரியம் சித்திக்கிறதில்லையோ,

அது உபாதானகாரண மெனப்படும்.

மண் கடத்துக்கு * உபாதானகாரணம்.

(1) கடஸ்வரூபத்தில் மண் பிரவேசிக்கிறது.

(2) மண்ணின்றிக் கடம் நிலைத்திருக்கிறதில்லை.

2. (1) எது ஸ்வரூபத்தில் பிரவேசிக்கிறதில்லையோ, ஆனால் (2) காரியத்துக்கு வேறாக இருந்துகொண்டு காரியத்தைச் செய்கிறதோ, (3) எதன் நாசத்தினால் காரியம் நாசமடைகிறதில்லையோ,

அது † நிமித்தகாரண மென்று சொல்லப்படும்.

---

* காரியத்தின் உற்பத்திஸ்திதி லயங்களுக்குக் காரணம் உபாதானகாரண மெனப்படும். இதுவும் உபாதானத்தின் லக்ஷணமாம்.

† காரியத்தினது உற்பத்திமாத்திரத்தின் காரணம் நிமித்தகாரண மெனப்படும். இங்கு நிமித்தகாரணம் அநேகவிதமா யிருக்கிறது.

கடத்திற்குக் குயவன் தண்டம் சக்கரம்முதலியன நிமித்தகாரணங்கள்.

(1) கடஸ்வரூபத்தில் அவை பிரவேசிக்கிறதில்லை;

(2) கடத்திற்கு வேருயிருந்துகொண்டு கடத்தை யுற்பத்தி செய்கின்றன.

(3) உற்பத்தியானபின் குயவன் தண்டாதிகளின் நாசத்தினுல் கடம் நாசமடைகிறதில்லை.

இவ்விதத்தால் காரணம் உபாதானம் நிமித்தமென இருவகைத்தாம்.

**249.** ஈசுவரனே ஜகத்துக் குபாதானகாரணமாயும் நிமித்தகாரணமாயுமிருக்கிறுன். அது ஒரே * சிலந்திப்பூச்சி தன்வலைக்கு உபாதானகாரணமாயும் நிமித்தகாரணமாயும் இருப்பதுபோலாம்.

1. சிலந்திப் பூச்சியின் ஜடசரீரம் அதன்வலைக்கு உபாதானகாரணமாம்.

2. சிலந்தியின் சரீரத்துள்ளசேதனபாகம் நிமித்தகாரணமாம்.

ஆதலால் ஒரு ஈசுவரனையே நிமித்தகாரணமாகவும் உபாதான காரணமாகவும் அங்கீகரித்தலில் ஒரு திருஷ்டாந்தமுமில்லை யெனக்கூறின், சிலந்தியைப்போல,

1. † ஈசுவரனது சரீரமான ஜடமாயை ஜகத்துக்கு உபாதானகாரணமாம்.

2. அதன் சேதனபாகம் நிமித்தகாரணமாம்.

இவ்விதத்தால் ஒரே ஈசுவரன் ஜகத்திற்கு உபாதானமும் நிமித்தகாரணமு மாவனென்பதில் திருஷ்டாந்தம் சிலந்தியும் ‡ முக்கிய திருஷ்டாந்தம் சொப்பனமுமாம்.

---

* இதனையே ஊர்ணநாபி என்றும் எட்டுக்காற்பூச்சி யென்றும் கூறுவர்.

† 1. சிலந்தியின் சரீரம் வலைக்கு உபாதான காரணமாம்.

2. அந்தக்கரணஸஹித சேதனபாகம் நிமித்தகாரணமாம்.

1. அங்ஙனமே தமப்பிரதானப் பிரகிருதிவடிவ மாயை ஜகத்தின் உபாதானமாம்.

2. சுத்த சத்துவப்பிரதான மாயையோடுகூடிய சேதனபாகம் ஜகத்தின் நிமித்த காரணமாம்.

கேவல சேதனபாகத்தில் காரணத்தன்மையில்லை யென்பது அபிப்பிராயம்.

‡ 1. நியாயமதத்தில் கடத்தோடு ஈசுவரனது சையோகத்தில் ஈசுவரனை அபின்ன நிமித்தோபாதான காரணமாகக் கொண்டிருக்கிறுர்கள். ஜீவாத்மாவின்கணுள்ள ஞான முதலிய குணங்களில் ஜீவாத்மாவை அபின்னநிமித்தோபோதான காரணமெனக் கொண்டிருக்கிறுர்கள்.

2. ஸ்ரீமத் பாகவதத்தில் பிரஹ்மாவானவர் கன்றுகளையும் கன்றுமேய்ப்பவர்களையும் அபகரித்தகாலத்தில், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா கன்றுகள் கன்றுமேய்ப்பவர்முதலிய எல்லாவற்றின் வடிவமும் தாமே யானுர். ஆண்டும் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா அவற்றின் அபின்னநிமித்தோபாதானகாரணமா யிருக்கின்றுர.

1. எந்தச் சமயத்தில் ஜீவர்களின் கர்மபலனைக் கொடுக்க ஈசுவரன் எதிர்முகமாகிறதில்லையோ அப்போது பிரளயமுண்டாகின்றது.

2. ஜீவர்களது கர்மபலத்தைக் கொடுக்க எதிர்முக மாகும்போது சிருஷ்டி யுண்டாகின்றது. இவ்விதத்தால் சிருஷ்டி ஜீவனுடைய கர்மாதீனமாயிருக்கிறது. ஆதலால்,

## 250. ஜீவனது சொரூபத்தைக் கூறுகின்றார்:—

1. ரஜகுண தமோகுணங்களை அடக்கிக்கொள்வது எதுவோ அது **சுத்தசத்துவகுண** மெனப்படும்.

2. ரஜதமோ குணங்களால் தான் அடங்குவது எதுவோ அது **மலினசத்துவகுண** மெனப்படும்.

1. இந்த மலினசத்துவகுணசகித அஞ்ஞானம்சத்தில் உண்டாகும் சேதனத்தின் ஆபாசம்.

2. **அஞ்ஞானம்,**

3. அஞ்ஞானத்தின் அதிஷ்டான கூடஸ்தன்,

இம்மூன்றும் சேர்ந்தது ஜீவனெனப்படும்.

அந்த ஜீவன் கர்மத்தைச் செய்கிறான்; பலத்தை இச்சிக்கிறான்.

## 251. ஈசுவரனிடத்தில் விஷமதிருஷ்டியும் குரூரத் தன்மையுமில்லாமை.

அந்த ஜீவனுடைய கர்மாநுசாரமாக உயர்வு தாழ்வான போகங்களை யநுபவிக்கும் பொருட்டு ஈசுவரன் சிருஷ்டி பண்ணுகிறார். ஆகையால் ஈசுவரனிடத்தில் விஷமதிருஷ்டியும் குரூரத்தன்மையும் இல்லை.

எல்லாவற்றிற்கும் முதலானசிருஷ்டிக்குமுன் கருமமில்லை. பிரதமசிருஷ்டியில் உயர்வு தாழ்வான சரீரங்களையும் போகங்களையும் ஈசுவரன் சிருஷ்டிக்கின்றார். ஆதலால் ஈசுவரனுக்கு விஷமதிருஷ்டி யுண்டென்று ஒருவன் சொல்லுவானாயின்.

---

3. சூரியனானது எட்டுமாதம் வரையில் பிருதிவியின் இரசங்களை யுலர்த்துகிறது. பின் கிரீஷ்மருது வருஷருதுவின் நான்குமாதங்கள் வரையில் ஜலத்தை விடுகிறது. அந்த ஜலத்திற்குச் சூரியன் அபிந்ந நிமித்தோபாதானகாரணன்.

4. ஓர் சித்திரகாரன் நகவடிவ துரியினால் தனது சரீரத்தின்பேரில் சித்திரம் எழுதுகிறான். பின் அதனைப்பார்த்துக் களிக்கின்றான். பின் அதனை நாசஞ்செய்கின்றான். அந்தச் சித்திரத்திற்கு அச்சித்திரகாரன் அபின்னநிமித்தோபாதான காரணமாகின்றான்.

5. சாக்ஷிசேதனம் சொப்பனப் பிரபஞ்சத்தின் அபின்னநிமித்தோபாதான காரணமானதுபோல ஈசுவரன் ஜகத்தின் அபின்ன நிமித்தோபாதான காரணமாகின்றான்.

அது பொருந்தாது. ஏனெனின், சமசாரம் அநாதி. உத்தரோத்தர சிருஷ்டிக்குப் பூர்வ பூர்வசிருஷ்டியின் கர்மம் காரணமாம். எல்லாவற்றிற்கும் முதலில் யாதொரு சிருஷ்டியுமில்லை. ஆதலால் ஈசுவரனிடத்தில் தோஷமில்லை.

## 252. ஜீவர்களது போகத்தின் பொருட்டு ஈசுவரனுக்கு ஜகத்தையுண்டாக்கு மிச்சையுளதெனல்.

1. ஜீவர்களது கர்மபோகங்களைக் கொடுத்தலினின்றும் ஈசுவரன் எப்போது உதாசீனராகின்றாரோ அப்போது பிரளயமுண்டாகிறது. பிரளயத்தில் சகல பதார்த்தங்களின் சம்ஸ்காரமும் மாயையில் தங்கியிருக்கிறது. ஆகையால் ஜீவர்களின் எஞ்சியிருக்கும் கர்மமும் சூக்ஷ்மமாய் மாயையில் தங்கியிருக்கிறது.

கர்மபோகத்தைக் கொடுக்க ஈசுவரன் சன் (எதிர்) முகமாகும்போது "ஜீவர்களது போகநிமித்தம் ஜகத்தை யுண்டுபண்ணுவேனாக" என்று ஈசுவரனுக்கு * இச்சையுண்டாகிறது.

---

* இங்கு இது சங்கையாம்:—

1. துக்கத்தையாவது துக்கசாதனங்களையாவது நிவர்த்தித்தற் பொருட்டு அல்லது சுகத்தையாவது சுகசாதனங்களையாவது அடையும்பொருட்டு இச்சையுண்டாகும். வேறு வஸ்துவில் இச்சை யுண்டாகாதென்பது நியமம். ஈசுவரனுக்குத் துக்கமும் துக்கசாதனங்களும் இல்லாததினால் அவற்றின் நிவிருத்தியின்பொருட்டு இச்சை நிகழாது.

2. ஈசுவரன் பூர்ணகாமனாயிருத்தலால் சுகத்தையும் அதன் சாதனங்களையும் அடையும்பொருட்டும் அவருக்கு இச்சையுண்டாகாது.

குழந்தைகளுக்கு விநோதத்தின் இச்சை யுண்டாவதுபோல ஈசுவரனுக்கும் நிமித்தமின்றியும் ஜகத்தைச் சிருஷ்டித்தலாகிய விநோதத்தின் இச்சையுண்டாமென்று கூறின் அதுவும் பொருந்தாது. ஏனெனின், குழந்தைகளுக்கு விநோதத்தில் சித்தத்தின் களிப்பு வடிவ சுகத்தை யடைதற் பொருட்டு இச்சையுண்டாகிறதுபோலப் பூர்ணகாமனான ஈசுவரனுக்குக் களிப்பு வடிவ சுகப்பிராப்தியின் இச்சை சம்பவியாது. இச்சங்கைக்கு இது சமாதானமாம்:—கற்பக விருக்ஷம் அந்நியனது சங்கற்பமாகிய நிமித்தத்தினால் இச்சித்த பலத்தைத் தன் சுபாவத்தினால் கொடுப்பதுபோல் ஈசுவரனும் பலத்தைக்கொடுக்க ஸன்முகனாய் ஜீவர்களுடைய அதிருஷ்டமாகிய நிமித்தத்தினால் இச்சா ஞானப் பிரயத்தனங்களைத் தன் சுபாவத்தினால் செய்கிறார். அந்த ஈசுவரனது இச்சை முதலியவற்றின் ஒவ்வொரு வியக்தியே சிருஷ்டியின் ஆரம்ப காலத்தில் உற்பத்தியாய்ப் பிரளயபரியந்தம் நிற்பதாம். ஆதலால் நித்திய மெனப்படுகின்றன. இறப்பு எதிர்வு நிகழ்வு என்னுங் காலங்களிலுள்ள சகல பதார்த்தங்களையும் விஷயஞ் செய்கின்றது. ஆதலால் எப்போதும் சிருஷ்டி அல்லது பிரளயம் சீதம் அல்லது உஷ்ணம் அல்லது மழை யுண்டாகிறதில்லை. ஆனால் சமயாநுசாரமாகவே அவை உண்டாகின்றன.

## சூக்ஷ்மசிருஷ்டி நிரூபணம். (253—257)

### 253. பஞ்சபூதம் அவற்றின்குணம் என்பவற்றின் உற்பத்தி.

இவ்வித ஈசுவரனுடைய இச்சையால் மாயை * தமோகுணப் பிரதான மாகிறது. அந்தத் தமோகுணப்பிரதான மாயையிலிருந்து ஆகாசம் வாயு தேயு ஜலம் பூமி இவ்வைந்து பூதங்களுமுண்டாகின்றன. அப்பூதங்களில் கிரமமாகச் சப்தம் ஸ்பரிசம் ரூபம் ரஸம் கந்தமென்னும் ஐந்து குணங்களிருக்கின்றன.

1. மாயையிலிருந்து சப்தத்தோடு ஆகாயமுண்டாகிறது.

2. ஆகாயத்தினின்றும் வாயு உற்பத்தியாகிறது.

(1) வாயு ஆகாயகாரிய மாதலால் ஆகாயத்தின் சப்தகுணம் வாயுவிலிருக்கிறது.

(2) தன் குணம் ஸ்பரிசமாம்.

3. வாயுவிலிருந்து தேஜசு உண்டாகிறது.

(1) தேஜஸில் ஆகாயத்தின் சப்தமும்,

(2) வாயுவின் ஸ்பரிசமும்.

(3) தன் குணமாகிய ரூபமுமிருக்கின்றன.

4. தேஜஸினின்றும் ஜலமுற்பத்தியாகிறது.

(1) ஜலத்தில் ஆகாசத்தின் சப்தமும்,

(2) வாயுவின் ஸ்பரிசமும்,

(3) தேஜஸின் ரூபமும்,

(4) தன்குணமாகிய ரசமுமிருக்கின்றன.

5. ஜலத்தினின்றும் பிருதிவி யுற்பத்தியாகிறது.

---

* தன் புருஷனுடைய சுக்கிலமாகிய பீஜத்தைத் தரிக்கின்றவளும் அநேக கிருமிகளோடுகூடிய புத்திரவடிவ கர்ப்பமுடைய கர்ப்பிணிஸ்திரீ பிரசவத்திற்குமுன் சந்ததியின் இலாபவடிவ நிமித்தத்தால் எப்போதும் பிரசன்னமா யிருக்கிறாள். அதனாற் சத்துவகுணப் பிரதானமுடையவள்போ லிருக்கிறாள். பின் பிரசவகாலத்தில் வேதனையுண்டாகிற காரணத்தினால் பிரசன்னத்தன்மை மறைபட சூனியசித்த முடையவளாகிற படியால் தமோகுணப்பிரதானம்போலாகிறாள். அது முன் வெண்ணிறமான மேகம் பின் மழைக்காலத்தில் கருநிறமுடையதாதல் போலவாம்.

அவ்வாறு சிருஷ்டிக்கு முன் பிரஹ்மத்தின் பிரதிபிம்பவடிவ ஜகத்தின் பீஜ (காரண)த்தைத் தரிப்பதும் அவித்தையை யுபாதியாகவுடைய அநந்த ஜீவர்களோடு கூடிய பிரபஞ்சவடிவ கர்ப்பமுடையதுமாயுள்ள சுத்தசத்துவப்பிரதான மாயை ஈசுவரனது உபாதியாம். அது சிருஷ்டியின் ஆரம்பத்தில் சுத்த சத்துவப் பிரதான ஸ்வரூபம் மறைபட சிருஷ்டிக்கு யோக்கியமானதமோகுணப்பிரதானமான பிரகிருதிரூபமாகிறது.

(1) பிருதிவியில் ஆகாசத்தின் சப்தமும்,

(2) வாயுவின் ஸ்பரிசமும்,

(3) தேஜஸின் ரூபமும்,

(4) ஜலத்தின் ரஸமும்,

(5) தன் கந்தமு மிருக்கின்றன.

1. ஆகாசத்தில் பிரதித்தொனிரூப சப்தம் இருக்கிறது.

2. வாயுவில்,

(1) ஸீஸீசப்தமுளது.

(2) உஷ்ணசீத கடினங்களுக்கு விலக்ஷணமான ஸ்பரிசமிருக்கின்றது.

(3) அக்கினிரூப தேஜஸில்,

(1) புக்புக் சப்தமும்.

(2) உஷ்ண ஸ்பரிசமும்,

(3) பிரகாச ரூபமு மிருக்கின்றன.

4. ஜலத்தில்,

(1) சிலிசிலு சப்தமும்,

(2) சீதமான ஸ்பரிசமும்,

(3) சுக்கில ரூபமும்,

(4) மதுரமான ரசமுமிருக்கின்றன. உவர்ப்பு கைப்பு முதலிய ரஸங்கள பிருதிவிசம்பந்தத்தால் ஜலத்தில் தோன்றுகின்றன. சுபாவமாக ஜலத்தின் ரஸம் மதுரமே. இந்த மாதுரியம் கடுக்காய் நெல்லிக்காய் முதலியவற்றைத் தின்று நீரைக்குடித்தலால் விளங்கும்.

5. பிருதிவியில்,

(1) கடகடசப்தமும,

(2) உஷ்ண சீதங்களுக்கு விலக்ஷணமான கடின ஸ்பரிசமும்,

(3) வெளுப்பு கருப்பு மஞ்சள் சிவப்பு பச்சை முதலிய ரூபங்களும்,

(4) தித்திப்பு புளிப்பு உவாப்பு உறைப்பு கைப்பு துவர்ப்பு என்னும் ரசங்களும்,

(5) சுகந்தம் துர்க்கந்தம் என்னும் இருவித கந்தங்களும் பிருதிவியி லிருக்கின்றன. இவ்விதத்தால் குணங்கள் ஆகாசத்தில் ஒன்றும், வாயுவிலி ரண்டும்,தேயுவில் மூன்றும், ஜலத்தில் நான்கும், பிருதிவியில் ஐந்தும் இருக் கின்றன. அவற்றில் ஒவ்வொன்று தன் குணமாகவும் மற்றவை காரணத் தின் குணங்களாகவு மிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மூலகாரணம் ஈசுவ ரன். ஈசுவரனிடத்தில் மாயை சேதனம் என இரண்டு பாகங்களிருக்கின்றன.

எல்லாப் பூதங்களிலும் மித்தியாபாகம் மாயையினது; ஸத்தாஸ்பூர்த்திபாகம் சேதனனுடையது.

## 254. அந்தக்கரணத்தின் நான்குபேதங்களோடு அதன் உற்பத்தி.

பஞ்சபூதங்களின் சத்துவ குணாம்சங்கள் சேர்ந்து சத்துவ மெனப்படும் அந்தக்கரணத்தை யுண்டுபண்ணுகின்றன. அந்தக்கரணம் ஞானத்திற்கு ஹேதுவாம். ஞானத்தினுற்பத்தி சத்துவகுணத்தினின்றும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அந்தக்கரணம் பூதங்களின் சத்துவகுணத்தின் காரியமாம். பஞ்சபூதங்களின் காரியமான ஐந்து ஞானேந்திரியங்களுக்கும் சகாயமாயிருக்கிறது. ஆகையால் பஞ்சபூதங்களுஞ் சேர்ந்த சத்துவ குணங்களால் அந்தக்கரணத்தி னுற்பத்தி யுண்டாகிறது.

1. தேகத்தின் உள்ளிருந்து கரண (ஞானத்திற்குச் சாதன) மாயிருத்தலால் அந்தக்கரண மெனப்படும்.

2. பூதங்களின் சத்துவகுண காரியமா யிருத்தலால் அந்தக்கரணத்திற்குச் சத்துவம் என்பதும் பெயர். அந்தக்கரணத்தின் பரிணாமத்திற்கு, விருத்தி யென்று பெயர். அவ்வந்தக்கரண விருத்தி நான்காம்:—

1. பதார்த்தத்தின் சொரூபத்தை நிச்சயம்பண்ணும் விருத்தி புத்தி யெனப்படும்.

2. சங்கற்பவடிவ விருத்தி மன மெனப்படும்.

3, சிந்தையாகிய விருத்தி சித்த மெனப்படும்.

4. நான் என்னும் அபிமான விருத்தி அகங்கார மெனப்படும்.

## 255. பிராணனது ஐந்து பேதங்களோடு அதன் உற்பத்தி.

பஞ்சபூதங்களின் சேர்க்கையான ரஜோகுணாம்சத்தினின்றும் பிராணனுற்பத்தியாகிறது. அந்தப் பிராணன் கிரியாபேதத்தினாலும் ஸ்தானபேதத்தினாலும் ஐந்து விதமாயிருக்கிறது.

1. (1) எதற்கு இருதயம் ஸ்தானமோ,

(2) பசி தாகம் கிரியையோ,

அது பிராணன் எனப்படும்.

2. (1) எதற்குக் குதம் ஸ்தானமோ,

(2). மூத்திர மலங்களை கீழ்க்கொண்டுபோதல் கிரியையோ,

அது அபானனும்.

3. (1) எதற்கு நாபிஸ்தானமோ,

(2) புசித்தனவும் குடித்தனவுமான அன்ன ஜலங்கள் பசனமாகத்தக்கதாகச் சமப்படுத்துதல் கிரியையோ,

அது சமானன்.

4. (1) எதற்குக் கண்டம் ஸ்தானமோ,

(2) சுவாசம் கிரியையோ,

அது உதானன்.

5. (1) எதற்குச் சர்வ சரீரமும் ஸ்தானமோ,

(2) அன்னபானாதிகளின் ரஸத்தைச் சகல நாடிகளிலும் இழுத்துக் கொண்டுபோகுதல் கிரியையோ.

அது வியானன்.

சில விடத்தில் நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என ஐந்து வாயுக்கள் அதிகமாகச் சொல்லப்படுகின்றன. வாந்தி செய்தல், இமைத்தல், தும்மல், கொட்டாவிவிடுதல், பிணசரீரத்தை வீங்கச்செய்தல் என்பன முறையே அவற்றின் கிரியைகளெனப்படும். அவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்பவைகளின் ரஜோகுணாம்சத்தினின்றும் முறையே உண்டாகின்றன. அபானன், சமானன், பிராணன், உதானன், வியானன் இவைகள் தனித்தனியே பிருதிவியாதிகளின் ஒவ்வொன்றன் ரஜோகுணாம்சத்தினின்றும் முறையே யுண்டாகின்றன. எல்லாவற்றின் சேர்க்கையான ரஜோகுணாம்சத்தினின்றும் உண்டாகிறதில்லை.

ஆனால் அத்வைத சித்தாந்தத்தில் இந்தவிஷய மில்லை. ஏனெனின் வித்தியாரண்யஸ்வாமிகளும் பஞ்சீகரணக்கிரந்தத்தில் வார்த்திககாரரும் சூக்ஷ்ம சரீரத்திலும் பஞ்சகோசங்களிலும் நாககூர்மாதிகளைக் கொள்ளவில்லை. அவர்கள் அபானாதி பஞ்சப்பிராணன்களைப் பூதங்களின் சேர்க்கையான ரஜோகுணாம்சத்தினின்றும் உண்டானதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால்,

1. ஒவ்வொரு பூதத்தின் ரஜோகுணாம்சத்தினின்றும் அபானன் முதலியன உண்டானதாகச் சொல்லுதல் பொருத்தமுடையதன்று.

2. சூக்ஷ்ம சரீரத்தில் நாககூர்மாதிகளைக் கிரகித்தல் அசங்கதமாம். பஞ்சப்பிராணன்களே சூக்ஷ்மசரீரத்தில் கிரகிக்கப்படுகின்றன.

பிராணன் விக்ஷேபரூபமாம். விக்ஷேபஸ்வபாவம் ரஜோகுணத்தினதாம். ஆகையால்,

பூதங்களின் ரஜோகுணாம்சத்தினின்றும் பிராணனது உற்பத்தி சொல்லப்பட்டிருக்கிறது.

## 256. ஞானேந்திரிய கர்மேந்திரியங்களின் உற்பத்தி.

1. ஒவ்வொரு பூதத்தின் சத்துவகுணாம்சத்தினின்றும் பஞ்சஞானேந்திரியங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன.

2. ஒவ்வொரு பூதத்தின் ரஜோகுணாம்சத்தினின்றும் ஒவ்வொரு கர்மேந்திரிய முண்டாகின்றது.

1. ஆகாசத்தின் சத்துவகுணத்தினின்றும் சுரோத்திரமும்.

2. வாயுவின் சத்துவகுணாம்சத்தினின்றும் துவக்கும்,

3. தேயுவின் சத்துவகுணாம்சத்தினின்றும் நேத்திரமும்,

4. அப்புவின் சத்துவகுணாம்சத்தினின்றும் ரஸனையும்,

5. பிருதிவியின் சத்துவகுணாம்சத்தினின்றும் கிராணமும் உண்டாகின்றன. இவ்வைந்தும் ஞானத்துக்குச் சாதனமாயிருத்தலால் ஞானேந்திரியங்களெனப்படுகின்றன. ஞானம் சத்துவகுணத்தா லுண்டாதலால் இவ்வைந்தும் பூதங்களுடைய சத்துவகுணத்தின லுண்டானதாகச் சொல்லப்பட்டன.

சுரோத்திரேந்திரியம் ஆகாசத்தின் குணத்தையறிதலால் அது ஆகாசத்தினின்றும் உண்டானதாகச் சொல்லப்படுகிறது. அதுபோல எப்பூதத்தின் குணத்தை எவ்விந்திரியம் அறிகிறதோ அப்பூதத்தினின்றும் அவ்விந்திரியம் உண்டானதாகச் சொல்லப்படும்.

1 ஆகாசத்தின் ரஜோகுணாம்சத்தினின்றும் வாக்கும்,

2. வாயுவின் ரஜோகுணாம்சத்தினின்றும் பாணியும்,

3. அக்கினியின் ரஜோகுணாம்சத்தினின்றும் பாதமும்,

4. அப்புவின் ரஜோகுணாம்சத்தினின்றும் உபஸ்தமும்,

5. பிருதிவியின் ரஜோகுணாம்சத்தினின்றும் குதமும் உண்டாகின்றன.

ஸ்திரீயின் யோனியிலும் புருஷனது குறியிலுமுள்ள விஷயாநந்தத்துக்குச் சாதனமான இந்திரியத்துக்கு உபஸ்தமென்று பெயர்.

கர்மம் என்பது கிரியைக்காம். இந்தப் பஞ்சேந்திரியங்களும் கிரியைக்குச் சாதனமாயிருத்தலால் கர்மேந்திரியங்களெனப்படும்.

கிரியை ரஜோகுணத்தாலுண்டாதலால் பூதங்களின் ரஜோகுணாம்சத்தினின்றும் கர்மேந்திரியங்களின் உற்பத்தி சொல்லப்பட்டது. இவ்வாறு சூக்ஷ்மசிருஷ்டி நிரூபிக்கப்பட்டது.

**257.** அபஞ்சீகிருதபூதங்கள், அவற்றின் காரியமான அந்தக்கரணம், பிராணன், கர்மேந்திரியம், ஞானேந்திரியம் என்பவை சூக்ஷ்மசிருஷ்டி யெனப்படுகின்றன.

இந்திரியங்களில் சூக்ஷ்மசிருஷ்டியின் ஞானமுண்டாகிறதில்லை. மூக்கு முதலிய கோளகங்களோ இந்திரியங்களுக்கு விஷயமாம். ஆனால் அக்கோளங்களிலுள்ள இந்திரியங்கள் எந்த இந்திரியத்துக்கும் விஷயமாகிறதில்லை. சூக்ஷ்மசிருஷ்டியினுற்பத்திக்குப் பின் ஈசுவரேச்சையால் ஸ்தூல சிருஷ்டியின் பொருட்டுப் பூதங்களின் பஞ்சீகரண முண்டாயிற்று.

## பஞ்சீகரணம் 258–259.

### 258. பஞ்சீகரணத்தின் கிரமம்.

பஞ்சீகரணம் இருவகையாகச் சொல்லப்பட்டிருக்கிறது:—

1. ஒவ்வொரு பூதத்தின் தமோகுணாம்சமும் இரண்டிரண்டாக ஐந்து பூதங்களின் முதற்பாதி நிற்கும். மற்றப்பாதி ஒவ்வொன்றும் நந்நான்காகித் தன்னம்சம் ஒழிந்த மற்ற நான்குபூதங்களுடனும் அரைக்கால் மாத்திரையாகச் சேர்ந்து பஞ்சீகரணமாயிற்று. எப்படியெனின், ஆகாசம் தன்பாதியை விட்டுப் பிருதிவியாதி நாலு பூதங்களுடன் சேர்ந்தது. இவ்விதமாகச் சகல பூதங்களும் தத்தம் பாதியைவிட்டு மற்றப் பூதங்களுடன் சேர்ந்தன. இதனுல் தன் பாதியும் மற்ற ஒவ்வொரு பூதத்தின்அரைக்கால் அரைக்காலுஞ்சேர்ந்து மறுபடியும் பூரணமாகிய ஒவ்வொன்றிலேயே பஞ்சபூதங்களும் சேர்ந்தமையால் பஞ்சீகரணமாயிற்று.

2. * இரண்டாவது கிரமம் இதுவாம்:— ஒவ்வொரு பூதத்திற்கும் இரண்டிரண்டு பிரிவுண்டாயிற்று; அது சமமன்று. ஆனுல் ஒருபாகம் நான்கம்சத்தினதும்; ஒருபாகம் ஐந்தாவது அம்சத்தினதுமாம். இவ்வாறு குறைவு நிறைவான இரண்டிரண்டு பிரிவுகளாயின. அவற்றுள் எல்லாவற்றினும் அதிக பாகம் இருந்தபடியிருக்க, பஞ்சபூதங்களின் குறைவான ஐந்துபாகம் எவையோ அவற்றின் ஒவ்வொரு பாகத்தினை அவ்வைந்து பிரிவுசெய்து வேருக நிற்கின்ற அதிகமான ஐந்து பாகங்களில் ஒவ்வொருபாகஞ் சேர்ந்து பஞ்சீகரண மாகின்றது.

1. முதற்பக்ஷத்தில் ஒருபாகத்தின் நான்கு பாகங்கள் வேருக நிற்க அரை அரைப்பாகங்களில் தனது பாகத்தைவிட்டுச் சேர்கின்றன;

2. இரண்டாவது பக்ஷத்தில் குறைந்தபாகத்தின் ஐந்து பாகங்கள் வேறு நிற்க அதிக ஐந்துபாகங்களுள் தனது பாகமல்லாததோடு சேருகிறது.

1. முதற்பக்ஷத்தில் பஞ்சீகிருத பூதங்களின் தனது அம்சம் பாதியும் பாதி அம்சம் பிறவற்றினதுமாம்.

2. இரண்டாவது பக்ஷத்தில் பஞ்சீகரணஞ் செய்தலால் தனது அம்சம் இருபத்தொன்றும் பிறவற்றின் அம்சம் நான்குமாம்.

இரண்டாவது பக்ஷத்தின் எளிதான கிரமம் இதுவாம்:—

ஒவ்வொரு பூதத்திற்கும் 25பாகமாயின் இருபத்தொரு இருபத்தொரு பாகங்களும் நான்கு நான்கு பாகங்களும் வேருயின. நந்நான்கு பாகங்களில்

---

* பஞ்சீகரணத்தின் முதற் கிரமத்தால் சர்வபூதங்களிலும் அரை அரைப்பங்கு தத்தமதாம். அரைப்பங்கு எவ்வளவு நான்குபாகம் பிறபூதங்களினது சேர்ந்திருக்கின்றதோ அதனுல் மற்றப் பூதங்களின் நான்கு பாகங்களினின்றும் தத்தம் அரை அரைப்பங்கு மறைதலால் ஆகாசாதி ஒவ்வொரு பூதத்தின் வெவ்வேருன தோற்றம் உண்டாகலாகாது. அதுவோ உண்டாகின்றது. ஆதலால் முற்கூறியபஞ்சீகரணத்தின் கிரமம் பொருந்தாததாமென்னும் சங்கை ஒர் முமுக்ஷுவின் சித்தத்தில் உண்டாயின், அதனை நிவர்த்திக்கும் பொருட்டு இந்தப் பஞ்சீகரணத்தின் இரண்டாவது கிரமம் சொல்லப்பட்டது.

ஒவ்வொரு பாகம் தன் இருபத்தொருபாகத்தை விட்டு மற்றப் பூதங்களின் இருபத்தொரு இருபத்தொரு பாகங்களில் சேருகின்றன.

இவ்வாறு இருவித பஞ்சீகரணம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு பூதத்தில் அவ்வைந்து பூதத்தைச் சேர்த்துச் செய்வதற்குச் பஞ்சீகரண மென்று பெயர்.

எந்தப் பூதம் பஞ்சீகரணஞ் செய்யப்படுகிறதோ அதற்குப் பஞ்சீகிருத மென்று பெயர்.

## 259. ஸ்தூலப்பிரஹ்மாண்டமுதலியவற்றின் உற்பத்தி.

அந்தப் பஞ்சீகிருத பூதங்களினின்றும்,

1. இந்திரியங்களுக்கு விஷயமான ஸ்தூலப் பிரஹ்மாண்ட முண்டாயிற்று. அந்தப் பிரஹ்மாண்டத்தினுள்,

2. பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், ஜனலோகம், தபோலோகம், சத்தியலோகமென ஏழு மேல் லோகங்களும்,

3. அதலம், சுதலம்,பாதாளம், விதலம், ரஸாதலம், தலாதலம், மகாதலம் என்னும் ஏழு கீழ்லோகங்களு முண்டாயின.

அந்தப் பதினான்குலோகங்களில் ஜீவனுடைய போகத்துக்கு யோக்கியமான அன்னாதிகளும் போகத்துக்கு ஸ்தானமான தேவமனுஷ்ய பசுமுதலிய ஸ்தூலசரீரங்களு முண்டாயின.

இவ்வாறு சுருக்கமாகச் சிருஷ்டி நிரூபிக்கப்பட்டது.

மாயையின் காரியத்தை விஸ்தாரமாக நிரூபித்தலால் கோடிப் பிரஹ்மாக்களின் ஆயுளினாலும் மாயையினா லாக்கப்பட்ட பதார்த்தங்களின் நிரூபணத்திற்கு முடிவுண்டாகா தென்பதனை ஸ்ரீ வால்மீகர் வாசிஷ்டத்தில் அநேக இதிஹாசங்களால் நிரூபித்திருக்கின்றார்.

# ஆத்மவிவேகம் அல்லது பஞ்சகோசவிவேகம் (260 - 271.)

## 260. பஞ்சகோசங்களும் அவை ஆத்மாவை மறைத்தலும்.

மாயை, மாயையின் காரியமெனும் இவற்றில் * மூன்று சரீரங்களும் ஐந்து கோசங்களும் இருக்கின்றன.

1. (1) சுத்தசத்துவகுணசகித மாயை ஈசுவரனது காரணசரீரம்.

(2) மலின சத்துவகுணத்தோடுகூடிய அவித்தியாம்சம் ஜீவனது காரண சரீரமாம்.

---

* மூன்று சரீரங்களின் லக்ஷணத்தையும் பஞ்ச கோசங்களின் லக்ஷணத்தையும் விஸ்தாரமாய் அறிய விரும்புவோர் விசாரசந்திரோதயத்தின் மூன்றாவது கலையிலும் நான்காவது கலையிலும் காண்க.

2. (1) பஞ்ச சூக்ஷ்மபூதங்கள், மனம் புத்தி சித்தம் அகங்காரம், பஞ்சப்பிராணன், பஞ்சகர்மேந்திரியங்கள், பஞ்ச ஞானேந்திரியங்கள் என்னும் இவை சேர்ந்து ஜீவனது சூக்ஷ்மசரீரமாம்.

(2) சகல ஜீவர்களின் சூக்ஷ்மசரீரங்களுஞ் சேர்ந்து ஈசுவரனது சூக்ஷ்ம சரீரமாம்.

3. (1) ஸ்தூலப் பிரஹ்மாண்ட முழுவதும் ஈசுவரனது ஸ்தூல சரீரமாம்.

(2) ஜீவர்களின் வியஷ்டி ஸ்தூலசரீரம் பிரசித்தமாம்.

இந்த மூன்று சரீரங்களிலேயே பஞ்சகோசங்களும் இருக்கின்றன.

1. காரணசரீரத்தினை ஆநந்தமயகோச மென்பர்.

2–4. சூக்ஷ்மசரீரத்தில் விஞ்ஞானமயகோசம் மனோமயகோசம் பிராணமயகோசம் என்னும் மூன்று கோசங்களு மிருக்கின்றன.

(1) பஞ்சஞானேந்திரியங்களும் நிச்சயரூபமான அந்தக்கரணத்தின் விருத்தியான புத்தியும் சேர்ந்து விஞ்ஞானமயகோச மெனப்படும்.

(2) பஞ்சஞானேந்திரியங்களும் சங்கற்ப விகற்பவடிவ அந்தக்கரண விருத்தியாகிய மனமும் சேர்ந்து மனோமயகோச மெனப்படும்.

(3) பஞ்சப் பிராணனும் பஞ்ச கர்மேந்திரியங்களுஞ் சேர்ந்து பிராணமயகோச மெனப்படும்.

(5) ஸ்தூல சரீரத்தினை அன்னமயகோச மென்பர்.

---

† 1. சமஷ்டி அஞ்ஞானரூப மாயை ஈசுவரனது காரணசரீரமாம். அதுவே ஈசுவரனது ஆனந்தமயகோசமாம். 2-4. ஜீவர்களது சூக்ஷ்மசரீரங்களின் சமஷ்டியாகிய ஹிரண்யகர்ப்பன் ஈசுவரனுடைய சூக்ஷ்மசரீரமாம். இதில் (1) விஞ்ஞானமய (2) மனோமய (3) பிராணமயவடிவ ஈசுவரனது மூன்று கோசங்களு மிருக்கின்றன. அவற்றில்,

(1) திக்குப்பாலர்கள் வாயு சூரியன் வருணன் அசுவினிகுமாரர்கள் என்னும் ஐவருமான ஈசுவரனுடைய பஞ்சஞானேந்திரியங்களும், சமஷ்டி புத்தியான மகதத்துவமாகிய ஈசுவரனுடைய புத்தியும் சேர்ந்து ஈசுவரனுடைய விஞ்ஞானமயகோசமாகின்றது.

(2) மேற்சொல்லிய சுரோத்திரமுதலியவற்றின் அதிஷ்டான தேவதைவடிவ ஐந்து ஈசுவரனது ஞானேந்திரியங்களும் சமஷ்டிமனவடிவ அகங்காரமயம் அல்லது எல்லோர் மனதின் அபிமானி சந்திரமயமென்னும் ஈசுவரனது மனமுஞ்சேர்ந்து ஈசுவரனுடைய மனோமயகோச மாகின்றது.

(3) அக்கினி இந்திரன் உபேந்திரன் பிரஜாபதி யமன் என்னும் ஐந்து ஈசுவரனுடைய கர்மேந்திரியங்களும், சமஷ்டிப் பிராணனாகிய ஈசுவரனுடைய பிராணனும் அல்லது வாயுவின் அபிமான தேவதைவடிவமுஞ்சேர்ந்து ஈசுவரனுடைய பிராணமயகோச மாகின்றது.

இவ்வாற்றால் மூன்று சரீரங்களிலேயே ஐந்து * கோசங்களுமிருக்கின்றன.

1. ஈசுவரசரீரத்தில் ஈசுவரனது கோசங்களிருக்கின்றன.

2. ஜீவசரீரத்தில் ஜீவனது கோசங்கள் இருக்கின்றன.

கோசமென்பது உறைக்காம்.

---

5. சமஷ்டி ஸ்தூல சிருஷ்டியாகிய விராட்டு **ஈசுவரனுடைய ஸ்தூலசரீரமாம்.** அது **ஈசுவரனுடைய அன்னமயகோசமாம்.**

ஜீவனது சரீரத்தில் ஜீவனது கோசங்களிருக்கின்றன. அவை கோசகாரமென்னும் கிருமியின் முள்ளினால் கட்டப்பட்ட கூடாகிய கோசத்தைப்போல ஜீவனது திருஷ்டியினால் அதன் நிஜவடிவப் பிரத்தியகாத்மாவை மறைப்பனவாகின்றன. அங்ஙனமே ஈசுவரனது சரீரத்திலுள்ள ஈசுவரனது கோசங்கள் ஈசனது திருஷ்டியினால் அவ்வீசனது நிஜவடிவப் பிரஹ்மத்தை மறைப்பனவாகா. ஆனால் ஜீவனது திருஷ்டியினால் பிரஹ்மத்தை மறைப்பனவாம். ஆதலால் ஜீவனுக்கு வியஷ்டி பஞ்சகோசங்களினின்றும் எப்படிப் பிரத்தியகாத்மாவை வேறுபிரித்தல் கர்த்தவ்வியமோ, அப்படிச் சமஷ்டிகோசங்களினின்றும் பிரஹ்மத்தை வேறுபிரித்தலும் ஜீவனுக்கே கர்த்தவ்வியமாம். ஈசுவரனுக்கு ஆவரணமின்மையால் நித்தியமுத்தனாயிருத்தலால் கர்த்தவ்வியம் ஒன்றுமில்லை.

* **பஞ்சகோசங்கள்:**— தாய்தந்தையரால் உண்ணப்படும் அன்னத்தினின்றுண்டாகும் தாயினுடைய இரத்தத்தினாலும் பிதாவினுடைய வீரியத்தினாலும் தாயினுடைய உதரத்தில் உற்பத்தியாகி, ஜனனத்துக்குப் பிறகு பால்முதலிய அன்னங்களால் வளர்க்கப்பட்டு, மரணத்துக்குப் பிறகு அன்னரூபமான பிருதிவியில் லயமடைகிற தேகம் அன்னமயகோச மெனப்படும். பிராணமயகோசம் கேவலம் ரஜோகுணத்தின் அவஸ்தை. பிராணாதி வாயுக்கள் சரீரத்தில் பூரித்துச் சரீரத்துக்குப் பலத்தைக் கொடுத்து இந்திரியங்களை அவற்றின் காரியத்தில் பிரவர்த்திக்கும்படி செய்கின்றன. கர்மேந்திரியங்களால் வியவகாரஞ் செய்வதினாலும் இச்சைமுதலிய ரஜோகுணவிருத்திகளுடன் கூடியிருப்பதாலும் மனோமயம் சத்துவ ரஜோகுணங்களின் அவஸ்தையாம். விஞ்ஞானமயம் கேவலம் சத்துவகுணத்தின் அவஸ்தையாம். இவ்விதமாக அவஸ்தாபேதத்தால் ஒரே சூக்ஷ்மசரீரத்தில் மூன்றுகோசங்கள் சொல்லப்படுகின்றன. ஆத்மாவின் ஸ்வரூபம் ஆனந்தம். இதன் பிரதிபிம்பத்துடன் கூடியும் பிரியமோதப் பிரமோதங்களாகிற விருத்திகளின் லயத்துக்கு ஸ்தானமாயும் இருப்பது அவித்தையாகிற காரணதேகம். அதுவே ஆனந்தமயகோசம். இஷ்டவிஷயத்தைப் பார்க்கிறதினாலுண்டாகும் விருத்தி பிரிய மெனப்படும். அதை யடைவதாலுண்டாகும் விருத்தி மோத மெனப்படும். அதை யனுபவிப்பதாலுண்டாகும் விருத்தி பிரமோத மெனப்படும். இவ்விருத்திகள் ஜாக்கிரஸ்வப்னங்களில் புண்ணியகர்மத்தின் பலனாகும் சுகானுபவத்திலுண்டாகின்றன. சுழுத்தியில் இவ்விருத்திகள் தமக்குக் காரணமான அஞ்ஞானத்தில் லயமாகின்றன. இந்த அஞ்ஞானம் ஆனந்தமயகோசமென்று சொல்லப்படுகின்றது. அன்னமயகோசம் போகஸ்தானம். சூக்ஷ்மசரீரம் போகசாதனம். பிராணமயகோசம் கிரியாசக்தியுள்ள காரியரூபம். மனோமயம் இச்சாசக்தியுள்ள கரணரூபம். விஞ்ஞானமயம் ஞானசக்தியுள்ள கர்த்தாரூபம். ஆனந்தமயகோசம் போக்தாரூபம்.

உறைபோலப் பஞ்சகோசங்கள் ஆத்மாவின் ஸ்வரூபத்தை மறைத்த லால் அன்னமயாதிகள் கோசங்க ளெனப்படுகின்றன. அநேக மந்தபுத்தி யுள்ளவர்கள் பஞ்சகோசங்களிலுள்ள அநாத்ம பதார்த்தங்களின் ஒன்றை ஆத்மாவாக நினைத்து முக்கிய சாக்ஷியாகிய ஆத்மஸ்வரூபத்தினின்றும் விமுகர்(வேற்றுமைப் பார்வையினர்)களாகவே யிருக்கிறார்கள். ஆதலால் அன்னமயாதிகள் ஆத்மஸ்வரூபத்தை மறைக்கின்றன.

## 261. விரோசன சித்தாந்தம் (அன்னமயகோசம் ஆத்மா.)

அங்குச் சில பாமரர்களாகிய விரோசன மதத்தை யனுசரித்தவர்கள். ஸ்தூல சரீர அன்னமயகோசத்தையே ஆத்மா வென்கிறார்கள். அவர்கள் சித்தாந்தத்திற்கு இவ்வாறு யுக்தி சொல்லுகிறார்கள்:—

1. எதில் நான் என்னும் புத்தி யுண்டாகிறதோ அது ஆத்மா. அந்த நான் என்னும் புத்தி ஸ்தூலசரீரத்தி லுண்டாகிறது.

(1) "நான் மனுஷ்யன், நான் பிராமணன்" என்னும் உணர்ச்சி எல்லோருக்கும் உண்டாகின்றது.

(2) மனுஷ்யத்தன்மை பிராமணத்தன்மைகள் ஸ்தூலசரீரத்திற்றான் இருக்கின்றன. ஆதலால் ஸ்தூலசரீரம் நான் என்னும் புத்திக்கு விஷயமாத ஆத்மாவாம்.

2. அல்லது எதில் முக்கியமான பிரீதி (உணர்ச்சி) யுண்டாகிறதோ அது ஆத்மா.

(1) ஸ்திரீ புத்திரன் தனம் பசு முதலியன ஸ்தூலசரீரத்துக்கு உபயோகப்படுமாயின் அவற்றில் பிரீதி யுண்டாகிறது.

(2) ஸ்தூலசரீரத்திற்கு உபயோக மாகாவிடின் பிரீதி யுண்டாகிறதில்லை.

எதன் நிமித்தமாக அன்னியபதார்த்தங்களில் பிரீதியுண்டாகிறதோ, அந்த ஸ்தூலசரீரத்திலேயே முக்கியமான பிரீதியிருக்கிறது. ஆகையால் ஸ்தூலசரீரமே ஆத்மாவாம். அதனை வஸ்திரம் பூஷணம் அஞ்சனம் மஞ்சனம் நானாவிதபோஜனங்கள் முதலியவற்றால் சிங்காரித்துப் போஷித்தலே பரமபுருஷார்த்தமாம். இது அசுரஸ்வாமியாகிய * விரோசனர் சித்தாந்தம்.

* தேகாத்ம வாதிமதம்:—சார்வாகமதத்தை யநுசரித்தவர்கள் வாயு முதலிய நாலு பூதங்களின் சங்காதவடிவதேகத்தை ஆத்மாவெனக்கொண்டு அதற்கு இந்த யுக்திகளைச் சொல்லுகிறார்கள்:—[1] நான் என்னும் புத்திக்கு விஷயமாவது ஆத்மா. "நான் மனுஷ்யன்; ஸ்தூலமாயிருக்கிறேன்; மெலிந்திருக்கிறேன்; நான் பிராமணன்" என்றல் முதலிய அநுபவத்தினால் மனுஷ்யத்தன்மை முதலிய தர்மவிசிஷ்ட ஸ்தூலதேகமே நான் என்னும் உணர்ச்சிக்கு விஷயமாகிறது. ஆதலால் தேகமே ஆத்மா. [2] அல்லது பரமப் பிரீ

## 262. இந்திரிய ஆத்மவாதியின்மதம். (இந்திரியம் ஆத்மா)

வேறு சிலர் இவ்வாறு கூறுகின்றனர்:— ஸ்தூலசரீரம் ஆத்மாவன்று. ஆனால்,

---

திக்கு விஷயமாவது எதுவோ அது ஆத்மாவாம். இந்தத் தேகத்திற்கு அதை யுத்தேசித்துத் தான் உபகாரஞ்செய்தலாகிய நிமித்தத்தால் ஸ்திரீ புத்திராதிகளும் பிரியமாகக் காணப்படுகின்றார்கள். அந்தத் தேகமே பரமப்பிரீதிக்கு விஷயமாகிறது. ஆதலால் பரமப்பிரீதிக்கு விஷயமாதலென்னும் லக்ஷணத்தினாலும் ஸ்தூலதேகமே ஆத்மாவாம். [3] அந்தத் தேகத்தை யலங்கரித்தல் போஷித்தல் முதலியவற்றாலுண்டாகிய போகமே பரம புருஷார்த்தமாம். [4] மரணமே மோக்ஷமாம்.[5]பிரத்தியக்ஷம் ஒன்றே பிரமாணமாம்; மற்றவை அப்பிரமாணமாமென்னும் இச்சார்வாகமதம் அசங்கதமாம். ஏனெனின், [1] "நான்பார்க்கிறேன்,கேட்கிறேன்,பேசுகிறேன்"என்றல்முதலியகிரமத்தால்இந்திரியமும் நான் என்னும் உணர்ச்சிக்கு விஷயமாகக் காணப்படுகின்றது. [2] "என்னுடைய தேகம் ஸ்தூலமாயிருக்கிறது அல்லது மெலிவாயிருக்கிறது" என்றல் முதலிய கிரமத்தால் தேகத்தில் மமதையின் விஷயமும் காணப்படுகிறது. மமதைக்கு விஷயமாவது அகந்தைக்கு விஷயமாகாது. இதனால் ஸ்தூலதேகத்தில் ,யான் என்னும் உணர்ச்சியின் வியபிசாரம் (பிறழ்ச்சி) இருக்கிறது. ஆதலால் தேகம் ஆத்மாவன்று. [3] ஸ்திரீ புத்திரன் முதலியவற்றைவிடத் தேகத்தில் அதிகப்பிரீதி தோன்றுவதுபோல் தேகத்தினும் இந்திரியங்களில் அதிகப்பிரீதி காணப்படுகிறது. ஆகையால் ஸ்தூலதேகம் எல்லாவற்றினும் அதிகப் பிரீதிக்கு விஷயமன்று. இதனாலும் ஸ்தூலதேகம் ஆத்மாவன்று. [4] சேதனமே ஆத்மாவாம். ஜடமானபூதங்களின் சங்காதத்தில்சேதனத்தன்மையின்மையினாலும்ஆத்மாவன்று.[5]பாக்குச்சுண்ணாம்புகளுடன்கூடிய தாம்பூலத்தில் சிவப்புவர்ணத்தைக் கொடுக்குஞ் சக்தியிருப்பதுபோல் பூதசமுதாயமான தேகத்தில் ஞானசக்தி யிருக்கிறதென்பது பொருந்தாது. ஏனெனின் அவ்வாறு பூதசமுதாயமான தேகத்தில் சேதனமிருந்தால் பூதசமுதாயவடிவ கடத்திலும் சேதனத்தன்மை யுண்டாதல் வேண்டும்; உண்டாகிறதில்லை. [6] சுழுத்தி, மூர்ச்சை, மரணமுதலிய அவஸ்தைகளில் கடம்போல் தேகமும் ஜடமாயிருக்கிறது. இது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. ஆகையால் ஜடதேகம் ஆத்மாவாகாது. [7] தேகமே ஆத்மாவானால் பாலகசரீரத்துக்குப் பின்னமான யௌவன சரீரத்தில் "அவனே நான்" என்னும் பிரத்தியபிஞ்ஞை யுண்டாகலாகாது. அதுவோ உண்டாகின்றது. இதனாலும் தேகம் ஆத்மாவன்று. [8] சரீரத்துக்கு ஜன்ம மரணாதிகளிருத்தலால் ஜன்மத்துக்கு முன்னும் மரணத்துக்குப் பின்னும் சரீரமில்லை; ஆனால் ஆத்மா இருக்கிறது. ஆத்மா இல்லையெனின் கிருதநாசம் (செய்தது அநுபவமின்றிக்கெடுதல்) அகிருதாப்பியாகமம் (செய்யாதது அநுபவத்திற்கு வருதல்) என்னும் தோஷங்கள் நேரிடும். இதனாலும் தேகம் ஆத்மாவன்று. [9]தேகத்தையலங்கரித்தல் போஷித்தல் முதலிய போகங்களே புருஷார்த்தமென்பது பொருந்தாது. ஏனெனின் இச்சைக்கு விஷயமாவது புருஷார்த்த மெனப்படும். சுகப்பிராப்தியிலும் துக்க நிவிருத்தியிலும் எல்லோருக்கும் இச்சையிருத்தலால் அவை புருஷார்த்தமாம். எல்லாச் சுகங்களையும் விட அதிகசுகமும் அத்தியந்ததுக்கநிவிருத்தியும் பரமபுருஷார்த்த மெனப்படும். இவை மோக்ஷத்திலிருக்கின்றன. போகங்களில் தோஷமிருத்தலால் அவை பரமபுருஷார்த்தமாகா. [10] தேகமே ஆத்மாவானால் மரணத்துக்குப் பிறகு தேகம் தகிக்கப்பட்டுப் போவதால் தேகவடிவ ஆத்மாவே யில்லாமையால் மரணம் மோக்ஷமென்பது செல்லுதன் மாத்திரமாம்; மோக்ஷத்துக்கு இடமில்லை; பிரலாபம் (பிதற்றுதல்) மாத்திரந்தான்

1. ஸ்தூல சரீரத்தில் எது இருத்தலால் ஜீவனவியவகார முண்டாகிறதோ, எது இல்லாவிட்டால் மரணவியவகார முண்டாகிறதோ, அந்த ஆத்மா ஸ்தூல சரீரத்தினும் வேறும். ஜீவனமும் மரணமும் இந்திரியங்களின் அதினமாயிருக்கின்றன. சரீரத்தில் இந்திரிய முள்ளவரையில் ஜீவனமுண்டு. இந்திரியங்களில் ஏதேனுமொன்று இல்லாவிட்டால் அப்போது மரணம் சொல்லப்படுகிறது.

2. "நான் பார்க்கிறேன் பேசுகிறேன் கேட்கிறேன்" என்றிவ்வாறு "நான்" என்னும் புத்தி இந்திரியத்திலிருக்கிறது.

ஆகையால் * இந்திரியமே ஆத்மாவாம்.

## 263. இரணியகர்ப்பனை யுபாசிப்பவர் மதம்.

## (பிராணன் ஆத்மா).

ஹிரண்யகர்ப்பவுபாஸகர் பிராணனை ஆத்மாவென்று சொல்லுகிறார்கள். அதில் இந்த யுக்தியைக் கூறுகின்றார்கள்.

1. மரணசமயத்தில் மூர்ச்சையுண்டானால் அப்போது சமீபத்திலிருக்கப்பட்ட புத்திராதிகள் பிராணனிருந்தால் ஜீவித்திருப்பதாயும் பிராணனில்லாவிட்டால் இறந்துபோய்விட்டதாயும் அறிகிறார்கள்.

2. அல்லது சரீரத்தில் நேத்திரேந்திரியம் இல்லாவிடின் குருட்டுச் சரீரம் இருக்கிறது. அப்படியே சுரோத்திரேந்திரியமின்றிச் செவிடாயிருக்கிறார்கள்; வாக்கின்றி ஊமையாயிருக்கிறார்கள். இவ்வாறு இந்திரியங்களின் வியாபாரமில்லாமலும் சரீரம் நிலைத்தேயிருக்கிறது. பிராணன் இல்லாமற்போனால் தேகம் அந்த க்ஷணமே மயானம்போல் அமங்களமும் பயங்கரமுமாய் விழுகிறது.

---

மிஞ்சுகிறது. [11] உண்ணப்படாத உணவில் திருப்திக்கு ஏதுவாந்தன்மை அநுமானப் பிரமாணத்தால் சித்தித்தலாலும் பரதேசத்தில் இறந்த பிதாவின்மரணம் சப்தப் பிரமாணத்தினால் சித்தித்தலாலும் இவைமுதலிய வேறு பிரமாணங்களாலும் வியவகாரஞ் சித்தித்தலால் பிரத்தியக்ஷப் பிரமாணம் ஒன்றனையே அங்கிகரித்தல் ஹடமாத்திரமாம். இவ்வாற்றால் தேகாத்மவாதி சார்வாகர்மதம் அசங்கதமாம்,

* சார்வாகரின் ஏகதேசியாகிய இந்திரியாத்ம வாதிகளின் மதம் அசங்கதமாம். ஏனெனின் (1) எது இல்லாவிட்டால் சரீரமிருக்கமாட்டாதோ அது ஆத்மா. கண் முதலிய ஒவ்வொருஇந்திரியமும் நாசமாகியும் குருடுசெவிடுமுதலியனவாய்ச்சரீரமிருக்கிறது. ஆதலால் இந்திரியம் ஆத்மாவன்று. [2] நான் பார்க்கிறேன் கேட்கிறேன் என்றிவ்வாறு நான் என்னும் உணர்ச்சிக்கு இந்திரியம் விஷயமாகுதலால் இந்திரியமே ஆத்மாவாம் என்று இந்திரியாத்மவாதி சொல்வது சரியன்று. ஏனெனின் "நேத்திரமுடையவனாகிய நான் பார்க்கிறேன்" என்பது புருஷனுக்கு அபிப்பிராயம்; நேத்திரமாகிய நான் பார்க்கிறேன் என்பது அபிப்பிராயமன்று. ஆகையால் இந்த நான் என்னுமுணர்ச்சிக்கு விஷயம் இந்திரியத்தினும் வேறாகச் சித்திக்கிறது; இந்திரியமன்று. என்பார்வை மந்தமாயிருக்

3. "நான் பார்க்கிறேன், கேட்கிறேன்" என்னுமுணர்ச்சியினலும் இந்திரியங்களுக்கு வேருய் ஆத்மா இருப்பதாகச் சித்திக்கிறது. ஏனெனின், "நேத்திரஸ்வரூபமான நான் பார்க்கிறேன், சிரவணரூபமான நான் கேட்கிறேன்" என்று பிரதீதியுண்டாயின் இந்திரியமே ஆத்மாவாதல் சித்திக்கும். ஆனல் "நேத்திரமுடைய நான் பார்க்கிறேன், காதுடைய நான் கேட்கிறேன்" என்று பிரதீதியாகிறது.

ஆதலால் இந்திரியத்துக்கு வேருகவே ஆத்மா இருக்கிறது.

4. சுழுத்தியில் சகல இந்திரியங்களும் இல்லை. அங்ஙனமாயினும் பிராணனிருத்தலால் ஜீவனவியவகாரமுண்டாகிறது. ஆகையால் ஜீவித்தலும் மரித்தலும் இந்திரியங்களின் அதீனமன்று; ஆனல் ஸ்தூல சரீரமும் பிராணனும் பிரிதலே மரணமென்பர். ஆகையால் ஜீவனமரணங்கள் பிராணுதீனமாயிருக்கின்றன. அந்தப் பிராணனே * ஆத்மாவாம்.

---

கிறது. என்வாக்குத் தெளிவாயிருக்கிறதென்று இந்திரியம் மமதைக்கும் விஷயமாதல் காணப்படுதலால் நான் என்னும் உணர்ச்சிக்கு விஷயமாதல் பிறழுகின்றது. ஆகையால் இந்திரியம் ஆத்மாவன்று. [3] எவன் எதை யறிகிருனே அவன் அதனினும் கடத்தைப் பார்ப்பவனைப்போல வேருயிருக்கிருன் என்னும் நியமத்தால் இந்திரியங்களின் மந்தத்தன்மை தீக்ஷணத்தன்மைகளை யறிகிற ஆத்மா அவற்றின் (இந்திரியத்துக்கு) வேறெனச் சித்திக்கிறது. [4] மனதிற்கு வியாகூலத்தன்மை முதலியன உண்டாகியகாலத்துச் சிரவணமுதலிய தத்தம் வியாபாரம் சித்தியாமையால் ஜடத்தன்மை யநுபவசித்தமாம். ஆதலால் ஜடமாயிருத்தலாலும் இந்திரியம் ஆத்மாவன்று. [5] இவ்வாறிருக்க ஜடமாய் இந்திரியமே சேதனம் என்று சொல்லும் வாதியை இது கேட்கவேண்டும். ஒரே இந்திரியம் சேதனமா? இந்திரியங்களெல்லாஞ் சேர்ந்தது சேதனமா? அல்லது எல்லா இந்திரியமும் தனித்தனியே சேதனமா? இவை மூன்று விகற்பங்கள். அவற்றுள் முதற்பக்ஷம் ஒவ்வாது. ஏனெனின் எந்த இந்திரியத்தைச் சேதனமாகச் சொல்லுகிருமோ அது இல்லாவிடினும் ஞானமும் ஜீவனமும் காணப்படுகின்றன. ஆகையால் ஒரே இந்திரியம் சேதனமன்று. இரண்டாவது பக்ஷமும் பொருந்தாது. ஒரிந்திரியம் நஷ்டமாயின் சமுதாயத்திற்கு ஹானி வந்துவிடுகிறது. அதனல் ஞானமும், ஜீவனமும் இருக்கலாகாது; அதுவோ இருக்கிறது. ஆதலால் இந்திரியங்களின் சமுதாயமும் சேதனமன்று. மூன்ருவது பக்ஷமும் பொருந்தாது. ஒவ்வோரிந்திரியமும் தனித்தனியே ஆத்மாவானல் ஒரு சரீரத்தில் பத்து சேதனமாகிய ஆத்மாக்களிருக்கவேண்டும். அவ்வெல்லாற்றின் தனித்தனி இச்சையினல் ஒரு வாழைமரத்திற் கட்டப்பட்ட பத்து யானைகளால் அந்த வாழை பங்கப்படுவதுபோலத் தேகம் பங்கமாய்விடும். ஆகையால் எல்லாவிந்திரியமும் தனித்தனியே சேதனமன்று. இவ் விதத்தால் இந்திரியம் அசேதனமா யிருத்தலால் ஆத்மாவன்று. [6] சுருதியிற்சொல்லிய இந்திரியஸம்வாதம் இந்திரிய அபிமானிதேவதைகளுடையதாம்; இதனலும் இந்திரியம் சேதனமென்பது பொருந்த வில்லை. ஆதலால் இந்திரியமே ஆத்மாவென்னும் வாதியின் மதம் அசங்கதமாம்.

* பிராணத்மவாதிகண்டனம்:—சமஷ்டிப் பிராணனை யுபாஸிக்கிற ஹைரண்ய சர்ப்பர்களுடைய மதமும் சரியன்று. ஏனெனின் [1] பாஹியவாயுபோல் பிராணனும் வாயுவாயிருத்தலால் பிராணன் ஆத்மாவன்று, [2] பிராணன் பார்க்கப்படாததினல் மரணம்

## 264. மனஆத்மவாதிமதம் (மனம் ஆத்மா.)

வேறுசிலர் இவ்வாறு கூறுகின்றனர்:—

1. பிராணன் ஜடம்; ஆகையால் அது கடம்போல அனாத்மாவாம்.

2. பந்தமோக்ஷங்கள் மனத்தின் ஆதீனமாயிருக்கின்றன.

(1) விஷயத்தில் ஆஸக்தியையடைந்த மனம் பந்தத்துக்கு ஹேது.

(2) விஷயவாசனையின்றிய மனம் மோக்ஷத்துக்கு ஹேதுவாம்.

3. மனச்சம்பந்தத்தினாலேயே இந்திரியம் ஞானத்துக்கு ஹேதுவாம். மனதின் சம்பந்தமின்றி இந்திரியத்தால் ஞானமுண்டாகிறதில்லை.

ஆகையால் சகல வியவகாரங்களுக்கும் மனமே ஹேதுவாம். * அதுவே ஆத்மா.

---

நியமமாகச் சம்பவிக்கிறதில்லை. ஏனெனின் விருக்ஷமுதலியவற்றில் பிராணன் பார்க்கப் படாவிட்டாலும் அவை ஜீவிப்பது நன்றாய்த்தெரிகிறது. மனுஷ்யன் மூர்ச்சை யடையும்போதும் பிராணனிருக்கிறதாகத் தெரிகிறதில்லை. அதனால் அவன் இறந்துபோய் விட்டதாகச் சொல்லப்படுகிறதில்லை. அவன் ஜீவித்துக்கொண்டேயிருக்கிறான். ஆகையால் பிராணன் ஆத்மாவன்று. [3] தூங்கிக்கொண்டிருக்கும்போது பிராணன் இருந்தும் ஒருவன் ஒருவஸ்துவை யெடுத்துக்கொண்டுபோவானாயின் அவனைத் தடுக்கிறதில்லை. ஓர் சம்பந்தி வந்தால் அவனை யுபசரிக்கிறதுமில்லை. ஆதலால் பிராணன் ஜடமாம். இதனாலேயே அது ஆத்மாவன்று. [4] பிராணன் வெளியே போகிறதினால் தேகம் மரிக்கிறது. ஆகையால் பிராணனே ஆத்மாவென்று பிராணாத்மவாதி சொல்வதும் அசங்கதமாம். ஏனெனின் ஜடராக்கினி வெளியே போவதினாலும் தேகம் மரிக்கிறது. மரணத்துக்குப் பிராணன் வெளியேபோவதே காரணமன்று; நியமந்தப்புகிறது. சுருதியில் பிராணனைச் சிரேஷ்டமாகச்சொன்னது பிராணஉபாஸனையிற் பிரவிருத்தியுண்டாகும்பொருட்டான ஸ்துதிமாத்திரமேயாம். ஆதலால் அது அர்த்தவாதவடிவமாம். (5) சுருதியில் பிராணமயாதிகோசங்களை ஆத்மாவென்று சொன்னதற்குத் தாற்பரியம் யாதெனின் ஸ்தூலாருந்ததிநியாயத்தால்அதிஷ்டானமான பிரத்தியகபின்னபரமாத்மாவை யறிவிப்பதிலேயே தாற்பரியமாம். (6) சுருதியில் பிராணன் இந்திரியங்களுடன் சம்வாதஞ்செய்ததாகவும், தேகத்தில் பிரவேசித்ததாகவும் சொன்னது பிராண அபிமானி தேவதையை யுத்தேசித்துச் சொன்னதாம். (7) பசியால் என் பிராணன் போகிறது; போஜனத்தால் என் பிராணன் திருப்தியடைகிறது என்று இவ்வாறு பிராணன் மமதைக்கு விஷயமாவதால் அகந்தைக்கு விஷயமாகிறதில்லை. இதனாலும் பிராணன் ஆத்மாவன்று. (8) தன் பிராணன் வெளியேபோகிறதும் உள்ளே வருவதும் தன்னால் அநுபவிக்கப்படுதலால் பிராணனை யறிகிற ஆத்மா பிராணனுக்கு வேறாகவே இருக்கிறது.

* மன ஆத்மவாதிமதகண்டனம் :—நாரதபாஞ்சராத்திரத்தை யனுசரித்தவர்கள் மனமே ஆத்மாவென்று சொல்லுகிறார்கள். இது சரியன்று. ஏனெனின் வாய்ச்சி, உளி முதலியவற்றைப்போல மனது கரணமாயிருத்தலால் அது ஆத்மாவன்று. சுழுத்தி முதலியவற்றில் சாமானியசேதனம் இருத்தலால் மனமிருந்தால் சேதனமிருக்கிறது,

## 265. விஞ்ஞானவாதி பௌத்தர் மதம் (புத்தி ஆத்மா).

க்ஷணிகவிஞ்ஞானவாதி பௌத்தர் இவ்வாறு கூறுகின்றனர்:—மனதின் வியாபாரம் புத்தியின் அதீனமாயிருக்கிறது. ஏனெனின் புத்தியின் ஆகாரமே மனமாம். ஆதலால் க்ஷணிக விஞ்ஞானரூப புத்தியே ஆத்மா மனது ஆத்மாவன்று.

அவர்கள் அபிப்பிராயம் இதுவாம்:—

1. சகலபதார்த்தங்களும் விஞ்ஞானத்தின் ஆகாரமாகவே யிருக்கின்றன.

2. அந்த விஞ்ஞானம் பிரகாசரூபம்.

3. ஒவ்வொரு க்ஷணத்திலும் விஞ்ஞானமுண்டாகி நாசமடைகிறது.

முன் விஞ்ஞானத்திற்குச் சமானமான வேறு விஞ்ஞான முற்பத்தியாதலால் முன் விஞ்ஞானம் நாசமடைகிறது. அப்படியே மூன்றாவது விஞ்ஞானத்தின் உற்பத்தி, இரண்டாவது விஞ்ஞானத்தின் நாசம், நான்காவதினுற்பத்தி, மூன்றாவதின் நாசம் இவ்வாறு நதியின் பிரவாகம்போல் விஞ்ஞானத்தின் தாரை தொடர்ந்துகொண்டே யிருக்கிறது. அந்த விஞ்ஞானதாரை இருவகையாம்:—1.ஒன்று ஆலயவிஞ்ஞானதாரை; மற்றொன்று பிரவிருத்தி விஞ்ஞானதாரை.

1. நான் நான் என்னும் விஞ்ஞானதாரையை ஆலயவிஞ்ஞானதாரை யென்பர். அதனையே புத்தியென்பர்.

---

மனமில்லாவிட்டால்சேதனமில்லையென்னும் அந்வயவெதிரேகங்களுக்குப் பங்கம் வருதலால் மனம் சேதனமன்று. ஆனால் ஜடமாம். ஆகையால் அது ஆத்மாவன்று. என் மனது வேறிடத்திற் போயிருந்தது, இப்போது வந்துவிட்டது என்று சொல்லுவதினால் மனது மமதைக்கு விஷயமாதலால் அகந்தைக்கு விஷயமாகிறதில்லை. (4) ஆதலால் மனதின் ஸ்திரத்தன்மையையும் அஸ்திரத்தன்மையையும் அறிகிற ஆத்மா மனதினும் வேறாகச் சித்திக்கிறது. (5) சேதனத்தின் ஆபாஸத்துடன் கூடியதாயிருத்தலால் மனது போக்தாவாயிருக்கிறது; சுவதந்திரமாயில்லை. ஆகையால் போக்தாவாதற்றன்மையினாலும் மனம் ஆத்மாவன்று. (6) "மனிதனுடைய பந்தமோக்ஷங்களுக்குக் காரணம் மனதே. விஷயத்தில் ஆஸக்தியடைந்த மனது பந்தத்தின்பொருட்டாம். நிர்விஷயமான(வாசனையின்றியதான)மனது மோக்ஷத்தின்பொருட்டாம்." என்னும் சுருதி மனம் ஞானப்பிராப்திவாயிலாக மனதைப்பாதித்து மோக்ஷத்துக்குக் காரணமும்,விஷயவாசனையினால் மோக்ஷசாதனத்தைப் பிரதிபந்திக்கும்வாயிலாக அத்தியாசத்தினிருப்பால் பந்தத்திற்குக்காரணமுமாயிருக்கின்றது என்பதைச் சொல்லுகின்றது. மனம் ஆத்மாவென்று சொல்லுவதில்லை. ஆதலால் இந்தச் சுருதி மனது ஆத்மாவென்பதில் பிரமாணமன்று. ஆனால் பந்தத்தினது சாதனத்தினின்றும் நீங்குதலையும் மோக்ஷசாதனத்திற் பிரவிருத்தித்தலையும் அறிவிப்பதாம். (7) மனோமயகோசமே ஆத்மாவென்று சொல்லும் சுருதிக்குத் தாற்பரியம் முன் டிப்பணியிற் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாற்றால் மனது ஆத்மாவென்பதும் அசங்கதமாம்.

2. "இது கடம், இது சரீரம்" என்னும் விஞ்ஞானதாரையைப் பிரவிருத்திவிஞ்ஞானதாரை என்பர்.

ஆலயவிஞ்ஞானதாரையினின்றும் பிரவிருத்தி விஞ்ஞானதாரை உற்பத்தியாகிறது. மனதின் ஸ்வரூபமும் பிரவிருத்தி விஞ்ஞானதாரையிலிருக்கிறது; ஆதலால் ஆலயவிஞ்ஞானதாரைவடிவ புத்தியின் காரியமாம். அந்தப் புத்தியே ஆத்மா.

ஆலயவிஞ்ஞானதாரையில் பிரவிருத்தி விஞ்ஞானதாரையின் பாதத்தைச் சிந்தித்தலால் நிர்விசேஷ க்ஷணிகவிஞ்ஞானதாரையின் ஸ்திதியே அவர்கள் மதத்தில் மோக்ஷமாம்.

இவ்விதத்தால் விஞ்ஞானவாதிகள் * புத்தியையே க்ஷணிகரூபமாயும் ஸ்வயம்பிரகாச ரூபமாயும் கற்பித்து ஆத்மாவென்கிறார்கள்.

---

* விஞ்ஞானவாதிமதம்:— இது புத்தனுடைய சிஷ்யனாகிய யோகாசாரனையநுசரித்தவர் க்ஷணிக விஞ்ஞான புத்தியை ஆத்மா வென்பர். அது சரியன்று. ஏனெனின் (1) ரூபாதிகளின் ஞானரூபகாரியத்துக்கு நேத்திராதி இந்திரியம் கரண (சாதன)மாக இருப்பதுபோல் நிச்சயரூப காரியத்துக்குக் கரணமாக இருத்தலால் புத்தி ஆத்மாவாகாது. ஆனால் எல்லாப் பதார்த்தங்களையும் நிச்சயஞ்செய்யும் புத்தியை அறிவதே ஆத்மாவாம். (2) அந்த ஆத்மா பிரகாசஸ்வரூபத்தால் எப்போதும் பிரகாசிக்கிறது. ஆதலால் பாவிய (ரூப)பாவக (சூரியாதிப்பிரகாச) பேதம்போல் பாவியமான புத்திக்குவேறான பாஸகம் ஆத்மாவாம். தீபாதிகளின் பிரகாசம் கடாதிகளின் ஆகாரத்தையடைந்து மிசிரபாவத்தா (கலப்பினா)ல் பிரகாசிப்பதாயிருக்கின்றது. என்றாலும் வாஸ்தவத்தில் வேறு சுபாவமுடையதாயிருக்கிறது. அதுபோல ஞானஸ்வரூபமான ஆத்மா புத்தி விருத்தியுடன்சேர்ந்து அதன் ஆகாரத்தையடைந்து கலப்பினால் பிரகாசிப்பதாயினும்உண்மையில் புத்திவிருத்திகளினும் வேறாகவும் நித்தியசுத்தமாகவுமிருக்கிறது.எங்ஙனம் ஒரே பிராஹ்மணன் பாடுதற்றொழிலால் பாடகனென்றும் சமயற்றொழிலால் சமையற்காரனென்றும் சொல்லப்படுகிறான். அதுபோல அபஞ்சீகிருத பூதங்களின் கலப்பும் சத்துவகுணத்தினது அம்சங்களின் காரியமாகிய அந்தக்கரணம் எதுவோ அது நிச்சய வடிவக் கிரியையினால் புத்தியென்றும் சங்கற்ப விகற்பக கிரியையினால் மனமென்றும் சொல்லப்படுகிறது. ஆதலால் அகங்காரமுடைய ஆந்தர விருத்தியாகிய புத்தியும் இதுவெனும் வடிவ பாகியவிருத்தியாகிய மனதும் அந்தக்கரணத்தினும் வேறாகாது. இவ்வாறு பௌதிகமாதலால் தேகம் இந்திரிய மனமென்பவற்றைப் போல புத்தி அநாத்மாவாம். (4) கடவல்லி யுபநிஷத்தின் மூன்றாவது வல்லியில் ஆத்மாவை ரதிகனாயும் தேகத்தை ரதமாயும் புத்தியைச் சாரதியாயும் சொல்லப்பட்டிருக்கிறது. ரதிகனைவிட சாரதி வேறாதலால் புத்தி ஆத்மாவன்று.(5)என் புத்தி மந்தமாயிருக்கிறது; தீவிரமாயிருக்கிறது என்பதில் மமதைக்கு விஷயமாயிருக்கிறது; (6) ஆகையால் புத்தி அகந்தைக்கு விஷயமாகமாட்டாது. (7) ஆத்மா க்ஷணிகரூபமென்று சொல்வதுஞ் சரியன்று. (1) ஆத்மா க்ஷணிகமானால் முதல்வருஷத்தில் கடன்கொடுத்தவன் மறுவருஷத்தில் அதைக் கேட்கக்கூடாது. முதல் க்ஷணத்தில் போஜனஞ்செய்தவன் மறுக்ஷணத்தில் இல்லாதபடியால் போஜனத்தின் முடிவில் நான் திருப்தியடைந்தேனென்று சொல்லக்கூடாது. ஆனால் அப்படிச்சொல்வதால் ஆத்மா க்ஷணிகரூபமன்று. (2) ஆத்மா க்ஷணிகரூபமானால் மோக்ஷநிமித்த சாதனங்கள் வியர்த்தமாய்விடும். இதன்கண்டநம் விரிவாய் அறியவிரும்புவோர் ஸ்ரீ பஞ்சதசியின் சித்திரதீபத்தின் 74-வது சுலோகத்தின் டிப்பணத்திற் காண்க.

## 266. பட்டர்மதம். (ஆநந்தமயகோசமே ஆமத்ரா.)

பூர்வ மீமாம்ஸகர்களில் ஒருவரான வார்த்திககாரபட்டர் இவ்வாறு சொல்லுகிறார்:— மின்னல்போல ஆத்மா க்ஷணிகரூபமன்று. ஆனால் ஸ்திர ஸ்வரூபமான ஆத்மா 1 ஜடரூபமாயும் 2 சேதன ரூபமாயும் இருக்கிறது பட்டருடைய அபிப்பிராயம் இதுவாம்:—

1. சுழுத்தியிலிருந்து விழித்துக்கொண்டவன் "நான் ஜடமாகத் தூங்கினே" னென்று சொல்லுகிறான். ஆதலால் ஆத்மா ஜடரூபமென்று சித்திக்கிறது.

2. விழித்தவனுக்கு ஸ்மிருதியுண்டாகிறது. அறியப்படாத பதார்த்தத்தின் ஸ்மிருதியுண்டாகாது. சுழுத்தியில் ஆத்மஸ்வரூபத்திற்கு வேறு யாதொரு ஞானசாதனமுமில்லை. ஆகையால் ஸ்மிருதிக்குக் காரணமாவது சுழுத்தியிலுள்ள ஞானமே. அது ஆத்மாவின் ஸ்வரூபமேயாம்.

இவ்விதமாக ஆத்மா மின்மினிப்போல் பிரகாசரூபமாயும் அப்பிரகாச ரூபமாயு மிருக்கிறது.

1. ஞானரூபமா யிருத்தலால் பிரகாசரூபமா யிருக்கிறது,

2. ஜடமாயிருப்பதால் அப்பிரகாசரூபமா யிருக்கிறது.

அந்தப்பிரகாசரூபமாயும் அப்பிரகாச ரூபமாயுமிருப்பது ஆநந்தமயகோசமாம். ஏனெனின், சுழுத்தியிலுள்ள சேதனத்தின் ஆபாஸசகித அஞ்ஞானம் ஆநந்தமயகோச மெனப்படுகிறது. அங்குஆபாஸமோ பிரகாசரூபமாயும் அஞ்ஞானம் அப்பிரகாச ரூபமாயும் இருக்கின்றன. ஆதலால் பட்டர்மதத்தில் * ஆநந்தமயகோசமே ஆத்மாவெனச் சித்திக்கிறது.

---

* ஆத்மாவை ஜடசேதனமான இரண்டுவடிவமாகச் சொல்லும் பட்டர்மதம் அசங்கதமாம். ஏனெனின், இருளொளி என்பதுபோலும் இம்மனிதன் கடமென்பதுபோலும் ஒரு வஸ்துவில் ஜடசேதனங்களாகிய இரண்டுவடிவம் விருத்தமாம். இரண்டு அம்சம் அங்கீகரிக்கினும் ஜட அம்சம் கோசரமும் சேதனும்சம் அகோசரமுமாம். இரண்டு அம்சங்களும் அநுபவகோசரமன்று, ஒரே ஆத்மாவில் இந்த விலக்ஷணத்தன்மை சம்பவியாது. ஒரே தண்டத்தைப் பார்ப்பதினால் தண்டியென்பதில்லை. தண்டத்தையும் புருஷனையும் பார்த்தலால் தண்டியென்பர். அவ்வாறு ஒரே ஜடாம்சத்தின் ஞானத்தால் இரண்டு வடிவமான ஆத்மா சித்திக்கிறதில்லை. சேதன அம்சத்தையும் அநுபவகோசரமெனக்கொள்ளின் அது ஜடமும் கற்பிதமுமாம். மேலும் ஹடமாய் இரண்டு அம்சங்களையும் அங்கீகரிக்கின் பட்டமதஸ்தரை இதுகேட்பாம்:— ஆத்மாவின் ஜடசேதனமான இரண்டம்சங்களுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது. சம்யோகமா? தாதாத்மியமா? விஷயவிஷயித்தன்மையா ? முதற்பக்ஷத்தில் அநித்தியமான இரண்டு திரவியங்களுக்கே சமவாய சம்பந்தமிருத்தல் நியமமாகலின் ஆத்மா அநித்தியமாகும். இரண்டாவது பக்ஷத்தில் சித்ஜடமான இரண்டு அம்சங்களும் ஒரு ஸ்வரூபமாயிருத்தலால் சித்தம்சம் ஜடமாகும்; ஜடாம்சம் சித்தாகும். மூன்றாவது பக்ஷத்தில் கடம்போல் இரண்டு அம்சங்களும் அநாத்மாவாகும். சுருதியில் ஆத்மா விஞ்ஞானகனமென்று சொல்லியிருத்தலால் ஆத்மாவின் பாதிபாகம் ஜடமென்பதில் பிரமாணமில்லை. ஆத்மாவின் ஜடத்தன்மையைச் சம்பாதிக்கும் எந்தஸ்மிருதி சொல்லப்பட்டதோ அது சுழுத்தியிலுள்ள அஞ்ஞானத்தையே விஷயஞ்செய்கிறது; ஆத்மாவின் ஜடத்தன்மையை விஷயஞ்செய்கிறதில்லை. இவ்வாற்றால் ஆத்மாவிற்கு ஜடசேதனமென்னும் இரண்டுவடிவம் அசங்கதமாம்.

## 267. மாத்தியமிக பௌத்தர்மதம் (ஆநந்தமயகோசம் ஆத்மா).

சூனியவாதி பௌத்தர்கள் இவ்வாறு கூறுகின்றனர்:—ஆத்மா நிரம்சமாம். ஆதலால் ஒரே ஆத்மாவுக்குப் பிரகாசரூபமும் அப்பிரகாசரூபமும் சொல்லுதல் பொருந்தாது. மின்மினியின் ஓரம்சம் பிரகாசமாயும் மற்றோரம்சம் அப்பிரகாசமாயு மிருக்கிறது. அதுபோல அம்சமில்லாத ஆத்மாவில் இரண்டுரூபங்களைச் சொல்லுதல் அயுக்தமாம். ஆதலால்,

1. இரண்டு ரூபங்களுள் சித்தித்தற்பொருட்டு ஆத்மாவை அம்சமுடையதாகக் கொள்ளவேண்டும்.

2. அம்சமுடைய பதார்த்தங்களாகிய கடாதிகள் உற்பத்தி நாசமுடையனவா யிருக்கின்றன. அதுபோல் ஆத்மாவும் அம்சமுடையதாயிருந்தால் உற்பத்தி நாசமுடையதாகவே கொள்ளவேண்டும்.

1. உற்பத்தி நாசங்களுடையதான பதார்த்தம் உற்பத்திக்கு முன்னும் நாசத்துக்குப்பின்னும் அசத்தாம். ஆதியந்தங்களில் அசத்தாயிருப்பது எதுவோ அது மத்தியிலும் சத்தாயிராது. ஆனால் மத்தியிலும் அசத்தாகவே யிருக்கும். ஆகையால் ஆத்மா அசத்ரூபமாம்.

2. அங்ஙனமே ஆத்மாவுக்கு வேறான சகலபதார்த்தங்களும் உற்பத்தி நாசமுடையனவாம். ஆதலால் அசத்ரூபமாம்.

இவ்விதத்தால் ஆத்மாவும் அநாத்மாக்களுமான சகல வஸ்துக்களும் அசத் ரூபமாயிருத்தலால் சூனியமே பரமதத்துவமாம். இது சூன்னியவாதியாகிய மாத்தியமிக பௌத்தனது மதம்.

அவர்களும் அஞ்ஞானரூப ஆனந்தமயகோசத்தைப் பிரதிபாதிக்கிறார்கள். ஏனெனின், அஞ்ஞானம் மூன்றுவிதமாய் விளங்குகிறது:—

1. அத்வைத சாஸ்திரத்தின் ஸம்ஸ்காரமில்லாத மூடர்களுக்கோ ஜகத்ரூப பரிணாமத்தை யடைந்த அஞ்ஞானம் சத்தியமாய்த் தோன்றுகின்றது.

2. அத்வைத சாஸ்திரானுசாரமான யுக்தியில் நிபுணர்களாகிய பண்டிதர்களுக்கு அஞ்ஞானமும் அதன் காரியமான ஜகத்தும் சதசத்துக்கு விலணமான அநிர்வசனீயரூபமாய் விளங்குகின்றன.

3. ஞானநிஷ்டையை யடைந்த ஜீவன்முக்தவித்துவானுக்குக் காரிய சகிதமான அஞ்ஞானம் துச்சமாகத் தோற்றுகிறது.

துச்சம், அசத்து, சூன்யம் என்னும் இம்மூன்றும் ஒரே அர்த்தத்தைத் தருகின்றன.

இவ்விதமாக ஜீவன்முக்தனுக்குத் துச்சமாகத் தோற்றும் அஞ்ஞானத்தில் மோகமடைந்து சூன்யவாதி பரமபுருஷார்த்தத்தை யடைகிறதில்லை. ஆனால் துச்சவடிவ * ஆநந்தமயகோசத்தினையே ஆத்மா வென்பர்.

* எல்லாம் சூன்யம், சூன்யமே பரமதத்துவம், சுழுத்தியிலுள்ள அஞ்ஞான ரூப ஆனந்தமயகோசமே ஆத்மா என்னும் இம்மதம் சரியன்று. ஏனெனின் சூன்யம் சாக்ஷி

## 268. பிரபாகர நையாயிகர்மதம் (ஆநந்தமயகோசம் ஆத்மா).

பூர்வமீமாம்சகர்களின் ஏகதேசிகளாகிய பிரபாகரநையாயிகர்கள் இவ்வாறு கூறுகின்றனர்:— ஆத்மா சூனியரூப மன்று. ஏனெனின் ஆத்மாவைச் சூனியரூபமாகக் கொள்ளின் அவனை இது கேட்பாம்:— 1. சூன்யரூபத்தை நீ அனுபவித்திருக்கிறாயா? 2 இல்லையா?

1. சூனியத்தை அநுபவித்ததாகச் சொல்லும் பக்ஷத்தில் எதனால் சூனியம் அநுபவிக்கப்படுகின்றதோ அந்த ஆத்மா சூன்யத்துக்கு விலக்ஷண மென்று சித்திக்கிறது.

2. சூனியத்தை அநுபவிக்கவில்லையெனின் சூனியமில்லை யென்பது சித்தித்தது.

இவ்விதத்தால் சூனியத்துக்கு விலக்ஷணமானது ஆத்மாவாம்,

1. அதில் மனதின் ஸையோகத்தினால் ஞான முண்டாகிறது.

2. அந்த ஞானகுணத்தால் ஆத்மா சேதன மெனப்படுகிறது.

3. ஸ்வரூபமாக ஆத்மா ஜடமாம்.

4. அவ்வாறு சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்தனம், தர்மம், அதர்மம் முதலிய குணங்கள் ஆத்மாவி லிருக்கின்றன.

அவர்கள் மதத்திலும் ஆநந்தமயகோசமே ஆத்மாவாம்.

விஞ்ஞானமயகோசத்திலுள்ள புத்தி ஆத்மாவின் ஞானகுண மெனப்படுகின்றது. ஏனெனின் ஆநந்தமயகோசத்தில் சேதனம் கூடமாயிருக்கிறது; விவேகமில்லாதவனுக்குத் தோற்றுகிறதில்லை. பிரபாகரநையாயிகர்கள் சுழுத்தியில் ஆத்மாவை ஞானமில்லாததாக நினைத்து ஸ்வரூபமாக ஜடமென்கிறார்கள். ஆகையால் கூடசேதனத்தையுடைய ஆநந்தமயகோசத்திலேயே அவர்களுக்கு ஆத்மப்பிராந்தி யிருக்கிறது.

---

சகிதமாயிருக்கிறதா? அல்லது சாக்ஷிரகிதமாயிருக்கிறதா? அல்லது ஸ்வப்பிரகாசமா? என்று மூன்றுவிகற்ப முண்டாகிறது. அவற்றுள் முதற்பக்ஷத்தைக்கூறின், சூனியத்தின் சாக்ஷி எதுவோ அது சூனியத்துக்கு வேறானதெனச் சித்திக்கும். இரண்டாவது பக்ஷத்தைக்கூறின், சாக்ஷிரகிதசூனியமே சித்தியாது. மூன்றாவது பக்ஷத்தைக்கூறின், ஸ்வப்பிரகாசத் தன்மையால் நம்மால் விரும்பப்பட்ட பிரஹ்மமே சூநியமென்னும் வேறு பெயரால் சித்தித்தலால் சூனியமென்பது சித்திக்கவில்லை.

"இந்த ஜகத்து முன் அசத்தாகவே இருந்தது" என்னும் சாந்தோக்கிய சுருதியின் வாக்கியம் முன்பின் விரோதத்தால் சூனியத்தைப் பிரதிபாதித்தலில் இல்லை. ஆனால் நையாயிகர் வைசேஷிகர் பௌத்தர்முதலிய வாதிகள் பிராகபாவமுதலியவற்றை ஜகத்திற்குக் காரணமாகக் கொள்ளுகின்றனர். அவற்றை யநுவதித்து அவ்விபரீதக் கொள்கையை நிவர்த்திப்பதிலேயே முற்கூறிய சுருதிக்குத் தாற்பரியமாம். இவ்வாற்றால் சூனியவாதியின் மதம் அசங்கதமாம்.

அன்றியும் ஆத்மஸ்வரூபமான நித்தியஞானத்தை ஜீவனிடத்துக்கொள்ளவில்லை; ஆனால் அநித்தியஞானமென்று கொண்டிருக்கிறார்கள். அந்த அநித்தியஞானம் சித்தாந்தத்தில் அந்தக்கரணத்தின் விருத்தியாகிய புத்திரூபமாயிருக்கிறது. இவ்விதத்தால் * பிரபாகரநையாயிகமதத்தில் ஆநந்தமயகோசம் ஆத்மாவாம். புத்தி அதன் குணமாம். அவர்கள் *மதமும் நலமுடையதன்று. ஏனெனின்,

## 269. ஜீவனது பஞ்சகோசத்தினைப் போல ஈசுவரனது பஞ்சகோசங்களால் அவரது சொரூபத்தை மறைத்தல்.

1. ஞானத்துக்கு வேறான ஜடவஸ்துக்களாகிய கடாதிகள் அநித்தியமாயிருக்கின்றன. ஆத்மாவும் ஞானஸ்வரூபமாகாவிடின், கடாதிகள் போல் ஜடமாய் அநித்தியமாய்விடும்.

2. ஆத்மா அநித்தியமானால் மோக்ஷத்தின்பொருட்டான சாதனங்கள் நிஷ்பிரயோசனமாய்விடும்.

இவ்விதத்தால் வேதாந்தவாக்கியத்தில் விசுவாசமில்லாத அநேக பகிர்முகபுருஷர்கள் பஞ்சகோசங்களிலேயே ஒன்றை ஆத்மாவாகக் கொண்டு முக்கியமான ஆத்மஸ்வரூபமான சாக்ஷியை அறிகிறதில்லை. ஆதலால் அன்னமயாதி கோசங்கள் ஆத்மாவை மறைத்தலால் கோசங்களெனப்படுகின்றன.

ஜீவனது பஞ்சகோசங்கள் ஜீவனது யதார்த்தஸ்வரூபமான சாக்ஷியை மறைப்பதுபோல ஈசுவரனது சமஷ்டி பஞ்சகோசங்களும் ஈசுவரனது யதார்த்த ஸ்வரூபத்தை † மறைக்கின்றன. ஏனெனின் ஈசுவரனுடைய யதார்த்தஸ்வரூபமோ தத்பத லக்ஷியமாம். அதனைவிட்டு,

1. சிலர் மாயாரூப ஆநந்தமயகோசத்துடன்கூடிய அந்தரியாமியாகிய தத்பத வாச்சியத்தைப் பரமதத்துவமென்று சொல்லுகிறார்கள்.

2. அவ்வாறே ஹிரண்யகர்ப்பன், வைசுவாநரன், விஷ்ணு, பிரமா, சிவன், கணேசன், தேவி, சூரியன்முதலாக வாள், குத்தாலம், அரசு, எருக்கு, மூங்கில் பரியந்தமான பதார்த்தங்களில் பரமாத்மப் பிராந்தியை யடைகிறார்கள்.

---

* பிரபாகரர் நையாயிகர்மதம்:—சுழுத்தியில் ஞானமில்லாதிருத்தலால் ஆத்மா ஜடமேயென்பது சரியன்று. ஏனெனின் "நான் சுகமாய்த் தூங்கினேன்; ஒன்றும் அறியவில்லை." என்னும் அநுபவத்தால் முன் சொன்னது பாதிக்கப்பட்டுப்போகிறது. ஆத்மா ஜடமானால் சுழுத்தியிலுள்ள ஆநந்தத்தின் ஸ்மரணை யுண்டாகலாகாது; உண்டாதலால் ஆத்மா ஜடமன்று.

†. ஜீவனது கோசங்கள் ஜீவனது நிஜரூபமான பிரத்தியகாத்மாவை ஜீவனுடைய திருஷ்டிக்கு மறைப்பதுபோல் ஈசுவரனுடைய கோசங்கள் ஈசுவரனுடைய நிஜரூபத்தை ஈசுவர திருஷ்டிக்கு மறைக்கிறதில்லை. ஏனெனின் ஈசுவரன் ஆவரணரகிதன். ஆகையால் சமஷ்டி பஞ்சகோசங்களினின்றும் பிரஹ்மஸ்வரூபத்தை ஜீவனே விவேசனம் பண்ணவேண்டியது.

சகல பதார்த்தங்களிலுமுள்ள லக்ஷியபாகம் பரமாத்மாவினும் வேறன்று. அங்ஙனமாயினும் அந்தந்த உபாதியுடன்கூடியதைப் பரமாத்மாவெனக் கொள்ளுகிறார்கள். அது அவர்களுக்குப் பிராந்தியாம்.

1. பஞ்சகோசங்களால் மூடப்பட்ட ஜீவேசுவரர்களின் பரமாத்மஸ்வரூபத்தினின்றும் திரும்பிய பார்வையுடையவர்களாய்த் தேகாதிகளிடத்தில் ஆத்மப்பிராந்தியைச் செய்து புண்ணியபாவகர்மங்களைச் செய்கிறார்கள்.

2. அந்தரியாமிமுதல் மூங்கில்வரையிலுள்ளவைகளை ஈசுவரரூபமாக நினைத்து ஆராதனை செய்து சுகத்தையடைய இச்சிக்கிறார்கள். உபாதியின் ஆராதனைக்குத் தக்கபடி பலன் சித்திக்கிறது. ஏனெனின், காரண சூக்ஷ்ம ஸ்தூலப் பிரபஞ்சங்களெல்லாம் ஈசுவரனுடைய சரீரத்தில் அந்தர்ப்பூதமாயிருக்கின்றன. அவைகளில் உபாஸனைக்குத் தக்கபடி பலனும் எல்லாவற்றிலுமே யுண்டாகிறது.

ஆனால் பிரஹ்மஞானமின்றி மோக்ஷ முண்டாகிறதில்லை; மோக்ஷத்தை யிச்சிக்கிறவனே விவேகத்தினால் ஜீவேசுவர ஸ்வரூபங்களைப் பஞ்சகோசங்களினின்றும் வேறுபடுத்தவேண்டியது.

திருஷ்டாந்தம்:—முஞ்சமும் * இஷீகையும் சேர்ந்திருக்கின்றன; அவற்றை உரித்து வேறுபடுத்துவதுபோல விவேகத்தினால் ஜீவஈசுவரர்களின் சொரூபத்தைப் † பஞ்சகோசங்களினின்று வேறுபடுத்தி யறியவேண்டும்.

## 270. அந்தப் பஞ்சகோச விவேகத்தின் றன்மையைக் காட்டுதல்.

1. சொப்பனாவஸ்தையில் ஸ்தூலதேகம் விளங்குகிறதில்லை; ஆனால் ஆத்மா விளங்குகிறது.

2. அப்படியே சுழுத்தியவஸ்தையில் சூக்ஷ்மசரீரத்தின் ஞான முண்டாகிறதில்லை; சுகஸ்வரூபமான ஆத்மா ஸ்வயம்பிரகாசவடிவத்தால் விளங்குகிறது. சுழுத்தியில் சுகஞான மில்லாதிருக்கின் "நான் சுகமாய்த் தூங்கினேன்"

---

* முஞ்சமென்னும் புல்விசேஷத்தின் நீண்ட இலைகளின் நடுவில் மறைந்து நிற்கின்ற தூலத்தி (பஞ்சி) னால் சூழப்பட்டிருக்கிற நீண்ட சலாகை (தண்டு) இஷீகையென்றும் தூலியென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விருக்ஷம் பிருந்தாவனத்திலுள்ள முஞ்சாடவியிற் பிரசித்தமாம்.

† ஆத்மாவுக்குச் சத்து, சித்து, ஆநந்தம், அத்வயம் என்னும் நான்கும் விசேஷணங்களாம். தேகாதிகளுக்கு அசத்து, ஜடம், துக்கம் என்பன விஷேணங்களாம். இவற்றில் ஆத்மாவின் சத்துசித்துரூபங்கள் தேகாதிகளின் அசத்து ஜடரூபங்களை மறைக்கின்றன. ஆகையால் தேகாதிகள் சத்துசித்துரூபங்கள்போலப் பிரதீதியாகின்றன. தேகாதிகளின் துக்கத்துவயரூபங்கள் ஆத்மாவின் ஆநந்தரூபத்தையும் அத்துவயரூபத்தையும் மறைக்கின்றன. அதனால் ஆத்மா துக்கியாயும் துவயமாயும் பிரதீதியாகிறது. இவ்விதத்தால் ஆத்மாவுக்கும் பஞ்சகோசங்களுக்கும் பரஸ்பர அத்தியாச மிருக்கிறது. ஆதலால் முமுக்ஷுவானவன் பஞ்சகோச விவேசனத்தை அவசியஞ்செய்யவேண்டும்.

னென்னும் ஸ்மிருதி விழித்தபின் உண்டாகலாகாது; அப்படி யுண்டாதலால் சுழுத்தியில் சுகத்தின் ஞானம் இருக்கிறது. அந்தச் சுகம் சுழுத்தியில் விஷயத்தாலுண்டானதன்று; ஆனால் ஆத்மசொரூபமேயாம். அந்த ஆத்மா ஸ்வயம்பிரகாசமாயிருக்கிறது; ஆதலால் சுகஸ்வரூபமான ஆத்மா ஸ்வயம்பிரகாசரூபத்தால் சுழுத்தியில் விளங்குகிறது.

3. நிதித்தியாசனத்தின் பலனாகிய நிர்விகற்பசமாதியவஸ்தையில் அஞ்ஞானத்தாலாகிய ஆவரணமின்றி ஆத்மா விளங்குகிறது; காரணசரீரமான அஞ்ஞானம் விளங்குகிறதில்லை.

1. இப்படி மூன்றுதேகங்களும் வியபிசாரியாம். ஓரவஸ்தையை விட்டு வேறோரவஸ்தையில் விளங்குகிறதில்லை.

2. ஆத்மா அநுகதமாயி (உள்ளீடாயி)ருந்து சகல அவஸ்தைகளிலும் விளங்குகிறது; ஆகையால் வியாபகமாயிருக்கிறது.

இந்த விவேகத்தால் மூன்று சரீரங்களுக்கும் வேறாக ஆத்மாவை யறியவேண்டியது.

1. ஸ்தூலசரீரம் அன்னமயகோசம்.

2. காரணசரீரம் ஆநந்தமயகோசம்.

3-5. சூக்ஷ்மசரீரத்தில் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் என்னும் மூன்றுகோசங்க ளிருக்கின்றன.

ஆகையால் * மூன்று சரீரங்களின் விவேகத்தால் பஞ்சகோசங்களின் விவேகமுண்டாகிறது.

---

* ஸ்தூலதேக விவேசனம் :—ஸ்தூலதேகம் ஜனிப்பதற்கு முன்னும் மரிப்பதற்குப் பின்னும் ஏகமாய் ஆத்மா இருப்பதினால் கடத்தினும் ஆகாசம் வேறாயிருப்பது போல் ஆத்மா ஸ்தூலதேகத்தினும் வேறாயிருக்கிறது; அவ்வியபிசாரியாயுமிருக்கிறது. கடம்போலத் தேகம் உற்பத்திக்கு முன்னும் மரணத்துக்குப்பின்னும் இல்லாமையாலும் அநேகமாயிருத்தலாலும் ஆத்மாவினும் தேகம் வேறாயிருக்கிறது; வியபிசாரியாயுமிருக்கிறது. எது அதிகதேசத்திலும் அதிககாலத்திலும் இருக்கிறதோ அது அவ்வியபிசாரியெனப்படும். எல்லாச்சரீரங்களிலுமுள்ள ஆத்மா ஒன்றாயிருத்தலால் ஆகாசம்போல வியாபகமாயிருக்கிறது. ஆதலால் எல்லாவிடங்களிலும் அது இருக்கிறது. தேகங்களினுற்பத்திக்கு முன்னும் மரணத்துச்குப் பின்னும் ஆத்மா இருத்தலால் அது முக்காலங்களிலும் பாதிக்கப்படாமலிருக்கிறது. ஆகையால் சர்வகாலமும் அது இருக்கிறது. சர்வதேசகாலங்களிலு மிருப்பதால் ஆத்மா அவ்வியபிசாரி. எந்த வஸ்து சொற்பதேசத்திலும் சொற்பகாலத்திலும் இருக்கிறதோ அது வியபிசாரி யெனப்படும். கடம்போல் தேகமும் பரிச்சின்னமாய்ச் சொற்ப விடத்திலிருக்கிறது. உற்பத்தி நாசங்களோடு கூடியிருத்தலால் அது சர்வகாலத்திலுமில்லாமல் சொற்பகாலத்திலிருக்கிறது. சொற்பதேசத்திலும் சொற்பகாலத்திலுமிருத்தலால் தேகம் வியபிசாரி. ஆத்மாவும் தேகமும் முறையே அவ்வியபிசாரியாயும் வியபிசாரியாயுமிருத்தலால் இரண்டற்கும் பேதஞ்சித்திக்கிறது. ஆதலால் நான் ஸ்தூலதேகமல்லன்; தேகம் என்னுடையதன்று; ஆனால் பஞ்சமகாபூதங்களுடையது. நான் ஸ்தூலதேகமில்லாததினால் ஸ்தூலதேகத்துக்குச் சொல்லப்பட்ட நாமம், ஜாதி, ஆசிரமம், நிறம், ஆகார முதலிய தர்மங்கள் நான் அல்லன்; அவைகளும் என்னுடையவல்ல. இது ஸ்தூலதேக விவேசனமாம்.

ஜீவனது ஸ்வரூபம் பஞ்சகோசங்களுக்கு வேருயிருப்பதுபோல் ஈசுவரனுடைய ஸ்வரூபமும் சமஷ்டி பஞ்சகோசங்களுக்கு வேருயிருக்கிறது.

நான்காவது தரங்கத்தில் நாலுவித ஆகாச திருஷ்டாந்தத்தால் ஜீவேசுவரர்களுடைய லக்ஷ்யஸ்வரூபத்தின் விவேகம் விஸ்தாரமாகச் செய்யப்பட்டிருக்கிறது. மேலேவரும் ஆருவது தரங்கத்தில் அஸ்தி பாதி பிரியரூப நிரூபணத்திலும் மகாவாக்கியார்த்த நிரூபணத்திலும் ஆத்மாவின் பரமார்த்த ஸ்வரூபம் பிரதிபாதிக்கப்படும். ஆதலால் இவ்விடத்தில் சுருக்கமாக ஆத்ம விவேசனம் செய்யப்பட்டது.

## 271. மகாவாக்கியார்த்த உபதேசம்.

இவ்விதமாகப் பஞ்சகோசங்களினின்றும் ஆத்மாவை வேருக அறிதலாலும் கிருதகிருத்தியனுகிறதில்லை. ஆனல் ஜீவப்பிரஹ்மங்களின் அபேதத்தை நிச்சயித்தற்கு மறுபடியும் விசாரம் செய்யவேண்டியதாம். ஆதலால் கிருத கிருத்தியத்தன்மையின் சித்தியின் பொருட்டு மகாவாக்கியார்த்தத்தையுபதேசிக்கின்ருேம்.

பஞ்சகோசங்களினும் ஆத்மா வேறு என்று அறி. அவ்வாத்மா பிரஹ்ம ஸ்வரூபமென்றறி.

## 272. பிரசினம்:— ஆத்மா புண்யபாபங்களைச் செய்கிறது. சுகதுக்கங்களை அநுபவிக்கிறது. ஆதலால் அதற்குப் பிரஹ்மத்தோடு ஐக்கியம் பொருந்தா தெனல்.

இதில் இவ்வாறு சங்கையுண்டாகிறது. ஆத்மா புண்ணிய பாபங்களைச் செய்து ஸ்வர்க்க நரக பூலோகங்களில் அநேகவித சுகதுக்கங்களை யனுபவிக்கிறது; அதற்குப் பிரஹ்மத்தோடு ஏகத்துவம் பொருந்தாது என்னும் சங்கை யுண்டாகிறது.

---

சூக்ஷ்மதேகவிவேசனம்:—மரணம் மூர்ச்சை சுழுத்தி பிரளயம் ஞானம் என்னும் இவ்வைந்து அவஸ்தைகளில் லிங்கதேகம் தன் காரணமான அஞ்ஞானத்தில் லயமாகிறது; அதனுல் வியபிசரிக்கிறது; ஆதலால் அசத்தாயிருக்கின்றது. ஆத்மா சர்வகாலங்களிலும் பிரகாசித்துக்கொண்டிருத்தலால் அவ்வியபிசாரியாயிருக்கிறது; ஆதலால் சத்ரூபமாயிருக்கிறது. ஆத்மா சத்ரூபமாயிருத்தலால் அது லிங்கதேக மன்று. லிங்கதேகமும் ஆத்மாவினதன்று . அது அபஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களின் காரியமாம்; நான் லிங்க தேகம் அல்லன்; அதனுல் கர்த்ருத்வம் போக்த்ருத்வம் சுகம் துக்கம் முதலிய லிங்கதேகத்தின் தர்மங்கள் நான அல்லன்; அவைகளும் என்னுடையவல்ல. இவற்றையெல்லாம் அறியும் நான் இவற்றின் வேருயிருக்கிறேன்.

காரண தேக விவேசனம்:— காரணதேகம் அஞ்ஞானம். இது நான் அல்லன்; என்னுடையதுமன்று. காரண சரீரத்தின் தர்மங்களாகிய ஆவரண விக்ஷேபங்களும் நான் அல்லன்; அவைகளும் என்னுடையவல்ல; இவற்றை யறியும் நான் இவற்றிற்கு வேருயிருக்கிறேன்.

## (சென்ற பிரசினத்தின் உத்தரம் 273-303.)

## 273. அகர்த்தாவும், அபோக்தாவும் நித்தியமுக்தமுமாகிய ஆத்மாவிற்கு என்றும் பிரஹ்மத்தோடு அபேதமுண்மை.

அதன் சமாதானம்:—அந்தப்பிரஹ்மரூப ஆத்மாவுக்கு வேறாகக் காணப் படுவனவும் சாஸ்திரத்திஞல் கேட்கப்படுவனவுமாகிய ஸ்வர்க்கநரக புண்ணிய பாபாதிகளுமாகிய எல்லாம் மித்தியாப்பிரம மென்றறிக.

மித்தியாவஸ்து அதிஷ்டானத்தைக் கெடுக்கிறதில்லை.

1. சொப்பனத்தில் பிச்சை வாங்குவதனுல் அரசன் தரித்திரனுகிற தில்லை.

2. கானல்ஜலத்தினுல் பூமி நனைகிறதில்லை.

3. பொய்யான சர்ப்பத்தால் ரஜ்ஜு விஷமுடையதாகிறதில்லை.

ஆதலால் பொய்யான எல்லாச் சுபாசுபகர்மங்களைச் செய்கிறவனுயினும் உண்மையில் கர்த்தாவல்லன். இவ்வாறு உன்னுடைய சொரூபம் ஆச்சரிய மான ஒப்பில்லாததாயிருக்கிறது.

இதன் அபிப்பிராயம் இதுவாம் :—

1. பிரஹ்மத்துக்கு வேறாகாத உன்னுடைய ஸ்வரூபத்தில் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களும் அவற்றின் பலனுகிற ஜன்ம மரண ஸ்வர்க்க நரக சுக துக்கங்களுமாகிய யாவும் அவித்தையால் கற்பிக்கப்படுகின்றன.

2. உன்னுடைய பிரஹ்மத்தன்மை அந்தக் கற்பித சாமக்கிரியினுல் வேறுபடுகிறதில்லை. ஆதலால் ஞானத்துக்கு முன்னும் ஆத்மா பிரஹ்மரூபமா கவே யிருக்கிறது.

3. ஆத்மாவினிடத்தில் மூன்று காலங்களிலும் சரீரமும் சரீரத்தின் தர்மமுமாகிய இவற்றின் சம்பந்தமில்லை; ஆனுல் ஆத்மா எப்போதும் நித்தியமுக் தமாயிருக்கிறது. அதற்கும் பிரஹ்மத்துக்கும் ஒருகாலும் பேதமில்லை.

## 274. ஜீவன்முக்தனது நிச்சயமும் வேதாந்த சிரவணத்தின் பயனும்.

ஆத்மா எப்போதும் நித்தியமுக்தப் பிரஹ்மஸ்வரூபமா யிருக்குமாயின் ஞானசாதனங்களான சிரவணுதிகள் விணுகுமே என்று கூறின்,

அதற்குச் சமாதானம்:—

ஜீவன்முக்தவித்வானுடைய திருஷ்டியில் அஞ்ஞானமும் அதன் காரி யமும் துச்சமா யிருக்கின்றன. அந்த ஜீவன்முக்தனது நிச்சயத்தைக் காட்டு வாம்:—சிஷ்யனே !

1. இந்தப் பிரபஞ்சம் ஆகாசத்தாமரைபோன்றிருத்தலால் இல்லை. ஆதலால் அதன் கர்த்தாவான ஈசுவரனுமில்லை.

2. சாக்ஷிக்கு விஷயமான அஞ்ஞானமுதலியன சாக்ஷியமென்று சொல்லப்படுகின்றன. அச்சாக்ஷியமில்லாமையினால் சாக்ஷியுமில்லை.

3. திருசியத்தைப் பிரகாசிப்பிப்பது திருக்கெனப்படும். பிரகாசிக்கப் படும் தேகாதிகள் திருசியமெனப்படும். அத்தேகாதி திருசியமில்லாமையினால் திருக்கு மில்லை. கேவலம் கூடஸ்தசேதனம் சாக்ஷியென்றும் திருக்கென்றும் சொல்லப்படுகிறது. அதன் நிஷேதம் பொருந்தாது. என்றாலும் சாக்ஷியத்தை யபேக்ஷித்துச் சாக்ஷியென்னும் பெயருந் திருசியத்தை யபேக்ஷித்துத் திருக்கென்னும் பெயருமாம். ஆதலால் சாக்ஷி திருக்கென்னும் பெயர்கள் நிஷேதிக்கப்படுகின்றன; ஸ்வரூபம் நிஷேதிக்கப்படுகிறதில்லை.

4. பந்தமிருக்குமாயின் பந்தநிவிருத்திரூபமான மோக்ஷமுமிருக்கும்; பந்தமுமில்லை; மோக்ஷமுமில்லை.

5. அஞ்ஞான மிருக்குமாயின் அது ஞானத்தால் நாசமாகும். அஞ்ஞான மில்லாமையினால் அதை நாசஞ்செய்யும் ஞானமு மில்லை.

இதனையறிந்து கர்த்தவ்வியத்தை விடவேண்டும் அதாவது நான் இதனைச் செய்யவேண்டும் என்னும் புத்தியை விடவேண்டும். ஏனெனின்,

1. இந்த லோகமும் அப்படியே பரலோகமும் துச்சமாம். அவற்றின் பொருட்டுச் செய்யவேண்டியது யாதொன்றுமில்லை.

2. ஆத்மாவில் பந்தமில்லை. ஆதலால் மோக்ஷத்தின்பொருட்டும் செய்யவேண்டியது (கர்த்தவ்வியம்) ஒன்று மில்லை.

இவ்விதத்தால் ஆத்மாவை நித்தியமுக்தப் பிரஹ்மரூபமாக அறிந்து நிச்சலமாகி எப்போது கர்த்தவ்வியமெல்லாம் விடுவாயோ அப்போது அக்கிரியப் பிரஹ்மஸ்வரூபமான விதேகமோக்ஷத்தை அடைவாய்.

இதன் அபிப்பிராயம் இதுவாம்:—

ஆத்மா ஞானத்தின் முன்னும் நித்தியமுக்த பிரஹ்மசொரூபமா யிருக்கின்றது. ஆனால் ஞானத்திற்குமுன் ஆத்மாவைக் கர்த்தாபோக்தாவென மித்தையாகக்கொண்டு சுகப்பிராப்தி துக்கநிவிருத்திகளின்பொருட்டு ஒருவன் அனேகசாதனங்களைச் செய்கிறான். அதனால் கிலேசத்தையே அடைகிறான்.

உத்தம ஆசாரியரை யடைந்தபோது அவர் வேதாந்தவாக்கிய வுபதேசத்தைச் செய்கிறார். அவ்வேதாந்த வாக்கியத்தைக்கேட்பதனால் "நான் கர்த்தா போக்தாவல்லன்; நான் பிரஹ்மஸ்வரூபம்; ஆதலால் எனக்குச் சிறிதும் கர்த்தவ்வியமி (செய்யவேண்டியதி) ல்லை" என்னும் ஞானமுண்டாகிறது. இப்படி யறிவதே சிரவணாதிகளின் பலன்; பிரஹ்மத்தின் அடைவு வேதாந்த சிரவணத்தின் பலனன்று. ஏனெனின், பிரஹ்மம் தன்ஸ்வரூபமாம்; ஆதலால் நித்தியப்பிராப்தமாம் (என்றும் அடையப்பட்டதாம்).

## 275. ஞானி அஞ்ஞானிகளின் சின்னம்.

### (கர்த்தவ்வியமும் அகர்த்தவ்வியமும்.)

எவன் கர்த்தவ்வியமிருப்பதாக நினைக்கிறானோ அவன் அஞ்ஞானி; எவன் வேறுரூபமாவதற்கு இச்சிக்கவில்லையோ அவன் ஞானி.

## 276. இரகசியதத்துவ உபதேசம்.

ஏகமாயும் அகண்டமாயும் அசங்கமாயும் ஜன்மமில்லாததாயும் அதிருசியமாயும் நாமரூபங்களில்லாததாயு மிருப்பது பிரஹ்மம். அதில் மூல அஞ்ஞானமில்லை; சூக்ஷுமஸ்தூலங்களில்லை; சமஷ்டி வியஷ்டிகளில்லை; ஈசனில்லை; சூத்திராத்மாவில்லை; விராட்டில்லை; பிராஞ்ஞனில்லை; தைஜஸனில்லை; விசுவனில்லை; போகமில்லை; யோகமில்லை; பந்தமில்லை; மோக்ஷமில்லை; ஒன்றும் அதனிடத்திலில்லை; எல்லாம் அதனிடத்திலுண்டு. ஜாக்கிரகாலத்தில் விளங்கும் பிரபஞ்சமியாவும் புத்திவிலாசத்தால் பொருந்தியிருக்கின்றன. சொப்பனத்திற் போக்கிய போகங்களில்லாதிருந்து சித்திர விசித்திரமாய்ப் பொருந்தியிருக்கின்றன. இந்தப் புத்தி சுழுத்தியில் லயமடையவே பேதங்களொழிந்து ஒருவடிவ மாகிறது. புத்தியாற் கற்பிக்கப்படுவன வெல்லாம் மனோரதமாத்திரமாம். * நிச்சலமான பிரஹ்மம் புத்தியைப் பிரகாசிப்பிக்கிறது. எவனுடைய இருதயத்தில் ஞானமுதயமாகிறதோ அவன் இருதயத்தைவிட்டு அஞ்ஞானமென்னுமிருள் நிச்சயமாய்ப் போய்விடுகிறது. அவன் எப்போதும்அசங்கமாயும் ஏகரஸமாயும் சுயம்பிரகாசமாயுமிருக்கிற பிரஹ்ம சொரூப ஆத்மாவாகஇருக்கிறான். முன் ஒன்றும் உண்டானதில்லை; இப்போது மில்லை. பின்னும் ஒன்றும் உண்டாகாது. ஜகத்து மனோரதமாத்திரமான விலாசமாம். அதனடைவையும் நிவிருத்தியையும் ஞானி இச்சிக்கிறதில்லை. ஞானிக்கு யாதொரு ஆசையுமில்லை. † பார்க்கும்போது ஞானி பார்க்கிறதில்லை; கேட்கும்போது கேட்கிறதில்லை; சகல ரஸங்களையும் ருசித்தும் ருசிக்காதவன்; துவக்கால் தொட்டும் தொடாதவன்; நல்ல வாசனையை மோந்தும் மோக்காதவன்; பேசியும் பேசாதவன்; கிரகித்தும் கிரகிக்காதவன்; மலமோசனஞ்செய்துஞ் செய்யாதவன்; நடந்தும் நடக்காதவன்; யௌவன ஸ்திரியை யனுபவித்தும் நித்திய சன்னி

---

* நிச்சலமாகிய பிரஹ்மம் புத்தியைப் பிரகாசிப்பதென்று சித்தாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் க்ஷணிகவிஞ்ஞானவாதியின் மதத்தில் அதிவியாப்தியில்லை; அவர்கள் மதத்தில் புத்தியின் வேறான பதார்த்தம்பிரகாசிப்பதாயில்லாமையால்.

† மேலே சொல்லியபடி பதார்த்தத்தைப் பார்க்கிறதில்லை. கேட்பதைக் கேட்கிறதில்லை. இங்குப் பகவத்கீதையின் 5-வது அத்தியாயத்தில் 7 - 8 - 9 - வது சுலோகங்களின் அபிப்பிராயத்தைக்கொண்டு கிரந்தகர்த்தா எழுதியிருக்கிறார். அச்சுலோகங்களை முமுக்ஷுவின் புத்தியில் செவ்வையாய்ப் பதியும்பொருட்டு அர்த்தத்தோடு எழுதுவாம்:—

யாசி யாவன். சிஷ்யனே இந்த ஆச்சரியத்தை நீ அறிவாயாக. இதன் அபிப்பிராயத்தைக் கூறுவாம்:— இந்திரியங்கள் தத்தம் விஷயங்களில் பிரவே

---

𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌜𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌪𑌿 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 ॥ ௭ ॥

இ—ள். 1. கர்மரூபயோகத்தோடு அல்லது பிரஹ்மநிஷ்டாரூப சந்நியாசயோகத்தோடுகூடினவனும் அதனால் ராகத்துவேஷாதிகளில்லாத பரிசுத்தமான ஆத்மாவை (மனதை) யுடையவனும்,

2. அதனால் ஜயித்த (விஷயத்தைக் கிரகித்தலினும் வேற்றுப்பார்வையை யடைந்த) இருவகை இந்திரியங்களை யுடையவனும்,

3. அதனாலேயே பாஹ்யவாசனைவடிவ ஸ்வபாவத்தை ஜயித்தவனும்,

4. அதனாலேயே பிரஹ்மாதி ஸ்தம்பபரியந்தமான சகல பூதங்களிலுமுள்ள ஆத்மா தன்னாத்மாவுக்கு வேறல்லவென்றிவ்வாறு சர்வாத்மத்தன்மையை அறிந்தவனுமுள்ள

பிரஹ்மவித்தானவன் சரீரசம்ரக்ஷணையின் பொருட்டு ஓர் விதியை யனுசரித்தாவது அனுசரிக்காமலாவது எந்தக் கர்மத்தைச் செய்தாலும் அதன் பலத்தை யடைகிறதில்லை. அதாவது கர்மத்தில் அகர்த்தாவென்னும் புத்தியால் யாதொரு சம்பந்தத்தையு மடைவதில்லை.

இப்போது யோகத்தோடுகூடியதன்மைமுதலிய வித்துவான்களது ஐந்து லக்ஷணங்களோடுகூடி ஆகாரமுதலியவற்றிற் பிரவிருத்திக்கும் பிரஹ்மஞானிக்குப் பார்த்தல் முதலிய இந்திரியங்களின் வியாபாரத்தில் நான் கர்த்தாவல்லன் என்னும் உணர்ச்சியோடு நிலைத்தல் தகுதியாம் என்று இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்:—

𑌨𑍈𑌵 𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑍋𑌮𑍀𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑌨𑍍𑌯𑍇𑌤 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌤𑍍 ।
𑌪𑌶𑍍𑌯𑌞𑍍𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌸𑍍𑌪𑍃𑌶𑌞𑍍𑌜𑌿𑌘𑍍𑌰𑌨𑍍𑌨𑌶𑍍𑌨𑌨𑍍𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌸𑍍𑌵𑌪𑌞𑍍𑌶𑍍𑌵𑌸𑌨𑍍 ॥ ௮ ॥

𑌪𑍍𑌰𑌲𑌪𑌨𑍍𑌵𑌿𑌸𑍃𑌜𑌨𑍍𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍𑌨𑍁𑌨𑍍𑌮𑌿𑌷𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌷𑌨𑍍𑌨𑌪𑌿 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍 ॥ ௯ ॥

இ—ள். ஆத்மஸ்வரூப பாவத்தை யறிபவனாகிய தத்துவவித்து (பிரஹ்மஞானி) தனது கூடஸ்தத்தன்மை அஸங்கத்தன்மை உள்ளும்புறமும் நிறைந்திருத்தல் என்பவற்றைத் தரிசித்தலாகிய பிரஞ்ஞையுடையவனுய்த் தான் வெளியில் பார்த்தும் கேட்டும் தொட்டும் மோந்தும் புசித்தும் நடந்தும் தூங்கியும் சுவாசம்விட்டும் பேசியும் மல ஜலங்களை விஸர்ஜனஞ்செய்தும் கைகளாற் கொடுக்கல்வாங்கல் செய்தும் கண்களை மூடியும் திறந்தும் "சப்தாதிவிஷயங்களாகிய இந்திரியார்த்தங்களில் இந்திரியங்களே பிரவிருத்திக்கின்றன. நான் கேட்பவன் பரிசிப்பவன் முகர்வோன் புசிப்பவன் நடப்பவனல்லன்" என்னும் லக்ஷணமுடைய விருத்தியை எப்போதும் தரிக்கின்றவனும் அவ்வக்கர்மங்களை இந்திரியங்களே செய்கின்றன. நான் அக்கிரியனாயிருத்தலால் ஒன்றும் செய்கிறதில்லை; ஆனால் அவ்வக்கிரியைகளுக்குச் சாக்ஷியாயிருத்தலால் நிஷ்கிரிய வடிவத்தால் சும்மாயிருக்கின்றேன் என்று அறிக. (தன்னை அந்தந்தக் கிரியையில் நிஷ்கிரியனாகவே காண்க.)

சிக்க. அவற்றில் எனக்குப் பற்றுதலில்லை. நான் இந்திரியமல்லன்; இந்திரியம் என்னுடையது மன்று. நான் சாக்ஷி, கூடஸ்தன், அசங்கன். இந்திரியம்

---

இதன் பொருள்:—தேகேந்திரியாதிகளின் வியாபாரங்களில் "நான், எனது" என்னும் பாவனையை விட்டு வித்துவான் சும்மாயிருத்தல் தகுதியாம் என்பது இரண்டு சுலோகங்களின் ஒருமித்த பொருளாம்.

இங்கு இது இரகசியமாம் :—

"நான் அசங்க நிர்விகார (அக்கிரிய) பிரஹ்மசேதனம்" என்னு நிச்சயம் ஞானிக்கிருத்தலால் அவன் வாஸ்தவத்தில் யாதொரு கிரியையுஞ் செய்கிறதில்லை. பிராரப்த பலத்தால் ஞானிக்குத் தேகேந்திரியாதிகளால் தரிசனாதி வியாபாரரூபக் கிரியைகள் உண்டாகின்றன. அவை பிராரப்த பலத்தின் போகங்களாம். ஆனால் அந்தப் போகத்தில் இடவாசையாகிய ராகமுண்டாகிறது.

1. அந்த ராகம் இந்திரியங்களாலான தன்று; இந்திரியங்கள் தரிசனாதி வியாபாரங் கள் மாத்திரத்தால் கிருதார்த்தமாதலால்.

2. அந்த ராகம் ஆத்மாவினாலாகியது மன்று; ஆத்மா எப்போதும் எல்லாவற்றையும் சாதாரணமாக நிர்விகாரமாய்ப் பிரகாசிப்பதாயிருத்தலால்.

3. பரிசேஷத்தால் (ஒழிபால்) விஷயங்களின் குணதோஷங்களை விசாரித்தற்குக் காரணமான மனதிற்கே அனுகூலத்தன்மையின் ராகமுண்டாகிறது.

4. அந்த இச்சை ஞானியினுடைய அந்தக்கரணத்தி லுண்டாகிறதில்லை. ஏனெனின் ஞானியின் அந்தக்கரணம் சாந்த (அந்தர்முக) மாயிருக்கிறது. இது "இராகம் அஞ்ஞானத்திற்குக் குறியாம்" என்றல் முதலிய சாஸ்திரவாக்கியங்களில் ஸ்பஷ்டமாம்.

இராகம் சிறிதும் இல்லையாயின் போஜனாதி சரீரத்துக்கு வேண்டிய வியாபாரங்களிலும் பிரவிருத்தி யுண்டாகாமையால் ஞானிக்குப் பிராரப்த போகமும் உண்டாகாது. ஈசுவர சங்கற்பத்திற்கு விஷயமான பிராரப்த போகத்தின் அபாவம் ஞானிக்கும் சம்பவியாது.

1. அங்ஙனமாயினும் பிராரப்த பலத்தின் போகத்தில் விசாரத்தினால் நிவிருத்தியாகத்தகாத இத்தன்மையான போகாதிகளைப்போல பிராரப்தத்தினாற் பெறப்பட்ட அஇட (அகங்கார சிதாத்மாக்களின் பிரமஜதாதாத்மியத்தி னின்மையால் ஆபாஸ வடிவ) ராகம் ஞானிக்குண்டாம். ஆனால் அந்த அஇடராகம் ஸ்வாதீனமா யிருத்தலாலும் வறுத்தவிதைபைப்போலத் துர்ப்பலமா யிருத்தலாலும் தேக சம்ரக்ஷணைக்குக் காரணமான சாஸ்திரவிகித போகத்துக்கு ஹேதுவாம்; வியசனத்தை யுண்டுபண்ணும் சாஸ்திரத்தில் விலக்கிய போகத்துக்கு ஹேதுவன்று.

2. அல்லது, விஷயம் சத்தியமென்னும் பிராந்தி ஞானிக்கில்லாமையினாலும் மித்தியாத்தன்மைப் புத்தியால் உண்டாகிய திடமான வைராக்கியமிருத்தலாலும் இடராக முண்டாகிறதில்லை. இவ்வர்த்தம்மேல் 6-வது தரங்கத்தில் நூலாசிரியராலேயே நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

3. அல்லது, கழையின்பேரில் ஏறி விளையாடும் வித்தையாடியின் சித்தம் உச்சியில் பதிந்திருப்பதுபோலும், ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு செல்லும் வேலைக்காரிகளுக்குத் தலையிலுள்ள குடத்திற் சித்தமிருப்பதுபோலும் ஞானியின் அந்தக்கரணம் சாமாந்யமாய் விஷயங்களிற் பிரவிருத்தித்தலாலும், விசேஷமாய்ச் சொரூபத்திற் பொருந்தி யிருத்தலாலும், அவனது ஜடதேகமும் இந்திரியங்களும் ராகமின்றியே

விஷயதைத் தியாகஞ்செய்க; அல்லது அனுபவிக்க; எனக்குச் சிறிதும் சம்பந்தமில்லையென்னும் நிச்சயம் ஞானிக்கிருத்தலால் அவன் காரியங்களைச் செய்வதாகக் காணப்பட்டாலும் செய்யாதவனாவன்.

---

பிராரப்தத்தின் பலவடிவ கர்ண்டல் முதலிய கிரியைகளால் கிருதார்த்த மாதலாலும், நிஷ்டையோடுகூடிய சாபாஸ அந்தக்கரணவடிவ ஞானிக்கு விஷயபோகத்தில் திடராகம் சம்பவியாது.

4. ஏதேனும் ஓர் பிரவிருத்திக்கு ஏதுவான பிராரப்தமுடைய ஞானியின் மனவடிவ யானை விஷயங்களில் சிறிது விக்ஷேபப்பட்ட (பிரமாதத்தை யடைந்த) தாகின்றது. அங்ஙனமாயினும் விவேக (தோஷ திருஷ்டி மித்தியாத்துவபுத்தி) வடிவ கேசரீ (சிங்கம்) விழித்தலால் அந்த மனமாகிய யானை சடிதியில் பிரமாதவடிவ விக்ஷேபத்தை விட்டுச் சாந்தமாகின்றது.

எதனால் ஞானியின் சித்தத்தில் திடராகமில்லையோ அதனால்,

1. போகத்திற் கேதுவாகிய பிராரப்தமிருக்க அவன் காக்கைக்கண்போலும் கங்கையில் மூழ்கிய பாதியுடல்போலும் முக்கியத்தன்மையால் சொரூப சுகத்தில் இரமிக்கின்றான்.

2. அமுக்கியத்தன்மையால் கூலிவாங்குவோனைப்போலக் கிலேசத்தை யடைகின்றவனாய்த் தீவிரப் பிராரப்தத்தின் பலத்தை அனுபவிக்கிறான்.

தளர்ந்த பிராரப்தத்தின் பயன்வடிவ நிஷித்த (விலக்கப்பட்ட) விஷயத்தைப் பிரயத்தினத்தினால் விடுகிறான். என்றாலும் அதனைப் புசித்தலிலும் விடுதலிலும் விகல (வெறிகொண்ட) புருஷனது சித்தம்போல ஞானியின் சித்தத்தின் அமுக்கியத்தன்மை அபிப்பிராயத்தினாலும் அவனது ஜட இந்திரியங்களினாலேயே போகமும் விடுதலும் செய்யப்படுமென்னும் அபிப்பிராயத்தினாலும் முற்கூறிய கீதையின் சுலோகத்தில் "இந்திரியங்களின் அர்த்தங்களில் இந்திரியங்கள் செல்லுகின்றன" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் 276-வது பிரசங்கத்தின் முடிவில் "இந்திரியங்கள் விஷயங்களைப் புசிக்க அல்லது விடுக" என்னும் வசனத்தால் நிஷித்த அல்லது தோஷங்கண்ட விஷயங்களை விட்டு அதிடராகத்தால் கிடைத்த விகித (விதிக்கப்பட்ட) விஷயங்களைப் புசிப்பன இந்திரியங்க ளெனப்படுகின்றன; அந்தக்கரணங்க ளன்று.

இதன் 276-வது பிரசங்கத்திலேயே "யௌவன ஸ்திரீயை யனுபவித்தும் நித்திய சந்நியாசியாவன்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அபிப்பிராயம் இதுவாம் :—

1. தியாகி (சந்நியாசியாகிய) ஞானிக்கோ ஸ்திரீபோகம் கிடைக்காது. அவனுக்கு ஸ்திரீபோகமிருக்கின் சந்நியாஸத்தை நிரூபித்தலாகிய நிஷேதத்தின் சம்பவமும் எங்கிருந்துண்டாகும்? சந்நியாசியாய் ஸ்திரீபோகத்தில் பிரவர்த்திப்பானாயின் அந்த வாந்தியை யுண்ணும் புருஷன் சந்நியாசியாகான். ஆனால் சந்நியாசியின் வேஷத்தைத் தரிக்கும் நடனைப்போல டம்பியாதலால் கிருஹஸ்தனினும் அதமனாவன்; பூஜித்தற் குரியவனாகான்.

2. ஆதலால் பரிசேஷத்தால் (ஒழிபால்) கிருகஸ்த ஞானியினிடத்து ஸ்திரீபோகம் கிடைக்கின்றது; அந்தக் கிரகஸ்த ஞானியும் நெய்யைப் புசிக்கப் பழகுவோனுக்குத்

## (லயசிந்தனம். 277-280.)

### 277. சர்வப் பிரபஞ்சமும் ஈசுவரவடிவமாதல்.

இவ்விதத்தால் ஆசாரியர் சிஷ்யனுக்கு ரஹஸியமான தத்துவத்தை யுபதேசித்தும் சிஷ்யன்முகம் நன்றாய்ப் பிரசன்னமாகா (மலரா)ததைக் கண்டு ஆசாரியர் இவ்வாறு நிச்சயித்தார்:—சிஷ்யன் கிருதார்த்தனாகவில்லை. கிருதார்த்தனாயிருந்தால் அவன் * முகம் பிரசன்னமாயிருக்கும். ஆதலால் மறுபடியும் ஸ்தூலக்கிரமமாக உபதேசிக்க † லயசிந்தனத்தைக் கூறுகின்றார்.

மட் காரியமான கடம் உள்ளும் புறமும் மண்ணாகவேயிருக்கிறது. ஆதலால் மட் காரியங்களெல்லாம் மண்ஸ்வரூபமாகவே யிருக்கின்றன. நுரைமுதலிய ஜல காரியங்களெல்லாம் ஜல ஸ்வரூபமாகவே யிருக்கின்றன. இப்படியே எது எதன்காரியமோ அது அந்தக் காரணஸ்வரூபத்துக்கு வேறாகிறதில்லை. ஆனால் காரியம் காரணஸ்வரூபமாகவே யிருக்கிறது.

சகலப் பிரபஞ்சத்துக்கும் மூலகாரணம் ஈசுவரன். ஆதலால் சகலகாரியப் பிரபஞ்சமும் ஈசுவரஸ்வரூபத்துக்கு வேறில்லை. சகலப் பிரபஞ்சத்தின் ஸ்வரூபமும் ஈசுவரனே.

“அந்த ஈசுவரன் நான்” என்றிவ்வாறு லயசிந்தனத்தை யறிந்து நீ செய்.

---

தைலம்புசித்தலைப்போலச் சாஸ்திரக்கிரமமாய்ச் சந்ததியின்பொருட்டு ருதுமுதலியகாலங்களில் விவாகஞ்செய்துகொண்ட ஸ்திரீயின் சங்கத்தைச் செய்கிறான்; விஷயப்பற்றினால் கூடுகிறதில்லை. விஷயத்தில் பற்றுள்ளவனாய் வேதாந்தம் பேசுவதில் சமர்த்தனான கிருகஸ்தனாயின், அவன் திடராகவடிவ அஞ்ஞானத்தின் குறியோடுகூடியவனா யிருத்தலால் ஞானியல்லன்; அஞ்ஞானியாவன்.

இங்கு ஸ்திரீவடிவ விஷயத்தின் விசாரம் எதுவோ அது மற்ற எல்லா விஷயங்களின் விசாரத்திற்கும் உபலக்ஷணமாம். ராகம் திடமாயிருக்கலாகாதென்று சொன்னது த்வேஷ முதலியனவும் திடமாயிருக்கலாகா தென்பதின் உபலக்ஷணமாம்.

* விரும்பியபதார்த்தத்தை அடைதலால் சித்தத்தின் சஞ்சலத் தன்மைக்கு ஏதுவான இச்சைவடிவ விருத்தியின் நாசமாகிய நிமித்தத்தால் அசைவற்ற கண்ணாடியைப் போல அந்தர்முகமாயுதித்த சாத்துவிகவிருத்தியில் ஸ்வரூபவடிவ ஆநந்தத்தின் பிரதிபிம்பமுண்டாகின்றது. அந்த ஆநந்தத்தை யநுபவித்து முகத்தின் மலர்ச்சியுண்டாகின்றது.

சிஷ்யனுக்கு ஞானவாயிலாக விரும்பப்பட்டதாகிய காரியத்தோடு அவித்தையின் நிவிருத்தியும் பரமாநந்தத்தின் பிராப்தியுமாகிய விரும்பப்பட்ட மோக்ஷமானது சித்திக்கவில்லை. அதனால் இச்சை நிவிருத்தியாகவில்லை. ஆதலால் அந்தர்முகவிருத்தி யுதியாமையால் சொரூபாநந்தத்தினது பிரதிபிம்ப மில்லை. இதனாலேயே அந்தப் பிரதிபிம்ப கோசர அநுபவத்தின் அபாவத்தால் முகமலர்ச்சியுண்டாகவில்லை. அந்த முகமலர்ச்சியின்மையாகிய குறியினால் இஷ்டவஸ்துவை யடையாமையாகிய அகிருதார்த்தத்தன்மையின் அநுமிதியுண்டாகிறது.

† காரியத்தைக் காரணவடிவமென் றறிந்து சிந்தித்தல் லயசிந்தன மெனப்படும்.

## 278. சகல சூக்ஷ்மசிருஷ்டியும் அபஞ்சீகிருத பூதவடிவமாதல்.

லயசிந்தனையின் சுருக்கமான கிரமம் இதுவாம்:—

1. ஸ்தூலப் பிரஹ்மாண்ட முழுவதும் பஞ்சீகிருத பூதகாரியமாம். எது பிருதிவியின் காரியமோ, அது பிருதிவிஸ்வரூபமாம். ஜலத்தின் காரியம் ஜலஸ்வரூபமாம். இவ்விதத்தால் எது எந்தப் பூதத்தின் காரியமோ, அது அதன் ஸ்வரூபமேயாம். இவ்வாறு ஸ்தூலப்பிரஹ்மாண்ட முழுவதும் பஞ்சீகிருத பூதஸ்வரூபமாம்.

2. அவ்வாறே பஞ்சீகிருதபூதமும் அபஞ்சீகிருதபூதகார்யமாம். ஆதலால் அபஞ்சீகிருதஸ்வரூபமே பஞ்சீகிருதபூதமாம்; வேறன்று.

3. அந்தக்கரணமுதலிய சூக்ஷ்மசிருஷ்டியும் அபஞ்சீகிருத பூதகாரியமாயிருத்தலால் அபஞ்சீகிருதபூதஸ்வரூபமாம்.

(1-2.) அந்தக்கரணம் சகலபூதங்களின் சத்துவகுணகாரியமாயிருத்தலால் சத்துவகுணஸ்வரூபமாம்.

(3-7.) பூதங்களின் ரஜோகுணும்சத்தின் காரியமான பிராணன் ரஜோகுணஸ்வரூபமாம்.

(8-9.) குதேந்திரியம் பிருதிவியின் ரஜோகுணும்சத்தின் காரியமாயிருத்தலால் அது பிருதிவியின் ரஜோகுணஸ்வரூபமாம். கிராணேந்திரியம் பிருதிவியின் சத்துவகுணகாரியமாதலால் அது சத்துவகுணஸ்வரூபமாம்.

(10-11.) இப்படியே ரஸனேந்திரியமும் உபஸ்தேந்திரியமும் ஜலத்தின் சத்துவகுண ரஜோகுணஸ்வரூபங்களாம்.

(12-13.) நேத்திரமும் பாதமும் தேயுவின் சத்துவகுண ரஜோகுணஸ்வரூபங்களாம்.

(14-15.) துவக்கும் பாணியும் வாயுவின் சத்துவகுண ரஜோகுணஸ்வரூபங்களாம்.

(16-17.) சுரோத்திரமும் வாக்கும் ஆகாசத்தின் சத்துவகுண ரஜோகுணஸ்வரூபங்களாம்.

இவ்விதத்தால் சூக்ஷ்மசிருஷ்டி முழுவதும் அபஞ்சீகிருத பூதஸ்வரூபமாம்.

## 279. சகல அநாத்ம பதார்த்தங்களுக்கும் கிரமமாகப் பிரஹ்மத்தில் லயசிந்தனம்.

இச்சிந்தனைசெய்து அபஞ்சீகிருதபூதங்களின் லயசிந்தனத்தையும் செய்யவேண்டியது.

1. பிருதிவி ஜலத்தின் காரியமாகையால் ஜலஸ்வரூபமாம்.

2. தேஜஸின் காரியமான ஜலம் தேஜஸ்ஸ்வரூபமாம்.

3. தேஜஸ் வாயுவின் காரியமாதலால் வாயுஸ்வரூபமாம்.

4. ஆகாசத்தின் காரியமான வாயு ஆகாசஸ்ரூபமாம்.

5. தமோகுணப் பிரதான பிரகிருதியின் காரியமான ஆகாசம் பிரகிருதிஸ்வரூபமாம்.

6. பிரகிருதி மாயையின் அவஸ்தாவிசேஷமாம். ஆதலால் பிரகிருதி மாயாஸ்வரூபமாம்.

ஒரே வஸ்துவிற்குப் 1. பிரதானம் 2. பிரகிருதி 3. மாயை 4. அவித்தை 5. அஞ்ஞானம் 6. சக்தி என்பன பெயர்களாம்.

(1) சகல காரியங்களையும் தன்னில் லயப்படுத்திப் பிரளயகாலத்தில் இருக்கிற உதாசீனஸ்வரூபத்தைப் பிரதானமென்பர்.

(2) சிருஷ்டியின் உபாதானயோக்கியமான தமோதுணப் பிரதான ஸ்வரூபத்தைப் *பிரகிருதி என்பர்.

(3) தேசகாலாதி சாமக்கிரிகளின்றி இந்திரஜாலத்தால் துர்க்கட (நிகழ்தற்கரிய) பதார்த்தங்களுண்டாகுமிடத்து இந்திரஜாலத்தை மாயை யென்பர். அதுபோல அசங்க அத்துவிதீயப் பிரஹ்மத்தில் இச்சாதிகள் துர்க்கடமாம் (நிகழ்தற்கரியனவாம்). அவற்றைச் செய்தலால் மாயை யெனப்படும்.

(4) ஸ்வரூபத்தை மறைத்தலால் அஞ்ஞான மெனப்படும்.

(5) பிரஹ்மவித்தையால் நாசமடைதலால் அவித்தை யெனப்படும்.

(6) சுதந்திரமாக ஒருகாலத்திலு மிருக்கிறதில்லை. ஆனால் சேதனத்தை யாசிரயித்தே யிருக்கிறது. அதனால் சக்தி யென்றுஞ் சொல்லப்படும்.

இவ்விதத்தால் பிரகிருதிமுதலியவைகள் பிரதானத்தின் பேதங்களாதலால் பிரதான ஸ்வரூபமாகவே யிருக்கின்றன.

7. அந்தப் பிரதானம் பிரஹ்மசேதனத்தின் சக்தியாயிருக்கிறது. புருஷனிடத்திலுள்ள சாமர்த்தியரூப சக்தி புருஷனை விட்டு வேறாயிராதது போலச் சேதனத்திலுள்ள பிரதானரூபசக்தி பிரஹ்மசேதனத்தைவிட †வேறாக இல்லை.

---

* 1. எதனினின்றும் மிகுதியாகச் சகல ஜகத்தும் செய்யப்படுகின்றனவோ அத்தன்மைய சிருஷ்டியின் உபாதானகாரணம் பிரகிருதியாம்.

2. அல்லது பிர என்பது சத்துவகுணம்; கிரு என்பது ரஜோகுணம்; அவற்றோடு கூடிய தி என்பது தமோகுணம்; அது தமோதுணப்பிரதான பிரகிருதியாம்.

† பிரஹ்மத்தின் சக்தி பிரஹ்மத்துக்கு வேறாயிருக்குமாயின் அத்வைத சுருதிக்கு விருத்தமாகும். அபின்னமென்று கூறின் சக்தி பிரஹ்மரூபமாதலால் பிரஹ்மத்தின் வேறுதற்றன்மையைச் சக்தியென்னும் பெயராற் கூறுதல் வியர்த்தமாகும். ஆதலால் சக்

இவ்விதத்தால் பிரஹ்மத்தினிடத்தில் சகல அநார்த்மபதார்த்தங்களின் லயசிந்தனத்தையும் செய்து, "அந்த அத்வைதப் பிரஹ்மம் நான்" என்று சிந்தனை செய்க.

## 280. தியானத்திற்கும் ஞானத்திற்கும் பேதம் அகங்கிரகத்தியானம்.

மகாவாக்கிய விசாரத்தினாலும் எவனுக்குப் புத்தியின் மந்தத்தன்மை * முதலிய ஏதேனும் ஓர் பிரதிபந்தத்தால் அபரோக்ஷஞான முண்டாகிற தில்லையோ அவனுக்கு இந்த லயசிந்தனைரூபத் தியானஞ் சொல்லப்பட்டது.

ஞானத்திற்கும் தியானத்திற்கும் இவ்வளவு பேதமுண்டு.

1. † ஞானமோ பிரமாணப் பிரமேய மென்பவற்றின் அதீனமாம்;

---

திக்கும் பிரஹ்மத்தோடு பேதம் அபேதம் இரண்டும் சொல்லவேண்டும். இருளும் ஒளியும் போல் அவ்விரண்டு தர்மங்களு மோரிடத்தி லிரா. ஆனால் ரஜ்ஜுவினோடு சர்ப்பத்தின் சம்பந்தம்போலப் பிரஹ்மத்தோடு சக்திக்குக் கற்பிதபேதமும் வாஸ்தவ அபேதமுமான அநிர்வசனீய தாதாத்மியசம்பந்தம் இருக்கிறது.

அதனால் சக்திக்குத் தனது சக்தனோடு (ஆசிரயத்தோடு) வாஸ்தவபேதமில்லாமை யால் எந்தப் பிரமாணத்தினாலும் பின்னமாய்த் தோற்றுதலின்மையால் அந்தச் சக்தி பின்னமன்று. ஆனால் கற்பிதசர்ப்பம் பரமார்த்தமாக ரஜ்ஜுவடிவமா யிருப்பதுபோலச் சக்தி பரமார்த்தத்தால் பிரஹ்மவடிவமாகவே யிருக்கிறது.

* இங்கு முதலியவென்னும் சொல்லால்,

1. புத்திமந்தத்தன்மையோ டிருப்பதாகிய விஷயாசக்தி, குதர்க்கம், விபரிய துராக்கிரகமென்னும் மூவகை வர்த்தமானப் பிரதிபந்தங்களையும் கொள்க.

2. தன புத்திராதிப் பிரியவஸ்துக்கள் நாசமாகிய பிறகும் அவற்றை ஸ்மரித்துக் கொண்டிருத்தலாகிய பூதப் பிரதிபந்தத்தையும் கொள்க.

3. பிரஹ்மலோக முதலியவற்றின் இச்சை அல்லது வரப்போகிற ஜன்மங்களுக்கு ஹேதுவான சேஷப் பிராரப்தமாகிய ஆகாமிப்பிரதிபந்தத்தைக்கொள்க. இந்தஞானத் தின் உற்பத்தியைப் பிரதிபந்தித்தலின் நிரூபணம் பஞ்சதசியின் தியானதீபமென்னும் ஒன்பதாவது பிரகரணத்தின் 38 வது சுலோக முதல் 53-வது சுலோகம் வரையிலும், அங்ஙனமே வேதாந்தபதார்த்த மஞ்சூஷாவிலும் செய்யப்பட்டிருக்கிறது. அறியவிரும்பு வோர் ஆண்டுக் காண்க.

† இங்கு இது ரகசியம்:—

1. பிராந்திஞானம். 2. ஸ்மிருதிஞானம். 3. பிரமஞானம் என ஞானம் மூன்று விதமாம். அவற்றுள்,

1. பிராந்திஞானம் கேவலம் வஸ்துவின் பிரமவடிவ விஷயத்தின் அதீனமா யிருக்கிறது.

2. ஸ்மிருதிஞானம் தனது விஷயத்திற்குச் சமானமான அல்லது அதன் சம்பந்த முள்ள வஸ்துவின் ஞானத்தினாலேனும் தனது விஷயத்தை (முன்கண்ட வஸ்துவை)ச் சிந்தித்தலினாலேனும் உதயமாகிய முன்பார்த்த வஸ்துவின் மனோமய ஆகாரத்தின் அதீனமா யிருக்கிறது.

* விதி புருஷனுடைய இச்சை என்பவற்றின் அதீனமன்று.

2. தியானமானது விதி புருஷனுடைய இச்சை விசுவாசம் ஹடம் என்பவற்றின் அதீனமாயிருக்கிறது.

---

3. பிரமாஞானத்துக்கு அந்தர்கதமாயிருக்கிற (அடங்கிய) சுகாதிகளின் ஞானம் நியாயமதத்திலும் வாசஸ்பதிமதத்திலும் மனரூபமான பிரமாணத்திற்கும் சுகாதிரூபப் பிரமேயத்திற்கும் அதீனமாயிருக்கிறது.

ஆனால் சித்தாந்தத்தில் மனது பிரமாணமென்று அங்கீகாரம் பண்ணுமையினால் சுகாதிகளின் ஞானம் கேவலப்பிரமேயத்தின் (சுகாதிரூப வஸ்துவின்) அதீனமாயிருக்கிறது. மற்றப் பிரமாஞானங்கள் இந்திரியம் அநுமானமுதலிய பிரமாணங்களுக்கும் பிரமேயரூப வஸ்துக்களுக்குமுண்டாகும் சம்பந்தத்தின் அதீனமாயிருக்கிறது. அவற்றில்,

1. சப்தப்பிரமாணத்தாலுண்டாகிய பிரஹ்மஞானரூப சாப்திப்பிரமை மகாவாக்கியரூப சப்தப் பிரமாணத்திற்கும் பிரத்தியகபின்ன பிரஹ்மரூபப் பிரமேயத்துக்குமுள்ள லக்ஷணாவிருத்திரூப பரம்பரைச் சம்பந்தத்தினது ஞானத்தின் அதீனமாயிருக்கிறது.

2. மற்ற லௌகிக பதார்த்தங்களின் சாப்திப்பிரமாரூப ஞானம்

1. சிலவிடங்களில் சக்திவிருத்திரூப சம்பந்தத்தினது ஞானத்தின் அதீனமாம்.

2. சிலவிடங்களில் லக்ஷணாவிருத்திரூப சம்பந்தத்தினது ஞானத்தின் அதினமாயிருக்கிறது.

இவ்விதத்தால்,

(1) சில ஞானம் ஜ்ஞேயரூப் வஸ்துமாத்திரத்தின் அதீனமாம்.

(2) சில ஞானம் பிரமாணப் பிரமேயரூப வஸ்துவின் சம்பந்தத்தின் அல்லது அச்சம்பந்தத்தினது ஞானத்தின் அதீனமாயிருக்கின்றன. பிரமப் பிரமைகளின் சாதாரணமான ஞானத்தின் விஷயத்தினை ஜ்ஞேய மென்பர். அதில் பிரமேயத் (பிரமாணத்தினுலறியப்படுந்) தன்மை இல்லை.

கேவலப் பிரமாஞானத்தின் விஷயத்தினைப் பிரமேய மென்பர். அதில் ஜ்ஞேயத் தன்மையு மிருக்கிறது.

இவ்விதத்தால் சகல ஞானமும் வஸ்துவின் அதீனமாம்.

1. இது "வஸ்து" என்னும் சொல்லால் ஈசுவரனுலாக்கப்பட்ட அல்லது மனோமய (பரோக்ஷஞானத்தின் விஷயமான) அல்லது பிரமவடிவ வஸ்துவினோடு பிரமாணவாயிலாகவாவது அல்லது நேராகவாவது விருத்தியினது சம்பந்தம் கிரகிக்கப்படுகிறது. ஆதலால் ஞானம் விதி முதலியவற்றின் அதீனமன்று.

2. தியானமாகிய உபாசனை வஸ்துவின் அதீனமன்று. ஆனால் கர்த்தாவின் அதீனமாம்.

தியானமும் மனதின் விருத்திவடிவமாம். அங்ஙனமாயினும் அது புருஷனுற் செய்யப்பட்ட இச்சை முதலியவற்றின் அதீனமாம்; வஸ்துவின் அதீனமன்று. ஆதலால் அது மானஸஞானமன்று; ஆனால் மானஸக்கிரியையாம்.

1. பிரத்தியக்ஷஞானத்தில் பிரமாணம் நேத்திரமும் பிரமேயம் கடாதிகளுமாம். அங்ஙனமே நேத்திரத்துக்கும் கடத்துக்கும் சம்பந்தமுண்டாகவே புருஷனுடைய இச்சையின்றியும் கடத்தின் பிரத்தியக்ஷஞானமுண்டாகிறது. விநாயகசதுர்த்திதினத்தில் சந்திரனைப் பார்க்கக்கூடாதென்னும் நிஷேதமுண்டு; விதியில்லை. புருஷனுக்கு "இன்றையத்தினம் எனக்குச் சந்திரதரிசன முண்டாகலாகா"தென்று இச்சையுண்டானாலும் எவ்விதத்திலாவது நேத்திரப் பிரமாணத்திற்குப் பிரமேயமாகிய சந்திரனோடு சம்பந்தமுண்டாய் விடுமாயின் சந்திரனுடைய பிரத்தியக்ஷஞானம் அவசியமாகவேயுண்டாகும். இவ்விதத்தால் ஞானம் பிரமாணப் பிரமேயங்களின் அதீனமாயிருக்கிறது; இச்சைவிதிகளின் அதீனமாயில்லை.

2. "சாலிக்கிராமம் விஷ்ணுரூப" மென்று தியானஞ் செய்கிறவனுக்கு உத்தமபல னுண்டாகிறது. அங்குச் சாஸ்திரப் பிரமாணத்தினால் விஷ்ணுவைச் சதுர்ப்புஜமூர்த்தியாகவும் சங்குசக்கிர கதா பத்ம லக்ஷ்மிசகிதமாயும் அறிகிறான். நேத்திரப் பிரமாணத்தால் சாலிக்கிராமத்தைச் சிலையாக அறிகிறான். அங்ஙனமாயினும் விதி விசுவாச இச்சைகளால் "சாலிக்கிராமம் விஷ்ணுவா" மென்னும் தியானமுண்டாகிறது. ஆனால் இந்தத் தியானம் அனேகவிதமாம்.

(1) சாலிக்கிராமத்தை விஷ்ணுரூபமாகத் தியானிப்பதுபோல் அன்னியவஸ்துவை அன்னியரூபமாகத் தியானிப்பது **பிரதீகத்தியான** மெனப்படும்.

(2) வைகுண்ட லோகத்தில் வசிக்கிற விஷ்ணுவைச் சங்குசக்கராதி சகித சதுர்ப்புஜ மூர்த்திவடிவமாகத் தியானிப்பதில் அன்னியவஸ்துவின் அன்னியரூபமான தியானமில்லை. ஆனால் **தியேயவடிவத்தின் அநுசாரமான** தியானமாமிது. வைகுண்டவாசி விஷ்ணுவின் ஸ்வரூபம் பிரத்தியக்ஷமாகவோயில்லை; கேவலம் சாஸ்திரத்தினால் அறியப்படுகிறது. சாஸ்திரத்தில் சங்குசக்கிராதிசகிதமாகவே விஷ்ணுவின் ஸ்வரூபஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்தத் தியானம் † தியேய ஸ்வரூபத்தை யநுசரித்ததாகவேயிருக்கிறது.

* அங்கு விதியும் புருஷனது இச்சையும் விசுவாசத்திற்கும் ஊடத்திற்கும் உபலக்ஷண (சூசக) மாம். எவ்விதத்தால் ஞானம் விதிமுதலிய நான்கின் அதீனமாகாதோ, அவ்விதம் பஞ்சதசியின் தியானதீபத்திலுள்ள 74-ம் சுலோகத்தின் விளக்கவுரையில் எழுதப்பட்டிருக்கின்றது; அதனால் இங்கு எழுதப்படவில்லை.

† எவன் விருத்தி சாஸ்திரவாயிலாகப் பரோக்ஷமான தியேயத்தில் (தியானிக்கப்படுபொருளில்) நிலைக்கிறதில்லையோ, அந்தப்புருஷன் புருஷனைப் பிரேரிக்கும் சாஸ்திர வசனமாகிய விதியினால் போதிக்கப்பட்ட (அன்னியத்) தியேயத்தின் பிரதிநிதிவடிவ வஸ்துவில் அந்நி (தியேய)த்தின் புத்தியாகிய உபாசனையைச் செய்யவேண்டும். அந்த அந்நியத்தில் (ஒன்றில்) அந்நியத்தின் (மற்றொன்றன்)புத்தியான உபாசனை (தியானம்) **பிரதீகத்தியான** மெனப்படும்.

அங்ஙனமே "நான் பிரஹ்மம்" என்னும் வடிவுடைய நிர்க்குண உபாஸனையாகிய அகங்கிரகத்தியானம் தியேயாநுசாரமான தியானமாம்.

விதி விசுவாச இச்சைகளின்றித் தியான முண்டாகிறதில்லை.

(1) "இந்த உபாசனை செய்" என்று ஒருவனைப் பிரவர்த்திக்கும்படி செய்கிற வசனம் விதி யென்று சொல்லப்படும்.

(2) அந்த வசனத்திலுள்ள சிரத்தைக்கு விசுவாச மென்று பெயர்.

(3) அந்தக்கரணத்தின் காமனைவடிவ ரஜோகுண விருத்திக்கு இச்சை யென்று பெயர்.

(4) தியானம் ஹடத்தினுலுண்டாகும். ஞானத்தில் ஹடத்தின் அபேக்ஷையில்லை. ஏனெனின்நிரந்தரத்தியேயாகாரமானசித்தவிருத்திக்குத் தியான மென்று பெயர். அங்கு விருத்தியில் விக்ஷேபமுண்டானல் ஹடத்தால் விருத்தியை ஸ்திரப்படுத்தவேண்டும்.

ஞானரூப அந்தக்கரணவிருத்தியால் தற்கால ஆவரணபங்கமு முண்டாதலால் விருத்தி ஸ்திரப்படுத்துவதின் உபயோகமில்லை; ஆதலால் ஹடத்தின் அபேக்ஷையில்லை.

வைகுண்டவாசியான சதுர்ப்புஜ விஷ்ணுவைத் தியானிப்பதுபோல் "நான் பிரஹ்மம்" என்னும் தியானமும் தியேயானுசாரமா யிருக்கிறது; பிரதீகமன்று. ஆனல் இது அகங்கிரகத்தியானமாம்.

தியேயஸ்வரூபத்தைத் தன்னேடு அபேதமாகச் சிந்தித்தல் அகங்கிரகத் தியான மெனப்படும்.

எவனுக்கு அபரோக்ஷஞான முண்டாகிறதில்லையோ, வேதத்தின் ஆஞ்ஞாரூபவிதியில் விசுவாசம் வைத்து ஹடமாக இடைவிடாமல் "நான் பிரஹ்ம" மென்று எவன் அகங்கிரகத்தியானஞ் செய்கிருனே, அவனுக்கும் ஞானமுண்டாகி * மோக்ஷங் கிடைக்கும்.

## பிரணவ உபாஸனை. (281-303)

### 281. பிரணவத்தின் அகங்கிரகத்தியானம்.

வேறுவிதத்தால் அகங்கிரக உபாஸனையைச் சொல்லுகிறேன்:—சிஷ்யனே, பிரணவரூபமாகிய ஓங்கார ஸ்வரூபத்தின் அகங்கிரகத்தியானம் † மாண்டூக்கியாதி சுருதிகளை யனுசரித்துச் சுரேசுவராசாரியரால் சொல்லப்

* சம்வாதிப் பிராந்தியினுல் பிரவிருத்தித்த புருடனுக்கு யதார்த்தஞானவாயிலாக இஷ்டவஸ்துவின் லாபமுண்டாகிறது. அப்படியே "நான் பிரஹ்மம்" என்னும் விருத்தியின் ஸ்திதியாகிய அகங்கிரகத்தியானஞ் செய்வானுயின் அவனுக்கு ஞானவாயிலாக மோக்ஷம் கிடைக்கிறது.

† இங்கு "மாண்டூக்கிய" மென்னும் சொல்லால் கௌடபாதாசாரியரால் செய்யப்பட்ட மாண்டூக்கிய உபநிஷதத்தின் காரிகையும் கொள்ளப்படும்.

தியானத்திற்கு விஷயமான பிரஹ்மம் பரமார்த்தரூபமன்று; ஆனல் மனேகற்பிதமாம்; ஆதலால் பிரமரூபமாம். இதனலேயே அதனை விஷயஞ்செய்வதாகிய விருத்தி

பட்டிருக்கிறது. அதை நீ செய்வாயாக. அதன் சுருக்கமான கிரமம் இது வாம்:—பிரணவாக்ஷரம் பிரஹ்மஸ்வரூபம்; "அந்தப்பிரணவஸ்வரூபப் பிரஹ் மம் நான்" என்று ஒரு க்ஷணமும் இடையின்றித் தன் புத்தி விருத்தியை நிறுத்துக. இதற்குச் சமானமான வேறு தியானமில்லே. இந்தத் தியானத் தின் விசேஷக்கிரமம் சுரேசுவராசாரியாராற் செய்யப்பட்ட பஞ்சீகரணக்கி ரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வுபாஸனையைச் செய்பவன் அபாரசமுசாரத்தை யொழிக்கிருன்.

## 282. நிர்க்குணமும் சகுணமுமான பிரணவ உபாசனேயைப் பலத்துடன் கூறுவது.

பிரணவவுபாஸனே அநேக உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டிருந்தா லும் மாண்டூக்ய வுபநிஷத்தில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் வியாக்கியானத்தில் பாஷ்யகாரரும் ஆநந்தகிரியும் அந்த வுபாஸனே யின் கிரமத்தைத் தெளிவாய் எழுதியிருக்கிருர்கள். அந்தக்கிரமமே வார்த் திககாரரால் பஞ்சீகரணக் கிரந்தத்தி லெழுதப்பட்டிருக்கிறது. அங்ஙனமா யினும் அந்தக் கிரந்தங்களே விசாரித்தலில் எவன் புத்தி சாமர்த்தியமுடைய தன்ருே அவனுக்காகப் பிரணவஉபாஸனையின் கிரமத்தை நாம் எழுது வாம்:—உபநிஷதங்களில் பிரணவ வுபாஸனே இருவகையாய்ச் சொல்லப்பட் டிருக்கிறது.

1. ஒன்று பரப்பிரஹ்மரூபமாகப் பிரணவத்தைச் சிந்தித்தல்.

2. மற்ருென்று அபரப்பிரஹ்மரூபமாகச் சிந்தித்தல்.

1. நிர்க்குண பிரஹ்மத்தைப் பரப்பிரஹ்ம மென்பர்.

2. ஸகுணப்பிரஹ்மத்தை அபரப்பிரஹ்ம மென்பர்.

1. பரப்பிரஹ்மரூபமாகப் பிரணவத்தைச் சிந்திக்கிறவன் மோக்ஷத்தை யடைகிருன்.

2. அபரப்பிரஹ்மமாகப் பிரணவத்தைச் சிந்தனே செய்கிறவன் பிரஹ் மலோகத்தை யடைகிருன். இவ்விதத்தால் நிர்க்குணஸகுணபேதங்களால் பிரணவ உபாஸனே இரண்டுவிதமாம்.

---

வடிவத் தியானமும் பிராந்திஞானமாம்; யதார்த்தஞானமன்று. என்றலும் மணியின் பிரபையில் மணியென்னும் புத்திவடிவமான சம்வாதிப்பிராந்தியினுல் ஓடிய புருட னுக்கு மணியின் ஞானவாயிலாக மணி கிடைப்பதுபோல மேற்கூறிய தியானத்தால் பிரஹ்மத்தின் ஞானமுண்டாய் மோக்ஷப்பிராப்தியும் சம்பவிக்கின்றது.

சம்வாதிப்பிரஹ்மத்தின் வர்ணனம் பஞ்சதசியின் தியானதீபத்தின் ஆரம்பத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

## 253. நிர்க்குணவடிவப் பிரணவ வுபாசனைக் கிரமத்தின் ஆரம்பம்.

நிர்க்குண வுபாசனையின் கிரமத்தை யெழுதுகின்றும்; ஸகுணத்தின தன்று. ஏனெனின்,

1. பிரஹ்மலோக இச்சையுள்ளவனுக்கு நிர்க்குண உபாஸனையினாலும் இச்சையாகியபிரதிபந்தத்தால் ஞானவாயிலாகத் தற்காலம் மோக்ஷமுண்டாகிறதில்லை; ஆனால் பிரஹ்மலோக மடையப்படுகிறது. அவ்விடத்தில் ஹிரண்யகர்ப்பனுக்குச் சமானமாகப் போகங்களை யனுபவித்துப் பின் ஞானமுண்டாக மோக்ஷத்தை யடைகிறான்.

2. பிரஹ்மலோக இச்சையில்லாதவனுக்கு இந்த லோகத்திலேயே ஞானமுண்டாய் மோக்ஷம் சித்திக்கிறது. இவ்விதத்தால் ஸகுண உபாஸனையின் பயனும் நிர்க்குண உபாஸனையில் அடங்கியிருக்கிறது. ஆகையால் நிர்க்குண உபாஸனையின் கிரமம் சொல்லுகின்றோம்.

எது காரணகாரியவஸ்துவோ அது ஓங்கார ஸ்வரூபமாம். ஆதலால் சகலரூபங்களும் ஓங்காரமாம்.

1. சகலபதார்த்தங்களிலும் நாமம் ரூபம் என இரண்டு பாகங்களுண்டு. அவற்றில் ரூபபாகம் அவ்வவற்றின் நாமபாகத்தினும் வேறன்று; ஆனால் நாமஸ்வரூபமே ரூபபாகமாம். ஏனெனின்பதார்த்தத்தின்ரூப(ஆகார)த்தின் பெயரால் அந்தப் பதார்த்தம் நிரூபிக்கப்பட்டுக் கிரகிக்கப்படுகிறது அல்லது தள்ளப்படுகிறது. பெயர் அறியப்பட்டாலன்றிக் கேவலம் ஆகாரத்தால் வியவகாரம் சித்திக்கிறதில்லை. ஆதலால் பெயரே சாரமாம். ஆகாரமழிந்தாலும் பெயர் எஞ்சி நிற்கிறது. கடம் நாசமடைந்தாலும் மண் மிஞ்சுகிறது. அங்குக் கடம் மண்ணினும் வேறன்று; மண்ஸ்வரூபமாகவே யிருக்கிறது. அதுபோல ஆகாரம் நாசமடைய மண்போல் மிஞ்சிநிற்கும் நாமத்திலும்ஆகாரம் வேறன்று; நாமஸ்வரூபமே ஆகாரமாம்.

அல்லது குடம் சட்டி பானைமுதலியவற்றில் மண் அநுகதமா (உள்ளிடா)யிருக்கிறது. * குடம் சட்டி முதலியன பரஸ்பரம் வியபிசாரியாம். ஆதலால் குடம் சட்டி முதலியன பொய்யாம். அவற்றில் அநுகதமான மண் † சத்தியமாம். அதுபோலக் கடத்தின் ஆகாரம் அநேகமாம். அவற்றிற்கெல்லாம் "கடம்" என்னும் மூன்றெழுத்துகளுடன்கூடிய பெயர் ஒன்றாம். ஒரு கடத்தின் ஆகாரம் மற்றொன்றிற் கில்லாமையால் அந்த ஆகாரங்கள் ஒன்றற்கொன்று வியபிசாரியாம். எல்லாக் கடங்களினுகாரத்திலும்

---

* முதலிய என்னும் சொல்லால் மற்றப் பாத்திரங்களும் கொள்ளப்படும்.

† குடம் சட்டிமுதலியவற்றை அபேக்ஷித்து மண் வெகுகாலமிருப்ப தாகின்றது. ஆதலால் அது ஆபேக்ஷிக சத்திய மெனப்படும்.

பெயர் ஒன்றே அநுகதமாயிருக்கிறது. ஆதலால் பொய்யான ஆகாரம் * சத்தியமான பெயரினும் வேறாகா. இவ்விதத்தால் சகலபதார்த்தங்களி னுகாரமும் தத்தம் பெயரினும் வேறாகா. நாமஸ்வரூபமே ஆகாரமாம்.

2. அவ்வெல்லா நாமங்களும் ஓங்காரத்தைவிட வேறன்று; ஆனால் ஓங்காரஸ்வரூபமே நாமமாம். ஏனெனின் வாசகசப்தத்தினை நாம மென்பர். உலகத்திலும் வேதத்திலும் வழங்கும் சப்தங்களெல்லாம் ஓங்காரத்தி னின் றுண்டாயினவெனச் சுருதியில் பிரசித்தமாய்ச் சொல்லப்பட்டிருக் கிறது. காரியம் யாவும் காரணஸ்வரூபமேயாம். ஆதலால் ஓங்காரத்தின் காரியமான வாசகசப்தரூப நாமம் ஓங்காரஸ்வரூபமாம். இவ்விதத்தால் ரூப பாகமான பதார்த்தத்தினுகாரம் நாமஸ்வரூபமாம். நாமங்களெல்லாம் ஓங் காரஸ்வரூபமாம்; ஆதலால் எல்லாஸ்வரூபமும் ஓங்காரமாம்.

## 284. ஓங்காரப் பிரஹ்மங்களின் அபேதம்.

3. (1) எல்லாஸ்வரூபமும் ஓங்காரமாயிருப்பது போல் எல்லாஸ்வரூப மும் பிரஹ்மமாம். ஆதலால் ஓங்காரம் பிரஹ்மரூபமாம்.

(2) அல்லது ஓங்காரம் பிரஹ்மத்தின் வாசகமாம்; பிரஹ்மம் வாச்சிய மாம். வாசகத்துக்கும் வாச்சியத்துக்கும் அபேதமுண்டாகிறது. இதனு லும் ஓங்காரம் பிரஹ்மரூபமாம்.

(3) விசாரித்துப் பார்க்குமிடத்துப் பிரஹ்மத்தில் எந்த அக்ஷரம் அத்தியஸ்த மாயிருக்கிறதோ, அதற்குப் பிரஹ்மம் அதிஷ்டானமாயிருக் கிறது. அத்தியஸ்தத்தின் ஸ்வரூபம் அதிஷ்டானத்தினும் வேறன்று. இத னுலும் ஓங்காரம் பிரஹ்மரூபமாம்.

ஆதலால் ஓங்காரத்தைப் பிரஹ்மசொரூபமாக விசாரம் செய்யவேண் டியது.

## 285. நான்கு பாதங்களையும் சொல்லுதலோடு ஆத்மாவிற்குப் பிரஹ்மத்தோடும் விசுவனுக்கு விராட்டினேடுமுள்ள அபேத மும், விராட்டு விசுவர்களின் ஏழு அங்கங்களும் பத்தொன் பது முகங்களும் சொல்லுதல்.

4. பிரஹ்மரூப ஓங்காரம் ஆத்மாவுக்கு வேறன்றெனச் சிந்தனை செய்க. ஏனெனின் ஆத்மாவுக்குப் பிரஹ்மத்தோடு முக்கிய அபேதமிருக் கிறது.

---

* குடத்தை யபேக்ஷித்து 'குடம்' என்னும் மூன்று எழுத்துக்களையுடைய பெயர் வெகுகாலபரியந்த மிருப்பதாம். ஆதலால் புண்ணியக் குறைவால் இறப்பவனும் வெகு காலமிருக்கும் தேவன் அமரனெனப்படுவது போல அந்தப் பெயரும் சத்திய (நித்திய) மெனப்படுகிறது.

பிரஹ்மத்திற்கு * நாலு பாதங்களுண்டு. அப்படியே ஆத்மாவுக்கும் நாலு பாதங்களுண்டு.

பாதமென்பது பாகம் அல்லது அம்சமாம்.

(1) † விராட்டு, ஹிரண்யகர்ப்பன், ‡ ஈசுவரன், தத்பதலக்ஷியமான ஈசுவரசாக்ஷி இந்நான்கும் பிரஹ்மத்தின் பாதங்களாம்.

(2) ¶ விசுவன், $ தைஜஸன். § பிராஞ்ஞன், துவம்பதலக்ஷியமான ஜீவசாக்ஷி இந்நான்கும் ஆத்மாவின் பாதங்களாம். ஜீவசாக்ஷிக்கோ துரியமென்றும் பெயர்.

(1) சமஷ்டி ஸ்தூலப் பிரபஞ்சசகித சேதனத்துக்கு விராட்டென்று பெயர்.

(2) வியஷ்டி ஸ்தூல அபிமானிக்கு விசுவனென்று பெயர்.

விராட்டுக்கும் விசுவனுக்கும் உபாதி ஸ்தூலமா யிருத்தலால் விசுவன் விராட்டுருபமே; விராட்டினும் வேறல்லன்.

விராட்டுரூப விசுவனுக்கு ஏழங்கங்களுண்டு:—

(1) சுவர்க்கலோகம் சிரசு.

(2) சூரியன் நேத்திரம்.

(3) வாயு பிராணன்.

(4) ஆகாசம் மார்பு.

---

* இங்குப் பாதமென்னும் சொல் எதுவோ அது தானியத்தின் பாதத்தை(படியின் காலை) ப்போல் விபாகவடிவ அர்த்தத்தை யறிவிப்பதாம். பசுவின் பாதத்தைப்போல அவயவ (அங்க) வடிவ அர்த்தத்தைப் போதிப்ப தன்று.

† சகல பிராணிகளின் சரீரத்தில் "நான்" என்கிற அபிமானத்தை வைப்பதினால் ஈசுவரன் "வைசுவானரன்" என்று சொல்லப்படுகிறான். இந்த வைசுவானரன் அநேகவிதமாய்ப் பிரகாசிக்கிறபடியால் "விராட்டு" என்று சொல்லப்படுகிறான்.

‡ சகல ஜீவர்களுக்கும் கர்மானுசாரமாய்ப் பலத்தைக் கொடுப்பதால் ஈசுவரன் என்று பெயர் வந்தது.

¶ சூக்ஷ்மதேகத்தின் அபிமானத்தை விடாமல் ஸ்தூலதேகத்தில் "நான்" என்னும் அபிமானத்தை யுடைத்தாயிருக்கிற ஜாகிருதாபிமானியான ஜீவனுக்கு விசுவன் என்று பெயர்.

$ தேஜசு சப்தத்தின் வாச்சியமான அந்தக்கரணத்தை விடாமல் பிராணேந்திரியங்களுடன் கூடியிருக்கிற ஸ்வப்னாபிமானியான ஜீவனுக்குத் தைஜஸன் என்று பெயர்.

§ பிராஞ்ஞன்=பிர×அஞ்ஞன். சுழுப்தியில் ஸ்வப்பிரகாசமான ஆத்மானந்தத்துடன் அஞ்ஞான விருத்தி சேர்ந்திருப்பதால் சுழுப்தி யபிமானியாகிய ஜீவனுக்குப் பிராஞ்ஞன் என்று பெயர்.

(5) சமுத்திராதிரூப ஜலம் மூத்திரஸ்தானம்.

(6) பிருதிவி பாதம்.

(7) ஹோமம் பண்ணப்படும் அக்கினி முகம்.

இவ்வேழும் விசுவனுடைய அங்கங்கள்.

மாண்டூக்கிய உபநிஷத்தில் சுவர்க்க லோகாதிகள் விசுவனுடைய அங்கங்களாகாவாயினும் விராட்டின் அங்கங்களாம். அந்த விராட்டுக்கு விசுவனோடு அபேதமிருத்தலால் விசுவனுடைய அங்கங்களென்று சொல்லப்படுகின்றன.

அவ்வாறு விராட்டுவிசுவர்களுக்கு 19 முகங்களிருக்கின்றன:—பிராணன்கள் 5, கர்மேந்திரியங்கள் 5, ஞானேந்திரியங்கள் 5, அந்தக்கரணம் 4 இப்பத்தொன்பதும் முகங்கள்போலப் போகத்துக்குச் சாதனமா யிருத்தலால் முகங்க ளெனப்படுகின்றன.

ஜாக்கிராவஸ்தையில் இந்தப் பத்தொன்பது முகங்களாலும் ஸ்தூல சப்தாதிகள் பாஹ்ய விருத்தியால் அநுபவிக்கப்படுகின்றன. ஆதலால் விராட்டுரூபவிசுவன் ஸ்தூலத்தின் போக்தா வென்றும், பாஹ்யவிருத்தி (பஹிர்ப்பிரஞ்ஞன்) என்றும், ஜாக்கிராவஸ்தையுடையவனென்றுஞ் சொல்லப்படுகிறான்.

## 286. பதினான்கு திரிபுடிகள்.

போகசாதனங்களான பிராணாதிபத்தொன்பது முகங்களில் சுரோத்திராதிபத்து இந்திரியங்களும் அந்தக்கரணம் நான்குங்கூடிய பதினான்கும் தத்தம் விஷயங்களின் சகாயத்தையும் தத்தம் தேவதைகளின் சகாயத்தையும் அபேக்ஷிக்கின்றன. தேவதை, விஷயம் என்பவற்றின் சகாயமின்றிக் கேவலம் இந்த 14 முகங்களால் மாத்திரம் போக முண்டாகிறதில்லை. ஆதலால் பஞ்சப்பிராணன்களும் 14 திரிபுடிகளும் விராட்டுரூபவிசுவனுடைய முகங்களெனப்படுகின்றன. முகம் தேவதை விஷயம் என்னும் இம்மூன்றன் சமுதாயத்திற்குத் திரிபுடியென்று பெயர்.

அத்திரிபுடி இவ்வாறு சொல்லப்படுகின்றது:—

(1) [1] சுரோத்திரேந்திரியம் அத்தியாத்மம்.

[2] அதன் விஷயமாகிய சப்தம் அதிபூதம்.

[3] திசையின் அபிமானிதேவதை அதிதெய்வம்.

(க) இவ்விடத்தில் கிரியாசக்தியுடையனவும் ஞானசக்தி யுடைனவுமாகிய இந்திரியமும் அந்தக்கரணமும் அத்தியாத்ம மெனப்படும்.

(உ) அவற்றின் விஷயம் அதிபூத மெனப்படும்.

(ச) அவற்றின் சகாயமான தேவதை அதிதெய்வ மெனப்படும்.

(2) [1] துவக்கிந்திரியம் அத்தியாத்மம்.
[2] அதன் விஷயமான ஸ்பரிசம் அதிபூதம்.
[3] வாயுதத்துவாபிமானிதேவதை அதிதெய்வம்.

(3) [1] நேத்திரேந்திரியம் அத்தியாத்மம்.
[2] ரூபம் அதிபூதம்.
[3] சூரியன் அதிதெய்வம்.

(4) [1] இரசனேந்திரியம் அத்தியாத்மம்.
[2] இரசம் அதிபூதம்.
[3] வருணன் அதிதெய்வம்.

(5) [1] கிராணேந்திரியம் அத்தியாத்மம்.
[2] கந்தம் அதிபூதம்.
[3] அசுவினி குமாரர் அதிதெய்வம்.

வார்த்திககார சுரேசுவராசாரியர் பிருதிவியின் அபிமானிதேவதையைக் கிராணத்தின் அதிதெய்வமாகச் சொல்லியிருக்கிறார். அதுவும் சரியே. ஏனெனின் பிருதிவியினின்றும் கிராணம் உற்பத்தியாகிறது. ஆகையால் பிருதிவி அதிதெய்வமாகச் சொல்லப்பட்டது. அன்றியும் சூரியனுடைய குதிரையின் மூக்கினின்றும் அசுவினி குமாரர்களின் உற்பத்தி சொல்லப்பட்டிருத்தலால் மூக்கின் தேவதை அசுவினிகுமாரரென்று சிலவிடத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

(6) [1] வாக்கிந்திரியம் அத்தியாத்மம்.
[2] * வக்தவ்வியம் (சொல்லப்படுவது) அதிபூதம்.
[3] அக்கினிதேவதை அதிதெய்வம்.

(7) [1] பாணீந்திரியம் அத்தியாத்மம்.
[2] பதார்த்தங்களைக் கிரகித்தல் அதிபூதம்.
[3] இந்திரன் அதிதெய்வம்.

(8) [1] பாத இந்திரியம் அத்தியாத்மம்.
[2] நடத்தல் அதிபூதம்.
[3] விஷ்ணு அதிதெய்வம்.

---

* வசனித்தற்கிரியையின் விஷயமாகிய பதார்த்தம் வக்தவ்வியமெனப்படும். அது வசனித்தற்கிரியையின்வாயிலாக வாக்கிந்திரியத்திற்கு அதிபூதமாம். இவ்வாறே எல்லாவிந்திரியங்களுக்கும் தத்தம் கிரியையின்வாயிலாக விஷயவடிவங்களாகிய அதிபூதங்கள் எவையோ அவற்றை யறிந்துகொள்க. சிலவிடத்து வசனித்தல்முதலிய கிரியைகளை அதிபூதமென்பர். அது ஸ்தூலதிருஷ்டியுடைய ஜனங்களினது ஞானத்தின் பொருட்டாம். சுருதியர்த்தத்தின் விசாரத்தால் சொன்னதன்று.

(9) [1] குத இந்திரியம் அத்யாத்மம்.
[2] மலவிஸர்ஜனம் அதிபூதம்.
[3] யமன் அதிதெய்வம்.

(10) [1] உபஸ்த இந்திரியம் அத்யாத்மம்.
[2] கிராமிய (மைதுனக்கிரியாரூபபசு) தர்மத்தினது சுகத்தின் உற்பத்தி அதிபூதம்.
[3] பிரஜாபதி அதிதெய்வம்.

(11) [1] மனசு அத்யாத்மம்.
[2] மனனத்தின் விஷயம் அதிபூதம்.
[3] சந்திரன் அதிதெய்வம்.

(12) [1] புத்தி அத்யாத்மம்.
[2] புத்திக்கு விஷயம் அதாவது ஞானத்துக்கு விஷயம் அதிபூதம்.
[3] பிரகஸ்பதி அதிதெய்வம்.

(13) [1] அகங்காரம் அத்யாத்மம்.
[2] அகங்காரத்தின் விஷயம் அதிபூதம்.
[3] ருத்திரன் அதிதெய்வம்.

(14) [1] சித்தம் அத்யாத்மம்.
[2] சிந்தனையின் விஷயம் அதிபூதம்.
[3] க்ஷேத்திரஞ்ஞனுகிய * சாக்ஷி அதிதெய்வம்.

இந்தப் பதினான்கு திரிபுடிகளும் ஐந்து பிராணன்களும் சேர்ந்து பத்தொன்பதும் விராட்ரூப விசுவனுடைய முகங்களாம்.

## 287. விசுவன் விராட்டு அகாரம் என்பவற்றின் அபேதசிந்தனை.

1. விராட்டுக்கும் விசுவனுக்கும் அபேதமிருப்பதுபோல ஓங்காரத்தின் முதல்மாத்திரையாகிய அகாரத்திற்கும் விராட்ரூப விசுவனோடு அபேதமுண்டு. ஏனெனின்,

(1) பிரஹ்மத்தின் நாலுபாதங்களில் முதற்பாதம் விராட்டு.

(2) ஆத்மாவின் நாலுபாதங்களில் முதற்பாதம் விசுவன்.

---

* சாக்ஷிசேதனம் சித்தத்தின் ஆசிரயமாயிருத்தலால் சித்தத்தின்கண் அநுக்கிரகம் செய்கிறது. அதனால் அதன் அதிதெய்வமெனப்படுகிறது. இதனாலேயே சில ஆசாரியர்கள் சிந்தித்தல்வடிவ ஸ்மிருதிஞானத்தைச் சாக்ஷியின் ஆசிரிதமாகச் சொல்லியிருக்கிறார்கள். சிலவிடத்துச் சித்தத்தின் அதிதெய்வம் நாராயணன் (வாசுதேவன்) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(3) அங்ஙனமே ஓங்காரத்தின் நான்குமாத்திரைகளாகிய பாதங்களில் முதற்பாதம் அகாரம்.

ஆதலால் முதலாவதாந்தன்மை மூன்றிலும் சமானதர்மமாயிருத்தலால் விசுவன் விராட்டு அகாரம் என்னும் இம்மூன்றையும் அபேதமாய்ச் சிந்திக்க வேண்டும்.

## 288. விசுவதைஜஸர்களின் வேற்றுமை.

விசுவனுக்குச் சொல்லப்பட்ட ஏழு அங்கங்களும் பத்தொன்பதுமுகங்களும் தைஜஸனுக்கும் இருப்பனவாக அறியத்தக்கனவாம். ஆனால் இவ்வளவு பேதமுண்டு:—

(1) விசுவனுடைய அங்கங்களும் முகங்களும் ஈசுவரனால் செய்யப்பட்டன.

(2) தைஜஸனுடைய இந்திரிய தேவதா விஷயரூப திரிபுடிகளும் சிரசு முதலிய அங்கங்களும் மனோமயமா யிருக்கின்றன.

தைஜஸனுடைய போகம் சூக்ஷ்மமாம்.

(1) போக மென்பது சுகதுக்கங்களின் ஞானமாம். அதில் ஸ்தூலசூக்ஷ்மத்தன்மைகள் சொல்லுதல் பொருந்தாது. அங்ஙனமாயினும், பாஹ்யசப்தாதி விஷயங்களின் சம்பந்தத்தால் சாக்ஷாத்தாக உண்டாகிற சுகதுக்கங்களின் சாக்ஷாத்காரம் ஸ்தூல மெனப்படும்.

(2) மானஸமான சப்தாதிகளின் சம்பந்தத்தாலுண்டாகும் போகம்(சுகதுக்கசாக்ஷாத்காரம்) சூக்ஷ்ம மெனப்படும்.

இக்காரணத்தால்,

(1) விசுவன் ஸ்தூலத்தின் போக்தாவென்று சுருதியிற் சொல்லப்பட்டிருக்கிறது.

(2) தைஜஸன் சூக்ஷ்மத்தின் போக்தா வெனப்படுகிறான்.

ஏனெனின்,

(1) தைஜஸனுடைய போகயோக்கியமான சப்தாதிகள் மானஸமாயிருத்தலால் சூக்ஷ்மமாம்.

(2) அவற்றை அபேக்ஷித்து விசுவனுடைய போக்கியம் பாஹ்யசப்தாதிகளாம். அவை ஸ்தூலமாம்.

விசுவன் பகிர்ப்பிரஞ்ஞன். தைஜஸன் அந்தர்ப்பிரஞ்ஞன். ஏனெனின், விசுவனுடைய அந்தக்கரணத்தின் விருத்திரூபப் பிரஞ்ஞை வெளியேபோகிறது; தைஜஸனுடைய பிரஞ்ஞை போகிறதில்லை.

## 289. தைஜஸ ஹிரண்யகர்ப்ப உகாரங்களின் அபேதசிந்தனை.

2. விசுவனுக்கும் விராட்டுக்கும் அபேதமிருப்பதுபோலத் தைஜஸனையும் ஹிரண்யகர்ப்பரூபமா யறியவேண்டும். ஏனெனின் தைஜஸனுடைய உபாதி

சூக்ஷ்மமாம். ஹிரண்யகர்ப்பனுடைய உபாதியும் சூக்ஷ்மமே. ஆதலால் இவ்விரண்டையும் ஒன்றென அறிக.

தைஜஸஹிரண்யகர்ப்பர்களை ஒன்றென அறிந்து ஓங்காரத்தின் இரண்டாவது மாத்திரையான உகாரத்தோடு அவற்றின் அபேதத்தைச் சிந்தனை செய்க. ஏனெனின்,

(1) ஆத்மாவின் நாலுபாதங்களில் இரண்டாவது பாதம் தைஜஸன்.

(2) பிரஹ்மத்தின் இரண்டாவதுபாதம் ஹிரண்யகர்ப்பன்.

(3) ஓங்காரத்தின் மாத்திரைகளில் இரண்டாவது மாத்திரை உகாரம்.

இரண்டாவதாந்தன்மை மூன்றிலும் சமானதர்மமாம். ஆகையால் மூன்றையும் ஒன்றாகச் சிந்தனைசெய்க.

## 290. பிராஜ்ஞன் ஈசுவரன் மகாரம் என்பவற்றின் அபேதம்; பிராஜ்ஞனது விசேஷணம்.

3. பிராஜ்ஞனை ஈசுவரரூபமாக அறியவேண்டும். ஏனெனின்,

(1) பிராஜ்ஞனுக்குக் காரணசரீரம் உபாதி.

(2) ஈசுவரனுக்கும் காரணம் உபாதி.

ஈசுவரனும் பிராஜ்ஞனும் பாதங்களில் மூன்றாவதாவர்.

(3) ஓங்காரத்தின் மூன்றாவது மாத்திரை மகாரம்.

இம்மூன்றிலும் மூன்றாவதாந்தன்மை சமானதர்மமாயிருத்தலால் இம்மூன்றையும் ஒன்றாக அறிக.

(1) இந்தப் பிராஜ்ஞன் பிரஜ்ஞானகனன். ஏனெனின் ஜாக்கிரஸ்வப்னங்களின் எவ்வளவு ஞானமுண்டோ அது சுழுத்தியில் கன(* ஒரே அவித்தியாரூப)மாய்விடுகிறது. ஆதலால் பிரஜ்ஞானகன மெனப்படுகிறது.

(2) இந்தப் பிராஜ்ஞன் ஆனந்தபுக் கென்றும் சுருதியிற் சொல்லப்பட்டிருக்கிறான். ஏனெனின் அவித்தையினால் மறைபட்ட ஆனந்தத்தை இந்தப் பிராஜ்ஞன் புசிக்கிறான். ஆகையால் ஆனந்தபுக் கென்று சொல்லப்படுகிறான்.

தைஜஸவிசுவர்களின் போகம் திரிபுடியா லுண்டாகிறதுபோல் பிராஜ்ஞனுடைய போகத்துக்கும் திரிபுடி சொல்லப்படுகிறது.

(1) சேதனத்தின் பிரதிபிம்பசகிதமான அவித்தையின் விருத்தி அந்தியாத்மம்.

---

* மாவானது ஜலத்தினால் பிண்டமாக்கியபோது ஒருவடிவமாகின்றது. மழையின் அநேக துளிகள் தடாகத்தில் ஒருவடிவமாகின்றன. அவ்வாறு ஜாக்கிர சொப்பனங்களின் ஞானம் சுழுத்தியில் ஒரு அவித்தைவடிவ மாகின்றது. அந்த அவித்தையிலிருக்கும் அதிஷ்டான கூடஸ்தனோடுகூடிய சேதனத்தின் பிரதிபிம்பவடிவ பிராஜ்ஞ ஜீவன் பிரஜ்ஞானகன னெனப்படுவான்.

(2) அஞ்ஞானத்தால் மறைக்கப்பட்ட ஸ்வரூபானந்தம் அதிபூதம்.

(3) ஈசுவரன் அதிதெய்வம்.

இவ்விதத்தால்,

(1) விசுவன் பகிர்ப்பிரஞ்ஞனாயிருக்கிறான்.

(2) தைஜஸன் அந்தர்ப்பிரஞ்ஞனாயிருக்கிறான்.

(3) பிராஞ்ஞன் பிரஞ்ஞானகனனாயிருக்கிறான்.

## 291. வாஸ்தவ விசுவன்முதலிய மூன்றன் ஏகத்துவம்; துரியத்திற்கு ஈசுவரசாக்ஷியோடு அபேதம்.

4. இவ்விதமாக விசுவாதிமூன்றற்குமுள்ள பேதம் உபாதியினாலாயிருக்கிறது.

(1) விசுவனுக்கு ஸ்தூலம் சூக்ஷ்மம் அஞ்ஞானம் என்னும் மூன்றும் உபாதிகள்.

(2) தைஜஸனுக்குச் சூக்ஷ்மம் அஞ்ஞானமென்னுமிரண்டும் உபாதிகள்.

(3) பிராஞ்ஞனுக்கு அஞ்ஞானம் ஒன்றே உபாதியாம்.

இவ்வாறு உபாதிகளின் ஏற்றத்தாழ்வால் மூன்றற்கும் பேதமுண்டு; உண்மையில் ஸ்வரூபமாகப் பேதமில்லை.

விசுவன் தைஜஸன் பிராஞ்ஞன் என்னும் மூன்றிலும் அநுகதமான சேதனம் பரமார்த்தமாக மூன்று உபாதிகளின் சம்பந்தமு மில்லாதிருக்கிறது. மூன்று உபாதிகளின் அதிஷ்டானம் துரியம்.

(1) அது பகிர்ப்பிரஞ்ஞனன்று;

(2) அந்தர்ப்பிரஞ்ஞனன்று;

(3) பிரஞ்ஞானகனமுமன்று;

(4) கர்மேந்திரியத்துக்கும் ஞானேந்திரியத்துக்கும் விஷயமன்று;

(5) புத்திக்கு விஷயமன்று;

(6) எந்தச் சப்தத்துக்கும் விஷயமன்று.

இத்தன்மையான துரியத்தைப் பரமாத்மாவின் நான்காவது பாதமான ஈசுவரசாக்ஷியாகிய சுத்தப் பிரஹ்மரூப மென்று அறிக.

## 292. இரண்டு சொரூபமுடைய ஓங்கார ஆத்மாக்களின் அபேதத்தை மாத்திரைவடிவத்தாலும் பாவவடிவத்தாலும் சிந்தித்தல்.

1. இவ்விதத்தால் ஆத்மாவுக்கு இரண்டுவித ஸ்வரூபங்கள் சொல்லப்பட்டன. ஒன்று பரமார்த்தரூபம்; மற்றொன்று அபரமார்த்தரூபம்.

(1) மூன்று பாதங்கள் அபரமார்த்தரூபம்.

(2) ஒருபாதமாகிய துரியம் பரமார்த்தரூபம்.

2. ஆத்மாவுக்கு இரண்டு ஸ்வரூபங்கள் இருப்பதுபோல் ஓங்காரத்துக்கும் இரண்டு ஸ்வரூபங்க ளுண்டு.

(1) அகார உகார மகாரங்களாகிய மூன்றுமாத்திரைவடிவ அக்ஷரங்கள் அபரமார்த்தரூபம்.

(2) மூன்று மாத்திரைகளிலும் வியாபித்திருக்கிற அஸ்தி பாதிப் பிரியரூப அதிஷ்டானசேதனம் பரமார்த்தரூபம்.

ஓங்காரத்தின் பரமார்த்தரூபம் சுருதியில் அமாத்திரை யென்னும் சப்தத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனின் அந்தப் பரமார்த்தஸ்வரூபத்தில் மாத்திரைகளின் வியாபக மில்லை. ஆதலால் அமாத்திரை யெனப்படுகிறது.

இவ்விதத்தால் இரண்டுஸ்வரூபங்களுடன்கூடிய ஓங்காரத்திற்கு இரண்டு ஸ்வரூபங்களுடன் கூடிய ஆத்மாவோடு அபேதத்தை யறிக.

1. வியஷ்டிசமஷ்டி ஸ்தூலப்பிரபஞ்சத்துடன்கூடிய விசுவவிராட்டுகளுக்கும் அகாரத்தோடு அபேதத்தை யறிக.

(1) ஆத்மாவின் பாதங்களில் விசுவன் முதலாவது.

(2) ஓங்காரத்தின் மாத்திரைகளில் அகாரம் முதலாவது.

ஆதலால் இரண்டையும் ஒன்றாக அறிக.

2. சூக்ஷ்மப்பிரபஞ்சசகிதமான ஹிரண்யகர்ப்பரூப தைஜஸனை உகாரரூபமாக அறி.

(1) தைஜஸனும் ஆத்மாவின் பாதங்களில் இரண்டாவது.

(2) ஓங்காரத்தின் மாத்திரைகளில் உகாரமும் இரண்டாவது.

ஆதலால் இரண்டையும் ஒன்றாக அறிக.

3. காரண உபாதியோடுகூடிய ஈசுவரரூபப் பிராஞ்ஞனை மகாரரூபமாக அறி.

(1) ஈசுவரரூபப் பிராஞ்ஞன் மூன்றாவதாம்.

(2) அதுபோல மகாரமும் மூன்றாவதாம்.

ஆதலால் ஈசுவரரூபப் பிராஞ்ஞனையும் மகாரத்தையும் ஒன்றாக அறிக.

4. மூன்றிலும் அநுகதமான பரமார்த்தரூப துரியத்தை ஓங்காரத்தின் மூன்றுமாத்திரைகளில் அநுகதமான ஓங்காரத்தின் பரமார்த்தரூபமாகிய அமாத்திரைக்கு வேறாகாததாக அறிக.

(1) விசுவாதிகளில் துரியம் அநுகதமாயிருக்கிறது.

(2) அதுபோல அகாராதி மூன்று மாத்திரைகளிலும் அமாத்திரை அநுகதமாயிருக்கிறது.

ஆதலால் ஓங்காரத்தின் அமாத்திரை வடிவத்தையும் துரியத்தையும் ஒன்றாக அறிக.

இவ்விதத்தால் ஆத்மாவின் பாதத்தையும் ஓங்காரத்தின் மாத்திரையையும் ஒன்றாக அறிந்து லயசிந்தனை செய்க.

## 293. லயசிந்தனத்தின் அநுவாதம் (ஒவ்வொருமாத்திரைவடிவ விசுவன்முதலியன அன்னியமாத்திரைவடிவாதல்).

அந்த லயசிந்தனத்தைச் சொல்லுவாம்:—

1. விசுவரூப அகாரம் தைஜஸரூப உகாரத்துக்கு வேறாகாமல் உகாரரூபமாகவே யிருக்கிறது. இப்படிச் சிந்தனைசெய்தல் இங்கு லய மெனப்படுகின்றது. இவ்வாறே மற்ற மாத்திரைகளிலும் அறிந்துகொள்க.

2. எந்த உகாரத்தில் அகாரம் லயமாகிறதோ அந்தத் தைஜஸரூப உகாரத்தைப் பிராஜ்ஞரூப மகாரத்தில் லயஞ்செய்யவேண்டும்.

3. பிராஜ்ஞரூப மகாரத்தைத் துரியரூபமான ஓங்காரத்தின் பரமார்த்தரூபமாகிய அமாத்திரையில் லயஞ் செய்யவேண்டும். ஏனெனின் ஸ்தூலத்தின் உற்பத்தியும் லயமும் சூக்ஷ்மத்தில் உண்டாகின்றன. ஆதலால்,

1. விசுவரூப அகாரம் தைஜஸரூப உகாரத்தில் லயமாகக்கூடும்.

2. சூக்ஷ்மத்தின் உற்பத்தியும் லயமும் காரணத்திலுண்டாகின்றன. ஆதலால் தைஜஸரூப உகாரம் அதன் காரணமாகிற பிராஜ்ஞரூப மகாரத்தில் லயமாகக்கூடும்.

இந்த இடத்தில் விசுவாதிகளைக் கொள்வதினால் சமஷ்டியான விராட்டாதிகளும் தத்தம் திரிபுடிகளுமாகிய எல்லாவற்றையும் கொள்ளவேண்டுமென்பதை யறிக.

3. எந்தப் பிராஜ்ஞரூப மகாரத்தில் உகாரம் லயஞ்செய்யப்பட்டதோ, அந்த மகாரத்தைத் துரியரூப ஓங்காரத்தின் பரமார்த்தரூப அமாத்திரையில் லயப்படுத்துக. ஏனெனின் ஓங்காரத்தின் பரமார்த்தஸ்வரூபத்துக்கும் துரியத்தோடு அபேதமிருக்கிறது. அந்தத் துரியம் பிரஹ்மரூபமாம். சுத்தப்பிரஹ்மத்தில் ஈசுவரனும் பிராஜ்ஞனும் கற்பிக்கப்பட்டிருக்கின்றார்கள். எது எதில் கற்பிக்கப்படுகிறதோ அது அதன் ஸ்வரூபமாகிறது. ஆதலால் ஈசுவரசகிதப் பிராஜ்ஞரூப மகாரம் லயமாதல்கூடும்.

இவ்விதத்தால் எந்த ஓங்காரத்தின் பரமார்த்தஸ்வரூபமாகிற அமாத்திரையில் எல்லாம் லயப்படுத்தப்படுகின்றனவோ "அது நான்" என்று ஏகாக்கிர சித்தத்துடன் சிந்தனை செய்க.

ஸ்தாவர ஜங்கமரூபமாயும் அசங்கமாயும் அத்துவயமாயும் அசலனாகி யாயும் நித்தியமுக்தமாயும் நிர்ப்பயமாயுமிருக்கிற பிரஹ்மரூப ஓங்காரத்தின் பரமார்த்தஸ்வரூபம்எதுவோ "அதுநான்" என்று சிந்தனை செய்வதனுல் ஞான முண்டாகிறது. ஆதலால் ஞானவாயிலாக முக்திரூப பலத்தைக் கொடுக்கும். இது ஓங்காரத்தின் நிர்க்குண உபாஸனை இது எலலாவற்றிலும உத்தமமாம.

## 294. ஓங்காரசிந்தனத்தில் பரமஹம்ஸனுக்கு அதிகார முளதெனல்.

முன்சொன்னபிரகாரம் எவன் ஓங்காரஸ்வரூபத்தை யறிகிருனே அவன் முனியாவன்; அறியாதவன் முனியாகான். ஏனெனின் முனியென் ருல் மனனஞ்செய்பவன். இந்த ஓங்காரத்தின் சிந்தனம் மனனரூபமாம். எவனுக்கு ஓங்காரத்தின் சிந்தனைவடிவ மனனமில்லையோ அவன் முனியல் லன்.

இவ்வாறு மாண்டூக்கிய உபநிஷத்தின்படி சுருக்கமாக ஓங்காரசிந்தனம் சொல்லப்பட்டது. நிருசிஹ்மதாபினிமுதலிய உபநிஷத்துக்களிலும் இதன் கிரமமிருக்கிறது. இந்த ஓங்காரசிந்தனம் பரமஹம்ஸர்களின் கோப்பிய (இரகசிய) தனம். பகிர்முக புருஷனுக்கு இதில் அதிகாரமில்லை; அத்தியந்தம் அந்தர்முகனுக்கே அதிகார முண்டு. கிரகஸ்தனுக்கு இதில் அதிகார மில்லை. ஸ்திரீதன புத்திரசம்பந்தமில்லாத பரமஹம்ஸனே அதிகாரியாவன்.

## 295. ஓங்காரத்தியானமுடையவர்களுக்குப் பயன் (295-296)

1. முன்சொன்னபடி ஓங்காரத்தைப் பிரஹ்மரூபமாகத் தியானஞ் சய்வதினுல் ஞானவாயிலாக மோக்ஷமுண்டாகிறது.

2. ஆனுல் எவனுக்கு இந்தலோகபோகத்திலாவது பிரஹ்மலோகபோகத் திலாவது இச்சையிருக்கிறதோ, எவன் தீவிரமான வைராக்கியமில்லாமல் ஹடத்தால் இச்சையைத்தகைந்து தனபுத்திராதிகளைத் தியாகஞ்செய்து பரமஹம்ஸகுரு உபதேசத்தால் ஓங்காரரூபப் பிரஹ்மத்தைத் தியானஞ்செய்கி ருனே, அவனுக்குப் போக இச்சை ஞானத்திற் பிரதிபந்தகமா யிருக்கிறது. அதனுல் அவனுக்கு ஞானமுண்டாகிறதில்லை. ஆனுல் தியானஞ் செய்து கொண்டே இந்தச் சரீரம் விட்டபின் வேறு சரீரம் கிடைக்கிறது.

(1) இந்தலோக போகங்களின் இச்சையைத் தகைந்து தியானஞ்செய் ததினுல் இந்தலோகத்தில் வெகுசெல்வத்துடன்கூடிய பரிசுத்தமான சற்குலத் திற் பிறக்கிருன். அங்கு முன்ஜன்மத்தின் இச்சைகளெல்லாம் நிறைவேறி முன்ஜன்மத்தின் தியானசம்ஸ்காரத்தால் மறுபடியும் விசாரத்திலாவது தியானத்திலாவது பிரவிருத்தியுண்டாகிறது. அதனுல் ஞானமுண்டாய் மோக்ஷம் கிடைக்கிறது.

**296.** (2) பிரஹ்மலோகத்தின் போகங்களில் இச்சையைத் தகைந்து ஓங்காரரூபப் பிரஹ்மத்தின் தியானத்திற் பிரவிருத்திக்கிறவன் சரீரத்தைவிட்டுப் பிரஹ்மலோகத்துக்குப் போகிறான். அவ்விடத்தில் மனிதர்களுக்கும் பிதிர்க்களுக்கும் தேவதைகளுக்கும் கிடைக்காத சுதந்திரத்தன்மையின் ஆனந்தத்தை யநுபவிக்கிறான். ஹிரண்யகர்ப்பனுடைய சத்தியசங்கற்பாதி சகல ஐசுவரியங்களும் கிடைக்கின்றன.

## 297. பிரஹ்மலோகமார்க்கத்தின் கிரமம்.

பிரஹ்மலோகத்திற்குப்போகும் *மார்க்கத்தின் கிரமம் இதுவாம்:— பிரஹ்மோபாஸனையில் தற்பரனாயுள்ள புருஷன் இறக்குங்காலத்தில் அவன் இந்திரிய அந்தக்கரணங்கள் முழுவதும் †மூர்ச்சையடைந்து எதனையு மறியச் சாமர்த்தியமில்லாதனவாயினும், யமதூதர்கள் அவனுடைய லிங்கசரீரத்தைக் கொண்டுபோக அவனருகில் வருகிறதில்லை. ஆனால்,

1. அக்கினியபிமானிதேவதை அவனை மரணசமயத்தில் சரீரத்தினின்றும் வெளிப்படுத்தித் தன் லோகத்துக்குக் கொண்டுபோகிறது.

2. அக்கினிலோகத்திலிருந்து தின அபிமானிதேவதை தன் லோகத்துக்குக் கொண்டுபோகிறது.

3. அங்கிருந்து சுக்கிலபக்ஷ அபிமானி தேவதை தன் லோகத்துக்குக் கொண்டுபோகிறது.

4. அங்கிருந்து உத்தராயணகாலஅபிமானி தேவதை தன் லோகத்துக்குக் கொண்டுபோகிறது.

5. அங்கிருந்து மேல் ஸம்வத்ஸர அபிமானிதேவதை தன் லோகத்துக்குக் கொண்டுபோகிறது.

6. அங்கிருந்து தேவலோக அபிமானி தேவதை தன் லோகத்துக்குக் கொண்டுபோகிறது.

7. அங்கிருந்து வாயு அபிமானி தேவதை தன் லோகத்துக்குக் கொண்டுபோகிறது.

---

* இந்த மார்க்கத்தின் கிரமம் யஜுர்வேதத்தின் ஈசாவாசிய உபநிஷத்தின் முடிவிலும், சாந்தோக்கியத்திலும் எழுதப்பட்டிருக்கின்றது.

† மரணசமயத்தில் ஸ்தூலசரீரத்தினின்றும் லிங்கசரீரம் பிரிகிறதினால் சேதனமில்லாமையால் உபாஸகனுடைய இந்திரிய அந்தக்கரணங்கள் அந்நியப்பிராணிகளைப் போல நசிக்கப்பட்டனவாகின்றன. ஆகையால் அவை எதனையும் அறிவதில் சாமர்த்தியமுடையனவன்று. கிரியாசக்தியுடைய பிராணனுக்கு ஸ்வரூபமாக அசேதனமா (அறிவில்லாதது)யிருத்தலின் இச்சையின்மையால் அதனால் அவற்றிற்குப் போகுதல் சம்பவிக்கிறதில்லை.

8. அங்கிருந்து சூரியதேவதை தன்லோகத்துக்குக் கொண்டுபோகிறது.

9. அங்கிருந்து சந்திரதேவதை தன்லோகத்துக்குக் கொண்டுபோகிறது.

10. அங்கிருந்து மின்னல்அபிமானிதேவதை தன்லோகத்துக்குக் கொண்டுபோகிறது.

11. அங்கு மின்னல் அபிமானிதேவதையின் லோகத்தில் ஹிரண்யகர்ப்பனுடைய உத்திரவின்படி ஹிரண்யகர்ப்பலோகத்தில் வசிக்கிறவனும் ஹிரண்யகர்ப்பனுக்குச் சமானமானரூபத்தையுடையவனுமான ஒரு திவ்வியபுருஷன் இந்த உபாஸகனைக் கொண்டுபோக இவன்முன் வந்துசேருகின்றான். அவன் இந்த மின்னல் அபிமானிதேவதையின் லோகத்திலிருந்து வருணலோகத்திற்கு அந்த உபாஸகனைக் கொண்டுபோகிறான். மின்னல் அபிமானிதேவதை கூடவே வருகிறான்.

12. பின் வருணலோகத்திலிருந்து இந்திரலோகத்திற்குக் கொண்டுபோகிறான். வருணதேவதையும் இந்திரலோகபரியந்தம் ஹிரண்யகர்ப்பலோகவாசியான புருஷனுடனும் உபாசகனோடு மிருக்கிறான்.

13. அதற்குமேல் பிரஜாபதிலோகம்வரையில் இந்திரன் இருவரோடு மிருக்கிறான்.

14. அதற்குமேல் பிரஜாபதி அவ்விருவர்களோடும் பிரஹ்மலோகத்திற்குக் கொண்டுபோகச் சமர்த்தனுகான். ஆதலால் பிரஹ்மலோகத்தில் அந்தத் திவ்வியபுருஷனோடு அந்த உபாசகன் சேருகிறான்.

பிரஹ்மலோகத்தின் அதிபதி ஹிரணியகர்ப்பன்.

சூக்ஷ்மசமஷ்டியின் அபிமானிசேதனன் ஹிரண்யகர்ப்ப னெனப்படுகிறான். அவனையே காரியப்பிரஹ்ம மென்பர்.

காரியப்பிரஹ்மத்தின் இருப்பிடத்தினைப் பிரஹ்மலோக மென்பர்.

## 298. சாயுஜ்யமோக்ஷத்தின் வர்ணனம்.

முற்கூறியபடி ஓங்கார உபாசனை சுத்தப்பிரஹ்மரூபமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சுத்தப்பிரஹ்மத்தின் உபாசகனுக்குச் சுத்தப்பிரஹ்மத்தின் பிராப்திவேண்டும். அங்ஙனமாயினும் சுத்தப்பிரஹ்மத்தின் பிராப்தி ஞானத்தினலேயே யுண்டாகிறது. இச்சைவடிவப் பிரதிபந்தத்தால் எவனுக்கு ஞானமுண்டாகவில்லையோ அவனுக்குக் காரியப்பிரஹ்மத்தின் பிராப்தியாகிய சாயுஜ்யரூப மோக்ஷ முண்டாகிறது.

1. பிரஹ்மலோகத்தை யடைந்த உபாஸகனுக்கு ஹிரண்யகர்ப்பனுக்குச் சமானமான விபூதி(ஐசுவரியம்) கிடைக்கின்றது.

2. அவன் சத்தியசங்கற்பனாகிறான்.

3. இச்சித்தபடி அவனுக்குச் சரீரம் உண்டாகிறது.

4. இச்சிக்கும் போகங்களெல்லாம் அவனுக்குச் சங்கற்பத்தினாலேயே கிடைக்கின்றன.

5. ஒருசமயத்தில் ஆயிரம் சரீரங்களால் அவ்வவற்றின் போகங்களைத் தனித்தனியே புசிக்கவேண்டுமென்று இச்சையுண்டாயின், அதேசமயம் ஆயிரம் சரீரங்களும் அவற்றின் வெவ்வேறு சாமக்கிரிகளு முண்டாகின்றன.

அதிகமாய்ச் சொல்வ தென்னை! எதனைச் சங்கற்பிக்கிறானோ அதுவே சித்திக்கிறது. ஆனால் ஜகத்தின் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைவிட்டு மற்றெல்லா விபூதிகளும் ஈசுவரனுக்குச் சமானமாகின்றன. இதற்குத்தான் *சாயுஜ்ய மோக்ஷ மென்று பெயர். இப்படி ஹிரண்யகர்ப்பனுக்குச் சமானமாய் வெகு காலம் சங்கற்பத்தாற் சித்தித்த திவ்விய பதார்த்தங்களைப் புசித்துப் பிரளயகாலத்தில் ஹிரண்யகர்ப்பலோகத்துக்கு நாசம்வரும்போது ஞான முண்டாக உபாசகனானவன் விதேகமோக்ஷத்தை யடைகிறான்.

## 299. ஓங்காரத்தின் அகங்கிரகத்தியானத்தால் பிரஹ்மலோகம் கிடைக்கு மென்னும் நியமம்.

ஓங்காரரூபப் பிரஹ்மத்தை யுபாசிக்கிறவனுக்குப் பிரஹ்மலோகப்பிராப்திவாயிலாக மோக்ஷங்கிடைப்பதுபோல மற்ற உபநிஷத்துகளிற் சொல்லிய பிரஹ்ம உபாஸனைகளாலும் இதேபலன் உண்டாகிறது. ஆனால் அகங்கிரக உபாஸனையின்றி வேறு உபாஸனையால் பிரஹ்மலோக மடையப்படமாட்டா தென்று சூத்திரகாரரும் பாஷியகாரரும் பிரஹ்ம சூத்திரத்தின் நான்காவது அத்தியாயத்திற் சொல்லியிருக்கிறார்கள்.

---

*1. இராஜாவின் பிரஜைகளைப்போல ஈசுவரனது லோகத்தில் வசித்தற்குச் சாலோக்கியமுக்தி என்று பெயர்.

2. அதனினும் சிரேஷ்டமாய் இராஜனது சேவகனைப்போல ஈசுவரன் சமீபத்தில் வாசஞ்செய்தற்குச் சாமீப்பியமுக்தி யென்று பெயர்.

3. அதனினும் மேலானதாய் இராஜாவின் தம்பியைப்போல ஈசுவரனது சமானரூபத்தின் அடைவிற்குச் சாரூப்பியமுக்தி யென்று பெயர்.

4. அதனினும் மேலானதாய் இராஜாவின் மூத்தகுமாரனைப்போல ஈசுவரனது சமான சத்திய சங்கற்பாதி ஐசுவரியத்தை (விபூதியை) அடைதற்குச் சார்ஷ்டிமுக்தி என்று பெயர்.

இவ்வாறு சாஸ்திரங்களில் பயன்வடிவமான நான்குவித முக்தி சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் கடைசியான சார்ஷ்டிமுக்தி மேலானதாம். அதனையே சாயுஜ்யமோக்ஷ மென்றும் கூறுவர்.

1. நர்மதையின் பாணங்களைச் சிவரூபமாகவும் சாளிக்கிராமங்களை விஷ்ணுரூபமாகவும் தியானஞ் செய்தல் சொல்லப்பட்டிருக்கிறது. அது பிரதீகத் தியானமாம்; அகங்கிரகத்தியான மன்று.

2. அப்படியே மனதைப் பிரஹ்மரூபமாகவும் சூரியனைப் பிரஹ்மரூப மாகவும் தியானஞ்செய்தல் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் பிரதீகத் தியானமாம்; அகங்கிரகத்தியான மன்று.

அவற்றால் பிரஹ்மலோகம் அடையப்படமாட்டாது. சகுண அல்லது நிர்க்குணப் பிரஹ்மத்தைத் தன்னின் அபேதமாகச் சிந்தனைசெய்தல் அகங்கிர கத்தியான மெனப்படும். அதனாற்றான் பிரஹ்மலோகங் கிடைக்கும்.

## 300. உத்தராயணமார்க்கமாகப் பிரஹ்மலோகத்திற் சென்றவர் கட்கு மறுபடியும் சம்சாரம் வராமையும், ஞானவாயிலாக மோக்ஷமடைதலும்.

முற்கூறிய மார்க்கம் உத்தராயணமார்க்கம் அல்லது தேவமார்க்க மெனப் படும்.

அந்தத் தேவமார்க்கத்தால் பிரஹ்மலோகத்துக்கு எந்த உபாஸகன் போ கிறானோ அவனுக்கு மறுபடியும் சமுசார முண்டாகிற தில்லை. ஆனால் அவ னுக்கு ஞானமுண்டாகி விதேகமுக்தியை யடைகிறான்.

அவ்விடத்தில் ஞானசாதனங்களான குரு உபதேசாதிகள் வேண்டிய தில்லை. ஆனால் பிரஹ்மலோகத்தில் குரு உபதேசாதி சாதனங்களின்றியே ஞான முண்டாகிறது. ஏனெனின் பிரஹ்மலோகத்தில் தமோகுண ரஜோகு ணங்கள் லேசமு மில்லை. அந்தலோகம் கேவலம் சத்துவகுணப்பிரதானமா னது.

1. தமோகுணமில்லாமையினால் ஜடத்துவம் ஆலசியமுதலியவை இல்லை.

2. ரஜோகுணமில்லாமையினால் காமக்குரோதாதிரூப ரஜோகுணத் தின் காரியமான விக்ஷேப மில்லை.

3. கேவலம் சத்துவகுணமிருத்தலால் அதன் காரியமான ஞானரூபப் பிரகாசம் அந்த லோகத்தில் முக்கியமாம்.

## 301. இரணிய கர்ப்பவாசிக்கு அசங்கநிர்விகாரப்பிரஹ்மவடிவ ஆத்மாவின் விளக்கமுண்டாகின்றதென்பதில் காரணம்.

ஓங்காரத்தைப் பிரஹ்மரூபமாக முதலில் உபாசித்தகாலத்து ஓங்காரத் தின் மாத்திரைகளின் அர்த்தம் இவ்வாறு சிந்தனைசெய்யப்பட்டது:—

1. "ஸ்தூல உபாதிசகித விராட்டு விசுவசேதனம் அகாரத்தின் வாச்சியமாம்.

2. சூக்ஷ்ம உபாதியோடுகூடிய சேதனமாகிய ஹிரண்யகர்ப்பதைஜஸன் உகாரத்தின் வாச்சியமாம்.

3. காரண உபாதியோடுகூடிய சேதனமாகிய ஈசுவரப்பிராஞ்ஞன் மகாரத்தின் வாச்சியமாம்."

இத்தன்மைய முன்சிந்திக்கப்பட்டுள்ள அர்த்தத்தின் ஸ்மிருதி பிரஹ்ம லோகத்தில் உண்டாகிறது. சத்துவகுணப்பிரபாவத்தால் இவ்வாறு விவேசன (விசார) முண்டாகிறது:—

1. ஸ்தூலோபாதியால் சேதனத்தில் விராட்டுத்தன்மை விசுவத்தன்மைகள் பிரதீதியாகின்றன.

(1) ஸ்தூல சமஷ்டியின் திருஷ்டியால் விராட்டுத்தன்மை யுளது.

(2) ஸ்தூலவியஷ்டியின் திருஷ்டியால் விசுவத்தன்மை யுளது.

சமஷ்டி வியஷ்டி ஸ்தூலத்தின் திருஷ்டியின்றி விராட்டுத்தன்மை விசுவத்தன்மைகள் தோற்றா. ஆனால் சேதனமாத்திரமே விளங்கும்.

2. அப்படியே சூக்ஷ்மஉபாதிசகித ஹிரண்யகர்ப்ப தைஜஸசேதனம் உகாரத்தின் வாச்சியமாம்.

(1) அங்குச் சமஷ்டிசூக்ஷ்ம உபாதியின் திருஷ்டியால் சேதனத்தில் ஹிரண்யகர்ப்பத்தன்மை தோற்றுகிறது.

(2) வியஷ்டிசூக்ஷ்மஉபாதியின் திருஷ்டியால் தைஜஸத்தன்மை விளங்குகிறது.

சூக்ஷ்மஉபாதியின் திருஷ்டியின்றி ஹிரண்யகர்ப்பத்தன்மை தைஜஸத்தன்மைகள் தோற்றுகிறதில்லை.

3. அப்படியே மகாரத்தின் வாச்சியம் ஈசுவரப்பிராஞ்ஞனும். அங்கு,

(1) சமஷ்டியஞ்ஞான உபாதியின் திருஷ்டியால் சேதனத்தில் ஈசுவரத்தன்மை தோற்றுகிறது.

(2) வியஷ்டியஞ்ஞான உபாதியின் திருஷ்டியால் சேதனத்தில் பிராஞ்ஞத்தன்மை தோற்றுகிறது.

அஞ்ஞான உபாதியின் திருஷ்டியின்றி ஈசுவரத்தன்மை பிராஞ்ஞத்தன்மைகள் தோற்றுகிறதில்லை.

எந்தவஸ்து எதனிடத்தில் மற்றொன்றன் பார்வையால் பிரதீதியாகிற தோ அது அதனிடத்தில் பரமார்த்தமாக இருக்கிற தில்லை. எதன் எந்த ரூபம் பிறவற்றின் திருஷ்டியின்றிப் பிரதீதியாகிறதோ அது அதன் பரமார்த்தரூப மாகிறது. எங்ஙனம்: ஒருபுருஷனிடத்தில் பிதாவின் திருஷ்டியால் புத்திரத் தன்மையும், பாட்டனது திருஷ்டியால் பௌத்திர(பேர)த்தன்மையும் விளங்கு கின்றன, அவை பரமார்த்தமாக இல்லை. புருஷனுடைய பிண்டமே பரமார்த் தமாம். அதுபோல ஸ்தூலசூக்ஷ்மகாரண உபாதியின் திருஷ்டியால் எந்த விரா ட்டு விசுவாதிவடிவங்கள் தோன்றுகின்றனவோ, அவை மித்தையாம்; சேதன மாத்திரமே சத்தியமாம்.

அந்தச் சேதனம் எல்லாப்பேதமு மில்லாதாம். ஏனெனின்,

1. விராட்டுக்கும் விசுவனுக்கு மிருக்கும் பேதம் உபாதியினாலாகியதாம். அந்த உபாதி இருவருக்கும் ஸ்தூலமாயிருந்தாலும் விராட்டுக்கு உபாதி சமஷ்டியும் விசுவனுக்கு உபாதி வியஷ்டியுமாம். அந்தச் சமஷ்டி வியஷ்டி உபாதியால் அவற்றிற்குப் பேத முளது. ஆதலால் ஸ்வரூபமாகப் பேதமில்லை.

2. அப்படியே தைஜஸனுக்கும் ஹிரண்யகர்ப்பனோடு சமஷ்டி வியஷ்டி உபாதியால் பேத முளது; ஸ்வரூபமாக வில்லை.

3. அப்படியே ஈசுவரனோடு பிராஞ்ஞனுக்கும் சமஷ்டி வியஷ்டி உபாதியால் பேத முளது; ஸ்வரூபமாக வில்லை.

1. இவ்வாறு பிராஞ்ஞனுக்கு ஈசுவரனோடு அபேத முண்டு.

2. தைஜஸனுக்கு ஹிரண்யகர்ப்பனோடு அபேத முண்டு.

3. அங்ஙனமே விசுவனுக்கு விராட்டோடு அபேத முண்டு.

இவ்விதத்தால் ஸ்தூலோபாதியுடையவனுக்குச் சூக்ஷ்மோபாதியுடைய வனோடாவது காரணவுபாதியுடையவனோடாவது பேத மில்லை. ஏனெனின், ஸ்தூலசூக்ஷ்மகாரண உபாதியின் திருஷ்டியை விடுதலால் சேதனஸ்வரூபத் தில் எவ்விதபேதமும் தோற்றுகிறதில்லை.

சேதனத்துக்கு அநாத்மாவோடும் பேத மில்லை. ஏனெனின், அநாத்ம தேகாதிகள் அவித்தியாகாலத்தில் தோற்றுகின்றன; பரமார்த்தத்தால் தோற் றுகிறதில்லை. அவற்றிற்கும் சேதனத்தோடு பேதம் பொருந்தாது.

இவ்விதத்தால் சர்வபேதரகிதமாயும் அசங்கமாயும் நிர்விகாரமாயும் நித் தியமுக்தமாயும் பிரஹ்மரூபமாயும் இருக்கிற ஆத்மா ஓங்காரத்தின் லக்ஷியமா

யும் ஸ்வயம்பிரகாசரூபமாயும் அந்த உபாஸகனுக்கு விளங்குகிறது. ஆதலால் ஹிரண்யகர்ப்பலோகத்தில் வசிக்கிறவனுக்குச் சமுசாரமுண்டாகிற *தில்லை.

## 302. ஓங்காரம் என்பவற்றிற்கும் மகாவாக்கியத்தின் அர்த்தத்திற்கும் ஏகத்துவம்.

மகாவாக்கிய விவேகமின்றி ஞானமுண்டாகாவிடினும் ஓங்காரத்தின் விவேகமே மகாவாக்கியத்தின் விவேகமாம்.

1. (1) ஸ்தூலோபாதிசகிதசேதனம் அகாரத்தின் வாச்சியம்.
   (2) ஸ்தூலோபாதியைவிட்டுச் சேதனமாத்திரம் அகாரத்தின் லக்ஷியம்.

2. (1) சூக்ஷ்மோபாதிசகிதசேதனம் உகாரத்தின் வாச்சியம்.
   (2) சூக்ஷ்மோபாதியைவிட்டுக் கேவலசேதனம் உகாரத்தின் லக்ஷியம்.

3. (1) காரண உபாதிசகிதசேதனம் மகாரத்தின் வாச்சியம்.
   (2) காரண உபாதியைவிட்டுக் கேவலசேதனம் மகாரத்தின் லக்ஷியம்.

இவ்விதத்தால்,

1. உபாதிசகிதவிசுவாதிகள் அகாராதிமாத்திரைகளின் வாச்சியங்களாம்.
2. உபாதிரகிதசேதனம் எல்லாமாத்திரைகளுக்கும் லக்ஷ்யமாம்.

1. அப்படியே நாமரூபமான சகல உபாதிகளோடுகூடிய சேதனம் ஓங்காரவர்ணத்தின் வாச்சியமாம்.

2. நாமரூபமான ஸகலஉபாதிகளுமின்றிய சேதனம் ஓங்காரவர்ணத்தின் லக்ஷ்யமாம்.

இவ்வாறு ஓங்காரத்துக்கும் மகாவாக்கியத்துக்கும் அர்த்தம் ஒன்றாகவேயிருக்கிறது. ஆதலால் ஓங்காரவிவேகத்தால் அத்வைதஞான முண்டாகிறது.

இவ்விதமாக ஆசாரியர்வாக்கினின்றும் சிரவணஞ்செய்து அதிருஷ்டியென்னும் மத்தியமசிஷ்யன் உபாஸனையில் பிரவிருத்தித்து ஞானவாயிலாகப் பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தை யடைந்தான்.

---

* ஞானவாயிலாக மோக்ஷமாகிய பலமுண்டாகிறது.

## 303. நிர்க்குணஉபாசனைக்கு அதிகாரமில்லாதவன் செய்யவேண்டியது.

நிர்க்குண உபாசனையில் அதிகாரமில்லாதவன் * செய்யவேண்டியதைக் கூறுகின்றார்:—இந்த நிர்க்குணத்தியானம் முடியவில்லையாயின் † சகுணஈசுவ

---

* இங்கு இது அபிப்பிராயமாம்:—வேதாந்தத்தின் சிரவணமனனரூப விசாரத்திற் பிரவிருத்தித்த ஜிஞ்ஞாசு அதனைவிட்டு அந்நியசாதனஞ் செய்யவேண்டியதில்லை.

1. ஒருகால் அந்த விசாரசீலபுருஷன் விசாரத்தைவிட்டு வேறுசாதனங்களிற் பிரவிருத்திப்பானாயின் ஆரூடபதித(ஏறிவிழுந்தவ)னாவான்.

2. அல்லது "கரம்லேடிநியாயம்" அதாவது தேனையொழுகவிட்டு முழங்கையை நக்குதல் என்னும் திருஷ்டாந்தம் அவனுக்குக் கிடைக்கும்.

ஆதலால் அந்த விசாரசீலபுருஷன் திடஞானம்வரையில் விசாரஞ்செய்யவேண்டியது.

1. விசாரத்திற் பிரவிருத்தியுண்டாகாதவன் நிர்க்குண உபாஸனை செய்யவேண்டியது.

2. நிர்க்குணவுபாசனையில் அதிகாரமில்லாதவனுக்கு "உபவாசத்தினும் பிக்ஷை மேலானது" என்னும் நியாயத்தால் சகுணவுபாசனைமுதலிய வடிவினதாகிய கர்த்தவ்வியம் சொல்லப்பட்டிருக்கிறது.

† 1. மாயாவிசிஷ்ட சேதனரூப காரணப்பிரஹ்மம் சகுணஈசனும்.

2. அல்லது அதன் உபலக்ஷணமான ஹிரண்யகர்ப்பன், வைசுவாநரன், ஹரி, ஹரன், கௌரி, கணேசன், சூரியன், அவர்களது அவதாரவடிவ காரியப் பிரஹ்மம் சகுணஈச னெனப்படுகின்றது.

3. அல்லது அவற்றின் பிரதிமைமுதலிய வடிவினதாகிய பிரதிநிதி (அவற்றின் ஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டது) எதுவோ அது இங்குச் சகுணஈசன் எனப்படுகின்றது.

முற்கூறிய உபாஸியங்களில் (உபாசிக்கப்படுபவற்றில்) முன்முன் மேலானதாம்.

மேல் 7-வது தரங்கத்திற் கூறப்படுங்கிரமமாக மாயாவிசிஷ்ட சேதனவடிவ காரணப் பிரஹ்மமே ஈசபதத்தின் முக்கியார்த்தமாம். அதுவே உபாஸியமாம். அங்ஙனமாயினும் "மாயையைப் பிரகிருதி (சகலசகத்திற்கும் உபாதானம்) என்று அறிக. பிரஹ்மத்தை மகேசுவர னென்றறிக" என்னும் சுருதியினால் மாயாவிசிஷ்ட சேதனத்தினும் பின்னவஸ்து இல்லாமையால் ஸ்ரீ வித்தியாரணியஸ்வாமிகள் சர்வ மதத்தோடும் விரோதமின்றிய ஈசுவர நிரூபணத்தைச் சித்திரதீபத்தில் செய்திருக்கிறார்கள். அதனை யனுசரித்து ஹிரணியகர்ப்பாதி சகல உபாஸியவஸ்துக்களும் ஈச னெனப்படுகின்றன.

ரனை மனதில் தரிக்கவேண்டியது. சகுண உபாஸனை முடியாவிடின் *நிஷ்காமகர்மஞ்செய்து ராமனைப்பஜிக்கவேண்டியது. நிஷ்காமகர்மமும் முடியாவிட்டால் ஸகாமமான சுபகர்மஞ்செய்யவேண்டியது. அதுவும் முடியாதெனின் அந்தச் சடன் (துஷ்டன்) அடிக்கடி இறந்து பிறக்க.

ஓங்காரத்தின் அர்த்தத்தையறிந்து அதிருஷ்டியானவன் கிருதார்த்தனானான்.

இத்தரங்கத்தைப் படிப்பவன் எவனோ, அவனைத் தாதூவாகிய ஸ்ரீ குருவானவர் சுதிருஷ்டியாக்கக்கடவர்.

குருவேதமுதலியன வியாவகாரிகமென்று கூறுதலாகிய
மத்திமாதிகாரி சாதனவர்ணனமென்னும்
ஐந்தாவது தரங்கம் முற்றிற்று.

---

* பலத்தின் இச்சையின்றிய தனது வர்ணாசிரமகர்மங்களை ஈசுவரார்ப்பண புத்தியினாற் செய்க. அதனோடு நாமகீர்த்தனமுதலியவற்றைச் செய்து இராமனைப் பஜிக்க.

அல்லது நிஷ்காமகர்மத்தினால் இராமனைப்பஜிக்க அதாவது அந்தக்கர்மத்தைராமனுக்கு அர்ப்பணஞ்செய்க. பல இச்சையில்லாதவனாய் இராமன்பொருட்டுச் செய்த புண்ணியகர்மமும் இராமனது சந்தோஷத்திற்குக் காரணமாதலால் இராமனது பஜனமேயாம்.

ஓம.

ஸ்ரீகணேசாயநம:

# ஸ்ரீ விசாரசாகரம்.

## ஆறாவது தரங்கம்.

### ஸ்ரீ குருவேதமுதலிய சாதனங்கள் மித்தையென்று வர்ணித்தல்.

### 304. *உபோற்காதம்.

1. நான்காவது தரங்கத்தில் உத்தமாதிகாரியின் உபதேசக்கிரமஞ் சொல்லப்பட்டது.

2. ஐந்தாவது தரங்கத்தில் மந்தியமாதிகாரியின் உபதேசக்கிரமஞ் சொல்லப்பட்டது.

3. இந்தத் தரங்கத்தில் கநிஷ்டாதிகாரியின் உபதேசக்கிரமத்தைச் சொல்லுவாம்:—

எவனுக்குச் சந்தேகங்கள் விசேஷமாய் ஜனிக்கின்றனவோ, அவன்புத்தி தீவிரமாயிருந்தாலும் அவன் கநிஷ்டாதிகாரி யெனப்படுகிறான்.

இந்தத் தரங்கம் யுக்திப்பிரதானமாதலால் கேட்ட அர்த்தத்தில் குதர்க்கம் தோற்றுகிறவனுக்கு இந்தத் தரங்க முபயோகப்படும்.

குதர்க்கத்தால் தூஷிக்கப்பட்ட புத்தியையுடையவன் கநிஷ்டாதிகாரி யாவன். அவனுக்கு உபதேசக்கிரமம் இந்தத் தரங்கத்தி லுளது.

முன்(ஐந்தாவது)தரங்கத்திற் பிரணவோபாஸனை ஜகத்துற்பத்தி என்பவற்றின் நிரூபணத்துக்குமுன் இது சொல்லப்பட்டது:—"சேதனத்துக்கு வேறான அஞ்ஞானமும் அதன் காரியமும் அநாத்மா வெனப்படும். அவ்வநாத்மபதார்த்தங்கள் முழுவதும சொப்பனம்போல மித்தையாம்," இவ் வார்த்தையைக் கேட்டு இரண்டு தமயன்மார்களும் கேள்விகேட்காமல் சும்மாவிருப்பதைப் பார்த்துத் தர்க்கதிருஷ்டி கேட்கின்றான்.

---

* இதனை விசாரசந்திரோதயத்தின் முதல் டிப்பணியிற் காண்க.

## (தர்க்கதிருஷ்டியின் பிரசினம். 305-306.)

### 305. பிரசினம்:—சொப்பனதிருஷ்டாந்தத்தால் ஜாக்கிரபதார்த்தங்கள் மித்தையாகாவெனல்.

தர்க்கதிருஷ்டி பிரசினஞ்செய்கிறன்:-*முன் சுத்தமாயறியப்படாத பதார்த்தத்தின் ஞானம் சொப்பனத்தில் உண்டாகிறதில்லை. ஆனால் ஜாக்கிரத்தில் எதன் அநுபவஞானமுண்டாகிறதோ அதன் ஸ்மரணை சொப்பனத்தி லுண்டாகிறது. ஆதலால் ஸ்மிருதிஞானத்துக்கு விஷயமான ஜாக்கிரபதார்த்தங்கள் சத்தியமாயிருத்தலால் சொப்பனத்திலுண்டாகிற அவற்றின் ஸ்மிருதி வடிவ ஞானமும் சத்தியமே. ஆதலால் சொப்பனதிருஷ்டாந்தத்தால் ஜாக்கிர பதார்த்தங்கள் பொய்யென்று சொல்லுதல் பொருந்தாது.

### 306. பிரசினம்:—சொப்பனம் மித்தையன்றெனல்.

சொப்பனஞானத்திற்கு விஷயமான பதார்த்தங்கள் சத்தியமா மென்பதை வேறுவிதமாய்ப் பிரதிபாதிப்பாம்:—

அல்லது (அதாவது வேறுவிதமாய்ச்) சொப்பனத்தின் ஞானமும் அதன் விஷயமான பதார்த்தமும் சத்தியமாம்; மித்தை யன்று. ஏனெனின், சொப்பனுவஸ்தையில் ஸ்தூலசரீரத்தை விட்டு லிங்கசரீரம் வெளியே சென்று சத்தியமான பர்வதம் சமுத்திர முதலியவைகளைப் பார்க்கிறது. ஆதலால் சொப்பனம் பொய்யன்று.

## (இலக்கம் 305-306-ல் உள்ள பிரசினத்திநுத்தரம். 307-308.)

### 307. ஜாக்கிரபதார்த்தங்களின் ஸ்மிருதி சொப்பனத்தி லில்லை யெனல்.

1. பூர்வகாலத்துடன் சம்பந்தமுடைய பதார்த்தத்தின் ஞானம் ஸ்மிருதி யெனப்படும். முன் பார்த்த யானையின் "அந்த யானை" என்னும் ஸ்மிருதி யுண்டாகின்றது.

2. எதிரில் நிற்கும் யானையைக் கண்டு "இது யானை" என்று உண்டாகும் ஞானம் ஸ்மிருதி யன்று; பிரத்தியக்ஷமாம்.

---

* சொப்பனத்தை ஜாக்கிரத்தில் அநுபவிக்கப்பட்ட பதார்த்தங்களின் ஸ்மிருதி வடிவ மானஸவிபரியாஸ மென்பர். அவர்கள் மதாநுசாரமாகச் சிஷ்யன் கூறுகின்றன்.

சொப்பனத்தில் "இந்த யானை எதிரில் நிற்கிறது" "இது நதி" "இது மலை" என்று ஞான முண்டாகிறது. ஆதலால் ஜாக்கிரத்திற் பார்த்த பதார்த்தங்களின் ஸ்மிருதி சொப்பனத்தில் இல்லை. ஆனால் யானைமுதலிய வற்றின் பிரத்தியக்ஷஞானம் உண்டாகிறது.

"ஜாக்கிரகாலத்தில் அறியப்பட்ட பதார்த்தங்களே சொப்பனத்தில் அறியப்படுகின்றன. அறியப்படாத பதார்த்தத்தின் ஞான முண்டாகிறதில்லை. ஆதலால் ஜாக்கிர பதார்த்தத்தின் ஞானசம்ஸ்காரத்தால் சொப்பனத்தினது ஞான முண்டாகிறது. சம்ஸ்காரஜந்ய ஞானம் ஸ்மிருதி யெனப்படும். ஆதலால் சொப்பனத்தின் ஞானம் ஸ்மிருதிரூபமாம்" என்று இப்படி ஒருவன் ஆக்ஷேபம் செய்வானாயின்,

அது பொருந்தாது. ஏனெனின், பிரத்தியக்ஷஞான மிருவகைத்தாம்:— 1. ஒன்று அபிஞ்ஞாரூபப் பிரத்தியக்ஷம். 2. மற்றொன்று பிரத்தியபிஞ்ஞா ரூபப் பிரத்தியக்ஷம்.

1. கேவலம் இந்திரியசம்பந்தத்தா லுண்டாகும் ஞானம் அபிஞ்ஞாப்பிரத்தியக்ஷ மெனப்படும். எங்ஙனம்: "இது யானை" என்று நேத்திரசம்பந்தத்தா லுண்டாகும் யானையின் ஞானம் அபிஞ்ஞாப்பிரத்தியக்ஷம்.

2. முந்திய ஞானத்தின் சம்ஸ்காரத்தினாலும் இந்திரியசம்பந்தத்தினாலும் உண்டாகும் ஞானம் *பிரத்தியபிஞ்ஞாப்பிரத்தியக்ஷ மெனப்படும். எங்ஙனம்:—முன்பார்த்த யானை யெதிரில் காணப்படும்போது "அந்த யானை இது" என்று உண்டாகும் ஞானம் பிரத்தியபிஞ்ஞாப் பிரத்தியக்ஷமாம்.

அவ்விடத்தில் முன் பார்த்த யானையினது ஞானத்தின் சம்ஸ்காரமும் யானையோடுள்ள நேத்திரத்தின் சம்பந்தமும் பிரத்தியபிஞ்ஞாப்பிரத்தியக்ஷத்துக்கு ஹேதுக்களாம். ஆதலால் சம்ஸ்காரஜந்யஞானம் ஸ்மிருதிரூபமேயா

* பிரத்தியக்ஷ ஞானத்தின் சாமக்கிரியோடுகூடிய ஸம்ஸ்காரஜந்ய ஞானம் பிரத்தியபிஞ்ஞாபிரத்தியக்ஷ மெனப்படும். அதனைச் சம்ஸ்காரத்தோடுகூடிய இந்திரிய சம்பந்தத்தாற்றோன்றியதெனின், அந்தலக்ஷணம் வெளிப்பிரத்தியபிஞ்ஞாபிரத்திய க்ஷத்தில் பொருந்தும். ஆனால் உட்பிரத்தியபிஞ்ஞாப்பிரத்தியக்ஷத்தில் அந்தலக்ஷணத்தின் அவ்வியாப்தி யுண்டாகும். ஆதலால் பிரத்தியபிஞ்ஞாப்பிரத்தியக்ஷத்திற்கு முதலிற்சொல்லப்பட்ட லக்ஷணமே தோஷமின்றியதாம்; வெளி உள் என்னும் இரண்டற்கும் பொதுவாம்.

மென்னும் நியமமில்லை; *பிரத்தியபிஞ்ஞாப்பிரத்தியக்ஷஞானமும் சம்ஸ்கார ஜந்நியமாம். ஆனால் இந்திரியசம்பந்தமின்றிக் கேவல சம்ஸ்காரஜந்நியஞான முண்டாயின் அது ஸ்மிருதிஞான மெனப்படும்.

1. சொப்பனத்தில் யானைமுதலியவற்றின் ஞானம் கேவலம் சம்ஸ்காரஜந்நிய மன்று. ஆனால் அது நித்திரைவடிவதோஷஜந்நியமாம். யானை முதலியவற்றைப்போலச் சொப்பனத்தில் கற்பிக்கப்பட்ட இந்திரியங்களு மிருக்கின்றன. ஆதலால் அவற்றின் ஞானம் இந்திரியஜந்நியமாம்.

சொப்பனபதார்த்தம் சாக்ஷிபாஸியமாம். இந்திரியஜந்நியஞானத்துக்கு விஷய மன்று. என்றாலும் அவிவேகியின் திருஷ்டியால் சொப்பனஞானம் இந்திரியஜந்நிய மென்று சொல்லப்படுகிறது.

இவ்விதத்தால் சொப்பனத்தின் ஞானம் ஜாக்கிரபதார்த்தத்தின் ஸ்மிருதி யன்று.

2. நித்திரையினின்று விழித்துப் புருஷன் "நான் சொப்பனத்தில் யானை முதலியவைகளைப் பார்த்தேன்" என்று சொல்லுகிறான். சொப்பனத்தில் யானை முதலியவைகளின் ஸ்மிருதியுண்டாகுமாயின், விழித்தபின் "யான் சொப்பனத்தில் யானைமுதலியவற்றை ஸ்மரித்தேன்" என்று சொல்ல வேண்டும். ஆனால் இப்படி ஒருவரும் சொல்லுவ தில்லை. ஆதலால் ஜாக்கிர பதார்த்தங்களின் ஸ்மிருதி சொப்பனத்தி லில்லை.

3. "ஜாக்கிரகாலத்தில் கண்ட கேட்ட பதார்த்தங்களின் ஞானமே சொப்பனத்தி லுண்டாகிற தென்னும் நியமமில்லை, ஆனால் ஜாக்கிரகாலத்தில் அறியப்படாத பதார்த்தத்தின் ஞானமும் சொப்பனத்தி லுண்டாகிறது. ஜன்மம் முழுவதிலும் ஒருபோதும் பார்த்தும் கேட்டு மிராததான விலக்ஷண பதார்த்

---

* இங்கு இது விசேஷமாம்:—

1. சம்ஸ்கார ஜந்நியஞானத்தை ஸ்மிருதியெனின் பிரத்தியபிஞ்ஞாஞானமும் சம்ஸ்காரஜந்நியமாம். அதில் ஸ்மிருதியினது லக்ஷணத்தின் அதிவியாப்தி யுண்டாகும். அதனை நிவர்த்தித்தற்பொருட்டு ஸ்மிருதியின் லக்ஷணத்தில் மாத்திரபதத்தைப் புகுத்தல் வேண்டும்.

2. சம்ஸ்காரமாத்திரஜந்நிய ஞானத்தினை ஸ்மிருதியெனின், ஸம்ஸ்காரமாத்திர வடிவ சாமக்கிரி அநுபவநாசத்தின் பின் எப்போது மிருத்தலால் எப்போதும் ஸ்மிருதி யுண்டாதல்வேண்டும் என்னும் தோஷத்தை நிவர்த்தித்தற்பொருட்டு ஸ்மிருதியின் லக்ஷணத்தில் உற்பூத மென்னும் சொல்லையும் பிரவேசஞ்செய்விக்கவேண்டும்.

இவ்வாற்றால் "உற்பூதசம்ஸ்காரமாத்திரஜந்நிய ஞானம்" ஸ்மிருதியாம் என்னும் ஸ்மிருதியின் லக்ஷணம் தோஷமின்றியதாம்.

தம் சொப்பனத்தில் ஒருகாலத்துத் தோற்றுகிறது. ஆதலால் அவற்றின் ஞானம் ஸ்மிருதி யன்று.

4. "இந்த ஜன்மத்தின் பதார்த்தங்களது ஞானத்தின் சம்ஸ்காரமே ஸ்மிருதிக்கு ஹேதுவா" மென்னும் நியம மில்லை. ஜன்மாந்தர ஞானத்தின் சம்ஸ்காரத்தாலும் ஸ்மிருதியுண்டாம். ஏனெனின் அநுகூல ஞானத்தால் பிரவிருத்தியுண்டாகிறது. அநுகூலஞானமின்றிப் பிரவிருத்தி யுண்டாகிறதில்லை. ஆதலால் ஸ்தன்னியபானத்தில் பாலர்களுக்குண்டாகும் முதற்பிரவிருத்திக்குக் காரணமான "ஸ்தன்னியபானம் எனக்கு அநுகூலம்" என்னும் ஞான முண்டாகிறது. அங்கு வேறு ஜன்மத்தில் ஸ்தன்னியபானத்தில் அநுகூலத்தன்மை யநுபவம் செய்யப்பட்டுளது. அதன் ஸம்ஸ்காரத்தால் பாலர்களுக்கு முதலில் அநுகூலத்தன்மையின் ஸ்மிருதி புண்டாகிறது. ஆதலால் ஜன்மாந்தர ஞான ஸம்ஸ்காரத்தாலும் ஸ்மிருதி யுண்டாகிறது. அப்படியே இந்த ஜன்மத்தில் அறியப்படாத பதார்த்தத்தின் ஸ்மிருதியும் ஜன்மாந்தரத்தின் ஞானஸம்ஸ்காரத்தால் சொப்பனத்தில் சம்பவிக்கிறது.

அங்ஙனமாயினும் ஜாக்கிரகாலத்தில் எந்த ஜன்மத்திலும் ஞானம் சம்பவியாததான அத்தன்மையபதார்த்தம் சொப்பனத்தில் பிரதீதியாகிறது. எங்ஙனம்: தன் தலையை வெட்டுவதைத் தன் கண்ணால் சொப்பனத்தில் பார்க்கிருன். அங்குத் தன் தலையை வெட்டுவதை எவனும் எந்த ஜாக்கிராவஸ்தையிலும் பார்க்கிறதில்லை. ஆதலால் ஜாக்கிரபதார்த்தத்தின் ஞானத்தின் ஸம்ஸ்காரத்தால் சொப்பனத்தில் ஸ்மிருதி யுண்டாகிறதில்லை.

5. சொப்பனம் ஸ்மிருதிரூப மென்பதைக் கண்டனஞ்செய்வதில் அநேக யுக்திகளைக் கிரந்தகாரர்கள் சொல்லியிருக்கிருர்கள். ஆனல் சொப்பனத்தை ஸ்மிருதிரூபமாகக் கொள்ளுதலில் முற்கூறிய தூஷணம் மிகப்பிரபலமாம்:— ஸ்மிருதிஞானத்தின் விஷயம் எதிரில் பிரதீதியாகிற தில்லை. சொப்பனத்தின் யானைமுதலியன சொப்பனகாலத்தில் எதிரில் தோற்றுகின்றன. ஆதலால் சொப்பனத்தில் யானைமுதலியவற்றின் ஸ்மிருதி யில்லை.

## 308. சொப்பனத்தில் இலிங்கசரீரம் வெளியேசென்று ஜாக்கிரபதார்த்தங்களைக் காண்கிறதில்லை யெனல்.

"லிங்கசரீரம் வெளியே சென்று சத்தியமான மலை சமுத்திராதிகளைப் பார்க்கிற" தென்பதின் உத்தரம்:—

ஸ்தூலசரீரத்திலிருந்து வெளியே சென்று லிங்கசரீரம் சத்தியமான மலை சமுத்திராதிகளைப் பார்க்கும்பக்ஷத்தில் அது வெளியே போவதால் மரணாவஸ்தையில் சரீரம் பயங்கரமாய்த் தோன்றுவதுபோல் சொப்பனவஸ்தை

யிலும் லிங்கசரீரம் இல்லாமையால் ஸ்தூலசரீரம் அமங்கல (பயங்கர) மாதல் வேண்டும். அவ்வாறே பிராணனில்லாத பிணம்போலவு மாதல்வேண்டும். சொப்பனுவஸ்தையில் அப்படி யாகிறதில்லை. சொப்பனுவஸ்தையில் ஸ்தூல சரீரம் பிராணனேடுகூடியதும் ஜாக்கிரத்திற்போல சுந்தர (மங்கள) ரூபமுமா யிருக்கிறது. ஆகையால் ஸதூல சரீரத்தைவிட்டு வெளியே லிங்கசரீரம் சொப்பனுவஸ்தையிற் போகிறதில்லை.

"சொப்பனுவஸ்தையில் பிராணன் வெளியே போகிறதில்லை. ஆனல் அந்தக்கரணமும் இந்திரியமும் வெளியிலுள்ள பர்வதாதிகளுக்குப் போய் அவற்றைப் பார்க்கின்றன. பிராணன் வெளியே போகாமையினல் ஸ்தூலசரீரம் மரணுவஸ்தையிற்போல் பயங்கரமா யிருக்கிறதில்லை. பிராணன் வெளியே போவதிலும் யாதொரு பிரயோஜனமு மில்லை. ஏனெனின் பிராணனிடத்தில் ஞானசக்தி யில்லை; கிரியாசக்தி யிருக்கிறது. ஆதலால் வெளியிலுள்ள பதார்த்தங்களையறியச் சாமர்த்தியமுடையது யாதோ அதுவே வெளியே போகிறது. ஞானசக்தி அந்தக்கரணத்திலும் ஞானேந்திரியத்திலு மிருக்கிறது. பிராணனிற்போல கர்மேந்திரியத்திலும் ஞானசக்தி யில்லை; கிரியாசக்தி யிருக்கிறது. ஆதலால் பிராணனும் கர்மேந்திரியமும் சரீரத்தில் இருக்கின்றன. அதனல மரணநிமித்தத்தாலர்ம் தாக (எரித்தல்) முதலியவற்றினின்றும் ரக்ஷிப்புண்டாகிறது. அந்தக்கரணமும் ஞானேந்திரியமும் வெளியே போய்ச் சத்தியபாவதாதிகளைப் பார்த்துப் பிராண கர்மேந்திரியங்களின் சமீபத்தில் வருகின்றன." என்று கூறின்,

அதுவும் பொருந்தாது. ஏனெனின்,

1. ஸ்தூலசூக்ஷ்மக்கூட்டங்களில் எல்லாவற்றிற்கும் எஜமானன் பிராணனும். பிராணனின்றி யிருக்கும் சரீரத்தைப் பார்த்தால் அதனை யொருக்ஷணமும் வைத்துக்கொள்ளுகிறதில்லை; வெளியே கொண்டுபோய்த் தகனம் செய்கிருர்கள்; தொட்டால் முழுகுகிருர்கள். ஆதலால் ஸதூலசரீரத்தின் சாரம் பிராணன். அப்படியே சூக்ஷ்மசரீரத்திலும் பிரதானமானது பிராணன்.

* பிராணனும் இந்திரியாதிகளும் நம்மில் யார் சிரேஷ்டமென்று ஒன்றற்கொன்று விவாதமிட்டுப் பிரஜாபதியினிடத்தில் சென்று "ஸ்வாமி, எங்களுள் யாவன் சிரேஷ்டன்?" என்று கேட்டன. அப்போது பிரஜாபதியானவர் "நீங்கள் எல்லோரும் ஸ்தூலசரீரத்திற் பிரவேசித்து ஒவ்வொருவராக வெளியே

---

*இங்குப் பிராணன் இந்திரியமென்னும் சொற்களால் அவற்றின் அபிமானிதேவதைகள் கொள்ளப்படும்.

வாருங்கள். எவன் வெளியே வருவதனால் ஸ்தூலசரீரம் அமங்கலமாகி விழுந்து போகிறதோ அவன் உங்களுக்குள் சிரேஷ்டன்" என்று சொன்னார். பிரஜாபதியின் வார்த்தையைக் கேட்டு யாவும் ஸ்தூலசரீரத்திற் பிரவேசித்தன. நேத்திராதி இந்திரியங்கள் ஒவ்வொன்றும் வெளியே வருவதனால் சரீரம் அவ்வவ் விந்திரியரகிதமாய்க் காணப்பட்டது. பிராணன் வெளியே போகப் பிரயத்தனப்படவே சரீரம் விழுந்துபோயிற்று. அப்போது "நம் எல்லோருக்கும் எஜமானன் பிராணனே" என்று யாவும் நிச்சயித்துக்கொண்டன.

இக்காரணத்தால் பிராணன் சரீரத்திலிருக்கும்வரையில் இந்திரியாதிகளிருக்கின்றன. பிராணன் வெளியேபோகவே சகல இந்திரியங்களும் வெளியே போகின்றன. ஆகையால் சூக்ஷ்மக்கூட்டத்திற்கு அரசன்போல் பிராணனே பிரதானமாம். பிராணன் போனாலன்றி அந்தக்கரணமும் இந்திரியங்களும் வெளியே போகிறதில்லை.

2. அல்லது அந்தக்கரணமும் ஞானேந்திரியமும் பூதங்களின் சத்துவ குணகாரியங்களாம். அவற்றில் ஞானசக்தி யிருக்கிறது; கிரியாசக்தி யில்லை. பிராணனில் கிரியாசக்தி யிருக்கிறது. அதன் வலியினால் மரணசமயத்தில் லிங்கசரீரம் இந்த ஸ்தூலசரீரத்தைவிட்டு லோகாந்தரத்திற்குப் போகிறது. பிராணனுடைய பலத்தினாற்றான் இந்திரியவாயிலாக அந்தக்கரணத்தின் விருத்தி வெளியிலுள்ள கடாதிகளின் சமீபத்திற் செல்லுகிறது. பிராணனுடைய சகாயமின்றி அந்தக்கரணமுதலியன வெளியிற் செல்லமாட்டா. இக்காரணத்தாற்றான் யோகசாஸ்திரத்தில் "பிராணநிரோதமின்றி மனநிரோதமுண்டாகிறதில்லை. *பிராணனது சஞ்சரிப்பால் மனதின் சஞ்சரிப்புண்டாகிறது. பிராணநிரோதத்தால் மனதின் நிரோதமுண்டாகிறது." என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் மனதை யடக்குதலாகிய ராஜயோகத்தில் இச்சையுள்ளவன் பிராணநிரோதரூப ஹடயோகத்தை யநுஷ்டிக்கவேண்டியது. இதனாலும் அந்தக்கரணத்தின் கமனம் (போக்கு) பிராணாதீனமா யிருக்கிறது. பிராணன் வெளிப்பட்டாலல்லாமல் அந்தக்கரணமும் ஞானேந்திரியமும் வெளிப்படா.

3. சொப்பனவஸ்தையில் ஸ்தூலசரீரம் பிராணசகிதமாய்க் காணப்படுகிறது.

---

* "சௌமியனே (காட்சிக்கினியனே)! பிராணன் எதற்கு (கம்பத்திற் பக்ஷியைப்போல)ப் பந்தனமா(கட்டா)யிருக்கிறதோ, அப்படிப்பட்டது மனம்" என்னும் சுருதியினால் மனம் பிராணாதீனமாம் என்பது செவ்வையாய் அறியப்படுகிறது.

ஆதலால் "அந்தக்கரணம் சொப்பனத்தில் வெளியேசென்று சத்திய பதார்த்தங்களை யறிகிறது" என்று சொன்னது பொருந்தாது.

4. அல்லது ஒருவன் சொப்பனத்தில் தன் சம்பந்தியுடன் கூடிச் சில வியவகாரங்களைச் செய்கிறான். விழித்துக்கொண்டபின் அந்தச் சம்பந்தியைச் சந்தித்தபோது "நாம் இருவரும் இராத்திரி இன்ன வியவகாரத்தைச் செய்தோ" மென்று சொல்லுகிறதில்லை. பூர்வபக்ஷியின் கிரமமாகவோ அவன் வெளியே சென்று சம்பந்தியைச் சந்தித்து உண்மையாக வியவகாரஞ் செய்திருக்கிறான். அப்படிச் சந்தித்ததும் வியவகரித்ததும் சம்பந்திக்கும் தெரிந்திருக்கவேண்டும். சம்பந்தியும் இவனைக் கண்டபோது அப்படியே சொல்லவேண்டும்; ஆனால் அநுபவத்தில் அப்படியில்லை. சித்தாந்தத்திலோ சம்பந்தியும் சந்தித்ததும் எல்லாம் உள்ளே கற்பிதமாம்.

5. அல்லது வெளியே சென்று சத்தியபதார்த்தங்களைப் பார்க்கும் பக்ஷத்தில் ராத்திரியில் தூங்குகிறவன் தஞ்சாவூரில் மத்தியான்னசூரியன் பிரகாசிப்பதாகவும், தஞ்சாவூர் காவேரிக்கு வடக்கிலிருப்பதாகவும், ஸ்வாமிமலை தஞ்சாவூருக்கு மேற்கிலிருப்பதாகவும் சொப்பனத்திற் பார்க்கிறான். அங்கு இராத்திரியில் மத்தியான்னசூரியன் இல்லை. காவேரிக்கு வடக்கில் தஞ்சாவூர் இல்லை. தஞ்சாவூருக்கு மேற்கில் ஸ்வாமிமலை இல்லை. இதனாலும் சத்தியபதார்த்தங்களைச் சொப்பனத்திற் காணுதல் பொருந்ாது. சொப்பனத்தில் ஜாக்கிரத்தின் ஸ்மிருதி அல்லது ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட பர்வதாதிகளின் ஞானமும் வெளியிற் சென்றுண்டாகின்றது என்னும் இரண்டு லக்ஷணங்களும் நிராகரிக்கப்பட்டன.

## (சித்தாந்தம்:—ஜாக்கிர சொப்பனங்களின் சமத்தன்மை 309—328.)

## 309. சொப்பனத்தில் திரிபுடிக்கூட்டமுழுவதும் உண்டாகின்றனவென்றல்.

சித்தாந்தம் கூறப்படுகின்றது:—

ஜாக்கிரபதார்த்தத்தின் ஸ்மிருதியும் லிங்கசரீரம் வெளியேபோகுதலும் சம்பவியாவிடினும், ஜாக்கிரத்திற்போல் சொப்பனத்தில் ஞாதா ஞானம் ஞேயம் என்னும் திரிபுடி தோற்றுகிறது. ஆதலால் கழுத்தின் நாடிக்குட்டானே யாவு முண்டாகின்றன.

இதனைச் சகல பிரமாணங்களுக்கும் சிரசாய்விளங்கும் வேதம் சொல்லுகிறது. மாண்டுக்கிய *உபநிஷத்தில, "ஜாக்கிரகாலத்தின் பதார்த்தங்கள் சொப்பனத்தில் தோற்றுகிறதில்லை. ஆனால் ரதம், ரதிகன், குதிரைகள், மார்க்கம் என்பவை யாவும் சொபபனத்தில் புதிதா யுண்டாகின்றன." என்று சொல்லியிருக்கிறது. ஆதலால் மலை சமுத்திரம் நதி வனம் கிராமம் பட்டணம் சூரியன் சந்திரன்முதலியனவாகச் சொப்பனத்திற் பார்க்கப்படும் பதார்த்தங்கள் யாவும புதிதா யுண்டாகின்றன.

சொப்பனத்திற் பர்வதாதிகள் உண்டாகாவிடின் அவற்றின் பிரத்தியக்ஷ ஞானம் சொப்பனத்தி லுண்டாகின்றது. அஃது உணடாகலாகாது. ஏனெனின், விஷபத்தோடுண்டாம இந்திரியத்தின் சம்பந்தம அல்லது அந்தக்கரண விருத்தியின் சமபந்தம் பிரத்தியக்ஷஞானத்துக்கு ஹேதுவாம். ஆதலால் பர்வதாதி விஷயங்களும் அவற்றின் ஞானசாதனங்களான அந்தக்கரண இந்திரியங்களுமாகிய யாவும் உள்ளே யுண்டாகின்றன.

சொப்பனபதார்த்தம் கிளிஞ்சிலில் வெள்ளிபோலச் சாக்ஷிபாஷியமாம். சொப்பனஞானத்தில் அந்தக்கரண இநதிரியங்களின் உபயோகமில்லை. ஆதலால் ஞேயமான பர்வதாதிகளின் உற்பத்தியினையே சொப்பனத்தில் அங்கீகரித்தல் தகுதியாம். ஞாதா ஞான இந்திரியங்களின் உற்பத்தியை யங்கீகரித்தல் தகுதி யன்று.

1. அங்ஙனமாயினும், எப்படிச் சொப்பனத்திற் பர்வதாதிகள் தோற்றுகின்றனவோ, அப்படியே இந்திரியமும அந்தக்கரணமும் பிராணனோடு ஸ்தூல சரீரமும் தோற்றுகின்றன. ஆதலால அவற்றின் உற்பத்தியை அங்கீகரித்தல் வேண்டும்.

2. அல்லது சொப்பனபதார்த்தங்களில் நேத்திராதிகளுக்கு விஷயமாந் தன்மை விளங்குகின்றது. வியாவகாரிக நேத்திராதிகளுக்கு விஷயமாந் தன்மை சொப்பனத்தின் பிராதிபாஷிக பதார்த்தங்களிற் பொருந்தாது.

---

* "அங்கு (சொப்பனத்தில்) இரத மில்லை, குதிரை யில்லை, வழியில்லை. [ஆனால் சொப்பனத்தின் அதிஷ்டான சாக்ஷி அல்லது பிரஹ்மசேதனம் இருக்கிறது.] ஜாக்கிரத்திற்குப் பின்னரே இரதம் குதிரை மார்க்கம் (வழி) என்பவற்றைச் சிருஷ்டிக்கின்றான்" என்னும் சுருதியில் சொப்பனகாலத்தில் இரதாதிமூன்றனால் உபலக்ஷிக்கப்பட்ட சகல ஜகத்தின் நவீனசிருஷ்டி (உற்பத்தி) சொல்லப்பட்டிருக்கிறது. "கூறிய சுருதி ஜாக்கிர சுழுத்திகளின் சந்தியில் சிருஷ்டியைக் கூறுகின்றது" என்பது முற்கூறிய சுருதிவடிவ மூலத்தையுடைய வியாசசூத்திரமாம். அது முற்கூறிய சுருதியின் அர்த்தத்தை (சொப்பனசிருஷ்டியை)த்திடப்படுத்துகின்றது. ஆதலால் சொப்பனத்தில் சாக்கிர பதார்த்தங்களின் ஸ்மிருதி, அல்லது லிங்கசரீரம் வெளியிற்சென்று அதனால் சத்தியமான மலை சமுத்திரமுதலியவற்றைக் காணுதல் சம்பவியாது.

ஏனெனின், சமசத்தையுடைய பதார்த்தங்களே தம்மிற் சாதகபாதகங்களா மென்று 5-வது தரங்கத்தில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் வியாவகாரிக நேத்திராதிகள் சரீரத்திலிருந்தாலும், அவற்றிற்குச் சொப்பன பதார்த்தங்களோடு விஷமசத்தையிருத்தலால் அவற்றின் ஞானத்திற்குச் சொப்பனபதார்த்தங்கள் விஷயமாகா.

3. அல்லது வியாவகாரிக இந்திரியங்கள் தத்தம் கோளகங்களைவிட்டுக் காரியஞ்செய்வதில் சாமர்த்தியமுடையனவாகா. சொப்பனவஸ்தையில் கை கால் வாக்கு என்பவற்றின் கோளகங்களோ சலனமில்லாதனவாக அந்நியனுக் குக் காணப்படுகின்றன. சொப்பனங்காண்கிறவன் கையில் திரவியத்தை எடுத் துக்கொண்டு சொப்பனத்தில கத்திக்கொண்டே ஓடுகிறான். ஆதலால் சொப் பனத்தில் இந்திரியங்களி னுற்பத்தியை அவசியம் அங்கீகரிக்கவேண்டும்.

4. அப்படியே சுகம் துக்கம் அவற்றின் ஞானம் அந்த ஞானத்திற் காசிரய மான பிரமாதா என்பன சொப்பனத்தில் தோற்றுகின்றன. இல்லாத பதார்த் தத்தின் தோற்றம் உண்டாகாது.

ஆதலால் சகலத்திரிபுடிகளும் சொப்பனத்தி லுண்டாகின்றன.

அநிர்வசநீயக்கியாதியின் கிரமம் இதுவாம்:— எவ்வளவு பிரமஞான முண்டோ அதன விஷயங்களெலலாம் அநிர்வசனீயமாக உண்டாகின்றன. விஷயமின்றி எந்த ஞானமு முண்டாகா தென்பது சித்தாந்தம்.

வேறு சாஸ்திரஙகளில் ஒரு பதார்த்தம் வேறுவடிவமாகத் தோற்றுவது பிரம மெனப்படுகிறது. சித்தாந்தத்திலோ எப்படிப பதார்த்தம் இருக்கிறதோ அபபடியே ஞானமு முண்டாகிறது. ஆதலால் பிரமஸதலத்திலும் விஷயத் தின் உற்பத்தி அவசிய முண்டாகிறது. விஷயமின்றி ஞான முண்டாகாது. இவ்விதத்தால் சொப்பனத்தில் திரிபுடி தோற்றுவதால் எல்லாமும் உற்பத்தி யாகின்றன.

## 310. சொப்பனத்தினது உற்பத்தியின் சங்கையைச்செய்து அந்தக்கரணத்தின் அல்லது அவிதநையின் பரிணாமமும் சேதனத்தின் விவர்த்தமுமான சொப்பனத்தின் சித்தியைக் கூறுதல் (310—311).

இவ்வாறு சங்கை யுண்டாகிறது:—சொப்பனத்தில் தோற்றும் பதார்த்தங் களுக்கு உற்பத்தியை அங்கீகரிக்கின், சொப்பனதிருஷ்டாந்தத்தால் ஜாக்கிர பதார்த்தங்கள் பொய்யென்று சித்தாந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிறதுபோல சொப்பனபதார்த்தங்களும் ஜாக்கிர பதார்த்தங்கள்போல் உற்பத்தியாத லால் சத்தியமாதல் சொல்லவேண்டும். சொப்பனத்திலேயே பதார்த்தங்களி

னுற்பத்தியை ஒப்பாவிடின் இந்தத் தோஷ மில்லை. ஏனெனின், ஜாக்கிரபதார்த் தங்கள் உற்பத்தியாகித் தோற்றுகின்றன. சொப்பனத்தில் பதார்த்தங்கள் இல் லாமலே தோற்றுகின்றன. ஆதலால் சொப்பனத்தில் இல்லாதபதார்த்தங்களின் ஞானம் பிரமரூபமாம். அவற்றிற்கு உற்பத்தியங்கீகரித்தல் தகுதி யன்று.

## 311. அச்சங்கையின் சமாதானம்.

1. எந்த வஸ்துவின் உற்பத்தியில் எவ்வளவு தேசகாலாதி சாமக்கிரிக ளாகிய சாதன (காரண)ங்கள் வேண்டுமோ, அவ்வளவு சாமக்கிரிகளின்றி உற் பத்தியாவது மித்தை யெனப்படுகிறது. சொப்பனத்தின் யானைமுதலானவை களின் உற்பத்திக்குரிய தேசகாலங்க ளில்லை. நீடித்தகாலத்திலும் விஸ்தார மான இடத்திலும் உண்டாகக்கூடிய யானைமுதலியன க்ஷணமாத்திரகாலத் தில் சூக்ஷ்மமான கண்டப்பிரதேசத்தி லுண்டாதலால் மித்தையாம்.

2. சொப்பனுவஸ்தையில் நீடித்தகாலமும் விஸ்தாரதேசமும் தோற்றி னுலும் அந்நியபதார்த்தங்களைப்போலச் சொப்பனத்தில் அதிகதேச அதிக காலங்களும் அநிர்வசனீயப்பிராதிபாஸிகமாக உற்பத்தியாகின்றன. ஏனெ னின், விஷயமின்றிப் பிரத்தியக்ஷஞானம் உண்டாகிறதில்லை. சொப்பனத்தில் அதிக தேசகாலங்களின் ஞான முண்டாகிறது. வியாவகாரிகதேசகாலங்கள் சொற்பமா யிருக்கின்றன. ஆதலால் பிராதிபாஸிகமா யுண்டாகின்றன. ஆனல் சொப்பனுவஸ்தையில் உண்டாகிய பிராதிபாஸிகதேசகாலங்கள் சொப்பனு வஸ்தையின் யானைமுதலியவற்றிற்குக் காரண மன்று. ஏனெனின் எது காரணமோ அது முன்னும், எது காரியமோ அது பின்னும் உண்டாகவேண் டும். சொப்பனத்தின் தேசகாலங்களும் யானைமுதலியனவும் ஒரேசமயத்தி லுண்டாகின்றன. ஆதலால் அவற்றிற்குக் காரணகாரியத்தன்மை சொல்ல லாகாது; வியாவகாரிகதேசகாலங்கள் சொற்பமா யிருக்கின்றன; யானைமுத லியவற்றிற்குத் தகுதியானவை யன்று. ஆதலால் தேசகாலரூப சாமக்கிரிக ளின்றி யுண்டாதலால் சொப்பனபதார்த்தங்கள் மித்தையாம்.

3. மேலும் சொப்பனத்தில் யானைக்குத் தாய்முதலிய சாமக்கிரிகளு மில்லை. சொப்பனத்தில் பிராணிகளின் மாதாபிதாக்கள் தோற்றினுலும், சொப் பனமாதாபிதாக்கள் புத்திரனுடைய உற்பத்திக்குக் காரண மாகிறதில்லை. ஏனெனின், மாதா பிதா புத்திரன் மூவரும் ஒரேகாலத்தில் கூடவே உண்டா கிருர்கள். ஆதலால் அவர்களுக்குக் காரணகாரியத்தன்மையில்லை. எந்த நித் திரையோடுகூடிய அவித்தையினின்றும் சொப்பனபதார்த்தங்க ளுண்டாகின் றனவோ, அந்த அவித்தையே அந்தப் பதார்த்தங்களில் மாதாத்தன்மை பிதாத் தன்மை புத்திரத்தன்மைகளை யுண்டுபண்ணுகிறது. இவ்விதமாகச் சொப்பன

பதார்த்தங்களின் உற்பத்தியில் வேறோர் சாமக்கிரியு மில்லை; நித்திரைத்தோஷத்தோடுகூடிய அவித்தையே காரணமாம். தோஷசகிதஅவித்தையா லுண்டாகும் வஸ்து கிளிஞ்சிலில் வெள்ளிபோல் மித்தையாகும். ஆதலால் சொப்பனபதார்த்தம் சத்திய மன்று; மித்தையாம்.

அவற்றின் உபாதானகாரணம் அந்தக்கரணம் அல்லது சாக்ஷாத் அவித்தையேயாம்.

1. முதற் பக்ஷத்தில் சாக்ஷிசேதனம் சொப்பனத்தின் அதிஷ்டானமாம்.

2. இரண்டாவது பக்ஷத்தில் பிரஹ்மசேதனம் சொப்பனத்திற்கு * அதிஷ்டானமாம்.

இவ்விதத்தால் சொப்பனம் அந்தக்கரணத்தின் அல்லது அவித்தையின் பரிணாமமும் சேதனத்தின் விவர்த்தமுமாம்.

---

* இங்கு இஃது ஓர் விசேஷமாம்:—

1. ஸ்தூலசூக்ஷ்மமென்னும் இரண்டு தேகங்களால் வரைபட்ட கூடஸ்தசேதன வடிவ பாரமார்த்திக ஜீவனுளன்.

2. மாயையினாலாவரிக்கப்பட்ட கூடஸ்தனிடத்தில் கற்பிக்கப்பட்ட அந்தக்கரணத்தில் சிதாபாஸவடிவ தேகமிரண்டில் அபிமானஞ்செய்பவனாகிய வியாவகாரிக ஜீவனுளன்.

3. நித்திரையாகிய மாயையால் மறைக்கப்பட்ட வியாவகாரிக ஜீவவடிவ அதிஷ்டானத்தில் கற்பிக்கப்பட்ட பிராதிபாஸிக ஜீவனிருக்கின்றான்.

இந்த வேறுபாட்டால் ஜீவன் மூவகைப்படுவன். அதன்வாதி (அதனைச்சொல்லுவோர்) வித்தியாரணியஸ்வாமிகள் முதலியோர்கள். அவர்கள் சொப்பனத்தின் அதிஷ்டானம் வியாவகாரிக ஜீவனும் ஜகத்துமாமென்று சொல்லியிருக்கின்றார்கள். அவற்றில்,

1. சொப்பனத்தின் ஜீவ (திருஷ்டாவி)னது அதிஷ்டானம் ஜாக்கிரத்தின் ஜீவனும் (திருஷ்டாவாம்).

2. சொப்பனத்தின் ஜக(திருசிய)த்திற் கதிஷ்டானம் ஜாக்கிரத்தின் ஜகத்தாம் (திருசியமாம்).

3. சொப்பன அத்தியாஸத்திற்கு உபாதானம் வியாவகாரிக ஜீவனையும் ஜகத்தையும் மறைக்கும் நித்திரைவடிவ அவஸ்தா (தூலா)ஞ்ஞானமாம்.

வியாவகாரிக திருஷ்டாவும் திருசியமும் ஜடமாம். அதற்குச் சத்தாஸ்பூர்த்தியை (சத்தையின் விளக்கத்தை)த் தருதலாகிய அதிஷ்டானத்தன்மை சம்பவியாது. ஆதலால்,

1. அகங்காராவச்சின்ன(அகங்காரத்தினால் வரைந்துகொள்ளப்பட்ட)சேதனம்.

2. அல்லது அகங்கார அநவச்சின்னசேதனம் சொப்பனத்தின் அதிஷ்டானமாம். இவ்விரண்டு மதங்களும் நலமுடையனவாம். அவற்றுள்,

1. முதல்மதத்தைக் கொள்ளின் அகங்காரவச்சின்னத்தை மறைக்கும் தூலாஞ்ஞானமே சொப்பனத்தின் உபாதானமென்பது சம்பவிக்கின்றது. ஜாக்கிரத்தின் ஞானத்தினால் பிரஹ்மஞானமின்றி அதன் நிவிருத்தியும் சம்பவிக்கின்றது.

## 312. மூவகைச்சத்தைப் பக்ஷத்தில் விலக்ஷண ஜாக்ரசொப்பனங்களுக்கு இரண்டுசத்தையை யங்கீகரிப்பதில் விலக்ஷணத்தன்மையில்லாமை (312—318).

இதில் இவ்வாறு சங்கை யுண்டாகின்றது:— இரண்டாவது பக்ஷத்தில் பிரஹ்மசேதனம் சொப்பனத்தின் அதிஷ்டான மென்றும் அவித்தை உபாதான காரண மென்றும் சொல்லப்பட்டது. அங்கு அதிஷ்டானஞானத்தினுல் கற்பிதம் நிவிருத்தியாகிறது. சொப்பனத்துக்கு அதிஷ்டானம் பிரஹ்மமாம்' ஆதலால் பிரஹ்மஞானமின்றி அஞ்ஞானிக்கு ஜாக்கிராவஸ்தையில் சொப்பனம் நிவிருத்தியாகலாகாது.

---

2. அவித்தையிற் பிரதிபிம்பவடிவ ஜீவசேதனம் அல்லது பிம்பவடிவ ஈசுவர சேதனம் விவரணகாரர் கிரமப்படி வியாபகமாதலால் அகங்கார அநவச்சின்னசேதனமாம். அதனைச் சொப்பனத்தின் அதிஷ்டானமெனக் கொள்ளின், அதனை மறைக்கும் மூலாஞ்ஞானமே சொப்பனத்தின் உபாதானமெனக் கொள்ளுதல்வேண்டும். ஜாக்கிர போதத்தால் அந்தச் சொப்பனத்தின் போதவடிவ நிவிருத்தி யுண்டாகிறதில்லை; உபாதானத்தில் ஒடுங்குதல்வடிவ நிவிருத்தி யுண்டாகின்றது. ஆனுல் அகங்கார அநவச்சின்னசேதனத்தைச் சொப்பனத்தின் அதிஷ்டானமெனக் கொள்ளினும் சரீரத்தின் உள்ளிடத்திலுள்ள சேதனமே அதிஷ்டானமெனல் சம்பவிக்கிறது; வெளியிடத்துள்ளசேதனம் அதிஷ்டானமன்று. அவித்தையிலுள்ள பிரதிபிம்பசேதனம் அல்லது அவித்தையிலுள்ள பிம்ப ஈசுவரசேதன மென்னும் இரண்டும் அகங்கார அநவச்சின்னமாம். வியாபகமாயிருத்தலால் சரீரத்தினுள்ளு மிருக்கின்றன. உள்ளிடத்துள்ள சேதனத்திலேயே எந்தச் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மையிருக்கிறதோ, அதன் அவச்சேதகம் அந்தகரணமெனக்கொள்ளின், அகங்கார அவச்சின்னத்திற்கு அதிஷ்டானத்தன்மை சித்திக்கின்றது. அதே சேதனத்தில் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மைக்கு அந்தக்கரணத்தை அவச்சேதக (வியாவர்த்தக)மெனக் கொள்ளாவிடின், அகங்கார அநவச்சின்னத்திற்கு அதிஷ்டானத்தன்மை சித்திக்கின்றது. அகங்கார அநவச்சின்னம் அவித்தியாப்பிரதிபிம்பமும் பிம்பமுமாகிய இரண்டுமாம். மதபேதத்தால் இரண்டற்கும் சொப்பனத்தின் அதிஷ்டானத்தன்மை யுண்டு. அங்ஙனமாயினும், அவித்தையிற் பிரதிபிம்பவடிவ ஜீவசேதனத்திற்கு அதிஷ்டானத்தன்மை கூறுதலே நலமுடையதாம்.

அல்லது அவித்தையிற் பிரதிபிம்பம் கற்பிதமாயிருத்தலால் அஃது அதிஷ்டானமாதல் தகுதியன்று. ஆதலால் அந்தக்கரண உபகித அல்லது அவித்தையுபகித சாக்ஷி சேதனமே சொப்பனத்தின் அதிஷ்டானமெனக் கொள்ளுதல் உசிதமாம். இவைமுழுவதும் மூன்றுசத்தைவாதிகளின் கிரமமாம்.

திருஷ்டிசிருஷ்டிவாதத்தின்படி சகல அநாத்ம பதார்த்தங்களும் ஒரு (பிராதிபாஸிக) சத்தையுடையனவா யிருத்தலால் ஜாக்கிரசொப்பன மிரண்டற்கும் பிரஹ்ம சேதனமே அதிஷ்டானமெனக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

**313.** வேறுசங்கை :—சொப்பனத்துக்கு அதிஷ்டானம் பிரஹ்மமும் உபாதானகாரணம் அவித்தையு மாவதுபோல, வேதாந்தசித்தாந்தத்தில் ஜாக்கிராவஸ்தையின் வியாவகாரிகபதார்த்தங்களுக்கும் அதிஷ்டானம் பிரஹ்மமாம்; உபாதானகாரணம் அவித்தையாம். ஆதலால்,

1. ஜாக்கிரபதார்த்தங்களை வியாவகாரிக மென்பர்.

2. சொப்பனபதார்த்தங்களைப் பிராதிபாஸிக மென்பர். இவ்வாறு பேதம் இருக்கலாகாது. ஏனெனின் இரண்டற்கும் அதிஷ்டானம் பிரஹ்மமும்; உபாதானகாரணம் அவித்தையுமாம். ஆதலால்,

1. ஜாக்கிரம் சொப்பனம் இரண்டும் வியாவகாரிகமாகவேண்டும்.

2. அல்லது இரண்டும் பிராதிபாஸிகமாகவேண்டும்.

**314.** அவ்விரண்டு சங்கைகளும் பொருந்தா. ஏனெனின், முதற்சங்கைக்குச் சமாதானம் இதுவாம்:—நிவிருத்தி இருவகையா மென்று முன் 4-வது தரங்கத்தில் கியாதிநிரூபணத்தில் சொல்லப்பட்டருக்கிறது.

1. காரணசகித காரியத்தின் விநாசவடிவ சொப்பனத்தின் அத்தியந்தநிவிருத்தி ஜாக்கிரத்தில் பிரஹ்மஞானமின்றிச் சம்பவியாது.

2. ஆனுல் தடியா லடித்தலால் எப்படிக் கடம் மண்ணில் லயமாகிறதோ, அப்படிச் சொப்பனத்துக்குக் காரணமான நித்திராதோஷத்தின் நாசத்தினுலும் சொப்பனத்துக்கு விரோதமான ஜாக்கிரத்தி னுற்பத்தியாலும் அவித்தையில் லயரூபமான நிவிருத்தி சொப்பனத்துக்குப் பிரஹ்மஞானமின்றிச் சம்பவிக்கும்.

**315.** "ஜாக்கிர சொப்பனங்கள் இரண்டும் சமானமாயிருத்தல் வேண்டு" மென்று கூறியது பொருந்தாது. ஏனெனின்,

1. ஜாக்கிரத்தினது தேகாதிபதார்த்தங்களி னுற்பத்தியில் வேறுதோஷமில்லாத கேவல அநாதி அவித்தையே உபாதானகாரணமாம்.

2. சொப்பன பதார்த்தங்களிலோ ஸாதி (உற்பத்தியுடைய) நித்திராதோஷமும் அவித்தைக்குச் சகாயமாம்.

1. ஆதலால் அந்நியதோஷமில்லாத கேவல அவித்தியாஜந்நியம் வியாவகாரிக மெனப்படும்.

2. ஸாதிதோஷஸகித அவித்தியா(தூலாவித்தியா)ஜந்நியம் பிராதிபாஸிக மெனப்படும். சொப்பனபதார்த்தம் நித்திராதோஷ ஸகித அவித்தியாஜந்நியமாயிருத்தலால் பிராதிபாஸிகமாம்.

3. ஜாக்கிரபதார்த்தம் அந்நியதோஷமில்லாத அவித்தியாஜந்நியமாயிருத்தலால் வியாவகாரிகமாம்.

இவ்விதத்தால் சொப்பனபதார்த்தங்களில் ஜாக்கிரபதார்த்தங்களினும் விலக்ஷணத்தன்மை(பேதம்)தோற்றுகிறது. ஆனால் இவையாவும் மூன்றுவிதசத்தைகளை யங்கீகரித்து ஸ்தூலதிருஷ்டியாற் சொல்லப்பட்டன. விசாரதிருஷ்டியினாலோ,

1. மூன்றுவிதசத்தைகள் பொருந்தா.

2. ஜாக்கிரசொப்பனங்களின் பரஸ்பர விலக்ஷணத்தன்மையும் பொருந்தாது.

**316.** வேதாந்தபரிபாஷைமுதலியகிரந்தங்களில் முன்கிரமப்படி வியாவகாரிக பிராதிபாஸிக பதார்த்தங்களின் பேதம் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் மூன்று சத்தைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

அப்படியே வித்தியாரண்யஸ்வாமிகளும் மூன்றுசத்தையே கொண்டிருக்கிறார்கள். ஏனெனின், அவர்கள் இப்பிரசங்கத்தை எழுதியிருக்கின்றார்கள்:—

தேகாதிபதார்த்தங்க ளிருவகையாம்.

1. (1) ஒன்று ஈசுவரசிருஷ்டி. அது பாஹியம்.

(2) மற்றொன்று ஜீவசங்கற்பத்தால் ஆக்கப்பட்டது. அது மனோமயமும் ஆந்தரமுமாம்.

அவ்விரண்டினும்,

2. (1) ஜீவசங்கற்பத்தாலாக்கப்பட்ட ஆந்தரமான மனோமயசிருஷ்டி சாக்ஷிபாஸியமாம்.

(2) ஈசுவரசிருஷ்டி பாஹியமாம். அது பிரமாதாப்பிரமாணங்களுக்கு விஷயமாம்.

3. (1) ஆந்தரமனோமயதேகாதிகளே ஜீவனுடைய சுகதுக்கங்களுக்குக் காரணமாம்.

(2) பாஹிய ஈசுவரசிருஷ்டி சுகதுக்கங்களுக்குக் காரண மன்று.

4. (1) ஆதலால் ஆந்தர மனோமய பதார்த்தங்களின் நிவிருத்தி முமுக்ஷுவுக்கு வேண்டியதாம்.

(2) பாஹியப்பிரபஞ்சம் சுகதுக்கங்களுக்குக் காரணமன்று. ஆதலால் அதன் நிவிருத்தி வேண்டியதில்லை.

எங்ஙனம்: இரண்டு புருஷர்களின் இரண்டு புத்திரர்கள் தேசாந்திரம் போயிருந்தார்கள். அவர்களில் ஒருவன்புத்திரன் இறந்துபோனான். மற்றவன்

புத்திரன் ஜீவித்திருந்தான். அந்த ஜீவித்திருந்த புத்திரன் வெகு திரவியம்சம்பாதித்து ஒருமனிதன்வாயிலாகத் தனக்குத் தனங்கிடைத்ததென்று தன் தகப்பனுக்கும் மற்றொருவ னிறந்தா னென்று அவன் தகப்பனுக்கும் சொல்லியனுப்பினான். இதைக் கேட்டுத் தெரிவிக்கும் புருடன் துஷ்டனாகையால்,

1. ஜீவித்திருக்கும் புத்திரனது தந்தையினிடத்தில் உன் மகன் மரித்தானென்றும்,

2. இறந்த புத்திரனது பிதாவினிடத்தில் உன் மகன் ஜீவித்திருக்கிறானென்றும், வெகு பணம் சம்பாதித்திருக்கிறானென்றும், சீக்கிரத்தில் யானையின் மேலேறி பெருங்கூட்டத்துடன் வருவா னென்றும் சொன்னான்.

அந்தக் கபடவார்த்தையைக் கேட்டு,

1. ஜீவித்திருக்கும் புத்திரனுடைய தகப்பன் அழுது வெகு துயரப்பட்டான்.

2. இறந்த புத்திரனது தகப்பன் வெகு சந்தோஷப்பட்டான்.

இவ்விதத்தால் தேசாந்தரத்தில்,

1. (1) ஈசுவரனாலாக்கப்பட்ட புத்திரன் ஜீவித்திருந்தும் மனோமய புத்திரனிறந்துபோனான். அதனால் துக்கமுண்டாகிறது.
   (2) ஈசுவர சிருஷ்டியாகிய ஜீவித்திருப்பவன்பிதாவிற்குச் சுகமுண்டாகிறதில்லை.

2. (1) அப்படியே இரண்டாவதான ஈசுவரனாலாக்கப்பட்ட புத்திரன் இறந்துபோனான். அவனுக்குத் துக்க முண்டாகவில்லை.
   (2) மனோமயபுத்திரன் ஜீவித்திருந்தலால் அவனுக்குச் சுக முண்டாகிறது.

ஆதலால்,

1. ஜீவசிருஷ்டியே சுகதுக்கங்களுக்குக் காரணமாம்.

2. ஈசுவரசிருஷ்டி சுகதுக்கங்களுக்குக் காரணமன்று.

இவ்விதத்தால் வித்தியாரண்யஸ்வாமிகள் (பஞ்சதசப்பிரகரணத்தின் துவைத விவேகத்தில்) ஜீவசிருஷ்டியையும் ஈசுவரசிருஷ்டியையும் சொல்லியிருக்கிறார்கள். அங்கு,

1. ஜீவசிருஷ்டி பிராதிபாஸிகம்.

2. ஈசுவரசிருஷ்டி வியாவகாரிகம்.

அப்படியே வேறுசில கிரந்தகாரர்களும் சத்தையை மூன்றுவிதமாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

1. சேதனத்தின் சத்தை பாரமார்த்திகம்.

சேதனத்துக்கு வேறான ஜடபதார்த்தங்களின் சத்தை யிருவகைத்து:— ஒன்று வியாவகாரிகம்; மற்றொன்று பிராதிபாஸிகம்.

2. சிருஷ்டியின் ஆதிகாலத்தில் ஈசுவரசங்கற்பத்தா லுண்டான கேவல அவித்தையின் காரியமான பஞ்சபூதங்களும் அவற்றின் காரியங்களும் வியாவகாரிகசத்தை யுடையனவாம்.

3. தோஷசகித அவித்தையின் காரியங்களான சொப்பனம் கிளிஞ்சிலில் வெள்ளிமுதலியவற்றிற்குப் பிராதிபாஸிகசத்தை யுளது.

இவ்விதத்தால்,

1. ஜாக்கிரபதார்த்தங்களுக்கு வியாவகாரிகசத்தையும்,

2. சொப்பனபதார்த்தங்களுக்குப் பிராதிபாஸிகசத்தையும் சொல்லப் படுகின்றன.

**317.** .* அங்ஙனமாயினும், அநாத்மபதார்த்தங்க ளெல்லாவற்றிற்கும் பிராதிபாஸிகசத்தையே யுளது. ஆதலால் சத்தை இருவகைத்தே.

1. சேதனம் பாரமார்த்திகசத்தை.

2. சேதனத்துக்கு வேறான சகல அநாத்மாக்களுக்கும் பிராதிபாஸிகசத்தையே யுளது.

ஜாக்கிரசொப்பனபதார்த்தங்களுக்குச் சிறிதும் விலக்ஷணத்தன்மை சித்திக்கிறதில்லை யென்னும் உத்தமசித்தாந்தத்தைப் பிரதிபாதிப்பாம்:—

தேசகாலசாமக்கிரியின்றிச் சொப்பனத்தின் யானை மலைமுதலிய பதார்த்தங்கள் உண்டாகின்றன. ஆதலால் அவை மித்தை யெனப்படுகின்றன. அப்படியே ஆகாசாதிப்பிரபஞ்சத்தின் சிருஷ்டி பிரஹ்மத்தினின்றும் உண்டாகிறது. அந்தப் பிரஹ்மத்தில் தேசகாலங்கள் அற்பமு மில்லை. சொப்பனத்தில் யானை மலைமுதலியவைகளுக்கு வேண்டிய தேசகாலங்க ளில்லாவிடினும் அற்பதேசகாலங்க ளிருக்கின்றன. அப்படியே ஆகாசாதிகளின் சிருஷ்டியில் அற்பதேசகாலங்களு மில்லை. ஏனெனின், தேசகாலமின்றிய பரமாத்மாவினின்றும் ஆகாசாதிகளின் சிருஷ்டி சொல்லப்பட்டிருக்கிறது.

1. இக்காரணத்தால் தைத்திரீயஉபநிஷத்தில் ஆகாசாதிகளின் சிருஷ்டி கிரமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது; தேசகாலங்களின் சிருஷ்டி சொல்லப் படவில்லை.

* இங்கு 317-முதல் 320-வரையில் திருஷ்டிசிருஷ்டிவாதமே சொல்லப்பட்டிருக்கிறது.

2. சூத்திரகாரபாஷியகாரர்களும் தேசகாலங்களின் சிருஷ்டியைச் சொல்லவில்லை.

சிருஷ்டி யென்பது உற்பத்திக்காம்.

அங்குத் தைத்திரீயஉபநிஷத்திற்கும் சூத்திரகார பாஷியகாரர்களுக்கும் இதுவே அபிப்பிராயமாம் :— ஆகாசாதிப் பிரபஞ்சத்தி னுற்பத்தி தேசகால சாமக்கிரிகளின்றி உண்டாகின்றது. ஆதலால் * ஆகாசாதிகள் சொப்பனம் போல் மித்தையாம்.

**318.** மதுசூதனஸ்வாமிகள் தேசகாலங்களைச் சாக்ஷாத் அவித்தையின் காரிய மென்று சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் மாயாவிசிஷ்ட பரமாத்மா வினின்றும், முதலில் மாயையின் பரிணாமமான தேசகாலங்கள் உண்டாகின்றன. அதன்பிறகு ஆகாசாதிகளின் உற்பத்தி யுண்டாகின்றன. ஆதலால் யோக்கியமான தேசகாலங்களால் ஆகாசாதிப் பிரபஞ்சத்தி னுற்பத்தி சம்பவிக்கிறது.

---

* இங்கே இது இரகசியம் :—ஓர் இரண்டு வலியுடைய புருஷர்கள் சூன்யவனத்தில் தத்தம் வலியுடைமையைப்பற்றி விவாதஞ்செய்து தத்தம் பலத்தைப் பரீக்ஷித்தற் பொருட்டு "எவன் அந்நியனைக் கொல்லுகின்றானோ அவன் வலிமிகுந்தோனுவன்." என்று பிரதிஞ்ஞைசெய்து இருமுனையோடுகூடிய சக்தியை (சஸ்திரவிசேஷத்தை) இடையிற்பிடித்து அதன் ஒவ்வொருமுனையை மார்பிடத்திற்பொருத்தி ஒருவருக்கொருவர் எதிர்முகமாக வலியொடு பொருத இருவரும் மரணமடைந்தனர். அங்ஙனமே பிரஹ்மரூப சூன்யவனத்தில் ஜாக்கிரப்பிரபஞ்சமும் சொப்பனப்பிரபஞ்சமுமாகிய இரண்டுபலமுடைய புருஷ ரிருக்கின்றனர். அவர்களில் ஒருவருக்கொருவரில் ஒருவருக்கொருவரின் திருஷ்டாந்தத்தால் ஒருவருக்கொருவர் அடியுண்டாகின்றது. அதனைக் காட்டுவாம் :—

1. தேசகாலமுதலிய சாமக்கிரியின்றி உண்டாகியது பொய்யாம். எங்ஙனம்:- தேசவடிவசாமக்கிரி பூரணமாயிருந்தும் காலவடிவ சாமக்கிரியின் குறைவால் உண்டாகிய இறகுப்பக்ஷி, ஓட்டுப்பொன்நாணயம், தோற்பாம்புஎன்றல்முதலிய ஐந்திரஜாலிக (மாயாவியினால் ஆக்கப்பட்ட) பதார்த்தம் மித்தை யெனப்படுகின்றது.

அங்ஙனமே ஹிதையென்னும் கண்டத்தின் நாடியாகிய அற்பதேசத்திலும் அற்ப காலத்திலும் உண்டாகிய சொப்பனப்பிரபஞ்சம் மித்தையாம். அதன் திருஷ்டாந்தத்தால் (அதற்கொத்ததாயிருத்தலால்) ஜாக்கிரப்பிரபஞ்சம் மித்தையாம். இவ்வாறு சொப்பனத்தின் திருஷ்டாந்தத்தால் ஜாக்கிரத்திற்கு அடி யுளது.

2. அங்ஙனமே தேசகாலவடிவ சாமக்கிரி லேசமு மில்லாத பிரஹ்மத்தில் ஜாக்கிரப்பிரபஞ்சம் தோற்றுகிறது. ஆதலால் அது அசத்தாம். ஏனெனின், தோற்றுகின்ற தேசகாலமோ ஜாக்கிரப்பிரபஞ்சத்தி லடங்கியதாம். அவற்றிற்குப் பின்னமான தேசகாலம் பிரபஞ்சத்தின் காரணமெனின், அவனை (1) அத்தேசகாலங்கள் பிரஹ்மத்தின் அபின்னமா? (2) அல்லது பின்னமா? என்று கேட்கவேண்டும்.

அங்ஙனமாயினும், மதுசூதனஸ்வாமிகளுக்குத் தேசகாலங்கள் முதலி லுண்டாகின்றன ஆகாசாதிகள் பின்னுண்டாகின்றன என்பது அபிப்பிராய மன்று. ஏனெனின்,

1. சென்றகாலத்திலிருப்பது முதல் அல்லது முன் எனப்படுகிறது.

2. வருங்காலத்தில் இருப்பதற்குப் பிறகு, பின் என்று பெயர்.

ஆகாசாதிகளி னுற்பத்திக்குமுன் தேசகாலங்கள் உண்டாயிற் றென்று சொல்லுதலால் ஆகாசாதிகளி னுற்பத்திகாலத்துக்கு முற்கால உபாதியுடைய

---

(1) அபின்னமெனின், பிரஹ்மத்திற்கு வேறான தேசகாலங்களின்மையால் தேசகாலமின்றிய பிரஹ்மத்தில் பிரபஞ்சத்தின் பிரதீதி சித்தமாயிற்று.

(2) பிரஹ்மத்திற்கு வேறான தேசகாலங்களைக் கூறின், [1] அவை சத்தியமா? [2] அல்லது மித்தையா?

[1] சத்தியமெனின் அத்வைதசுருதிக்கு விரோத முண்டாம்.

[2] மித்தையெனின் அவையும் பிரபஞ்சத்தைப்போல காரியமாதலின் அவற் றிற்குக் காரணமாகவும் ஓர் தேசகாலத்தைச் சொல்லவேண்டும்.

(க) தனக்குக் காரணம் தானேயாயின் ஆத்மாசிரயம் (தன்னைப்பற்றுதல்) உண் டாகும்.

(ங) முதற்றேசகாலங்களுக்குக் காரணம் இரண்டாவதும் இரண்டாவதற்கு முதலாவதுமாமெனின், ஒன்றன் உற்பத்தியில் ஒன்றன் அபேக்ஷையிருத்தலால் அந்நி யோந்நியாசிரயம் (ஒன்றையொன்றுபற்றுதல்) உண்டாகும்.

(ச) இரண்டாவதற்கு மூன்றாவதும் பின் மூன்றாவதற்கு முதற்றேசகாலமும் காரணமெனின், சக்கரம்போற் சுழல்தலாகிய சக்கிரிகை யுண்டாகும்.

(ஞ) மூன்றாவது தேசகாலங்களுக்குக் காரணம் நான்காவதும் நான்காவதற்குக் காரணம் ஐந்தாவதுமா மெனின், அநந்ததேசகாலங்களின் தாரைவடிவ அநவஸ்தை (வரம்பின்மை) உண்டாகும்.

ஆதலால் பிரஹ்மத்தில் ஓர் தேசகாலமும் சித்திக்கிறதில்லை. இவ்வாற்றால் தேச காலமின்றிய பிரஹ்மத்தினின்றும் ஜாக்கிரஜகத்தின் உற்பத்தி தோற்றுகின்றது: ஆதலால் ஜாக்கிரப்பிரபஞ்சம் அசத்தாம் (துச்சமாம்).

அல்லது ஜாக்கிரகாலத்தில் சொப்பனபதார்த்தங்களின் ஸ்மிருதியுண்டாகின்றது. சொப்பனத்தில் அநேகமாக ஜாக்கிரபதார்த்தங்களின் ஸ்மிருதி யுண்டாகிறதில்லை. இதனாலும் ஜாக்கிரப்பிரபஞ்சம் அசத்தாம். அதன் திருஷ்டாந்தத்தால் (அதற்கொத்த தாயிருத்தலால்) சொப்பனப்பிரபஞ்சமும் அசத்தாம் (மலடிமைந்தனுக்குச் சமான மாம்). எப்போது ஜாக்கிரத்திற்கு அபாவ மிருக்கிறதோ அப்போது அதனுள்ளடங்கிய சமாதியவஸ்தைக்கும் சேதனத்தில் அபாவ மிருக்கின்றது. எப்போது ஜாக்கிரசொப் பனங்களுக்கு அபாவமிருக்கிறதோ, அப்போது இரண்டவஸ்தைகளிலு மிருக்கும் புத்தி யினின்மையால், அதன் விலயவடிவ சுழுத்திக்கும் சுழுத்தியி னுள்ளடங்கிய மரண மூர்ச்சைகளுக்கும் அபாவ மிருக்கின்றது.

இவ்வாற்றால் பிரஹ்மத்தில் சகலப் பிரபஞ்சமும் சித்தியாமையால் அஜாதவாதம் சித்தமாகின்றது.

பரமாத்மா தேசகாலங்களுக் கதிஷ்டானமா மென்பது சித்திக்கிறது. இதனுல் தேசகாலங்களின் உற்பத்தியில் பூர்வகாலத்தின் அபேக்ஷை யுண்டாகும். காலத்தி னுற்பத்தியின்றி பூர்வகாலஞ் சித்திக்கிறதில்லை. ஆதலால் ஆகாசாதி களுக்கு முன் தேசகாலாதிகள் உளவாகின்றன வென்று சொல்லுதல் * பொருந்தாது.

1. ஆனல் மதுசூதனஸ்வாமிகளின் அபிப்பிராயம் இதுவாம்:—பூத பௌதிகப்பிரபஞ்சம் பிரதீதியாவதுபோலத் தேசகாலங்களும் பிரதீதியா கின்றன.

(1) ஆத்மாவுக்கு வேருன எவையும் நித்திய மன்று. ஆதலால் தேச காலங்கள் நித்திய மன்று.

(2) இல்லாதபதார்த்தம் பிரதீதியாகாது. ஆகையால் ஆகாசாதிகள் போலத் தேசகாலங்களும் உற்பத்தி யாகின்றன.

அத்தேசகாலங்கள் மாயையின் பரிணுமமும் சேதனத்தின் விவர்த்த முமாம். எது விவர்த்தமோ அது எதற்கும் காரண மாகாது. ஆகையால் ஆகாசாதிப்பிரபஞ்ச உற்பத்தியில் தேசகாலங்கள் காரணமாதல் * பொருந் தாது.

2. அல்லது காரணம் முதலிலும் காரியம் பின்னரும் இருக்கின்றன. ஆகா சாதிப்பிரபஞ்சத்துக்குமுன் தேசகாலமுண்டானதாகச் சொல்வது சரியன்று என்பது சமீபத்திலேயே சொல்லப்பட்டு வந்திருக்கிறது. இதனுலும் தேச காலங்கள் ஆகாசாதிப்பிரபஞ்சத் துக்குக் காரணமாதல் பொருந்தாது. ஆனல் சொப்பனத்தின் பிதாபுத்திரன்போல் தேசகாலசகித ஆகாசாதிப்பிரபஞ்சம்

---

* தேசகாலங்களின் உற்பத்தியில் பூர்வ(சென்ற)காலத்தைக் காரணமெனக் கொள்ளின், அந்தப் பூர்வகாலத்தின் உற்பத்தியில் யாதேனும் ஓர்காரணத்தைக் காரணமெனக் கொள்ளல்வேண்டும்.

1. அது தனது உற்பத்தியில் தானே காரணமாயின் ஆத்மாசிரய முண்டாகும்.

2. அதற்கு அந்நியபூர்வகாலமும் அந்நியத்திற்குத் தானும் காரணமெனின் அந்நி யோந்நியாசிரய முண்டாகும்.

3. இரண்டாவது பூர்வகாலத்திற்குக் காரணம் மூன்ருவது பூர்வகாலமும் மூன் ருவது பூர்வகாலத்திற்குக் காரணம் முதற்பூர்வகாலமுமா மெனின் சக்கிரிகை யுண் டாகும்.

4. மூன்ருவது பூர்வகாலத்திற்குக் காரணம் நான்காவது பூர்வகாலமும் நான்கா வதற்குக் காரணம் ஐந்தாவது பூர்வகாலமுமா மெனின் அநவஸ்தை யுண்டாகும்.

இவ்வாற்ருல் தோஷசமூகங்களி னிருப்பால் தேசகாலங்களின் உற்பத்தியில் பூர்வகாலத்தைக் காரணமெனக் கொள்ளுதல் பொருத்தமின்றியதாம்,

மாயாவிசிஷ்ட பரமாத்மாவினின்றும் உற்பத்தியாகின்றது. ஒருபொருள் யாதேனும் ஒருதேசத்தில் யாதேனும் ஒருகாலத்திலுண்டாகிறது; அன்னிய தேசத்தில் அன்னியகாலத்திலுண்டாகிறதில்லை. அதுபோலச் சகலபதார்த்தங் களும் பிரளயகாலத்தி லுண்டாகிறதில்லை; சிருஷ்டிகாலத்தி லுண்டாகின்றன. அதனால் தேசகாலங்கள் காரணங்களாகத் தோன்றுகின்றன. அங்ஙனமாயி னும் எந்த மாயையிலிருந்து தேசகாலசகிதப்பிரபஞ்ச முற்பத்தியாகிறதோ, அந்த மாயையினாலேயே தேசகாலங்களில் காரணத்தன்மையும் அன்னியப் பிரபஞ்சத்தில் காரியத்தன்மையும் பிரதீதியாகின்றன. ஆகாசாதிப்பிரபஞ் சத்துக்குத் தேசகாலங்கள் காரண மன்று.

## 319. பிரஹ்மத்தின் காரணத்துவம் தேசகாலங்களில் தோற்று கின்றது என்றல் முதலிய இடங்களில் அந்நியதாக்கியாதி யின் அங்கீகாரம் (319-321)

இதில் இவ்வாறு சங்கை யுண்டாகின்றது:—(பூர்வபக்ஷி) இல்லாத பதார்த் தம் தோற்றாது; சித்தாந்தத்திலும் அங்கீகார மில்லை. இல்லாத பதார்த்தம் தோற்றுமெனக் கொள்ளின்,

1. அசத்கியாதியின் அங்கீகாரமுண்டாம்.

2. இல்லாதமலடிமகன் முயற்கொம்பு முதலியன தோற்றவேண்டும். அப்படித் தோற்றாமையால் இல்லாதபதார்த்தம் பிரதீதியாகாது.

ஆதலால் தேசகாலங்களில் காரணத்தன்மை இல்லாதபக்ஷத்தில் தேச காலங்களில் சர்வபதார்த்தங்களின் காரணத்தன்மை மாயையின் பலத்தாலும் உண்டாகலாகாது. காரணத்தன்மை தேசகாலங்களில் தோற்றுகிறது. தேச காலங்கள் சகலப் பிரபஞ்சத்துக்கும் காரணங்களாம்.

சகலப் பிரபஞ்சத்துக்கும் காரணம் பிரஹ்மம். பிரஹ்மத்தின் காரணத் தன்மை தேசகாலத்தில் பிரதீதியாகின்றது. தேசகாலங்களில் காரணத் தன்மையில்லை யென்று சித்தாந்தி சொல்லுவதும் பொருந்தாது. ஏனெனின்,

1. தேசகாலங்களுக்கு அதிஷ்டானம் பிரஹ்மமா யிருப்பதுபோலச் சகலப் பிரபஞ்சத்துக்கும் பிரஹ்மம் அதிஷ்டானமா யிருக்கிறது. தேசகாலங் களிற்றான் பிரஹ்மத்தின் காரணத்தன்மை பிரதீதியாகிறது; மற்றவற்றில் ஆகிறதில்லையென்று சொல்லுதற்கு யாதொரு காரணமு மில்லை. ஆதலால் அதிஷ்டானப் பிரஹ்மத்தின் காரணத்தன்மை தேசகாலங்களில் பிரதீதியாகு மாயின், பிரஹ்மம் சர்வப் பிரபஞ்சத்திற்கும் அதிஷ்டானமாயிருத்தலால் சர்வப் பிரபஞ்சத்திலும் காரணத்தன்மை தோற்றவேண்டும். சிலவற்றிற் காரணத்தன்மை சிலவற்றிற் காரியத்தன்மை யென்னும் பேதம் கூடாது.

2. அல்லது தேசகாலங்களில் காரணத்தன்மை யில்லை; பிரஹ்மத்தில் காரணத்தன்மை யிருக்கிறது. இந்தப் பிரஹ்மத்தின் காரணத்தன்மை தேச காலங்களில் தோற்றுகிறதென்று சொல்லுவதனால் அந்நியதாக்கியாதியின் அங்கீகாரமுண்டாகும். ஏனெனின், அந்நியவஸ்து அன்னியரூபமாகத் தோற்றல் அந்நியதாக்கியாதி யென்று சொல்லப்படும்; தேசகாலங்கள் காரண மன்று. ஆதலால் தேசகாலங்கள் காரணத்துக்கு அன்னியமான அகாரண மாயிருக்கின்றன. அவை (அகாரணம்) அன்னியரூபமாக அதாவது காரண ரூபமாகத் தோற்றுவதை யங்கீகரிப்பதில் அன்னியதாக்கியாதியின் அங்கீகார முண்டாகும். சித்தாந்தத்தில் அன்னியதாக்கியாதி அங்கீகரிக்கப்படவில்லை.

இந்தவிடத்தில் அன்னியதாக்கியாதியை யங்கீகரித்தால், கிளிஞ்சிலில் அநிர்வசனீயவெள்ளியி னுற்பத்தி சித்தாந்தத்தில் ஒப்பப்பட்டிருக்கிறது; அது நிஷ்பலமாகும். ஏனெனின், அன்னியதாக்கியாதியில் இரண்டுமேதங் களுள:—

(1) ஒரு இடத்திலிருக்கிற பதார்த்தம் வேறிடத்தில் தோற்றுவது அந்நியதாக்கியாதியாம். அது ஸ்திரீயின் கையிலிருக்கிற வெள்ளி எதிரிலிருக் கும் கிளிஞ்சிலில் தோற்றுவதுபோலாம்.

(2) அல்லது ஒருபொருள் வேறுரூபமாகத் தோற்றுவது அந்நியதாக் கியாதியாம். அது கிளிஞ்சிலே வெள்ளிரூபமாகத் தோற்றுவதுபோலாம்.

இவ்வாறு சகலப்பிரமஸ்தலங்களிலும் அந்நியதாக்கியாதியினால் நிர்வாகம் சம்பவிக்கிறது. அநிர்வசனீயரஜதமுதலியவற்றின் உற்பத்தி கூறுதல் அசங்கத மாகும்.

விஷயத்தின் சமானவடிவமாக ஞான முண்டாகிறது. ஒருவஸ்துவின் ஞானம் வேறுரூபத்தா லுண்டாகாது. ஆகையால் ரஜதாகாரமான ஞானத் தின் விஷயமும் அநிர்வசனீயரஜதமும் உற்பத்தியாகிறது. இந்த அத்துவைத சித்தாந்தத்தில் காரணத்திற் கன்னியமான தேசகாலங்களில் பிரஹ்மத்தினது காரணத்தன்மையின் ஞான முண்டாகாது. ஏனெனின், தேசகாலங்களில் பிரதீதியாகும் காரணத்தன்மை எதுவோ அது இல்லாமலாவது, அல்லது பிரஹ்மத்திலிருந்துகொண்டாவது விளங்கமாட்டாது. தேசகாலங்களிலேயே காரணத்தன்மை யிருக்கிறது; அது விளங்குகிறது.

இவ்விதத்தால் "ஆகாசாதிப்பிரபஞ்சத்துக்குத் தேசகாலங்கள் காரண மல்ல" வென்று சித்தாந்தி கூறுவாராயின் அவ்வார்த்தை அசங்கதமாம்.

320. [சித்தாந்தி :—] அச்சங்கை பொருந்தாது. ஏனெனின், பிரஹ்ம மத்தின் காரணத்தன்மை தேசகாலங்களில் பிரதீதியாகிறது. செம்பரத்தம் பூவின் சம்பந்தமுடைய ஸ்படிகத்தில் அப்பூவின் சிவப்புவர்ணம் தோற்று

கிறது. அதிஷ்டானத்தின் சத்தியத்தன்மை சொப்பனகாலத்தில் மித்தையான யானை பர்வதமுதலியவற்றில் பிரதீதியாகிறது. அங்கு ஸ்படிகத்தில் அநிர்வசநீயமான சிவப்புவர்ணத்தி னுற்பத்தி அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால் புஷ்பத்தின் சிவப்புவர்ணம் ஸ்படிகத்தில் தோற்றுகிறது. ஆதலால் வெண்மையான ஸ்படிகம் சிவப்புருவமாய்த் தோற்றுவதால் சிவப்பின் ஞானத்தில் அந்நியதாக்கியாதியே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

அப்படியே சொப்பனத்தின் மித்தியாபதார்த்தங்களில் சத்தியத்தன்மை தோற்றுகிறது. அங்கு அநிர்வசநீய சத்தியத்தன்மை அந்தப் பொருளில் உண்டாகிறது. இவ்வார்த்தையே "மெய்யான பொய்யாம்" என்னும் (வியாகாததோஷமுடைய) வசனம்போலப் பொருந்தாததாம். இல்லாதது பிரதீதியாகாது. ஆனால் சொப்பனத்தின் அதிஷ்டான சேதனத்தின் சத்தியத்தன்மை மித்தியாபதார்த்தங்களில் பிரதீதியாகிறது, ஆதலால் மித்தியாபதார்த்தம் சத்தியரூபமாய்த் தோற்றுதலால் சத்தியத்தன்மையின் ஞானத்தில் அந்நியதாக்கியாதியே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே அதிஷ்டானப் பிரஹ்மத்தின் காரணத்தன்மை தேசகாலங்களில் அந்நியதாக்கியாதியாகப் பிரதீதியாகின்றது.

**321.** இவ்வளவு இடத்தில் அந்நியதாக்கியாதியை ஒப்பினால் எல்லாப் பிரமஸ்தலங்களிலும் அந்நியதாக்கியாதியையே ஒப்பவேண்டுமென்று கூறின்,

அச்சங்கை பொருந்தாது. ஏனெனின், கிளிஞ்சிலில் வெள்ளிதோற்றுமிடத்தில் அந்நியதாக்கியாதியை அங்கீகரிப்பதில் விஷயத்துக்கு விலக்ஷணமான ஞானம் பொருந்தாது என்னும் தோஷம் சொல்லப்பட்டிருக்கிறது.

எங்கு ஸ்படிகத்தில் சிவப்புவர்ணத்தின் ஞான முண்டாகிறதோ அங்குச் சிவப்புப் புஷ்பத்திற்கு ஸ்படிகத்துடன் சம்பந்த மிருக்கிறது. ஆதலால் ஸ்படிக சம்பந்தமுடைய புஷ்பத்தின் சிவப்புவர்ணம் ஸ்படிகத்தில் பிரதீதியாகிறது. ஏனெனின், அந்தக்கரணத்தின் விருத்தி சிவப்புப் புஷ்பாகார மாகும்போது அந்தவிருத்திக்கு விஷயம் சிவப்புப்புஷ்பத்துடன் சம்பந்தப்பட்ட ஸ்படிகமாம். ஆதலால் புஷ்பத்தின் சிவப்புவர்ணம் ஸ்படிகத்தில் தோற்றுகிறது. [அங்ஙனமே] சுத்தி வெள்ளிரூபத்தினால் அறியப்படமாட்டாது. ஏனெனின், சுத்திதேசத்தில் அநிர்வசநீயமாயும் வியாவகாரிகமாயுமிருக்கிற வெள்ளி அந்நியமதத்தில் இல்லை; ஆனால் சுத்தி இருக்கிறது. அந்தச் சுத்தியின் சம்பந்தத்தால் சுத்தியின் சமானாகாரமாகவே அந்தக்கரணவிருத்தி யுண்டாகும். ரஜதாகார அந்தக்கரணவிருத்தி யுண்டாகாது. ஆதலால் அவித்தையின் பரிணாமமும் சேதனத்தின் விவர்த்தமுமான அநிர்வசநீய வெள்ளியும் அதன் ஞானமுமாகிய விரண்டு முண்டாகின்றன.

சிவப்புவர்ணம் ஸ்படிகத்தில் பிரதீதியாகிறது. அங்கு அந்தக்கரணவிருத்திக்கு ஸ்படிகத்துடனும் சிவப்புப் புஷ்பத்துடனும் சம்பந்த முண்டாகிறது. சிவப்புப் புஷ்ப சம்பந்தத்தால் சிவப்புவடிவ விருத்தி யுண்டாகிறது. அவ்விருத்திக்கு ஸ்படிகத்துடனும் சம்பந்த மிருக்கிறது. ஸ்படிகத்தில் சிவப்பின் சாயை யிருக்கிறது. ஆதலால் புஷ்பத்தின் தர்மம் சிவப்பு வர்ணமாம். ஸ்படிகத்தில் அவ்விருத்திக்கே விஷயமாகிறது.

இவ்விதத்தால்,

1. எங்கு இரண்டுபதார்த்தங்களின் சம்பந்த மிருக்கிறதோ அங்கே ஒன்றன் தர்மம் மற்றொன்றில் தோற்றுதல் சம்பவிக்கிறது. அங்கு அந்நிய தாக்கியாதியே சம்பவிக்கிறது.

2. எங்கு இரண்டுபதார்த்தங்களின் சம்பந்தமு மில்லையோ அங்கு அந்நியதாக்கியாதி இல்லை; ஆனால் அநிர்வசநீயக்கியாதி யிருக்கிறது. புஷ்பத்துடன் சம்பந்தமுடைய ஸ்படிகத்தில் புஷ்பத்தின் சிவப்புவர்ணம் பிரதீதியாவது போலச் சொப்பனத்தின் யானை மலைமுதலியவைகளுக்கும் அதிஷ்டான சேதனத்துடன் சம்பந்த மிருக்கிறது. ஆதலால் சேதனத்தின் தர்மமாகிய சத்தியத்தன்மையும் சேதனத்துடன் சம்பந்தமுடைய யானை மலைமுதலியவற்றிற் பிரதீதியாகிறது. அது அந்நியதாக்கியாதியாம். அப்படியே அதிஷ்டான சேதனத்தின் தர்மமாகிய காரணத்தன்மை அதிஷ்டானசேதனத்தோடு சம்பந்தமுடைய தேசகாலங்களில் பிரதீதியாகிறது.

## 322. ஜாக்கிரப்பிரபஞ்சம் சாமக்கிரியின்றி யுண்டாகிறது. ஆதலால் சொப்பனசமானமாய் மித்தையாமெனல்.

"அதிஷ்டான சேதனத்தின் சம்பந்தம் சகலப் பிரபஞ்சத்துடனு மிருக்கிறது. சம்பந்தியின் தர்மம் அந்நியதாக்கியாதியினால் அந்நியத்திற் பிரதீதியாமாயின், சேதனத்தின் காரணத்தன்மை சகலப்பிரபஞ்சத்திலும் பிரதீதியாகவேண்டு"மென்று முன் சங்கிக்கப்பட்டது.

அச்சங்கை பொருந்தாது. ஏனெனின்,

1. சொப்பனத்தில் இரண்டு சரீரங்கள் உண்டாகின்றன.

(1) ஒன்று பிதாரூபமாய்த் தோற்றுகின்றது.

(2) ஒன்று புத்திரரூபமாய்த் தோற்றுகின்றது.

அங்கு இரண்டுசரீரங்களுக்கும் சொப்பனத்தின் அதிஷ்டானசேதனத்துடன் சம்பந்தம் இருந்தாலும், பிதாசரீரத்தில் அதிஷ்டானசேதனத்தின் காரணத்தன்மை பிரதீதியாகிறது. புத்திரசரீரத்தில் காரணத்தன்மை பிரதீதி

யாகிறதில்லை. பிதாவாற் பெறப்படுபவன் புத்திரனென் றிவ்வாறு புத்திர சரீரத்தில் காரியத்தன்மை பிரதீதியாகிறது. இவ்விதத்தால் அதிஷ்டான சேதனத்தின் சம்பந்தம் எல்லாவற்றிற்கு மிருந்தாலும், தேசகாலங்களில் சேதனதர்மமான காரணத்தன்மையின் பிரதீதியும் பிறவற்றில் காரியத்தன் மையின் பிரதீதியு முண்டாகின்றன.

2. அல்லது அதிஷ்டானசேதனம் அசங்கமா யிருக்கிறது. அது எதற் கும் பரமார்த்தமாகக் காரண மன்று. மாயையிலுள்ள ஆபாஸன் காரணமா யிருந்தாலும் ஆபாஸனுடைய சொரூபம் மித்தை யாகின்றது. எது தானே மித்தையாக இருக்கிறதோ அது வேறொன்றற்குக் காரண மாகாது. ஆதலால் பரமாத்மாவில் பிரபஞ்சத்தின் காரணத்தன்மை யுளதாயின், அது தேசகாலங் களில் பிரமத்தாற் பிரதீதியாகக்கூடும். பரமாத்மாவினிடத்தில் காரணத் தன்மையில்லை. பரமாத்மா காரணத்தன்மைமுதலிய தர்மங்களின்றி அசங் கமாயிருக்கிறது. அதன் காரணத்தன்மை தேசகாலங்களில் தோற்றுகிறது என்று கூறுதல் பொருந்தாது. ஆனல் மாயையாலுண்டான அநிர்வசநீய தேசகாலங்கள் அநிர்வசநீயகாரணத்தன்மையுடையன வாகின்றன.

பரமார்த்தத்தால் தேசகாலங்கள் காரண மாகா. புத்திரனில்லாதவன் சொப்பனத்தில் புத்திரனையும் பேரனையும் பார்க்கிறான். அங்குப் புத்திரபௌ த்திர சரீரங்கள் அநிர்வசநீயமா யுண்டாகின்றன. புத்திரசரீரத்தில் பௌத்திர சரீரத்தின் அநிர்வசநீய காரணத்தன்மை யுண்டாகிறது. அங்குப் பரமார்த்த மாகப் புத்திரபௌத்திர சரீரங்களுக்குப் பரஸ்பரம் காரணகாரியபாவங்க ளில்லை. அதுபோலத் தேசகாலங்கள் அநிர்வசநீயகாரணங்களாகப் பிரதீதியா கின்றன. பரமார்த்தமாகத் தேசகாலங்களுக்கும் ஆகாசாதிப் பிரபஞ்சத்துக் கும் காரணகாரியத்தன்மைக ளில்லை.

இவ்விதத்தால் தேசகால சாமக்கிரிகளின்றி ஜாக்கிரப்பிரபஞ்ச முண் டாகிறது. ஆதலால் சொப்பனம்போல் ஜாக்கிரமும் மித்தையாம்.

சொப்பனத்தின் ஸ்திரீ புத்திராதிகள் சொப்பனத்திலேயே சுகதுக்காதி களுக்கு ஹேதுக்களா யிருக்கின்றன; ஜாக்கிரத்தில் அவர்க ளில்லை. அப்படியே ஜாக்கிரபதார்த்தங்கள் சொப்பனத்தி லில்லை; ஆதலால் ஜாக்கிரசொப்பனங் கள் சமமாம்.

## 323. ஜாக்கிரபதார்த்தங்கள் ஞானத்தின்கூடவே உற்பத்தி யாகின்றன. ஆதலால் வேறு ஜாக்கிரத்தில் இருப்பதில்லையெனல் (323–324).

ஜாக்கிரத்தினின்று சொப்பனமுண்டாகி மறுபடியும் ஜாக்கிர முண்டா கும்போது, அங்கு முதல்ஜாக்கிரத்தின் பதார்த்தம் எதுவோ அதுவே சொப்

பனவியவஹித (சொப்பனத்தால் மறைக்கப்பட்ட) இரண்டாவது ஜாக்கிரத்திலிருக்கிறது. முதல் சொப்பனத்தின் பதார்த்தம் இரண்டாவது சொப்பனத்திலிருக்கிறதில்லை. ஆகையால் சொப்பனபதார்த்தங்களினும் ஜாக்கிரபதார்த்தங்கள் வேறும் என்று கூறின்,

அச்சங்கையும் சித்தாந்தத்தை யறியாத மூடனது திருஷ்டியா லுண்டாகிறது. ஏனெனின் மூர்க்கனுடைய திருஷ்டி யிவ்வாறிருக்கின்றது. சமுசாரப் பிரவாகம் அநாதி. அதில் ஜீவனுக்கு ஜாக்கிரஸ்வப்பனசுழுத்தி யுண்டாகின்றது.

1. ஜாக்கிரகாலத்தில் சொப்பனமும் சுழுத்தியும் நஷ்டமாகின்றன.

2. சொப்பனகாலத்தில் ஜாக்கிரமும் சுழுத்தியும் நஷ்டமாகின்றன.

3. அங்ஙனமே சுழுத்திகாலத்தில் ஜாக்கிரசொப்பனங்கள் நஷ்டமாகின்றன.

ஆனல் "சொப்பனசுழுத்திக ளுண்டாகும்போது ஜாக்கிரகாலத்தின் ஸ்திரீ புத்திரபசுதனுதிகள் நீங்காமல் இருந்துக்கொண்டே யிருக்கின்றன. அவற்றின் ஞானந்தான் நீங்குகிறது. மறுபடியும் ஜாக்கிர முண்டாகும்போது முதல் ஜாக்கிரத்திலிருந்த பதார்த்தங்களின் ஞான முண்டாகிறது." என்பது அஞ்ஞானிகளாகிய மூர்க்கர்களது திருஷ்டியாம்.

**324.** சித்தாந்த மிதுவாம்:—

1. பதார்த்தங்களெல்லாம் சேதனத்தின் விவர்த்தமும்,

2. அவித்தையின் பரிணுமமுமாம்.

ஆதலால் கிளிஞ்சில்வெள்ளிபோல் எந்தக் காலத்தில் எந்தப் பதார்த்தம் பிரதீதியாகிறதோ, அந்தக் காலத்தில் அதிஷ்டான சேதனத்தை யாசிரயித்த அவித்தையின் இருவகைப் பரிணுமங்க ளுண்டாகின்றன.

1. அவித்தையின் தமோகுணும்சம் கடாதி விஷயரூபமாகப் பரிணமிக்கிறது.

2. அவித்தையின் சத்துவகுணும்சம் ஞானரூபமாகப் பரிணமிக்கிறது.

சேதனத்தை ஞானமாகச் சொல்லுதலால் சத்துவகுணத்தின் பரிணுமம் ஞானமா மென்று சொல்லுதல் பொருந்தாது. என்றலும் வியாபகசேதன முழுவதும் ஞான மன்று; ஆனல் ஆபாஸசகிதவிருத்தியி லாரூடமான சேதனத்தை ஞான மென்பர்.

ஆகையால் சேதனத்தில் ஞானவியவகாரத்தைச் சம்பாதிப்பது விருத்தியாம். இவ்வாறு சேதனத்தில் ஞானத்தன்மையைச் சம்பாதிப்பது விருத்தியாம்.

இவ்வாற்றால் சேதனத்திலுள்ள ஞானத்தன்மைக்கு உபாதி விருத்தியாம். அதினிடத்திலும் ஞானசப்தம் பிரயோகிக்கப்படுகின்றது. "கடத்தின் ஞான முண்டாயிற்று" என்றும், "படத்தின் ஞானம் நஷ்டமாயிற்று" என்றும் உலகத்திற் சொல்லுகிறார்கள். அங்கு விருத்தியிலாரூடமான சேதனத்துக்கு உற்பத்திநாசங்கள் சம்பவிக்கிறதில்லை; விருத்திக்கு உற்பத்திநாசங்க ளுண்டாகின்றன. ஞானத்துக்கு உற்பத்திநாசங்கள் சொல்லப்படுகின்றன. ஆதலால் விருத்தியிலும் ஞானசப்தம் பிரயோகிக்கப்படுகிறது.

அந்த விருத்திரூப ஞானம் சத்துவகுணத்தின் பரிணாமமாம் என்று கூறுதல் சம்பவிக்கிறது.

1. அந்த விருத்திரூப பரிணாமத்தில் சேதனத்தின் ஆபாசம் உண்டாகிறது.

2. கடாதிவிஷயரூப பரிணாமத்தில் சேதனத்தின் ஆபாஸ முண்டாகிறதில்லை.

ஏனெனின், விஷயமும் விருத்தியும் இரண்டும் அவித்தையின் பரிணாமங்களா யிருக்கினும்,

1. கடாதிவிஷயம் அவித்தையின் தமோகுணபரிணாமமாம். ஆதலால் மலினமா யிருக்கிறது. அதில் ஆபாஸன் உண்டாகிறதில்லை.

2. விருத்தி சத்துவகுணபரிணாமமாய்ச் சொச்சமா (பளபளப்புள்ளதா) யிருக்கிறது. அதில் ஆபாஸ முண்டாகிறது.

இவ்விதத்தால்,

1. விருத்திக்குச் சேதனத்தின் ஆபாஸத்தைக் கொள்ளுதலில் தகுதியிருத்தலால் விருத்தியவச்சின்னசேதனம் ஞான மெனப்படும். சாக்ஷி யென்றும் சொல்லப்படுகிறது.

2. கடாதிவிஷயங்களுக்கு ஆபாஸத்தைக் கிரக்கும் யோக்கியதையில்லை. இக்காரணத்தால் விஷயாவச்சின்னசேதனம் ஞான மன்று; சாக்ஷியு மன்று.

இவ்விதத்தால் ஜாக்கிரத்தின் பதார்த்தங்களும் அவற்றின் ஞானமும் கூடவே யுண்டாகின்றன; கூடவே நஷ்டமாகின்றன. இது வேதத்தின் இரகசிய சித்தாந்தம். ஆதலால் ஜாக்கிரத்தின் பதார்த்தங்கள் இரண்டாவது ஜாக்கிரத்தில் இருக்கின்றன என்று கூறுதல் சம்பவியாது.

## 325. ஜாக்கிரத்தினது பதார்த்தங்களுக்கு ஒன்றற்கொன்று காரணகாரியத்தன்மை யில்லை (325–327).

சொப்பனத்தினின்றும் விழித்துக்கொண்டவனுக்கு "முன் எந்தப் பதார்த்தங்க ளிருந்தனவோ அவையே இவை" என்னும் பிரத்தியபிஞ்ஞை யுண்டா

கிறது. ஆதலால் ஜாக்கிரபதார்த்தங்களுக்கு ஞானத்தின் சமகாலத்தில் உற்பத்திநாச முண்டாகிறதில்லை. ஆனால் அவை ஞானத்துக்குமுன் இருக்கின்றன; ஞானத்தின் நாசத்துக்குப் பின்னு மிருக்கின்றன.

அங்ஙனமாயினும், சொப்பனபதார்த்தங்கள் அந்த க்ஷணத்தில் உற்பத்தியாய், "நான் பிறப்பதற்குமுன் இந்த மலை சமுத்திரமுதலியன உண்டாயிருக்கின்றன" வென்று தோற்றுகின்றன. அங்குத் தற்காலமுண்டாகிய பதார்த்தங்களில் வெகுகாலஸ்திரத்திருத்தற்பிராந்தி யுண்டாகிறது. ஆதலால் எந்த அவித்தை மித்தையான மலை சமுத்திரமுதலியவற்றை யுண்டாக்கியிருக்கின்றதோ, அவ்வவித்தையினாலேயே வெகுகாலஸ்திரத்தன்மையும் ஸ்திரத்தன்மையின் பிரதீதியும் அநிர்வசநீயமா யுண்டாயிருக்கின்றன. அதுபோல ஜாக்கிரபதார்த்தங்களிலும் வெகுகாலஸ்திரத்திருத்தற்றன்மை யில்லை. ஆனால் அவித்தையின் பலத்தினால் * மித்தையான ஸ்திரத்தன்மையும் அந்தப் பதார்த்தங்களோடு உற்பத்தியாகிப் பிரதீதியாகிறது.

இவ்வாறு கூறின்,

1. சொப்பனபதார்த்தம் சாக்ஷாத் அவித்தையின் பரிணாமமாம்,

2. ஜாக்கிரபதார்த்தம் சாக்ஷாத் அவித்தையின் பரிணாமமன்றும்.

ஆனால் கடத்தினுற்பத்தி தண்டம் சக்கரம் குலாலன் என்பவற்றாலுண்டாவதுபோல் சகல பதார்த்தங்களி னுற்பத்தியும் தத்தம் காரணத்தா லுண்டாகிறது; சாக்ஷாத் அவித்தையா லுண்டாகிறதில்லை. சாக்ஷாத் அவித்தையின் பரிணாமமா யிருக்குமாயின், ஆகாசாதிக்கிரமத்தால் பஞ்சபூதங்களின் உற்பத்தியும், பஞ்சீகரணமும், அவற்றினின்று பிரஹ்மாண்டத்தி னுற்பத்தியும் சுருதியிற் சொல்லப்பட்டிருக்கிறது. அது அசங்கதமாம். ஆதலால் ஈசுவரசிருஷ்டியாகிய ஜாக்கிரபதார்த்தங்கள் தத்தம் உபாதானத்தின் பரிணாமங்களாம்; சாக்ஷாத் அவித்தையின் பரிணாமங்க ளன்று,

1. சொப்பனத்தின் சகல பதார்த்தங்களும் அவித்தையின் பரிணாமங்களாம். அவற்றிற்கு ஒரே அவித்தை உபாதானமா யிருத்தலால் அந்தப் பதார்த்

---

* ஜாக்கிரபதார்த்தங்களின் "அவை முன் ஜாக்கிரத்தில் இருந்தவை" என்னும் வடிவினதாகிய பிரத்தியபிஜ்ஞைஞானம் நித்திரையினின்று விழித்த புருடனுக் குண்டாகிறது. அந்த ஞானம் ஆற்றொழுக்கு, தீபச்சுடர், ஆகாயத்துள்ள நக்ஷத்திரத்தின் ஸ்திதி, விருக்ஷத்தின் பழம் என்பவற்றின் பிரத்தியபிஜ்ஞைஞானத்தினைப்போலப் பிரமரூபமாம். ஆதலால் முக்கிய திருஷ்டாந்தம் சொப்பனமாம். அதனை மேல் கிரந்தகாரரே எழுதியிருக்கின்றனர்.

தங்களுக்கும் அவற்றின் ஞானத்துக்கும் ஓரேயவித்தையினின்றும் ஓரே காலத்தில் உற்பத்தி சம்பவிக்கிறது.

2. ஜாக்கிரபதார்த்தங்கள் வெவ்வேறு காரணங்களா லுண்டாகின்றன. காரியத்துக்குமுன் காரண மிருக்கும். காரணத்தில் காரியம் லயமாகிறது. ஆதலால் கடத்தின் உற்பத்திக்குப்பின்னும் கடநாசத்துக்குப் பின்னும் மண் பிண்ட மிருக்கிறது. இவ்விதத்தால் சில பதார்த்தங்கள் அற்பகாலம் நிலைப்பனவும் சில அதிககாலம் நிலைப்பனவுமாகக் காரியகாரணங்களா யிருக்கின்றன. சொப்பனபதார்த்தங்கள் அப்படி யில்லை.

**326.** அச்சங்கை பொருந்தாது. ஏனெனின், ஜாக்கிரபதார்த்தங்களிற் போல் சொப்பனபதார்த்தங்களிலும் காரியகாரணத்தன்மை தோற்றுகின்றது. ஒருவனுக்கு "என் பசு கன்றுபோட்டிருக்கிறது அல்லது என் ஸ்திரீக்குப் புத்திரன் உண்டாயிருக்கிறான்" என்று சொப்பன முண்டாகிறது. அங்குப் பசுவினிடத்திலும் ஸ்திரீயினிடத்திலும் காரணத்தன்மையும் வெகுகாலஸ்திரத் தன்மையும் பிரதீதியாகின்றன. கன்றினிடத்திலும் புத்திரனிடத்திலும் காரியத்தன்மையும் அற்பகாலஸ்திரத்தன்மையும் பிரதீதியாகின்றன. எல்லாம் ஓரேகாலத்தி லுண்டாகின்றன. ஒன்று மற்றொன்றற்குக் காரண மன்று. ஆனால் பசு, கன்று, ஸ்திரீ முதலியவற்றிற்கு அவித்தையே உபாதானமாம். அதுபோல் ஜாக்கிரத்திலும் சில வெகுகாலமிருக்கும் காரணரூபமாகவும், சில சொற்பகாலமிருக்கும் காரியரூபமாகவும் சொப்பனத்திற்போலத் தோற்றுகின்றன. எதுவும் எதற்கும் பரஸ்பரம் காரியகாரண மன்று; ஆனால் யாவும் சாக்ஷாத் அவித்தையின் காரியங்களாம்.

**327.** சுருதியில் கிரமமாகச் சிருஷ்டி சொல்லப்பட்டிருக்கிறது. அங்குச் சிருஷ்டியைக் கூறுதலில் சுருதிக்கு அபிப்பிராய மின்று, ஆனால் அத்துவைதத்தைப் போதித்தலில் அபிப்பிராயமாம்.

எல்லாப்பதார்த்தங்களும் பரமாத்மாவினின்று முண்டாயிருக்கின்றன. ஆதலால் அவை அதன் விவர்த்தமாம். எது எதன் விவர்த்தமாயிருக்கிறதோ, அது அதன் சொரூபமாகவே யிருக்கிறது. ஆதலால் சகல நாமரூபங்களும் பிரஹ்மத்துக்கு வேறாகாமல் பிரஹ்மமாகவே யிருக்கின்றன என்னும் அர்த்தத்தைப் போதிப்பதற்காகச் சிருஷ்டி சொல்லப்பட்டது. சிருஷ்டிக்கு வேறு பிரயோசன மில்லை.

அங்குக் கிரமசிருஷ்டி சொன்னது ஸ்தூலதிருஷ்டியுடையவனுக்கு விபரீதக்கிரமமாக லயசிந்தனை செய்யும்பொருட்டாம். அதற்கும் அத்துவைத போதமே பிரயோஜனமாம். ஆதலால் கிரமமாகச் சொல்லுவதிலும் அபிப்

பிராய மில்லை. சிருஷ்டியில் கிரம மில்லை. ஆனால் எல்லாம் ஒரே அவித்தை யினின்று உண்டாயிருக்கின்றன. அவற்றிற்குப் பரஸ்பரம் காரியகாரணத் தன்மையும் முற்பிற்றன்மையும் அவித்தையாலாகிய சொப்பனம்போல் மித்தையாகத் தோற்றுகின்றன. சுருதி அவற்றிற்குத் தம்மில் காரியகாரணத் தன்மையும் பூர்வ உத்தரத்(முன்பின்)தன்மையும் சொல்லியிருக்கிறது. அது லயசிந்தனையின் பொருட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படிச் சொரூபமோ அப்படியே தியான மிருக்கவேண்டு மென்னும் நியமம் தியானத்தி லில்லை.

ஆதலால் ஜாக்கிரபதார்த்தங்களுக்குத் தம்மில் காரணகாரியத்தன்மை யில்லை.

## 328. திருஷ்டி சிருஷ்டிவாதத்தின் அங்கீகாரம்.

ஆனால் சகலபதார்த்தங்களும் சாக்ஷாத் அவித்தையின் காரியங்களாம். கிளிஞ்சில்வெள்ளிபோலவும் சொப்பனம்போலவும் அவித்தையின் விருத்தி யுபஹிதசாக்ஷியினால் அவற்றின் பிரகாச முண்டாகிறது. ஆதலால் சகலபதார்த் தங்களுஞ் சாக்ஷிபாஸ்யங்களாம்.

அவித்தையின் ஞானகார ஞேயாகார பரிணாமங்கள் ஒரேகாலத்தில் உண் டாகின்றன; கூடவே நஷ்டமாகின்றன. ஆதலால் எப்போது பதார்த்தம் தோற்றுகிறதோ அப்போதுதான் தோற்றத்திற்கு விஷயமான பதார்த்தம் உண்டாகிறது. வேறுகாலத்தில் பதார்த்த முண்டாகிற தில்லை. இதனையே *திருஷ்டிசிருஷ்டிவாத மென்பர்.

இந்தப்பக்ஷத்தில் பதார்த்தங்களுக்கு அஞ்ஞாதசத்தை (அறியப்படாத இருப்பு) இல்லை, ஞாதசத்தை (அறியப்பட்ட இருப்பு) இருக்கிறது. அத்வைத வாதத்தில் இது சித்தாந்தபக்ஷம். இந்தப் பக்ஷத்தில் இரண்டு சத்தைக ளிருக் கின்றன; மூன்றில்லை. ஏனெனின், அநாத்மபதார்த்தங்க ளெல்லாம் சொப்ப னம்போல் பிராதிபாஸிகமா யிருக்கின்றன. தோற்றுங்காலத்தினும் வேறாகிய காலத்தில் அநாத்மாவுக்குச் சத்தை யில்லை. ஆகையால் மூன்றாவதான வியா வகாரிகசத்தை யில்லை.

இந்தப் பக்ஷத்தில் அநாத்மபதார்த்தங்க ளெல்லாம் சாக்ஷிபாஸ்யமா யிருக் கின்றன. பிரமாதாப் பிரமாணங்களுக்கு விஷயம் யாதொன்றும் இல்லை. ஏனெனின், அந்தக்கரண இந்திரியங்களும் அங்ஙனமே கடாதிகளுமாகிய சகலத் திரிபுடிகளும் ஞானமும் சொப்பனம்போல் ஒரேகாலத்தில் உண்டாகின்றன.

---

* திருஷ்டி என்பது அவித்தியாவிருத்திரூப ஞானம். அது உண்டாகும் சமயத் திலேயே சிருஷ்டியை அதாவது பிரபஞ்சத்தின் உற்பத்தியைச் சொல்லுவது திருஷ்டி சிருஷ்டிவாத மெனப்படும். இதனையே அஜாதவாத மென்றும் கூறுவர்.

அவற்றிற்கு விஷயவிஷயித்தன்மை பொருந்ாது. கடாதிவிஷயமும் நேத்திராதி இந்திரியங்களும் அந்தக்கரணமுமாகிய இவை ஞானத்துக்குமுன் இருக்குமாயின், நேத்திராதிவாயிலாக அந்தக்கரணத்தின் விருத்திரூபஞானம் பிரமாணஜந்யமாம். அந்த அந்தக்கரணம் இந்திரியம் விஷயம் என்னும் மூன்றும் ஞானத்துக்கு முற்காலத்தி லில்லை. ஆனால் ஞானசமகாலத்திலேயே சொப்பனம்போல் திரிபுடி யுண்டாகின்றது. ஆதலால் திரிபுடியாற்றோன்றும் ஞானம் எதுவுமில்லை. அங்ஙனமாயினும், சொப்பனம்போல் ஞானத்தில் திரிபுடியாற்றோன்றுந்தன்மை தோற்றுகிறது. ஆகையால் ஜாக்கிரபதார்த்தங்கள் சாக்ஷிபாஸ்யமா(சாக்ஷியால் விளக்கப்படுவனவா)ம். பிரமாணஜந்யஞானத்திற்கு விஷயமன்று. இதனாலும் ஜாக்கிரபதார்த்தம் சொப்பனத்திற்குச் சமானமாக மித்தையாம்.

அல்லது,

1. ஜாக்கிரத்தில் சிலபதார்த்தங்கள் மித்தியாரூபமாகவும்,

2. சில சத்தியரூபமாகவும் அறியப்படுகின்றன.

(1) அநாதிகாலத்துப் பொருள்க ளிருக்கின்றன. அவற்றுள் சில நஷ்டமாகின்றன. அவற்றிற்குச் சமானமாய்ச் சில வுண்டாகின்றன. இவ்விதமாகப் பிரபஞ்சதாரா ஒருகாலத்திலும் நாசமடைகிறதில்லை.

(2) ஞானமுண்டானவனுக்குப் பிரபஞ்சம் தோற்றுகிறதில்லை. மற்றவர்களுக்குப் பிரபஞ்சம் தோற்றுகிறது.

(3) அந்த ஞானத்துக்கு வேதமும் குருவும் சாதனங்களாம். அவற்றால் பரமசத்தியம் அடையப்படுகிறது.

இவ்விதத் தோற்றம் ஜாக்கிரத்தி லுண்டாகிறது. அங்கு,

1. சிலபதார்த்தங்களில் மித்தியாத்தன்மை,

2. சிலவற்றில் நாசம்,

3. சிலவற்றில் உற்பத்தி,

4. வேதகுருக்களால் பரமபுருஷார்த்தப்பிராப்தி என்னும்

இவையாவும் அவித்தையாலாகிய சொப்பனம்போல் மித்தையா யிருக்கின்றன.

வாஸிஷ்டத்தில் இவ்வாறு அநேக இதிஹாஸங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

1. க்ஷணமாத்திரசொப்பனத்தில் வெகு * கற்பகாலம் தோற்றுகிறது.

2. ஜாக்கிரம்போல் நிலையுடைய பதார்த்தம் தோற்றுகிறது.

3. அவற்றால் வெகுகாலபோக முண்டாகிறது.

ஆதலால் ஜாக்கிரபதார்த்தங்களுக்குச் சொப்பனபதார்த்தங்களினும் சிறிதும் விலக்ஷணத்தன்மை (வேற்றுமை) யில்லை. ஆனால் ஆத்மாவுக்கு வேறான யாவும் † மித்தையாம்.

---

* கற்பகாலநிர்ணயம்:—

| | | | |
|---|---|---|---|
| 15 | கண்ணிமைப்பொழுதுகொண்டது | | காஷ்டை 1 |
| 30 | காஷ்டை | ... | கலை 1 |
| 30 | கலை | ... | முகூர்த்தம் 1 |
| 30 | முகூர்த்தம் | ... | இராப்பகலுள்ள நாள் 1 |
| 15 | நாள் | ... | பக்ஷம் 1 |
| 2 | பக்ஷம் | ... | மாதம் 1 |
| 2 | மாதம் | ... | இருது 1 |
| 3 | இருது | ... | அயனம் 1 |
| 2 | அயனம் | ... | வருஷம் 1 |
| 1,728,000 | வருஷம் | ... | கிருதயுகம் 1 |
| 1,296,000 | ... | ... | திரேதாயுகம் 1 |
| 864000 | ... | ... | துவாபரயுகம் 1 |
| 432000 | ... | ... | கலியுகம் 1 |
| 4,320,000 | .... அல்லது | 4 யுகம் சேர்ந்தது | மகாயுகம் 1 |
| 306,720,000 | ... ... | 71 மகாயுகம் | ... ஒருமனுவின்காலம் |
| 4,294,080,000 | ... ... | 994 ... | ... 14 மனுக்களின்காலம் |
| 25,920,000 | ... ... | 6 ... | ... சந்திகள் 2 [வின் பகல், |
| 4,320,000,000 | ... ... | 1000 ... | ... கல்பம் அல்லது பிரஹ்மா- |
| 8,640,000,000 | ௵ | கொண்டது பிரஹ்மாவின் நாள் 1 | |
| 3,110,400,000,000 | ௵ | ... ... | ௵ 1 |
| 311,040,000,000,000 | ௵ | ... பிரஹ்மாவின் ஆயுள் அல்லது மஹாகல்பம், | |

† இது திருஷ்டிசிருஷ்டிவாதத்தின் நிச்சயமாம். இந்தப் பக்ஷம் பிருஹதாரணிய உபநிஷத்தின் சங்கரபாஷியத்திலும் வார்த்திகத்திலும் சங்கரபாஷிய ஆநந்தகிரி வியாக்கியானங்களோடு கூடிய மாண்டூக்கிய உபநிஷத்தின் காரிகையிலும் வாசிஷ்டத்திலும் வேதாந்தமுக்தாவலியிலும் விருத்திப்பிரபாகரத்தின் எட்டாவது பிரகாசத்திலும் ஆத்மபுராணத்திலும் அத்வைதசித்திமுதலிய கிரந்தங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. எவர்களுக்கு விசேஷவிருப்ப மிருக்கிறதோ அவர்கள் அங்குக் காண்க. ஆனால் "வீட்டின் மூலையில் தேனிருக்கப் பர்வதத்திற்குப்போதல் எதன்பொருட்டு?" என்னும் நியாயத்தால் எந்த ஞானத்தினால் எந்த ஜிஞ்ஞாஸுவுக்கு இந்தத் திருஷ்டிசிருஷ்டிவாதமாகிய உத்தமசித்தாந்தத்தின் ஞான முண்டாகிறதோ, அவனுக்கு வேறு அநேக நூல்களைப் பார்ப்பதற்கு புத்தியின் விநோதத்தைத்தவிர வேறு பிரயோஜனமில்லை.

## 329. பிரசினம் :—சொப்பனம்போற் சொற்பகாலம் நிலைத்திருப்பது சம்சாரமாயின் அநாதிகாலத்துப் பந்தமுண்டாகாது. பந்தநிவிருத்திவடிவ மோக்ஷத்தின் பொருட்டுச் சிரவணாதிசாதனங்கள் நிஷ்பலமாகுமெனல்.

சிஷ்யன் கேட்கின்றான் :—ஈசுவரசிருஷ்டி அநந்தகற்பமாக அநாதியாயிருக்கிறது. அதில் ஞானி முக்தனாகிறான்; அஞ்ஞானிக்குப் பந்த மிருக்கிறது.

ஜாக்கிரம் சொப்பனசமானமாகுமாயின், சொப்பனம் ஒருக்ஷணம் அல்லது ஒருநாழிகை அல்லது ஒருசாமம் இருக்கிறதுபோல், சமுசாரமும் ஒருக்ஷணம் அல்லது ஒருநாழிகை அல்லது ஒருசாமம் அல்லது கொஞ்சம் அதிககாலம் இருக்கும்.

1. சொப்பனம்போல் சமுசாரம் சொற்பகால மிருப்பதாயின் அநாதிகாலத்துப்பந்த மாகாது.

2. பந்தநிவிருத்திவடிவ மோக்ஷத்தின் பொருட்டுள்ள சிரவணாதி சாதனங்கள் நிஷ்பலமாய்விடும்.

[குரு சொல்லுகின்றார் :—]முற்கூறிய சித்தாந்தத்தில்,

1. பந்தம் மோக்ஷம் *வேதம் குரு என்பவை அங்கீகரிக்கப்படவில்லை.

---

* இங்கு இது அபிப்பிராயமாம்:—இந்தத் திருஷ்டிசிருஷ்டிவாதத்தில் ஒரு ஜீவனது அங்கீகாரத்தால் அந்நியஜீவவடிவ குரு அல்லது சிஷ்யனது அங்கீகார மில்லை. ஆனால் சொப்பனத்திலுள்ள ஒருமுக்கியஜீவனுக்கு வேறான மற்ற ஜீவாபாஸர்களைப்போல் அந்நிய ஜீவாபாஸர்கள் தோற்றுகிறார்கள். அங்ஙனமே ஆபாஸவடிவமாய்க் குரு சிஷ்யர்கள் இருக்கிறார்கள். அந்தக் குருவினிடத்து ஈசுவரத்தன்மையோடு பக்தி செய்யப்படுகிறது. அதுவும் சொப்பனகுருவின் பக்தியைப்போல மித்தையாம் (பிராதிபாஸிகசத்தையுடையதாம்). இந்தப் பக்ஷத்தில் ஜீவன் ஈசுவரன்முதலிய ஆறுபதார்த்தங்களைச் சொரூபமாக அநாதியென்று கொண்டிருக்கிறார்கள். அவற்றினிடையில்,

1. பிரஹ்மத்திற்குப் பரமார்த்தசத்தை யிருக்கிறது.

2. பிரஹ்மத்திற்கு வேறான பிரபஞ்சத்திற்கு வியாவகாரிகசத்தை யிருக்கிறது.

3. பிரவாகரூபமாய் அநாதியாயுள்ள அந்நிய சகலகாரியப்பிரபஞ்சத்திற்கும் பிராதிபாஸிகசத்தை யிருக்கிறது.

ஆதலால் பின்பின் அத்தியாசத்திற்குக் காரணமான முன்முன் அத்தியாசத்தின் ஞானத்தாற்றோன்றும் வாசனையின் ஆசிரயவடிவ அவித்தையிருத்தலாலும் ஈசுவரனிருத்தலாலும், க்ஷணிகவிஞ்ஞானவாதத்தின் பிராப்தி அல்லது அநீசுவரவாதத்தின் பிராப்திமுதலிய தோஷ மில்லை. இவ்வர்த்தத்தை அத்வைதசித்தியில் மதுசூதனஸ்வாமிகள் எழுதியிருக்கின்றார்கள். இவ்வார்த்தை ஜீவனது பிரசங்கத்தாற் சொல்லப்பட்டது.

2. ஆனால் சேதனம் நித்தியமுக்தமா யிருக்கிறது.

3. அவித்தையின் பரிணாமங்கள் சேதனத்தில் நாநாவிவர்த்தமாகின்றன. அதனால் ஆத்மசொரூபத்திற்குச் சிறிதும் ஆனியில்லை.

4. ஆத்மா எப்போதும் அசங்கமாயும் ஏகரஸமாயு மிருக்கிறது.

5. இன்றையவரையில் ஒருவனும் முக்தனானதில்லை; மேலும் ஆவதில்லை. ஆனால் சேதனம் எப்போதும் முக்தமாகவே யிருக்கிறது.

6. அவித்தைக்கும் அதன் பரிணாமத்துக்கும் சேதனத்தோடு எந்தக் காலத்திலும் சம்பந்த மில்லை. ஆதலால் பந்தம், வேதம், குரு, சிரவணாதிகள், சமாதி, மோக்ஷம் என்பவற்றின் பிரதீதியும் சொப்பனம்போல் அவித்தியா ஜந்நியமாம். ஆதலால் மித்தையாம்.

7. இவற்றில் வெகுகாலநிலையுடைமையும் அவித்தியாஜந்நியமாம்.

அங்ஙனமாயினும், இது சித்தாந்தத்தை யறியாமல் ஸ்தூலதிருஷ்டியால் கேட்டகேள்வியாம்.

## (அக்கிருதசெய்வ [இச்சையின்றிய ஆத்மதெய்வ] த்தின் சொப்பனம் 330-452).

### (சென்ற பிரசினத்தின் உத்தரம் 330-338).

### 330. அக்கிருததேவனுக்குச்சொப்பனம்தோற்றுதல் (330-331)

குருவாக்கியம் :—சிஷ்யனே ! நித்திராதோஷத்தினால் சொப்பனத்தில் அத்தியாபகன் (ஓதுவிப்போன்), அத்தியயனம் (ஓதல்), வேதம், சாஸ்திரம், புராணம், தர்மசாஸ்திரம், அத்தியயனம்செய்வோன், கர்மம், அதன் பலம் என்பன பிரதீதியாகின்றன. அவ்வெல்லாப் பதார்த்தங்களிலும் சத்தியத்தன்மையின் பிராந்தி யுண்டாகிறது. அங்ஙனமாயினும், அச்சொப்பனத்தின் சகல பதார்த்தங்களும் மித்தையா யிருக்கின்றன. அதுபோல ஜாக்கிரத்தின் சகல பதார்த்தங்களும் மித்தையா யிருக்கின்றன. அவை சத்தியமாகத் தோற்றுவது பிரமமாம். உனக்கு நான் குருவாகத் தோற்றிப் பந்தத்தை நாசஞ் செய்யும் வேதார்த்தவுபதேசத்தைச்செய்தல் எதுவோ அது உனக்கு மித்தையாகத் தோற்றுகிறது.

எப்படி அக்கிருததேவனுக்குச் சொப்பனத்தில் மித்தியாப்பிரதீதிக்கு விஷயங்களான குருவேதாதிகள் அநிர்வசநீயமா யுண்டாயினவோ, அப்படி உன் தோற்றத்தில் நான்முதலாகச் சகலமும் அநிர்வசநீயமித்தையா யிருக்கின்றன.

**331.** அந்த † அக்கிருததேவனுக்கு இவ்வாறு சொப்பன முண்டாயிற்று :— ஓர் அக்கிருதனென்னும் தேவதை அநாதிகாலத்து உறக்கத்தில் தூங்குவதாய்ச் சொப்பன (சம்சார) த்தைக் கண்டது. அச்சொப்பனத்தில் அப்புருஷனுக்கு இத்தோற்ற முண்டாயிற்று :—

1. நான் சண்டாளன் (தேகமிரண்டின் அபிமானியாகிய ஜீவன்).

2. மகா துக்கியா யிருக்கிறேன்.

3. எலும்பு, மஜ்ஜை, இரத்தம், தோல், மாமிசம், மேதை, வீரியம் என்னும் ஏழு தாதுக்களால் என்முகம் நிறைந்திருக்கிறது.

4. மகாகோரமும் பயங்கரமுமான பாம்பு, யானை முதலியவைகளால் நிறைந்திருக்கிற வனத்தில் (சம்சாரத்தில்-ஜகத்தில்) நான் திரிகிறேன்.

அந்தத் தேவதையாகிய யான் திரிந்துகொண்டு அவ்வனத்தில் வெகு இடங்களைப் பார்க்குங்கால்,

1. சில * விடங்களில் அனேகபயங்கரமான பிராணிகள் பக்ஷிக்க எதிரில் ஓடிவருகின்றன.

2. சிலவிடங்களில் பிறிட்டு இரத்தம் நிறைந்த தொட்டிகளில் விழுந்த பிராணிகள் ஹாஹாகார சப்தங்களைச் செய்கின்றன.

3. சிலவிடங்களில் பழுக்கக்காய்ச்சிய இருப்புத்தூண்களிற் கட்டப்பட்டுச் சிலர் அலறுகிறார்கள்.

4. சிலவிடங்களில் சுடுமணல் வழியாய்க் காலில் ஒன்றுமில்லாமல் சிலர் போகிறார்கள். அவர்களை ராஜாவின் சேவகர்கள் இருப்புத்தடியால் அடிக்கிறார்கள். இவ்விதமாக,

---

† கிருதா என்பது இச்சை; அஃதின்றிய தேவன் என்பது சொப்பிரகாசம்; இப்படிப்பட்ட சுத்தசேதனம் அக்கிருததேவனென்னும் சொல்லின் இரகசியப்பொருளாம். அதற்கு ஜாக்கிர சொப்பனவடிவ விலக்ஷணத்தன்மையின்றிய அநாதி நித்திரையாற் கற்பிக்கப்பட்ட இத்தோற்றுகின்ற பிரபஞ்சவடிவ சொப்பன முண்டாயிருக்கிறது. அப்பிரபஞ்சத்திற்கு விலக்ஷணத்தன்மையின்மையால் ஜாக்கிரமுதலிய அவஸ்தைக்குப் பேதமில்லை. ஆதலால் அந்த ஒரே பிரபஞ்சத்திற்குத் திருஷ்டாந்தவடிவத்தன்மையும் தார்ஷ்டாந்தவடிவத்தன்மையும் பொருந்தாதாயினும், கிரந்தகாரர் அவ்வார்த்தையை இரகஸியமாய்வைத்து ஒரே சேதனத்தில் திருஷ்டாந்த தார்ஷ்டாந்தத்தை ஆரோபஞ்செய்திருக்கிறார். இவ்விரகசியார்த்தத்தை யாம் மேலும் டிப்பணியில் பிரசங்கத்தால் அங்கங்கு வெளிப்படுத்துவாம்.

* இங்கிருந்து நரகவர்ணனை.

1. அனேக பயங்கரமான இடங்களைத் தான் பார்க்குங்கால்,

2. ஒருகாலத்தில் தானும் அபராதஞ்செய்து அதனால் சொப்பனத்தில் அந்தத் துக்கங்களை யடைந்தவனானன்.

† சிலவிடங்களில் திவ்வியமான ஸ்தலங்களைப் பார்க்குங்கால்,

1. அவ்விடங்களி லுத்தமமான தேவதைகள் விளங்குகிறார்கள்.

2. அத்தேவர்களது திவ்வியபோகங்க ளிருக்கின்றன.

3. அமிர்தத்தைப் பார்த்தல்மாத்திரத்தால் அவர்களுக்குத் திருப்தி யிருக்கிறது.

4. அவர்களுக்குப் பசி தாகங்களாற் பீடையுண்டாகிறதில்லை.

5. மல மூத்திரங்களின்றிச் சரீரம் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

6. உத்தமமான விமானத்திலிருந்துகொண்டு சிலர் ரமிக்கிறார்கள். அந்த விமானங்கள் அவர்களிஷ்டப்படி போகின்றன.

7. சிலவிடங்களில் அரம்பை ஊர்வசிமுதலிய அப்ஸரஸ்திரீகள் நாட்டியமாடுகிறார்கள். அவர்கள் அங்கமுழுவதும் தோஷமில்லாததா யிருக்கிறது. ஸ்திரீகளெல்லாம் சகல * குணங்களு முடையவர்களா யிருக்கிறார்கள்.

8. அவர்கள் சரீரத்தினின்றும் காமத்தைப் பிரகாசிப்பிக்கும் உத்தமமான சுகந்தம் வருகிறது. சிலவிடங்களில் அவர்களோடு தேவர்கள் ரமிக்கிறார்கள்.

9. தானும் (அக்கிருததேவனும்) ஒருகால் தேவத்தன்மையை யடைந்து அவர்களோடு வெகுகாலம் திவ்வியஸ்தானங்களில் ரமிக்கிறான்.

10. ஒருகால் அந்தத் தெய்வப்பெண்களோடு திவ்வியஸ்தானங்களில் ரமிக்கின்றவனாய் தற்செயலாய் (புண்ணியம் நசித்துப் பாபமாகிய அதிருஷ்டமுதயமாகவே) இரத்த மலங்கள் நிறைந்த குழிகளில் முழுகுகிறான்.

ஓரிடத்தில் எல்லோருக்கும் அதிபதியான புருஷன் (தர்மராஜன்-யமன்) இருக்கிறான். அவன் உத்தரவின்படி நடக்கிறவர் (யமதூதர்)கள் அவன்முன் நிற்கிறார்கள்.

1. சிலரு (புண்ணியபுருஷர்களு) க்கு அந்த அதிபதியும் அவன் சேவகர்களும் சாந்தரூபமாய்த் தோற்றுகிறார்கள்.

---

† இங்கிருந்து சுவர்க்கவர்ணனை.

* காவிய அலங்காராதி சாகித்திய கிரந்தங்களில் சொல்லப்பட்ட ஸ்திரீகளின் அழகுமுதலிய 32 குணங்களோடு கூடியவர்கள்.

2. சிலரு (பாபிகளு) க்கு மகா பயங்கரரூபமாய்த் தோற்றுகிறார்கள்.

3. அவ்வனத்திலிருக்கிறவர்களுக்குக் கர்மானுசாரமாய்ப் பலனைக் கொடுக்கிறார்கள்.

இவ்விதமாக அக்கிருததேவன் சொப்பனத்தில் அநேக இடங்களைப் பார்த்தான்.

1. வேறு சிலவிடங்களில் பிராமணர்கள் வேதபாராயணஞ் செய்கிறார்கள்.

2. சிலவிடங்களில் † யாகசாலைகளில் உத்தமமான கர்மஞ்செய்கிறார்கள்.

3. சிலவிடங்களில் உத்தமமான நதி ஓடுகிறது. அதில் புண்ணியத்தின் பொருட்டு ஜனங்கள் ஸ்நானம் பண்ணுகிறார்கள்.

4. சிலவிடங்களில் ஞானிகளாகிய ஆசாரியர்கள் சிஷ்யர்களுக்குப் பிரஹ்மவித்தையை யுபதேசிக்கிறார்கள். அந்தப் பிரஹ்மவித்தையை யடைந்து அவ்வனத்தினின்றும் அவர்கள் வெளிப்பட்டுப் போய்விடுகிறார்கள்.

இவ்விதமாகச் சொப்பனத்தில் அக்கிருததேவன் க்ஷணமாத்திரத்தில் அனேக ஆச்சரியமான பதார்த்தங்களை அவ்வனத்தில் பார்த்தான். அவனுக்குச் சொப்பனத்தில் மறுபடியும் இவ்வாறு தோற்றியது. அதாவது,

1. வெகுகாலமாய் நான் இந்த வனத்தி லிருக்கிறேன்.

2. இந்த வனத்திற்கு ஒருகாலும் நாசம் வருகிறதில்லை.

3. (1) ஒருகாலத்தில் * பகவானுடைய நான்கு முகங்களினின்றும் † அனேக பீஜங்கள் வெளியேவர அவ்வனம் அவரால் சிருஷ்டிக்கப்படுகிறது.

(2) ‡ ஜலம் பாய்ச்சுவதால் அவ்வனம் பரிபாலிக்கப்படுகிறது.

(3) ஒருகால் அவருடைய கோரமான ஹாஸியத்தால் (சிரிப்பினால்) அவர் முகத்தினின்றும் அக்கினி புறப்பட்டு அவ்வனத்தைத் தாகம் (பிரளயம்-சங்காரம்) செய்கிறது.

---

† இங்கிருந்து மிருத்யு (பூ) லோகத்தின் (அதிலுள்ள பரதகண்டத்தின்) வர்ணனையாம்.

* பிரஹ்மா விஷ்ணு சிவரூபங்களால் ஜகத்தின் உற்பத்தி ஸ்திதி சங்காரங்களின் கர்த்தாவாகிய ஈசுவரன்.

† ஜீவர்களது பரிபக்குவமாகிய அதிருஷ்டம்.

‡ கர்மானுசாரமாகச் சுகதுக்கங்களின் அனுபவமாகிய போகத்தைக் கொடுப்பதனால்.

4. வனத்தின் உற்பத்தியுடன் எனது உற்பத்தி யுண்டாகிறது. வனம் தகிக்கப்படும்போது நானும் தகிக்கப்படுகிறேன்.

5. வனம் முழுவதையும் தகித்து அந்த ஈசுவரன்மாத்திர மிருக்கிறார்.

6. அவர் சரீரத்தில் வனத்தின் பீஜம் தங்குகிறது.

இத்தோற்றம் சொப்பனத்திலேயே அந்த அக்கிருதகேவனுக்குச் சொப்பனவேதசிரவணத்தின லுண்டாயிற்று.

## 332. அக்கிருததேவன் சொப்பனத்தில் குருவைச் சந்தித்தல்.

அப்போது தனக்கு அடிக்கடி ஜனனமரணங்க ளுண்டாவதைக் கேட்டு அக்கிருததேவன் விசாரித்தான் :—

1. எவ்விதமாக நான் இவ்வனத்தைவிட்டு வெளிப்படுவேன்.

2. அப்படி வெளிப்படாவிட்டாலும் எப்படி எனது இச்சண்டாளத்துவம் (ஜீவத்தன்மை) போய்த் தேவத்துவம் (பிரஹ்மத்தன்மை) எப்போது மிருக்கும்.

3. வனத்துக்கு வெளியேபோக வேறு உபாயமில்லை. பிரஹ்மவித்தையை யுபதேசிக்கிற ஆசாரியர் தம் சிஷ்யர்களை வனத்துக்கு வெளியே கொண்டுபோகிறார்.

இப்படி விசாரபூர்வகமாயிருந்து அந்த அக்கிருததேவன் சொப்பனத்திலேயே ஆசாரியனை யடைந்தான். அந்த விதிபூர்வகமாய் அடைந்த சிஷ்யனை ஆசாரியர் தேவவாக்குரூபமான மித்தியா கிரந்தத்தை யுபதேசிக்கிறார்.

## 333. மித்தியா ஆசாரியர் மித்தியா சிஷ்யனுக்கு மித்தியா சம்ஸ்கிருதகிரந்தத்தால் உபதேசித்தலும், கிரந்தத்தின் மங்கலாசரணமும்.

மித்தியாசாரியரால் மித்தியா சிஷ்யனுக்கு உபதேசிக்கப்பட்ட * சம்ஸ்கிருதகிரந்தம் மொழிபெயர்க்கப்படுகிறது.

---

* இங்கே சம்ஸ்கிருத கிரந்தம் என்பதனால் அக்கிருததேவனது திருஷ்டாந்தத்தில்சொல்லப்பட்ட எந்தச் சம்ஸ்கிருதகிரந்தமும் கிரஹிக்கத்தக்கதன்று. ஆனல் இந்த (விசாரசாகர) கிரந்தத்திற்கு மூல (ஆதார)மான அனேக சம்ஸ்கிருத கிரந்தங்கள் கிரஹிக்கத்தக்கனவாம்.

சம்ஸ்கிருத கிரந்தத்தை மொழிபெயர்ப்பதில் முதலில் மங்கலம் செய்கிறார். ஏனெனின்,

1. மங்கலம்செய்வதினால் கிரந்தம் முடிதற்குப் பிரதிபந்தமாயுள்ள விக்கினங்கள் நாசமாகின்றன. விக்கினம் என்பது பாபத்திற்காம். பாபத்தினால் சுபகாரியம் முடிவுபெறுகிறதில்லை. அந்தப் பாபங்கள் மங்கலத்தால் நாசமாகின்றன.

2. பாபமற்றவனும் கிரந்தாரம்பத்தில் மங்கலம் அவசியம் செய்யவேண்டும். ஏனெனின், கிரந்தாரம்பத்தில் மங்கலஞ் செய்யாவிட்டால் கிரந்தகர்த்தாவினிடத்தில் புருஷர்களுக்கு நாஸ்திகப்பிராந்தி யுண்டாய்க் கிரந்தத்திற் பிரவிருத்தி யுண்டாகாது.

அம்மங்கலம் மூவகைத்து :—1. வஸ்துநிர்த்தேசரூபம். 2. நமஸ்காரரூபம். 3. ஆசீர்வாதரூபம்.

சகுண அல்லது நிர்க்குணமான பரமாத்மா வஸ்து எனப்படும். அதன் கீர்த்தனமே வஸ்துநிர்த்தேச மெனப்படும். தன்னுடைய அல்லது சிஷ்யனுடைய வாஞ்சித (இஷ்ட) வஸ்துவைப் பிரார்த்திப்பது ஆசீர்வாதரூபமங்கல மெனப்படும். அந்தத் தனது இஷ்டவஸ்துவின் பிரார்த்தனம் பின் வருகின்றது.

**334.** புராணத்தில் கணேசனுக்கும் தேவிக்கும் ஈசுவரத்தன்மை பிரசித்தமா யிருக்கிறது. ஆகையால் அநீசுவரசிந்தனை யில்லை. புராணத்தில் கணேசனுக்குச் சொல்லப்பட்ட ஜன்மம் ஜீவர்கள் ஜன்மம்போல் கர்மபலனல்ல; ஆனல் ராமகிருஷ்ணாதிகள்போல் பக்தர்களை யநுக்கிரகிக்கப் பரமாத்மாவின் ஆவிர்ப்பாவமே யென்பது வியாஸபகவானுடைய மேலான அபிப்பிராயம்.

இந்தவிடத்தில் இது இரகசியமாம்:— பரமார்த்ததிருஷ்டியால் ஜீவனும் பரமாத்மாவைவிட வேறன்று. ஆனல் எந்த ஜனனமரணாதிபந்தங்களின் அத்தியாஸம் ஆத்மாவி லுளதோ, அது ஜீவனுடைய ஜீவத்தன்மையாம். அந்த ஜன்மாதிபந்தம் கணேசாதிகளுக்குத் ஆத்மாவில் (தம்மிடத்தில்) பிரதீதியாகிறதில்லை. ஆகையால் அவர்கள் ஜீவர்களல்லர். இவ்வாற்றால கணேசாதிகளுக்கு ஈசுவரத்தன்மை யுண்டு. அதனால கிரந்தாரம்பத்தில அவர்களைச் சிந்தித்தல் தகுதியாம்.

ஈசுவரனுக்கு நாநாரூபம் சொன்னது * எல்லோருக்கும் ஈசுவரத்தன்மையை விளக்குதற் பொருட்டாம்; ஈசுவரபக்தியும் குருபக்தியும் வித்தியாப்பிராப்திக்கு முக்கியசாதனங்களா மென்னும் அர்த்தத்தையும் விளக்குதற்பொருட்டாம்.

## 335. நிர்க்குணவஸ்துநிர்த்தேசவடிவமங்கலம்.

விபாபகமாயும் சத்தியமாயுமிருக்கிற எதன் பிரகாசத்தால் சூரிய சந்திரர்கள் பிரகாசிக்கிறார்களோ, அந்தப் புத்திக்குச் சாக்ஷியாகிய நான் சுத்தஸ்வரூபமாகவும் பூர்ணாநந்தரூபமாகவும் இருக்கிறேன்.

## சகுணவஸ்துநிர்த்தேசரூபமங்கலம்.

ஸ்ரீ கணபதியின் பெயர் விக்கினங்களை அடியோடு நாசம்பண்ணுகிறது. அவனைச் சிந்திக்காவிடின் தேவதைகளுடைய இச்சைகளுஞ் சித்திக்கிறதில்லை. † திரிபுரவதத்தில் இந்த விஷயம் பிரசித்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

## நமஸ்காரரூபமங்கலம்.

அசுரர்களைச் சங்கரிக்கிறவர்களாயும் பக்தர்களை யெப்போதும் பரிபாலிக்கிறவர்களாயுமிருக்கிற லக்ஷ்மீபதியான மகாவிஷ்ணுவையும் பார்வதிபதியான பரமசிவனையும் நமஸ்கரிக்கிறேன்.

## தான் கருதியதைப் பிரார்த்தித்தல்வடிவ ஆசிர்வாதரூப மங்கலம்.

எந்தச் சக்தியின் பலத்தால் ஈசுவரன் சிருஷ்டிக்கிறாரோ அந்தச் சக்தி இந்தக் கிரந்தம் முடியும்பொருட்டு என் வாக்கிலிருக்கப் பிரார்த்திக்கிறேன்.

## சிஷ்யன் கருதியபொருளைப் பிரார்த்தித்தல்வடிவ மங்கலம்.

பந்தத்தை நீக்கிச் சுகத்தைத்தரும் தீனதயாளுவான தாதுகுரு இந்தக் கிரந்தத்தைப் படிக்கின்றவர் கேட்கின்றவர்களது ஜன்மாதிதுக்கத்தை நிவர்த்திப்பாராக.

---

* கணேசன், விஷ்ணு, சிவன், தேவி, ஆசாரியர் என்னும் இவர்களுக்கும்.

† மயதானவனு லாக்கப்பட்ட முப்புரத்தின் நாசத்தில் பிரவர்த்தித்த மகாதேவனுக்கு எப்போது வெற்றியுண்டாக வில்லையோ, அப்போது அவர் எல்லாத்தேவர்களோடும் விக்கினராஜராகிய கணேசனைப் பூஜித்தார். அதனால் மகாதேவரது வெற்றிவாயிலாகத் தேவர்களது காரியமாகிய நிர்ப்பயத்தன்மை சித்தித்தது என்னும் பிரசங்கம் புராணங்களிற் பிரசித்தம்.

## 336. *வேதாந்தசாஸ்திர கர்த்தாவாகிய † ஆசாரிய (ஸ்ரீவேத வியாஸ)னை ‡ நமஸ்கரித்தல்.

(1) காற்றனது (2) வனத்தில் வீசி, மரங்களை யசைத்து, (3) அவற்றின் முட்களை விரித்து, (4) அழகிய (5) தாமரைப்புஷ்பங்களைத் (6) தமது தானங்களினறும் பறித்து, (7) முட்களிற் சுழற்றுகிறது. அந்தச் சுழலும் புஷ்பத்தைப் பார்த்து (8) அவ்வழியே போகுமொருவன் சித்தத்தில் (9) இவ்வழகிய கமலம் இங்கிருக்கத்தக்கதன்று (10) உத்தமமான இடத்திலிருக்கத்தக்கதாமென்று விசாரித்து, (11) அப்புஷ்பங்களைக் கையில் எடுத்துக்கொண்டு, (12) மறுபடியும், மேலும் இக்காற்று பூக்களைப் பறித்து முட்களிற்சுழற்றுமாதலால் (13) மீண்டும் வாயு பூக்களை முட்களில் சுழற்றாதிருக்கும்படி யோருபாயஞ் செய்வேணுகமென்று விசாரித்துச் சூத்திரங்களால் ஒருவலைசெய்து முண்மரத்தைப் பிரித்துவிடுகிறுன். அவ்வலையால் புஷ்பங்கள் முட்களில பிரவேசிக்கிறதில்லை.

---

*வேதாந்தமென்பன உபநிஷத்துக்கள். அவற்றின் தாற்பரியத்தை நிச்சயஞ் செய்வதாயிருத்தலின் அவற்றை யநுசரித்துள்ள பிரஹ்மசூத்திரவடிவ உத்தரமீமாம்ஸையும் வேதாந்தசாஸ்திர மெனப்படுகின்றது. அதன் கர்த்தா ஸ்ரீ வேதவியாஸர்.

† "எவன் சாஸ்திரார்த்தத்தை ஆசரித்து உலகத்தைச் சாஸ்திரத்திற் சொல்லப்பட்ட ஆசாரத்தில் நிறுத்தித் தானும் சாஸ்திரத்திற் சொல்லப்பட்ட ஆசாரத்தை ஆசரிக்கிறுனே, அக்காரணத்தால் அவன் ஆசாரிய னெனப்படுகின்றுன்." என்னும் வாயு புராணமாகிய சாஸ்திரத்திற் கூறிய லக்ஷணத்தோடு கூடியவர் ஸ்ரீ வேதவியாசராதலின் அவர் சாதாரண (சர்வ ஆஸ்திகசம்பிரதாயங்களுக்கும்) ஆசாரியரா யிருக்கின்றுர். அவரை நமஸ்கரித்தல்வடிவ மங்கலத்தை நூலாசிரியர் செய்கின்றனர். இங்குக் குரு சிஷ்யர்களின் சம்வாதவிருப்பால் நூலாசிரியர் எந்த மங்கலத்தைச் செய்திருக்கின்றனரோ, அது முதலிலும் கடையிலும் போல நடுவிலும் மங்கலஞ் செய்யவேண்டுமென்னும் விதியை அநுசரித்ததாம்.

‡ மனதினுலும் வாக்கினுலும் சரீரத்தினுலும் தன்னைத் தாழ்த்துதலோடு தனக்கிஷ்டமானதின் மேன்மையைக் கிரமமாகப் புகழ்ந்து சிந்தித்தலும் சொலலுதலும் செய்தலும் நமஸ்கார மெனப்படும். இம்மூவித நமஸ்காரங்களும் உத்தம மத்திம கநிஷ்ட வடிவங்களா யிருக்கின்றன.

1. அவற்றில் மனதின் நமஸ்காரம் விதை.
2. வாக்குநமஸ்காரம முளை.
3. சரீரநமஸ்காரம் மரம்.
4. அதனினின்றும் குருமுதலியோரின் மகிழ்ச்சிவடிவபயன் உண்டாகிறது.

**337.** (1) அதுபோல *பேதவாதி ஆசாரியராகிய வாயு எதுவோ (2) அது வேதரூப வனத்தில் (3) அர்த்தவாதரூப முட்களோடுகூடிய விருக்ஷத்தினின்றும் ஸகாமகர்மரூப முட்களைப் பிரவிருத்திக்கச்செய்து, (4) கபடமில்லாமலும் ராகாதிதோஷங்களில்லாமலு மிருக்கும் (5) சிஷ்யவடிவ தாமரைப் (6) பூக்களைச் சமாதிரூப அவற்றின் ஸ்தானத்தினின்றும் பிடுங்கி (7) ஸகாமகர்மவடிவ முட்களிற் சுழற்றுவதைப் பார்த்து, (8) அவ்வழியே போகிறவனுக்குச் சமானமான எங்கும் வியாபித்திருக்கிற ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் (9) இவ்வழகிய கமலவடிவ சுத்தபுருஷன் இவ்விடத்தி லிருக்கத்தக்கவனன்று, (10) ஆனல் என் ஸ்வரூபத்தை யடையத்தகுந்தவ னென்று விசாரித்து, வியாஸரூபந் தரித்து (11) அச்சிஷ்யர்களை உபதேசரூப மடியில் வைத்தார். ஒருவன் மடியிலிருக்கிற புஷ்பத்தைப் பிடுங்கக் காற்று சமர்த்தமாகாததுபோலப் பிரஹ்மநிஷ்ட ஆசாரியருடைய உபதேசத்தில் இருக்கிறவனைப் பேதவாதி பிரமிக்கும்படி செய்யச் சமர்த்தனுகிறதில்லை. ஆகையால் உபதேசமே மடியாம். (12) மறுபடியும் வியாஸபகவான், (13) இந்தப் பேதவாதி மற்றவர்களையும் ஸகாமகர்மரூப முட்களில் சுழற்றுவான். ஆகையால் மேல் சிஷ்யர்கள் பிரமிக்காமலிருக்குமாறு விசாரித்துச் சூத்திரவடிவ வலையினுல் வேதவாக்கியரூப விருக்ஷங்களை விபாகஞ்செய்தார்.

வனத்தில் இருவகை விருக்ஷங்களுண்டு:—

1. முண்மரங்கள்;
2. முள்ளில்லாதன.

அவை வலையால் பிரிக்கப்பட்டால் *வலையினுல் புஷ்பங்களுக்கு முட்களோடுகூடிய மரத்திற் பிரவேச முண்டாகிறதில்லை.

அதுபோல வேதத்தில் இருவகை வாக்கியங்க ளுள.

1. ஒன்று கர்மத்தைத் துதித்துப் பகிர்முகனைக் கர்மத்திற் பிரவிருத்திக்கச் செய்கிறது.

2. மற்றொன்று கர்மபலத்தின் அநித்தியத்தன்மையைப் போதித்துப் புருஷனை நிவிருத்தியில் திருப்புகிறது.

இவ்வாக்கியங்களை,

---

*இங்குப் பேதவாதியை ஆசாரியனுகச் சொன்னது "தேவதத்தன் சிங்க" மென்னும் வாக்கியம்போலக் கௌணவிருத்தியினுற் சொன்னதாம். முக்கிய (சத்தி) விருத்தியினுற் சொல்லப்படவில்லை. ஆதலால் முன்னுக்குப் பின் (3-வது தரங்கத்திற்கும் இத்தரங்கத்திற்கும்) விரோதமில்லை.

**338.** வேதவியாஸர் பிரித்துச் சூத்திரத்தினுற் சகல வாக்கியங்களுக்கும் நிவிருத்தியில் தாற்பரியமே யல்லாமல் பிரவிருத்தியில் ஒருவாக்கியத்திற்கும் தாற்பரியமில்லை என்று போதித்தார்.

பிரவிருத்தியைப் போதிக்கும் வாக்கியங்கட்கும் ஸ்வாபாவிகமாயும் நிஷித்தமாயுமுள்ள பிரவிருத்தியிலிருந்து புருஷனைத் திருப்பி விஹிதப்பிரவிருத்தியினுல் (விதிக்கப்பட்டதனைச் செய்தலால்) அந்தக்கரணம் சுத்தமாக அதினின்றும் நீங்கி ஞானநிஷ்ட புருஷனுகுக என்று இவ்வாறு நிவிருத்தியிலேயே தாற்பரியமாம்.

அர்த்தவாதவாக்கியங்கள் கர்மபயனைப் போதிப்பது * குடஜிஹ்வா நியாயத்தினுலாம். பலத்தில் அவற்றிற்குத் தாற்பரியமில்லை யென்னும அர்த்தத்தைச் சூத்திரத்தினுல் வியாஸர் போதிக்கிருர். சூத்திரங்களால் இந்த அர்த்தத்தைப் புருஷன் அறிந்து ஸகாமகர்மத்தில் பிரவிருத்திக்கிறதில்லை.

நூல்வலை புஷ்பங்களை முட்களினின்றும் தடுப்பதுபோல் வியாஸருடைய சூத்திரம் ஸகாமகர்மத்தினின்றும் தடுப்பதால் வலைவடிவமாய்ச் சொல்லப்பட்டது. நிச்சலதாஸனுகிய நான் அந்த ஸ்ரீ வியாஸனை நமஸ்கரிக்கின்றேன்.

**339.** அக்கிநிதேவனுடைய கேள்வி :—1. "நான் யார்?" 2. "சம்சாரத்தின் கர்த்தா யாவன்?" 3. "முக்திக்குக்காரணம் யாது?" என்பன.

அவற்றுள்,

1. பகவானே! "நான் யார்"

(1) தேகஸ்வரூபமா ?

(2) அல்லது தேகத்துக்கு வேறு ?

நான் மனுஷியனுயிருக்கிறேன், எனக்குச் சரீர மிருக்கிறது என்று இரண்டு பிரதீதியுண்டாகுதலால் எனக்குச் சந்தேக மிருக்கிறது.

---

*ஒரு தாய் தன் குழந்தைக்கு நாவில வெல்லம்பற்றிய விரலைத் தடவிக் கசப்பான மருந்தில் தித்திக்கு மென்னும் புத்தியை யுண்டுபண்ணிக் கசப்பு மருந்தைச் செலுத்திவிடுகிருள். இது சாஸ்திரத்தில் குடஜிஹ்வாநியாய மெனப்படும். அதுபோல் சுருதியாகிய தாய் பாமரஜீவர்களாகிய குழந்தைகளுக்குத் தம் கர்மபலத்தைத் துதிக்கும் வசனங்களாகிய அர்த்தவாதவாக்கியங்கள்வடிவ வெல்லம்பற்றிய விரலை நக்கவைத்துச் சுவர்க்காதிகளின் அடைவாகிய கர்மபலத்தைப் போதித்து அக்கர்மத்திற் பிரவிருத்தியுண்டாகச் செய்கிறது. ஆனுல் எப்படி அத்தாய்க்குக் குழந்தையின் ரோகநிவிருத்தியிற் கருத்தோ, வெல்லந்தடவியவிரலைச் சுவைக்கச் செய்வதிற் கருத்தில்லையோ, அப்படியே வேதமாகிய தாய்க்குப் பாவநிவிருத்திவாயிலாகச் சித்தசுத்தியில் தாற்பரியமாம்; ஸ்வர்க்காதி பலத்தில் தாற்பரியமில்லை.

தேகத்துக்கு வேறென்று தாங்கள் சொல்லும்பக்ஷத்தில்,

(3) நான் கர்த்தா போக்தாவா?

(4) அல்லது கிரியையின்றியவனா?

அக்கிரிய (கிரியையின்றியவ)னெனினும்,

(5) நான் சகலசரீரங்களிலும் ஏகனா?

(6) அல்லது அநேகனா?

என்பது முதற்பிரசினத்தின் அபிப்பிராயமாம்.

2. இந்தச் சமுசாரத்தின் கர்த்தா யாவன்? என்பதன் அபிப்பிராயம் இதுவாம் :—

(1) இச்சம்சாரத்திற்கு ஓர் கர்த்தா வுண்டா?

(2) அல்லது தானாகவே யுண்டாயிருக்கிறதா?

கர்த்தா விருக்கும்பக்ஷத்தில்,

(3) கர்த்தா ஜீவனா?

(4) அல்லது ஈசுவரனா?

ஈசுவரனெனின்,

(5) அந்த ஈசுவரன் ஓரிடத்திலிருக்கிறாரா?

(6) அல்லது எங்கும் வியாபித்திருக்கிறாரா?

வியாபகரானால்,

(7) வியாபகமான ஆகாசத்தினும் ஜீவன் பின்னமாயிருப்பது போல அந்த ஈசுவரனினும் ஜீவன் பின்னமா?

(8) அல்லது அபின்னமா?

3. முக்திக்குக் காரணம் யாது? என்பதன் அபிப்பிராயம் இதுவாம் :—

(1) காரணம் ஞானமா?

(2) அல்லது கர்மமா?

(3) அல்லது உபாஸனையா?

(4) அல்லது இரண்டுமா?

இரண்டுமெனின்,

(5) ஞானகர்மங்களா?

(6) அல்லது ஞான உபாஸனைகளா?

(7) அல்லது கர்ம உபாஸனைகளா?

## (1. "நான்யார்?" என்பதன் உத்தரம் 340—369.

### 340. ஆத்மா சங்காதத்தின் சாக்ஷியாதல்.

ஸ்ரீ குருவானவர் :— முதலில் சிஷ்யன் கேட்ட பிரசினத்திற்கு உத்தரம் கூறுகின்றார் :— "நீ சச்சிதாநந்தசொரூபம்" என்று சொலவதனுல் தேகத்திற்கு வேறெனப்பட்டது.

ஏனெனின், தேகம் அசத்ரூபமாயும் ஜடரூபமாயும் துக்கரூபமாயு மிருக்கிறது. நீ கர்த்தாபோக்தாவு மன்று. ஏனெனின்,

1. எவனிடத்தில் துக்கமிருக்கிறதோ அவன் துக்கநிவிருத்தியின்பொருட்டும் சுகப்பிராப்தியின்பொருட்டும் கிரியையைச் செய்கிறான். அவன் கர்த்தாவெனப்படுகிறான்.

(1) உன்னிடத்தில் துக்கமில்லாததினுல் துக்கநிவிருத்தியின்பொருட்டுக் கிரியையைச் செய்கிறவனல்லன்.

(2) நீ ஆநந்தஸ்வரூபமாயிருக்கிறாய். ஆதலால் சுகப்பிராப்தியின் பொருட்டும் நீ கிரியையின் கர்த்தாவாகிறதில்லை.

2. எவன் கர்த்தாவாகிறானோ அவனே போக்தாவாகிறான். நீ கர்த்தாவன்று; ஆகையால் போக்தாவு மன்று.

புண்ணியபாவங்களை யுண்டுபண்ணும் கர்மத்தின் கர்த்தாவும் சுகதுக்கங்களின் போக்தாவும் ஸ்தூலசூக்ஷ்ம சங்காதமாம்; நீ யன்று. நீ சங்காதத்திற்குச் சாக்ஷி.

### 341. ஆத்மா சுகதுக்காதி தர்மங்களின்றி வியாபகமாய் ஏகமாயிருக்கிறதெனல். சாங்கியமதத்தையும் மூவகைநியாய மதங்களையும் சொல்லுதலும் கண்டித்தலும் 341-354.

இதனுலேயே ஆத்மா ஏகமாம்; நாநாவன்று. ஆத்மா கர்த்தாபோக்தாவாயின் அப்போது நாநாவாகும். ஏனெனின் ஒருவன் சுகியாயிருக்கிறான். ஒருவன் துக்கியாயிருக்கிறான். கர்த்தாபோக்தாவாக ஒருவனையே அங்கீகரிக்கின், ஒருவனுக்குச் சுகம் அல்லது துக்கம் உண்டாகிறதினுல் எல்லோருக்கும் சுகம் அல்லது துக்கம் உண்டாகவேண்டும். அநுபவத்தில் அப்படியில்லை. ஆதலால் போக்தா அநேகமாம். ஆத்மா போக்தாவாகாததினுல் ஒன்றே.

**342.** [பூர்வபக்ஷ:—] சாங்கியமதத்தில் ஆத்மாவைக் கர்த்தாபோக்தா வென அங்கீகரிக்காது புருஷன் நாநாவென்று அங்கீகரிப்பது மிக்க விருத்தமா யிருக்கிறது. ஏனெனின், இது சாங்கியசித்தாந்தமாம்:—

1. (1) சத்துவரஜஸ்தமோகுணங்களின் சமான அவஸ்தைக்குப் பிரதான மென்று பெயர். அந்தப் பிரதானம் பிரகிருதி யாயி ருக்கிறது; விகிருதி யன்று.

[1] விகிருதி யென்பது காரியம்.

[2] பிரகிருதி என்பது உபாதானகாரணம்.

[1] அந்தப்பிரதானம் மஹத்தத்துவத்தின் உபாதானகாரணமா யிருத்தலால் பிரகிருதியாம்.

[2] அநாதியாயிருத்தலால் விகிருதியன்று;—

(2-8) மஹத்தத்துவம் அகங்காரம் பஞ்சதன்மாத்திரைகள் இவ்வேழு பிரகிருதிகளும் விகிருதிகளாம்.

[1] முன்னிற்பது பின்னிற்பதற்குப் பிரகிருதியாம்.

[2] பின்னிற்பது முன்னிற்பதற்கு விகிருதியாம். தன்மாத்திரை களும் பூதங்களுக்குப் பிரகிருதிகளாம். இவ்விதத்தால் ஏழு பிரகிருதிகளும் விகிருதிகளாம்.

(9-24) பஞ்சபூதங்கள் தசேந்திரியங்கள் மனது என்னும் இந்தப் பதி னாறும் விகிருதிகளாம்; பிரகிருதிகளன்று.

(25) புருஷன் பிரகிருதிவிகிருதிகள் இரண்டுமென்று. ஏனெனின்,

[1] ஒன்று ஒருபதார்த்தத்துக்குக் காரணமானால் அப்போது அது பிரகிருதியாகும்.

[2] காரியமானால் அது விகிருதியாகும்.

[1] புருஷன் எதற்கும் காரணமாகாமையினால் பிரகிருதி யன்று.

[2] காரியமாகாததினால் விகிருதியு மன்று. ஆதலால் புருஷன் அசங்கன்.

இவ்விதத்தால் சாங்கியமதத்தில் 25 தத்துவங்க ளிருக்கின்றன. தத்துவ மென்பது பதார்த்தத்திற்காம்.

2. சாங்கியமதத்தில் * ஈசுவரன் அங்கீகரிக்கப்படவில்லை.

3. சுதந்திரமான பிரகிருதியே ஜகத்துக்குக் காரணமாயிருக்கிறது.

4. புருஷனுடைய போகமோக்ஷங்களின்பொருட்டுப் பிரகிருதியே பிரவிருத்திக்கிறது; புருஷன் பிரவிருத்திக்கிறதில்லை.

5. பிரகிருதியின் விஷயரூபபரிணாமத்தால் புருஷனுக்குப் போக முண்டாகிறது.

6. புத்திவாயிலாக விவேகவடிவப்பிரகிருதியின் பரிணாமத்தால் மோக்ஷ முண்டாகிறது.

7. புருஷன் அசங்கனாயிருத்தலால் அவனிடத்திற் போகமோக்ஷங்கள் பொருந்தா. அங்ஙனமாயினும், ஞானம் சுகம் துக்கம் ராகம் துவேஷ முத

---

* சாங்கியம் 1. ஸேசுவரசாங்கியம் 2. நிரீசுவரசாங்கிய மென்னும் பேதத்தால் இருவகையாம்.

1. கர்த்தமதேவஹூதிகளின் புத்திரரான பகவானது அவதாரமாகிய கபிலர் ஸேசுவரசாங்கியம் அங்கீகரித்திருக்கின்றனர்.

2. மற்றோர் கபிலர் இருந்தார். அவர் நிரீசுவரசாங்கியம் அங்கீகரித்திருக்கின்றனர். அவர் மதத்தில் ஈசுவரன் அங்கீகரிக்கப்படவில்லை; ஆனால் பிரகிருதியை ஜகத்காரணமாகவும் புருஷனுடைய போகமோக்ஷங்களுக்கு ஹேதுவாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

அது பொருந்தாது. ஏனெனின், பிரளயகாலத்தில் சத்துவாதிகுணங்களின் சாம்ய(கலப்பு) அவஸ்தையினைப் பிரதானம் (பிரகிருதி) என்பர். அது எப்போது சிருஷ்டிகாலத்தில் சாம்யாவஸ்தையை விடுகின்றதோ, அப்போது ஜகத்துண்டாகிறது. அந்தப்பிரதானம் ஜடமாயிருத்தலால் தானே சாமியாவஸ்தையை விடுதலிற் சாமர்த்தியமுடையதாகிறதில்லை. சேதனபுருஷன் அவர்மதத்தில் அசங்கனாயிருத்தலால் அவனுக்குப் பிரதானத்தோடு சம்பந்தமில்லை. சேதனசம்பந்தமின்றி ஜடத்தினால் யாதொரு காரியத்தின் உற்பத்தியுமுண்டாகிறதில்லை. ஆதலால் பிரதானவடிவ மாயையோடு கூடிய சேதனம் அந்தர்யாமியாகிய ஈசுவரனும். அவரே ஜகத்திற்குக் கர்த்தாவா மென்று கொள்ளுதல் தகுதியாம்.

சாங்கியமதத்தில் ஆத்மாவின் நாநாத்துவத்தையும் பிரகிருதியின் நித்தியத்தன்மையையும் அங்கீகரித்து ஆத்மாவில் ஸஜாதீய(தன்னினச்) சம்பந்த விஜாதீய(வேற்றினச்)சம்பந்தங்களின் அபாவால் நாநா ஆத்மாவின் அசங்கத்தன்மையைக் கூறுதலும் வியாகாததோஷத்தோடுகூடியதாம். ஒரு வியாபகமான ஆத்மாவை யங்கீகரிக்கவே நாநா அந்தக்கரணத்தால் போகமுதலியவற்றிற்குக் கலவாமையாகிய வியவஸ்தையுண்டாகிறது. பின் ஆத்மாவின் நாநாத்துவ அங்கீகாரத்தால் அத்வைத சுருதியோடும் அடுத்தடிப்பணியிற் சொல்லப்படும் பேதபாதகயுக்தியோடும் விரோதித்தலைவிட வேறு பயன் பெறுவதில்லை. இவ்வாற்றால் சாங்கியமதம் அசங்கதமாம்.

லியவை புத்தியின் பரிணாமமா யிருக்கின்றன. அந்தப் புத்திக்கு ஆத்மாவோடு விவேகமில்லை; அவிவேகமிருக்கிறது. ஆதலால் ஆத்மாவில் ஆரோபிக்கப்பட்ட பந்தமோக்ஷங்களுள்; பரமார்த்தமாக வில்லை.

8. ஆத்மாவில் அவிவேகத்தால் சித்தித்துள்ள போகங்களாலே சாங்கிய மதத்தில் ஆத்மா போக்தா வெனப்படுகிறது.

9. பரமார்த்தமாக ஆத்மா போக்தா வன்று; புத்தியே போக்தாவாம்.

10. புத்தி ஆத்மாவுக்கு வேறும்.

11. இந்த ஞானத்துக்கு விவேக மென்று பெயர்.

12. அதன் அபாவத்துக்கு அவிவேக மென்று பெயர்.

இவ்விதத்தால் சாங்கியமதத்தில்,

13. ஆத்மா அசங்கமாயிருக்கிறது.

14. சுகாதிகள் புத்தியின் பரிணாமங்களாயிருத்தலால் புத்தியின் தர்மங்களாம்.

15. ஆத்மா நாநாவாம்.

[சித்தாந்தி:—] மேற்கூறியது மிகவும் விருத்தமாயிருக்கிறது. சுகதுக்கங்கள் ஆத்மாவின் தர்மங்களானால் அவை ஒவ்வொருசரீரத்திலும் பேதப்படுவதால் ஆத்மாவிற்கும் பேதமுண்டாம். அச்சுகதுக்கங்கள் ஆத்மாவின் தர்மங்களாகாமல் புத்தியின் தர்மங்களாயிருத்தலால் சுகதுக்கங்களின் பேதத்தால் புத்தியின் பேதம் சித்திக்கிறது; ஆத்மாவின் பேதம் சித்திக்கிறதில்லை.

ஒரே வியாபக ஆகாசத்தில் நாநாவுபாதிகளின் தர்மங்கள், உபாதி, ஆகாசம் என்பவற்றின் அவிவேகத்தினால் தோற்றுவதுபோல ஒரேவியாபக ஆத்மாவில் நாநா புத்திகளின் தர்மங்கள் அவிவேகத்தினால் தோற்றுகின்றன என்னும் வார்த்தையினைச் சாங்கியமதத்தில் அங்கீகரிப்பது உசிதம்.

ஆத்மாவை அசங்கமாகக்கொண்டு நாநாவென்று கொள்ளுதல் நிஷ்பிரயோசனமாம்.

சில ஆத்மாக்கள் முக்தர்களாயும் இருக்கின்றார்கள். சிலருக்குப் பந்தமிருக்கிறது. இவ்வாறு பந்தமோக்ஷங்களின் பேதத்தால் ஆத்மாவின் பேதத்தையங்கீகரிப்பதும் பொருந்தாது. ஏனெனின், பந்தமோக்ஷங்களை ஆத்மாவில் அங்கீகரிக்கின், அப்பந்தமோக்ஷ பேதத்தால் ஆத்மாவின் பேதம் சித்திக்கிறது. அப்பந்தமோக்ஷம் சாங்கியமதத்தில் அசங்க ஆத்மாவில் அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால் புத்தியின் அவிவேகத்தால் பந்தமும் புத்தியின் விவேகத்தால் பந்தத்தின் மோக்ஷமும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

எந்தவஸ்து அவிவேகத்தாலுண்டாகிறதோ விவேகத்தால் நிவிருத்தியாகிறதோ, அந்தவஸ்து ரஜ்ஜு சர்ப்பம்போல மித்தையாம். ஆத்மாவினிடத்திலும் புத்தியின் அவிவேகத்தால் பந்தமிருக்கிறது; விவேகத்தால் அது நிவிருத்தியாகிறது. ஆதலால் பந்தம் மித்தையாம்.

எப்படிப் பந்தம் மித்தையோ அப்படி ஆத்மாவின் மோக்ஷமும் மித்தையாம். எதில் பந்தம் சத்தியமாயிருக்கிறதோ அதற்கே மோக்ஷமும் சத்தியமாகும். ஆத்மாவில் பந்தம் மித்தையாயிருத்தலால் மோக்ஷமும் மித்தையேயாம்.

இவ்விதத்தால் மித்தையான பந்தமோக்ஷங்கள் ஆகாசம்போல ஒரே ஆத்மாவினிடத்திலும் பொருந்துகின்றன. அவற்றின் பேதத்தால் ஆத்மாவின் பேதம் சித்திக்கிறதில்லை. ஆதலால் சாங்கியமதத்திற் சொல்லிய ஆத்மாவின் *பேதம் அசங்கதமாம்.

---

*ஈண்டு இவை பேதத்தின் பாதகயுக்திகளாம்:—ஒரு ஆத்மாவின் பேதம் வேறு ஆத்மாவிலிருக்கின்றது என்று சொல்லும் பிரதிவாதியினை, 1. அந்தப்பேதம் பேதமின்றிய ஆத்மாவிலிருக்கின்றதா, 2. அல்லது பேதத்தோடுகூடிய ஆத்மாவிலிருக்கின்றதா என்று கேட்கவேண்டும்.

1. முதற்பக்ஷத்தைக் கூறின் வியாகாததோஷமுண்டாகும். ஏனெனின், அந்தப் பேதத்தின் ஆசிரயமாகிய ஆத்மாவைப் பேதமின்றியதாகவும் கூறுகின்றாய்; பின்னர் அதில் பேதமிருக்கின்றதென்றும் கூறுகின்றாய். ஆதலால் "என் பிதா பாலப்பிரஹ்மசாரி" என்னும் வாக்கியத்தினைப்போல இந்த உன்னுடைய வசனம் வியாகாததோஷத்தோடுகூடியதாகும்.

2. பேதத்தோடுகூடிய ஆத்மாவில் ஆத்மாவின் பேதமிருக்கின்றதென்னும் இரண்டாவது பக்ஷத்தைக் கூறின், (1) எந்தப் பேதத்தோடுகூடியதாய் ஆத்மாவிருக்கின்றதோ அந்தப் பேதமும் இந்தப் பேதமும் ஒன்றா? (2) அல்லது இரண்டா?

(1) ஒன்றேயெனின், தன்னோடுகூடிய ஆத்மாவில் தானே இருத்தலால் ஆத்மாசிரயதோஷமுண்டாகும்.

(2) எந்தப் பேதத்தோடுகூடியதாய் ஆத்மா இருக்கின்றதோ அது ஆத்மாவின் விசேஷணவடிவ பேதமென்னும் இரண்டும் ஒன்றற்கொன்று பின்னமெனின்,

[1] அவ்வாத்மாவின் விசேஷணவடிவ பேத[illegible]ம் பேதரகித ஆத்மாவிலோ இருத்தல் சம்பவியாது. ஆனால் பேதத்தோடுகூடிய ஆத்மாவிலிருத்தல் சொல்லவேண்டும். ஆதலால் ஆத்மாவில் முதற்பேதம் நிலைத்தற்பொருட்டு இரண்டாவது பேதத்தை விசேஷணமாகவும், பின் இரண்டாவது பேதம் நிலைத்தற்பொருட்டு முதற்பேதத்தினை விசேஷணமாகவும் கூறுமிடத்து, ஒன்று நிலைத்தற்பொருட்டு மற்றொன்று வேண்டியதாயிருத்தலின் அந்நியோந்நியாசிரயதோஷம் உண்டாகும்.

**343.** [பூர்வபக்ஷ:—] அவ்வாறே நியாயமதத்திலும் ஆத்மாவின்பேதம் அசங்கதமாம். ஏனெனின், இது நியாயசித்தாந்தமாம் :—

1. சுகம் துக்கம் ஞானம் இச்சை துவேஷம் பிரயத்தனம் தர்மம் அதர்மம் ஞானத்தின்சம்ஸ்காரம் சங்கை பரிமாணம் வேற்றுமை சையோகம் விபாகம் என்னும் பதினுன்கு குணங்களும் ஜீவரூப ஆத்மாவிலிருக்கின்றன.

2. சங்கை பரிமாணம் வேற்றுமை சையோகம் விபாகம் ஞானம் இச்சை பிரயத்தனம் என்னும் இவ்வெண்குணங்களும் ஈசுவரனிடத்திலிருக்கின்றன. இவ்வளவு பேதமுளது :—

(1) ஈசுவரனுடைய ஞானம் இச்சை பிரயத்தனம் என்பன நித்தியமாம்.

(2) ஜீவனுடைய ஞானுதிகள் மூன்றும் அநித்தியமாயிருக்கின்றன.

(1) ஈசுவரன் வியாபகமாயும் நித்தியமாயுமிருக்கிறான்.

(2) ஜீவன் அநேகமாயும் எங்கும் வியாபகமாயும் நித்தியமாயும் இருக்கிறான். ஜீவனுடைய ஞானம் அநித்தியமாயிருக்கிறது. ஆதலால் ஞானகுணமிருக்குங்காலத்தில் ஜீவன் சேதனமாயும் ஞானகுணம் அழிந்தகாலத்தில் ஜடமாயுமிருக்கிறான்.

3. ஜீவேசுவரர்கள்போல் ஆகாசம், காலம், திக்கு, மனது என்பன நித்தியமாம்.

---

[2] ஆத்மாவில் இரண்டாவது பேதம் நிலைத்தற்பொருட்டுப் அதன் ஆசிரயமாகிய ஆத்மாவினைப் பேதத்தோடுகூடியதாக்குதற்கு அதற்கு விசேஷணமாக மூன்றுவது பேதத்தை அங்கீகரிக்கின், அம்மூன்றுவது பேதம் நிலைத்தற்பொருட்டும் முன்போல ஆத்மாவினைப் பேதத்தோடுகூடியதாக்கல்வேண்டும். அந்த மூன்றுவது பேதம் நிலைத்தற்பொருட்டு அதன் ஆசிரயமாகிய ஆத்மாவின் விசேஷணம் முதற்பேதமெனின், முதற் பேதத்திற்கு இரண்டாவதும் இரண்டாவதற்கு மூன்றுவதும் பின் மூன்றுவதற்கு முதற்பேதமும் வேண்டியதாயிருத்தலின் சக்கரம்போல் சுழல்தல்வடிவ சக்கிரிகாதோஷம் உண்டாகும்.

[3] மூன்றுவது பேதம் நிலைத்தற்பொருட்டும் பேதத்தின் ஆசிரயமாகிய ஆத்மாவினைப் பேதத்தோடுகூடியதாக்குதற்கு அதன் விசேஷணவடிவ வேறு நான்காவது பேதத்தைக் கூறிப் பின் நான்காவது பேதம் நிலைத்தற்பொருட்டு ஐந்தாவது பேதத்தைக் கூறின் பிரமாணமின்றிய பேதத்தைத் தரித்தல்வடிவ அநவஸ்தைத்தோஷமுண்டாகும்.

ஆதலால் ஆத்மாவின் பரஸ்பரபேதம் [நாநாத்துவம் (பலவாதலால்)] அசங்கதமாம். இந்தப் பேதத்தை வாதிக்கும் யுக்தி நையாயிகர்முதலிய சகல பேதவாதிகளாலும் கொள்ளப்பட்டுள்ள பேதத்தைக் கண்டிப்பதாம்.

4. பிருதிவி, ஜலம், தேயு, வாயு என்பவற்றின் பரமாணுக்களும் நித்தியமாயிருக்கின்றன. ஜன்னலின் வழியாய் வரும் கிரணத்தில் காணப்படும் சூக்ஷ்மமான தூளியின் ஆறிலொருபாகத்துக்குப் பரமாணுவென்று பெயர். அந்தப் பரமாணு ஆத்மாவைப்போல நித்தியமாயிருக்கிறது.

5. ஜாதிமுதலிய வேறுசில பதார்த்தங்களும் நியாயமதத்தில் நித்தியமாயிருக்கின்றன.

வேதத்திற்கு விருத்தமான சித்தாந்தங்களை வெகுவாயெழுதுவதால் ஜிஞ்ஞாசுவுக்கு உபயோகமில்லையாகலின் எழுதவில்லை.

6. "நான் மனுஷ்யன் பிராஹ்மணன்" என்று தேகத்தில் ஆத்மப்பிராந்தியுண்டாகிறது. அதனால் ராகத்துவேஷங்களுண்டாகின்றன. அவற்றால் தர்மாதர்மங்களின்பொருட்டுப் பிரவிருத்தியுண்டாகிறது. அதனால் சரீரத்தின் சம்பந்தவாயிலாகச் சுகதுக்கங்களுண்டாகின்றன. இவ்விதத்தால் நியாயமதத்தில் பிராந்திஞானம் ஆத்மாவின் சமுசாரத்துக்கு ஹேதுவாயிருக்கிறது.

7. அந்தப் பிராந்திஞானம் தத்துவஞானத்தால் நிவிருத்தியாகிறது.

8. சரீரமுதலிய சகலபதார்த்தங்களினும் ஆத்மா *வேறு என்னும் நிச்சயத்திற்குத் தத்துவஞானமென்று பெயர்.

---

* இங்கு இது விசேஷமாம்:— நையாயிகமதத்தில் தத்துவஞானத்திற்கு ஏது மனனமென்று சொல்லப்பட்டிருக்கிறது. "ஆத்மா பிறவற்றின் வேறு; ஆத்மாவாயிருத்தலால் எது பிறபதார்த்தங்களினும் வேறல்லாததாகாது பிறபதார்த்தமாயிருக்கிறதோ அது ஆத்மாவன்று; கடம்போல." என்னும் வெதிரேக அநுமானத்தினால் ஆத்மாவில் பிறபதார்த்தங்களினது பேதத்தின் அநுமிதியுண்டாகிறது. அது மனனமெனப்படுகிறது.

பிறபதார்த்தங்களின் ஞானமின்றி ஆத்மாவில் பிறபதார்த்தங்களினது பேதத்தின் ஞானம் சம்பவியாது. ஏனெனின், எதற்குப் பிறவற்றில் பேதமிருக்கிறதோ, அது பேதத்தின் பிரதியோகியாம். அந்தப் பிரதியோகியின் ஞானமின்றிப் பேதஞானமுண்டாகிறதில்லை. ஆதலால் ஆத்மாவின் பிறபதார்த்தங்களினது பேதத்தின் அநுமிதிவடிவ மனனத்தின் உபயோகியான பிறபதார்த்தங்களின் நிரூபணமும் தத்துவஞானத்தின உபயோகியாமென்று கொள்ளுகிறார்கள்.

அது சம்பவியாது. ஏனெனின், சிரவணஞ்செய்த அர்த்தத்தின் நிச்சயத்திற்கநுகூலமான பிரமேயகத சந்தேகத்தினை நிவர்த்திக்கும் யுக்திகள் எவையோ, அவற்றின் சிந்தனத்தை மனனம் என்பர். பேதஞானத்தால் அநர்த்தமுண்டாகிறது. "இவ்வெல்லாம் நிச்சயமாகப் பிரஹ்மம்" என்றல்முதலிய சுருதிவாக்கியங்களால் அபேதத்தில் சகலவேதங்களுக்கும் தாற்பரியமாம். "இரண்டாவதால் பயமுண்டாகிறது" "எவன் இங்கு நாநாவைப்போலக் காண்கிறானோ அவன் மிருத்தியுவினின்றும் மிருத்தியுவையடைகிறான்" என்றல் முதலிய சுருதிவாக்கியங்களால் பேதஞானத்தின்

(1) அந்தத் தத்துவஞானத்தால் "நான் மனுஷ்யன் பிராஹ்ம ணன்" என்னும் பிராந்தி நிவிருத்தியாகிறது.

(2) பிராந்திநாசத்தினுல் ராகத்துவேஷாதிகளில்லாமற் போகின் றன.

---

நிந்தை செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால் பேதஞானத்திற்கு மோக்ஷமாவது அல்லது தத்துவஞானவாயிலாகவாவது புருஷார்த்தத்தன்மையை யுண்டுபண்ணுந்தன்மை சம் பவியாது.

மனனமென்னும் சொல்லினுலும் ஆத்மாவினும் வேறுபதார்த்தங்களினது பேதத் தின் தோற்றமாகிய அர்த்தமுண்டாகிறதில்லை. ஆனுல் மனனபதத்திற்குச் சிந்தித் தல்மாத்திரம் பொருளாம். வாக்கியபேதங்களை யநுசரித்து அபேதசிந்தனத்தில் மன னசப்தத்திற்குப் பரியவசானம் (முடிவு) உண்டாகிறது. எந்தவிதத்தினுலும் ஆத்மா வினும் வேறு பதார்த்தங்களின் பேதம் மனனம் என்னும் சொல்லிற்குப் பொருளா காது.

அல்லது, 1. பிறபதார்த்தங்களின் ஞானத்தினுலேயே புருஷார்த்த (மோக்ஷ)த் திற்குச் சாதனமான தத்துவஞானத்தின் பிராப்தியுண்டாகுமாயின் சகல புருஷர்க ளுக்கும் தத்துவஞானத்தின் அடைவு உண்டாதல்வேண்டும், 2. அல்லது ஒருவனு க்கும் உண்டாகாது என்பதைக் காட்டுகின்றார்:—

1. பிறபதார்த்தங்களின் சாமானிய ஞானம் தத்துவ (ஆத்ம)ஞானத்தில் அபே க்ஷிக்கப்படுவதாயின் சாமானியஞானம் சகல புருஷர்களுக்குமிருக்கிறது. ஆதலால் பிறபதார்த்தங்களின் ஞானபூர்வகமான பிறபதார்த்தங்களின் பேதஞானத்தால் எல் லோருக்கும் தத்துவஞானமுண்டாதல்வேண்டும்.

2. சர்வபதார்த்தங்களின் அசாதாரணதர்மம் (ஒரு த[illegible]ல் தர்மசொரூப மான விசேஷவடிவம்) எதுவோ அதனுல் பிறபதார்த்தங்களின் ஞானம் தத்துவஞான த்தில் அபேக்ஷிக்கப்படுமோயின் சர்வஞ்ஞனுகிய ஈசுவரனுக்கன்றி யாருக்கும் அசாதார ணதர்மத்தால் சகல பிறபதார்த்தங்களின் ஞானமும் சம்பவியாது. ஆதலால் சகல பிற பதார்த்தங்களின் ஞானத்தால் ஆத்மா[illegible] பிறபதார்த்தங்களினும் வேறு என்னும் ஞானமின்மையால் சகல அநாத்மபதார்த்தங்களினும் வேருகிய ஆத்மாவின் ஞான வடிவ தத்துவஞானம் எவனுக்குமுண்டாகாது.

ஆதலால் நையாயிகமதத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆத்மாவிற்குப் பிற ஆத்மா வோடும் அநாத்ம பதார்த்தத்தோடுமுள்ள பேதஞானம் எதுவோ அது சம்பவியாது. இதனுலேயே தேகமுதலியவற்றில் ஆத்மப்பிராந்தியின் அபாவமும், அதனுல் ராகத் துவேஷத்தின் அபாவமும், அதனுல் தாமாதர்மங்களின் நிமித்தமாகிய பிரவிருத்தி யின் அபாவமும், அதனுல் சரீரசம்பந்தவடிவ ஜனமத்தின் அபாவமும், அதனுல் இத்தன்மைய துக்கத்தின் நாசவடிவ மோக்ஷமும் நையாயிகர்களை அநுசரித்தவர்களுக் குண்டாகின்றது. ஆனுல் மகாவாக்கியவடிவ சுருதியர்த்தத்தைக் கோசரிக்கும் அபேத ஞானமே காரணத்தோடுகூடிய அநர்த்தத்தின் நிவிருத்திபூர்வக பரமாநந்தத்தின் பிராப்திவடிவ மோக்ஷத்திற்கு ஏதுவாம்.

(3) அவற்றின் அபாவத்தால் தர்மாதர்மங்களின்பொருட்டுப் பிரவிருத்தியுண்டாகிறதில்லை.

(4) பிரவிருத்தியின் அபாவத்தால் சரீரசம்பந்தரூப ஜன்மமில்லாமற்போகிறது. பிராரப்தம் போகத்தினால நாசமடைகிறது.

(5) சரீரசம்பந்தத்தின் அபாவத்தால் 21 துக்கங்களும் நாசமுறுகின்றன.

9. அந்தத் துக்கநாசமே நியாயமதத்தில் மோக்ஷமெனப்படுகிறது.

சரீரம், சுரோத்திரம், துவக்கு, நேத்திரம், ரஸனை, கிராணம், மனம் என்னும் ஆறு இந்திரியங்களும், அவற்றின் விஷயங்களும், இந்திரியங்களாறின் ஞானமும், சுகதுக்கங்களுமாகிய இவை இருபத்தொரு துக்கங்களாம். சரீராதிகளும் துக்கத்தையுண்டுபண்ணுவனவாகலின் துக்கமெனப்படுகின்றன.

சுவர்க்காதிகளின் சுகமும் நாசமாகுமென்னும் பயத்தினால் துக்கத்திற்கு ஹேதுவாம்; ஆதலால் துக்கமெனப்படுகிறது.

நியாயமதத்தில் † சுரோத்திரமும் மனமும் நித்தியமாம். அவற்றிற்கு நாசம் பொருந்தாது. அங்ஙனமாயினும், எந்தரூபங்களால் சுரோத்திரமும் மனமும் துக்கத்துக்கு ஹேதுக்களாகின்றனவோ அந்தரூபங்கள் நாசமாகின்றன.

---

† நியாயமதத்தில் சுரோத்திரத்தை ஆகாசரூபமாகக்கொண்டு நித்தியமெனக் கொண்டிருக்கிறார்கள்.

அது பொருந்தாது. ஏனெனின்,

1. சுருதியில் நேத்திரமுதலியவற்றைப்போல ஆகாசத்தினின்றும் சுரோத்திரத்தின் உற்பத்தி சொல்லப்பட்டிருக்கிறது. உற்பத்தியுடைய வஸ்து எதுவோ அதற்கு நித்தியத்தன்மை சம்பவியாது.

2. சுரோத்திரத்தை ஆகாயவடிவமாகக் கூறுதலும் சம்பவியாது. ஏனெனின், செவித்துளையிலிருக்கும் ஆகாயத்தினை நியாயமதத்திற் சுரோத்திரமென்பர். அது பொருத்தமின்றியதாம். ஏனெனின், செவித்துளையிலிருக்கும் ஆகாயமிருக்கவும் ஒருகாலத்துக் கேட்டற்றொழிலின் மந்தத்தன்மை அல்லது அதன் அபாவம் உண்டாகிறது; அஃதுண்டாகலாகாது. ஆதலால் பஞ்சீகிருதபூதவடிவ கர்ணகோளகத்திற்கும் ஆகாயம் எதுவோ அதனினும் வேறாய அபஞ்சீகிருத பூதவடிவ ஆகாயத்தின் காரியமான சுரோத்திரேந்திரியம் உற்பத்தி நாசமுடையதாயிருத்தலின் அநித்தியமாம்.

3. அல்லது துர்ஜனதோஷநியாயத்தால் அதனை ஆகாயவடிவமாகக் கொள்ளினும் அதன் நித்தியத்தன்மை சம்பவிக்கிறதில்லை. ஏனெனின், "ஆத்மாவினின்றும் ஆகாயமுண்டாயிற்று" என்னும் தைத்திரீயத்தின் வாக்கியம் ஆகாயத்தின் உற்பத்

பதார்த்தஞானத்தை உண்டுபண்ணுகிறதினால் அவை துக்கத்துக்கு ஹேதுக்களாகின்றன. அந்தப் பதார்த்தங்களின் ஞானத்தை மோக்ஷகாலத்தில் சுரோத்திரமும் மனமும் செய்கிறதில்லை. ஏனெனின், கர்ணகோளகத்

---

தியைக் கூறி அதன் அநித்தியத்தன்மையைச் சூசிப்பித்திருக்கின்றது. எப்போது ஆகாயத்திற்கு அநித்தியத்தன்மை சித்தித்ததோ அப்போது அதன் ஏகதேசவடிவ சுரோத்திரத்திற்கு அநித்தியத்தன்மை இருக்கிறதென்பதிற் சொல்லவேண்டியதென்னையுளது?

இவ்வாற்றால் சுரோத்திரத்திற்கு நித்தியத்தன்மை சம்பவியாது. அவ்வாறே மனதின் நித்தியத்தன்மையும் பொருந்தாது. ஏனெனின்,

1. மனதைப் பரமாணுவடிவெனக் கொண்டு நித்தியமென்னும் அவர்களை (1) மனம் நிரவயமா? (2) அல்லது சாவயமா? என்று கேட்கவேண்டும்.

(1) மனம் நிரவயவமெனின், அதன்கண் அவயவவடிவ இடமின்மையால் அதற்கு ஆத்மாவோடு சையோகத்தாற்றோன்றத்தக்க ஞானகுணத்தின் உற்பத்தியின்மையால் ஜடத்துக் குருடாமென்னும் பிரசங்கமுண்டாம்.

(2) மனம் சாவயவமெனின், அதன்கண் கடபட்முதலியவற்றிற்போல அநித்தியத்தன்மை விவாதமின்றிச் சித்தித்தது.

2. அல்லது மனம் நித்தியமாயின் அதற்குச் சுழுத்தியில் விசேஷ ஞானத்தையுண்டுபண்ணுதல்வடிவ லிங்கமின்மையா லறியப்படும் தனது உபாதானமாகிய அஞ்ஞானத்தில் லயமாகின்றது. அஃதாகலாகாது. இதனாலும் மனம் அநித்தியமாம்.

3. ஆத்மமனதுகளின் சையோகம் ஞானத்திற்கேதுவாம். அச்சையோகம் ஒன்றன் கிரியையினாலேனும் இரண்டன் கிரியையினாலேனும் உண்டாகின்றது. விபுவாகிய ஆத்மாவிலோ கிரியை ஒருபோதும் உண்டாகிறதில்லை. மோக்ஷகாலத்திலேனும் சுழுத்திகாலத்திலேனும் போகத்திற்கெதிர்முகமாகும் அதிருஷ்டமின்மையால் மனதிலும் கிரியை உண்டாகிறதில்லை. ஆதலால் ஆத்மாவோடு மனதிற்குச் சையோகமின்மையால் சுழுத்திமுதலியவற்றில் விசேஷஞானமுண்டாகிறதில்லையென்று நையாயிகன் கூறின்,

அவ்வாறு கூறுதல் பொருந்தாது. ஏனெனின், வியாபகமாகிய வஸ்துவோடு சகல வஸ்துக்களுக்கும் கிரியையின்றியும் எப்போதும் சையோகமிருக்கின்றது. வியாபகமாகிய ஆகாயத்தோடு கிரியையின்றிய பர்வதத்திற்காவது மரம் கல் முதலியவற்றிற்காவது எப்போதுமே சையோகமிருக்கின்றது. அங்ஙனமே மோக்ஷகாலத்திலேனும் சுழுத்தியிலேனும் கிரியையின்றியதாக மனமிருக்கினும் அதற்கு விபுவாகிய ஆத்மாவோடு சையோகம் சித்தித்தலால் விசேஷஞானம் உண்டாதல்வேண்டும். அங்ஙனம் உண்டாகிறதில்லை. ஆதலால் சுழுத்திமுதலிய காலங்களில் அவசியம் மனதின் லயமுண்டாகின்றது. மீண்டும் ஜாக்கிரகாலத்தில் அதன் உற்பத்தி உண்டாகிறது.

இவ்வாற்றால் உற்பத்தி நாசமுடையதாயிருத்தலின் மனம் அநித்தியமாம். அதற்கு நித்தியத்தன்மையைக் கூறுதல் பிதற்றுதன்மாத்திரமாம்.

திலிருக்கும் ஆகாசம் எதுவோ அது சுரோத்திரமெனப்படும். அக்கர்ணகோளகம் மோக்ஷகாலத்தில் இருக்கிறதில்லை. ஆதலால் ஆகாசரூப சுரோத்திரேந்திரியமிருந்தும் கோளகமில்லாமையால் ஞானமுண்டாகிறதில்லை.

இவ்விதத்தால் ஞானத்தையுண்டுபண்ணும் சுரோத்திரேந்திரியத்தின் ஸ்வரூபமே துக்கமாம். அதற்கே நாசமுண்டாகிறது.

10. ஆத்மாவோடு மனது கூடுவதால் *ஞானமுண்டாகிறது. அந்த மனதின் சையோகம் நியாயசித்தாந்தத்தில், (1) ஒன்றன் கிரியையாலாவது, (2) இரண்டன் கிரியைகளாலாவது உண்டாகிறது.

(1) பக்ஷிக்கு விருக்ஷத்தோடுண்டாம் சையோகம் பக்ஷியொன்றன் கிரியையாலாகிறது.

(2) இரண்டு ஆட்டுக்கடாக்களின் சையோகம் (ஒன்றோடொன்று முட்டிக்கொள்ளுதலாகிய) இரண்டன் கிரியைகளாலுமுண்டாகிறது.

அதுபோல வியாபகஆத்மாவில் கிரியை ஒருகாலுமுண்டாகிறதில்லை. மோக்ஷகாலத்தில் மனதிலும் கிரியையுண்டாகிறதில்லை. ஆதலால் சையோகமுடைய மனதே மோக்ஷகாலத்தில் இல்லாமற்போகிறது.

---

* 1. ஆத்மாவோடு மனது சேர்வதனால் ஞானம் உண்டாகுமாயின் சுழுத்தியில் அச்சையோகம் இல்லாததாகவே நித்திரையினின்று விழிக்குங்காலத்திலுண்டாகும் சுக அஞ்ஞானங்களின நினைவுக்குக் காரணவடிவமான அநுபவம் சித்திக்கிறது. அது சித்திக்கலாகாது.

2. அல்லது:—ஆத்மாவோடு மனது சையோகமாதலால் ஞானமுண்டாகுமாயின், நியாயமதத்தில் மனதை அணுவடிவமெனக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் அதன் சையோகத்தாலுண்டாகத்தக்க ஞானமும் சரீரத்தின் ஏகதேசத்திற்றான் இருக்கும் சரீரமுழுவதினுமிராது. ஆதலால் சரீரமுழுவதினுமுண்டாகிய முட்குத்துதலின் வருத்தம் விளங்கலாகாது.

3. மனதைச் சித்தாந்தத்திற்போலச் சரீரமுழுவதினும் இருப்பதாகக்கொள்ளின், சரீரமுழுவதினும் துன்பம் சம்பவியாமையில்லையாயினும் சுழுத்தியில் சுக அஞ்ஞானங்களின் சாமாநியஞானமிருக்கின்றது. அதன் அசம்பவமுண்டாகும்.

ஆதலால் ஆத்மாவோடு மனது சையோகமாதலால் ஞானமுண்டாகிறதில்லை. ஆனால் ஆத்மாவின் சொரூபவடிவ உற்பத்திநாசமின்றிய ஞானம் நித்தியமாம் என்று கொள்ளுதல் தகுதியாம்.

**344.** ஓர் *ஏகதேசி துவக்கோடு மனது சையோகமாதலே ஞானத்திற்கு ஏதுவென்று சொல்லுகிறார்; ஆத்மாவின் சையோகத்தைச் சொல்லுகிறதில்லை. சுழுத்தியில் புரீததி என்னும் நாடியில் மனது பிரவேசிக்கிறது. அப்போது துவக்கோடு மனதிற்குச் சையோகமிருக்கிறதில்லை. ஆதலால் சுழுத்தியில் ஞானமுண்டாகிறதில்லை. அவர்கள் மதத்தில் துவக்கோடு சையோகமுடையமனதே ஞானவாயிலாகத் துக்கத்திற்கு ஹேதுவாயிருத்தலால் துக்கமாம்; கேவலமனம துக்கமன்று. மோக்ஷத்தில் துவக்கு நாசமடைவதால் அதனோடு சையோகமுண்டாகிறதில்லை; ஆதலால் ஞானமுண்டாகிறதில்லை. மோக்ஷகாலத்தில் மனது இருக்கினும் துக்கத்துக்கு ஹேதுவாய் ஞானத்தையுண்டுபண்ணும் துவக்குடன் சையோகமுடைய மனமெதுவோ அதன் சையோகநாசத்தால் நாசமடைகிறது.

**11.** இவ்விதத்தால் மோக்ஷகாலத்தில் பரமாத்மாவுக்குப் பின்னமாகவே துக்கமின்றியதாய் வியாபக ஆத்மா †ஜடரூபமாக நிலைத்திருக்கிறது. ஏனெனின் ஞானகுணத்தினால் ஆத்மா பிரகாசிக்கிறது. அந்த ஜீவனுடைய ஞானமெல்லாம் இந்திரியஜந்நியமாகவே இருக்கிறது; நித்தியமன்று. அந்த

---

* ஓர் நியாயத்தின் ஏகதேசி துவக்கினோடு மனதின் சையோகத்தை ஞானத்திற்கு ஏதுவெனக் கூறுகின்றார்.

அதுவும் அசங்கதமாம். ஏனெனின்,

1. மனதோடு உண்டாகும் ஆத்மாவின் சையோகம் ஞானத்திற்கு ஏதுவாமென்னும் அர்த்தத்தை அங்கீகரித்தலில் ஓர் பிரமாணமும் இல்லாததுபோல துவக்கினோடு உண்டாகும் மனதின் சையோகம் ஞானத்திற்கு ஏதுவாமென்னும் அர்த்தத்தை அங்கீகரித்தலில் சுருதிமுதலிய ஓர் பிரமாணமுமில்லை.

2. பிரமாணத்தாற் பெறப்படாத ஸ்வகபோலகற்பித (தனது புத்தியாற் கற்பிக்கப்படும்) பொருள் அங்கீகரிக்கத்தக்கதாமாயின் "யான் கானற்சலத்தில் ஸ்நானஞ்செய்து ஆகாயபுஷ்பத்தை முடியிற்சூடி முயற்கொம்பின் வில்லோடு வந்தியாபுத்திரன் போர்க்களத்தில் சென்றதைக் கண்டேன" என்று ஒருவன் சொல்லும் வாக்கியப்பொருளும் அங்கீகரிக்கத்தக்கதாம். ஆதலால் துவக்கோடுண்டாம் மனதின் சையோகம் ஞானத்திற் கேதுவன்று.

3. அல்லது சுழுத்தியில் துவக்கு மனதுகளின் சையோகமில்லாதிருக்கினும் புத்திமான்களது புத்தியால் அறியத்தக்க சுக அஞ்ஞானங்களின் சாமாநிய ஞானம் உண்டாகின்றது. அஃதுண்டாகலாகாது.

ஆதலால் துவக்கு மனதுகளின் சையோகம் ஞானத்திற்கு ஏதுவன்று; ஆத்மாவின் சொருபவடிவமே ஞானமாமென்று அங்கீகரிக்கத்தக்கதாம்.

† நியாயமதத்தில் ஆத்மாவை வியாபகமெனக்கொண்டு ஜடமாக ஒப்பியிருக்கின்றார்கள்.

இந்திரியஜந்நியஞானம் மோக்ஷகாலத்தில் நாசமடைகிறது. ஆதலால் பிரகாசமின்றி ஜடரூபமாய் ஆத்மா மோக்ஷகாலத்தில் நிலைத்திருக்கிறது. இது நியாயசித்தாந்தம்.

**345.** நியாயமதத்தில் முன் சொன்னபடி சுகதுக்கங்களும் பந்தமோக்ஷங்களும் ஆத்மாவுக் குண்டாகின்றன. ஆதலால் ஆத்மா நாநாவும் எங்கும் வியாபகமுமாயிருக்கிறது.

சகல அற்ப பதார்த்தங்களோடும் உண்டாகும் சையோகமே நியாயமதத்தில் வியாபகத்தின் லக்ஷணமாம்; ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேதங்களின் அபாவம் வியாபகத்தின் லக்ஷணமன்று. ஏனெனின் நியாயமதத்தில் ஆத்மா நிரவயவமாம். ஆதலால் ஸ்வகதபேதம் ஆத்மாவினிடத்தில் இல்லாமலிருந்தாலும் ஸஜாதீய விஜாதீய பேதங்களில்லாமலிருக்கவில்லை. ஆனால்,

1. ஸஜாதீயமான இரண்டாவது ஆத்மாவின்பேதம் ஆத்மாவில் இருக்கிறது.

2. விஜாதீய கடாதிகளின்பேதமும் ஆத்மாவிலிருக்கிறது.

ஆதலால் ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேதங்களின் அபாவம் * வியாபகத்

---

1. அது சுருதிவிருத்தமாம். ஏனெனின்,

(1) "இங்கு (சொப்பனத்தில்) இந்தப் புருஷன் சுயஞ்சோதி (சுவப்பிரகாசன்) ஆகின்றான். (அங்குச் சூரியன்முதலிய சோதிகளின்மையால் வெளிப்படையாயறியப்படுகின்றது.)"

(2) "இந்தப் பிராணன்களில் இதயத்தில் அந்தர்ஜோதி (உட்பிரகாச) வடிவ புருஷனிருக்கின்றான்."

(3) "சத்தியஞானாநந்தவடிவம் பிரஹ்மம் (பரிபூரணவஸ்து) ஆம்."

இவை முதலிய அநேக சுருதிவாக்கியங்களில் வியாபகஆத்மாவிற்குச் சேதனவடிவத்தன்மை கேட்கப்படுகின்றது.

இதில் யுக்தியுளது. அது மேல் 356 முதல் 359 பரியந்தமான இலக்கங்களில் நூலாசிரியரால் சொல்லப்படும். ஆதலால் ஆத்மா சொரூபமாக ஜடமாமென்னும் நியாயமதத்தின் வார்த்தை அசங்கதமாம்.

* சித்தாந்தத்தில் ஸஜாதீயவிஜாதீயஸ்வகத பேதத்தின் அபாவம் வியாபகத்தின் லக்ஷணமென்று கொள்ளப்பட்டிருக்கிறது. அது "ஒரே அத்துவிதீயப் பிரஹ்மமிருக்கிறது." என்னும் சாந்தோக்கியத்தின் ஆறாவது அத்தியாயத்தின் வசனத்தை அநுசரித்ததாம். இங்கு,

1. "ஒன்று" என்னும் சொல்லினால் ஸஜாதீயபேதத்தின் நிஷேதமாம்.

2. ஒரே என்பதிலுள்ள "ஏ" என்னும் சொல்லால் விஜாதீயபேதத்தின் நிஷேதமாம்.

தின் லக்ஷணமன்று. ஆனால் சகல † அற்ப பதார்த்தங்களோடுண்டாம் சை யோகமே வியாபகத்தின் லக்ஷணமாம்.

இதிலொருவன், "நியாயமதத்தில் ஆத்மாவைப்போல ஆகாச கால திக் குக்களும் வியாபகமாயிருக்கின்றன. பரமாணு சூக்ஷ்மமாயும் நிரவயவமாயும் இருக்கிறது. அவற்றோடு சகல வியாபகபதார்த்தங்களுக்கும் சையோகஞ் சம்பவியாது. ஏனெனின், பரமாணு ஸாவயவமானால் அப்போது சில இடத்தில் ஆத்மாவின் சையோகமுண்டாம். சிலவிடத்தில் மற்ற வியாபக பதார்த்தங்களின் சையோகமுண்டாம். அந்தப் பரமாணு ஸாவயவமன்று; நிரவயவமாம்; அதிசூக்ஷ்மமுமாம். அவற்றோடு ஒரே இடத்தில் சகல வியா பக பதார்த்தங்களுக்கும் சையோகமுண்டாகுமெனல் பொருந்தாது. ஏனெ னின், ஒன்றன் சையோகத்தால் இடம் மறைபட்டுப்போகிறது. அந்தவிடத் தில் வேறு பதார்த்தத்தின் சையோகஞ் சம்பவியாது. ஆகையால் நாநா பதார்த்தங்களுக்கு வியாபகத்துவம் பொருந்தாது. யாதேனும் ஓர் பதார்த்த மே வியாபகமாதல் பொருந்துகின்றது." என்று சங்கிக்கின்,

---

3. "அத்துவிதீய" என்னும் சொல்லால் சுவகதபேதத்தின் நிஷேதமாம்.

இந்த லக்ஷணத்தையே அநுசரித்துத் தேசகாலவஸ்துவினாலாகிய அந்தமில்லாத தும் வியாபகத்தின் லக்ஷணமாம்.

1. "ஒன்று" என்னும் பதத்தால் தேசத்தினாலாகிய அந்தம் நிஷேதிக்கப்படு கின்றது. ஏனெனின், எந்த வஸ்து பரிச்சின்னமோ அது நாநாவாம். எது வியாபக மோ அது நாநாவன்று. ஆனால் ஆகாசத்தைப்போல ஏகமாம். ஆத்மா எதனால் ஏக மாயிருக்கின்றதோ அதனால் பரிச்சின்னமன்று; ஆனால் வியாபகமாம். இதனாலேயே ஆத்மா தேசத்தினாலாகிய அந்தமில்லாததாயிருக்கிறது. நியாயமதத்தில் நாநாவியா பகமென்கிறார்கள். அது அத்வைதசுருதிக்கும் சொல்லப்படும் யுத்திக்கும் உலக அநுபவத்திற்கும் விரோதமாம். கூறிய சுருதியிலுள்ள ஏகம் (ஒன்று) என்னும் பத த்தால் ஆத்மாவில் தேசத்தினாலாகிய அந்தம் நிஷேதிக்கப்பட்டது.

2. நிச்சயவாசகமான "ஏ" என்னும் பதத்தால் ஆத்மாவின் நிரபேக்ஷிக வியா பகத்தன்மையைக் கூறுதலால் ஆத்மாவில் காலத்தினாலாகிய அந்தம் நிஷேதிக்கப் பட்டது.

3. "அத்விதீய" என்னும் சொல்லால் பேதத்தின் பிரதியோகியான (பேதத் தை நிரூபிப்பதான) அந்நிய வஸ்துவை நிஷேதித்தலால் ஆத்மாவில் வஸ்துவினாலா கிய அந்தத்தின் நிஷேதம் செய்யப்பட்டது.

இவ்வாற்றால் சித்தாந்தத்திற் கூறிய இருவகை வியாபகத்தின் லக்ஷணமும் சுரு தியைத் தழுவியதாம்.

† இந்த நியாயமதத்திற்கூறிய வியாபகத்தின் லக்ஷணம் சுருதி யுக்தி லோகாநு பவங்கட்கு விரோதமுடையதாம்.

அச்சங்கை பொருந்தாது. ஏனெனின், ஸாவயவவஸ்துவின் சையோகம் எதுவோ அது அந்நியவஸ்துவின் சையோகத்திற்கு விரோதியாம்.

1. எந்தப் பூமியில் கையின் சையோகமுளதாகின்றதோ அந்த இடத்தில் பாதத்தின் சையோகமுண்டாகிறதில்லை. நிரவயவவஸ்துவின் சையோகம் இடத்தைத் தடுக்கிறதில்லை. ஆதலால் வேறு வஸ்துவின் சையோகத்திற்கு விரோதமில்லை. இவ்வார்த்தை அநுபவசித்தமாம்.

2. கடத்தின் எந்த இடத்தில் ஆகாசத்துக்குச் சையோகமிருக்கிறதோ, அந்த இடத்திலேயே காலத்துக்கும் திக்குக்கும் சையோகமிருக்கிறது. யாதேனுமோர் கடத்தின் இடம் ஆகாசகாலதிக்குக்களுக்குப் புறம்பாயிருக்குமாயின் அந்த இடத்தில் ஆகாசகாலதிக்குக்களுக்குச் சையோகமிராது. ஆனால் அவ்வாறு வெளியிலோ யாதொரு தேசமுமில்லை. சகல பதார்த்தங்களின் சகல இடங்களும் ஆகாசகாலதிக்குக்களிலேயே இருக்கின்றன. ஆதலால் சகல பதார்த்தங்களின் சகல இடங்களிலும் ஆகாசகாலதிக்குக்களின் சையோகமிருக்கிறது.

இவ்வாறு பரமாணுவிலும் ஒரே இடத்தில் அநேக நிரவயவ வியாபக பதார்த்தங்களுக்குச் சையோகமுண்டாகக்கூடும்; யாதொரு தோஷமுமில்லை. ஆதலால் ஆத்மா நாநாவும் முழுவியாபகமுமாயிருக்கிறது.

**346.** [சித்தாந்தி :—] * எல்லாவற்றிற்கும் எல்லாப் பதார்த்தங்களோடும் சையோகம் இருக்கிறதென்பது நியாயசித்தாந்தம். அது நலமுடையதன்று. ஏனெனின், வியாபகமான ஆத்மா அநேகமென்று அங்கீகரிக்கின், எல்லாச்சரீரங்களிலும் எல்லா ஆத்மாக்களின் சம்பந்தத்தையு மங்கீகரிக்க வேண்டும். அதனால இன்னசரீரம் இன்ன ஆத்மாவினுடையதென்னும் நிச்சயமில்லாமற்போம். ஒவ்வொரு ஆத்மாவுக்கும் எல்லாச் சரீரங்களுமிருக்க வேண்டும்.

எவன்கருமத்தினால் எந்தச் சரீரமுண்டாயிற்றோ அந்த ஆத்மாவுக்கு அதுதான் சரீரமென்று ஒருவன் சொல்லும்பக்ஷத்தில்,

அதுவும் பொருந்தாது. ஏனெனின், எந்தச் சரீரத்தாற் கர்மம் செய்யப்பட்டதோ அந்தக் கருமத்தைச்செய்தவனுடைய முன்சரீரத்திலும் சகல ஆத்மாக்களுக்கும் சம்பந்தமுண்டு. ஆதலால் கர்மமும் சகல ஆத்மாக்களினதே யாகும்; ஓராத்மாவினதாகாது.

* சகல ஆத்மாக்களுக்கும வியாபகவஸ்துவிற்கு வேறான சகல பரிச்சின்னமான தேகம் இந்திரியம் மனம் பரமாணுமுதலிய வஸ்துக்களோடு சையோகமிருக்கிறது என்பது இவ்வாக்கியத்திற்குப் பொருளாம்.

எந்த ஆத்மாவுக்குச் சரீரம் மனதோடு கூடியிருக்கிறதோ அந்த ஆத்மாவுக்கு அதுதான் சரீரம் என்று கூறின்,

அதுவும் பொருந்தாது. ஏனெனின்,

1. சரீரம்போல் மனதுடனும் சகல ஆத்மாக்களுக்கும் சம்பந்தமிருக்கின்றது. அதன்கண் இன்ன மனது இன்ன ஆத்மாவினதென்னும் நிச்சயமுண்டாகிறதில்லை. எல்லா ஆத்மாக்களுக்கும் எல்லா மனதுமிருக்கவேண்டும்.

2. அப்படியே இந்திரியமும் எல்லா ஆத்மாக்களுக்கும் எல்லாமுமேயாகும்.

3. வெளிப்பதார்த்தங்களில் "இது என்னுடையது, இது வேறொருவனது" என்னும் வியவகாரமும் சரீரத்தைமுன்னிட்டதாம். அச்சரீரம எல்லா ஆத்மாக்களுக்கும் எல்லாமுமாதலால் வெளிப்பதார்த்தங்களும் எல்லாமும் எல்லா ஆத்மாக்களுடையதாகவேண்டும்.

அன்றியும், எந்த ஆத்மாவுக்கு எந்தச்சரீரத்தில் நான் என்னுடையது என்னும் புத்தியிருக்கிறதோ அந்தச்சரீரமே அந்த ஆத்மாவினது. யானென்னும் புத்தியும் என்னுடையதென்னும் புத்தியும் ஒன்றும். ஆதலால் எல்லா ஆத்மாவிலுமிராது. ஆனால் ஒரு தர்மம் ஒரே தர்மியிற்றானிருக்கும். ஆதலால் ஒரே ஆத்மாவின் சரீரமாம். எந்த ஆத்மாவுக்கு எந்தச் சரீரமிருக்கிறதோ அந்தச் சரீரத்துடன் சம்பந்தப்பட்ட மனதும் இந்திரியமும் வெளிப்பதார்த்தங்களும் அந்த ஆத்மாவினுடையனவாம். ஆதலால் வியாபகமான நாநா ஆத்மாக்களை அங்கீகரித்தலிலும் தோஷமில்லையென்று கூறின்,

அவ்வாறு கூறுதலும் பொருந்தாது. ஏனெனின், நான் என்னும் புத்தி ஒருதேகத்தில் ஒரேஆத்மாவுக்கிருந்தாலும் அது நியாயமதத்தில் பொருந்தாது. எல்லா ஆத்மாக்களுக்கும் ஒரு சரீரத்தில் நான் என்னும் புத்தியுண்டாகவேண்டியது. ஏனெனின் நியாயமதத்தில் புத்தியென்பது ஞானத்திற்காம். அந்த ஞானம் ஆத்மமனதுகளின் சையோகத்தினாலுண்டாகிறது. அந்த மனதோடுண்டாம் சையோகம் எல்லா ஆத்மாக்களுக்கும் இருக்கிறது. ஆதலால் மனதின் சையோகத்தினால் ஒருசரீரத்தில் ஒரு ஆத்மாவுக்கு நான் என்னும் புத்தியுண்டாகிறதுபோல் ஒருசரீரத்தில் எல்லா ஆத்மாக்களுக்கும் நானென்னும் புத்தியுண்டாகவேண்டும்.

மனதின் சையோகம் எல்லா ஆத்மாக்களோடுமிருந்தாலும் எந்த ஆத்மாவில் ஞானத்தையுண்டுபண்ணும் அதிருஷ்டமிருக்கிறதோ அந்த ஆத்மாவுக்கே நானென்னும் புத்தியுண்டாகிறது என்று கூறின்,

அங்ஙனமாயினும், எல்லாருக்குமே ஞானமுண்டாகவேண்டும். ஏனெனின், வியாபகமான நாநா ஆத்மாவையங்கீகரிக்கின், ஒரு சரீரத்தின் சுபாசுபக் கிரியைகளால் சரீரத்திலிருக்கும் எல்லா ஆத்மாக்களுக்கும் அதிருஷ்டம் உண்டாகவேண்டியது. இதனை முன் கூறிவந்தோம். ஆதலால் வியாபகமான நாநா ஆத்மாவை அங்கீகரிக்கின், ஒருதேகத்தில் எல்லா ஆத்மாக்களுக்கும் சுகதுக்கங்களின் போகமுண்டாகவேண்டும்; அனுபவத்தில் அப்படியில்லை.

ஆதலால் ஆத்மா * வியாபகமும் நாநாவும் கர்த்தாபோக்தாவுமாம் என்னும் நியாயசித்தாந்தம் நலமுடையதன்று.

**347.** நம்முடைய சித்தாந்தத்தில் கர்த்தாபோக்தா அந்தக்கரணம். அந்த அந்தக்கரணம் அனேகம், அது வியாபகமுமன்று; அணுவுமன்று. அதன் பரிமாணம் சரீரத்துக்குச் சமானமாம். தீபப்பிரகாசம்போல் பெரிய சரீரத்தை யடையும்போது அந்தக்கரணம் விரிகிறது. சிறியசரீரத்தில் அது சுருங்குகிறது. இவ்வார்த்தை சித்தாந்தபிந்துவின் வியாக்கியானத்தில் மதுசூதனஸ்வாமிகளால் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. எந்த அந்தக்கரணத்திற்கு எந்தச் சரீரத்தோடு சம்பந்தமிருக்கிறதோ அந்த அந்தக்கரணத்திற்கு அந்தச்சரீரத்தாற் போகமுண்டாகிறது.

அந்தக்கரணத்தை வியாபகமெனக்கொள்ளின் எல்லாச் சரீரங்களும் எல்லோருடையதாம்; போகமும் எல்லோருக்குமுண்டாகும். அந்த அந்தக்கரணம் வியாபகமன்றாகலின் தோஷமில்லை. அந்தக்கரணத்தை யணுவெனக் கொள்ளின், சரீரத்தின் ஓரிடத்தில் அது இருக்கவேண்டுமென்று அங்கீகரிக்க வரும். அவ்வாறு கூறுதலும் பொருந்தாது. ஏனெனின், ஒரேகாலத்தில் காலிலும் தலையிலும் முட்குத்தினால் இரண்டிடங்களிலும் ஒரேகாலத்தில் வேதனையுண்டாகிறது. அது உண்டாகலாகாது. ஏனெனின், அந்தக்கரணம் அணுவானால் ஒரேஸ்தானத்தில் ஒருகாலத்திலிருக்கும். அதனால் எவ்விடத்தில் அந்தக்கரணமிருக்கிறதோ அவ்விடத்திற்றான் வேதனையுண்டாகவேண்டியது; இரண்டிடங்களிலுமுண்டாகலாகாது.

ஆதலால் அந்தக்கரணம் அணுவன்று; வியாபகமுமன்று. ஆனால் சரீரத்துக்குச் சமானமாயிருக்கிறது. அதனால் ஒரு தோஷமுமில்லை. அணு

---

* எப்படிப் பலகடங்களை வியாபகமென்பது பிரயோஜனமின்றியதோ அப்படியே சரீரங்கள்தோறுமுள்ள கர்த்தா போக்தாவான நாநா ஆத்மாக்களுக்கும் வியாபகத்துவஞ் சொல்வது நிஷ்பிரயோசனமாம்.

அல்லது நாநா அந்தக்கரணங்களை யங்கீகரித்தலால் போகங்கள் கலவாமை சித்தித்தலால் வியாபமான ஆத்மாவினை நாநாவென்பது நிஷ்பிரயோஜனமாம்.

விற்கும் வியாபகத்திற்கும் வேருயிருப்பது எதுவோ அதனையே மத்தியமபரி மாணமென்பர்.

**348.** [பூர்வபக்ஷி :—] நியாயமதத்தில் ஓர் நவீனர் இவ்வாறு அங்கீ கரித்திருக்கின்றனர் :—

1. ஆத்மா நாநாவாம்; கர்த்தா போக்தாவாம்; வியாபகமன்று. ஆத லால் போகத்தின் கலப்பில்லை.

2. அணுவுமன்று. ஆதலால் இரண்டிடங்களிலும் முட்குத்தினவேத னையுண்டாகாதென்பதுமில்லை. ஆனல் வேதாந்தமதத்தில் அந்தக்கரணம் மத்தியமபரிமாணமா யிருப்பதுபோல ஆத்மாவும் * மத்தியமபரிமாணமா யிருக்கிறது. அதனிடத்தில் 14 குணங்களிருக்கின்றன.

**349.** [சித்தாந்தி :—] அதுவும் நலமுடையதன்று. ஏனெனின்,

1. ஆத்மாவை சங்கோச விகாஸமு (சுருங்குதல் விரிதலு)டையதெனக் கொள்ளின் தீபப்பிரகாசம்போல் ஆத்மா விகாரியும் நாசமுடையதுமாகும். அதனல் மோக்ஷத்தைப் பிரதிபாதிக்கும் சாஸ்திரமும் சாதனங்களும் பிர யோஜனமற்றனவாம்.

2. மத்தியமபரிமாணத்தை யங்கீகரித்துச் சங்கோசவிகாசங்களை யங்கீ கரிக்காவிடின் எந்தச்சரீரத்துக்குச் சமானமாக ஆத்மாவை அங்கீகரிப்பதென் னும் நிச்சயமுண்டாகிறதில்லை.

3. மனுஷியசரீரத்துக்குச் சமானமெனக்கொள்ளின், எப்போது ஆத்மா யானையின் சரீரத்தை அடைகிறதோ அப்போது முழுதேகத்திலும் ஆத்மா இல்லாமற்போகும். அதனல் எந்த இடத்தில் யானையின் ஆத்மா வில்லையோ அந்தவிடத்தில் வேதனையுமுண்டாகலாகாது.

4. யானையின் சரீரத்திற்குச் சமானமாக ஆத்மாவை யங்கீகரிக்கின் அந்த யானையைக்காட்டிலும் பெரியசரீரத்தின் ஓரிடத்தில் முன் சொல்லிய படி வேதனையுண்டாகலாகாது. எல்லாச்சரீரங்களுக்கும் பெரிதாக ஆத்மா வின் ஆகாரத்துக்குச் சமானமாக எதன் சரீரமுமில்லை.

---

* இங்கு இது இரகசியமாம் :—எதனல சரீரத்தினுள்ளிருக்கும் மனம் இந்திரிய முதலிய எல்லா அற்பபதார்த்தங்களோடும் ஆத்மாவிற்குச் சையோகமிருக்கிறதோ, அதனல் மத்தியமபரிமாணமுடைய ஆத்மாவினிடத்திலும் நியாயசம்பிரதாயத்திற் கூறிய வியாபகத்தின் லக்ஷணம் சம்பவிக்கிறது.

5. எல்லாச்சரீரங்களையும்விடப் பெரிதான விராட்டின் சரீரத்துக்குச் சமானமாக ஆத்மாவைக் கொள்ளின், விராட்டின் சரீரத்தினுள் சகலசரீரங் களும் அடங்கியிருத்தலால் எல்லா ஆத்மாக்களுக்கும் எல்லாச்சரீரங்களோ டும் சம்பந்தமுண்டாகும். அதன்கண் முன் தோஷம் சொல்லப்பட்டே யிருக்கிறது.

மத்தியமபரிமாணமாயிருக்கும் வஸ்து எதுவோ அது சரீரம்போல் அநித் தியமாகும் என்று நியமமிருக்கிறது. ஆதலால் ஆத்மாவும் மத்தியமபரிமா ணமாயிருத்தலால் அநித்தியமாகும். நம்முடையமதப்படி அந்தக்கரணம் ஞானத்தினால் நாசமடைகிறது; ஆதலால் அநித்தியமாம். அந்தக்கரணத் திற்கு மத்தியமபரிமாணம் அங்கீகரிப்பதனால் தோஷமில்லை.

இவ்விதத்தால் நவீனதார்க்கீகர்மதமும் நலமுடையதன்று.

350. [பூர்வபக்ஷி :—] ஆத்மா நாநாவும் அணுவுமாமென்று சில நை யாயிகர் சொல்லுகின்றனரோ ?

[சித்தாந்தி :—] அவ்வார்த்தையும் பொருந்தாது. ஏனெனின்,

1. ஆத்மாவைக் ~~கர்த்தா போக்தா~~வெனக்கொள்ளின், அந்தக்கரணத் தையணுவென்றவிடத்திற் சொல்லப்பட்ட தோஷம் எதுவோ அஃதுண்டா கும்.

2. ஆத்மாவைக் [redacted]வென்று அங்கீகரிக்காவிடின் ஆத்மா அநேகமென்று கொள்ளுதல் நிஷ்பலமாய்விடும். வியாபகமான ஓராத்மா வையே எல்லாச்சரீரங்களிலுமிருப்பதாக அங்கீகரித்தல் தகுதியாம்.

கர்த்தா போக்தாவென்று அங்கீகரிக்காவிடின் இந்த நையாயிகனுக்குத் தனது சித்தாந்தத்தையும் கைவிடுதலுண்டாம். ஏனெனின், ஞானம் சுகம் துக்கம்தர்மமுதலியன ஆத்மாவின் தர்மங்களென்பது அணுவாதியின் சித்தாந் தம். ஆதலால் ஆத்மாவையணுவென்று அங்கீகரிக்கின் சரீரத்தின் எந்தவிடத் தில் ஆத்மா இல்லையோ அந்த இடம் மிருத(பிண)சமானமாம். அவ்விடத் தில் வேதனைமுதலியன உண்டாகலாகாது.

351. ஆத்மாவோ சரீரத்தில் ஓரிடத்திலிருக்கிறது. ஆனால் கஸ்தூரி யின் வாஸனைபோல் அதன் ஞானம் முழுசரீரத்திலும் வியாபித்திருக்கிறது. அதனால் சரீர முழுவதிலுமுண்டாம். அநுகூலப் பிரதிகூலங்களின் சம்பந் தத்தினை அநுபவமென்பர்.

அதுவும் பொருந்தாது. ஏனெனின், எவ்வளவிடத்தில் குணமுடைய வஸ்து இருக்குமோ அதற்கு வெளியில் குணமிராது; குணியிலேயே குண

மிருக்கும் என்பது நியமம். கடாதிகளின் ரூபம் அவற்றிற்கு வெளியிலிராதது போல் ஆத்மாவுக்கு வெளியில் ஞானமும் பொருந்தாது. கஸ்தூரியின் சூக்ஷ்மபாகம் எவ்வளவிடத்தில் வியாபித்திருக்கிறதோ அவ்வளவிடத்திலே யே கந்தம் வியாபித்ததாகிறது. ஆதலால் கஸ்தூரியின் திருஷ்டாந்தமும் பொருந்தாது. ஆதலால் "ஆத்மா அணு"வென்னும் பக்ஷமும் பொருந்தாது.

சிலவிடத்துச் சுருதிகளில் ஆத்மா அத்தியந்தம் அணுவினும் அணு வென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது அறிதற்கரியதாயிருத்தல்பற்றிக் கூறியதாம். அத்தியந்தம் அணுவாயிருக்கும் வஸ்துவின் ஞானம் மந்தப் பார்வையுள்ளவர்களுக்கு உண்டாகாததுபோல் பகிர்முகபுருஷர்களுக்கும் ஆத்மாவின் ஞானமுண்டாகாது. ஆதலால் அணுவிற்குச் சமானமாமென்ப தே சுருதியின் அபிப்பிராயம். "ஆத்மா அணு"வென்னும் அபிப்பிராய மில்லை. ஏனெனின், * அநேக இடங்களில் ஆத்மா வியாபகரூபமென்று வேதம் தானே பிரதிபாதித்திருக்கிறது. ஆதலால் ஆத்மா அணுவன்று.

இவ்விதத்தால் ஆத்மா வியாபகமாயும் நாநாவாயும் அல்லது மத்தியம பரிமாணமாயும் நாநாவாயும் அல்லது அணுவாயும் நாநாவாயுமிருக்கிறதென்று கூறுதல் பொருந்ாது.

---

* "அணுவினு மணுவும் மகத்தினு மகத்துமாம்" என்னும் சுருதிக்கு இது பொருளாம் :—

(1) பிருதிவியினும் ஜலம் சூக்ஷ்மமும் வியாபகமுமாம்.

(2) ஜலத்தினும் தேயு சூக்ஷ்மமும் வியாபகமுமாம்.

(3) தேயுவினும் வாயு சூக்ஷ்மமும் வியாபகமுமாம்.

(4) வாயுவினும் ஆகாயம் சூக்ஷ்மமும் வியாபகமுமாம்.

(5) ஆகாயத்தினும் மாயை சூக்ஷ்மமும் வியாபகமுமாம்.

(6) மாயையினும் ஆத்மா சூக்ஷ்மமும் வியாபகமுமாம்.

(7) இவைமுதலிய சுருதிகளில் ஆத்மாவிற்கு எல்லாவற்றினும் சூக்ஷ்மத்தன்மையும் வியாபகத்தன்மையும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வர்த்தம் உபதேசசகஸ்ரியில் பகவான் பாஷ்யகாரரால் சொல்லப்பட்டிருக்கின்றது. அதை யநுசரித்து ஸ்ரீ விசாரசந்ரோதயத்தின் பத்தாவதுகலையிலும் யுக்தியோடு எழுதப்பட்டிருக்கின்றது. ஆதலால் ஆத்மா அணுவென்று கூறுதல் பயனில்லாததாம்.

**352.** *பரிசேஷத்தால் ஆத்மா ஏகமாயும் வியாபகமாயுமிருக்கிறது. அதனிடத்தில் தர்மாதர்மங்கள் சுகதுக்கங்கள் பந்தமோக்ஷங்கள் என்பவற்றை யங்கீகரிக்கின், சிலருக்குச் சுகம் சிலருக்குத் துக்கம் சிலருக்குப் பந்தம் சிலருக்கு மோக்ஷம் என்னும் வியவகாரமுண்டாகாது. ஆதலால் தர்மாதிகள் புத்தியின் தர்மங்களாம்.

புத்தி ஜடமாயிருத்தலால் அதனிடத்திலும் தர்மசுகாதிகள் பொருந்தாவெனினும், ஆத்மாவின் தர்மங்களாகா என்னும் அபிப்பிராயத்தால் புத்தியின் தர்மமெனப்படுகின்றன; "புத்தியின் தர்மமா"மென்பதில் அபிப்பிராயமன்று.

புத்தியும் சுகாதிகளும் ஆத்மாவினிடத்தில் அத்தியஸ்தங்களாயிருக்கின்றன.

1. எது எதில் அத்தியஸ்தமாயிருக்கிறதோ அது அதில் பரமார்த்தமாயிருப்பதில்லை. ரஜ்ஜுவில் அத்தியஸ்தமான சர்ப்பம் பரமார்த்தமாக ரஜ்ஜுவில் இல்லாததுபோல் புத்தியும் சுகாதிகளும் ஆத்மாவினிடத்திலில்லை.

2. அத்தியஸ்தவஸ்துவும் எதற்கும் ஆசிரயமாகிறதில்லை, ஆதலால் புத்தியும் சுகாதிகளின் ஆசிரயமன்று.

(1) ஆனால் அஞ்ஞானமோ சுத்தசேதனத்தில் அத்தியஸ்தமாயிருக்கிறது.

(2) அந்தக்கரணம் அஞ்ஞானஉபகிதத்தில் அத்தியஸ்தமாயிருக்கிறது.

(3) அந்தக்கரணஉபகிதத்தில் தர்மாதர்மங்கள் சுகதுக்கங்கள் பந்தமோக்ஷங்கள் அத்தியஸ்தமாயிருக்கின்றன.

இவ்வாற்றால் ஆத்மாவிலுள்ள தர்மாதிகளின் அதிஷ்டானத்தன்மைக்கு அந்தக்கரணம் உபாதியாயிருக்கிறது. ஆதலால் அந்தக்கரணத்தின் தர்மமெனப்படுகின்றன.

**353.** அந்தக்கரணவிசிஷ்டத்தில் தர்மாதிகள் அத்தியஸ்தமெனின் பொருந்தாது. ஏனெனின், விசேஷணத்தோடுகூடியதனை விசிஷ்டமென்பர். தர்மாதிகளின் அத்தியாஸத்துக்கு அதிஷ்டானமான ஆத்மாவுக்கு அந்தக்கரணத்தை விசேஷணமாக அங்கீகரித்தால் அந்தக்கரணமும் தர்மம் சுகமுதலியவற்றிற்கு அதிஷ்டானமாகும். இவ்வார்த்தை பொருந்தாது. ஏனெனின்

*பலபொருள்கள் நிகழ்ந்தகாலத்து மற்றவை நிஷேதிக்கப்பட எஞ்சிநிற்கும் ஒருபொருளினுண்டாம் நிச்சயம் பரிசேஷமெனப்படும். அந்தப் பரிசேஷத்தால்.

மித்தியாவஸ்து அதிஷ்டானமாகாது. ஆதலால் ஆத்மாவில் தர்மாதிகளின் அத்தியாஸத்துக்கு அந்தக்கரணம் விசேஷணமன்று; ஆனால் உபாதியாம்.

1. உபாதியின் சுபாவம் இதுவாம்:—தான் எல்லையிலிருப்பதாய் (சம்பந்தப்படாமலிருந்துகொண்டு) தான் எவ்வளவிடத்திலிருக்கிறதோ அவ்வளவிடத்திலுள்ள வஸ்துவை யறிவிக்கும்.

2. விசேஷணத்தின் சுபாவம் இதுவாம்:—எவ்வளவிடத்தில் தானிருக்கிறதோ அவ்வளவு இடத்திலுள்ள வஸ்துவைத் தன்னுடன் அறிவிக்கும்.

1. விசேஷணமுடையதனை விசிஷ்டமென்பர்.

2. உபாதியுடையதனை உபஹிதமென்பர்.

இவ்வாற்றால் அந்தக்கரணவிசிஷ்டத்திலுள்ள தர்மாதிகளை யத்தியஸ்தமெனின், எவ்விடத்தில் அந்தக்கரணமிருக்கிறதோ, அவ்வளவிடத்திலுள்ள சேதனபாகமும் அந்தக்கரணமும் இரண்டும் அதிஷ்டானமாகும். அந்த அந்தக்கரணம் தானும் அத்தியஸ்தமாயிருத்தலால் அதிஷ்டானமாகாது. இந்த அபிப்பிராயத்தால் அந்தக்கரணவுபகிதத்தில் தர்மாதிகள் அத்தியஸ்தமெனப்பட்டன.

ஆதலால் "எவ்வளவிடத்தில் அந்தக்கரணமிருக்கிறதோ அவ்வளவிடத்திலுள்ள சேதனபாகமாத்திரம் அதிஷ்டானமாம்; அந்தக்கரணம் அதிஷ்டானமன்று" என்று கூறுதல் பொருந்துகின்றது.

354. அப்படியே அந்தக்கரணமும் அஞ்ஞானவுபகிதத்தில் அத்தியஸ்தமாயிருக்கிறது; அஞ்ஞானவிசிஷ்டத்தில் அத்தியஸ்தமாயில்லை.

இவ்விதத்தால் அத்தியஸ்தமான தர்மாதிகளுக்கு அதிஷ்டானம் ஆத்மாவாம்.

1. அத்தியாஸத்தின் அதிஷ்டானத்தன்மைக்கு அந்தக்கரணமுபாதியாயிருக்கிறது. ஆதலால் சுகதுக்காதிகள் புத்தியின் தர்மங்களெனப்பட்டன.

2. அவிவேகத்தினால் அந்தக்கரணம் ஆத்மா என்னுமிரண்டிலும் அவை பிரதீதியாகின்றன; அதனால் அந்தக்கரணவிசிஷ்டப்பிரமாதாவின் தர்மங்களெனப்படுகின்றன.

1. தர்மாதிகள் அந்தக்கரணத்தின் தர்மங்களாம்.

2. அல்லது அந்தக்கரணவிசிஷ்டப்பிரமாதாவின் தர்மங்களாம்.

3. அல்லது ரஜ்ஜு-சர்ப்பம்போலவும் சொப்பனபதார்த்தம்போலவும் கந்தர்வபட்டணம்போலவும் ஆகாசத்தின் நீலவர்ணம்போலவும் எதன் தர்மமுமாகா.

எவ்விதத்தாலும் ஆத்மாவின் தர்மங்களன்று.

ஆத்மாவினிடத்தில் அத்தியஸ்தமானாலும் எந்த வஸ்து எதனிடத்தில் அத்தியஸ்தமாயிருக்கிறதோ அது அதனிடத்தில் பரமார்த்தமாக இருப்பதில்லை. ஆதலால் ராகத்துவேஷங்கள் பந்தமோக்ஷங்கள் தர்மாதர்மங்கள் சுகதுக்கங்கள் பந்தமோக்ஷங்கள் என்னுமிவையின்றிய ஏகமும் வியாபகமுமாய் ஆத்மா இருக்கின்றது.

அத்தியஸ்தமென்பது கற்பிதத்தி (கற்பிக்கப்பட்டத)ற்காம்.

## 355. ஆத்மாசத்தெனல்.

அந்த ஆத்மா சத்தாம.

1. எந்த வஸ்து ஞானத்தினால் இல்லாமற்போகிறதோ அது அஸத்தென்று சொல்லப்படுகிறது.

2. எதன் நிவிருத்தி எக்காலத்திலுமுண்டாகிறதில்லையோ அது சத்தென்று சொல்லப்படும்.

சகலபதார்த்தங்களுக்கும் அவற்றின் நிவிருத்திக்கும் ஆத்மா அதிஷ்டானமாம்.

ஆத்மாவுக்கே நிவிருத்தியுண்டாகுமாயின் அதற்கு வேறு அதிஷ்டானஞ் சொல்லவேண்டுமே. ஏனெனின்,

1. சூனியத்தில் நிவிருத்தியுண்டாகாது.

2. ஆத்மாவுக்கும அதன் நிவிருத்திக்கும் வேறு அதிஷ்டானம் அங்கீகரிக்கின், அதற்கு வேறு அதிஷ்டானம் அங்கீகரிக்கவேண்டும். இவ்விதமாக அநவஸ்தாதோஷம் சம்பவிக்கும்.

அன்றியும், ஆத்மாவின் நிவிருத்தியை அங்கீகரிக்கிறவனை ஆத்மாவின் நிவிருத்தியை எவனாவது அனுபவித்திருக்கிறானா? இல்லையா? என்று கேட்க வேண்டும்.

1. அனுபவித்திருக்கிறானென்று சொல்லுவானாயின்,

அது பொருந்தாது. ஏனெனின், எவன் அனுபவிக்கிறவனோ அவனே ஆத்மாவும் தனது ஸ்வரூபமுமாவன். அதன் நிவிருத்தியின் அநுபவம் தன் தலையை வெட்டினதைத்தான் அனுபவிப்பதற்குச் சமானமாகும். ஆகையால் ஆத்மாவின் நிவிருத்தியின் அனுபவம் பொருந்தாது.

2. ஆத்மாவின் நிவிருத்தியோ உண்டாகிறது; ஆனால் அதன் நிவிருத்தியின் அனுபவம் ஒருவனுக்குமில்லையெனின்,

இது சித்தித்தது :— ஆத்மாவுக்கு நிவிருத்தியோ உண்டாகிறதில்லை. ஏனெனின், எந்தவஸ்து ஒருவனாலும் அனுபவிக்கப்படவில்லையோ அது மலடிமகனுக்குச் சமானமாகும்.

ஆகையால் ஆத்மாவின் நிவிருத்தியுண்டாகிறதில்லை. இதனாலேயே ஆத்மா சத்தாம்.

## 356. ஆத்மா சித்து (சைதன்னியம்) எனல். 356—359.

ஆத்மா சித்தாம்,

பிரகாசரூபமான ஞானம் *சித்தெனப்படும்.

1. ஆத்மாவை அப்பிரகாசரூபமாக அங்கீகரிக்கின் அனாத்மஜடவஸ்துக்களின் பிரகாசம் ஒருகாலுமுண்டாகமாட்டாது.

2. அந்தக்கரணம் இந்திரியங்கள் என்பவற்றால் பதார்த்தங்களின் பிரகாசமுண்டாகிறதெனிற் பொருந்தாது. ஏனெனின், அந்தக்கரணமும் இந்திரியங்களும் பரிச்சின்னமாயிருக்கின்றன. ஆதலால் அவை காரியங்களாம்.

1. எது பரிச்சின்னமாயிருக்கிறதோ அது கடம்போல் காரியமாம். அந்தக்கரணமும் இந்திரியங்களும் பரிச்சின்னமாயிருத்தலால் காரியங்களாம்.

2. தேசகாலங்களால் எதற்கு முடிவுண்டாகிறதோ அது பரிச்சின்னமெனப்படும்.

3. எது காரியமோ அது ஜடமாம்.

அந்தக்கரணமும் இந்திரியங்களும் ஜடமாயிருக்கின்றன. அவற்றால் எந்த வஸ்துவும் பிரகாசிக்கமாட்டாது. ஆதலால் எல்லாவற்றையும் பிரகாசிப்பிக்கிற ஆத்மா பிரகாசரூபமாயிருக்கிறது.

**357.** ஆத்மா பிரகாசரூபமன்று; அது ஜடமாம்; அதனிடத்தில் ஞானகுணமுண்டு; அந்த ஞானத்தால் ஆத்மாநாத்மாக்களின் பிரகாசமுண்டாகின்றது என்று சொல்லுவானாயின், அவனை, 1. ஆத்மாவின் ஞானகுணம் நித்தியமா? 2. அல்லது அநித்தியமா? என்று கேட்கவேண்டும்.

1. நித்தியமெனின்,

ஆத்மாவின் ஸ்வரூபமே ஞானமென்று சித்திக்கும். ஏனெனின், ஆத்மாவுக்கு வேறானதெல்லாம் அநித்தியம் என்பது நியமம். ஞானத்தை ஆத்மாவுக்கு வேறெனக்கொள்ளின், அநித்தியமேயாகும். ஆதலால் ஞானம்

---

* அலுப்த (கெடாத) பிரகாசத்தினைச் சித்தென்பர். சேதனவடிவ ஞானத்திற்கு லோபம் (கேடு) இல்லை. இவ்வர்த்தத்தில் இது சுருதியாம்:—திருஷ்டாவின் (சொரூபவடிவ) திருஷ்டிக்கு லோபம் (நாசம்) இல்லை; அவிநாசியாயிருத்தலால்.

நித்தியமென்று கொண்டு ஞானம் ஆத்மாவுக்கு வேறென்று சொல்லுதல் பொருந்தாது.

2. அநித்தியமெனக்கொள்ளின்,

கடமுதலியவற்றைப்போல ஜடமாம். அநித்தியவஸ்து எதுவோ அது ஜடமாம். ஆதலால் "ஞானம் அநித்தியமாம்" என்று கூறுதல் பொருந்தாது. ஆனால் ஞானம் நித்தியமேயாம். அந்த நித்தியஞானம் ஆத்மசொரூபமேயாம். அநித்தியமெனக்கொள்ளின், ஒருகாலத்தில் ஆத்மாவில் ஞானமிருக்கும்; ஒருகாலத்திலிராது. ஆதலால் ஆத்மாவிற்கு வேறாகவும் ஞானமிருக்கும்; நித்தியமெனக்கொள்ளின் அது பின்னமாகாது.

எது குணமோ அது குணியினிடத்தில் ஒருகால் இருக்கும்; ஒருகால் இல்லாமலுமிருக்கும். வஸ்திரத்தின் நீல மஞ்சட்குணங்கள் ஒருகால வஸ்திரத்திலிருக்கும்; ஒருகால் இல்லாமலுமிருக்கும். ஆதலால எது குணமோ அது போக்குவரத்துடையதாம்.

ஞானம் நித்தியமாகலின் போக்குவரத்துடையதன்று. ஆதலால் ஆத்மாவின ஸ்வரூபமே ஞானமாம்.

358. ஞானத்தை அநித்தியமென்று கூறின், இந்திரியங்களாலாவது அந்தக்கரணத்தினாலாவது ஞானம் உற்பத்தியாமென்று சொல்ல நேரும்.

அது பொருந்தாது ஏனெனின் சுழுத்தியில இந்திரியாதிகளோ இல்லை; சுகத்தின் ஞானமுண்டாகிறது. அது உண்டாகலாகாது.

சுழுத்தியில் சுகத்தின் ஞானமங்கீகரியாவிடின் விழித்துக்கொண்டவனுக்கு "நான் சுகமாய்த் தூங்கினே" னென்று சுழுத்திசுகத்தின் ஸ்மிருதி (நினைவு) உண்டாகிறது; அது உண்டாகலாகாது. எந்தவஸ்து முன்னறியப்பட்டிருக்கிறதோ அதன் ஸ்மிருதியுண்டாகும். அறியப்படாத வஸ்துவின் ஸ்மரணையுண்டாகாது. சுழுத்திசுகத்தின் ஸ்மரணை விழித்துக்கொண்டவனுக்குண்டாதலால் சுழுத்தியில சுகத்தின் ஞானமுண்டு. அந்த ஞானத்தையுண்டு பண்ணும் இந்திரியாதிகள் சுழுத்தியிலில்லை. ஆதலால் ஞானம் நித்தியமாம்.

ஞானத்தைவிட்டு ஆத்மா ஒருபோதுமிருக்கிறதில்லை. ஆதலால் ஞானம் ஆத்மாவின் சொரூபமாம். எப்படி உஷ்ணத்தை விட்டு அக்கினி ஒருகாலுமிராமையால் உஷ்ணம் அக்கினியின் சொரூபமாயிருக்கிறதோ அப்படியே ஞானமும் ஆத்மாவின் சொரூபமாயிருக்கிறது. எது போக்குவரத்துடையதோ அது குணமாம். உஷ்ணமும் ஞானமும் போக்குவரத்துடையனவன்று. ஆதலால் அவை முறையே அக்கினியின் சொரூபமும் ஆத்மாவின் சொரூபமுமாம்.

எந்த வஸ்து ஒருகாலத்திலிருந்து ஒருகாலத்தில் இல்லாமலிருக்கிறதோ அது ஆகமாபாயி (போக்குவரத்துடையது) எனப்படும்.

**359.** உற்பத்தியும் விநாசமும் அந்தக்கரணவிருத்திக்கிருக்கின்றன; ஞானத்திற்கில்லை.

1. ஆத்மஸ்வரூபமான ஞானம் விசேஷவியவகாரத்திற்கேதுவன்று. ஆனல் ஞானத்தோடுகூடியவிருத்தி அல்லது விருத்தியில் ஆரூடமான (ஏறிய) ஞானம் வியவகாரத்திற்கேதுவாம். இது அவச்சேதவாதத்தின் கிரமம்.

2. ஆபாஸவாதத்தில் ஆபாஸசகிதவிருத்தியால் வியவகாரமுண்டாகிறது. ஆபாஸவாயிலாகவாவது அல்லது சாக்ஷாத் விருத்தியின்வாயிலாகவாவது ஆத்மஸ்வரூபஞானத்தினுலேயே சர்வவியவகாரமுஞ் சித்திக்கிறது. இல்லாவிடின் ஒருவியவகாரமுஞ் சித்திக்கிறதில்லை. இவ்விதத்தால் எல்லாவற்றையும் பிரகாசிப்பது ஞானஸ்வரூப ஆத்மாவே. ஆதலால் அது சித்தாம்.

## 360. ஆத்மா ஆநந்தரூபமெனல். 360—363.

ஆத்மா ஆநந்தரூபமாயிருக்கிறது. ஆத்மா ஆநந்தரூபமாகாவிடின், விஷயசம்பந்தத்தினுல சொரூபானந்தம் தோற்றுகிறது. அது உண்டாகலாகாது. விஷயத்தில் ஆநந்தமில்லையென்பது முன் 4-வது தரங்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

விஷயத்தில் ஆநந்தமிருக்குமாயின், எந்த விஷயத்தினுல் ஒருவனுக்குச் சுகமுண்டாகிறதோ அதனுலேயே வேறொருவனுக்குத் துக்கமுண்டாகிறது. நெருப்பைத் தொடுவதனுல் அக்கினிகீடதுக்கும், ஆண்சர்ப்பத்தைப் பார்ப்பதனுல் பெண்சர்ப்பத்திற்கும், ஆண்சிங்கத்தைப் பார்ப்பதினுல் பெண்சிங்கத்துக்கும் ஆநந்தமுண்டாகிறது; மற்றப் புருடர்களுக்குத் துக்கமுண்டாகிறது. அது *உண்டாகலாகாது. சித்தாந்தத்தில் அக்கினிகீடத்துக்கு

* எதனுல் ஒரே விஷயத்தினுல் சிலருக்குச் சுகமும் சிலருக்குக் துக்கமுமுண்டாகிறதோ, அதனுல் அந்த விஷயம் நியமமாகத் தன்னை விரும்புவோரும் விரும்பாதவர்களுமாகிய எல்லாப்புருடர்களுக்கும் இச்சையிருந்தாலும் சுகத்துக்குக் காரணமாகிறதில்லை. ஆனுல் விஷய இச்சையுள்ள புருஷனுக்கே விஷயம் தன் அடைவால் இச்சை நீங்க, அதன்வாயிலாக அந்தர்முகமாகிய விருத்தியில் பிரிய மோதப் பிரமோதத்தின் பரியாயவடிவ ஆத்மஸ்வரூபாநந்தத்தின் பிரதிபிம்பத்துக்குக் காரணமாயிருக்கிறது. ஆதலால் விஷயம் ஆனந்தத்துக்குக் காரணமாதல் வியபிசரிக்(பிறழ்)கிறது. மேலும் விஷயப்பிராப்தியினுலாவது ஏகாந்தத்திலிருப்பதனுலாவது உண்டாகும் இச்சையின் அபாவம் எதுவோ அது பிரதிபிம்பசுகத்துக்கு நியமமாய்க் காரணமாம்.

ஆத்மா ஆநந்தரூபமாகாவிடின் அந்தர்முகவிருத்தியில் எந்த ஆநந்தமுண்டாகிறதோ அஃதுண்டாகலாகாது. ஆதலால் ஆத்மா ஆநந்தரூபமாம். இது சகலப்பிரகரணத்தின் சாரமாம்.

நெருப்பைத் தொடுவதில் இச்சையுண்டாகும். அப்போது சஞ்சலபுத்தியில் சொரூபானந்தம் தோற்றுகிறதில்லை. அக்கினிசம்பந்தத்தால் க்ஷணமாத்திரம் இச்சை விலக நிச்சலபுத்தியிற் சொரூபானந்தம் விளங்குகிறது. மற்றைய புருஷர்களுக்கு அக்கினிசம்பந்தத்தின் இச்சை யுண்டாகிறதில்லை. ஆனால் பிறபதார்த்தங்களினிச்சை இருக்கிறது. அவற்றின் இச்சை அக்கினி சம்பந்தத்தால் நிவிருத்தியாகிறதில்லை. ஆதலால் சஞ்சலமான அந்தக்கரணத்தில் அக்கினிசம்பந்தத்தால் ஆநந்தமுண்டாகிறதில்லை. (அக்கினிகீடம் = நெருப்பிலிருக்கும் ஓர் புழு.)

**361.** இதில் இச்சங்கையுண்டாகிறது:— அந்தக்கரணத்தின் இச்சாரூப விருத்தி எதுவோ அது விஷயப்பிராப்தியால நாசமடைந்துவிட்டது. வேறு விருத்திக்கு யாதொரு நிமித்தமுமில்லை யாகலின் உற்பத்தியாகாது. விருத்தியின்றிச சொரூபானந்தம் தோற்றுகிறதில்லை. ஆதலால் விஷயத்திலேயே ஆநந்தமிருக்கிறது.

அச்சங்கை பொருந்தாது. ஏனெனின்,

1. இச்சாரூபமான அந்தக்கரணவிருத்தியோ இல்லை. அது இருந்தாலும் அதில் ஆனந்தம் பிரகாசியாது. ஏனெனின் இச்சாரூபவிருத்தி ராஜஸம் (இரஜோகுணத்தினதாம.) ஆனந்தத்தின் பிரகாசம் ஸாத்வீகவிருத்தியில் உண்டாகிறது. அங்ஙனமாயினும், இச்சித்த பதார்த்தம் எது கிடைத்திருக்கிறதோ அதன் சொரூபத்தை விஷயித்தற்பொருட்டுள்ள அந்தக்கரணத்தின் ஞானரூபவிருத்தி எதுவோ அது சாத்விகமாம். ஏனெனின் சத்துவகுணத்தினின்று ஞான முண்டாகிறதென்பது நியமம். அந்த ஸாத்வீகவிருத்தியில் ஆநந்தம் விளங்குகிறது. ஆனால் அந்த ஞானரூபவிருத்தி பகிர்முகமாம். அதன் பிருஷ்ட(பின்)பாகத்திலிருக்கும் அந்தக்கரணவுபகித சேதனஸ்வரூபானந்தம் எதுவோ அது அந்த விருத்தியால் கிரகிக்கப்படுகிறதில்லை. ஆதலால் விஷயவுபஹித சேதனரூப ஆனந்தம் விளங்குகிறது. அந்த விஷய உபஹிதசேதனம் ஆத்மாவுக்கு அந்நியமன்று. ஆதலால் ஆத்மானந்தமே விஷயத்தில் விளங்குவதாகச் சொல்லப்படுகிறது. அந்த ஞானரூபவிருத்தியில் விஷயத்தோடுண்டாம் நேத்திராதிகளின் சம்பந்தமே காரணமாம்.

2. அல்லது ஞானரூபபகிர்முகவிருத்தியினும் வேறான *அந்தர்முக விருத்தியுண்டாகிறது. அதனிடத்தில் அந்தக்கரண உபஹித சேதனரூப ஆநந்தமே விளங்குகிறது. இது உத்தமசித்தாந்தம். அந்த விருத்தியினுற்பத்தியில் இச்சாதிகளின் அபாவமே காரணமாம். இச்சைமுதலியனவின்றி

* அது ஏகாக்கிரத்தன்மையோடுகூடிய சாத்துவீகவிருத்தியாம். இதனையே பிரிய மோதப் பிரமோதவிருத்தியென்றும் கூறுகின்றனர்.

ஏகாந்தத்திலிருக்கும் உதாஸீனபுருஷனுக்குப் பகிர்முக ஞானரூபமாக ஒரு விருத்தியும் உண்டாகிறதில்லை. ஆநந்தத்தின் விளக்கம் உண்டாகிறது. ஆதலால் இச்சாதிகளின் அபாவரூப காரணத்தினால் அந்தர்முகவிருத்தி ஆநந்தத்தைக் கிரகிப்பதாகிறது. அதனால் இசசித்தபதார்த்தம் கிடைத்தலால் இச்சாதிகளில்லாமற்போதலின் ஞானத்திற்குப்பின் அந்தர்முகவிருத்தியுண்டாகிறது. அதனால் அந்தக்கரண உபகித ஆநந்தம் கிரகிக்கப்படுகிறது.

அந்தஸ்வரூபானந்தத்தின் கிரகணமும் விஷயத்தின் ஞானமும் அத்தியந்தம் அவ்வியவஹிதமா (மறைபடாதனவா) யிருக்கின்றன. அதனால் "நான் †விஷயத்தில் ஆநந்தத்தை அநுபவித்தேன்" என்னும் பிராந்தி புருஷனுக்குண்டாகிறது. ‡ முதற்பக்ஷத்தினும் இப்பக்ஷம் உத்தமமாம். ஏனெனின், விஷயத்தின் ஞானரூபவிருத்தியினால் அந்தக்கரண உபகித ஆநந்தத்தின்விளக்கம் பொருந்தாது. ஆதலால் விஷய உபகித ஆநந்தத்தின் விளக்கமுண்டாகுமாயின், அப்போது மார்க்கத்திலுள்ள மரத்தின் ஞானரூபவிருத்தி எதுவோ

---

† நாய் எலும்பைக் கடிக்கின்றது. அதனால் குத்தப்பட்ட தன்வாயின் தாடை முதலியவற்றினின்றும் ரக்தம் வெளிப்படுகின்றது. அதனைச் சுவைத்து "இந்த உதிரம் எனக்கு எலும்பினின்றும் கிடைத்தது" என்று எண்ணுகிறது. அதுபோல விரும்பிய பொருளின் அடைவாகிய நிமித்தத்தால் இச்சை நீங்க அதன்வாயிலாக அந்தர்முகமாகிய (உள்நோக்கிய) விருத்தியிற் பிரதிபிம்பித்த சொருபாநந்தத்தின் அநுபவத்தைச் செய்து "யான் விஷயத்தில் ஆநந்தாநுபவத்தைச் செய்திருக்கிறேன்" என்று அவிவேகிக்குப் பிராந்தியுண்டாகிறது.

அந்தப்பிராந்தியினால் அவன் மறுபடியும் அதிகவிஷயங்களை அடைதற்பொருட்டு முயற்சிக்கின்றான். விவேகிக்கு முற்கூறிய பிராந்தியில்லையாகலின் அவன் நிருபாதிக (உபாதியின்றிய) ஆநந்தத்தை அடைதற்பொருட்டு வேதாந்தவிசாரமுதலியவற்றில் முயலுகின்றான்.

1. விஷயத்திலுண்டாகும் ஆநந்தத்தின் விளக்கம் எதுவோ அதுவும் சொரூபத்தின் ஆநந்தமாம். அங்ஙனமாயினும், நாய்ப்பாத்திரத்தில் வைக்கப்பட்ட பாலினைப்போல நிஷித்தமாயிருத்தலால் அவ்விஷயாநந்தம் உபாதேயமன்று; ஆனால் அநேகவிக்ஷேபங்களுக்கு ஏதுவாயிருத்தலால் தள்ளத்தக்கதாம்.

2. விஷயத்தின் அபாவத்தோடு விசாரமுதலிய சாதனங்களால் விளங்கும் ஆநந்தம் எதுவோ அது பொன்முதலிய பாத்திரத்துள்ள பாலினைப்போலச் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டதாயிருத்தலின் கொள்ளத்தக்கதாம்.

‡ "விஷயாகாரவிருத்தியினால் விஷய உபகித சேதனவடிவ ஆநந்தத்தின் பான (விளக்க) முண்டாகின்றது" என்னும் முதற்பக்ஷத்தினும் "வேறு அந்தர்முகவிருத்தியில் அந்தக்கரண உபகித சேதனமாகிய ஆநந்தத்தின் விளக்கமேயுண்டாகின்றது" என்னும் இரண்டாவதுபக்ஷம் உத்தமமாம். இந்தப்பக்ஷமே முன் 4-வது தரங்கத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

அதுவும் சாத்வீகமாயிருக்கிறது. அதனாலும் விருக்ஷவுபஹித சேதன ஸ்வரூபானந்தத்தின் விளக்கமுண்டாதல்வேண்டும். அப்படியே சர்வஞானத்தினாலும் ஞேய உபஹித சேதனரூப ஆநந்தத்தின் விளக்கமுண்டாதல்வேண்டும். ஆதலால் அநாத்மவஸ்துவின் ஞானரூப பகிர்முக விருத்தியினால் ஞேய உபஹித சேதனஸ்வரூபானந்தம் கிரஹிக்கப்படுகிறதில்லை.

இவ்விதத்தால் விஷயசம்பந்தத்தால் ஆத்மஸ்வரூபானந்தத்தின் விளக்கமுண்டாகிறது. ஆத்மா ஆநந்தரூபமாகாவிடின், விஷயசம்பந்தத்தால் ஆநந்தத்தின் விளக்கம் பொருந்தாது. ஆகையால் ஆத்மா ஆநந்தரூபமாயிருக்கிறது.

362. ஆத்மாவின் சம்பந்தமுடைய வஸ்துக்களில் பிரியமுண்டாகிறது. அவற்றினும் சமீபத்திலிருப்பவற்றில் அதிகப் பிரியமுண்டாகிறது: இவ்விதமாய்ப் புறம்பேயுள்ள பதார்த்தங்களை யபேக்ஷித்து உள்ளேயுள்ள பதார்த்தங்களில் அதிகப் பிரீதியுண்டாகிறது.

1. பரம்பரையாக ஆத்மாவின் சம்பந்தியான புத்திரனுடைய மித்திரனிடத்தில் பிரீதியுண்டாகிறது.

2. புத்திரனுடைய மித்திரனையபேக்ஷித்துப் புத்திரனிடத்தில் அதிகப் பிரீதியுண்டாகிறது.

3. புத்திரனினும் ஸ்தூல சூக்ஷ்மசரீரங்களில் அதிகப் பிரீதியிருக்கிறது.

4. அவற்றிலும் ஸ்தூலத்தினும் சூக்ஷ்மத்தில் அதிகப்பிரீதியிருக்கிறது.

முன் முன் சொல்லப்பட்டவற்றினும் பின் பின் சொல்லப்பட்டவை, ஆத்மாவுக்கு அதிக சமீபமானவை.

1. ஆத்மாவின் ஆபாஸம் சூக்ஷ்மசரீரத்திலிருக்கிறது; வேறொன்றிலில்லை. ஆதலால் ஆபாஸனவாயிலாக ஆத்மாவுக்குச் சூக்ஷ்மசரீரத்தோடு சம்பந்தமிருக்கிறது; பிறிதொன்றனோடில்லை.

2. ஸ்தூலசரீரத்தோடு சூக்ஷ்மசரீரத்துக்குச் சம்பந்தமிருக்கிறது. ஆதலால் சூக்ஷ்மசரீரவாயிலாக ஸ்தூலசரீரத்தோடு ஆத்மாவிற்குச் சம்பந்தமிருக்கிறது.

3. ஸ்தூலசரீரவாயிலாகப் புத்திரனோடு சம்பந்தமிருக்கிறது.

4. புத்திரன்வாயிலாக அவன் மித்திரனோடு சம்பந்தமுண்டாகிறது.

இவ்விதத்தால் பின்பின் உள்ள ஆத்மாவை சமீபித்தவை எவையோ அவற்றில் அதிகப் பிரீதியுண்டாகிறது.

எந்த ஆத்மசம்பந்தத்தினால் பதார்த்தங்களில் பிரீதியுண்டாகிறதோ அந்த ஆத்மாவிலேயே முக்கியமான பிரீதியிருக்கிறது, பதார்த்தங்களிலில்லை. எப்

படிப் புத்திரனுடைய மித்திரனிடத்தில் புத்திரசம்பந்தத்தால் பிரீதியுண்டா கிறதோ, அதனால் புத்திரனிடத்திலேயே பிரீதியிருக்கிறதோ, புத்திரனது மித் திரனிடத்தில் இல்லையோ, அப்படியே ஆத்மாவுக்கு அதிகச் சமீபத்திலுள்ள வைகளில் அதிகப் பிரீதியுண்டாகிறது. ஆதலால் ஆத்மாவினிடத்திலேயே எல்லோருக்கும் பிரீதியிருக்கிறது.

அந்தப்பிரீதி ஆநந்தத்திலும் துக்கத்தின் அபாவத்திலும் உண்டாகிறது; வேறொன்றிலுண்டாகிறதில்லை. மற்றப் பதார்த்தங்களில் உண்டாகிற பிரீதி ஆநந்தத்தின்பொருட்டும் துக்காபாவத்தின் பொருட்டுமாம். ஆதலால் ஆநந் தம் துக்காபாவம் என்பவற்றினும் வேறொன்றிற் பிரீதியுண்டாகிறதில்லை. ஆகையால் எல்லோருடைய பிரீதிக்கும் விஷயமாகிய ஆத்மா ஆநந்தரூபமாம்.

துக்கத்தின் அபாவம் ஆத்மவடிவமாம். கற்பிதத்தின் அபாவம் அதிஷ் டானரூபமாம். அது சர்ப்பத்தின் அபாவம் ரஜ்ஜுரூபமாயிருக்கிறதுபோ லாம். ஆதலால் கற்பிதமான துக்கத்தின் அபாவமும் ஆத்மரூபமே.

இவ்விதத்தால் ஆத்மா ஆநந்தரூபமாம்.

**363.** நியாயமதத்தில் ஆத்மாவுக்கு ஆநந்தகுணமிருக்கிறது. அது சரியன்று. ஏனெனின்,

ஆநந்தகுணத்தை நித்தியமென்று அங்கீகரிக்கின், அது போக்குவரத் துடையதாகாது. அதனால் ஆத்மாவின் சொரூபமே ஆநந்தமென்று சித்திக் கும். நியாயமதத்தில நித்தியமான ஆநந்தம் இல்லவேயில்லை.

அநித்தியமென்று கூறின், அநுகூலவிஷய இந்திரியங்களின் சம்பந்தத்தி னல் ஆனந்தமுண்டாவதாக அங்கீகரிக்க நேரும். அதனால் சுழுத்தியில் ஆநந் தமுண்டாகலாகாது. ஏனெனின், சுழுத்தியில் விஷயத்துக்கும் இந்திரியத் துக்கும் சம்பந்தமில்லை. ஆதலால் ஆநந்தம் ஆத்மாவின் குணமன்று. ஆனால் ஆத்மா ஆநந்தஸ்வரூபமாம.

இவ்வாற்றால் ஆத்மா சத்து சித்து ஆநந்தசொரூபமாம்.

## 364. சத்து சித்து ஆநந்தம் ஒன்றற்கொன்று பின்னமன்றெனல் (364–365).

அந்தச் சத்து சித்து ஆனந்தங்கள் பரஸ்பரம் வேறாகாது ஒன்றாகவே யிருக்கின்றன; ஆத்மாவின் குணங்களாயிருந்தால் பரஸ்பரம் வெவ்வேறாகவு மிருக்கும்; ஆத்மஸ்வரூபமாகவேயிருத்தலால் பின்னமன்று.

1. ஒரே ஆத்மா நிவிருத்தியில்லாததாயிருத்தலால் சத்தெனப்படுகின்றது.

2. ஜடத்துக்கு விலக்ஷணமான பிரகாசரூபமாயிருத்தலால் சித்தெனப்படுகின்றது.

3. துக்கத்துக்கு விலக்ஷணமான முக்கியப்பிரீதிக்கு விஷயமாயிருத்தலால் ஆநந்தமெனப்படுகிறது.

உஷ்ணப் பிரகாசரூபமாய் அக்கினியிருப்பதுபோல ஆத்மா சச்சிதாநந்தரூபமாயிருக்கிறது.

சச்சிதானந்தஸ்வரூபமே சாஸ்திரத்திற் பிரஹ்மமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் ஆத்மா பிரஹ்மஸ்வரூபமாம்.

பிரஹ்மமென்பது வியாபகத்திற்காம்.

1. தேசத்தாலெதற்கு முடிவில்லையோ அது வியாபகமெனப்படுகின்றது. ஆதலால் ஆத்மா பிரஹ்மத்துக்கு அன்னியமானால் அது தேசத்தினால் அந்தமுடையதாம்.

2. எதற்குத் தேசத்தினால் முடிவுண்டோ அதற்குக் காலத்தினாலும் முடிவுண்டு என்பது நியமம். ஆதலால் அது அநித்தியமாகும். எதற்குக் காலத்தினால் முடிவுண்டோ அது அநித்தியமெனப்படும். ஆதலால் ஆத்மா பிரஹ்மத்துக்குப் பின்னமாயில்லை.

ஆத்மாவுக்குப் பின்னமாய்ப் பிரஹ்மமிருக்குமாயின், அது அநாத்மாவாகும். அநாத்மகடாதிகள் ஜடமாயிருக்கின்றன. அதனால் ஆத்மாவுக்கு வேறான பிரஹ்மமும் ஜடமேயாகும். ஆதலால் பிரஹ்மம் ஆத்மாவுக்கு வேறன்று; பிரஹ்மஸ்வரூபமே ஆத்மாவாம்.

**365.**

1. ஒரே சேதனம் சர்வப்பிரபஞ்சத்துக்கும் மாயைக்கும் அதிஷ்டானமாயிருக்கிறது. ஆகையால் அது பிரஹ்மமென்று சொல்லப்படுகிறது.

2. அவித்தைக்கும் வியஷ்டிதேகாதிகளுக்கும் அதிஷ்டானமாயிருத்தலால் ஆத்மாவென்று சொல்லப்படுகிறது.

1. தத்பதத்தின் லக்ஷியம் பிரஹ்மமெனப்படும்.

2. துவம்பதத்தின் லக்ஷியம் ஆத்மாவெனப்படும்.

1. ஈசுவரசாக்ஷி தத்பதத்தின் லக்ஷியமாம்.

2. ஜீவசாக்ஷி துவம்பதத்தின் லக்ஷியமாம்.

1. வியஷ்டிசங்காத உபகிதசேதனம் ஜீவசாக்ஷியாம்.

2. சமஷ்டிசங்காத உபகிதசேதனம் ஈசுவரசாக்ஷியாம்.

ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் ஏகத்துவம் பொருந்தாவிடினும், ஜீவசாக்ஷிக்கும் ஈசுவரசாக்ஷிக்கும் உபாதிபேதத்தால் பேதமிருக்கிறது ; சொரூபமாக அவை ஒன்றே. மடத்திலிருக்கிற கடாகாசத்துக்கும் மடாகாசத்துக்கும் உபாதிபேதமின்றிச் சொரூபமாகப் பேதமில்லாததுபோல ஆத்மாவுக்கும் பிரஹ்மத்துக்கும் உபாதிபேதமின்றி வேறு பேதமில்லை. இரண்டும் ஒரே வஸ்துவாம்.

## 366. பிரஹ்மவடிவ ஆத்மா ஜன்மமில்லாததெனல் (366-368).

**366.** அந்தப் பிரஹ்மரூப ஆத்மா ஜன்மமில்லாததாம்.

ஆத்மாவுக்கு ஜன்மம் அங்கீகரிக்கும்பக்ஷத்தில் ஆத்மா அநித்தியமாகும். அது பரலோகவாதியாகிய ஆஸ்திகனுக்கிஷ்டமில்லை. ஏனெனின், ஆத்மாவுக்கு உற்பத்திநாசங்களிருந்தால் முதல் ஜன்மத்தில் பூர்வகர்மமின்றியே சுக துக்கங்களின் போகமும் போகமின்றியே செய்தகர்மத்தின் நாசமுமுண்டாகும். ஆதலால ஆத்மாவைக் கர்த்தா போக்தாவாக அங்கீகரிக்கினும் ஜன்மநாசங்களற்றதாகவே அங்கீகரிக்கவேண்டும்.

அன்றியும் ஆத்மாவுக்கு ஜன்மத்தையங்கீகரித்தால் காரணமின்றி ஏதவஸ்துவும் பிறக்கமாட்டாது ; ஆதலால் ஏதேனும ஒருகாரணத்தினால் ஆத்மாவுககு ஜனனம் சொல்லவேண்டும். அது பொருந்ாது. ஏனெனின், எது ஆத்மாவுக்கு ஹேதுவா நமோ அதனை ஆத்மாவுக்கு வேறாகவே சொல்லவேண்டும். அவ்வாத்மாவுக்கு வேறானவை யாவும் ஆத்மாவில் கற்பிதம். ஆதலால் அது ஆத்மாவுக்குக் காரணமாகாது. ரஜ்ஜுவிற் கற்பிக்கப்பட்ட சர்ப்பம் ரஜ்ஜுவுக்கு ஹேதுவாகாததுபோல் ஆத்மாவில் கற்பிக்கப்பட்ட வஸ்து ஆத்மாவுக்கு ஹேதுவாகாது.

**367.** ஒரு ரஜ்ஜுவில் அநேக புருஷர்களுக்குத் தண்டம், சர்ப்பம், பூமியின்பிளப்பு, ஜலதாரை எனப் பிராந்தியுண்டாகிறது. அந்தப்பிராந்தியில் இரண்டம்சங்களுண்டு.

1. ஒன்று சாமானியமான "இது" என்னும் அம்சம்.

2. மற்றொன்று சர்ப்பமுதலிய விசேஷ அம்சம்.

அந்தச்சாமானிய "இது" என்னும் அம்சம் சர்ப்பாதி விசேஷ அம்சங்கள் முழுவதினும வியாபகமாயிருக்கிறது.

1. "இது சர்ப்பம்".

2. "இது தண்டம்"

3. "இது பூமியின் பிளப்பு"

4. "இது ஜலதாரை" என்று

இவ்வாறு சர்ப்பாதி விசேஷ அம்சத்தில் இது எனும் அம்சம் முழுவதும் வியாபகமாயிருக்கிறது. அந்த வியாபக சாமானிய இது என்னும் அம்சம் ரஜ்ஜுஸ்வரூபமாம். அந்தச் சாமானிய இதுவெனும் அம்சத்தின் ஞானத்தையே பிராந்திக்குக் காரணமான ரஜ்ஜுவின் சாமானிய ஞான மென்பர்.

அந்தச் சாமானியமான இது என்னும் அம்சம் சத்தியம். ஏனெனின், ரஜ்ஜுவென்று அறிந்தபிறகும் அந்த இதுவெனும் அம்சம் பிரதீதியாகிறது.

1. பிராந்திகாலத்தில் "இது சர்ப்ப"மென்று சர்ப்பமுதலியவற்றோடு சேர்ந்து இது என்னும் அம்சம் பிரதீதியாகிறது.

2. அப்படியே பிராந்திநிவிருத்திக்குப் பின்னும் "இது ரஜ்ஜு" வென்று ரஜ்ஜுவோடு சேர்ந்து இது என்னும் அம்சம் பிரதீதியாகிறது.

இது என்னும் அம்சமும் மித்தையானால் சர்ப்பாதிகளைப்போலப் பிராந்திநிவிருத்திக்குப் பின் அதுவும் பிரதீதியாகவேண்டும். அதனால் சர்ப்பாதி பிராந்தியில் வியாபகமாயிருக்கிற "இது" எனும அமசம் சததியமாம். அதிஷ்டானம் ரஜ்ஜுரூபமாம். பரஸ்பரம வியபிசாரியாயுள்ள (ஒன்றற்கொன்று பிறழ்தலுடைய) சர்ப்பாதிகள் கற்பிதமாம.

**368.** அப்படியே எல்லாபபதார்த்தங்களிலும் ஐந்து அம்சங்களுள :—

1. நாமம 2. ரூபம 3. அஸ்தி 4. பாதி 5. பிரியம் என்பனவாம.

1. கடம் என்னும் அக்ஷரசமுதாயம் நாம மெனப்படும்.

2. உருட்சி அதன் ரூபம்.

3 "கடம் இருக்கிற"தென்பது அஸ்தி.

4. "கடம் விளங்குகிற"தென்பது பாதி.

5. "கடம் பிரியமாயிருக்கிற"தென்பது பிரியம் (ஆநந்தம்). சர்ப்பமுதலியனவும் பெண்சர்ப்பமுதலியவற்றிற்குப் பிரியமாயிருக்கின்றன.

இவ்விதமாகச் சகல பதார்த்தங்களிலும் ஐந்து அம்சங்களுண்டு.

1-3. அவற்றில் அஸ்தி பாதி பிரியவடிவ மூன்று அம்சங்கள் சகலபதார்த்தங்களிலும் வியாபகமாயிருக்கின்றன.

4-5. நாமரூபங்கள் வியபிசாரியாம். எந்த வஸ்து ஓரிடத்திலிருந்து ஓரிடத்திலிருப்பதில்லையோ அது வியபிசாரி எனப்படும்.

**1-2.** கடம் என்னும் நாமமும் உருட்சியானரூபமும் படத்திலில்லை. படமென்னும் நாமமும அதன் ரூபமும் கடத்தில் இல்லை. இவ்விதத்தால் சகல பதார்த்தங்களிலும் நாமரூபாம்சங்கள் வியபிசாரியாம்.

3-5. அஸ்தி பாதி பிரியமென்னும் மூன்று அம்சங்களும் எங்கும் அநுகதமா(கலந்தவைகளா)யிருக்கின்றன. சர்ப்ப தண்டாதிகளில் அனுகதமான இது என்னும் அம்சம் சத்தியமாயும் அதிஷ்டானமாயுமிருப்பதுபோலச் சகல பதார்த்தங்களிலும் அநுகதமான அஸ்திபாதிபிரியரூபம் சத்தியமாயும் அதிஷ்டானவடிவமாயும இருக்கின்றது.

1-2. சர்ப்ப தண்டாதிகளைப்போல் வியபிசாரியாயுள்ள நாமரூபங்கள் கற்பிதமாயிருக்கின்றன.

3-5. அஸ்தி பாதி பிரியம் சச்சிதானந்தரூபமாயிருக்கின்றது. ஆத்மாவில் நாமரூபப் பிரபஞ்ச முழுவதும் கற்பிதமாயிருக்கிறது. அக்கற்பித பதார்த்தங்கள் எவையும் ஆத்மாவின் ஜன்மத்துக்கு ஹேதுவாகா. ஆதலால் ஆத்மா ஜன்மமில்லாததாம்.

எந்த வஸ்துவுக்கு ஜன்மமிருக்கிறதோ அதற்கே *சத்தை (இருப்பு), விருத்தி (வளர்ச்சி), பரிணமம் (திரிபு), அபக்ஷயம் (குறைவு), விநாசம் (அழிவு) என்னும் ஐந்துவித வேறுவிகாரங்களுண்டாகின்றன. ஆத்மாவுக்கு ஜனனமில்லாமையினுல் பின் ஐந்து விகாரங்களும் ஆத்மாவுக்கிலலை.

இவ்விதத்தால் ஆத்மா ஜன்மாதி ஆறு விகாரங்களில்லாததாயிருக்கின்றது.

## 369. ஆத்மா அசங்கன் எனல்.

ஆத்மா அசங்கமாயிருக்கிறது.

சங்க மென்பது சம்பந்தத்திற்காம். அந்தச்சம்பந்தம் ஸஜாதிய விஜாதிய ஸ்வகதபதார்த்தங்களோடுண்டாகிறது.

1. கடத்துக்குக் கடத்தோடுள்ள சம்பந்தம் ஸஜாதீயத்தோடுள்ள சம்பந்தமாம்.

---

* "கடம் உண்டாகிறது" என்னும் வியவகாரத்தின் ஏது ஜநநம். "கடம் பிறந்தது" என்னும் வியவகாரத்தின் ஏது இருப்புவழிவ விகாரமாம். இதனையே பிரகடத்தன்மையென்றும் கூறுவர். சத்தை யென்றும் கூறுவர்.

2. கடத்துக்குப் படத்தோடுள்ள சம்பந்தம் விஜாதீயத்தோடுள்ள சம்பந்தமாம். ஸ்வகதமென்பது அவயவத்திற்காம். ஆதலால் படத்துக்கு நூலோடுள்ள சம்பந்தம் ஸ்வகதத்தோடுள்ள சம்பந்தமாம்.

1. ஆத்மா இரண்டு அல்லது அநேகமாயிருக்குமாயின், ஸஜாதீயத்தோடு ஆத்மாவுக்குச் சம்பந்தமுண்டாகும். அந்த ஆத்மா ஏகமாயிருத்தலால் ஸஜாதீய ஆத்மாவோடு ஆத்மாவுக்குச் சம்பந்தமில்லை.

2. ஆத்மாவுக்கு விஜாதீயம் அநாத்மா. இது கானல்ஜலம்போல ஆத்மாவில் கற்பிதமாயிருக்கிறது. அக்கற்பிதத்தோடு ஆத்மாவுக்குச் சம்பந்தம் பொருந்தாது. கானல்ஜலத்தோடு பூமிக்குச் சம்பந்தமுண்டாகிறதில்லை. அப்படிச் சம்பந்தமுண்டானால் ஊஷரபூமி ஜலத்தினால் நனையவேண்டும். கானல்ஜலத்தோடு ஊஷரபூமிக்குச் சம்பந்தமில்லாததுபோல் ஆத்மாவில் கற்பிதமான விஜாதீய அநாத்மாவோடு ஆத்மாவுக்குச் சம்பந்தமில்லை.

3. ஆத்மாவின் அவயவமிருக்குமாயின் ஆத்மாவிற்கு ஸ்வகதத்தோடு சம்பந்தமுண்டாம். ஆத்மா நித்தியமாயிருத்தலால் நிரவயவமாம். அதற்கு ஸ்வகதத்தோடு சம்பந்தம் பொருந்தாது. இவ்வாற்றால் ஸஜாதீய விஜாதீய ஸ்வகத சம்பந்தம் ஆத்மாவிலில்லை. ஆதலால் ஆத்மா அசங்கமாம்.

இவ்விதத்தால் சிஷ்யனே! சச்சிதானந்தப்பிரஹ்மரூபமாயும் ஜன்மாதி விகாரரகிதமாயும் அசங்கமாயுமிருக்கிறது ஆத்மா. "அதுவே நீ." இது 339-வது பிரசங்கத்தில் கேட்ட கேள்விக்கு உத்தரமாம்.

## 2. "சம்சாரத்திற்குக் கர்த்தா யாவன்?" என்பதன் உத்தரம் (370-374).

### 370. ஜகத்திற்குக் கர்த்தா ஈசுவரனெனல்.

"ஜகத்திற்குக் கர்த்தா யாவன்?" என்னும் இரண்டாவது பிரசினத்தின் உத்தரத்தைக் கூறுவாம்:—

வியாபகமான சேதனத்தை யாசிரயித்திருப்பதும் அதனை விஷயஞ்செய்வதுமாகிய மாயையினின்றும் ~~அதனை~~ /சதசத்துக்கு விலக்ஷணமான அற்புதசக்திரூபமான அஞ்ஞானத்தினின்றும் ஜகத்தினுற்பத்தி நாசங்களுண்டாகின்றன.

உற்பத்திநாசங்களைச் சொல்லுவதனால் ஜகத்தின் ஸ்திதியும் பொருளாற்கொள்ளப்படுகின்றது. இதனால் இந்த அர்த்தம் சித்தித்தது:—

1. மாயையோடு கூடின சேதனம் ஈசுவரனெனப்படுகிறது.

2. அந்த *ஈசுவரன் ஜகத்தினுற்பத்தி ஸ்திதி நாசங்களுக்கு ஹேதுவா யிருக்கிறார்.

இப்படிச் சொல்லுவதனால்,

1. ஜகத்திற்கு ஓர் கர்த்தா உண்டா? அல்லது ஜகத்து தானாகவே யுண்டாயிற்றா? என்னுங் கேள்விக்கு உத்தரம் சொல்லப்பட்டது.

2. "ஜகத்துக்குக் கர்த்தா யாதேனுமோர் ஜீவனா? அல்லது ஈசுவரனா? என்பதற்கும் உத்தரஞ்சொல்லப்பட்டது.

## 371. 1. சர்வஞ்ஞனும் 2. சர்வசக்திமானும் சுதந்திரனுமாவன் (371–372).

ஜகத்திற்குக் கர்த்தா ஈசுவரன். ஜகத்துத் தானாகவே யுண்டாகவில்லை. கர்த்தாவின்றி ஜகத்துண்டாயிருக்குமாயின் குயவனின்றிக் கடமுண்டாதல் வேண்டும். ஆதலால் ஜகத்துக்கு ஓர் கர்த்தா உளன்.

1. அந்தக் கர்த்தா சர்வஞ்ஞன். ஏனெனின், எவன் காரியத்துக்குக் கர்த்தாவாகிறானோ அவன் காரியத்தையும் அதன் உபாதானத்தையும் அறிந்து செய்கிறான். ஆதலால் ஜகத்தின் கர்த்தாவும், ஜகத்தையும் அதனுபாதானத்தையும் அறிந்து ஜகத்தை யுண்டுபண்ணுகிறான்.

இவ்விதத்தால் ஜகத்தின் கர்த்தா ஜகத்தையும் ஜகத்தின் உபாதானத்தையும் அறிகிறான். அதனால் சர்வஞ்ஞன்.

2. அவன் சர்வவல்லமையுள்ளவன். ஏனெனின், அற்பசக்தியுள்ள ஜீவர்களால் இந்த ஜகத்தின் சிருஷ்டி மனதினாலும் நினைக்கத்தகாது. ஆதலால் அற்புதஜகத்தின் கர்த்தா அற்புதசக்திமானாயிருக்கிறான்.

இவ்விதத்தால் ஜகத்தின் கர்த்தா சர்வவல்லமையுள்ளவன்.

3. அவன் சுதந்திரன். ஏனெனின் ஸ்வற்பசக்தியுள்ளவன் பராதீனனாவன்; ஸர்வசக்தியுள்ளவன் பராதீனனாகான். ஆதலால் அவன் சுதந்திரன்.

இவ்விதத்தால் ஜகத்தின் கர்த்தா சர்வஞ்ஞனும சர்வசக்தனும் சுதந்திரனுமிருக்கிறான். அவனையே ஈசுவரனென்பர்.

---

*(1) அசத்காரணவாதிகள் ஜகத்துக்குக் காரணமில்லை யென்றும் (2) சிலர் ஜகத்துக்குக் காரணம் அபாவமென்றும் (3) சிலர் சூனியமென்றும் (4) நையாயிகர்கள் பரமாணுவென்றும் (5) சிலர் காலமென்றும் (6) சாா்வாகர்கள் ஸ்வபாவமென்றும் (7) மீமாம்ஸர்கள் அதிருஷ்டமென்றும் (8) பிரத்தியக்ஷவாதிகள் யதிருச்சையென்றும் (9) பிரத்தியக்ஷப்பிரமாணவாதிகள் பிருதிவிமுதலியபஞ்சபூதங்களென்றும் (10) சாங்கியமதஸ்தர்கள் பிரகிருதியென்றும் (11) யோகிகள் ஹிரண்யகர்ப்பாதிரூப

**372.** அற்பஞ்ஞனும் (அற்ப அறிவுடையவனும்) அற்பசக்தியுள்ளவனும் பராதீனனு (தன்வசமில்லாதவனு)மாயுள்ளவன் ஜீவனெனப்படுகிறான்.

அற்பஞ்ஞத்தன்மைமுதலியன ஜீவனிடத்திலும் பரமார்த்தமாயில்லை. என்றாலும் அவித்தையாலுண்டாகும் மித்தையான அற்பஞ்ஞத்தன்மை முதலியன ஜீவனிடத்தில் தோற்றுகின்றன; அதனால் ஜீவனிடத்திற்சொல்லப்படுகின்றன.

அவித்தையாலுண்டாகும் அற்பஞ்ஞத்தன்மைமுதலியவற்றின் பிராந்தியே ஜீவத்தன்மையாம்.

அந்த அற்பஞ்ஞத்தன்மைமுதலிய பிராந்தி ஈசுவரனிடத்தில் இல்லை. ஆனால் ஈசுவரனிடத்தில் மாயையாலுண்டாகும் சர்வஞ்ஞத்தன்மை முதலியன ஈசுவரனிடத்தில் இருக்கின்றன. இது பின் விஸ்தாரமாய்ப் பிரதிபாதிக்கப்படும்.

இவ்விதத்தால் ஜகத்தின் கர்த்தா ஜீவனல்லன்; ஈசுவரனே.

---

அசங்கபுருஷனென்றும் (12) சிலர் காலாதிசம்யோகமென்றும் (13) சிலர் பரிணாமபுருஷஜீவனென்றும் (14) சிலர் பிரஹ்மமென்றும் இவ்விதமாக ஜகத்துக்குக் காரணத்தைப் பலர் பலவிதமாய்ச் சொல்லுகின்றனர். இவைகள் ஒவ்வொன்றிலும் தோஷமுண்டு. எப்படியெனின், (1) ஜகத்துக்குக் காரணமில்லாவிட்டால் கடமும் காரணமில்லாமல் உண்டாகக்கூடும். ஆகையால் அகாரணத்தில் பிரத்தியக்ஷவிரோதரூபதோஷமிருக்கிறது. (2) அபாவம் காரணமானால் அபாவத்திலிருந்து பாவம் உண்டாகுதல் பிரத்தியக்ஷவிரோதரூபதோஷம். (3) சூனியம் காரணமானால் விதையின்றித் தானியமுண்டாகக்கூடும். ஆகையால் இதில் அசம்பவரூபதோஷமாம். (4) நிரவயவமாயும் ஜடமாயுமிருக்கிற பரமாணுக்களின் சம்யோகம் அசம்பாவிதமாம். (5) காலம் எப்போதுமிருந்தும் சகலகாரியங்களும் எப்போதுமுண்டாகாதபடியால் அகாரணரூபதோஷம் சம்பவிக்கிறது. (6) மலடியிடத்தில் வீரியம் சேர்ந்தும் கர்ப்பத்தை உண்டாக்கும் அதன் ஸ்வபாவம் காணப்படாததினால் ஸ்வபாவம் காரணமன்று. (7) அதிருஷ்டம் காரணமானால் இன்னகாரணத்தால் இன்ன காரியந்தான் ஆகும் என்னும் நிச்சயமில்லாமற்போம். (8) யதிருச்சை காரணமானால், பிருதிவியாதிபூதங்களன்றிச் சகத்து உற்பத்தியாவது அசம்பாவிதம். (9) சடபிருதிவியாதி பூதங்களே காரணத்தை அபேக்ஷிப்பதால் ஸ்வயம் காரணங்களாகா. (10) ஜடமான பிரகிருதி ஸ்வயம் பிரவிருத்திக்கமாட்டாது. (11) புருஷன் அசங்கனானால் எப்படிக் காரணமாவான். (12) காலாதிகளோ ஜடமானதால் அவைகள் காரணமாகா. (13) ஜீவன் காரணமாகான் என்பது மூலத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. (14) நிர்விகாரமான பிரஹ்மம் காரணமாகமாட்டாது. இவ்விதமாக மேற்கண்ட 14 மதங்களிலும் தோஷமிருக்கிறது. மாயாவிசிஷ்டபிரஹ்மம் காரணமென்று சொல்லுவதில் யாதொரு தோஷமுமில்லை.

## 373. ஈசுவரன் வியாபகனும் நித்தியனுமாவனெனல்.

அந்த ஈசுவரன் ஓரிடத்திலில்லாமல் எங்கும் வியாபகமாயிருக்கிறான். ஓரிடத்திலிருப்பதாகக் கொள்ளின், எந்தவஸ்துவிற்குத் தேசத்தால் அந்தமுண்டோ அதற்குக் காலத்தாலும் அந்தமுண்டு. ஆதலால் அது அநித்தியமாகும்.

எது அநித்தியமாகுமோ அது கர்த்தாவினாற் பெறப்படுவதாகும். அதனால் ஈசுவரனுக்கும் கர்த்தாவை யங்கீகரிக்க நேரும்.

அந்த ஈசுவரனுக்குக் கர்த்தாவுண்டெனல் பொருந்தாது. ஏனெனின்,

1. தான் தனக்கே கர்த்தாவாதல் பொருந்தாது. தனக்குக் கர்த்தா தானேயென்று கொள்ளின், ஆத்மாசிரயதோஷமுண்டாகும்.

தானே கிரியைக்குக் கர்த்தாவு(ஆசிரயமு)ம் தானே கிரியைக்குக் கர்மமு (கிரியைக்கு விஷயமான காரியமு)மாயின் அப்போது ஆத்மாசிரயமாகும். குயவன் கிரியைக்குக் கர்த்தா. கடம் கர்மம்; அதுபோல் கிரியைக்குக் கர்த்தாவும் கர்மமும் வெவ்வேறாயிருக்கின்றன; ஒன்றாதல் பொருந்தாது. ஆதலால் ஆத்மாசிரயதோஷமிருக்கிறது.

காரியத்துக்குப் பெயர் கர்மம்.

காரியத்தின் விரோதிக்குப் பெயர் தோஷம்.

ஆத்மாசிரயம் காரியத்துக்கு விரோதியாகையால் தோஷமாம்.

2. ஆதலால் ஈசுவரனுக்குக் கர்த்தாவாக வேறொன்றை யங்கீகரிக்கும்படி நேரும். அந்த வேறுகர்த்தாவும் முதற்கர்த்தாவைப்போல கர்த்தாவினாலுண்டாகத்தக்கதெனல் உண்டாகும். அந்தக் கர்த்தாவையும முதற்கர்த்தாவிற்குப்போல் இரண்டாம் கர்த்தாவுக்குப் பின்னமாகச் சொல்லலாகும். அந்த முதற்கர்த்தாவான ஈசுவரனே இரண்டாவது கர்த்தாவின் கர்த்தாவாகக் கொள்ளின் அந்நியோந்நியாசிரயதோஷமுண்டாகும்.

3. ஆதலால் வேறு மூன்றாவது கர்த்தாவை யங்கீகரிக்க நேரும். அம்மூன்றாவதற்குக்கர்த்தா இரண்டாவதெனக் கொள்ளின் அந்நியோந்நியாசிரயதோஷமுண்டாகும். முதலெனக் கொள்ளின் சக்கிரிகாதோஷமுண்டாகும்.

சக்கரத்தின் சுழற்சிபோல்,

(1) முதற்கர்த்தா இரண்டாவதாற்றோன்றத்தக்கதும்,

(2) இரண்டாங்கர்த்தா மூன்றாவதாற்றோன்றத்தக்கதும்,

(3) மூன்றாங்கர்த்தா முதலாவதாற்றோன்றத்தக்கதும்,

(4) அம்முதற்கர்த்தா மறுபடி இரண்டாவதாற்றோன்றத்தக்கது மாம்.

இவ்வாறு காரியகாரணத்தன்மைகளின் சுழற்சியுண்டாகும். சக்கிரிகஸ்தானத்தில் எதுவும் சித்திக்கிறதில்லை. எல்லாம் பரஸ்பராபேக்ஷையுள்ளவைகளாயிருக்கின்றன.

4. அந்நியோந்நியாசிரயத்தில் இரண்டற்குப் பரஸ்பராபேக்ஷையுண்டு. ஒன்று சித்திக்காமல் மற்றொன்று சித்திக்கிறதில்லை. ஆதலால்,

(1) எப்படிக் குயவனுக்குக் கர்த்தா தானாகாது அவனது பிதாவாவனோ, அதுபோல முதற்கர்த்தாவுக்கு வேறுகர்த்தா இருக்கவேண்டும்.

(2) குயவனுடைய பிதா தன் புத்திரனிடத்தினின்றும் பிறக்கிறதில்லை. ஆனால் வேறு பிதாவினின்றும் பிறக்கிறான். அதுபோல் இரண்டாவதுகர்த்தா முதற்கர்த்தாவினின்றும் உண்டாகாமல் வேறொருகர்த்தாவினின்றும் உண்டாவதாகச் சொல்லவேண்டும்.

(3) குயவனுடைய பாட்டன் குயவனிடத்தினின்றும் அவன் பிதாவினிடத்தினின்றும் பிறக்காமல் நான்காவது குயவனது பிரபிதாமகனிடத்தினின்றும் பிறக்கிறான்.

(4) இது அதுபோல் மூன்றாவது கர்த்தாவும் முதலாவது இரண்டாவது கர்த்தாக்களினின்றுமுண்டாகிறதில்லை. ஆதலால் நான்காவதான வேறொருகர்த்தாவை யங்கீகரிக்கவேண்டும்.

(5) அந்த நான்காவதற்கு ஐந்தாவதான வேறோர் கர்த்தா அங்கீகரித்தலாகும்.

இதனால் அநவஸ்தாதோஷமுண்டாகும்.

அநவஸ்தையென்பது தாரை (தொடர்ச்சி).

கர்த்தாவின் தாரையை அங்கீகரித்தால் எந்தக்கர்த்தா ஜகத்தையுண்டு பண்ணினாரென்னும் நிச்சயமுண்டாகாது.

5. எவரேனுமொருவரை ஜகத்திற்குக் கர்த்தாவாகக் கொள்ளுதலில் ஒருயுக்தியுமில்லை. அந்த யுக்தியின் அபாவத்திற்கே விநிகமனவிரகமென்று பெயர்.

6. சிலர் தாரைக்கு ஓரிடத்தில் ஆறுதலை அங்கீகரிக்கின், எந்தக்கர்த்தாவில் தாரைக்கு முடிவுண்டாகிறதோ அந்தக்கர்த்தாவையே ஜகத்கர்த்தாவாகக்

கொள்ளுதல் தகுதியாம். அதற்கு முற்பட்டவை யாவும் பயனில்லாதனவா கும். இதனையே பிராக்லோபம் என்பர்.

பூ முன்னுள்ளவற்றின் அபாவத்திற்குப் பிராக்லோபமென்று பெயர்.

இவ்விதத்தால் ஈசுவரனுக்குத் தேசத்தால் முடிவுண்டெனா அங்கீகரிக் கின் உற்பத்தியை அங்கீகரிக்கவரும். உற்பத்தியை அங்கீகரிக்கின் ஆத்மாசிர யாதி ஆறுதோஷங்களுண்டாகின்றன. ஆதலால் ஈசுவரனுக்குத் தேசத் தால் அந்தம் இல்லை. ஆனால் ஈசுவரன் வியாபகன்; இதனாலேயே நித்தியன்.

## 374. ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் சொரூபமாகப் பேதமில்லையெனல்.

அந்தவியாபக ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் சொரூபமாகப் பேதமில்லை; உபாதியால் பேதமுண்டு. ஏனெனின்,

1. அவச்சேதவாதத்தில்,
   (1) மாயாவிசிஷ்டசேதனம் ஈசுவரனெனப்படும்.
   (2) அவித்தியாவிசிஷ்டசேதனம் ஜீவனெனப்படும்.
2. ஆபாஸவாதத்தில்,
   (1) மாயை ஆபாஸன் என்பவற்றோடுகூடிய சேதனம் ஈசுவர னெனப்படும்.
   (2) அவித்தை ஆபாஸன் என்பவற்றோடுகூடிய சேதனம் ஜீவ னெனப்படும்.

1. ஆபாஸவாதத்தில் ஆபாஸசகிதஅவித்தைக்கும் ஆபாஸசகிதமா யைக்கும் பேதமுண்டு; சேதனங்களுக்குப் பேதமில்லை.

2. அப்படியே அவச்சேதவாதத்திலும் அவித்தைக்கும் மாயைக்கும் பேதமுண்டு. சொரூபமாகச் சேதனத்துக்குப் பேதமில்லை.

3. (1) அஞ்ஞானத்திலுள்ள சேதனப்பிரதிபிம்பம் ஜீவனும்.
   (2) பிம்பம் ஈசுவரனும்.

இந்தப்பக்ஷத்திலும் சேதனதத்துக்குச் சொரூபமாகப் பேதமில்லை. ஆனால் ஒரேசேதனத்தில் ஜீவத்தன்மையும் ஈசுவரத்தன்மையும் கற்பிக்கப்பட்டிருக்கி ன்றன. இது *மேற்சொல்லப்படும.

இவ்விதத்தால் ஜகத்தின் கர்த்தா சர்வஞ்ஞனும் சர்வசக்தனும் சுதந் திரனுமிருக்கிற ஈசுவரனே.

---

* இவ்வார்த்தை மேல் 438-வது முதல் 443-வது பரியந்தமான இலக்கங்களிற் சொல்லப்படும். இது மூன்றுவது பிம்பப்பிரதிபிம்பவாதமாம்.

அந்தர்யாமியான ஈசுவரன் வியாபகன். அவனுக்கும் ஜீவனுக்கும் விசேஷணமாத்திரத்தாற்பேதமாம். ஸ்வரூபமாகப்பேதமில்லை. இந்த இரண்டாவது கேள்வியின் உத்தரஞ்சொல்லப்பட்டது.

## (3. "மோக்ஷத்திற்குக் காரணம் யாது?" என்பதன் உத்தரம் 375-403.)

## 375. மோக்ஷத்திற்குக் காரணம் ஞானம் எனல்.

"மோக்ஷத்துக்குச் சாதனம் ஞானமா? அல்லது கர்மமா? அல்லது உபாஸனையா? அல்லது இரண்டுமா?" என்னும் கேள்விக்கு உத்தரஞ்சொல்லுகிறோம்:—

முக்திக்குக் காரணம் கர்மமுமன்று; தியானமும் (உபாஸனையு) மன்று; ஆனால் ஞானமே காரணமாம். ஏனெனின், ஆத்மாவினிடத்தில் பந்தம் சத்தியமாயிருந்தால் அதன் நிவிருத்திரூப மோக்ஷம ஞானத்தினாலுண்டாகாது; கர்மம் அல்லது உபாஸனையாலுண்டாகும். அந்தப்பந்தம் ஆத்மாவினிடத்தில் சத்தியமாயில்லை; ஆனால் ரஜ்ஜுசர்ப்பம்போல் மித்தையாயிருக்கிறது. அந்த மித்தை அதிஷ்டானஞானத்தினாற்றான் நிவிருத்தியாதல் கூடும்; கர்மம் அல்லது உபாஸனையால் நிவிருத்தியாகாது. ரஜ்ஜுவில் சர்ப்பம் எந்தக்கிரியையாலும் நிவிருத்தியாகாமல் கேவலம் ரஜ்ஜுஞானத்தினால் நிவிருத்தியாகிறது போல் ஆத்மாவின் அஞ்ஞானத்தினால் தோற்றும் பந்தமும் அஞ்ஞானமும் ஆத்மாவின் ஞானத்தினாற்றான் நிவிருத்தியாகும்.

## 376. கர்மமும் உபாஸனையும் மோக்ஷசாதனங்கள் அன்றெனல் (376-379.)

1. கர்மத்தின் பலன் மோக்ஷமானால் மோக்ஷம் அநித்தியமாகும். ஏனெனின், கிருஷியாதிகர்மங்களின் பலன் அன்னாதிகள்; அவை அநித்தியம்; யஞ்ஞாதிகர்மங்களின் பலனாகிய சுவர்க்காதிகளும் அநித்தியம் என்பது நியமம். மோக்ஷமும் கர்மபலனெனக்கொள்ளின் அது அநித்தியமாகும். ஆதலால் * கர்மத்தின் பலன் மோக்ஷமன்று.

* "எப்படி இககாமத்தாலாக்கப்பட்ட உலகம நசிககிறதோ அப்படியே அப்புண்ணியத்தாலாக்கப்பட்ட உலகமும் நசிக்கிறது. இவ்வாறு காமத்தாலாக்கப்பட்ட உலகங்களை அநித்தியமென்றறிந்து அவற்றினின்றும் பிராஹ்மணன் (பிரஹ்மமாதற்கு இச்சையுடைய முமுக்ஷு) வைராக்கியத்தையடையக்கடவன். செய்யப்பட்டதாகிய கர்மத்தால் செய்யப்படாததாகிய மோக்ஷமுண்டாகிறதில்லை." என்னும் சுருதியினாலும், "பாவனை (உபாஸனை)யால் பெறப்படும் பயனும் கர்மத்தின் பயனும் ஸ்திரம் (நிலையுடையன) என்று மதிக்கத்தக்கனவன்று. திராவிடதேசவாசி ஜனங்களில் சேர்க்கையைப் போல" என்னும் சுரேசுவராசாரியரது வாக்கியரூப ஸ்மிருதியினாலும் கர்மத்தின் அல்லது உபாஸனையின் பலம் மோக்ஷமன்று என்னும் அர்த்தம் நிச்சயமாம்.

2. உபாஸனையின் பலனென அங்கீகரிக்கினும் மோக்ஷம் அநித்தியமாகும். ஏனெனின் உபாஸனையும் மானதகர்மமே. கர்மபலன் அநித்தியமாயிருத்தலால் உபாஸனுரூப கர்மபலனும் மோக்ஷமன்று.

**377.** கர்மத்தைச் செய்கிறவனுக்குக் கர்மத்தினுல் ஐந்துவித உபயோகங்கள் உண்டாகின்றன:—

1. பதார்த்தத்தினுற்பத்தி. 2. பதார்த்தத்தின் நாசம், 3. பதார்த்தத்தின் பிராப்தி, 4. பதார்த்தத்தின் விகாரம், 5. சம்ஸ்காரம் என்பனவாம்.

அன்னியரூபத்தையடைதலே விகாரமாம்.

சம்ஸ்காரம் மலத்தின் நிவிருத்தி குணத்தின் உற்பத்தி என்று இருவகைத்தாம்.

இவ்வைந்துவித உபயோகங்களும் கர்மத்தினுல் உண்டாகின்றன. அவை எவ்வும் முமுக்ஷுவுக்குப் பொருந்தா. ஆதலால் முமுக்ஷு ஞானத்துக்குச் சாதனமான சிரவணுதிகளிற்றுன் பிரவர்த்திக்கிறுன்; கர்மத்தில் பிரவர்த்திக்கிறதில்லை.

1. குலாலனுடைய கர்மத்தினுல் குலாலனுக்குக் கடத்தின் உற்பத்தியாகிய உபயோகமுண்டாகிறது. அதுபோல் முமுக்ஷுவுக்குக் கர்மத்தினுல் மோக்ஷத்தின் உற்பத்தியாகிய உபயோகமில்லை. ஏனெனின், அனர்த்தத்தின் நிவிருத்தியும் பரமாநந்தத்தின் பிராபதியும் மோக்ஷமாம்.

(1) அந்த அநர்த்தத்தின் நிவிருத்தி ஆத்மாவினிடத்தில் *நித்தியசித்தமாயிருக்கிறது. அது ரஜ்ஜுவினிடத்தில் சர்ப்பநிவிருத்தி நித்தியசித்தமா யிருப்பதுபோலாம்.

(2) ஆத்மா பரமாநந்தஸ்வரூபியாயிருத்தலால் பரமாநந்தப்பிராப்தியும் † நித்தியசித்தமே.

இவ்விதத்தால் ஸ்வபாவசித்த (இயல்பாய்ப்பெறப்பட்ட) மோக்ஷம் கர்மத்தாலுண்டாதல் பொருந்தாது.

* ரஜ்ஜுவினிடத்தில் வியாவ்காரிகசத்தையுடைய [redacted] சர்ப்பத்தின் நிவிருத்தி நித்தியசித்தமாயிருப்பதுபோல ஆத்மாவில் பரமார்த்தசத்தையுடைய காரியத்தோடுகூடிய அஞ்ஞான [redacted] நிவிருத்தி நித்தியசித்தமாம்.

† மறந்துபோன கழுத்திலணிந்துள்ள நகையின் அடைவு அல்லது வீட்டில் புதைக்கப்பட்டுள்ள நிதியின் (தனத்தின்) அடைவு நித்தியசித்தமாயிருப்பதுபோல நிஜவடிவ பரமாநந்தத்தின் அடைவும் எல்லோருக்கும் நித்தியசித்தமாம்.

எந்தவஸ்து முன்னிருக்கவில்லையோ அது கர்மத்தாலுண்டாகும். முன்னரே உள்ள வஸ்துவிற்கு உற்பத்தியுண்டாகாது.

378. (1) வேதாந்தசிரவணமும் மோக்ஷத்தின் உற்பத்தியின்பொருட்டுச் சொல்லப்படவில்லை. ஆனால் "ஆத்மா நித்தியமுக்தன்; கர்த்தவ்வியம் (செய்யவேண்டியது) சிறிதுமாத்திரமுமில்லை" என்பதையறிவதற்காம் சிரவணம். இதையறிவதனால், செய்யவேண்டும் என்னும் கர்த்தவ்வியப் பிராந்தி நிவிருத்தியாய்விடுகிறது.

வேதாந்தசிரவணத்துக்குப் பின்னும் கர்த்தவ்வியம் எவனுக்குத் தோற்றுகிறதோ அவன் தத்துவம் ‡ அறிந்தவனல்லன். இக்காரணத்தினால் நித்தியநிவிருத்தியான அநர்த்தத்தின் நிவிருத்தியும் நித்தியப்பிராப்தமான ஆநந்தத்தின் பிராப்தியும் வேதாந்தசிரவணத்தின் பயனென்று தேவகுருவால் (மண்டனமிசிரரென்னும் துணைப்பெயர்பூண்ட ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் சிஷ்யராகிய சுரேஸ்வராசாரியரால்) நைஷ்கர்ம்யசித்திநூலிற் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதலால் மோக்ஷத்தின் உற்பத்திரூப கர்மத்தினுபயோகம் முமுக்ஷுவுக்காகாது.

379. 2. எப்படித் தடியாலடித்தல்வடிவ செய்கைக்குக் கடநாசரூப உபயோகமுண்டாகிறதோ, அப்படியே முமுக்ஷுவுக்குக் கர்மத்தினால் எந்தப் பதார்த்தத்தின் நாசரூபஉபயோகமும் பொருந்தாது. ஏனெனின், அன்னிய பதார்த்தங்களின் நாசம் முமுக்ஷுவால் இச்சிக்கப்படமாட்டாது. பந்தநாசமே கர்மத்தினுபயோகமாகச் சொல்லவேண்டும். அந்தப்பந்தம் ஆத்மாவில் இல்லை; மித்தையாகத் தோற்றுகிறது. அந்த மித்தியாப்பிரதீதி கர்மத்தினால் நாசமாகாது. ஆத்மாவின் யதார்த்தஞானத்தினால் மித்தியாப்பிரதீதி நாசமாகும். ஆதலால் முமுக்ஷுவுக்குப் பதார்த்தத்தின் நாசரூப உபயோகமும் கர்மத்தினால் பொருந்தாது.

3. நடத்தல்வடிவ கர்மத்தினால் கிராமம் அடையப்படுவதுபோல் மோக்ஷப்பிராப்திரூப உபயோகம் கர்மத்தினலாகாது. ஏனெனின், நித்தியமுக்தனான ஆத்மாவுக்கு மோக்ஷப்பிராப்தி சொல்லுதல் பொருந்தாது. எவனுக்குப் பந்தமிருக்கிறதோ அவனுக்கு மோக்ஷத்தின் பிராப்தி சொல்லுதல் கூடும். ஆத்மாவில் பந்தமில்லாததினால் மோக்ஷப் பிராப்திரூபமான கர்மத்தினுபயோகம் முமுக்ஷுவுக்குப் பொருந்தாது.

---

‡ இங்கே இது ஸ்மிருதியாம்:— "ஞானமிருதத்தினால் திருப்தியடைந்த கிருதகிருத்தியனாகிய யோகிக்குச் சிறிதும் மோக்ஷத்தின் கர்த்தவ்வியமில்லை. இருக்குமாயின் அவன் தத்துவஞானியல்லன்."

4. சமையல்வடிவ கர்மத்தினுல் அன்னத்தின் * விகாரரூப உபயோகம் சமயற்காரனுக்கு உண்டாகிறதுபோல் முமுக்ஷுவுக்குக் கர்மத்தினுல் விகாரரூப உபயோகமும் பொருந்தாது. ஏனெனின், வேறு விகாரமோ பொருந்தாது. ஆத்மாவில் முதலிற் பந்தத்தை யங்கீகரித்து மோக்ஷதசையில் சதுர்ப்புஜாதி விலக்ஷணரூபத்தின் அடைவு அங்கீகரிக்கின், அந்நியரூபத்தின் பிராப்திரூபவிகாரம் முமுக்ஷுவுக்குக் கர்மத்தினுபயோகமாதல் பொருந்தும். அந்த அன்னியரூபத்தின் பிராப்தி ஆத்மாவில் அங்கீகாரமில்லை. ஆதலால் கர்மத்தால் விகாரவடிவ உபயோகமும் முமுக்ஷுவுக்குப் பொருந்தாது.

5. எப்படி வஸ்திரத்தைத் தோய்த்தல்வடிவ கர்மத்துக்கு மலநிவிருத்தி (அழுக்குநீங்குதல்) வடிவ சம்ஸ்காரமுண்டாகிறதோ, அப்படியே மலநிவிருத்திரூப சம்ஸ்காரமும் முமுக்ஷுவுக்குக் கர்மத்தினுல் உபயோகப்படுகிறதில்லை. ஏனெனின்,

(1) வேறொன்றன் மலநிவிருத்தியோ முமுக்ஷுவிற்கு இச்சிக்கப்படுவதன்று; ஆத்மாவின் மலநிவிருத்தியே சொல்லவேண்டும். அந்த ஆத்மா நித்தியசுத்தம்; அதனிடத்தில் மலமில்லை. ஆதலால் மலநிவிருத்திரூப சம்ஸ்காரம் பொருந்தாது.

(2) அந்தக்கரணத்திலுள்ள பாபரூபமலம் எதுவோ அதன் நிவிருத்தி கர்மத்தினுல் உபயோகமெனின், இவ்வார்த்தை சத்தியமாம். ஆனல் சுத்த அந்தக்கரணமுடைய முமுக்ஷு எவனே அவனை விசாரிக்குமிடத்து அவன் அந்தக்கரணத்திலும் பாபமில்லை. அதனுல் பாபரூபமலத்தின் நிவிருத்தியாகிய சம்ஸ்காரமும் முமுக்ஷுவுக்குக் கர்மத்தினுல் உபயோகமாதல் பொருந்தாது.

(3) அஞ்ஞானத்தை மலமெனின், அஞ்ஞானம் ஆத்மாவிலிருக்கினும் அதன் நிவிருத்தி கர்மத்தினுல் உண்டாகாது. ஏனெனின், அஞ்ஞானத்துக்கு விரோதமானது ஞானமாம்; கர்மமன்று. ஆதலால் முமுக்ஷுவுக்கு மலநிவிருத்திரூப சம்ஸ்காரம் கர்மத்தினுல் உபயோகமாதல் பொருந்தாது.

* முன்ரூபத்தை விட்டு வேறுரூபத்தை அடைதல் விகாரம் எனப்படும். அதுவே விக்கிரியையென்றும் பரிணாமமென்றும் சொல்லப்படும்.

(4) எப்படி வஸ்திரத்திற்குக் காவிஜலத்தில் நனைத்தல்வடிவ கர்மத்திற்குச் சிவப்புக் குணத்தின் உற்பத்திவடிவ சம்ஸ்காரம் உபயோகமாகிறதோ, அப்படி முமுக்ஷுவுக்குக் கர்மத்தினால் குணத்தின் உற்பத்திவடிவ சம்ஸ்காரம் உபயோகமாதல் பொருந்தாது. ஏனெனின், வேறொன்றில் அந்தக்குண உற்பத்தி சொல்லுதல் கூடாது; ஆத்மாவினிலேயே சொல்லுதல் உண்டாம். அந்த ஆத்மா நிர்க்குணம். அதனிடத்தில் குணோற்பத்தி பொருந்தாது. ஆதலால் முமுக்ஷுவுக்குக் குணத்தின் உற்பத்திரூப சம்ஸ்காரமும் கர்மத்தின் உபயோகமாதல் கூடாது.

இப்பிரகரணத்தில் உபயோகமென்பது பயனுக்காம்.

கர்மத்திற்கு இவ்வைவகைப் பலன்களைத்தவிர வேறுபலன் உண்டாகிறதில்லை. அவ்வைந்துவித கர்மபலனும் முமுக்ஷுவுக்குப் பொருந்துகிறதில்லை: ஆதலால் முமுக்ஷு கர்மத்தைவிட்டு ஞானத்துக்குச் சாதனமான சிரவணத்திலேயே பிரவர்த்திக்கிறான்.

உபாஸனையும் மானதகர்மமேயாம். ஆதலால் அதைக் கண்டித்தலில் வேறுயுக்தி சொல்லப்படவில்லை.

இவ்விதத்தால் கேவலகர்மமாவது உபாஸனையாவது மோக்ஷத்துக்கு ஹேதுவன்று; கேவலஞானமே மோக்ஷத்துக்கு ஹேதுவாம்.

## 380. ஆக்ஷேபம்:—கர்மமும் உபாசனையும் ஞானத்திற்கு ஏதுவா? மோக்ஷத்திற்கு ஏதுவாவெனல் 380-383.

[பூர்வபக்ஷி:—] *சிலர் கர்ம உபாஸனைகளோடுகூடிய ஞானத்தை மோக்ஷத்துக்கு ஹேதுவாக அங்கீகரிக்கிறார்கள். அதில் யுக்திதிருஷ்டாந்தங்களுஞ் சொல்லுகிறார்கள்.

1. திருஷ்டாந்தம்:—ஆகாசத்தில் ஒரிறகினால் பக்ஷிகளால் பறக்கமுடியாது. ஆனால் இரண்டு இறகுகளால் பறத்தல் உண்டாகிறது. அதுபோல் மோக்ஷலோகத்துக்கும் ஞானரூப ஒருபக்ஷத்தால் போகமுடியாது. உபாஸனாசகிதகர்மம் ஒருபக்ஷம். ஞானம் இரண்டாவது பக்ஷம். உபாஸனையும் மானதகர்மமே. ஆதலால் கர்மமும் உபாஸனையும் ஒருபக்ஷமாகச் சொல்லப்பட்டன.

381. 2. வேறு திருஷ்டாந்தம்:—சேதுதரிசனத்தால் பாபம்நிவாரணமாகிறது. அச்சேதுதரிசனமும் பிரத்தியக்ஷமான ஞானம். சிரத்தாபக்தியு

*பர்த்திருபிரபஞ்சரென்னும் பிராசீனவிருத்திகாரர் (பிரஹ்மசூத்திரத்தின் உரைக்குக் கர்த்தா) சமுச்சயவாதியாவர்; அவரை அநுசரித்தவர்கள்.

டன் போகவேண்டிய நியமத்தை அது அபேக்ஷிக்கிறது. சிரத்தாதிகளில்லாதவனுக்குச் சேதுதரிசனத்தினுல் பயனுண்டாகிறதில்லை. சேதுவின் பிரத்தியக்ஷஞானம் பல உற்பத்திவிஷயத்தில் சிரத்தை நியமாதிகளை யபேக்ஷிக்கிறதுபோல் பிரஹ்மஞானமும் மோக்ஷரூப பல உற்பத்தியில் கர்ம உபாஸனைகளை யபேக்ஷிக்கிறது.

கேவலஞானத்தினுல் மோக்ஷமுண்டாகுமென்று அங்கீகரிக்கிறவனும் கர்மஉபாஸனைகளை ஞானத்துக்கு ஹேதுவாக நினைக்கிருன். சுத்தமாயும் நிச்சலமாயுமுள்ள அந்தக்கரணத்தில் ஞானமுண்டாகிறது. அந்த அந்தக்கரணம் சுபகர்மத்தினுல் சுத்தமாகிறது, உபாஸனையால் நிச்சலமாகிறது.

இவ்விதத்தால் அந்தக்கரணத்தின்சுத்தி நிச்சலத்தன்மை என்பவைகளின்வாயிலாகக் கர்மமும் உபாஸனையும் ஞானத்துக்கு ஹேதுவாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

**382.** எப்படி ஞானத்துக்கு ஹேதுவாகக் கர்மஉபாஸனைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே ஞானத்தின் பயனுகிய மோக்ஷத்துக்கு ஹேதுவாகவும் அங்கீகரிக்கப்படுவது தகுதியாம்.

**1.** திருஷ்டாந்தம் :—ஜலம்விடுதல் விருக்ஷத்தின் உற்பத்திக்கும் விருக்ஷத்தின் பலத்தின் உற்பத்திக்கும் ஹேதுவாகிறது. காட்டிலுள்ள மரங்களின் பலன்கள் ஜலம் விடாமலே யுண்டாகின்றனவென்று சொல்லும்பக்ஷத்தில், அதுவும் விருக்ஷத்தின் மூலத்தில் பூமியிலுள்ள ஜலத்தின் சம்பந்தமிருக்கிறது; அதனுல் பலனுண்டாகிறது. ஜலசம்பந்தமில்லாவிடின் விருக்ஷமே பட்டுப்போம்; பலனுமுண்டாகாது. அதுபோலக் கர்மஉபாஸனைகள் ஞானோற்பத்திக்கும் ஞானத்தின் பலனுகிய மோக்ஷத்துக்கும் ஹேதுவாயிருக்கின்றன.

இவ்விதத்தால் கர்மம் உபாஸனை ஞானம் என்னும் மூன்றும் மோக்ஷத்துக்கு ஹேதுக்களாயிருக்கின்றன. ஆதலால் ஞானியுங் கர்மஞ்செய்ய வேண்டும்.

**383.** 2. அல்லது, கர்மஉபாஸனைகள் ஞானத்தைக் காப்பாற்றுவதற்கு ஹேதுக்களாயிருக்கின்றன. ஏனெனின், கர்மோபாஸனைகளை ஞானியானவன் விடும்பக்ஷத்தில் உண்டானஞானமும் ஜலமின்றியிருக்கிற மரம்போல் நஷ்டமாய்விடும். ஏனெனின், சுத்தமான அந்தக்கரணத்தில் ஞானமுண்டாகிறது. சுபகர்மத்தைச் செய்யாவிடின் ஞானிக்குப் பாபமுண்டாகும். உபாஸனையை விடுவதால் அந்தக்கரணம் மறுபடியும் சஞ்சலமாய்விடும். அந்த மலினமும் சஞ்சலமுமாயுள்ள அந்தக்கரணத்தில் ஞானம் தங்கமாட்டாது. அது வறண்ட பூமியிலுண்டாகும் விருக்ஷம் நிலைத்திராததுபோலாம்.

3. வேறொரு திருஷ்டாந்தம் :— சம்ஸ்காரத்தால் சுத்தம்பண்ணப்பட்ட இடத்தில் வேதாத்தியயனம் செய்யும் பிரஹ்மசாரி வசிக்கிறான். எக்காரணத்தினுலாவது சுத்தம்பண்ணப்பட்ட இடமும் அசுத்தமாகும்பக்ஷத்தில் அவன் அவ்விடத்தை விட்டுவிடுகிறான். அதுபோல் கர்மத்தைத விடுவதினால் மலினமும் உபாஸனையை விடுவதினால் சஞ்சலமுமாயிருக்கிற அந்தக்கரணத்தில் ஞானம் தங்கமாட்டாது. ஆதலால் கர்மமும் உபாஸனையும் ஞானத்தைக் காப்பாற்றுவதற்கு ஹேதுக்களாகின்றன.

இவ்விதததால,

1. கர்மம் உபாஸனை ஞானம் என்னும் மூன்றையும் மோக்ஷத்துக்கு ஹேதுவாக அங்கீகரித்தலாலும்,

2. அப்படியே கர்மோபாஸனைகளை ஞானரக்ஷணைக்கு ஹேதுவாயும் அல்லது கேவலம் ஞானத்தை மோக்ஷத்துக்கு ஹேதுவாயும் அங்கீகரித்தலாலும்,

இவ்விருபக்ஷங்களிலும் ஞானிக்குக் கர்மோபாஸனைகள் யனுஷ்டிக்க வேண்டியனவாம். இது * சமுச்சயவாதமெனப்படும்.

## 384. கர்மஉபாசனைகளோடு ஞானத்திற்கு விரோதமுண்டெனல் 384—386.

[சித்தாந்தி :—] அது (சமுச்சயவாதம்) நலமுடையதன்று. ஏனெனின், தேகத்துக்கு வேறாக ஆத்மாவை யறியாததால் கர்மம் உண்டாகிறதில்லை. ஏனெனின் ஜன்மாந்திரத்தினது போகத்தின்பொருட்டுக் கர்மத்தைச் செய்கிறான். தேகமோ அக்கினியில் தகிக்கப்பட்டுப்போகிறது. அதனால் ஜன்மாந்தரபோகம் பொருந்தாது. ஆதலால்,

1. சரீரத்துக்கு வேறான ஆத்மாவின் ஞானம் கர்மத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. அப்படிச் சரீரத்துக்கு வேறாயினும் ஆத்மா கர்த்தா போக்தாவாயிருக்கிறானென்னும் ஞானம் கர்மத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. "நான் புண்ணியபாபங்களைச் செய்கிறேன், அவற்றின் பலன் எனக்குண்டாகும்" என்று எவனுக்கு ஞானம் இருக்கிறதோ அவன் கர்மத்தைச் செய்கிறான். ஞானியோ ஆத்மாவை இப்படி யறிகிறதில்லை. ஆனால் "புண்ணியபாபங்கள் சுகதுக்கங்களின்றிய அசங்கமான பிரஹ்மரூபமாய் ஆத்மா இருக்கிறது" என்னும் ஞானம் வேதாந்தவாக்கியத்தாலுண்டாகிறது. அந்த ஞானம் கர்மத்

---

* இம்மதம் விருத்திப்பிரபாகரத்தின் மூன்றாவது பிரகாசத்தில் செவவையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

துக்கு ஹேதுவன்று. ஆனால் மாறான விரோதியாயிருக்கிறது. ஆதலால் ஞானியினால் கர்மமுண்டாகிறதில்லை.

2. கர்த்தா கர்மபலன் என்பவற்றின் பேதஞானம் கர்மத்துக்கு ஹேதுவாம். அந்தக் கர்த்தாவும் கர்மபலனும் ஆத்மாவுக்கு வேறாக ஞானிக்குத் தோற்றுகிறதில்லை. எல்லாம் ஆத்மஸ்வரூபமாகவே தோற்றுகின்றன. இதனாலும் ஞானியினால் கர்மமுண்டாகிறதில்லை.

ஞானிக்குக் கர்மம் இல்லை யென்பதைப் பாஷ்யகாரர் அநேகவிதமாகச் சொல்லியிருக்கிறார். கர்மத்துக்கும் ஞானத்துக்கும் பலத்தால் விரோதமுண்டு. இதனாலும் ஞானகர்மங்களின் * சமுச்சயம் கூடாது.

1. கர்மத்தின் பலன் அநித்தியசம்சாரமாம்.

2. ஞானத்தின் பலன் நித்தியமோக்ஷமாம்.

**385.** 3. ஆத்மாவில் ஜாதி ஆசிரமம் அவஸ்தை என்பவற்றின் அத்தியாஸம் கர்மத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. ஏனெனின், ஜாதியாசிரமாவஸ்தைகளுக்குத் தகுந்தபடி வெவ்வேறுவித கர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதனால் ஜாதிமுதலியவற்றின் அத்தியாஸம் கர்மத்துக்கு ஹேதுவாயிருக்கிறது.

---

* வேதத்திலும் சிலவிடத்து ஞானகர்மங்களின் சமுச்சயமெழுதியிருக்கிறது அங்ஙனமாயினும், சமசமுச்சயம் கிரமசமுச்சயம் என்னும் பேதத்தால் அச்சமுச்சயம் இருவகைத்தாம்.

1. ஞானத்தின் சாதனங்களாகிய சிரவணாதிகளையும் கர்மத்தின் சாதனங்களாகிய அக்கினிஹோத்திர முதலியவற்றையும் ஒரே காலத்தில் அநுஷ்டித்தற்குச் சமசமுச்சயமென்று பெயர்.

2. முதலில் அந்தக்கரணசுத்தியின் பொருட்டு ஜிஞ்ஞாஸை (ஞானவிருப்பம்) வரையில் கர்மத்தைச் செய்யவேண்டும். பின் கர்மவிதிகளை ஆதரியாது ஞானத்திற்குச் சாதனமாகிய சிரவணாதிகளின் வாயிலாக ஞானத்தைச் சம்பாதித்தல்வேண்டும். இதற்குக் கிரமசமுச்சயமென்று பெயர். அவற்றில,

1. சமசமுச்சயம் நீக்கத்தக்கது.

2. கிரமசமுச்சயம் கொள்ளத்தக்கது.

இது வேதத்தின் தாற்பரியமாம். ஆதலால் இங்குச் சமசமுச்சயம் கண்டிக்கப்பட்டது; கிரமசமுச்சயம் கண்டிக்கப்படவில்லை.

ஜாதி ஆசிரம அவஸ்தைகள் தேகதர்மங்கள். கர்மிக்குத் தேகத்தில் ஆத்மபுத்தி இல்லை. ஆனால் கர்மிதேகத்துக்கு வேறான ஆத்மாவை கர்த்தாவாக அறிகிறான். இது முன் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் ஆத்மாவினிடத்தில் ஜாதி ஆசிரம அவஸ்தைகளின் தோற்றம் கர்மிக்கும் பொருந்தாது. அங்ஙனமாயினும் கர்மிக்குத் தேகத்திற்கு வேறான ஆத்மாவின் அபரோக்ஷ ஞானமில்லை. ஆனால் சாஸ்திரத்தினால் பரோக்ஷஞானமிருக்கிறது. தேகத்தில் ஆத்மஞானம் அபரோக்ஷமாயிருக்கிறது. தேகத்துக்கு வேறான ஆத்மாவின் அபரோக்ஷஞானமிருக்குமாயின் அது தேகத்தில் அபரோக்ஷ ஆத்மஞானத்துக்கு விரோதமாகும். பரோக்ஷஞானத்துக்கு அபரோக்ஷஞானத்தோடு விரோதமில்லை. ஆதலால் தேகத்துககுவேறான கர்த்தாவாகிய ஆத்மாவின் ஞானமும் தேகத்தில் ஆத்மபுத்தியும் இரண்டும ஒருவனுக்குப் பொருந்துகின்றன.

திருஷ்டாந்தம்:—மூர்த்தியில் ஈசுவரஞானம் சாஸ்திரத்தினால் பரோக்ஷமாயிருக்கிறது. பாஷாணபுத்தி (கல்லுணர்ச்சி) அபரோக்ஷமாயிருக்கிறது. அவற்றிற்கு விரோதமின்று. இரண்டும் ஒருவனுக்கே யுண்டாகின்றன. ரஜ்ஜுவில் எவனுக்குச் சர்ப்பத்தினும் வேறான அபரோக்ஷஞானமிருக்கிறதோ அவனுக்கு அபரோக்ஷ சர்ப்பப்பிராந்தி நிவிருத்தியாகிறது.

இதனால் அபரோக்ஷப்பிராந்திக்கு அபரோக்ஷஞானத்தோடு விரோதமுண்டு பரோக்ஷத்தோடு விரோதமில்லையென்னும நியமம் சித்திக்கிறது. ஆதலால் தேகத்துக்குப் பின்னமான ஆத்மாவின் பரோக்ஷஞானமும் தேகத்தில அபரோக்ஷஞானமும் பொருந்துகிறது. அவ்விரண்டும் கர்மத்துக்கு ஹேதுக்களாம்.

1. ஆத்மா தேகத்துக்குவேறான கர்த்தாவென்னும் ஞானம் கர்மத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. அந்த ஞானம் பிராந்திரூபமாயிருக்கிறது. வித்துவானுக்குப் பிராந்தி இல்லை. ஆதலால் வித்துவானுக்குக் கர்மாதிகாரமில்லை.

2. தேகத்தில் அபரோக்ஷ ஆத்மபுத்தி இருக்குமாயின் அப்போது தேகத்தின் தர்மங்களாகிய ஜாதி ஆசிரம அவஸ்தைகள் பிரதீதியாகும். அந்தத் தேகத்திலுண்டாம் ஆத்மபுத்தியும வித்துவானுக்கில்லை. ஆனால் பிரஹ்மரூபமாக ஆத்மாவின் அபரோக்ஷஞானமிருக்கின்றது. ஆதலால் ஜாதி ஆசிரம அவஸ்தைகளின் பிராந்தி இல்லாததினாலும் வித்துவானுக்குக் கர்மாதிகாரமில்லை.

"நான் உபாஸகன் (உபாஸனைசெய்வோன்), தெய்வம் உபாஸ்யம் (உபாஸிக்கத்தக்கது)" என்னும் புத்தியால் உபாஸனை சித்திக்கிறது. வித்துவானுக்கு அவ்வுபாஸ்ய உபாஸகபாவங்கள் தோற்றுகிறதில்லை. "என்னுடைய

தேகாதிகளும் தெய்வத்தின் தேகாதிகளும் சொப்பனம்போல் கற்பிதங்கள்; சேதனமொன்றேயுள்ளது. இது வித்துவானுடைய நிச்சயம். ஆதலால் ஞானத்திற்கும் உபாஸனைக்கும் விரோதமுண்டு.

**386.** பக்ஷியின் பறத்தல் திருஷ்டாந்தம் பொருந்தாது. ஏனெனின், பக்ஷியின் இரண்டிறகுகளும் ஒரேகாலத்திலிருக்கின்றன. அவற்றிற்குப் பரஸ்பரம் விரோதமில்லை. ஞானத்திற்கோ கர்மோபாஸனைகளோடு விரோதமுண்டு; ஒருகாலத்தில் பொருந்தா.

## 387. ஞானத்தில் கர்மஉபாஸனைகளின் அபேக்ஷையில்லையெனல் 387-390.

சேதுஞானதிருஷ்டாந்தமும் பொருந்தாது. ஏனெனின், *சேதுதரிசனம் திருஷ்டபலத்துக்கு ஹேதுவன்று; ஆனால் அதிருஷ்டபலத்துக்கு ஹேதுவாயிருக்கிறது.

1. பிரத்தியக்ஷமாய்க் காணப்படும் பலம் திருஷ்டபலமெனப்படும். அது சாப்பாட்டின் பலனாகிய திருப்தி பிரத்தியக்ஷமாயிருத்தலால் போஜனம் திருஷ்டபலத்துக்கு ஹேதுவாயிருப்பதுபோலாம்.

2. இப்படிச் சேதுதரிசனத்தால் பிரத்தியக்ஷபலன் பிரதீதியாகிறதில்லை. ஆனால் பாபத்தின் நாசரூபபலன் சாஸ்திரத்தினால் அறியப்படுகின்றது. எது பிரத்தியக்ஷமாய்ப் பிரதீதியாகிறதில்லையோ அது அதிருஷ்டபலனெனப்படும்.

ஆதலால் யஞ்ஞாதிகர்மம் ஸ்வர்க்காதி அதிருஷ்டபலத்துக்கு ஹேதுவாயிருப்பதுபோலச் சேதுதரிசனமும் பாபநாசரூப அதிருஷ்டபலத்துக்கு ஹேதுவாயிருக்கிறது. எது அதிருஷ்டபலத்துக்கு ஹேதுவாகிறதோ அது எவ்வளவைப் பலத்தின் உற்பத்தியில் சாதனமென்று சாஸ்திரம் போதித்திருக்கிறதோ அதனோடுகூடியது பலத்துக்கு ஹேதுவாகிறது. கேவலம் தான்மாத்திரம ஹேதுவாகிறதில்லை. ஆதலால் சிரத்தைநியமாதிகளுடன்கூடிய சேதுதரிசனம் பாபநாசரூப பலத்துக்கு ஹேதுவாகிறது. சிரத்தை நியமாதிகளில்லாத சேதுதரிசனம் பாபநாசத்துக்கு ஹேதுவாகிறதில்லை. ஏனெனின், சேதுதரிசனத்தினால் பிரத்தியக்ஷமான யாதொருபலனும் பிரதீதியாகிறதில்லை. கேவலம் சாஸ்திரத்தினால் பயன் அறியப்பட்டிருக்கிறது. அந்தச் சாஸ்திரம் சிரத்தாதிகளோடுகூடிய சேதுதரிசனத்தால் பலத்தைப் போதிக்கிறது. கேவல

---

* இராமசந்திரர் இராமேசுவரமுதல் இலங்கைவரையில் சமுத்திரத்தில் அணை கட்டியிருக்கிறார், அது சேதுவாம்.

தரிசனத்தினால் பலோற்பத்திக்கு யாதொரு பிரமாணமும் இல்லை. ஆதலால் பலோற்பத்தியில் சேதுதரிசனம் சிரத்தை பக்தி நியமாதிகளை அபேக்ஷிக்கிறது.

**388.** பிரஹ்மவித்தை தன் பலோற்பத்தியில் கர்மோபாஸனைகளையபேக்ஷிக்கிறதில்லை. ஏனெனின், பிரஹ்மவித்தையின் பயனும் சுவர்க்கம்போல் லோகவிசேஷமான அதிருஷ்டமாயின், லோகவிசேஷமும் கேவலப் பிரஹ்மவித்தையாற் கிடைப்பதாகச் சாஸ்திரம் போதித்திராமல் கர்மோபாஸனையோடுகூடிய பிரஹ்மவித்தையால் போதித்திருக்குமாயின், பிரஹ்மவித்தையும் சேதுதரிசனம்போல் பலோற்பத்தியிற் கர்மோபாஸனைகளை யபேக்ஷிக்கும். அந்தப் பிரஹ்மவித்தையின் பயனாகிய மோக்ஷம் சுவர்க்கம்போல் லோகவிசேஷரூப அதிருஷ்டமோவன்று. ஆனால் மோக்ஷம் நித்தியப் பிராப்தமாயிருக்கின்றது. பிராந்தியால் பந்தம் பிரதீதியாகிறது. அந்தப் பிராந்தியின் நிவிருத்தியே பிரஹ்மவித்தையின் பயனும். அந்தப் பிராந்திநிவிருத்தி கேவலம் பிரஹ்மவித்தையால் எமக்கு (பிரஹ்மவேத்தாவாகிய ஞானிகளுக்கு)ப் பிரத்தியக்ஷமாயிருக்கிறது. ரஜ்ஜுஞானத்தால் சர்ப்பப் பிராந்தியின் நிவிருத்தி எல்லோருக்கும் பிரத்தியக்ஷமாம். ஆதலால் பிராந்தி நிவிருத்தி அதிஷ்டானஞானத்தின் திருஷ்டபலனும்.

திருஷ்டபலோற்பத்தி எவ்வளவு சாமக்கிரிகளால் பிரத்தியக்ஷமாய்ப் பிரதீதியாகிறதோ அச்சாமக்கிரிகள் திருஷ்டபலத்துக்கு ஹேதுக்களெனப்படுகின்றன.

1. * துரி தந்து வேமாக்களால் படத்தினுற்பத்தி பிரத்தியக்ஷமாயிருக்கிறது. ஆதலால் துரி தந்து வேமாக்கள் படத்துக்கு ஹேதுக்களாகின்றன.

2. கேவலம் போஜனத்தினால் திருப்திரூப பலன் பிரத்தியக்ஷமாய்ப் பிரதீதியாகிறது. ஆதலால் கேவலபோஜனம் திருப்திக்கு ஹேதுவாயிருக்கிறது.

அதுபோலக் கேவல அதிஷ்டானஞானத்தினால் பிராந்திநிவிருத்தி பிரத்தியக்ஷமாய்ப் பிரதீதியாகிறது. ஆதலால் கேவல அதிஷ்டானஞானமே பிராந்திநிவிருத்திக்கு ஹேதுவாயிருக்கிறது.

ரஜ்ஜுஞானம் பிராந்திநிவிருத்தியில் வேறொன்றையும் அபேக்ஷியாதது போலப் பந்தப்பிராந்திக்கு அதிஷ்டானமான நித்தியமுக்த ஆத்மாவின் ஞானமும் பந்தப்பிராந்தியின் நிவிருத்தியில் கர்மோபாஸனைகளை அபேக்ஷிக்கிறதில்லை.

---

*69. துரியென்பது தறி. படத்தின் உபாதானகாரணமான நூல் தந்து. வேமாவென்பதுநாடா அதாவது நூல்வைக்கும் குழல். இதனை நூனாழியென்பர்.

**389.** 1. ஞானத்தின் பலமாகிய மோக்ஷத்தைச் சுவர்க்கம்போல் லோகவிசேஷமான அதிருஷ்டமெனவங்கீகரிக்கின் அது வேதவாக்கியத்துக்கு விருத்தமாம். ஏனெனின், ஞானியின் பிராணன் எந்தலோகத்துக்கும் போகிற தில்லையென்று வேதத்தில் சொல்லிருக்கிறது.

2. லோகவிசேஷத்தை அங்கீகரிப்பதினால் ஸ்வர்க்கம்போல் மோட்சம் அநித்தியமாகும். ஆதலால் மோட்சம் லோகவிசேஷரூபமன்று.

3 *லோகவிசேஷத்தை மோக்ஷமென அங்கீகரிக்கின் அவனுக்கும் கேவலம ஞானத்தினாலேயே மோக்ஷலோகத்தின் அடைவு அங்கீகரிக்கத்தக்கது. ஏனெனின், சாஸ்திரத்தினால் பிரதிபாதிக்கப்பட்ட அர்த்தம் சாஸ்திரானுசாரமாகவே அங்கீகரிக்கப்படுகின்றது. அந்தச் சாஸ்திரமானது மோக்ஷம் கேவலம ஞானத்தினாலுண்டாவதாகச் சொல்லுகிறது. ஆதலால் கேவல ஞானம் மோக்ஷத்துக்கு ஹேதுவாம். கர்மம் உபாஸனை ஞானம் என்னும் மூன்றும் ஹேதுவன்று.

**390.** விருக்ஷதிருஷ்டாந்தமும் பொருந்தாது. ஏனெனின், ஜலம்விடுதல் விருக்ஷத்தின் உற்பத்திக்கும் ரக்ஷணைக்கும் ஹேதுவாயிருக்கினும் விருக்ஷத்தின் பலோற்பத்தியில் காரணமன்று. முதிர்ந்தமரத்துக்கு ஜலம் விடுதல் விருக்ஷத்தின் ரக்ஷணையின்பொருட்டாம்; பலத்தின் பொருட்டன்று. ஜலத்தாற்செழித்தவிருக்ஷமே பலத்துக்கு ஹேதுவாம்; ஜலம் விடுதல் ஹேதுவன்று. அதுபோலக் காமோபாஸனைகளும் ஞானத்தின் உற்பத்தியில் உபயோகமாம்;மோக்ஷத்திலில்லை. ஆதலால் ஞானோற்பத்திக்கு முன்னேயே அந்தக்கரணத்தின் சுத்தியின்பொருட்டும் நிச்சலத்தன்மையின்பொருட்டும் கர்மோபாஸனைகளை யனுஷ்டிக்கவேண்டியது. ஞானமுண்டானபின் மோட்சத்தின் பொருட்டு இவற்றை யநுஷ்டிக்கவேண்டியதில்லை.

ஞானத்தின் உற்பத்திக்கு முன்னும் எதுவரையில் அந்தக்கரணத்தில் மலவிக்ஷேபங்கள் இருக்கின்றனவோ அதுவரையிற்றான் கர்மோபாஸனைகளை யனுஷ்டிக்கவேண்டியது. எவனுடைய அந்தக்கரணம் சுத்தமாயும் நிச்சலமாயுமாகிறதோ அந்த ஜிஞ்ஞாசுவானவன் சிரவணத்துக்கு விரோதமான கர்மோபாஸனைகளைத் தள்ளவேண்டியது. மலமென்பது பாவம். அது அசுபவாஸனைக்கு ஹேதுவாயிருக்கிறது. எதுவரையில் மலமிருக்கிறதோ அதுவரை

---

* இங்கு துர்ஜனதோஷநியாயத்தால் லோகவிசேஷத்தை மோக்ஷமெனக்கொள்ளினும் அந்த மோக்ஷம் ஞானமின்றியுண்டாகாது என்னும் வார்த்தையைச் சித்தாந்தி சொல்லுகின்றார். எங்ஙனம்: ஒருவனுக்குப் பிரபலசத்துரு உளனாயின்; அவன் தனது வலியின்றிய சத்துருவிற்கு முதலில் அடிக்க உத்தரவுகொடுத்துச் சந்தோஷமடைவித்துப் பின் அவனைக் கொல்லுகிறான். அதற்குத் துர்ஜனதோஷநியாயமென்று பெயர்.

யில் அசுபவாசனையிருக்கிறது. எப்போது அசுபவாசனையுண்டாகவில்லையோ அப்போது மலமின்மை நிச்சயிக்கப்படுகின்றது. அந்தக்கரணத்தின் சஞ்சலத்தன்மையும் ஏகாக்கிரத்தன்மையும் அனுபவசித்தமாயிருக்கின்றன. ஆதலால உத்தமஜிஞ்ஞாசுவுக்கும வித்துவானுக்கும் கர்மோபாஸனைகள் நிஷ்பிரயோசனமாயிருக்கின்றன.

## 391. கர்மோபாஸனைகளால் ஞானத்தின் இரக்ஷிப்புண்டாகுமென்றெனல்.

"ஞானத்தைக் காப்பாற்றும்பொருட்டுக் கர்மஉபாசனைகளைச் செய்யவேண்டும். ஜலத்தினால உண்டாகும விருக்ஷம ஜலத்தினால் இரக்ஷிக்கப்படுகிறது. ஜலசம்பந்தமில்லாமற்போனால முதிர்ந்த மரமும பட்டுப்போகிறது. அதுபோலக் கர்மோபாஸனைகளாலுண்டாகும் ஞானமும் கர்மோபாஸனைகளால் இரக்ஷிக்கப்படுகிறது. ஞானி கர்மோபாஸனைகளைச் செய்யாவிடின், அந்தக்கரணம் மறுபடியும் மலினமும் சஞ்சலமுமாய்விடும். அந்த மலினசஞ்சல அந்தக்கரணத்தில், நீரில்லா நிலத்தின மரமபோல், முன்னமே உண்டாயிருந்த ஞானமும நஷ்டமாய்விடும். ஆகையால் ஞானியும் கர்மோபாஸனைகளைச் செய்யவேண்டும்." என்று முன் சொல்லப்பட்டது.

அது பொருந்தாது. ஏனெனின், ஆபாஸசகித அல்லது சேதனசகித அந்தக்கரணத்தின் "நான் அசங்கப்பிரஹ்மம்" என்னும் விருத்தி வேதாந்தத்தின் பலரூப ஞானமாம். அது கர்மோபாஸனைகளின்றி நாசமாகும்; அல்லது சேதனசொரூபஞானத்தின் நாசமுண்டாகும்.

சொரூபஞானமோ நித்தியமாம். ஆதலால் அதற்கு நாசமும் இரக்ஷிப்பும் பொருந்தாது. ஆனால் வேதாந்தத்தின் பயனாகிய பிரஹ்மவித்தைவடிவ ஞானமெதுவோ அது கர்மோசனைகளால் உற்பத்தியாகிறது. கர்மோபாஸனைகளைவிடுதலால் உற்பத்தியாகிய வித்தையும் நஷ்டமாய்விடும். ஆதலால் அதன்ரக்ஷிப்பின் பொருட்டுக் கர்மோபாஸனைகளைச் செய்யவேண்டுமென்று கூறின்,

அது பொருந்தாது. ஏனெனின்,

1. ஒரு முறையுண்டாகிய அந்தக்கரணத்தின் பிரஹ்மாகாரவிருத்தியால் அஞ்ஞானம பிராந்தி என்பவற்றின் நாசரூபபலன் அதேசமயத்தில் சித்திக்கிறது. அஞ்ஞானப்பிராந்திகளின் நாசத்துக்குப் பிறகு மறுபடியும் விருத்தியை ரக்ஷித்தலின் உபயோகமில்லை.

2. கர்மோபாஸனைகளால் அந்தக்கரணவிருத்தியை இரக்ஷித்தலும் கூடாது. ஏனெனின், கர்மோபாஸனைகளை யநுஷ்டிக்கின், அப்போது கர்

மோசனைகளினது சாமக்கிரிகளின் விருத்திரூப ஞானமே உண்டாகும்; பிரஹ்மத்தின் ஞானமுண்டாகமாட்டாது. வேறு விருத்தியுண்டாதலால் முதல் விருத்தி தங்காது. ஆதலால் கர்மோபாஸனைகள் ஞானோற்பத்திக்குப் பரம்பரையாய ஹேதுக்களாம். உண்டானவிருத்திக்கு விரோதிகளாகின்றன. ஆதலால் கர்மோபாஸனைகளால் ஞானம் இரக்ஷிக்கப்படமாட்டாது.[1]

## 392. ஞானிக்குப் பாபமும் சஞ்சலத்தன்மையு மின்மையால் கர்மோபாஸனைகளின் உபயோகமில்லை யெனல் 392-393.

"ஞானிக்குக் கர்மத்தை விடுவதனால் பாபமுண்டாகிறது" என்று முன் சொல்லப்பட்டது.

அது பொருந்தாது. ஏனெனின்,

1. சுபகர்மத்தைவிடுதல் பாபத்துக்கு ஹேதுவாகாது; நிஷித்தகர்மத்தையனுஷ்டித்தலே பாபத்துக்கு ஹேதுவாம். இதனைப் பாஷியகாரர் வெகுவிதமாய்ப் பிரதிபாதித்திருக்கிறார். ஆதலால் கர்மத்தை விடுதலால் பாபமுண்டாகிறதில்லை.

2. ஞானிக்கோ எவ்விதத்திலும் பாபமுண்டாகாது. ஏனெனின், புண்ணியபாபங்கள் அவற்றின் ஆசிரயமான அந்தக்கரணம் என்பவை பரமார்த்தமாக இல்லை. அவித்தையால் மித்தையாய்ப் பிரதீதியாகின்றன. அந்த அவித்தையும் மித்தியாப்பிரதீதியும் ஞானவானுக்கில்லை. ஆதலால் சுபகர்மத்தை விடுவதனாலேனும் அசுபகர்மத்தைச் செய்வதனாலேனும் ஞானிக்குப் பாபமுண்டாகாது.

**393.** இவ்விடத்தில் இது சித்தாந்தம்:—ஞானம் 1. மந்தம் 2. திடம் என இருவகைத்து.

1. சமுசயாதிகளோடுகூடிய ஞானம் மந்தமெனப்படும்.

2. சமுசயாதிகளில்லாத ஞானம் திடமெனப்படும்.

திடஞானமுள்ளவனுக்குச் செய்யவேண்டியதொன்றுமில்லை. ஒரு தடவையுண்டாகிய சமுசயமில்லாத அந்தக்கரணத்தின் விருத்திரூப ஞானமே அவித்தையை நாசஞ்செய்துவிடுகிறது. அந்த (விருத்திரூப) ஞானம் நாசமானாலும் நன்றாயறியப்பட்ட ஆத்மாவில் மறுபடியும் பிராந்தியுண்டாகிறதில்லை. ஏனெனின், பிராந்திக்குக் காரணமான அவித்தை ஒருமுறையுண்டான ஞானத்தால் நஷ்டமாய்விட்டது. ஆதலால் பிராந்தியும் அவித்தையுமில்லாததினால் மறுபடியும் விருத்திஞானமுண்டாவதிலோர் பிரயோசனமுமில்லை.

ஜீவன்முக்தியின் ஆனந்தத்தின்பொருட்டு ஒருவன் விருத்தியின் ஆவி ருத்தியையபேக்ஷிக்கின் அடிக்கடி வேதாந்த அர்த்தத்தைச் சிந்தனைசெய்ய வேண்டும். வேதாந்தார்த்தத்தைச் சிந்திப்பதனாலேயே அடிக்கடிப் பிரஹ்மாகாரவிருத்தியுண்டாகிறது. கர்மோபாஸனைகளால் பிரஹ்மாகாரவிருத்தியுண்டாகிறதில்லை. ஏனெனின், கர்மோபாஸனைகள் அந்தக்கரணத்தின் சுத்தி நிச்சலத்தன்மை என்பவற்றின்வாயிலாக ஞானத்திற் குபயோகப்படுகின்றன. வேறுவிதமாக அவைகளுபயோகப்படுகிறதில்லை. வித்துவானுடைய அந்தக்கரணத்தில் பாபமும் சஞ்சலத்தன்மையுமில்லை. அவித்தை ராகத்துவேஷங்களின்வாயிலாகப் பாபத்துக்குஞ் சஞ்சலத்தன்மைக்குங் காரணம் அவித்தையாம். அந்த அவித்தை ஞானத்தால் நாசமாகிறது. ஆதலால் வித்துவானுக்குப் பாபமும் சஞ்சலத்தன்மையுமில்லாமையால் கர்மோபாஸனைகளின் உபயோகமில்லை.

## 394. ஞானிகளினது பிராரப்தத்தின் வேறுபாடும் அவர்களுக்கு ஜீவன்முக்தி சுகத்தின்பொருட்டும் உபாஸனையிற் பிரவிருத்தியுண்டாகாமையும்.

"ராகத்துவேஷாதிகள் அந்தக்கரணத்தின் சகஜதர்மங்கள். எதுவரையில் அந்தக்கரணமிருக்கிறதோ அதுவரையில் ராகத்துவேஷங்கள் ஞானிக்கு எவ்விதத்தாலும் நாசமாகா. அந்தராகத்துவேஷங்களால் ஞானியின் அந்தக்கரணமும் சஞ்சலப்படும். ஆதலால் சஞ்சலத்தன்மையை நீக்குதற்பொருட்டு ஞானியும் உபாஸனையை யனுஷ்டிக்கவேண்டியது.

அந்தக்கரணத்தின் சஞ்சலத்தன்மையால் ஞானிக்கு விதேகமோக்ஷத்தில் ஹானியில்லையாயினும், சஞ்சலமான அந்தக்கரணத்தில் சொரூபானந்தம் விளங்காதாகலின் சஞ்சலத்தன்மை ஜீவன்முக்திக்கு விரோதியாம். ஆதலால் ஜீவன்முக்தியின்பொருட்டுச் சஞ்சலத்தன்மையைப் போக்க உபாஸனைசெய்யவேண்டும்" என்று ஒருகால் இவ்வாறு கூறின்,

அது பொருந்தாது. ஏனெனின், திடபோதம் எவன் அந்தக்கரணத்திலுண்டாயிருக்கிறதோ அவனுக்குச் சமாதியும் விக்ஷேபமும் சமமாம். ஆதலால் அந்தக்கரண நிச்சலத்தன்மையின்பொருட்டு வித்துவான் யாதொரு பிரயத்தினமுஞ் செய்யவேண்டியதில்லை. அங்ஙனமாயினும், வித்துவானுடைய பிரவிருத்தியும் நிவிருத்தியும் பிராரப்தத்தின் ஆதீனமாயிருக்கின்றன. பிராரப்தகர்மம் எல்லோருக்கும் வெவ்வேறாயிருக்கிறது.

1. ஜனகாதிகள் போல் சிலவித்துவான்களுக்குப் பிராரப்தம் போகத்துக்கு ஹேதுவாகிறது,

2. சுகதேவர் வாமதேவர்கள் போலச் சிலருக்குப் பிராரப்தம் நிவிருத்திக்கு ஹேதுவாகிறது.

1. எவன் பிராரப்தம் போகத்துக்கு ஹேதுவாகிறதோ அவனுக்குப் பிராரப்தத்தால போக இசசையும் போகசாதனத்தின் பொருட்டுப் பிரயத்தனமுமுண்டாகின்றன.

2. எவன் பிராரப்தம் நிவிருத்திக்கு ஹேதுவாயிருக்கிறதோ அவனுக்கு ஜீவன்முக்தியினது ஆனந்தத்தின் இச்சையுண்டாகிறது. மற்றப் போகத்தில் அருவருப்புண்டாகிறது.

ஜீவன்முக்திஆனந்தத்தின் இச்சையுள்ளவன் பிரஹ்மாகாரவிருத்தி அடிக்கடியுண்டாகும பொருட்டு வேதாந்த அர்த்ததைதச் சிந்தித்தலே செய்ய வேண்டும்; உபாஸனை செய்யவேண்டியதில்லை. ஏனெனின், அந்தக்கரணத்தின் நிச்சலத்தன்மைமாத்திரத்தால் பிரஹ்மானந்தம் விசேஷமாய் விளங்க மாட்டாது; பிரஹ்மாகாரவிருத்தியாற்றான் விளங்கும். அந்தப் பிரஹ்மாகாரவிருத்தி வேதாந்தசிந்தனையாலேயேயுண்டாகிறது; உபாஸனையாலுண்டாகிறதிலலை.

அந்தக்கரணத்தின் சஞ்சலத்தன்மையும் வித்துவானுக்கு வேதாந்தசிந்தனையினாலேயே நீங்கிவிடுகிறது. ஆதலால் அந்தக்கரணத்தின் நிச்சலத்தன்மையின் பொருட்டும் உபாஸனையில் பிரவிருத்தியுண்டாகிறதில்லை.

இவ்விதத்தால் எவனுக்குத் திடபோதமுண்டாயிருக்கிறதோ அவனுக்குக் கர்மோபாஸனைகளில் பிரவிருத்தியுண்டாகிறதில்லை.

## 395. திட அதிட ஞானிகளுக்கும் உத்தமமந்த ஜிஞ்ஞாஸுக்களுக்கும் கர்மோபாசனையில் அதிகாரமில்லை யெனல் 395-396.

1. எவனுக்கு மந்தபோதமிருக்கிறதோ அவனும் மனனநிதித்தியாஸனங்களையே செய்யவேண்டும்; கர்மோபாஸனைகளைச் செய்யவேண்டியதில்லை. ஏனெனின், எவனுக்கு மந்தபோதமுண்டாகிறதோ அவன் உத்தமஜிஞ்ஞாஸு. அவனுக்கு மனனநிதித்தியாஸனங்களைவிட வேறொன்றும் செய்யவேண்டியதில்லை. இது சாரீரகத்தில் சூத்திரகாரராலும் பாஷ்யகாரராலும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

2. வித்துவானுக்கு மனனநிதித்தியாஸனங்களும் *செய்யவேண்டிய தில்லை. ஜீவன்முக்தியின் ஆனந்தத்தின்பொருட்டு மனனநிதித்தியாஸனங் களில் வித்துவான் பிரவர்த்திக்கிறான். அவனும் தன் இச்சையாற் பிரவர்த் திக்கிறான். "நான் வேதத்தின் ஆஞ்ஞைப்படி நடக்காதபக்ஷத்தில் எனக்கு ஜனனமரணாதி சமுசாரமுண்டாகும்" என்னும் புத்தியால் செய்யப்படும் கர் மம் கர்த்தவ்யமெனப்படும். ஜன்மாதிகளின் உணர்ச்சி வித்துவான்களுக் குண்டாகிறதில்லை. ஆதலால் தன்னிச்சையால் வித்துவான் மனனநிதித் தியாஸனங்களைச் செய்கின்றான். அது கர்த்தவ்யமன்று.

இவ்விதத்தால் மந்தபோதம் அல்லது திடபோதமுண்டானவனுக்குக் கர்மோபாஸனைகள் கர்த்தவ்யமன்று.

396. 3. எவனுக்குப் போதமுண்டாகவில்லையோ, ஆனால் ஆத்மா வை அறியவேண்டுமென்னும் தீவிரமான இச்சையிருக்கிறதோ, போகத்தில் இச்சையில்லையோ, அவனுடைய அந்தக்கரணம் சுத்தமாயிருக்கிறது. ஆத லால் அவனும் உத்தமஜிஞ்ஞாசுதான். அவனுக்கும் போதத்தின்பொருட்டுச் சிரவணாதிகள் செய்யவேண்டியனவாம்; கர்மோபாஸனைகளன்று. ஏனெ னின், கர்மோபாஸனைகளின் பலன் எதுவோ அது அவனுக்கு சித்தித்திருக் கிறது.

4. ஞானத்தின் சாமானிய இச்சையால் எவன் சிரவணத்திற்பிரவர்த் திக்கிறானோ, எவன் அந்தக்கரணம் போகத்தில் ஆசக்தியுள்ளதாயிருக்கிறதோ அவன் மந்தஜிஞ்ஞாசு. அவனும் சிரவணத்தைவிட்டு மறுபடியும் கர்மோபாஸனை களிற் பிரவர்த்திக்கவேண்டியதில்லை. கர்மோபாஸனைகளின் பலன்களாகிய அந்தக்கரணத்தின் சுத்தியும் நிச்சலத்தன்மையும் அவனுக்குச் சிரவணத்தினா லேயே உண்டாய்விடும். சிரவணத்தின் ஆவிருத்தியால் அந்தக்கரணத்தின

---

* 1. "தத்துவத்தினையறியாதவர்கள் எவர்களோ அவர்கள் சிரவணத்தைச் செய்க நான் தத்துவத்தை அறிந்தவன்; எக்காரணத்தால் சிரவணத்தைச் செய்யவே ண்டும்".

2. "சம்சயத்தையடைந்தவர்கள் எவர்களோ அவர்கள் மனனத்தைச் செய்க. சம்சயமில்லாத யான் மனனத்தைச் செய்யேன்".

3. "விபரியத் (விபரீதத்)தையடைந்தவன் எவனோ அவன் நிதித்தியாசனத் தைச் செய்க. நான் தேகத்தில் ஆத்மத்தன்மையின் ஞானவடிவ விபரியயத்தை ஒரு போதும் அடைகிறதில்லையாகலின் எனக்கு விபரியயமின்மையால் என்ன தியான மிருக்கின்றது? ஒன்றுமில்லை".

இவ்வாறு பஞ்சதசியின் திருப்திதீபத்தில் வித்யாரண்யசுவாமிகள் வித்வானுக்குக் கர்த்தவ்யமின்றென்பதனை விஸ்தாரமாக எழுதியிருக்கின்றனர்.

தோஷம் நீங்கி இந்த ஜன்மத்திலாவது அல்லது வேறு ஜன்மத்திலாவது அல்லது பிரஹ்மலோகத்திலாவது ஞானமுண்டாகும்.

ஆவிருத்தியென்பது அடிக்கடி யென்பதாம்.

சிரவணத்தை விட்டுக் கர்மோபாஸனைகளிற் பிரவிருத்திக்கிறவன் * ஆருடபதிதன் எனப்படுகிறான்.

1-2. இவ்விதமாக ஞானிக்கும் உத்தமஜிஞ்ஞாசுவுக்கும் கர்மோபாஸனைகளின் அதிகாரமில்லை.

3. வேதாந்தசிரவணத்தில் பிரவர்த்தித்துள்ள மந்தஜிஞ்ஞாசுவுக்கும் அதிகாரமில்லை.

4. எவனுக்கு ஞானத்தின் இச்சையிருந்தும் போகத்தில் புத்தி பற்றியிருக்கிறதோ, அதனாற் சிரவணத்தில் எவன் பிரவிருத்திக்கிறதில்லையோ, அந்த மந்தஜிஞ்ஞாசுவுக்கு நிஷ்காமகர்மத்திலும் உபாஸனையிலும் அதிகாரமுண்டு.

5. போகத்திலேயே எவனுக்கு ஆசையிருக்கிறதோ ஞானத்தில் இச்சையில்லையோ அவன் பகிர்முகன். அவனுக்கு ஸகாமகர்மத்திலும் அதிகாரமுண்டு.

ஆதலால் ஞானிக்குக் கர்மோபாஸனைகளில் அதிகாரமில்லை. கர்மோபாஸனைகளுக்கு ஞானம் விரோதியாம்.

## 397. திடஞானத்திற்குக் கர்மோபாசனைகள் விரோதியன்று. ஆனால் மந்தஞானத்திற்கு விரோதியாமெனல் 397-399.

கர்மோபாஸனைகளும் அந்தக்கரணத்தின் சுத்தி நிச்சலத்தன்மைகள்வாயிலாக ஞானோற்பத்திக்கு ஏதுக்களாம். ஆனால் ஞானோற்பத்திக்குப் பின் கர்மோபாஸனைகளைச் செய்யின் உண்டான ஞானமும் நஷ்டமாய்விடும். ஆதலால் அவை ஞானத்துக்கு விரோதிகளாம்; இச்சைக்கு ஹேதுவன்று. ஏனெனின்,

1. "நான் கர்த்தா. யஞ்ஞாதிகள் எனக்குச் செய்யவேண்டியன. யஞ்ஞாதிகளுக்குச் சுவர்க்காதிகள் பயன்." என்னும் பேதபுத்தியால் கர்மஞ்செய்யப்படுகிறது.

---

* மோக்ஷத்தின் ஏணியிலேறி அங்கிருந்து கீழே விழுவோனுக்கு கரம்லேடிநியாயம் (உள்ளங்கையிலுள்ள இலட்டுகத்தை யெறிந்துவிட்டு கையைநக்குகிறவன் திருஷ்டாந்தம்) கிடைக்கிறது. இது பஞ்சதசியின் தியானதீபமென்னும் ஒன்பதாவது பிரகரணத்தின் வியாக்கியானத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

2. "நான் உபாஸகன், தெய்வம் உபாஸியம்" என்னும் பேதபுத்தியால் உபாஸனை சித்திக்கிறது.

அவ்விரண்டுவகைப் புத்திகளும் 'எல்லாம் பிரஹ்மமயம்' என்னும் புத்தியை விலக்கியிருக்கின்றன. ஆதலால் கர்மோபாஸனைகள் ஞானத்துக்கு விரோதிகளாம்.

ஞானி ஆத்மாவை அசங்கனாக அறிந்தாலும் தேகத்தின் போஜனாதிவியவகாரங்களையேனும், அல்லது ஜனகாதிகளின் வியவகாரங்களைப்போல் அதிகமான ராஜ்யபாலனாதிவியவகாரங்களையேனும் செய்கிறான். அந்த வியவகாரத்திற்கு ஞானம் விரோதியன்று. வியவகாரமும் ஞானத்துக்கு விரோதியன்று. ஏனெனின், எந்த ஆத்மஸ்வரூபம் ஞானத்தால் அசங்கம் என்று அறியப்படுகிறதோ அந்த ஆத்மாவில் வியவகாரம் பிரதீதியானால் வியவகாரத்துக்கு ஞானமும் ஞானத்துக்கு † வியவகாரமும் விரோதியாகும். வித்துவானுக்கு ஆத்மாவில் அந்த வியவகாரம் பிரதீதியாகிறதில்லை. எல்லா வியவகாரமும் தேகாதிகளை ஆசிரயித்துக்கொண்டிருக்கின்றன. ஆத்மாவில் வியவகாரசகித தேகாதிகளின் சம்பந்தமேயில்லை. இத்தன்மைய புத்தியோடு ஞானி சகல வியவகாரங்களையுஞ் செய்கிறான். இக்காரணத்தால் வித்துவானுடைய பிரவிருத்தியும் நிவிருத்தியேயெனப்படுகிறது.

---

† இவ்வர்த்தத்தினை வித்தியாரண்யசுவாமிகள் திருப்திதீபத்திலும் இவ்வாறு எழுதியிருக்கின்றார்கள்:—

1. "பிராரத்தம் எப்போது ஜகத்தின் சத்தியத்தன்மையைச் சம்பாதித்துப் போகத்தைக் கொடுக்கின்றதோ அப்போது வித்தைக்கு விரோதியாகின்றது. போகமாத்திரத்தால்ச் விஷயத்திற்குச் சத்தியத்தன்மை உண்டாகிறதில்லை"

2. வித்தை (ஞானம்) எப்போது ஜகத்தை ஒடுக்குகின்றதோ அப்போது பிராரப்தத்திற்கு விரோதியாகும். மித்தியாத்தன்மையின் ஞானத்தினாலோ அதற் (ஜகத்திற்)கு விலயமுண்டாகிறதில்லை" இங்குப் பிராரப்தசத்தத்தால் அதன்காரியமாகிய வியவகாரமும் கொள்ளப்படும்.

3. அங்ஙனமே தியானதீபத்திலும் "வியவகாரம் எதுவோ அது பிரபஞ்சத்தின் சத்தியத்தன்மையினையும் ஆத்மாவின் ஜடத்தன்மையினையும் அபேக்ஷை செய்கிறதில்லை; ஆனால் இச்சாதனங்களையே அபேக்ஷிக்கின்றது".

4. "மனம் வாக்கு சரீரம் அவற்றிற்குப் புறம்பான பொருள்கள் (வீடு நில முதலியன) எவையோ அவை வியவகாரத்திற்குச் சாதனங்களாம். அவற்றைத் தத்துவஞானி மித்தையென அறிகின்றான். ஆனால் சொரூபமாக நாசஞ்செய்கிறதில்லை. ஆதலால் இவனுக்கு (ஞானிக்கு) வியவகாரம் ஏன உண்டாகாது? (உண்டாகவே செய்யும்)" என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வாற்றால் ஞானத்திற்கும் பிராரப்தத்தாற்றோன்றும் வியவகாரத்திற்கும் விரோதமில்லை.

**398.** வேறு வியவகாரங்கள் ஞானத்துக்கு விரோதியாகாததுபோலக் கர்மோபாஸனைகளையும் அன்னிய பகிர்முகபுருஷர்களைச் செய்வித்தற்பொருட்டு ஆத்மாவையசங்கமென்றறிந்தும், கிரியையைத் தேகம் வாக்கு அந்தக்கரணம் என்பவற்றையாசிரயித்ததாய் அறிந்தும் செய்யின் ஞானத்துக்கு அவை விரோதியாகா. ஏனெனின், வித்துவான் அசங்கமென்றறிந்த ஆத்மாவைக் கர்த்தாவென்று அறிந்து கர்மோபாஸனைகளைச்செய்யின், அப்போது ஞானத்துக்கு அவை விரோதியாம். அந்த ஆத்மாவின் அசங்கவடிவ திடநிச்சயம் கர்மோபாஸனைகளால் வித்துவானுக்கு நீங்குகிறதில்லை. ஆதலால் * ஆபாஸரூபமான கர்மோபாஸனைகள் திடஞானத்துக்கு விரோதியாகா. இக்காரணத்தால் ஜனகாதிகள் ஆபாஸரூபகர்மஞ் செய்திருக்கிறார்கள்.

ஆத்மாவை யசங்கமென்றறிந்து மற்ற வியவகாரங்கள்போல் தேகாதிகளின் தர்மங்களையுமறிந்து வித்துவான் செய்யுஞ்சுபக்கிரியைகள் ஆபாஸரூப கர்மங்களெனப்படும். அவற்றிற்கு ஞானத்தோடு விரோதமில்லை. பாஷியகாரர் கர்மோபாஸனைகளுக்கு ஞானத்தோடு எந்தவிரோதஞ்சொல்லியிருக்கிறாரோ, அது ஆத்மா கர்த்தாவென்னும் புத்தியினால் எந்தக் கர்மோபாஸனைகள் செய்யப்படுகின்றனவோ அதற்கு ஞானத்தோடு விரோதம்சொல்லியிருக்கிறார்; ஆபாஸரூபத்தாற் சொல்லவில்லை.

**399.** அங்ஙனமாயினும், மந்தபோதத்துக்கு ஆபாஸரூபகர்மோபாஸனைகளும் விரோதிகளாம். ஏனெனின் சமுசயாதிகளோடுகூடிய போதம் மந்தபோதமெனப்படும். எவன் அந்தக்கரணத்தில் "ஆத்மா அசங்கனா? அல்லது அசங்கனன்றா?" என்று ஒருகால் சந்தேகமுண்டாகிறதோ அவன் அடிக்கடி "ஆத்மா அசங்கன், எனக்குச் செய்யவேண்டியதொன்றுமில்லை" என்னும் அர்த்தத்தைச் சிந்தனைசெய்யவேண்டியது. அப்போதோ சமுசயம் நீங்கித் திடபோதமுண்டாய்விடும். அப்படிச் செய்யாமற் கர்மோபாஸனைகளைச் செய்தால் உண்டானமந்தபோதமும் நீங்கி "நான் கர்த்தா போக்தா" என்னும் விபரீதநிச்சயமுண்டாகும். ஆதலால் மந்தபோதமுண்டாவதற்கு முன்னேயே கர்மோபாஸனைகளைச் செய்யவேண்டும்; பிறகு அவைகளைச் செய்யவேண்டியதில்லை.

மந்தபோதமுள்ளவன் கர்மோபாஸனைகளைச் செய்தால் உண்டான போதமும் நஷ்டமாய்விடும்.

---

* ஆத்மாவை அசங்கமென்றறிந்து கிரியைகள் மனோவாக்குக் காயங்களைச் சார்ந்தனவென்றறிந்தும் செய்யப்படும் கர்மோபாஸனைகள் ஆபாஸரூபங்களாம்.

திருஷ்டாந்தம்:—பக்ஷி தன் முட்டைகளை இறகுமுளைக்குமுன் அவயங் காக்கின்றது; இறகு முளைத்தபின் காக்கிறதில்லை. இறகு முளைத்தபின்னும் காக்குமாயின் முட்டையிலுள்ள ஜலத்தினால் குஞ்சின் மிருதுவான இறகு கரைந்துபோகும். அதுபோல் ஞானோற்பத்திக்கு முன்னையே கர்மோபாஸனைகளை யனுஷ்டிக்கவேண்டும்; ஞானோற்பத்திக்குப் பின் அனுஷ்டிக்கவேண்டியதில்லை. ஞானத்தின் உற்பத்திக்குப் பின்னும் கர்மோபாஸனைகளையனுஷ்டிக்கின் குஞ்சு நஷ்டமாவதுபோல் மந்தஞானமும் நஷ்டமாய்விடும். முதிர்ந்தபக்ஷி முட்டையின் சம்பந்தத்தினால் நஷ்டமாகாததுபோலத் திடபோதம் நஷ்டமாகாது. முதிர்ந்த பக்ஷிக்கு முட்டை பிரயோஜனப்படாததுபோல் திடபோதத்துக்குக் கர்மோபாஸனைகளால் பிரயோஜனமுமில்லை.

இவ்விதத்தால் மோக்ஷத்தின்பொருட்டு ஞானிக்குச செய்யவேண்டியது யாதொன்றுமில்லை. இது மூன்றாவது பிரசினத்தின் உத்தரஞ் சொல்லப்பட்டது.

## 400. முற்கூறிய பொருள் சகலவேதத்தின் சாரமாமெனல்.

சிஷ்யனுக்கு ஆசாரியர் கூறிய விடை வேதாநுசாரமாகச் சொன்னதாம். ஆதலால் இது யதார்த்தமாமெனக் கூறுகின்றார்:—

சிஷ்யனே! யான் உனக்குச் சொல்லியது முழுவதும் வேதத்தின் சாரமாம்; ஆதலால் இதனை நீ நம்புவாயாக. இதை யுணர்வதினால் சிரமமின்றி அபாரமான ஜனனமரணரூப சமுசாரம் நாசமாய்விடும்.

## *401. பாஷையின் ஸம்பிரதாயம்.

## 402. உபதேசித்த அர்த்தத்தின் சுருக்கம். (402-404)

“ஜகத்கர்த்தா ஈசுவரன் அவன் உனக்கு வேறன்று. நீ சச்சிதாநந்த ரூபப் பிரஹ்மம்” என்று ஆசாரியர் முன்னுபதேசித்ததை மறுபடியும் தயையுடன் சிஷ்யனுக்குச் சொல்லுகிறார். சிஷ்யனே! தீனத்தன்மையை விட்டு உன்ஸ்வரூபத்தைப் பார். நீயோ ஜனனமில்லாத சுத்தப் பிரஹ்மம். பார்க்கப்படுபவைகளையெல்லாம் பிரகாசஞ்செய்கிறாய். உன் அஞ்ஞானத்தால் ஜகத்தையெல்லாம் நீ சிருஷ்டித்தபிறகு மறுபடியும் எல்லாவற்றையும் நாசஞ்செய்து நீ நாசமற்றவனாயிருக்கிறாய். மித்யாப் பிரபஞ்சத்தைப் பார்த்துக் கொஞ்சங்கூட மனவருத்தத்தை அடைகிறதில்லை. நீ தேவர்களுக்கெல்லாம் தேவனாயிருக்கிறாய். நீ சுகராசியாயிருக்கிறாய். மாயையினால உன்னிடத்தில் ஜீவன் ஜகத்து ஈசுவரன் மூன்றும் விளங்குகின்றன. அது ரஜ்ஜுவில் சர்ப்பமும் கிளிஞ்சிலில் வெள்ளியும் விளங்குவதுபோலாம்.

* இப்பிரசங்கம் ஹிந்திபாஷையின சம்பிரதாயத்தைக் கூறுகின்றது. அஃது இங்குத் தமிழில் உபயோகமின்மையால் மொழிபெயர்க்கப்படவில்லை.

**403.** ஞானசாதனத்தைச் சொல்லுகிறேன்:—சிஷ்யனே! ராகமாகிய பதார்த்தத்திலுள்ள திடமான ஆசக்தியைத் தகித்துவிடு. லோபத்தை யொழித்துவிடு. துவேஷத்தைக் கொன்றுவிடு. காமத்தைச் சுட்டுவிடு.

* ராகம் லோபம் துவேஷம் காமம் என்பவற்றைக் கொள்வதனால் சகல ராஜஸதாமஸவிருத்திகளும் கொள்ளப்படுகின்றன. இதனால் சகலமான ராஜஸதாமஸவிருத்திகளையும் நாசஞ்செய்கவென்னும் அர்த்தம சித்திக்கிறது. இராஜஸதாமஸவிருத்திகள் ஞானத்துக்கே விரோதிகளாயிருக்கின்றன. அவைகளை நாசஞ்செய்யாமல் ஞானமுண்டாகிறதில்லை. ஆதலால் அவற்றின் நிவிருத்தி ஜிஞ்ஞாசுவினால் அபேக்ஷிக்கப்படுவதாம்.

விவேகம் வைராக்கியம் சமாதிஷட்கசம்பத்தி முமுக்ஷுத்துவம் என்னும் நான்கும் ஞானசாதனங்களாம். அவற்றில் விவேகம் முக்கியமானது. ஏனெனின், விவேகத்தினால் வைராக்கியாதிகளுண்டாகின்றன. ஆதலால் ஆசாரியர் இப்போது விவேகத்தையுபதேசிக்கிறார்:—

சிஷ்யனே! பாரவாரமாகிய சமுசாரத்தைக் கானல்ஜலத்துக்குச் சமானமாக மித்தையென்று நீ யடிக்கடி அறிவாயாக.

1. பாரவாரமென்பது சமுசாரத்திற்காம்.

2. அபாரவாரமென்பது ஆத்மாவிற்காம்.

பாரவாரம் மித்தையென்றதனால் அபாரவாரம் மித்தையன்று சத்தியமாம் என்பது அர்த்தத்தினால் சொல்லப்பட்டது.

வித்தையாடி பண்ணும் ஜாலவித்தைகளைப் பார்க்கும் மகனைப் பார்த்துத் தகப்பன் "மகனே வித்தையாடியாற்காண்பிக்கப்பட்ட இம்மாமரமுதலியன

---

* 1. விஷயத்தில் தோஷதிருஷ்டியினால ராகம் நாசமாகின்றது.
2. அர்த்தத்தில அனர்த்தத்தைக் காணுதலால லோபம் நாசமாகின்றது.
3. காமபாவத்தால் குரோதமாகிய துவேஷமுண்டாகிறதில்லை.
4. பதார்த்தங்களைச் சிந்திக்குமளவில சங்கற்பமில்லாமையால இச்சையாகிய காமமுண்டாகிறதில்லை.
இவ்வாறுரைக்கப்பட்ட ராஜஸ தாமஸ விருத்திகளினது நாசத்தின் உபாயமும் சாஸ்திரத்தாற் கண்டுகொள்க.

அல்லது பாகவதத்தின் ஏகாதசஸ்கந்தத்தின் 13 வது அத்தியாயத்திற் கூறிய தேசகாலாதிவடிவ பத்துச் சாத்துவிகபதார்த்தங்களைச் சேவித்தலால் சத்துவகுணத்தின் விருத்திவாயிலாகச் சகல ராஜஸ தாமஸ விருத்திகளின நாச (திரஸ்கார)முண்டாகிறது.

முழுமையும் பொய்" என்றான். இப்படிச் சொன்னதினால் வித்தையாடி பொய்யனென மகன் நினைக்கிறதில்லை. ஆனால் அவனைச் சத்தியமாகவே அறிகிறான். அதுபோல ஜகத்து மித்தையென்று சொல்லுதலால் ஆத்மா சத்தியமென்று அறிந்துகொள்ளுவான் என்னும் அபிப்பிராயத்தால் ஆசாரியர் பாரவார (சமுசார)த்தை மித்தையாகச் சொன்னார்.

இவ்விதத்தால் ஜகத்து மித்தையாம்; ஆத்மா சத்தியமாமென்று குரு விவேகத்தை யுபதேசித்தார்.

அந்த விவேகத்திற்கு வேறான சாதனங்கள் தாமாகவே யுண்டாகின்றன. ஆதலால் விவேகத்தின் உபதேசத்தால் சகல சாதனங்களின் உபதேசமும் அர்த்தத்தினால் சொல்லப்பட்டது.

---

ஞானத்தின் பகிரங்கசாதனங்களைச் சொன்னோம்.

இனி அந்தரங்கசாதமான சிரவணத்தைச் சொல்லுகிறோம் :—சிஷ்யனே! ஞானரூப சூரியனைச் சிரவணத்தினால் சம்பாதித்து அஞ்ஞானரூப தமஸை நாசஞ்செய்.

தமஸென்பது இருளிற்கும் அஞ்ஞானத்திற்கும் பெயராம். இருள் உபமானம். அஞ்ஞானம் உபமேயம், எதற்கு உபமை கொடுக்கப்பட்டிருக்கின்றதோ, அது உபமேயம்; எதன் உபமை கொடுக்கப்பட்டிருக்கின்றதோ, அது உபமான மெனப்படும்.

**404.** ஞானத்தின் சொரூபம் அந்நிய (சாங்கியம் நியாயமுதலிய) சாஸ்திரங்களில் நாநாவிதமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் மகாவாக்கியாநுசாரமாக ஞானத்தின் சொரூபத்தைக் கூறுகின்றோம்:—

1. ஜீவ ஈசுவரர்களில் அவித்தைமாயைப் பாகங்களைவிட்டு அவற்றின் எந்தப் பேதம தோற்றுகிறதோ அதனை நீக்கி,

2. ஜீவேசுரவர்களிடத்துள்ள வேதன(ஞான)மாகிய சேதனபாகத்தைப் பேதமின்றியதென்று அறி.

இப்படிக் கூறுதலால் மகாவாக்கியங்களில் பாகத்தியாகலக்ஷணையினால் ஜீவாசுவரர்களது ஏகத்துவத்தைக் காண்க.

இது வேதத்தின் சாரத்தைவிசாரித்து உன்னை நீ காத்துக்கொள். தாஸனிடத்து ஆசைவைத்து, இதனை (இப்பிரபஞ்சத்தைப்) பார்க்கலாகாது.

முற்கூறியதனையே சுருக்கிக் கூறுவாம்:— சிஷ்யனே! அழியத்தக்க சங்காதமாகிய தேகாதி நீ பல்லே. ஆனால் அழியாத பிரஹ்மம் நீ. *விருக்ஷரூப சம்சாரம் மித்தை. ஆகாசத்தில் நீலவர்ணமும் கூடாரரூபமும் உண்மையில்லாமல் மித்தையாகப் பிரதீதியாவதுபோலச் சமுசாரமும் ஆத்மாவில் இல்லாமல் மித்தையாகப் பிரதீதியாகிறது.

சுருதிஸ்மிருதிகளில் சமுசாரத்தை விருக்ஷரூபமாகச் சொல்லியிருத்தலால் இவ்விடத்திலும் விருக்ஷசப்தம் சமுசாரத்தில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

## 405. வேறுவகையால் மோக்ஷத்திற்குச் சாதனம் ஞானமாமென்று கூறுதல் (405-406).

மோக்ஷத்திற்குச் சாதனம் ஞானமாமென்னும் பொருளை வேறுவகையாற் கூறுகின்றார்.—

---

* 1. எல்லாவற்றினும் மேலானதாயிருத்தலால் உயரமாயுள்ள மாயாவிசிஷ்ட பரப்பிரஹ்மம் எதற்கு மூலமா (வேரா) யிருக்கிறதோ,

2. மகதத்துவம் எதற்கு முளையாயிருக்கிறதோ,

3. அகங்காரம் எதற்குக் கிளையாயிருக்கிறதோ,

4. பஞ்சதன்மாத்திரை எதற்குக் கொம்பா யிருக்கிறதோ,

5. கூறிய மகதத்துவமுதலியன யாவும் காரியத்தன்மையால் தாழ்வுடையனவாயிருத்தலின் எதற்குக் கீழ்ச்சாகைகள் எனப்படுகின்றனவோ,

6. வேதமுதலிய சாஸ்திரங்கள் எவையோ அவை மிக இனிமையைத்தரும் வாக்கியங்களால் இதன் அநித்தியத்தன்மைமுதலிய தோஷங்களை மூடுகின்றன வாகலின் அச்சாஸ்திரங்கள் எதற்கு இலைகளாயிருக்கின்றனவோ,

7. நான்கு புருஷார்த்தமும் எதற்கு இரஸமாயிருக்கின்றதோ,

8. தர்மாதர்மம் எதற்குப் புஷ்பமோ,

9. ஜனனமரணாதிதுக்கங்கள் எதற்குப் பழமோ,

10. அஞ்ஞானமுடைய ஜீவர்களாகிய பக்ஷிகள் எதற்குப் போக்தாவாகின்றனவோ,

11. வைராக்கியத்தினால் தீட்டப்பட்ட ஞானமாகிய கோடாரி எதனை வெட்டுவதாயிருக்கின்றதோ,

'அத்தன்மையதாம் இச்சம்ஸாரவடிவ' அசுவத்தவிருக்ஷம் (அரசமரம்).

இவை முதலிய அநேகவிதங்களாகச் சாஸ்திரங்களிற் சம்ஸாரமாகிய விருக்ஷம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

சிஷ்யனே! தேகாபிமானியான அஞ்ஞானியும், ஞானியும் பந்தமோக்ஷங்களுக்கு இருப்பிடங்களாவர்.

1. அஞ்ஞானியோ பந்தத்துக்கிருப்பிடம்.

2. ஞானி மோக்ஷத்துக்கிருப்பிடம்.

ராகமும் விராகமும் அவர்களது கொடிகள். எப்படிக் கொடி ராஜாவின் பட்டணத்துக்கு அடையாளமாயிருக்கிறதோ அப்படி அஞ்ஞானிக்கு ராகமும் ஞானிக்கு விராகமும் அடையாளங்களாயிருக்கின்றன.

1. அஞ்ஞானிக்கு இராகம் குறி.

2. ஞானிக்கு விராகம் குறி.

அஞ்ஞானியினிடத்தும் விராகமுண்டாகிறது. ஆதலால் ஞானிக்கு அஞ்ஞானியின் வேறான விராகம் சொல்லப்பட்டிருக்கிறது. சிஷ்யனே! சப்தாதி விஷயங்களில் சத்தியத்தன்மையின் பிராந்தியும், ரஜ்ஜுசர்ப்பம்போல் விஷயம் பிரமவடிவமென்னும் நிச்சயபுத்தியும் காற்றுக்கொடியை யாட்டுவதுபோல் ராகவிராகங்களை யாட்டுவிக் (சஞ்சலப்படுத்து) கின்றன; அவற்றைத் தளர விடுகிறதில்லை.

1. விஷயத்தில் சத்தியபுத்தியால் ராகத்தின் தளர்ச்சி நீங்குகிறது.

2. விஷயத்தில் பிரமபுத்தியால் விராகத்தின் தளர்ச்சி நீங்குகிறது.

**406.** விஷயம் அசத்தியம். ஆதலால் அதில் உண்டாம் சத்தியபுத்தி பிராந்திரூபமாம். பிராந்திஞானமும் அதற்கு விஷயமான மித்தியாவஸ்துவும் இரண்டும் பிரம மெனப்படும். இங்ஙனம் கூறியதனால் அஞ்ஞானியின் விராகத்துக்கும் ஞானியின் விராகத்துக்கும் பேதம் சொல்லப்பட்டது. ஏனெனின், அஞ்ஞானியின் விராகம் விஷயத்தில் மித்தியா புத்தியாலுண்டானதன்று. ஆதலால் அது மந்தமாயிருக்கிறது. "விஷயம் மித்தை" யென்னும் புத்தி அஞ்ஞானிக் குண்டாகிறதில்லை.

1. சாஸ்திரத்தினாலும் யுக்தியினாலும் விஷயம் மித்தையென்று அஞ்ஞானியும் அறிந்திருந்தாலும விஷயம் மித்தையென்னும் அபரோக்ஷபுத்தி ஞானிக்கேயுண்டாகிறது; அஞ்ஞானிக்குண்டாகிறதில்லை. ஆதலால் அஞ்ஞானிக்கு விஷயத்திலுள்ள பரோக்ஷமான மித்தியாபுத்தியால் அபரோக்ஷமான சத்தியப்பிராந்தி நிவிருத்தியாகிறதில்லை. இவ்விதத்தால் அஞ்ஞானிக்கு விஷயத்தில் விராகமுண்டாகும்போது பரோக்ஷ மித்தியாபுத்தியிருக்கிறது. ஆனால் பரோக்ஷ மித்தியாபுத்தியினும் அபரோக்ஷ சத்தியபுத்தி பிரபலமாயிருக்கிறது. ஆதலால் அஞ்ஞானிக்குப் பரோக்ஷ மித்தியாபுத்தி விராகத்

துக்கு ஹேதுவன்று. ஆனல் பிரபலமான சத்தியபுத்தியால் விஷயத்தில் ராகமுண்டாகிறது. விராகமுண்டாயினும் அதற்கு மித்தியாபுத்தி காரணமன்று, ஆனல் விஷயத்தில் தோஷதிருஷ்டியால் உண்டாகிறது.

2. ஞானி சர்வப்பிரபஞ்சத்தையும் அபரோக்ஷவடிவத்தால் மித்தையாக அறிகிறான். அவ்வபரோக்ஷ மித்தியாபுத்தியால் அபரோக்ஷ சத்தியபுத்தி நிவிருத்தியாய்விடுகிறது. ஆதலால் ராகத்துக்கு ஹேதுவான விஷயத்திலுள்ள சத்தியபுத்தி ஞானிக்கிருக்கிறதில்லை. விராகத்துக்கு ஹேதுவான விஷயத்தில் மித்தியாபுத்தி ஞானிக்கிருக்கிறது. ஞானிக்கு விஷயத்தில் சத்தியபுத்தி மறுபடியும் உண்டாகுமாயின் ராகமும் மறுபடியுமுண்டாகி விராகம் நிவிருத்தியாம். அவ்வபரோக்ஷமாய் மித்தையென்றறிந்த பதார்த்தத்தில் மறுபடியும் சத்தியபுத்தியுண்டாகிறதில்லை. அபரோக்ஷமாய் மித்தையென்றறிந்த ரஜ்ஜுவிலுள்ள சர்ப்பத்தில் சத்தியபுத்தி மறுபடியும் உண்டாகாதது போல் ஞானிக்கு மறுபடியும் சத்தியபுத்தியுண்டாகிறதில்லை. இவ்விதத்தால் ஞானிக்கு ராகத்தின் உற்பத்தியும் விராகத்தின் நிவிருத்தியும் உண்டாகிறதில்லை. ஆதலால் ஞானியின் விராகம் திடமாம்.

தோஷதிருஷ்டியால் அஞ்ஞானிக்குண்டாகும் விராகம் நிவிருத்தியாய் விடும். ஏனெனின், எந்தப் பதார்த்தத்தில் தோஷதிருஷ்டியுண்டாகிறதோ அந்தப் பதார்த்தத்திலேயே வேறு காலங்களில் நல்லதெனும் புத்தியுமுண்டாகிறது. அது எல்லாப் புருஷர்களுக்கும் பசுதர்மத்தின் முடிவில் ஸ்திரீயினிடத்தில் தோஷதிருஷ்டியுண்டாய்க் காலாந்தரத்தில் மறுபடியும் நல்லதெனும் புத்தியுண்டாவதுபோலாம். இவ்விதத்தால் தோஷதிருஷ்டி நீங்கும்போது அஞ்ஞானியின் விராகமும் நீங்கிப்போம். ஆதலால் அஞ்ஞானிக்குத் *திடமான விராகமுண்டாகிறதில்லை.

இவ்விதத்தால் ராகமும் விராகமும் அஞ்ஞானிக்கும் ஞானிக்கும் சின்னங் (குறி) களாய்ச் சொல்லப்பட்டன.

---

* அஞ்ஞானிக்குத் திடவிராகமுண்டாகாது என்னும் அபிப்பிராயத்தால் கீதையில் பகவான் இது கூறியிருக்கின்றனர்:—நிராஹார (வெளியில் விஷயங்களைவிட்டவ)னாகிய தேகி(ஜீவாத்மா)எவனோ அவனுக்கு ரஸமின்றியதன்மை எவ்வாறுண்டாகுமோ அவ்வாறு விஷயம் நிவிருத்தியாகின்றது. அதாவது அவனுக்கு விஷயங்களிலுள்ள ஸ்தூலராகமெதுவோ அது நீங்குகின்றது. ஆனல் ரஸமென்னும் சொற்பொருளாகிய வாசனைவடிவ சூக்ஷ்மராகம் எதுவோ அது மனதில் நிற்கிறது. இப்புருஷனது அவ்விரஸ (சூக்ஷ்மராக)மும் பரப்பிரஹ்மத்தைப் பார்க்க (அபரோக்ஷமாயறிய) நீங்குகின்றது.

வேறு சின்னங்களையும் சொல்லுகிறோம்:—சிஷ்யனே! வீட்டின்பேரில் யானைமுதலியவைகளின் மூர்த்திவடிவங்கள் இருப்பதுபோலப் பந்தமோக்ஷங்களுக்கு இருப்பிடங்களாகிய அஞ்ஞானி ஞானிகளின் அந்தக்கரணங்களில சாக்ஷ்ய (சாக்ஷியாலறியப்படுவன) சாக்ஷியென்னும் மூர்த்திகள் இருக்கின்றன.

1. அஞ்ஞானியின் அந்தக்கரணத்தில் சாக்ஷ்யரூபமூர்த்தியுளது.
2. ஞானியின் அந்தக்கரணத்தில் சாக்ஷிரூபமூர்த்தி இருக்கின்றது.

சாக்ஷிக்கு விஷயமான பிரபஞ்சத்தினைச் சாக்ஷ்யமென்பர்.

1. சாக்ஷ்யரூபமூர்த்தி மலினமாயிருக்கிறது.
2. சாக்ஷிரூபமூர்த்தி சுத்தமாயிருக்கின்றது. இவற்றுள் சாக்ஷ்யத்தில் அழுந்தியவர்கள் இராகிகள். சாக்ஷியில் அழுந்துவோர் தியாகி விராகிகள். சஞ்சலப் பிரமத்தை நிஜமென்றறிந்தவன் துக்கமாகிய கிணற்றில் முழுகுகிறான். அசலப் பிரஹ்மத்தின் நிஜஸ்வரூபத்தை யறிகிறவன் ஆநந்தஸ்வரூபத்தையடைகிறான்.

## 407. இலக்ஷணை மூன்றுவிதமாம் (407-409).

பாகத்தியாகலக்ஷணையினால் என்று 304-வது பிரசங்கத்தில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ஏதுவைக் கூறுதற்கு இலக்ஷணையின் பேதத்தைக் கூறுவாம்:—

பண்டிதர்களாகிய புத்திமான்கள் ஜஹதிலக்ஷணை (விட்டலக்கணை) அஜஹதிலக்ஷணை (விடாதலக்கணை) பாகத்தியாகலக்ஷணை (விட்டுவிடாதலக்கணை) என்று லக்ஷணை மூன்றுவகையாகக் கூறுகின்றனர். அவற்றுள் முதல் இரண்டும் மகாவாக்கியத்திற் பொருந்தா. பாகத்தியாகலக்ஷணையினால் தனது சொரூபமாகிய பிரஹ்மரூபத்தை யறிவிக்கின்றது.

**408.** சிஷ்யன் கேட்கின்றான்:—சாமானிய ஞானத்திற்குப் பிறகு விசேஷத்தின் ஞானமுண்டாகும். சாமானியமாய்ப் பிராஹ்மணனென்றறிந்த பின் அவனுடைய விசேஷ சாரஸ்வத *திராவிடனென்னும் ஞானமுண்டாவதுபோல் லக்ஷணையின் சாமானியரூபஞானத்துக்குப்பின் ஜஹதிமுதலியவற்றின் விசேஷஞானமுண்டாகும். லக்ஷணையின் சாமானியவடிவ மறிந்தாலன்றி ஜஹதிமுதலிய விசேஷரூபத்தின ஞானமுண்டாகாது.

இவ்வபிப்பிராயத்தால் சிஷ்யன் கூறுகின்றான்:— லக்ஷணையென்பது யாது? இதனை அறியேன். ஆதலால் லக்ஷணையின் சாமானியரூபத்தைக் காண்பித்துப் பின் ஜகதிமுதலியலக்ஷணைகளின் மூன்றுபேதத்தைச் சொன்

*தமிழன், தெலுங்கன், வைஷ்ணவன் என்னும்.

ளால் விசேஷமாயிருக்கும். ஆதலால் அவற்றின் தனித்தனி லக்ஷணங்களைக் காட்டியருளல்வேண்டும்.

## 409. குருவாக்கியம்.

சிஷ்யனே! ஏகாக்கிரசித்தத்துடன் நான் சொல்வதைக் கேள். லக்ஷணைகளையும் அவற்றின் பேதங்களையும் அறிவாய். பதத்துக்கும் அர்த்தத்துக்குமுள்ள †சம்பந்தம் விருத்தியெனப்படும். அது இருவகைத்து. ஒன்று

† 1. கன்றிற்குப் பசுவோடு சம்பந்தமிருக்கிறது. அதனால் அது அநேக பசுக்களின் மத்தியிலிருக்கிற தன் தாயாகிய பசுவினிடத்துப் பிரவிருத்திக்கிறது. சம்பந்தமின்றிப் பிரவிருத்தியாது. இதனால் கன்றிற்கும் மாட்டிற்கும் ஜந்நியஜநகபாவ சம்பந்தம் அறியப்படுகிறது. அந்த ஜந்நியஜநகபாவரூபத்தின் ஞானத்துக்கு ஹேதுவாகிய கன்றின் பிரவிருத்தியும் சம்பந்தமெனப்படும்.

2. அதுபோலச் சப்தங்கட்குத் தத்தம் அர்த்தத்தில் உண்டாம் பிரவிருத்தி எதுவோ அதுவும் ஒரு சம்பந்தமுமின்றியுண்டாகாது. ஆதலால் சப்தத்திற்குத் தன் வாச்சியார்த்தத்துடன் வாச்சியவாசகபாவ (சொல்லப்படுவது சொல்லுவதெனுந்தன்மை) சம்பந்தமும், லக்ஷியார்த்தத்துடன் லக்ஷ்யலக்ஷகபாவ (லக்ஷணையினால் அறியத்தக்கது லக்ஷணையாலறிவிப்பது எனுந்தன்மை) சம்பந்தமும் அறியப்படுகின்றன. இவ்விருவகைச்சம்பந்தத்தினையே ஸ்மார்யஸ்மாரகபாவரூபசம்பந்தமென்றும் கூறுகின்றனர்.

(1) வாச்சியவடிவ அல்லது லக்ஷியவடிவ அர்த்தம் எதுவோ அது பதத்தினால் ஸ்மரிக்க (நினைக்க)த்தக்கதாம். ஆதலால் அது ஸ்மார்யம் (நினைக்கத்தக்கது) எனப்படுகின்றது.

(2) வாசகவடிவ அல்லது இலக்ஷகவடிவமான பதம் எதுவோ அது அவ்வர்த்தத்தை ஸ்மரணஞ்செய்விப்ப (நினைப்பூட்டுவ)தாம். ஆதலால் அது ஸ்மாரகம் (நினைப்பூட்டுவது) எனப்படுகின்றது.

அவ்விரண்டற்கும் தம்மில் ஸ்மார்ய ஸ்மாரகபாவரூப சம்பந்தமிருக்கிறது. அச்சம்பந்தத்தினை யறிதற்கேதுவான சப்தத்திற்குத் தன் அர்த்தத்திலுண்டாம் பிரவிருத்தி எதுவோ அதுவும் சப்தத்திற்கு அர்த்தத்தோடுள்ள சம்பந்தமெனப்படுகிறது. அந்தப் பிரவிருத்திவடிவ சம்பந்தத்தினையே சப்தத்தின் விருத்தியென்றும் கூறுவர்.

அந்த விருத்திரூப சம்பந்தம் சில விடங்களில் சக்திரூபமாகிறது. சிலவிடங்களில் லக்ஷணாரூபமாகிறது. இதனைப் பிரசங்கத்தினால் அறிந்துகொள்க.

1. சாஸ்திரத்தில் விருத்தியென்பது அந்தக்கரணத்தின் அல்லது அவித்தையின் பரிணாமத்திற்குமாம்.
2. அவ்வாறே இருப்பதின் பெயரும் விருத்தியாம்.
3. அவ்வாறே பிழைப்பிற்கும் விருத்தியென்று பெயர்.
4. அவ்வாறே பிராணன்களது செய்கைக்கும் விருத்தியென்று பெயர்.
5. அவ்வாறே ஓர் வியாகரணத்தின் பிரிவிற்கும் விருத்தியென்று பெயர்.

அவற்றுள் எதுவும் இங்கு விருத்தியென்னும் சொல்லிற்குப் பொருளெனக் கொள்ளத்தக்கதில்லை. ஆனால் சப்தத்திற்கு அர்த்தத்தோடுள்ள சம்பந்தம் எதுவோ அது இங்கு விருத்திசப்தத்திற்குப் பொருளெனக் கொள்ளத்தக்கதாம்.

இச்சப்தத்தினது விருத்தியின் வர்ணனம் வேதஸ்துதியின் ஸார்வயார்த்ததீபிகையிலும் விருத்திரத்நாவலியிலும் எழுதப்பட்டிருக்கிறது.

*சக்திவிருத்தி; மற்றையது †லக்ஷணாவிருத்தி. அவற்றின் அர்த்தத்தை விவேகத் (லக்ஷணத்) தோடு கேட்பாயாக.

---

* சப்தத்திலுள்ள தன் அர்த்தத்தையறிவிக்கும் சாமர்த்தியம் சப்தத்தின் சக்தி (ஆற்றல்) எனப்படும்.

அந்தச்சக்திவிருத்தி இரண்டுகபாலங்களின் இடையிலுள்ள கபாலசையோகத்தினைப்போலும், காரியகாரணங்களின் மத்தியிலிருக்கும் சமவாயசம்பந்தம் அல்லது தாதாத்மியசம்பந்தம்போலும் சப்தம் அர்த்தமென்னும் இரண்டற்கும் மத்தியிலிருக்கிறது. ஆதலால் அந்தச்சக்தி சப்தத்துக்கு அர்த்தத்தோடுள்ள சக்திவிருத்திவடிவ சாக்ஷாத் சம்பந்தமாகச் சொல்லப்படுகிறது.

இந்தச் சாக்ஷாத் சம்பந்தரூப சக்திவிருத்தி 1. யோகம் (காரணம்) 2. ரூடி (இடுகுறி) 3. யோகரூடி (காரணஇடுகுறி) என மூவகையாம்.

1. எந்தச் சப்தத்தில் தன் அவயவங்களுடைய யோகமாகிய சேர்க்கையினால் அர்த்தஞானமுண்டாக்கும் சாமர்த்தியமிருக்கிறதோ அந்தச் சப்தத்துக்குத் தன் அர்த்தத்துடன் யோகசக்திரூப சம்பந்த மிருக்கின்றது. அதுவே சப்தத்தின் யோகவிருத்தி எனப்படுகின்றது. எங்ஙனம்: பாதரக்ஷை யென்னும் பதத்தில் பாதம் ரக்ஷையென்னும் இரண்டு அவயவங்களுண்டு. அவற்றின் சேர்க்கையால் பாதத்தை முட்களினின்றும் காப்பாற்றும் செருப்பு, ஜோடு, கட்டையென்னும் அர்த்தஞானமுண்டாகிறது. ஆகையால் பாதரக்ஷையென்னும் சப்தத்துக்கும் பாதத்தைக் காப்பாற்றுவதென்னும் அதன் அர்த்தத்திற்கும் யோகசக்திரூப சம்பந்தமிருக்கிறது.

2. எந்தப்பதத்தின் அவயவங்களால் அர்த்தஞானமுண்டாகிறதில்லையோ, ஆனால் "இப்பதத்திற்கு இதுவே பொருள்" என்று பொருள்செய்யும் சங்கேதம் (பரிபாஷை எந்தப்பதத்திலிருக்கிறதோ, அந்தப்பதத்துக்குத்)தன் அர்த்தத்தோடு ரூடிசக்திரூப சம்பந்தமிருக்கிறது. அதுவே சப்தத்தின் ரூடிவிருத்தி எனப்படுகிறது. எங்ஙனம்: பாகையென்னும் பதத்தில் அதன் அவயவத்தினின்றும் யாதொரு அர்த்தஞானமுமுண்டாகிறதில்லை. ஆனால் பாகையென்னும் பதத்தினால் தலையிற் சுற்றுதல்வடிவ அர்த்தம் உலகத்தில் சங்கேதத்தால் விளங்குகிறது. அந்தப் பாகையெனும் சப்தத்திற்குத் தலையிற்சுற்றுதலாகிய தன் அர்த்தத்துடன் ரூடிசக்திரூபசம்பந்தம் இருக்கிறது.

3. எந்தப் பதத்திற்கு அவயவங்களாலும் அர்த்தமுண்டாகிறதோ உலகத்தாரின் சங்கேதமுமதிலிருக்கிறதோ அந்தப்பதத்திற்குத் தன் அர்த்தத்துடன் யோகரூடி யெனும் இருவடிவ சக்தியிருக்கின்றது. எங்ஙனம்: அங்கரக்ஷை யெனும் பதத்தில அங்கம் ரக்ஷையென இரண்டு அவயவங்கள் இருக்கின்றன. அவற்றின் சேர்க்கையால் சட்டை என்னும் அர்த்தஞானமுண்டாகிறது. பாதமாகிய அங்கத்தை ரக்ஷிக்கும் "பாதரக்ஷையினை அங்கரக்கை என்று சொல்லலாகாது. ஆனால் இச் சட்டையினையே அங்கரக்கையென்று சொல்லவேண்டும்." என்று இவ்வங்கரக்கை சப்தத்தில் உலகத்தாரின் சங்கேதமுமிருக்கிறது. ஆதலால் அங்கரக்கை யென்னும் பதத்தில் தனது அர்த்தத்தோடுள்ள யோக ரூடி உபயவடிவ சக்திமய சம்பந்தமிருக்கிறது.

சப்தத்தின் மூவகைச் சக்திவிருத்தி எதுவோ அதனை முக்கியவிருத்தி யென்றும் கூறுவர்.

† 1. சப்தத்தின் சக்திவிருத்திரூப சம்பந்தத்தால் அறியப்படுகிற சப்தத்தின் சாக்ஷாத் சம்பந்தமுடைய அர்த்தம் சக்கியார்த்தம் எனப்படும்.

2. இந்தச்சக்கியார்த்தத்தின் சம்பந்தியாயும் சொல்லுவோனுடைய தாற்பரியத்துக்கு விஷயமாயுமிருக்கிற வேறு அர்த்தத்தில் சப்தத்துக்குள்ள பரம்பராசம்பந்தமெதுவோ அது சப்தத்தின் லக்ஷணா விருத்தி எனப்படும்.

## 410. நியாயக்கிரமமான சக்திலக்ஷணம்
## (ஈசுவரேச்சை)
### சக்திலக்ஷணம்.

இந்தக் கடபதத்தைக் கேட்கவே இந்த எல்லாக் கலசரூபப் பொருள்ஞானம் எல்லோருக்கும் உண்டாகுக என்பது ஈசுவர இச்சை. இதனை நியாய சாஸ்திரத்தில் சக்தி யென்பர்.

---

3. அந்த லக்ஷணாவிருத்தியால் அறியப்படுமியல்புடையதாய்ச் சப்தத்திற்குப் பரம்பரையாய்ச் (சக்கியார்த்தவாயிலாக) சம்பந்தமுடைய அர்த்தம் எதுவோ, அது சப்தத்தின் லக்ஷியார்த்த மெனப்படும்.

1. பிதாவென்னும் சொல்லினது சக்திவிருத்திவடிவ சாக்ஷாத் சம்பந்தம் ஜநகனாகிய அர்த்தத்தோடு இருக்கின்றது. ஆதலால் பிதா சப்தத்திற்குச் சக்திவிருத்திவடிவ சம்பந்தத்தாலறியப்படுமியல்புடைய பிதாவென்னும் சொல்லின் சாக்ஷாத் சம்பந்தமுடைய ஜநகனாகிய அர்த்தம் எதுவோ அது பிதாவென்னும் சொல்லின் சக்கியார்த்த மெனப்படும்.

2. அச்சநகவடிவ சக்கியார்த்த சம்பந்தியாய் ஓர் பெருநாளில் "எல்லோருக்கும் முதலில் பிதாவினிடத்து நமஸ்காரஞ்செய்யென்று பௌத்திரனை நோக்கிப் போதிக்கிறவனாகிய சொல்லும்புருஷனது தாற்பரியத்திற்கு விஷயமாகின்ற பிதாமகன் (பாட்டன்) வடிவ வேறுபொருள் எதுவோ அதிலுள்ள பிதாவென்னும் சொல்லின் பரம்பரைச் சம்பந்தம் பிதாவென்னும் சொல்லின் லக்ஷணாவிருத்தியாம்.

3. அந்த லக்ஷணாவிருத்தியால் அறியப்படும் இயல்புடையதாய்ப் பிதாவென்னும் சொல்லிற்குப் பரம்பரையாக (ஜநகவடிவ சக்யார்த்தவாயிலாக)ச் சம்பந்தமுடையதான பிதாமகன் என்னும் பொருள் எதுவோ அது பிதாவெனனும் சொல்லின் லக்ஷ்யார்த்தமாம்.

எவ்வர்த்தத்தோடு எதற்கு நேர் சம்பந்தமில்லாமல் ஒன்றன்வாயிலாகச் சம்பந்தமிருக்கின்றதோ அவ்வர்த்தத்தோடு அதற்குப் பரம்பரைச்சம்பந்தம் சொல்லப்படுகின்றது.

பௌத்திரனாகிய மூன்றாவது புருஷனுக்குப் பிதாமகனாகிய முதற்புருஷனோடு சாக்ஷாத் சம்பந்தம் (ஜந்யஜநகபாவசம்பந்தம்) இல்லை. ஆனால் புத்திரனுக்குத் தனது பிதாவோடு சம்பந்த (ஜந்யஜநகபாவ) மிருக்கின்றது. பிதாவிற்குப் பிதாமகனோடு சம்பந்தமிருக்கின்றது. ஆதலால் பௌத்திரனுக்குப் பிதாமகனோடு பிதாவின் வாயிலாகச் சம்பந்தமிருக்கின்றது. அது பரம்பரைச் சம்பந்தமாம்.

அங்ஙனமே சப்தத்திற்குத் தனது சாக்ஷாத் சம்பந்தியாகிய சக்கியார்த்தத்தினும் வேறான சக்கியார்த்த சம்பந்தி எதுவோ அதனோடு சாக்ஷாத் சம்பந்தமில்லை. ஆனால் சப்தத்திற்குச் சக்திரூபசம்பந்தம் சக்தியார்த்தத்தோடிருக்கின்றது. சக்கியார்த்தத்திற்குச் சையோகமுதலியவடிவ யாதேனும் ஓர்வகைச் சம்பந்தம் வக்தாவி (சொல்லுவோ)னது தாற்பரியத்தின் விஷயவடிவ தனது சம்பந்தியாகிய வேறு பொருளோடிருக்கின்றது. ஆதலால் அச்சக்கியசம்பந்தியான வேறுபொருளோடு சப்தத்திற்குச் சக்கியார்த்தவாயிலாகச் சம்பந்தமிருக்கின்றது. ஆதலால் அது பரம்பரைச் சம்பந்த மெனப்படும்.

இச்சப்தத்தின் பரம்பரைச் சம்பந்தமே இலக்ஷணாவிருத்தியாம். அச்சப்தத்தின் பரம்பரைச் சம்பந்தம் எவ்வர்த்தத்தோடுண்டாகின்றதோ அது சப்தத்தின் லக்ஷியார்த்தமாம். இவ்வாறு லக்ஷணாவிருத்தியின் சாமானியலக்ஷணமும் உதாரணமும் சொல்லப்பட்டன. இதன் விட்டலக்ஷணைமுதலிய மூவகைப் பேதத்தின் அநேகஉதாரணங்கள்மேல் 430-வதுமுதல் 432-வது இலக்கபரியந்தமான மூவகை இலக்ஷணையின் பிரசங்கத்து டிப்பணத்தில் எழுதப்படும்.

## 411. சித்தாந்தத்தின்படி சக்திலக்ஷணம். (பதத்திலுள்ள அர்த்தஞானத்தையுண்டுபண்ணும் சாமர்த்தியம்.)

1. கட பதத்தைக் கேட்கிறவனுக்குக் கலசரூபப் பொருளின் ஞானத்தையுண்டுபண்ணும் கடபதத்திலுள்ள சாமர்த்தியமே கடபதத்திற் சக்தியாம்.

2. அதுபோலப் படபதத்தைக் கேட்கிறவனுக்கு வஸ்திரரூபப் பொருளின் ஞானமுண்டுபண்ணும் படபதத்திலுள்ள சாமர்த்தியமே படபதத்திலுள்ள சக்திவிருத்தியாம்.

இப்படியே எல்லாப் பதங்களிலும் அறியவேண்டியது.

திருஷ்டாந்தம்:—நெருப்பில் தன்னோடுசேரும் பதார்த்தத்தைத் தகிக்கும் சாமர்த்தியரூபசக்தி இருக்கிறதுபோல், சுரோதாவின் கர்ணேந்திரியத்துடன் சேரும் வஸ்துவின் ஞானத்தை யுண்டுபண்ணும் பதத்திலுள்ள சாமர்த்தியம் சக்தி யெனப்படும்.

சாமர்த்தியம், பலம், வலி, ஆற்றல் என்பன பரியாயபதங்கள்.

அக்கினியில் தகிக்கிற சக்தி இருக்கிறதுபோல் ஜலத்தில் நனைக்கிற சாமர்த்தியமும் தாகத்தைத் தணிக்கும் சாமர்த்தியமும் பொடிகளைத் திரட்டும் சாமர்த்தியமும் உண்டு. அச்சாமர்த்தியமே சக்தி யெனப்படும்.

இவ்விதமாக எல்லாப் பதார்த்தங்களிலும் தன் தன் காரியத்தைச் செய்யும் சாமர்த்தியமிருக்கிறது. அதுவே சக்தியாம். இது வேதத்தின் சித்தாந்தம். இதனை நிச்சயமாய் மனதிற்கொள்ளுவாயாக. நியாயசித்தாந்தம் தள்ளத்தக்கதாம்.

## 412. பிரசினம்:—வர்ணசமுதாயத்தினும் வேறாகச் சக்தியில்லையாகலின் ஈசனது இச்சை சக்தியாமெனல்.

அப்படியானால் அக்கினியில் அதன் சொரூபத்துக்கு வேறாகச் சக்தி காணப்படுகிறதில்லை. தகிப்பதற்கேதுவான அக்கினியிலுள்ள சாமர்த்தியமே அக்கினியில் சக்தியென்று முன் சொன்னது பொருந்தாது. ஏனெனின், தாகத்திற்குக் காரணமாந்தன்மை கேவலம் அக்கினியிற்றானிருக்கிறது. பிரசித்தமல்லாத சாமர்த்தியம் அக்கினியில் இருக்கிறதாகக்கொண்டு அதில் காரணத்தன்மையைக் கற்பித்தலாலும் பிரசித்தமான அக்கினியிலுள்ள காரணத்தன்மையை விடுதலாலும் ஒரு பிரயோஜனமுமில்லை. எப்படித் திருஷ்டாந்தத்தில் சக்தி சம்பவிக்கவில்லையோ அப்படியே பதத்தினிடத்திலும் அக்ஷர சமுதாயமாகிய பதத்தின் ஸ்வரூபத்துக்கு வேறாகச் சக்தி விளங்குகிறதில்லை. அச்சக்திக்குப் பிரயோஜனமுமில்லை. ஆதலால் ஈசுவர இச்சாரூபமான நியாயமதத்திற் சொல்லிய சக்தியே என் புத்திக்கு ஒத்திருக்கிறது.

(முற்கேட்ட பிரசினத்தின் உத்தரம் 413-427.)

**413.** சித்தாந்தத்தின்படி அக்கினி முதலியவற்றில் தாக முதலிய காரியத்தையுண்டுபண்ணும் சாமர்த்தியவடிவ சக்தியுண்டென்று கூறல் 413-414.

குருவானவர் சொல்லுகின்றார்.

நண்பனே, பிரதிபந்தம் (தடை)களுள்ளபோது நெருப்பினால் தாகமுண்டாகிறதில்லை. உத்தேஜகம்(மாற்று)கள் சமீபத்தில் இருந்தால் நெருப்புடன் சேர்ந்த பதார்த்தம் பிரதிபந்தமுள்ளபோதும் எரிக்கப்படுகிறது. சக்தியின்றிக் கேவலம் அக்கினியே தகித்தற்குக்காரணமாமாயின், எப்போதும் அதாவது உத்தேஜகத்தோடுகூடிய பிரதிபந்தங்களிருக்கும்போதும்,பிரதிபந்தகமில்லாத காலத்திற்போல உத்தேஜகங்களில்லாது பிரதிபந்தங்களிருக்கும்போதும் தாகமுண்டாதல்வேண்டும். ஏனெனின், எரிக்குங்காரணமான கேவலம் அக்கினி அக்காலத்திலும் இருக்கிறது. எம்முடைய மதத்திலோ இந்தத் தோஷமில்லை. ஏனெனின், எம்முடைய மததில் அக்கினியின் சக்தி அல்லது சக்தியோடுகூடிய அக்கினி எரிதற்கு ஹேதுவாயிருக்கிறது. கேவலம் அக்கினி ஹேதுவன்று.

பிரதிபந்தமிருக்குமிடத்துப் பிரதிபந்தத்தால் அக்கினிக்கு நாசம் அல்லது திரோதானம் (மறைவு) உண்டாகாவிடினும், அக்கினியின் சக்திக்கு நாசமாவது அல்லது மறைப்பாவது உண்டாகிறது. ஆதலால் எரிப்பதற்கேதுவான சக்தி அல்லது சக்தியோடுகூடிய அக்கினி இல்லாததினால் தாகமுண்டாகிறதில்லை.

எவ்விடத்தில் பிரதிபந்தத்துக்குச் சமீபத்தில் உத்தேஜகம் வந்திருக்கிறதோ அவ்விடத்தில் பிரதிபந்தகமானது அக்கினியின் சக்தியை நாசமாக்கிவிட்டது அல்லது மறைத்துவிட்டது. ஆனால் உத்தேஜகம் மறுபடியும் சக்தியை உண்டாக்குகிறது அல்லது வெளிப்படுத்துகிறது. ஆதலால் பிரதிபந்தங்களிருந்தும் உத்தேஜகங்களுடைய மகிமையால் எரிக்குஞ்சக்தி அல்லது சக்தியோடு கூடிய அக்கினியிருத்தலால் தாகமுண்டாகிறது.

இவ்விதமாகப் பிரதிபந்தத்தால் நாசமடைவதும் உத்தேஜகத்தாலுண்டாவதுமான அக்கினியின் சக்தி தாகத்திற்கு ஏதுவாயிருக்கிறது.

1. காரியத்துக்கு விரோதமாயிருப்பது பிரதிபந்தமெனப்படும்.

2. பிரதிபந்தகமிருக்கக் காரியத்துக்குச் சாதகமாயிருப்பது உத்தேஜகமெனப்படும்.

1. அக்கினிஸ்தானத்தில் பிரதிபந்தகமும் உத்தேஜகமும் மணிமந்திர ஔஷதங்களாம்.

எந்த மணி அல்லது மந்திரம் அல்லது ஔஷதம் சமீபத்தில் இருத்தலால் தாகமுண்டாகிறதில்லையோ அது பிரதிபந்தகமாம்.

2. எந்த *மணிமந்திரஔஷதங்களின் சன்னிதானத்தால் பிரதிபந்தங்களிருக்கவும் தாகமுண்டாகிறதோ அது உத்தேஜகமாம்.

**414.** சிஷ்யனே! அக்கினியிற்போல் ஜலமுதலிய சகலபதார்த்தங்களிலுமுள்ள சக்தியை நீ யறி. சக்தியின்றி எந்த ஹேதுவினாலும் எக்காரியமுமாகிறதில்லை.

இவ்விதமாகச் சக்தியின் பிரயோஜனஞ் சொல்லப்பட்டது.

"அக்கினிக்கு வேறாகச் சக்தி காணப்படவில்லை" யென்று முன் சிஷ்யன் கேட்டகேள்விக்குச் சமாதானஞ்சொல்லுவதற்காகச் சக்தியின் அநுபவத்தைக் காட்டுவோம்:—

இப்போது (தடையுள்ளபோது) இதில் (பிரகாசிக்கின்ற நெருப்பில்) சக்தி (தாகசாமர்த்தியம்) இல்லை. மறுபடியும் உத்தேஜகமிருக்குங்காலத்து அந்தவேறு சக்தியுண்டாகின்றது. இந்தச் சக்தியின் பிரசித்த அநுபவம் டகாராதார்முதலியோரது விநோதத்தைப் பார்ப்பவர்களெல்லோருக்கும் இருக்கின்றது. அந்த உலகாநுபவத்தைச் சிஷ்யனே! நீ எந்த இடத்தில் மறைப்பாய். அநுமிதிப்பிரமைவடிவ இவ்வநுபவத்தினை எவ்விதத்தாலும் கெடுக்கமுடியாது.

சித்தாந்தத்தின்படி சக்தியின் சொரூபமும் பிரமாணமும் நிரூபணஞ் செய்யப்பட்டன.

## 415. அந்நியமதங்களின் சக்தியைக்கண்டித்தல் 415-427.

†பதசக்தி ஈசுவரனது இச்சாரூபமென்று சொன்னது பொருந்தாது. ஏனெனின் ஈசுவரனுடைய இச்சை ஈசுவரனுடைய தர்மமாம். ஆதலால் அது ஈசுவரனிடத்திலிருக்கிறது. ஆகையால் ஈசுவரனிடத்துள்ள இச்சையே பதசக்தியென்று சொல்லுவது பொருந்தாது. சக்தியானது பதத்தின் தர்மமாயின் பதத்தின் சக்தியென்று சொல்லக்கூடும். ஆதலால் பதத்தின் சாமர்த்திய

---

*இங்குப் பிரதிபந்தவடிவ எந்த மணிமந்திர ஔஷதங்கள் உளவோ அவற்றால் எந்த அக்கினியின் தாகஞ்செய்யும் சக்தியின் நாசம் அல்லது மறைப்பு உண்டாகிறதோ, அத்தன்மைய உத்தேஜகவடிவ மணிமந்திர ஔஷதங்கள் எவையோ அவற்றால் எந்த அக்கினியின் சக்தியினது உற்பத்தி அல்லது வெளிப்படுதல் உண்டாகிறதோ அது டகாராதார் முதலியோரிடத்துப் பிரசித்தம்.

†நையாயிகன் பதசக்தி அதாவது பதத்தின் சக்தி சொல்லியிருக்கிறான்.

ரூபமே பதத்தின் சக்தியாம். ஈசுவரனுடைய † இச்சை பதத்தின் சமீபத்திலுமில்லை. அதைப் பதத்தின் சக்தியென்று சொல்லுதல் பொருந்தாது.

## 416. வையாகரண முறைப்படி சக்திலக்ஷணம் (பதத்திலுள்ள அர்த்தத்தின் யோக்கியதை).

பதத்தினிடத்திலுள்ள அர்த்தத்தின் யோக்கியதை அதாவது பதார்த்த ஞானமுண்டாக்கும் ஹேது எதுவோ அவ்வேதுத்தன்மை பதத்தில் சக்தியாம். கடபதத்தில் கலசரூப அர்த்தஞானத்திற்கு ஏதுவாந்தன்மையாகிய யோக்கியதையிருக்கிறது. அதுவே சக்தியாம். இது வையாகரணபூஷணக் கிரந்தத்தில் ‡ ஹரியின் காரிகையை மேற்கோளாகக் கொடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அல்லது வையாகரணபூஷணமாதலால் அதாவது உத்தமவையாகரணமாதலால் ஹரியின் காரிகையை (சுலோகத்தை)ப் பார்த்துச் § சொல்லுகிறது.

## 417. வையாகரணமதக்கிரமமான சக்தியின்கண்டநம் 417-418. குருவாக்கியம்.

சிஷ்யனே! வையாகரண மதத்தில் ஒரு பிரபலமான தோஷமிருக்கிறது. அதைக் கேள். அர்த்தஞானத்திற்கு ஏதுவாந்தன்மைவடிவ யோக்கியதை

† ஈசுவரனது இச்சை ஈசுவரனது தர்மமாம். ஆதலால் அது ஈசுவரனது ஆசிரிதமாயிருத்தலால் (ஈசுவரனதுசமீபமாயிருக்கிறது. இதனாலேயே அது ஈசுவரனது சம்பந்தியாயிருத்தலால்) ஈசுவரனது சக்தியாம். அவ்விச்சை கடாதிபதங்களின் தர்மமன்று. ஆதலால் பதங்களின் சமீபத்திலில்லை. இதனாலேயே பதங்களின் சம்பந்தமில்லாததாயிருத்தலால் அது பதங்களின் சக்தியன்று. எங்ஙனம்: குலாலனுக்குக் கடத்தைச் செய்யவேண்டுமென்னும் இச்சையிருக்கிறது. அது குலாலனது தர்மமாம்; கடத்தின் தர்மமன்று. அதுபோல "இந்த (கட)பதத்திற்கு இந்த (கலச வடிவ) அர்த்தமுண்டாகிறது" என்னும் சங்கற்பத்தை முன்னிட்ட ஈசுவரனது இச்சை எதுவோ, அதனால் அது ஈசுவரனை யாசிரயித்த தர்மமாம்; இதனால் ஈசுவரனது சக்தியாம்; பதங்களின் தர்மமன்று. ஆதலால் அது பதங்களின் சக்தியன்றெனவறிக.

‡ ஹரியின் காரிகையென்றது ஹரிபண்டிதராற்செய்யப்பட்ட ஏறக்குறைய 700 சுலோகமுள்ள வியாகரணநூல். அவ்வடிவப் பிரமாணத்தினை எழுதி வையாகரணபூஷண மென்னும் நூலில் சக்தி சொல்லப்பட்டிருக்கிறது.

§ இது வையாகரணபூஷணகாரர் மதம். மஞ்சூஷாகிரந்தத்தில் யோகபாஷியத்தின்படி வாச்சியவாசகத் தன்மைகளுக்குக் காரணமாகிய சொல்லிற்கும் பொருளிற்குமுள்ள தாதாத்மிய சம்பந்தமெதுவோ, அதுவே சக்தியென்று கொண்டிருக்கின்றனர். இச்சக்தியினையே யோகமதத்திலும் கொண்டிருக்கிறார்கள். அவ்வாச்சிய வாசகங்களின் தாதாத்மியவடிவ சக்தியின் கண்டநம் மேல் பட்டமதப்பிரசங்கத்திற் செய்யப்படும்.

யைச் சக்தியென்று சொல்லும் வையாகரணியை உன்னுடைய மதத்தில் பதத்திற் சாமாத்தியமிருக்கிறதா? இல்லையா? என்று கேட்கவேண்டும். சாமர்த்தியமிருக்கிறதென்னும் முதறபக்ஷத்தைக் கூறின் நமமுடைய மதத்தின் சக்திவாயிலாற் சித்திக்கிறது. வையாகரணி பதத்தில் சாமர்த்தியமிருக்கிறதாகச் சொல்லும்பக்ஷத்தில் இந்த லோகப்பிரசித்த சாமர்த்தியரூப சக்தியினையே பதசக்தியாகக் கொள்ளவேண்டும். பதத்தில அர்த்தஞானத்தையுண்டுபண்ணுந்தன்மையான யோக்கியதை சக்தியாகக் கொள்ளலாகாது.

இதன் கருத்தென்னவெனில், எவன் பதத்தில் ஒரு சாமர்த்தியத்தை யங்கீகரிக்கின்றானோ, அவனுக்கு அச்சாமர்த்தியத்திற்கு வேறாகச் சக்தியைக் கொள்வது தகுதியன்று. சாமர்த்தியரூபமே சக்தியெனக்கொள்வது தகுதியாம். ஏனெனின் சாமர்த்தியம், பலம, வலி, ஆற்றல், சக்தி இவ்வைந்தும் ஒரே வஸ்துவுககுப் பெயர் என்பது லோகத்திற பிரசித்தம.

ஆற்றலில்லாதவனை உலகத்தில் பலமில்லாதவனென்றும் அல்லது சாமர்த்தியமில்லாதவன் என்றும வலியிலலாதவன் என்றும அல்லது சக்தியில்லாதவன் என்றும்சொல்லுகிறார்கள். அன்றியும் வறுக்கப்பட்ட விதையைப் பார்த்து இதில் முளைக்கும்படியான சாமர்த்தியமில்லை. பலமில்லை, சக்தியில்லை, வலியில்லை, அல்லது ஆற்றலில்லையென்று சொல்லுகிறார்கள்.

இவ்விதத்தால் சாமர்த்தியமும் சக்தியுமொன்றென்பது லோகப்பிரசித்தம்.

அக்கினியிலும சாமர்த்தியரூபமே சக்தியென்பது நிச்சயிக்கப்பட்டதாம். ஆதலால் பதத்திற்ச் சாமர்த்தியரூபமே சக்தியென்று கொள்ளுவது யுக்தம். பதத்தில் சாமர்த்தியத்தை யங்கீகரித்து அதற்கு வேறான யோக்கியதையைச் சக்தியாகக் கொள்வது உலகவழக்கிற்கு விரோதமேயல்லாமல் வேறு பயனிலலை. கேவலம் உலகப்பிரசித்தியின் விரோதமே பயனும.

**418.** சாமர்த்தியத்தினையே யாம் யோக்கியதையாகக் கொள்ளுகின்றோமென்று வையாகரணி சொல்லும்பக்ஷத்தில் நம்முடைய மதமே சித்திக்கிறது.

சாமர்த்தியத்தை யங்கீகரித்தாற் சாமர்த்தியரூபசக்தி பதத்திலிருக்கக்கூடும். அச்சாமர்த்தியத்தை நாம் அங்கீகரிக்கிறதேயில்லை. ஆதலால் அர்த்தஞானத்தை யுண்டுபண்ணும்வடிவினதாகிய யோக்கியதையே பதத்தில் சக்தியாமென்று வையாகரணி சொல்லும்பக்ஷத்தில் அவனை இது கேட்கவேண்டும்:—

சாமர்த்தியமின்மையைக் கேவல பதத்திலேயே அங்கீகரிக்கிருயா? அல்லது நெருப்புமுதலிய சகல பதார்த்தங்களிலும் அங்கீகரிக்கிருயா?

இரண்டாவது பக்ஷத்தைக் கூறின், நெருப்பு முதலிய பதார்த்தங்களில் சாமர்த்தியரூப சக்தி யிருப்பதாகப் பிரதிபாதித்தலிற் சொன்ன யுக்தியால் இந்த ஆக்ஷேபங்கண்டிக்கப்படுகிறது.

முதற்பக்ஷத்தைக் கூறின் அதில் இரண்டாவது பக்ஷத்திற் கூறியதோஷமில்லை. ஏனெனின், அக்கினிமுதலிய சர்வபதார்த்தங்களிலும் சாமர்த்தியவடிவ சக்தி ஒப்பாவிடின், பிரதிபந்தகத்தால் தாகமின்மை யுண்டாகலாகாது. இது இரண்டாவது பக்ஷத்தில் தோஷமாம். அந்தத் தோஷம் முதற்பக்ஷத்திலில்லை. ஏனெனின், நெருப்பு முதலிய சர்வபதார்த்தங்களிலுமோ சாமர்த்தியவடிவசக்தி யிருக்கிறது. ஆதலால் பிரதிபந்தகத்தினுல் தாகத்தினின்மை சம்பவியாதெனல் இல்லை. ஆனுல் பதத்தில் அர்த்தஞானத்தை யுண்டுபணணுந்தன்மைவடிவ யோக்கியதைக்கு வேறுன சாமர்த்தியவடிவ சக்தியில்லை. ஆனுல் பதத்தில் அர்த்தத்தின் யோக்கியதையே சக்தியாமென்பது முதற்பக்ஷம். அதில் பிரதிபந்தத்தால் தாகம் சம்பவியாமைவடிவதோஷமோ இல்லை.

அங்ஙனமாயினும், பதத்திலும் வந்த்யினைப்போலச் சாமர்த்தியத்தினை அவசியம் கொள்ளவேணடுமென்பதனைச் சொல்லுகின்றுர்:—பதத்தில் சாமர்த்தியத்தின் அங்கீகாரமில்லையாயின், சாமர்த்தியமில்லாத பதம் யோக்கியமாம் அதாவது அர்த்த ஞானத்தை யுண்டுபண்ணுவதாம் என்பது மதத்தின் நிச்சயமாம். அது அசங்கதம். ஏனெனின், பதம அசமர்த்தம் அர்த்த ஞானத்தையுண்டுபண்ணத்தக்கதென்று சொல்லுவது நபும்சகனுக்கு அமோகவீர்யமிருக்கிறதென்று சொல்லுவதுபோல் சொல்லும்பொழுதே விரோதமுடையதாயிருக்கிறது.

1. சாமர்த்தியத்தோடுகூடியது சமர்த்தமாம்.

2. சாமர்த்தியமில்லாதது அசமர்த்தமாம்.

அசமர்த்தத்தால் ஒரு காரியம் ஆகிறதில்லை யென்பது உலகப்பிரசித்தம். இதனுல் அசமர்த்தபதத்தினுலும் அர்த்தத்தின் ஞானமாகிய காரியம் பொருந்தாது. ஆதலால் பதத்தில் சாமர்த்தியத்தைக் கொள்ளுதல் தகுதியாம். சாமர்த்தியத்தைப் பதத்தில் அங்கீகரித்தால் அப்போது சக்தியும் பதத்தில் சாமர்த்தியவடிவமெனக் கொள்ளுதல் தகுதியாம்.

இவ்விதத்தால் அர்த்தஞானத்தை யுண்டுபண்ணுந்தன்மைவடிவ *யோக்கியதை பதத்திற் சக்தியன்று; ஆனுல் சாமர்த்தியரூபமே சக்தியாம்.

---

* வறுத்த விதையினைப்போலச் சாமர்த்தியமில்லாத பதத்தில் அர்த்தஞானத்தினை யுண்டுபண்ணுந்தன்மையு மின்மையால் அந்த யோக்கியதை பதத்திற் சக்தியன்று. ஆனுல் அந்த யோக்கியதை எந்தச் சாமர்த்தியத்தினுல் உண்டாகிறதோ, அச்சாமர்த்தியமே உலகப்பிரசித்த சக்தியாம்.

வையாகரண மதத்தில் வேறு தோஷங்களைப் பார்க்கவேண்டுமானால் சக்திநிரூபணத்தில் தர்ப்பணக்கிரந்தத்தைச் சோதிக்கவேண்டியது. தூஷணம் கடினமாயிருப்பதால் அக்கிரந்தத்தினிற் கூறியது இங்கு எழுதப்படவில்லை.

## 419. * பட்டர் மதப்படி சக்தி லக்ஷணம் 419-421.

### (பதத்திற்கு அர்த்தத்தோடு பேதாபேதவடிவ தாதாத்மியம்.)

பதத்திற்கு அர்த்தத்துடனுள்ள † தாதாத்மியசம்பந்தத்தைச் சக்தியென்று பட்டர் மதத்தை யனுசரித்தவர்கள் சொல்லுகிறார்கள். இதை நீ அறி. அந்தத் தாதாத்மிய சம்பந்தத்தைப் பேதாபேதரூபமென்று சொல்லுகிறார்கள். இது அவர்களுடைய அபிப்பிராயமாம்:—

1. அக்கினியென்னும் பதத்துக்கு நெருப்பு என்னும் அர்த்தத்தோடு அத்தியந்தம் பேதமில்லை. அத்தியந்தம் பேதமிருக்குமாயின், எப்படி அக்கினிபதத்தினும் அத்தியந்தம் பின்னமான ஜலமுதலியவைகள் இருக்கின்றனவோ அவை அக்கினியென்னும் பதத்தால் தோற்றுகிறதில்லையோ, அவ்வாறு அக்கினிபதத்தால் அக்கினிரூப அர்த்தமும் பிரதீதியாகாது. பதத்துக்கு அத்தியந்தம் பின்னமான அர்த்தம் பிரதீதியாகிறதில்லை.

2. பதத்துக்குத் தன்னர்த்தத்துடன் அத்தியந்தம் பேதம் இல்லாதது போல் அத்தியந்தம் அபேதமுமில்லை. அத்தியந்த அபேதம் வாச்யவாசகங்களுக்கிருந்தால் அக்கினிபதத்தின் வாச்யமான நெருப்பினால் முகம் சுடப்படுகிறதுபோல நெருப்பின் வாசகமான அக்கினிபதத்தை யுச்சரிப்பதனாலும் முகம் சுடப்படவேண்டும். ஆனால் பதத்தை யுச்சரிப்பதினால் முகம் சுடப்படுகிறதில்லை. ஆதலால் அத்தியந்த அபேதமுமில்லை.

ஆனால் அக்கினிபதத்துக்கு நெருப்புவடிவ அர்த்தத்துடன் பேதத்தோடுகூடிய அபேதமிருக்கிறது.

1. பேதமிருத்தலால் முகம் சுடப்படுகிறதில்லை.

2. அபேதமிருத்தலால் அக்கினியென்னும் பதத்தால் ஜலமுதலியவற்றைப்போல நெருப்பின் பிரதீதியுண்டாகாமலிருக்கிறதில்லை.

---

* சங்கரதிக்விஜயத்தில் குமாரிலபட்டரென்றும் பட்டபாதரென்றும் சொல்லப்பட்டவரும், மண்டனமிசிர பிரபாகரர்களுடைய குருவாயிருப்பவரும் ஜைமினியால் செய்யப்பட்ட பூர்வமீமாம்சைக்கு வார்த்திகம் செய்தவரும் எவரோ அவர் இவ்விடத்தில் பட்டரெனப்படுகின்றார்.

† தாதாத்மிய சம்பந்த லக்ஷணம் பின் வருதல் காண்க.

எப்படி அக்கினிபதத்துக்கு நெருப்புவடிவ அர்த்தத்துடன் பேதசகித அபேதமிருக்கிறதோ, அப்படியே உதகம், வனம், நீர், ஜீவனம் என்னும் பதங்களுக்கு ஜலரூப அர்த்தத்துடன் பேதசகித அபேதமிருக்கிறது.

1. அத்தியந்தம் பேதம் இருந்தால் எப்படி உதகமுதலிய பதங்களுக்கு அத்தியந்தம் பின்னமாயுள்ள அக்கினிமுதலியவைகள் உதக முதலிய பதங்களால் பிரதிதியாகிறதில்லையோ, அப்படியே ஜலரூப அர்த்தமும் உதகமுதலியபதங்களால் பிரதிதியாகாது. அதனால் அத்தியந்தம் பேதமில்லை.

2. அத்தியந்தம் அபேதமுமில்லை. அத்தியந்த அபேதமிருந்தால் ஜலத்தால் முகத்தில் குளிர்ச்சியுண்டாகிறதுபோல் உதகமுதலிய பதங்களை யுச்சரிப்பதனாலும் முகத்தில் குளிர்ச்சியுண்டாகவேண்டும். ஆனால் பதத்தினால் குளிர்ச்சியுண்டாகிறதில்லை. ஆதலால் அத்தியந்த அபேதமில்லை.

ஆனால் பேதசகித அபேதமிருப்பதால் இரண்டு தோஷங்களுமில்லை.

இவ்விதத்தால் எங்கும் தத்தம் வாச்சியங்களுடன் வாசகபதங்கட்குப் பேதசகித அபேதமிருக்கிறது. அந்தப் பேதசகித அபேதத்தினையே பட்டரையனுசரித்தவர்கள் தாதாத்மியசம்பந்தமென்று சொல்லுகிறார்கள். பேதாபேதமென்றும் சொல்லுகிறார்கள். அந்தப் பேதாபேதரூப தாதாத்மியசம்பந்தமே சகலபதங்களிலுமுள்ள தத்தம் அர்த்தத்தைக்கொடுக்குஞ்சக்தியாம். தாதாத்மிய சம்பந்தத்துக்கு வேறாகச் சாமர்த்தியரூப சக்தி இல்லை. பேதாபேதத்தில் யுக்தி சொல்லப்பட்டது.

**420.** இனிப் பிரமாணத்தைச் சொல்லுவாம்:— மாண்டுக்கியமுதலிய வேதவாக்கியங்களில் "ஓம் அக்ஷரம் பிரஹ்ம"மென்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு வியாகரணத்தின்படி பிரகாசரூபமாய் எல்லாவற்றையுங் காப்பாற்றுவது ஓம் அக்ஷரத்தின் அர்த்தமாம். இத்தன்மையது பிரஹ்மம். ஆதலால் ஓம் அக்ஷரம் பிரஹ்மத்தின் வாசகமாம். பிரஹ்மம் வாச்சியமாம்.

1. வாச்சியவாசகங்களுக்குத் தம்மில் அத்தியந்தம் பேதமிருந்தால் வாசகமான ஓம் அக்ஷரத்துக்கும் வாச்சியமான பிரஹ்மத்திற்கும் மாண்டூக்கியாதி உபநிஷத்துக்களில் அபேதஞ் சொல்லப்பட்டிராது. "ஓம் அக்ஷரம் பிரஹ்ம"மென்று அபேதஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் வாச்சியவாசகங்களின் அபேதத்தில் வேதவசனம் பிரமாணமாம்.

2. எல்லா ஜனங்களின் உணர்ச்சியினாலும் வாச்சியவாசகங்களுக்குப் பேதஞ்சித்திக்கிறது. எப்படியெனின் அக்கினிமுதலிய பதங்கள் வாச்சி

யிருக்கின்றன. நெருப்புமுதலிய அவற்றின் அர்த்தங்கள் வாக்குக்கு வெளியில் அடுப்பு முதலியவிடங்களில் இருக்கின்றன. அதுபோல் ஓமென்னும் அக்ஷரரூப பதம் வாக்கிலிருக்கிறது. அதன் அர்த்தமாகிய பிரஹ்மம் வாக்கிலில்லை; ஆனால் வாக்கிற்கு வெளியில் அதாவது தன் மகிமையிலிருக்கிறது. பிரஹ்மம் வியாபகமாயிருத்தலால் வாக்கிற் பிரஹ்மத்தின் அபாவமில்லையெனினும், பிரஹ்மத்தில் வாக்கிருக்கிறதேயல்லாது வாக்கிற் * பிரஹ்மமில்லை. இவ்விதத்தால் பதம் வாக்கிலும் அர்த்தம் வாக்குக்கு வெளியிலும் எல்லோருக்கும் விளங்குகின்றன. ஆதலால் பதத்துக்கும் அர்த்தத்துக்கும் பேதம் லோகப்பிரசித்தமாம்.

1. இவ்விதத்தால் வாச்சியவாசகங்களின் பேதத்தில் சர்வலோகானுபவமும் பிரமாணமாம்.

2. அவற்றின் அபேதத்தில் வேதவசனம் பிரமாணமாம். ஆதலால் பதத்துக்கு அர்த்தத்துடன் பேதாபேதரூப தாதாத்மிய சம்பந்தம் அப்பிரமாணமன்று. ஆனால் பிரமாணசித்தமாம்.

**421.** பிரசங்கத்துக்கு அன்னியஸ்தானங்களிலும் பேதாபேத தாதாத்மிய சம்பந்தத்தைக் காண்பிப்பாம்:—

1. ரூபம் ரஸம் கந்தமுதலியவை குணங்களாம். அவற்றின் ஆசிரயம் குணியெனப்படும். அது ரூபாதிகளின் ஆசிரயமான பூமி குணியாயிருப்பதுபோலாம்.

2. அநேகங்களிலிருக்கிற ஒரு தர்மம் ஜாதியெனப்படும்.

எங்ஙனம்: எல்லாப்பிராமணசரீரங்களிலுமே ஒரு பிராமணத்துவமிருக்கிறது. எல்லாச் சூத்திரர்களிடத்திலுமே சூத்திரத்துவமிருக்கிறது. எல்லா ஜீவர்களிடத்திலுமே ஜீவத்துவமிருக்கிறது. புருஷர்களிடத்தில் புருஷத்துவம் இருக்கிறது. எல்லாக்கடங்களிலுமே கடத்துவமிருக்கிறது. உலகத்திலெதற்குப் பிராமணத்துவம், சூத்திரத்துவம், ஜீவத்துவம், புருஷத்துவம்,

* சொற்பதேசத்திலிருப்பது வியாப்பியமெனப்படும். அதிகதேசத்திலிருப்பது வியாபகமெனப்படும். எங்ஙனம்: கடம் சொற்பதேசத்திருத்தலால் வியாப்பியமாம். ஆகாசம் அதிகதேசத்திருத்தலால் வியாபகமாம்.

வியாப்பியம் வியாபகத்தினுள்ளும் வியாபகம் வியாப்பியத்துக்கு வெளியிலுமிருக்கின்றன. கடம் ஆகாசத்தினுள்ளேயேயிருக்கின்றது. ஆகாசம் கடத்தின் வெளியிலுமிருக்கின்றது. அவ்வாறே வாக்குப் பிரஹ்மத்தினும் சொற்பதேசத்திலிருத்தலால் வியாப்பியமாய்ப் பிரஹ்மத்தினுள்ளிருக்கிறது. பிரஹ்மம் வாக்கினும் அதிகதேசத்திலிருத்தலால் வியாபகமாய் வாக்குக்கு வெளியிலும் சொல்லப்படுகிறது.

கடத்துவமுதலியவற்றைச் சொல்லுகிறார்களோ அந்தப் பிராமணர் சூத்திரர் முதலிய சரீரங்களியே பிராஹ்மணத்துவமுதலிய ஜாதிகள் இருக்கின்றன; ஜாதிக்கு ஆசிரயமான பிராமணன் முதலியன வியக்தியெனப்படும்.

3. போதல் வருதல் முதலியவை கிரியைகளெனப்படும். அதனையுடையது அதாவது கிரியைக்காசிரய கர்த்தாவாம்.

இவ்வளவு பதார்த்தங்களுக்குத் தாதாத்மியசம்பந்தமிருக்கிறதென்பதை நீ யறிந்து காரணகாரியங்களைக் குணகுணியாதிகளிற் சேர்க்க.

அபிப்பிராயம் இதுவாம்:—

1. குணகுணிகட்குப்போலக் காரணகாரியத்திற்கும் தாதாத்மிய சம்பந்தமிருக்கிறது.

2. குணத்திற்கும் குணிக்கும் தம்மில் தாதாத்மிய சம்பந்தமிருக்கிறது.

3. ஜாதிக்கும் வியக்திக்கும் தம்மில் தாதாத்மிய சம்பந்தமிருக்கிறது. கிரியைக்கும் கிரியையுடையதற்கும் தாதாத்மிய சம்பந்தமிருக்கிறது.

4. அவ்வாறே காரணத்துக்கும் காரியத்துக்கும் தாதாத்மிய சம்பந்தமிருக்கிறது.

* தாதாத்மிய மென்பது பேதசகித அபேதமாம்.

நிமித்தகாரணத்துக்கும் காரியத்துக்கும் பேதாபேதரூப தாதாத்மியமில்லை. ஆனால் அத்தியந்தம் பேதமிருக்கிறது. அங்ஙனமாயினும், உபாதானகாரணத்துக்கும் காரியத்துக்கும் பேதாபேதரூப தாதாத்மியமே சம்பந்தமாம். கடத்துக்கு நிமித்தகாரணம் குலாலன் தண்டம் முதலியன. அவற்றிற்குக் கடரூபகாரியத்தோடு அத்தியந்தபேதமிருக்கிறது. ஆனால் உபாதானகாரணமான மண்பிண்டத்திற்கும் கடமாகிய காரியத்துக்கும் பேதசகித அபேதமிருக்கிறது.

1. மண்பிண்டத்தினும் கடம் அத்தியந்தம் வேறாயின் மண்பிண்டத்தினும் அத்தியந்தம் பின்னமாகத் தைலமுண்டாகாததுபோலக் கடமுமுண்டாகாது.

---

* குணகுணிமுதலிய இந்நான்கிடத்திலும் பட்டனைப்போல வேதாந்திகளும் தாதாத்மியசம்பந்தம் கொள்ளுகிறார்கள். வேதாந்தமதத்தில் தாதாத்மியசம்பந்தத்தின் லக்ஷணம் பட்டமதத்தினும் வேறாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது மேற் சமீபத்திலேயே சொல்லப்படும். இந்த நான்கிடத்திலும் நையாயிகர் சமவாயசம்பந்தம் கொள்ளுகிறார்கள். நித்தியசம்பந்தத்தினைச் சமவாய மென்பர்.

2. உபாதானகாரணத்துக்குக் காரியத்தோடு அந்தியந்தம் பேதமிருக்கி னும் மண்ணினின்றும் கடமுற்பத்தியாகாது. ஏனெனின், தன் ஸ்வரூபத்தி னின்று தன்னுற்பத்தி யுண்டாகாது.

1. ஆதலால் உபாதானகாரணத்துக்குக் காரியத்தோடு பேதசஹித அபேதமிருக்கிறது; அதனால் அபேதமிருக்கிறது. அந்தியந்தம் பேதபக்ஷத் துக்குத் தோஷமில்லை.

2. பேதமிருக்கிறது. அதனால் அபேதபக்ஷத்துக்குத் தோஷமில்லை.

இவ்விதத்தால் உபாதானகாரணத்துக்குக் காரியத்தோடு பேதாபேதம் யுக்தியாற் சித்திக்கின்றது.

1. பிரதீதியினாலும் உபாதானகாரணத்துக்கும் காரியத்துக்கும் பே தாபேதம் சித்திக்கின்றது. "இது மண், இது கடம்" என்னும் பின்னப் பிரதீதியால் பேதம் சித்திக்கிறது.

2. விசாரித்துப் பார்க்குமிடத்துக் கடத்துக்குள்ளும் புறமும் மண்ணை விட வேறொன்றும் பிரதீதியாகிறதில்லை. ஆனால் மண்ணே பிரதீதியாகி றது. ஆதலால் அபேதம் சித்திக்கிறது.

இவ்விதத்தால் உபாதானகாரணத்துக்கும் காரியத்துக்கும் பேதாபேத ரூப தாதாத்மியசம்பந்தமிருக்கிறது.

அநுபோலக் குணத்துக்கும் குணிக்கும் பேதாபேதமிருக்கிறது.

1. கடத்தின் ரூபத்துக்குக் கடத்தோடு அந்தியந்தம் பேதமிருந்தால், எப்படிக் கடத்தோடு படத்துக்கு அந்தியந்தம் பேதமிருக்கிறதோ, அந்தப் படம் கடத்தை யாசிரயிக்காமல் சுதந்திரமாயிருக்கிறதோ, அப்படியே கடத் தின் ரூபமும் கடத்தை யாசிரயிக்காமல் இருக்கவேண்டும்.

2, குணத்துக்கும் குணிக்கும் அந்தியந்தம் அபேத மிருந்தாலும் கடத் தின் ரூபம் கடத்தை யாசிரயித்ததாதல்கூடாது. ஏனெனின், தானே தன க்கு ஆசிரயமாயிராது. ஆதலால் குணகுணிகளுக்குப் பேதாபேதரூப தா தாத்மியசம்பந்தமிருக்கிறது.

இந்தயுக்தியினை ஜாதிக்கும் வியக்திக்கும் அப்படியே கிரியைக்கும் கிரி யையுடையதுக்குமுள்ள பேதாபேதரூப தாதாத்மியசம்பந்தத்தில் அறியவே ண்டும். கண்டநஞ்செய்யப்படும் மதம் எதுவோ அதில் அநேக யுக்திகளைச் சொல்லுவதனால் பிரயோஜனமில்லையாகலின் வேறு யுக்திகளை எழுதவில்லை.

## 422. பட்டர்மத கண்டனம் 422-427.

ஒரு வஸ்துவுக்கு ஒரேயிடத்தில் பேதாபேதமிருப்பது விருத்தம். ஆதலால் முழுவதும் பிசகென்று யுக்திமான்கள் சொல்லுகிறார்கள்.

இதன் அபிப்பிராயம் இதுவாம்:—

ஒரு கடத்தில் தன் அபேதமும் பிறவஸ்துக்களின் பேதமுமிருந்தாலும்,

1. எதன் அபேதமிருக்கிறதோ அதன் பேதமில்லை; எதன் பேதமிருக்கிறதோ அதன் அபேதமில்லையென்னும அபிப்பிராயத்தால் ஒரு வஸ்துவிற்குப் பேதம் அபேதம் விருத்தமெனப்பட்டது.

2. ஒரு வஸ்துவிற்கே அதாவது கடத்திற்கே தன்னிற்பேதமும் பிறிதில் அபேதமுமிருக்கின்றது. ஆனால் எதில் அபேதமிருக்கிறதோ அதில் பேதமில்லை; எதிற்பேதமிருக்கிறதோ அதில் அபேதமில்லையென்னும் அபிப்பிராயத்தால் ஒருவஸ்துவின் பேதமும் அபேதமும் ஒன்றில் விருத்தமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

பேதாபேதங்கள் தம்மில் விரோதிகளாம். ஒரு வஸ்துவில் எதற்குப் பேதமிருக்கிறதோ அதற்கு அபேதமும் எதற்கு அபேதமிருக்கிறதோ அதற்குப் பேதமும் விரோதமுடையனவாம். ஆதலால் வாச்சியவாசகங்கள், குணகுணிகள், ஜாதிவியக்தி, கிரியை கிரியையுடையது, உபாதானகாரணம் காரியம் என்பவற்றிற்குப் பேதாபேதரூப தாதாத்மியசம்பந்தம் அங்கீகரிக்கின் அது அசுத்தமாம்.

**423.** 1. "வாக்கில் வாசகமும் வெளியில் வாச்சியமும் இருத்தலால் பேதமும்,

2. சுருதியில் ஓம் அக்ஷரம் பிரஹ்மமென்று சொல்லியிருத்தலால் அபேதமுமாம்" என்று முன் (420) வாச்சியவாசகங்களின் பேதாபேதத்தில் பிரமாணமாகச் சொல்லப்பட்டன.

இதற்குச் சமாதானம்:— பிரணவவர்ணமாகிய ஓம் அக்ஷரத்துக்கும் பிரஹ்மத்துக்கும் வேதத்தில் அபேதஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வேதவசனத்துக்கு வாச்சியவாசகங்களின் அபேதத்தில் கருத்தில்லை. ஆனால் அதில் வேறு இரகசியமான அபிப்பிராயமிருக்கிறது. அந்த அபிப்பிராயத்தைப் பட்டர் அறியவில்லை. எந்தவிடத்தில் ஓம் அக்ஷரம் பிரஹ்மமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அவ்வாக்கியத்தின் ஓம் அக்ஷரத்துக்கும் பிரஹ்மத்துக்கும் பேதமில்லையென்பது அவ்வாக்கியத்தின் தாற்பரியமன்று. ஆனால்

"ஓம் அக்ஷரத்தைப் பிரஹ்மரூபமாக உபாஸனை செய்யவேண்டிய" தென்பது தாற்பரியம். எப்படி உபாஸனை விதிக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே உபாஸியத்தின் சொரூபமுமிருக்கவேண்டுமென்னும் நியமமல்லை. ஆனல் வஸ்துவின் சொரூபத்தைவிட்டு வேறு ஸ்வரூபமாகவும் அதனிடத்தில் உபாஸனை செய்யப்படுகின்றது.

1. சாளக்கிராமத்தையும் பாணத்தையும் விஷ்ணுரூபமாயும் சிவரூபமாயும் உபாஸிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. அங்குச் சங்குசக்கராதிகளுடன் கூடிய சதுர்ப்புஜமூர்த்தி சாளக்கிராமத்திலில்லை. கங்கையாலலங்கரிக்கப்பட்ட ஜடைமுடி, உடுக்கை, தோல், கபாலமென்பவற்றோடு கூடிப் பத்திராமுத்திரையால் சரணடைந்தவர்களுக்குத் திரிகுணரகிதமான ஆத்மோபதேசம் செய்யும் மூர்த்தி பாணத்திலில்லை. ஆனல் சாளக்கிராமமும் பாணமும் சிலாரூப (கல்வடிவ) ங்களாம். சாஸ்திரத்தின் ஆஞ்ஞையால் அவற்றின் சிலாரூபதிருஷ்டியை விட்டுச் சாளக்கிராமபாணங்களில் முறையே விஷ்ணுரூபமும் சிவரூபமும் உபாஸிக்கப்படுகின்றன. ஆதலால் உபாஸனை உபாஸியத்தினது ஸ்வரூபத்தின் அதீனமாகிறதில்லை. ஆனல் விதியின் அதீனமாயிருக்கிறது. சாஸ்திரவசனம் விதிக்கிறபடி உபாஸனையைச் செய்யவேண்டும்.

2. சாந்தோக்கிய உபநிஷத்தில் பஞ்சாக்கினிவித்தியாப்பிரகரணத்தில் சுவர்க்கலோகம் மேகம் பூமி புருஷன் ஸ்திரீ இவ்வைந்து பதார்த்தங்களையும் அக்கினிரூபமாக உபாஸிக்கும்படி சொல்லியிருக்கிறது. சிரத்தை சோமம் மழை அன்னம் வீரியம் இவ்வைந்து பதார்த்தங்களையும் பஞ்சாக்கினிகளின் ஆகுதிகள்ரூபமாக உபாஸிக்கும்படிச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்விடத்தில் ஸ்வர்க்காதிகள் அக்கினியன்று. சிரத்தாதிகளும் ஆகுதியன்று.

அங்ஙனமாயினும், வேதாஞ்ஞையால் ஸ்வர்க்காதிகள் அக்கினிரூபமாகவும், சிரத்தாதிகள் ஆகுதிரூபமாகவும் *உபாஸிக்கப்படுகின்றன.

இவ்விதத்தால் ஓம் அக்ஷரத்தின் பிரஹ்மரூப உபாஸனை சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு ஓம் அக்ஷரம் பிரஹ்மரூபமன்றெனினும் பிரஹ்மரூபமாய் உபாஸித்தல் பொருந்துகின்றது. உபாசனைவாக்கியத்தில் வஸ்துவின் அபேதம் அபேக்ஷிக்கப்படுவதின்று. ஆனல் பின்னவஸ்துவினையும் அபின்னரூபத்தால் உபாஸித்தலுண்டாகின்றது.

* இப்பஞ்சாக்கினிவித்தையின் முழுப்பிரசங்கமும் பஞ்சதசியின் தியானதீபத்தினது உரையின் டிப்பணியிலும், சாந்தோக்கியத்திலும் எழுதப்பட்டிருக்கின்றது.

விசாரித்துப் பார்க்குமிடத்துப் பிரஹ்மத்தின் வாசகமான ஓம் அக்ஷரத்துக்குத் தனது வாச்சியமான பிரஹ்மத்தோடு அபேதம் பொருந்தவும் செய்கின்றது. கடாதி அந்நியபதங்களுக்குத் தத்தம் ஜடவடிவ அர்த்தத்தோடு அபேதம் பொருந்தாது. ஏனெனின், எல்லா நாமரூபங்களும் பிரஹ்மத்திற் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. பிரஹ்மம் அதிஷ்டானமாயிருக்கிறது. ஓம் அக்ஷரமும் பிரஹ்மத்தின் நாமமாம். ஆதலால் பிரஹ்மத்திற் கற்பிதமாயிருக்கிறது. கற்பிதவஸ்து அதிஷ்டானத்துக்கு வேறாகாமல் அதிஷ்டானரூபமாகவே இருக்கிறது. ஆதலால் ஓம் அக்ஷரம் பிரஹ்மரூபமாம்.

கடாதிபதங்களுக்கு ஜடரூப தமது அர்த்தங்கள் அதிஷ்டானமன்று. ஆனால் வாச்சியத்தோடு கடாதிபதங்கள் பிரஹ்மத்திற் கற்பிதமாம். பிரஹ்மம் அவற்றின் அதிஷ்டானமாம். ஆதலால் பிரஹ்மத்தோடு எல்லாவற்றிற்கும் அபேதம் கூடும். ஆனால் கடாதிபதங்களுக்குத் தம் ஜடரூப வாச்சியார்த்தங்களோடு அபேதம் எவ்விதத்தினாலும் பொருந்தாது. ஆதலால் பட்டர் மதத்தில் வாச்சியவாசகங்களுக்கு அபேதம் கூடாது.

**424.** வாச்சிய வாசகங்களுக்குக் கேவலம் பேதம் அங்கீகரிப்பவர் மதத்தில் இத்தோஷம் பட்டரால் சொல்லப்பட்டிருக்கிறது:— கடபதத்தின் வாச்சியம் கடபதத்தினும் அத்தியந்தம் பின்னமாயிருந்தால், கடபதத்தினும் அத்தியந்தம் பின்னமான வஸ்திரரூப அர்த்தம் பிரதீதியாகாததுபோலக் கடபதத்துக்கு அத்தியந்தம் பின்னமான கலசரூப அர்த்தமும் பிரதீதியாகாது. அல்லாமலும் கடபதத்தினும் பின்னமாக வாச்சியத்தைக்கொண்டு அதற்குக் கடபதத்தால் பிரதீதியையங்கீகரிக்கின், எப்படிக் கடபதத்துக்கு அத்தியந்தம் பின்னமான கலசரூப அர்த்தம் கடபதத்தால் விளங்குகிறதோ அப்படி அத்தியந்தம் பின்னமான வஸ்திரமும் கடபதத்தால் பிரதீதியாகவேண்டும். இந்தத்தோஷமும் சாமர்த்தியத்தை அல்லது இச்சைவடிவ சத்தியை அங்கீகரியாதவர் மதத்திலிருக்கிறது.

சத்தியையங்கீகரிக்கின் அவர் மதத்தில் தோஷமில்லை. ஏனெனின் கடபதத்தின் வாச்சிய கலசமும் அதன் அவாச்சியமான வஸ்திராதிகளும் அவ்விரண்டும் கடபதத்துக்கு வேறாயிருக்கின்றன. ஆனால் கடபதத்தில் கலசரூப அர்த்தஞானத்தைக் கொடுக்கும் சத்தியிருக்கிறது; வேறு அர்த்தஞானத்தைக் கொடுக்கும்படியான சத்தியில்லை. ஆதலால் கடபதத்தால் கலசரூப அர்த்தத்துக்கு வேறான அர்த்தம் பிரதீதியாகிறதில்லை.

இவ்விதத்தால் எந்தப்பதத்தில் எந்த அர்த்தத்தின் சத்தியிருக்கிறதோ அவ்வர்த்தமே அப்பதத்தால் பிரதீதியாகிறது. வேறு அர்த்தம் பிரதீதியா

கிறதில்லை. ஆதலால் வாச்சியவாசகங்களின் அத்தியந்தபேதத்தில் தோஷமில்லை. அவற்றிற்குப் பேதசகித அபேதரூபதாதாத்மியசம்பந்தம் பொருந்தாது.

**425.** பேதமும் அபேதமும் தம்மில் விரோதிகளாம். அப்படியே உபாதான காரணத்துக்கும் காரியத்தோடு பேதசகித அபேதமில்லை; *கேவலம் பேதம் இருக்கிறது. கேவல பேதத்திற்சொன்ன தோஷம் நையாயிக மதத்திலும் சத்திவாதியின் மதத்திலும் இல்லை. ஏனெனின் காரண காரியங்களின் அத்தியந்த பேதத்தில் இத்தோஷமிருக்கிறது:—மண்ணினும் அத்தியந்தம் பின்னமான கடமுற்பத்தியானால் அத்தியந்தம் பின்னமான தைலமும் மண்ணினின்று உற்பத்தியாகவேண்டும். அத்தியந்தம் பின்னமான தைலத்தின் உற்பத்தியாகாவிடின் அத்தியந்தம் பின்னமான கடமும் மண்ணினின்று உற்பத்தியாகலாகாது.

**426.** இந்தத் தோஷம் நையாயிகமதத்திலில்லை. ஏனெனின், சகல வஸ்துக்களினுற்பத்தியிலும் நையாயிகர் பிராகபாவத்தைக் காரணமெனக் கொண்டிருக்கிறார்கள். கடத்தினுற்பத்தியில் தண்டம் சக்கரம் குலாலன் காரணமாயிருப்பதுபோல் கடத்தின் பிராகபாவமும் கடத்திற்குக் காரணமாம். அப்படியே சகல பதார்த்தங்களின் பிராகபாவமும் சகல பதார்த்தங்களினுற்பத்திக்கும் காரணமாயிருக்கிறது.

1. கடத்தின் பிராகபாவம் கடத்தினுபாதான காரணமான மண்ணில் இருக்கிறது வேறொன்றிலுமில்லை.

2. எண்ணெயின் பிராகபாவம் எள்ளிலிருக்கிறது; வேறொன்றிலும் இல்லை.

---

*சத்திவாதி (சித்தாந்தி) யின் மதத்தில் உபாதான காரணத்திற்குக் காரியத்தோடு கேவல பேதமில்லை: ஆனால் அநிர்வசநீயதாதாத்மியமிருக்கிறது. அங்ஙனமாயினும், இங்கே காரியகாரணத்தின் எந்தக்கேவலபேதம் சொல்லப்பட்டிருக்கிறதோ அது பிரௌடிவாதமாம். பிரௌடி என்பது தனது மேன்மையின்பொருட்டு; வாதம் என்பது சொல்லுதலாம். அது பிரௌடிவாதத்தின் சொரூபமாம். அதன் இலக்ஷணம் இதுவாம்:—பிரதிவாதியின் வார்த்தையை அங்கீகரித்துத் தன்மதத்தின் தோஷத்தைப் பரிகரித்தலைப் பிரௌடிவாதமென்பர்.

இங்குக் காரிய காரணங்களின் பேதபக்ஷத்தில் பட்டர் தோஷங்கூறியிருந்தனர். அந்தப் பட்டர்கூறிய தோஷத்தோடுகூடிய பக்ஷத்தை அங்கீகரித்தும் தனது மதத்தின் தோஷத்தைப் பரிகரித்திருக்கின்றனர். ஆதலால் இது பிரௌடிவாதமாம்.

இவ்விதத்தால் சகல காரியங்களின் பிராகபாவமும் தத்தம் உபாதான காரணத்திலிருக்கிறது. எந்தப் பதார்த்தத்தில் எதன் பிராகபாவமிருக்கிறதோ அந்தப் பதார்த்தத்திலிருந்து அதன் உற்பத்தியுண்டாகிறது; வேறொன்றுமாகிறதில்லை.

1. மண்ணில் கடத்தின் பிராகபாவ மிருக்கிறது. அதனால் மண்ணினின்று கடமுற்பத்தியாகிறது; தைலமுற்பத்தியாகிறதில்லை.

2. எண்ணெயின் பிராகபாவம் எள்ளிலிருக்கிறது. அதனால் எள்ளினின்று எண்ணெயுண்டாகிறது; கடமுண்டாகிறதில்லை.

இப்படிச் சகல காரியங்களிலும் பிராகபாவம் காரணமாயிருக்கிறது. ஆதலால் காரணகாரியங்களுக்கு அத்தியந்தம் பேதமங்கீகரித்தலால் நையாயிகமதத்தில் தோஷமில்லை.

**427.** சாமர்த்தியரூப சக்திவாதியின் மதத்திலும் தோஷமில்லை. ஏனெனின் மண்ணில் கடத்தின் சாமர்த்தியரூபசக்தியிருக்கிறது; தைலத்தின் சக்தியில்லை. எள்ளில் எண்ணெயின் சாமர்த்தியரூபசக்தியிருக்கிறது; கடத்தின் சாமர்த்தியரூபசக்தியில்லை. ஆதலால் மண்ணால் கடம் உண்டாகிறது; தைலமுண்டாகிறதில்லை. அப்படியே எள்ளால் எண்ணெயுண்டாகிறது; கடமுண்டாகிறதில்லை.

இவ்விதத்தால் உபாதானகாரணத்திற்கும் காரியத்திற்கும் அத்தியந்தம் பேதத்தைக் கொள்ளுதலில் தோஷமில்லை. பேதாபேதம் அசங்கதமாம்.

பேதத்திலும் அபேதத்திலும் பட்டராற்சொல்லப்பட்ட தோஷங்கள் பட்டர்மதத்தில நிச்சயமாயுண்டு. ஏனெனின், பட்டர் பேதசகித அபேதத்தை அங்கீகரித்திருக்கிறார். இதனால் காரணகாரியங்களுக்குப் பேதமுமிருக்கிறது அபேதமுமிருக்கிறதென்னும் பொருள் சித்திக்கிறது.

1. பேதமிருத்தலால் பேதபக்ஷத்திற் சொன்ன தோஷமுண்டாம்:

2. அபேதமிருத்தலால் அபேதபக்ஷத்திற் சொன்னதோஷமுண்டாம்.

ஆதலால் பேதாபேதம் அசங்கதமாயிருக்கிறது.

திருடனுக்குத் திருட்டுத்தோஷமும் சூதாடிக்குச் சூதாட்டுத்தோஷமும் உண்டு. இவ்விரண்டையும் அனுஷ்டிக்கிறவனுக்கு இவ்விருதோஷங்களும் சம்பவிக்கின்றன. அதுபோல் குணகுணி முதலியவற்றின் பேதாபேதங்களை ஒப்புக்கொள்ளுதலாலும் பேதபக்ஷத்திலும் அபேதபக்ஷத்திலுஞ் சொன்ன இரண்டு தோஷங்களுமுண்டாகின்றன.

சக்திவாதியின் மதத்தில் கேவலம் பேதத்தை அங்கீகரிப்பதனால் தோஷமில்லை. ஏனெனின் குணியில் குணத்தைத் தரிக்கும் சக்தியிருக்கிறது; வேறொன்றன் சக்தியில்லை. ஆதலால் பேதபக்ஷத்தில், கடத்தின் ரூபாதிகள் கடத்துக்குப் பின்னமாயிருப்பதுபோல் படாதிகளும் கடத்துக்குப் பின்னமாயிருக்கின்றன; ரூபாதிகள்போல் படாதிகளும் கடத்திலிருக்கவேண்டும்; அல்லது படாதிகள்போல் ரூபாதிகளும் இருக்கலாகாது என்னும் தோஷம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தோஷம் சக்தியை அங்கீகரியாதவன் மதத்தில் கேவலம் பேதத்தை யொப்புக்கொள்ளுவதினாலும் தோஷமில்லை.

1. மாறான பட்டர்மதத்தில் பேதாபேதங்களிரண்டையும் ஒப்புக்கொள்ளுவதினால் இரண்டு பக்ஷங்களின் தோஷங்களும் மேற்கூறிய திருஷ்டாந்தங்களால் இருக்கின்றன.

2. பேதமும் அபேதமும் விரோததர்மங்களாதலின் அஸம்பவதோஷம் இருக்கிறது.

அப்படியே ஜாதிவியக்திகளுக்கும் கிரியை கிரியையுடையவற்றிற்கும் கேவலம் பேதமிருக்கிறது. அங்ஙனமாயினும், வியக்தியில் ஜாதியைத் தரிக்கும் சக்தியிருக்கிறது. கிரியையுடையதில் கிரியையைத் தரிக்கும் சக்தி இருக்கிறது; வேறொன்றைத் தரிக்கும் சக்தியில்லை.

இவ்விதத்தால் உபாதானகாரணத்துக்கும் காரியத்துக்கும் அப்படியே குணகுணி முதலியவற்றிற்கும் பேதாபேதரூப தாதாத்மியசம்பந்தம் அஸங்கதமாம்.

எல்லாவற்றிற்கும் தம்மில் பேதம் அங்கீகரித்தலில் பட்டராற்சொல்லப்பட்ட தோஷத்தைச் சக்தி விழுங்குகிறது.

வேதாந்த சித்தாந்தத்திலும் காரியம் குணம் ஜாதி கிரியை என்பவற்றிற்கு உபாதானகாரணம் குணி வியக்தி கிரியையுடையது என்பவற்றோடு அத்தியந்தம் பேதமில்லை. ஆனால் தாதாத்மிய சம்பந்தமே யங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அங்ஙனமாயினும், வேதாந்தமதத்தில் பேதாபேதரூப தாதாத்மிய சம்பந்தமில்லை. ஆனால் பேதாபேதங்களுக்கு விலக்ஷணமான அநிர்வசநீய வடிவ தாதாத்மியசம்பந்தமிருக்கிறது.

1. பேதத்துக்கு விலக்ஷணமாயிருத்தலால் அபேதபக்ஷத்துக்குத் தோஷமில்லை.

2. அபேதத்துக்கு விலக்ஷணமாயிருத்தலால் பேதபக்ஷத்துக்குத் தோஷமில்லை.

இவ்விதத்தால் பேதாபேதங்களுக்கு விலக்ஷணமான அநிர்வசனீய * தாதாத்மிய சமபந்தமிருக்கிறது.

ஆனால் பேதாபேதரூப தாதாத்மியசம்பந்தம் அசங்கதமாம். ஆதலால் 'வாச்சியவாசகங்களின் பேதாபேதரூபதாதாத்மியசம்பந்தமே சக்தி" யென்று சொன்ன பட்டரைச்சார்ந்தவர்களின் மதம் நலமுடையதன்று. ஆனால் பதத்தைக் கேட்டமாத்திரத்தில் அர்த்தஞானத்தையுண்டுபண்ணும் பதத்திலுள்ள சாமர்த்தியமே பதத்தின் சக்தியாம்.

இவ்விதமாகச் சக்தி நிரூபிக்கப்பட்டது.

## 428. சக்கியலக்ஷணம்.

லக்ஷணையின் ஞானத்தில் சக்கியத்தின் ஞானம் உபயோகியாயிருக்கிறது. ஏனெனின், சக்கியசம்பந்தம் லக்ஷணையின் ஸ்வரூபமாம். சக்கியத்தையறியாமல் சக்கியசம்பந்தரூபலக்ஷணையின் ஞானமுண்டாகாது. ஆதலால் சக்கியத்தின் லக்ஷணத்தைச் சொல்லுகிறோம்.

---

* கேவலம் பேதமுள்ளவிடத்துத் தாதாத்மியம் பொருந்தாது. ஏனெனின், அபேதஉணர்ச்சியின் விஷயத்தினது பெயரே தாதாத்மியமாம். ஆதலால் கேவல பேதமிருக்கும்பொழுது அபேதத்தோற்றமுண்டாகாது. அதனால் தாதாத்மியசம்பந்தத்தில் அபேதத்தின் அபேக்ஷையிருக்கிறது. அன்றியும் கேவல அபேதமுள்ள விடத்துச் சம்பந்தமுண்டாகாது. ஏனெனின், இரண்டு பதார்த்தங்களுக்குச் சம்பந்தம் கூடும். தனது சொரூபத்தோடு தனது சம்பந்தம் சம்பவியாது. ஆதலால் எல்லாச் சம்பந்தத்திலும் பேதத்தின் அபேக்ஷயுமுண்டு. எதனால் தாதாத்மியமும் சம்பந்தமோ அதனால் அதில் பேதத்தின் அபேக்ஷயுமுண்டு. இவ்வாற்றால் பேத அபேதமிரண்டுமின்றித் தாதாத்மியசம்பந்தம் பொருந்தாது. பேதாபேதங்களுக்கு ஓரிடத்திலிருத்தல் விரோதமாம்.

அங்ஙனமாயினும், இங்குக் கற்பிதபேதத்தோடு கூடிய வாஸ்தவ அபேதத்திற்குத் தாதாத்மியசம்பந்த மென்று பெயர். இங்குப் பேத அபேதத்திற்கு விலக்ஷணம் தாதாத்மியமென்றதின் அபிப்பிராயம் இதுவாம்:—

1, பேதத்திற்கு விலக்ஷணமென்று சொல்லுதலால் வாஸ்தவ பேதமில்லாததெனப்பட்டது. அதனால் கற்பிதபேதத்தோடுகூடியதென்பதறிவிக்கப்பட்டது.

2. அபேதத்திற்கு விலக்ஷணமென்றதனால் கற்பித அபேதமில்லாததெனப்பட்டது. இதனால் வாஸ்தவ அபேதமென்பது அறிவிக்கப்பட்டது.

இவ்வாற்றால் சித்தாந்தத்தில் கற்பிதபேதத்தோடுகூடிய வாஸ்தவ அபேதம் தாதாத்மியசம்பந்தமெனப்படுகின்றது. இதனையே அநிர்வசநீயதாதாத்மியசம்பந்தமென்பர்.

எந்தப் பதத்தில் எந்த அர்த்தத்தின் சக்தியிருக்கிறதோ அந்தப்பதத்துக்கு அந்த அர்த்தம் சக்கியமென்று அறியத்தக்கது. சக்கியார்த்தத்தையே * வாச்சியார்த்தமென்றும் சொல்லுகிறார்கள்.

எங்ஙனம்: அக்கினிபதத்தில் நெருப்புவடிவ அர்த்தத்தின் சக்தியிருக்கிறது. ஆதலால் அக்கினிபதத்துக்கு நெருப்பு சக்கியார்த்தம் அல்லது வாச்சியார்த்தமெனப்படுகிறது.

வாச்சியார்த்தத்தைப் போதிக்கிற பதம் வாசகமெனப்படும்.

## 429. லக்ஷியார்த்தம் லக்ஷணையென்பவற்றின் சாமானியரூபம். இனி லக்ஷணையும் ஜஹதிமுதலிய பேதத்தின் லக்ஷணமும்.

வாச்சியார்த்தத்தின் சம்பந்தம் லக்ஷணையின் ஸ்வரூபமாகியலக்ஷணமாம்.

எந்த அர்த்தம் பதத்தின்சக்தியால் அறியப்படவில்லையோ, ஆனால் லக்ஷணையால் அறியப்படுகிறதோ அது பதத்தின் லக்ஷியார்த்தம் எனப்படும்.

## 430. 1. ஜஹதி 2. அஜஹதி 3. பாகத்தியாக லக்ஷணைகளின் லக்ஷணம் 430-432.

1. எங்கு வாச்சியார்த்தம் முழுவதும் விடப்பட்டும் அதன் சம்பந்தம் பிரதீதியாகிறதோ, அங்கு ஜகதிலக்ஷணை சொல்லப்படுகிறது. ஒருவன் "கங்கையில்கிராமமிருக்கிற"தென்று சொல்லுகிறவிடத்தில் கங்கையென்னும் பதத்துக்குக் கரையில் ஜஹதிலக்ஷணை இருக்கிறது. ஏனெனின், கங்கையென்னும் பதத்துக்கு வாச்சியார்த்தம் கங்காநதியின் பிரவாகமாம். அப்பிரவாகத்தில் கிராமமிருப்பது அசம்பவமாம். ஆதலால் வாச்சியார்த்தம் முழுவதனையும் விட்டுக்கரையில் கங்கையென்னும் பதத்துக்கு ஜகதிலட்சணை இருக்கிறது.

வாச்சியத்தின் சம்பந்தத்துக்கு லக்ஷணையென்று பெயர். "கங்கையில் கிராமம்" என்னுமிடத்தில் கங்காபதத்தின் வாச்சியமான பிரவாகத்துக்குக் கரையோடு சையோகசம்பந்தமிருக்கிறது. ஆதலால்,

(1) கங்காபதத்தின் வாச்சியத்துக்குக் கரையோடுள்ள சம்பந்தம் லட்சணையாம்.

(2) வாச்சியம் முற்றிலும் விட்டிருக்கிறது. ஆதலால் † ஜகதிலக்ஷணையாம்.

---

* இதனையே அபிதேயார்த்த மென்றும், முக்கியார்த்தமென்றும் கூறுவர்.

† ஜஹதிலக்ஷணையின் எளிதான உதாரணம் இதுவாம்:—எந்த வரனது (மாப்பிள்ளையின்) பிதா பரதேசஞ் போயிருக்கிறானோ அந்தவரன் மாமியார் வீட்டில் விவக

431. 2. வாச்சியார்த்தத்தோடு வாச்சியத்தின் சம்பந்தியின் ஞானம் எந்தப்பதத்தினால் உண்டாகிறதோ அந்தப்பதத்தில் அஜகதிலக்ஷணை கொள்ளப்படுகிறது.

"சிவப்பு ஓடுகிறது" என்று ஒருவன் கூறுமிடத்து அங்குச் சிவப்பு என்னும் பதத்துக்குச் சிவப்பு வர்ணத்துடன் கூடிய குதிரையில் அஜகதிலக்ஷணையாம். ஏனெனின், சிவப்பு என்பது வர்ணம் அந்தக்கேவல வர்ணத்தில் ஓடுதல் சம்பவியாது. ஆதலால் சிவப்பு என்னும் பதத்தின் வாச்சியமான சிவப்புவர்ணத்துடன்கூடிய குதிரையில் சிவப்பு என்னும் பதத்துக்கு அஜகதிலக்ஷணை யிருக்கின்றது.

குணத்துக்கும் குணிக்கும் தாதாத்மியசம்பந்தம் சொல்லப்படுகிறது.

சிவப்பும் நிறத்தின் பேதமாதலால் குணமாம். ஆதலால்,

1. சிவப்பு என்னும் பதத்தின் வாச்சியமான சிவப்புக் குணத்துக்குக் குணியாகிய குதிரையோடுள்ள தாதாத்மியசம்பந்தம் லக்ஷணையாம்.

---

கத்தின்பொருட்டுப் பிதாவோடு பிறந்தவன்முதலிய சம்பந்திகளை உடன்கொண்டு சென்றான். அங்கு வஸ்திரமணிவிக்கும் சமயத்தில் ஒருவன் "மாப்பிள்ளையின் தகப்பனுக்கு வேஷ்டிபோர்த்துங்கள்" என்று சொன்னான். இந்த வார்த்தையில் பிதாவென்னும் சொல்லின் சக்தியார்த்தமாகிய மாப்பிள்ளையின் ஜநகன் (பெற்றவன்) எவனோ அவன் அங்கு இல்லை. ஆகலால் ஜநகவடிவ சக்தியார்த்தத்தில் சொல்லுவோனது தாற்பரியம் சம்பவியாது. ஆனால்; பிதா சப்தத்தின் சக்தியார்த்தமாகிய ஜநகனை முழுவதும்விட்டு அதன்சம்பந்தியாகிய பிதாவின் சகோதரனைக் கொள்ளவேண்டும். ஆதலால் ஜஹதிலக்ஷணையாம்.

இங்கு ஜநகசக்தியார்த்தத்திற்குப் பிதாவின் சகோதரனோடு சகோதரத்தன்மைச் சம்பந்தமிருக்கிறது. அது லக்ஷணையாம். அந்த லக்ஷணையால் அறியப்படும் பிதாவின் சகோதரனாகிய அர்த்தம் பிதாவென்னும் சொல்லின் லக்ஷியமாம்.

அல்லது ஒருவன் "கிணறு நடக்கிறது" என்று சொன்னான், அங்குக் கிணறு என்னும் சொல்லின் சக்தியார்த்தமாகிய ஜலநிறைந்த குழி எதுவோ அதில் நடத்தலாகிய தொழில் இல்லாமையால் சொல்லுவோனது கருத்துச் சம்பவியாது. ஆனால் கிணற்றின் சம்பந்தமுள்ள இரண்டுமாடுகளோடுகூடிய தோற்சாலில் சொல்லுவோனது கருத்திருக்கின்றது. ஆதலால் கிணறுவடிவ சக்திய (வாச்சிய) முழுவதனையும் விட்டு, அதன் சம்பந்தியான இரண்டுமாடுகளோடுகூடிய தோற்சாலில் கொள்ளப்படுகின்றது. ஆகலால் ஜஹதிலக்ஷணையாம். இவ்வாறு "வழி தொலைந்தது" "அடுப்பு எரிகிறது" என்றல் முதலிய வாக்கியங்களிலும் ஜஹதிலக்ஷணை அறிந்து கொள்க.

இந்த ஜஹதிலக்ஷணையை ஓர் நூலாசிரியர் இவ்வாறு சித்தாந்தத்தில் உபயோகம் காட்டியிருக்கின்றனர்:—" இவ்வெல்லாம் நிச்சயமாகப் பிரஹ்மம் " என்றல் முதலிய

2. வாச்சியத்தினை விடாமல் அதிகத்தைக் கிரகிப்பது. ஆதலால் *அஜ ஹதிலக்ஷணையாம்.

432. 3. பதத்தின் வாச்சியார்த்தத்தில் ஒரு பாகத்தைவிட்டு ஒரு பாகத்தைக் கிரகிப்பது பாகத்தியாகலக்ஷணை யெனப்படுகிறது. அதனையே ஜகதி அஜஹதிலக்ஷணையென்றும் கூறுவர்.

முன் பார்த்த பொருளையே வேறிடத்தில் பார்த்து "அது இதுதான்" என்று ஒருவன் சொல்லுவானாயின் அங்குப் பாகத்தியாகலக்ஷணை யிருக்கிறது. ஏனெனின்,

(1) சென்றகாலத்திலும் வேறிடத்திலுமிருக்கும் பொருள் 'அது' எனப் படும். ஆதலால் சென்றகாலத்துடனும் வேறிடத்துடனும் கூடிய பொருள் "அது" என்னும் பதத்தின் வாச்சியார்த்தமாம்.

---

சுருதிவாக்கியங்களில் சகலஜகத்திற்கும் பிரஹ்மரூபத்துவம்சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு அநித்தியத்தன்மை, திருசியத்தன்மை, விகாரமுடைமை, ஜடத்தன்மை, துக்கவடிவத்தன்மை முதலிய விபரீதங்களோடுகூடிய நாமரூபமயஜகத்தினை நித்தியம் திருஷ்டா, அவிகாரி, சேதனம், ஆநந்தமுதலிய சொரூபப் பிரஹ்மமென்று சொல்லுதல்விருத்தமாம். அதில் சுருதிவாக்கியங்களின் தாற்பரியம் சம்பவியாது. ஆனால் பாத சாமானாதிகரணியத்தின்படி நாமரூபத்தைப் பாதித்து எஞ்சியிருக்கும் அதன் சம்பந்தியாகிய அதிஷ்டானசேதனம் பிரஹ்மமாம் என்னும் அர்த்தத்தில் சுருதிவாக்கியங்களுக்குத் தாற்பரியமாம். ஆதலால் இங்கு எல்லாமென்னும் சொல்லிற்கு வாச்சியமாகிய நாமரூபஜகத்து முழுவதனையும்விட்டு அதன் சம்பந்தியான அஸ்திபாதிப்பிரிய வடிவ அதிஷ்டானத்தைப் பிரஹ்மவடிவாகக் கொள்ளவேண்டும். ஆதலால் ஜஹதி லக்ஷணையாம்.

இங்கு ஆரோபிக்கப்பட்ட நாமரூபத்திற்குத் தனது அதிஷ்டான சேதனத்தோடுள்ள தாதாத்மிய சம்பந்தமெதுவோ, அது லக்ஷணையாம். அதனால் அறியப்படும் அதிஷ்டான சேதனம் லட்சியார்த்தமாம்.

முக்கிய சித்தாந்தத்திலோ அதிஷ்டானத்தைவிட்டு ஆரோபிதத்தின் பிரதீதியுண்டாகிறதில்லை. ஆனால் அதிஷ்டானத்தினும் வேறாகாததாய் ஆரோபிதம் தோற்றுகிறது. ஆதலால் அஸ்திபாதிப்பிரியவடிவ நாமரூபம் எல்லாம் என்னும் சொல்லிற்காவது ஜகதது என்னும் சொல்லிற்காவது வாச்சியார்த்தமாம். அதினின்றும் நாமரூபபாகத்தைவிட்டு எஞ்சியிருக்கும் அஸ்திபாதிப்பிரியவடிவ அதிஷ்டான பாகமெதுவோ, அது பிரஹ்மமாம். இவ்வாறு முற்கூறிய சுருதிவாக்கியத்துள்ள எல்லாமென்னும் பதத்தில் பாகத்தியாகலக்ஷணை அங்கீகரிக்கப்படுகின்றது.

இவ்வாற்றால் ஜஹதிலக்ஷணையின் உதாரணம் சொல்லப்பட்டது.

* அஜஹதிலக்ஷணைக்கு இவை உதாரணங்களாம்:—

1. "காகங்களினின்றும் தயிரைக் காக்க (என்றும்புகலைப்போக்கும்பொருட்டு வெயிலில் தயிரைவைத்து அங்கு ஓர் வேலைக்காரனை உட்காரவைத்து எஜமானன் சொல்லும் காகங்களினின்றும் தயிரை இரக்ஷிக்க)" என்னும் வாக்கியத்தில் காகமென்னும் சொற்பொருளாகிய காக்கைகளாகிய பக்ஷிகள் எவையோ அவற்றினின்றும் தயிரை இரக்ஷித்தலில் சொல்லுகின்றவனது தாற்பரியமில்லை. ஆனால் தயிரை உண்

(2) நிகழ்காலத்திலும் சமீப இடத்திலுமிருக்கும் பொருள் இது எனப்படும். ஆதலால் நிகழ்காலத்துடனும் சமீபதேசத்துடனுங்கூடிய வஸ்து "இது" என்னும் பதத்தின் வாச்சியார்த்தமாம்.

சென்றகாலத்துடனும் வேறிடத்துடனும்கூடிய பொருளே நிகழ்காலத்துடனும் சமீபதேசத்துடனும் கூடியிருக்கிறது என்பது "அதுவே இது" என்னும் வாசகசமுதாயத்தின் வாச்சியார்த்தமாம். அது சம்பவியாது. ஏனெனின்,

(1) சென்றகாலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் விரோதமிருக்கிறது.

(2) அப்படியே அன்னியதேசத்துக்கும் சமீபதேசத்துக்கும் விரோதமுண்டு.

---

பணவாயிருத்தலால் காகத்திற்கு, ஸஜாதிய இனமான பூனைமுதலியவற்றினின்றும் தயிரை இரக்ஷிக்கவென்பது சொல்லுவோனது தாற்பரியமாம். ஆதலால் காகமென்னும் சொல்லின் வாச்சியமாகிய காக்கைகளாகியபக்ஷிகளுக்குப் பூனைமுதலியவற்றோடு ஸஜாதியசம்பந்தமிருக்கின்றது. அது இலக்ஷணையாம். வாச்சியத்தை நீக்காது அதிகத்தைக் கொள்ளுதலால் அஜகத்திலக்ஷணையாம்.

2. அங்ஙனமே வயலைக்காக்கும்பொருட்டுக் கட்டிலில் உட்கார்ந்திருக்கும் புருடன் பக்ஷிகளை ஓட்டுதற்குக் கத்துவானாயின் அங்கு ஒருவனை நோக்கி ஒருவன் "மஞ்சங்கூவுகின்றது" என்று சொல்லுகின்றான். அங்கு மஞ்சமென்னும் பதத்திற்கு மஞ்சத்தில் உட்கார்ந்திருக்கும் புருடனிடத்து அஜகதிலக்ஷணையாம். ஏனெனின் மஞ்சபதத்தின் வாச்சியமாகிய மஞ்சத்தில் அழைத்தல் சம்பவியாதாகலின் மஞ்சபதத்திற்கு வாச்சியமாகிய கட்டில் எதுவோ அதனோடுகூடிய புருஷனிடத்தில் மஞ்சபதத்திற்கு அஜகதிலக்ஷணையிருக்கிறது. இங்கு மஞ்சபதத்தின் வாச்சியமாகிய மஞ்சம் எதுவோ அதற்குத் தன் ஆதேயம் (இடத்து நிகழ்பொருள்) ஆகிய புருஷனோடு ஆதேயத்தன்மைச் சம்பந்தமிருக்கின்றது. அது லக்ஷணையாம். வாச்சியத்தைவிட்டு அதிகம் கொள்ளப்படுகின்றமையால் அஜகதிலக்ஷணையாம்.

3-4. அங்ஙனமே "கவிகையாளர் செல்லுகின்றனர்" "விறகை உள்ளே விடு" என்றல்முதலிய வாக்கியங்களிலும் கவிகையாளர் என்னும் பதத்திலும் விறகு என்னும் பதத்திலும் தமது வாச்சியமாகிய குடையோடுகூடிய புருஷன கட்டைகளின் கூட்டம் என்பவற்றோடு அவற்றின் சம்பந்தியாகிய குடையின்றிய புருஷர்களையும் விறகு தாங்கிய புருஷனையும் முறையே கொள்ளவேண்டும். ஆதலால் வாச்சியத்தை விடாமல் அதிகம் கொள்ளப்படுதலின அஜகத்திலக்ஷணையாம்.

இவ்வாற்றால் எங்குச் சுருதிவாக்கியத்தில் ஆத்மாவின் சத்துமுதலிய விசேஷணங்களினுள் ஒன்றல்லது இரண்டு விசேஷணங்களைச் சொல்லியிருக்கின்றதோ அங்கு அவற்றோடு சொல்லப்படாத ஏனைய எல்லா விசேஷணங்களையும் கொள்ளவேண்டும். ஆதலால் அங்கு (அத்தன்மையவிடத்திற்) சித்தாந்தத்திலும் அஜகதிலக்ஷணையை உபயோகமிருக்கின்றது.

ஆதலால் இரண்டுபதங்களிலுமுள்ள தேசகாலங்களாகிய வாச்சியபாகங்களைவிட்டு வஸ்துமாத்திரத்தில் இரண்டு பதங்களுக்கும் *பாகத்தியாகலக்ஷணை இருக்கிறது.

## (மகாவாக்கியங்களில் லக்ஷணை 433-449.)

"தத்துவமஸி" என்னும் மகாவாக்கியத்தில் லக்ஷணையைக் காண்பித்தற்காகத் "தத்" "துவம்" என்னும் பதங்களின் வாச்சியார்த்தங்களை வர்ணிப்பாம்:—

### 433. "தத்" பதத்தின் வாச்சியார்த்தம்.

1. சர்வசக்திமானும் (எல்லா ஆற்றலுடையவனும்),
2. சர்வஞ்ஞனும் (எல்லாமுணர்பவனும்),
3. விபுவும் (வியாபகனும்),
4. ஈசனும் (எல்லாவற்றையும் நடத்துவோனும்),
5. சுதந்திரனும் (கர்மாதீனமில்லாதவனும்),
6. பரோக்ஷனும் (ஜீவப்பிரத்தியக்ஷத்திற்கு விஷயமாகாதவனும்),
7. மாயியும் (மாயையைச் சுவாதீனமுடையவனும்),
8. பந்தமோக்ஷமின்றியவனுமாகிய(பந்தமுள்ளதற்கு மோக்ஷமுளதாம்.

---

* "அவனே இவன்" என்னும் வாக்கியத்திலுள்ள "அவன்" "இவன்" என்னும் இரண்டுபதங்களுக்கும் ஒன்றற்கொன்றுள்ள சமான (ஒரு) வேற்றுமையின் வலியால் ஒரு பொருளுடைமைவடிவ சாமானாதிகரண்யசம்பந்தமிருக்கின்றது. அதனவலியால் அவற்றின் வாச்சியார்த்தமாகிய பரோக்ஷவஸ்து அபரோக்ஷவஸ்துக்களெவையோ அவற்றிற்கு ஏகத்துவம் தோற்றுகின்றது. அவ்விரண்டு வாச்சியங்களும் விரோதிதர்மமுடையனவாயிருத்தலின் அவற்றிற்கு ஐக்கியம் சம்பவியாது. ஆதலால் இங்கு லக்ஷணைசெய்தல் தகுதியாம். இதில் ஜகதி அல்லது அஜகதிலக்ஷணையோ பொருந்தாது. ஆனால் பாகத்தியாகலக்ஷணை பொருந்துகின்றது. ஆதலால் "அவன்" என்னும் பதத்தின் வாச்சியமாகிய பரோக்ஷத்தன்மையோடுகூடிய வஸ்து "இவன்" என்னும் பதத்திற்கு வாச்சியமாகிய அபரோக்ஷத்தன்மையோடுகூடிய வஸ்து என்பவற்றினின்றும் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மைப்பாகத்தை விட்டு அவிரோதியாகிய வஸ்துமாத்திரம் கொள்ளப்படும்.

1. இங்குப் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மைப்பாகங்கட்கு வஸ்துவோடு ஆசிரயத்தன்மைச் சம்பந்தமிருக்கின்றது.

2. வஸ்துபாகத்திற்குத் தனது சொரூபத்தோடு தாதாத்மியசம்பந்தமிருக்கின்றது.

இவ்வெல்லா வாச்சியபாகத்திற்கும் வஸ்துவோடுள்ள ஆசிரயத்தன்மைத்தாதாத்மிய சம்பந்தமெதுவோ அது லக்ஷணையாம்.

1. ஒன்றற்கொன்று விரோதியாகிய பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மை வடிவ வாச்சியபாகங்களை விட்டு,

ஈசுவரன் பந்தமில்லாதவனாகலின் அவனிடத்து மோக்ஷமுமில்லை.)

இத்தனைத் தர்மங்களுடன் கூடிய ஈசுவரசேதனம் "தத்" பதத்தின் வாச்சியார்த்தமாம்.

## 434. "த்வம்" பதவாச்சிய நிரூபணம்.

ஈசுவரதர்மங்களுக்கு விபரீதமான தர்மங்கள் எதனிடத்திலிருக்கின்றனவோ அந்த ஜீவசேதனத்தைத் த்வம்பதத்தின் வாச்சியமாக அறி. இதன் கருத்து இதுவாம்:—

1. ஜீவன் அற்பசக்திமான்;
2. அற்பஞ்ஞன்;
3. பரிச்சின்னன்;
4. அநீசன்;
5. கர்மாதீனன்;

---

2. அவிரோதியான கேவல வஸ்துவடிவ வாச்சியபாகம் கொள்ளப்படுகின்றது.

ஆதலால் இது பாகத்தியாகலக்ஷணையாம்.

அங்ஙனமே "தத்துவமசி" முதலிய மகாவாக்கியங்களிலுள்ள ஜீவேசர்களின் வாசகமான இரண்டுபதங்களுக்கும் ஒன்றற்கொன்று சமானவேற்றுமையின் வலியால் ஒருபொருளுடைமைவடிவ சாமானாதிகரண்ய சம்பந்தமிருக்கின்றது. அதன்வலியால் அவற்றின் வாச்சியமாகிய ஜீவேசுரர்களுக்கு ஏகத்துவம் தோற்றுகின்றது. அவ்விரண்டும் விரோதிதாமமுடையனவாயிருத்தலின் அவற்றிற்கேகத்துவம் சம்பவியாதாகலான் ஆண்டு லக்ஷணை அங்கீகரிக்கத்தக்கதாம். அதில் முன்சொல்லுங்கிரமமாக ஜகதி அல்லது அஜகதிலக்ஷணையோ சம்பவியாது; பாகத்தியாகமே சம்பவிக்கின்றது. ஆதலால் எல்லா மகாவாக்கியங்களிலும் இரண்டிரண்டு பதங்கட்கு வாச்சியமான ஜீவேசுவரர் எவர்களோ அவர்களினின்றும்,

1. தர்மத்தோடுகூடிய உபாதிவடிவ விரோதியான வாச்சியபாகத்தை விட்டு,

2. அவிரோதியான சேதனபாகம் கொள்ளப்படும்.

1. இங்குத் தர்மத்தோடுகூடிய மாயைஅவித்தைகளுக்கு அதிஷ்டானத்தன்மைச்சம்பந்தமிருக்கின்றது.

2. சேதனபாகத்திற்குத் தன்னோடு தாதாத்மியசம்பந்த மிருக்கின்றது.

இவ்வெல்லா வாச்சியத்திற்கும் சேதனபாகத்தோடுள்ள அதிஷ்டானத்தன்மைத் தாதாத்மியசம்பந்தமெதுவோ அது லக்ஷணையாம்.

1. விரோதியாகிய வாச்சியபாகத்தை விட்டு,

2. அவிரோதியான சேதனபாகம் கொள்ளப்படும்.

ஆதலால் இது பாகத்தியாகலக்ஷணை எனப்படுகின்றது.

6. அவித்தியாமோகிதன்;

7. பந்தமோக்ஷமுடையவன்;

8. பிரத்தியக்ஷன். ஏனெனின், தன்ஸ்வரூபம் ஒருவனுக்கும் பரோக்ஷமன்று; பிரத்தியக்ஷமேயாம். ஈசுவரனுடைய ஸ்வரூபம் ஈசுவரனுக்குப் பிரத்தியக்ஷமாயிருந்தாலும் ஜீவர்களுக்குப் பிரத்தியக்ஷமன்று. ஆதலால் பரோக்ஷமெனப்படுகிறது. ஜீவனுடைய ஸ்வரூபத்தை ஜீவனும் ஈசுவரனும் இருவரும் அறிவர். ஆதலால் * பிரத்தியக்ஷமெனப்படுகிறது.

இவ்வளவு தர்மங்களுடன்கூடிய ஜீவசேதனம் "துவம்" பதத்தின் வாச்சியமெனப்படுகிறது.

## 435. வாச்சியார்த்தத்தில் ஏகத்துவத்தின் விரோதமும் லக்ஷணைசெய்யவேண்டுமெனலும்.

ஸாமவேதத்தின் சாந்தோக்கிய உபநிஷத்தில் உத்தாலகமுனி தன் புத்திரனாகிய ஸ்வேதகேதுவுக்கு ஜகத்தை யுண்டுபண்ணும் ஈசுவரனைக் காட்டித் † தத்துவமஸி (அது நீ) யென்று சொன்னார். அதன் வாச்சியார்த்தமிதுவாம்:—

1. "தத்" என்பது அது அதாவது ஜகத்தையுண்டுபண்ணும் சர்வசக்திமானும் சர்வஞ்ஞத்துவமுதலிய தர்மசகிதனுமிருக்கிற ஈசுவரன்.

2. "துவம்" என்பது நீ அதாவது அற்பசக்தி அற்பஞ்ஞத்தன்மை முதலிய தர்மங்களோடுகூடிய ஜீவன். "அஸி" யென்பது இருக்கிறாய்.

இங்கு "அது நீயாயிருக்கிறா" யென்று சொல்லுவதனால் ஈசுவர ஜீவர்களின் ‡ ஒருமை வாச்சியார்த்தத்தால் விளங்குகிறது. அது பொருந்தாது. ஏனெனின்,

---

* ஜீவன் தன்னுடைய நிஜரூபமான அகம்பதலக்ஷியமான கூடஸ்தனை மாத்திரம் அறியாமலிருந்தாலும், அகம்பதத்தின் வாச்சியமான அந்தக்கரணவிசிஷ்டசேதன அல்லது ஸ்தூல சூக்ஷ்ம சங்காதவிசிஷ்டசேதனவடிவத்தால் நான் என்று அறிகிறான். ஆதலால் ஜீவனுக்கு விவேகத்துக்கு முன்னும் விசிஷ்டாத்மவடிவத்தால் தனது சொரூபத்தின் ஞானம் பிரத்தியக்ஷமாம்.

† "தத்துவமசி" என்று சாமவேதத்தின் சாந்தோக்கிய உபநிஷத்தினது 6-வது அத்தியாயத்துள்ள மகாவாக்கியத்தினைச் சுவேதகேதுவாகிய புத்திரனுக்கு உத்தாலகராகிய பிதாவானவர் எப்படி 9 முறை உபதேசஞ்செய்திருக்கின்றனரோ அவ்வெல்லாக்கிரமமும் தத்துவமசி மகாவாக்கிய உபதேசமெனனும் நூலிற் கூறியுளது. விருப்புடையோர் ஆண்டுக் கண்டுகொள்க.

‡ இங்கு வாச்சியார்த்தத்தோடு ஏகத்துவத்தின் விளக்கம் கூறப்பட்டது. அது "தத் துவம்" என்னும் இரண்டு பதங்களின் சாமானாதிகரண்யவடிவ சம்பந்தத்தின் வலியாற் சொல்லப்பட்டது. சாமானாதிகரண்யத்தின் உதாரணத்தோடுகூடிய லக்ஷணத்தை 140-வது பக்கத்தில் † இக்குறியுள்ள டிப்பணத்திற் காண்க.

1. சர்வசக்திமான் அற்பசக்திமான்.

2. சர்வஞ்ஞன் அற்பஞ்ஞன்.

3. வியாபகன் பரிச்சின்னன்.

4. சுதந்திரன் கர்மாதீனன்.

5. பரோக்ஷன் பிரத்தியக்ஷன்.

6. மாயையை ஸ்வாதீனத்தில் வைத்திருப்பவன் அவித்தியாமோகிதன் என்னும் இத்தன்மைய இருவரும் ஒன்றெனச் சொல்லுவது "நெருப்பு குளிர்ந்திருக்கிற" தென்பதற்குச் சமானமாகும். ஆதலால் நல்ல புத்தியுள்ளவனே! நீ லக்ஷணையால் லக்ஷியார்த்தத்தை யறி; வாச்சியார்த்தத்தில் விரோதமிருக்கிறது.

என் அன்பனே! மகாவாக்கியத்தில் ஜகதிலக்ஷணையும் அஜகதிலக்ஷணையும் பொருந்தா. ஆதலால் பாகத்தியாகலக்ஷணையை மகாவாக்கியத்தில் அறியவேண்டியது. அதனால் விரோதம் பரிகாரமாகும்.

## 436. 1. மகாவாக்கியத்தில் ஜகதிலக்ஷணையின் அசம்பவம். ஜகதிசம்பவியாதென்பதைச் சொல்லல்.

சகல வேதாந்தத்தாலும் அறியத்தக்கவை சாக்ஷிசேதனமும் பிரஹ்மசேதனமுமே. அச்சாக்ஷிசேதனமும் பிரஹ்மசேதனமும் துவம்பத தத்பதங்களின் வாச்சியார்த்தங்களில் பிரவேசித்திருக்கின்றன.

ஜகதிலக்ஷணை யிருக்குமிடத்தில் வாச்சியம் முழுவதனையும் விட்டு வாச்சியத்தின் சம்பந்தி வேறு ஞேயமாம். ஆதலால் மகாவாக்கியத்தில் ஜகதிலக்ஷணையை ஒப்பினால் வாச்சியத்தில் வந்த சேதனத்தைவிட வேறு புதிதான ஒன்று ஞேயமாகும். சேதனத்துக்கு வேறானது அசத்து ஜடதுக்கரூபமாம். அதை அறிகிறதினால் புருஷார்த்தம் சித்திக்கிறதில்லை. ஆதலால் மகாவாக்கியத்தில் ஜகதிலக்ஷணையில்லை.

## 437. 2. மகாவாக்கியத்தில் அஜஹதி சம்பவியாமை. அஜகதிலக்ஷணை சம்பவியாதெனக் கூறல்.

அன்பனே! ஜகதிலக்ஷணையிருக்கும இடத்தில் வாச்சியார்த்தம் முழுவதுமிருக்க, வாச்சியத்திற்கதிகமும் கிரகிக்கத்தக்கதாம். மகாவாக்கியத்தில் அஜகதிலக்ஷணையை அங்கீகரித்தால் வாச்சியார்த்தம் முழுவதுமிருக்கும். வாச்சியார்த்தம் மகாவாக்கியத்தில் விரோதத்தோடுகூடியதாயிருக்கிறது.

விரோதத்தை நீக்குவதற்காக லக்ஷணை அங்கீகரிக்கப்படுகின்றது. அஜகதி லக்ஷணையை யங்கீகரிப்பதால் மகாவாக்கியத்தில் விரோதம் நீங்குகிறதில்லை. ஆதலால் அஜகதியின் கிரமத்தை மகாவாக்கியங்களில் விடுக.

## 438. 3. மகாவாக்கியத்தில் பாகத்தியாகத்தை அங்கீகரித்தல்.

### பாகத்தியாக லக்ஷணையின் கிரமம்.

அன்பனே! தத்பதத்தின் வாச்சியம் ஈசுவரன்; துவம்பதத்தின் வாச்சியம் ஜீவன். இவர்களுக்குத் தம்மிலுள்ள விரோததர்மங்களை விட்டுச் சுத்தமாயும் அசங்கமாயுமிருக்கிற சேதனத்தை லக்ஷணையால் அறிக. இது பாகத்தியாகலக்ஷணை. இவ்விடத்தில் இந்தச் சித்தாந்தமுண்டு. ஜீவேசுவரர்களுடைய ஸ்வரூபங்கள் அனேகவிதமாக அத்துவைதக்கிரந்தங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

1. விவரணக்கிரந்தத்தில்

(1) அஞ்ஞானத்திற் பிரதிபிம்பம் ஜீவன்.

(2) பிம்பம் ஈசுவரனெனப்படுகிறான்.

2. வித்தியாரண்யஸ்வாமிகள் மதத்தில்

(1) சுத்தசத்துவகுணஸகித மாயையில் ஆபாஸம் ஈசுவரனும்.

(2) மலினசத்துவகுணசகித அந்தக்கரணத்தின் உபாதானகாரணமான அவித்யாம்சத்தில் ஆபாஸம் ஜீவனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

## 439. ஜீவேசுவரர்களின் சொரூபத்தில் பஞ்சதசிகாரர விவரணகாரர்முதலியோர்களின் மதம்.

### (ஆபாஸப் பிரதிபிம்ப அவச்சேதவாதங்கள் 439-443.)

பஞ்சதசிக்கிரந்தத்தில் வித்தியாரண்யஸ்வாமிகள் அந்தக்கரணத்தின் ஆபாஸனை ஜீவனென்று சொல்லியிருக்கிறார்கள். அங்ஙனமாயினும், அந்தக்கரணத்தின் ஆபாஸனை ஜீவனென்று கொள்ளின், சுழுத்தியில் அந்தக்கரணமிருப்பதில்லை ஆதலால் சுழுத்தியில் ஜீவனுமில்லாதிருக்கவேண்டும். பிராஞ்ஞரூபஜீவன் சுழுத்தியிலிருக்கிறது. ஆதலால் வித்தியாரண்யஸ்வாமிகளுக்கு இது அபிப்பிராயமாய்:—

அந்தக்கரணரூப பரிணாமத்தையடையும் அவித்யாம்சத்திலுள்ள ஆபாஸன் ஜீவன்; அந்த அவித்தியாம்சம் சுழுத்தியிலுமிருக்கிறது. ஆதலால் பிராஞ்ஞனது அபாவமில்லை,

* கேவலம் ஆபாஸங்களே ஜீவேசுவரர்கள் அன்று. ஆனால்,

1. மாயையின் அதிஷ்டான சேதனமும் மாயாசகித ஆபாஸனும் ஈசுவரனும்.

2. அவித்தியாம்சத்தின் அதிஷ்டானசேதனமும் அவித்தியாம்சத்தினோடுகூடிய ஆபாஸனும் ஜீவனும்.

1. ஈசுவரவுபாதியில் சுத்தசத்துவகுணமுண்டு. ஆதலால் ஈசுவரனிடத்தில் சர்வசக்தி சர்வஞ்ஞத்தன்மைமுதலிய தர்மங்கள் இருக்கின்றன.

2. ஜீவனுடைய உபாதியில் மலினசத்துவகுணமுண்டு. ஆதலால் ஜீவனிடத்தில் அற்பசக்தி அற்பஞ்ஞத்தன்மைமுதலிய தர்மங்களிருக்கின்றன.

இதனை ஆபாஸவாதம் என்பர்.

**440.** விவரணமதத்தில் ஜீவேசுவரர்களுக்கு உபாதி ஒரேஅஞ்ஞானமாம். ஆதலால் இவ்விருவரும் அற்பஞ்ஞர்களாயிருக்கவேண்டும். அங்ஙனமாயினும், எந்த உபாதியில் பிரதிபிம்பமுண்டாகிறதோ அதன் சுபாவம் இதுவாம்:— பிரதிபிம்பத்தில் தன் தோஷத்தை யுண்டுபண்ணுகிறது; பிம்பத்திலுண்டுபண்ணுகிறதில்லை.

கண்ணாடியாகிய உபாதியில் முகத்தின் பிரதிபிம்பமுண்டாகிறது. கழுத்தின்பேரிலிருக்கிற முகம் பிம்பமாம். அங்குக் கண்ணாடியாகிய உபாதியின் பொன்மை கருமை சிறுமைமுதலிய பல தோஷங்கள் பிரதிபிம்பத்தில் தோற்றுகின்றன; கழுத்தின்பேரிலிருக்கும் பிம்பத்தில் தோற்றுகிறதில்லை. அதுபோல் கண்ணாடிஸ்தானத்து அஞ்ஞானத்திலுள்ள பிரதிபிம்பரூபமான ஜீவனிடத்தில் அஞ்ஞானத்தாலுண்டான அற்பஞ்ஞத்தன்மைமுதலிய தோ

---

* கேவலசிதாபாசரே ஜீவேசுரர்களல்லர். ஏனெனின் தனது தாதாத்மிய சம்பந்தத்தால் அதிஷ்டானத்தினும் வேறாகாததாய் எது தோற்றுகின்றதோ அது ஆரோபிதமெனப்படுகின்றது. ஆரோபிதம் அதிஷ்டானத்தினும் வேறுந்தன்மையாகத் தோற்றுகிறதில்லை. எங்ஙனம்: ரஜ்ஜுவில் சர்ப்பம் ஆரோபிதமாயிருத்தலால் அது ரஜ்ஜுவின் வேறாய்த்தோற்றுகிறதில்லை. ஆனால் ரச்சுவின் வேறாகாததாய் ரச்சுவின் சொரூபத்தை மறைத்துச் சர்ப்பம் தோற்றுகிறது. அங்ஙனமே மாயை அவித்தையிலுள்ள ஆபாசர்களும் ஆரோபிதர்களாயிருத்தலின் அவர்களுக்கு அதிஷ்டான கூடஸ்தபிரஹ்மங்களுக்கு வேறாகத்தோற்றுதல் சம்பவியாது. ஆனால் அவ்விரண்டினுக்கும் தனது அதிஷ்டான கூடஸ்தபிரஹ்மங்களோடு தாதாத்மிய சம்பந்தவடிவ ஏகத்துவத்தையடைந்து அவற்றின் சொரூபத்தை மறைத்தே தோற்றுகின்றது. ஆதலால் அதிஷ்டான சேதனமும் உபாதியோடுகூடிய சிதாபாசனும் ஜீவன் அல்லது ஈசுவரனும்.

ஷங்கள் இருக்கின்றன. பிம்பரூப * ஈசுவரனிடத்தில் தோஷங்களில்லை. ஆதலால்,

1. ஈசுவரனிடத்தில் சர்வஞ்ஞத்தன்மை முதலியவை யிருக்கின்றன. ஜீவனிடத்தில் அற்பஞ்ஞத்தன்மை முதலியவை இருக்கின்றன.

441. ‘ ஆபாஸத்துக்கும் பிரதிபிம்பத்துக்கும் இவ்வளவு பேதமுண்டு:— ஆபாஸபக்ஷத்தில் ஆபாஸன் மித்தை. பிரதிபிம்பபக்ஷத்தில் பிரதிபிம்பம் மித்தையன்று; சத்தியமாம். ஏனெனின்,

பிரதிபிம்பவாதியின்' சித்தாந்தம் இதுவாம் :— கண்ணாடியில் தோற்றும் முகத்தின் பிரதிபிம்பம் முகத்தின் சாயையன்று. ஏனெனின்,

1. சாயையின் சுபாவம் இதுவாம்:— எந்தத் திக்கில் சாயையுடையவன் முகமும் பின்புறமும் இருக்கின்றனவோ அந்தத் திக்கிலேயே சாயையின் முகமும் பின்புறமும் இருக்கின்றன.

2. கண்ணாடியில் பிரதிபிம்பத்தின் முகமும் பின்புறமும் பிம்பத்துக்கு எதிராயிருக்கின்றன. ஆதலால் கண்ணாடியில் சாயாரூபப் பிரதிபிம்பமில்லை. ஆனால் கண்ணாடியை விஷயமாக்குவதற்காக நேத்திரவாயிலாகப் புறப்பட்ட அந்தக்கரணத்தின் விருத்தி கண்ணாடியை விஷயமாக்கி அதேகாலத்தில் கண்ணாடியினின்று திரும்பிக் கழுத்திலிருக்கும் முகத்தை விஷயமாக்குகிறது.

சுற்றும் வேகத்தினால் கொள்ளிக்கட்டையின் சக்கரந்தோற்றுகிறது; அது சக்கரமன்று. அதுபோலக் கண்ணாடியையும் முகத்தையும் விஷயமாக்குவதில் விருத்தியின் வேகத்தால் முகம் கண்ணாடியிலிருக்கிறதாகத் தோன்றுகிறது. ஆனால் முகம் கழுத்தின்பேரிலேயே இருக்கிறது; அக்கண்ணாடியிலில்லை; சாயையுமன்று. விருத்தியின் வேகத்தால கண்ணாடியில் உண்டாகும் முகத்தின் தோற்றம் எதுவோ அதுவே பிரதிபிம்பமாம்.

இவ்விதத்தால் கண்ணாடியாகிய உபாதியின் சம்பந்தத்தால் கழுத்தின் பேரிலுள்ள முகமே பிம்பரூபமாயும் பிரதிபிம்பரூபமாயும் தோற்றுகிறது. விசாரித்துப்பார்க்குமளவில் பிம்பப்பிரதிபிம்பபாவங்களில்லை. அதுபோல் அஞ்ஞானரூபஉபாதியின் சம்பந்தத்தால் அசங்கசேதனத்தில் பிம்பஸ்தா

* பிரதிபிம்பவாதத்தில் சுத்தப்பிரஹ்மமே ஈசுவரனும். அதில் சர்வஞ்ஞத்தன்மைமுதலியதர்மங்களும் சம்பவியா. அங்ஙனமாயினும், ஜீவனது அற்பஞ்ஞத்தன்மைமுதலியதர்மங்களையபேக்ஷித்துச் சுத்தப்பிரஹ்மத்தில பிம்பத்தன்மை ஈசுவரத்தன்மை சர்வஞ்ஞத்தன்மை என்றல் முதலிய தர்மங்களின் ஆரோபமுண்டாகின்றது. வாஸ்தவமாக ஜீவேசுவரர்கள் இருவரும் சுத்தப்பிரஹ்மவடிவம். அதில் எத்தர்மமும் சம்பவியாது.

னத்து ஈசுவரபாவமும் பிரதிபிம்பஸ்தானத்து ஜீவபாவமும் பிரதீதியாகின்றன. விசாரித்துப்பார்க்குமளவில் ஈசுவரத்தன்மையும ஜீவத்தன்மையும் இல்லை.

அஞ்ஞானத்தால் சேதனத்தில் உண்டாம் ஜீவத்தன்மையின் தோற்றமும் அஞ்ஞானத்திலுள்ள பிரதிபிம்ப மென்று சொல்லப்படுகிறது. ஆதலால் பிம்பபாவமும் பிரதிபிம்பபாவமும் மித்தையாம். ஸ்வரூபமாகப் பிம்பப்பிரதிபிம்பங்கள் சத்தியம். ஏனெனின், பிம்பப்பிரதிபிம்பங்களின் ஸ்வரூபம் திருஷ்டாந்தத்திலோ முகமாம்; தார்ஷ்டாந்தத்திலோ சேதனமாம். அந்த முகமும் சேதனமும் சத்தியமாம்.

1. இவ்விதத்தால் பிரதிபிம்பம் ஸ்வரூபமாகச் சத்தியமாயிருத்தலால் சத்தியமெனப்படுகிறது.

2. ஆபாஸத்தின் ஸ்வரூபம் சாயையெனக் கொண்டிருக்கின்றனர்; ஆதலால் மித்தையாம்.

இது ஆபாஸப்பிரதிபிம்ப வாதங்களின் * பேதம்.

---

* இங்கு ஓர் விசேஷமுளது:— ஜலநிறைந்த அநேக கடங்களில் சூரியனது அநேகப் பிரதிபிம்ப (ஆபாச)ங்களுள. அவற்றுள்,

(1) ஒவ்வொரு பிரதிபிம்பம் வியஷ்டியெனப்படும்.

(2) எல்லாம் சேர்ந்து ஒரு சமஷ்டிப்பிரதிபிம்பமெனப்படும்.

அவற்றினிடையில் எந்தப் பிரதிபிம்பம் ஜலத்தின் அபாவத்தால் அபாவமாகின்றதோ அதற்குச் சூரியனோடு அபேதம் சொல்லப்படுகின்றது; பிறவற்றிற்கில்லை. இவ்வாறு எல்லாப் பிரதிபிம்பங்களுக்கும் எப்போது அபாவமுண்டாகிறதோ அப்போது அச்சமஷ்டிப் பிரதிபிம்பத்திற்குச் சூரியனோடு அபேதம் சொல்லப்படுகின்றது.

அங்ஙனமே கூறிய இவ்வாபாசவாதியின் பட்சத்தில்,

1. அநேக புத்திவடிவ அல்லது அவித்தையின் அம்சவடிவ ஜலத்தில் பிரஹ்மத்தின் அநேகப் பிரதிபிம்ப (ஆபாச)ங்களுள. அவற்றில் ஒவ்வொரு பிரதிபிம்பம் வியஷ்டியெனப்படும்.

2. எல்லாஞ் சேர்ந்து ஒரு சமஷ்டிப்பிரதிபிம்பமெனப்படும்.

அவற்றில்,

1. அநேக வியஷ்டிப்பிரதிபிம்பம் ஜீவனும்.

2. ஒரு சமஷ்டிப்பிரதிபிம்பம் ஈசுவரனும்.

அவற்றினிடையில் எந்தச் ஜீவனுக்கு உபாதியின் அபாவத்தால் அபாவமுண்டாகின்றதோ அதற்குப் பிரஹ்மத்தோடு உபசாரமாத்திரமான அபேதம் சொல்லப்படுகின்றது.

இவ்வாறு எல்லா ஜீவர்களின் அபாவம் எப்போதுண்டாகின்றதோ அப்போது அச்சமஷ்டிப் பிரதிபிம்பவடிவ ஈசுவரனுக்கு விதேகமோக்ஷமுண்டாகும்.

**442.** சில கிரந்தங்களில்,

1. சுத்தசத்துவகுணசகித மாயாவிசிஷ்டசேதனம் ஈசுவரனெனப்படுகின்றது.

---

1. இந்தப் பட்சத்தில் ஜகப்பிரஹ்மங்களின் அல்லது ஜீவப்பிரஹ்மங்களின் அபேதத்தைப் போதிக்கும் சுருதிவாக்கியங்களில் பாகத்தியாகலட்சணையின் அங்கீகாரமில்லை. ஆனால் "கங்கையிற் கிராமம்" என்னும் வாக்கியத்தினைப்போல வாச்சிய முழுவதினையும் விட்டு அதன் சம்பந்தியாகிய பிரஹ்மத்தைக் கொள்ளுதலால் ஜகதிலக்ஷணையின் அங்கீகாரமுண்டு. இது அதிஷ்டான கூடஸ்தனைவிட்டுக் கேவல புத்தியோடுகூடிய அல்லது அவித்தையோடுகூடிய ஆபாசனை ஜீவனென்று கொள்ளும் ஓர் வேதாந்தத்தின் ஏகதேசியாகிய ஆபாசவாதியின் மதமாம்.

2. இந்தப் பட்சத்தில் புருஷார்த்த (மோக்ஷ) த்தின் பொருட்டுப் பிரயத்தனஞ் செய்யும் ஜீவன் மோட்சதசையில் இல்லையாகலின், "வட்டிக்காசைப்பட்டு முதலுமிழந்தான்" என்பதனைப்போல மோட்சத்தையடையும்பொருட்டுப் பிரயத்தனஞ்செய்யும் ஜீவனது சொரூபம் நஷ்டமாகும் என்னும் அநர்த்தத்தை யறிந்து இச்சித்தாந்தத்தில் எம்முமுக்ஷுவுக்கும் பிரவிருத்தியுண்டாகாது.

ஆதலால் இப்பட்சம் நலமுடையதன்று.

பஞ்சதசியிலும் இவ்விசாரசாகரமுதலிய நூல்களிலும்,

1. அதிஷ்டான கூடஸ்தனோடு சாபாஸபுத்தி அல்லது அவித்தை ஜீவனெனக் கொள்ளப்படுகின்றது.

2. அதிஷ்டானப் பிரஹ்மத்தோடு சாபாஸமாயை ஈசுவரனெனக்கொள்ளப் பட்டிருக்கின்றது.

இதில் வாச்சியபாகத்தின் ஏகதேசத்தை விட்டு ஏகதேசத்தைக் கொள்ளுதலால் மகாவாக்கியமுதலியவிடங்களுள் சித்தாந்தசம்மதமான பாகத்தியாகலக்ஷணையே கொள்ளப்படுகின்றது.

இந்தப் பட்சத்தில் முக்கிய ஆகாசத்தின் திருஷ்டாந்தமே அங்கீகாரமாம். அவ்வாகாச திருஷ்டாந்தத்தின் விஸ்தாரவர்ணனம் பஞ்சதசியின் சித்திரதீபத்திலும் நூலின் நான்காவது தரங்கத்திலும் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தப் பட்சத்தின்படி,

1. ஆகாயத்தின் அல்லது முகமுதலியவற்றின் பிரதிபிம்பத்திற்கு அதிஷ்டானவடிவ உபாதானம் கடாகாசம் அல்லது கண்ணாடி முதலியனவாம்.

2. பரிணாமி உபாதானம் ஜலம் அவித்தை முதலியனவாம்.

3. நிமித்தகாரணம் மகாகாசமும் முகமுதலியபிம்பமும் உபாதியின் சந்நிதியுமாம்.

அந்தப் பிரதிபிம்பத்தைப் பாதிக்கத் தனது பிம்பமாகிய முகமுதலியவற்றோடு அபேதமுண்டாகிறது. அங்ஙனமாயினும், ஜலம் கண்ணாடிமுதலிய பிம்பத்தின் சந்நிதிவடிவ நிமித்தங்கள் எதுவரையில் உளவோ, அதுவரையில் பாதிக்கப்பட்ட பிரதிபிம்பத்திற்கும் அநுவிருத்தி (பிரதீதி) உண்டாகின்றது. இதனையே பாதிதாநுவிருத்தியென்பர்.

அங்ஙனமே,

1. சிதாபாசவடிவ ஜீவனது அதிஷ்டானவடிவ உபாதானம் கூடஸ்தனும்,

2. பரிணாமி உபாதானம் நானாபுத்தி அல்லது அஞ்ஞான அம்சமாம்,

2. மலினசத்துவகுணசகித அந்தக்கரணத்தின் உபாதானமான அவித்தையின் அம்சவிசிஷ்டசேதனம் ஜீவனென்று சொல்லப்படுகிறது.

இதனை அவச்சேதவாத மென்பர்.

---

3. பிராரப்தம் நிமித்தகாரணமாம்.

அவற்றினின்றும் எந்தச்சிதாபாசன் புத்தி அல்லது அஞ்ஞான அம்சமாகிய உபாதியே கூடிய தனது சொரூபத்தைப் பாதித்துக் கூடஸ்தன் யான் என்றல் முதலிய ஜீவவாசக பதங்களின் லட்சியார்த்தமான அதிஷ்டானமாகிய தனது நிஜரூபமெதுவோ, அதன் அபிமானத்தால் அவ்வகம்பதத்தின் லட்சியமான கூடஸ்தனது பிம்பவடிவப்பிரஹ்மத்தோடு முன்னமே சித்தித்துள்ள ஏகத்துவத்தை அறிகின்றானே அவன் முத்தனாகின்றான். மற்றையவன் பெத்தனாகின்றான்.

முற்கூறிய "அகம் பிரஹ்மாஸ்மி" என்னும் ஞானம் உண்டாகுங்காலத்திலேயே அவித்தைவடிவ உபாதானத்தின் நாசத்தால் அதன் காரியமான ஜகத்தோடு கூடிய சிதாபாசனது பாதம் உண்டாகின்றது. அங்ஙனமாயினும், எதுவரையிலும் பிராரப்தமாகிய நிமித்தமிருக்கின்றதோ அதுவரையில் பாதமாகிய (மித்தையென்றறிந்த) தேகமுதலிய ஜகத்தோடு சிதாபாசனது அநுவிருத்தி (பிரதீதி) உண்டாகின்றது. எப்போது பிராரப்தத்திற்கு முடிவுண்டாகுமோ அப்போது அந்தப்பிரதீதியின் அபாவமுண்டாகின்றது. அதுவே அதன் விதேகமோக்ஷமாம். முற்கூறிய பக்ஷத்தினும் இப்பக்ஷம் உத்தமமாம்.

பிம்பப்பிரதிபிம்பவாதத்தில்,

1. பிரதிபிம்பத்தின் அதிஷ்டானமாகிய உபாதானம் பிம்பமாம்.

2. பரிணாமிஉபாதானம் முகமுதலிய பிம்பத்தின் அஞ்ஞானமாம்.

3. அதன் நிமித்தகாரணம் கண்ணாடி பிரதிபிம்பங்களின் சந்நிதி (அண்மை) முதலியனவாம்.

பிம்பப்பிரதிபிம்பங்களின் அபேதஞானத்தால் பிரதிபிம்பத்தன்மையின் நிவிருத்தி உண்டாகின்றது. ஆனால் எதுவரையில் பிம்பகண்ணாடிகளின் சந்நிதியாகிய உபாதி (நிமித்தம்) இருக்கின்றதோ அதுவரையில் மித்தையென்றறிந்த பிரதிபிம்பத்தன்மையின்றிய பிரதிபிம்பத்தினது சொரூபத்தின் பிரதீதியுண்டாகின்றது. எப்போது கண்ணாடிமுதலியவற்றின் நீக்கமுண்டாகின்றதோ அப்போது பிரதிபிம்பத்தினது பிரதீதிக்கு அபாவமுண்டாகின்றது.

1. அங்ஙனமே ஓரே அஞ்ஞானத்தால் சுத்தப்பிரஹ்மமாகிய பிம்பத்தில் ஜீவவடிவப் பிரதிபிம்பத்தன்மை தோற்றுகின்றது. அதன் உபாதானம் அஞ்ஞானமும் அதிஷ்டானம் சுத்தப்பிரஹ்மமுமாம்.

2. நிமித்தகாரணம் அதிருஷ்டமாம். எப்போதந்தப் பிரதிபிம்பத்திற்குத் தனது பிம்பமாகிய பிரஹ்மத்தோடு தனது ஏகத்துவம் தோற்றுகின்றதோ அப்போது அதன் பிரதிபிம்பத்தன்மை (ஜீவத்தன்மை) நீங்குகின்றது. ஆனால் எதுவரையில் பிராரப்தவடிவ உபாதி (நிமித்தம்) இருக்கின்றதோ அதுவரையில் பாதிக்கப்பட்ட ஜகத்தோடு இச்சீவனது ஜீவத்தன்மையில்லாத சொரூபத்தின் பிரதீதியுண்டாகின்றது. எப்போது பிராரப்தத்திற்கு அந்தமுண்டாகுமோ அப்போது அந்தப் பிரதீதிக்கு அபாவமுண்டாகக் கேவல சுத்தப்பிரஹ்மம் எஞ்சியிருக்கும். அதுவே அதன் விதேகமோக்ஷமாம்.

இந்தப்பக்ஷத்தில் சொப்பனத்தினைப்போல முக்கியமான ஒரு ஜீவனது அங்கீகாரமாம். எந்த நாநா ஜீவர்கள் தோற்றுகின்றனரோ அவர்கள் ஜீவாபாசர்கள். இதில்

வேதாந்தத்தின் பிரக்கிரியைகள் *எல்லாம் அத்வைதஆத்மாவையறிவித்தற் பொருட்டாம். ஆதலால் எந்தப்பிரக்கிரியையால் ஜிஞ்ஞாசுவுக்குப் போதமுண்டாகுமோ, அந்தப் பிரக்கிரியையே அவனுக்கு நலமுடையதாம். அங்ஙனமாயினும் வாக்கியவிருத்தியிலும் .உபதேசஸஹஸ்ரி என்னுங் கிரந்தத்திலும் பாஷியகாரரால் ஆபாஸவாதமே எழுதப்பட்டிருக்கிறது.

ஆதலால் ஆபாஸவாதமே முக்கியமாம்.

## 443. நான்கு மகாவாக்கியங்களிலும் பாகத்தியாகத்தைக் காட்டுதல்.

அதன்படி

1. (1) மாயை
   (2) மாயையிலுள்ள ஆபாஸன்
   (3) மாயையின் அதிஷ்டான சேதனம்

இம்மூன்றுஞ்சேர்ந்து சர்வசக்தி சர்வஞ்ஞத்தன்மைமுதலிய தர்மங்களுடன்கூடிய ஈசுவரன் எனப்படும். அதுவேதத்பதத்தின் வாச்சியமாம்.

2. (1) வியஷ்டி அவித்தை
   (2) அதில் ஆபாஸம்
   (3) அதன் அதிஷ்டான சேதனம்

இம்மூன்றுஞ்சேர்ந்து அற்பசக்தி அற்பஞ்ஞத்தன்மைமுதலிய தர்மங்களுடன் கூடிய ஜீவன் எனப்படும். அது துவம்பதத்தின் வாச்சியமாம்.

இவ்விரண்டன் ஏகத்துவத்தையும் தத்துவமஸிவாக்கியம் போதிக்கிறது. அது பொருந்தாது. ஆதலால்,

1. ஆபாஸசகிதமாயை, மாயையாலுண்டான சர்வசக்தி சர்வஞ்ஞத்தன்மைமுதலிய தர்மங்கள் என்னும் இத்துணை வாச்சியபாகங்களைவிட்டு, சேதனபாகத்தில் தத்பதத்திற்குப் பாகத்தியாகலக்ஷணை சித்திக்கிறது.

---

மூன்று சத்தையின் அங்கீகாரமுண்டு. ஆதலால் இதுவும் வியாவகாரிகபக்ஷமெனப்படும். ஆனால் மற்றெல்லா வியாவகாரிகபக்ஷங்களுள்ளும் இப்பக்ஷம் உத்தமமானது.

இவ்வாற்றால் ஆபாசவாதப் பிரதிபிம்பவாதங்களுக்குப் பேதமுண்டு.

* எல்லாம் என்னும்பதத்தால் காரியகாரண உபாதிவாதம், அவச்சின்ன அநவச்சின்னவாதம், திருஷ்டி சிருஷ்டிவாதமுதலியபக்ஷங்கள் கிரகிக்கத்தக்கனவாம். வேதாந்தத்தினது அநேகபக்ஷங்களின் அநுவாதம் அப்பய்யதீக்ஷிதராற் செய்யப்பட்ட சித்தாந்தலேசம் என்னும் கிரந்தத்திலும் ஸ்ரீ விருத்திப்பிரபாகரம் என்னும் கிரந்தத்தின் எட்டாவது பிரகாசத்திலும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது.

2. அப்படியே ஆபாஸசகித அவித்தியாம்சம் அவித்தையாலுண்டான அற்பசக்தி அற்பஞ்ஞத்தன்மைமுதலிய தர்மங்கள் துவம்பதத்தின் வாச்சிய பாகத்தைவிட்டுச் சேதனபாகத்தில் துவம்பதத்திற்குப் பாகத்தியாகலக்ஷணை சித்திக்கிறது.

இவ்வாறு பாகத்தியாகலக்ஷணையால்,

1. ஈசுவர ஜீவர்களின் ஸ்வரூபத்திலுள்ள லக்ஷியமான சேதனபாகங்களின் ஒருமையைத் * "தத்துவமஸி" என்னும் மகாவாக்கியம் போதிக்கிறது.

2. அதுபோல † "அயம் ஆத்மா பிரஹ்மம்" என்னும் மகாவாக்கியத்தில்,

(1) ஆத்மபதத்துக்கு ஜீவன் வாச்சியம்,

(2) பிரஹ்மபதத்துக்கு ஈசுவரன் வாச்சியம். பிரஹ்மபதத்துக்குச் சுத்தம் வாச்சியமன்று ஈசுவரனே வாச்சியமென்பது நாலாவது தரங்கத்தில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

முன்போல் இரண்டு பதங்களுக்கும் லக்ஷணையிருக்கிறது.

(3) லக்ஷியார்த்தம் பரோக்ஷமன்று என்னும் பொருளை அறிவித்தற்காக அயமென்னும் பதமிருக்கிறது. "அயம்" அதாவது எல்லோருக்கும் ‡ அபரோக்ஷமான ஆத்மாவே பிரஹ்மமென்பது வாக்கியத்தின் அர்த்தமாம்.

---

* இந்தத் "தத்துவமஸி" என்னும் வாக்கியம் உபதேசவாக்கியமெனப்படும். இதனின் வேறாகிய மூன்றும் அநுபவவாக்கியமெனப்படும்.

† இது அதர்வணவேதத்தின் மாண்டூக்கிய உபநிஷத்திலுள்ள மகாவாக்கியமாம். இதன் விசேஷப்பிரசங்கம் ஸ்ரீ பஞ்சதசியினது மகாவாக்கியவிவேகத்தின் டிப்பணியிலும் மாண்டூக்கியபாஷ்யுரையிலும் எழுதப்பட்டிருக்கிறது.

‡ அபரோக்ஷம் இருவகையினதாம்.—

1. ஒன்றே சுவயம்பிரகாசமாதலால் புத்திவிருத்திவடிவ ஞானத்தின் விஷயமாகிய ஆத்மாவின் சொரூபம் எதுவோ அது அபரோக்ஷமாம்.

2. மற்றையது "யான் சொப்பிரகாச ஆத்மா" என்று புத்தியினால் பார்த்தல் எதுவோ அதுவும் அபரோக்ஷமெனப்படும்.

அவற்றில், முதலாவது அபரோக்ஷம் நித்தியமாம் (எப்போதுமிருப்பதாம்); இரண்டாவது (புத்திவிருத்திவடிவ) அபரோக்ஷம் அநித்தியமாம் (எப்போதாயினும் உண்டாவதாம்).

3. * "அஹம் பிரஹ்மாஸ்மி" என்னும் மகாவாக்கியத்தில்,

(1) அஹம் பதத்துக்கு ஜீவன் வாச்சியமாம்

(2) பிரஹ்ம பதத்துக்கு ஈசுவரன் வாச்சியமாம் என்னும்

இவ்விரண்டு பதங்களுக்கும் சேதனபாகத்தில் லக்ஷணையுண்டு.

"நான் பிரஹ்மம்" என்பது வாக்கியத்தின் அர்த்தமாம்.

4. † "பிரஞ்ஞானம் ஆனந்தம் பிரஹ்மம்" என்னும் மகாவாக்கியத்தில்,

(1) பிரஞ்ஞானபதத்துக்கு ஜீவன் வாச்சியம்;

(2) பிரஹ்மபதத்துக்கு ஈசுவரன் வாச்சியம்;

இலக்ஷணை முன்போலாம்.

(3) இலக்ஷியமான பிரஹ்மாத்மா ஆனந்தகுணமுடையதன்று; ஆனந்தரூபமே என்னும் அர்த்தத்தை அறிவித்தற்பொருட்டு ஆனந்தம் என்னும் பதமிருக்கிறது.

ஆத்மாவுக்கு அபின்னமான பிரஹ்மம் ஆனந்தரூபமென்பது வாக்கியார்த்தம்.

மகாவாக்கியத்தில் பாகத்தியாகலக்ஷணை இருக்கிறது. அதுபோல அந்நியவாக்கியங்களிலும் சத்தியம் ஞானம் அனந்தம் என்னும் பதங்கள் சுத்தப்பிரஹ்மத்தைப் பாகத்தியாகலக்ஷணையால் போதிக்கின்றன; சக்தியால் போதிக்கிறதில்லை; ஏனெனின் சுத்தப்பிரஹ்மம் எந்தப்பதத்துக்கும் வாச்சியமன்றென்பது சித்தாந்தம். ஆதலால் பதங்களெல்லாம் விசிஷ்டத்தின் வாசகங்களும் சுத்தத்தின் லக்ஷகங்களு (இலக்ஷணையினாற் பொருளுணர்த்துவனவு)மாம்.

1. மாயையின் ஆபேக்ஷிகசத்தியத்தன்மையும் சேதனத்தின் நிரபேக்ஷிகசத்தியத்தன்மையும் சேர்ந்து சத்தியமென்னும் பதத்தின் வாச்சியமாகிறது. நிரபேக்ஷிகசத்தியம் லக்ஷியமாம்.

---

* இது யஜுர்வேதத்தின் பிருகதாரணியக உபநிஷத்திலுள்ள மகாவாக்கியமாம். இதன் விசேஷப்பிரசங்கம் ஸ்ரீ பஞ்சதசியின் மகாவாக்கியத்தின் டிப்பணியிலும் பிருகதாரணியகத்தின் பாஷாவுரையிலும் எழுதப்பட்டிருக்கிறது.

† இது இருக்குவேதத்தின் ஐதரேயவுபநிஷத்தின் மகாவாக்கியமாம். இதன் விசேஷப்பிரசங்கம் ஸ்ரீ பஞ்சதசியின் மகாவாக்கியவிவேகத்தின் டிப்பணியில் எழுதப்பட்டிருக்கிறது.

2. புத்திவிருத்திரூபஞானமும் ஸ்வயம்பிரகாசஞானமும் இரண்டுஞ் சேரின் ஞானபதத்தின் வாச்சியமாம்; ஸ்வயம்பிரகாசபாகம் லக்ஷியமாம்.

3. விஷயசம்பந்தத்தாலுண்டாம் சுகாகாரமான சாத்துவிக அந்தக்கரணவிருத்தியும பரமப்பிரேமைக்கிடமான ஸ்வரூபசுகமுமாகிய இரண்டும்சேர்ந்து ஆனந்தபதத்தின் வாச்சியமாம். விருத்திபாகத்தை விட்டு ஸ்வரூபபாகம் லக்ஷியமாம்.

இவ்விதமாகச் சகலபதங்களுக்கும் சுத்தப்பிரஹ்மத்தில் லக்ஷணை சம்க்ஷேபசாரீரகத்தில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

## 444. முற்கூறிய பொருளின் சுருக்கம்.

“சிவப்பு ஓடுகிறது” என்னுமிடத்தில் அஜகதிலக்ஷணையை அறி. “அதுவே இது” என்னுமிடத்தில் பாகத்தியாகலக்ஷணை யிருக்கிறது. இதற்கு ஜகதிஅஜகதில்க்ஷணையென்பது வேறு பெயர். “தத்துவமஸி” முதலிய மகாவாக்கியங்களில் ஜகதிலக்ஷணையையும் அஜகதிலக்ஷணையையும் நீக்கிப் பாகத்தியாகலக்ஷணை காட்டப்பட்டிருக்கிறது. பிரஹ்மம் எந்தப்பதத்துக்கும் வாச்சியமல்லவென்று வேதஞ்சொல்லுகிறது. ஆதலால் எல்லாப்பதங்களிலும் நீ இப்படியே அறியவேண்டியது. மாயையின்ஆபேக்ஷிகசத்தும் சைதன்னியத்தின் நிரபேக்ஷிகசத்தும் சேர்ந்து தத்பதத்தின் வாச்சியமாகின்றன. இவற்றில் நிரபேக்ஷிகசத்து லக்ஷியம். ஸ்வயம்பிரகாசஞானமும் புத்திவிருத்திஞானமும் சேர்ந்து ஞானபதத்தின் வாச்சியமாமென்று அறி. இவற்றில் ஸ்வயம்பிரகாசஞானம் லக்ஷியம். ஆத்மாவும் விஷயசுகமும் சேர்ந்து ஆநந்தபதத்தின் வாச்சியமாம். இவற்றில் விஷயசுகத்தை விட்டு ஆத்மசுகத்தை ஆனந்தபதத்தின் லக்ஷியமாக அறிக.

## 445. பிரசினம்:—இரண்டு பதங்களிலும் லக்ஷணையை அங்கீகரித்தல் நிஷ்பிரயோஜனமாம்.

மகாவாக்கியங்களில் விரோதத்தை நீக்குதற்காக இரண்டு பதங்களிலும் லக்ஷணை அங்கீகரிக்கப்பட்டது. அங்கு ஒருபதத்தில் லக்ஷணையை அங்கீகரிப்பதினாலேயே விரோதம நிவிருத்தியாய்விடும். இரணடு பதங்களிலும் லக்ஷணையை அங்கீகரிப்பது நிஷ்பிரயோஜனமென்று சிலர் சொல்லுகிறார்கள். இதன் தாற்பரியம் இதுவாம்:—சர்வஞ்ஞத்தன்மைமுதலியவற்றோடு கூடியதற்கு அற்பஞ்ஞத்தன்மைமுதலியவற்றோடுகூடியதோடு ஏகத்துவம் பொருந்தாது. என்றாலும் ஒருபதத்தின் லக்ஷியமாகிய சுத்தத்துக்கு விசிஷ்டத்துடன் ஏகத்துவம் பொருந்தும்.

திருஷ்டாந்தம்:—

1. "சூத்திரமனிதன் பிராஹ்மணன்" என்றிவ்வாறு சூத்திரத்துவ தர்மத்துடன்கூடிய மனிதனுக்குப் பிராஹ்மணத்துவதர்மத்தோடுகூடியவனுடன் ஏகத்துவஞ் சொல்வது விருத்தமாம்.

2. மனிதன் பிராஹ்மணன் என்றிவ்வாறு சூத்திரத்துவ தர்மமில்லாத சுத்தமனிதனுக்குப் பிராமணத்துவத்தோடுகூடியதன்மையைச் சொல்லுவதில் விரோதமில்லை.

அதுபோல,

1. அற்பஞ்ஞத்தன்மைமுதலிய தர்மங்களுடன்கூடிய சேதனத்துக்கும் சர்வஞ்ஞத்துவமுதலியதர்மங்களுடன்கூடின சேதனத்துக்கும் ஏகத்துவம் விருத்தமுமாம்.

2. ஆனால் ஜீவேசுர வாசகபதங்களுக்குச் சேதனத்தில் லக்ஷணையால் சேதனமாத்திரத்துக்குச் சர்வஞ்ஞத்தன்மைமுதலிய தர்மங்களோடுகூடியதோடாவது அற்பஞ்ஞத்தன்மைமுதலிய தர்மங்களுடன்கூடியதோடாவது ஏகத்துவம் சொல்லுவதில் விரோதமில்லை.

ஆதலால் இரண்டு பதங்களில் லக்ஷணையை அங்கீகரிப்பதில் யாதொரு யுக்தியுமில்லை.

## (முன்பிரசினத்தின் உத்தரம் 446-450.)

## 446. சமாதானம்:—இரண்டு பதங்களிலும் லக்ஷணை பயனுடையதாமெனல்.

ஒரு பதத்தில் லக்ஷணையை அங்கீகரிக்கிறவனை இரண்டு பதங்களில் எந்தப்பதத்தில் லக்ஷணையிருக்கிறது என்று கேட்பாம்.

1. எல்லா மகாவாக்கியங்களின் முதற்பதத்திலும் லக்ஷணையுண்டு; இரண்டாவதில் இல்லை.

2. அல்லது இரண்டாவது பதத்தில் லக்ஷணை எல்லாவாக்கியங்களிலுமுண்டு முதற்பதத்திலில்லையென்று சொல்லுவானாயின், சிஷ்யனே! அவனைப் பார்த்து இது சொல்வாயாக. மூடனே! முதற்பதத்திலாவது இரண்டாம் பதத்திலாவது நியமமாக லக்ஷணை எல்லா வாக்கியங்களிலும் இருக்கிறதாகக் கொள்ளும்பக்ஷத்தில் வாக்கியங்களுக்கும் பரஸ்பரம் விரோதமுண்டாகும். ஏனெனின்,

1. மூன்றுவாக்கியங்களிலும் அதாவது

(1) "அஹம் பிரஹ்மாஸ்மி"

(2) "பிரஞ்ஞானமாநந்தம் பிரஹ்மம்"

(3) "அயமாத்மா பிரஹ்மம்" என்னும்

இம்மூன்று வாக்கியங்களிலும் முதலாவது பதம் ஜீவவாசகமாம்.

(4) "தத்துவமஸி" வாக்கியத்தில் முதற்பதம் ஈசுவரவாசகமாம்.

(1) முதற்பதத்தில் எல்லா வாக்கியங்களிலும் லக்ஷணையை அங்கீகரித்தால் சேதனம் சர்வஞ்ஞத்தன்மைமுதலியவற்றோடு கூடிய அம்சம் யாவும் ஈசுரனாயிருக்கிறதென்று முதல்மூன்று வாக்கியங்களுக்கும அர்த்தமாகும்.

(2) சேதனம் அற்பஞ்ஞத்தன்மைமுதலியவற்றோடுகூடிய சமுசாரியாகிய ஜீவரூபமென்று தத்துவமஸி என்னும் வாக்கியத்துக்கு அர்த்தமாகும். ஏனெனின், மூன்று வாக்கியங்களிலும் முதற்பதம் ஜீவவாசகம் அதற்குச் சேதனபாகத்தில் லக்ஷணையுண்டு. இரண்டாவதாகிய ஈசுவரவாசகபதத்துக்கு வாச்சியம் கிரகிக்கப்பட்டிருக்கிறது.

"தத்துவமஸி"யில் முதலாவது ஈசுவரவாசகபதம். அதற்குச் சேதனபாகத்தில் லக்ஷணையுண்டு. இரண்டாவது ஜீவவாசகபதம். அதன் வாச்சியம் கொள்ளப்படுகிறது.

இவ்விதமாக லக்ஷணையை நியமஞ்செய்யின் வாக்கியங்களுக்குப் பரஸ்பரம் விரோதமுண்டாகும்.

அப்படியே எல்லா வாக்கியங்களின் இரண்டாவது பதத்தில் லக்ஷணையை யங்கீகரிக்கின்,

1. மூன்று வாக்கியங்களிலும் முதலாவதாகிய ஜீவபதத்திற்கு வாச்சியத்தையும இரண்டாவதாகிய ஈசுவரபதத்துக்குச் சேதனபாகத்தில் லக்ஷணையையும் கொள்ளுதலால அற்பஞ்ஞத்தன்மைமுதலியவற்றோடுகூடிய சேதனமிருக்கிறது என்று மூன்று வாக்கியங்களுக்கும் அர்த்தமாகும்.

2. "தத்துவமஸி" வாக்கியத்தில் முதலாவதாகிய ஈசுவரபதத்திற்கு வாச்சியத்தையும் இரண்டாவதாகிய ஜீவபதததுக்குச் சேதனபாகத்தில லக்ஷணையையும் அங்கீகரிப்பதினால் சர்வஞ்ஞத்தனமைமுதலிய தர்மங்களோடு கூடிய சேதனமிருக்கிறதென்று "தத்துவமஸி" வாக்கியத்துக்கும அர்த்தமாகும். இதனால் பரஸ்பரம் விரோதமேயுணடாகும்.

இவ்விதத்தால் முதற்பதத்திலாவது இரண்டாவது பதத்திலாவது லக்ஷணையின் நியமம் பொருந்தாது. ஆதலால் நல்விலக்கண ஆசிரியர்கள் இரண்டு பதங்களிலும் லக்ஷணையைக் கூறுகிறார்கள்.

## 447. ஈசுவரவாசகபதத்தில் லக்ஷணையுண்டென்பதன் உத்தரம்.

முதற்பதத்திலாவது இரண்டாவது பதத்திலாவது லக்ஷணையிருக்கிறதென்னும் நியமஞ்செய்யாது, எல்லா வாக்கியங்களிலும் ஈசுவரவாசக பதத்தில் லக்ஷணையிருக்கிறதென்னும் நியமத்தைச் செய்யின், அந்த ஈசுவர வாசகபதம் முதலாவதாகவாவது இரண்டாவதாகவாவது இருக்கக்கூடும்; அதனால் வாக்கியங்களுக்குப் பரஸ்பரம் விரோதமில்லை என்று கூறின்,

அதன் சமாதானம்:— ஈசுவரவாசக பதத்தினையே லக்ஷகமெனின், சர்வ அநர்த்தங்களும் அற்பஞ்ஞத்தன்மை பராதீனத்தன்மை ஜனனமரணமுதலிய துக்கசாதனங்களுமாகிய இவற்றிற்கிருப்பிடமான சமுசாரி ஜீவன் சுருதிவாக்கியங்களில் ஞேயமா (அறியத்தக்கதா) கின்றது. அதனால் மோக்ஷத்துக்கு ஹானியுண்டாம்.

இதன் தாற்பரியம் இதுவாம்:—ஈசுவரவாசகபதத்திலேயே லக்ஷணையை அங்கீகரிக்கின் மகாவாக்கியபதத்துக்கு இந்த அர்த்தமுண்டாகும்:—"தத்பதத்துக்கு லக்ஷியமான அத்வயமாயும் அசங்கமாயும் மாயாமலமில்லாததாயும இருக்கிற சேதனமே காம கர்ம அவித்தைகளின் அதீனமாய் அற்பஞ்ஞத்தன்மை, அற்பசக்தி, பரிச்சின்னம், புண்ணியபாவங்கள், சுகதுக்கங்கள், ஜனனமரணங்கள், கமனுகமனங்கள் முதலிய அநேக அநர்த்தங்களுக்குப் பாத்திரமாம்". மகாவாக்கியத்துக்கு இது அர்த்தமாயின், ஜிஞ்ஞாசுவிற்கு இந்த அர்த்தத்தில் புத்தியை ஸ்திரப்படுத்தும்படி நேரிடும். எதில் புத்தி நிலைக்கிறதோ பிராணவியோகத்துக்குப் (பிராணன் பிரிந்த) பிறகு அதனையே அடைகிறான். இதனால் வேதவாக்கிய விசாரத்தால் முமுக்ஷுவுக்கு அநர்த்தமே பிராப்தமாகும்; ஆனந்தம் அடையப்படமாட்டாது. ஆதலால் ஈசுவர வாசகபதத்தில் லக்ஷணை இருக்கிறது, ஜீவவாசகபதத்தில் லக்ஷணை இல்லையென்னும் நியமம் அசங்கதமாம்.

## 448. ஜீவவாசகபதத்தில் லக்ஷணையிருக்கிறதென்பதன் உத்தரம்.

எல்லாமகாவாக்கியங்களிலும் ஜீவவாசகபதத்தில் லக்ஷணையுண்டு; ஈசுவரவாசகத்தில் இல்லை. ஆதலால் புருஷார்த்தத்திற்கு ஹானியில்லை. ஏனெனின், ஜீவவாசகபதத்தில் லக்ஷணையை ஒப்புக்கொள்ளுவதில் " துவம்

பதத்தின் லக்ஷியமான சேதனபாகம் சர்வசக்திமானும் சர்வஞ்ஞனும்சுதந்திரனும் ஜன்மாதிபந்தரகிதனுமிருக்கிற ஈசுவரரூப" மென்று மகாவாக்கியத்துக்கு அர்த்தமாகும். இந்த அர்த்தத்தில் புத்தியை நிறுத்துவதினால் ஜிஞ்ஞாஸுவுக்கு மிகவுத்தமமான ஈசுவரபாவமே பிராப்தமா (அடையப்படுவதா) கும். ஆதலால் ஜீவவாசகபதத்தில் லக்ஷணையின் நியமஞ்செய்யப்படும் என்று கூறின்,

அதன் சமாதானம்:— துவம் பதத்தின் லக்ஷியமாகிய சாக்ஷியை ஈசுவரரூபமாகச் சொல்வது சரியன்று. ஆதலால் யதீசுவரோத்தமர்கள் இரண்டு பதங்களிலும் லக்ஷணையைக் கூறுகிறார்கள்.

இதன் தாற்பரியம் இதுவாம்:—ஜீவவாசகபதத்தில் லக்ஷணையை யங்கீகரித்து ஈசுவரவாசகத்தில் லக்ஷணையை அங்கீகரியானாயின், அவனை 1. துவம் பதத்தின் லக்ஷணை வியாபகசேதனத்திலிருக்கிறதா? 2. அல்லது எவ்வளவிடத்தில் ஜீவனுடைய உபாதி இருக்கிறதோ அவ்வளவிடத்திலுள்ள சாக்ஷி சேதனத்திலிருக்கிறதா? என்று கேட்கவேண்டும்.

1. வியாபகசேதனத்தில் துவம்பதத்தின் லக்ஷணையைக் கூறின் பொருந்தாது. ஏனெனின், வாச்சியார்த்தத்தில் எது பிரவேசிக்கிறதோ அதில் பாகத்தியாகலக்ஷணை சம்பவிக்கிறது. வாச்சியத்தில் வியாபகசேதனம் பிரவேசிக்கிறதில்லை. ஆனால் ஜீவனுடைய உபாதியிலிருக்கிற சாக்ஷிசேதனம் வாச்சியத்திற் பிரவேசிக்கிறது. ஆதலால் சாக்ஷிசேதனத்திலேயே துவம்பதத்தின் லக்ஷணை இருக்கிறது; வியாபகசேதனத்தில் இல்லை. அந்தச் சாக்ஷி சேதனத்தில் எல்லோருடைய இருதயங்களையும் பிரேரித்தல் சர்வப்பிரபஞ்சத்திலும் வியாபித்திருத்தல் முதலிய ஈசுவரதர்மங்கள் சம்பவியா. சாக்ஷி எப்போதும் அபரோக்ஷமாயிருக்கிறது. அதனிடத்தில் பரோக்ஷத்தன்மை முதலிய ஈசுவரதர்மங்கள் சுத்தமாயிருக்கமாட்டா.

2. மாயையில்லாததனை மாயையோடுகூடியதென்பது சம்பவியாது, தண்டமில்லாதவனைத் தண்டி என்று சொல்வதும், சம்ஸ்காரமில்லாத துவிஜச் சிறுவனைச் சம்ஸ்காரமுடையவனாகச் சொல்லுவதும் சம்பவியாது. ஆதலால் சாக்ஷிசேதனத்துக்கு ஈசுவரனோடு அபேதங்கூறின் மகாவாக்கியம் அஸம்பவ அர்த்தத்தைப் பிரதிபாதிப்பதாகும்.

## 449. இரண்டு பதங்களிலுமுள்ள லக்ஷணையும் ஒதப்புரோதபாவமும்.

இரண்டு பதங்களிலும் லக்ஷணையை ஒப்புக்கொள்ளுமிடத்துத் தோஷமில்லை. ஏனெனின், ஏகத்துவ விரோதியான தர்மங்களெல்லாவற்றையும்

விட்டு இரண்டு பதங்களிலுமுள்ள பிரகாசரூபசேதனமாகிய வாச்சியபாகம் எதுவோ அவ்வெல்லாத் தர்மங்களுமின்றிய சேதனத்தில் இரண்டு பதங்களுக்கும் இலக்ஷணையாம்.

உபாதியும் உபாதியினாலாகிய தர்மங்களுமின்றிய சேதனத்துக்குப் பேதமிருக்கிறது; ஸ்வரூபமாக இல்லை. உபாதியையும் உபாதியினாலுண்டாகும் தர்மங்களையும் விடுவதனால் இரண்டுபதங்களின் லக்ஷியமான சேதனத்திற்கு ஏகத்துவம் சம்பவிக்கிறது. கடாகாசத்தில் கடதிருஷ்டியை விட்டு மடவிசிஷ்ட ஆகாசத்தோடு ஏகத்துவம் சம்பவிக்கிறதில்லை. மடதிருஷ்டியையும் விடுவதனால் ஏகத்துவம் பொருந்துகிறது.

எல்லாவாக்கியங்களிலும் "தத் துவம்", "துவம் தத்" என்றிவ்வாறு *ஓதப்புரோதபாவத்தின் கிரமத்தை அறிக. இந்த ஓதப்புரோதபாவத்தைச் செய்தலால் வாக்கியத்தின் அர்த்தத்தில் பரோக்ஷத்துவ † பரிச்சின்னத்துவ பிராந்தி கெடுகிறது.

---

* போக்குவரவுப்பழக்கமில்லாத மார்க்கம் செவ்வையாய் விளங்காததுபோல ஓதப்புரோதபாவமின்றிச் செவ்வையான அபேதஞானமுண்டாகாது. ஆதலால் மகாவாக்கியத்தின் உபதேசத்திற்குப்பின் ஜிஞ்ஞாசு ஓதப்புரோதபாவஞ் செய்யவேண்டும். இதனையே அந்வயமென்றும் வியதிரேகமென்றும் கூறுவர்.

† இங்கே இது பிரசினமாம்:—மகாவாக்கிய உபதேசத்தின்பின் ஜிஞ்ஞாசுவிற்குப் பிரஹ்மஆத்மாக்களில் பரோக்ஷத்துவ பரிச்சின்னத்துவ பிராந்தி தோற்றுகின்றது. அது காரணமின்றிச் சம்பவியாது. அங்கு வேறெதுவும் பிராந்திக்குக் காரணமாதல் கூடாது. ஆனால் பிரஹ்மத்திலுள்ள மாயையும் ஆத்மாவிலுள்ள அவித்தையும் பிராந்திக்குக் காரணமாதல் கூடும். அம்மாயை அவித்தை பிரஹ்மாத்மாவின் ஆசிரிதமாய் முன்னிருந்தன. அவை ஜிஞ்ஞாசு தத் துவம் பதார்த்தங்களின் சோதனைசெய்தகாலத்து நஷ்டமாயின.

எங்ஙனம் கடசொரூபத்தை விசாரிக்கக் கடத்திலுள்ள அவித்தையிருப்பதில்லையோ, அங்ஙனம் பிரஹ்மாத்மாவை விசாரிக்க அவற்றிலுள்ள மாயை அவித்தைகளிருப்பதில்லை. ஆனால் அவ்வதிகாரியின் திருஷ்டியினால் பாதிக்கப்படுவனவாகின்றன. மூன்றாவது சேதனமில்லை. சேதனமின்றி அந்நிய ஜடவஸ்துவை ஆசிரயித்து மாயை அவித்தைகளிரா. மாயை அவித்தைகளின் ஸ்திதியின்றி முற்கூறிய இருவகைப்பிராந்தி சம்பவியாது. ஜிஞ்ஞாசுவின் சித்தத்தில் தோற்றுகின்ற பிராந்தி எவையோ அவற்றிற்கு மாயை அவித்தைகளின்றி வேறு கதி (காரணம்) சம்பவியாது. இவ்வர்த்தாபத்திப்பிரமாணத்தால் மாயைஅவித்தைகளினது ஸ்திதியின் கற்பனையுண்டாகின்றது. ஆதலால் மகாவாக்கியத்தின் உபதேசத்திற்குப்பின் அம்மாயையவித்தைகள் எங்கே நிலைத்திருந்து பரோக்ஷத்தன்மை பரிச்சின்னத்தன்மைப் பிராந்திகளை உண்டாக்கும்? என்பது பிரசினம்.

1. "தத் துவம்" என்று சொல்லுவதினால் தத்பதத்தின் அர்த்தத்துக்குத் துவம்பதத்தின் அர்த்தத்தோடு அபேதஞ்சொல்லப்பட்டது. அத்துவம்பதத்தின் அர்த்தமாகிய சாக்ஷி நித்திய அபரோக்ஷமாயிருக்கிறது. அதனால் பரோக்ஷத்தன்மைப் பிராந்தி கெடுகிறது.

2. "த்வம் தத்" என்பதனால் துவம்பதத்தின் அர்த்தத்துக்குத் தத்பத அர்த்தத்துடன் அபேதஞ் சொல்லப்பட்டது. அத்தத்பதத்தின் அர்த்தம் வியாபகம். ஆதலால் பரிச்சின்னத்தன்மையின் பிராந்தி கெடுகிறது.

1. அதுபோல்

(1) "அகம் பிரஹ்மம்"
(2) "பிரஞ்ஞானம் பிரஹ்மம்"
(3) "ஆத்மா பிரஹ்மம்" என்னும்

இவற்றால் பரிச்சின்னத்தன்மை கெடுகிறது.

2. அன்றியும்,

(1) "பிரஹ்மம் அகம்"
(2) பிரஹ்மம் பிரஞ்ஞானம்.
(3) பிரஹ்மம் ஆத்மா என்னும்

இவற்றாற் பரோக்ஷத்தன்மை நிவிருத்தியாகிறது.

சிஷ்யனே! எங்கு வேதவாக்கியங்களும் ஸ்மிருதிவாக்கியங்களும் ஜீவப்பிரஹ்மங்களின் ஏகத்துவத்தைச் சொல்லுகின்றனவோ, அங்கு முழுதும் பாகத்தியாகத்தையே யதார்த்தமாயறிக.

## 450. கிரந்தத்தின் (333-ல் கூறியதின்) சமாப்தி.

இவ்விதமான குருபதேசத்தைக் கேட்டுச் சிஷ்யன் கிருதகிருத்தியனானான். இதன் யதார்த்தத்தை விசாரிக்கிறவனுடைய துக்கமெல்லாம் நசித்துப்போம். மித்தையான குருவினால் சமஸ்கிருத பாஷையில் இக்கிரந்தமுபதேசிக்கப்பட்டது. இதைக் கேட்கிறதினால் அஞ்ஞானம் நிவிருத்தியாய்விடுகிறது. இது அந்தக்கிரந்தத்தின் மொழிபெயர்ப்பாகச் செய்யப்பட்டது. அக்கிருததேவனுக்குச் சொப்பனத்தில் இவ்வுபதேசத்தைக் குரு செய்தார். அதனால் துக்ககாரணமான மித்தியாவனத்தின் சொரூபம் நசிக்கவில்லை.

---

இதற்கு இது உத்தரமாம்:— யதார்த்தசோதனத்திற்குப்பின் விசாரித்தறியப்பட்ட பிரஹ்மாத்மாக்களிலோ மாயைஅவித்தை சம்பவியாவெனினும், மகாவாக்கியத்தின் அர்த்தமாகிய பிரஹ்மாத்மஐக்கியம் எதுவோ அது செவ்வையாய் அறியப்பட்டதாகாது; அறியப்படாததாம். அவ்வைக்கியத்தில் மாயை அவித்தை நிலைத்திருந்து பரோக்ஷத்தன்மைவடிவமும் பரிச்சின்னத்தன்மைவடிவமுமாகிய பிராந்தியை உண்டுபண்ணுகின்றன. அந்தப் பிராந்தியை நீக்குதற்பொருட்டு ஓதப்புரோதபாவம் செய்யவேண்டியதாம். ஓதப்புரோதபாவம் செய்ய ஐக்கியத்தின் செவ்வையான ஞானமுண்டாய் மாயை அவித்தைகளின் நிவிருத்திவாயிலாக, பரோக்ஷத்தன்மை பரிச்சின்னத்தன்மைவடிவப் பிராந்தியின் நிவிருத்தியுண்டாகின்றது.

## 451. பிரசினம்:—பொருளோடு நூலைப்படித்தாலும் மனம் துக்கத்திற்குக் காரணமாகத் தோற்றுகிறதேயெனல். அக்கிருததேவவாக்கியம்.

ஸ்வாமி! தாம் அர்த்தத்தோடு இந்நூலைப் படிப்பித்தீர்கள். அது எனக்கு வந்தது. ஆனால் துக்கத்துக்குக் காரணமான வனம் எனக்கின்னும் விளங்கிக் கொண்டிருக்கிறது. எந்த வுபாயத்தால் அது நசித்துப்போகுமோ அதைச் சொல்லியருள்க.

## (முன்பிரசினத்தின் உத்தரம். 452—453).

## 452. வனத்தின் நாசத்திற்கு ஏது இதுவே (முற்கூறியதே) யாமெனலும், அக்கிருததேவனது சொப்பனத்தின் சமாப்தியும் (நாசமும்).

சிஷ்யன் வார்த்தையைக் கேட்டுக் குரு சொல்லுகிறார்:— சிஷ்யனே! வனம் நசிக்கும்படியான உபாயத்தைக் கேள். இத்தன்மைய வேறு உபாயமில்லை. வனத்தைக் கெடுக்கும் ஏது இதுவேயாம்:— மகாவாக்கியத்தின் அர்த்தத்தை விசாரித்து "நான் அக்கிருதன்" என்று நிச்சயித்துச் சொல்லென்றார். சிஷ்யன் அப்படியே வாக்கியத்தை விசாரித்து "நான் அக்கிருதன்" என்று உரத்துச் சொன்னான். நித்திரையொழிந்து கண்விழித்துக்கொண்டான் அக்கணமே வனம் கிரந்தம் குரு எல்லாம் மறைந்துவிட்டன. வனதுக்கத்தை மறந்து தான் அக்கிருதன் என்று தெரிந்துகொண்டு சுகியானான்.

## 453. மித்தியாகுருவேதங்களால் அஞ்ஞானஜந்நிய மித்தியாஜகத்தின் பரிகாரமுண்டாகிறது.

அக்கிருததேவனாகிய எனக்கு நித்திரையால் எவ்விதமாய் வனதுக்கமுண்டாயிற்றோ, அப்படியே ஆத்மாவின் அஞ்ஞானத்தால் ஜகத்துக்கம் பிரதீதியாகிறது. எப்படி மித்தையான குருவினாலும் கிரந்தத்தினாலும் மித்தையான வனம் நசித்ததோ அப்படி மித்தையான குருவினாலும் வேதத்தினாலும் மித்தையான ஜகத்துக்கம் நசித்துப்போகிறது. வாக்கியங்களின் லக்ஷியார்த்தத்தை யறிந்து ஜிஞ்ஞாசு பூர்ணகிருதகிருத்தியனாகிறான், தீனதயாளுவாயும் நிராவரணமாயுமிருக்கிற தாதுவே நான்.

குருவேதாதிசாதனமித்தியாவர்ணன மென்னும்

ஆறாவது தரங்கம்

முற்றிற்று.

# ஸ்ரீ விசாரசாகரம்.

## ஏழாவது தரங்கம்.

### * ஜீவன்முக்தி † விதேகமுக்தி வர்ணனம்.

### 454. ஞானிக்கு வியவகாரத்தில் நியமமில்லையெனல்.

உத்தமமத்தியமகனிஷ்டாதிகாரிகளான மூவரும் இவ்வாறு குருபதேசத்தைக்கேட்டு யாதொரு சமுசயமுமின்றி ஆத்மாவே பிரஹ்மமென்னும் உத்தமமான ஞானத்தை யடைந்தார்கள். குரு மூவருக்கும் ஒரேகாலத்திலுபதேசஞ் செய்தாலும் குருவுபதேசத்தால் பிரஹ்மசாக்ஷாத்காரம் உத்தமமான தத்துவதிருஷ்டிக்குண்டாயிற்று.

காய்ந்த அரசஞ்சருகுகள் காற்றினால் அங்குமிங்கும் பறந்து ஓடுகிறது போல் எஞ்சிய கர்மமான பிராரப்தத்தால் ஞானி கிரியைகளைச் செய்கிறதாகக் காணப்படுகிறான். ஒருகாலத்தில் குதிரைவண்டியிலேறித் தோட்ட முதலியவைகளைப்பார்க்கிறான், ஒருகால் காலில் ஒன்றுமில்லாமல் நடக்கிறான். அவன் படுக்கையோ அனேகவிதம், போக போஜனாதிகள் ஒருகாலத்திலுத்தமமாயிருக்கின்றன. ஒருகால் போஜனமின்றி மலையின் குகையிலிருந்துகொண்டு கற்றரையிற் படுத்துக்கொண்டு இரவைப்போக்குகிறான். ஒருகால் இவனை ஆயிரம் பெயர்கள் நமஸ்கரிக்கிறார்கள். ஒருகாலத்தில் இவன் உபயலோகப்பிரஷ்டன் என்று கர்மியால் நிந்திக்கப்படுகிறான். எவன் இவனைப் பூஜிக்கிறானோ அவன் சுகிருதத்தையடைகிறான். தோஷதிருஷ்டியுடன் இவனைப் பார்க்கிறவன் பாவத்தையடைகிறான். இவ்விதமாக ஞானியின் வியவகாரம் நியமமின்றி யிருக்கிறது. தத்துவத்தைப் பூர்ணமாயறிந்தவனுக்குப் பிரமமும் சந்தேகமுமுண்டாகா. அவனுக்குச் செய்யவேண்டியது யாதொன்றுமில்லை. அவனுடைய பேதப்பிரமங்களெல்லாம் நசித்துப்போயின. வேதப்பிரமாணத்தால் ஸ்வயம்பிரகாசமான அத்துவயப் பிரஹ்மத்தின் ஞானம் உண்டாயிருக்கிறது.

---

* ஜீவன்முக்தியின் லக்ஷணம் மேல் 476-வது பிரசங்கத்திற் சொல்லப்படும்.

† விதேகமுக்தியின் லக்ஷணம் மேல் 475-வது பிரசங்கத்திற் சொல்லப்படும்.

## 455. ஞானி சமாதி சரீரநிர்வாக மென்பவற்றினும் அதிக மான காரியத்தில் பிரவிருத்திக்கலாகா தென் பதன் ஆக்ஷேபம் 455-458.

## ஞானியின் வியவகாரத்தில் நியமத்தை ஆக்ஷேபித்தல் 455-458.

ஞானிக்கு வியவகார நியமமுண்டென்று சிலர் சொல்லுகிறார்கள். திரிபுடியைத் துக்கத்துக்குக் காரணமென்று கண்டு நீக்கிச் சமாதியில் ஞானி பொருந்துகிறான். சொற்பவியவகாரமிருக்குமானால் அது பிச்சைவாங்கி யுண்ணுதலும் நீர்குடித்தலுமாம், சமாதி சுகத்தை மறக்கிறதில்லை. திரி புடியினின்றும் அருவருப்பால் நீக்குகிறான். இக்காரணத்தால் ஞானி சமா திக்குப் பிரயத்தனம் அடிக்கடி பண்ணுகிறான். சமாதி சுகத்தைவிட்டுப் பிரமிக்கிறவன் நாய் கழுதை பிரேதத்திற் கொப்பாவன். கௌடபாதாசாரி யாருடைய காரிகையில் சமாதிப்பிரகாரம் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கி றது. இவ்விதமாய் ஞானியானவன் விக்ஷேபத்தைப் போக்கிச் சகல சுகத் தையும் அடைகிறான். சமாதிசுகம் அஷ்டாங்கமின்றி யுண்டாகிறதில்லை. சமாதி சுகத்திற்குக் காரணம் அவையே அச்சமாதிக்கனுகூலமான அவற் றைச் சொல்லுகிறேன் கேள்.— இயமநியமாதிகள் ஐந்தைந்து அனேகவித ஆஸனங்கள், அநேகவிதப் பிராணாயாமம், அநேகவிதப் பிரத்தியாகாரம், தாரணை, தியானம், ஸவிகற்பசமாதி என்பன. இவ்வஷ்டாங்க சாதனங்க ளால் நிர்விகற்பசமாதி அனுஷ்டிக்கத்தக்கது.

இவ்வாறு சமாதியை யனுஷ்டிக்கவேண்டுமென்று சொல்லுவதைக்கே ட்டு, இவர்கள் பேய்பிடித்தவர்கள்போல் பிதற்றுகிறார்கள் என்று நினைத்துத் தத்துவதிருஷ்டியானவன் ஒன்றும் பேசாமல் சிரித்தான்.

இதன் தாற்பரியம்:— ஞானியின் சரீரவியவகாரத்திற்கு நியமமில்லை. ஏனெனின், ஞானியின் வியவகாரத்தில் அஞ்ஞானமும் அதன் காரியமான பேதப்பிராந்தியும் அப்படியே பேதப்பிராந்தியின் காரியமான ராகத்துவேஷங் களுமோ இல்லை. ஆனால் ஞானிக்கும் பிராரப்தகர்மத்தின் சேஷமிருக்கி றது. அதுவே அவனுடைய வியவகாரத்துக்குக்காரணமாயிருக்கிறது. அப் பிராரப்தகர்மம் புருஷபேதத்தால் நாநாவிதமாயிருக்கிறது. ஆதலால் ஞானி யின் பிராரப்தகர்மஜந்நியவியவகாரத்தில் நியமமில்லை. இது சித்தாந்த பக்ஷம்.

*சிலர் இவ்வாறு சொல்லுகிறார்கள்:— ஞானியின் வியவகாரத்தில் எந்தக் கர்மத்தின் நியமமுமில்லை. ஆனால் ஞானிக்கு நிவிருத்தியின்பொருட்டு நியமமுண்டு. பிரவிருத்தியுண்டானால் தேகஸ்திதியின் பொருட்டுப் போஜனத்துக்காகப் பிக்ஷையிலும் மானங்காக்கக் கௌபீனக் கிரகணத்திலுந்தான் பிரவிருத்தியுண்டாகிறது. வேறு பிரவிருத்தியுண்டாகிறதில்லை. ஏனெனின், ஞானமுண்டாவதற்குமுன் ஞானவிருப்பகாலத்தில் விஷயத்தில் தோஷதிருஷ்டியால் வைராக்கிய முண்டாகிறது. அந்த வைராக்கியம் ஞானமுண்டான பிறகும் தோஷதிருஷ்டியாலும் விஷயத்தில் மித்தியாபுத்தியாலு மிருந்து கொண்டிருக்கிறது.

1. அபரோக்ஷமாகப் பொய்யென்றறிந்து பதார்த்தத்தில் சத்திய புத்தியுண்டாகிறதில்லை.

2. தோஷதிருஷ்டியால் ராக முண்டாகிறதில்லை. பிரவிருத்தி ராகத்தா லுண்டாகிறது. ஞானிக்கு ராகம் சம்பவியாமையினால் பிரவிருத்தியுண்டாகிறதில்லை.

சரீரபோஷணையின்பொருட்டுப் போஜனாதிகளிலுண்டாம் பிரவிருத்தியோ ராகமின்றிப் பிராரப்தகர்மத்தாலுண்டாகிறது. கர்மம் மூன்றுவிதம்:- 1. சஞ்சிதம். 2. ஆகாமியம். 3. பிராரப்தம். அவற்றில்,

1. சென்ற சரீரங்களிற் செய்யப்பட்டுப் பலனுக்கு வராமலிருக்கும் கர்மம் சஞ்சிதமாம்.

2. எதிர்காலத்துக் (வர்த்தமான சரீரத்திற்செய்யப்படும்) கர்மம் ஆகாமியாம்.

3. முன் சரீரங்களிற் செய்யப்பட்டு வர்த்தமான சரீரத்துக்கு ஏதுவாயிருக்கும் கர்மம் பிராரப்தமாம்.

அவற்றில்,

1. சஞ்சிதகர்மம் ஞானத்தால் நசித்துப்போகிறது:

2. ஞானிக்கு ஆத்மாவில் கர்த்திருத்துவப்பிராந்தி இல்லை. ஆதலால் அவனுக்கு ஆகாமிகர்மமில்லை.

---

*கேவல சந்நியாசிகளையே ஞானத்திற்கு முக்கிய அதிகாரியெனக் கொள்ளும் சங்காரநந்தஸ்வாமி முதலியோர்.

3. எந்தப் பிராரப்தகர்மமானது ஞானியின் சரீரத்தையாரம்பித்திருக்கிறதோ அந்தப் பிராரப்தகர்மம் சரீரஸ்திதிக்குக் காரணமான பிக்ஷை முதலியவற்றிற் பிரவிருத்தியையுண்டாக்குகிறது. பிராரப்தகர்மம் போகமின்றி நாசமடையாது.

சிலவிடங்களில் (அபரோக்ஷாநுபூதி விவேகசூடாமணிமுதலிய கிரந்தங்களில்), "சஞ்சித ஆகாமி கர்மங்களைப்போல் ஞானிக்குப் பிராரப்தகர்மமும் இல்லை. ஆதலால் போஜனமுதலிய பிரவிருத்திகளும் ஞானிக்குச் சம்பவியா" என்று எழுதியிருக்கிறது. அதன் அபிப்பிராயம் இதுவாம்:— ஞானியின் திருஷ்டியால் ஆத்மாவில் கர்மம் அதன் பலன் என்பவற்றின் சம்பந்தமில்லை. ஆதலால் ஆத்மாவில் எல்லாக்கர்மங்களும் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றன வென்னும் அபிப்பிராயத்தால் பிராரப்தம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. ஞானத்துக்குமுன் செய்த பிராரப்தத்துக்கு ஞானியின் சரீரத்தில் போகமுண்டாகாதென்னும் அபிப்பிராயத்தால் பிராரப்தம் நிஷேதிக்கப்படவில்லை. ஏனெனின்,

1. ஞானியின் சஞ்சிதகர்மம் ஞானத்தால் நாசமடைகிறது
2. ஆகாமியின் சம்பந்தமுண்டாகிறதில்லை
3. பிராப்தம் போகத்தால் நசித்துப்போகிறது

என்று சூத்திரகாரர் சொல்லியிருக்கிறார்.

ஆதலால் பிராரப்தபலத்தால் சரீரபோஷணை சம்பந்தமான கிரியைகள் மாத்திரம் ஞானியினிடத்தில் உண்டாகின்றன; அதிகமானவையுண்டாகிறதில்லை.

456. ஆனால் கர்மம் அனேகவிதமாம். எங்கு ஒரு கர்மம் அனேக சரீரங்களை யுண்டுபண்ணுவதாகிறதோ அங்கு அத்தன்மைய கர்மத்தாலுண்டான முதல் சரீரத்தில் ஒருவனுக்கு ஞானமுண்டானால் அப்போது அந்த ஞானிக்கு வேறு சரீரங்களும் பிராரப்தமாகவேண்டும். ஏனெனின், எது பலத்தைக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறதோ அது பிராரப்தமென்னப்படும். அது போகமின்றி நசித்துப்போகிறதில்லை. அநேக சரீரங்களுக்கு ஹேதுவான கர்மம் ஒன்று. அதனாலுண்டான முதற்சரீரத்திலேயே ஞானமுண்டாயின், ஞானத்துக்குப் பிறகும் அந்தக் கர்மத்துக்குப் பலனாகிய அனேக சரீரங்களுண்டாகவேண்டியனவா யிருக்கின்றன. ஆதலால் ஞானிக்கும் வேறு சரீரங்களின் அடைவு உண்டாகவேண்டும்.

**457.** பிராரப்தகர்மத்தின் பயனாக எத்தனை சரீரங்களுண்டாகவேண்டுமோ அத்தனை சரீரங்களும் ஞானிக்குண்டாகும். பிராரப்தபோகத்துக்கு அதிகமானது உண்டாகிறதில்லை. இதனால் ஞானமும் ஸபலமாகிறது என்று ஒருவன் சொல்லுவானாயின் அது பொருந்தாது. ஏனெனின் இது *வேதத்தின் முரசாம்:— ஞானியின் பிராணன் வேறு லோகத்திலாவது இவ்வுலகத்தின் வேறு சரீரத்திலாவது போகிறதில்லை. ஆனால் அவ்விடத்திலேயே அந்தக்கரணமும் இந்திரியங்களோடு ஒடுங்கிவிடுகின்றது. பிராணன் போகாமல் வேறு சரீரம் அடையப்படுகிறதில்லை. ஆதலால் ஞானிக்குப் பிராரப்தசேஷத்தால் வேறு சரீரமுண்டாகுமென்று சொல்லுவது சம்பவியாது.

ஆனால் இது சமாதானமாம்:— எங்கு ஒரு கர்மத்தால் அனேகசரீரங்களுண்டாகின்றனவோ அங்குக் கடைசியான சரீரத்திற்றான் ஞானமுண்டாகும்; முன் சரீரங்களிலுண்டாகாது. ஏனெனின், அனேக சரீரங்களை யுண்டுபண்ணும் பிராரப்தமே ஞானத்துக்குப் † பிரதிபந்தகமாம்.

1. விஷயத்தில் ஆசக்தி (பற்று)
2. புத்திமந்தத்தன்மை
3. பேதவாதிவசனத்தில் விசுவாசம் என்னும்

இவைகள் ஞானத்துக்குப் பிரதிபந்தங்களாம். அதுபோல் ‡ விலக்ஷணப் பிராரப்தமும் ஞானத்துக்குப் பிரதிபந்தகமாம்.

ஞானத்தின் பிரதிபந்தங்களிருக்க எங்கு ஞானசாதனங்களான சிரவணாதிகளிருக்கின்றனவோ அங்குப் பிரதிபந்தம் நிவிருத்தியாகவே முதல் ஜன்மத்தில் செய்த சிரவணாதிகளாலேயே வேறு சரீரத்தில் ஞானமுண்டாகிறது. எங்ஙனம்: § வாமதேவர் பூர்வஜன்மத்தில் சிரவணாதிகளைச் செய்தார். அப்

---

* "அந்த ஞானியின் பிராணன் வெளியிற் செல்லுகிறதில்லை. ஆனால் இங்கு மரிக்குமிடத்திலேயே ஒடுங்குகின்றது." என்றல் முதலியன வேதவாக்கியங்களின் முரசாம்.

† ஞானத்தின் மூவகைப் பிரதிபந்தங்களினது நிவிருத்தியின் உபாயத்தோடு கூடிய வர்ணனம் ஸ்ரீ பஞ்சதசியின் தியானதீபத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. முன் ஐந்தாவது தரங்கத்தின் டிப்பணியில் அதன் பெயர்மாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது.

‡ ஜன்மாந்திரத்துக்கு ஏதுவான பிராரப்தசேஷம்.

§ இங்கு வாமதேவர் என்னும் சொல்லால் ரிஷபதேவர் புத்திரராகிய பரதராஜரும் கொள்ளப்படுவர். பரதருக்கும் மூன்று ஜன்மத்திற்கு ஏதுவான பிராரப்தசேஷம் இருந்தது. அதனால் சாதன சாமக்கிரிகளிருந்தும் ஞானமுண்டாகவில்லை. பின் மூன்றாவது ஜன்மத்தில் உபதேசமின்றியே முன்செய்யப்பட்ட விசாரத்தால் ஞானமுண்டாயிற்று.

போது பிராரப்தத்தின் பலனுகிய ஒரு சரீரம் எஞ்சியிருந்தபடியால் ஞான முண்டாகவில்லை. சிரவணுதிகள் செய்துகொண்டிருக்க வர்த்தமான சரீரம் போய் வேறு சரீரம் அடையப்படுமாயின் முன்ஜன்மத்தில் செய்த சிரவ ணுதிகளினுலேயே அவருக்குக் கர்ப்பத்தில் ஞானமுண்டாயிற்று. ஆதலால் ஞானத்துக்குப்பின் வேறு சரீரத்தின் சம்பந்த முண்டாகாது. வர்த்தமான சரீரத்தின் சேஷ்டைகள் பிராரப்தத்தால் உண்டாகின்றன. அங்குச் சரீர போஷணைக்கு எவ்வளவு கிரியைகள் வேண்டுமோ அவ்வளவே உண்டாகின் றன. ராகத்தாலுண்டாம் அதிக சேஷ்டைகளுண்டாகிறதில்லை. ஆதலால் சகலப் பிரவிருத்தியும் இல்லாதவன் ஞானியாகிறுன்.

**458.** இவ்விதமாக நிவிருத்திப் பிரதானமாகிய ஞானியின் வியவகார முண்டாகிறது.

இத்தன்மைய சங்கையிருக்கிறது:— மனதின் சுபாவம் அதிக சஞ்சலமா னது. மனதின் ஸ்திதி நிராலம்பமா (ஆசிரயமில்லாததா) கிறதில்லை. யா தேனும் ஓர் ஆலம்ப (ஆசிரய) த்தால் மனதின் ஸ்திதியுண்டாகிறது. ஆதலால் மனதின் யாதேனும் ஓர் ஆலம்பனத்தின் அடைவின்பொருட்டும் ஞானிக்குப் பிரவிருத்தியுண்டாகும்.

அதன் சமாதானம் இதுவாம்:— சமாதியில்லாத புருஷனது மனம் சஞ்ச லப்பட்டாலும் சமாதியால் மனம் ஜயிக்கப்படும். ஞானி சமாதியில் நிலைக் கிறுன். அதனுல் ஞானிக்குப் பிரவிருத்தியுண்டாகிறதில்லை.

## 459. சமாதியின் அஷ்டாங்கங்கள்—459-465.

அச்சமாதி எட்டு அங்கங்களாலுண்டாகின்றது. அவையாவன:—

1. இயமம், 2. நியமம், 3, ஆசனம், 4. பிராணுயாமம், 5. பிரத் தியாகாரம், 6. தாரணை, 7. தியானம், 8. ஸவிகற்பசமாதி என்பன.

**460.** 1. அஹிம்சை, 2. சத்தியம், 3. திருடாமை, 4. பிரஹ்ம சரியம், 5, அபரிக்கிரகம் என்னும் இவ்வைந்தும் * இயமமெனப்படும்.

---

* இவ்வியமமாதிகளின் லக்ஷணம் பாதஞ்சலசூத்திரத்திலும் ஹடயோகப்பிரதீ பிகையின் டிப்பணியிலும் விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இராஜயோகானுசார மாய் அவற்றின் அர்த்தம் ஸ்ரீசங்கராசாரியருடைய அபரோக்ஷாநுபூதி கிரந்தத்திலும் ஹடயோகப்பிரதீபிகையின் டிப்பணியிலும் எழுதப்பட்டிருக்கிறது.

**461.** 1. சௌசம். 2. சந்தோஷம். 3. தவம். 4. ஸ்வாத்தியாயம். 5. ஈசுவரப்பிரணிதானம் என்னும் இவ்வைந்தும் நியமமெனப்படும்.

ஞானசமுத்திரக்கிரந்தத்தில் பத்துவித இயமமும் பத்துவித நியமமும் சொல்லப்பட்டிருக்கின்றன. அது புராணக்கிரமமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. வேதாந்தசமபிரதாயத்தில் இயமநியமங்கட்கு ஐந்து ஐந்துபேதங்களேயுள.

**462.** ஆசனங்களின் பேதம் அநேகம். அவற்றில், 1. ஸ்வஸ்திகம், 2. கோமுகம், 3. வீரம், 4. கூர்மம், 5. பத்மம், 6. குக்குடம், 7. உத்தானம், 8. கூர்மகம், 9. தனுஷம், 10. மத்ஸ்யம், 11. பச்சிமதானம், 12. மயூரம், 13. ஸவம், 14. சிம்ஹம், 15. பத்ரம், 16. சித்தம் என்றல் முதலிய 84 ஆசனங்கள் யோககிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றின் லக்ஷணங்களும் அங்கு எழுதப்பட்டிருக்கின்றன. கிரந்தம் விரியுமென்னும் பயத்தினாலும் வேதாந்தத்தில் அவைகளினுபயோகம் அதிகமாயில்லாததினாலும் அவற்றின் லக்ஷணங்களை இவ்விடத்தில் எழுதவில்லை. மேற்சொல்லிய ஆசனங்களினும் சிம்ஹம், பத்ரம், பத்மம், சித்தம் என்னும் நான்கும் முக்கியமானவை.

மேற்சொல்லிய நாலு ஆசனங்களினும், சித்தாசனம் மிகவும் சிரேஷ்டமானது. அதன் லக்ஷணம் இதுவாம்:— இடதுகுதிகாலை குதலிங்கங்களின் மத்தியானயோனியில் அழுத்திக்கொண்டு வலது குதிகாலை லிங்கத்தின்பேரிலழுத்திக்கொண்டு புருவங்களின் மத்தியில் திருஷ்டியை வைத்துக் கட்டைபோல் நிமிர்ந்து சலனமின்றிச் சரீரமிருப்பது சித்தாசனமாம்.

சிலர் இதன் லக்ஷணத்தை வேறுவிதமாகவும் சொல்லுகிறார்கள்:— இடது குதிகாலை யோனிஸ்தானத்தில் வைக்காமல் லிங்கத்தின்பேரில் வைத்து அதன்பேரில் வலது குதிகாலை வைக்கவேண்டியது. மற்ற லக்ஷணங்கள் முன்போன்றனவே. இந்தச்சித்தாசனமே அதிக சிரேஷ்டமானது. ஏனெனில், சில ஆசனங்கள் ரோகநாசத்திற்கு ஏதுவாம். சில ஆசனங்கள் பிராணாயாமாதி சமாதி அங்கங்களுக்குச் சாதகங்களாயிருக்கின்றன. சித்தாசனம் சமாதிகாலத்திலாகிறது. ஆதலால் இது அதிக சிரேஷ்டமானது. இதனையே வஜ்ஜிராஸன மென்றும் முக்தாஸன மென்றும் குப்தாஸன மென்றும் கூறுவர்.

**463.** ஆசனசித்தியின் பிறகு பிராணாயாமமும் செய்யவேண்டியது. அந்தப்பிராணாயாமம் அநேகவிதம். அங்ஙனமாயினும் அதன் லக்ஷணம் சுருக்கமாய்ச் சொல்லப்படுகின்றது:—

1. மூக்கின் இடது துவாரத்தின் வழியாய் இடையென்னும் நாடியால் வாயுவைப் பூரிக்கவேண்டும். இது பூரகம் எனப்படும்.

2. மூக்கின் வலது துவாரத்தால் காற்றை விடவேண்டும். இது ரேசக மெனப்படும்.

3. சுழுமுனையால் காற்றையடக்கவேண்டும். இது கும்பகமெனப்படும்.

இவ்வாற்றால் பூரகரேசக கும்பகங்களுக்குப் பிராணாயாம மென்று பெயர். அந்தப்பிராணாயாமம் இருவகைத்து. (1) ஒன்று அகர்ப்பம். (2) மற்றொன்று ஸகர்ப்பம்.

1. பிரணவோச்சாரணமின்றிச் செய்யும் பிராணாயாமம் அகர்ப்ப மெனப்படும்.

2. பிரணவோச்சாரணத்தோடுகூடிய பிராணாயாமம் ஸகர்ப்ப மெனப்படும்.

**464.** 1. விஷயங்களினின்றும் சகல இந்திரியங்களையும் தகைப்பது பிரத்தியாகார மெனப்படும்.

2. அந்தராயமி (இடையி)ன்றி அந்தக்கரணம் நிலைத்தல் தாரணை யெனப்படும்.

3. அந்தராயத்தோடுகூடிய அத்துவிதீயவஸ்துவினிற் செல்லும் அந்தக்கரணத்தின் பிரவாகத்திற்குத் தியான மென்று பெயர்.

**465.** எழுந்த சம்ஸ்காரங்களின் திரஸ்காரமும் அடங்கிய ஸம்ஸ்காரங்களின் பிரகடமுமுண்டாய் அந்தக்கரணம் ஏகாக்கிரமாய்ப் பரிணமித்தல் சமாதி யெனப்படும். அச்சமாதி இருவகையாம். (1) ஒன்று ஸவிகற்பசமாதி. (2) மற்றொன்று நிர்விகற்பசமாதி.

1. ஞாதா ஞான ஞேயரூப திரிபுடி விளக்கத்தோடுகூடிய அத்துவிதீயப் பிரஹ்மத்திலுள்ள அந்தக்கரணவிருத்தியின் நிலைமை ஸவிகற்பசமாதி யெனப்படுகின்றது. அந்த ஸவிகற்பம் இருவகைத்தாம் :— (1) ஒன்று சப்தாநுவித்தம். (2) மற்றொன்று அசப்தாநுவித்தம்.

அகம்பிரஹ்மாஸ்மி என்னும் சப்தத்தோடு அநுவித்தம், அதாவதுகூடியது சப்தாநுவித்த சமாதியாம்.

2. சப்தத்தோடுகூடாதது அசப்தாநுவித்தசமாதியாம்.

திரிபுடித்தோற்றமில்லாத அகண்டப் பிரஹ்மாகாரமான அந்தக்கரண விருத்தியின் நிலைமைக்கு நிர்விகற்பசமாதி யென்று பெயர்.

இவ்விதத்தால் ஸவிகற்ப நிர்விகற்ப ரூபத்தால் சமாதி இருவகையாகிறது. அவற்றுள், (1) ஸவிகற்ப சமாதி சாதனமாம். (2) நிர்விகற்ப சமாதி பலனும்.

1. சாதனரூப ஸவிகற்பசமாதியில் திரிபுடிரூபத்துவைதம் பிரதீதியாகிறது. அங்ஙனமாயினும அந்தத்துவைதம் இவ்வாற்றால் பிரஹ்மரூபமாகப் பிரதீதியாகிறது. மண்விகாரத்தை மண்ரூபமாக அறிதலால் விவேகிக்கு மண்விகாரமாகக் கடாதிகள் பிரதீதியாகின்றன. ஆனால் மண்ரூபமே பிரதீதியாகிறது. அதுபோல் ஸவிகற்பசமாதியில் திரிபுடித்துவைதம் பிரஹ்மரூபமாகவே பிரதீதியாகிறது.

2. நிர்விகற்பசமாதியிலும் ஸவிகற்பசமாதியிற்போல் திரிபுடியாகிய துவைதமிருந்தாலும் அது பிரதீதியாகிறதில்லை. அது ஜலத்தில் உப்பைக் கரைத்தால் உப்பு இருந்தும் நேத்திரத்துக்கு அது முற்றும் பிரதீதியாகாததுபோலாம.

இவ்விதத்தால் ஸவிகற்ப நிர்விகற்பசமாதிகளுக்கு இப்பேதஞ் சித்தித்தது :—

1. ஸவிகறபசமாதியில் பிரஹ்மரூபமாகத்துவைதம் பிரதீதியாதல்.

2. நிர்விகற்பசமாதியில் திரிபுடியாகிய துவைதம் பிரதீதியாகாமை.

## 466. சுழுத்திக்கும் நிர்விகற்பசமாதிக்கும் பேதம்.

அவ்வாறே சுழுத்திக்கும் நிர்விகற்ப சமாதிக்கும் இது பேதமாம் :—

1. சுழுத்தியில் அந்தக்கரணத்தின் விருத்தி பிரஹ்மாகாரமாகிறதில்லை.

2. நிர்விகற்பசமாதியில் பிரஹ்மாகாரமான அந்தக்கரணத்தின் விருத்தி இருக்கிறது; அதன் அபாவமில்லை.

இவ்விதத்தால்,

1. சுழுத்தியில் விருத்தியோடுகூடியஅந்தக்கரணத்தின் அபாவமுண்டாகிறது.

2. நிர்விகற்பசமாதியில் விருத்தியோடு கூடிய * அந்தக்கரணமிருந்தும் அது பிரதீதியாகிறதில்லை.

---

* சமாதியில் அந்தக்கரணம் இல்லையாயின், யோகியின் தேகம் தூங்குவோனைப்போல விழவேண்டும் ; விழுகிறதில்லை. ஆதலால் சமாதியில் அந்தக்கரணமுண்டெனறியவேண்டியது.

நிர்விகற்பசமாதியில் அந்தக்கரணத்தின் எந்தப் பிரஹ்மாகார விருத்தி யுண்டாகிறதோ, அதற்கு ஏது சவிகற்பசமாதியின் அப்பியாஸமாம். ஆதலால் சாதனரூப எட்டங்கங்களில் ஸவிகற்பசமாதி எண்ணப்பட்டிருக்கிறது. நிர்விகற்பஸமாதி பயனும்.

## 467. நிர்விகற்பசமாதி இருவகைத்தெனல்.

அந்நிர்விகற்பசமாதியும் இருவகைத்தாம் :—(1) ஒன்று அத்துவைத பாவனாரூபம். (2) மற்றொன்று அத்துவைதாவஸ்தானரூபம்.

1. அத்துவைதப் பிரஹ்மாகாரமான அந்தக்கரணத்தின் அஞ்ஞாத விருத்தியோடுகூடியதாயின் அது **அத்துவைதபாவனாரூபநிர்விகற்பசமாதி** யெனப்படும்.

2. இந்தச்சமாதியில் அப்பியாசம் அதிகமாவதனால் பிரஹ்மாகார விருத்தியும் சாந்தமாய் விடுகிறது. ஆதலால் விருத்தியில்லாததான நிர்விகற்பசமாதி **அத்துவைதாவஸ்தானரூபநிர்விகற்பசமாதி** யென்னப்படும்.

எப்படிக் காய்ச்சின இரும்பின்பேரில் விடப்பட்ட ஜலத்திவலை அவ்விரும்பிலேயே பிரவேசிக்கிறதோ அப்படி அத்துவைதபாவனாரூபசமாதியின் திடமான அப்பியாஸத்தால் அத்தியந்தப்பிரகாசமான பிரஹ்மத்தில் விருத்தி லயமாகிறது. † அது ** அத்துவைத அவஸ்தானரூப நிர்விகற்பசமாதிக்குச் சாதனமாயிருக்கிறது.

## 468. அத்துவைத அவஸ்தானரூபசமாதிக்கும் சுழுத்திக்கும் பேதம்.

அத்வைத அவஸ்தானவடிவசமாதிக்கும் சுழுத்திக்கும் இவ்வளவு பேதமுண்டு :—

1. சுழுத்தியில் விருத்தி அஞ்ஞானத்தில் லயமாகிறது.

2. அத்வைத அவஸ்தானரூபசமாதியில் விருத்தி பிரஹ்மப்பிரகாசத்தில் $ லயமாகிறது.

---

† ஆதலால் அந்த அத்வைதபாவனைவடிவசமாதி.

** இந்த அத்வைதாவஸ்தானவடிவ நிர்விகற்பசமாதியே ஞானத்தின் ஏழாவது பூமிகைவடிவ யோகத்தின் பரம அவதியாம்.

$ இங்கு இது இரகசியமாம் :— முற்கூறிய சமாதியில் இராஜத தாமதகுணங்கள் அடியோடு நீங்குதலால் ஆவிர்ப்பவித்த சுத்தசத்துவகுணவடிவ உபாதானத்திலேயே விருத்தியின் லயம் சம்பவிக்கிறது; நிர்விகாரப் பிரஹ்மப்பிரகாசத்தில் இல்லை.

1. சுழுத்தியின் ஆனந்தம் அஞ்ஞானவிருதமாயிருக்கிறது.

2. சமாதியில் ஆவரணமில்லாத பிரஹ்மானந்தம் விளங்குகிறது.

## 469. நிர்விகற்பசமாதியின் லயம், விக்ஷேபம், கஷாயம் ரஸாஸ்வாதம் என்னும் நான்கு விக்கினங்கள் 469—472.

ஆனால் நிர்விகற்பசமாதியில் நான்கு விக்கினங்களிருக்கின்றன. அவற்றை நீக்கும்பொருட்டு அவற்றின் சொரூபத்தைச் சொல்லுகிறேன் :—

1. லயம் 2. விக்ஷேபம் 3. கஷாயம் 4. ரஸாஸ்வாதம என விக்கினங்கள் நான்காம்.

1. ஆலஸ்யத்தினாலாவது சோம்பலினாலாவது, நித்திரையினாலாவது விருத்தியில்லாமலிருத்தற்கு லய மென்று பெயர். அந்த லயத்தால் சுழுத்திக்குச் சமானமான அவஸ்தையுண்டாகின்றது. பிரஹ்மானந்தம் விளங்குகிறதில்லை. ஆதலால் நித்திரை ஆலஸ்யமுதலிய காரணங்களால் எப்போது விருத்தி தனது உபாதானமான அந்தக்கரணத்தில் லயமாகிறதோ, அப்போது யோகி சாவதானப்பட்டு நித்திரைமுதலியவற்றைத் தகைத்து விருத்தியை எழுப்பவேண்டியது. இவ்வாறு லயரூபவிக்கினத்துக்கு விரோதியான நித்திரை ஆலஸ்யங்களின் நிரோதத்தோடுகூடிய விருத்தியின் பிரவாகவடிவ ஜாகரணம் (விழிப்பு) எதுவோ அது கௌடபாதாசாரியாற் *சித்தசம்போதன மெனப்படுகின்றது.

470. 2. விக்ஷேபத்தின் அர்த்தம் இதுவாம்:—பூனைமுதலியவைகளின் பயத்தால் சிட்டுக்குருவிகள் வீட்டுக்குள் பிரவேசிக்கின்றன. அப்போது பயக்கிலேசங்களுக்குக் கிரகத்திற்குள் தற்காலம் இடம் காணப்படுகிற

---

காய்ந்த இரும்பில் நீர்த்துளி லயமாதலின் திருஷ்டாந்தம் சொல்லப்பட்டது. அங்கும் விசாரதிருஷ்டியினால் பிருதிவியின் காரியமான இரும்பில் நீர்த்துளி லயமாகிறதில்லை. ஜலத்திற்கு உபாதானமான அக்கினிமாத்திரத்தில் நீர்த்துளி லயமாகிறது. அதற்குக் காய்ச்சிய இரும்பில் உபசாரம் (சொல்லுதல்) உண்டாகிறது. அங்ஙனமாயினும், பிரஹ்மப்பிரகாசத்தின் விளக்கவடிவ நிமித்தத்தால் விருத்தியின் லயமுண்டாயிருக்கிறது. ஆதலால் உபசாரத்தினால் பிரஹ்மப்பிரகாசத்தில் லயம் சொல்லப்படுகிறது.

அல்லது, அந்தச் சமாதியுடைய பிரஹ்மவித்துவரிஷ்டனது திருஷ்டியினால் குணமுதலியன தோற்றுகிறதில்லை; ஆனால் சுத்தப்பிரஹ்மம் தோற்றுகிறது. அங்கு அந்த (பிரஹ்மவிவர்த்த) விருத்தி (திருஷ்டி) யின் அபாவமுண்டாயிற்று. இதனாலும் பிரஹ்மப்பிரகாசத்தில் விருத்தியின் லயம் சொல்லப்படுகிறது.

* இவ்வர்த்தம் கௌடபாதாசாரியரால் செய்யப்பட்ட மாண்டூக்கிய உபநிஷத்தின் காரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது.

தில்லை. ஆதலால் மறுபடியும் வெளியே வந்து பயத்தை அல்லது மரணரூப துக்கத்தை யடைகின்றன. அதுபோல் அநாத்மபதார்த்தங்களைத் துக்கஹேது வென அறிந்து அத்துவைதாநந்தத்தை விஷயமாக்குவதற்காக அந்தர்முகமாகிய விருத்தி அங்கு விருத்திக்கு விஷயமாகிய சேதனம் அதிசூக்ஷ்மமாயிருத்தலால் கொஞ்சகாலம் விருத்தி நிலைத்தலின்றி உடனே சேதனஸ்வரூபாநந்தத்தின் லாபமுண்டாகிறதில்லை. அதனால் விருத்தி பகிர்முகமாய் விடுகிறது. இவ்வாறு பகிர்முகமாம் விருத்திக்கு விக்ஷேபமென்று பெயர். அந்த விருத்தியின் ஸ்திரத்தன்மையின்றிச் சொரூபானந்தம் அடையப்படுகிறதில்லை. ஆதலால் அந்தர்முகவிருத்தி யுண்டாவதனாலும் எவ்வளவுகாலம் விருத்தி பிரஹ்மமாகாரமாகவில்லையோ அவ்வளவுகாலம் பாஹ்ய பதார்த்தங்களில் தோஷபாவனையால் விருத்தியை யோகி பகிர்முகமாகவிடுகிறதில்லை. ஆனால் விருத்தியின் அந்தர்முகத்தன்மையினையே நிறுத்துவன்.

விக்ஷேபரூப விக்கினத்துக்கு விரோதியான யோகியின் பிரயத்தனத்தைக் கௌடபாதாசாரியர் சமமென்று கூறியிருக்கிறார்.

**471.** 3. ராகாதிதோஷத்தினைக் கஷாயமென்பர். ராகாதிதோஷங்கள் இருவகையாம் :—(1) பாஹ்யம். (2) மற்றொன்று ஆந்தரமாம்.

(1) புத்திரன் ஸ்திரீ தனாதி எவற்றின் விஷயங்கள் இருப்பனவாகின்றனவோ, அவை பாகியமாம்.

(2) சென்றகாலத்தின் அல்லது வருங்காலத்தின் சிந்தனைவடிவ மனோராச்சியம் ஆந்தரமெனப்படும்.

இவ்விருவகை ராகாதிகளும் சமாதியிற் பிரவிருத்தித்த யோகியினிடத்துச் சம்பவியா. ஏனெனின்,

சித்தத்திற்கு ஐந்து பூமிகைகளுண்டு :—(1) க்ஷேபம், (2) மூடத்துவம், (3) விக்ஷேபம், (4) ஏகாக்கிரத்துவம், (5) நிரோதபூமிகை என்பனவாம்.

அவைகளில்,

(1) * உலகவாசனை. † தேகவாசனை, ‡ சாஸ்திரவாசனை என்றல் முதலிய ரஜோகுணத்தின் பரிணாமங்களாகிய திட அநாத்ம வாசனையை க்ஷேபமென்பர்.

---

* "என்னை உலகம் நிந்திக்கலாகாது. எல்லோரும் என்னைத் துதிக்கவேண்டும்" என்னும் ஆக்கிரகத்தின் திடசம்ஸ்காரத்திற்கு உலகவாசனையென்று பெயர்.

† "ஸ்தூலசூக்ஷ்ம தேகங்களின் ரோகாதிரூப அல்லது பாபரூப மலங்களை ஔஷதாதிகளாலாவது அல்லது தீர்த்தயாத்திரையினாலாவது அடியோடு நீக்குவேன். அன்றியும், அவற்றின்கண் புஷ்டி அழகு முதலியவடிவ அல்லது புண்ணியவடிவ குணத்தைச் சம்பாதிப்பேன்" என்னும் ஆக்கிரகத்தின் திடசம்ஸ்காரம் தேகவாசனையாம்.

‡ "சகலசாஸ்திரங்களின் பாடத்தையாவது அர்த்தத்தையாவது அல்லது அந்த அந்தச்சாஸ்திரத்திற்கூறிய ஆசரணத்தை (நடையை)யாவது யான் தரிப்பேன்" என்னும் ஆக்கிரகத்தின் திடசம்ஸ்காரம் சாஸ்திரவாசனையாம்.

(2) நித்திரை ஆலஸ்யமுதலிய தமோகுண பரிணாமங்களை மூடத்தன்மை என்பர்.

(3) தியானத்திற் பிரவிருத்தித்த சித்தம் ஒருகாலத்தில் வெளியே செல்லுவதனை விக்ஷேபமென்பர்.

(4) அந்தக்கரணத்தின் அதீத (சென்ற) பரிணாமமும் வர்த்தமான பரிணாமமும் சமானாகாரமாதலை ஏகாக்கிரத்தன்மை யென்பர்.

இந்த ஏகாக்கிரத்தன்மையின் லக்ஷணம் யோகசூத்திரத்தில் பதஞ்சலிபகவானால் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் தாற்பரியம் இதுவாம்:—சமாதி காலத்தில் யோகியின் அந்தக்கரணத்தில் ஏகாக்கிரத்தன்மை யுண்டாகிறது. அந்த ஏகாக்கிரத்தன்மை விருத்தியின் அபாவரூபமன்று. ஆனால் சமாதி காலத்திலுண்டாம் அந்தக்கரணத்தின் பரிணாமங்களெல்லாம் பிரஹ்மத்தையே விஷயமாக்குகின்றன. ஆதலால் அந்தக்கரணத்தின் அதிதபரிணாமமும் வர்த்தமானபரிணாமமும் கேவலம் பிரஹ்மாகாரமாதலால் சமானாகாரமாகின்றன.

(5) இந்த ஏகாக்கிரத்தன்மையின் பெருக்கத்தை நிரோதமென்பர்.

இவ்வைந்து பூமிகைகளும் அந்தக்கரணத்தினவாம். பூமியென்பது அவஸ்தையாம்.

இவ்வைந்து பூமிகளோடுகூடிய அந்தக்கரணத்துக்கு முறையே க்ஷிப்தம், மூடம், விக்ஷிப்தம், ஏகாக்கிரம், நிருத்தம் என்றும் பெயராம். அவற்றில் (1—2) க்ஷிப்த மூட அந்தக்கரணங்களுக்கோ சமாதியில் அதிகாரமில்லை. (3) விக்ஷிப்த அந்தக்கரணத்துக்கு அதிகாரமுண்டு. (4—5) ஏகாக்கிர நிருத்த அந்தக்கரணங்கள் சமாதிகாலத்தில் உண்டாகின்றன.

இது யோகசாஸ்திரங்களிற் செல்லப்பட்டிருக்கிறது.

ராகாதிதோஷத்தோடுகூடிய அந்தக்கரணம் க்ஷிப்தமாகவே இருக்கிறது. அந்த க்ஷிப்த அந்தக்கரணத்துக்கு யோகத்தில் அதிகாரமில்லை. ஆகையால் ராகாதிதோஷரூப கஷாயம் சமாதிக்கு *விக்கினமென்று சொல்வது பொருந்தாது.

---

* எந்தப்புருஷனுக்கு இராஜனிடத்துப்போகும் அதிகாரமிருக்கிறதோ, அவனை வாயில்காப்பவன் தடுத்தான் என்பது பொருந்தும். எவனுக்கு அங்குப் போவதற்கே அதிகாரமில்லையோ அவனை வாயில்காப்பவன் தடுத்தான் என்பது பொருந்தாது. அங்ஙனமே, க்ஷிப்த அந்தக்கரணத்திற்குச் சமாதியில் அதிகாரமுளதாயின் அதற்கு ராகாதிதோஷவடிவ கஷாயம் சமாதியின் விக்கினமாகும். எதனால் அந்த க்ஷிப்த அந்தக்கரணத்திற்குச் சமாதியில் அதிகாரமில்லையோ அதனால் அதற்கு ராகாதிதோஷவடிவ கஷாயம் சமாதியின் விக்கினமாம் என்று இவ்வாறு கூறுதல் பொருந்தாது.

அங்ஙனமாயினும் இது சமாதானமாம் :—பாஹ்யமாகவாவது ஆந்தரமாகவாவதிருக்கும் * ராகாதிகள் கல்பித அந்தக்கரணத்திலேயே யுண்டாகின்றன. அந்த அந்தக்கரணத்துக்கு அதிகாரமுமில்லை. ஆயினும் அநேக ஜன்மங்களில் முன் அநுபவிக்கப்பட்ட பாஹ்ய ஆந்தரராகத்துவேஷங்கள் எவையோ அவற்றின் சூக்ஷ்மசம்ஸ்காரம் விக்ஷிப்தாதி அந்தக்கரணத்திலும் சம்பவிக்கும். ஆதலால் ராகத்துவேஷங்களுக்குக் கஷாயமென்று பெயரில்லை. ஆனல் ராகத்துவேஷாதிகளின் சம்ஸ்காரத்துக்குக் † கஷாயமென்று பெயர். அந்தச் சமுஸ்காரம் அந்தக்கரணமிருக்கும்வரையில் நீங்குகிறதில்லை. ஆதலால் சமாதிகாலத்திலும் அந்தக்கரணத்திலிருக்கிறது. ஆனல் ராகத்துவேஷாதிகளின் உற்பூதசமுஸ்காரம் (புலப்பட்டவாசனை) சமாதிக்கு விரோதமாம். அநுற்பூதம் (புலப்படாதது) விரோதியன்று.

வெளியிடப்பட்டதை உற்பூத என்பர்.

வெளியிடப்படாததனை அநுற்பூதம் என்பர்.

சமாதியில் பிரவிருத்தித்த யோகிக்கு ராகத்துவேஷங்களினது சமுஸ்காரத்தின் வெளிப்படுத்தலுண்டாமாயின் தோஷதிருஷ்டியால் அதனை அழுத்திவிடவேண்டியது.

விக்ஷேபத்துக்கும் கஷாயத்துக்கும் இது பேதமாம் :—

(1) பாஹ்ய விஷயாகார விருத்திக்கு விக்ஷேப மென்று பெயர்.

---

* இங்கு இது பிரக்கிரியையாம்:—1. உத்தியுக்தம். 2. ஆசைவடிவினது. 3. வாசனைவடிவினது என்னும் பேதத்தால் ராகமுதலியன மூவகைத்தாம்.

1. பாகியப்பிரவிருத்திக்கு ஏதுவான ராகாதிகள் உத்தியுக்த மெனப்படுகின்றன. அவற்றையே பாஹ்யராகாதிகள் என்பர்.

2. மனோராஜ்ஜியவடிவ ராகாதிகள் ஆசைவடிவின வெனப்படுகின்றன. அவற்றையே ஆந்தராகாதிகளென்றும் கூறுவர்.

3. ஜன்மாந்தரத்தில் முன் அநுபவிக்கப்பட்ட ராகாதிகளின் சம்ஸ்காரங்கள் வாசனைவடிவினவாம். அவற்றில் வாசனைவடிவம் உற்புத்த அநுற்புத்த பேதத்தால் இருவகையாம்.

இவ்வர்த்தத்தை ஜீவன்முக்திவிவேகமென்னும் நூலில் வித்தியாரணியசுவாமிகள் எழுதியிருக்கின்றனர்.

† இதில் இது திருஷ்டாந்தமாம்:—இராஜாவைச் சந்திக்க வீட்டினின்றும் புறப்பட்ட ஓர் தனிகனை இராஜத்துவாரத்தில் விழித்திருக்கும் துவாரபாலகன் (வாயில் காப்பவன்) தடுத்துவிடுவதுபோலச் சகல விஷயங்களினின்றும் உபாதியடைந்து நிர்விகற்பசமாதியின் ஆநந்தத்தின்பொருட்டு அந்தர்முகமாகிய யோகியின் மனதை இடையில் (சமாதியாநந்தம் கிடைத்தற்குமுன்) உற்பூத ராகாதிகளின் சம்ஸ்காரவடிவ கஷாயம் தடுத்துவிடுகிறது. ஆதலால் அது சமாதியின் விக்கினமாம்.

(2) யோகியின் பிரயத்தனத்தினால் எங்கு விருத்தி அந்தர்முகமாகி யும் ராகாதிகளின் உற்பூத சமுஸ்காரத்தால் அந்தர்முகமான விருத்தியும் தகையப்பட்டுப் பிரஹ்மத்தை விஷயஞ்செய்கிறதில்லையோ அவ்விருத்தியி னைக் **கஷாய**மென்பர். விஷயத்தில் தோஷத்தைப் பார்த்தலோடுகூடிய யோகியின் பிரயத்தனத்தினால் கஷாயவிக்கினம் நிவிருத்தியாகிறது.

**472.** 4. ரஸாஸ்வாதத்தின் பொருள் இதுவாம்:— யோகிக்குப் பிரஹ் மானந்தத்தின் அநுபவமுண்டாகிறது. விக்ஷேபரூப துக்கத்தின் நிவிருத்தி யின் அநுபவமுண்டாகிறது. சிலவிடத்துத் துக்கநிவிருத்தியினாலும் ஆநந்த முண்டாகிறது.

எங்ஙனம்:—சுமையைத் தூக்கும் புருஷனுக்குச் சுமையை இறக்குவ தினால் ஆனந்தமுண்டாகிறது. அங்குண்டான ஆநந்தத்தில் வேறுவிஷயம் காரணமன்று; சுமையாலுண்டான துக்கத்தின் நிவிருத்தியினால் "எனக்கு ஆநந்தமுண்டாயிருக்கிறது" என்று சொல்லுகிறான். ஆதலால் துக்கநிவி ருத்தியும் ஆனந்தத்துக்கு ஏதுவாம். அதுபோல் யோகிக்குச் **சமாதியில்** விக்ஷேபத்தாலுண்டான துக்க நிவிருத்தியினால் எந்த ஆநந்த முண்டாகிற தோ அதன் அநுபவத்துக்கு **ரஸாஸ்வாத**மென்று பெயர்.

இவ்வநுபவத்தினாலேயே யோகி திருப்தி யடைந்துவிட்டால் சகல மான உபாதிகளுமற்றப் பிரஹ்மானந்தாகாரவிருத்தி அவனுக்குண்டாகாமை யால் அதன் அநுபவம் சமாதியில் உண்டாகாது. ஆதலால் துக்க நிவிருத் தியாலுண்டாகும் ஆநந்தத்தின் அநுபவரூப ரஸாஸ்வாதமும் சமாதியில் விக்கினமாகும்.

இச்சித்த பதார்த்தத்தின் அடைவின்றியும் விரோதியின் நிவிருத்தியால் ஆநந்தமுண்டாகிறதென்பதற்கு **வேறு திருஷ்டாந்தம்**:—பூமியிற் புதைய லிருக்கிறது. அது பொல்லாத விஷ சர்ப்பத்தால் காக்கப்பட்டிருக்கிறது. புதையலை எடுப்பதற்கு முன்னும் அதை யடைவதற்குத் தடையாயிருந்த சர்ப் பத்தை யொழிப்பதினா லாநந்த முண்டாகிறது. அங்குச் சர்ப்பநிவிருத் தியாலுண்டான ஆநந்தத்தில் ஒருவன் திருப்தியடைந்து, புதையலெடுக் கும் முயற்சியை விட்டு விட்டால் புதையல் கிடைத்தலாலுண்டாகும் பர மானந்தமுண்டாகாது. **அதுபோல்** அத்துவைதப்பிரஹ்மரூபம் புதையல். தேகாதியநாத்மபதார்த்தங்களின் பிரதீதிரூப விக்ஷேபம் சர்ப்பம். விக்ஷே பரூப சர்ப்பத்தின் நிவிருத்தியால் உண்டாகும் அவாந்தர ஆநந்தரூபரஸத்தின் அநுபவம் ஆஸ்வாதனம். அது புதையல்வடிவ அத்துவைதப் பிரஹ்மத்தை யடைவதாலுண்டாகும் பரமாநந்தத்தின் அடைவிற்குத் தடையாயிருத்த லால் **விக்கின**மெனப்படுகிறது.

அல்லது ரஸாஸ்வாதத்திற்கு இது வேறு பொருளாம்:— ஸவிகற்ப சமாதிக்குப்பின் நிர்விகற்பசமாதியுண்டாகிறது. சவிகற்பசமாதியில் திரிபுடி பிரதீதியாகிறது. ஆதலால் சவிகற்பசமாதியின் ஆநந்தம் திரிபுடிரூப உபாதிசகிதமா யிருத்தலால் ஸோபாதிக மெனப்படுகிறது. நிர்விகற்பசமாதியில் திரிபுடி பிரதீதியாகிறதில்லை. ஆகையால் நிர்விகற்பசமாதியில் நிருபாதிக (உபாதியில்லாத) ஆநந்த முண்டாகிறது. இவ்விதத்தால் சவிகற்பசமாதிக்குப் பின்னும் நிர்விகற்பசமாதியின் ஆரம்பத்திலும் சவிகற்பசமாதியின் சோபாதிகானந்தம் விடமுடியாது அநுபவிக்கப்படுகிறது. அது ரஸாஸ்வாத மெனப்படும். ஆதலால் விக்ஷேபநிவிருத்தியாலுண்டாகும் ஆநந்தத்தின் அநுபவம் அல்லது சவிகற்பசமாதியினது ஆநந்தத்தின் அநுபவம் ரஸாஸ்வாத மெனப்படும். அவ்விருவித ரஸாஸ்வாதங்களும் நிர்விகற்ப சமாதியின் பரமானந்தாநுபவத்துக்கு விரோதிகளாதலால் விக்கினங்களாகின்றன. ஆதலால் ரஸாஸ்வாதத்தையும் தள்ளவேண்டும்.

இவ்விதமாக நிர்விகற்பசமாதியில் நான்கு விக்கினங்க ளிருக்கின்றன அந்நான்கு விக்கினங்களும் சமாதியின் ஆரம்பத்திலுண்டாகின்றன.

## 473. ஞானிக்குப்பாஹ்யப்பிரவிருத்தி சம்பவியாதென்னும் ஆக்ஷேபத்தின் சமாப்தி.

ஆதலால் சாவதானமாய் நான்கு விக்கினங்களையும் தடுத்துச் சமாதியில் பரமானந்தத்தை வித்துவான் அடைகிறான். அவனையே ஜீவன்முக்தனென்பர்.

இவ்விதத்தால் ஞானியின் சித்தம் நிராலம்பமாயிருக்கிறதில்லை. பிராரப்தபலத்தால் சமாதியினின்றும் எழுந்திருந்தாலும் அப்போதும் சமாதியில் அநுபவித்த பரமாநந்தத்தின் ஸ்மிருதியுண்டாகிறது. ஆதலால் எழுந்தகாலத்திலும் ஞானியின் சித்தம் நிராலம்பமா யில்லை.

போஜனாதிகளிலுண்டாகும் ஞானியின் பிரவிருத்தி கேவலம் பிராரப்தத்தாலுண்டாகிறது. ஆனால் போஜனாதி வியவகாரங்களில் ஞானி துக்கமிருக்கிறதாக நினைத்துப் பிரவிருத்திக்கிறான். ஏனெனில் போஜனாதிகளிற் பிரவிருத்தியும் எவனுக்குத்துக்கரூபமாய்ப் பிரதீதியாகிறதோ அவனுக்கு அதிகப் பிரவிருத்தியுண்டாகிறதில்லை.

இவ்விதமாக அநேக ஆசாரியர்கள் இந்தப்பக்ஷத்தையே எழுதியிருக்கிறார்கள். ஜீவன்முக்தியின் ஆநந்தமும் பாஹ்யப் பிரவிருத்தியிலுண்டாகிற தில்லை;

ஆனல் நிவிருத்தியிலுண்டாகிறது. ஆதலால் ஜீவன்முக்தியின் சுகத்தை யிச்சிக்கிற ஞானிக்குப் பாஹ்யப்பிரவிருத்தி யுண்டாகிறதில்லை.

## (455-473-ல் நிகழ்ந்த ஆக்ஷேபத்தின் சமாதானம் 474-475)
## 474 ஞானி நிரங்குச (தடையற்றவ) னயிருக்கிறான், பிராரப்தத்தால் வியவகாரம் சித்திக்கிறது எனல்.

* அங்ஙனமாயினும் ஞானிக்கு நிவிருத்தியிலும் நியமமிருப்பதாகச் சொல்லுவது பொருந்தாது. ஏனெனில் நிவிருத்தியிலாவது பிரவிருத்தியிலாவது வேதத்தின் ஆஞ்ஞாரூபவிதியோ ஞானிக்கில்லை. ஞானிக்கு வியவகாரத்தில் நியமமில்லாமையால் ஞானி நிரங்குசன். அவன் வியவகாரம் பிராரப்தத்தாலுண்டாகிறது.

1. எந்த ஞானியின் பிராரப்தம் பிக்ஷாபோஜனத்திற்கு ஏதுவாகிறதோ அவனுக்குப் பிக்ஷாபோஜனமாத்திரத்திற் பிரவிருத்தியுண்டாகிறது.

2. எவன் பிராரப்தம் அதிகபோகத்துக்கு ஏதுவாகிறதோ அவனுக்கு அதிகத்திலும் பிரவிருத்தியுண்டாகிறது.

எவன் பிராரப்தம் பிக்ஷாபோஜனமாத்திரத்துக்கு ஹேதுவாகிறதோ அவனுக்குத்தான் ஞானமுண்டாகும். எவன் பிராரப்தம் அதிக வியவகாரத்துக்கு ஹேதுவாகிறதோ அவனுக்கு ஞான முண்டாகாது. ஆதலால் பிக்ஷாபோஜனாதி வியவகாரங்களைக் காட்டிலும் அதிக வியவகாரம் ஞானிக்குண்டாகாது. எவனுக்கு அதிகப்பிரவிருத்தி யிருக்கிறதோ அவன் ஞானியல்லன் என்று ஒருவன் சொல்லுவானாயின்,

அச்சங்கை பொருந்தாது. ஏனெனின், யாஞ்ஞவல்கியர் ஜனகாதிகள் ஞானிகளெனப்படுகிறார்கள். சபையில் ஜயமடைந்து தனத்தைச் சேர்க்கும் வியவகாரம் யாஞ்ஞவல்கியருக்கும் ராஜ்யபரிபாலன வியவகாரம் ஜனகருக்கும் சொல்லப்பட்டிருக்கின்றன. அன்றியும், வாசிஷ்டகிரந்தத்தில் அனேக ஞானிகளின் வியவகாரம் அநேகவிதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் ஞானியின் பிரவிருத்தியிலாவது நிவிருத்தியிலாவது நியமமில்லை.

யாஞ்ஞவல்கியர் சபையில் ஜயமடைந்தபிறகு † வித்வத்சந்நியாஸரூப நிவிருத்தியைத் தரித்தார். அன்றியும் பிரவிருத்தியில் துக்கத்துக்கு ஹேதுவான அனேக தோஷங்களையும் சொல்லியிருக்கிறார். அங்ஙனமாயினும், யாஞ்

* இப்போது இங்கிருந்து நூலாசிரியர் மூற்கூறிய ஞானிகளது நிவிருத்தியின் நியமத்தில் உண்டாகிய சங்கையின் சமாதானத்தைச் சொல்லுகின்றார்.

† இவ்வித்துவத்சந்நியாசமுதலியவற்றின் லக்ஷணத்தை நாரதபரிவிராஜகோபநிஷத்து சூதசங்கிதை முதலியவற்றிற் காண்க,

ஞுவல்கியருக்கு வித்வத்சந்நியாஸத்துக்குமுன் ஞானமிருந்ததில்லை யென்று சொல்லுதல் பொருந்தாது. ஆனால் ஞானமோ முன்னும் இருந்தது. ஆனால் வித்வத்சந்நியாசத்துக்கு முன் ஜீவன்முக்தியின் ஆநந்தம் அடையப்படவில்லை. ஆதலால் ஜீவன்முக்தியின் ஆனந்தத்தை யடைவதற்காகச் சேர்த்துவைத்ததையெல்லாம் தியாகம் பண்ணிவிட்டார். யாஞ்ஞுவல்கியருடைய பிராரப்தம் சிறிதுகாலம் அதிகபோகத்துக்கு ஏதுவாயிருந்தது. பிற்காலம் சொற்பபோகத்துக்கு ஏதுவாயிருந்தது. ஆதலால் முதலிலே யாஞ்ஞுவல்கியருக்கு அருவருப்பில்லாத அதிகபோகமும் பின் அருவருப்பால் சாவபோகத்தியாகமும் உண்டாயின.

1. ஜனகருடைய பிராரப்தம் மரணபரியந்தம் ராஜ்யபரிபாலனாதி விசேஷபோகத்துக்கு ஹேதுவாயிருந்தது. ஆதலால் எப்போதும் தியாகமே சம்பவிக்கவில்லை. போகத்தில் அருவருப்பும் அவருக்குண்டாகவில்லை.

2. வாமதேவாதிகளுடைய பிராரப்தம் சொற்பபோகத்துச்கு ஹேதுவாயிருந்தது, போகத்தில் அருவருப்பு அவர்களுக்கு எப்போதும் இருந்தபடியால் பிரவிருத்தியின் அபாவமே சொல்லப்பட்டிருக்கிறது.

3. சிகித்துவஜனுக்கு ஞானத்துக்குப் பிறகு அதிகப்பிரவிருத்தியுண்டாயிருக்கிறதாக வாசிஷ்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விதமாக ஞானிகளுக்கு அநேகவிதமான விலக்ஷணவியவகாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்கள் எல்லோருக்கும் * ஞானம் சமானமாம்:— அதன் பயனாகிய மோக்ஷமும் சமமே. பிராரப்தபேதத்தால் வியவ

---

* ஞானம் எல்லோருக்கும் சமம் என்பதில் அடியிற்கண்ட சுலோகத்தைச் சொல்லுவார்கள். "கிருஷ்ணோபோகீ சுகஸ்தியாகீ ராஜாநௌ ஜனகராகவௌ வசிஷ்ட: கர்மகர்த்தாச த ஏதே ஞானின: ஸமா:" இதன் அர்த்தம்:—

1. கிருஷ்ணன் போகி,
2. சுகர் தியாகி,
3. ஜநகரும் ராமரும் இராஜாக்கள்,
4. வசிஷ்டர் கர்மகர்த்தா.

இவ்விதமாக இவர்களுடைய பிராரப்தபேதத்தால் வியவஹாரம் வெவ்வேறாக இருந்தாலும், ஞானவிஷயத்தில் அவர்களும் இவர் (இக்காலத்தவர்)களுமாகிய ஞானிகள் சமானமாயிருக்கிறார்கள்." இது சம்பிரதாயமாய் வழங்கும் சுலோகத்தின் பொருளாம். கூறிய அர்த்தம் சித்திரதீபத்திலும் "பிராரப்தகர்மம் நாநாவாயிருத்தலால் ஞானிகளின் நடையும் வேறுவேறுவிதமாக (ஒன்றற்கொன்று விலக்ஷணமாய்) இருக்கிறது. அதனால் பண்டிதர்கள் திடஞானத்தால் மோக்ஷத்தைப் பிரதிபாதிக்கும் சாஸ்திரத்தின் அர்த்தத்தில் மயக்கமுடையவராகுதல் தகுதியன்று. அந்தஞானிகள் தத்தம் கர்மங்களின் அநுசாரமாக எப்படியோ அப்படி (விலக்ஷணமாய்) இருத்தலைச்செய்க. எல்லோருக்கும் ஞானம் சமமாம் முக்தியும் சமானமாம் என்பது ஸ்திதியாம் (சாஸ்திரவித்துவான்களது நிச்சயமாம்.)

காரம் பேதப்படுகிறது. வியவகாரம் குறைவதால் ஜீவன்முக்தியின்சுகம் அதிகப்படுகிறது. வியவகாரம் அதிகரித்தால் ஜீவன்முக்தியின் சுகம் குறைகிறது.

## 475. ஞானிக்கு விதேகமோக்ஷத்தியாகமும் பரலோகத்தின் இச்சையுமுண்டாகிறதில்லை.

இதிற் சிலர் இவ்வாறு * சங்கிக்கின்றனர் :—ஜீவன்முக்தியின் சுகத்தை விட்டுத் துச்சமான போகத்திற்பிரவிருத்திக்கிறவன் விதேகமோக்ஷத்தையும் விட்டு வைகுண்டாதி லோகங்களை யிச்சித்து அந்தலோகங்களுக்குப் போவான்,

அந்தச் சங்கை பொருந்தாது. ஏனெனின்,

1. ஜீவன்முக்திசுகத்தின் தியாகமும் போகத்திற் பிரவிருத்தியும் ஞானியின் பிராரப்த பலத்தால் சம்பவிக்கின்றன.

2. விதேகமோக்ஷத்தியாகமும் பரலோககமனமும் சம்பவிக்கிறதில்லை. ஏனெனின்,

1. ஞானியின் பிராணன் வெளியிற் போகிறதில்லை. ஆதலால் பரலோககமனம் சம்பவிக்கிறதில்லை.

2. விதேகமோக்ஷத்தியாகமும் சம்பவிக்கிறதில்லை. ஏனெனின், ஞானத்தால் அஞ்ஞானம் நிவிருத்தியாகிப் பிராரப்தபோகத்துக்குப் பின் ஸ்தூல சூக்ஷ்ம சரீராகாரமான அஞ்ஞானம் சேதனத்தில் லயமாதலை விதேகமோக்ஷமென்பர். அது அவசியமுண்டாகிறது. மூலாஞ்ஞானம் எஞ்சியிருந்தாலாவது நிவிருத்தியான அஞ்ஞானம் மறுபடியும் உண்டானாலாவது விதேக மோக்ஷம் சித்தியாது. அந்த மூலாஞ்ஞானத்துக்கு விரோதியான ஞானமுண்டாகவே அஞ்ஞானம் மிஞ்சியிராது. பிரமாணத்தால் நாசமான அஞ்ஞானம் மறுபடியும் உண்டாகாது. ஆதலால் விதேகமோக்ஷத்தின் அபாவமுண்டாகாது.

3. விதேகமோக்ஷத்தியாகத்திலும் பரலோககமனத்திலும் ஞானியின் இச்சையுமுண்டாகாது. ஏனெனின்,

(1) ஞானிக்கு இச்சை கேவலம் பிராரப்தத்தாலுண்டாகின்றது. எவ்வளவு சாமக்கிரிகளின்றிப் பிராரப்தபோக முண்டாகாதோ, அவ்வளவு சாமக்கிரிகளைப் பிராரப்தம் உண்டாக்குகிறது. இச்சையின்றிப் போகமுண்டாகாது. ஆதலால் ஞானியினிச்சையும் பிராரப்தத்தின் பலனும்.

---

* இச்சங்கை த்வைதவிவேகத்தில் வித்தியாரணியஸ்வாமிகளால் எழுதப்பட்டிருக்கிறது.

(2) அந்நியலோகத்திலாவது அல்லது இந்த லோகத்திலாவது அன்னிய சரீரத்தின் சம்பந்தம் ஞானிக்குப பிராரப்தத்தாலும் உண்டாகிறதில்லை யென்பது முன் இந்தத்தரங்கத்திலேயே பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

ஆதலால் ஞானிக்குப் பிராரப்தத்தால் விதேகமோக்ஷத்தியாகத்திலாவது அல்லது பரலோககமனத்திலாவது * இச்சையுண்டாகிறதில்லை.

---

* த்வைதவிவேகத்தில் முற்கூறிய சங்கைவடிவ தர்க்கத்தின் கர்த்தாவாகிய ஸ்ரீவித்தியாரணியசுவாமிகளுக்கு "மந்தப்பிராரப்தத்தால் போகமுதலியவற்றில் பிரவிருத்தித்த ஞானிக்கு விதேகமோக்ஷத்தின் தியாகத்திலும் பரலோகத்தின் கமனத்திலும் இச்சையுண்டாகும்,, என்னும் அர்த்தத்தில் அபிப்பிராயமில்லை. ஆனல் பிரயத்தினமில்லாத ஞானிகளுக்கு இஷ்டப்படி நடத்தலுக்கு ஏதுவான போகாதிகளின் ஆசையை விடுத்து ஜீவன்முத்தியின் சுகத்தில் ஆசையுண்டாக்குவதில் அபிப்பிராயமாம். ரோகத்தை யுண்டாக்கும் பதார்த்தத்தையுண்ணும் புத்திரனுக்கு மிக்க இதத்தைவிரும்பும் அவன் தாய் "அப்பா! நீ ஆரோக்கியத்தின் இச்சையைவிட்டுப் பார்த்தல்மாத்திரத்தில் அழகாயிருக்கும் இந்த ரோகமுடைய பதார்த்தங்களை விவேகமிழந்து புசிப்பாயானல், அப்போது வஞ்சகர்களாற் செய்யப்பட்ட விஷங்கலந்த இலட்டுகத்தைப் புசிக்கும் விருப்பால் நீ ஜீவித்திருக்கும் இச்சையையும் இழப்பாய்" என்று சொல்லுகிருள். இவ்வாறு சொல்லும் தாய்க்குப் புத்திரன் உயிரிழத்தலிலும் விஷங்கலந்த இலட்டுகத்தைப் புசிக்கவேண்டுமென்பதிலும் அபிப்பிராயமின்று. ஆனல் தர்க்கத்தால் ரோகத்திற்கு ஏதுவான ரோகமுண்டாக்கும் பதார்த்தங்களைச் சாப்பிடும் ஆசையை நீக்குதலிலும் ரோகமில்லாதிருத்தலில் ஆசையுண்டாக்குதலிலும் தாற்பரியமாம்.

அதுபோல வித்தியாரணியசுவாமிகளுக்கும் "விவேகத்தை விட்டு(உபேக்ஷித்து) மந்தப்பிராரப்தத்தின் பலத்தில் சகாயமாயுள்ள வாசனையினலாவது அல்லது கேவல வாசனையினலாவது விக்ஷேபத்திற்கு ஏதுவான காமாதிகளின் பரவசத்தன்மைவடிவ பிரமாதத்தையடைந்த ஞானிக்கு ஜீவன்முக்திவடிவ ஜீவ‍த்தை விடுதலிலும் பரலோகத்தின் போகத்திலும் இச்சையுண்டாகும்" என்னும் அர்த்தத்தில் அபிப்பிராயமன்று. ஆனல் அநிஷ்டத்தைச் சம்பாதித்தல்வடிவ தர்க்கத்தால் அவனுக்கு இஷ்டப்படிநடத்தல்வடிவ ரோகத்திற்கு ஏதுவான போகத்திற் பிரவிருத்தித்தலை ஒழித்து ஜீவன்முக்தியின்விலக்ஷணசுகவடிவ ஆரோக்கியத்தில் ஆசையுடையவனுக்குவதில் அபிப்பிராயமாம்.

அன்றியும், திடஞானமுடையவன் மோக்ஷத்தின் இச்சையில்லாதவனுயிருந்தாலும் முக்தனுகின்ருன் என்னும் அர்த்தத்தில் பாஷியகாரர் வசனம் பிரமாணமாம்:- "அஞ்ஞானிக்குத் தேகத்தில் ஆத்மபுத்தியிருப்பதுபோல எவனுக்குத் தேகத்தில் ஆத்மஞானத்தைக் கெடுக்கும் ஞானம் பிரஹ்மத்திற்கு வேருகாத ஆத்மாவில் உண்டாகிறதோ, அவன் விருக்ஷத்தினின்றும் நழுவியகையையுடைய நரனைப்போல இச்சியாதிருந்தும் முக்தனுகின்ருன்."

சொப்பனத்தினின்று விழித்தபுருஷனுக்கு எப்படிச் சொப்பனப்பிராந்தியின் நீக்கத்தை விடுதலிலும் சொப்பனத்திலுள்ள பரலோகத்திற் செல்லுதலிலும் இச்சை சம்பவியாததுபோல ஞானிக்குப் பந்தப்பிராந்தியினீக்கமாகிய விதேகமோக்ஷத்தை விடுதலிலும் சொர்க்கமுதலிய பரலோகத்திற் செல்லுதலிலும் இச்சை சம்பவியாது.

## 476. ஞானிக்குமந்தப்பிராரப்தத்தால் ஜீவன்முக்தி சுகத்தின் விரோதியான பிரவிருத்தியுண்டாதல்.

ஜீவன்முக்திசுகத்துக்கு விரோதியான வர்த்தமான சரீரத்திலுள்ள அதிக போகத்தின் இச்சையோ பிக்ஷாபோஜனாதிகளிற்போல் ஜனகாதிகளுக்குச் சம்பவிக்கிறது.

இந்தவிடத்தில் இது இரகசியமாம்:— ஞானியின் பாஹ்யப்பிரவிருத்தி ஜீவன்முக்திக்கு விரோதியன்று. ஆனால் ஜீவன்முக்தியின்விலக்ஷண சுகத்துக்கு விரோதியாம். ஏனெனின், ஆத்மா நித்தியமுக்தமாம்; அவித்தையினால் அதற்குப் பந்தம் பிரதீதியாகிறது. எந்தக்காலத்தில் ஞான முண்டாகிறதோ அந்தக்காலத்திலேயே அவித்தையாலுண்டான பந்தப்பிரமம் நிவிருத்தியாகிறது. ஞானமுண்டானபின்னும் பந்தப்பிராந்தி யுண்டாகிறதில்லை. பந்தப்பிராந்தி இல்லாமையே சரீரத்தோடு கூடியிருப்பவனுக்கு ஜீவன் முக்தியென்று சொல்லப்படும். தேகாதிகளின் பிரவிருத்தியிலும் நிவிருத்தியிலும் ஞானிக்கு ஆத்மாவினிடத்தில் பந்தப்பிராந்தியுண்டாகிறதில்லை. ஆதலால் பாஹ்யப்பிரவிருத்தியாலும் ஜீவன்முக்தி நிவிருத்தியாகிறதில்லை. அங்ஙனமாயினும் பாஹ்யப்பிரவிருத்தியில் ஜீவன்முக்தனுக்கு விலக்ஷணசுக முண்டாகிறதில்லை. ஏகாக்கிரத்தன்மைவடிவ அந்தக்கரணபரிணாமத்தினால் சுகமுண்டாகிறது. அந்த ஏகாக்கிரத்தன்மையாகிய பரிணாமம் பாஹ்யவிருத்தியி லுண்டாகிறதில்லை.

இவ்விதமாகப் பிராரப்தபேதத்தால் ஞானிகளின் வியவகாரம் அநேகவித மாயிருக்கிறது. ஆனால் எவனுடைய பிராரப்தம் அதிகப்பிரவிருத்திக்கு ஹேதுவாயிருக்கிறதோ அவனுடையது * மந்தப்பிராரப்த மெனப்படுகிறது. ஏனெனின் அதிகப்பிரவிருத்தி ஏகாக்கிரத்தன்மைக்கு விரோதியாயிருக்கிறது. ஏகாக்கிரத்தன்மையின்றி நிருபாதிகாநந்தம் பிரதீதியாகிறதில்லை. இது சமாதிநிரூபணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

---

* சகலப்பிருதிவியின் இராஜ்ஜியத்தையுமடைந்தபுருஷனுக்கு வியாதிக்குக் காரணமான பிராரப்தகர்மம் விரோதியாயிருத்தலால் மந்த மெனப்படுகின்றது. அது போல அவித்தையும் அதன்காரியமுமாகிய சத்துருக்களைச் சங்கரித்துப் பிரஹ்மத்தன்மையையடைந்த ஞானிக்கு அதிகப்பிரவிருத்திக்குக் காரணமான பிராரப்தம் ஏகாக்கிரத்தன்மைக்கு விரோதியாயிருத்தலால் மந்தமெனப்படுகிறது.

இங்கு மந்தமென்னும் பதத்திற்குத் தாழ்ந்ததென்பது பொருளாம். சிதைந்ததென்பது பொருளன்று. ஏனெனின் முற்கூறியஅரசன் தளர்ந்தபிராரத்தத்தாற்றோன்றிய அல்லது கஷ்டசாத்தியமான ரோகத்தினை மருந்துமுதலிய பிரயத்தினத்தால் நிவிருத்திசெய்கிறான். ஆனால் தீவிரபிராரத்தத்தாற்றோன்றிய அசாத்திய ரோகத்தினை நிவாத்தித்தல அவனாற்கூடாததாம். அதுபோலச் சிதைந்தபிராரத்தத்தின் பயன்வடிவப் பிரவிருத்தியினையோ ஞானி ஜீவன்முக்தியினது சுகத்தின்பொருட்டு வாசனையை(ராகத்துவேஷத்தினை) நீக்குதலாகிய பிரயத்தினத்தால் நீக்குகிறான்; ஆனால் தீவிரதரபிராரப்தத்தின் பயன்வடிவப் பிரவிருத்தியானது அதனால் நீக்கக்கூடாததாயிருக்கிறது. இவ்வாறு விவஸ்தையைச் செய்யப் பிராரப்தமும் புருஷார்த்தமுமாகிய இரண்டும் பயனுடையனவாம். ஆதலால் அதிகப்பிரவிருத்திக்குக் காரணமான பிராரப்தம் சிதைந்ததன்று; ஆனால் தாழ்ந்ததாம். இதனால்அது மந்தமெனப்படுகின்றது.

## 477. ஞானியின் வியவகாரத்திற்கு நியமமில்லாமை. 477-478.

“ஞானிக்குச் சகல அநாத்மபதார்த்தங்களிலும் மித்தியாபுத்தியுண்டாகிறது. அவனுக்கு ராகமுண்டாகிறதில்லை. ஆதலால் பிரவிருத்திசம்பவியாது” என்று * முன் சொல்லப்பட்டது. அச்சங்கையும் பொருந்தாது. ஏனெனின்,

எப்படித் தேகத்தில் மித்தியாபுத்தி ஞானிக்கு இருந்தாலும் தேகத்துக்கு அநுகூலமான பிக்ஷாதிகளில் கேவலம் பிராரப்தத்தால் பிரவிருத்தியுண்டாகிறதோ, அப்படியே எந்தஞானிக்கு அதிகபோகத்தின் பொருட்டுப் பிராரப்தமிருக்கிறதோ அந்த ஞானிககு அதிகப்பிரவிருத்தியுமுண்டாகிறது;

எப்படி வித்தையாடியின் வேடிக்கையை மித்தையென்றறிந்து அதைப் பார்க்க எல்லா ஜனங்களும் பிரவிருத்திக்கிறார்களோ, அப்படி ஸர்வபதார்த்தங்களிலும் ஞானிககு மித்தியாபுத்தியிருந்தும் பிரவிருத்தி யுண்டாகிறது.

**478.** “எவனுக்கு எந்தப் பதார்த்தத்தில் தோஷதிருஷ்டியிருக்கிறதோ அவனுக்கு அந்தப் பதார்த்தத்தில் பிரவிருத்தியுண்டாகாது. ஞானிக்கு அநாத்மபதார்த்தத்தில் தோஷதிருஷ்டியிருக்கிறது. அவனுக்கு ராகமில்லை. ஆதலால் பிரவிருத்தியுண்டாகாது” என்று சொல்லும்பக்ஷத்தில்,

அதுவும் பொருந்தாது. ஏனெனின், எந்த அபத்தியஞ் செய்வதால் ரோகியால் அந்வயவியதிரேகங்களால் தோஷமிருப்பதாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறதோ அந்த அபத்தியஞ்செய்வதில் பிராரப்தத்தால் ரோகிக்குப் பிரவிருத்தியுண்டாகிறதுபோல், † பிராரப்தத்தால் ஞானிக்குச் சர்வவியவகாரங்

* முன் ஆறாவது தரங்கத்தின் 406-வது பிரசங்கத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

† இங்கு இது விவேகமாம்:- 1. மந்தம் 2. தீவிரம் 3. தீவிரதரம் என்னும் பேதத்தால் பிராரப்தகர்மம் மூன்றுவகையாம்.

1. எதன் உபாதேய (கொள்ளத்தக்க) பலம் பிக்ஷான்னத்தைப்போல அதிகப் பிரயத்தினத்தால் கிடைக்கிறதோ, எதன அகஸ்மாத்தாகக் கிடைத்த ஹேய (தள்ளத்தக்க) பலம் செவ்வையாய்ச் சாதிக்கத்தக்க ரோகத்தினைப்போல அற்பப் பிரயத்தினத்தால் நிவிருத்தியாகிறதோ அப்படிப்பட்ட பிராரப்தம் மந்தப்பிராரப்த மெனப்படும்.

2. எதனது உபாதேயபலம் விருந்து அன்னத்தைப்போல் அற்பப் பிரயத்தினத்தால் கிடைக்கின்றதோ, எதனது அகஸ்மாத்தாகக் கிடைத்த ஹேயபலம் கஷ்டத்தாற் சாதிக்கத்தக்க பலத்தைப்போல அதிகப்பிரயத்தினத்தால் நிவிருத்தியாகிறதோ, இத்தன்மைய பிராரப்தம் தீவிரபிராரப்தமாம்.

3. எதனது உபாதேயபலம் ஆசனத்தில் (உட்கார்ந்திருக்குமிடத்தில்) கிடைத்த அன்னத்தினைப்போலப் பிரயத்தினமில்லாமல் தானே கிடைக்கிறதோ, எதனது பலாற்காரமாகக்கிடைத்த ஹேயபலம் எருதின் காயத்தைப்போல மரணபரியந்த முயற்சியினாலும் நீங்காதோ இத்தன்மைய பிராரப்தமானது தீவிரதரபிராரப்தமாம்.

களினும் பிரவிருத்தித்தல் தோஷதிருஷ்டியாயிருந்தும் பிரவிருத்தி யுண்டாகிறது. இவ்விதத்தால் ஞானியின் வியவகாரத்துக்கு * நியமமில்லை.

---

இவ்வாறு மந்தமும் தீவிரமுமாகிய பிராரப்தத்தின் பலம் பிரயத்தினத்தின் வசத்ததாம். அந்தப்பிரயத்தினத்திற்கு ஹேது சுபாசுபவாசனையாம். அந்த வாசனையின் நிவிருத்தியும் புருஷப் பிரயத்தனத்தால் உண்டாகிறது. அவற்றுள,

1. சுபவாசனையின் நிவிருத்தி துற்சங்கமுதலிய முயற்சியால் உண்டாகிறது.

2. அசுபவாசனையின் நிவிருத்தி சற்சங்கம் விவேகஞானமுதலியவற்றாலுண்டாகிறது.

எதனால் ஞானி சற்சங்கம் விவேகஞானமுதலியவற்றோடுகூடியவனாயிருக்கிறானோ, அதனால் அவனுடைய சித்தத்தில் அசுபப்பிரவிருத்திக்கு ஏதுவான எவ்வித அசுபவாசனையுமில்லை. ஆனால் சுபப்பிரவிருத்திக்கு ஏதுவான சுபவாசனையே யிருக்கிறது. அதனால் அந்த ஞானியின மந்தமும் தீவிரமுமான பிராரப்தங்களின் நிஷித்த பலததில் விதிநிஷேதத்தாற்றோன்றிய குணதோஷ புத்தியில்லாதிருக்கவும் சுபவாசனைவடிவ சுபாவத்தினாலேயே வெறிகொண்ட வைஷ்ணவனைப் போலவும் பிராஹ்மணர் முதலியோரது குழந்தையினைப் போலவும் பிரவிருத்தி சம்பவியாது; நிவிருத்தியே சம்பவிக்கின்றது.

ரோகிக்கு அந்வயவியதிரேகங்களால் தோஷம் நிச்சயிக்கப்படினும் அபத்தியத்தைக் கொள்ளுதலில் எந்தப் பிரவிருத்தியுண்டாகின்றதோ, அது பிரயத்தினசில ரோகிக்கும் உண்டாகிறதில்லை. ஆனால் ரசசுவையுள்ள பிரயத்தினமில்லாத ரோகிக்கு அபத்திய சேவனத்தில் பிரவிருத்தியுண்டாகின்றது. சில பிரயத்தினசில ரோகிகளுக்கும் அபத்தியத்தைக் கொள்ளுதலிற் பிரவிருத்தியுண்டாகின்றது. அது தீவிர பிராரப்தத்தின் பயனாம்.

இவ்வாற்றால் தோஷநிச்சயவடிவமும் மித்தியாத்தன்மைநிச்சயவடிவமுமாகிய திடவிவேகத்தோடு கூடிய ஞானியின் மந்த அல்லது தீவிர பிராரப்தத்தின் பலவடிவ இஷ்டப்படி நடத்தலாகிய நிஷித்தப்பிரவிருத்தி சம்பவிக்கிறதில்லை.

பிராரப்தபக்ஷர்கள் பிராரப்தத்தின் பயன் முற்றும் நீக்கத்தகாததாகலின் புருஷப்பிரயத்தனம் வியர்த்தமாம் என்று கூறுவராயின் அவ்வாறு கூறுதல் பொருந்தாது. ஏனெனின், இவ்வாறிருக்குமானால் சர்வஞ்ஞர்களால் ஆக்கப்பட்ட வைத்திய சாஸ்திரம் மந்திரசாஸ்திரம் யோகசாஸ்திரம் முதலிய உபாயங்களை அறிவிக்கும் சாஸ்திரங்கள் வியர்த்தமாகும். திருஷ்டபலத்திற்கு ஏதுவாகிய உபாயங்களை அறிவிக்கும் அச்சாஸ்திரங்களை வியர்த்தமென்று கூறுதல் பொருந்தாது. இவ்வியவஸ்தையால் பிராரப்தமும் புருஷார்த்தமுமாகிய இரண்டும் சபலமாகின்றன. இது வாசிஷ்டமுதலிய உத்தமநூல்களின் மதமாம்.

இங்குச் சில அதிகவிசாரமுண்டு. அதனைப் பாலபோதமுதலியவற்றில் காட்டியிருத்தலால் இங்குப் பிரசங்கத்தால் தன்மை மாத்திரம் அறிவிக்கப்பட்டது.

* இங்கு இது அபிப்பிராயமாம்:—சுவாதீனகாரியத்தில் நியமமுண்டாகின்றது. பராதீனகாரியத்தில் நியமம் சம்பவியாது. எதனால் ஞானிகளது சரீரங்களின் வியவகாரம் நாநாப்பிராரப்தத்தின் அதீனமாயிருக்கின்றதோ, அதனால் கையினின்றும் விடுபட்டபாணம் வேகத்தின் அதீனமாய்ப் பசுவைத்துளைப்பதுபோலப் பிராரப்தத்தின் அதீனமான ஞானியினது தேகத்தின் வியவகாரத்திற்கு நியமம் சம்பவியாது.

ராகமுதலியவாசனைகளைத் தடுத்துச் சுவாதீனசித்தமுடைய சில ஞானிகள் மந்த அல்லது தீவிர பிராரப்தத்தின் பயனாகிய சரீரத்தின வியவகாரத்தை நியமமாகவே வைக்கின்றார்கள். அங்ஙனமாயினும, தீவிரதரபிராரப்தத்தின் பயனாகிய சரீரத்தின் வியவகாரத்தினது நியமம் ஞானியினாலுமாகாது.

இந்தப்பக்ஷம் விஸ்தாரமாய்த் *திருப்திதீபிகையில் வித்தியாரண்யஸ்வாமிகளாற் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் தத்துவதிருஷ்டியின் வியவகாரம் நியமமில்லாமலிருக்கிறது. சமாதிரூப நியமவிதியைக் கேட்டுத் தத்துவதிருஷ்டி சிரிக்கிறான்.

## 479. தத்துவதிருஷ்டியின் தேசாதி அபேக்ஷையில்லாத தேகவீழ்வு 479-480.

இவ்வாறு சிறிதுகாலஞ் சஞ்சாரஞ்செய்து நல்ல ஞானமடைந்த தத்துவதிருஷ்டியானவன் பிராரப்தபோகங்களை யனுபவித்தான். பிறகு அவன் பிராணன் அவ்விடத்திலேயே லீனமாய்விட்டது.

1. பிராரப்தபோகத்துக்குப் பிறகு ஞானியின் பிராணனுக்குக் கமனமில்லாததினால் தத்துவதிருஷ்டியின் பிராணன் லீனமானதென்று சொல்லப்பட்டது.

2. ஞானி சரீரத்தைவிடுவதில் காலவிசேஷங்களின் அபேக்ஷையில்லை. உத்தராயணத்திலாவது தக்ஷிணாயத்திலாவது சரீரத்தை விடக்கூடும். எவ்விதத்திலும் அவன் முக்தனே.

3. அப்படியே தேசவிசேஷத்தின் அபேக்ஷையுமில்லை. காசிமுதலிய புண்ணிய தேசங்களிலாவது அல்லது அத்தியந்தம் மலின (பாவ) க்ஷேத்திரங்களிலாவது ஞானிதேகத்தை விடக்கூடும், எவ்விதத்திலும் அவன் †முக்தனே.

4. அப்படியே ஆஸனவிசேஷங்களின் அபேக்ஷையுமில்லை. பூமியில் சவாசனத்திலிருந்துகொண்டாவது சித்தாசனத்திலிருந்துகொண்டாவது சரீரத்தை விடக்கூடும்.

---

* ஞானிக்குப் பிரீதியின்றிப் பிராரத்தபோகம் உண்டாகின்றது. அந்தப் பிராரத்தம் இச்சை அநிச்சை பரவிச்சை எனும் பேதத்தால் மூன்றுவகையாம் என்னும் அர்த்தத்தை ஸ்ரீவித்தியாரண்யசுவாமிகள் திருப்திதீபத்தில் 143 முதல் 162-வது சுலோகபரியந்தம் எழுதியிருக்கின்றார்கள். அதனை அறியவிருப்பமுள்ளவர்கள் அங்குக் கண்டுகொள்க; விஸ்தாரபயத்தினால் இங்கு எழுதவில்லை.

† இங்கு இது சம்பிரதாயத்தையநுசரித்த வாக்கியமாம்:— "ஞானியின் தேகம் காசியில் விழுக அல்லது சண்டாளனது வீட்டில் விழுக. ஆனால் ஞானமடையுங்காலத்தில் பந்தப்பிராந்தி நீங்குதலால் அந்த ஞானி எல்லாவிதத்தாலும் முக்தனே."

5. அப்படியே சாவதானமாய்ப் பிரஹ்மசிந்தனை செய்துகொண்டாவது ரோகத்தினால் வியாகூலத்தையடைந்து ஐயோ ஐயோவென்றலறிக்கொண்டாவது தேகத்தை விடக்கூடும். எவ்விதத்தினாலும் முக்தனே. ஏனெனின் எந்தக்காலத்தில் ஞானத்தால் அஞ்ஞானம் நிவிருத்தியாயிற்றோ அந்தக்காலத்திலேயே ஞானி * முக்தனாய்விட்டான்.

ஆகலால் ஞானிக்கு விதேகமோக்ஷத்தில் தேசகால ஆஸனாதிகளின் அபேக்ஷையில்லை.

எப்படி ஞானிக்குத் தேகவியோகத்தில் தேசகாலாதிகளின் அபேக்ஷையில்லையோ அப்படியே ஞானத்தின் நிமித்தமான சிரவணத்திலும் தேசகால ஆஸனாதிகளின் அபேக்ஷையில்லை.

**480.** உபாஸகனுக்குத் தேசகாலாதிகளின் அபேக்ஷையுண்டு. பீஷ்மாதிகள் ஞானிகளாகச் சொல்லப்படுகிறார்கள். பீஷ்மர் உத்தராயணத்திலல்லாமல் பிராணத்தியாகம் செய்யவில்லை. அங்ஙனமாயினும் பீஷ்மாதிகள் அதிகாரிபுருஷர்களாம். ஆகலால் உபாஸகர்களுடைய உபதேசத்தின்பொருட்டு அவர்கள் காலவிசேஷத்தை யபேக்ஷித்தார்கள்.

வசிஷ்டர் பீஷ்மர் முதலியோர் அதிகாரிகளாயிருந்தபடியால் அவர்களுக்கு அநேக ஜன்மங்கள் உண்டாயின. ஏனெனின், அதிகாரிபுருஷனுக்கு ஒரு கற்பபரியந்தம் பிராரப்த மிருக்கின்றது. கற்பம் முடிந்தாலல்லது விதேகமோக்ஷ முண்டாகிறதில்லை. கற்பத்துக்குள்ளேயே அவர்களுக்கு இச்சையின் வலியால் அநேகசரீரங்க ளுண்டாகின்றன. அங்ஙனமாயினும் ஆத்மஸ்வரூபத்தில் அவர்களுக்கு ஜனனமரணப் பிராந்தியுண்டாகிறதில்லை. ஆகலால் அவர்கள் ஜீவன்முக்தர்கள் இந்த அதிகாரிபுருஷர்களின் வியவகாரம் முழுவதும் பிறருடைய உபதேசநிமித்தமேயாம். ஞானிகளின் வியவகாரத்தில் வேறு யாதொரு நியமமுமில்லை. இந்த அபிப்பிராயத்தால் தத்துவதிருஷ்டியின் தேகவியோகத்தில் தேசகால ஆசனாதிகள் ஒன்றுஞ்சொல்லப்படவில்லை.

## 481. அதிருஷ்டியின் தேசாதி அபேக்ஷையோடு கூடிய தேகவீழ்ச்சி.

இரண்டாவது சிஷ்யனாகிய அதிருஷ்டியானவன் அக்கங்கைக்கரையை சுபஸ்தானமாகக்கொண்டு ஏகாந்தமும் பவித்திரமுமான இடத்தில் பிரஹ்மத்தியானம் செய்து சாஸ்திரப்படி தேகத்தைவிட்டு முற்கூறிய மார்க்கமாய்ச் சென்று பிரஹ்மத்தையடைந்து அதிக ஆநந்தத்தையடைந்தான்.

---

* இந்த அர்த்தத்தை வித்தியாரண்யஸ்வாமிகளும் பூதவிவேகத்தின் முடிவில் எழுதியிருக்கின்றார்கள்.

எப்படி ஞானிக்குத் தேசகாலங்களின் அபேக்ஷையில்லையோ அப்படி உபாஸகனுக்கு அதனினும் விபரீதமாக அறியவேண்டியது.

உத்தமமான தேசங்களிலும் உத்தமமான உத்தராயணுதிகாலங்களிலும் உபாஸகன் சரீரத்தை விட்டால் அப்போது உபாஸனை பலிக்கிறது.

ஞானிக்கு மரணசமயத்தில் சாவதானத்தன்மையால் ஞேயத்தின் ஸ்மிருதியிருக்கவேண்டுமென்னும் அபேக்ஷையில்லை. உபாஸகனுக்கு மரணசமயத்தில் தியானிக்கப்படுவதினது ஸ்வரூபத்தின் ஸ்மரணையின் அபேக்ஷையிருக்கிறது.

1. எந்தத் தியேயத்தை முன் தியானஞ் செய்திருக்கிறுனே அந்தத் தியேயத்தின் ஸ்மிருதி மரணசமயத்திலுண்டானுல் அப்போது உபாஸனை பலிக்கிறது.

2. எப்படித் தியேயத்தின் ஸ்மிருதி யபேக்ஷிக்கப்படுகிறதோ அப்படியே தியேயப்பிரஹ்மத்தையடைய 5-வது தரங்கத்திற் சொல்லப்பட்ட மார்க்கத்தின் ஸ்மிருதியும் வேண்டியதாயிருக்கிறது. ஏனெனின் மார்க்கசிந்தனையும் உபாஸனைக்கு அங்கமாம்.

ஞானத்தின் பொருட்டுச் சிரவணத்தில் தேசகால ஆஸனங்களின் அபேக்ஷையில்லை. தியானத்தில் உத்தமமான தேசம் நிரந்தரமான காலம் சித்தாதி ஆஸனங்கள் முதலியன வேண்டியவைகளாயிருக்கின்றன. அதனுல் அதிருஷ்டிக்கு உத்தமதேசமான கங்காதீரத்திலிருத்தலும் கங்காதீரத்தை மிகவும் உத்தமமான இடமாகக் கண்டு அவ்விடத்தில் ஏகாந்தத்தில் பிரஹ்மத்தியானஞ்செய்து மரணசமயத்திலும் யோகசாஸ்திரக்கிரமப்படித் தேகம்வீழ்தலும் சொல்லப்பட்டது.

## (தர்க்கதிருஷ்டியின் நிச்சயமும் பதினெட்டுப் பிரஸ்தானங்களும் 482-492.)

## 482. சகலசாஸ்திரங்களும் பிரஹ்மஞானத்திற்கு ஏதுவாதல்.

மூன்றுவது சிஷ்யனுகிய தர்க்கதிருஷ்டியானவன் குருமுகமாகவுபதேசம் பெற்று, கேட்ட அர்த்தத்தில் பிறசாஸ்திரங்களின் விரோதத்தைத் தள்ளுவதற்காகச் சகலசாஸ்திரங்களின் அபிப்பிராயத்தையும் விசாரித்து இவ்வாறு நிச்சயஞ்செய்தான் :—

1. சகல சாஸ்திரங்களின் பரமப்பிரயோஜனம் மோக்ஷமாம்.
2. மோக்ஷத்துக்குச் சாதனம் ஞானமாம்.

3. அந்த ஞானம் அத்வயநிச்சயரூபமாம்.

4. பேதநிச்சயம் யதார்த்தஞானமன்று.

5. சாஸ்திரங்களெல்லாம் சாக்ஷாத்தாகவாவது பாம்பரையாகவாவது பிரஹ்மஞானத்துக்கு ஹேதுக்களாம.

ஸம்ஸ்கிருத * வைகரிவாக்கின் பதினெட்டுப் பிரஸ்தானங்களிருக்கின்றன. அவற்றில்,

1. சில கர்மத்தைப் பிரதிபாதிக்கின்றன.

2. சில விஷயசுகத்தின் உபாயங்களைச் சொல்லுகின்றன.

3. சில பிரஹ்மத்துக்கு அந்நியமான தேவதைகளினுபாஸனையைப் போதிக்கின்றன.

4. அப்படியே ஞானத்தின்பொருட்டுள்ள நியாய சாங்கியாதி சாஸ்திரங்களும் பேதஞானத்தையே யதார்த்தஞானமாகச் சொல்லுகின்றன.

ஆதலால் எல்லாவற்றிற்கும் அத்வைதப் பிரஹ்மத்தைப் போதிக்குந்தன்மை பொருந்தாது.

அங்ஙனமாயினும், சகலசாஸ்திரங்களையுஞ் செய்தவர்கள் சர்வஞ்ஞர்களாயும் கிருபாநிதிகளாயுமிருக்கிறார்கள். ஆதலால் அவர்களாற் செய்யப்பட்ட மூலசூத்திரங்களின் அர்த்தம் வேதாநுசாரமாகவேயிருக்கிறது. ஆனால் அவற்றின் வியாக்கியானகாரர்கள் பிராந்தர்களா யிருந்தபடியால் மூலசூத்திரகாரருடைய அபிப்பிராயங்களுக்கு விலக்ஷணமாய் அர்த்தம் பண்ணியிருக்கிறார்கள், அச்சூத்திரங்களுக்கு வேதத்துக்கு விருத்தமான அர்த்தமின்று. ஆனால் சகல சாஸ்திரங்களின் அர்த்தமும் வேதாநுசாரமாகவே யிருக்கிறது. இதைத் தர்க்கதிருஷ்டியானவன் உத்தமசம்ஸ்காரத்தால் நிச்சயம்பண்ணினான்.

## 483. வித்தையின் பதினெட்டுப் பிரஸ்தானங்கள்.

வித்தையின் 18 பிரஸ்தானங்கள்:— வேதங்கள் 4, உபவேதங்கள் 4, வேதாங்கங்கள் 6, புராணம், நியாயம், மீமாம்ஸை, தர்மசாஸ்திரம் என்றிவ்வாறு வைகரிவாக்கு ஸமஸ்கிருதபாஷாரூபவித்தையில் 18 பேதங்களாம். அவற்றைப் † பிரஸ்தானங்களென்பர்.

---

* பரை, பைசந்தி, மத்திமை, வைகரி என வாக்குகள் நான்காம். அவற்றுள், வைகரி பிறர்காதிற்குக் கேட்கும் அகாராதி எழுத்துவடிவினது.

† வித்தையின் அங்கங்களைப் பிரஸ்தானங்களென்பர். இவை அக்கினிபுராணத்தின் ஆரம்பத்திலும் மதுசூதனஸ்வாமி செய்த பிரஸ்தானபேதத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன.

## 484. நான்குவேதங்களுக்கும் பிரஹ்மஞானத்தில் தாற்பரியமாமெனல்.

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்று † வேதங்கள் நான்காம். அவற்றில்,

1. சிலவசனங்கள் ஞேயப்பிரஹ்மத்தைப் போதிக்கின்றன.

2. சில தியேயத்தைப் போதிக்கின்றன.

3. மற்றவை கர்மத்தைப் போதிக்கின்றன. கர்மத்தைப் போதிக்கும் வேதவசனத்துக்கும் அந்தக்கரணசுத்திவாயிலாக ஞானமே பிரயோஜனமாம்.

பிரவிருத்தியில் எந்தவேதவசனத்துக்கும் அபிப்பிராயமில்லை. ஆனால் நிஷித்தத்தில் ஸ்வாபாவிகமாய்ப் பிரவிருத்திப்பதினின்றும் தடுப்பதில் அபிப்பிராயமாம். ஆகலால் அபிசாராதி கர்மத்தைப் பிரதிபாதிக்கிற அதர்வண வேதத்துக்கும் நிவிருத்தியில் தாற்பரியமாம். துவேஷத்தால் சத்துருவைக் கொல்லவேண்டுமென்று ஒருவன் பிரவிருத்தித்தால் அவனை விஷம் கொடுத்தலாலாவது சுடுவதினாலாவது கொல்லாமலிருப்பதற்காக அபிசாரகர்மங்களாகிற சியேனயாகாதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சத்துருவைக் கொல்லும் பொருட்டான கர்மம் அபிசாரமெனப்படும். இத்தன்மையது சியேனமென்னும் யஞ்ஞமாம்.

---

† இருக்குவேதத்தில் 21 சாகைகளும், யஜுர்வேதத்தில் 109 சாகைகளும், சாமவேதத்தில் 1000 சாகைகளும், அதர்வணவேதத்தில் 50 சாகைகளுமுள. ஒரு மரத்தையுடையவன் தன் பிள்ளைகளுக்கு அதன் கிளைகளைப் பிரித்துக்கொடுப்பதுபோல் வியாசபகவான் வேதத்தை நான்கு பாகங்களாக்கி அவற்றில் பல சாகைகளைக் கற்பித்து ஒவ்வொரு சாகைக்குரிய விதிகளையும் ஏற்படுத்தினார். எத்தனை சாகைகளுண்டோ அத்தனையுபநிஷத்துக்களுண்டென முத்திகோபநிஷத்திலும் மகாவாக்கியரத்நாவலியிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. சாகைகள் 1180. ஆகையால் உபநிஷத்துக்களும் 1180 உண்டு. இவற்றில் 840 உபநிஷத்துக்கள் காமத்தைப் போதித்துக் கர்மகாண்டமெனப்படுகின்றன. 232 உபநிஷத்துகள் தியேயப்பிரஹ்மத்தைப் போதித்து உபாசனகாண்டமெனப்படுகின்றன. 108 உபநிஷத்துகள் ஞேயப்பிரஹ்மத்தைப் போதிக்கின்றன. இவை வேதத்தின் அந்தியபாகமானதினாலும் வேதத்தின் சாரமான அர்த்தத்தைச் சொல்லுதலாலும் வேதாந்தமென்றும் ஞானகாண்டமென்றுஞ் சொல்லப்படுகின்றன. இந்த 108 உபநிஷத்துக்களில் (1) ஈச (2) கேன (3) கட (4) பிரசின (5) முண்டக (6) மாண்டூக்கிய (7) தைத்திரீய (8) ஐதரேய (9) சாந்தோக்கிய (10) பிரகதாரண்யக உபநிஷத்துக்கள் முக்கியமானவை. இவற்றில் ஐதரேயம் இருக்குவேதத்தினது. ஈசாவாசியமும் பிரகதாரணியகமும் சுக்லயஜுர்வேதத்தின. கடவல்லியும் தைத்திரீயமும் கிருஷ்ணயஜுர்வேதத்தின. கேனமும் சாந்தோக்கியமும் சாமவேதத்தின. முண்டகமும் மாண்டூக்கியமும் அதர்வணவேதத்தின.

சியேனயாகத்தைப் போதிக்கிற வேதவசனத்துக்குச் சத்துருவைக் கொல்ல இச்சிக்கிறவன் சியேனயாகத்தில் பிரவிருத்திக்க என்பது அர்த்த மன்று. ஆனால் சத்துருவைக் கொல்ல இச்சிக்கிறவன் சியேனயாகத்துக்கு வேறான விஷங்கொடுத்தல் முதலிய சத்துருவைக் கொல்லு முபாயங்களில் பிரவிருத்திக்கக் கூடாதென்பதாம். இவ்விதமாகத் துவேஷத்தாற் கிடைத்த விஷங்கொடுத்தல் முதலியவற்றினின்றும் நிவிருத்திப்பதில் சியேனயாகத்தை அறிவிக்கும் வசனத்திற்கு அபிப்பிராயமாய; பிருவிருத்தியிலில்லை. ஏனெனின் பிரவிருத்தி துவேஷத்தாற் கிடைத்தது. *எது அந்நியததாற் கிடைத்ததாகின்றதோ அது வாக்கியத்திற்கு அபிப்பிராயமாகாது.

இவ்விதமாக அதர்வணவேதம் முழுவதற்கும் நிவிருத்தியில் தாற்பரியமாம். மற்றமூன்றுவேதங்களில் கர்மத்தைப் போதிக்கும் வாக்கியங்களுக்கு அந்தக்கரணசுத்திவாயிலாக ஞானத்திலுபயோக முண்டென்பது ஸ்பஷ்டமாயிருக்கிறது.

---

* 1. "மணஞ்செய்த மனைவியோடு கூடவேண்டும்."

2. "ருதுவுடைய மனைவியைக் கூடவேண்டும்."

3. "ஓமஞ்செய்து மிஞ்சிய மாமிசத்தைப் புசிக்கவேண்டும்"

4. "சௌத்திராமணியென்னும் யாகத்தில் கட்குடித்தல்வேண்டும்."

இவைமுதலிய வேதத்தின் விதிவாக்கியங்களுக்கு வேறொன்றால் (இராகத்தால்) கிடைத்த சர்வஸ்திரீகளையும் கூடுதல், அல்லது எப்போதும் மணந்தபெண்ணைக் கூடுதல் அல்லது மாமிசத்தையும் மதுவையும் உட்கொள்ளுதல் என்பவற்றில் பிரவிருத்திக்கச் செய்வதில் அபிப்பிராயமன்று. ஆனால அவற்றின்கண் இயல்பாயுள்ள பிரவிருத்தி எதுவோ அதனைச் சுருக்குதல்வாயிலாக நிவிருத்தியில் அபிப்பிராயமாம். ஆதலால் அவ்வேதவாக்கியங்கள் பரிசங்கியாவிதிவடிவமாயிருக்கின்றன. நியமவிதிவடிவம் அல்லது அபூர்வவிதிவடிவமன்று.

அதுபோலச் சியேனயாகத்தை அறிவிக்கும் அதர்வவேதத்தின் வசனத்திற்கும் அந்நிய (துவேஷ) த்தாற் கிடைத்த சத்துருமாரணத்திற் பிரவிருத்தித்தலில் அபிப்பிராயமன்று. ஆனல் அந்த இயல்பான பிரவிருத்தியைத் தடுத்தல்வாயிலாக அந்த விஷங்கொடுத்தல் முதலியவற்றினின்றும் நீங்குதலில் அபிப்பிராயமாம். ஆதலால் இந்தச் சியேனயாகத்தை யறிவிக்கும் வசனமும் பரிசங்கியாவிதிவடிவமாம்.

வேறொன்றாற்கிடைத்த அர்த்தத்தை அதனைச் சுருக்குதற்பொருட்டு அறிவிக்கும் வேதவசனம் எதுவோ அது பரிசங்கியாவடிவம் எனப்படுகின்றது.

இந்த விதிவசனங்களை விசாரசந்திரோதயத்தின் 16-வது கலையிற் காண்க. இவற்றின் விஸ்தாரமானவர்ணனம் வேதாந்தபதார்த்தமஞ்சூஷா என்னும் நூலில் செய்யப்பட்டிருக்கிறது.

## 485. நான்கு உபவேதங்களுக்கும் பிரஹ்மஞானத்தில் தாற்பரியமெனல்.

நான்குபவேதங்கள்:— ஆயுள்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தவேதம் என்று உபவேதங்கள் நான்காம். அவற்றில்,

ஆயுள்வேதத்தின் கர்த்தாக்கள் பிரஹ்மா, பிரஜாபதி, அசுவினீகுமாரர்கள், தன்வந்திரி முதலியவர்களாவர். சரகம் வாக்படடம் முதலிய சிகிச்சாசாஸ்திரங்களும் ஆயுள்வேதமே. வாத்ஸ்யாயனராற் செய்யப்பட்ட காமசாஸ்திரமும் ஆயுள்வேதத்தில் அடங்கியதாம். ஏனெனின், காமசாஸ்திரத்துக்கு விஷயமான வித்தையாடியின் ஸ்தம்பனாதிகளும் சரகர்முதலியோரால் சொல்லப்படிருக்கின்றன. அந்த ஆயுள் வேதத்துக்கு வைராக்கியத்திலேயே அபிப்பிராயம். ஏனெனின், ஆயுள்வேதத்தின்படி ரோகாதிகள் நிவிருத்தியானாலும் மறுபடியும் ரோகாதிகளுண்டாகின்றன. ஆதலால் இலௌகிக வுபாயங்களெல்லாம் துச்சமாயிருக்கின்றன. இந்த அர்த்தத்திற்றான் ஆயுள்வேதத்திற்கு அபிப்பிராயம். ஔஷதம் தானம் முதலியவற்றால் புண்ணிய முண்டாக அந்தக்கரணசுத்திவாயிலாகவும் ஞானத்தில் ஆயுள்வேதமுபயோகமாகிறது,

2. விசுவாமித்திரராற் செய்யப்பட்ட தனுர்வேதத்தில் ஆயுதம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது:— (1) முக்தம், (2) அமுக்தம், (3) முக்தாமுக்தம், (4) யந்திரமுக்தம் என ஆயுதங்கள் நாலுவகையாம்.

(1) சக்கராதிகள் கையால் விடப்படுவதால் முக்தமெனப்படுகின்றன.

(2) கத்திமுதலியவை அமுக்தமெனப்படுகின்றன.

(3) ஈட்டிமுதலியன முக்தாமுக்த மெனப்படுகின்றன.

(4) அம்புகுண்டுமுதலியவைகள் யந்திரமுக்த மெனச்சொல்லப்படும்.

இவ்வகையான நால்வகை ஆயுதங்களுண்டு. அவற்றில்,

(1) முக்தத்தை அஸ்திர மென்பர்.

(2) அமுக்தத்தைச் சஸ்திர மென்பர்.

இந்த நான்குவித ஆயுதங்களுக்கும் பிரஹ்மா, விஷ்ணு, பசுபதி, பிரஜாபதி, அக்கினி, வருணன்முதலிய தேவதைகளும் மந்திரங்களுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன, க்ஷத்திரியகுமாரர்களும் அவர்களை யனுசரித்த பிராஹ்மணாதிகளும் அதிகாரிகளென்று சொல்லப்படுகிறார்கள். அவர்கள் (1) பதாதிகள், (2) ரதாரூடர்கள், (3) அசுவாரூடர்கள், (4) கஜாரூடர்களென நாலுவகையினர். யுத்தத்தில் சகுனமங்கலங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

(1) இவ்வளவு அர்த்தமும் தனுர்வேதத்தின் முதற் பாதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

(2) ஆசாரியருடைய லக்ஷணமும் அவரிடத்திலிருந்து சாஸ்திரத்தைக் கிரகிக்கிற முறையும் இரண்டாம் பாதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

(3) குருசம்பிரதாயத்தால் அடையப்பட்ட சஸ்திரத்தின் அப்பியாஸமும் மந்திரசித்தி தேவதாசித்திகளின் பிரகாரங்களும் மூன்றும் பாதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

(4) சித்தியான மந்திரத்தின் பிரயோகம் நான்காம் பாதத்திற்சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வளவு விஷயங்கள் தனுர்வேதத்தில் இருக்கின்றன. இந்தத் தனுர்வேதம் பிரஹ்மா பிரஜாபதி முதலியோர்களினின்றும் விசுவாமித்திரருக்குக் கிடைத்தது. அவர் இதைப் பிரசித்தஞ் செய்தார்; விசுவாமித்திரரிடத்தினின்றும் தனுர்வேத முண்டாகவில்லை. துஷ்டர்கள் திருடர்கள் முதலியவர்களினின்றும் ஜனங்களை யிரக்ஷிக்கும் க்ஷத்திரியதர்மத்தைத் தனுர்வேதம் போதிக்கிறது. ஆகையால் அதற்கும் அந்தக்கரணசுத்தியால் ஞானவாயிலாக மோக்ஷத்திலேயே அபிப்பிராயமாம்.

3. காந்தர்வவேதம் பரதராற் பிரசித்தப்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் ஸ்வர தாள மூர்ச்சனைகளோடு நடனம் வாத்தியம் என்பன விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. தேவதைகளின் ஆராதனை நிர்விகற்பசமாதி சித்தி காந்தர்வவேதத்தின் பிரயோஜனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் அதற்கும் அந்தக்கரணத்தின் ஏகாக்கிரதன்மையால் ஞானவாயிலாக மோக்ஷமே பிரயோஜனமாம்.

4. அர்த்தவேதமும் அநேகவிதமாம்:— நீதிசாஸ்திரம், அச்வசாஸ்திரம் சிற்பசாஸ்திரம், பாகசாஸ்திர முதலிய தனசம்பாதனத்துக்கு உபயோகமான உபாயங்களைப் போதிக்கும் சாஸ்திரங்களெல்லாம் * அர்த்தவேத மெனப்படும். தனம் சம்பாதிப்பதில் சகலவுபாயங்களையு மறிந்தவனுக்கும் பாக்கியமின்றித் தனங்கிடைக்கிறதில்லை. ஆதலால் அர்த்தவேதத்துக்கும் வைராக்கியத்திலேயே கருத்தாம்.

## 486. நான்குவேதங்களின் ஆறங்கங்களினது அர்த்தோடு கூடிய பிரயோஜனம்.

நான்குவேதங்களுக்கும் ஆறங்கங்களுண்டு:—1. சிக்ஷை, 2. கற்பம், 3. வியாகரணம், 4. நிருக்தம், 5. சோதிஷம், 6. பிங்களம் என்னும் இவ்வாறும் வேதத்துக் குபயோகமாயிருப்பதால் வேதாங்கங்களெனப்படுகின்றன. அவற்றுள்,

---

* இதனையே ஸ்தாபத்தியவேதமென்றும் கூறுவர்.

1. சிக்ஷையைச் செய்தவர் பாணினி. வேதத்தின் சப்தங்களில் அக்ஷரங்களினது ஸ்தானங்களின் ஞானமும் * உதாத்தானுதாத்தஸ்வரித ஸ்வரங்களின் ஞானமும் சிக்ஷையாலுண்டாகின்றன. வேதத்தின் வியாக்கியானரூப அநேகப் பிரதிசாகையென்னும் கிரந்தங்களுண்டு. அவையும் சிக்ஷைக்குட்பட்டனவாயிருக்கின்றன.

2. அங்ஙனமே கற்பசூத்திரங்களினின்றும் வேதத்தில் போதிக்கப்படுகிற கர்மங்களை யனுஷ்டிக்கும் முறை அறியப்படுகிறது. யஞ்ஞத்தைச் செய்துவைக்கும் பிராமணன் ரித்விக்கென்று சொல்லப்படுகிறான். அவர்களது வேறுவேறாய்ச் செய்யத்தக்க கர்மங்களின் கிரமங்களையறிவிப்பன கற்பசூத்திரங்களாம். இந்தக் கற்பசூத்திரத்தைச் செய்தவர்கள் காத்தியாயனர் ஆசுவலாயனர்முதலிய முனிகளாம். * கற்பசூத்திரமும் வேதத்துக்குபயோகியாயிருத்தலால் வேதாங்கமாம்.

3. அங்ஙனமே வியாகரணத்தால் வேதத்தினது பதங்களின் சுத்தத்தன்மையின் ஞானமுண்டாகிறது. அந்த வியாகரணசூத்திரரூப எட்டுஅத்தியாயங்கள் பாணினிமுனிவராற் செய்யப்பட்டிருக்கின்றன. காத்தியாயனரும் பதஞ்சலியும் வார்த்திகம் பாஷியம் என்கிற வியாக்கியானங்களை அச்சூத்திரங்களுக்குச் செய்திருக்கிறார்கள். வேறு வியாகரணங்களில் வேதத்தினது சப்தங்கள் விசாரிக்கப்படவில்லை. ஆதலால் புராணாதிகளில் அவைகளுபயோகமுள்ளனவாம்; ஆனால் வேதத்துக்குபயோகமானவையன்று. பாணினியாற் செய்யப்பட்ட வியாகரணம் வேதங்களின் சப்தங்களினது சித்தியையும் செய்கிறது. ஆதலால் வேதத்தின் அங்கமாம்.

4. அங்ஙனமே யாஸ்கர் என்னும் முனி 13 அத்தியாயவடிவ நிருக்தத்தைச் செய்திருக்கிறார். அதில் வேதமந்திரங்களில் பிரசித்தமில்லாத பதங்களின் அர்த்தங்களைப் போதிக்கும்பொருட்டுப் பெயர்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் வைதிக அப்பிரசித்தபதங்களின் அர்த்தஞானத்தி

---

1. * உச்சஸ்வரம் உதாத்தமெனப்படுகிறது. இதனை எடுத்தல் என்பர்.

2. நீச (தாழ்ந்த) ஸ்வரம் அநுதாத்தமெனப்படுகிறது. இதனைப் படுத்தல் என்பர்.

3. சமானஸ்வரம் ஸ்வரிதமெனப்படும். இதனை நலிதலென்பர்.

* கற்பசூத்திரங்கள் ஆறுவகை:— 1. ஜைமினியாற் செய்யப்பட்டது ஜைமினீயம். 2. ஆச்வலாயனராற் செய்யப்பட்டது ஆச்வலாயனம். 3. ஆபஸ்தம்பராற் செய்யப்பட்டது ஆபஸ்தம்பம். 4. போதாயனராற் செய்யப்பட்டது பௌத்தாயனம். 5. காத்தியாயனராற் செய்யப்பட்டது காத்தியாயனீயம். 6. வைகானஸராற் செய்யப்பட்டது வைகானஸீயம்.

லுபயோகியாயிருத்தலால் நிருக்தமும் வேதாங்கமாம். ஸம்ஞையை (பெயரை) ப்போதிக்கிற ஐந்து அத்தியாயவடிவ நிகண்டு என்னுங் கிரந்தத்தைப் பாஸ்கர் செய்திருக்கிறார். அதுவும் நிருக்தத்துக்கு அந்தர்ப்பூதமாயிருக்கின்றன. அமரசிம்ஹன் ஹேமன் முதலியோராற் செய்யப்பட்ட பெயர்களைப் போதிக்கும் நிகண்டுகள் யாவும் நிருக்தத்தில் அடங்கியனவாம்.

5. அங்ஙனமே ஆதித்தியர் கார்க்கேயர்முதலியவர்களாற் செய்யப்பட்ட சோதிடமும் வேதாங்கமாயிருக்கிறது. ஏனெனின், வைதிக கர்மத்தின் ஆரம்பத்தில் காலத்தின் ஞானம் வேண்டியதாயிருக்கிறது, அந்தக் காலஞானம் சோதிடத்தாலுண்டாகிறது. ஆகையால் வேதாங்கமாயிருக்கிறது.

6. பிங்களமுனிவரால் எட்டு அத்தியாயங்கள் அடங்கிய சூத்திரத்தால் சந்தஸ் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவற்றால் வேதத்திற் சொல்லிய காயத்திரிமுதலிய சந்தசுகளின் ஞான முண்டாகிறது. ஆகையால் பிங்களர்செய்த சூத்திரமும் வேதாங்கமாயிருக்கிறது.

அவ்வாறே இவ்வேதாங்கங்கள் ஆறிலும் வேதத்துக்குபயோகப்படாத அர்த்தங்களும் பிரசங்கத்தால் நிரூபிக்கப்பட்டன. அவை பிரதானத்தன்மையாகச் சொல்லப்படவில்லை. ஆதலால் வேதத்தின் பிரயோஜனமே இவ்வாறங்கங்களின் பிரயோஜனமாம்; வேறன்று.

## 487. பதினெண்புராண உபபுராணங்களின் அர்த்தம்.

புராணங்கள் பதினெட்டு. அவை வியாஸரென்னும் முனிவராற் செய்யப்பட்டன. அவை 1. பிரஹ்மம், 2. பத்மம், 3. வைஷ்ணவம், 4. சைவம் 5. பாகவதம், 6. நாரதீயம், 7. மார்க்கண்டேயம், 8. ஆக்னேயம், 9. பவிஷியத், 10. பிரஹ்மவைவர்த்தம், 11. லைங்கம், 12. வாராஹம், 13. ஸ்கந்தம், 14. வாமனம், 15. கூர்மம், 16. மாத்ஸ்யம், 17. காருடம், 18. பிரஹ்மாண்டம் என்பனவாம். இப்பதினெண்புராணங்களும் வியாஸராற் செய்யப்பட்டன. காளிபுராணமுதலிய வேறு அனேகபுராணங்களுமுண்டு, அவை உபபுராணங்களாம். சிலர் உபபுராணங்களும் 18 எனச் சொல்லுகிறார்கள்; அது நியமமன்று. உபபுராணங்கள் அநேகமுண்டு. பாகவதங்கள் 2:—ஒன்று வைஷ்ணவம், மற்றொன்று பகவதீபாகவதம். ஒவ்வொன்றிலும் பதினெண்ணாயிரங் கிரந்தங்களுள. ஒவ்வொன்றிலும் 12 ஸ்கந்தங்களுள. ஆனால் அவற்றில் ஒன்று புராணம்; மற்றொன்று உபபுராணம், இவ்விரண்டும் வியாஸராலேயே செய்யப்பட்டன. ஆகையால் இரண்டும் பிரமாணங்களே. வியாஸர் புராணங்களைச் செய்ததுபோல் சில உபபுராணங்களையும் செய்திருக்கிறார். சில உபபுராணங்கள் பராசரர் முதலிய வேறுசர்வஞ்ஞமுனிகளாற் செய்யப்பட்டிருக்கின்றன, ஆகையால் உபபுராணங்களும் பிரமாணங்களே.

உபநிஷத்தின் பொருளே புராண உபபுராணங்களின் பொருளாம். இது * இனிப் பிரதிபாதிக்கப்படும்.

## 488. நியாயவைசேஷிக சூத்திரங்களின் பயன்.

கௌதமமுனிவரால் நியாயசூத்திரம் ஐந்து அத்தியாயமாகச் செய்யப் பட்டிருக்கிறது. அவற்றில் யுக்தி பிரதானம். யுக்திசிந்தனத்தால் எவனுக்குத் தீவிரபுத்தியுண்டாகிறதோ அவன் மனனம்பண்ணுவதிற் சமர்த்தனாகிறான். ஆகையால் யுக்திப்பிரதானமான ** நியாயசூத்திரத்துக்கும் மனனவாயிலாக வேதாந்தஜந்யஞானமே பலனாகிறது.

கருணாதரென்னும் முனிவர் பத்து அத்தியாயவடிவ வைசேஷிகசூத்திரங்களைச் செய்திருக்கிறார். அவைகளும் நியாயத்தில் அடங்கியிருக்கின்றன.

## 489. தர்மமீமாம்ஸை பிரஹ்மமீமாம்ஸையென்னும் இரண்டு மீமாம்ஸைகளுக்கும் ஸங்கர்ஷணகாண்டத்திற்கும் பயன்.

மீமாம்சை இருவகையாம்:—1. ஒன்று * தர்மமீமாம்சை, 2. மற்றொன்று † பிரஹ்மமீமாம்சை.

1. தர்மமீமாம்சையினைப் பூர்வமீமாம்சையென்பர்.

2. பிரஹ்மமீமாம்சையை உத்தரமீமாம்சையென்பர்.

1. தர்மமீமாம்சை 12 அத்தியாயம். அது ஜைமினி என்னும் முனிவரால் செய்யப்பட்டிருக்கின்றது. கர்மத்தையனுஷ்டிக்கும் விதி இதிற் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் விதியுடன் கர்மத்திற் பிரவிருத்தித்தல் தர்மமீமாம்சையின் பயனாம். கர்மத்திற் பிரவிருத்திக்கிறதினால் அந்தக்கரணசுத்தியும் அதினின்று ஞானமும் ஞானத்தால் மோக்ஷமு முண்டாகின்றன. இவ்விதமாகத் தர்மமீமாம்சைக்கு மோக்ஷமே பயனாகிறது. தர்மமீமாம்சை

---

* இந்தவார்த்தை மேல் 510-முதல் 517-பரியந்தமான இலக்கங்களின் சொல்லப்படும். தர்மசாஸ்திரத்தில் கர்மகாண்டத்தின் அர்த்தமிருக்கிறது. புராணங்களில் உபநிஷத்துவடிவ ஞானகாண்டத்தின் அர்த்தமிருக்கிறது. இதனைச் சூதசங்கிதையின் வியாக்கியானத்தில் வித்தியாரணியசுவாமிகள் எழுதியிருக்கின்றார்கள்.

** நியாயசூத்திரங்களுக்கு மனனவாயிலாக் வேதாந்தஜந்யஞானமே பயனாமென்னும் அர்த்தத்தை நியாயத்தின் கரைகடந்த சிரோமணிபட்டாசாரியரும் தமது நூலில் எழுதியிருக்கின்றனர். ஆதலால் இவற்றிற்கு முற்கூறிய பயன் சம்பவிக்கிறது.

* எதில் தர்மத்தின் மீமாம்ஸை (விசாரம்) இருக்கிறதோ அது தர்மமீமாம்ஸையெனப்படும்.

† எதில் பிரஹ்மத்தின் மீமாம்ஸையிருக்கிறதோ அது பிரஹ்மமீமாம்ஸையெனப்படும். (மீமாம்ஸை=ஆராய்ச்சி.)

யின் 12 அத்தியாயங்களில் தம்மில் அர்த்தபேதமிருக்கிறது. அது கடின மாயிருப்பதால் இவ்விடத்தில் எழுதப்படவில்லை. ஜைமினியால் ஐந்து அத்தியாயங்களில் சங்கர்ஷணகாண்டம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் உபாஸனை சொல்லப்பட்டிருக்கிறது. சங்கர்ஷணகாண்டமும் தர்மமீமாம்சையில அந்தர்ப்பூதமாயிருக்கிறது.

2. பிரஹ்மமீமாம்சை நான்கு அத்தியாயங்களாகச் செய்யப்பட்டிருக்கிறது. அதன் கர்த்தா வியாஸர். ஒவ்வொரு அத்தியாயத்திலும் நாலு பாதங்களுள.

1. அங்கு முதல் அத்தியாயத்தில் இவ்வர்த்தமுளது:—எல்லா உபநிஷத்துவாக்கியங்களும் பிரஹ்மத்தைத்தவிர வேறொன்றையும் பிரதிபாதிக்கிறதில்லை.

2. உபநிஷத்துவாக்கியங்களில் மந்தபுத்தியுள்ள புருஷர்களுக்கு விரோதங்கள் தோன்றுகின்றன. அவற்றின் பரிகாரம் இரண்டாவது அத்தியாயத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

3. மூன்றாவது அத்தியாயத்தில் ஞானஉபாஸனைகளின் சாதனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

4. நான்காவது அத்தியாயத்தில் ஞானஉபாஸனைகளின் பலன் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரஹ்மமீமாம்ஸாரூப சாரீரகசாஸ்திரமே சர்வசாஸ்திரங்களிலும் பிரதானமானது. முமுக்ஷுவிற்கு இதுவே கொள்ளத்தக்கது. இதற்கு ‡ வியாக்கியானரூபக் கிரந்தங்கள் அனேகங்களாயிருக்கின்றன. ஆயினும், ஸ்ரீ சங்கராசாரியராற் செய்யப்பட்ட * பாஷ்யரூப வியாக்கியானமே முமுக்ஷுக்களாற் கேட்கத்தக்கது. அதற்குத்தன் ஞானவாயிலாக மோக்ஷபலன் விளக்கமாகவேயிருக்கிறது.

---

‡ சங்கராசாரியாற் செய்யப்பட்ட பாஷியம், ராமாநுஜபாஷியம், மத்துவபாஷியம், பாஸ்கராசாரியராற் செய்யப்பட்ட பாஷியம், விஷ்ணுஸ்வாமியாற் செய்யப்பட்ட பாஷியம், விஞ்ஞானேந்திரபிக்ஷுவாற் செய்யப்பட்ட பாஷியம், நீலகண்டபாஷியம் என்றன் முதலியன பாஷியவடிவ வியாக்கியானங்கள்.

* இங்குப் பாஷியமென்னும் சொல்லால் ஸ்ரீ சங்கராசாரியரது சிஷ்யப்பிரசிஷ்யர்களாற் செய்யப்பட்ட அந்தப் பாஷியத்தின் வியாக்கியானங்களும் கொள்ளப்படும். அப்பாஷியவியாக்கியானங்கள் அநேகமாம். அவற்றின் பெயர்மாத்திரம் பஞ்சதசியின் திருப்திதீபத்தினது 101-வது சுலோகத்தின் டிப்பணத்திற் கூறப்பட்டிருத்தலால் ஆண்டுக் காண்க.

## 490. ஸ்மிருதிமுதலிய நூல்களின் கர்த்தாக்களும் பிரயோஜனமும்.

மனு, யாஞ்ஞவல்கியர், விஷ்ணு, யமன், அங்கிரா, வஸிஷ்டர், தக்ஷர், ஸம்வர்த்தர், சாதாதபர், பராசரர், கௌதமர், சங்கர், லிகிதர், ஹாரீதர், ஆபஸ்தம்பர், சுக்கிரர், பிரஹஸ்பதி, வியாஸர், காத்தியாயனர், தேவலர், நாரதர்முதலியோர் ஸர்வஞ்ஞர்களா யிருக்கின்றார்கள். அவர்களால் வேதாநுசாரயாக ஸ்மிருதிகளென்னும் கிரந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவை தர்மசாஸ்திரமாம். அவற்றில் வர்ணாசிரமங்களின் காயிகவாசிமானஸிக கர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கும் அந்தக்கரணசுத்திவாயிலாக ஞானமுண்டாய் மோக்ஷம் சித்திப்பதே பிரயோஜனமாயிருக்கிறது. அப்படியே வியாஸரால் மகாபாரதமும் வால்மீகரால் ராமாயணமும் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளும் தர்மசாஸ்திரத்தில் அந்தர்ப்பூதமாயிருக்கின்றன.

தேவதைகளை ஆராதிக்கும்பொருட்டுள்ள மந்திரசாஸ்திரமும் தர்மசாஸ்திரத்தில் அந்தர்ப்பூதமாயிருக்கிறது. தேவதைகளின் ஆராதனைக்கு அந்தக்கரணசுத்தி பிரயோஜனமாம்.

அப்படியே சாங்கியசாஸ்திரம், யோகசாஸ்திரம், வைஷ்ணவதந்திரம், சைவதந்திரம் முதலியவைகளும் தர்மசாஸ்திரத்தில் அந்தர்ப்பூதமாயிருக்கின்றன. ஏனெனின் மானஸமாகிய உபாசனைவடிவ கர்மம் அவற்றில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

## 491. சாங்கியசாஸ்திரத்தின் பயன்.

கபிலர் சாங்கியசாஸ்திரத்தை ஆறு அத்தியாயவடிவமாகச் செய்திருக்கிறார்.

1. அதன் முதல் அத்தியாயத்தில் விஷயம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

2. இரண்டாவது அத்தியாயத்தில் மகத்தத்துவம் அகங்காரம் முதலிய பிரதானத்தின் காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

3. மூன்றாவது அத்தியாயத்தில் விஷயத்தினின்றும் வைராக்கியமுண்டாதல் சொல்லப்பட்டிருக்கிறது.

4. நான்காவது அத்தியாயத்தில் விரக்தர்களுடைய சரித்திரம் சொல்லப்பட்டிருக்கிறது.

5. ஐந்தாவது அத்தியாயத்தில் பரபக்ஷம் கண்டிக்கப்பட்டிருக்கின்றது.

6. ஆறாவது அத்தியாயத்தில் சகலஅர்த்தங்களும் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. பிரகிருதி புருஷர்களின் விவேகத்தால் புருஷன் அஸங்கன் என்னும் ஞானம் சாங்கியசாஸ்திரத்தின் பிரயோஜனமாம். அச்சாஸ்திரத்திற்கும் துவம்பதத்தின் லக்ஷியார்த்தசோதனைவாயிலாக மகாவாக்கியஜந்ய ஞானத்திலுபயோகமாதலால் மோக்ஷமே பலனும்.

## 492. யோகசாஸ்திரத்தின் பயனும், சாரீரகத்திற் சொல்லியதோடு விரோதமின்மையும்.

யோகசாஸ்திரம் பதஞ்சலிமுனிவரால் நான்குபாதவடிவமாகச் செய்யப்பட்டிருக்கிறது. அவர் சேஷாவதாரம். ஒரு இருஷி சந்தியோபாஸனை செய்துகொண்டிருக்கும்போது அவருடைய அஞ்சலியில் தோன்றி பூமியில் விழுந்தபடியால் பதஞ்சலியென்று பெயரிடலாயிற்று.

1. அவர் சரீரத்தின் ரோகரூப மலத்தை நிவிருத்திக்கும்பொருட்டுச் சிகிச்சைநூலைச் செய்திருக்கிறார்.

2. அசுத்தபதங்களின் உச்சாரணரூப வாக்கின் மலத்தைப் போக்கப் பாணினிமுனிவரின் வியாகரணத்துக்குப் பாஷியஞ்செய்திருக்கிறார்.

3. விக்ஷேபரூப அந்தக்கரணமலத்தைப் போக்க யோகசூத்திரங்களைச் செய்திருக்கிறார்.

1. அதில் முதற்பாதத்தில் சித்தவிருத்தியின் நிரோதரூப சமாதியும் அதன் சாதனமான அப்பியாஸம் வைராக்கியமுதலியவைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

2. அதுபோல இரண்டாவது பாதத்தில் விக்ஷேபசித்தமுள்ளவர்களுக்குச் சமாதிசாதனமாகிய இயமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், ஸவிகற்பசமாதியென்னும் எட்டு அங்கங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

3. மூன்றாவது பாதத்தில் யோகத்தின் விபூதி (ஐசுவரியங்)கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

4. நான்காவது பாதத்தில் யோகத்தின் பலனாகிய மோக்ஷம் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விதத்தால் யோகசாஸ்திரமும் ஞானசாதனமான சித்தியாஸனத்தைச் சம்பாதித்தல்வாயிலாக மோக்ஷத்துக்கு ஹேதுவாயிருக்கிறது.

சாரீரகசூத்திரத்தில் சாங்கியயோகங்களைக் கண்டித்திருப்பது உபநிஷத்துக்கு விருத்தமாகச் செய்யப்பட்டிருக்கும் அவற்றின் வியாக்கியானத்தைக் கண்டித்திருக்கிறது. மூலசூத்திரத்தைக் கண்டனஞ்செய்யவில்லை.

## 493. பாஞ்சராத்திரபாசுபததந்திரங்களின் பயன்.

அப்படியே நியாய வைசேஷிக சூத்திரங்களின் கண்டனமும் விருத்தமான வியாக்கியானத்தின் கண்டனமாமென்றே கொள்க.

அப்படியே நாரதரால் பஞ்சராத்திரமென்னும் தந்திரம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் வாசுதேவனிடத்தில் அந்தக்கரணத்தை நிறுத்துதல் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கும் அந்தக்கரணம் ஸ்திரப்படுதலால் ஞானவாயிலாக மோக்ஷமே பலனும். வைஷ்ணவக்கிரந்தங்களெல்லாம் பஞ்சராத்திரத்தில் அடங்குகின்றன. அந்தப் பஞ்சராத்திரம் தர்மசாஸ்திரத்தில் அடங்குகிறது.

அப்படியே பாசுபததந்திரத்தில் பசுபதியின் ஆராதனை சொல்லப்பட்டிருக்கிறது. அதன் கர்த்தா பசுபதி. அதற்கும் அந்தக்கரணத்தின் நிச்சலத்தன்மைவாயிலாக மோக்ஷசாதனமான ஞானம் பலனும்.

## 494. சைவநூல்முதலியவற்றின் பயனும் வாமமார்க்கமும்.

சைவநூல்களெல்லாம் பாசுபததந்திரத்தில் அடங்கியிருக்கின்றன.

அப்படியே கணேசன், சூரியன், தேவி என்னும் இவர்களினுபாஸனையைப் போதிக்கும் கிரந்தங்களுக்கும் சித்தஏகாக்கிரத்தன்மைவாயிலாக ஞானம் பயனும். இவைகளெல்லாம் தர்மசாஸ்திரத்தில் அடங்குகின்றன.

ஆனால் தேவியுபாஸனையைப் போதிக்கும் கிரந்தங்களில் இரண்டு சம்பிரதாயங்களுண்டு. அவற்றிலொன்று தக்ஷிணசம்பிரதாயம்; மற்றொன்று, உத்தரசம்பிரதாயம். உத்தரசம்பிரதாயத்தை வாமமார்க்க மென்பர். அவற்றில்,

1. தக்ஷிணசம்பிரதாயப்படி எந்த நூல்களில் தேவியுபாஸனையிருக்கிறதோ அவை தர்மசாஸ்திரத்தில் அடங்குகின்றன.

2. வாமமார்க்கம் எந்நூல்களிலிருக்கின்றனவோ, அவை தர்மசாஸ்திரத்திற்கு விருத்தமாம். ஆதலால் அவை அப்பிரமாணமாம்.

வாமதந்திரம் பரமசிவனாற் செய்யப்பட்டதாயினும் சகலசாஸ்திரங்களுக்கும் வேதத்துக்கும் விரோதமாயிருக்கிறது. ஆதலால் அது பிரமாணமன்று.

விஷ்ணுவாற் புத்தாவதாரத்திற் செய்யப்பட்ட நாஸ்திகக்கிரந்தம் வேதத்துக்கு விருத்தமாயிருப்பதால் அப்பிரமாணமாயிருப்பதுபோல் சிவனாற் செய்யப்பட்ட வாமதந்திரமும் வேதத்துக்கு அத்தியந்தம் விருத்தமாயிருக்கிறது. கள் முதலிய அசுத்தமான பதார்த்தங்களைக் கிரகிக்கலாமென்று இதிற் சொல்லியிருக்கிறது. உலகத்தை வஞ்சிக்கும்பொருட்டு உத்தமபதார்த்தங்களின் பெயரை மலினபதார்த்தங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். கள்ளிற்குப் பெயர் தீர்த்தம். மாமிசத்துக்குப் பெயர் சுத்தம். மத்தியபானபாத்திரத்துக்குப் பெயர் பதுமை. வெண்காயத்துக்குப் பெயர் வியாஸர். வெள்ளைப்பூண்டுக்குச் சுகதேவரென்று பெயர். கள்ளைக் கட்டும் சாணானுக்குப் பெயர் தீக்ஷிதர். வேசியைச் சேவிப்பவனுக்கும் சக்கிலிச்சிமுதலிய சண்டாளஸ்திரீகளைச் சேவிப்பவனுக்கும் பிரயாகைசேவிப்பவன் காசிசேவிப்பவன் என்று பெயரிட்டிருக்கிறார்கள். பைரவிசக்கிரமத்தியில் இருக்கிற சண்டாளர்முதலியோரைப் பிராஹ்மணர் என்கிறார்கள். அத்தியந்தம் வியபிசாரஸ்திரீயை யோகினீயென்பர். வியபிசாரியை யோகியென்பர். இப்படிப் பலவிதமாய் வாமமார்க்கத்தின் வியவகாரம் நிஷித்தமாயிருக்கிறது. பூஜாகாலத்தில் பலதோஷங்களுடன் கூடிய ஸ்திரீயை உத்தமசக்தியென்று சொல்லுகிறார்கள். ஜாதியில் சண்டாளியும் அதிவியபிசாரியுமான தூரஸ்திரீயை தேவியாகப் பாவித்துப் பூஜிக்கிறார்கள். அவளாற் குடிக்கப்பட்டு மிச்சமான மத்தியத்தைக் குடிககிறார்கள். அதிகக்குடியால் அவள் வாந்திசெய்தால் அதைப் பூமியில் விடாமல் சிரத்தையுடன் ஆசாரியர்சகிதமாய் மற்றவர்கள் சாவதானமாய்க் குடிக்கிறார்கள். இவ்வாந்தியைப் பைரவி என்கிறார்கள், ......யில் நாக்கை வைத்துக்கொண்டு மந்திரம் ஜபிக்கிறார்கள். 1. மத்தியம், 2. மாமிசம், 3. மத்ஸியம், 4. முத்திரை, 5. மந்திரம் இவ்வைந்து மகாரங்களையும் போகமோக்ஷத்தின்பொருட்டுச் சேவிக்கிறார்கள். முதலாவது இரண்டாவது முதலிய மகாரங்களை அப்பிரசித்தமான பெயர்களால் வியவகரிக்கிறார்கள். இவைமுதலிய வாமதந்திரத்தின் சகலவியவகாரங்களும் இவ்வுலகத்தினின்றும் பரலோகத்தினின்றும் ஒருவனைப் பிரஷ்டனாக்கிவிடுகின்றன. இக்காரணத்தினாற்றான் காதுகுத்திக்கொண்டிருக்கிற யோகிகள், அவதூதகோசாயிகள், அநேகசந்நியாசிகள், பிராமஹ்ணர்கள் முதலியோர்கள் வாமமார்க்கத்தை யனுஷ்டித்தாலும் உலகத்தாலும் வேதத்தாலும் நிந்திக்கப்பட்டதென அறிந்து, இம்மார்க்கத்தை இரகசியமாய் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதிகமாய்ச் சொல்லுவதென்! வாமமார்க்கத்தைக் கேட்ட மிலேச்ச னுக்கும் மயிர்க்குச்சுண்டாகிறது. இப்படி நிந்திக்கப்பட்டதாயிருக்கிறது வாமமார்க்கம். தாழ்ந்தவர்களும் உண்ணாத எல்லா நிந்திக்கப்படுமார்க்கங் களையும் வாமதந்திரத்தில் கூறுகிறார்கள். மிகத்தாழ்ந்த விவகாரங்கள் எழு தத்தகுந்தவைகளன்றாகலின் விசேஷக்கிரமங்களை எழுதவில்லை. வாமதந் திரம சர்வவிதத்திலும் தள்ளத்தக்கது.

## 495. நாஸ்திகமதம்.

நாஸ்திகமதமும் தள்ளத்தக்கது. இதில் 1. மாத்தியமிகர், 2. யோகா சாரர், 3. சௌத்திராந்திகர், 4. வைபாஷிகர், 5. சார்வாகர், 6. திகம்பரரென ஆறுபேதங்களுள. இவ்வறுவரும் வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளு கிறதில்லை. இவ்வறுவருடைய சித்தாந்தமும் ஒன்றற்கொன்று வித்தியா சப்படுகின்றன.

1. மாத்தியமிகன் சூன்யவாதி.

2. யோகாசாரனுடைய மதத்தில் சகலபதார்த்தங்களும் விஞ்ஞானத் துக்கு வேறாக இல்லை. விஞ்ஞானமே தத்துவம். அந்த விஞ்ஞானம் க்ஷணிகமாயிருக்கிறது.

3. ஸௌத்திராந்திகமதத்தில் விஞ்ஞானத்தினாகாரம் பாஹியபதார்த் தமாகிய விஷயமின்றியுண்டாகிறதில்லை. ஆதலால் விஞ்ஞானத்தால் பாஹி யபதார்த்தங்கள் அநுமானிக்கப்படுகின்றன. இவ்விதத்தால் ஸௌத்திராந் திக மதத்தில் பாஹியபதார்த்தம் அனுமானப்பிரமாணத்துக்கு விஷயமாம்; பிரத்தியக்ஷமன்று; ஸ்திரமுமன்று. ஆனால் எல்லாப்பதார்த்தங்களும் க்ஷணிகமாயிருக்கின்றன.

4. வைபாஷிகமதத்தில் பாஹியபதார்த்தம் க்ஷணிகமாயிருந்தாலும் பிரத்தியக்ஷப்பிரமாணத்துக்கு விஷயமாம். இதுவே ஸௌத்திராந்திகத் துக்கும் வைபாஷிகத்துக்கு முள்ளபேதம்.

இந்நான்கும் சுகத(புத்த)ருடையது.

5. சார்வாகமதத்தில் பதார்த்தம் க்ஷணிகமன்று. ஆனால் இம்மதத் தில் தேகமே ஆத்மாவாம்.

6. திகம்பரமதத்தில் தேகமாத்மாவன்று. ஆத்மா தேகத்தைக்காட் டிலும் வேறானது. ஆனால் தேகத்தின் பரிமாணம் எவ்வளவுண்டோ அவ் வளவு ஆத்மாவின் பரிமாணமாம்.

இவ்விதமாக இவர்களுக்குத் தம்மில் மதபேதமிருக்கிறது. மற்றும் அநேக பேதங்களுண்டு. எல்லாம் வேதவிருத்தமாயிருக்கின்றன. ஆகையால் இவர்கள் நாஸ்திகராவர். இதனாற்றான் அம்மதங்களை விசேஷமாய்ச் சொல்லவுமில்லை; கண்டிக்கவுமில்லை.

## 496. சாகித்தியமுதலியவற்றின் தாற்பரிய பூர்வகமான தர்க்கதிருஷ்டியின் சாரத்தைக் கிரகிக்கும் நிச்சயம்.

இவ்விதத்தால் வாமமார்க்க நாஸ்திகமதக்கிரந்தங்கள் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருந்தாலும் வேதத்துக்குப் பாஹியமாயிருக்கின்றன. ஆகையால் வேதாநுசாரியான வித்தையின பிரஸ்தானங்கள் பதினெட்டேயாம்.

அன்றியும், மம்மடர் முதலியவர்களாற் செய்யப்பட்ட சாகித்தியக்கிரந்தமும் காமசாஸ்திரத்தில் அடங்குகிறது. அப்படியே சகல காவியங்களுக்கும் * சிலவற்றிற்குக் காமசாஸ்திரத்திலும் † சிலவற்றிற்குத் தர்ம சாஸ்திரத்திலும் அடக்கமிருக்கின்றது.

இவ்விதத்தால் அஷ்டாதச வித்தையின் பிரஸ்தானங்கள் முழுவதும் பிரஹ்மஞானவாயிலாக மோக்ஷத்துக்கு ஹேதுக்களாம். ‡ சில சாக்ஷாத் ஞானத்துக்கு ஹேதுக்களாயும் சிலபரம்பரையாக ஞானத்துக்கு ஹேதுக்களாயும் இருக்கின்றன. இதுவே சகலசாஸ்திரங்களின் ** அபிப்பிராயமென்று தர்க்கதிருஷ்டி நிச்சயித்தான். உத்தரமீமாம்சையொழிந்த பிற சாஸ்திரங்களெல்லாம் ஜிஞ்ஞாசுவால் தள்ளத்தக்கவையென்று சாரீரகத்திற் சூத்திரகாரராலும் பாஷியகாரராலும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் வேறுசாஸ்திரங்களும் மோக்ஷத்துக்குபயோகமென்று சொன்னது சரியன்று ; ஆயினும் சாரத்தைக் கிரகிக்கும் திருஷ்டியால் தர்க்கதிருஷ்டியானவன் மேற்சொல்லிய சாரமான நிச்சயஞ்செய்தான்.

---

* அலங்காரகிரந்தங்களுக்கு.

* நாயிகாபேதமும் ரசபேதமுதலியனவுமாகிய அர்த்தங்களைச் சொல்லும் காவியநூல்களுக்கு.

† பகவத் சரித்திரத்தைப் பிரதிபாதிக்கும் காவியகிரந்தங்கள்.

‡ பசித்தவர்களுடைய பசியைப் போக்கித் திருப்தியாக்குவதற்குப் பக்குவமாகிய அன்னமே சாக்ஷாத்சாதனமாயும் உழவுமுதலிய பயிர்களே பரம்பராசாதனமாயுமிருப்பதுபோல அஞ்ஞானத்தைப் போக்கி ஆத்மாநுபவதிருப்தியைக் கொடுப்பதற்குச் சிலகிரந்தங்கள் நிஷ்காமகர்மத்தைப் போதிக்கும்வாயிலாகப் பரம்பராசாதனமாயும் சில ஞானத்தைப் போதிக்கும்வாயிலாகச் சாக்ஷாத்சாதனமாயுமிருக்கின்றன.

** இது ஓர் சாரத்தைக் கிரகிக்கும் திருஷ்டியுடைய பண்டிதர் வசனமாம்:— "எந்த மதங்களில் விஷ்ணுவின் (வியாபகமான பரமாத்மாவின்) பக்தி அல்லது ஞானமிருக்கிறதோ, பின்னும் எந்தமதங்களில் நான்கு வேதங்களும் மேலான பிரமாணங்களாயிருக்கின்றனவோ, அவ்வெல்லாமதங்களும் நேராகவாவது பரம்பரையாகவாவது ஜீவர்களது உய்விற்கு ஏதுவாயிருக்கின்றன."

## 497. தர்க்கதிருஷ்டி ஓர்வித்துவானோடு சந்தித்தல்.

குருமுகமாகக் கேட்கப்பட்ட அர்த்தத்தில் புத்திஸ்திரப்படுவதற்காகச் சகல சாஸ்திரங்களின் அபிப்பிராயத்தையும் விசாரித்தும் தர்க்கதிருஷ்டிக்கு மறுபடியுஞ் சந்தேக முண்டாயிற்று. அதாவது சாஸ்திரத்தின் அபிப்பிராயம் தான் நிச்சயித்ததுதானோ வேறோ வென்பதாம். ஏனெனின் தர்க்கதிருஷ்டி கனிஷ்டாதிகாரியென்று சொல்லப்பட்டமையால் அவனுக்கு அடிக்கடி குதர்க்கத்தாற் சந்தேகமுண்டாகிறது. அதனை நிவிருத்திக்கும் பொருட்டுத் தன்னிச்சயத்தை வேறுவித்வானுடைய நிச்சயத்தோடு ஒத்துப் பார்க்கும்படிப் புறப்பட்டுப்போய் ஓர் வித்வானைச்சந்தித்துத் தன் அபிப்பிராயங்களை அவரிடம் வெளியிட்டான். அப்போது தர்க்கதிருஷ்டியின் வசனத்தைக் கேட்டு நீ சொன்னதெல்லாம் முக்கியசித்தாந்தமென்று வித்வான் சொன்னார். இவ்விதமாகத் தர்க்கதிருஷ்டி சகலசமுசயங்களுமற்று அபரோக்ஷமாய்ப் பிரஹ்மத்தை யறிந்து ஜகத்து பந்தமோக்ஷங்கள் எல்லாம் மித்தையென்று தெரிந்துகொண்டான்.

## 498. ஞானிக்கு இச்சைசம்பவித்தலும் இச்சையில்லாமையின் அபிப்பிராயமும்.

பிராரப்தம் கொஞ்சம் சேஷமிருந்தபடியால் தாய்தந்தையரையும் தன் வீட்டையும் சீக்கிரத்தில் பார்க்கவேண்டுமென்கிற இச்சையுண்டாயிற்று.

ஞானிக்குச் சகல வியவகாரங்களும் அஞ்ஞானிக்குண்டாவதுபோல் பிராரப்தத்தாலுண்டாகின்றனவென்று முழுவதும் முன் சொல்லப்பட்டன. ஆகையால் இச்சைசம்பவிக்கிறது. ஞானிக்கு இச்சையுண்டாகிறதில்லையென்று சில சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு ஞானியின் அந்தக்கரணம் பதார்த்தத்தின் இச்சாரூப பரிணாமத்தையடைகிறதில்லையென்பது அபிப்பிராயமன்று. ஏனெனின் அந்தக்கரணத்துக்கு இச்சாதிகள் சகஜதர்மங்களாம்.

அந்தக்கரணம் பூதங்களின் சத்துவகுணகாரியமென்று சொல்லப்பட்டிருந்தாலும் ரஜோகுணதமோகுணசகித சத்துவகுணத்தின் காரியமாம்; கேவலம் சத்துவகுணத்தின் காரியமன்று. கேவலசத்துவகுணகாரியமாயின் அந்தக்கரணத்துக்குச் சஞ்சலிக்கும் சுபாவமிருக்கலாகாது. அப்படியே காமக்குரோதாதி ராஜஸவிருத்தியும் மூடத்துவம் (நித்திரை) முதலிய தாமஸவிருத்தியும் எந்த அந்தக்கரணத்துக்கு முண்டாகலாகாது. அப்படியுண்

டாவதால் அந்தக்கரணம் கேவலம் சத்துவகுணத்தின் காரியமன்று. ஆனால் அப்பிரதானமான ரஜோகுணதமோகுணசகிதப் பிரதானமான சத்துவகுணத்தையுடைய பூதங்களினின்றும் அந்தக்கரணமுண்டாயிருக்கிறது. ஆதலால் அந்தக்கரணத்தில் முக்குணங்களுமிருக்கின்றன. அம்முக்குணங்களும் அந்தக்கரணமிருக்குமிடங்களிலெல்லாம் சமமாகவில்லை. ஆனால் ஏற்றக்குறைச்சலாயிருக்கின்றன. ஆகையால் குணங்களின் ஏற்றக்குறைவால் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுவித சுபாவம் இருக்கிறது. இவ்விதத்தால் அந்தக்கரணம் முக்குணங்களின் காரியமாயிருக்கிறது.

எதுபரியந்தம் அந்தக்கரணமிருக்கிறதோ அதுவரையில் ரஜோகுணத்தின் பரிணாமரூபமான இச்சையில்லாமலிருக்கமாட்டாது. ஆகையால் ஞானிக்கு இச்சையுண்டாகிறதில்லையென்பதற்கு அபிப்பிராயம் இதுவாம்:— ஞானி அஞ்ஞானி இருவருக்கும் இச்சை சமானமாகவேயிருக்கிறது. ஆனால்,

1. அஞ்ஞானி இச்சாதிகளை ஆத்மதர்மமாக அறிகிறான்.

2. ஞானிக்கு இச்சை யுண்டாகுங்காலத்திலும் இச்சையை ஆத்மதர்மமாக அவன் அறிகிறதில்லை. ஆனால் காமம், சங்கற்பம், சந்தேகம், ராகம், துவேஷம், சிரத்தை, பயம், லஜ்ஜை, இச்சை முதலியவைகள் அந்தக்கரணத்தின் பரிணாமங்களாயிருக்கின்றன. ஆதலால் அவற்றை அந்தக்கரணதர்மங்களென்று அறிகிறான்.

இவ்விதமாக இச்சைமுதலியனவுண்டாயினும் அந்த இச்சைமுதலியன ஆத்மாவின் தர்மமாக ஞானிக்குப் பிரதீதியாகிறதில்லை. ஆகையால் ஞானிக்கு இச்சையில்லையென்று சொல்லப்பட்டது.

அப்படியே மனதினாலும் வாக்கினாலும் சரீரத்தினாலும் செய்யப்படும் வியவகாரங்களெல்லாம் ஞானிக்கு ஆத்மாவினிடத்திற் பிரதீதியாகிறதில்லை. ஆனால் கிரியைகளெல்லாம் மனோவாக்குக் காயங்களிலிருக்கின்றன.

ஆத்மா அசங்கனென்பது ஞானியின் அந்தக்கரணத்தோடு கூடிய சிதாபாஸனது நிச்சயம். ஆகையால் ஞானி சகலவியவகாரங்களுக்கும் கர்த்தாவாயிருந்தும் அகர்த்தாவே. இக்காரணத்தால் சுருதியில் இவ்வாறு சொல்லியிருக்கிறது :— "ஞானத்துக்குப்பிறகு இச்சரீரத்திற் செய்யப்படும் சுபாசுபகர்மங்களும் அவற்றின் பலனாகிய புண்ணியபாவங்களும் சம்பந்தப்படுகிறதில்லை" என்பதாம்.

பிராரப்தபலத்தால் அஞ்ஞானிக்குண்டாவதுபோல் ஞானிக்கும் சகல வியவகாரங்களும் அவற்றின் இச்சையும் சம்பவிக்கின்றன.

## 499. சுபசந்தராஜாவின் சங்கம். 499-508.

சுபசந்தராஜாவினைவிட்டு மூன்று புத்திரர்களும் புறப்பட்டுப் போனார்கள். அங்குப் புத்திரர்களுடைய சரித்திரம் சொல்லப்பட்டது. இப்போது அவர்கள் தகப்பன் சரித்திரத்தைச் சொல்லுகிறேன்:—புத்திரர்கள் வீட்டைவிட்டுப்போனபோது ராஜாவுக்குத் தீவிரவைராக்கியமில்லாததினால் அவர்களது பிரிவால் துக்கமுண்டாயிற்று. அப்படி மந்தவைராக்கியமிருந்தபடியால் விஷயபோகத்திற் சுகமுண்டாகவில்லை. புத்திரர்கள் போய்விட்டபடியால் எண்ணமிருந்தும் ராஜ்யத்தை விட்டுப்போக முடியவில்லை. இதனாலும் துக்கமுண்டாயிற்று. தீவிரவைராக்கிய மிருந்தால் ராஜ்யத்தையநாதையாய் விட்டுப்போவான்; வைராக்கியம் தீவிரமின்றி மந்தமாயிருந்தபடியால் ராஜ்யத்தை விடமுடியவில்லை. போகத்தில் ஆஸக்தியுமிருக்கவில்லை. ஆகையால் இருவிதத்திலும் துக்கமேயுண்டாயிற்று. யதார்த்தமான தீவிரவைராக்கியமில்லை. மந்தவைராக்கியத்தின் பலனாகிய உபாஸ்யத்தை (உபாஸிக்கத் தக்கதனை) யறிந்துகொள்ள வேண்டுமென்னும் இச்சையைக் கூறுகின்றார்:—

## 500. சுபசந்தபண்டிதர்களோடு தூங்காமல் விழித்திருக்கும் தேவன் யாவன் என்று பிரசினஞ்செய்தல்.

மந்தவைராக்கியம் சுபசந்தனுக்குண்டானதே அவனுக்குப் பெரும்பாக்கியம். இதனால் அவனுக்கு எந்ததெய்வம் உபாஸிக்கத்தக்கதென்று அறிந்துகொள்ள இச்சையுண்டாயிற்று; பிறகு சிரேஷ்டவித்வான்களை வரவழைத்து அவர்களைத் தகுந்த ஆஸனங்களில் உட்காரவைத்து அவர்களைப் பார்த்து, புருஷார்த்தத்தையடைவதற்காக எல்லாஜனங்களாலும் ஆராதிக்கத்தக்கதாயும் தூக்கம் விழிப்பற்றதாயும் பக்தர்களை எப்போதும் பரிபாலனம் பண்ணுகிறதாயுமிருக்கிற தெய்வம் யாது என்று கேட்டான். அரசன் வார்த்தையைக் கேட்டுப் அப்பண்டிதரில் ஒருவன் அரசனை நோக்கிச் சொல்லத்தொடங்கினான்:—

## 501. விஷ்ணுவுபாசகனது உத்தரம்.

கேளும் அரசனே! சகலவேதாந்தசிரோமணியான வாசுதேவனைச் சிவனும், பிரமனும் நித்தியம் சேவிக்கிறார்கள். வாசுதேவன் பரோபகாரி; பக்தருக்கு ஹிதஞ்செய்பவர்; சங்கு சக்கர கதா பத்மதாரீ; மங்களஸ்வரூபி;

தயாநிதி. இப்படிப்பட்ட மகாவிஷ்ணுவானவர் நிஜபக்தர்களை யறிந்து அவர்களுக்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணுகிறார். சக்தி, கணேசர், சூரியன், சிவன் என்னும் இவர்களெல்லாம் அவராஞ்ஞைப்படி நடக்கிறார்கள் என்று பாரதமும், பத்மபுராணமும், நிருசிம்ஹதாபனீ, ராமதாபனீ, கோபாலதாபனீ என்னுமுபநிஷத்துகளும் சொல்லுகின்றன. விஷ்ணுசொரூபத்தினின்றும் ஜகத்துமுழுமையுமுண்டாகிறது. பிடாதிதுக்கங்களை அவர் பரிகரிப்பவர். இவரை எல்லோரும் ஆராதிக்கிறார்கள். பல அவதாரங்களைத் தரித்து எல்லாத்தேவர்களுக்குஞ் சகாயஞ் செய்திருக்கிறார். ஆகையால் விஷ்ணுவே உபாஸிக்கத்தக்கவர். விஷ்ணுவுக்குச் சமானமாய் உபாஸிக்கத்தக்க வேறொரு தெய்வமில்லை. விஷ்ணுவுக்குச் சிவன் உத்தமபக்தனாயிருந்தாலும் அவன் உபாஸிக்கத்தக்க சொரூபத்தைத் தரிக்கவில்லை. சிவன் சவம்போல் அமங்களஸ்வரூபி. ஆகையால் அவனை நாம் இவ்வாறு தியானிக்கலாகாது. சாம்பல், உடுக்கை, யானைத்தோல், மண்டையோடு என்பவற்றைத் தரிக்கப்பட்டவன் யாருக்குத்தான் க்ஷேமத்தை யுண்டுபண்ணப்போகிறான்? அவன் பிள்ளையாகிய கணங்களுக்கெல்லாஞ் சிரேஷ்டனாயிருக்கிற கணபதியும் அப்படியே விலக்ஷணமான மனுஷியமிருகரூபங்களைத் தரிக்கிறான். சடர் ஹடமாய்த் தேவியைத் தியானிக்கிறவர்கள். அவள் சமானரூபத்தைத் தரிக்கிறார்கள். ஸ்திரீயானவள் நிந்திக்கத்தக்கவளாயும் அசுசியாயும் கணக்கிடப்படாத அவகுணவிசித்திர முடையவளாயும் கபடஸ்வரூபியாயும் பராதீனமாயுமிருக்கிறாள். இப்படிப்பட்ட வடிவத்தை விரும்புகிறவன் எவனோ அந்த நரன் கழுதையைப் போன்றவனாய் அவளைச் சேவிக்கட்டும். இச்சூரியனோ இராபகலாய் ஓய்வில்லாமல் அலைகிறான். இவனை யுபாஸிக்கப்பட்டவனும் இவனைப்போலவே அலைவான். ஆகையால் மற்றஎல்லாத்தேவதைகளையு மொழித்து எப்போதும் விழிப்புள்ளவராயிருக்கிற மகாவிஷ்ணுவே சேவிக்கத்தக்கவரென்று அறியத்தக்கது. நாரதபஞ்சராத்திரத்தில் விஷ்ணுபூஜாத்தியானவிதிகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. விஷ்ணு உபாஸனையொழிந்த மற்ற நான்குபாஸனைகளும் உலகத்தில் விளங்குகின்றன. அவற்றில் ஒவ்வொன்றையும் நிஷேதித்ததினால் ஸ்மார்த்த உபாஸனையும் நிஷேதிக்கப்பட்டதாய் விட்டது. ஏனெனின், ஐந்துதேவதைகளையும் * சமபுத்தி

---

* மகாதேவன் ஆத்மாராமராயிருத்தலால் சகல பதார்த்தங்களிலும் சமம் அதாவது மித்தை என்னும் புத்தியிருக்கிறது. அல்லது சம (ஏக=பிரஹ்ம) புத்தியிருக்கிறது. ஆதலால் அவர் சகல விபூதிகளிலும் விரக்தராய்த் தோல்கபால முதலிய நிந்திக்கப்படும் பொருள்களையே தரிக்கின்றார். இதனை மஹிம்நமென்னும் ஸ்தோத்திரத்தில் புஷ்பதந்தாசாரியரும் சொல்லியிருக்கிறார் :— "வரதனே! இந்திராதிதேவர்கள் தம்முடைய புருவத்தினால் இரக்ஷிக்கப்பட்டவர்களாய் அந்தந்தச்செல்வத்தைத் தரிக்

யுடன் உபாஸித்தற்கு ஸ்மார்த்தஉபாஸனேயென்று பெயர். சிவன்முத லிய நாலுதேவதைகளும் விஷ்ணுவுக்குச் சமானமாகாரென்று நிஷேதிக்கப் பட்டிருத்தலால் ஸ்மார்த்தவுபாஸனேயும் நிஷேதிக்கப்பட்டதாயிற்று.

## 502. சிவவுபாஸகனது உத்தரம்.

சிவஉபாஸகராகிய முநி மேற்சொன்னதைக் கேட்டுக் கோபங்கொண்டு கண்சிவந்து சொல்லுகிறார்:— அரசனே, என்வார்த்தையைக் கேளும். நான் சொல்வதற்கு அனேககோடிப் பிரமாணங்களுண்டு. கேட்கப்பட்டவையெல் லாம் கொடுத்தருளும் பரமசிவனுக்குச் சமானம் யார்? மகாவிஷ்ணுவால் யாசிக்கப்பட்டுத் தன்னுடைய சகலஐசுவரியங்களேயுங் கொடுத்துத் தான் பஸ் மத்தைத் தரித்தார். இக்காரணத்தினலேயே தோலேயும் மண்டையோட்டை யும் தரித்தார். அவருக்கு நல்லது பொல்லாதது கிடையாது. அவருக் கெல்லாஞ் சமந்தான். நக்கினமாயிருந்துகொண்டு வைராக்கியத்துக்குச் சமானமான சுகங்கிடையாது என்று உபதேசிக்கிறார். இவ்விதமான பெ ருங்கொடையளிக்கின்றார்:— நரனும் நாரியும் காசியில் மரணமடைந்தால் சீக்கிரத்தில் † சாயுஜ்யமோக்ஷத்தையடைகிறார்கள். கர்ப்பவாச சங்கடத் தையடையார். அவர்கள் சிவனுக்குச் சமானமாகிச் சர்வதிவ்விய போகங் களேயுமனுபவிக்கிறார்கள். அப்போது லிங்கசரீரத்தை விட்டுப் பிரஹ்மத்தை யடையும்படியான அத்வைதபோதத்தைப் பரமசிவன் செய்கிறார். உயர்வு தாழ்வு, சிறிதும் பாராமல் எல்லோருக்கும் அவர் முக்தியளிக்கிறார். அவ ருக்குச் சமானமான தாதா ஒருவருமில்லே. பக்திபுள்ளவர்களேயும் இல்லாத வர்களேயுஞ் சமமாயிரக்ஷிக்கிறார். விஷ்ணுவின் சுபாவத்தை நாம் கேள்விப் படுகிறோம்:—அவர் பக்தர்களேமாத்திரமிரக்ஷிக்கிறாரென்பது உலகப்பிரசித் தமாயிருக்கிறது. ஹரி சேவகன் ஹரன் சேவியனென்று வியாஸர் கந்தபுரா ணத்திற் சொல்லியிருக்கிறார். இராமேச்சுரத்தில் இராமசந்திரன் பரம சிவனேப் பூஜித்திருக்கிறார். பாரத பத்மபுராணங்களிற் சகலதேவர்களேயும் விட ஹரிசிரேஷ்டரென்று சொன்னதற்குத் தாற்பரியம் அப்படியன்று. ஏனெ னின், பாரததாற்பரியநூலேப் பார்க்குமிடத்துச் சிவனுக்கே ஈசுரத்துவம் பிர

---

கிறார்கள். தம்மிடத்தில் குடும்பத்தின் சாதனமாக நந்திகேசுவரர், கட்டுவாங்கம் (நான்குகால் ஒருபட்டிவடிவமரமயமான சஸ்திரம்), கோடரி, யானேத்தோல், பஸ் மம், பாம்பு என்பனவுள. இதனால் அறியத்தக்கதாவது சுவாத்மாராம புருஷனே விஷயவடிவ கானற்சலம் பிரமிக்கச்செய்கிறதில்லே.''

† சிவசமான ஐசுவரியத்தோடுகூடிய சிவலோகத்தை.

தீதியாகிறது. இவ்வாறு * அப்பயதீக்ஷிதரென்னும் வித்துவான் சகலபுராணங்களுக்கும் இதிஹாஸங்களுக்கும் தாற்பரியம் எழுதியிருக்கிறார்.

அங்குப்பாரதத்தில்உள்ள பிரசங்கம் இதுவாம்:—அசுவத்தாமாவால் நாராயணாஸ்திரமும் ஆக்கினேயாஸ்திரமும் பிரயோகப்படுத்தப்பட்டபோதுவெகு சேனைகள் மரித்தும் பஞ்சபாண்டவர்களில் ஒருவரும் மரிக்கவில்லை. அப்போது ரதத்தைவிட்டு தனுர்வேதத்தையும் ஆசாரியரையும் திரஸ்கரித்து வனத்துக்குப் போனார். அப்போது வியாஸர் அவரைச் சந்தித்துச் சொல்லுகிறார்:—“ஓ! பிராஹ்மணா! நீ ஆசாரியரையும் வேதத்தையும் நிந்திக்கலாகாது. இந்த அர்ச்சுனனும் கிருஷ்ணனும் நரநாராயணரூபங்கள். இவர்கள் சிவனை மிகப்பூஜித்திருக்கிறார்களாகலின் இவர்களுடைய பக்திக்கதீனமாகித் திரிசூலியான மகாதேவன் இவர்களுடைய ரதத்துக்கு முன்னின்று இவர்கள்பேரில் பிரயோகிக்கப்படும் சஸ்திராஸ்திரங்களின் சாமர்த்தியத்தை நாசஞ்செய்கிறார்.”

இவ்விதத்தால் மகாபாரதத்தில் மகாதேவருடைய கிருபையால் நாராயணரூப கிருஷ்ணனுக்கு விபூதியுண்டாயிருக்கிறதென்பது சித்திக்கிறது. ஆதலால் விஷ்ணுசரித்திரத்தைப் பிரதிபாதிக்கும் கிரந்தம் சிவனுடைய ஆதிக்கியத்தைப் பிரதிபாதிக்கிறது. ஏனெனின் அக்கிரந்தத்தில் விஷ்ணு சேவியனாகச் சொல்லப்பட்டிருக்கிறார். பாரதப்பிரசங்கத்தால் அந்த விஷ்ணு சிவபக்தன். ஆதலால் எந்தச்சிவபக்தியால் விஷ்ணு சேவியனானாரோ அந்தச்சிவனே பரமசேவியனாகிறார். இவ்விதமாக அப்பயதீக்ஷிதர் சகல வைஷ்ணவக்கிரந்தங்களிலும் சிவனே பிரதிபாத்தியராகச் சொல்லப்பட்டவரென்று சொல்லியிருக்கிறார். ஹரியானவர் பக்தர்களுக்குள் உத்தமமானவர் சிவனுக்கே மகாதேவனென்றும் மகேசனென்றும் பெயர். மற்றத் தேவர்களுக்குத் தேவரென்றும் ஈசரென்றும் பெயர். சிவமென்பதற்கு மங்களமென்று பொருள். சிவத்துக்கு அந்நியமானதெல்லாம் அசிவம். சிவனுக்கு அன்னியமான தெய்வங்களெல்லாம் அசிவங்கள் அதாவது அமங்கலஸ்வரூபிகள். இந்த அமங்களரூப தெய்வங்களைவிட்டு மங்களஸ்வரூப சிவனை யுபாஸிக்க வேண்டியது. விஷத்தைப் பார்த்து மற்றெல்லாத் தேவர்களுக்கும் பயமுண்டாயிற்று. அப்போது அவ்விஷத்தைக் கண்டத்திற்கொண்டு பயத்தைப் போக்கினார். இவருடைய குமாரரான கணேசர் சகல விக்கினங்களையும் உடனே

* இப்பண்டிதர் தக்ஷிணதேசத்தில் சிவகாஞ்சிபுரியில் இருந்தார். அவர் பெரிய சிவ உபாசகராயிருந்தார். இவர் சித்தாந்தலேசமுதலிய வேதாந்த நூல்களையும் செய்திருக்கிறார்.

போக்குகிறார். காரியத்தில் காரணகுணமிருத்தலால் விக்கினங்களையெல்லாம் நாசம்பண்ணுகிறவர் சிவனென்றறியவேண்டியது. ஜனனமரணங்களாகிற துக்கரூப விக்கினங்களெல்லாம் சிவத்தியானத்தால் நாசமாமென்று அறியத்தக்கது. இவ்விதமாகச் சேவிக்கத்தக்கவன் சதாசிவனே விவேகியானவன் சமாதியோடு விழிக்கக்கடவன். பாசுபததந்திரத்தில் சிவபூஜாவிதிகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதிப்படிப்பூஜித்துத்தியானித்தால் சிவனடியைத் [illegible]சிக்கக்கூடும். நாரத பஞ்சராத்திரமதம் சூத்திரபாஷியத்திற் கண்டிக்கப்பட்டிருக்கிறது. அதனை யனுசரித்த இராமானுஜாதிகளின் நவீனவைஷ்ணவமதமும் * கல்பதருவின் உரையாகிய பரிமளத்திற் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

## 503. கணேசபூஜகனது உத்தரம்.

கணேசன் சிவன்புத்திரனென்று சொன்னதையும் காரணத்தின் குணம் காரியத்திலிருப்பதாகச் சொன்னதையுங் கேட்டுக் கணேசபூஜகன் கோபத்துடன் சொல்லுகிறான்:— "அரசனே! நான் சொல்லும் பதார்த்தத்தைக் கேட்க. இவ்விருவரும் பொய்யை நிஜமெனச் சாதிக்கிறார்கள். கணேசன் சிவபுத்திரனென்றும் பராதீனனென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். இவ்விஷயமாய் வியாஸர் புராணத்திற்சொல்லியிருக்கிற ஒரு கதையைச் சொல்லுகிறேன்; கேட்பீராக:-திரிபுரசங்காரஞ்செய்ய ஹரிஹராதி எல்லாத்தேவர்களும் போனார்கள். கணேசனைப் பூஜிக்காதவரையில் திரிபுரர்கள் சிறிதும் தோல்வியடையவில்லை. பிறகு மனவருத்தமுற்று எல்லோரும் கணேசனை யாராதித்துத் திரிபுரர்களை ஜயித்தார்கள். எவனைப் பூஜித்ததினால் இவர்கள் ஜயமடைந்தார்களோ அவனே சேவிக்கத்தக்கவனென்று அறியவேண்டியது. தகப்பனுக்கு ராமன் புத்திரனாயிருந்ததுபோல் பரமசிவனுக்குக் கணபதி புத்திரராயிருந்து விக்கினங்களைப் போக்கினார். கணேசபுராணம் வியாஸர் செய்திருக்கிறார். அதில் எல்லாவற்றிற்குங் கணேசனே காரணம் என்று காட்டியிருக்கிறார். அவருடைய துதிக்கையிலிருந்து அரி அரன் விதி ரவி சக்தி முதலியோர் யாவரும் ஜனித்தார்கள். எவர்கள் க்ஷணமாத்திரம் இவரைத் தியானிக்கிறார்களோ அவர்களுடைய விக்கினங்களெல்லாம் உடனே ஒழிகின்றன. இப்படி இரவும்பகலும் விருப்புள்ளவராயிருக்கிற விநாயகக்கடவுளைப் பக்தியுடன் நிஷ்காமமாய்ப் பஜிக்கவேண்டியது.

---

* ஸ்ரீ சங்கராசாரியாரால் செய்யப்பட்ட பிரஹ்மசூத்திரபாஷியத்தின்பேரில் வாசஸ்பதிமிசிரர் செய்தது பாமதியென்னும் உரையாம். அதன் உரைக்குக் கல்பதருவென்று பெயர். அதற்குப் பரிமளமென்று ஒருரையிருக்கிறது. இப்பரிமள வியாக்கியானம் அப்பயதீக்ஷித ஸ்வாமிகளால் செய்யப்பட்டதென்பது தென்னாடெங்கும் பிரசித்தம்.

## 504. தேவிபக்தனுடைய உத்தரம்.

கணேசன் சக்திக்குக் காரணமென்று சொன்னதைக் கேட்டுப் பகவதிபக்தன் கர்ச்சித்து அரசனைப் பார்த்துச் சொல்லத்தொடங்கினன்:-அரசனே! என் சத்தியமான வசனத்தைக் கேட்பீராக. இம்மூவருஞ்சொன்னதெல்லாம் அப்பிரமாணம். சக்தியில்லையாயின், தேவர்களெல்லாம் கொல்லப்பட்ட பிணத்துக்குச் சமானமானவரென்று அறிக. சக்தியில்லாதவர் அசமர்த்த ரெனப்படுவர். அவர்கள் எப்படிக் காரியத்தை யுண்டுபண்ணுவர். எவர்கள் அதிகமாய்ச் சக்தியை யுபாசித்தார்களோ அவர்கள் சகலத்திற்கும் அதிகாரியானூர்கள். ஹரி ஹரன் சூரியன் கணபதி முக்கியமானவர்கள். இவர்களிடத்தில் நாநாவிதமான சக்தி காணப்படுகிறது. பிரபஞ்சத்தில் எதைச் சக்தியென்று சொல்லுகிறூர்களோ அதனைப்பகவதியின் ரூபமென்று அறிக. பகவதிக்கு இரண்டு ரூபங்களுண்டு:—1. ஒன்று சாமானியம். 2. மற்றொன்று விசேஷம்.

1. எல்லாப் பதார்த்தங்களிலுமுள்ள தத்தம் காரியத்தைச் செய்யுஞ் சாமர்த்தியரூப சக்தி எதுவோ அது பகவதியின் சாமானியரூபமாம்.

2. அஷ்டபுஜாதிகளுடன் கூடிய மூர்த்தி விசேஷரூபமாம்.

சாமானியரூப சக்தியின் அம்சங்கள் எண்ணிறந்தவை. எவனிடத்தில் சக்தியின் அம்சம் குறைவாயிருக்கிறதோ அவன் அற்பசக்திமான்; அசமர்த்தன் எனப்படுகிறூன். எவனிடத்தில் சக்தியின் அம்சம் அதிகமாயிருக்கிறதோ அவன் சமர்த்தன் எனப்படுகிறூன். விஷ்ணு சிவன் முதலியவர்களிடத்தில் சக்தியின் அம்சம் அதிகமாயிருக்கிறபடியால் அவர்கள் சமர்த்தரென்று சொல்லப்படுகிறூர்கள்.

இவ்விதமாய்ப் பகவதியின் சாமானியரூப சக்தியம்சத்தின் மிகுதியால் விஷ்ணு, சிவன், கணேசன், சூரியன் என்னும் இவர்களுடைய மகிமை பிரசித்தமாயிருக்கிறது. பிராணனின்றிய சரீரம்அமங்களமாவதுபோல் சக்தியின்றிய சகலதேவர்களும் அமங்களஸ்வரூபிகளாவர்கள். ஆதலால் எந்தச் சக்தியின் மிகுதியால் தேவர்களுடைய மகிமை பிரசித்தமாயிருக்கிறதோ அம்மகிமை சக்தியினதே; தேவர்களதன்று. விஷ்ணு சிவன் முதலியோர் பகவதியின் சாமானியரூப சக்தியை விசேஷமாயுபாஸித்தபடியால் அவர்களிடத்தில் சக்தியின் அம்சம் அதிகமாயிருக்கிறது.

பகவதியினுடைய நிராகாரரூப சக்திக்கு அநேக அம்சங்களிருப்பது போல ஸாகாரரூபசக்திக்கும் அநேக அம்சங்களுண்டு. அச்சாகார அம்சங்களில் காளீரூபம் பிரதானம். மாகேசுவரீ, வைஷ்ணவீ, சௌரீ, கணேசீ,

முதலியனவும் பிரதான அம்சங்களே. பகவதியுபாஸனையால் விஷ்ணுவுக்கு வைஷ்ணவி யென்னும் பகவதியின் அம்சங்கிடைத்தது. அப்படியே மற்றத் தேவதைகளுக்கும் பகவதியின் உபாஸனையால் *தத்தம் மாகேசுவரி முதலிய அம்சங்கள் கிடைத்திருக்கின்றன. அவர்களுள்ளும் விஷ்ணுவும் சிவனும் பகவதியின் முக்கிய பக்தர்களாயிருக்கிறார்கள். ஏனெனின் தியானஞ்செய்வோனுக்குத் தியேயரூபத்தையடைவதே தியானத்தின் பரம அவதியாகும். விஷ்ணுவுக்கும் சிவனுக்குமுபாஸனையால் தியேயரூபங் கிடைத்திருக்கிறது. ஆதலால் இவர்கள் முக்கிய உபாஸகர்கள்.

மதனத்தால் அமிர்தமுண்டானபோது, சுராசுரர்களுடைய விவாதத்தைத் தீர்க்க விஷ்ணுவுக்குச் சாமர்த்தியமில்லாமற் போயிற்று. அப்போது தன்னுபாஸ்யரூபமான பகவதியின் அம்சத்தைத் தியானஞ்செய்து தானே யந்த உபாஸ்யரூபத்தை யடைந்தார். அந்த ரூபத்தின் மகாத்மியத்தால் அசுரர்களும் விஷ்ணுவுக்கு அனுகூலமானார்கள். அப்படியே சிவனுஞ் சமாதியிற் பகவதியைத் தியானஞ்செய்தார். அதனால் சிவனது பாதிசரீரம் உபாஸிக்கத் தக்கதாயிற்று. ஒவ்வொரு காலத்து விக்ஷேபத்தால் சமாதியில்லாமற்போனமையால் சிவனது முழு சரீரமும் உபாஸிக்கத்தக்கதாகவில்லை. இவ்விதத்தால் எல்லாத் தேவர்களும் பகவதியின் உபாசகர்களாகின்றார்கள். அவ்வுபாசனை தக்ஷிணமார்க்கத்தினாலும் உத்தரமார்க்கத்தினாலும் இரண்டுவகையாய்ச் சொல்லப்படுகிறது. முன் தக்ஷிணமார்க்கம் சொல்லப்பட்டது. மேல் உத்தர மார்க்கத்தைச் சொல்லுவாம்:—

பகவதியின் பக்தர்களான ஹரிஹரர்களைப்போல் பகவதியை யார்தானுபாஸிக்கப்போகிறார்கள். அங்ஙனமாயினும், மகாமாயையைத் தியானிக்கிறவன் சகல புருஷார்த்தத்தையும் சீக்கிரத்திலடைவான். ஒருங்கே போக மோக்ஷங்களை யடையத்தக்கதான வேறு சாதனம் ஜகத்திலில்லை. பகவதி பக்தன் சகல போகங்களையும் அனுபவித்துங் கர்ப்பவாசத்தையடைகிறதில்லை. சிவனாற்செய்யப்பட்ட தந்திரத்தின் கிரமத்தைச் சொன்னோம். பகவதியின் பக்தி மிகுந்த சுகத்தைத் தரும். முன்னோர்கள் எல்லோரும் அநுஷ்டித்து வந்த பஞ்சமகாரங்களையும் ஒருபோதும் விடலாகாது. எல்லாத் தேவர்களும் பல தேவராகிய நல்ல ஞானியும் முதல் மகாரத்தை எப்போதும் ஜலத்தைப் போலச் சாப்பிட்டார்கள். மற்றும் முன்னோர்களெல்லோரும் மகாரத்தையே சேவித்தார்கள். மகாரங்களைச் சேவிக்கும் விதிகள் பரமசிவனால் பரோபகாரத்தின்பொருட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. சிவவசனத்தை மனதில்

---

* ஹரிஹரன் முதலியோர் தத்தம் அதாவது வைஷ்ணவி முதலிய பகவதியின் அம்சங்களை அப்பகவதியின் கிருபையினாற்பெறுகின்றனர் என்னும் பொருள் தேவிபாகவதத்தில் வெளிப்படையாய் எழுதப்பட்டிருக்கின்றது.

தரிக்கிறவன் இச்சரீரத்திலேயே போகமோக்ஷங்களை யடைகிறான். வியாஸர் பாகவதத்தைச் செய்திருக்கிறார். உபபுராணத்திற் காளியை வர்ணித்திருக்கிறார். பகவதியின் பக்திதான் மேலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பூஜாவிதிகள் எல்லாவற்றையும் அறிவித்திருக்கிறார். ஹரி ஹரன் சூரியன் கணேசன் முதலியோர் பகவதியைத் தியானஞ்செய்கிறவர்களாய்ச் சேவிக்கிறார்கள். மதியுடையோர் யாவரும் முதல் மகாரத்தைக் குடித்து மூழ்கிய மனதுடையவர்களாய்ப் பகவதியைப் பூஜிக்கிறார்கள். ஜகத்ஜனனியாகியதேவியே விழிப்புள்ளவளாயிருக்கிறாள். இவளைச் சேவிப்பவன் பரமானந்தத்தையடைகிறான்.

## 505. சூரியபக்தனுடைய உத்தரம்.

சூரியபக்தன் பகவதியின் மகாத்மியத்தைக் கேட்டுக் கோபங்கொண்டு சொல்லுகிறான். அரசனே ! என்னுண்மையான வசனத்தைக் கேட்க. நான் சொல்வது பொய்யன்று. கோடி சபதம் செய்கிறேன். அவர்களுடைய மதங்களெல்லாம் மிகவும் பாபமுள்ளனவும் இழிவானவைகளாயும் இருக்கின்றன. ஜகத்திற் சொல்லப்படும் கெட்ட குணங்களெல்லாம் தேவிமார்க்கத்தில் உத்தமமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மலினமத்தியம் தீர்த்தமென்றும், மாமிசம் சுத்தமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. விபரீதத்தைச் சொல்லும் * சம்புதந்திரம் அனுஷ்டிக்கத்தக்கதன்று. தக்ஷிணசம்பிரதாயம் சிரேஷ்டமாகையால் எல்லோராலும் அனுஷ்டிக்கத்தக்கதாயிருந்தாலும் இவர்களுடைய மனது எதில் கட்டுப்படுகிறதோ அந்தச் சூரியனில்லையாயின் எல்லோரும் அந்தகராவர். எல்லாவற்றையும் பிரகாசிப்பிக்கிறவன் சூரியன். அவன் இல்லாவிட்டால் எங்கும் இருள் கவிந்துகொள்ளும். ஜகத்திலுள்ள மற்றப் பிரகாசங்கொடுக்கும் வஸ்துக்களெல்லாம் சூரியனுடைய அம்சங்களே. சூரியனைப்போல் ஒருவனும் ஹிதஞ் செய்கிறவனில்லை. பிறருடைய ஹிதத்தின்பொருட்டுத் தான் ஆகாசத்தில் ஓயாமல் அலைகிறான். சகல காரியங்களும் காலாதீனமாயிருக்கின்றன. அதனையே சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலமென்று மூவகையாகச் சொல்லுகிறார்கள். ஆச்சரியம் ! சூரிய இச்சூரியன் சூத்திரயா. க் கிரியைகளை ர செய்கின்றார். இவ்விதியாக எல்லாம் னிவிருந்தேயுண்டாகின ,ர. அவர் கோபத்தால் எல்லாம் பஸ்மமாகின்றன. இவருக்கு ஸாகாரம் நிராகாரமென இரண்டு ரூபங்களுண்டு. நிராகாரப்பிரகாசம் சகல நாம ரூபங்களிலும் வியாபித்திருக்கிறது. எதை வேதாந்தி பாதி சப்தத்தால் வியவகரிக்கிறாரோ அது நிராகாரப் பிரகாசரூபமான

---

* சம்புதந்திரமென்பது பாமரபுருஷர்களுக்கும் ஓரிடத்து ஆசையிருக்கவேண்டுமென்னும் அபிப்பிராயத்தால் வாமமார்க்கத்தைக் கூறும் சிவ (வாம) தந்திரமாம். இதனைச் சேவிக்கின்றவனது புத்தி யுத்திப்பிரமாணங்களாற் சூனியமாதலால் வெறுமையானதாம்.

சூரியனுடைய சாமானியரூபமாம். அது ஜகத்துக்கெல்லாம் அதிஷ்டான மாம். அதனையறியாததினால் ஜகத்துவடிவ விவர்த்தமுண்டாகிறது. அந்த நிராகாரப்பிரகாசமே அந்தக்கரணவிருத்தியிலுள்ள பிரதிபிம்பத்தோடு ஞானமென்றுசொல்லப்படும். "அகம் பானு (யான் சூரியன்)" என்று அந்தக் கரணவிருத்தி பிரகாசத்தின் பிரதிபிம்பத்தோடுண்டாகும்போது அஞ்ஞா னம் நிவிருத்தியாக ஜகத்தும் நிவிருத்தியாகிறது.

சூரியனுடைய ஸாகாரரூபத்தைச் சொல்லுகிறேன் கேட்க:—பிராதக் காலத்தில் அவருடைய தேஜசு பிரகாசிக்கிறது. சந்திரன் நக்ஷத்திரம் தீப முதலிய அநேகம் அதன் அம்சமே. நிராகாரஸாகாரபேதத்தால் சூரியனுக்கு இரண்டுரூபமுண்டு. அவற்றுள்நிராகாரரூபம் ஞேயம்; ஸாகாரரூபம் தியேயம். இதுவே *வேதாந்தங்களில் நிர்க்குணசகுண பேதத்தால் இருவகைப் பிரஹ்மமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. எச்சூரியனிடத்தில் ஒருகாலத்திலும் அந்த காரலேசமுமில்லையோ அவரைப் பார்த்தே எல்லோரும் தங்கள்கர்மத்தைச் செய்கிறார்கள்; ஒருபோதும் தூங்காது விழித்திருக்கின்றார். அவரைத் தியானஞ் செய்வதனால் அந்தகாரம் ஒழிந்துபோம். மற்றத் தேவதைகள் விழிப்புள்ளவர்களென்று சொன்னது மித்தையென்று அறியவேண்டியது.

## 506. முற்கூறிய மதத்தின் அநுவாதத்தோடு ஸ்மார்த்தமதம்.

ஐந்து உபாஸகர்களும் பரஸ்பரம் விருத்த வசனங்களைச் சொன்னது போல் அநேக பண்டிதர்களும் தங்கள் தங்கள் புத்திக்கெட்டியபடி விருத்த மாகவே பேசினார்கள்.

இவ்வைவர் மதமும் ஒன்றற்கொன்று விரோதிப்பதுபோல ஸ்மார்த்த பண்டிதன் மேற்கண்ட ஐந்து தேவதைகளிடத்திலும் பேதபுத்தி கொள்ளா விட்டாலும் அவனுடைய மதமும் இவர்கள் மதங்களுக்கெல்லாம் விரோதமா யிருக்கிறது. ஏனெனின்,

வைஷ்ணவனுடைய மதம் இதுவாம்:—விஷ்ணுவுக்குச் சமானமான வேறு தெய்வமில்லை. எல்லோரும் விஷ்ணு பக்தர்களே. விஷ்ணுவின் ராம கிருஷ்ண நாராயணன் முதலிய நாமங்களுக்குச் சமானமாய்ப் பிறதெய்வங் களின் நாமங்களை எவன் நினைக்கிறானோ அவன் † நாமாபராதி. அவனுக்கு

---

* வேதத்தின் அந்த (கடைசிப்) பாகமாகிய உபநிடதங்களில்.

† எவனுக்குப் பத்து நாமாபராதங்களில் யாதேனுமோர் அபராதமிருக்கின்ற தோ அவன் நாமாபராதியெனப்படுவன். அப்பத்தபராதங்கள் இவையாம்:—

1. சத்புருஷர்களின் நிந்தை, 2. அசத் புருஷர்களிடத்தில் நாமத்தின் மகிமையைச் சொல்லுதல், 3. விஷ்ணு சிவன் என்பவர்களிடத்தில் பேத ஞானம், 4. சுருதிவாக்கியத்தில் அசிரத்தை, 5. சாஸ்திரவாக்கியத்தில் அசிரத்தை,

ராமாதி நாமோச்சாரணங்களின் யதார்த்தபலனுண்டாகிறதில்லை. இப்படியே சைவமதத்திலும் சிவனுக்குச் சமானமான வேறு தெய்வமில்லை. சிவனுடைய நாம உச்சாரணத்தின் பலன் விஷ்ணுநாம உச்சாரணைத்தாலுண்டாகிறதில்லை. இவ்விதமாக எல்லோருடைய மதங்களிலும் அவரவர்களின் உபாஸிய தெய்வத்துக்குச் சமானமாய் வேறு தெய்வமில்லை. ஸ்மார்த்த மதத்திலோ எல்லாத்தேவர்களும் சமமே. ஆதலால் ஸ்மார்த்தமதமும் மேற்சொல்லிய ஐந்து மதங்களுக்கும் விருத்தமாயிருக்கின்றது.

## 507. ஆறு சாஸ்திரங்களும் ஒன்றற்கொன்று விரோதமாதல்.

1. சாங்கியம், 2. பாதஞ்சலம், 3. நியாயம், 4. வைசேஷிகம். 5. பூர்வமீமாம்சை, 6. உத்தரமீமாம்சை என்னும் இவ்வாறு சாஸ்திரங்களின் மதங்களும் பரஸ்பரம் விருத்தமாம். ஏனெனின்,

1. சாங்கியசாஸ்திரத்தில் ஈசுவரன் அங்கீகரிக்கப்படவில்லை. சமாதிவடிவயோகத்தின் அபேக்ஷையின்றிக் கேவலம்பிரகிருதி புருஷர்களின் விவேகஞானத்தால் மோக்ஷமுண்டாவதாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

2. பாதஞ்சலசாஸ்திரத்தில் ஈசுவரனும், சமாதியால் மோக்ஷமும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் சாங்கியமும் பாதஞ்சலமும் ஒன்றற்கொன்று விருத்தமாம்.

3-4. நியாயமதத்தில் நான்கு பிரமாணம், வைசேஷிகமதத்தில் இரண்டு பிரமாணம் என்பன விருத்தம். இவ்வாறே நியாய வைசேஷிகங்களுக்குத் தம்மில் மற்றும் அநேக விரோதமுண்டு. ஜிஞ்ஞாசுவால் அவைகள் விரும்பப்படுவனவாகாமையின் அவற்றை இங்கெழுதவில்லை.

5. பூர்வமீமாம்சையில் ஈசுவரனும் மோக்ஷரூப நித்தியசுகமும் அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால் கர்மத்தாலுண்டாகும் விஷயசுகமே புருஷார்த்தமாயிருக்கின்றது.

6. உத்தரமீமாம்சையில் மோக்ஷமும் ஈசுவரனும் அங்கீகரிக்கப்பட்

---

6. குருவாக்கியத்தில் அசிரத்தை, 7. நாமத்தில் அர்த்தவாதப் பிரமத்தின் அநுஷ்டானம் 8. அநேக பாபங்களை நாசம்பண்ணுகிற நாமம் தனக்கு இருக்கிறதென்னும் புத்தியினால் நிஷித்தகர்மங்களைச் செய்தல், 9. பெரும் புண்ணியத்தை யுண்டுபண்ணுவது நாமமென்னும் புத்தியினால் விகிதகர்மங்களை விடுதல், 10. மற்றத் தர்மங்களோடு நாமத்தைச் சமானமாயறிதல் என்னும் இப்பத்தும் சிவ விஷ்ணுக்களின் ஜபத்தில் நாமாபராதங்கள். இதனாலேயே ஓர் மகாத்மாவானவர் "இராமா இராமாவென்று சொல்லுகிறார்கள்; ஆனால், பத்துத் தோஷங்களின்றி எவரும் சொல்லுகிறதில்லை. ஒரு முறை பத்துத் தோஷமின்றிக் கூறுவாராயின் கோடியாகத்தின் பயனுண்டாம்" என்று ஹிந்திபாஷையில் கூறியிருக்கின்றார்.

ளெ. விஷயசுகம் புருஷார்த்தமன்று. உத்தரமீமாம்ஸையின் மதம் இக்கிரந்தத்தில் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் சர்வசாஸ்திரங்களின் மதங்களும் இதற்கு விருத்தமாம். வேறுசாஸ்திரங்களிலும் பேதவாதம் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலோ பேதங்கண்டிக்கப்பட்டு அபேதம் சொல்லப்பட்டுமிருக்கிறது.

இவ்விதத்தால் சகல சாஸ்திரங்களின் சித்தாந்தமும் பரஸ்பரம் விருத்தமாம்.

